
682

விநோத ரச மஞ்சரி



682
4-56

O-, GM.VC,
N58
112485

லிப்கோ மலிவுப் பதிப்பு மலர்

6824/4-58

அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார்

அவர்கள் இயற்றிய

விநோத ரச மஞ்சரி

நாமக்கல் கவிஞர்

உயர்திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை, M.L.C.

அவர்கள் முன்னுரையுடன் கூடியது

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

சென்னை–17

சென்னையில் லிப்கோ ஏஜெண்டுகள்

எம். தாமோதரம் & கம்பெனி

அப்பா பில்டிங்ஸ், 9/286, எஸ்பிளனேட், சென்னை-1

முதற்பதிப்பு : 1958

உரிமை பதிவு செய்யப்பெற்றது

0-16 MVC, V
N58

TAMIL NADU ARCHIVES
No. 112485
MCRE, MADRAS-600 005

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14

பொருளடக்கம்

	பொருள்		பக்கம்
1.	தெய்வங்கொள்கை	..	1
2.	கற்பு நிலைமை	..	21
3.	கற்றுய்ந்தொழுகல்	..	37
4.	பயனில் உழவு	..	44
5.	மகாபண்டிதனைச் சிறுபிள்ளை வென்றது	..	57
6.	நன்றி மறவாமை	..	68
7.	கம்பர் சரித்திரத்தின் ஒரு பகுதி	..	85
8.	கம்பர் இராமாயணம் பாடி அரங்கேற்றியது	..	105
9.	ஒட்டக்கூத்தர் 'ஈட்டியெழுபது' பாடியது	..	171
10.	ஒட்டக்கூத்தர் சோழனுக்குப் பெண் பேசியது	..	191
11.	புகழேந்திப்புலவர் நளவெண்பாப் பாடியது	..	210
12.	காளமேகப்புலவர் சரித்திரம்	..	219
13.	ஏகம்பவாணன் சரித்திரம்	..	267
14.	ஔவையார் சரித்திரம்	..	278
15.	பரமார்த்தன் என்னும் அவிவேக பூரண குரு கதை	..	301
16.	சிறு கூனன் கதை	..	329
17.	ஒரு பதிவிரதை சரித்திரம்	..	335
18.	காளிதாஸப்புலவர் சரித்திரம்	..	338
19.	கீதவாத்திய விநோதம்	..	372
20.	காலபேதவியல்பு	..	381
21.	தமிழறியும் பெருமாள்	..	413
	இப்புத்தகத்தில் வரும் பழமொழி உவமைத் தொடர் அகரவரிசை	..	461
	மேற்கோட்செய்யுள் முதற்குறிப்பகராதி	..	472

பதிப்பகம் பகர்வது

விநோத ரச மஞ்சரி என்னும் இந்த அரிய இனிய உரை நடை நூல் பழம்பெருந் தமிழ்ச்செல்வ மாகும். மஞ்சரி என்பது பூங் கொத்து எனப் பொருள்படும். கண்ணைக் கவரும் வண்ண மலர்கள் பல சேர்ந்த பூங்கொத்து, பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். பெயருக்குப் பொருத்தமாக இந்நூல் கருத்தைக் கவரும் பல கட்டுரை மலர்களும், கதை மலர்களும் நிறைந்த ஒரு பூங்கொத் தாகவே விளங்குகிறது. பழைய உரைநடை எங்ஙனம் இருந்தது என்பதை ஆராயப் புகுவார்க்கு இந்நூல் சிறந்த கருவியாய் விளங்கும். முன்னோர்களின் மொழிப் பணியை உணர்ந்து எங்கும் தமிழ் உணர்ச்சி பரவுவதற்கு முதற்படியாய் விளங்குவது விநோத ரச மஞ்சரியே என்றால், அஃது ஒரு சிறிதும் மிகையாகாது.

இப்புத்தகத்தில் வருபவை உண்மைக் கதையாகவும் இருக்க லாம் ; கட்டுக் கதையாகவும் இருக்கலாம். ஆயினும், ஒரு பொருளை எப்படி ஆராய்தல் வேண்டும் என்பதற்கு இது தலைசிறந்த துணை நூலாக விளங்குகிறது. நடை பயிலும் குழந்தைகட்கு நடை வண்டி உதவுவதுபோலத் தமிழ் உரை நடை பயின்றோர் பலர்க்கு இந்நூல் முன் மாதிரியாக உதவியது எனலாம். இந்நூலின் வரன் முறை மிகத் தெளிவான முறையில் காலஞ்சென்ற பேராசிரியர் S. அனவரத விநாயகம் பிள்ளை அவர்களால் 'கலைமகள்' வெளி யீட்டில் வெளியானதை இந்நூலுக்கு அணி செய்யும் வகையில் சேர்த்துக்கொள்ளுதற்கு அன்புடன் உரிமை வழங்கிய 'கலைமகள்' காரியாலயத்தினர்க்கு எங்கள் நன்றியும் வணக்கமும் என்றும் உரியனவாகுக.

இப்புத்தகத்தைச் செவ்விய முறையில் வெளியிடுவதற்குப் பெரிதும் உதவி புரிந்த சென்னை இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் புலவர் தணிகை. உலகநாதன் அவர்களுக்கு நாங்கள் பெரிதும் கடமைப்பட்டவர்களாய் இருக்கிறோம். எங்கள் பதிப்பக வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருந்து நாங்கள் புரிந்து வரும் புத்தகச் சேவைக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வரும் தமிழ் நாட்டின் தலை சிறந்த எழுத்தாளர் திருமதி வசுமதி ராமசுவாமி அவர்களுக்கு எங்கள் என்றும் மறவா நன்றி உரியதாகும்.

சிறப்பாக, இப்பதிப்பிற்கு முன்னுரை எழுதித் தந்து எங்கட்கு உற்சாகமூட்டிய நாமக்கல் கவிஞர் உயர்திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை, M.L.C. அவர்கட்கு எம் மனமுவந்த நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாங்கள் பொருட்செலவைக் கருதாமல் இதனை மலிவுப் பதிப்பாக வெளியிடுவதன் நோக்கம் தமிழன்பர் பலர்க்கும் இந் நூல் பெரிதும் பயன்படவேண்டும் என்பதே. தமிழ்நாடு இந்நூலைப் பெற்று மகிழும் என நம்புகின்றோம்.

சென்னை-17,
10-11-1958.

பதிப்பகத்தார்.

முன்னுரை

'தி லிட்டில் ப்ளவர் கம்பெனி' என்ற பெயருடைய புத்தகம் வெளியிடும் நிலையத்தார் தமிழ் மொழிக்குச் செய்து வரும் அரும்பெருந் திருப்பணிகளை அறியாதார் யாருமில்லை. வேறு எங்கும் காணமுடியாத புதுமை மிகுந்த முறையில் புத்தகங்களை வெளியிடுவதே இவர்களுடைய புகழுக்குக் காரணம். அத்துடன் மக்களுடைய மறதியினால் மறு பதிப்புக்கள் இல்லாமல் மறைந்து போகக் கிடந்த பல நல்ல நல்ல இலக்கியங்களைத் தேடிப் பிடித்து அவற்றை அச்சேற்றி அவற்றிற்குப் புத்துயிர் கொடுத்த பெருமையும் இந்த 'லிட்கோ'வுக்கே உரியது. அதற்கு இவர்கள் சமீப காலத்தில் அரங்கேற்றிய அறுபத்துநான்கு சிறு நூல்களின் தொகுதியே போதிய சான்றாகும்.

ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் நான் கல்லூரி மாணவனாய் இருந்த காலத்தில் இந்த 'விநோத ரச மஞ்சரி' என்ற சொற்றொடர் அடிக்கடி என் காதில் விழுந்து, இப்பெயர் கொண்ட நூலைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலும் உண்டாயிற்று. அந்தக் காலத்தில், இப்போது உள்ளவை போன்ற பொழுது போக்காகப் படிக்கத்தக்க கதைகளும் கட்டுரைகளும் அடங்கிய சஞ்சிகைகள் மிகவும் சொற்பம். அதனால் 'விநோத ரச மஞ்சரி' யாவரும் விரும்பத்தக்கதாய் விளங்கியது. எனக்கு முதன்முதல் படிக்கக் கிடைத்த 'விநோத ரச மஞ்சரி' நூலில் நான் திடுக்கிட்டுத் திகைக்கும்படியான ஒரு விஷயம் தென்பட்டது. அது என்னவெனில், அந்த ஆண்டில் எங்கள் பரீட்சைக்கு வைக்கப்பட்டிருந்த தமிழ்ப் பாடத்தின் ஒரு பகுதியாகிய புகழேந்தி-ஒட்டக் கூத்தர் வரலாறே விநோத ரச மஞ்சரியிலும் காணப்பட்டதுதான். இதில் திடுக்கிடச் செய்தது என்னவென்றால், எங்கள் பாடப் புத்தகத்தில் இருந்ததற்கும் விநோத ரச மஞ்சரியில் இருந்ததற்கும் உள்ள ஒரு முக்கியமான வேறுபாடுதான்.

ஒட்டக்கூத்தர் சோழநாட்டின் ஆஸ்தானப் புலவர். புகழேந்தி பாண்டி நாட்டின் ஆஸ்தானப் புலவர். புகழேந்தியார் கற்றுணர்ந்தடங்கிய சாந்த குணமுடையவர். ஒட்டக்கூத்தர் கற்றும் உணர்ந்து அடங்காத அகந்தை மிகுந்தவர்; தமக்கு நிகராக இன்னொரு புலவன் இருப்பதைப் பொறுக்கமாட்டார். மற்றப் புலவர்களை அவமதிப்பதே அவருடைய இயல்பு.

சோழ மன்னனுக்குப் பாண்டியனுடைய மகளைப் பெண் கேட்க ஒட்டக்கூத்தர் பாண்டியன் சபைக்கு அனுப்பப்பட்டார். அந்தச்

சபையில் நடந்த விவாதத்தில் புகழேந்தியார் ஒட்டக்கூத்தருடைய அகந்தை அடங்கும்படியான எதிர் மாற்றம் கொடுத்தார். அப்போதே ஒட்டக்கூத்தருக்குப் புகழேந்தியார்மீது பொறுமை உண்டாயிற்று.

பிறகு பாண்டியனுடைய மகளுக்கும் சோழ மன்னனுக்கும் திருமணம் நடந்தது. பாண்டியன் தன் மகளுக்குக் கொடுத்த ஏராளமான சீதனங்களோடு புகழேந்திப் புலவரையும் சீதனம் போல மகளுடன் சோழ நாட்டுக்கு அனுப்பினன். சோழ மன்னன் புகழேந்தியாருக்கு உரிய மரியாதைகள் செய்து அவரையும் ஒட்டக் கூத்தருக்குச் சமமாக ஆஸ்தானத்தில் அமர்த்திக்கொண்டான். இது ஒட்டக்கூத்தருக்குப் பொறுக்கவில்லை. சிறுகச் சிறுகச் சூழ்ச்சிகள் செய்து புகழேந்தியாரைப்பற்றிப் பற்பல கோள் சொல்லி, மன்னன் புகழேந்தியாரின்மீது சினங் கொள்ளும்படி செய்து புகழேந்தியாரைச் சிறையில் அடைக்கும்படி செய்துவிட்டார். இது மகாராணிக்குத் தெரியாது. நெடுநாளைக்குப் பின் தனக்குச் சீதனமாக வந்த புகழேந்திப் புலவர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார் என்பதை அறிந்த மகாராணி, கடுங்கோபங்கொண்டு, தன்னை நாடிப் பள்ளியறைக்கு வந்த மன்னவனை வரவேற்க மறுத்துக் கதவை அடைத்துத் தாழிட்டுக்கொண்டாள். மன்னவன் நெடுநேரம் மன்றாடியும் கதவு திறக்கப்படவில்லை.

அதன்பிறகு அரசன் ஆஸ்தானப் புலவராகிய ஒட்டக்கூத்தரை அழைத்து, அரசியின் கோபத்தைத் தணிக்கும்படி கேட்டுக் கொண்டான்.

உடனே ஒட்டக்கூத்தர்,

> “ இழையொன் றிரண்டு வகிர்செய்த நுண்ணிடை ஏந்தியபொற்
> குழையொன் றிரண்டு விழியணங் கே!கொண்ட கோபம்தணி ;
> மழையொன் றிரண்டுகைம் மானு பரணன்நின் வாசல்வந்தால்
> பிழையொன் றிரண்டு பொருரோ குடியிற் பிறந்தவரே ?”

என்று பாடினார்.

இதைக் கேட்ட அரசி, “என்னுடைய இடையையும் அழகையும் வருணிக்க நீர் யார் ? ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் !” என்று பின்னும் ஒரு தாழைக் கடாவினாள். அதைக் கேட்ட கூத்தர் வெட்கி வருத்தத்தோடு போய்விட்டார். அதைக் கண்ட மன்னவன் மனைவிக்கு இவ்வளவு கோபம் வரக் காரணம் என்னவென்று நெடுநேரம் நினைத்துப் பார்த்த பின் அவளுடைய தந்தையின் ஆஸ்தானப் புலவராகிய புகழேந்தியாரைச் சிறையில் அடைத்ததுதான் காரணமாக இருக்குமென்று அனுமானித்துப் புகழேந்தியாரை அழைத்துவரச் செய்து அரசியின் ஊடலைப் போக்கும்படி கேட்டுக்கொண்டான்.

உடனே புகழேந்தியார்,

"நானே இனிஉன்னே வேண்டுவ தில்லை ; நளினமலர்த்
தேனே ! கபாடம் திறந்திடு வாய் ;திற வாவிடிலோ
வானே றனைய இரவி குலாதிபன் வாசல்வந்தால்
தானே திறக்கும்நின் கைத்தல மாகிய தாமரை பே."

என்று பாடினர்.

இந்தப் பாட்டின் கருத்து,'மகாராணியே, கதவைத் திறக்கும்படி நான் கேட்டுக்கொள்ளவே வேண்டுவதில்லை. நீயோ, கற்பிற் சிறந்த உத்தமி. உத்தமப் பெண்களுடைய உள்ளங்கை தாமரை மலருக்குச் சமானம் என்பது சாஸ்திரம். உன்னுடைய கணவன் சூரிய குலத்து மன்னன். சூரியன் வந்தவுடன் மூடியிருந்த தாமரை தானுகவே திறந்து மலர்ந்துவிடும் என்பது தவிர்க்கமுடியாத சட்டம்' என்பது.

உடனே கபாடம் திறக்கப்பட்டது. ஊடல் தீர்ந்துவிட்டது. அதன் பிறகு அரசன் புகழேந்தியாரை மிக்க அன்போடும் மரியாதை யோடும் ஆதரிக்கலானன்.

இதுதான் எங்களுடைய பாடப் புத்தகத்தில் இருந்த வரலாறு. ஆனல், ' விநோத ரச மஞ்சரியில் ' ' நானே இனி உன்னே வேண்டுவ தில்லை' என்ற பாட்டு ஒட்டக்கூத்தர் பாடியதாகவும், 'இழை ஒன்று இரண்டு வகிர்செய்த ' என்னும் பாட்டுப் புகழேந்தியார் பாடின தாக்வும் இருந்தன. அதுதான் என்னேத் திகைக்கச் செய்த காரணம். உடனே எங்கள் தமிழ் ஆசிரியரிடம் விநோத ரச மஞ்சரியில் இருந் ததைக் காட்டினேன். அவர் அதைப் பார்த்துவிட்டு மஞ்சரியில் இருப்பது தவறு என்று சொல்லி, " 'நானே இனி உன்னே ' என்ற பாட்டிலுள்ள சொல் நயம், பொருள் நயம், மறுக்கமுடியாத உண்மைகள் முதலிய சிறப்புக்களேப் பார்க்கும்போதே அது ஒட்டக் கூத்தருடைய பாட்டாக இருக்கமுடியாது என்பதைக் காட்டு கின்றதே !" என்ருர்.

எந்தப் பாட்டு எவர் பாடியது என்பதன் உண்மை எதுவோ, ஈசரே அறிவார். ஆனல், நாங்கள் புத்தகத்தில் படித்ததும் எங்கள் ஆசிரியர் சொல்லிக்கொடுத்ததும் அப்படி. விநோத ரச மஞ்சரியில் இருப்பது இப்படி. இதை இங்கே குறிப்பிட்டதன் காரணம், நெடு நாளேக்கு முன்பே விநோத ரச மஞ்சரிக்கும் எனக்கும் ஏற்பட்ட தொடர்பைக் காட்டக் கருதியதே.

விநோத ரச மஞ்சரியில், இக்காலத்து வாசகர்கள் இன்புற முடியாத கட்டுரைகளும் இருக்கின்றன. ஆனல், அவை கடந்த நூற்ருண்டில் இருந்த சில தமிழ் எழுத்தாளர்களுடைய போக்கு எப்படி இருந்திருக்கிறது என்பதைக் காட்டுகின்ற கண்ணுடியாய் இருக்கின்றன. அதற்காக மட்டுங்கூட இந்த மறு பதிப்பு வரவேற்

கத்தக்கது. அதற்கு ஓர் உதாரணம் இதிலுள்ள 'காலபேதவியல்பு' என்ற கூட்டுரை. அந்தக் கட்டுரை 'ஆங்கில அரசாட்சியைப் போன்ற நல்லரசாட்சி இருக்கமுடியாது. அதனால் இந்திய நாட்டை என்றென்றும் ஆங்கிலேயரே அரசாண்டு வரும்படியாக எல்லாரும் கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும்' என்று சொல்லுகிறது.

மேலும், இதில் பல புலவர்களுடைய சரித்திரங்களும் அவர்கள் அப்போதைக்கப்போது பாடிய தனிப்பாடல்களும் வெகு விரிவாகக் காணப்படுகின்றன. சரித்திரத்தின் உண்மைகள் எப்படியிருந்தாலும், அவர்கள் பாடியனவாகக் கொள்ளப்பட்ட பாடல்கள் அத்தனையும் இதில் இருக்கிறதுபோல வேறு எந்தப் புத்தகத்திலும் காணமுடியாது. அதற்காகவும் இந்த வெளியீடு விரும்பத்தக்கது.

மொத்தத்தில் தமிழ் மொழியின் சரித்திரத்தின் ஒரு பகுதி போல உள்ள 'விநோத ரச மஞ்சரி' பலருக்கும் பயன்படவேண்டும் என்ற பெருநோக்குடன் இப்பதிப்பை வெளியிடும் 'லிப்கோ'வை மனமார வாழ்த்தி இறைவனை வணங்குவோம்!

நாமக்கல்,
20-7-1958.

வெ. இராமலிங்கன்.

விநோத ரச மஞ்சரி*

(பேராசிரியர் எஸ். அனவரத விநாயகம் பிள்ளை அவர்கள்)

தமிழ் மொழியிற் காணும் சிறந்த பழைய வசன நூல்களில் இஃது ஒன்று. பஞ்ச தந்திரம், கதாமஞ்சரி நூல்கள் இதற்கு முன்னே ஏற்பட்டிருந்தனவாயினும் இதற்குப் பெயர் அமைந்தது போலவே இந்நூல் விநோதரசங்கள் செறிந்து தமிழ் மக்களுக்குப் பெரிதும் உவகை தருவதாயிற்று.

இந்நூலை இயற்றிய அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் சென்னை துரைத்தன வித்தியாசாலையின் தமிழ்ப் பண்டிதர்களில் ஒருவராயிருந்தனர் (*Late Tamil Pandit, Presidency College, Madras*). அவர் நூதனமாக இயற்றிய இந்நூல் மேற்படி வித்தியாசாலையில் திராவிடாந்திர பாஷா போதகராயிருந்த (*Professor of Oriental Literature, Presidency College, Madras*) கனம் பொருந்திய பெர்ஸிவல் ஐயரால் பிரதமத்தில் கி. பி. 1876-இல் அச்சிட்டு வழங்கியது.

இரண்டாம் பதிப்பு (*Royal 12 mo pp. II—428*) கி. பி. 1891-இல் ஊ புஷ்பரத செட்டியார் தமது கலாரத்நாகர முத்திராலயத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இரண்டாம் பதிப்பில் நூல் வரலாறும், இரண்டாம் பதிப்பின் வரலாறும் காணப்படுகின்றன.

முதற்பதிப்பு, பிரசித்த புஸ்தக நிலையங்களிலெங்கும் காணப் படாமையானும், இவ்விரண்டாம் பதிப்பும் அருகிக் காணப்படுதலானும், இக்காலத்துப் பதிப்புக்கள் வரலாறுகளை மாற்றியுரைத்தலானும், இரண்டாம் பதிப்பிற் காணும் இவ்விரண்டு வரலாறுகளையும் இங்குத் தருதல் பலர்க்குப் பயன்படக் கூடும்.

நூல் வரலாறு :—தமிழ்ப் பாஷையிலுள்ள நூல்கள் அனைத்தும் சாதாரணமாக உணர்தற்கரிய செய்யுள் நடையாயிருப்பதனால் அவை ஐயந் திரிபறக் கற்றோர்க்கன்றி மற்றோர்க்கு எளிதிற்

---

* 'கலைமகளி'ல் (தொகுதி 2, பக்கம் 1203) 1933-ல் வெளியிடப்பட்டது. வெளியிட அனுமதியளித்த 'கலைமகள்' காரியாலயத்தினர்க்கு எம் நன்றி.

— பதிப்பகத்தார்.

புலப்படாமை நோக்கி, வசன நடையாயிருந்தால் யாவர்க்கும் உபயோகமாமென்று கருதி, சென்னைத் துரைத்தன வித்தியாசாலையில் திராவிடாந்திர பாஷா போதகராகிய கனம் பொருந்திய பெர்ஸிவல் ஐயரவர்களுடைய அனுமதி கொண்டு, மேற்படி வித்தியாசாலையில் தமிழ்ப் பண்டிதராகிய அ. வீராசாமி செட்டியாரால் அவரவர் ஆவசிகமாக அறிய வேண்டிய விஷயங்களைத் தெய்வங்கொள்கை, கற்றூய்ந்தொழுகல், கற்பு நிலைமை, செய்ந்நன்றி மறவாமை, கீதவாத்திய விநோதம், பயனிலுழுவு, மகா பண்டிதனைச் சிறுபிள்ளை வென்றது, காலபேத இயல்பு முதலியவாக நூதனமாய் வகுத்தும், முற்காலத்திலிருந்த கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, காளமேகம் முதலிய வித்வான்களின் சரித்திரங்களிலும், அவர்கள் பாடிய பாடல்களிலும் சிலவற்றைத் தொகுத்தும், அப்பாடல்களுக்கு உசிதமாக உரையெழுதியும், அவற்றுல் உலக வழக்குச் செய்யுள் வழக்குகளை ஒருவாறு விளக்கியும், ஆங்காங்குச் சமயோசிதமும் சாதுரியமுமாகிய பற்பல பழமொழிகளைச் சேர்த்தும், வாசிப்பவர்களுடைய நாவிற்கு நயமும், செவிக்கின்பமும், மனதுக்கு மகிழ்ச்சியும், அறிவுக்கு விர்த்தியும், பொழுது போக்கிற்கு உல்லாசமுமாம்படி சில காலம் தொடங்கித் தினவர்த்தமானியில் அச்சிடுவித்துப் பிரசுரம் செய்து வந்தும் அவைகள் அப்பத்திரிகையின் கையொப்பகாரர்களுக்கேயன்றி ஏனையோர்க்குப் பயன் படாததாயும், கையொப்பகாரர்களிலும் பெரும்பான்மையோர் அப்போதப்போது பார்த்தும் பாராமலும் கைவிட்டதையும் குறித்துணர்ந்து, சகலர்க்கும் பயன்படும்பொருட்டு முழுவதும் ஒருசேரத் திரட்டி மறுபடி அச்சிட்டுப் புத்தகமாக்கி இறுதியில் அவிவேக பூரண குரு கதையும் சேர்த்து விநோத ரச மஞ்சரி என்று பெயரிடப்பட்டது.

இரண்டாம் பதிப்பின் வரலாறு :—சென்னைத் துரைத்தன வித்தியாசாலையில் திராவிடாந்திர பாஷா போதகராயிருந்த காலஞ்சென்ற கௌரவந் தங்கிய பெர்ஸிவல் ஐயர் (*Rev. P. Persival*) அவர்களுடைய அனுமதி கொண்டு 1876-ஆம் ஆண்டில் பிரசுரஞ்செய்த விநோத ரச மஞ்சரி முதற்பதிப்புச் செலவான பின்பு சில அசந்தர்ப்பத்தால் மறு பதிப்பு உடனே அச்சிடப் படாமல் நின்றிருந்தது.

இது சேதியறிந்த புதுவையரசாட்சிக்குட்பட்ட காரைக்காலில் அச்சுக்கூடம் வைத்திருக்கும் புலவரொருவர் அச்சமயம்

தமதியற்கைச் செயலுக்கொத்ததாக இருப்பதெனத் தேர்ந்து உடனே இப்புத்தகத்தைக் காரைக்காலில் பற்பல பிழைகள் செறிய ஆபாசமாக அச்சிட்டுத் திருநெல்வேலி இரங்கூன் பினாங்கு முதலான தமிழ் வழங்குந் தேயங்களுக்கனுப்பி விற்று வந்தனர்.

பிந்தி இந்நகரவச்சுக்கூடக்காரருள் அப்புலவர் செயலை மவாவிய சிலருமவ்வாறேயச்சிட்டு வழங்குகின்றனராம். அதனால், விநோத ரச மஞ்சரி படித்துத் தமிழ் வசன நடை கற்க விரும்பும் வித்தியார்த்திகளும் அவ்வாபாசப் பகுதிகளையே வாங்கி வாசிக்கும்படி நேர்ந்தது. "அன்ன நடை கற்கப் போய்த் தன்னடையு மிழந்தது" போல அப்பதிப்புகளினிடையே செறிந்து கிடக்கும் பிழைகளைக் கற்று இடர்ப்படுகின்றனர். இதைக் கண்ட சில அறிஞர்கள், விநோத ரச மஞ்சரியைப் பழையபடி திருத்தமாய் அச்சிட்டு வெளிப்படுத்துவது பேருதவியாகுமென்று தெரிவித்தன ராகையால், இவ்விரண்டாம் பதிப்பிற் சிற்சில விடயங்களைப் புதுக்கியுங் கூட்டியுந் திருத்தியும், காளமேகப் புலவர் சரித்திரம் போல ஔவையார் சரித்திரத்தையும் யாமறிந்தவாறு தொகுத்துத் தெளிவுபெற எழுதிச் சேர்த்தும். புத்தகம் இனிது முடியுமாறு சிறு கூனன்கதை ஒன்று எழுதிக் கடையிற் கூட்டியும் பிரசுரஞ்செய்தனம்.

March 1891 :

1. தெய்வங் கொள்கை
2. கற்பு நிலைமை
3. கீதவாத்திய விநோதம்
4. கற்றுய்ந்தொழுகல்
5. பயனில் உழவு
6. மஹா பண்டிதனைச் சிறுபிள்ளை வென்றது
7. காலபேதவியல்பு
8. நன்றி மறவாமை
9. கம்பர் சரித்திரத்தின் ஒரு பகுதி
10. கம்பர் இராமாயணம் பாடி அரங்கேற்றியது
11. ஒட்டக்கூத்தர் 'ஈட்டியெழுபது' பாடியது
12. ஒட்டக்கூத்தர் சோழனுக்குப் பெண் பேசியது

13. புகழேந்திப் புலவர் நளவெண்பாப் பாடியது
14. காளமேகப் புலவர் சரித்திரம்
15. ஏகம்பவாணன் சரித்திரம்
16. ஔவையார் சரித்திரம்

இரண்டாம் பதிப்பில் சேர்க்கப்பட்டவை :

17. பரமார்த்தன் என்னும் அவிவேக பூரண குரு கதை
18. சிறுகூனன் கதை

இக்காலத்துப் பதிப்பில் காணப்படுபவை (1921) :

19. ஒரு பதிவிரதை சரித்திரம்
20. காளிதாஸப் புலவர் சரித்திரம்

பதிப்பகத்தார் குறிப்பு

தற்செயலாக, இக்காலத்தில் பெரும்பாலும் கிடைக்காத "விநோத ரச மஞ்சரி" பழைய பதிப்பொன்றில் 'தமிழறியும் பெருமாள்' கதை என்பதும் கிடைத்தது. அக்கதையையும் இப் பதிப்பில் சேர்த்துள்ளோம். இம்மாதிரி, வேறு பழைய பதிப்புக்களில் வாசகர்கள் புது அத்தியாயங்கள் கண்டால், எமக்குத் தெரிவிக்கக் கோருகிறோம்.

சென்னை-17,
10-11-1958.

ஹி விட்டில் ப்ளவர் கம்பெனி.



[கடவுள் எங்கே ? 'அவர் எங்கும் உள்ளவர் ; எல்லாம் வல்லவர்,' என்கிறது ஆஸ்திக உலகம். நம்ப மறுக்கிறது நாஸ்திக உள்ளம். நாஸ்திகன் கேட்கும் பல வகையான கேள்விகளுக்கும் ஆஸ்திகன் தரும் விடைகள் படிப்பவர் சிந்தனைக்கு நல்ல விருந்து ஆகும். ஆசிரியரின் முதல் கட்டுரையே இந்நூலின் கடவுள் வாழ்த்துப்போல அமைந்துள்ளது. — பதிப்பாசிரியர்.]

1

தெய்வங்கொள்கை

[இது, ஆஸ்திக நாஸ்திக சம்வாதமாகச் செய்யப்பட்டது.]

ஆஸ்திகன் : "அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

என்னும் குறள் வெண்பாவினால், 'எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன ; அது போல, உலகு ஆதிபகவனுகிய முதலையுடைத்து,' என்னும் கருத்தைத் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் வெளியிட்டருளியபடி, 'இம்மலை நெருப்புடைத்து, புகையினால்,' என்பது போலவும், குடம் முதலிய காரியம் உண்டாவதற்குக் குயவனுகிய நிமித்தகாரணன் ஒருவன் உண்டாயிருத்தல்போலவும், இந்தப் பிரபஞ்சம் சிருஷ்டி, திதி, சங்காரம் என்கிற முத்தொழில் படுதலால், அக்காரியம் உண்டாவதற்கு நிமித்தகாரணனுகிய ஈஸ்வரன் ஒருவன் உண்டென்றும், மண் போல மாயையாகிய முதற்காரணம் உண்டென்றும், தண்ட சக்கரம்போல நல்வினை தீவினைகளாகிய துணைக்காரணம் உண்டென்றும், ஆன்மாக்கள் பந்த மோட்சத்தை அடையும்படி இவ்வாறு காரியப்படுமென்றும் அனுமானப் பிரமாணத்தால் கொள்ளவேண்டும்.

நாஸ்திகன் : அப்படியாயின், மூலப் பிரகிருதியாகிய மாயையினுலும் பரமாணுக்களினுலும் இவ்வுலகம் காரியப்படமாட்டாதா ? சற்றே விவரணமாகச் சொல்ல வேண்டும்.

ஆஸ்திகன் : மாயையும் பரமாணுக்களும் அறிவில்லாத சடமாகையால், அறிவுடையவனுலே அல்லாமல், அவைகளால் உலகம் காரியப்பட மாட்டாதென்பது நிச்சயம்.

நாஸ்திகன் : ஆனால், அறிவுடைய சீவர்களால் உலகம் உண்டாகலாமே, அதற்கென்ன தடை ?

ஆஸ்திகன் : ஒரு தேரைச் செய்வதற்குப் பற்பல வேலைக்காரர் வேண்டியிருப்பினும் ரதாசாரியனுகிய ஒருவனுலேயே அந்த ரதம் உண்டாகிறதினுலும், உலகத்தை உண்டாக்குகையாகிய காரியம் மிகவும் பெரிய காரியமாகையாலும், அச்சீவர்களிடத்தில் கிஞ்சிஞ்ஞத்துவம் (சிற்றறிவுடைமை) முதலிய தோஷம் உண்டா யிருக்கையாலும் அச்சீவர்களால் உலகம் காரியப்படமாட்டாது. ஆகையால், பிரபஞ்சத்திற்குச் சர்வஜ்ஞனுகிய ஈஸ்வரன் ஒருவனே கர்த்தாவாகின்றன் என்பது நிச்சயம் என அறியக்கடவாய். மேலும் சூரியனுல் அன்றி மலர்கின்றவை மலரவும்; குவிகின்றவை குவியவும் ; உருகுகின்றவை உருகவும் ; இறுகுகின்றவை இறுகவும் கூடுமா ? கூடாதே ; அதுபோல, அகில லோகங்களுக்கும் தாமே காரணமாகித் தமக்கொரு காரணமும் இல்லாது விளங்கிய கடவு ளால் அன்றி, எல்லா உயிர்களும் அபிவிருத்திப்பதற்கு உபயுக்தமாக மழை பெய்யும் பருவத்தில் பெய்யவும், வெயில்காயும் பருவத் தில் காயவும், காற்று வீசும் பருவத்தில் வீசவும், பொழுது விடியும் பருவத்தில் விடியவும், அஸ்தமிக்கும் பருவத்தில் அஸ்தமிக்கவும் கூடுமா ? ஏரி, குளம் முதலானவைகளை மனிதர்கள் உண்டாக்கு கின்றர்களே ; அளவிட முடியாத அகலமும், நீளமும், ஆழமும் உடைய கடலை அவர்கள் உண்டாக்க முடியுமா ? அதை யார் உண்டாக்கினுர்கள் ? ஏரி முதலானவைகளுக்குக் கரை இருக் கின்றதே, கடலுக்குக் கரை உண்டா ? அது எப்படித் தடைப் பட்டிருக்கின்றது ? ஏரி முதலானவைகள் வற்றிப் போகின்றனவே, கடல் ஏன் வற்றவில்லை ? சாமானியமான ஓர் ஏரி உடைந்தால் அநேக கிராமங்கள் முழுகிப் போகின்றனவே, பெரிய கடல் பொங்கி வந்தால் உலகம் நிலை நிற்குமா ? அதை அப்படி வாராமல் தடுக்கின்றவர்களார் ? ஒரு காலத்தில் காற்று விசையாக வீசினுல் குன்றுகள், கோபுரங்கள், கோட்டைகள், கொத்தளங்கள் எல்லாம் நிர்த்தூளியாக ; அண்ட பிண்டமும் கலங்குகின்றனவே ; அது பின்னும் கொஞ்சம் உக்கிரமாய் வீசுமானுல் எது எப்படி ஆகாது ? சித்திரை, வைகாசி மாதங்களில் சூரியனுடைய கிரணத் தின் வெப்பம் சிறிது அதிகப்படுவதினுல், அநேக கிருக கிராமங்கள் வெந்து நீருய்ப் போகின்றனவே ; அது அந்த மிதத்திற்குச் சிறிது மேற்படுமானுல் எவராலே சகிக்கக் கூடும்? அவைகளை அவ்வாறு அதிக்கிரமிக்க வொட்டாமல் அடக்குகின்ற வர்களார் ? மழைக்கு அதிவிருஷ்டி, அநாவிருஷ்டி என்று இரண்டு தோஷமுண்டு. அவைகளில் அதிவிருஷ்டி - அதிகமழை ; அநா விருஷ்டி-மழையின்மை. அதிக மழை பெய்தால் உலகம் நாசமாய்ப் போம், மழையில்லாவிட்டாலும் பயன்படாது. அப்படிப்பட்ட தோஷம் சம்பவியாமல் சம விருஷ்டியாய் மழை பெய்விக் கின்றதார் ?

" .....மாரி
வறப்பிற் றருவாரு மில்லே யதனேச்
சிறப்பிற் றணிப்பாரு மில் "

என நாலடி நானூற்றில் முனிவரரும் கூறினர். சூரியனும் சந்திரனும், பகலும் இரவும், வெயிலும் மழையும், உஷ்ணமும் சீதமும் கோபமும் பொறுமையும், ஜனன்மும் மரணமும், நரகமும் மோக்ஷமும் ஒன்றற்கொன்று எதிரிடையாக அமைக்கப்பட்டது யாராலே? பிணிகளே உண்டாக்கி, அவைகளேத் தணிக்கும் பொருட்டு ஔஷதங்களேக் கற்பித்ததார்? அறுகம்புல்லின் நுனியில் தங்கிய பனித்துளியளவாகிய சுக்கிலமானது, கரகரனுதி அவயவங்களாக உருப்பட்டு உயிர் பெற்று எண்சாண் உடம்பில் ஒரு சாண் அளவாகிய தாய் வயிற்றில் இரைப்பை, சலப்பை, மலப்பை முதலியவைகளுக்குரிய பல இடங்களும் தவிர, மிகவும் சிறிதாகிய கருப்பாசயப் பையினிடத்தில் கட்டுண்டிருந்து, அதனுல் உறுத்தப்பட்டு, உதராக்கினியில் வெந்து, அவ்விடத்தில் பூரிக்கும் ஜலத்தில் அமிழ்ந்து, பிரசூதவாயு முறித்துத்தள்ள, அதோமுகமாய்த் திரும்பி நெருக்குண்டு குழந்தை உற்பவிக்கின்ற அதிசயத்தை என்னென்று சொல்லுகிறது? இப்படிச் செய்கின்றவர் யார்? மனிதர் முகம் ஒன்று போல மற்றொன்று இருக்கலாகாதா? அதது வெவ்வேறு சாயலாயிருக்கின்றதே! அன்றியும் அனேவரும் ஒருவர்க்கொருவர் உருவம், குணம், ஓசை, செய்கை முதலியவைகளாலும் பல்வேறு வகைப்பட்டிருக்கின்ருர்களே! அல்லாமலும், ஒரு உதரத்திற் தோன்றிய பல பிள்ளேகளில் ஒருவரேனும் உருவம், குணம், தொனி, செய்கை முதலியவைகளால் ஒன்றுபட்டிருக்கக் காணேமே! இதெப்படிப்பட்ட ஆச்சரியம்! விலங்கு பறவை ஊர்வன நீர் வாழ்வனவாகிய ஜாதிகளாலும், மரங்கள் செடிகள் கொடிகளிலும், அவைகளிலுள்ள மலர் காய் கனிகளிலும், மண் கல் முதலியவை களிலும் எத்தனேயோ பேதங்களும் குணரூப விசித்திரங்களும் இருக்கின்றனவே! இவை எவ்வாறு தோன்றின? மண்ணனது இறுகவும்; நீரானது பரவவும்; தீயானது சுடவும்; காற்ருனது சஞ்சரிக்கவும்; ஆகாயமானது இவைகளுக்கெல்லாம் இடந்தரவும் செய்ததார்? உய்த்துணருமிடத்தில் மேற்கூறியவை கடவுளின் செயல் என்றே தோன்றுகின்றன அல்லவா?

நாஸ்திகன்: விளங்காய் திரண்டிருப்பதும், களம்பழம் கறுத்திருப்பதும், பால் வெளுத்திருப்பதும் இயல்புதானே? மீன் குஞ்சுக்கு நீச்சும், மான் குட்டிக்கு வேகமும் பயிற்றினவர்களார்? ஒருவரும் இல்லேயே! அந்தப்படி அனேத்தும் சுபாவமென்கிறது தானே? இதை விட்டு, 'மொட்டந் தலேக்கும் முழங்காலுக்கும் முடி போடுவது போல'க் கடவுள் செயலென்பதென்னே?

ஆஸ்திகன்: காரணத்திலிருந்து காரியம் தோன்றுவதல்லது நிஷ்காரணமாய்த் தோன்றுமையால், சுபாவமென்பது சரியன்று.

குலாலன் நிமித்தத்தாலன்றிக் குடம் உதிக்கின்றதா? சூத்திரி யில்லா மற் பிரதிமை ஆடுகின்றதா? மீகாமன் இல்லாமல் மரக்கலம் ஓடு கின்றதா? சாரதியில்லாமல் தேர் நடக்கின்றதா? எங்கேயாவது சுக்கில சுரோணித சம்பந்தமில்லாமல் கரு உற்பத்தியாகின்றதா? எந்தக் காலத்திலாஞலும் வித்தில்லாமல் விளைவுண்டாகுமா? 'வித்தில்லாத சம்பிரதாயம் மேலும் இல்லை கீழும் இல்லை,' என்று சொல்லக் கேட்டதில்லையோ? மேலும், 'அவனன்றி யோரணுவும் அசையாது,' எனவுமிருக்கின்றதே. ஆதலால், தெய்வச் செய லென்பதே சரியென்று ஒப்புக்கொள்ள வேண்டும்.

நாஸ்திகன்: ஆ! ஆ! 'வலியானெடுத்ததே வாய்க்கால்; வல்லவனுடியதே பம்பரம்,' என்பது போல, சூட்சும புத்தி உடைய வர்கள், அசுவதாட்டியான தங்கள் வாக்கு வல்லமையால் வேண்டியபடியெல்லாம் பேசுவார்கள்.

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது."

என்பது போலச் சொல்கின்றீர்; அஃதிருக்கட்டும், தெய்வமிருப்பது மெய்யானுல், கண்ணுக்குப் புலப்பட மாட்டாதா? புலப்படா மையால், பொய்யென்றுதானே நீணக்க வேண்டியது?

ஆஸ்திகன்: ஒரு போதும் பொய்யாக மாட்டாது. கண், அகக்கண் புறக்கண் என இரண்டாகும். அகக்கண் - அறிவாகிய கண்; புறக்கண்-முகத்திலிருக்கும் கண். புறக் கண்ணினுல் கடவுளை நிஜஸ்வரூபமாய்க் காணவே கூடாது; அகக் கண்ணினுல் ஒருவாறு காணலாம். அநேகர் அஞ்ஞானவிருள் சூழ்ந்து அகம் குருடாயிருப்பதனுல், அவர்களுக்கு அகக்கண்ணிலும் புலப்படுகிற தில்லை என்றுலும், அவர்கள் தத்தமது உள்ளமாகிய தகளியில், அன்பாகிய நெய்யைப் பெய்து, அருளாகிய திரியையிட்டு, அறிவாகிய விளக்கை ஏற்றினுல், அவர்களுக்குக் கடவுள் புலப் படலாம்.

"முகத்துக் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்!
அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்."

எனவும் சொல்லப்படுகின்றதே! அது மெய்யாயிராவிட்டால், வேதசாஸ்திரங்கள் பயில்வதும், ஆலயங்களுக்குச் செல்வதும், தெய்வத்தை வணங்குவதும், தீவினைக்கு அஞ்சுவதும், தாய் தந்தையைப் பேணுவதும், குருவின் உபதேசசத்தை நம்புவதும், செங்கோலாணைக்கு அடங்குவதும், சத்தியம் தவருதிருப்பதும், மற்றும் பற்பல நற்கருமங்களைச் செய்வதும் எதற்கு? யாதோர் ஆடங்கமுமில்லாமல் நிர்ப்பயமாய் அவரவர்கள் நினைத்த வண்ண மெல்லாம் நடக்கலாமே.

நாஸ்திகன்: அப்படியா! இது 'திண்ணைக்குத் தேள் கொட்ட மிடாவுக்கு நெறிகட்டினதாகவும் இருக்கிறது. தெய்வ

பயத்தைக் காண்பிக்கிற கருத்து வேறே. அது நீவிர் அறிந்தீரில்லீ. அப்படிக் காட்டாவிட்டால், ஒருவன் பொருளை மற்றொருவன் அபகரிப்பான்; ஒருவன் பெண்டிரை மற்றொருவன் இச்சிப்பான்; மாதா பிதா சொற்படி புத்திரர் நடவார்கள்; கணவன் விருப்பப்படி மனைவி இணங்கார்; அரசர்க்கு அதிகாரஞ்செல்லாது; பகைவர் மேலிடுவார்கள்; சண்டை, வழக்கு, சூது, வாது, கொலை முதலானவைகளை விலை கொடுத்து வாங்குவார்கள்; பெரியோர் சிறியோர் என்னும் வரம்பு தவறிப்போம்; அப்புறம் உலகம் ஒரு வழிப்படாது. தன்னரசு அச்சுக் கெட்டுத் தச்சு மாறிப்போம்; துக்கமன்றிச் சுகஞ் செனிக்கமாட்டாது; ஆனதுகொண்டு விவேகிகள் உலகம் கட்டுப்படுகிற நிமித்தமே, 'கௌபீன சம்ரட்சணார்த்தனம் அயம் படாடோப' என்பது போல, இந்த ஆடம்பரங்களை யெல்லாம் உண்டாக்கி வைத்தார்களென்று வெட்டவெளிச்சம் புட்டப் பகலாய்க் காண்கின்றதே! இதை விட்டு, 'அப்படிமெப்படிச் சுட்டாளோ, அதற்குள் தித்திப்பை எப்படி நுழைத்தாளோ!' என்பது போல எல்லாம் தெய்வச் செயலென்று பிரமிப்பானேன்? இதைவிட மனிதர் செயலென்று சந்தேகமில்லாமல் சொல்ல லாமே?

ஆஸ்திகன்: இவ்வாறு பேசுகின்றவர்களுக்கும், போகமே மோட்சமும் துன்பமே நரகமும் என்கிற உலோகாயதனுக்கும் என்ன பேதம்? ஆயினும், இதென்ன விபரீதம்? 'உள்ளக் கருத்து வள்ளலுக் கல்லவோ தெரியும்?' வாய் கூசாமல் மனிதர் செய லென்றால் ஒக்குமா? மனிதர் கிணறு தோண்டுவார்கள்; தண்ணீர் சுரக்கச் செய்வார்களா? பயிர் செய்வார்கள்; மழை பெய்விப் பார்களா? அவை தெய்வச் செயலால்தானே ஆகின்றன? ஆதலால், தெய்வ பலமே பலம்; மனுஷ பலமென்ன, துர்ப்பலந் தானே? கல்லுக்குள் இருக்கின்ற தேரையையும், முட்டைக்குள் இருக்கின்ற பறவைக் குஞ்சையும் ஊட்டி வளர்க்கின்றதார்? பாலில் சுவை போலவும், நீருள் குளிர்ச்சி போலவும், தீயில் சூடு போலவும், பூவில் மணம் போலவும், மணியுள் ஒளி போலவும் சகல ஆத்மாக் களுக்குள்ளும் கடவுள் அந்தரியாமியாயிருந்து பரிபாலிக்கின்றதை அறியாதவராய், 'தெய்வந்தொழு' என்று ஔவையார் சொன்ன தையும் மறந்து, கேவலம் கடவுள் இல்லை என்பவராய் வாது செய்வது என்னை?

நாஸ்திகன்: வாது செய்தால் தெய்வம் கண்ணைக் குத்துமோ? நாவெழவொட்டாதோ? இதெல்லாம் வீண் மனோராச்சியமே.

ஆஸ்திகன்: ஐயோ கர்த்தாவே! 'தெய்வமிகமேல்' என் பதையும், 'தெய்வம் சீறிற் கைதவமாளும்' என்பதையும் ஓராமல், அகங்காரத்தாற் கெடுமதி கண்ணுக்குத் தோற்றுமல், அஞ்சாத நெஞ்சு படைத்து, 'வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ' என்று எளிதாக வாய்மதம் பேசலாமா? அபசாரமல்லவா?

'அரசன் அன்று கொல்லும் ; தெய்வம் நின்று கொல்லும்,' என்று பழமொழியும் இருக்கின்றதே !

நாஸ்திகன் : ஏன் சும்மா பூச்சி காட்டுகிறீரே ; இந்த வீண் பட்டி மிரட்டு ஏதுக்கு ? 'பனங்காட்டு நரி சலசலப்புக் கஞ்சுமா ?' இதெல்லாம் 'ஆயிரம் காலேயரைக்காற் பணந் தானே ?' என்ன செப்பிடுவித்தையும் காரடவித்தையும் ஆட வருகிறீர் ? 'உள்ளங்கை நெல்லிக் கனிபோல' உண்மையாகக் கண்ணிலே கண்டதை விட்டு, என்றும் காணுததும் ஆரோ வேலே யற்ற பைத்தியக்காரர் சொல்லக் கேட்டதுமாய், சொப்பனம் போலவும் இந்திரசாலம் போலவும் இருக்கும் உண்மையில்லாத பேய்ச் சமாசாரத்தையா நம்புகிறது ?

ஆஸ்திகன் : அட்டா ! இதேது ? தொண்டையும் மண்டையும் போம்படி போராட வேண்டி வந்ததே ! கண்டதைத்தானு மெய்யென்று கொள்ளுகிறது ? கண்டதைக் கொண்டு காணுததையும் உண்டென்று நிச்சயிக்கிறதில்லேயா ? அப்படியானுல் தர்க்கம் மீமாஞ்சை முதலாகிய சாஸ்திரங்களில் அனுமானம், அர்த்தாபத்தி முதலிய சில பிரமாணங்களே முக்கியமாக எடுத்துரைப்பதென்ன ? தாய் தந்தையர்களே அறியாத மைந்தனெருவன், தன்னேப் பெற்ற வர்களேத் தானறியாததனுல், 'நான் அந்தரத்தில் முளேத்து வந்து குதித்தேன்' என்பானே ? காட்சிப் பொருள் கருத்துப் பொருள் என இரு வகையாய்ச் சொல்வதுதானென்ன ? மலே இலக்கா இருக்க இல்லேயென்னலாமோ ? கடவுள் அருவாகியும், உருவாகியும், அணுவாகியும், மேருவாகியும், அணுவுக்கணுவாகியும், மேருவுக்கு மேருவாகியும், ஒரு சிறிய புல் நுனியையும் விட்டொழியாமல் மாதர் புருஷர், பாலர் விருத்தர், மூடர் விவேகிகள், பாதகர் புண்ணியர் களும், மற்றைப் பசுப்பட்சி மிருகங்களும், விருட்ச பாஷாணுதிகளும், யாணே முதல் எறும்பீருகச் சொல்லப்பட்டனவும் ஆகிய ஸ்தாவர சங்கமங்கள் எல்லாவற்றிற்குள்ளும் பரிபூரணமாயிருக்கின்ருர். அவரில்லாத இடம் ஒன்றும் இல்லே.

நாஸ்திகன் : நீர் சொல்லுகிறபடி கடவுள் எங்கும் பரிபூரண மாயிருக்கிறது மெய்யாகுமானுல் அவர் பாவிகளுக்குள்ளும் இருக் கின்ருர் என்பது சரியல்லவே !

ஆஸ்திகன் : அவரெங்கும் இருக்கிருர் என்பது சத்தியம் ? ஆனுல், அவர் நல்லோர் இருதயத்தில் மெல்லிய பூவின்மேல் இருக் கிறதுபோலவும், தீயோர் மனத்தில் கடூரமாகிய முள்ளின்மேல் இருக்கிறதுபோலவும் இருக்கின்ருர் என்பதே அதன் கருத்து. இப்படி யாகக் கொள்ளாவிடின் அவரைப் பூரணரென்பது பொய்யாய் முடியும். அன்றியும், கடவுளின் அகடிதகடனு சக்தியை யாரறிவார் ? அவர் அண்டத்தை அணுவாகவும், அணுவை அண்டமாகவும், பகலே இரவாகவும், இரவைப் பகலாகவும், ஆணேப் பெண்ணுகவும், பெண்ணே ஆணுகவும் மாற்றுவார். ஒரு சிறிய கடுகுக்குள் பெரிய

மலையை அடக்குவார். புலியைப் பசுப்போலச் சாதுவாக்குவார். ஆகாயத்தை ஒரு சுண்டுவிரலால் மறைப்பார். பூமி முழுதும் அவருக்கொரு சிறு துளி. கடல் நீரெல்லாம் அவருக்கொரு சிறு துளி. ஊழித்தீயோ, அவருக்கொரு சிறு பொறி. சண்டமாருதமோ, அவருக்கொரு சிறிய சுவாசம். அவர் ஆணுய், பெண்ணுய், அலியாய், அவையன்றுய், ஒன்றுய், பலவாய், சத்து சித்து ஆனந்தமாய், நித்திய நிரஞ்சன நிர்த்தொந்த நிஷ்களமாயிருப்பவர். அவருக்குப் பிறப்பு இறப்பு, விருப்பு வெறுப்பு, ஒப்பு உயர்வு, இன்பம் துன்பம், பந்தம் மோட்சம் இல்லை : அவர் மகிமையைச் சொல்ல ஆர் தரம் ? அவர் மனத்திற்கும் வாக்குக்கும் காயத்திற்கும் அதீதமானவர். இப்படியெல்லாமிருக்க, இன்னமும் நம்பிக்கையடையாதிருக்க லாமா ?

நாஸ்திகன் : 'எல்லா மிருக்கிறது பெட்டியிலே, இலேக்கறி கடையச் சட்டியில்லை' என்பது போல, கடவுளிடத்திற் சகல அற்புதங்களும் உண்டாயிருந்தும், அவர் காட்சிக்கன்னியமாயிருப் பதனுல், அவரைக் குறித்துச் சந்தேகப்பட வேண்டியதாய்த்தானே யிருக்கிறது ? நிவர்த்தித்துக் கொள்வதற்குத் தகுதியாகிய சாதன மும், சாட்சியும், ஆட்சியும் வேண்டாவா ?

ஆஸ்திகன் : அவசியம் வேண்டுவதுதான்.

நாஸ்திகன் : கடவுளைக் குறித்து உண்டான சாதனம் யாது ?

ஆஸ்திகன் : வேதமே ; அதாவது தத்துவங்களை அறிவிப்பது என்பதாம்.

நாஸ்திகன் : வேதம் எத்தன்மைத்து ?

ஆஸ்திகன் : வேதம் ஒருவராலும் உண்டாக்கப்படாமல் அனுதியாயிருந்து கடவுளால் பிரமனுக்கு உபதேசிக்கப்பட்டு, வழி வழியாய் உலகத்திற் பரவினது என்பதனுல் அபௌரஷேயம் எனவும், சிலர் கடவுளது திருவாக்கிலிருந்து உண்டானது என்பதனுல் பௌரஷேயம் எனவுஞ் சொல்லப்பட்டு, சகலமான பொருளையும் தனக்குள் மறைத்து வைத்திருப்பதனுல் மறை என்றும், பல தர்மங்களையும் அறிதற்குக் கருவியாயிருப்பதனுல் வேதம் என்றும், ஓதப்படுதலால் ஓத்து என்றும், கேட்கப்படுதலாற் சுருதி என்றும், எல்லா நூல்களுக்கும் ஆதியாதலால் ஆதிநூல் என்றும், மெய்ப்பட்டிருத்தலால் மெய்ந்நூல் என்றும், இன்னும் பற்பல காரணங்களால் ஆரணம் என்றும், எழுதாக்கிளவி என்றும், நிகமம் என்றும் பெயர் பெற்றதும் அல்லாமல், இராஜ கட்டளைக்கு ஒப் பானதுமாய் இருக்கின்றது.

நாஸ்திகன் : வேதத்தை யாது காரணத்தால் இராஜ கட்டளைக்கு ஒப்பிடுவது ?

ஆஸ்திகன் : ஓர் ராஜாவின் கட்டளைப் பத்திரம் வரக்கண்ட மாத்திரத்தில் அவனது செங்கோலின்கீழ் வாழும் குடிகள் அந்நிருபத்தை இரு கையினுமேந்திச் சிரசில் தாங்கிக் கண்ணிலொற்றிக் கொண்டு, மனம் நடுங்கி, அதில் குறித்த வண்ணம் அக்கணமே ஆய்ந்தறிந்து, தாமதியாமல் அம்முறையே செய்வது போல, எப்பொருட்கும் இறைவனுகிய கடவுள் அருளிய கட்டளைப் பத்திரம் என்னும் வேதத்தை அக்கடவுளாகவே பாவித்து, அதில் சொல்லிய படி யாவரும் தடையின்றிச் செய்யவேண்டியிருப்பதனால், அதை இராஜ கட்டளைக்கு ஒப்பிடலாயிற்று.

நாஸ்திகன் : வேதம் என்ன சொல்லுகின்றது ?

ஆஸ்திகன் : அது சீவாத்துமப் பரமாத்துமஸ்வரூப லக்ஷணம் இப்படிப்பட்டது என்றும், அவ்விரண்டிற்கும் அனுதியாயுள்ள சம்பந்தம் இப்படிப்பட்டதென்றும், அச்சம்பந்தத்திற்கு இடையே சம்பவித்த விரோதம் இன்னதென்றும், அந்த விரோதத்தை நிவர்த்திப்பதற்கு உபாயம் இன்னதென்றும், அவ்வுபாயத்தைச் செய்த வழி அடையும் புருஷார்த்தம் இதுவென்றும் சொல்வது மன்றி, சகலபுவன சராசரங்களின் உற்பத்தி ஸ்திதி நாசங்களைக் குறித்தும், கர்ம பக்தி ஞான யோக முதலியவைகளைக் குறித்தும் சாங்கோபாங்கமாகச் சொல்லுகின்றது. அவை விரிக்கிற் பெருகும். மேலும், சகலரும் கடவுளைத் தேடியடைந்து அவருக்கு அடிமை பூண்டு அவரைத் தொழுவது அவராணையை அதிக்கிரமிக்காமல் நம்பிக்கை கொண்டு அவர் சொன்ன வண்ணம் அகப்பற்றுப் புறப்பற்றுக்களை ஒழித்துப் பக்தி வைராக்கியத்தோடு நடக்க வேண்டுமென்றும், அவ்வாறு நடந்தவர்கள், நோயாளியானவன் நல்ல மருத்துவனைத் தேடியடைந்து, அவன் சொல்லினிடத்தில் நம்பிக்கை வைத்து, அவன் கொடுத்த மருந்தையுண்டு, அவன் வைத்த பத்தியபாகம் தவறுதிருந்தால், நோய் நீங்கிச் சரீரம் சொஸ்தமாய் ஆரோக்கியம் பெறுவது போல, பிறவித் துன்பம் அற்றுச் சுகமுற்றுப் பெரும்பேறு பெறுவார்கள் என்றும், ஆணவத்தால் தெய்வ கட்டளையை மீறி, அந்தத் தெய்வத்தையே நிந்தித்து, அங்குசமில்லாத யானையும், கடிவாளமில்லாத குதிரையும்போல, ஒருவரையும் மதியாமல் நினைத்தபடியெல்லாம் தம்மிஷ்டமாய் நடப்பவர்கள் யுக்தாயுக்தம் தெரியாமல் பாவச் செய்கையே பயின்று, யாவராலும் இகழப்பட்டு, இகபரார்த்தங்களையிழந்து, பற்றுக்கோடின்றி, எரிவாய் நரகத்தில் வீழ்ந்து காலதத்துவமுள்ள வரைக்கும் மாறுத கொடிய வேதனையையே அனுபவிப்பார்கள் என்றும் சொல்லுகின்றது.

நாஸ்திகன் : சாட்சி யார் ?

ஆஸ்திகன் : சான்றோரே.

நாஸ்திகன் : சான்றோரைச் சாட்சி குறித்தீரே, அவர்களைத் தன்மையோர் ?

ஆஸ்திகன் : அவர்கள் காமமாகிய காட்டை அழித்து, வஞ்சனையாகிய வேரை அகழ்ந்து, பொய்யாகிய புதரை எரித்து, கடினமாகிய கரம்பு திருத்தி, உண்மையாகிய எருவிட்டு, நெஞ்சமாகிய வயலில் தெய்வ பத்தியாகிய விதை விதைத்து, பக்குவமாகிய நீர் பாய்ச்சி, விடயமாகிய பட்டி மாடு* முதலியன மேயாமல், சாந்தமாகிய வேலிகோலிக் காத்து, பரமஞானமாகிய பயிர் தழைத்து, கருணையாகிய கதிர் தோன்றி, முத்தியாகிய முழுப்பலன் வாய்க்கப் பெற்றவர்கள்.

நாஸ்திகன் : சான்றோர் கடவுளைப்பற்றி என்ன சொல்லுகின்றார்கள் ?

ஆஸ்திகன் : அவர்கள் 'அவர் சர்வஞ்ஞர், சர்வேச்சுவரர், சர்வநியந்தரர், சர்வாந்தரியாமி, சர்வகற்பிதர்' என்றும், 'கோடை காலத்தில் கானலில் வருந்தி இளைத்து வெயர்த்துத் தாகித்துச் சோகித்து வந்தவர்களுக்குக் குளிர்ந்த தாமரையோடையும் அதனருகில் வடநிழலும்போல, தன்னுள் பிறரால் தெய்வத்தால் வருவனவாகிய மூவகைத் தாபாக்கினியால் தகிக்கப்பட்டு, சனனவிடாய்கொண்டு மூர்ச்சித்து, வேறு கதியின்றித் திருவுளமே தஞ்சமென்று உண்மையாய் நம்பி வந்து ஆசரித்தவர்களுக்குத் தாமே ரட்சகராய், கருணைநிதியாய், ஆபத்பாந்தவராய், தீனசகாயராய், இளங்கன்றுக்கிரங்கும் பசுப் போலவும் அழுங்குழந்தைக்கு உருகும் அன்னைபோலவும் திருவுளமிரங்கி, அவர்கள் பாவித்த வண்ணம் அப்பொழுதே தோன்றி, அவர்களைக் கைநழுவ விடாது அஞ்சேலென்று ஆதரித்து, இம்மையில் சகல பாக்கியமும் தந்து, மறுமையில் ஈடும் எடுப்பும் இல்லாத மோட்ச சாம்பிராச்சியத்தையும் அருளிச் செய்வார்' என்றும் சொல்லுகிறார்கள்.

நாஸ்திகன் : ஆட்சி என்ன ?

ஆஸ்திகன் : தொன்று தொட்டு நெடுங்காலமாக எவ்வகையோரும் கடவுளின் கட்டளைக்குடன்பட்டு, அவரையாசரித்து ஆராதித்து வருவதே.

நாஸ்திகன் : 'குத்தாத காதுக்கு ஊனமில்லையே ?' அதுபோலப் பரமாத்துமாவானவர் சீவாத்துமாவுக்கு விதி விலக்குகளைக் கற்பிக்காமலிருந்தால், அவ்வாத்துமா துக்கமின்றித் தன்னிஷ்டமாயிருக்குமே ! 'சும்மா கிடக்கிற தாரையை ஊதிக் கெடுத்தான் தாதன்' என்பதுபோல, அதற்கு அவைகளைக் கற்பித்ததனாலல்லவோ 'கொப்பத்தில் வீழ்ந்த யானையும், வலையிற் சிக்கிய மானும்' போல வினை வசப்பட்டுச் சங்கடப்படவேண்டி வந்தது ?

ஆஸ்திகன் : ஒரு மண்டலாதிபதி தன் இராச்சியத்தார் தனது ஆணைக்கமைந்து நடக்க விரும்புவனேயல்லாமல், அவர்களை அவர்க

* பட்டி மாடு—பயிரழிக்கும் மாடு.

ஸிஷ்டப்படி விடமாட்டான் அல்லவா ? அதுபோலக் கர்த்தாவும் சீவாத்துமாக்கள் தமது கட்டளைக்கமைந்து நடக்க வேண்டுமெனத் திருவுளம்கொண்டு, அவைகளுக்கு விதிவிலக்குகளை ஏற்படுத்தி மேற்கூறிய அரசனைப் போல விதிப்படி நடந்த ஆத்துமாக்களை இரட்சித்தும் நடவாதவைகளைத் தண்டித்தும் வருகின்றார்.

நாஸ்திகன் : 'சுமப்பவனல்லவோ அறிவான் காவடிப்பாரம் ?' எது எப்படியானாலும் கடவுளுக்கென்ன ? அவர் முகவுல்லாசமாகத் தான் பார்த்துக்கொண்டிருக்கிறார். அது ஆத்துமாக்களுக் கல்லவோ பெரிய தலைச்சுமையாயிருக்கிறது ? இதனால் அவருக்குத் தோஷம் சம்பவியாதா ?

ஆஸ்திகன் : அரசன் தீங்கு செய்வாரைத் தண்டிப்பதனால் அவனுக்குத் தோஷமுண்டா ? இல்லையே ! அதுபோலக் கடவுளுக் கும் தோஷமில்லை. துஷ்டநிக்கிரகம் செய்வது பயிர்க்குக் களையெடுப் பதுபோலல்லவா ? நல்லது ! ஒருவனுக்குப் பால் பழங்களுடனே அறுசுவையுணவும் அமைத்து உண்ணென்றால், அதை உண்டு பசி தணித்துக்கொள்வது தகுதியாயிருக்க, அவனுண்ணுமற் பசியால் வயிறெரிந்து வருந்தவேண்டியதென்னை ? புதுக்குடத்திற் பூரித்து வாசனையூட்டிக் குளிரவைத்து இளநீர்போல மதுரமாய்த் தெளிந்த நன்னீரைப் பருகக் கொடுத்தால், அதனைப் பருகித் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளாமல் நாவறந்து நெஞ்சுலர்ந்து உழலவேண்டிய தென்னை ? பூந்தேன் ஒழுகிப் புது மணம் கமழ, வண்டினம் மொய்த்து மகிழ்ந்திசை பாட, நாண்மலர் பூப்பப் பால்நிலாக் காய, அதுபோல, வெண்மணலார்ந்து தண்ணிழல் வாய்ந்து, தென்றல் வீசுஞ் செழும்பூஞ் சோலை இருக்க, அதன்கட்சேர்ந்து, தாபத்தை நீக்கிக்கொள்ள நினையாமல், 'உள்ளடி சிவக்க வெள்ளிடை வெயிலில், விதிர்விதிர்த்து உடலம் வெயர்த்து வெதும்ப' ஓயாது நடந்து நாய் போல அலையவேண்டியதென்னை ? பரம காருண்ய ராகியகடவுள், சீவாத்துமாவானது மோக்ஷமாகிய பரமலாபத்தைப் பெற்றுச் சுகிக்கும்பொட்டு அதற்கு உபயுக்தமாக எல்லாப் பிறப் பிலும் சிறந்த மானிடப் பிறப்பையும், தியானிக்க மனதையும், தரிசிக்கக் கண்ணையும், அஞ்சலிக்கக் கையையும், வணங்கத் தலையை யும், துதிக்க வாக்கையும் கொடுத்ததுமல்லாமல், விதிவிலக்குகளைத் தெரிந்துகொள்வதற்குக் கருவியாக வேதத்தையும், அவ்வேதத்தை ஆராய்ந்துணர்வதற்கு உணர்வையும், உணர்ந்தபடி ஒழுகத்தக்க சக்தியையும் கடாக்ஷித்தும் இருப்பதனால், அந்தப்படி நடந்து அப் புருஷார்த்தத்தைப் பெறுவது யுக்தமாயிருக்க, அவ்வாறு நடவாமல், ஆற்றைக் கடக்க ஓடத்தைக் கொடுத்தால் முகத் துவாரத்துக்கு நேரே அந்த ஓடத்தை ஓட்டிக்கொண்டு போய், ஆழமாகிய நடுக் கடலிற் பாய்ந்து, அவமே கவிழ்ந்து மாய்வாரைப் போல, கடவுளாணையைமீறிப் பேராசையாகிய பேய் பிடித்தாட்ட, துக்கத்துக்குக்கிடமாகிய மண், பெண், பொன் முதலியவைகளைப் பெரும்பொருளாகக் கருதி, தனக்குக் கடவுளருளிய அகக் கரணம்

புறக் கரணங்களையெல்லாம் வியர்த்தமாய் அவ்விஷயத்திற்கே அனுகூலமாகும்படி உபயோகப்படுத்தி, கடவுள் விஷயத்தில் மிகவும் அபசாரப்பட்டு மகா அபராதியாகி, 'அடாது செய்தவர் படாது படுவர்,' என்றபடி அதோகதியிலாழ்ந்து கெட்டொழிந்தால், அது அந்த ஆத்துமாவின் குற்றமேயல்லாமல், கடவுளுக்கென்ன? குற்றமாமோ? அவரோ, இயல்பாகவே தோஷமில்லாதவர். அவர் மேல் தோஷம் சாட்டுவது பெருந்தோஷமே.

நாஸ்திகன்: ஐயோ! நான் இடும்பை ஈன்ற தாய் போன்ற குடும்பச் சேற்றிலாழ்ந்து, பெண்டு பிள்ளை பண்ட பதார்த்தங்களேயே சதமென்று எண்ணி, விழலுக்கிறைப்பது போல, அவற்றிற்கே உள்ள நாளெல்லாம் உழைத்து, வைதிகத்தைப் பகைத்து, லௌகிக லோலனுய்த் தினையளவாவது தெய்வ சிந்தையில்லாமல் வியர்த்தனானேனே! பள்ளமிறைத்தவர்களுக்கல்லவோ பங்குண்டு? உழுகிற காலத்தில் ஊர் திரிந்து அறுக்கிற காலத்தில் அரிவாளை எடுத்துக்கொண்டு புறப்பட்டால் என்ன கிடைக்கும்? ஆயினும், இனிச் செய்வது என்னை?

ஆஸ்திகன்: உனக்கு இதுவரையிலும் இல்லாத அனுதாபம் இப்பொழுதுதான் உண்டாயிற்று; அதனால், கடவுளுக்குச் சித்தம் திரும்பிற்றென்று விளங்குகின்றது; உனக்கு அனுகூலகாலம் பிறந்தது; நீ ஒன்று செய்; நீர்க்குமிழி போலவும் மின்னல் போலவும் அநித்தியமாகிய சரீர ஸ்திதியை நினைத்து,

> "உழைப்பின் வாரா வுறுதிக ளுளவோ?
> கழுப்பின் வாராக் கையறவு வுளவோ?"

என்பதையும் உணர்ந்து, வறிது இராமல் இயன்ற அளவும் விரைந்து முயன்று, சற்குருவைக் கண்டடைந்து, அவர் சந்நிதியில் உன் குறைகளையெல்லாம் விண்ணப்பம் செய்து, அவரனுக்கிரகிக்கும்படி நடந்துகொண்டு, நல்லுபதேசம் பெற்று,

> "சிறுவரையே யாயினும் செய்தான் றல்லால்
> உறுபயனே வில்லை யுயிர்க்கு."

என்பதையும் ஓர்ந்து, ஆசாரியர் நியமனப்படி தர்மம் தவறுது நடப்பதே நன்மையைப் பெறும் வழியாகும் என்று ஆஸ்திகன் சொல்ல, அது நாஸ்திகனுக்குப் பசுமரத்திலறைந்த ஆணி போல மனதிற்றைத்துறுத்த, பள்ளமடையில் திருப்பிப் பாய்ச்சிய நீர் போல அக்கணமே அவன் அதற்குடன்பட்டு, மனந்திரும்பி, அவ்வண்ணமே செவ்வையாயொழுகிக் கிருதார்த்தனாகி, சிலநாட் சென்ற பின்பு ஒருநாள் ஆஸ்திகனை வந்து கண்டான். அவன், இவனை, 'உம்முடைய க்ஷேமம் என்ன?' என்று கேட்க, 'ஐயா, ஆஸ்திகரே! பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெற்றது போலவும், பரிச வேதியைச் சேர்ந்த சகலமான பொருளும் பொன்னனைந்த போலவும், உமது சேர்க்கையினால் எனது துர்க்குணமெல்லாம்

நீங்கிச் சுகப்பட்டேன். நீர் என்னளவிற் செய்த உதவியோ மேகம் போலக் கைம்மாறு கருதாது செய்த உதவியாய் இருக்கின்றது. இதைக் குறித்து உமக்கு நானென்ன செய்யப் போகிறேன்!' என்று சொல்ல, ஆஸ்திகன், 'நீர் எனக்கொன்றும் செய்யவேண்டிய தில்லை. மேகமானது உப்புக் கடல் நீரையுண்டு உவரை மாற்றி அதனை நன்னீராக்கிப் பெய்ய, அந்நீர் மறுபடியும் கடலிற்போய் விழுந்து பழையபடி உவர் நீராய்விடுவதுபோல, ஏதோ தெய்வ கடாக்ஷத்தினால் நீர் இப்பொழுது அனுசரித்திருக்கிற நன்மார்க் கத்தை விட்டுக் குணபேதப்பட்டுப் பூர்வமிருந்த பாழ்ங்குழிக் கொப்பாகிய துன்மார்க்கத்திற்றானே பின்னும் பிரவேசித்துப் பதிதராய்விடாமல், வைராக்கிய சித்தத்தோடிருப்பீரானால், அதுவே எனக்கு லட்சாந்தரம்,' என்ன, நாஸ்திகன் நல்லதென்று அந்தப்படியே மார்க்கட முஷ்டியாய்ப் பிடித்த பிடி விடாதிருந்து நெறிதவறுது வாழ்ந்தான்.





['இல்லற மல்லது நல்லற மன்று' என்பது ஔவையாரின் அமுத வாக்கு. இல்லறத்தை நல்லறமாக நடத்துபவள்யார்? கற்புடைய மனைவி. கற்புடைய பெண்மணியின் கடமைகள் யாவை? இந்தக் கட்டுரையைப் படித்துப் பாருங்கள். திருமணம் ஆன பெண்மணிகளுக்கும் திருமணம் செய்துகொள்ளப் போகும் செல்வியருக்கும் இக் கட்டுரை ஒரு வழிகாட்டி. படிக்கப் படிக்கச் சுவை குன்றுத கிளைக் கதைகளும் ஏராளமான பழமொழிகளும் இதில் இடம்பெற்றுள்ளன.

—பதிப்பாசிரியர்.]

2

கற்பு நிலைமை

[இது, நிறைந்த கல்விப் பயிற்சியுடைய ஐரோப்பிய துரைசானிமார்களுக்காக எழுதப்படாமல், பெரும்பாலும் இந்து தேசத்துப் பெண்களைக் குறித்தே எழுதப்பட்டது.]

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்?"

என்னும் குறளில், 'ஒருவன் பெறுதற்குரிய பொருள்களுள் மனையாளினும் உயர்வாகிய பொருள் எவை இருக்கின்றன, அவளிடத்தே கற்பென்னும் கலங்கா நிலைமை இருக்கப் பெற்றால்?' என்று திருவள்ளுவநாயனார் திருவுளம் பற்றினமையால், உலகத்தில் பெண்களாய்ப் பிறந்தவர்கள் தமக்குரிய நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நால்வகைக் குணங்களும் ஏதுவாக, மனத்தைப் பலவிடத்தும் செல்ல விடாது நிறுத்திக் கற்புநிலை கெடாதிருக்க வேண்டும்.

அந்நான்கு குணங்களில் நாண் என்பது நாணம்: மடம் என்பது, எல்லாம் அறிந்தும் அறியாதுபோல இருத்தல்; அச்சம் என்பது, என்றும் காணுததைக் கண்டவிடத்து அஞ்சுதல்; பயிர்ப்பு என்பது, கணவரல்லாதவர் கை மேற்படின் உடம்பு அருவருத்தலாம்.

விவாகமில்லாமல் கன்னிகைகளாய் இருக்கும் பருவத்தில் தாய் தந்தையர் ஆதீனத்திலும், விவாகமானபின் கணவர் ஆதீனத்திலும், கணவற்குப் பிற்காலம் புத்திரர் ஆதீனத்திலும், புத்திரரில்லாவிட்டால் சகோதரர் ஆதீனத்திலும் இருக்க வேண்டுமே அல்லாமல் ஒருபோதும் பெண்கள் சுவாதீனப்பட்டு இருக்கலாகாது.

கொண்ட கொழுநனே மேன்மையாகப் பாவித்து அவன் சொல்லைத் தடுக்காமல், அவனுக்குக் கீழ்ப்படிந்து, பக்திவினயத்துடனே 'பொய்சொன்ன வாய்க்குப் போஜனங் கிடையாது,' என்பதனால், பொய் பேசாமல், கறந்த பால் கறந்தபடி அவன் விஷயத்தில் உண்மையாய், ஊசியுஞ் சரடும்போல மனைவி அவன் கருத்தின் வழி ஒழுகல் வேண்டும்.

"பெண்ணுதவும் காலை பிதாவிரும்பும் வித்தையே ;
எண்ணில் தனம்விரும்பும் ஈன்றதாய் ;—நண்ணிடையில்
கூரிய சுற்றங் குலம்விரும்பும்; காந்தனது
பேரழகு தான்விரும்பும் பெண்."

என்றபடி, பெண்ணைக் கட்டிக்கொடுக்கும் பொழுது, பிதா வித்தியா சாதுரியமுள்ள பண்டிதனுக்குக் கொடுக்க வேண்டுமென்றும், தாயானவள் மகள் ஐசுவரியவானுக்கு வாழ்க்கைப்படவேண்டுமென்றும், சுற்றத்தார் நல்ல குலத்தான் வந்து வாய்க்க வேண்டுமென்றும், அந்தப் பெண் அழகில் சிறந்தவனை நாம் வரிக்க வேண்டுமென்றும் நினைக்கிறதுண்டு ; ஆயினும், அது அப்படியே வாய்க்குமா ? தெய்வச் செயலின்படியல்லவோ சம்பவிக்கும் ?

"குலமகட்கு அழகுதன் கொழுநனைப் பேணுதல்"

என்பதனால், தன் புருஷன் அழகிருந்த ஊரில் குடியிருந்தறியாத குரூபியா யிருந்தாலும், அவனை மன்மதனுகவும், என்றும் அசாத்திய ரோகமுடையவனுய் இருந்தாலும் அரோக திடகாத்திரனுகவும், 'அவன் தம்பி நான்தான்; எனக்கொன்றும் வராது,' என்றவனைப் போல வயிற்றைக் கிழித்துப் பார்த்தால் வாரடையுங் கிடையாத நிரட்சரகுட்சியாக இருந்தாலும் கல்விக் களஞ்சியமாகவும், 'பாண்டவர்களை நானறியேனு ? கட்டிற்கால் போல மூன்று பெயர்' என்று வாயினுற்சொல்லி, இரண்டு விரல் காட்டி நிலத்தில் ஒருகோடு கிழித்தவனுக்கு இவன் குறைந்தவனு என்னும்படி, கணக் கறியாத நிர்மூடனுயிருந்தாலும் சேஷசாயிபோல நிபுணனுகவும், உண்ணச் சோற்றுக்கும் கட்டக் கந்தைக்கும் கதியற்று, அடுப்பிற் பூனை தூங்க, கையில் அரைக்காசுக்கும் வழியில்லாத அஷ்ட தரித்திரனுயிருந்தாலும் குபேர சம்பத்துடையவனுகவும், கொக்குப் போல நரைத்துக் கண் குழிந்து பல்வீழ்ந்து விலீலப்போல வளைந்த முதுகுடைய கூனற்கிழவனுய் இருந்தாலும் நல்ல யௌவன முடைய விடனுகவும் பாவனை செய்து, அவனை அவமதியாமல், அனவரதமும் பேணி நடக்கவேண்டும். 'கல்லென்றுலுங் கணவன் புல்லென்றுலும் புருஷன்' என்கின்றீர்களே !

" அன்னை தயையும் அடியாள் பணியு ாலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும்—வன்னமுலை
வேசி துயிலும் விறன்மங் திரிதியும்
பேசி லிவையுடையாள் பெண்."

என்றபடி, மனைவியானவள் கணவனுக்குத் தாதிபோலப் பாதப் பணிவிடை செய்பவளும், மந்திரிபோலச் சமயோசிதமறிந்து நல்லாலோசனை சொல்பவளும், ஸ்ரீமகாட்சுமி போலப் பெண்ணைப் பெண் இச்சிக்கத்தக்க அதிரூப சௌந்தரியவதியும், பூமாதேவி போலச் சலியாத பொறுமையுடையவளும், வேசைபோலப் பர்த்தாவைச் சரச கேளி விநோதத்தாற் பிரியப்படுத்துகின்றவளுமாய் இருப்பதன்றி, அன்புள்ள தாய் போல இனிய உணவுகளால் போஷிக்கின்றவளுமாய் இருக்க வேண்டும். இதனாலல்லவோ, ' தாய்க்குப் பின் தாரம் ' என்று உலகம் சொல்லுகின்றது ?

ஒருவேளை கணவன் கோபித்தால் தானுங் கூடக் கோபியாமல் அவன் தனக்கு அநுக்கிரகித்ததாகவும், அவன் வைதால் அவனைத் தானும் வைதிடாமல் தன்னை அவன் வாழ்த்தினதாகவும், அவன் கைசேஷ்டை முதலிய தீமைகளைச் செய்தாலும் அவைகளை அப்படி நினையாமல் புருஷன் சரசத்தால் செய்யுந் தாடனங்களாகவும் நினைத்துச் சாந்தத்தோடும் அவனருகில் வந்து, ' கை எப்படி நோகின்றதோ ! பாதம் எப்படி உளைகின்றதோ !' என்று அவனுக்கு இதஞ்சொல்லி, அவன் கோபத்தைத் தணிக்கவேண்டும். அவ்வாறு செய்தால் அவன் பொல்லாத மூர்க்கனானாலும் அவனுடைய கல்லான நெஞ்சங் கரைந்து பரம சாதுவாவான் அல்லவா ?

' வல்லிடி வழக்கைச் சொல்லடிமாமி,' என்று மாமியுடனே வாது செய்யாமல், அவளைத் தாய்போலக் கருதி, அவள் காலிலே பட்டது தன் கண்ணிலே பட்டதாகக் குடும்ப பாரத்தையெல்லாம் ஏந்திக்கொண்டு, அவளும், ' கண்மணியாகிய என் செல்வ மருமகளைப்போலத் தேடக்கிடைக்குமா !' என்று சொல்லும்படி அந்யோந்நியமாய் நடந்து, ' மாமியார் மெச்சிய மருமகள் இல்லை,' என்னும் பழமொழியைப் பறக்கச் செய்ய வேண்டும்.

' இவள் எங்களுக்கு மருமகளா ! அல்ல; எங்கள் குலதெய்வமே இப்படி உருக்கொண்டு வந்தது !' என்று மகிழும்படி மாமனாரைத் தந்தை போலப் பூஜிக்க வேண்டும்.

கணவனுடைய சகோதரர்களைப் பேதமாய் எண்ணாமல் பரிபாலிப்பதனால் அவர்களில் மூத்தவர்கள், ' இவள்தான் எங்கள் புத்திரி ' என்றும், இளையவர்கள், ' எங்களைப் பெற்ற தாய்' என்றும் கொண்டாடும்படி நடக்க வேண்டும்.

அவர்களுடைய மனைவிமார்கள் தன்னுடைய உசித குணத்தைக்கண்டு, ' இவள் பெண்கள் நாயகம், பெண்பாத்திரம், பெண்கள் பூஷணம், பெண்கள் மாணிக்கம், பெண்ணரமுதம்,'

என்று ஸ்துதி செய்யும்படி அவர்களைச் சகோதரிகளைப்போலப் பாவித்து, அவர்களுடனே கலகமில்லாமல் நேசிக்க வேண்டும்.

நாத்திமார்களையும் வரிசை வண்மை தவறுமல், அவர்கள், 'இந்தப் பாக்கியவதி போலப் பெண்கள் எங்கும் காணக் கிடை யார்கள்,' என்று சொல்லும்படி நன்முய் உபசரிக்கவேண்டும்.

அடிக்கடி அண்டைவீடு அயல் வீட்டிற்குப் போகலாகாது. எவ்விடத்திற்காவது யாதொரு நிமித்தத்தால் அவசியம் போக வேண்டியிருந்தால், சிறிய பெண் குழந்தையையாயினும் வழித் துணையாகக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமேயல்லது தனி வழி நடந்து தண்டுமாரியாய்த் திரியலாகாது.

"பெண்ணொருத்தி பேசில் பெரும்பூமி தான் அதிரும் ;
பெண்ணிருவர் பேசில்விழும் வான்மீன்கள்—பெண்மூவர்
பேசில் அலைசுவறும் ; பேதையே ! பெண்பலர்தாம்
பேசிலுலகு என்னுமோ பின் !"

என்றபடி, ஒரு பெண் பேசினுல் பூமி அதிரும் ; இரண்டு பெண் பேசினுல் நட்சத்திரம் உதிரும் ; மூன்று பெண் பேசினுல் கடல் சுவறும் ; நான்கு பெண் பேசினுல் உலகம் யாதாகுமோ என்ப தனுல், யாருடனும் இடியிடித்ததுபோல உரக்கப் பேசாமல் குயில் கூவுதல்போல இனிய குரலாகக் கிளி கொஞ்சுவதுபோல மிருது பாஷியாய் வசனிக்க வேண்டும். 'பெண்டுகள் இருப்பிடம் பெரிய சண்டையாம்,' என்கிறார்களே.

'தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள்' என்பதை நினையாமல், 'நான் வீணே பிண்டமும் துண்டமும் நேர்ந்து பிடாரியைப் பெண்டு பிடித்துப் பேயனானே ! இதுவும் என் தலை விதியா ?' என்று விசனப்படாமல், 'பழம் நழுவிப் பாலிலே விழுந்தது' போலவும், 'சர்க்கரைப் பந்தலிலே தேன்மாரி பொழிந்தது' போலவும், 'ஏதோ பாக்கிய வசத்தால் எனது இல்வாழ்க்கைக்கு நல்ல பெண் வந்து வாய்த்தாள்,' என்று மகிழ்நன் மனமகிழும்படி இங்கிதமறிந்து நடக்க வேண்டும்.

'கணவனுடைய தேட்டத்தில் வரும் பொருள் அளவிற்குத் தக்கபடி மிதமாய்ச் செலவு செய்யாமல் கண்டபடியெல்லாம் கைகொண்ட மட்டும் செலவழிக்கிறளே ! இவள் இன்னம் சில நாளில் அவன் தலையில் ஓட்டைக் கவிழ்ப்பாள்,' என்று பிறரால் இகழப்படாமல், திறமையுடனே சிறுகச் செலவு செய்ய வேண்டும்.

உலகத்தார் இராக்காலத்திற்குதவியாகப் பகற்காலத்திலும், மழை காலத்திற்குதவியாகக் கோடை காலத்திலும், முதுமைக் குதவியாக இளமையிலும், மறுமைக்குதவியாக இம்மையிலும் வேண்டியவைகளைத் தேடிவைத்துப் பாதுகாப்பது போல, இல் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் தருணமறிந்து

சேகரித்துப் பின்னுக்கு ஆகுமென்று சிக்கெனக் காப்பாற்ற வேண்டுமேயல்லது வீட்டிலுள்ள பண்டங்களை அநியாயத்தில் அழிக்கலாகாது.

" தந்தையா யினும்விழைவிற் றன்னுடனே
யொருவயிற்றிற் சார்ந்தா ரேனும்
மைந்தரா யினுமிகவும் வனப்புடைய
ரெனிலவர்மேல் மடநல் லார்தம்
சிந்தைநடந் திடும்."

" ஏக்தெழில் மிக்கான் இளையான் இசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான்—வாய்ந்த
நயனுடை யின்சொல்லான் கேளெனினு மாதர்க்
கயலார்மே லாகும் மனம்."

என்றிருக்கின்றனவாதலால், ஆணுய்ப் பிறந்தவர் பிதாவானலும், சகோதரரானலும், பெற்ற பிள்ளையானலும், மற்றும் எவரானலும் அவர் இருக்குமிடத்தில் அச்சமின்றி இருக்கலாகாது. ஐந்து வயது ஆண் பிள்ளையைக் கண்டால் ஐம்பது வயது பெண் பிள்ளையும் எழுந்திருக்க வேண்டும் என்கிறார்களே!

அன்னம் போலவும், பெண் யானை போலவும் மிருது நடையாகத் தலை இறங்கித் தன் பெருவிரலை அல்லது நிலத்தைப் பார்த்த வண்ணமாய் நடக்க வேண்டுமேயல்லாமல் பூமி அதிரும் படி விசையாய் நடக்கலாகாது.

ஆண் மக்களிலாவது பெண்மக்களிலாவது, துஷ்டர்களாயிருக்கின்றவர்கள், தாரதம்மியம் பாராமல், அக்கிரமாய்ப் பேசினுல், 'அதென்ன உடம்பிலே காய்த்துத் தொங்குகிறதா? நாய் குரைத்து நத்தம் பாழாகுமா?' என்று நினைத்துச் சாதுவாய்ப் போகவேண்டும். அல்லாமல், அவர்களை எதிரிட்டுப் பத்திரகாளி போல அஞ்சாது, 'தெருச்சண்டைக்கு இடுப்புக்கட்டல்' ஆகாது.

கணவனுவது மற்றவர்களாவது ஏதேனும் ஒன்றைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தால், 'கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்ப மேன்?' என்று தன்பாட்டிற்குத் தானிராமல், அது என்ன சமாசார மென்று அவர்களை நேரே விசாரிக்கவும், சாடையாய்க் கதவின் சந்தில் அல்லது சுவர்க் கோழி போலச் சுவரின் அருகில் ஒன்றியிருந்து கேட்கவும் கூடாது.

மணம் செய்யப்பட்டு மாமி வீட்டிற்கு வந்தவுடனே, 'வந்ததே சிறுக்கி பந்தடித்தாள், வரவரச் சிறுக்கி கழுதை மேய்க்கிருள்' என்னும் கதைபோல, ஆரம்ப சூரத்துவமாய்ச் சர்வ ஜாக்கிரதையுடனே செவ்வையாய் நடந்து, பின்பு வர வரச் சோம்பலை மேற்கொண்டு, கபடத்தினுல், 'எவனே செத்தான் அவளேன் அழுதாள்?' என்பதாக எவ்வளவாவது சமூசாரக் கூர்மையில்லாமல் கடனற்றது போல இருக்கலாகாது.

புருஷனுக்குப் பொருள் வரவின்றி அவன் வறுமைப்படுங் காலத்தில், 'ஏர் உழுகிறவன் என்ன செய்வான்? பாணை பிடித்தவள் பாக்கியம்,' என்று நிணைக்க வேண்டுமேயல்லாமல், அவன் சம்பாதிக்கவில்லையென்று மனம் சலிக்கும்படி அவணைச் செல்லரிப்பது போல எந்நேரமும் வருத்தப்படுத்தலாகாது.

பரபுருஷருடைய முகத்தைப் பாராமலும், அவர்களுக்கெதிரே பல்லைக் காட்டிச் சிரியாமலும், பரிகாசம் செய்யாமலும், பக்குவமாயிருக்க வேண்டும். 'சிரித்தையோ சீரைக் குலைத்தையோ!' என்று பழமொழியும் இருக்கின்றதே!

தாமரை இல்லாத தடாகமும், சந்திரனில்லாத ஆகாயமும், புலவர்களில்லாத சபையும், அரசனில்லாத நாடும், மந்திரியில்லாத அரசாட்சியும், படைத்தலைவனில்லாத சேனையும், தெய்வ ஸ்துதி இல்லாத நாவும், நற்சிந்தையில்லாத நெஞ்சும், கிருபை இல்லாத கண்ணும், பயனில்லாத சொல்லும், மணமில்லாத் மலரும் போலக் கற்புடைய மனைவி இல்லாத வீடு சிறப்பின்றி இடுகாட்டுக்கு ஒப்பாகும்.

கண்டவர்கள் கேட்டவர்களெல்லாம், 'இந்த உத்தமி கல்வியிற் கலை மாதோ! கற்பினில் அருந்ததியோ! கருணையில் பார்வதியோ! பரிசுத்தத்தில் பவானியோ!' என்று அதிசயிக்கும்படி விவேகமும், கற்பும், இரக்கமும், சுசியும் உள்ளவளாயிருக்க வேண்டும்.

பெற்ற பிதா முதலானவர்கள் தங்கள் பெண்ணைப் பார்க்கும் படி பெண் வாழும் ஊருக்கு வந்தால், திடீரென்று அந்த வீட்டிற் குள்ளே நுழையாமல் பெண்ணின் நடத்தையை அண்டை அயலில் விசாரிக்க வேண்டும். விசாரிக்கும் அளவில், 'அது கெட்டது மூதேவி! அவள் ஆருக்கும் அடங்காள்! ஒருவர் பேச்சும் கேளாள்! தான் பிடித்த முயலுக்கு மூன்றே காலென்று சாதிக்கிறவள்! அவள் எல்லாருடனும் வில்லங்கமாக வல்லிடி வழக்குத் தொடுக்கின்ற ஜகஜ்ஜண்டி! அவள் மூன்றுலோகமும் பூசை கொண்ட முழுச் சாமியார்! அவள் மானிடவடிவு எடுத்துவந்த யமராட்சசி! அவள் கொண்டவனைத் தூரம்படவாவது மதியாள்! கொஞ்ச நாளில் அவன் கழுத்துக்கே கயிறு கொண்டு வருவாள்! அந்தக் கரிகாலி முகத்தில் விழித்தாலும் கஞ்சி கிடைக்காது! அவள் அரை நொடியில் குடும்பத்தைக் கலைத்துக் குடுவை வேறுக்குவாள். அவள் வெல்லச்சதுரி; வல்லாளகண்டி; அவள் எல்லாருடைய தலைப்பாகையையும் தாழ இறக்கி வைப்பாள்; அந்தக் கொள்ளையை என்னென்று சொல்லுகிறது! எண்ணத் தொலையாது; ஏடிடங்கொள்ளாது; ஐயோ! தர்ம தேவதை போலிருக்கிற நீங்கள் ஜன்மாந்தரத்தில் என்ன பாவம் செய்தீர்களோ! இந்தச் சண்டாளி வந்து உங்கள் வயிற்றில் பெண்ணுய்ப் பிறந்தாளே!

செத்தாலும் தோஷமில்லை! இவள் பெற்றூர் பிறந்தார் பெயரை யும் கெடுக்க வந்தவள்! இந்தக் கொடும்பாவி சமாசாரத்தைக் கேட்கிறது புண்ணியமா புருஷார்த்தமா? இவள் சரித்திரத்தைப் பேசிய வாயை நெய்விட்டுச் சுத்திபண்ண வேண்டும்!' என்று நாரா சத்தைக் காய்ச்சிக் காதிலே செருகுவது போலச் சொல்லக் கேட்டால், அந்த வீட்டில் எடுத்தடி வையாமல் முன்னிட்ட காலைப் பின்னிட்டபடியே திரும்பிப் போய்ச் செத்ததிலே ஒன்றுகப் பாலை வார்த்துத் தலை முழுகிவிட வேண்டுமேயல்லாமல், மறுபடி அந்தத் திசையை எட்டிப் பார்க்கலாமா என்னும்படி துன்மார்க்கியா யிராமல், 'அம்மம்மா! இந்தப் புண்ணியவதிக்கொப்பாக யாரைச் சொல்லலாம்? இவளுடைய நன்னடக்கை மற்றப் பெண்களுக்குத் தவஞ்செய்தாலும் வருமா? பெண்ணுக்கு மெல்லியென்றும் நல்லாள் என்றும் சொல்லப்படும் பெயர் இவளுக்கே தக்கது! இவளோ, மாமியார் மாமனார் முதலிய சகலருக்கும் கண்ணுக்குக் கண்ணியிருக்கின்றவள். இவள் பத்தரை மாற்றுத் தங்கம்! பதிவிரதா சிரோமணி! இலட்சுமிக்கும் இவளுக்கும் என்ன பேதம்? இவள்மேல் சற்றுவது தோஷம் சொல்லலாமா? இவள் தீண்டா நெருப்பு! இவளைக் குறித்துத் தோஷம் சொன்ன நா அழுகிப்போம்! இப்படிப்பட்ட பதவிசு நாங்கள் எங்குங் கண்ட தில்லை! இவள் மழை பெய்யென்றால் பெய்யும்; வெயில் காயென்றால் காயும்; பொழுது விடியென்றால் விடியுமே! இவளைப் பெறும்படி நீங்கள் செய்த புண்ணியமே புண்ணியம்!' என்று, செவியில் அமிர்தத்தைச் சொரிவது போலச் சொல்லக் கேட்டால், அப்பொழுது, 'புத்ரா: சதகுணம் புத்ரீ' என்று நினைத்துச் சந்தோஷித்து அவர்கள் பெண்ணுக்கு மாமி வீட்டில் தாராள மாய்ப் பிரவேசிக்கும்படி அவள் வரன்முறை தவறுதொழுக வேண்டும்.

> "இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
> இல்லாளும் இல்லாளே யாமாயின்,"

என்பதனால், ஒருவனுடைய மனைவியினிடத்தில் நற்குண நற் செய்கைகள் உண்டாயிருந்தால், அம் மனையினிடத்தில் ஒன்றும் இல்லாதிருந்தாலும் எல்லாம் உள்ளனவேயாம்; அவளிடத்தில் அவை இல்லாதிருந்தால், அங்கு எல்லாம் இருப்பினும் ஒன்று மில்லது போலாம்.

> "பெற்றான் பொறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
> புத்தேளிர் வாழு முலகு."

என்பதனால், இம்மையில் கணவனைப் பூசித்த பெண்கள், மறுமையில் சுவர்க்கத்தில் தேவர்களால் பூசிக்கத்தக்க பெருஞ்சிறப்பு உடைய ராவர். மேலும்,

> "சிறைகாக்குங் காப்பெவன் செய்யும்? மகளிர்
> நிறைகாக்கும் காப்பே தலை."

என்றிருத்தலால், பெண்கள் தமது கற்பினுல் காக்கும் காவலே காவலாவதன்றி, அவர்களைக் கணவர் சிறையினுல் காக்கும் காவல் என்ன பயனைச் செய்யும்? 'அறை காத்தான் பெண்டிழந்தான்' என்றும் சொல்லப்படுகிறதே!

"விலமகட்கு அழகுதன் மேனி மினுக்குதல்."

என்பதனுல், குலமகட்கு அது விரோதம் என்று நினையாமல், ஜன்மாந்தர சுகிர்தம் உண்டாயிருந்தால், தன் கணவன் கண்டு களிக்கும்படி தன்னை விலையுயர்ந்த வஸ்திர பூஷணங்களால் அலங்கரித்துக்கொள்ளலாம். அவை இல்லாவிடில் இல்லையேயென்று ஏங்கிச் சுமங்கலி தன் முகம் பாழடைய விடாமல், மஞ்சள் குங்குமமாவது முகத்தில் அணிய வேண்டும்.

'மண்ணுங்கட்டி மாப்பிள்ளைக்கு எருமுட்டை பணியாரம்' என்பதாகத் தாறுமாறுய்ச் செய்யாமல், காலமறிந்து கிரமமாகப் புருஷனுக்கு ஸ்நானனுஷ்டானங்களுக்கு இடம் பண்ணி, வேளைக்கேற்ற பக்குவமான போஜன தாம்பூல வஸ்திர பூஷணுதிகளும் தடையில்லாது அமைக்க வேண்டும்.

மனைவியானவள் சகலவித பூஷணங்களையும் துறந்திருந்தாலும், மங்கல சூத்திரத்தை மாத்திரம் துறக்கக்கூடாதது போல, தந்தை தாய் முதலிய பந்துக்களையெல்லாம் விட்டுப் பிரிந்தாலும், கணவனை மாத்திரம் பிரிந்திருக்கலாகாது. அற்பமாகிய பறவைகளில் அன்றில் பெடையுமல்லவோ தன் சேவலைப் பிரிந்திருக்கச் சகியாது உயிர் விடுகின்றது!

'பாத்திரம் அறிந்து பிச்சையிடு; கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு' என்பதனுல், அறிவொழுக்கங்களில் சிறந்த சான்றோர்களே தானபாத்திரர்களாயினும், 'பெரிய வீடென்று பிச்சைக்குப் போனுல் கரியை வழித்து முகத்திலே தடவினுர்கள்' என்று எளியவர்களை ஏளனஞ் செய்யாது, அவர்கள் தேகியென்று வந்தால் நாஸ்தியென்று சொல்லாமல், சிரார்த்தாதிகளில் இராட்சதர்களுக்குப் பிரீதியாகச் செய்யும் பூரிதானம் போலவாவது, அவர்களுக்குத் தம்மால் இயன்ற மாத்திரம் பிச்சையிட வேண்டும். 'இல்லையென்ற இடத்தில் பல்லியுஞ் சேராது' என்கிறார்களல்லவா?

தாய் வீடு அருகிலிருக்கிறதென்று யாருடனும் சொல்லாமல் நினைத்த நேரமெல்லாம் அவ்விடத்திற்கு ஓடி, 'இவள் ஓடுகாலி,' என்று பெயரெடுக்கலாகாது. அடிக்கடி, 'தாய்வீடோடிய பெண்ணும் பேயோடாடிய கூத்தும்' ஒக்குமல்லவோ?

மாமியார் மாமனுர் முதலானவர்கள், பெருவயிறு கொண்டது அறியாமல் சீமந்தத்திற்கு நாள் வைத்துக்கொள்வது போலத் தெரியாமல், 'இந்தப் பெண்ணைக் கொண்டால் சுகப்படலாமே!' என்று நினைத்து, பகீரதப் பிரயத்தனப்பட்டுத் தேடினதற்குத்

தகுதியாய் வாய்க்காமல், 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது' போல வந்து லபித்ததே! நம்முடைய துர்ப்பாக்கியம் என்ன!' என்று அவர்கள் வியசனப்படும்படி ஏடாகூடம் செய்ய லாகாது.

சமுத்திரம் போல வற்றுத செல்வத்தில் பிறந்தாலும், வறியவனுக்கு வாழ்க்கைப்பட்டால், அந்தச் செல்வப் பெருக்கையே பாராட்டிச் செருக்கினுல் அவளை அசட்டைபண்ணுமல், 'மலையிலே விளைந்ததானுலும் உரலிலே வந்துதானே மசியவேண்டும்?' என்பதற் கிசைய, அடங்கி நடக்க வேண்டும்.

"நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பேதை மைத்தே."

என்பதனுல், தன் பேதைமை காரணமாக உலகத்தில் அந்நியராகிய செல்வரின் படாடோபம் கண்டு, நெய்க்குடத்தைத் தலையில் வைத்து எண்ணமிட்டவளைப் போல, 'நாம் இந்தச் சீமான் பக்ஷஞ் சேர்ந்தால் யாதொரு வருத்தமுமின்றி, எக்காலமும் வேளை தவருது, பால் பழங்களுடனே நெய்யாரக் கையார நல்ல ராஜ போஜனம் உண்டு சுகித்து, வாசனைத் திரவியங்களால் நலங்கிட்டுக் கொண்டு, பனிநீரில் ஸ்நானஞ் செய்து, இரு பக்கத்துமுள்ள கரைக்கும் முன்றுனைக்கும் விலையயர்ந்த முத்து, பச்சை, கெம்பு, வயிரங்கள் வரிசை வரிசையாகக் கோத்து இடையிடையே நெருங்க மல்லிகை தாமரை குமுதம் போல விசித்திரமான பூச்சமைத்து, பிடித்தால் பிடிக்குள் அடங்கும்படி அதிக நாணயமாகிய இழையால் ஆயிரம் பொன் பெற்ற இந்திர வர்ணப்பட்டென்னும் பொற்சரிகைச் சேலை யுடுத்து, முத்துக் கச்சுப் பூண்டு, மேகம் போலக் கறுத்துத் தழைத்து நெய்த்து நெறிந்து சுரிந்து நீண்டு சுருண்டு கடைகுழன்ற கூந்தலை வாசனை சேர்ந்த மயிர்ச்சாந்து பூசி, தங்கச் சீப்புச் சிக்கங்கோல் கொண்டு சீவிச் சிக்கறுத்து வாரி வகிர்ந்து, திவ்விய பரிமள புஷ்ப மாலைகளை வைத்து முடித்து, நெற்றியில் ஐவ்வாது திலகமிட்டு, கண்ணுக்கு மையெழுதி, கழுத்துக்குக் கஸ்தூரி பூசி, மார்புக்குச் சந்தனத்தால் தொய்யில் வரைந்து, தோளுக்கு விற்கோலந் தீட்டி, காலுக்குச் செம்பஞ்சூட்டி, கன்னத்திற்குக் கறுப்பெழுதி, உலக மெல்லாம் வீலை மதிக்கத்தக்க நவரத்தின கசிதமாகிய தலைப்பணி செவிப்பணி நுதற்பணிகளும் ஆரகேயூரங்களும் ஜாஜ்வல்லியமாய்ப் பிரகாசிக்க, கைகளில் பொற்சரி பொற்கடகங்கள் விளங்க, கால் களில் ரத்தினச் சதங்கை ரத்தினச் சிலம்புகள் கலீர் கலீரென்று ஒலிக்க, நாசியில் வச்சிர நத்து வச்சிர மூக்கணிகள் கண் கூசும்படி தகதகவென்று ஜொலிக்க, கேசாதி பாதபரியந்தம் பொன் காய்த் தாற்போலத் தோன்ற, மெய்யிற்பூசிய சந்தன குங்கும கற்பூர கதம்பாதி பரிமள வர்க்கம் காததூரம் கமகமவென்று மணக்க, வல முன்கையிற் பற்றிய பூங்கொத்தில் பஞ்சவர்ணக்கிளி கொஞ்ச, அண்ட கோளத்தை அளாவப் பளிங்கினுல் கட்டப்பட்ட மலை

போலும் பெரிய ஏழடுக்கு உப்பரிகையில் மாணிக்கமயமான சித்திர மேடைமீது, தாதிமார் காம்பரிந்து பரப்பிய மெல்லிய புஷ்பத்தின் மேல் வடிவில் சிறந்த சில பெண்கள் மேகலே தாங்க, சில பெண்கள் சாமரை போட, சில பெண்கள் ஆலவட்டம் அசைக்க, சில பெண்கள் தாம்பூலம்மடித்து நீட்ட, சிலபெண்கள்பவளக்காளாஞ்சியேந்த, சில பெண்கள் ஆரத்தியெடுக்க, சில பெண்கள் கைலாகு கொடுக்க, சில பெண்கள் நிலப்பாவாடை விரிக்க, சில பெண்கள் பிடித்துவரும் ஆணிமுத்துப் பந்தலின் கீழ்ப் பூங்கொடிபோல இடை அசைய, அன்னம் போல அடிபெயர்த்து, மதனரதி போலக் கைவீசி, கலாபத்தை விரித்து மயில் உலாவி நடக்கிறது போல உடல் குலுங்கச் சொகுசாகச் சாரி உலாவி, நாம் வைப்பாட்டியாஞலும் கொண்ட பெண்டாட்டியாகிய கண்ணுட்டி போலிருந்து, சம்பிரமத்துடனே சகலபோகமும் அனுபவித்துக்கொண்டு நல்ல சீமாட்டியாய் வாழலாமே! இதை விட்டு இந்தத் தரித்திரம் பிடித்த காமாட்டிப் படுவாணைக் கட்டிக்கொண்டு அழுவானேன்?' என்று வீண் எண்ணங்கொண்டு, கற்பழியத் தன்னைக் கைப்பிடித்த வறியவனுகிய கணவனைக் கைவிடக் கருதி, அவன் மனம் வெறுக்கக் கொள்ளிகொண்டு சுடுவது போலக் கடுஞ்சொல் சொல்லி, சீறுமாறு பண்ணலாகாது. அப்படிச் செய்தால், ' அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டவள் ' கதையாய் முடியும்.

அன்றியும், அது, ' வாய்த்தவிடும் போய் அடுப்பு நெருப்பும் அவிந்தாற்போல ' ஆகும்; மேலும், விபசாரி பட்டமும் பழியும் வினேயும்; மறுமையில் ரௌரவ நரகத்தில் வீழ்ந்து அளவிறந்த காலம் கொடிய வேதனையும் அனுபவிக்கவேண்டி வரும் அல்லாமலும், கணவனேடே எதிர்த்து நிற்பவள் யமன்; அவனுக்குக் காலை மறிந்து உண்டி சமையாதவள் தீரா நோய்; சமைத்த உணவை அவனுக்குப் பரிமாறி அவன் உண்ணச் சகியாதவள் இல்வாழ்பேய்; அன்றியும், இம்மூவரும் கொண்டவன் கழுத்தை அறுக்க வந்த கூரிவாள் ஆவார்கள்.

" எறியென் றெதிர்நிற்பாள், கூற்றம்; சிறுகாலே
அட்டில் புகாதாள் அரும்பிணி;—அட்டதனே
உண்டி யுதவாதாள், இல்வாழ்பேய்; இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை."

மேலும், கணவனைக் கோபித்து உக்கிரமாய்ப் பார்த்தவள் வேங்கைப் புலியாவாள்; அவனே வரம்பு கடந்து வைதவள் கொள்ளிவாய்ப் பிசாசுமாவாள்; அவனைக் கண்டு எழுந்திராமற் கிடந்தவள் மூலப்பாம்பாவாள்.

சோழநாட்டில் ஒரு வேளாளன் ஒரு நாள் தன் பெண்சாதியுடனே, ' இன்றைக்குப் பெரியவர் ஒருவருக்கு அமுது படைக்க

வேண்டும்,' என்று சொல்ல, அவள், ' இது நல்ல வேடிக்கைதான்!' ' தன்னைப் பெற்ற ஆத்தாள் கிண்ணிப் பிச்சை எடுக்கின்றாள், தம்பி கும்பகோணத்திலே கோதானம் பண்ணுகிறான்,' என்பது போல வீட்டிருப்பு அறியாத ஆண் பிள்ளையைக் குறித்து என்ன சொல்லு கிறது ? ' அஞ்சும் மூன்றும் அடுக்காய் இருந்தால் அல்லவோ அறியாத பெண்ணும் சுறியாக்குவாள் ?' அழுது படைக்கிறதற்கு அரிசி வேண்டுமே ! பதார்த்தம் வேண்டுமே ! ' வெறுங்கையைக் கொண்டு முழம் போடுவது எப்படி ?' என்று சொல்ல, அவள் சொற்படிச் சகலமும் சேகரித்துக் கொடுக்க, ' வேண்டுமென்றால் வெண்ணெய் மொத்தை போல நூற்கலாகாதா ?' என்கிறபடி, அவளுக்குச் சம்மதியில்லாமையால், பின்னும் அவள், ' அரிசி ஆழாக்கானாலும் அடுப்பங்கட்டி மூன்று வேண்டும் ' அல்லவோ ? பானை, சட்டி முதலாகிய ஏனமில்லாமல் எவ்விதத்தில் சமையலாய் விடும் ?' என்ன, அவைகளையும் தருவித்துச் ' சீக்கிரத்தில் சமை ' என்ன, அவள், ' நீ போ ! உனக்கு என்ன ! எனக்குத் தள்ளாது ; என்னாலே முடியாது ; தலை நோகிறது!' என்று போக்குச் சொல்ல, அவன், ' அடி, செக்குலக்கை போல இருக்கிற உனக்கு வந்த கேடு என்ன ?' என்று கேட்க, ' எருது நோய் காக்கைக்குத் தெரியுமா ? தலைநோயும்காய்ச்சலும் தனக்குவந்தால் அல்லவாதெரியும்?' என்று பாயை விரித்து நெடுமுக்காடிட்டுப் படுத்துக்கொள்ள, அவன், ' இவள் என்ன சண்டியாய் இருக்கிறாள் !' என்று கோபத்தினால் மெல்லென ஓரடி அடிக்க, ' ஆ ஆ ! சண்டாளா ! என்னை அடித்துக் கொல்லவா ஏற்பட்டாய் ! உரலிலே தலையை நுழைத்துக்கொண்டு உலக்கைக்குப் பயப்பட்டதனாலே விடுமா ? சும்மா கொல்லு ! இனி நான் உயிரோடு இருக்கிறதில்லை ! ஊமத்தங்காயைத் தின்று பழி போடுகிறேன் !' என்று, தெருவிலே வந்து பெருங்கூச்சலிட்டுப் புருஷனைத் தூற்றினாள். இப்படிப்பட்டவளைக் குறித்துத்தானே,

" தூற்றும் பெண்டிர் கூற்னைத் தகும்."

என்று சொல்லுகிறது ? இந்தச் சரித்திரம் மணவாள நாராபண சதகத்தில், ' ஐயருக்கு அழுதுபடை ' என்னும் அடியில் வரும் பாட்டினால் விளங்கும் :—

" ஐயருக் கழுதுபடை என்றுவந் தாய்நீயும்
ஆண்பிள்ளை என்றெண்ணியோ ?
அரிசியெங் கேபானை சட்டியெங் கேயென்பள்
அவள்சொன்ன வகைகள்எல்லாம்
பையவே கொண்டுவந் தாலும் சமைக்கப்
படாதுதலை நோகுதென்று
பாயில் கிடப்பள்சின மாயொன்று பேசினால்
பாருனக் கேற்றபுத்தி
செய்யவல் லேனென்பள், சற்றடித் தால்நஞ்சு
தின்கிறேன் கூகூவெனத்

தெருவீடு தோறுமுறை யிடுபெண்டிர் உண்டெனில்
நீயாமன் வேறுமுண்டோ
வையகம் புகழ்சோலை மலையலங் காரனே !
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே !
வாதவேங் கடராயனே !''

தென்னுட்டிலே சாதுவான ஒருவனுக்கு வாய்ப்பட்டி ஆகிய ஒரு படுநீலி வந்து பெண்டு வாய்த்தமையால், அவன் அவளுடைய மூர்க்கத்துக்கு அஞ்சிச் சுயேச்சையாய் ஒன்றும் செய்யக்கூடாமல், இட்டது சட்டமாக வருத்தத்தோடு காலம் கழித்து வருகையில் ஒருநாள் அவனுக்குக் கிரகசாரம் போதாமல், ஔவை என்பவள் அவனிடத்திற்கு வந்து உணவு கேட்க, ' நல்லது ' என்று சொல்லி, ' பெண்ணின் குணமறிவேன் சம்பந்தி வாயறிவேன் ' என்பதற்கு ஏற்க, தன் பெண்சாதி குணத்தைத் தான் அறிந்தவன் ஆகையால், ஔவையை வீட்டிற்குள் அழைத்துப் போகாமல், தெருத் திண்ணையில்தானே இருக்கவைத்துத் தான் மாத்திரம் உள்ளே நுழைந்து, பெண்சாதிக்கு இதமுண்டாக இச்சகவார்த்தைகள் பேசி, தான் ஒரு பெண் போல அவளுக்குப் பேன் பார்த்து, ஈர் உருவி, சமயம் நோக்கி மெள்ள அந்தச் செய்தியை அவள் காதிலே போகவிட, ' ஏனவாயனைக் கண்டாளாம், ஏணிப்பந்தம் பிடித்தாளாம் ' என்பது போல, அவள் தன் புருஷன் மேதகு குணத்தைப் பார்த்துப் பூதம்போல ஆர்ப்பரித்து, ' உன் பவிஷுக்கு விருந்து ஒரு கேடா ? உனக்குத் தொலைக்கிறது அல்லாமல் ஊருக்கும் தொலைக்கவா ?' என்று வாயில் வந்தபடி பேய்ப்பாட்டாகப் பேசி ஏசிக் கழுநீர்ப்பானையை ஏந்தி வந்து அவன் தலையில் அபிஷேகம் செய்து, திருவலகு (துடைப்பைக்கட்டு) கொண்டு வெண்சாமரை வீசி, சுளகு (முறம்) எடுத்து ஆலவட்டம் பரிமாறி, பரிவேட்டை விடுவது போலத் தெரு முழுதும் அவனைத் துரத்தி அடித்தாள். அது கண்டு ஔவை இந்தச் சரித்திரத்தை அவ்வாறு நடக்கும் பெண்களுக்குப் புத்தி வரும்படி,

'' இருந்தங் கிதம்பேசி ஈருரீ இப்பேன் பார்த்து
விருந்துவந்தது அன்பன் வீளம்பத்—திருந்தடியாள்
பாடினுள் பேய்ப்பாட்டைப் பாரச் சுளகெடுத்துச்
சாடினுள் ஓடோடத் தான்.''

என்று ஒரு பாடலாகப் பாடிப்போனாள். இவளும் பெண் பிறப்பிலே சம்பந்தப்பட்டாள் அல்லவா ? கற்புடையவர்கள் இத்தன்மையாகிய துஷ்டைகள் முகத்தையும் பார்ப்பார்களா ? இவர்களுடனும் பேசுவார்களா ?

வித்வசிரேஷ்டராகிய பொய்யாமொழிப்புலவர் பூர்வம் மதுரையில் முழுகிப்போன தமிழ்ச்சங்கத்தைப் பரிபாலனம்

பண்ணும்படி அக்காலத்தில் அரசாண்டிருந்த வணங்காமுடி மாறன் என்னும் பாண்டியனிடத்தில் பேசுவதற்கு அவனைத் தேடிப் போன பொழுது, அவன் கோயிலுக்குச் சுவாமி தரிசனம் செய்யப் போயிருக்கிறதாகக் கேள்வியுற்று, அவர் சொக்கநாதர் சந்நிதிக்குப் போனவிடத்தில், அவ்வரசன் சுவாமியைச் சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டு இருக்கக் கண்டு, புலவர் சிகாமணியானவர்,

"குழற்கால் அரவிந்தம் கூம்பக் குமுதம் முகையவிழ்ப்ப
நிழற்கால் மதியமன் றேநின் றிருக்குலம் ? யேவன்றன்
அழற்கால் அவிர்சடை மீதே இருந்துமவ் வந்திவண்ணன்
கழற்கால் வணங்குதி யோவணங் காமுடிக் கைதவனே ?"

என்னும் பாடலைப் பாடக்கேட்டு, அரசன் அவரை 'நீரார் ?' என்ன, அவர் பொய்யாமொழி என்னும் தமது காரணப்பெயர் முதலிய பூர்வோத்தரத்தையும் தாம் கொண்ட கருத்தையும் வெளியிட, பாண்டியன், 'இவரோ சங்கத்தைப் பரிபாலிப்பவர் !' என்று எளிதாக நினைத்து, அங்குச் சங்கத்தார்க்குப் பிரதியாகச் சிலையினால் செய்து வைக்கப்பட்டிருக்கின்ற விம்பங்களைக் காட்டி, 'நீர் பொய்யாமொழி என்றது மெய்பாகுமாயின், இந்த விக்கிரக ரூபமாயிருக்கும் சங்கப்புலவர் சிரக்கம்பம் கரக்கம்பம் செய்யப் பாடுக,' என, அவர்,

"உங்களிலே யானெருவன் ஒவ்வுவனே ஒவ்வேனே ?
திங்கள் குலனறியச் செப்புங்கள்—சங்கத்தீர் !
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழும் ஒக்குமோ
ஏடெழுதா ரே!எழுவி ரின்று."

என்று பாட, அந்த விம்பங்கள் அங்ஙனமே சிரக்கம்பம் கரக்கம்பம் செய்தன. பின்பு பொற்ருமரை என்னும் தீர்த்தத்தருகில் அவரை அழைத்துப்போய் 'இதில் முழுகிப்போயிருக்கின்ற சங்கப் பலகை மிதக்கப் பாடும் பார்ப்போம் !' என, அவர்,

"பூவேந்தர் முன்போல் புரப்பார் இலையெனினும்
பாவேந்தர் உண்டென்னும் பான்மையால்—காவேந்தன்
மாறன் அறிய மதுரா புரித்தமிழோர்
வீறணையே ! சற்றே மித."

என்று பாடின மாத்திரத்தில் அது மிதந்தது. இப்படிப்பட்ட பல அற்புதங்களால் அவரது கல்வியின் அருமையும் பெருமையும் பெரும்பாலும் கண்டு தெளிந்தும், இறுமாப்பினால் அவருக்குச் சம்மானம் செய்யாமையால், 'இவன் தக்கோன் அல்லன்,' என்று, அவர் அங்கிருந்து திரும்பித் தமது சுதேசத்திற்கு வருகையில், இந்தச் செய்தியைப் பாண்டியன் மனைவி அறிந்து, அவர் பொய்யா மொழியர் ஆதலால், அவர் சொல்வது நன்ருயினும் தீதாயினும் பொய்யாது பலிக்குமே என்று நடுநடுங்கிப் புலவர் பெருமான்

கோபத்தை ஆற்றவேண்டும் என்று, தான் சிவிகை சுமப்பவரைப் போல வேடம் பூண்டு வந்து, அவரது சிவிகையைச் சிறிது தூரம் சுமந்து செல்ல, அவர் அறிகண்டு, அவளை நோக்கி, 'கற்புக்குத் தாயகம் போல்வாளே, நீயேன் இப்படிச் செய்தாய்?' என, அவள், 'சுவாமி, இராஜா தேவரீர் விஷயத்தில் அபசாரப்பட்டதை மனங்கொள்ளாது, கருணை கூர்ந்து அவரை வாழ்த்துதல் செய்யவேண்டும் என்னும் நோக்கத்திலே இங்ஙனம் புரிந்தேன்,' என, அவர், 'நன்று' என்று இராஜபத்தினியை முன்னிட்டு,

> " உமையாளும் நீயும் ஓ ரங்கொப்பே யொப்பே
> உமையாளுக்கு அங்ஙண்டோ ரூனம் – உமையாள்தன்
> பாகம்தோய்ந் தாண்டான் பலிக்குழந்தான் பாண்டியனின்
> ஆகந்தோய்ந் தாண்டான் அரசு."

என்னும் பாடலைப் பாடினார். அவ்வரசன் தேவி போல மனைவி புருஷனுடைய குற்றத்தால் அவனுக்கு வரும் தீங்கினை ஆய்ந் துணர்ந்து, வாராமல் காப்பதல்லவோ விசேஷம்?

தெய்வப்புலமைத் திருவள்ளுவர் தம் தேசுயரில்லாள் வாசுகி என்னும் மாசற்முெளிரும் மணி விளக்கு ஒத்தவள், பொற்பு விளங்கிக் கற்புவழுவாது இல்லறம் நடாத்தி இன்புற்று வாழ்ந்து, மாண்டபின்பு மயானத்தில் கொண்டுபோய்த் தகன சமுஸ்காரம் செய்யப்படுகையில், நெடுநாள் நகமும் சதையும் போலவும், உடலும் உயிரும் போலவும் மனமொத்துப் பிரிவற்றிருந்த அருமை மனைவியைப் பிரியவேண்டி வந்தமைபற்றி, அவர் துக்கசாகரத்தில் ஆழ்ந்து, கண்ணீர் விட்டு, அவளை நோக்கி, வேழமுண்ட விளங் கனியாகி, 'சிற்பரால் எழுதரும் பொற்பாவை போல்வாளே, என் நாவிற்கினிய அறுசுவை உணவும் அமைத்து, என்னருகிலிருந்து என்னை உபசரித்து உண்பித்துப் போஷிக்கின்றவளே, என்னிடத் தில் அநவரதமும் மாறுத உள்ளன்புடையவளே, தெருவாயிற்படி கடவாதவளே, என் வாய்ச்சொல்லை எதிர்மறுத்து உரையாது கடவுள் வாக்காகிய வேதம் போல உண்மையாகக் கொண்டு நடப் பவளே, இரவில் என் பாதத்தை நெடுநேரமாக வருடிக்கொண் டிருந்து, நான் நித்திரை செய்த பின்பு என் கால்மாட்டிலேயே சிறிது நேரம் நித்திரை செய்து, நான் விழிப்பதற்கு முன் விழித்து எழுந்திருப்பவளே, நீ இப்பொழுது என்னை விட்டுப் பிரிந்து போய் விடுகின்றையே! இனி நான் எப்படிக் கண்ணுறக்கம் கொள்வேன்?' என்னும் கருத்தை உள்ளிட்டு,

> " அடிசிற்கு இனியாளே! அன்புடை யாளே!
> படிசொல் கடவாத பாவாய்!—அடிவருடிப்
> பின்றூங்கி முன்னெழுஉம் பேதையே! போதியோ?
> என்றூங்கு மென்கண் இரா?"

என்பது முதலாகிய சில செய்யுட்களைப் பாடி வியசனப்பட்டார். யோசிக்குமிடத்தில் தாமரைஇலை நீரும் புளியம் பழஓடும்போல மனை வாழ்க்கையில் ஒட்டியும் ஒட்டாத மகாத்துமாவாகிய அவரும் அந்த மாதர்க்கரசியின் நற்குண நற்செய்கைகளினால் அல்லவோ சிலேஷ்டு மத்தில் அகப்பட்ட ஈயைப்போல அப்படிப் பரிதவிக்கும்படி வந்தது? 'மனையாலன்றே தலை வெடித்ததாம்' என்றும் சொல்லப்படு கின்றதே!

பதிவிரதைகள் கணவனது பாதம் விளக்கிய நீரைக் கங்கா தீர்த்தமாகவும், அவன் உண்ட எச்சிலைத் தேவதா பிரசாதமாகவும், அவன் பாதசேவையைப் பரமார்த்த தரிசனமாகவும், அவன் வாய்ச் சொல்லைக் குருவினது உபதேசமாகவும் கொள்வதேயன்றி, வேறே தீர்த்தம் பிரசாதம் தரிசனம் மந்திரோபதேசம் உண்டென்று மதிப்பதில்லை.

'தம் கணவன், மற்றப்புருஷர் அவனைக் கண்டு 'நாம் பெண்ணைப் பிறந்தால், இந்த மகா புருஷனைத் தழுவலாமே!' என்று விரும்பத் தக்க பேரழகுடையவனாலும், இளங்காளை போலும் அதிக யௌவனம் உடையவனாலும், சுரபேதலயபேதம் தெரிந்து நரம் போசையும் குரலோசையும் வேறுபடாது நயமாகப் பாடுகின்ற சங்கீத சாமர்த்தியனாலும், தன்னை நோக்கிய பெண்களின் பார்வைகளை எல்லாம் கவர்கின்ற விசாலமாகிய கமலதளம் போன்ற அழகிய பார்வை உடையவனாலும், ஆண்சிங்கம்போலும் பெருமிதமான நடை உடையவனாலும், மலை போல அளவில்லாத பெருஞ்செல்வம் உடையவனாலும், தமக்கு அவன் சாக்ஷாத் அத்தை மகன் ஆனாலும், தாம் அவனுக்கு அம்மான் புத்திரிகளா னாலும், பெண்களுக்குப் பெரும்பாலும் அந்நிய புருஷர்மேல் மனம் செல்லும்' என்பதனால், சபலசித்தம்கொண்டு கற்பழியாது, அதனை உறுதிப்படுத்தி, நல்லொழுக்கத்தில் நீங்காது நிற்க வேண்டும்.

வேதம் ஓதுகின்றவர்களுக்கு ஒரு மழையும், செங்கோல் செலுத்துகின்றவர்களுக்கு ஒரு மழையும், கற்புடையவர்களுக்கு ஒரு மழையுமாக அல்லவோ மாதம் மும்மாரி பொழிகின்றது?

> "வேதம் ஓதிய வேதியர்க் கோர்மழை,
> நீதி மன்னர் நெறியினுக் கோர்மழை,
> மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை,
> மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே."

கிரமம் தப்பிய வேதியர்களுக்கு ஒரு மழையும், கொடுங்கோல் மன்னவர்க்கு ஒரு மழையும், புருஷனைக் கொலை செய்யும் பெண் களுக்கு ஒரு மழையுமாக அல்லவோ வருஷம் மூன்று மழை தூறு கின்றது?

" அரிசி விற்றிடும் அந்தணர்க் கோர்மழை,
வரிசை தப்பிய மன்னருக் கோர்மழை,
புருஷ னீக்கொன்ற பூவையர்க் கோர்மழை,
வருஷம் மூன்று மழையெனப் பெய்யுமே."

முற்காலத்தில் கற்புடையவர்களில் சந்திரமதி காட்டுத் தீயைக் குளிரச்செய்தாள்; தமயந்தி, தன்னை இச்சித்த வனவேடனை எரித்தாள்; அநசூயை, தன் கற்பைச் சோதிக்க வந்த திரிமூர்த்திகளைக் குழந்தைகளாக்கி ஸ்தன்யபானம் பண்ணுவித்தாள். சாவித்திரி, தன் நாயகன் உயிரை யமன் கொண்டு போகிற தருணத்தில் அவனுடனே வாதாடி மீட்டாள். நளாயனி, ஆணிமாண்டவியர். சாபத்தால் தனக்கு வைதவியம் வாராது பொழுது விடியாதிருக்கப் பிரதி சாபமிட்டுத் தேவர்கள் வேண்ட விடிய அநுக்கிரகித்தாள். திருவள்ளுவ நாயனார் மனைவி, கணவரது பணிவிடையில் இருக்கையில், ஒரு தவசி வந்து பிச்சை கேட்கப் பிச்சையிடக் கால தாமதப் பட்டமையால், அவன் கோபம்கொண்டு அம்மாதை எரிக்கும்படி உறுக்கிப் பார்க்க, அம்மாது அந்நினைவை அறிந்து, 'கொக்கென்று நினைத்தையோ கொங்கணவா?' என்றாள். இப்படியெல்லாம் இருப்பதனால் அல்லவோ, கற்புடையவர்களின் மகிமை தேவர்கள் முனிவர்களாலும் அளவிடற்கு அரிதென்று சொல்லப்படுகின்றது?

மரக்கலத்தை ஆதரவாகக் கொண்டு கடற்கரை ஏறுகின்றவர் களைப் போல, புருஷன் இல்வாழ்க்கைக்குத் துணையாகக் கற்புடைய மனைவியைக்கொண்டு, பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி முதலியோரை உபசரித்தல் ஆதியாகிய அறங்களைச் செய்து மோட்சக் கரை ஏறுதற்கு அவனுக்கு அவள் அநுகூலமாயிருந்து தெய்வ கடாக்ஷத்தால் நல்ல புத்திரர்களைப் பெற்றுப் புகழ்பெற வாழவேண்டும்.





[மனிதனை மனிதனுக வாழவைப்பது கல்வி. 'கல்வி கற்பது எப்படி? கற்ற வழி நிற்பது எப்படி?' என்பனவற்றை அறிவதற்கு இக்கட்டுரை வழி காட்டியாய் விளங்குகிறது. கல்வியறிவினை மாணவர் மனங்கொள்ளுமாறு போதிக்கும் முறையினையும் ஆசிரியர் தெளிவு படுத்தியுள்ளார்.

— பதிப்பாசிரியர்]

3

கற்றுய்ந்தொழுகல்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

என்னும் குறளில், 'ஒருவன் கற்க வேண்டும் நூல்களைப் பழுதறக் கற்கக் கடவன்; அப்படிக் கற்றபின், அக்கல்விக்குத் தகுதியாக அவைகளாலே சொல்லப்பட்ட வழியிலே நிற்கக் கடவன்,' என்று திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்தமையால், உலகத்தில் அருமையும் பெருமையும் ஆனதாய், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பயனையும் அடைதற்குரிய மக்கட்பிறப்பில் பிறந்தவர்கள் பிறவாதவராய், விவேக சூனியத்தால் தர்ம அதர்மங்களை அறியாத வேடர் போலவும், மிருகம் பறவை முதலிய உயிருள்ளவைகளும், மண் கல் முதலிய உயிரில்லாதவைகளுமாகிய அஃறிணை போலவும், நன்முயற்சியின்றி வறிது இருந்து வாழ்நாள் கழியாமல் பிரதானமாகிய கல்விப் பொருள் செல்வப் பொருள் என்னும் இரண்டில் கல்விப்பொருளைத் தேடல் வேண்டும்.

கல்விப் பொருளாவது, செல்வப் பொருள் போல வெள்ளம் கொண்டு போகாததும், நெருப்பிலே வேகாததும், கள்வர்கள் அபகரிக்காததும், காவல் செய்ய வேண்டாததும், அரசர்களால் வவ்வப்படாததும், தாயத்தாரால் பங்கிட்டுக்கொள்ள முடியாததும், விரும்பினவர்கட்கு எல்லாம் தடையின்றி வழங்கினாலும் மேன்மேலும் வளர்வதன்றிக் குறைவுபடாததுமாய், அஞ்ஞானமாகிய பிணிக்கு மருந்துமாய் இருப்பதனால், அதனைச் செல்வப் பொருளிலும் சிறந்ததாகக் கருதி, 'இளமையில் கல்,' என்று ஔவை சொன்னவண்ணம் இளமைப்பருவத்திற்றானே உறுதியாக

அவசியம் தேடல் வேண்டும். தேடுங்கால், கல்வி வரையறைப் படாததனால், அதனை முற்றக் கற்பதற்கு ஆயுள் நீடித்திராமை யாலும், கற்பவர் சரீரமோ பிணிக்கு எல்லாம் பிறப்பிடம் ஆகை யாலும், முடியாமையால் கைவிட்டுவிடாமலும், அல்லது, 'கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்,' என்பதோர் சாமானிய வாசகத்தை நம்பி, கண்டதெல்லாமாகிய மூடர்களுக்கேற்ற தந்தனப் பாட்டும் ரஞ்சனக் கூத்தும் உள்ளிட்ட புன்கல்வி கற்றுப் பொழுது போக்காமல், நீரைப் பிரித்துப் பாலைப் பருகும் அன்னப் பறவை போலச் சாஸ்திரங்களில் விசேஷ சாமானியங்களை யூகித்துச் சாராமிசம் தெரிந்து, இகபர சாதனமாய் எவற்றினும் விழுமிதாகிய மெய்ம்மைக் கல்வியையே உயிர் போலப் பெரும் பொருளாக விரும்பி, இலக்கிய இலக்கண சம்பிரதாயம் தெரிந்த நல்லாசிரியரைத் தேடி அடைந்து, அவரது சந்நிதானத்தில் செல்வர் முன் வறியர் ஏக்கற்று இருப்பது போல இருந்து, குறிப்பறிந்து ஒழுகி, அவர் கருணை கூர்ந்து கற்பிக்க; முறை வழுவாமலும், நெறி பிறழாமலும், பேய்போலப் பேருண்டியை இச்சியாமலும், பெரியம்மை பிரசன்னமானாற்போலப் பெருந்தூக்கம் தூங்கா மலும், 'அம்பலம் தீப்பட்டது!' என்றாலும், 'அதைத்தான் சொல் வானேன், வாய்தான்நோவானேன்?' என்று கெட்டொழிந்த முழுச் சோம்பரைப்போலச் சோம்பி இராமலும், அனைவரும் தன்னை, 'தம்பி பள்ளிக்கூடத்தான்,' என்று சொன்னால் போதுமென்று நினைத்துப் பிரதிஷ்டைக்காகக் குழப்புவான் போல விளையாட் டினால் குழப்பிவிடாமலும், பலகாலும் மிக முயன்று, ஐயம் திரிபற அமையக் கற்க வேண்டும். அதன்மேலும், 'கேள்வி முயல்,' என்ற மையால், உசிதமான பற்பல நற்கேள்வி கேட்க வேண்டும். அன்றியும், நுண்ணறிவு உடையோர் நூல்கள் யாவையும் இனிதின் ஆராய வேண்டும். இவ்வாறு கற்றும் கேட்டும் ஆராய்ந்தும் பயின்ற பின்னர்க் குப்பையைச் சீத்து விளையுயர்ந்த மாணிக்கத்தை ஆய்ந்தெடுப்பது போல, உண்மை துணிந்து, விலக்கத்தக்கவைகளை விலக்கிக் கொள்ளத்தக்கவைகளைக் கொண்டு, அனுஷ்டிக்க வேண்டும்.

அனுஷ்டித்தலாவது, 'பார்மினே! பார்மினே!' என்று தாயு மானவர் உரைத்தவாறு, யாவரும், 'ஆ! ஆ! இவனைப் பாருங்கள்! இவன் பாடிப் படித்துப் பிரசங்கிப்பது, முக்கனியும், சர்க்கரையும், பாலும், தேனும் கலந்து ஊட்டுவது போல மிக இனிதாயும், அற்புதமாயும், விநோத சாதுரியமாயும், பகைவரும் வெறுக்கத்தக்கதன்றி வியக்கத்தக்கதாயும் இருக்கின்றதே! இவன் என்ன சாரதா பீடமோ! கல்விக் கடலோ! கற்பனைக் களஞ் சியமோ! ஞானமணி விளக்கோ! அவதார புருஷனே! உற்பாத பிண்டமோ! அம்மம்ம! ஆச்சரியம்! இவன் நிபுண சிரோ மணியாய் இருக்கிறான்!' என்று தனது வித்தியா சாமர்த்தியத்தை மெச்சவேண்டுமென்னும் வீண் புகழை விரும்பலாது; பின்னும்

கல்வியில் தான் பிச்சை இட்டவர்களுக்கு உண்டென்று சொல்லும் படி பூரணமாகக் கற்றுணர்ந்த காலத்தும், பிறரை, 'இவன் நமக் கெவ்வளவு ? அஜகஜாந்தரம் !' என்று அவமதித்துக் கர்வியாமல், 'எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ !' என்று எண்ணி, தன்னிலும் அதிகமாகக் கற்றவர்களைக் கண்டால், 'நெய்விட்டு விளக்கும் தீபத்தை நீர் விட்டு விளக்குவது போல, இதுவரையில் நம்மை நாமே புகழ்ந்து வியந்தோமே ! சகல கலா வல்லவராகிய இவரது கல்விக்கு நமது கல்வி எம்மாத்திரம் ? சதாமிசத்தில் ஏகாமிசம் காணுமா ? கால்வாய் கடலாமா ? அணு மேருவாமா ? துரும்பு தூணுமா ? எறும்பு யானையாம்மா ? முட்டிக்கால் கழுதை பட்டவர்த்தனப் பரியமா ?' என்று அஞ்சிப் பெட்டிப் பாம்புபோல அடங்கி இருக்க வேண்டுமே அல்லாமல், ஒருவருடனும் குதர்க்கம் செய்யலாகாது. தன்னிடத்தில் கற்றவர்கள் கேட்டவர்கள் எல்லாம் அக்கல்வி கேள்விகளால் பெரும்பயனடைய, 'குங்குமம் சுமந்த கழுதை' போலத் தானொரு பயனுமடையாமல், 'குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வது' போலக் காமாந்தகாரத்தில் மூழ்கி, முறைப்படி கொண்ட மனைவியை உறங்க வைத்து, பரஸ்திரீகளை எந்நாளும் இச்சித்துக் குலஸ்திரீகளை எக்காலத்திலும் கற்பழிக்கலாகாது ; உள்ளம் களிக்கக் கள்ளுண்டு கலங்கலாகாது. பரதிரவியத்தை விஷமென்று நினைக்க வேண்டியதை விட்டு, ஊராருடைமைக்குப் பேராசை கொண்டு மிதமில்லாமல் கொள்ளை யிட்டு, 'தம்பி தெள்ளுமணி திருட்டுக்கு நவமணி!' என்றுஇகழப்பட லாகாது. 'தன்னுயிர் போல மன்னுயிரையும் நினைக்க வேண்டும்,' என்னும் ஜீவகாருணியத்தை மறந்து, கொலை செய்து பிரமஹத்தியாதி மகா பாதகங்களைத் தேடி, அநேக கற்பங்கடந்தாலும் கரை யேறப்படாத மீளா நரகத்திற்கு ஆளாகலாகாது. ''அப்பா, என் கலியாணப் பந்தலிலிருந்து புளுகாதே' என்ற பெரும்புளுகனும் இவனுக்கு இணையல்ல ; இவன் புளுகு அண்டகோளத்தையும் தூறிப் பாயும் ஆதலால், அண்டப்புளுகன்' என்று சொல்லும்படி பொய்யைப் பொருளாகக்கொண்டு மெய்யைக் கைசோர விட லாகாது. 'கோபம் சண்டாளம்.' ஆகையால், ஆது கிருஷ்ண சர்ப்பம் போலச் சீறி எழும்படி அதற்கிடங்கொடாமல், 'பொறுமை கடலில் பெரிது' என்பதனால், அதனைப் பூஷணமாகப் பூண்டு கொள்ள வேண்டும். சித்திரவதை செய்வது போல, அடிக்கடி எவர்களென்ன தீங்கு செய்தாலும் எதிர் செய்யாமல், அவர்கள் நாணும்படி அவர்களுக்கு நன்மையே செய்ய வேண்டும்.

> ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு.''

எவ்வகை அறங்களை அழித்தவர்க்கும் அப்பாவத்தினின்று நீங்கும் வழியுண்டு. ஒருவர் செய்த நன்றியை மறந்தவனுக்கோ, அஃதில்லை. ஆதலால், அதனை மறவாது நினைக்க வேண்டும். எளியவர்களைத்

திறமாயெண்ணி அவர்களிடத்திலே வேம்பு போல் கடுஞ்சொல் சொல்லாமல், தாழ்மையாய், அவர்களிடத்தும் இன்சொல்லே சொல்லவேண்டும். பகைவர், சிநேகர், அயலாரென்னும் முத்திறத் தார்களில் ஒருவர் பக்ஷம் சார்ந்து ஓரம் சொல்லாமல், துலாக்கோல் போல நடுநிற்க வேண்டும். பறவைகளுக்குள் சண்டாளமென்று இகழப்படுகிற அற்ப ஜந்துவாகிய காக்கைக்கும், காலையில் எழுந் திருத்தல், காணுமல் புணர்தல், மாலையில் குளித்தல், அயலிடைப் புகாது மனையிடைப் புகுதல், உற்றாரோடு உண்டல், உறவாடல் என்னும் இவ்வறுவகை நற்செய்கைகள் இருக்கின்றன.

> “ காலை எழுந்திருத்தல், காணும லேபுணர்தல்,
> மாலை குளித்து மனைபுகுதல்,—சால
> உற்றாரோடு உண்ணல், உறவாடல் இவ்வாறும்
> கற்றாயோ காக்கைக் குணம் ?”

ஆதலால், அறிவினையுடைய நன்மக்களுக்கு எப்படிப்பட்ட நற்குண நற்செய்கைகள் இருக்க வேண்டும்? அவைகளெவ்வளவுஅதிகமாகவு மிருக்கவேண்டும் ? பிரபஞ்சத்தில் மூடர் விவேகிகள் போலவும். கீழோர் மேலோர் போலவும், மேலோர் கீழோர் போலவும் இருப் பார்கள். அவர்களைக் கிளிஞ்சிலை வெள்ளி என்றும், மாணிக்கக் கல்லைக் கரட்டுக் கல்லென்றும் ஒன்றை மற்றொன்றாக மதிப்பது போல, காட்சி மாத்திரத்தால் அவ்வாறு நிச்சயிக்கலாகாது. ‘ கரும்பு கோணியிருந்தாலும் தித்திக்கும் அல்லால் கசக்காது,’ என்றும், ‘ காஞ்சிரங்காய் சிவந்து கனிந்திருந்தாலும் கசக்கு மல்லால் தித்திக்காது,’ என்றும், ‘ அம்பு வளைவின்றி ஒழுங்காய் இருந்தாலும் கெட்ட செய்கையே உடையது,’ என்றும், ‘ வீணை ஒழுங்கின்றி வளைந்திருந்தாலும் நல்ல செய்கையே உடையது,’ என்றும், பகுத்தறிவது போல, அவரவர்களுக்கு இயற் கையும் செயற்கையுமாயுள்ள குணங்களையும் செய்கைகளையும் பகுத்தறிய வேண்டும். அங்ஙனம் பகுத்தறிந்து, ஒருவனைக் கொட்டிவிட்டு அவனைப் பதைத்துத் துடித்து வருத்தப்படச் செய்யும் தேள் போல, பிறனுக்குத் துன்பத்தை உண்டாக்கி அதை அவன் சகிக்க மாட்டாமல் வியசனப்படச் செய்கின்றவர்களும், ஒருவன் உண்ணும் சோற்றில் விழுந்திறந்து அவனுடைய வயிற்றுக்குள் போய் அவனுண்ட சோற்றை அவனுக்கு உதவாமல் போகும்படிச் செய்யும் ஈயைப்போல, பிறனது செல்வம் கண்டு பொறுமை கொண்டு தாம் அவன்பொருட்டு இறந்தாவது அந்தச் சொத்தை அவன் அனுபவிக்க ஒட்டாமல் செய்கின்றவர்களும், ஒருவனைக் கடித்து விஷம் தலைக்கேறுதலால் அவன் இறந்து போகும்படி செய்யும் பாம்பு போல, பிறனைப் பகைத்து அவனுக்குத் தீங்கு விளைத்து அவனை முடித்துவிட்டு மகிழ்கின்றவர்களும் முதலாகிய தீயோரை நேசிக்கலாகாது.

" உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு."

ஆடை சோர்ந்தபோது உதவி செய்கிற கைபோல, நேசனுக்கு ஆபத்து வந்தபோது தாமே அறிந்து உதவி செய்கின்றவர்களும்; கொல்லன் உலைக்களத்தில் வேகின்ற இரும்புடனே வேகும் உலை யாணிக் கோல்போல, சிநேகன் உபத்திரவப்படும்பொழுது நமக்கு என்ன என்றிராமல், அவனுடனே தாமும் அவ்வுபத்திரவத்தை அனுபவிக்கின்றவர்களும், கண்டியூர்ச் சோழராஜனுடைய மந்திரி யாகிய சீனக்க முதலியாரை நேசித்து, அவர் இறந்து காஷ்டத்தில் வைக்கப்பட்டபொழுது, 'என் சிநேகிதரைப் பிரிந்து நான் இருக்கச் சகியேன்' என்று அவருடனேகூட அந்தக் காஷ்டத்தில் படுத்துக் கொண்டு, சோழன் முதலானவர்கள் விலக்கியும் கேளாமல் நெருப்பில் வெந்து பிராணனை விடுத்துச் சிநேக தர்மத்தை நிலை நிறுத்திய பொய்யாமொழிப்புலவர் போல்வாராகிய நல்லோரையே நேசிக்க வேண்டும். இன்னும் மனுவாக்குக் காயங்களை எக்காலும் நல் விஷயத்திலேயே பயிலும்படி செய்ய வேண்டும் அல்லாமல், துர்விஷயத்தில் பிரவேசிக்க விடலாகாது. இனி இப்படிக்கன்றி, விபரீதத்தால், 'அடபோ! இதென்ன பைத்தியம்! பாவமேது? புண்ணியமேது? நரகமேது? சுவர்க்கமேது? நாம் செத்தால், சரீரம் பஞ்சபூத சம்பந்தப்பட்டது ஆகையால், இது மண்ணோடு மண், நீரோடு நீர், நெருப்போடு நெருப்பு, காற்றோடு காற்று, வெளியோடு வெளியாய்ப் போய்விடுகின்றதே! பின்னர் மோக்ஷம் நரகம் அடைவதேது? தெய்வம் என்றதுதானேது? முயற்கொம்பும் மலடி மைந்தனும் போலச் சூனியமே அல்லாமல், கண்டவர்கள் ஆர்? இந்தக் கொள்களுக்கு ஸ்நானமேன்? தியானமேன்? ஞான மேன்? தான தர்மங்களேன்? இவையெல்லாம் வீணரவாரம்! கண்டதே காட்சி! கொண்டதே கோலம்! மனம்போன போக்கே சரி!' என்று நாஸ்திகம் பேசிச் செருக்குற்றுப் பட்டி மாடாய் உழலாமல், 'அண்ட பிண்ட அகில சராசரங்களையும் படைத்துக் காத்து அழிக்கின்ற காரணக் கடவுள் ஒருவன் உண்டு,' என்று அநுமான உபமான ஆகமப் பிரமாணங்களால் நிச்சயமாக நம்பி, அக்கடவுளை மனமாரச் சிந்தித்து, நாவார வாழ்த்தி, முடியார வணங்கி, ஆராதித்து, பெரியோரைப் பேணி, அரசர் ஆணைக் கமைந்து, மாதா பிதா குரு முதலானவர்களைப் பூசித்து, மற்ற சுற்றத்தாரையும் தழுவி, வறியவர்க்கு இரங்கி, வாசா கயிங்கரிய மாத்திரமாய்ப் போகவிடாமல் கூடிய அளவும் உபகரித்துச் சம்ரக்ஷணை செய்வதற்கு ஏதுவாகச் செல்வப் பொருளையும் தேடல் வேண்டும்.

அதனைத் தேடுங்கால், தன்னைப்போன்ற பிறரிடத்துச் சென்று, அபிமானமாகிய பூஷணத்தைத் துறந்து, எய்த்து நின்று இரத்தலும், பிறரை மோசம் செய்தலும், பொய்ச் சாட்சி

சொல்லிப் பணபட்டுக் கைக்கூலி வாங்குதல் முதலாகிய பாவத் தொழிலைச் செய்தாலன்றித்தேடக்கூடாதே என்றெண்ணி,அப்படிச் செய்யாமல், பழிக்கஞ்சி, நிலத்தைத் திருத்தி உழுது பயிரிட்டாவது நானுவித பண்டங்களைக் கொண்டு அவைகளை மாறி வியாபாரம் செய்தாவது, 'அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்,' என்பதனால், சுய பாஷையே அன்றிப் பாஷாந்தரங்களையும் பயின்று, இராஜாங்கத்தைச் சார்ந்து, அரசர்கள் தயை பெற்று, விவேக கோசரத்தால் பல வித உத்தியோகங்களைச் செய்தாவது, மற்றும் எவ்வித நன்முயற்சியாலாவது, மெய் வருந்திச் சம்பாதிக்க வேண்டும்.

அப்படித் தக்க வழியில் சம்பாதித்த கஷ்டார்ச்சிதமாகிய சுயார்ச்சிதத்தையாயினும், அதனெடு பிதிரார்ச்சிதத்தையாயினும், அநியார்ச்சிதமாம்படி, 'கூத்திக்கிட்டுக் குரங்காகாமலும்', சூதாடித் தோற்காமலும், துர்வியாச்சியத்தில் அழித்துவிடாமலும், வறிதே புதைத்து வைத்துப் பின் இழந்து போகாமலும், இல்வாழ்க்கைக்கு நல்ல துணையாகிய கற்புடை மனையாளோடு கூடி, மனமொத்து,

> "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
> நல்லாற்றின் நின்ற துணை."
>
> "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்(கு)
> ஐம்புலத்தாறு ஓம்பல் தலை."
>
> "துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
> இல்வாழ்வான் என்பான் துணை."

என்பனவற்றிற்கு இணங்கப் பதின்மருக்கும் பகிர்தலாகிய தான தருமங்களைச் செய்து, தாமும் அனுபவித்து, இம்மை இன்பம் துய்த்துப் புகழ்பெற வாழ்ந்து, மறுமை இன்பம் அடைதற்கேற்கப் பொறி புலன்களை விஷயாகாரமாம்படி சுயேச்சையாக விட்டு விடாமல் அடக்கி, வேதாகமங்கள் உரைத்த வண்ணம் நெறிவழாது ஒழுகல் வேண்டும் என்பதே.

இங்கிலீஷ்காரர் சிறுபிள்ளைகள் பாஷையின் எழுத்து முதலிய வைகளை வருத்தமின்றி எளிதாக விளையாட்டில் தாமே உணர்ந்து கொள்வதற்குப் பல விதச் சித்திரப்படங்களை வேடிக்கையாகத் தீட்டிக் காட்டுவது போல, உலகத்தில் கல்வி பயிலும் சிறுவர் முதலாயினோர் அருமையின்றி எளிதாக வாசித்துச் சிறந்த கல்வியைக் கற்பதும், அதனை ஆராய்வதும், கற்ற கல்விக்குத் தக்க வண்ணம் நடப்பதும் ஆகிய கற்றுய்ந்தொழுகலை இவ்விதமாம் என்று படமெழுதிக் காட்டாவிடினும், இதனால் இடர்ப்படாமல் ஒருவாறு உணர்ந்துகொள்ளும்பொருட்டு இது அச்சிறுவர் முதலாயினோர்க்குச் சிரிப்பும் பரிகாசமுமாய்த் தோன்றியே உபாயமாக மேற்குறித்த பெரும்பயனைத் தரும்படி சில பழமொழி

முதலாகிய திருஷ்டாந்தங்களைக்கொண்டு வெளிப்படையாகவும் சுருக்கமாகவும் செய்யப்பட்டமையால், 'இதுயாருக்குத் தெரியாதது? இதில் என்ன அருமை இருக்கின்றது? இதுவும் ஓர் அதிசயமா?' என்று வரன்முறையே கற்றுணர்ந்த சான்றோர் ஒரு பொழுதும் நினையார் என்னும் துணிவுபற்றி, இதனை அச்சிட்டுப் பிரசுரம் செய்யலாயினேன். இதற்குமுன் அச்சிடப்பட்டவைகளுக்கும், இனி அச்சிடப்படுபவைகளுக்கும் இஃது ஒருவாறு ஒக்கும்.





[பயிர்த்தொழிலே நம் நாட்டு மக்களின் உயிர்த் தொழில் ஆகும். இத் தொழிலினைச் சிறந்த பயன் பெறும் வகையில் நடத்தும் முறைகள் இங்கே விளக்கப்பட்டுள்ளன. பயிர்களைக் கண்மணி போலக் காத்து அவற்றின் கதிர் மணிகள் கண்டு களிக்கும் உழவர்களை நாட்டின் செல்வங்களாகப் போற்றுவது நமது சிறந்த கடமை யாகும். அவர்கள் நல்வாழ்வில் நாட்டம் செலுத்துவது அரசியலாரின் தலை சிறந்த கடமை என்பதை இக் கட்டுரை நினைவூட்டுகின்றது. இதில் வரும் குட்டிக் கதைகள் நல்ல நீதி களைப் புகட்டுகின்றன.

— பதிப்பாசிரியர்.]

4

பயனில் உழவு

[இதன் பொருள், பயனில்லாத உழுதொழில் என்பதாம்.]

உலகத்தில் யாவரும் உஜ்ஜீவிக்கும்பொருட்டுக் கடவுளால் கற்பிக்கப்பட்ட நாநாவிதத் தொழில்களிலும், உழுது பயிரிடும் தொழிலே சிறந்த தொழிலாயும், எல்லாச் செல்வங்களிலும் உழவுச் செல்வமே குறையாத செல்வமாயும், ஒருவரிடத்தில் சேவித் துண்ணும் உணவிலும் உழுது பயிரிட்டு உண்ணும் உணவே இனிய உணவாயும் இருக்கின்றன என்பது பண்டித பாமரர்களுக்கெல்லாம் உள்ளங்கை நெல்லிக் கனி போல விளக்கமாய்த் தெரிந்திருக் கின்றது. ஔவையும் இந்த விஷயத்தை, 'பூமி திருத்தி உண்' என்பது முதலாகச் சில வாக்கியங்களால் விளங்கச் சொல்லி இருக்கிறாள். திருவள்ளுவரும்,

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் ;மற் றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்."

என்னும் குறளால், உழுதொழிலைச் செய்து உண்டு வாழ்பவர்களே சுவாதீனர்களாய் வாழ்பவர்கள் என்றும், மற்றவர்கள் எல்லாம் பிறரைத் தொழுது அவர் கொடுக்க வாங்கியுண்டு, அவர் பின்

சென்று அச்சுவாதீனம் இழந்திருப்பவர்கள் என்றும் சொன்னர். அன்றியும்,

" ஏரும் இரண்டுளதாய், இல்லத்தில் வித்துளதாய்,
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்,—ஊரருகே
சென்று வரவெளிதாய்ச் செய்வாரும் சொற்கேட்கில்,
என்றும் உழவே இனிது."

எனவும் சொல்லப்படுகின்றதே!

இப்படி எல்லாம் இருந்தும் இக்காலத்தில் இந்து தேசத்தில் உத்தியோகஸ்தர் அல்லாத குடிஜனங்கள் பயிரிட்டுச் சீவனம் செய்வதைப் பார்த்தால், மிகவும் பரிதாபமாய் இருக்கின்றது! அதை என்ன என்று நாவெழுந்து சொல்லுகின்றது! துணிந்து சொல்லப் புகுந்தால், 'பன்னி உரைத்திடிலோ பாரதமாம்' என்பதாக விரியும்; ஆயினும், அதை இவ்விடத்தில் சுருக்கிச் சொல்லுகிறேன்:

குடிகள் தங்கள் தேக போஷணைக்காகப் பயிரிடத் தொடங்குஞல், முதல் முதல் இது பள்ளத்தாக்கு, இது மேட்டுப்பாங்கு, இது சமநிலம் என்றும்; இது செய்கால், இது கரம்பு, இது புறம்போக்கு என்றும் நிலவளம் அறிய வேண்டும். ஏரிப் பாய்ச்சல், ஆற்றுக்கால் பாய்ச்சல் முதலான நீர்வளம் பார்க்க வேண்டும். காடழித்துக் கரம்பு திருத்த வேண்டும். காறு, கலப்பை, நுகம், வடம், ஆள், குண்டை முதலிய பலவும் தேட வேண்டும். ஏர் கட்டி நிலத்தை உழ வேண்டும். அதற்குக் குப்பை, தழை முதலாகிய எரு இடல் வேண்டும். நன்செய் நிலங்களைப் பரம்படித்துச் சேடையாடிப் பண்படுத்த வேண்டும். பிறகு, அதில் சீரகச் சம்பா, சிறுமணிச் சம்பா, சின்னச் சம்பா, பெரிய சம்பா, சன்னச் சம்பா, ஊசிச் சம்பா, இலுப்பைப்பூச் சம்பா, மல்லிகைச் சம்பா, கம்பன் சம்பா, கைவளச் சம்பா, குங்குமப்பூச் சம்பா, குண்டைச் சம்பா, கோடைச் சம்பா, ஈர்க்குச் சம்பா, புனுகுச் சம்பா, முத்துச் சம்பா, துய்யமல்லிகைச் சம்பா, மோரன் சம்பா, மாலன் சம்பா, சீவன் சம்பா, செம்பிலிப் பிரியன், பிசானம், மலைகுலுக்கி, மடுவிழுங்கி, காடைக் கழுத்தன், செம்பாளை, பூம்பாளை, முட்டைக்கார், கடப்புக்கார், மோசனம், மணக்கத்தை, பிச்சவாரி, ஈசர்கோவை, இறங்குமேட்டான், செந்நெல், வெண்ணெல் முதலான நன்செய்த் தானியங்களும்; கோதுமை, வாற்கோதுமை, வரகு, கேழ்வரகு, மஞ்சள், சோளம், செஞ்சோளம், முத்துச்சோளம், காக்காய்ச்சோளம், கம்பு, சாமை, தினை முதலாகிய புன்செய்த் தானியங்களும்; அவரை, துவரை, உழுந்து, கடலை, கறுப்புப் பயறு, பச்சைப் பயறு, பனிப் பயறு, மூரிப் பயறு, தட்டைப் பயறு, பெரும்பயறு, துலுக்கப் பயறு, கொள்ளு, எள்ளு முதலிய காய்த் தானியங்களும்; அவரி, ஆமணக்கு முதலானவைகளும் விளைவிக்க விதை சம்பாதிக்க

வேண்டும் ; அவைகளைக் கோட்டை கட்டி முதல் கிளம்பச் செய்தாவது, அப்படிச் செய்யாமல் சும்மாவாவது விதைக்க வேண்டும் ; அல்லது, நாற்றங்காலுக்கு நாற்றுவிட வேண்டும். அது வளர்ந்த பின் பிடுங்கி நட வேண்டும். சற்சனரைப் பாலிக்கும்படி துர்ச்சனரைப் பரிகரிப்பது போல, அதற்கு விரோதமில்லாமல் களை எடுக்க வேண்டும். நீர் பாய்ச்ச வேண்டும். பயிர் வளரும் காலத்தில் ஆடு, மாடு, பன்றி முதலிய மிருகங்கள் அழிக்கவொட்டாமல் சுற்றி வேலியிட வேண்டும். பூச்சிகளால் சேதப்பட்டுப் போகாமல் அடிக்கடி பார்வையிட வேண்டும். பாராத உடைமை பாழ்அல்லவா? நன்முய் விளைவதற்கு வேண்டிய முயற்சிகளைச் சோம்பலில்லாமல் அடுத்தடுத்துச் செய்ய வேண்டும். கருக்கொண்டு விளைந்து மணி முற்றிக் கற்புடை மகளிர் போலத் தலை வணங்கி மடியும் காலத்தில்,

> “ ஏரினும் நன்றால் எருவிடுதல் ; கட்டபின்
> நீரினும் நன்றதன் காப்பு.”

என்பதனால், களவு போகாமல், கண்ணை இமை காப்பது போல, பத்திரமாய்க் காக்க வேண்டும். விளைந்து மடிந்தபின் அதை ஒப்படி செய்வதற்குப் பிரயத்தனப்பட்டு அறுக்கும் பருவம் அறிந்து அறுக்க வேண்டும். அறுத்த அரிகளைச் சுமை கட்டிக் கொண்டுபோய் மலை போலப் பெரிய போர் போட வேண்டும். மாடுகளைத் தாமணியில் பிணைத்து அதை மிதிப்பிக்க வேண்டும். மிதிப்பித்த பின் வைக்கோலைப் பிரித்துப் பதரைத் தூற்றி மணியை உடவாரம் கும்பலாகக் கூட்டிக் களத்தில் அம்பாரமாக்கிக் குறிமுத்திரை செய்ய வேண்டும். அதை அளந்து தொகையாக்கி, அதில் கருமான், தச்சன், தட்டான், கணக்கன், குயவன், வண்ணன், அம்பட்டன், தோட்டி, தலையாரி, வெட்டியான் முதலானவர்க்கு உரியகளவாசம் போக, துரைத்தனத்தாருக்குச் சேர வேண்டிய மேல் வாரத்தை யாதோர் ஆடங்கமும் இல்லாமல் சேர்த்துவிட வேண்டும். மற்றக் குடிவாரத்தில் பிள்ளையார் கோயில், சிவன் கோயில், ஐயனார் கோயில், மாரி பிடாரி காளி கோயில்களுக்கும், நம்பியான் குருக்கள் புரோகிதன் ஜோசியன் வைத்தியன் வாத்தியார் ஆண்டி தாதர்களுக்கும், களவாசத்துக்கும், இவ்வளவு இவ்வளவென்று பகுத்துக் கொடுத்துவிட்டு, மிகுந்த கொஞ்சம் தானியத்தைத் தங்கள் வீட்டுக்குக் கொண்டு போய், அதனால், பெண்சாதி, பிள்ளை, தாய், தந்தை, தமயன், தம்பி முதலாகிய குடும்பத்தார் எல்லாம் ஜீவனம் பண்ண வேண்டும் என்றால், அது ஆருக்குத்தான் ஆகும் ? எத்தனை நாளைக்குக் காணும் ? இது, ‘கடன் வாங்கியும் பட்டினி, கலியாணம் பண்ணியும் சந்யாசம் ’ என்பதாய் இருக்கின்றதே !

பின்னும் வீட்டில் நடக்கின்ற கலியாணம், சோபனம், சீமந்தம் முதலாகிய சுபாசுபங்களையும், வரிசை வண்மை, தான தருமம் முதலானவைகளையும் அந்தச் சொற்பப் பலனைக்

கொண்டே நடத்தவேண்டும். அவைகள் எப்படித்தான் நடத்தப் படும்? பனி பெய்தோ கடல் நிரம்பும்? பனியிலே கப்பல் ஓட்டலாமா? சமுசாரமோ சாகரமோ என்கின்றீர்களே!

ஆற்றுக்கால் பாய்ச்சலில்லாத இடங்களிலே மேற்சொல்லிய பாடுகளெல்லாம் பட்டும், மழை பெய்யாமல் வானம் காய்ந்து போகும் காலத்தில், ஏரியில் தண்ணீர் இல்லாமையால் அந்தச் சொற்பப் பலனும் கிடையாது. உழைப்பு எல்லாம் வீணுக்கே உழைத்ததாம். ஆகையால், அது, 'கல்லைக் குத்திக் கை நோவதாய் முடியும்' அல்லவோ?

ஏரிகளில்லாத சில இடங்களில் மானவாரிப் பயிர் செய்வது உண்டு. இந்த மானவாரிப் பயிரோ முழுதும் அநியாயம். ஏனெனில், அங்கே ஏரி நீர் பாய்வதற்கு இடமில்லாமையால், வானத்தையே எதிர்பார்க்க வேண்டி இருக்கின்றது. இக்காரணத் தால் இதை வானம் பார்த்த பயிர் என்றும் சொல்வார்கள். இதில், வானம் பெய்தால்தான் சிறிது பலனாவது காணலாம். அல்லா விட்டால், 'வானம் சுருங்கின் தானம் சுருங்கும்' என்றவாறே ஞனியம். ஆதலால், இது, 'முதலே தூர்ப்பாலை, அதிலும் கார்ப்பிணி' என்பது போலாகும்.

எங்கும் மண்டலவருஷமாய்க் காலத்தில் மிதமழை பெய்ய வேண்டும். இப்படிப் பெய்யாவிட்டாலும், அகாலத்தில் பெய் தாலும், குறைவாய்ப் பெய்தாலும், அதிகமாய்ப் பெய்தாலும், தக்கபடி முயற்சி செய்யாவிட்டாலும் நஷ்டமேயன்றி நயம் வாராது.

சிலவூர் மிட்டாவும், சிலவூர் பட்டாவும், சிலவூர் அமானியும், சிலவூர் சுரோத்திரியமும், சிலவூர் சர்வமானியமுமாய் இருக்கின்றன. அவைகள் எல்லாவற்றிலும் பட்டாவைப் போலச் சில இடங்களில் குடிகளுக்கு அசௌகரியத்தைக் கொடுப்பது வேறொன்றில்லை. நிலத்தை உழுது விதைத்தாலே போதும்; விதைத்தது விளைந் தாலும், விளையாமல் சாவியாய்ப் போனாலும், 'ஆர் கெட்டால் என்ன? ஆர் வாழ்ந்தால் என்ன?' எவ்விதத்திலும் சர்க்காருக்குக் கட்ட வேண்டிய தீர்வை கட்டியே தீர வேண்டும். இந்நாளில்லை, சில நாளுக்கு முன்பு, அது கட்டுகிறதற்குத் தாமதப்பட்டால், எள்ளளவாவது இரக்கமின்றிக் குடிகளை மிகவும் உபத்திரவப்படுத்து வார்கள். அவர்கள் யாரென்றால், இந்து தேசத்திற்கும், மற்றத் தேசங்களுக்கும் சாக்ஷாது ஈன்றதாய் போல் தோன்றினவர்களாகிய மாட்சிமையுள்ள கவர்ன்மெண்டார் என்று சிலர் சொல்வார்கள்; பெற்ற தாயே பிள்ளைக்கு நஞ்சிடுவதுபோல, நீதிக்கு விரோதமாய்க் கவர்ன்மெண்டார் இரக்கமற்று அப்படிச் செய்வார்கள் என்று நான் சொல்ல மாட்டேன். கலெக்டர்கள் தாம் அநியாயமாய் நடத்து வார்கள் என்று எப்படி நிச்சயிக்கலாம்? கலெக்டர்கள் அரசிறைப் பணம் சேகரிக்கும்படி, துரைத்தனத்தாரால் நியமித்து அனுப்பப்

பட்டு வந்திருப்பதனால், அப்பொருளைச் சேகரம் பண்ணுவதற்கு ஏற்ற முயற்சிகளைச் செய்வது அவர்களுக்குக் கடமையாதலால், அவர்கள் சட்டத்தின்படி கட்டளையிட, அதுவே வியாஜமாக அவர் களிடத்தில் உத்தியோகஸ்தராய் இருக்கும் சிரெஸ்ததார் சொற் படியோ, அல்லது, தாசில்தார் ஏவுதலினாலோ, தங்கள் சுயசித்தத்தி னாலோ ஜில்லாதார் முதலானவர்கள் **கைதாத்துச்** சேவகர்களை அனுப்ப, அவர்கள் பயிரிடும் குடிகளைத் திருடர்களைப் பிடிக்கிறது போலப் பிடித்து வந்து, கையையும் காலையும் குண்டு கட்டாகக் கட்டி, கிட்டிக்கோல் பாய்ச்சி, கடுமையாய் வெயில் எறிக்கும் மத்தியான வேளையில் ஆற்று மணலில் பதைக்கப் பதைக்க உருட்டி விடுகிறதும், கழுத்துக்கும் கால் பெருவிரலுக்கும் கயிறு மாட்டி அண்ணந்தாள் போட்டு, நெற்றியின்மேல் பெரிய கல்லெடுத்து வைத்து, வெயிலிலே நிறுத்திப் பல விதத்திலும் கஷ்டப்படுத்திக் கிஸ்தி கட்டச் சொல்லுகிறதும், வாய்க்கு வழங்காத சொற்களெல் லாம் சொல்லி ஏசுகிறதும் உண்டு; அந்த உபத்திரவம் பொறுக்க மாட்டாமல் பயிரிடுகிறவர்களில் அநேகர் கையிருப்பு இல்லாமை யால் ஏர்க்குண்டை முதலானவைகளையும், வீட்டுத் தட்டுமுட்டு களையும், துணி முதலியவைகளையும் விற்றுக் கொடுத்துவிட்டுக் கொஞ்ச நாளில் ஏழைகளாய்விடுவார்கள். அவர்கள் தங்கள் வீடு முதலானவைகளை விற்றுக் கொடுக்கச் சம்மதியில்லாமல் சற்றே முன்பின் பார்ப்பார்களானால், அதிகார புருஷர்களே—தாங்கள் 'நிமிர்ந்து போட்டதென்ன, குனிந்தெடுத்தது என்ன?' அஃது ஒன்றுமில்லையே!—ஆதலால், மனம் கூசாமல் அந்த வீடு, வாசல் முதலானவைகளைத் தாராளமாய்த் தங்களுக்கு நேர்ந்தபடி ஏலம் போட்டுக் குடிஜனங்கள் கண்ணீர் விட்டு அழும்படி அவர்களைப் பரதேசிகள் ஆக்கிவிடுவார்கள். இதற்குத் திருஷ்டாந்தம் இத னடியில் காண்க:

ஒரு கிராமத்தில் பத்தேர்ச் சமுசாரி ஒருவன் தீர்வைப் பணம் கட்ட வழியில்லாமல், தன் காணி பூமி முதலாகிய ஆஸ்திகளை எல்லாம் தோற்று, உடுக்க வஸ்திரமும் இல்லாமல், பரதேசம் போய் விடலாம் என்று நினைத்திருக்கையில், 'பனை ஏறி விழுந்தவனைக் கடா ஏறித் துவைத்தது' போல, பழமுதல் பாக்கிக்காகச் சர்க்கார் சேவகர் வருகிற செய்தி அறிந்து அவர்களுக்கு என்ன உத்தரவு சொல்லுகிறதென்று ஏக்கமுற்று, 'சட்டி சுட்டது கை விட்டது' என்பது போல, அதுவே வியாஜமாகப் பெண்சாதி பிள்ளை முதலான குடும்பத்தை எல்லாம் துறந்து, கோவணாண்டியாய் வெளிப்பட்டு வருகையில், நடுவழியில் வேறொரு சேவகனைக் கண்டு, 'காலைச் சுற்றின பாம்பு கடியாமல் போகாது' என்பதாக, 'இந்தச் சனியன் இங்கும் தொடர்ந்து வந்ததே! இனி எப்படி?' என்று நடுநடுங்கி ஜைன கோயில் ஒன்றில் போய் ஒளித்தான். ஒளித்தவன் அந்தக் கோயிலில் நிர்வாணமாயிருந்த ஆள் மட்டமான ஜைன விக்கிர கத்தைப் பார்த்துத் தன்னைப் போலப் பயிரிட்டுக் கெட்டவன் என்று

நினைத்துக்கொண்டு, 'ஐயோ! நான் பத்தேர் வைத்துக் கெட்டுக் கோவணத்தோடாவது தப்பி வந்தேன், அப்பா, நீ எத்தனை ஏர் வைத்துக் கெட்டையோ! உனக்கு இந்தக் கோவணமும் இல்லாமல் போய்விட்டதே!' என்று, அதைக் கட்டிக்கொண்டு அழுதான் என்பதே.

சில கிராமங்களில் ஏரிகளிருந்தும், 'பேர் கங்கா பவானி, தாகத் திற்குத் தண்ணீர் கிடையாது' என்பது போல, அவைகளுக்குத் தண்ணீர் வருவதற்கு இடமில்லாமல் புனற்குளமாய் இருப்பதனாலும்; சில கிராமங்களில் உள்ளவைகளோ அதிக நீர்கொள்ளாத சிற்றேரிகள் ஆகையினாலும், 'அம்மையார் நூற்ற நூலுக்கும் பையன் அரைஞாண் கயிற்றுக்கும் சரி' என்பதாக, முதற்போகத்துக்கே அன்றி, இரண்டாம் போகம் மூன்றும் போகம் பயிரிடுவதற்கு ஏதுவில்லாமல் இருக்கிறது. அந்த முதற்போகத்திலும் அறுபது நாள், எழுபது நாள் மூன்றும் மாதம் வீனையும் சொற்பப் பயிருக்குத் தான் உதவியாகும். ஆறு மாதம், பத்து மாதம், ஒரு வருஷத்தில் வீனையும் பயிருக்கு எவ்வளவும் உபயோகமாகாது.

"கோளாற்றக் கொள்ளாக் குளத்தின்கீழ்ப் பைங்கூழ்போல்."

என்றும் சொல்லப்படுகின்றதே!

சில இடங்களில், 'ஏரு மடைக்கு நீர் பாய்ச்சுகிறது' என்கிற பழமொழிக்கு இசையப் பள்ள மடையிலிருந்து மேட்டு நிலத்திற்குப் பாய்ச்ச வேண்டி ஏரி நீரையே அல்லாமல் குளத்து நீர் கிணற்று நீரையும் கவலை போட்டும் ஏற்றம் போட்டும், மார்பில் இரத்தம் விழ இடுப்பொடியக் கை சலிக்க இறைத்து வருத்தப்படுகிறார்கள். இது வரவு கொஞ்சமும் வலிப்பு அதிகமுமாய் இருக்கிறது.

அன்றியும், குடிகளுக்குள் அவரவர் தங்கள் தங்கள் கழனிகளுக்கு ஏரித் தண்ணீரை மடை வழியே மாற்றிக் கொண்டுபோய்ப் பாய்ச்சுதற்காக, இராத்திரியில் நஞ்சோடு நஞ்சு கலக்கின்ற நடுச் சாமத்தில் விஷ ஜந்துவாகிய பாம்பு கடித்தாலும், துஷ்ட மிருகமாகிய புலி அடித்தாலும் ஏனென்று கேட்பாரில்லாமல், தனியே போய், நித்திரையும் இழந்து வருத்தப்படுகிறதும் அல்லாமல், இந்த விஷயத்தில் ஒருவருக்கொருவர் மாளாத பகை கொண்டு, பிராண சேதமாகிறதையும் பாராமல் பெருஞ்சண்டையிட்டு மண்டையை உடைத்துக்கொண்டு மாண்டு போகிறது உண்டு. இது, காணி லாபம் கோடி நஷ்டமாய் இருக்கிறதே!

சில ஊர்களில் காணி பூமியில்லாத சுகவாசிகள் ஊர்க் காணியாட்சிக்காரராகிய மிராசுதாரருடைய நிலத்தில் பயிரிட்டுச் சர்க்கார் தீர்வையும் கிராமமேரையும் கொடுக்கிறதுண்டு. அப்படியானால் இவர்களுக்கு என்ன கிடைக்கும்? இது, பெருமைக்குப் பன்றி வளர்க்கிறதாக அல்லவோ முடியும்?

அநேக கிராமங்களில் பட்டி முதலானவைகளாலும் திருடர்களாலும் மாத்திரமல்லாமல், 'பத்துப் பெயர் மருத்துவச்சிகள் கூடிக்கொண்டு குழந்தையின் கையை ஒடித்தார்கள்' ஏன்பதாக, நிலத்தைத் தரவாரி செய்கிறவர்களாலும், நிலத்தரம் எற்படுத்துகிறவர்களாலும், அடங்கல் பார்க்கிறவர்களாலும், அஜிமாஷு செய்கிறவர்களாலும், தொகம் போடுகிறவர்களாலும் சில காலங்களில் அதிக நஷ்டம் வருகிறதுண்டு.

மூன் ஒரு காலத்தில் மதிப்பாளி ஒருவன் ஒரு கிராமத்தில் வந்து மதிப்புச் செய்யும்பொழுது, கிராமத்தான் மேல் விரோதத்தால், இந்த நிலம், 'ஆணகட்டும் தாள், வானமுட்டும் போர்' என்று மதித்த சமயத்தில், 'மாற்றைக் குறைத்தான் தட்டான், வாயிலே ஏய்த்தான் செட்டி' என்பது போல, அவனைக் கிராமத்தான் ஏய்க்க நினைத்து, மதிப்பாளிக்குத் தந்திரமாகத் தன் மோதிரக் கையைக் காட்டிச் சைகை பண்ணக் கண்டு, அவன் நமக்கு மோதிரம் கிடைக்கும் என்னும் பேராசை கொண்டு, முன்பு ஏற்றினதை, 'ஆறுகொண்டது பாதி, தூறுகொண்டது பாதி' என்று பின்பு இறக்கினதாகவும் சொல்லுகின்றார்களே! இது பெரு மோசமல்லவா? 'மோசம் நாசம் கம்பளி வேஷம்' என்று உலோகவதந்தியும் இருக்கின்றதே!

துரைத்தனத்தைச் சார்ந்த உத்தியோகஸ்தர் முதலானவர்கள் இப்படிப் பயிர் செய்பவர்களையே அல்ல, மற்றவர்களையும் மாச்சரியத்தினால் வஞ்சிக்கிறது அவர்களுக்குச் சுபாவ குணமாய் இருக்கிறது. அவர்கள் 'தாம் கெட்டாலும் பிறர்க்குக் கேடு நினைக்கலாகாது'* என்பதை அறியார்களோ?

கர்னாடக துரைத்தனத்தில் ஓர் ஆற்றிடத்தில் ஆயிரம் பொதி மாட்டு வர்த்தகர் வந்திறங்கி இருக்கையில், இரவிலே ஆற்றில் வெள்ளம் வந்து அங்கு இறங்கியிருந்த பொதிகளையும் மாடுகளையும் வர்த்தகர்களையும் அடித்துக்கொண்டு போக, விடிந்த பொழுது அவர்களில் தப்பிப் பிழைத்தவர்கள் விசனப்படுவதை, ஆற்றுக்கு அடுத்த கிராமத்தில் இருந்த கணக்கன் கண்டு, தனக்குப் பகையாளியாகிய குயவன் குடியைக் கெடுப்பதற்கு இதுதான் சமயம் என்று நினைத்து, வர்த்தகர்களை அந்தக் கிராமத்தாரிடத்தில் போய் முறையிட்டுக்கொள்ளச் சொல்லி, கிராமத்தார், 'இதற்கு நாங்கள் என்ன செய்கிறது?' என்றால், 'இந்த நஷ்டம் குயவன் கொடுக்கவேண்டியது. இவ்விஷயத்தை ஊர்க் கணக்கனைக் கேட்டால் தெரியவரும்' என்று வர்த்தகர் சொல்லும்படி செய்வித்து, கிராமத்தார் தன்னைக் கேட்கையில், 'அப்படித்தான் வழக்கம், கணக்கைப் பார்க்க வேண்டும்' என்று சொல்லி, வீட்டில் வந்து பின் வருகிறபடி ஓர் ஏட்டில் எழுதி, அது பழமையாகத் தோற்ற நெல்லுப் பானையில் வைத்து வேவித்து, அதை வெகுநாளைக்

* தான்கெடினும் தக்கார்கேடு எண்ணற்க." — நாலடியார்.

கணக்குக் கட்டின் நடுவிலே கோத்துக் கட்டிக் கட்டோடே எடுத்து வந்து கிராமத்தாருக்கு முன் அவிழ்த்து, அதற்குள் தேடி எடுப்பது போல அந்த ஏட்டை எடுத்து, 'காட்டெருமுட்டை பொறுக்கி, மட்கலம் சுட்ட புகைபோய் மேற்கே மேகம் கிளம்பி, மின்னிக் குமுறி மழை பொழிய, ஆற்றில் வெள்ளம் பெருகி அடித்துப் போன பலசரக்கை ஊரார் இழுப்பது வழக்கு, குயவன் இறுப்பது கணக்கு' என்று வாசித்துக் காட்ட, 'சரிதான்' என்று கிராமத்தார் ஒப்புக்கொண்டு, அந்த நஷ்டத்தை ஊர்க் குயவனைக் கொடுக்கச் சொல்லித் தீர்த்தார்கள். குயவன், 'ஐயையோ! தெய்வமே, இதுவும் தலைவிதியா!' என்று உப்புச் சட்டி வறுவோடும் விற்று வர்த்தகருக்குத் தொலைத்தான். இதுவே மேற்சொல்லப் பட்டதற்குத் தகுதியான சாதிருசம்.

'பூனைக்குக் கொண்டாட்டம், எலிக்குத் திண்டாட்டம்' என்பது போலத் தமக்குச் சௌக்கியமும் பிறருக்கு அசௌக்கியமு மாம் என்பதை யோசியாமல், சுஜாதி அபிமானமும் இல்லாமல், தாம் தாம் ஜீவனம் செய்யும் நிமித்தத்தையே பெரிதாக நினைத்து, கிரமமான இந்த இங்கிலீஷ் துரைத்தனத்திலும் நெறி தவறி, 'குலத்துக்கு ஈனம் கோடரிக் காம்பு' என்கிறபடி, இந்துக்களே கெடுக்கத் தலைப்படுகிறார்களே! இதைக் குறித்து இராஜாங்கத்தார் செவ்வையாய் ஆராய்ந்து அறிந்து அத்தவறு வாராமல் நடத்த வேண்டும் அல்லவோ? அவ்வாறு நடத்தாமல், 'நமக்கு என்ன?' என்று கண் சாடையாயிருந்தால், அந்தத் தோஷம்' ராஜாராஷ்ட்ர கிருதம் பாபம்' என்றவாறுக, மேற்படி இராஜாங்கத்தாரைத் தானே சாரும்? அவ்விதத் தோஷத்திற்குத் துரைத்தனத்தார் இடம் கொடாமல், குடித்தனத்திற்கு க்ஷேமம் உண்டாகும்படி செய்வார் களானால், தங்கள் துரைத்தனம் மேன்மேலும் அபிவிர்த்திக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

குலோத்துங்க சோழராஜனுக்கு மகுடாபிஷேகமான பொழுது வித்வஜனர்களெல்லாம் அவன்மேல் கவி பாடி அவனை வாழ்த்தி னார்கள். அத்தருணத்தில் ஔவை என்பவள் அவ்விடத்திற்கு வந்தாள். அவளை நோக்கி அங்குள்ள பெரியோர்கள், 'அம்மா, நீர் அரசனை வாழ்த்துதல் வேண்டும்' என்று பிரார்த்திக்க, அவள், 'வரப்பு உயர' என்று சொல்லிப் பேசாமலிருக்க, அவர்கள் அக் கருத்தறியாமல் அவள் வாழ்த்தவில்லை என்று எண்ணி, மறுபடியும் இருமுறை வினவ, அவள் முதன்முறை சொன்னபடி சொல்லி, 'நான் முக்காலும் வாழ்த்தியும் என்னை நீங்கள் ஏன் அலட்டுகிறீர்கள்?' என்று கேட்க, அவர்கள், 'எவ்விதமாக வாழ்த்தினீர்?' என்ன, 'வரப்புயர என்று வாழ்த்தினேனே நீங்கள் அறியவில்லையா?' என்ன, அவர்கள், 'அதன் தாற்பரியம் என்ன?' என்று உசாவ, ஔவை, 'வரப்புயர நீருயரும்; நீருயர நெல்லுயரும்; நெல்லுயரக் குடியுயரும்; குடியுயரக் கோலுயரும்; கோலுயரக் கோனுயர்வான் என வாழ்த்தியதாம்' என்றாள். இந்தச் சிறிய வாக்கியங்களிலும்,

'குடித்தனம் செழித்தால் துரைத்தனம் செழிக்கும்' என்பது விளங்குகின்றதே!

மழை பெய்து ஏரி நிறைந்தும், சற்றே அஜாக்கிரதையாய் இருந்தால், அது உடைபட்டு அதிலுள்ள நீரெல்லாம் வியர்த்த மாய்ப் போய்விடுவதும் அல்லாமல், 'செத்தும் கெடுத்தான் சீய புரத்துக் கிராமணி' என்பது போல, ஒரு நொடிப் பொழுதில் அடுத்த கிருக கிராமங்களையும் நாசமாக்கிவிடும். அதனால், கடல் அலையில் அகப்பட்ட சிறு துரும்பைப் போல, குடிகள் அங்குமிங்கு மாய் அவதிப்படுகையில், உடைந்த ஏரியைக்கம்புக்கழி,வைக்கோல், செத்தை முதலானவைகளைத் தீவிரமாய்த் தேடிக்கொண்டு போய் உடைபட்ட வாயில் மரக்கூச்சுகளை நாட்டி, வைக்கோலைத் திரணைதிரணையாகக் கட்டிக் குதிரைப் பாய்ச்சல் கொடுத்துத் தடுத்துக் கட்டுகிறதற்கு அக்குடி ஜனங்களே துரைத்தனச் சேவக ரால் அமிஞ்சி பிடிக்கப்படுகிறார்கள். இப்படி அவர்கள் படும் சங்கடம் ஒரு விதமல்ல.

தக்ஷிண தேசையில் பயிர் செய்பவனுகிய ஒரு வேளாளன் தன் வீட்டில் சினையாயிருந்த பசு, தலையீற்றுக் கன்று போடுவதற்கு அதிக பிரயாசத்துடன் கதற, அது கண்டு, அவன், 'ஐயோ! வாயில் லாத ஜீவனும் சாதுப் பிராணியுமாய் இருக்கிற பசு வருத்தப் படுகிறதே! என்ன செய்யலாம்!' என்று ஏங்கி நிற்கும் தருணத்தில், சோனுமாரியாக மழை பெய்ய, அதனால் அவனது இருப்பிடமாகிய வீடு அடியோடே நகர்ந்து இடிந்து விழ, அதை அவன் கட்டுகிற தற்கு வேண்டும் கருவிகளைச் சேகரிக்கும்படி நாலு திக்கிலும் பாவும் குழலும் போல அலைசல் படும் வேளையில், இடிமேல் இடி இடித்தது போல, அவன் மனையாள் பிரசவிக்கக் கூடாமல் சகித்தற்கரி தாகிய கர்ப்ப வேதனைப்பட, 'உகிர்ச்சுற்றின்மேல் அம்மி விழுந் தாற்போல' அது ஒரு பக்கத்தில் அவனை வெகுவாய் வாதிக்கிற சமயத்தில், அவனிடத்தில் படி வாங்கிக்கொண்டு சேவிக்கும் அடிமையாள் திடீரென்று இறந்து போக, 'இனி நமக்குப் பயிர் வேலை செய்கிறதற்கு வேறெருவரும் உதவியில்லையே!' என்று அவன் சிறகிழந்த பறவை போலத் திகைக்கும் பொழுது, அவ னுடைய உழுது பண்படுத்தப்பட்ட நிலம்வாடிப்போகிறது என்னும் எண்ணம் அவனுக்கு உதித்தமையால், அதில் விதைக்கும்படி எத்தனப்படுத்தி வைத்த தானிய விதைகளை அவசரமாய் எடுத்துக் கொண்டு ஓட, அவன் ஓடுகிற வழியில் பாம்பு குறுக்கிட்டது போல, அவனுக்குப் பூர்வம் கடன் கொடுத்திருந்த கடன்காரர்கள், 'எங்க ளிடத்தில் நீ பட்ட கடனைச் செலுத்தினால் அல்லது போகக்கூடாது' என்று ஆணையிட்டு மறிக்க,

" விடன்கொண்ட மீனைப் போலும்
வெந்தழல் மெழுகு போலும்
படம்கொண்ட பாந்தள் வாயில்
பற்றிய தேரை போலும்

திடம்கொண்ட ராம பாணம்
செருக்களத் துற்ற போழ்து
கடன்கொண்டார் நெஞ்சம் போலக்
கலங்கினன் இலங்கை வேந்தன்.''

என்ற வண்ணமாக அவன் சித்தம் கலங்குகையில், 'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்பதற்கு ஏற்கத் துரைத்தனத்தாருடைய தண்டல் சேவகர்கள் வந்து, உழுது பயிரிட்டு அனுபவித்தற்காகச் சேர வேண்டிய இறைப் பொருளைக் கட்டச் சொல்லி உபத்திரவப்படுத்த, அவன், 'இதற்கென்ன உத்தரம் சொல்லுகிறது!' என்று ஒன்றும் தோன்றுமல் ஆந்தைபோல விழிக்குமளவில், அவனுடைய ஆசாரியர் வந்து தமக்குக் குருதட்சிணை கொடுக்க வேண்டும் என்று கேட்க, 'இதேது, தர்மசங்கடமாய் இருக்கிறது! கொடாவிட்டால் அபசாரத்திற்கு இடமாகிறதே!' என்று அவன் பித்துக் கொண்டவன் போல எண்ணுதலும் எண்ணுகையில், வித்வஜனர்கள் அவன்மேல் கவி பாடி வந்து தியாகம் தரச் சொல்லிப் பீடிக்க, 'வித்துவான்கள் ஆகையால், இவர்கள் மனம் நோகும்படி செய்யக்கூடாதே!' என்று பலவிதத்திலும் இடர்ப்பட்டு அவன், இருதலைக்கொள்ளிக்கு நடுவே அகப்பட்ட எறும்பைப் போல முன்னும் போகாமல் பின்னும் போகாமல் தடுமாறித் தத்தளித்தான். அப்பொழுது அந்த நிர்ப்பாக்கியன் பட்ட சங்கடத்தை எல்லாம் மேற்சொல்லிய புலவர்களில் ஒருவர் :

" ஆவீன, மழைபொழிய, இல்லம் வீழ,
அகமுடையாள் மெய்நோவ, அடிமை சாவ,
மாவீரம் போகுதென்று விதைகொண்டு ஓட,
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ள,
கோவேந்தா உழுதுண்ட கடமை கேட்க,
குருக்கள்வந்து தட்சிணைக்குக் குறுக்கே நிற்க,
பாவாணர் கவிபாடிப் பரிசு கேட்கப்
பாவிமகன் படுத்துயரம் பார்க்கொ ணுதே !''

என்று ஒரு பாடலாகப் பாடினர்.

உழுதொழிலைச் செய்வதற்கு வேண்டிய கருவிகள் எல்லாம் அழியாத வச்சிரத்தினாலே செய்யப்பட்டு இருக்கின்றனவா? காட்டிலுள்ள செத்த மரங்களினாலும், துருப் பிடிக்கும் இரும்பினாலும் செய்யப்பட்டவைகள்தாமே? ஆதலால், அடிக்கடி காறுகள் தேய்ந்துபோம்; கலப்பைகள் முறிந்துபோம்; ஏரிலே கட்டப்படும் எருதுகள் கோமாரி மார்படைப்பான் கண்டு திடீரென்று செத்துப் போம்; அல்லது, கிழமாய்ப் போம். வேலையாட்களுக்கு வியாதி சம்பவிக்கும். அக்காரணங்களால் உழவுக்குத் தடையுண்டாம். அந்தச் சமயத்தில் வேறே கலப்பைகள், காறுகள், எருதுகள்,

ஆட்கள் ஆகிய இவைகளையும் நூதனமாகச் சம்பாதிக்க வேண்டி வரும். அவைகளைக் குறித்து அதிகப் பணம் செலவாகிறதும், சொல்லக் கூடாத கஷ்டம் நேரிடுகிறதும் உண்டு. இந்தச் செல வெல்லாம் எவ்விதத்தில் கட்டி வரும் ?

இவ்வகைச் செலவுக்கும் சர்க்கார் தீர்வைக்கும் பணம் அவசர மாய் வேண்டி இருக்கிறதே ; அதற்காகக் கூட்டிலும் குதிரிலும் சேர்த்து வைத்த உசிதமான பழைய நெல் முதலியவைகளைத் தக்கபடியன்றி, எட்டு மரக்காலுக்குப் பத்து மரக்காலும், பத்து மரக்காலுக்குப் பன்னிரண்டு மரக்காலுமாக நேர்ந்தவாறு விற்றுக் கொடுத்துவிட்டு,தாங்கள் அநுசிதமானவரகு சோளம்முதலானவை களைச்சமைத்துப் புசித்தும், கம்பு கேழ்வரகுகளைக் காய்ச்சிக் குடித் தும், அவைகளுக்கும் வழியில்லாமல் வடித்த கஞ்சி புளித்த காடி தவிடு பிண்ணுக்குகளிஞல் வயிற்றை நிரப்பியும் உடம்பு வளர்த்து வர, அவை சரீரத்திற்கு ஏற்றுக்கொள்ளாமல், ஜுரம், குளிர், தலை நோய், வயிற்று நோய், காற்பிடிப்பு, கைப்பிடிப்பு, பித்தம், வாயு, மந்தம், வாந்தி, பேதி உண்டாகி அவஸ்தைப் படும்பொழுது, 'பால ஜோசியம், விருத்த வைத்தியம் ' என்பதற்கேற்கச் சாஸ்திர மாத் திரம் அன்றிக் கைம்முறைகளிலும் நெடுநாட்பழகித் தாது முதலிய அஷ்ட பரீக்ஷையும் தெரிந்து, நல்ல நிர்வாகத்தோடே, ' ஆயிரம் காக்கைக்கு ஒரு கல் ' எறிவதுபோல, பல பிணிக்கும் ஒரு மருந்தே கொடுத்துச் சீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தி, பெரிய பெயர் பெற்ற மகாசமர்த்தனன பிரபல வைத்தியன் இந்த எளியவர்களுக்கு எங்கே கிடைக்கப் போகிறன் ? அந்நேரத்தில் கண்ணிற்கு எதிர்ப்பட்ட கற்றுக்குட்டியை அழைப்பித்து அவனிடத்தில் கையைக் காட்ட, அவன் பார்த்து, 'அம்மம்ம! இது பொல்லாத அசாத்திய வியாதி! இதற்குத் தகுதியான பரமௌஷதப் பிரயோகம் பண்ணவேண்டும்' என்று பையிலிருந்து வீரம் பூரம் ரசபாஷாணங்களை எடுத்து, ' இது நாராயணஸ்திரம், இது பிரமாஸ்திரம், இது பாசுபதாஸ் திரம், இது வச்சிரகண்டன குடாரம் , இது பைரவி, இது சிந்தாமணி, இது அமிர்த சஞ்சீவி ' என்று பெயர்களை மாத்திரம் பிரமாண்டமாகச் சொல்லி, கைகொண்ட மட்டும் இழைத்து, மொத்தை மொத்தையாக வழித்து, ' நாசேத்தி மாத்ரா-வைகுண்ட யாத்ரா ' என்பதாகக் கூசாமல் கொடுத்து, சாந்தி பண்ணத் தெரியாமல் உபத்திரவத்தை அதிகப்படுத்திவிட, அப்படியும் சங்கடப்படுவார்கள். அது நிற்க.

முற்காலத்தில் சேரன், சோழன், பாண்டியன் முதலான இந்துக்களில் ஆளுகை செய்த அரசர்களெல்லாம், புஷ்பமானது வாடாமல் அதிலுள்ள தேனை வண்டு மிருதுவாகக் கிரகிப்பது போல, குடிகளுக்கு வருத்தமில்லாமல் அவர்களிடத்தில் ஆறில் ஒரு கடமை வாங்கி வந்தார்கள் என்பது லோகப்பிரசித்தமாய் இருக்கின்றது. ' ஆறில் ஒன்று ' என்பதன் விவரம் என்னவெனில்,

பயிரிடப்பட்டு விளைந்த தானிய மொத்தத்தை ஆறு பங்காகப் பகுத்து, அவைகளில்,

> "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றுங்
> கைம்புலத்தார் ஓம்பல் தலை."

என்றபடி, பிதிரர்க்கு ஒன்றும், தேவர்க்கு ஒன்றும், விருந்தினருக்கு ஒன்றும், சுற்றத்தாருக்கு ஒன்றும், இல்வாழ்வானுக்கு ஒன்றுமாகப் பிரித்து, ஐந்து பங்கைக் குடிகளுக்குக் கொடுத்துவிட்டு, ஒரு பங்கை அரசர்கள் தமக்குச் சேரவேண்டிய கடமைக்காக எடுத்துக்கொள் கிறதே ; இது எவ்வளவு சகாயம்.

இக்காலத்திலோ, அப்படியில்லை. ஆயினும், 'காக்கையின் கழுத்தில் பனங்காயைக் கட்டினது போலக்' குடிகள் பரிக்கக் கூடாமல் அவர்கள்மேல் ஏற்றப்பட்ட அதிக பாரத்தை மனம் இரங்கி ஒருவாறுகச் சுலபப்படுத்துவது துரைத்தனத்தாருக்கு அவசியமான கடமைதான்.

இலங்கைத் தீவின் துரைத்தனத்தார் பத்தில் ஒரு கடமை வாங்கி வருகிறார்களே, அது இரகசியமானதா? யாவரும் அறியத் தக்கதாய்த்தானே இருக்கிறது? இப்படி ஓர் அரசாட்சியிலேயே ஓரிடத்தில் ஒரு விதமும், மற்றோரிடத்தில் மற்றொரு விதமுமாய் நடந்துவருகிறதே, இதென்ன! ஒன்றை இடுக்கிக்கொண்டு ஒன்றை நடத்திக்கொண்டு போவதாய் இருக்கிறதல்லவோ? இது தர்மமா? தாய்க்குப் பிள்ளைகளிடத்தில் பக்ஷபாதம் உண்டா? அவள் தான் பெற்ற பிள்ளைகளை எல்லாம் ஒரு சீராய் நடத்த வேண்டும் அல்லவோ?

இந்தப் பிரதேசத்தில் கோதாவிரி முதலிய ஆறுகளில் பிரபல மான அணைக்கட்டுகளையும், பலவிடங்களில் பெரிய சிறிய அள விறந்த வாராவதிகளையும் மழை பெய்கின்ற நீரெல்லாம் பாழ்க்கு இறைத்தது போல வீணுய்ப் போகாமல், 'பாழாய்ப் போகிறது பசுவின் வாயிலே' என்பதாக, ஆற்றின் வழியே கால்களினுல் ஓடி அந்தந்தக் கிராமங்களுக்குப் போய்ப் பாய்ந்து பயன்படும்படி எண்ணத் தொலையாத கிளைக் கால்வாய்களையும், சீக்கிரத்தில் நீணைத்தவிடத்தில் சேர்க்கிறதற்கு இருப்புப் பாதைகளையும், தூரதேச சமாசாரங்களை எளிதில் அறிகிறதற்கு ஆச்சரியமான மின்தபால் கம்பிகளையும், வண்டி மாடு குதிரை மனிதர்கள் போக்கு வரவு செய்வதற்கு விசாலமும் நெடுமையுமாய் இருக்கிற பற்பல சாலைகளையும் உண்டாக்கி, அனேக ஜில்லாக்கள் தாலுக்காக்களில் தமிழ் தெலுங்கு முதலாகிய சுதேச பாஷைகளும், இங்கிலீஷ் பாஷையும், நானுஜாதிப் பிள்ளைகளும் படிக்கும்படி பாடசாலை களையும், அவரவர்களுக்கு வரும் வியாதிகளை மருந்து கொடுத்து நிவர்த்தி செய்து சொஸ்தப்படுத்தும்படி அங்கே வைத்திய சாலை

களையும் ஸ்தாபித்து, அப்பாடசாலைகளில் பல நூற்பயிற்சியுள்ள நிபுணர்களாகிய உபாத்தியாயர்களையும், வைத்திய சாலைகளில் தன்வந்திரிபோல மிகவும் திறமான வைத்தியர்களையும் ஏற்படுத்தி வைத்து, மோரீசு முதலாகிய தீவுகளுக்குப் போய் வருகிற கூலி ஜனங்கள் அவ்விடங்களில் தமக்கு ஏற்ற உதவிகளையும், மற்றும் தமது கோலின்கீழ் வாழ்வார் எல்லோரும் எவ்விதமான நன்மை களையும் பெறும்பொருட்டுப் பொருளைப் பொருள் செய்யாமல் மிதமறச் செலவு பண்ணி, அதற்கு வேண்டிய முயற்சிகளைத் தாமதமில்லாமல் செய்து வருகிறதும் அல்லாமல், சிலர் சொல்லு கிறபடி, இனி அங்குள்ள ஜில்லாவின் தாலுக்காக்களைத் தொகையில் குறைத்துச் சிரெஸ்ததார் தாசில்தார் முதலானவர்களுக்குச் சம்ப ளத்தை அதிகப்படுத்தி, எங்கும் ஒரே சீராகப் பிரஜைகளுக்கு அதிக சௌக்கியத்தை உண்டு பண்ணக் கருத்துக் கொண்டும் இருக்கிற தருமதுரைகளாகிய மாட்சிமைதங்கிய கவர்ன்மெண்டார் அல்லும் பகலும் ஓய்வில்லாமல் புருஷன், பெண்ஜாதி, புத்திரன், புத்திரிகள் முதலாகக் குடும்பத்திலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர், அனைவரும், படியாள் முதலிய வேலைக்காரர்களோடும், பள்ளத் திலும் மேட்டிலும், சேற்றிலும், தண்ணீரிலும், மழையிலும், வெயிலிலும், பனியிலும், குளிரிலும் மாறுமல் சரீரம் வருந்த உழைத்துப் பாடு பட்டும் செம்மையாய்ப் பலன் அனுபவிக்கப் பெறுமல்,

“ கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித் தானு ?
இல்லைத்தான் பசியாமல் இருக்கத்தான்
பதுமத்தான் எழுதி னானு ?
பல்லைத்தான் விரித்திரந்தால் நெல்லைத்தான்
வரகைத்தான் பரிந்தார் ஈவார் ?
முல்லைத்தாண் டவராய கங்கைகுலம்
வளங்கவந்த முதன்மை யோனே !”

என்ற வண்ணமாக, உதரநிமித்தத்தினால் மிகவும் துக்கிக்கின்ற மேற்படி எளிய குடிஜனங்களை, ‘நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்குப் புல்லுச் சுமை சுமப்பது போகாது’ என்பதாக நினைத் துப் பராமுகமாய்க் கைவிட்டிராமல், அன்பு கூர்ந்து தயையுடனே விசாரணை செய்து, இவர்களும் மற்றவர்களைப் போலச் சுகமாய் ஜீவனம் பண்ணும்படி இப்பொழுது தாங்கள் செய்து வருகிறவை களுடனே இன்னும் ஏதாவது சிறிது சகாயமுண்டாகச் செய்தால், சகலத்திலும் பிரதானமான லோகோபகாரமாய் இருக்கும் என்பதே.

["சிறியோ ரெல்லாம் சிறியரும் அல்லர்
பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்"



வித்வாஜன கோலாகலன் எல்லாம் கற்றவன்; ஆனல், கல்விக்கேற்ற அடக்கம் இல்லாதவன்; ஆண வத்தின் சிகரம் ஆனவன்; தற் பெருமையின் தனிப்பிறவி; வயதில் பெரியவன். யாமுனரியரோ வயதில் இளையவர்; மாணவப் பருவத்தினர்; தம் நுட்பமதியால் மூன்று கேள்வி களை விடுத்து வித்வஜன கோலா கலனது கொட்டத்தை அடக்கு கிறார். இடையிடையே இனிய பழ மொழிகள் பல பின்னிக் கிடக்கும் இக்கதை படிக்கப் படிக்கப் பரவசப் படுத்தும்.

— பதிப்பாசிரியர்]

5

மகாபண்டிதனைச் சிறுபிள்ளை வென்றது

பூமாதேவியின் முகதிலகம் போன்ற செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் ராஜதானியாகிய மதுரை மாநகரத்தில் எழுநூறு வருஷத்திற்கு முன்பு அரசாண்ட பாண்டிய குலத்தரசன் ஒருவ னுடைய சம்ஸ்தானத்தில் **வித்வஜன கோலாகலன்** என்று எண் டிசையிலும் பிரசித்தமாகப் பெயர்பெற்ற சம்ஸ்தான வித்துவான் ஒருவன் இருந்தான். அவன் தர்க்கம், வியாகரணம், மீமாஞ்சை, தர்ம சாஸ்திரம் என்கிற நான்கிலும் பூரண பாண்டித்தியம் உள்ளவன். மற்ற வித்வஜனர்கள் யாவரும் அவனைக் காணு மிடத்தில் கருடனைக் கண்ட பாம்பு போலவும், யமனைக் கண்ட உயிர் போலவும் நடுங்குவார்கள். அவன் அத்தன்மையாகிய வித்தியா சாமர்த்தியம் உடையவனுதலால், பாண்டியன் அவனைச் சன்மானித்துத் தன்னருகில் அதிக கௌரவமாக வைத்துச் சம்ரக்ஷணை செய்து வந்தான்; அவ்வித்வான் தனக்கு உண்டான வித்யா கர்வத்தினுலும், 'கொண்டவன் பலமிருந்தால் குப்பை ஏறிச் சண்டை செய்யலாம்,' என்பதற்கிசைய, அரசன் தன்மேல் வைத்த தயையினுலும் ஒருவரையும் மதிக்கிறதே இல்லை. பச்சோந்தி

யைக் கண்டு பயந்து மயில் தன் கண்ணே அதனிடத்தில் கொண்டு போய்க் கொடுப்பது போல, பல தேசங்களிலும் இருக்கின்ற கவிஜனர்களெல்லாம் அவனுக்கு அஞ்சி வருஷாந்தரம் கப்பம் கொடுத்து வந்தார்கள். கையில் ஏடும் எழுத்தாணியும் எடுத்தவர் களிடத்திலெல்லாம் அவன் கப்பம் வாங்கி வருகையில் **ஸ்ரீவைஷ்ணவ சமயாசாரியர்களுக்குள் மகிமை தங்கிய யமுனைத் துறைவர்** என்றும், **யாமுனாசாரியர்** என்றும், **ஸ்ரீ ஆளவந்தார்** என்றும் திருநாமமுடைய அவதார புருஷரொருவர், ஏறக்குறையப் பத்துப் பன்னிரண்டு வயதுள்ள சிறு பிள்ளையாய்ப் **பாஷியாசாரியர்** என்னும் உபாத்தியாயருடைய பள்ளிக்கூடத்தில் வாசித்துக்கொண்டிருந் தார். ஒரு நாள் காலையில் ஏழெட்டு நாழிகைக்கு அப்பள்ளிக் கூடத்தில் இப்பிள்ளையைக் காவலாக வைத்துவிட்டு, மற்றப் பிள்ளைகளும் உபாத்தியாயரும் போஜனத்திற்குப் போயிருந் தார்கள். அத்தருணத்தில் அந்த உபாத்தியாயர் நாலைந்து வருஷத்துக்கு வரி கொடுக்கவில்லை என்று அதைக் கேட்டு வாங்கிவர **வித்வஜன கோலாகலன்** அனுப்பிய தண்டற்காரன் வந்து, 'உபாத்தியாயர் எங்கே போனார்?' என்று கேட்க, காவலாயிருந்த **யமுனைத்துறைவர்**, 'எங்கள் உபாத்தியாயரைத் தேடுகிற விதம் என்ன?' என்று கேட்டார். அச்சேவகன், 'வித்வஜனகோலாகலர் என்னும் எங்கள் வித்வசிரோமணி உங்கள் உபாத்தியாயரிடத்தில் கப்பம் வாங்கிவரச் சொன்னார்; அது நிமித்தம் அவரைத் தேடு கிறேன்,' என்ன, யாமுனாசாரியர், 'வரி வாங்குவது எதுக்காக?' என்ன, அவன், 'எங்கள் வித்வான் சகல பண்டிதர்களுக்கும் சிரேஷ்டராகையால், அவருக்கு ஏடும் எழுத்தாணியும் பிடிக்கிறவர் களெல்லாம் கொடுக்கிறது வழக்கந்தான்,' என்றான். அதைக் கேட்டு யமுனைத்துறைவர், 'இதென்ன வழக்கம்? நியாயவிரோத மாய் இருக்கின்றதே! 'பிடித்தவருக்கெல்லாம் பெண்டு போல' உலகாள்பவருக்கும் வரி கொடுக்கிறது, இவனுக்கும் வரி கொடுக் கிறதா? நன்றாய் இருக்கிறது!' என்று அதிசயித்து, 'வரி கொடுக் கிறது இல்லை எனப் போய்ச் சொல்,' என்றார். அச்சமயத்தில் உபாத்தியாயர் வந்து, அதை அறிந்து, 'சிங்க சொப்பனம் கண்ட யானையைப் போல'க் கைகால் விலவிலக்க, 'குடி முழுகிப் போயிற்றே! சுபாவத்திலேயே அவன் கொடியவன்; அப்படியிருக்க, இதைக் கேட்டால் அவன் சும்மா விடுவானே? 'வெறுவாய் மெல்லுகிற அம்மையாருக்கு ஒரு வாய் அவல் அகப்பட்டது போலுமல்லவா? என்னை வாதுக்கு அழைப்பானே! அந்த யமகண்டனை ஆர் வெல்லுகிறது!' என்று பயந்தார். யாமுனாசாரியர், 'தேவரீர் அதைப் பற்றிக் கண் கலக்கம் கொள்ள வேண்டுவதில்லை; வெந்நீரில் வீடு வேகுமா? இருப்புத் தூணைச் செல்லரிக்குமா? அப்படியே வருமானால் நீரொன்றும் சிந்தியாமல் அடியேனை ஏவி னால், நான் போய் உமது கடாக்ஷத்தினால் ஜெயிக்கிறேன்,' என்று விண்ணப்பம் செய்தார். இவர் எத்தனை விதத்தில் சொன்னாலும்

அவைகளை உபாத்தியாயர், 'கண்ணைப் பிடுங்கி முன்னே எறிந்தும் கண்கட்டு வித்தை' என்பார் போல, நம்பவில்லை.

இப்படி வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கையில், அந்த ஆள் போய் இங்கே நிகழ்ந்தனவெல்லாம் சொல்ல, அவ்வித்வான், 'கொட்டினுல் தேளும் கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சியுமா?' என்று கோபித்துக்கொண்டு, அந்தச் செய்தியை அரசனுக்கு அறிவித்து, அவனுடைய அனுமதிப்படி வாதுக்கு வரச் சொன்னுன். அது கேட்டு உபாத்தியாயர் மனம் கலங்கி, 'ஐயையோ! யாமுனரியா, நீ என் தலைமேலே கல்லைப் போட்டாயே! இனி நானெப்படித் தலை எடுப்பது?' என்று துக்கித்தார். யமுனைத் துறைவர் அவருக்கு நிர்ப்பயமாகும்படி தைரியம் சொல்லிச் சேவகனைப் பார்த்து, 'வாது செய்கிறதற்கு உங்கள் வித்வானை இங்கே வரச் சொல்; அல்லவென்று நம்மை அவ்விடத்திற்கு அழைப்பிக்கிறதானுல், மரியாதைப்படி நடந்துகொள்ளச் சொல்,' என்றார். உடனே சத்திரசாமரம் முதலிய பரிவட்டனைகளோடு பல்லக்கு வர, அதன்மேலேறிச் சென்று மதுரையின் ராஜவீதியில் பிரவேசிக்கும் போது, உப்பரிகை மேல் உலாவிக்கொண்டிருந்த பாண்டியராஜன் கண்டு, மிகவும் ஆச்சரியம் கொண்டு, கைகொட்டிச் சிரித்தான். அவனருகிலிருந்த இராணியானவள், 'மகா பிரபு, நீர் நகைக்கின்ற காரணமென்ன?' என்றாள். மகாராஜன், 'பெண்ணே, இதோ பார், வீதியில் பல்லக்கில் வருகிற இந்தக் குழந்தை நமது வித்வஜன கோலாகலனுடனே வாது செய்ய வருகிறதாம்!' என்றான். இராஜ பத்தினி அக்குழந்தையின் திருமுக தேஜஸை நன்றாய் உற்றுப் பார்த்து, மகிழ்ச்சி கூர்ந்து, 'இவர் வாது செய்வதன்றி, நமது வித்வானையும் அவருக்கு மேலானவர் களையும் ஜெயிப்பதும் அருமையல்ல,' என்றாள். அரசனுக்கு அந்தச் சொல், 'புண்ணிலே கோலிட்டது போல' வருத்தத்தை விளக்க, அவன், 'போபோ! நீயென்ன பேதையாய் இருக்கிறாய்! நமது வித்வானுக்கு மேலானவர்களும் உண்டென்று சொல்வது, 'பெட்டைக் குதிரைக்கு இரட்டைக் கொம்பு முளைத்தது' என்பது போல் இருக்கிறது. இச்சிறுபிள்ளையும் அவரை வெல்லுமா? 'காலில்லாத முடவனும் கடலைத் தாண்டுவானு?' 'மண் பூனையும் எலியைப் பிடிக்குமா?' இது சொப்பனந்தான்,' என்றான். இராஜமஹிஷி, 'வித்வான் தோற்பது நிச்சயமே; அது இவர் முகக் குறியால் எனக்கு உள்ளங்கைப் பொருள் போல விளங்குகின்றது; சந்தேகமில்லை,' என்றாள். இவ்வாறு இருவரும் சம்பாஷிக்கையில் அரசன், 'நீ இந்தப் பிள்ளையை எவ்வளவு சிறப்பித்துச் சொன்னலும், நான் நம்ப மாட்டேன்; 'விரல் உரலானுல், உரல் எப்படியாக மாட்டாது?' நமது வித்வானே ஜெயிப்பார். இவர் ஆரம்பத்திலேயே தோற்பார். தோற்றுல், நீ என்ன செய்வாய்?' என, இராக்கினி, 'மெய்யாய் இவர் தோற்றுரானுல், நான் உமது தாசிக்குத் தாதியாகி, அவளிட்ட வேலை செய்வேன்!' என்றாள்.

வேந்தன், 'பைத்தியக்காரி, 'மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவார் போல' யோசியாமல் பேசுகிறாய்; உன் சொற்படியே இவர் ஜயித்தால், நான் இவருக்கு எனது ராச்சியத்தில் பாதி பகிர்ந்து கொடுப்பேன்,' என்றான்.

பின்பு, யமுனைத்துறைவர் அவ்வரசன் சமுகத்தில் வந்தார். அப்பொழுது அங்கு வந்த வித்வஜன கோலாகலன் அவர் வடிவைப் பார்த்து வயதைக் குறித்துக் குலுங்க நகைத்து, 'நெடிய மகாமேரு வுடனே அற்பமாகிய ஒரு திரணமானது எதிர்ப்பது போல, சுண்டு விரலத்தனை சிறுபையல் நம்முடனே வாது செய்ய வந்தானே!' என்று அலக்ஷியம் பண்ணி, மிகவும் கர்வத்தோடே அவரை நோக்கி, 'ஓய் சிறு பிள்ளாய், ஹரிச்சுவடி வாசித்தாயா? உனக்கு எழுத்துக் கூட்டத் தெரியுமா? உன் பெயரைப் பிழை இல்லாமல் எழுதுவையா? ஒரு பூனைக் குட்டியானது வேங்கைப் புலியை வெல்ல வருவது போல, கவிச் சிங்கமாகிய நம்முடன் வாதுக்கு வந்தவன் நீதானு?' என்றான். யாமுனரியர், இவன் ஆரம்ப சூரத்தனமாய்ப் பேசுகிறானென்று புன்னகை புரிந்து, 'நீர் பெரியவராயும் நாம் சிறு பிள்ளையாயும் இருப்பதைப் பற்றி நம்மை அவமதிக்கிறீர். யானை எத்தனை பெரிது! அதைக் கண்ட உடனே உக்கிரம் கொண்டு விசையாய் எழும்பிப் பாய்ந்து அதன் மஸ்தகத்தைப் பிளக்கின்ற சிங்கக்குட்டி எத்தனை சிறிது! மகா பிரமாண்டமானதாய் இருந்தும் அதை ஒரு விரலளவான சிற்றுளி சக்கை சக்கையாகப் பெயர்த்து எறியவில்லையா? அறுகம்புல் நுனியில் தங்கி நிற்கின்ற தினையள வாகிய பனித்துளி பெரிய பனையளவையும் தனக்குள் அடக்கிக் காட்டவில்லையா? ஒரு பயறளவாகிய நெருப்புப் பொறியும் அல்லவோ ஆகாசமளாவிய வைக்கோற்போரைச் சுட்டெரிக்கின்றது! சிறிய மீன் சினையிலும் அதிநுட்பமாகிய வித்திலிருந்து வெகுதூரமட்டும் கிளைத்து நன்றாய்த் தழைத்து ஓங்கி மேலெழுந்து வளர்ந்து, பூமியின் கீழ் இரண்டு மூன்று புருஷபாகம் வேர்வீழ்த்து, அடர விழுது விட்டு, மட்டற்ற யானை சேனைகளோடு அரசர்களுக்கு இருக்க நிழல் கொடுக்கின்ற ஆலவிருக்ஷம் உற்பத்தியாகின்றதே! பெருந்தாழி நிறையப் பூரிக்கப்பட்ட பாலத் துளி மோர்ப் பிரையானது தயிராய்ப் பரிணமிக்கப் பண்ணுகின்றதே! உலகமெங்கும் வியாபிக்கின்ற சூரியனை ஒரு கைக்குடையும் அல்லவோ மறைக்கின்றது! இருபத்தொரு நிலைக் கோபுரம் போல உயர்ந்த தேரை நடத்துவது இறையத்தனை அச்சாணி அல்லவா? அன்றியும், அங்குஷ்ட பிரமாண தேகத்தையுடைய அகஸ்திய முனிவர் அண்டத்தை முட்டிய விந்திய பர்வதத்தை அடக்கி, மகா சமுத்திரத்தையும் உட்கொள்ளவில்லையா? இவைகளை எல்லாம் ஆலோசியாமல், இன்னவர் என்றும் முதியவர் என்றும் விவரித்துக்கொண்டு வீண் காலம் போக்குவானேன்? எடுத்த காரியத்தை நடத்தத் துணிவதே யுக்தம்,' என்றார். வித்வான் அப்பொழுதும் இறுமாப்படங்காமல், அவரைக் கிள்ளுக்கீரையாக நினைத்து, முட்டைப்

பணியாரம் போலக் குதித்தெழும்பித் தன் அறிவின்மையால் ஆழமறியாமல், 'இவனுக்கும் சாஸ்திரத்திற்கும் எவ்வளவு தூரம்! 'கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் தெரியுமா?' நாம் அது வியாஜமாக வேறு எதையாவது பேசி அரைக்கணத்தில் விரட்டித் துரத்திவிடலாம்!' என்று, அவருடனே தர்க்கம் முதலிய சாஸ்திர விஷயத்தைப்பற்றிச் சில நேரம் சம்வாதித்து, அதனால் அசைக்கக் கூடாமை கண்டு, அவரை நோக்கி, 'சாஸ்திரவாதம் செய்யத் தொடங்கினால் வெகுநாள் செல்லும்; நீரும் சிறு பிள்ளை; 'குருவியின் தலைமேலே பனங்காயை வைப்பது போல' உமக்கு அதிக பிரயாசத்தைத் தர நமக்குச் சம்மதி இல்லை. ஆகையால், அது நிற்க. மற்றெந்த விஷயத்தையாவது நீரே பேசும், பார்ப் போம்,' என்று சபடமாகச் சொன்னான். யமுனைத்துறைவர், 'ஏது! இவன் நம்மிடத்தில் பரிவுள்ளவன் போலப் பேசுகிறான்? இது உண்மையா? 'ஆடு நனைகிறதென்று ஓநாய் குந்தி அழுமா?' ஜாலமே அல்லாமல் வேறன்று,' என்று நினைத்துக்கொண்டு, அவனை, 'நீர் பார்க்கிறதென்பதென்ன? உமது அனுமதிப்படியே செய்வோம். அதிகமாய்ப் பேச வேண்டுவதில்லை. நாம், 'ஆம்' என்கிற மூன்று கேள்வியை மாத்திரம், 'அல்ல' என்று மறுப் பீராஞல், நம்மை ஜயித்ததாக ஒப்புக்கொள்ளுகிறேம்; உமக்குச் சம்மதிதானா?' என்றார். அதற்கு அவனும் அரசனும், 'சரிதான்' என்று சம்மதித்து உடன்படிக்கை செய்தார்கள்.

முதற்கேள்வி: சிறு குழந்தையாகிய யாமுனரியர் அவ் வித்வானையே குறித்து, 'ஐயா, உமது தாய் புத்திரவதி என்கிறேம். நீர் உம்முடைய வாக்கு வல்லமையால் புத்திரவதி அல்லள் என்று மறுத்துவிடும், பார்ப்போம்!' என்று கேட்டார். அது கேட்டு வித்வான் நெடுநேரமாகப் பல விதத்திலும் ஆராய்ந்து, மறுக்கக் கூடாமையால், அவன், 'என்னைப் பெற்ற தாய் மலடிதான் என்று வீண் குதர்க்கம் செய்வேனானால், கேட்பவர்கள் பார்ப்பவர்கள் அனைவரும், 'என்னகாணும் நீ அவள் கர்ப்பத்திலிருந்து கொழுக் கட்டை போலப் பிறந்து, குட்டிச் சுவர் போல நட்டநடுவில் இருந்துகொண்டு, வாய் கூசாமல் அவளை மலடியென்று பிரத்யட்ச விரோதமாக விதண்டாவாதம் செய்கிறையே!' என்பார்களே! அதற்கு என்ன உத்தரம் சொல்லுகிறது? இதேது! முதற்கோணல் முற்றும் கோணலாய் முடிவது போலக் காண்கிறதே! இப்படி இறங்கும் துறையிலேயே நீச்சலாய் இருந்தால், எதிர்கரை ஏறுவ தெப்படி?' என்று மயங்கினான்.

இரண்டாம் கேள்வி: யமுனைத் துறைவர் வித்வானைப் பார்த்துப் பாண்டியனைக் குறித்து, 'இந்த அரசர் தர்மவான் என்கிறேம். எதோ, நீர் மறுக்கக் கூடுமானால் மறுக்கலாம்,' என்றார். வித்வஜன கோலாகலன் அந்தக் கேள்வியை மறுக்க வேண்டுமென்று தன் கருத்தினால் கூடிய வரையில் எட்டிப்

பார்த்தும் எட்டக் கூடாமல் கடினமாய் இருந்ததனால், அவன், 'ராஜா தர்மவான் அல்லன் என்போமானால், அரசனே நம்மைப் பகைத்து, 'அடா நன்றி கெட்ட பாதகா! என்னுடைய சொத்தை உன் இஷ்டப்படி கை கொண்ட மட்டும் கொள்ளை கொண்டு ஆயுட் காலமெல்லாம் அனுபவித்து, இப்போழுது என்னைப் பாவியென்று சொல்லி எனக்கே துரோகம் செய்கிறையா!' என்று, உடைவாளை உருவி ஒரே வீச்சாக வீசிவிடுவானே! என்ன செய்வது!' என்று தயங்கினான்.

மூன்றும் கேள்வி : யமுனைத்துறைவர், 'இந்த இராஜ பத்தினி பதிவிரதை' என்றார். அது வித்வான் செவியில் நுழைந்தவுடனே, அடி வயிற்றில் இடி விழுந்தது போல, அவனுக்கு யாதொன்றும் தோன்றுமையால், அவன், 'இவரை நீறு பூத்த நெருப்பென்று நினையாமல், எளிதாகச் சிறு பையல் என்று அவமதித்தோமே! நமக்கென்ன! கிரகசாரந்தான் போதாதோ! இத்தனை காலமாய் மகாவித்துவான்கள் அனைவரையும், அவர்கள் தலைக்குப் போட்டால் நாம் காலுக்கும், காலுக்குப் போட்டால் தலைக்கும் போட்டு ரசாபாசப்படுத்திப் பட்டி மிரட்டு மிரட்டிச் செயித்து வந்தோமே! இப்பொழுது ஒரு குழந்தையின் கேள்விக்கு உத்தரம் சொல்ல வகை தெரியாமல் கற்றறி மூடனுய்விட்டோமே! இனி நமக் கென்ன பெருமை! பண்டிதனென்னும் பட்டமும் பறந்துபோம்! முதற்கேள்வி ஒன்றுக்காவது உத்தரம் சொன்னோமா? இல்லையே! ஆயினும், அது ஒருவேளை, 'ஆனைக்கும் அடி சறுக்கும்' என்பதாகத் தவறியதென்று நினைக்கவும் கூடும். ஆதலால், பெரிதன்று. இரண்டாவதற்காவது சொல்ல வேண்டுமே! அதுவும் ஈடேறுமல் போயிற்றே! போனலும் போகட்டும்! மூன்றுவதற்காவது சொல்லலாமென்றால், இராஜபத்தினி வியபிசாரி என்றல்லவோ சொல்ல வேண்டும்? எவ்விதத்தில் நாவெழுந்து சொல்லுகிறது! சொன்னால் பக்கத்தார் பல்லை உதிர்க்கார்களா? மேல் அரசனைக் குறித்துப் பிறந்த இரண்டாம் கேள்வியிலும் இம்மூன்றும் கேள்வி பழியும் பாவமும் விரோதமும் விளைக்கத் தக்கதாய் இருக்கின்றதே! இதைக் குறித்து உத்தரம் சொல்ல வாயைத் திறக்கவுங்கூடுமா! இந்த விஷயம் கையுமெய்யுமாகக் கண்டுபிடிக்கப்பட்டாலும் வெளியிலே சொல்லத்தக்கதல்லவே! அரசன் மனைவி நிர்த்தோஷியாயிருக்க, அவளைத் தோஷமுடையவளென்று சும்மா அவள் தலையில் வியபிசாரி பட்டம் கட்டலாமா! பெண்பாவமல்லவா? 'மண்ணின்மேல் நின்று பெண்ணேரம் சொல்வது எப்படி?' ஒருவர் தலையில் மாணிக்கம் இருக்கிறதென்று அவர் தலையை வெட்டலாமா? நிர்நிமித்தமாகக் கங்கை கொதித்ததென்றால் நம்புதற்கு இடமுண்டோ? நாம் ஓட மருந்துண்டு, உறங்கி விழுந்தாற் போலானோமே! 'தன்னை தன்னைச் சுடும்' என்பதாக நம்முடைய மதமே நம்மை அழித்தது! நமக்கு அடக்கம் என்பது சற்று மில்லாமல் கல்வியில் நாமே பெரியம் என்று அகங்கரித்துப்

பிறரைப் பொருள் செய்யாமல், அரசனது சலுகையிலே அவர்களை அவமானப்படுத்தி வந்த அந்தக் கொடுமையல்லவோ இப்படி விளைந்து நமது வாயைக் கட்டியது!' என்று எண்ணுததும் எண்ணித் திப்பிரமைகொண்டு ஏங்கி இருந்தான். அது கண்டு இராஜபத்தினி மனமுருகி, 'நான் செய்த பிரதிக்கினையை முடித்து, என் மூக்கை முன்னுக்குக் கொண்டு வந்தாரே!' என்று பெருமகிழ்ச்சி கூர்ந்து, ஆனந்தக் கண்ணீர் பெருக, அக்குழந்தையாகிய யமுனைத்துறை வரைத் தன் இரு கையாலும் இறுகத் தழுவிக்கொண்டு, 'இவர் என்னை ஆளவந்தாரோ!' என்று வியந்தாள். அன்று முதல் அவருக்கு ஆளவந்தார் என்ற திருநாமம் வழங்கத் தலைப்பட்டது. அத்தருணத்தில் ஆனை போலிருந்த வித்வஜன கோலாகலன் பூனை போலடங்கிச் சிவுக்கென்றெழுந்து, 'ஓட்டை நாழிக்குப் பூண் கட்டுவது போல, வித்வஜன கோலாகலன் என்னும் இத்தனை பெரிய பெயர் எனக்கேன்? 'அம்மாள் கெட்ட கேட்டுக்கு முக்காடு கூடவா!' என்பது போல, என் திறமைக்கு விருதுகளும் வேண்டுமா!' என்று சலிப்புற்றுத் தன் விருதுகளையெல்லாம் வாங்கி அவர் முன் பாக வைத்து, அவரை வணங்கி நின்றான்.

அரசன் இவைகளையெல்லாம் கண்ணுரக் கண்டு, காதாரக் கேட்டுப் பிரமிப்படைந்து, ஆளவந்தாரை விழி களிக்க நோக்கி, 'சுவாமி, தேவரீர் கேட்ட மூன்று கேள்விகளுள் ஒன்றையாவது நமது வித்வான் மறுக்கச் சக்தியில்லாமல் தோற்றது வாஸ்தவமே! அம்மூன்றில் ஒன்றேனும் இரண்டேனும் தேவரீரால் மறுக்கக் கூடுமோ?' என, 'அவர், மூன்றும் மறுக்கக்கூடும்,' என்று உத்தரிக்கின்றார்:

முதலாவது: 'உமது தாய் புத்திரவதி' என்றதற்கு மறுப்பு: 'வாழையானது ஒரு குலை ஈனுவது போல, இந்த வித்வானுடைய தாய் இவரொருவரை மாத்திரம் பெற்றதனால், 'ஒரு பிள்ளையும் பிள்ளையல்ல; ஒரு மரமும் தோப்பல்ல,' என்ற பழமொழிப் படியே, அவள் வாழை மலடியாதலால், புத்திரவதியல்லள்,' என்றார்.

இரண்டாவது: 'ராஜா தர்மவான்' என்றதற்கு மறுப்பு: 'ராஜா ராஷ்டிர கிருதம்பாபம்' என்ற நீதி வாக்கியப்படியே, 'தேசத்தார் செய்தபாவம் அரசனை அடையும்,' என்பதனால், 'ராஜா தர்மவானல்லன்' என்றார்.

மூன்றாவது: 'ராஜ பத்தினி பதிவிரதை,' என்றதற்கு மறுப்பு: 'கரு உற்பத்தியால் சந்திரனுக்கும், விளையாட்டால் கந்தருவனுக்கும், தீபனவிர்த்தியால் அக்கினிக்கும் முன்பு சுவாதந் திரியப்பட்டு, பின்பு மணம் செய்துகொள்பவனுக்கு உரியளாகின்ற காரணத்தால் நான்கு பதிகளையுடையவளாதலாலும்,

" அன்றியும் கனலி சான்றுப் அல்லது வதுவை யாற்றற்(கு)
ஒன்றுமோ ? வருண னெவ்வா துதகமோ டளிக்கும் தூய
மன்றல்எவ் வாறு முற்றும் ? வானவர் அருளில் லாமல்
துன்றுநீர்ப் புவியில் யார்க்கும் சூழ்வினை முடிக்க லாமோ ?"

என்றவாறே மணம் செய்யும் காலத்தில் அக்கினி, வருணன் முதலிய பஞ்ச தேவர்களுக்கு அவள் சமர்ப்பிக்கப்படுதலாலும், ஸ்திரீக்குப் பதிவிரதா பங்கம் வருகின்றது,' என்றார்.

இவ்வண்ணமாக ஆளவந்தார் வித்வஜன கோலாகலன முன்பு கேட்ட மூன்று கேள்விகளையும் பின்பு தாமே சாஸ்திர சம்மதமாகவும் உலகத்தாருக்கு அங்கீகாரமாகவும் மறுத்துரைக்கக் கேட்டுப் பாண்டியராஜனனவன், 'சிறு பாலகராகிய இவர் இத்தன அருமையும் பெருமையுமாகிய கேள்வி உத்தரங்களெல்லாம் எப்படி உணர்ந்துரைத்தார் ! தாமுரைத்தவைகளைத் தாமே மறுக்கவும், மறுத்தவைகளை ஸ்தாபிக்கவும் தக்க பரமசக்தி இவருக்கு எங்கிருந்து உற்பத்தியாயிற்று ! மேலும், நமது வித்வான் தாய்க்கு ஏக புத்திரர் என்பது எவ்வித்தத்தில் தெரிய வந்தது ? அது ஜோதிஷத்தினுல் அறியலாமென்றுல், அவர் ஜாதகத்தையும் இவர் பார்க்கவில்லையே ! ஆதலால், அசாத்தியம் ! அசாத்தியம் !' என்று பல முறையும் நினைத்து ஆச்சரிய வெள்ளத்தில் மூழ்கி, 'பூர்வம் போஜ ராஜ சம்ஸ்தானத்திலிருந்த **காளிதாசன்**, **தண்டி**, **பவபூதி** முதலாகிய சம்ஸ்கிருத வித்வான்களும் இந்த மதுரையில் தமிழ்ப் புலமை செலுத்திய தெய்விகம் வாய்ந்த சங்கப் புலவர்களும் இவருக்கு ஒப்பல்லர். இவர் சரஸ்வதி விக்கிரகமாயும் அவதார புருஷராயும் இருக்கின்றார் !' என்று பரமானந்தமடைந்து, ரகசியத்தில் தன் பத்தினிக்கெதிரே தான் நிருணயித்தபடி தன் இராச்சியத்தில் பாதி கொடுத்தான்.

ஸ்ரீ ஆளவந்தார் அந்த இராச்சியத்தை வகித்து நெடுநாள் அரசாண்டு வருகையில், இவருக்கு முன்னடியார் பின்னடியார் யாவருக்கும் பரமாசாரியராகிய **ஸ்ரீமந்நாதமுனிகள்** நியமனப்படி, **ஸ்ரீராமமிசிரர்** என்னும் மணக்கால்நம்பி வந்து, ஆளவந்தாருக்கு மிக விருப்பமாயும் ஞான சாதனமாயும் இருக்கின்ற தூதுளங்கீரை எவ்விடத்திலிருந்தாலும் தேடிக் கொய்து கொடுத்துக்கொண்டிருந்தார். அதை மடைப்பள்ளியில் தளிகை செய்கிறவர்கள் வாங்கித் துவையலரைத்துப் பரிமாற, ஆளவந்தார் இஷ்டமாய்ப் புசித்து வந்தார். இப்படி ஐந்தாறு மாதம் நடந்தும், அவர் ஏதென்று கேளாமையால், பிறகு ஒரு நாள் அந்த மணக்கால் நம்பி அதைக் கொண்டு வந்து கொடாதிருந்தார். அன்று ஆளவந்தார், 'தூதுளங்கீரைத் துவையல் ஏன் பரிமாறவில்லை ?' என்றார். 'இன்றைக்கு அந்த வைஷ்ணவர் கொண்டுவந்து கொடுக்கவில்லை,' என்று பாகஞ்செய்வோர் சொல்ல, 'ஓ ! ஓ ! அவர் ஆரோ ! ஏது நிமித்தமோ ! தெரியவில்லை. அபசாரம் வந்ததே !' என்று அனுதாபப்

பட்டு, 'நாளைக்கு வந்தால், நம்மைக் கண்டு பேசிப் போகச் சொல்லுங்கள்,' என்று நியமித்தார். மற்றைநாள், அவர், 'நாம் நேற்றுக் கொண்டுபோய்க் கொடாது நிறுத்தினதனால் யாமுனரியருக்குக் கேள்வியாய் இருக்கலாம்; இன்றைக்கு நமது மனோரதம் முடியும்' என்று வழக்கப்படி தூதுளங்கீரை கொண்டுவந்த பொழுது ஆளவந்தார் அவரைக் கண்டு, 'எங்கிருந்து வந்தீர்? உமது திருநாமம் யாது? என்ன காரியார்த்தமாய் இங்ஙனம் நடத்தி வருகிறீர்?' என்ன, அவர், 'நாம் மணக்கால் என்னும் ஊரில் வசிக்கும் காரணத்தால் நமக்கு மணக்கால் நம்பி என்பது பெயர்; நமது பிதாமகனுராகிய ஸ்ரீமந்நாதமுனிகள் தேக வியோகமாகும் காலத்தில், அவரது ஆர்ச்சிதமாகிய திரவிய நிக்ஷேபத்தை எமது அடைக்கலத்தில் வைத்து, 'இதை நம்முடைய பெயரனுரிடத்தில் நீர் ஒப்பிக்க வேண்டும்,' என்று நியமித்துப் போனுர். அதை உம்மிடத்திற் சேர்ப்பிக்கும்பொருட்டு நம்பெருமாள் கோயிலிலிருந்து வந்தோம்,' என்ருர்.

ஸ்ரீ ஆளவந்தார், 'அந்த நிக்ஷேபதனம் எப்படிப்பட்டது? எவ்வகையால் காண்பது? என்ன உபாயத்தால் கைவசமாம்? எவ்விடத்திலுள்ளது? வெளியிட வேண்டும்,' என்ன, மணக்கால் நம்பி அவரை நோக்கி, 'அரசர் முதலானவர்களிடத்திலுள்ள நிதி போல, வெள்ளம் முதலானவைகளால் அதற்கு அபாயமில்லாமையால், அது அழியாநிதி. நிரஞ்சனதிருஷ்டியாலன்றி அஞ்சன திருஷ்டியால் காணப்படாதது. மிருக பலி, நரபலி இடவேண்டுவதில்லை. வெறும்பச்சிலையைக் கிள்ளியிட்டு எளிதில் கைப்பற்றிக்கொள்ளப் படும். இரண்டு ஆற்றுக்கு நடுவே ஏழு சுற்றுக் கோட்டைக்குள், பிரணவ பீஜ யந்திரத்தில் இருக்கிறது. அதை ஒரு பாம்பு சுற்றிக் கொண்டு நிற்கிறது. பன்னிரண்டு வருஷத்திற்கு ஒரு முறை அவ்விடத்திற்குத் தென்சமுத்திர மத்தியிலிருந்து ஒரு ராட்சசன் வந்து அதைப் பார்வையிட்டுப் போவதுண்டு. இத்தன்மையாய் இருக்கின்ற நமது பிதிரார்ச்சிதமாகிய க்ஷேம திரவியத்தை நாம் எத்தனை காலமாய்ப் பாதுகாத்து வருவோம்? இனித் தாம் கிருபை செய்து வந்து கைப்பற்றிக்கொள்ள வேண்டும்,' என்ருர்.

திரவியமென்ற மாத்திரத்தில், ஆளவந்தார் அரசாள்பவராகையாலும், பாட்டனுடைய ஸ்திதியாகிய பைதிருக தனத்துக்குப் பெயரன் உரியவன் என்பதனுலும், அதன்மேல் அபேக்ஷை கொண்டு, 'எதோ, அதைக் காண்பியும், வருகிறோம்,' என்று தமது பரிஜனங்களுடனே பிரயாணப்பட்டார். மணக்கால்நம்பி, 'இந்தக் கூட்டத்தை நிராகரித்து, நீர் மாத்திரம் வந்தாற் காண்பிக்கிறோம்,' என்ன, அப்படியே அவர் தனித்து வர அழைத்துப்போய், அத் திருவரங்கம் பெரிய கோயிலிலே சயனத் திருக்கோலமாய் எழுந்தருளிய எம்பெருமானைக் காட்டி, 'உங்கள் பாட்டனுர் நம்முடைய அடைக்கலமாக வைத்து உமது வசம் ஒப்புக்கொடுக்கும்படி நியமித்த பரமதனத்தைப் பாரும்!' என்ருர்

ஆளவந்தார் திருவரங்கநாதனைச் சேவித்துப் பரவசராய், 'இந்த மகானுபாவருடைய குணப் பிரபாவத்தை என்னவென்று வர்ணித்து ஸ்துதிசெய்கிறது!' என்பதாய், அத்தியாவசியத்தோடே மணக்கால் நம்பி தம் பக்கல் எழுந்தருளியது முதல் அவர் தமக்கு அரங்கநாதனைக் காட்டிக் கொடுத்தது வரையில் நிகழ்ந்தவை யாவையும் ஒவ்வொன்றுக நினைவு கூர்கின்றார்.

'பங்கன் இருக்குமிடத்தைத் தேடிக் கங்கை வந்தது போல, இந்த ஸ்ரீ வைஷ்ணவசீலர் ஈஷணத்திரயமாகிய சேற்றில் அழுந்திக் கிடந்த அசேதனனென்னும் அடியேனைப் பொருள் செய்து தாமே வந்து சந்தித்து, கரும்பு தின்னக் கூலி கொடுப்பது போல, தூதுளங் கீரையைத் தேடிக் கொண்டு வந்து கொடுத்து, எனக்குத் தத்துவ ஞானம் உதயமாகிப் பரிபாகம் வருமளவும் காத்திருந்து, மண் தின்னும் பிள்ளைக்கு மருந்தூட்டத் தின்பண்டம் காட்டிச் செல்வத் தாய் அழைப்பது போல, 'உங்கள் பிதிரார்ச்சிதமாகிய பணப் புதையல் இருக்கின்றது. வந்து கைக்கொள்ளும்,' என்றார். அதன் கருத்து நாயேனுக்கு அப்பொழுது சாதாரணமாகிய லோக திரவிய மென்றே தோன்றிற்று. இப்பொழுதோ, சகல புவன கர்த்தா வாகிய சாக்ஷாது சுவாமியாய் விளங்குகின்றது! பின்பு பரமகாரு ணியராகிய இவரை நோக்கி, அந்தத் திரவியம் பொன், வெள்ளி, ரத்தினத்தோடு சம்பந்தப்பட்டதோ, அல்லது, நகை நாணயங் களாய் இருப்பதோ என்னும் கருத்துக் கொண்டு, நான், 'அஃது எப்படிப்பட்டது?' என்ன, 'மற்ற நிதி போலக் கவரப்படுவதன்று; அழியாநிதி' என்றார். அதனுல் அவ்வீசுவரன் நிருபாதிகனும் நித்திய னுமாம் என்று பொருள் படுகின்றது. அதன் பின்பு, நான் மண்ணிற் புதைத்த திரவியம் மறைந்துபோகும் என்பதனுல், 'அதை எவ்விதத் தால் காண்பது?' என்ன, நிரஞ்சன திருஷ்டியாலன்றி அஞ்சன திருஷ்டியால் காணப்படாது,' என்றார். என்றதனுல், சர்வாந்தரி யாமியானவன் அஞ்ஞானிகளுக்கன்றி மெய்ஞ்ஞானிகளுக்கே பிர சன்னமாவன் என்பது விளங்காநின்றது. பிறகு, புதை பொருளைப் பூதங்காக்கும் என்பதனுல், 'அது எனக்கு என்ன உபாயத்தால் கிடைக்கும்?' என்ன, 'பலியிட வேண்டுவதில்லை, பச்சிலையைக் கிள்ளியிட்டுப் பற்றிக்கொள்ளலாம்,' என்றார். அக்குறிப்பு அந்தப் பரமாத்மன் திருத்துழாயால் அர்ச்சித்தவர்களுக்குச் சுவாதீனப் படாமல் போகான் என்பதாயிற்று. மற்றும் காடோ மலையோ காணுமே அது இருக்குமிடம் என்றெண்ணி, நான், 'எவ்விடத்தி லுள்ளது?' என்ன, 'இரண்டாற்றுக்கு நடுவே' என்றார்—அது தென் காவிரி வட காவிரியாகிய உபய காவிரிக்கு மத்தியமென்றும்; 'ஏழு சுற்றுக் கோட்டை' என்றார்—அது சப்த பிராகாரங்களால் சூழப் பட்ட அரங்கக் கோயிலென்றும்; 'பிரணவபீஜயந்திரம்' என்றார்'— அது ஓங்கார விமானமென்றும்; 'பாம்பு சுற்றி இருக்கின்றது' என்றார்—அது சேஷசயனம்என்றும்; 'ஒரு ராட்சதன்வந்து பார்வை யிட்டுப் போகிறான்' என்றார்—அங்கே விபீஷண ஆழ்வான் துவா

தச வருஷத்திற்கு ஒருகால் வந்து சேவித்துப் போகிறானென்றும்; 'இந்தத் தனத்தை உங்கள் பிதாமகனுர் உமக்கு ஒப்புக் கொடுக்கச் சொன்னுர்' என்றுர்—அது சுவாமி கைங்கரியத்தை உள்ளிட்ட பிரபத்தி நிஷ்டையைக் கைக்கொள்ளும்படி ஸ்ரீமந்நாதமுனிகளால் நியமிக்கப்பட்டதென்றும் குறிப்பித்தவைகளாய் இருக்கின்றன,' என்று நிச்சயித்துணர்ந்து, 'இவர் செய்த பரமோபகாரம் ஆர் செய்வார்கள்!' என்றும், 'யாதொரு சாதனமுமில்லாமல் தாபத்திரயாக்கினியால் தகிக்கப்பட்டுக் கேவலம் அசக்தனுயிருக்கின்ற எளியேற்கு, 'முடவனுக்குக் கொம்புத் தேன் கிடைத்தது' போல, பரமார்த்தம் சித்தித்ததே!' என்றும், 'இது அநேக கோடிகாலம் அகோரதபசு, அஷ்டாங்கயோகம் முதலானவைகளைச் செய்தவர்களுக்குத்தான் வாய்க்குமோ!' என்றும், 'இத்தகு மேலான வாழ்வு அல்லது, இகபர சாதனம் வேறென்ன இருக்கின்றன?' என்றும், 'தேடிவந்த சீதேவியை வேண்டா என்று விலக்கிவிடுவது போல' இதைக் கைவிட்டு எத்தனை வருஷகாலம் அரசாட்சி பண்ணினுலும், சஞ்சித, ஆகாமிய, பிராரப்த கர்மவசத்தனுகி உழல்வதேயல்லாமல், நித்திய பாக்கியமாகிய மோக்ஷத்திற்கு அருகனுகக் கூடுமோ? கூடாது. ஆதலால், இதுதான் ஆத்மார்த்தம்,' என்றும் தமக்குள் உறுதியாகக் கொண்டு இராச்சியத்தை வாந்தியசனம் போல அருவருத்துக் கைவிட்டு, கடல் நடுவில் அமிழ்கின்றவன் அங்கொரு தெப்பத்தைக் கண்டுபிடித்துக் கரையேறுவது போல, பகவத் கடாக்ஷத்தால் ஆசாரியராய் எழுந்தருளிய மணக்கால்நம்பி திருவடிகளை ஆசிரயித்து, பஞ்சசமஸ்கார சம்பன்னராய், ஸ்ரீ ஆளவந்தார் பிரபத்தி நிஷ்டையை அவர் உபதேசிக்கப் பெற்று வாழ்ந்திருந்தார்.





[நம் வாழ்க்கை வளமும் நலமும் பெறுவதற்கு வழி காட்டிகளாக இருப் பவர்கள் நம் தாய், தந்தை, ஆசிரியர், கடவுள், பெரியோர் முதலியவர்கள். அவர்கள் புரியும் தந்நலமற்ற உதவி களை நாம் எந்நாளும் மறத்தலாகாது. ஒருவன் எத்தகைய பாவத்தைப் புரிந் தாலும் அதிலிருந்து தப்புவதற்குப் பரிகாரம் உண்டு. ஆனால், நன்றி மறந்தவனுக்குப் பாவத்தினின்று தப்பு வதற்கு எவ்விதமான பரிகாரமும் இல்லை. 'நன்றி மறப்பது நன்றன்று,' என்று தொடங்கி, 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை,' என்று முடியும் இக்கட்டுரை முழுக்க முழுக்க நன்றி மறவாமையைப் பற்றிய சொற்சித்திர மாய் விளங்குகின்றது.

— பதிப்பாசிரியர்]

6

நன்றி மறவாமை

" நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று."

என்னும் திருக்குறளில், 'தனக்கு ஒருவன் முன் செய்த நன்மையை மறந்துவிடுவது அறமன்று ; அவன் செய்த தீமையைச் செய்த பொழுதே மறந்துவிடுவது அறமாம்,' என்று திருவள்ளுவ நாயனா ரால் சொல்லப்பட்டமையால், தாய், தந்தை, குரு, தெய்வம், அரசன், பெரியோர் முதலானவர்கள் செய்த நன்றியை எந்நாளும் மறவாமல் சிந்தித்து ஒழுகல் வேண்டும்.

1. தாய் செய்ந்நன்றி

தாயானவள் பத்து மாதம் கர்ப்பத்தில் சுமந்து வருந்திப் பெற்று, கண் திறவாமல் இறகு முளையாமல் இருக்கிற சிறு குஞ்சு களைப் பறவைகள் தமது சிறகின் கீழ்ச் சேர்த்து அணைப்பது போல, ஈ மொய்க்காமலும், எறும்பு கடியாமலும், குருகு பறவாமலும்,

வெயில் படாமலும், காற்று வீசாமலும், பனி பெய்யாமலும், மார் பிலும், தோளிலும், வயிற்றிலும் அணைத்து,

" முன்னகின் அன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச்சிந்திக்
கன்னமும் கிள்ளிய நாளல்ல காணென்னைக் காப்பதற்கே
அன்னமும் மஞ்ஞையும் போலிரு பெண்கொண்ட ஆண்பிள்ளாநீ
இன்னமும் சின்னவன் ருனேசெந் தூரி லிருப்பவனே !"

என்ற பாட்டில் சொன்னபடி முலையூட்டி, மூக்குச்சிந்தி, நாசி ஊதி, செவி உருவி, நீராட்டி, நெற்றிக்கு நிலக்காப்பிட்டு, விழிக்கு அஞ்சனந்தீட்டி, பல பணிகளும் பூட்டி, கன்னம் கிள்ளி, உச்சி மோந்து, கண்ணேடு கண், வாயோடு வாய், முகத்தோடு முகம் வைத்துக் கொஞ்சி, முத்தாடி அருந்தனம் போலப் பாவித்து, பொற்றொட்டிலிலிட்டு,

" ஆராரோ, ஆராரோ, ஆராரோ, ஆராரோ !

சோர் பசுங்கிளியே ! தெவிட்டாத செந்தேனே !
பேரார் குலக்கொழுந்தே ! பெருமானே ஆராரோ ! (ஆராரோ)

இருகண் மணியே ! இலஞ்சியமே ! என்னுயிரே !
ஒருகுடைக்கீழ் நீயிவ் வுலகாள வந்தவனே ? (ஆராரோ)

தெள்ளமுத கும்பமே ! தித்திக்கும் செங்கரும்பே !
பிள்ளாகலி தீர்த்த பெரியமத குஞ்சரமே ! (ஆராரோ)

மாணிக்கக் கால்நாட்டி வயிர வடம்பூட்டி
ஆணிப்பொன் தொட்டிலிட்டேன் அருமருந்தே கண்வளராய் (ஆராரோ)

அத்தை மடிமேலும் அம்மான்மார் தோள்மேலும்
வைத்துமுத் தாடும் ரகதமே ! கண்வளராய்." (ஆராரோ)

என்று தாலாட்டிச் சீராட்டி, நாடோறும் வாயது கையது கொடுத்துப் போஷித்து, தன் கன்றுக்கிரங்கும் கறவை போல நெஞ்சிரங்கி, நோயணுகாது மருந்தளித்துப் பத்தியமிருந்து' கண்ணே இமை காப்பது போல அபாயம் வாராமல் காத்து, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து, பெற்ற தாயென்று குறியாமல் தன்னைக் கைப்பிடித்தலாகிய செய்தற்கரிய குற்றத்தைச் செய்தாலும் அதை அப்படி நினையாமல், பிறருடனும் சொல்லாமல், தன் புருஷனுக்கும் தெரிய வொட்டாமல், தானும் தண்டியாமல், ' ஐயோ ! மகனுக்குப் பித்தம் தலைமண்டை கொண்டுவிட்டதே !' என்று துக்கப்பட்டு, பித்த சாந்திக்கேற்ற சாதனங்களை அடுத்துச் செய்து, பின்பு, ' இப்படிச் செய்தானே !' என்பதையும் கடுகளவாவது நினையாமல் அன்பாய்ப் பாலிப்பதையும்—

2. தந்தை செய்ந்நன்றி

தந்தையானவன் பசியாமல் ஊணும் உடையும் தந்து, துஷ்ட சகவாசம் செய்யவாவது, ஓடி ஒளித்துத் தூர்த்தனுயத் திரிய வாவது, சூதாடிப் பொய் பேசிப் புறம்கூறவாவது, தாசி காந்தனுய் வேசி வீடு நுழையவாவது, துர்வியாச்சியம் தொடுக்கவாவது தன்னிச்சையாய் விடாமல் அடக்கி,

> " அள்ளிக் கொடுக்கின்ற செப்பொன்னும் ஆடையு மாதரவாக்
> கொள்ளிக்கும் பட்ட கடனுக்கும் என்னைக் குறித்ததல்லால்
> துள்ளித் திரிகின்ற காலத்தி லேயென் துடுக்கடக்கிப்
> பள்ளிக்கு வைத்தில னேதந்தை யாகிய பாதகனே."

என்று நினைத்துப் பின்பு தான் வியசனப்படுதற்கு ஏதுவாகத் தன்னை மூடனுய்ப் போகவொட்டாமல், இதம் தெரிந்து ஐந்து வயதிலே கல்விக் கழகத்தில் விடுத்துப் பூரண பண்டிதனுகக் கல்வி பயிற்றுவித்து, சபையார் எல்லாம் பூஜ்யதை பண்ணத் தக்க யோக்கியனுகும்படி செய்வதையும் மறவாமல், 'அன்னையும் பிதா வும் முன்னறி தெய்வம்,' என்பதனுலும், 'தந்தை தாய்ப் பேண்' என்பதனுலும், அவர்களைத் தெய்வமாக எண்ணி, இகழாமல் வணங்கி, அவர்களுக்குக் கீழமைந்து, அவர்கள் குற்றங்களைப் பிறர் அறியாது மறைத்து, 'தாய் சொல்லின் சிறந்த வாசகமில்லை,' என்றும், 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்றும் சொல்வ தனுல், அவர்கள் சொல்லைக் கடவாமல் சிரசா வகித்து, மாதுரு பிதுரு வாக்கிய பரிபாலகனுய், தாய் தந்தையர் தன்னை அன்ன வஸ்திராதிகளில் குறைவில்லாமல் போஷித்தது போல, ஒன்றுல் ஒன்று குறைவில்லாமல் அன்புடனே தானும் அவர்களைப் போஷிக்க வேண்டும். பெற்றவர்களுக்குப் புத்திரன் அன்றிப் போஷகன் வேறே யார் ?

குழந்தைப் பருவத்தில் தான் இச்சைப்பட்டுக் கேட்ட பதார்த் தங்களை எல்லாம், தனக்கு அவர்கள் பிரியத்துடன் வழங்கியது போல, வார்த்திகத்தில் அவர்கள் ஆசைப்பட்ட பண்டங்களை எல்லாம், தன்னைக் கேளாததற்கு முன்னமே குறிப்பறிந்து தான் அவர்களுக்கு வழங்க வேண்டுமல்லவா ? 'தாயிடப் பிள்ளையிடத் தானே மனமகிழ' என்கிறார்களே !

தன்மேல் ஈப்பறவாமல் அவர்கள் தன்னைக் காத்தது போல, அவர்கள்மேல் தூசு பறவாமல் தானும் பாதுகாக்க வேண்டும்.

மாதுரு பிதுரு கைங்கரியம் தனக்கு லபிக்க வேண்டுமென்று, தான் கடவுளைப் பிரார்த்தித்து எதிர்பார்த்திருந்து, அவர்கள் தேக வியோகமான உடனே அவர்களுக்குப் பிரேத சமுஸ்காரம் முதலாகிய கடன்களெல்லாம், லோபமில்லாமல் சிரத்தையுடனே நடத்த வேண்டும். தாய் கடன் கழிப்பதற்குச் சர்வசங்கப் பரித் தியாகம் செய்த சந்நியாசிகளும் காத்திருக்கின்றார்களே ! இதற்குத்

திருஷ்டாந்தம், முற்றத் துறந்த பட்டினத்தார், தாய் இறக்கு மளவும் காத்திருந்து அவள் மரித்த பின்பு, வாழை மரங்களைக் காஷ்டமாக அடுக்கி, அதன்மேல் அவளைக் கிடத்தி வாய்க்கரிசி இட்டு,

" முன்னை இட்டதீ முப்பு ரத்திலே ;
பின்னை இட்டதீத் தென்னி லங்கையில் ;
அன்னை இட்டதீ அடி வயிற்றிலே ;
யானும் இட்டதீ மூள்க மூள்கவே."

என்று சொல்லிக் கொள்ளி வைத்துக் குடமுடைத்துப் பால் தெளித்து உத்தரகிரியைகளும் செய்து முடித்துச் சென்றார் என்பதே.

தனது கல்வி, அறிவு, ஆண்மை, பொறுமை, உண்மை, ஒழுக்கம் முதலியவைகளைப் பார்த்து, ' இந்த மகானுபாவன், வித்தையில் அகத்தியனே ! அறிவில் ஆதிசேஷனே ! ஆண்மையில் விக்கிர மாதித்தனே ! சாந்தத்தில் தரும ராஜனே ! வாய்மையில் அரிச் சந்திரனே ! நீதியில் மனுச் சக்கரவர்த்தியோ !' என்று அதிசயித்து, ' அம்மம்ம ! இவனைப் பெறுவதற்கு இவன் பிதா என்ன தவத்தைச் செய்தானே !' என்று சகலமானவர்களும் சொல்லும்படி, நல்ல கீர்த்தியைப் பிதாவுக்குச் சம்பாதித்துக் கொடுக்க வேண்டும். பெரும்பாலும் தாய் தந்தையர் பெயரை விளக்குகிறதற்குத்தானே பிள்ளை பிறக்கிறது ?

மேலும், தன்னைப் பெற்ற பொழுது அடைந்த மகிழ்ச்சியிலும் அதிக மகிழ்ச்சியைப் பெற்ற தாய் அடைய, ' உன் மகன் சகலகலை வல்லவன் ; சாதுரியகுண சம்பன்னன்,' என்று அறிவுடையோர் சொல்லும்படி அவள் செவியில் கேள்விப்படச் செய்யவும் வேண்டும்.

" ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்."

இவ்வாறன்றித் ' தாய் தந்தையர் தன்னைப் பெற்று வளர்த்த அருமை பெருமைகளை எவ்வளவும் நினையாமல், ' அவர்கள் என்னைப் பெறுகிறதற்கு இரவும் பகலும் ஊண் உறக்கமின்றி உபவாசித்து, உடம்பை ஒறுத்து, ஊசி முனையில் நின்று, அருமையாகத் தவம் செய்தார்களோ ! ஆடு நனைகிறதென்று கோநாய் குந்திக்கொண்டு அழுமோ ? எங்கள் ஆத்தாள் எதிர்ப்பட்டாள் ; அப்பன் மதப் பட்டான் ; நான் வெளிப்பட்டேனே அல்லாமல், வேறென்ன ?' என்று வாய் கூசாமல் பிதற்றுகின்ற வம்பன் இவன் !' என்றும் ;

' தன் குற்றத்தைக் கண்ட பிறனொருவன், வெட்கப்பட்டு, ' நீ இப்படி அக்கிரமமாய் நடக்கலாமோ?' என்று தன்னைக் கேட்க, தான் நாணமல், ' அட போ ! நீ என்ன கண்டாய் ! இது அவசியம்

பிதுராசாரம் !' என்று, தன் பிதா முதலானவர்கள் செய்த குற்றத் தையும் வெளிப்படுத்திய பேதை இவன், ' என்றும் ;

'உட்சுவர் இருக்கப் புறச்சுவர் பூசுவார் போலத் தன்னைப் பெற்ற மாதா பிதா முதலானவர்கள் தங்கள் உதரபோஷணைக்கு ஓர் ஏதுவுமில்லாமல், கொழுகொம்பில்லாத கொடி போல அலைந்துகொண்டிருக்கையில் அவர்களை ஆதரியாமல், 'மாதா மன மெரிய வாழாய் ஒருநாளும்,' என்பதையும் உணராமல், தனக்கு யாதொரு சம்பந்தமுமில்லாத அந்நியர்மேல் இரக்கம் கூர்ந்து அவர் களைச் சம்ரக்ஷணை செய்கின்ற டம்பன் இவன்,' என்றும்;

" ஒரு பெண்சாதி போஞல் அநேகம் பெண்சாதிமார் வரு வார்கள்; பெற்ற தாய் போஞல் வருவாளா ?' என்று பாரமார்த் திகமாக யோசியாமல், ஏடாகூடமாய், ' எந்தப் பெண்டுகளையும் தாயென்றுல் குற்றம் பாராட்டார்கள். மனைவி என்றுல் குற்றம் பாராட்டாதிருப்பார்களா ? ஆதலால், தாய் முதலானவர்களிலும் மனைவியே தேடக் கிடையாத திரவியம்,' என்று பெரிதாக மதித்து, அவள் பாதம் பூமியில் பட்டால் அபசாரமாமென்று நடுங்கி, அவளைப் பஞ்சகல்யாணியாகிய குதிரைமேல் ஏற்றி, பெற்ற தாய் தலைமேல் புற்சுமை வைத்து, கொண்ட பெண்டாட்டிக்குக் குடை பிடித்துக்கொண்டு போகின்ற மாபாவி இவன்,' என்றும்;

' தாயைத் தாசி என்றும் வேசி என்றும் (வேசை-வேசி என மருவியது) இழிவாகப் பேசி, ஏசி, கொஞ்சமாவது பழிக்கஞ்சாது கொலை செய்த பஞ்சமாபாதகன் இவன்,' என்றும் ;

' விளக்கைக் கையிலே பிடித்துக்கொண்டு கிணற்றில் விழு வாரைப் போல, பாவமென்று தெரிந்திருந்தும் காமவிகாரத்தால் கண் தெரியாது, மதிமயங்கி, மிருகம் போலப் பெற்ற தாயைப் பெண் டாள நினைக்கும் சண்டாளன் இவன்,' என்றும்;

'தன் தகப்பனுக்குத் தான் பிச்சைக் கஞ்சி வார்க்கும் எச்சில் ஒடு காணுமல் போனதனிமித்தம் கொஞ்சமாவது பச்சாத்தாபமில் லாமல், பழி என்றும் பாராமல், தடி கொண்டு சாடித் தகப்பனைத் தண்டித்த தறுதலை இவன்,' என்றும்;

' பிதா புத்திரனைக் குறித்து, 'சிரஞ்சீவி தம்பி இன்ன முதலியா ருக்குச் சுவாமி கிருபையால், சகல போகபாக்கியமும் சந்தான சமர்த்தியும், வாகன பிரதிஷ்டையும், அகண்ட சாம்பிராச்சியமும், லக்ஷ்மி விலாசமும் ராஜ வசீகரமும், தீர்க்காயுளும் சதாகாலமும் வற்றுத சமுத்திரம் போலக் குறைவின்றி மேன்மேலும் பெருக உண் டாகுக' என்று, உபசாரமாகவும் பக்ஷமாகவும் எழுதி அனுப்பிய கடிதத்தை வாசித்துப் பார்த்து, 'ஓ! ஓ ! இவனென்ன சர்வ முட் டாளாய் இருக்கிருன் ! 'ராஜமாநிய ராஜபூஜித மகாராஜராஜஸ்ரீ முதலியாரவர்கள், வடிவில் மன்மதனும் நாணத்தக்கவராய், கல்வி யில் சரஸ்வதிக்குக் குரு பீடமாய், புஜபலத்தில் வாயு குமாரனை

ஜயிப்பவராய், தர்மத்தில் தருமபுத்திரன் தலையை மிதிப்பவராய், ஒழுக்கத்தில் அணுவளவும் பிசகாதவராய், சத்துருக்கள் நடுங்கும் சங்கிராம சிங்கமாய், பூவையர் மால் கொள்ளும் புருஷரத்தினமாய், சற்சனர் மெச்சும் சுபா பூஷணமாய், ஒப்புயர்வில்லாத உத்தம சற் பாத்திரமாய் விளங்காநின்ற மிட்டாதாராகிய இன்னமுதலியார வர்கள் திவ்விய சமுகத்திற்கு அடியேன் தங்கள் ஊழியனுகிய இன்னன் சத்விநய பயபக்தியுடனே, தாங்களிருக்கும் திக்கு நோக்கிச் சாஷ்டாங்கமாகத் தண்டன் சமர்ப்பித்து எழுதிக்கொண்ட விண்ணப்பம்' என்று நமது உத்தியோக ஸ்திதிக்குத்தக்க மரியாதை யாய் எழுதாமல், எவனே காமாட்டி ஒருவன் நாட்டுப்புறத்தா னுக்கு எழுதுவது போல, இப்படியும் எழுதினன் பார்த்தாயா!' என்று முகம் கறுக்க, கண் சிவக்க, வாய் பதைக்க, பல்லை நெறநெற வென்று கடித்து, மீசை படபடவென்று துடிக்க, கலகலவென்று சிரித்து, உதட்டைப் பல்லால் அதுக்கி, கையோடு கை புடைத்து, வாய், கண், மூக்கு, செவிகளிலிருந்து குப்குப்பென்று புகையெழும்ப, திக்திக்கென்று நெருப்புப்பொறி பறக்க, பொள்ளென்று சரீரம் வெயர்க்க, பெருமூச்செறிந்து, புருவம் நெற்றிமேல் வில்லைப் போல வளைந்தேற, கொடிய காலாந்தகனைப் போலக் கோபித்து, தன் பக் கத்தில் இருந்தவர்களெல்லாம் கிடுகிடென்று நடுநடுங்கி நாவறண்டு நெஞ்சுலர்ந்து தடுமாறித் தத்தளிக்க, உக்கிராகாரமாகக் கொக் கரித்து ஆர்ப்பரித்துத் தகப்பனை அக்கணமே கைப்பிடியாகப் பிடித்து வரச் சொல்லி, அவன் உள்ளீரல் கருகி, 'இஃதென்ன கொள்ளை?' என்று குடர் குழம்ப,கண்களை உருட்டி விழித்து உறுக்கிப் பார்த்து, பிரளயகால ருத்திரனைப் போல அட்டகாசம் செய்து, 'ராஜாதி ராஜ ராஜமார்த்தாண்ட ராஜ உத்தண்ட ராஜகெம்பீர ராஜகுஞ்சரமாகிய அகண்ட மண்டலேசுரன் என்று சக்கரவர்த் திகளும் சரணுகதி செய்யத்தக்க கனம்பொருந்திய நாம், நத்தைக் குள் முத்துப் பிறந்தது போலவும்; சேற்றில் செங்கழுநீர் பூத்தது போலவும்; சுடுகாட்டில் வில்வமரம் முளைத்தது போலவும், எவ் ளவோ தாழ்ந்த நிலைமையில் இருக்கின்ற உனக்குப் பிள்ளையாய்ப் பிறந்ததைப் பற்றியும், பிச்சைக்காரன் பணப்புதையல் கண்டெடுத் தாற் போல, மூதேவி முண்டை மகளுகிய நீ, லக்ஷ்மி புத்திரனுகிய நம்மைப் பெற்றதைப் பற்றியும், இப்படிக்கெல்லாம் அவமானப் படுத்தலாமா? நாலு பேர் கேட்டால் நகைக்கமாட்டார்களா?' என்று தகப்பனைத் தாக்ஷணியமின்றித் தாறுமாருக வைது, 'நீ செய்த குற்றத்திற்கு ஐம்பது ரூபாய் அபராதம் கோடுக்கவேண்டும்,' என்று கடுந்தண்டம் விதித்த துராங்காரி இவன்,' என்றும், தானும் கெட்ட பெயர் எடுக்கலாகாது; தாய் தகப்பன் பெயரையும் கெடுக்கலாகாது.

3. குருவானவர் செய்ந்நன்றி

குருவானவர், ஆமை தானிட்ட முட்டைகளை இடைவிடாது நினைப்பது போல, சீஷனுக்குப் பரிபாகமுண்டாக வேண்டுமென்று

தமது திருவுளத்தில் நினைத்தும், மீன் தன் சினையை நோக்குவது போலச் சிஷ்னது அஞ்ஞானம் நீங்க அவனிடத்தில் கிருபா நோக்கம் வைத்தும், பறவை தான் ஈன்ற அண்டத்தைச் சிறகினுல் அணைப் பது போலத் தேக பந்தமொழியக் கரத்தினுல் அவனைப் பரிசித்தும், தமது சந்நிதானத்தில் இருக்கச் செய்து, அவன் முகத்தை நோக்கிப் பின் வருமாறு தத்துவங்களைப் போதிப்பார்:

'சித்து, அசித்து, ஈஸ்வரன் என மூன்று தத்துவங்கள் உண்டு ; அம்மூன்றனுள், சித்து என்பது ஆத்மா ; அசித்து என்பது சரீரம் ; ஈஸ்வரன் என்பது கடவுளாம்.

'மேற்படி ஆத்துமா அணுவாய் நித்தியமாய்க் கிஞ்சிக்கியத் துவம் உடையதாய்ச் சுதந்தரமில்லாது இருப்பது ; சரீரம அநித் தியமாய்ச் சடமாயிருப்பது ; கடவுளோ, விபுவாய், நித்தியராய், நியந்தாவாய், சர்வஜ்ஞராய், சர்வசுதந்தரராய், சர்வசக்தராய், சர்வ பரிபூரணராய் இருப்பவர்.

'இந்தச் சரீரம், பிருதிவி முதலாகிய ஸ்தூல பூதங்களும், சப்த ஸ்பரிச முதலாகிய சூட்சும பூதங்களும் சேர்ந்தானது ; இச்சரீரம் நீ அன்று ; ஆத்மாவே நீ ; இச்சரீரமோ, உனக்கு அந்நியமா யிருந்தும் உன்னை வந்தடைந்தது ; அவிவேகத்தால் நீயல்லாத தனு கரணங்களை நீ என்றும், உனதல்லாத புவனபோகங்களை உனதென்றும் அபிமானித்து, பல பாவங்களையும் செய்து உழல வேண்டி வந்தது. 'இதற்கு நிவர்த்தி எங்ஙனம் ?' எனில், பொறிகளாகிய மதயானைகளைப் புலன்களின்மேல் செல்லல் ஓட்டாமல், அறிவு என்னும் அங்குசத்தால் அடக்கி, நெஞ்சமாகிய குதிரையைப் பகிர் முகமாகிய செண்டு வெளியில் ஓடவிடாது, பக்தியாகிய கடிவாளத்தை இறுக்கி, வைராக்கியம் என்ற தளையைப் பூட்டி, அந்தர் முகத்தில் நிறுத்தி, பரமகாருணியராகிய கடவுளைத் தியானித்து, அவருக்கு அடிமை பூண்டு, 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்ற வண்ணம், அகங்காரம் மமகாரமாகிய பற்றுக் களை வாசனையோடே கைவிட்டு, இனித் துஷ்கிருத்தியங்களைச் செய்யாது, கடவுள் ஆணைக்கமைந்து, அவருடைய திருவடித் தொண்டு செய்து, உனக்கொன்றுமில்லை என்னும் உபாய பரதந் திரனுய் ஒழுகினுல், பந்தம் கெட்டு மோட்சம் காணியாட்சியாகும்,' என்று அநுக்கிரகித்து, மனம் முதலாகிய திரிவிதத் கரணங்களாலும் காணப்படாத கடவுளைக் காட்டிக் கொடுத்த அவரது உப தேசத்தை மறவாது சிந்தித்து, சதாகாலமும் அவர் கிருபைக்குப் பாத்திரமாய் இருக்க வேண்டும்.

குருவைச் சாமானியராக நினையாமல், மானைக் காட்டி மானைப் பிடிப்பது போல மானிட உருக்கொண்டு வந்தவராகப் பாவித்து, அவர் வாக்கிலிருந்து வரும் மந்திரத்தைக் கேவலம் மனிதர் வாய்ச் சொல்லாக மதியாமல், கடவுளது திருவாக்கிலிருந்து

தொன்றுதொட்டுப் பரம்பரையாய் வந்த பரமார்த்தமென்று உண்மையாக மதிக்க வேண்டும்.

எப்படிப்பட்ட மகாத்துமாக்களாலுலும், குரு வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசாமலும், குரு வாய்மொழியைக் கடவுள் திருவாய் மொழியாக நம்பிஞலல்லவோ அவர்களுக்கு அநேக கற்பம் கழிந்தாலும் அழியாது நித்தியமாயிருக்கின்ற மோக்ஷ சித்தி உண்டு ? நம்பாதவர்களுக்கு என்ன உண்டு ?

குரூபதேசமே காமக்குரோதாதி உட்பகையைச் சேதிக்கின்ற வாளாயுதமென்றும், குருப்பிரசாதமே கடவுள் வரப்பிரசாத மென்றும் சிந்திக்க வேண்டும்.

எங்கும் குருவில்லாத வித்தை இல்லையாதலால், எப்பொழுதும் குருவைத் தொடர்ந்து ஆஸ்ரயிக்க வேண்டும் அல்லவோ ? குரு பாதமே கதியென்று சமுத்திரத்தில் இறங்கினவனுக்கு, அச்சமுத் திரம் கணுக்கால் ஆழமாயிருந்ததென்றும், ' என் பாதமே கதி,' என்று இறங்கினவன், அதில் அமிழ்ந்து இறந்தானென்றும் சொல்லக் கேட்டிருக்கிறேமே !

ஒரு நாள் ஒரு சீஷன் குருவின் உபதேசத்தைக் கேட்ட உடனே, ' சுண்ணும்பிலிருக்கிறது சூக்ஷம் ; சூக்ஷத்திலிருக்கிறது மோக்ஷம்,' என்று அறியும் அறிவில்லாமையால், ' இதென்ன ஆச்சரியம் ? ஆருக்குத் தெரியாது அண்டை வீட்டுக்காரன் பெயர் ? முன்னமே சொல்லலாகாதா ? ஏன்காணும் இதற்காக இத்தனை பணம் செலவிடச் செய்தாய் ?' என்று சொன்னதாகவும் சொல்லு கிறார்களே !

' கூரையேறிக் கோணல் சுரைக்காய் அறுக்காத குருக்களா, நானே வானத்தைக் கீறி வைகுந்தம் காட்டப் போகிறவர் ?' என்று, குருவைப் பரிகாசம் செய்த சீஷனுமிருந்தான் அல்லவா ? இவ்வித மான அபக்குவர்களுக்கெல்லாம் பந்தம் நீங்குமா ?

ஆசாரியர் சீஷனைத் தேடிவர, அவரைக் கண்ட மாத்திரத்தில், ' கும்பிடப் போன தெய்வம் குறுக்காக வந்தது,' என்று எண்ணி, அதிசீக்கிரமாக எழுந்திருந்து, எதிர்கொண்டு போய்த் தீர்க்க தண்டன் சமர்ப்பித்து, கை கட்டி வாய் பொத்தி உபசரியாமல், குந்தியபடி இருந்து, ' ஏண்டா குருக்களே ! எங்கடா வந்தாய் ? சாமி ! சாமி ! தெண்டம் ஐயா !' என்ற கர்வபுஞ்சமாகிய சர்வ மூட்டாளைப் போலக் குருவை அசட்டை பண்ணினவன் அதோகதி அடைவாள்.

4. கடவுள் செய்ந்நன்றி

கடவுளானவர், தமது நிரேதுக கிருபையினுலே, மூலப் பிரகிரு தியில் அழுந்திக் கட்டுப்பட்ட ஆத்மாவுக்குக் கரசரணுதி அவயவங் களைக் கொடுத்துப் பூமியில் ஜனிப்பித்து, போஷித்து, பரிபாலித்து, பரமாத்மாவாகிய தமக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள தாரதம்மியம்

இவ்வகைப்பட்டதென்று வேதாகமங்களின் மூலமாக விளக்கி, பூனை யானது தன்னைத் தழுவத் தெரியாத சக்தியற்ற குட்டியைத் தன் வாயினல் கவ்விச் செல்வது போல, தம்மை ஆசிரயித்து வழிபாடு செய்ய அறியாத சக்தியற்ற ஆத்மாவானது அறிந்து ஆசிரயித்து வழிபடச் செய்வதும், குளவியானது அற்ப ஜந்துவாகிய புழுவினைத் தன்னுருவாக்குவது போல, தமது திவ்விய சொரூபத்தை அது மருவப் பண்ணியும், உலகத்தார் மேகத்திற்கு ஒரு நன்மையும் செய்யாதிருந்தும், அம்மேகம் அவர்களுக்கு க்ஷேமமுண்டாக மழை யைச் சொரிவது போல, கடவுளானவர் ஆத்மாவினிடத்தில் கைம் மாறு வேண்டாது அடைதற்கரிய அசாத்தியமாய் ஒப்பற்ற பெரிய வீட்டின்பத்தை அடையும்படி செய்யும் மகோபகாரத்தை, 'வான் செய்த நன்றிக்கு வையகமென் செய்யும்? அதை மறந் திடாதே,' என்றபடி எப்பொழுதும் மறவாது தியானிக்க வேண்டும்.

தெய்வ பக்தியே தீவினையாகிய உளையைக் கடந்து செல்லும் ஊன்றுகோல்; தெய்வ தரிசனமே பிறவிக் கடலைக் கரை காணும் நாவாய்; தெய்வத் தியானமே முத்தியாகிய மேல் வீட்டிலேறும் நூலேணி; தெய்வத்தின் அருளுதயமே அஞ்ஞான இருளை ஒழிக்கும் ஆதித்யோதயம்; தெய்வ வணக்கமே நரகவாசலை அடைக்கும் தாழ்; தெய்வத்தை வாழ்த்தும் வாழ்த்தே பாச விலங்கைத் தறிக்கும் கருவியாம். தெய்வ பக்தி உதிக்காமல் உலக பாசம் ஒழியென்றாலும் ஒழியாது. தெய்வத்தைத் தொழாமல் பாவ நிவாரணமாகிறது பிரயாசம். தெய்வத்தை ஆராதிப்ப தல்லவோ தவம் செய்கை? அதற்கு அந்நியமாகச் செய்வதெல்லாம் அவஞ்செய்கையே. ஒரு நொடிப் பொழுதாவது தெய்வத்தை ஸ்துதியாத நாவுக்குப் பரிசுத்தம் ஏது? தெய்வ சிந்தனையினல் அன்றிச் சித்த சுத்தி சொப்பனத்திலும் வருமா? சுயகாரிய துரந் தரனும் சுவாமி காரிய 'வழவழ'கனுமாய் இருப்பவனுக்குத் தெய்வ கடாக்ஷம் எவ்வாறு கிடைக்கும்? 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்,' என்கின்றார்களே!

சூரியரஸ்மி பாயாததும், காற்று வீசாததும் ஆகிய இடமும் இருக்கலாம். கடவுளின் வியாபகத்திற்கு அந்நியமோ, ஒன்றுமில்லை. ஆதலால், அவருக்கு அகம் புறம் எங்கும் கண்; எங்கும் செவி; எங்கும் வாய்; எங்கும் முகம். சகலாண்ட சராசரமும் அவருடைய திருவுருவமாம். அதனல், அவர் காணுத காட்சியும், அவர் கேளாத கேள்வியும், அவர் பேசாத பேச்சும், அவர் அறியாத விஷயமும் இல்லை. அது பற்றி எவரும் அவர் ஆணையை மீறிக் குற்றம் செய்யவும், செய்த குற்றத்தை மறைக்கவும், ஒரு விதத்திலாவது அவரை வஞ்சிக்கவும் கூடாது. என்றாலும், எக்காலமும் அவர் திருவுளத்திற்குப் பாங்காய் நடக்கின்ற பக்தர் செய்த குற்றத்தை மாத்திரம் அவர் கண்டும் காணுமலும், உணர்ந்தும் உணராமலும் இருப்பார்.

சிலர் தங்களுக்கு வருத்தம் சம்பவித்த காலத்தில், தாம் செய்ததெல்லாம் குறையாயிருக்க, 'நானென்ன குறை செய்தேன்?' என்றும், தாம் செய்த சதியை நினையாமல், 'என்னளவில் தெய்வம் சதி செய்ததே!' என்றும், 'அதை வணங்குகிறதுதான் ஏதுக்கு? அதற்கென்ன கண்ணில்லையா?' என்றும், 'சாற்றுக்கில்லாத வாழைக்காய் பந்தலிலே கட்டித் தொங்க இருக்கிறதோ? இப்படிப் பட்ட ஆபத்துக்கு உதவாமல் இனி என்னதான் சாதிக்க இருக்கிறது?' என்றும், தெய்வத்தை நிந்திப்பார்கள். அது நன்மையே அன்று.

குருட்டுக் கண் தூங்கியென்ன, விழித்தென்ன? தெய்வ பக்தி யில்லாதவர்கள் கங்கா ஸ்நானம் செய்தாலும், வனவாசம் பண்ணி னாலும், மலைக் குகைக்குள்ளே கண்ணைத் திறவாமல் யோகத்தில் இருந்தாலும், முக்தி அடைய மாட்டார்கள். ஆமை, மீன், தவளை முதலானவைகள் கங்கா நதியில் உற்பவித்து, அக்கங்கைக்குள்ளே தானே மூழ்கி இருந்தும்; யானை, புலி, கரடி முதலியவைகள் காட்டில் உற்பத்தியாகி, அக்காட்டினிடத்திலேயே வாசம் செய்தும்; பகற்குருடாகிய கோட்டான் மரப் பொந்துக்குள்ளே தானே கண்ணை மூடிக்கொண்டிருந்தும் என்ன பிரயோசனம்?

தத்துவ விசாரணை செய்து, தாடி சடை வளர்த்து, தலையை முண்டித்து, தண்ட கமண்டலம் ஏந்தி, தவவேடம் பூண்டிருந்தும், தெய்வத் தியானம் இல்லாதவர்க்கு என்ன பயன் உண்டு? அவர் கொண்ட கோலம் அலங்கோலமான பேய்க் கோலம்; அல்லது, பிணக் கோலமே.

தெய்வத்தை அஞ்சலியாத கை, நெல் குற்றும் உலக்கை; அல்லது வீட்டு உத்திரக்கை. தெய்வத்தைப் பணியாத முடி, கழனியில் நடும் நாற்று முடி; அல்லது கம்பளை நார் முடி. தெய் வத்தைத் தரிசியாத கண், பனங்காய் நுங்குக் கண்; அல்லது பாம்புப் புற்றுக் கண். தெய்வத்தை வாழ்த்தாத வாய், மலஜல மோடும் கால்வாய்; அல்லது சுண்ணும்புக் காளவாய். தெய்வ ஸ்தலத்தைத் தேடிச் செல்லாத கால், கொல்லைப் பரண் கால்; அல்லது பந்தலுக்கு நாட்டும் கால். தெய்வ ஸ்திதியைக் கேளாத செவித் தொளை, பருத்த நுகத்தொளை; அல்லது பாழான சாரத் தொளையாம்.

காற்றுக்கு எதிரே ஏற்றிய விளக்கைப் போல அடிக்கடி அலைந்து, ஓயாமல் ஆடும் பம்பரம் போல இடைவிடாது சுழன்று, ஒரு வேலையும் இல்லாவிட்டாலும் நிற்க நேரமில்லாமல் திரியும் நாய் போல அரைக்கணமும் தங்காது காடு மலை காளுறுகளெல்லாம் கடந்து, லோகாலோகமெங்கும் ஓடி உழல்கின்ற பொல்லாத மன மென்னும் குரங்கு, அஞ்ஞானமாகிய வெறி கொண்டு, ஆணவ மாகிய மரத்திலேறி, பலவகை எண்ணமாகிய இலைகள் செறிந்த ஆசையாகிய கிளைகளைத் தாவி, தீவினையாகிய கனிகளைக் கொள்ளை

கொண்டு, சேஷ்டை செய்யவொட்டாமல், அதனை நிராசையாகிய கயிற்றினால் கட்டி, விடயவாதனை இல்லாமல் அடக்கி வைத்தாலும், தெய்வத்தை உணரும் ஞானமில்லாதவர்களுக்கும் மோக்ஷத்திற்கும் வெகுதூரமே.

" ஐயறி வறிந்தவை அடங்கினவ ரேனும்
மெய்யறிவி லாதவர்கள் வீடதுபெ ருரே."

என்றும் சொல்லியிருக்கின்றதே!

தெய்வநிலை இத்தன்மைத்தென்று அத்தெய்வத்தின் அருளைக் கொண்டு அறிந்தாலன்றி, மற்றெருரு விதத்தில் தெளியக் கூடாமையால், யானை கண்ட குருடர் போலவும்,

" தோள்கண்டார் தோளே கண்டார்; தொடுகழல் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்; தடக்கைகண் டாரு மஃதே;
வாள்கொண்ட கண்ணுர் யாரே வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கொண்ட சமயத் தன்னுன் உருவுகண் டாரை யொத்தார்."

என்ருற்போலவும், உலகத்திலுள்ள பற்பல சமயத்தாரும் பற்பல அவசரமாகத் தாம்தாம் கண்டதையே பொருளென்று மதித்து, அதற்குத் தக்க யுக்தி சாதனங்களைக்கொண்டு சாதிப்பார்கள். அதை விரிக்கில் பெருகும். ஆதலின், அது நிற்க.

ஔவையானவள், புகழேந்தி என்னும் புலவரை நோக்கி, தன் ஐந்து விரலையும் முடக்காமல் நெருக்கி உள்ளங்கையைக் குவித்தும், ஐந்து விரலையும் முடக்கிப் பிடித்தும், கடைவிரல் இரண்டையும் முடக்கி மற்ற மூவிரலையும் கோணமாக நிறுத்தியும், நால்விரல் முடக்கிச் சுட்டுவிரலை ஊர்த்துவ முகமாக நிறுத்தியும், ஐந்து விரலையும் குவித்தும் காட்டி, 'இந்த ஐந்து சமிக்கையைக் குறித்து ஒரு வெண்பாப் பாடவேண்டும்,' என்ற மாத்திரத்தில், அவர்,

" ஐயம் இடுமின்; அறநெறியைக் கைப்பிடிமின்;
இவ்வளவே யாயினுநீர் இட்டுண்மின்;—தெய்வம்
ஒருவனே என்று முணரவல் லீரேல்
அருவினைகள் ஐந்தும் அறும்."

என்று பாடிய பாடலுள்ளும்,

" எத்தேயத் தெத்திறத்தோர் எவ்வருணத்
தெவ்வுருவின் என்னை ஆய்ந்தார்,
அத்தேயத் தத்திறத்தோர்க் கவ்வருணத்
தவ்வுருவி னவர்நே ராவன்;
முத்தேவர் முத்தொழிலு முக்குணமும்
கடந்துமறை முடிவின் முத்தி
வித்தாகித் தனிநின்ற பரபிரமப்
பழம்பொருள்யான்; மெய்க்கொள் வாயே."

என்ற செய்யுளும், தெய்வம் ஒன்றென்று சொல்லுகின்றதனாலும், காரியமாகிய பணியும் பாண்டமும் பலவாயினும், காரணமாகிய பொன்னும் மண்ணும் ஒன்றுக விளங்குவதனாலும், தெய்வம் ஒன் றென்றே தெளிய வேண்டுமல்லது, பல என்று பிரமிக்கலாகாது.

5. அரசன் செய்ந்நன்றி

அரசனுனவன், உலகத்திற்கு அன்பில் சிறந்த தாய் போலத் தோன்றி, மன்னுயிர் யாவையும் தன்னுயிர் போலக் கருதி,

> "மாநிலங்கா வலன்என்பான் மன்னுயிர்காக் குங்காலை
> தானதனுக் கிடையூறு தன்னுல்தன் பரிசனத்தால்
> ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்த்தம்மால்
> ஆனபயம் ஐந்துந்தீர்த் தறம்காப்பான் அல்லனே ?"

என்ற வண்ணம், தன்னுலாவது, தன் பரிஜனத்தாலாவது, பகைவர் களாலாவது, திருடர்களாலாவது, மற்ற உயிர்களாலாவது சிறிதும் கொலை களவு சர்ப்பனை முதலாகிய உபத்திரவம் அணுகாமல், குடிகளுக்கு க்ஷேமமுண்டாகும்படி முறை பிசகாமல் செங்கோல் செலுத்தி, பிரஜைகளிடத்தில் கடுஞ்சொல் சொல்லாமலும், கடுந் தண்டம் விதியாமலும், அவரவர் தாரதம்மியம் அறிந்து, பக்ஷ பாதம் இல்லாமல், தயையாய்ப் பரிபாலனம் செய்கின்றதை மறக்க லாகாது.

ஆரைப் பகைத்தாலும் அரசனை மாத்திரம் பகைக்கலாகாது ; அரசவையிலிருந்து வறிதே அடிக்கடி நகைப்பதும், பரிகாசம் செய் வதும், ஒருவர் செவியில் ஒருவர் இரகசிய சமாசாரம் சொல்வதும், அரசனுக்கெதிரே அடக்கமில்லாதிருப்பதும், அரசனோடு எதிர்த்து அவனை அலக்ஷியமாகப் பேசுவதும் வீண் போகாமல், திரவியநஷ்டத் தையும், மானபங்கத்தையும், பிராணசேதத்தையும் வருவிக்கும். 'செங்கோலுக்கு முன்னே சங்கீதமா ?' திருக்குறள்,

> "செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
> ஆன்ற பெரியார் அகத்து."

என்றும் சொல்லுகின்றதே !

அரசனது தயையைப் பெற்று, அவனை அந்நியோந்நியமாகச் சிநேகித்து, அவனுக்கு அனுகூலப்படாத விரோதிகளை எல்லாம் சதித்து, அவன் மனம் மகிழும்படி அநேக திரவியங்களைச் சம் பாதித்துக் கொடுத்து, அவனால் நன்கு மதிக்கப்பட்டவர்கள் ஆனாலும், அவன் விஷயத்தில் நெறி தவறி இவேசமாத்திரம் பிழை செய்தாலும், குடி முழுகிப்போம். 'வேங்கைப் புலியும் ராஜாவும் சரி,' என்கிறூர்களே ! ஆதலால், அவனை விஷ சர்ப்பம் போலவும், கடு நெருப்புப் போலவும் நினைத்து, அவனுக்குப் பயந்து நடக்க வேண்டும்.

துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்பவனுகிய அரசன் இல்லாத நாடு, தன்னரசு நாடாய் உபத்திரவத்திற்கே உறைவிடமாகும்.

'அரசன் உடைமைக்கு ஆகாசவாணி சாக்ஷி,' என்பதனுல், அவனே வஞ்சித்து அவனுக்குச் செலுத்தத்தகும் இறைப் பொருளே அபகரிக்கலாகாது; அபகரிப்பது கர்த்துரு துரோகமாம். மாதுரு துரோகம், பிதுரு துரோகம், குரு துரோகம், சுவாமி துரோகம், சிநேக துரோகங்கள் மறுமையில் துன்பத்தை விளேக்கும். இஃது இம்மையிற்றுனே துன்பத்தைச் செய்யுமாதலால், அவைகளிலும் இது மிகக் கொடியதாம்; ராஜதரிசனமும், ராஜதயையும், ராஜாபிமானமும் ஒருவர்க்கு எளியனவல்ல.

அரசன், பொன், மணி, நெல் முதலிய மிதமற்ற திரவிய பலமும்; மலேயரண், காட்டரண், மதிலரண், நீரரண் ஆகிய நால் வகையரண் சூழ்ந்த ஸ்தான பலமும், அகண்ட ராச்சிய பலமும்; சமுத்திரம் போல அளவிறந்த ரத கஜ துரக பதாதிகள் என்னும் சதுரங்க பலமும்; வில், கணே முதலிய எய்வனவும்; சக்கரம், தோமரம் முதலிய எறிவனவும்; வாள், பரிசை முதலிய வெட்டுவனவும்; சூலம், ஈட்டி முதலிய குத்துவனவுமாகிய ஆயுத பலமும்; சத்துருக்களுக்கு எதிரே மான் கூட்டத்தில் புகுந்த பெரும்புலி போலவும், யானேக் குழாத்திற்கு முற்பட்ட வீரசிங்கம் போலவும் கர்ஜித்து, நிர்ப்பயமாய், முன் வைத்த காலேப் பின் வையாமல், முதுகு காட்டாமல், விழித்த கண் சிமிட்டாமல், எய்ப்பில்லாமல், 'காயமென்ன கற்கண்டா? உயிரென்ன தித்திப்பா? ஆறிலும் மரணம், நூறிலும் மரணம்,' என்பதை நிச்சயித்துப் பிராணனேத் துரும்பு போல அலக்ஷியம் பண்ணி, 'இறந்தால் வீர சொர்க்கம்; வென்றுல் ராச்சிய லாபம் உண்டு,' என்கிற நம்பிக்கையினுல், முன் காயப்பட மூர்த்தன்னியமாய்ப் போர் செய்து எதிரிகள் அதமாகக் கண்டதுண்டமாக்கி வெல்லுகின்ற உத்தண்டமான புஜபலமும்; எந்தத் திக்குப் போனுலும் அபஜயப்படாமல் சாதித்து வரத்தக்க காலபலமும்; மந்திரி பிரதானிமார்களுடைய ஆலோசனேயின் பலமும்; தானுபதிகள் நியாயாதிபதிகளுடைய விசேஷ பலமும்; மெய்காப்பாளர் கடைகாப்பார்களுடைய காவற் பலமும்; தன்னே விட்டு நீங்காத உறுதிச் சுற்றத்தின் பலமும்; தனது பூரண மான வித்தியா பலமும், விவேக பலமும், என்றும் சலியாத மனே பலமும், எங்கும் கிள்ளாக்குச் செல்லாநிற்கும் வாக்குப் பலமும் ஆகிய சுயநல உப பலன்களேப் பிரபலமாகப் படைத்தமையால், தான் நினேத்தபடி எல்லாம் முடிப்பதற்கு ஒரு விதத்திலும் தடையில்லேயே! அதுபற்றி, தனக்குள்ளே, 'நாம் முறை தவறி நடந்தால் நம்மைக் கேட்பவனுர்? நமக்கெதிர் ஒருவருமில்லே; நாம் அடித்தது ஆட்டம்; பிடித்தது பெண்டு,' என்று கர்வித்தால்,

" மலேயின்மிக் கானவர் என்ருலும் கர்வ மமதையுற்ருல்
நிலேமைகெட் டோடுவர்;ஈடே றுவதில்லே; நிச்சயமே;

அலைகடல் தேங்கும் துரியோ தனன்செல்வ மத்தனையும்
தலைமுறைக் கும்வந்த கேடாகும் ரத்ன சபாபதியே !''

என்ற வண்ணம், அவசியம் கேடு வரும் ஆதலால், அவன், 'நமக்கு மேலே தெய்வமிருக்கிறது. 'அரசன் அன்றெறுக்கும் ; தெய்வம் நின்றெறுக்கும்.' தெய்வம் பொறுத்தாலும் பூமி பொறுக்காது ; அண்டமிடிந்து தலைமேல் விழும். அதனால், நெருப்பாறும் மயிர்ப் பாலமுமாக நடக்கவேண்டும்,' என்று கருதி, மழையைத் தனக் காதாரமாக நோக்கியிருக்கும் பயிர் போல, குடிகள் தமக்கு ஆதார மாகத் தனது செங்கோலையே நோக்கியிருப்பதையும், அச்செங்கோல் கோணினால் எங்கும் கோணும் என்பதையும், 'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்,' என்பதையும் உய்த்துணர்ந்து, தானே தன் மனத்தில் இரக்கம் கூர்ந்து, நீதி பிசகாது நடக்க வேண்டும். அங்ஙனம் நடவாமல், அநீதியாய் நடந்தால், அவனை, 'இஃது உனக்குத் தகாது,' என்று தண்டிக்கவாவது, அவனைத் தள்ளி வேறோரரசனை ஸ்தாபிக்கவாவது ஆருக்குச் சாத்தியம் ? வாழைத் தோட்டம் கருப்பந்தோட்டங்களில் புகுந்து, வாழைகள் கரும்புகளை வேருடனே பிடுங்கி முறித்துச் சாடுகின்ற பெரிய மதம் பிடித்த யானையைச் சிறிய கொசுகுக் கூட்டம் போய்த் தடுக்கக் கூடுமா ? மழைக்குக் குடை பிடிப்பதுண்டு ; இடிக்குக் குடை பிடிப்பார்களா ?

''படித்துச்செங் கோல்மன்னர் நீதிசெய் யாதுவெம் பாவம்செய்தால்
பிடித்துத்தள் ளத்தக்க பேருமுண் டோஇந்தப் பேருலகில் ?
அடித்துச் சொரியும் மழைக்கேயல் லாமல் அதிர்ந்துவிழும்
இடிக்குக் குடையுமுண் டோவெள்ளை நாவ லிருப்பவனே!''

என்றும் கூறி இருக்கின்றதே!

ராஜாவைத் தந்தையாகவும், ராஜபத்தினியைத் தாயாகவும் பாவித்து வணங்க வேண்டும். தாய்மார், பாராட்டும் தாய், ஊட்டும் தாய், மூலத் தாய், கைத் தாய், செவிலித் தாய் என ஐவராவர். அன்றியும், அரசன் தேவி, குருவின் தேவி, அண்ணன் தேவி, தன் தேவியை ஈன்றுள், தன்னை ஈன்றுள் எனவும் சொல்லப் படுவர். தந்தையர், பிறப்பித்தோன், கல்வி கற்பித்தோன், மணம் முடிப்பித்தோன், அன்னம் தந்தோன், ஆபத்துக்கு உதவி னோன் என ஐவகைப்படுவர். குருவானவர், வித்யா குரு, உபதேச குரு என இருவராவர். இவருள் காரண குரு, காரிய குரு என்று சொல்லப்படுவாரும் உண்டு. அரசர், சிங்காசனாதிபதி, சேனாதிபதி என இரு வகையாவர் ; தேசாதிபதி, மன்னர் மன்னன் எனவும், மகாராஜன், யுவராஜன் எனவும் சொல்லப்படுவர். தாய், தந்தை, குரு, அரசன் என்னும் இவர்களுக்குள் தாரதம்மியம் உண்டாயினும், 'அவர் அத்தன்மையர் ; இவர் இத்தன்மையர்,' என அவரை ஒருவருக்கொருவர் வேறுபாடு உடையவராக எண்ணு வதும் பேசுவதும் யுக்தமன்று.

6. பெரியோர் செய்ந்நன்றி

பெரியோர்கள் ஜீவகாருண்யத்தால், ‘ யாம் பெற்ற பேறு வையகம் பெறுக !’ என்று எண்ணி, சகலரும் விதி விலக்குகளே அறிந்து நெறி வழாது ஒழுகி, இம்மை இன்பத்தையும் மறுமை இன்பத்தையும் அடையும்பொருட்டு லோகோபகாரமாகச் சகல தர்மங்களையும், ஆசாரம் விவகாரம் பிராயச்சித்தம் என மூன்று வகையாகச் சாஸ்திர முகத்தால் உள்ளங்கை நெல்லிக்கனி போல விளக்கி அநுக்கிரகித்ததனால், அந்த ஆப்த வசனத்தை மறவாது சிந்திக்க வேண்டும்.

மேற்கூறிய ஆசார தர்மமாவது, யாவரும் தங்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட நிலைகளிலே நின்று, அவைகளைக் குறித்துச் சொல்லிய தர்மங்களில் வழுவாது நடத்தல் ; விவகார தர்மமாவது, ஒரு பொருளையே ஒருவன் எனதென்றும் மற்றொருவன் தனதென்றும் சுதந்தரித்து அந்தப் பொருளின்மேல் வழக்குத் தொடுத்தல் ; பிராயச்சித்த தர்மமாவது, மேற்குறித்துச் சொல்லிய ஆசார வழியிலும் விவகார வழியிலும் பிசகி நடந்தவர்களை அவ்வழியிலே தவறுது நிலைக்கச் செய்யும்படி, பகைவர் சினேகர் அயலார் என்னும் பக்ஷபாதமில்லாமல், பொதுப்பட ஆராய்ந்து, அதற்கேற்கத் தண்டித்தலாம்.

‘ பெரியாரைத் துணைக்கொள்,’ என்றதனால் என்றும் பெரியோரையே நேசிக்க வேண்டும். அவர்கள் நேசத்தை ஒரு பொழுதும் கைவிடலாகாது. அநேகரது பகையைத் தேடிக்கொள்வதனால் வரும் தீமையிலும், ஒரு பெரியோரது நேசத்தை இழந்துவிடுவதனால் வரும் தீமை பதின்மடங்கு அதிகமாகும்.

> “ பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
> நல்லார் தொடர்கை விடல்.”

என்று சாஸ்திரம் சொல்லுகின்றதே !

உருத்திராட்சப் பூனை போலவும் கோமுக வியாக்கிரம் போலவும் வேஷதாரிகளாய்ப் பிரபஞ்சத்தாரை மயங்கும்படி நடிப்பவர்களை அன்றி, ‘ சேரிடம் அறிந்து சேர்,’ என்றதற்கு ஏற்கக் களங்கமில்லாத பொன் போலும் உண்மையாகிய பெரியோர்களை அறிந்து, அவர்களிடத்தில் சேர்ந்து, அவர்கள் சொற்படி நடக்க வல்லவர்களுக்கு, அறம் பொருள் இன்பம் வீடு என்பவைகளில் எது தான் அரிதாகும் ? ‘ கற்பகத் தருவைச் சார்ந்த காகமும் அமுத முண்ணும்,’ அல்லவோ ?

> “ முருகுவிரி மலர்க்கொடிகண் மூங்கின்மிசைப் படர்ந்துபோய்ப்
> பொருவரிய துறக்கத்துப் புகுந்துவளர் கற்பகமாம்
> மரமுமுதும் படர்ந்துலவும் ; வளர்மதியின் மேலாய
> பெரியவரை அடைந்தொழுகப் பெறிற்றுறக்கம் புகலரிதோ ?”

என்றும் சொல்லியிருக்கின்றதே !

தபோ மகிமை, சாபாநுக்கிரக சாமர்த்தியம், அஷ்டாங்க யோகம், அஷ்டமாசித்தி முதலாகச் சொல்லி முடியாத தமது வல்லமைகளை எல்லாம் நீறு பூத்த நெருப்புப் போலவும், கரித் துணியில் முடிந்த மாணிக்கம் போலவும் புறத்தில் தோன்றுமல் அடக்கி, கோபமாகிய நெருப்பை மூண்டு எழவொட்டாமல் கிருபை யாகிய நீரினால் அவித்து, சாந்தத்தையே மேற்கொண்டு, பரம சாதுக்களாய் இருப்பதனாலும், 'சிறியோர் செய்த சிறு பிழையெல் லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே,' என்பதனாலும், பெரியோர்களுக்குக் கோபம் வாராதென்று எளிதாக நினைத்து, நெருப்பை முன்னுனையில் முடிவது போலவும், விஷப்பரீக்ஷை பண்ணுவது போலவும், அவர்கள் விஷயத்தில் அவசரப்பட்டுக் கோபமூட்டலாகாது. மௌனம் மலையைச் சாதிக்குமல்லவோ ?

துறவு, மெய்யறிவு, ஆசையில்லாமை முதலிய நற்குணம் என்னும் அசைவற்ற பெரிய மேரு சிகரத்தில் ஏறியிருக்கின்ற சான்றோருடைய கடுங்கோபமாகிய நெடுங்கழியில் இறங் கினவர்கள், துக்கமாகிய முதலை வாயில் அகப்பட்டுக் கரை சேர மாட்டார்கள்.

மற்றச் சுற்றத்தார் சினேகர் அயலார் முதலானவர்கள் செய்த நன்றியையும் ; சத்திரம், சாவடி, தோப்பு, துரவு, ஏரி, வாவி, குளம், கோயில், சந்தி, சதுக்கம் முதலியவைகளை உண்டாக் கினவர்கள் செய்த நன்றியையும் மறக்கலாகாது. மேலும், பொருளினால் வாக்கினால் சரீரத்தினால் எவரெவர் எவ்வளவு சொற்பமான உதவியைச் செய்தாலும், 'இது எம்மாத்திரம் ?' என்று அற்பமாய் எண்ணுமல், அவ்வுதவி செய்யப்பட்ட காலம் காரணம் முதலியவைகளைப் பற்றி மிகப் பெரிதாகவே கொள்ள வேண்டும்.

> " தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
> கொள்வர் பயின்தெரி வார்."

என்று வழங்குகின்றதே !

'ஆண்டியைக் கண்டால் லிங்கன் ; தாதனைக் கண்டால் ரங்கன்,' என்பவரைப் போல, அவரவர்களுக்கு ஏற்றபடி நடந்து, அவர்களால் தமக்கு வேண்டிய உதவிகளை வேண்டியபடிக்கெல்லாம் பெற்றுக்கொண்டு, அவர்களுக்குப் பிரதி உபகாரம் செய்ய வேண்டு மென்ற எண்ணம் சிறிதும் இன்றி, 'அறுந்த விரலுக்குச் சுண்ணும் பிடாமல்,' லோப குணத்தையே பெரும்பான்மையாகக் கொண்டு, 'இடாள் தொடாள் ; மனுஷர்மேல் செத்த பிராணன்,' என்ற பாவனையாக, விசுவாச காதகர்களாய் இராமல், யதார்த்தமாக ஒரு நன்றி செய்தார்க்கு ஆபத்து வந்த காலத்தில் பெறுதற்கரிய தமது உயிரையாவது கொடுத்து அக்கடனைக் கழிப்பதுமன்றி, அவ்வொரு நன்றியின் நிமித்தம் அவர் அநேகம் பிழைகளைச்

செய்தாலும், அவைகளை எல்லாம் பாராட்டாமல் பொறுத்துக் கொள்ளவும் வேண்டும்.

"ஒருநன்றி செய்தாரை உள்ளத்தே வைத்துப்
பிழைநூறும் சான்றோர் பொறுப்பர்."


என்றும் சொல்லுகின்றதே!

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

எந்த நன்றியை மறந்த பாவத்திற்கும் பிராயச்சித்தமுண்டு; ஒருவர் செய்த நன்றியை மறந்த பாவத்திற்கு மாத்திரம் பிராயச்சித்தமில்லை; நரகமே கதி.

'சாரத்தை உட்கொண்டு சக்கையை உமிழ்ந்துவிடுவது இயல்புதானே?' என்று எண்ணி, ஒருவர் செய்த நன்றியை மாத்திரம் ஏற்றுக்கொண்டு, அந்நன்றி செய்தாரை அவமதிப்பது தர்மமன்று. பழத்தைக் குறித்து மரத்தைப் பாலிப்பது போலவும், பாலைக் குறித்துப் பசுவைப் போஷிப்பது போலவும், செய்த நன்றியைக் குறித்துச் செய்தாரையும் மறவாமல் நன்கு மதிக்க வேண்டும். 'உப்பிட்டவர்களை உள்ளளவும் நினைக்க வேண்டும்,' என்கிறார்களே!





[‘கல்வியிற் பெரியவர் கம்பர்’, ‘கம்பநாடன் கவிதையிற்போல் கற்ருேர்க்கு இதயம் கனியாதே,’ என்பவை நாடறிந்த பொன்மொழிகள். கம்பர் வரலாற்றின் சுவையான பகுதியொன்றினை இங்கு ஆசிரியர் சித்திரித்துள்ளார். ‘கற்ருேர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு! புவியரசனேவிடக் கவியரசனேயே இந்த உலகம் போற்றிப் புகழும்,’ என்னும் உண்மைகளின் படப்பிடிப்பாக இக்கட்டுரை காட்சி அளிக்கிறது. இராமாயணப் பாடல்கள் சிலவற்றுக்கு இங்குக் கூறப்படும் நயமான விளக்கங்கள் கற்பவர்க்கு அரியதொரு விருந்தாகும்.

— பதிப்பாசிரியர்]

7

கம்பர் சரித்திரத்தின் ஒரு பகுதி

ஒரு நாள் சூரியாஸ்தமன காலத்திற்கு முன்பு புஷ்பக் கொத்துகளில் பஞ்சவர்ணக் கிளிகள் கொஞ்ச, பூங்கொடிகள் பொற்ருெடி மாதர் போல அசைய, கிளைவிளக்கு ஏற்றினூற் போலச் சண்பகங்கள் பொன்னிறமாகிய அரும்பெடுக்க, குடமல்லிகைகள் வெள்ளிக்காளாஞ்சி ஏந்துவது போலத் தளையவிழ்ந்து மலர, அம் மலர்களிலிருந்து மடை திறந்தாற்போலக் குபுகுபென்று குமிழியிட்டுப் பாயும் இனிய தேஞ்யுண்டு கீதம் பாடுவது போல வண்டுகள் ஒலி செய்ய, மத்தளம் முழங்குவது போல அங்குள்ள தடாகத்தின் அலைகள் குமுறிச் சத்திக்க, சுதி கூட்டுவது போல மாங்குயில்கள் தீங்குரலாய்க் கூவ, கூத்தியர் போல அழகிய கலாபத்தை விரித்து மடமயில்கள் ஆட, குளிர்ச்சி பொருந்திய மந்தமாருதமானது கமகமவென்று பரிமளிக்கின்ற மிருதுவான மகரந்தப் பொடிகளே வாரிக் கொண்டு வந்து கதம்பம் இறைப்பது போல வீசுகின்ற திவ்வியமான கற்பகச் சோலே போலும் அதிக ரம்மியத்தைத் தருகின்ற விசித்திரமாகிய ஓர் இளம்பூங்காவில் விசாலமாகிய வெண்மணல் சாலேயில் குலோத்துங்க சோழ ராஜனும் வித்வஜன சிரோமணியாகிய கம்பரும் உல்லாசமாய்

உலவிக்கொண்டிருக்கையில், சோழனுனவன் கலகலவென்று உடல் குலுங்க நகைத்தான். கம்பர் அவனை நோக்கி, 'மருமானே, ஏன் சிரிக்கிறீர்?' என்ன, சோழன் கம்பரைப் பார்த்து, 'அம்மானே, எனக்கு நகைப்பு வந்ததை என்னவென்று சொல்வேன்!' என்றான். இவர், 'அதை நாமறியக் கூடாதோ?' என்ன, அவன், 'நீரறியாததும் உண்டோ? கேளும்: இந்த ராச்சியமும் இதிலுள்ள சகல பிரஜைகளும் நமக்கு ஐக்கியமல்லவா என்று எனக்குச் சிரிப்பு வந்தது,' என்றான். கம்பர், 'எல்லாம் உமக்கு ஐக்கியம் என்பதற்கும், நீர் நமக்கு ஐக்கியம் என்பதற்கும் யாதொரு சந்தேகமுமில்லை,' என்று கூடச் சிரித்தார். சோழனுக்கு அந்தச் சொல் செவி பொருமல் முகம் வாடிப் போக, 'இவரென்ன, நம்மைப் போல மண்டலாதிபதியா! நமக்குக் கீழ்ப்பட்டிருந்து நாம் கொடுக்க வாங்கிச் சீவனம் பண்ணுகின்ற வித்வான்தானே! இவர் நம்மைக் கொஞ்சமாவது மதியாமல், தமக்கு ஐக்கியமென்றாரே! இது தகுமா? இந்தச் சொல் மற்றவர்கள் சொன்னால், அவர்கள் அக்கணமே சிரச்சேதம் பண்ணப்படுவார்களல்லவா!' என்று நினைத்துக் கம்பருடனே பேசாமல், கோபத்தோடே திட்டி வாசலால் நுழைந்து, அரண்மனைக்குட்போய்ச் சபரகோள மஞ்சத்தில் படுத்துக்கொண்டிருந்தான்.

அந்நேரத்தில் வழக்கப்படி அரசன் மனைவி சிற்றுண்டி கொண்டு வந்து வைத்துப் புசிக்கும்படி உபசரித்தாள். அரசன் வெறுப்பினால் அதைப் புசியாமல், அவளுடனும் பேசாமலிருக்க, அது கண்டு ராஜபத்தினி அரசன் வைப்பாட்டியாகிய பொன்னி என்னும் பெயருடைய தாசியை அழைப்பித்து, 'ராஜாவைப் பலகாரம் பண்ணும்படி செய்ய வேண்டும்,' என்றாள். அவள், 'அம்மா, இதோ பாரும் ஒரு நொடிக்குள்ளே உங்கள் அபீஷ்டப்படி நடப்பிக்கிறேன்,' என்று, அவன் கிட்டப் போய்த் தட்டி எழுப்பினாள். அரசன் எழுந்திராதது கண்டு, மனுபடி அவள் அவனுக்கு இதமாகிய லாலனைகளைச் செய்து அதிசுதந்தரம் பாராட்டித் தூக்கி உட்கார வைத்து, 'சர்வோத்தமியாகிய உமது பத்தினிமேல் உமக்குச் சலிப்பேன்? ஆயினும், எனக்கு இணங்காமல் பிணங்குகின்றது என்ன காரணம்?' என்றாள். அவன் தனக்கும் கம்பருக்கும் நடந்த சம்பாஷணையை வெளியிட்டான். வாழ்வு தாழ்வு இரண்டுக்கும் தன்னொடொத்த அருமை மனைவிக்குச் சொல்லாமல் மனத்தில் வைத்து மறுகின செய்தியைத் தாசிக்குச் சொன்ன உடனே தாசி, 'இதற்குத்தானு இவ்வளவு யோசனை! உம்மைத் தமக்கு ஐக்கியமென்று சும்மா வாயினால் சொன்ன கம்பரை நான் மெய்யாய் எனக்கு அடிமையாக்கிக் கொள்ளுகிறேன்; என் சாமர்த்தியத்தைப் பாரும்! நீர் எழுந்து பல காரம் பண்ணும்,' என்று சொல்லிவிட்டு, அந்த க்ஷணமே தன் வீட்டுக்குப் போய்த் தாதியை அழைத்து, 'கம்பர் தெருவிலே வரக் கண்டால், நான் அழைக்கிறேனென்று உள்ளே அழைத்து வா,' என்று வாயிற்படியில் அவளை நிறுத்திவைத்துத் தான் போய்க்

கட்டிலின்மேல் படுத்துக்கொண்டாள். அப்படியிருக்க, பூங்காவிலிருந்த கம்பர், தீபம் வைக்கிற வரையிலும் அரசன் வருகையை எதிர்ப்பார்த்திருந்து, அவன் வாராமையால், 'நாம் சொன்ன சொல் அவன் மனத்தில் உறைத்திருக்க வேண்டும். அதனுல் சீற்றம் கொண்டு போய்விட்டான். எல்லாம் நாலீக்குத் தெரியவருகிறது,' என்று தாம் பல்லக்கேறி வீட்டுக்குப் போகும்பொழுது, தாதி கண்டு கும்பிட்டு, 'அம்மாள் அழைக்கிறூர்கள்,' என்ருள். கம்பர் உள்ளே சென்ருர். திகம்பரியாய்க் கட்டிலின்மேல் புரண்டுகொண்டிருந்த வேசையானவள், இவரைக் கண்டவுடனே எழுந்து ஓடி வந்து கட்டிக்கொண்டு, 'நான் மோகம் கொண்டேன்; என் மோகத்தைத் தீர்க்க வேண்டும்,' என்ருள். கம்பர், 'அம்மா, நீ அரசன் மனவியாயிருப்பதனுல் எனக்கு மகளாக வேண்டும். இது தோஷத்திற்கு இடமாயிருக்கிறது. இதை விட்டுப் பின் எதைச் சொன்னலும் தட்டாமல் செய்வேன்,' என்ன, தாசி, 'அப்படியே பிரமாணிக்கம் செய்யும்,' என்ன, இவர் செய்த மாத்திரத்தில் அவள், 'நீர் எனக்கு அடிமை என்பதாகச் சாசனம் எழுதிக்கொடும்,' என்ருள். இவர், 'நல்லது! அதற்குத் தடையில்லே!' என்பதாக உடனே ஏடும் எழுத்தாணியும் கொண்டுவரச் சொல்லி, 'தாசி பொன்னிக்குக் கம்பனடிமை' என்று வருஷம், மாசம், தேதி வைத்தெழுதிச் சாக்ஷி குறித்துக் கையெழுத்திட்டுக் கொடுத்துவிட்டுச் செலவு பெற்றுக் கொண்டு போய்விட்டார்.

பின்பு அவள் அந்தச் சாசனத்தை அரசன் கையில் கொண்டு போய்க் கொடுத்தாள். அவன் பார்த்துச் சந்தோஷித்துச் சூரியோதயமானவுடனே அனேவருக்கும் முன்பாகத் தான் அரசாட்சி மண்டபத்திற்கு வந்து சகலமானவர்களேயும் அழைத்து வரச் சொல்லி, கம்பர் வந்து சேர்ந்தவுடனே மந்திரியை அனுப்பி அப்பத்திரத்தை எடுத்து வரச் செய்து, அவருக்குக் காட்டி, 'இதில் வைத்திருக்கும் கையெழுத்து உம்முடையதுதானு? பாரும்,' என்ருன். கம்பர் பார்த்து, 'ஆம்,' என்ருர். அப்புறம் அதை வாசிப்போன் கையில் கொடுத்து, யாவரும் கேட்க வாசிக்கச் சொல்ல, வாசித்த போது அதைக் கேட்ட சபையாரெல்லாம், 'இஃதென்ன அநியாயம்!' என்று மனம் கலங்கிச் சரீரம் பதைபதைத்தார்கள். அரசன் கம்பரை நோக்கி, 'தாசி பொன்னிக்கு நீர் அடிமைதானு?' என்ருன். கம்பர், 'அதற்கு ஐயமென்ன?' என்ருர். அரசன் தன் சரீரம் குலுங்கப் பெருநகை செய்து, 'மகா வித்துவானுகிய நீர் தாசி பொன்னிக்கு அடிமையென்பது உமக்கு வெட்கமல்லவா?' என்ருன். இவர், 'நாமேதாவது திருடினுேமா? செய்யாத காரியம் செய்தோமா? ஒன்றுமில்லேயே! அதன் தாற்பரியத்தை உள்ளபடி அறிந்தவர்க்கு வெட்கமேது?' என்ருர். அரசன், 'அஃதென்ன? சொல்லும்,' என்ருன். இவர், 'தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை என்பது, ஆறு பதங்களால் முடிந்த ஒரு வாக்கியம். இவ்வாக்கியத்தில் முதற்பதம், தா; இதில் இறுதி யகர

வொற்றுத் தொகுத்தல் விகாரம்; 2-வது சி; இது குறுக்கல் விகாரம்; 3-வது பொன்னி; இது விகுதி பெற்றது; 4-வது கு; 5-வது, கம்பா; 6-வது, அடிமை. இவை சொற்பிரிப்பு; தாய்-அன்னை; சீ-மங்களகரம்; பொன்னி-லக்ஷ்மி; கு-நான்காம் வேற்றுமை உருபிடைச் சொல்; கம்பன்-இயற்பெயர்; அடிமை-தொண்டு. இவை சொற்பொருள். பொருள்: உலகமாதாவாகிய ஸ்ரீ லக்ஷ்மிக்குக் கம்பனடிமை என்பது தாற்பரியம். இங்ஙனம் புருஷகாரியாகிய ஸ்ரீ மகாலக்ஷ்மிக்கு நாம் அடிமை என்றுதானே எழுதிக் கொடுத்தோம்? இதனால் நமக்கு இழிவு வருமா? நீரேன் வியர்த்த மாய்ப் பரிகாசம் செய்கிறீர்?' என்று சொன்னர்.

அது கேட்டுச் சோழன் தனது இறுமாப்பும், தலை தெரியாத சந்தோஷமும் தடுமாறிக் கம்பரை, 'அணிலேற விட்ட நாய் போல' ஏற இறங்கப் பார்த்து, அதிக உக்கிரம் கொண்டு நகைத்து, 'இந்த வித்துவான்களை நம்பலாகாது! பொருள் கொடுத்தவர்களை இந்திரன் சந்திரன் என்று ஸ்துதி செய்தாலும் செய்வார்கள்; அது கொடாவிட்டால், எப்படிப்பட்டவர்களானாலும் அவர்களைப் பிரத்யக்ஷத்திலேயே புத்தியில்லாதவன் என்றும், தீரியாவரக்காரன் என்றும், இன்னும் அநேகவிதமாகவும் தூஷித்தாலும் தூஷிப்பார்கள். இவர்கள் தூஷிப்பதைக் காதினால் கேட்டவர்கள், 'ஏன் காணும் தூஷிக்கிறாய்?' என்றால், 'நான் தூஷித்தேனா? 'புத்தியில்லாதவன்' என்றது, 'அறிவில் சூரியனுக்குச் சமமானவன்' என்றும், 'தீரியாவரக்காரன்' என்றது, 'மாறுபடாத நல்வரம் பெற்றவன்' என்றும் சொன்னவைகளேயல்லாமல் வேறென்ன?' என்று தாம் சொன்ன சொற்களை மாற்றினாலும் மாற்றுவார்கள். பொல்லாதவர்கள்! அம்மம்ம! யமனைப்பார்க்கிலும் இவர்கள் கொடியவர்கள்!' என்று கூறி, இக்கருத்துக்கிசைய,

> "போற்றினும் போற்றுவர்; பொருள்கொ டாவிடின்
> தூற்றினும் தூற்றுவர்; சொன்ன சொற்களை
> மாற்றினும் மாற்றுவர்; வன்க ணாளர்கள்
> கூற்றினும் பாவலர் கொடிய ராவரே."

என்ற ஒரு பாடலைச் சொல்லி, சோழ ராஜன் கம்பரை, 'இன்று முதல் நீர் என் தேசத்திலிருக்க வேண்டா. நான் உமக்குக் கொடுத்திருக்கிற விருதுகள் முதலானவைகளையும் வாங்கி வைத்து விட்டு எங்கேயாவது போய்விடும்!' என்றான்.

கம்பரும் அப்படியே சகல விருதுகளையும் ஆடையாபரணங்களுடனே வாங்கி வைத்துவிட்டு, அவனுக்கு எதிரே நின்றுகொண்டு, 'ஓ அரசனே, உன் தேசத்தை விட்டுப் போய்விடச் சொன்னயல்லவா? நல்லது! உன்னுடைய தேசம் எவ்வளவு? இருபத்து நாலு காத தூரந்தானே? அதற்கப்பால் உனக்கென்ன சுவாதீனம் இருக்கிறது? இத்த இருபத்து நாலு காதமொழிய, மற்றத் தெற்கி

லுள்ள ஐம்பத்தாறு காத தூரமாகிய பாண்டிய தேசமும், மேற்கிலுள்ள எண்பதின் காத தூரமாகிய சேர தேசமும், வடக்கிலுள்ள அநேக தேசங்களும் எங்கே போய்விட்டன? சமுத்திரம் கொண்டு போய்விட்டதா? நீ கோபித்தால் எங்களுக்கு வேறு புகலிட மில்லையோ?' என்பதற்கேற்க,

" காத மிருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ ?—மேதினியில்
கொல்லிமலை நாடாளும் கொற்றவா ! நீமுனிந்தால்
இல்லையோ எங்கட் கிடம் ?"

என்ற பாடலையும், 'அன்றியும் பூர்வமிருந்ததிலும் இப்பொழுது உன்னுடைய தேசம் அதிக விசாலமாய்விட்டதோ? அல்லவென்று தேசத்திலுள்ள மலைகளையெல்லாம் நீ பறித்தெடுத்துக் கடலில் எறிந்துவிட்டுக் காடு கரம்புகளெல்லாம் திருத்தி விசாலமாக்கிக் கொண்டாயோ? அது ஒன்றுமில்லையே!' என்பதற்கிணங்க,

" அன்றையிலு ஞாலம் அகன்றதோ ? அல்லதென்று
குன்றெடுத்து நீதிருத்திக் கொண்டனையோ ?"

என்ற பாடலையும், 'உலகத்திலுள்ள அரசர்களுக்கெல்லாம் நீதானு சிறந்தவன்? உன்னிலும் சிறந்தவர்களாகிய பாண்டியன், சேரன முதலானவர்கள் இல்லையா? உன்னுடைய நாடு தானு வளமுடைய நாடு? உன் நாட்டிலும் பாண்டி நாடு சேரநாடு முதலானவைகள் அதிக வளமுடையவைகள் அல்லவா? நான் உன்னைக் கண்டுதானு தமிழ்ப் பாடலைப் பாடினேன்? 'வேளாளனைப் பாடின வாயினுல் வேந்தனைப் பாடுவதில்லை,' என்பது எனது சங்கேதமென்று உனக்குத் தெரியாதா? மரக் கிளைக்குள் குரங்கைத் தாங்காத கொம்புமுண்டா? அது போல நான் தேடிப் போனுல் என்னைக் கண்டவுடனே அங்கீகரித்துச் சம்ரக்ஷிணை செய்யாத அரசர்களுமுண்டோ?' என்னும் கருத்தை உள்ளடக்கி,

" மன்னவனும் நீயோ ? வளநாடும் உன்னதோ ?
உன்னையறிந் தோதமிழை யோதினேன் ?—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ ? உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு ?"

என்ற பாடலையும் சொல்லி, 'இனி உன்னிடத்திலிரோம்! இக்கணமே செல்கின்றோம்! இதோ பார்! உன்னைவிட்டு நாம் போம்பொழுது கட்டிய கோவணத்தோடே போகின்றோம்; திரும்பி வரும்பொழுதோ, உன்னிடத்தில் கப்பம் வாங்கி வருகின்ற உனக்கு மேலாகிய அரசன் நமக்கு அடைப்பைக்காரனுகித் தாம் பூலம் மடித்துக் கொடுக்கத் தக்க ஸ்திதியுடனே வருகிறோம்!' என்று, கம்பர் பிரத்திக்ஞை செய்து சோழ ராஜனை விட்டு நீங்கிப் போனர்.

அவர் சோழனைத் துறந்து போகும் பொழுது தமது வீட்டாருடனும் சொல்லாமல், வஸ்திரமும், வழிச் செலவுக்கு வேண்டும் பணம் காசுகளும், உணவுக்கு வேண்டும் சாமக்கிரியைகளும் கொண்டு போகாமல், வெறுங்கையுடனே போய், ஓர் ஊரில் பெண்ணரசாயிருக்கும் வேலி என்பவள் ஒரு மண் சுவர் கட்டுவிக்க யத்தனித்து, அந்தச் சுவரைக் கட்டி முடித்தவர்க்குக் குறுணி நெல் கொடுப்பேனென்று பிரசித்தம் பண்ணியிருந்தாள். அதைத் தினமொருவராக வெகு பெயர் வந்து கட்டித் திரும்புகையில், அங்குள்ள ஒரு பிரமராக்ஷசால் தள்ளப்பட்டு அது விழுந்து போகிறது; அப்புறம் அவர்கள் கூலி வாங்காமல் போய்விடுகின்றனர்; இப்படி அநேக நாளாய் நடந்துகொண்டிருக்கையில் கம்பர் அந்த மோசத்தை அறியாமல் அவளிடத்தில் போய்ப் பேசி, மண்வெட்டி, மேற்படி சுவரைக் கட்டி முடித்து, வேலியைக் கூலி கேட்க வந்தார். அவள், 'சுவர் வைத்தாயிற்று?' என்றாள். இவர், 'ஆயிற்று,' என்று சொல்ல, 'அப்படியா! அதைப் பார்ப்போம்! வா,' என்று சீக்கிரமாக வந்து பார்வையிடும் பொழுது, அது விழுந்து கிடக்க, 'சுவர் விழுந்து போனதனால் கூலி கொடுக்க மாட்டேன்; நாளை வந்து சுவரைக் கட்டி வேலையை எனக்கு ஒப்புக் கொடுத்தால்தான் கொடுப்பேன்,' என்றாள்.

கம்பர் அன்றிரவு பட்டினியாயிருந்து, மற்றை நாள் சாயங்கால வரையில் இடுப்பொடியக் கஷ்டப்பட்டுக் கட்டிக் கூலி வாங்கி வருகிறதற்காக ஓரடி எடுத்து வைக்கையில் சுவர் விழுகின்ற குறிப்பறிந்து,

> "மற்கொண்ட திண்புகத்தான் மாகர்விட் டிங்குவந்தேன்;
> சொற்கொண்ட பாவின் சுவையறிவா ரீங்கிலையே!
> வீற்கொண்ட பீறைநுதலாள் வேலி தருங்கூலி
> நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே!"

என்று ஒரு கொச்சகக்கலிப்பாப் பாடினார். அதைக் கேட்ட மாத்திரத்தில் அந்தப் பிரமராக்ஷசு, 'இவர் மகா பண்டிதராயிருக்கிறார்!' என்று பயந்து, விலகிப் போய்விட்டது. சுவர் விழாமல் நின்றது, கம்பர் அந்தச் செய்தியை வேலிக்குத் தெரிவிக்க, அவள் பார்த்து அதிசயப்பட்டு, 'நீரார்?' என்று கேட்க, 'நான் கூலியாள்தான்; எனக்குச் சொன்னபடி நெல் கொடு,' என்ன, அவளதைக் கொடுத்து, 'இவ்விடத்தில்தானே இரும்,' என்று உபசரித்தாள். கம்பர் அதை மறுத்துவிட்டு அத்தேசத்தைக் கடந்து சென்றார்.

அவர் அப்பால் வெகு தூரம் போகையில் அதிகப் பசியாய் இருந்ததனால், ஒரு கோமுட்டி கடையில் போய், 'ஐயா, செட்டியாரே, பசியாயிருக்கிறது! எனக்குக் கொஞ்சம் அவல் கொடும்,' என்றார். அவன் கோமுட்டியாகையால், 'பொதிக்கு அளக்கிறதற்குள்ளே சத்தத்திற்கு அளக்கச் சொல்லுகிறது போல, கடை

போணியாகாததற்கு முன்னே உனக்குக் கொடுக்கச் சொல்லு கிறையோ ? நல்லது ஆயிற்று ! அட, இல்லே போ !' என்ருன்.

அப்புறம் சில தூரம் போய்ச் செக்கான் எள்ளாடுவது கண்டு, 'அப்பா, பசிக்குக் கொஞ்சம் பிண்ணுக்குக் கொடு,' என்ருர். அவனும் கொடுக்கவில்லே. அதற்கப்பால் ஒரு பிராமணன் வீட்டைக் கண்டு, 'பிராணன் போகிறது ! தாகத்திற்குத் தண்ணீர் தரவேண்டும்,' என்ருர். அவன், 'சூத்திரனுக்கு வார்த்த தீர்த்த சேஷம் பிராமணருக்கு அருகமாமோ ? போ, போ!' என்று துரத் தினன். இவரென்ன செய்வார் ! பசியும் தாகமும் சகிக்கக் கூடா மையால், மிகவும் இளேப்புடனே வெயிலில் அலுத்துப்போய் ஒரு மரநிழலில் சோர்ந்து படுத்திருந்தார். அங்கே ஏர் உழுகிற வேளாளன் ஒருவனுக்குப் பழையது வந்தது. அவன் சாப்பிடப் போகிற சமயத்தில் அவர் போய்க் கையேந்தினர். அவன் அந்தப் பழஞ்சோற்றை இவர் கையிலே போட்டு உண்ணச் சொல்லி, உபசரித்தான். இவர் உண்டு பசி தீர்ந்த பிறகு,

> "தொட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே ; செக்காரப்
> பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே ;—முட்டிபுகும்
> பார்ப்பார் அகத்தைஎட்டிப் பாரோமே ; எந்நாளும்
> காப்பாரே வேளாளர் காண்."

என்று ஒரு பாடல் பாடினர். பின்பு, வேளாளன் அவர் உண்டு மீந்த கொஞ்ச உணவைத் தானுண்டு, கையலம்பிக்கொண்டு, மேழி பிடித்து முன் போல உழுகையில், அந்தக் கொல்லேக்குள் கலப்பைக்கொழுச் செல்லும் படைச்சாலில் கணீர் கணீரென்று ஓர் ஓசை உண்டாயிற்று. அவன், 'இது என்ன !' என்று சந்தேகித்து மண்வெட்டி கொண்டு நிலத்தை வெட்டிச் சோதிக்குமளவில், பூமிக்குள் பெரிய தவலே இருந்தது. அதை எடுத்துப் பார்த்த பொழுது, அது நிறையத் திரவியம் இருக்கக் கண்டு, வேளாளன் பேரானந்தமடைந்து, 'இவர் நான் பகிர்ந்திட்ட பழையதையுண்டு ஒரு கவி பாடினர். அந்த வாக்கு விசேஷத்தினலே, தலேமுறை தலேமுறையாய்த் தரித்திரப்பட்டுக்கொண்டிருந்த எனக்கு இந்தப் புதைப் பொருள் கிடைத்தது ; இவராரோ மகாத்துவமாவாயிருக் கிறர்!' என்று, அவரைத் தன் வீட்டுக்கு அழைத்துப்போய் ஷட்ரச பதார்த்தத்துடனே பஞ்ச பட்சிய பரமான்னமிட்டுப் போஜனம் செய்யச் சொல்லி உபசரித்து, இரண்டு மூன்று நாள் வைத்திருந் தான்.

பிறகு அவர், 'நான் போகவேண்டும். எனக்குச் செலவு கொடு,' என்ருர். வேளாளன், 'ஐயா, உம்முடைய அதிர்ஷ்டத்தால்தானே எனக்குத் தனம் அகப்பட்டது ? ஆகையால், நீரெங்கும் போகாமல் இவ்விடத்திலேயே இருக்கலாம்,' என்ன, கம்பர் அதை மறுக்க, அவன், 'இந்தத் திரவியத்திலாவது பாதி கைக்கொண்டு

போகலாம்,' என்ன, இவர், ' எனக்குத் திரவியம் வேண்டுவதில்லை, நந்நான்கு முழத்தில் இரண்டு வெள்ளை முண்டு மாத்திரம் வேண்டும்,' என்று கொடுக்கச் சொல்லி வாங்கி, அரையில் ஒன்றும் தலையில் ஒன்றுமாகக் கட்டிக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டுச் சேர தேசத்திற்குப் போய், ஒரு சீமானை அடுத்து, ' ஐயா, நான் கம்பரிடத்தில் அடைப்பைக்காரனுய் இருந்தவன் ; அவருக்கும் சோழ ராஜனுக்கும் மனஸ்தாபம் உண்டானமையால், அவர் ஊரை விட்டு எவ்விடத்திற்கோ போய்விட்டார்; அதனுல், நான் பரதேசம் போய்ப் பிழைக்கலாமென்று இப்படி வந்துவிட்டேன். தாங்கள் தயை செய்து எங்கேயாவது எளியவனுகிய எனக்குக் கைக் காட்டினுல் தங்கள் பெயரைச் சொல்லிச் சீவிப்பேன்,' என்ன, அந்தப் பிரபு 'கம்பரிடத்தில் இருந்தவன்' என்பதைப்பற்றி அபிமானித்து, அவரைச் சேர மகாராஜனிடத்தில் அழைத்துப் போய், அடைப்பைத் தொழிலில் வைத்தார். அன்று முதல் கம்பர் சேரனிடத்தில் அத்தொழில் செய்து வருகையில், சேரன் ஒரு நாள் தனக்கு அவகாசமான வேளையில் தன் சமஸ்தான வித்வான்களைக் கம்பராமாயணப் பிரசங்கம் செய்யச் சொன்னுன்.

அவர்கள், பால காண்டத்தில் வேள்விப் படலத்தில்,

" எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையில் காத்தனர்."

என்ற பாடலைச் சொல்லி, அதற்குக் 'கௌசிக முனிவன் தேவர்கள் பொருட்டு ஐந்து நாள் அல்லது ஆறு நாள் வரையில் எண்ணுதற்கும் செய்தற்கும் அருமையாகத் தொடங்கிய யாகத்தை, உலகத்தைப் பரிபாலனம் பண்ணுகின்ற தசரத மகாராஜனுடைய புத்திரர்களாகிய இராமனும் இலக்குவனும் கண்ணைப் பாதுகாக்கின்ற இமைகளைப்போலச் சம்ரக்ஷணை செய்தார்கள் ' எனவும், மிதிலைக் காட்சிப் படலத்தில்,

" உமையாள் ஒக்கும் மங்கையை நுச்சிக் கரம்வைக்கும்
கமையாள் மேனி கண்டவர் காட்சிக் கரைகாணுர்
இமையா நாட்டம் பெற்றில மென்ருர் இருகண்ணுல்
அமையா தென்ரு ரந்தா வானத் தரெல்லாம்."

என்ற பாடலுக்கு, " உமா தேவியை ஒத்த கலைமகள் முதலிய தெய்வப் பெண்கள் சிரமேல் கரம் வைத்து அஞ்சலி செய்யா நின்ற பரமசாந்தத்தையுடைய நிலமகளாகிய சீதா பிராட்டியாரது திருமேனி அழகைக் கண்ட தேவர் மாளிடர் யாவரும், தாம் தாம் கண்ட காட்சிச் சிறப்பிற்கு எல்லை காணுதவரானமையால், அவர்களில் பூமியிலுள்ள மானிடர், 'நமது கண் அடிக்கடி இமைப்பதனுல் எம்பிராட்டி திருவழகை எப்படிக் கண்டு களிப்பது?

நாம் தேவர்களைப் போல இமையாநாட்டம் பெற்றுமில்லையே !' என்றார்கள் ; அந்தரத்திலுள்ள தேவர்களெல்லாம், 'அத்திருவழகு இரு கண்ணால் காண அமையாது !' என்றார்கள். எனவும், மற்றும் சில பாடல்களுக்குத் தங்களுக்குத் தோற்றின பிரகாரமும் பிரசங்கித்தார்கள். அப்பொழுது அரசன், 'இப்பிரசங்கத்தை இந்தச் சபையிலுள்ளவர்கள் கருத்துடன் கேட்கிறார்களா !' என்று அவரவர் முகத்தைக் குறிப்பாய்ப் பார்க்குமிடத்தில் கொஞ்சம் ஏறக்குறைய யாவரும் கருத்தோடே கேட்கிறதாகத் தெரிய வந்தது. பின்பு தன் பக்கத்திலிருக்கிற அடைப்பைக்காரன் முகத்தைப் பார்க்க, அவன் வியக்க வேண்டிய விஷயத்தில் வியக்காமல், சந்தோஷிக்க வேண்டிய சமயத்தில் துக்கிக்கிறதும், துக்கிக்க வேண்டிய சமயத்தில் சந்தோஷிக்கிறதும் கண்டு, அரசன் அவனை, 'என்ன?' என்று கேட்க, அடைப்பைக்காரன், மகாராஜாவே, இந்தப் பிரசங்கம் கிரந்த கர்த்தாவாகிய கம்பர் கருத்துக்கு இசைந்திருக்கவில்லை,' என்ன, சேரன், 'கம்பர் கருத்து உனக்கெப்படித் தெரியும் ?' என்ன, 'கம்பரிடத்தில் நான் அடைப்பைக்காரனாய் இருக்கையில் அருகில் நின்று அவர் பிரசங்கிக்கக் கேட்டிருக்கிறேன்,' என்ன, 'அப்படியானால் நீயும் பிரசங்கிக்க மாட்டுவையோ ?' என்ன, 'கூடின மாத்திரம் பிரசங்கிப்பேன்,' என்ன, அரசன், 'சற்றே பிரசங்கம் செய், பார்ப்போம் !' என்ன, அடைப்பைக்காரன் பிரசங்கிக்கத் தொடங்கினான் :

'"எண்ணுதற் காக்கரிது" என்ற பாட்டின் முதல் மூன்றடிக்கும் இவர்கள் சொன்ன பொருள் கொஞ்சம் குறையச் சரிப்பட்டிருக்கின்றது. முதலடியில் எண்ணுவதற்கு, ஆக்குதற்கு அரிய வேள்வி என்றதனோடு சொல்லுதற்கும் அரியதென வருவித்துத் திரிகரணச் செயல்களையும் சுட்டிச் சொல்ல வேண்டும். 'கண்ணினைக் காக்கின்ற இமையில் காத்தனர்' என்னும் நான்காம் அடியில் பொருள் சிறக்கவில்லை. அதைச் சிறக்கச் சொல்லுங்கால், 'மேலிமை கீழிமை எண்ணும் கண்ணிமை இரண்டில் மேலிமை பெரியது ; கீழிமை சிறியது ; அன்றியும், மேலிமை அசைந்துகொண்டிருப்பது ; கீழிமை அசையாது நிற்பது ; மேலிமை போலப் பெரியவனாகிய இராமன் நீலப் பெயர்ந்து கௌசிக முனி ஆச்சிரமத்தின் நாற்றிசையிலும் இராக்கதர்கள் வந்து உபத்திரவம் செய்யாமல் இருக்கும் பொருட்டுச் சக்கரம் சுழல்வது போலச் சுற்றித் திரிந்து காவல் செய்தான். கீழிமை போல இளையவனாகிய இலக்குவன், உள்ளே ஒருவரும் பிரவேசியாதிருக்கும்பொருட்டு ஆச்சிரமத்தின் வாசலில் அசையாது நின்றபடி காவல் செய்தான். இவ்விதமாகக் காவல் செய்யும் அவ்விருவரில், இராமன் ஆச்சிரமத்தின் புறத்தில் சுற்றி வரும் போதெல்லாம் மேலிமை கீழிமையை இமைத்திமைத்துத் தீண்டுவது போல வாசலிலிருக்கிற இலக்குவனைக் கையினால் அடிக்கடி தட்டித் தட்டி, 'லக்ஷ்மணா, ஜாக்கிரதை !' என்று எச்சரித்துக்கொண்டே வந்தான்,' என்றும், "'உமையாள்' என்ற

பாடலுக்கு இவர்கள் உரைத்த பொருள் பெரும்பாலும் சரிதான் ; ஆயினும், இதனுள் அனேத்தும் சுருங்கச் சொல்லலாக உபசரிக்கப் பட்டமையால், முதலில், ‘ உமையாளொக்கும் மங்கையர் என்பதை உம்மைத் தொகையாகக் கொண்டு, உமையாளும் அவளை ஒத்த மங்கையருமென உரைப்பினும் அமையும். இறுதியில், ‘ இரு கண்ணுல் அமையாதென்ரு ரந்தர வானத்தவர் எல்லாம் ’ என்ற தற்குத் தேவர்களில் அநேகர், ‘ நமது விழி இமைக்கவில்லையே ! இது நமக்கொரு விசேஷந்தான் ! என்ருலும், மனிதர் விழி போல இரண்டேயல்லாமல் அதிகமில்லாமையால், ஜானகி வடிவழகு நாம் காண்பதற்குச் சாத்தியப்படாது ; பிரமன் முருகக் கடவுள் முதலானவர்கள் எண்கண், பன்னிரு கண்ணுள்ளவர்கள். ஆகையால் அவர்களே காணுதற்கு உரியவர்கள்,’ என்றும், அப்பிரமன் முதலி யோர், ‘மற்றவர்களைப் போலன்றி நமக்குக் கொஞ்சம் ஏற்றமாய், இருந்தும். அவை சீதை திருவழகைக் காணப் போதுமானவை அல்ல. இந்திரன் ஆயிரம் கண் படைத்தவனுதலால், அவன் தான் காணத்தக்க பாக்கியமுடையவன்,’ என்றும் ; அவ்விந்திரனே, ‘ கள்ளிச் செடிக்கு, ‘ மகாவிருக்ஷம் ’ என்று பெயர் வந்திருப்பது போல, எனக்குப் பிரதிஷ்டைக்கு ஆயிரம் கண்ணன் என்று பெயர் வந்திருக்கிறதேயொழிய வேருென்றுமில்லை. அவைகளைக்கொண்டு பார்க்கமுடியுமா ? முடியாமையால், வைதேகி திருவுருவைக் காண் பதற்கு நான் அருகனல்லேன் ; ஆதிசேஷன் ஆயிரம் தலை இரண் டாயிரம் கண்ணுடையவனுகையால், அந்த மகானுபாவனே காணத் தவம் செய்தவன்,’ என்றும் ; அவ்வாதிசேஷனே, ‘கடலில் கரைத்த பெருங்காயம் மணக்குமா ? அது போல அந்த மகோத் தமியின் திவ்விய சுந்தரத்தை எனதிரண்டாயிரம் கண்களைக் கொண்டுதான் காணக் கூடுமா ? ‘ ஸஹஸ்ரசீருஷாபுருஷ ; ஸஹஸ் ராக்ஷ ஸஹஸ்ரபாத் ’ என்ற புருஷஸூக்தத்தின்படி அநேக சிரசு அநேக நேத்திரமுள்ள பரந்தாமனே காணப் பாத்திரமானவன் !’ என்றும், (‘ ஸஹஸ்ரம்’ இவ்விடத்தில் ஆயிரமன்று ; அநேகமென்ப தாம்) சொன்னதாகப் பிள்ளைக்கும் பேதைக்கும் விளங்கும்படி பொருள் விரித்துரைப்பது சிறப்பு,’ என்றும் அப் புலவர்கள் பிரசங் கித்த மற்றும் சில பாடல்களுக்கு அதனதன் விசேஷார்த்தங்கள் இன்னதின்னது என்றும் எடுத்துரைக்க வேண்டும் என்று சொல்லக் கேட்டு, அரசன், ‘இந்தப் பிரசங்கம் நவரசாலங்காரத்துடனே அற்புதமாய் இருக்கிறதே ! இதற்கு ஒப்பாக யாருடைய பிரசங்கத் தைச் சொல்லலாம் ! இதைவிட, சாக்ஷாது அந்தக் கம்பருடைய பிரசங்கம் எத்தன்மையாய் இருக்குமோ !’ என்று அதிசயப்பட்டு, அதிக சந்தோஷமாகி, அன்று முதல் அடைப்பைக்காரன் உயிரும் தான் உடலுமாக அந்நியோந்நியமாய்ச் சிநேகித்து, அவனைவிட்டுப் பிரியாமல் அவன் தன்னுடனேகூடச் சம பந்தியாயிருந்து போஜனம் பண்ணும்படி மற்ற வித்வசனர்களிலும் அவனைப் பதின் மடங்கு அதிக மேன்மையாய் வைத்திருந்தான்.

அது கண்டு அவ்வித்வசனர்கள் கம்பர் விஷயத்தில் பொறுமை கொண்டு, நிர்நிமித்தமாகப் பகைத்தார்கள். கோழிக் காய்ச்சல் வேசைக் காய்ச்சல் போல, வித்வக் காய்ச்சலினுல் மூண்ட பகை, தென்றல் முற்றிப் பெருங்காற்றனது போல, நாளுக்கு நாள் அதிகரித்ததனுல், அவர்கள், 'நாம் அடைப்பைக்காரன் இழிகுலத்தான் என்று ஒரு அபவாதத்தை உண்டாக்கி, அவன்மேல் அரசனுக்கு விரோதம் மூளும்படி செய்யலாம்,' என்று எத்தனித்து, ராஜாவுக்குச் சவரம் பண்ணும் அம்பட்டனை ரகசியமாக அழைத்து, 'நீ அடைப்பைக்கரரனை உங்கள் இனத்தான் என்று எவ்விதத்திலாவது அரசனுக்கு உறுதியாகத் தோன்றும்படி செய்வாயானுல், உனக்கு இரண்டாயிரம் வராகன் கொடுக்கிறோம்; அதனுல் உனக்கு வரும் தண்டனையையும் வரவொட்டாமல் தடுக்கிறோம்; மேலும் எவ்வளவு பணச் செலவு நேரிட்டாலும் தருகிறோம்,' என்று அவனுக்கு நம்பிக்கை உண்டாகச் சொல்லிச் சம்மதிக்கும்படி உடன் படிக்கை எழுதிப் பணமும் கையில் கொடுத்தார்கள். கைம்மேல் ரொக்கத்தைக் கண்ட மாத்திரத்தில், 'பணமென்றுல் பிணமும் வாயைத் திறக்கும்,' என்பதற்குச் சரியாக, அவனுக்கு ஆசை மேலிட்டதனுல் உடன்பட்டு, அடைப்பைக்காரனை மாத்திரமா, அரசன் குடியையும் கெடுக்கத் துணிந்து, ஏற்ற சமயம் பார்த்திருந்தான். ஒரு நாள் சேரனுடைய சிங்காதனத்தின் பக்கத்தில் சமானஸ்கந்தமாய் வீற்றிருந்த கம்பர், ஏதோ ஒரு நிமித்தத்தால் அதை விட்டிறங்கி, ஆசாரவாசலின் அருகே வரும்பொழுது, அங்கே காத்திருந்த அம்பட்டன், அவனவருக்கும் முன்பாக, அவரைக் கட்டிக் கொண்டு, 'அண்ணு, இத்தனை காலமாய் உன் முகத்தை நான் பாராமலிருந்தேன்! நீ எங்கே போயிருந்தாய்?' என்பதாகக் 'கோ' வென்று அலறி அழுதான். கம்பர் அந்தச் சர்ப்பனையை அறிந்து, வைக்கோற்கட்டுக்காரனை ஒக்கக் கட்டி அழுவது போல, அவனைத் தாமும் கூடக் கட்டிக்கொண்டு, ஓயாமல் அழுதார். அம்பட்டன் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு கம்பர் கண்ணீரைத் தன் அழுக்குத் துணியால் துடைத்து, 'அழாதே,' என்ன, அவர் நடித்துக் காட்டிய பொய்த் துக்கம் மாறி, அம்பட்டனை, 'அடா தம்பி, நீ குடியிருக்கும் இடமெங்கே? உனக்குக் கலியாணம் ஆயிருக்குமே! பிள்ளைகள் எத்தனை? பார்ப்போம், வா?,' என்று அழைத்துக்கொண்டு, சபையை விட்டுத் திரும்பினர்.

அடைப்பைக்காரனுய் இருந்த கம்பர் திரும்பும் பொழுதே, 'அப்பா, குழந்தைகள் இருக்குமிடத்தில் நான் சும்மா வரமாட்டேன். பெரியோர்கள், கோயிலுக்கும், ஆசாரிய சந்நிதானத்திற்கும், அரசர் சமூகத்திற்கும், குழந்தைகளிடத்துக்கும் வெறுங்கையுடனே போகலாகாதென்கிறார்களே! ஆகையால், கடைக்குப் போய்ப் பிள்ளைச்சாதிகளுக்கு ஏதாவது தின்பண்டம் வாங்கிக்கொண்டு போவோம்,' என்று ஒரு பணத்துக்குக் கடலை பட்டாணி வாங்கிக் கொண்டு அவர் அம்பட்டன் வீட்டின் அருகிற்சென்றவுடனே,

அவன் தன் குடிசைக்குள் முன்னே போய் நுழைந்து, 'அடி அம்மைச்சி! வா!' என்று பெயரைச் சொல்லித் தன் பெண்டாட்டியைக் கூப்பிட்டு, 'உங்கள் மூத்தார் வந்தார்; அவருக்கு மீனை கொடு,' என்றான். அவள் ஒரு கட்டை மீனையை எடுத்துப் போட்டு, அவர் உட்கார்ந்த பின் காலிலே விழுந்து சேவித்தாள். அவளைக் கம்பர், 'தீர்க்க சுமங்கலியாய் இரு,' என்று வாழ்த்தி, 'குழந்தைகள் எங்கே?' என்ன, அம்பட்டன் தன் மூன்று பிள்ளைகளையும், 'உங்கள் பெரியப்பர் அழைக்கின்றார், வாருங்கள்,' என்று அழைத்து வந்து எதிரே விட, அந்தப் பிள்ளைகளைக் கம்பர் வாரியெடுத்து மார்போடு அணைத்து, முகத்துடனே முகம் வைத்துக் கண்ணுடனே கண்ணொற்றி, 'என் அருமை மக்களே, நான் உங்கள் மழலை வார்த்தையைக் கேட்கவும், நீங்கள் தத்தடியிட்டு நடக்கும் மடநடையைக் காணவும், உங்களைச் சீராட்டிப் பாராட்டி உங்களுடனே கொஞ்சவும், இது வரையில் பாக்கியம் செய்யாமற் போனேன்!' என்று கண்ணீர் விட்டு, ஆசையுடனே அடிக்கடி முத்தமிட்டுக் குலாவி, பிறகு நாவிதனைப் பார்த்து, 'எனக்குப் பரியாய் இருக்கிறது,' என்றார். அவன் பெண்சாதியைச் சீக்கிரம் சமையல் பண்ணச் சொல்லிக் கம்பரை, 'அண்ணா, சாப்பிட எழுந்திரு,' என்றான்.

இவர் ஒரு செப்புப் பாத்திரத்தை வாங்கிக் கிணற்றிலே தண்ணீர் மொண்டு ஸ்நானம் செய்து வந்து சாப்பாடு கொண்டு வரச் சொல்ல, அம்பட்டத்தி இலை போட்டுச் சாதம் வட்டிக்க வர, கம்பர், 'நானென்ன அன்னியனா? நீங்கள் சாப்பிடுகிற கிண்ணி எங்கே?' என்ன, அம்பட்டனும் அவன் மனைவியும் கொஞ்சமாவது இது பாவமென்று அஞ்சாமல், எச்சிற்கலத்தைக் கொண்டு வந்து வைத்து, அன்னம் பறிமாறி, உண்ணும்படி உபசரிக்க, கம்பர் அவனைப் பார்த்து, 'தம்பீ, உன்னுடனே ஒரு செய்தி பேச வேண்டி இருக்கிறது,' என்ன, அவன், 'சாப்பிட்டுப் பேசலாம்,' என்ன இவர், 'அப்படிச் செய்தால் உன் சோற்றை உண்டு உனக்குத் துரோகம் செய்ததாய் முடியுமாதலால், இரண்டொரு பேச்சு முன்னதாகவே பேசிவிட்டுப் போஜனம் பண்ணுவது யுக்தம்,' என்றார். அவன், 'அதென்ன?' என, இவர், 'அடா தம்பீ, நம்முடைய முன்னோர்களுக்குத் தாயபாகம் பிரியவில்லை என்பது உனக்குப் பரிஷ்காரமாய்த் தெரியுமல்லவா?' என்ன, அவன், 'ஆம்,' என்ன, இவர், 'நாம் கலகத்தில் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்து திக்குக் கெட்டுத் தடுமாறிப் போன பின்பு தெய்வ கடாக்ஷத்தால் நீ தப்பிப் பிழைத்து இந்த ராஜாவை அடுத்துச் சுகப்பட்டிருக்கிறாய்; எட்டி மரமானாலும் பச்சென்று இருந்தால் கண்ணுக்கு அழகுதான். நான், கொழு கொம்பு இல்லாத கொடி போல அலைந்து திரிந்தேன்; போகட்டும்! அதுமுதல் இதுவரையும் நீ சம்பாதித்தது என்ன? தெய்வ சாக்ஷியாய் உண்மையைச் சொல்,' என்றார். அவன், 'சத்தியமாய் நாலாயிரம் வராகன் இருக்கும்,' என்றான்.

இவர், 'நல்லது! அதில் எனக்குப் பாதி சேர வேண்டி இருக்கிறதே! அதைக் கொண்டு வந்து வை,' என்றார். அவன், வித்வான்கள் கொடுத்த இரண்டாயிரம் வராகனையும் எடுத்து வைத்தான். இவர், 'இருபது வருஷ காலமாய் உன் முறையாக நீ ராஜாவுக்கு ஊழியம் செய்து வந்தது போல, நான் இருபது வருஷ காலம் அந்தத் தொழில் செய்ய வேண்டுமே! அதற்கென்ன சொல்லுகிறாய்?' என்றார். அவன், 'தடையென்ன? உன் இஷ்டப்பிரகாரம் ஆகட்டும்,' என்றான். 'அந்தப்படி நாட்டுக் கணக்கனைக் கொண்டு பாரிக்கத்தும் உடன்படிக்கையும் எழுதிவிடு,' என்றார். எழுதுவித்த மாத்திரத்தில், கம்பர், 'தம்பீ, நீ சம்மதித்தாய்; என்னிடத்தில் கூஷவரம் செய்துகொள்வதற்கு ராஜா சம்மதிப்பாரோ, மாட்டாரோ! இவ்வளவு தூரம் பகீரதப் பிரயத்தனம் செய்தும் வீணுப்பட் போனால் என்னவாகும்? அரசரைக் கேட்டு அறியலாம், வா,' என்று, அவனை அழைத்துக்கொண்டு கம்பர் ராஜ சமூகத்திற்கு வருகிறார்.

அம்பட்டன் முன்பு சபையில் கம்பரை, 'அண்ணு' என்று கட்டிக்கொண்டு அழுத பொழுது, அங்கிருந்தவர்கள் எல்லாம், 'அடைப்பைக்காரனை ராஜா பெரிய வித்வானாக மதித்து சன்மானித்து, அவனுக்குச் சபையில் ஆசனம் கொடுத்ததுமல்லாமல், அவனுடனே சமபோஜனமும் பண்ணி வருகிறாரே! அவனை ஜாதியில் அம்பட்டனாய் இருக்கிறானே! இஃதென்ன கோரம்! அவனால் நமது அரசருடைய குலத்துக்கும், அவர் பெற்ற பெருமைக்கும், அளவிறந்த கீர்த்திக்கும் பங்கம் வந்ததே! ராஜா இனி இதற்கு என்ன பிராயச்சித்தம் செய்துகொள்வாரோ! அல்லது, 'அவமானத்திற்கு இடமாயிற்றே!' என்று ஒரு வேளை பிராணத்தியாகமே பண்ணிக்கொள்ளுவாரோ! இஃது எப்படி முடியுமோ!' என்று பரிதபித்தார்கள். அரசனும் அப்படியே எண்ணுததும் எண்ணி நெஞ்சம் புண்ணானான். ஆயினும், நுண்ணறிவுடையனாதலால், 'இவன் அம்பட்டனாகில் கம்பர் இவனைத் தம்மிடத்தில் அடைப்பைத் தொழிலில் வைத்துக்கொள்வாரா? அவசரப்படாமல் ஆய்ந்தோய்ந்து பார்க்க வேண்டும்,' என்று, வேவுகாரரை விட்டுச் செய்தி தெரிந்துவரச் சொன்னான். அவர்கள் வேடமாறி உருத்தெரியாதபடி, அம்பட்டனும் அடைப்பைக்காரனும் சபையை விட்டுத் திரும்பும்பொழுதே பின்தொடர்ந்து போய், ஆதியோடந்தமாக நடந்த அதிசயங்களை எல்லாம் அடிக்கடி அறிந்து வந்து அரசனுக்கு அறிவித்துக்கொண்டே இருந்து, கடைசியில், காதிலே நாராசத்தைச் செருகினது போல, 'அடைப்பக்காரன் உங்களுக்கு கூஷவரம் பண்ண வருகிறான்,' என்று சொன்னார்கள். அச் செய்தியை அரசன் கேட்டு அடைப்பைக்காரன் மெய்யாய் அம்பட்டன்தான் என்று நிச்சயித்து, 'இந்த மானக் கேட்டுக்கு என்ன செய்யலாம்! அரைக் காசுக்குப் போன வெட்கம் ஆயிரம் கொடுத்தாலும் தராதே!' என்று ஏக்கம் கொண்டிருந்தான்.

இப்படி இருக்கையில், 'உகிர்ச் சுற்றின்மேல் உலக்கை விழுந்தது போல' பின்னும் அதிக கலக்கமுண்டாக அடைப்பைக் காரனும் அம்பட்டனும் அங்கே வந்து வணங்கி நின்றார்கள். அவர் களைப் பார்த்தபொழுது அரசன் மிகவும் நடுங்கித் தைரியம் விடாமல், 'ஆனது ஆகிறது; இன்னமும் அறிவோம்,' என்று கம்பரை நோக்கி, 'என்ன சமாசாரம்?' என்றான். அவர் தமக்கும் அம்பட்டனுக்கும் பாகம் பிரித்த சமாசாரத்தைச் சொல்லி, அந்தப் பாரிக்கத்தையும் சேரன் முன்பாக வைத்து, 'ஐயனே, என் தம்பி இருபது வருஷ காலம் தன் முறையாக ஊழியம் செய்து வந்தானே! இனி இருபது வருஷம் என் முறையாகத் தங்களுக்கு ஊழியம் செய் யும்படி உத்தரவு பெற வந்தேன்,' என்றார். அதற்கு ராஜா நாவிதன் கருத்தை அறிந்துகொண்டு, கம்பரை நோக்கி, 'நல்லது, உன்னிஷ் டப்படி ஆகட்டும்,' என்றான். அதுவரையில் வித்வான்களும் அம்பட்டனுக்கு, 'நீ எடுத்த காரியத்தில் என்ன நஷ்டம் வந்தாலும் வரட்டும். பயப்படாதே! சலியா முயற்சி கொண்டு சாதிக்க வேண்டும்!' என்று ரகசியத்தில் உறுதிப்பாடு சொல்லிக்கொண்டே வந்தார்கள். அவனும், 'உங்கள் அபிஷ்டப்படி அடைப்பைக் காரனும் அரசனும் செய்த அதர்மத்தினாலும் உங்கள் தர்மத்தினா லும் என் அதிர்ஷ்டத்தினாலும் காரியம் கைகூடி வந்திருக்கிறது!' என்று பிரதி சமாசாரம் சொல்லி அனுப்பிக்கொண்டே இருந்தான். அதி நிற்க.

அதன் பிறகு கம்பர் சரஸ்வதியை மனதிலே தியானித்து, 'என் தாயே, கலைவாணி, இந்த ஆபத்துக் காலத்தில் அடியேனைக் கைவிடாது ரக்ஷிக்கும் பொருட்டுத் திருவுளமிரங்கி உனது இடப் பாதச் சிலம்பை அருளிச் செய்ய வேண்டும்,' என்று பிரார்த்தித் தார். அவர் பிரார்த்தித்தபடி நாமகள் அனுக்கிரகத்தினால் அவளுடைய வச்சிரச் சிலம்பொன்று கம்பர் அக்குட்சத்தில் வந் திருக்க, அதையெடுத்து சேரனுக்குக் காண்பித்தார்; அது தகதக வென்று கண் கூசும்படி ஜொலிப்பது கண்டு, அரசன், 'இது ஏது?' என்ன, அவர், 'மகா பிரபு, ஒரு விண்ணப்பம்: இந்த நாவிதனும் நானும் தூரமல்ல; சிற்றப்பன் பெரியப்பன் பிள்ளைகள்; இவன் தகப் பனும் என் தகப்பனும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள்; இவர்களும் நாங்களும் பூர்வம் ஏகக் குடும்பஸ்தராய் இருந்தோம். அப்பொழுது எங்களுக்குள் பாகம் தீரவில்லை. சில காலத்திற்கு முன்பு அகஸ்மாத்தாய்ச் சம்பவித்த கலகத்தால் இவர்களும் நாங்க ளும் பிரிந்துபோக வேண்டி வந்ததனால் வீட்டுத் தட்டு முட்டு முதலானவைகளைப் போட்டது போட்டபடி கைவிட்டுப் போகிற அவசரத்தில் எங்கள் பெரியவர்கள் அந்நாளில் தங்களைப்போன்ற பிரபுக்களுக்கு ஊழியம் செய்து சம்பாதித்த இந்த வீலையுயர்ந்த சிலம்புகள் மாத்திரம் கைக்குச் சுளுவாயிருந்ததனால் இவர்கள் ஒன்றும் நாங்கள் ஒன்றுமாகக் கையோடே காவலாய்க் கொண்டு போய்விட்டோம்; இழிகுலஸ்தரும் எளியவர்களுமாகிய எங்களுக்கு

இப்படிப்பட்ட சிலம்பு ஏன்? இது சக்கிராதிபதியாய் இருக்கின்ற தங்களுக்கே தக்கது. இதைத் தாங்கள் கிருபை செய்து கைப்பற்றிக் கொண்டு, எங்கள் தம்பி வசத்திலிருக்கிற இதன் ஜதையான மற்றச் சிலம்பையும் வாங்கி, இரண்டையும் ராஜ மகிஷியாகிய அம்மாளுடைய அழகிய காலிலிட்டால் நாங்கள் கண் குளிரத் தரிசிப்போம்!' என்றார்.

ராஜா அந்த ஒற்றைச் சிலம்பைக் கையிலே வாங்கிப் பார்த்து அதிசயப்பட்டு, 'அடா, உன்னிடத்திலிருக்கிற சிலம்பையும் கொண்டுவா, பார்ப்போம்,' என்று அம்பட்டனுக்குக் கட்டளை யிட்டார். அவன், 'இஃதேது? கிணறு வெட்டப் பூதம் புறப் பட்டாற்போல வந்து விடிந்ததே!' என்று திகில் கொண்டு, கால் கைகள் உதறலெடுக்க, வாய் குழற, 'இல்லை சுவாமி,' என்றான். கம்பர், 'அடா தம்பீ, அது நமக்கேன்? அம்மாளுக்காகும்; சும்மா கொடுத்துவிடு,' என்றார். அவன். 'இல்லை அண்ணா!' என்றான். அத்தருணத்தில் அரசன் பக்கத்திலிருந்த ராணி, அதைத் தனக்கு வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று தன் நாயகனுக்குச் சமிக்கை காட்டினாள். சேரன் அதுபற்றி மறுபடி நாலைந்து ஆவர்த்தி, 'சிலம்பைக் கொண்டுவா,' என்று வற்புறுத்திச் சொல்லியும் அவன் முன் சொன்னபடியே, 'இல்லை,' என்ன, கம்பர், 'அடா தம்பீ, கள்ளிக்கு முள் வேலியும், கழுதைக்குக் கடிவாளமும் ஏதுக்கு? அது போல மயிர்வினைஞராகிய நமக்கு வச்சிரச் சிலம்பு ஏன்? குடிக்கிறது கூழ், கொப்பளிக்கிறது பன்னீரா! எடுக்கிறது சந்தைக் கோபாளம்; ஏறுகிறது தந்தப்பல்லக்கா? வேண்டா! எடுத்துக் கொடுத்துவிடு,' என்ன, அவன், 'சத்தியமா யில்லை,' என்றான். ராஜா, 'இவன் பரிச்சேதம் இல்லையென்று ஆணை இடுகிறானே!' என்ன கம்பர், 'சுவாமி, இவன் மிகவும் கையழுத்தக்காரன்; சிறு வயதிலேயே இவனுடைய சுபாவம் அஞ்சாமல் பொய்யாணை இடுகிறதுதான்; பொய்ச் சத்தியம் இவனுக்குத் தயிறும் சோறும்; இப்படிச் சாந்தமாய்க் கேட்டால் கொடுப்பானா? மிதித்துப் பிடுங்கினால் அல்லாமல் மயிலே, மயிலே, ஓர் இறகு கொடு என்றால் கொடுக்குமா? அது போல, இவனைக் கேட்கிறபடி கேட்க வேண்டும்,' என்றார். தக்ஷணமே அரசன் ஆணையால் ஏழெட்டுப் புளிய மலார்க் கட்டுகள் வந்து விழுந்தன. அவனைப் பிடித்துக் கம்பத்தில் இறுகக் கட்டி அப்புளிய மலாரைக் கொண்டு உடம்பெல்லாம் உதிரம் ஒழுகும்படி பொத்தினார்கள். அம்பட்டன் அடி பொறுக்க மாட்டாமல், 'கட்டவிழ்த்துவிட்டால் உள்ளதைச் சொல்லுகிறேன்!' என்றான்.

என்ற மாத்திரத்தில், அவனை அடியாமல் கட்டவிழ்த்து விட்டுக் கேட்க, அவன் அம்பலத்தில் பொதி அவிழ்த்தது போல, யதார்த்தத்தைச் சொல்லிவிட்டான். எப்படியெனில், 'இவர் எங்கள் தமையனும் அல்லர், நான் இவர் தம்பியும் அல்லன். இவருடைய

பூர்வோத்தரமே எனக்குத் தெரியாது. குரங்கு குட்டிக் கையைத் தோய்க்கிறது போல, இந்தச் சமஸ்தானத்து வித்துவான்கள் இவர்மேல் பொறுமையால் என்னைக்கொண்டு இப்படி எல்லாம் செய்வித்தார்கள்; எனக்கு அவர்கள் எழுதிக் கொடுத்த உடன் படிக்கை இருக்கிறது, பாருங்கள்,' என்று, அதை அரசன் சமுகத்தில் கொண்டு வந்து வைத்து, மற்றும் அவர்கள் செய்யத் துணிந்த துராகிருதங்களை எல்லாம், பட்டோலை படிப்பது போலப் பகிரங்க மாகச் சொன்னான். சேரன், 'இது இவனுல் விளைந்ததன்று; வித்துவக் காய்ச்சலால் சம்பவித்தது. எய்கிறவன் எய்தால் அம்பென்ன செய்யும்?' என்று, அம்பட்டன்மேல் மூண்ட கோபத்தை ஒருபடியாகத் தணித்துக்கொண்டு, அந்த வித்துவான் களுடைய துரோக சிந்தையைக் குறித்து நெஞ்சு புழுங்கி, 'நம்மாலே பரிபாலிக்கப்பட்ட இவர்கள் நமக்க தீங்கு செய்தார் களல்லவா!' என்று அவர்களை எல்லாம் கழுவேற்ற நிர்ணயித்தான்.

அதை அறிந்து அவ்வித்துவான்கள், 'இந்தப் பேரிடிக்கு எவ்விதத்தால் தப்புவது!

> "அழுக்காறு எனவொரு பாவி திருச்செற்றுத்
> தீயுழி உய்ந்து விடும்."

என்றபடியல்லவோ சம்பவித்தது!' என்று பயந்து யாவரும் கூடி ஆலோசித்தும் தப்புவதற்கு வேறோர் உபாயமும் காணுமையால், தங்கள் தங்கள் மனைவிமார்களை அடைப்பைக்காரன் காலிலே போய் விழுந்து வேண்டிக்கொள்ளும்படி அனுப்பினுர்கள். அந்த ஸ்திரீகள் தலைவிரி கோலமாய் வந்து புலம்பி, முன்றானையை விரித்து, 'மாங்கல்ய பிக்ஷை தரவேண்டும்,' என்று கேட்க கம்பர் அவர் களுடைய துக்கமுகத்தைக் கண்டு நெஞ்சுருகி, அழுகுரலைக் கேட்டுச் சகிக்காமல் இரக்கம் கூர்ந்து, 'பாக்கியவதிகளே, அழவேண்டா; உங்கள் நாயகன்மார்களுடைய பிராணை நான் அவசியம் காப் பாற்றுவேன். நீங்கள் அஞ்சாதீர்கள்,' என்று அபயப்பிரதானம் பண்ணி, அவர்களை அனுப்பிவிட்டு, மகாராஜனைப் பார்த்து, ராஜ சேகரரே, உலகத்தில் மாதா, பிதா, குரு, புரோகிதர், புராணிகர் தேவப்பிராணர், தபசிகள், வித்வசனர், விகடகவிகள், சுத்தவீரர், தானுதிபதிகள், தூதர்கள், சுற்றத்தார், பிணியாளர், வறியவர், பாலர், அடைக்கலம் புகுந்தோர், போக மாதர் என்னும் இந்தப் பதினெட்டுப் பெயர்களும் செய்த குற்றத்தைப் பாராட்டி அதற் காக அவர்களைத் தண்டிப்பது அரசர்களுக்கு மனுநீதியன்று. ஆதலாலும், மேலும், அவர்களும் நானும் வித்துவான்களாய் இருப்பதனுல், அவர்களுக்கு வந்த அவமானம் எனக்கும் வந்ததாம். ஆகையால், நீங்கள் கிருபை செய்து அவர்கள் தெரியாமல் செய்த குற்றத்தை மன்னிப்பதே உங்கள் கௌரவத்திற்கும் தயைக்கும் தகுதி,' என்று கோபம் தணியும்படி நயவசனமாகச் சொல்ல, அரசன் சீற்றம் மாறி, விதித்த தண்டனையை மன்னித்து

0-16 MVC V 58

விட்டுக் கம்பரை நோக்கி, 'இந்த வச்சிரச் சிலம்பு உமக்கு எப்படி கிடைத்தது ?' என்றார்.

கம்பரானவர், 'கேளீர் சக்கிரேசுரரே, இச்சிலம்பைத் தரிக்கின்ற உத்தமியைத் தரிசிக்க வேண்டும் என்னும் விருப்பம் உங்களுக்குண்டாயிருந்தால் அழைப்பிக்கிறேன்,' என்று சொல்லி விசாலமாகிய ஒரு மண்டபத்தில் முத்துப் பந்தல் சிறப்பித்து, சந்தனத்தைப் பன்னீரில் குழைத்து மெழுகி, நவரத்தினப் பொடிகளால் கோலமிட்டு, வாழை கமுகுகள் நாட்டி, மலர்மாலை தூக்கி, நெய் விளக்கேற்றி, முன்பக்கத்தில் முகமல் திரை போட்டு, அப்பந்தலுக்குள் மரகதவிமானம் ஒன்றை அலங்கரித்து வைத்து, அதில் மாணிக்கப்பீடம் அமைத்து, அதன் மேல் தங்கக் கலச ஸ்தாபனம் செய்து, அக்கலசத்தில் ஜகன் மாதாவாகிய சாரதையை ஆவாகனம் பண்ணி, சங்கம் முதலிய வாத்தியங்கள் கோஷிக்க, கந்த புஷ்ப தூபதீப நைவேத்தியங்களைக்கொண்டு ஆகமவிதிப்படி பக்தி விசுவாசத்துடனே அர்ச்சித்துப் பூசித்து அஞ்சலித்து, கலைமகள் மூலமந்திரத்தைப் பிரணவநாமக சகிதமாகப் பற்பல உருச் செபித்து திரைப்புறத்திலிருந்து நூதனமாகச் சரஸ்வதிமேல் ஓர் அந்தாதி பாடி, வசனரூபமாக, 'தவள ஸ்வரூபி ! தவள பத்மாசனி ! தவள பூஷணி ! புவனகாரணி ! புஸ்தகபாணி !' என்று ஸ்தோத்திரித்த மாத்திரத்தில், அப்பந்தலின் திரைக்குள் அந்த ஞான சிரோமணியாகிய பரதேவதை சர்வாபரணபூஷிதையாய் எத்திசையிலும் மனோக்கியமான மந்தார பாரிஜாத திவ்விய பரிமளவாடை வீசும்படி எழுந்தருளித் தாம்தாமென்று தாளமத்தளம் முழங்க, வலக்கை மகரவீணை வாசிக்க, இடக்கை அபிநயிக்க, ஒற்றைக்காற் சிலம்பு கலீர் கலீர் என்று சப்திக்க அடிபெயர்த்து அற்புத நடனம் செய்யத் தலைப்பட்டாள். அதை அரசன் முதலானவர்கள் அறிந்து சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்து, பிரமானந்தத்தில் மூழ்கிப் பரவசமானார்கள்.

அப்பொழுது நாமகள், 'எங்கடா கம்பா, சிலம்பு ?' என்றாள். என்றவுடனே கம்பர், அரசன் கையிலிருந்த சிலம்பை வாங்கிச் சாரதையின் இடப் பாதத்திற்கு நேரே நீட்டினார். அது அந்தத் திருவடியில் போய் ஏறினமாத்திரத்தில் கலைவாணி அந்தர்த்தானமாய்ப் போய்விட்டாள். பிறகு சேரன் கம்பரைப்பற்றிச் சமூசயித்து, 'நீர் யார் ? உம்முடைய பூர்வோத்திரம் என்ன ? உண்மையைச் சொல்ல வேண்டும்' என்று வேண்ட, கம்பர் தாம் இன்னார் என்பதும், தமக்கும் சோழனுக்கும் விரோதமுண்டானதும், அவனுடைய தேசத்தைவிட்டுத் தாம் வந்ததும், மார்க்கத்தில் நடந்த செய்தியும் சாங்கோபாங்கமாகச் சொல்லக் கேட்டு அரசன் அதிக சந்தோஷமாய் ஆச்சரியப்பட்டு, மகாவித்துவானுகிய அவர் தனக்கு அடைப்பைத் தொழில் செய்ததன் நிமித்தம் விசனமுற்று, அன்று தொட்டு அவரை முன்னிலும் மிக்க செல்வமும் சிறப்புமாக வைத்திருந்தான்.

11485

அவ்வண்ணமாய் இவர் சேரனிடத்திலிருக்க, சோழன் நெடு நாளாகக் கம்பர் முகத்தைக் காணுமையால், தாய் முகத்தைக் காணுத சிசுவைப் போலவும், மழை முகத்தைக் காணுத பயிர் போலவும், கணவர் முகத்தைக் காணுத கற்புடை மடவார் போலவும், போர் முகத்தைக் காணுத வீரர் போலவும், கொடுப் போர் முகத்தைக் காணுத இரப்போர் போலவும் ஏக்கமுற்று, 'ஐயோ! நான் தீர்க்காலோசனை பண்ணுமலும், கொஞ்சமாவது தாட்சணியமில்லாமலும் கண்டித்துப் பேசி, 'என் தேசத்தை விட்டுப் போய்விடும்,' என்றதனாலல்லவோ, வித்வரத்நமாகிய கம்பர் என் சமுகத்தைவிட்டு விலகிப் போனார்; இனி என்றைக்கு அவர் முகத்தை நான் காண்பேன்! அவர் இல்லாத சபை தாமரை இல்லாத தடாகமும், சந்திரனில்லாத வானமும், நதியில்லாத நாடும், துதியில்லாத நாவும், ஞானமில்லாத கல்வியும், கற்பில்லாத பெண்டிரும், தெய்வத் தியானம் இல்லாத நெஞ்சும், புத்திரபாக்கியம் இல்லாத இல்வாழ்க்கையும், செங்கோலரசன் இல்லாத நகரமும் போலச் சிறப்பிழந்து இருக்கின்றதே! அவரெங்கே போனாரோ! எவ்விடத்தில் இருக்கிறாரோ! இன்ன தேசத்திலிருக்கிறார் என்று எந்த மகானுபாவனாவது வந்து சொல்லக் கேட்பேனே!' என்று தன் சபையாருடனே சொல்லித் துக்கப்பட்டு, அஷ்டதிக்கிலுமுள்ள அந்தந்தத் தேசங்களுக்குத் தூதர்களை அனுப்பிப் பல நாள் தேடியும் செய்தி தெரியாமல் தடுமாறிப் பின்பு தெய்வ கதியாய்ச் சேரமகாராஜனுடைய சமஸ்தானத்தில் இருக்கிறாரென்று சிலர் வந்து சொல்லக் கேள்விப் பட்டு, அதை உள்ளபடி தெரிந்துகொண்டு, 'இந்த நிருபம் கண்ட நாழிகைக்குத் தயை செய்ய வரவேண்டும்,' என்று கம்பருக்கு ஒரு நிருபமும், 'தாமசமில்லாமல் எப்படியாவது தாம் கிருபை கூர்ந்து கம்பர் கவிச்சக்கரவர்த்தியை அனுப்புவிக்க வேண்டும்,' என்று சேரனுக்கு ஒரு விண்ணப்பமும் எழுதி ஓர் ஆள் வசம் அனுப்பினான்.

கம்பர், சோழன் தமக்கு எழுதிய நிருபத்தைச் சேரனுக்குக் காட்டி, 'சோழராஜனிடத்திற்குப் போகும்படி நமக்கு உத்தரவு கொடுத்து அனுப்பவேண்டும்,' என்ன, சேரனும் தனக்குச் சோழன் அனுப்பிய கடிதத்தைக் கம்பருக்குக் காண்பித்து, 'நீர் இங்குச் சில காலம் வந்து வசிக்கும்படி நேரிட்டது ஆர் செய்த புண்ணியமோ!' என்றும், 'இப்பொழுது நீர் திடீரென்று பிரிந்துபோக வேண்டி வந்தது எனதுநிர்ப்பாக்கியந்தானே?' என்றும், 'நீர் சேர்ந்திருந்தமையால் என் சபை இந்திர சபை போலச் சிறப்புற்றிருந்ததே!' என்றும், 'நீர் நீங்கிவிட்டால் இனி அது மனையாளில்லாத இல்லம் போல அழகிழந்திருக்கும்!' என்றும், 'உம்மைப் போல, எனக்குச் சாதுரியமாகவும், செவிக்கின்பமாகவும் ராமாயணப் பிரசங்கம் செய்பவர்கள் வேறே யார் இருக்கின்றார்கள்?' என்றும். 'எனக்கு இத்தனை கோரமான துக்கம் சம்பவித்ததே!'

என்றும் விசனப்பட்டான். கம்பர் அரசனைப் பார்த்து, நிஷ்பிரயோசகனுகிய என்னைக் குறித்துத் தாங்கள் இவ்வளவு கவலைப்பட்டால் மன்னுயிரும் தன்னுயிராகப் பாவித்து உலக பாரத்தையெல்லாம் தாங்குவதன்றி, பரதேசத்திலிருந்து நிராதரவாய் வந்தடுத்த எளியேனையும் அன்ன வஸ்திராதிகள் தந்து, பெற்ற தாய் பிள்ளையைப் பரிபாலிப்பதுபோல, ஆதரித்து வந்த பரமோபகாரியாகிய தங்களைப் பிரிவதுபற்றி நான் எவ்வளவு விசனப்படவேண்டும் ?' என்றும், 'அல்லாமலும் உலகத்தில் விசனமில்லாதிருப்பவர் ஒருவருமில்லை,' என்றும், 'விஷயம் சிறிதாயினும் பெரிதாயினும் அதனுல் விளையும் காரியமாகிய துக்கமோ அவரவர் ஸ்திதியை நோக்குமிடத்தில் ஒரு தன்மையேயாம்,' என்றுசொல்லி, அது அனைவர்க்கும் ஒரு தன்மையாம் என்பதற்கு திருஷ்டாந்தமாக,

> " பாலுக்குச் சர்க்கரை இல்லையென் பார்க்கும் பருக்கையற்ற
> கூழுக்குப் போடவுப் பில்லையென் பார்க்கும் குற்றித்தைத்த
> காலுக்குத் தோற்செருப் பில்லையென பார்க்கும் கனகதண்டி
> மேலுக்குப் பஞ்சணை இல்லையென் பார்க்கும் விசனமொன்றே "

என்ற பாடலையும் கூறி, அவன் துக்கத்தை ஆற்றினுர். அப்புறம் சேரன் கம்பரைப் பல விதத்திலும் கொண்டாடி, அரசர்களுக்குச் செய்வது போல அவருக்குச் சகல வரிசைகளும் செய்து, தன் மந்திரி பிரதானிமார்கள் சாமரம் போட்டுக்கொண்டு சம்பிரமத்துடனே அவரை அழைத்துப் போய்ச் சேரநாட்டில் விட்டு வரும்படி கட்டளை இட்டான்.

கம்பர், சேரன் கொடுத்த சித்திரப் பொற்பட்டாடையை உடுத்து, நவரத்தின பூஷணங்களைத் தரித்து, ரத கஜ துரகபதாதிகள் புடை சூழ யானைமேல் ஆரோகணித்து, தவளக்குடை கவிக்க, ஆலவட்டம் அசைக்க, அஷ்டாதச வாத்தியங்களும் முழங்க, விருதுகள் பிடிக்க, எச்சரிக்கை படிக்க, மந்திரி சாமந்தர்கள் சாமரை போட, அரசர்கள் அஞ்சலிக்க, மோனமாதர் பரத நாட்டியமாட, பாணர்கள் சங்கீதம் பாட, அநேகவித ஆடம்பரத்துடனே பிரயாணப்பட்ட பொழுது, சேரமகாராஜன் சில தூரம் கூட வந்து உபசரித்து வழி விட்டுத் திரும்புகையில், கம்பரை நோக்கி, 'நீர் சோழனை விட்டுப் பிரியும் பொழுது செய்து வந்த பிரதிக்கினையை மறந்துவிட்டீர் போலக் காண்கிறதே !' என்று எச்சரிக்க, அவர், 'மறக்கவில்லை, அங்கே நான் போய்ச் சேர்ந்த பிறகு சமயம் அறிந்து உங்களுக்குக் கடிதம் எழுதுகிறேன்; அப்பொழுது தாங்கள் தயை செய்யலாமேயொழிய இப்பொழுது அவசியம் இல்லை,' என்ன, அதற்கவன், 'அந்தப்படிச் செய்வீராகில் முன்பு நீர் நமக்குச் செய்தது போலவே நாம் உமக்கு அடைப்பைக் காரனுக வந்து அந்தக் கடனைச் செலுத்துவோம்,' என்ன, கம்பர், 'நல்லது ' என்று அரசனுடைய அனுமதி பெற்று, அத்தேசத்தை விட்டுப் புறப்பட்டுச் சோழ நாட்டுக்குச் சமீபமாய் வருமளவில்

செய்தி தெரிந்து பொன்னித் துறைவனுகிய சோழ ராஜன் எதிர் கொண்டு உபசரித்து அழைத்து வந்து, சித்திரமயமாகிய ஒரு சிங்காசனத்தில் இருக்கச் செய்து, அவர் முகத்தை நோக்கிக் கண் களிக்க மனம் களித்து தன்னைவிட்டுப் பிரிந்த பின்பு நடந்தவை களையெல்லாம் சொல்லக் கேட்டுத் துக்கித்தும் சந்தோஷித்தும் அதிசயித்தும் இரண்டொரு நாள் சென்ற பின்பு, 'நீர் இங்கிருந்து போம்பொழுது செய்த பிரதிக்ஞை நிறைவேறுமல் போயிற்றே!' என்று பரிகாசமாய்க் கேட்க, கம்பர், 'அது இன்று எட்டாம்நாள் நிறைவேறும்,' என்று சொல்லிச் சேரனுக்குக் கடிதம் எழுதினர்.

அது கண்டு அவன் அடைப்பைக்காரனுக வேடம் பூண்டு, தன் பட்டத்துப் புரவி மேலேறி, அதிசீக்கிரமாக அந்த எட்டாம் நாள் வந்து, சோழன் சபையில் கம்பர் பக்கத்தில் சேர்ந்து நின்று, அவர்க் குத் தாம்பூலம் மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தான். அவன் முகக்குறியைச் சோழன் மகள் உற்றுப் பார்த்து, இன்னன் என்று தெரிந்து கொண்டு, தன் பிதாவுக்குக் குறிப்பாகத் தெரிவித்தாள். அதை அறிந்து கம்பர் சேரனுக்குக் குறிப்பிக்க, அவன் அந்தக் கணம் அவ்விடத்தைவிட்டு நீங்கிக் குதிரையேறித் தன் தேசம் போய்ச் சேர்ந்தான். பிறகு சோழன், உம்முடைய பக்கத்தி லிருந்தவன் ஆர்?' என்ன, கம்பர், 'அவன்தான் சேர மகாராஜன்' என்ன, 'ஏன் அவனை அனுப்பிவிட்டீர்?' என்ன, 'உமக்கு மேலா யிருந்து, உம்மிடத்தில் கப்பம் வாங்குகிற மன்னர் மன்னன் உமதருகில் தனது பரிவாரங்களை விட்டுத் தனியே வந்திருக்கையில் அவனை நீர் பிடித்துச் சிறைப்படுத்தி அவனுடைய ராச்சியத்தைக் கைப்பற்றிக் கொள்வது எளிதென்றல்லவோ அனுப்பிவிட்டேன்!' என்ன, சோழன், 'அப்படியா! நல்லது! அவன் உமக்கு மடித்துக் கொடுத்த வெற்றிலைச் சுருளை ஒவ்வொன்றுக வாங்கி விரற் சந்தில் அடுக்கி வைத்துக்கொண்டிருந்தீரே அல்லாமல், நீர் தரித்துக் கொள்ளவில்லையே! அஃதென்ன?' என, கம்பர், 'அற்பருக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பார். நான் அப்படி நடக்க மாட்டேன்; சக்கிரேசுரனுகிய அவன் என்னைக் கௌரவப்படுத்தும்பொருட்டு அபிமானித்து அவ்விதமாகச் செய்ய, நான் அது தெரியாமல் தலை விரித்துக்கொண்டு ஆடலாமா? வாங்கித் தரித்துக்கொள்வது மரியாதையா?' என்ன, சோழன் கம்பருடைய வித்தியா சாமர்த்தியத்தைப் பார்க்கிலும், ஒழுக்கத்தையும், பாரமார்த்திகத்தையும், லௌகிக யுக்தியையும் கண்டு மிகவும் மெச்சிக்கொண்டான்.





[கம்பர் அளித்த காவிய அமுதம் கம்ப ராமாயணம். இஃது ஒரு 'தெய்வத் திருநூல்,' என்று போற்றத்தக்க பெருமை உடையதாகும். எனினும், இந்நூலின் அரங்கேற்றம் குறித்துக கம்பர் பட்டபாடுகளும் நூலின்பலப்பல இடங்களுக்கு அவர் தந்தருளிய நுட்ப உரைகளும் இக்கட்டுரையில் காணப்படுகின்றன. கவிச்சக்கரவர்த்தி அவர்களின் கடல் போன்ற பேரறிவுத் திறனையும் காவிய நலனையும் சுவைக்க விரும்புவார்க்கு இந்தக் கட்டுரை ஒரு கருவூலமாகும்.

— பதிப்பாசிரியர்]

8

கம்பர் இராமாயணம் பாடி அரங்கேற்றியது

மாட்சிமை தங்கிய திருவெண்ணெய்நல்லூரில் கொஞ்சங் குறைய ஆயிரம் வருஷத்துக்கு முன் வசித்திருந்த அந்தக் கிராமாதிபதியும் கனம் பொருந்திய பிரபுவும் ஆகிய சடையப்ப முதலியார் என்பவர் தமிழ் வித்துவான்களுக்குள் அதிசிரேஷ்டராகிய கம்பரை நோக்கி, 'ஐயா, நீர் பிரபல கவிஞராய் இருக்கிறபடியால் உமது பெயர் நெடுங்காலம் நிலைபெற்று நிற்கும்படி சம்ஸ்கிருத பாஷையில் இருக்கின்ற ஸ்ரீமத் ராமாயணம் என்னும் மகா காவியத்தைத் தமிழ்ச் செய்யுளாகச் செய்தால் லோகோபகாரமாய் இருப்பதுமன்றி உமக்கும் சுகிர்தமாம,' என்று சொல்ல, கம்பர், 'நல்லது அப்படியே செய்கிறேம்,' என்று சொல்லி, அநேக நாளாய் ஒன்றும் செய்யாமல் காலஹரணம் பண்ணிக்கொண்டு வந்தது கண்டு, அவர், 'நாம் சொல்வது இவருக்கு உறைக்கவும் அக்கறை பிறக்கவும் இல்லை; ஆதலால், சடையைப் பிடித்திழுத்தால் சந்நியாசி கிட்ட வருவான் என்கிறபடி, குலோத்துங்க சோழனைக் கொண்டு சொல்லுவித்தால் ராஜாதிகாரத்திற்கு அஞ்சியாவது நமது அபிப்பிராயத்தை நிறைவேற்றுவார்,' என்று நினைத்து அரசனுக்கு அதை அறிவித்தார்.

அரசன் அதைப் பற்றித் தனக்குள்ளே யோசித்து, 'நாம் கம்பரை மாத்திரம் பாடச் சொன்னால் எவ்விதத்திலும் தாமதப் படும்; கம்பரையும் ஒட்டக்கூத்தரையும் தனித்தனியே பாடச் சொன்னால், அவர்கள், கூழுக்கு மாங்காய் தோற்குமா என்பதாக, ஒருவருக்கொருவர் முந்த வேண்டிச் சீக்கிரத்தில் பாடி முடிப் பார்கள்,' என்று அவ்விருவரையும் அழைப்பித்துச் சொல்ல, ஒட்டக் கூத்தர், பாலகாண்டம் முதல் ஐந்து காண்டம் பாடி, ஆறுவது காண்டத்தில் கடல்காண் படலம் மட்டும் பாடினார். அதுவரையில் கம்பர் தெய்வ வணக்கமும் செய்யவில்லை என்பதை முதலியார் அறிந்து வேந்தனிடத்தில் போய், 'கம்பரையும் ஒட்டக்கூத்தரையும் இராமாயணம் பாடச் சொன்ன தாங்கள் பின்பு அவர்களை ஏனென்று கேளாதிருப்பது தர்மமா?' என்ன, சோழன் கவிஞரிருவ ரையும் வரவழைத்து, 'இராம சரித்திரம் எவ்வளவு பாடியாயிற்று?' என்ன, ஒட்டக்கூத்தர், 'கடல்காண் படல பரியந்தம்,' என்றார். கம்பர் ஒரு பாட்டும் பாடாதிருந்தும், தாம் ஒட்டக்கூத்தரிலும் அதிகமாகப் பாடினதாய்ச் சொல்ல வேண்டுமென்று நினைத்ததனால், அத்தருணத்தில் பொய் பேசுவது ஆவசிகமாய் இருந்தது. அவர், 'நாமிப்பொழுது சொல்லும் பொய், பிறருக்குத் துன்பத்தைச் செய்யாததாலால், நமக்குத் தோஷமில்லை' என்று குறித்து, 'கடல் காண் படலத்திற்கு அப்புறத்துள்ள திருவணைப் படலம் மட்டும் பாடினேம்,' என்றார்.

'அப்படியா? அதைச் சற்றே பிரசங்கியும், கேட்போம்,' என்று அரசன் சொல்ல, கம்பர் உடனே அதை மாத்திரம் எழுபது செய்யுளில் பாடிப் பிரசங்கிக்கத் தொடங்கி, சமுத்திரத்தில் வாராவதி கட்டும்பொருட்டுச் சுக்கிரீவன் ஆணையால் வானர வீரரும் படைத் தலைவர்களும் காட்டிலுள்ள மலைகளைப் பிடுங்கிக் கொண்டு வருவதைப் பற்றிப் பேசுமிடத்தில்,

> "குமுத னிட்ட குலவரைக் கூத்தரின்
> திமித மிட்டுத் திரியும் திரைக்கடல்
> துமித மூர்புக வானவர் துளளினர்
> அமுதம் இன்னும் மெழுமெனு மாசையால்."

என்ற பாடலைச் சொல்லி, 'குமுதன் என்னும் படைத்தலைவ னெருவன் பூமியினின்று வேரோடு பிடுங்கி அந்தரத்தில் பந்தாடிக் கொண்டே வந்து, மற்றவர்களைப் போலத் தெய்வத் தச்சனுகிய நளன் என்பவன் கையில் கொடாமல், தானே விட்டெறிந்த பிரமாண்டமாகிய மலையானது வந்து விழுந்து கூத்தாடிகள் போலத் திமிதம் என்று ஒலித்துச் சுழலுதலால், நுரைத்துத் திரைத் துக் குமிழியிட்டெழுந்த கடல் நீர்த் துளிகள் விசையாய் வந்து தங்கள் இருப்பிடமாகிய சுவர்க்கத்தில் பிரவேசித்ததை அங்குள்ள தேவர்கள் பார்த்து, 'பூர்வ காலத்தில் நம் இனத்தாராகிய தேவர் களும் ஸ்ரீ மகாவிஷ்ணுவும் கூடி ஒரு மலையை மாத்திரம் கொண்டு

போய்ப் போட்டு அமிர்தமெழும்படி பாற்கடலைக் கடைந்தார்கள் ; இப்பொழுது அந்த விஷ்ணுவே ஸ்ரீ ராமனுக அவதரித்தும் அத் தேவர்களே வானரர்களாகச் சென்னித்தும் வந்து அநேக மலைகளைப் பிடுங்கி இந்தத் தென் சமுத்திரத்தில் போடுகிறார்கள் ; இனி இதையும் கடைவார்கள் ; இதில் முன் போலச் சொற்பமாகவன்றி, அமிதமாக அமிர்தம் உண்டாகும் ; நாமெல்லாம் சலப்பிராயமாய் வேண்டிய மட்டும் புசிக்கலாம்!' என்று ஆசை கொண்டு தலை தெரியாத சந்தோஷத்தையுடையவர்களாய்த் துள்ளியாடினார்கள்,' என்றார்.

அது கேட்டு ஒட்டக்கூத்தர் கம்பரை நோக்கி, ' துளியைத் தும்பி என்றீரே, இது நிகண்டு திவாகரங்களில் வழங்கி வருகிறதா ? அல்லது, ஏதாவது இலக்கியப் பிரயோகம் கண்டதுண்டா ?' என்ன, கம்பர், ' அவைகளில் எல்லாமில்லை, உலக வழக்கு,' என்ன, அவர், ' கெரடிகற்றவன் இடறி விழுந்தால் அதுவும் ஒரு வரிசை என்பது போல, இவர் துளியைத் தும்பி என்று வழுவாய்ச் சொல்லிச் சமாளிக்கும்படி உலக வழக்கெனச் சாதிக்கிறார்,' என்றெண்ணி, ' உலக வழக்கில் வருவது மெய்யானால் அதை மெய்ப்பிக்க வேண்டுமே !' என்ன, ' நல்லது ' என்று பிரசங்கம் முடிந்த பிறகு, கம்பர் வீட்டிற்கு வந்து சரஸ்வதியைப் பிரார்த்திக்க, அவள் பிரசன்னமாகி, ' என்ன வேண்டும் ?' என, 'தாயே! ஜகதம்பா ! பிரமாதி தேவர்களும், வசிஷ்டர் பராசரர் வயாசர் முதலாகிய மகருஷிகளும் பிரார்த்திக்கும்படி அவர்களுடைய மேன்மை தங்கிய நாவினிடத்தில் வீற்றிருக்கின்ற நீ, எளியேனுடைய புன்மையாகிய நாவிலும் இருந்து அருளிச் செய்தவண்ணம், ' நானும் அறியேன் அவளும் பொய் சொல்லாள்,' என்பதாக, அடியேன் சொன்ன ' துமி ' என்பதை ஒட்டக்கூத்தன் ஆக்ஷேபித்து மெய்ப்பிக்க வேண்டுமென்று போராடுகிறானே ! அதற்கு என்ன செய்கிறது ?' என, கலைமகள், ' நாளைக்குப் பொழுது விடியச் சாம நேரத்தில் அவனை இடைத் தெருவில் அழைத்து வா,' என்று சொல்லிப் போனாள்.

கம்பர் அப்படியே ஒட்டக்கூத்தரையும் குலோத்துங்க சோழனையும் அவ்விடத்திற்கு அழைத்துப் போகையில், ஒரு வீட்டில் வேதமே தயிர்த் தாழியும், வேதாந்தமே தயிரும், சாஸ்திரமே தயிர் கடை மத்தும் கயிறும், இதிகாச புராணங்களே சிறு பிள்ளைகளாய் உருவெடுத்துவர, தான் இடைப்பெண்ணாக வடிவுகொண்டு வந்து, அந்நேரத்தில் தயிர் கடைந்துகொண்டிருந்த வாணியானவள், அவர்கள் சமீபத்தில் வருகையில், அவர்களுக்குக் கேட்கும்படி தன் கிட்டவிருந்த சிறுவர்களை, ' பிள்ளைகளே ! உங்கள் மேல் மோர்த் தும்பி தெறிக்கப் போகிறது, எட்ட இருங்கள்,' என்று சொல்ல, கம்பர் ஒட்டக்கூத்தரை, ' கேட்டீரா ?' என்ன, அவர், ' சரிதான்,' என்று ஒப்புக்கொண்டு, பிறகு, ' இந்த வீடு குடியில்லாத வீடென்று எனக்கு நன்றாய்த் தெரியுமே ! இப்பொழுது ஆர் இங்கே வந்திருக்

கிறவர்கள், அறிவோம் ?' என்று மடியில் செருகியிருந்த ஜமுதாட்டை உருவிக்கொண்டு ஓடிப் பார்க்கையில், அங்கே ஒரு ஸ்திரீயும் சில சிறு பிள்ளைகளும் தயிர்த் தாழி முதலானவைகளும் பிரத்தியக்ஷமாகத் தமது கண்ணுக்குத் தோன்றினவுடனே மறைந்து போனமையால், ' இது சாரதையின் திருவிளையாட்டு !' என்று கருதி ஆச்சரியப்பட்டுத் திரும்பினர்.

அப்புறம் கிட்டத்தட்ட ஆறு மாதத்துக்குள் கடல் காண் படலத்தினின்று மற்றதையும் ஒட்டக்கூத்தர் பாடி முடித்தார். முடித்தும், அவர் மனத்தில், ' கம்பனுக்குச் சரஸ்வதி கடாக்ஷம் விசேஷமாய் இருக்கிறது. அதனால் அவன் கவிக்கு முன்னே நமது கவி மகிமைப்படவில்லை,' என்று வெறுப்புண்டாகி, ஒருநாள் தாம் பாடிய இராமாயண புஸ்தகத்தைச் சஞ்சிகை சஞ்சிகையாக உருவிக் கிழித்து எறிந்துகொண்டிருக்கையில், ஏதோ ஒரு நிமித்தத்தால் கம்பர் அவ்விடத்திற்குப் போய்ப் பார்த்து, 'கிழித்தெறியப்படுகின் றதே! இஃதென்ன?' என, அவர், 'நான் பாடின ராமாயணம்,' என்ன, இவர், ' ஏன் கிழித்தெறிகிறீர் ?' என, அவர், ' வரகவியே கவி, மற்றைக் கவி என்ன கவி ?' என்று சொல்லி, மற்றதையும் கிழிக்க எத்தனிக்கையில், இவர் அவர் கையிலெடுத்த ஏடுகளைச் சீக்கிரமாய்ப் பறித்துப் பார்த்து, உத்தரகாண்டம் என்று தெரிந்துகொண்டு, கிழிக்கவொட்டாமல் தடுத்து, '' இராக்கதர்களுடைய பிறப்பு வளர்ப்பு முதலானவைகளே ஒழிய வேறொரு விசேஷமும் உத்தர காண்டத்தில் சொல்லப்படாமையால், அதை நாம் பாட வேண்டுவ தில்லை ' என்றும், ' அதற்குப் பிரதியாக இவர் பாடினதையே வைத்துக்கொள்ளலாம் ' என்றும், ' வைத்துக்கொண்டால் இவர் வாக்குக்கும் நமது வாக்குக்கும் உள்ள தாரதம்மியம் உலகத்தா ருக்குத் தெரிய வரலாம்,' என்றும் யோசித்து, ஒட்டக்கூத்தரை நோக்கி, ' ஐயா, அருமைப் பட்டுப் பாடினதை ஏன் வீணுக்கு கிழித் தெறிய வேண்டும் ! நான் ஆறு காண்டம் மாத்திரம் பாடி, அதன் பின்னே நீர் பாடிய ஏழாவது காண்டமாகிய இந்த இரண்டாயிரம் பாடலையும் சேர்த்துக்கொள்ளுகிறேன்,' என்றார். அவர், ' அப்படியே செய்யும்,' என்றார்.

உலகத்தில் யாராயினும் படித்தாலும் பிறர் கேட்கப் பிரசங் கித்தாலும், விக்கினமின்றி நிறைவேறுவதற்கும், தத்தம் மனோரதம் கைகூடுவதற்கும், பாரதத்தை விராடபர்வத்திலிருந்தும், இராமா யணத்தைச் சுந்தரகாண்டத்திலிருந்தும் ஆரம்பிக்கிறது சம்பிரதாய மாகையால், அவ்வாறே சுந்தரகாண்டத்திலிருந்து நல்ல நாட் கொண்டு பாடத் தொடங்கி, அன்று முதல் சூரியாஸ்தமன காலத்தில் சந்தியாவந்தனக் கடன் கழித்துவிட்டு, சமஸ்கிருத வித்துவான்களாகிய பிராமணோத்தமர்களைக் கூட வைத்துக் கொண்டு, இராமுழுவதும் வான்மீகம், வசிஷ்டம், போதாயனம் முதலியஇராமாயணங்களையும், மற்றப்புராணுதிகளையும்விசதமாகக் கிரமத்துடனே ஆராய்ந்து அறிந்துகொண்டு சிறிது நேரம் நித்திரை

செய்து, உதயத்திற்கு எழுந்து நித்திய கர்மானுஷ்டானம் முடித்துக் கொண்டு, தம்மிடத்திலுள்ள கற்றுச் சொல்லிகளில் சிற்சிலர் ஏடும் எழுத்தாணியும் எடுத்து எழுதும்படி ஆளுக்கு ஐம்பது அறுபது எழுபது எண்பதாக அஸ்தமனபரியந்தம் நாளொன்றுக்கு எழு நூறு செய்யுள் விழுக்காடு ஒரு பக்ஷத்திற்குள் சரஸ்வதியின் அனுக் கிரக விசேஷத்தால் ஸ்ரீராமர் மகுடாபிஷேகம்வரையில் பதினாயிரம் பாட்டில் ஆறு காண்டமும் பூரணமாகப் பாடினர். நாளொன் றுக்கு எழுநூறு கவி வீதம் பாடினர் என்பதைக் குறித்துச் சொல்லிய பாடல் :

" கழுந்த ராயுன கழல்பணி யாதவர் கதிர்மணி முடிமீதே
அழுந்த வாளிக டொடுசிலை ராகவ வபிநவ கவிநாதன்
விழுந்த நாயிற தெழுவதன் முன்மறை வேதிய ருடனுராய்ந்(து)
தெழுந்த நாயிறு விழுவதன் முன்கவி பாடின(து) எழுநூறே."

என்பதாம்.

இவ்விதமாகக் கம்பர் தாம் பாடின ஆறு காண்டங்களுடனே ஒட்டக்கூத்தர் பாடின உத்தரகாண்டமும் சேர்த்துப் பன்னீரா யிரம் கவிகளையும் எழுதுவித்துச் சோழன் முதலானவர்களுக்கு இராமாயணம் பாடி முடித்த செய்தியை அறிவித்து, ' இது விஷ்ணு பரமாகையால் இதை அவ்விஷ்ணுவின் திவ்ய தேசங்கள் பலவற் றினும் முக்கியமான திருவரங்கம் பெரிய கோயிலில் அரங்கேற்றல் செய்ய வேண்டும்,' என்று அவர்கள் அனுமதி பெற்று, ஸ்ரீகோசத்தை (புஸ்தகத்தை) எடுப்பித்துக்கொண்டு ஸ்ரீரங்கத்திற்குப் போய், அக்காலத்தில் அந்த ஸ்தலத்திலிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குச் செய்தி தெரிவிக்க, அவர்கள் மேற்படி காவியத்தில் நரஸ்துதி பண்ணப்பட்டிருக்கிறது என்பதனாலும், மற்றும் சில அபிப்பிராயத் தினாலும் அசூயை கொண்டு, அக்கருத்தை வெளிப்படுத்தாமல், 'சம்ஸ்கிருத பாஷையாயிருந்தால் ஒன்றும் யோசனை பண்ண வேண்டியதில்லை ; இது தமிழாதலால் எப்படி இருக்குமோ என்று எங்களுக்கு அனுமானமாய் இருக்கிறது; நீரோ பிரபல வித்துவான்; உமது பாண்டித்தியத்தைக் குறித்தும், யோக்கியதையைக் குறித்தும் சொல்லுகிறதற்கு நாங்கள் அருகர்கள் அல்லேம் ; தமிழிலே மகா வித்துவான்களாக இருக்கிறவர்கள் தில்லை மூவாயிரவர் என்னும் தீட்சிதர்களும், மற்றும் சிற்சில பெயர்களு மாதலால், அவர்கள் குற்றம் சொல்லாதபடி கொஞ்சம் பிரயாசப் பட்டாவது அங்கே போய் அவர்களுக்குக் காட்டி அவர்களுடைய கையொப்பம் வாங்கி வந்தால் உமது காவியத்திற்கும் உமக்கும் அதிக கௌரவமாயிருக்கும்,' என்றார்கள்.

அவர்கள் சொற்படியே கம்பர் சிதம்பரத்திற்குப் போய்த் தில்லை மூவாயிரவர்களில் சிலரைக் கண்டு இந்தச் செய்தியை அறிவிக்க, அவர்கள், 'நாங்கள், மூவாயிரம் பெயரும் கூடினால்

அல்லாமல் ஏகதேசத்தில் இதற்கு உத்தரம் சொல்லுகிறதெப்படி? நீர் இன்னுரின்னுரிடத்தில் போம்,' என்று சிலரைக் குறித்து அவர்களிடத்தில் அனுப்ப, அங்கே போன பொழுது அவர்களும், 'மூவாயிரம் பெயர்களும் ஒன்றுகச் சேர்ந்து ஆக வேண்டிய காரியத்திற்கு நாங்கள் என்ன செய்யலாம்?' என்று வேறு சிலரைக் குறித்து, 'அவர்களிடத்தில் போம்,' என்று அனுப்பினார்கள். அவர்களும் மற்றுமுள்ள யாவரும் இந்தப்படியே பலரிடத்திலும் போகச் சொல்ல, கம்பரும் அங்கங்கே பாவோடுங்காலாய் நாள்தோறும் போய்ப் போய்க் காலோய்ந்து போனதே பல்லாமல் ஒரு பயனுமில்லை. எவர்களுடனே சொன்னலும், 'மூவாயிரம் பெயரும் ஏககாலத்திலே கூடினல்தான் உமது எண்ணம் முடியும். அல்லாவிட்டால் ஒரு யுகம் சென்றலும் நீரெடுத்த காரியம் சித்தியாக மாட்டாது,' என்று சொல்லக் கேட்டு, 'இஃதென்ன, ஊர்கூடிச் செக்குத் தள்ள வேண்டியதாய் இருக்கிறதே!' என்று, வெகு நாளாக வியாசங்கப்பட்டு, ஒருநாள் ராத்திரி போஜனம் செய்து சயனித்துக் கொள்ளும் பொழுது, தில்லைத் திருச்சித்திரகூடத்தில் எழுந்தருளிய ஸ்ரீ கோவிந்தராஜப்பெருமானைத் தியானித்து, 'ஓ ஜனார்த்தனு! பக்தபராதீனு! ஆபத்பாந்தவா! அநாதரட்சகா! எம்பெருமானே! அடியேன் இலவு காத்த கிளி போல எத்தனே காலமாகத் தில்லை மூவாயிரவருடைய தலைவாசல் காப்பேன்? ஆரை அடுத்தாலும் நமக்கென்ன என்று உபேக்ஷையாய் இருக்கிறார்களே அல்லாமல், ஒருவர்க்காவது இதைப்பற்றி எள்ளளவும் சிந்தையில்லையே! இந்தக் காவியம் லோகப் பிரசித்தமாக வேண்டுமென்று உனக்கே திருவுளம் இல்லையோ! நீ சூத்திரதாரி, நான் சூத்திரப் பிரதிமை; ஆதலால், நீ அசைத்தபடியல்லது நானுக இயங்க மாட்டுவனே! உன் சங்கற்பம் அப்படி இருந்தால் எளியேன் என்ன செய்வேன்!' என்று அதிக விசனத்துடனே கண்ணுறக்கம் கொண்டார். அப்பொழுது அவருடைய சொப்பனத்தில் அந்தத் தீனதயாளன் எழுந்தருளி, 'ஏன் பிள்ளாய் துக்கிக்கிறாய்? நீ இராமாயணம் அரங்கேற்ற வேண்டித் தில்லை மூவாயிரவரைச் சபை கூட்டுவிப்பதற்காக வெகு பிரயாசப் பட்டாய்; இனி உனக்கு ஒரு வருத்தமும் இல்லை; இதுவரையில் நீ பசியேப்பக்காரனுய் இருந்தாய்? அவர்கள் புளியேப்பக்காரராய் இருந்தார்கள்; ஆகையால், உனக்குண்டான ஆவசிகம் அவர்க்கில்லாமல் போயிற்று; நானே உதயத்திலே அத்தில்லை மூவாயிரவரில் ஒருவருடைய பிள்ளை பாம்பு தீண்டி இறந்து போகும்; அதைத் தகனசமுஸ்காரம் செய்வதற்காக அவர்கள் மூவாயிரம் வீட்டுக்காரரும் அந்தப் பிள்ளை இறந்த வீட்டினிடத்தில் வந்து கூடுவார்கள்; அத்தருணத்தில் போய் நீ பாடின இராமாயணத்தில் நாகபாச படலத்தை எடுத்து, இன்ன இன்ன பாடலை வாசித்தால் விஷதிருஷ்டமான பிள்ளை பிழைக்கும்; அதைக் கண்ட மாத்திரத்தில் அவர்கள் தடையின்றிக் கையொப்பம் கொடுப்பார்கள்,' என்று அருளிச் செய்தார்.

விடிந்த பொழுது பெருமாள் அருளிச் செயலின்படி கம்பர் எழுந்து போய் மூவாயிரம் பெயருங் கூடியிருப்பது கண்டு, 'இராமாயணம் அரங்கேற்ற வேண்டும்,' என்ன அவர்கள், 'நாங்கள் குழந்தையைப் பறிகொடுத்துப் பரிதபிக்கிற சமயத்தில், கிடக்கிறதெல்லாம் கிடக்கட்டும் கிழவீயெடுத்து மீணமேல் வையுங்கள் என்பதாக உம்முடைய ராமாயணத்தை அரங்கேற்ற வேண்டும் என்கிறீர், இதுதானு ஏற்ற சமயம்?' என்றார்கள். இவர், 'நான் பன்னிரண்டு வருஷம் காத்ததற்காக இன்றைக்குத்தானே நீங்கள் மூவாயிரம் பெயரும் ஒருசேரக் கூடும்படி சம்பவித்தது? இது தப்பினால் இனி எந்தக் காலத்தில் இப்படிப்பட்ட சமயம் கிடைக்கும்?' என்று சொல்லி, 'குழந்தை எவ்விதத்தால் இறந்தது?' என்ன, அவர்கள், 'பாம்பு கடித்து இறந்தது; விஷம் இறங்குதற்குத் தலையிலே குடாரியிட்டும், மற்றும் எத்தனையோ மணி மந்திர ஔஷதங்களைச் செய்தும் அனுகூலப்படவில்லை,' என்றார்கள். கம்பர், 'அந்தப் பிள்ளையை நான் பார்க்க வேண்டும்,' என்ன, அவர்கள் எடுத்து வந்து காண்பிக்க, இவர் கடிவாயைப் பார்த்து, 'பல் ஒன்று இரண்டு மூன்றுவரைக்கும் பதிந்தால் பயமில்லை; இது பாம்புக்குள்ள காளி, காளாத்திரி, யமன், யமதூதன் ஆகிய நான்கு பற்களும் படிந்த படியால் அசாத்தியமென்றே சொல்வார்கள்; பிரம்பு கொண்டு அடிக்க உடம்பில் தழும்பு கண்டால் சாத்தியமாகும்; அப்படி ஏதாவது செய்து பார்த்தீர்களா?' என்ன, அவர்கள், 'அதுவும் செய்தோம்; கொஞ்சமாவது தழும்பு காணவில்லை,' என்றார்கள். அப்பொழுது ஊர்க்குடுமி வந்து, 'ஐயா, இந்தக் குழந்தை எண்ணெய் தேய்த்துக்கொண்டு தலை முழுகி வருமளவில் கடித்தபடியினாலே விஷம் அதிசீக்கிரமாகத் தலைக்கேறிப் பற்கள் கருகக் கண் பஞ்சடைந்து போயிற்று; இனி என்ன பிரயத்தனம் செய்தாலும் பலிக்கிறது பிரயாசமே,' என்றான். கம்பரும், 'மெய்தான், அப்பியங்கனம் பண்ணியிருந்தாலும், மதுவுண்டிருந்தாலும் சீக்கிரமாக விஷம் சிரசுக்கேறிவிடும்; எப்படியிருந்தாலும் இருக்கட்டும்; இப்பொழுது பகவத் கடாக்ஷத்தால் இந்தப் பிள்ளை உயிர் பெற்று எழுந்திருக்குமானால் நமது அபிஷ்டப்படி நடத்துகிறீர்களா?' என்ன, அவர்கள், 'ஐயா, நீர் செத்தவர்கள் பிழைப்பார்கள் என்பது ஆச்சரியமாயிருக்கிறது! ஒருவேளை அந்தப்படி நடந்தால் உமது இஷ்டத்திற்கு ஏற்க ஆடங்கமின்றி நடந்துகொள்வோம்,' என்றார்கள்.

அது கேட்டுக் கம்பர் பகவானை மனத்தில் ஸ்மரித்துத் தாம் பாடிய ராமாயண புஸ்தகத்தை அவிழ்த்து, நாக பாச படலத்தை எடுத்து, லக்ஷ்மணன் முதலானவர்கள் இந்திரஜித்து பிரயோகித்த நாகபாசத்தால் கட்டுண்டு மூர்ச்சையாய்க் கிடக்கையில், சகல புவன கர்த்தாவாகிய ஸ்ரீமந்நாராயணன் பூர்வம் சங்கற்பித்த பிரகாரம் கருடன் வந்ததனால், அந்த ஆபத்து நிவாரணமான சந்தர்ப்பத்தில் சில பாடல்களை எடுத்து அவற்றுள்,

" பல்லா யிரத்தின் முடியாத பக்க
மவைவீச வந்த படர்கால்
செல்லா நிலத்தின் அருளோடு செல்ல
வுடனின்ற வாளி சிதறுற்று
எல்லா மவித்து முணர்வோடு மெண்ணி
யறனே விளைக்கு முரவோன்
வல்லா னெருத்த னிடையே படுத்த
வடுவான மேனி வடுவும்." 1

" வாசம் கலந்த மரைநாள நூலின்
வகையென்ப தென்னை மழையென்
ருசங்கை கொண்ட கொடைமீளி யண்ணல்
சராமன் வெண்ணெ யணுகும்
தேசங் கலந்த மறைவாணர் செஞ்சொ
லறிவாள ரென்றி முதலோர்
பாசங் கலந்த பசிபோ லகன்ற
பதகன் றுறந்த வுரகம்." 2

என்னும் பாடல்களையும், மற்றும் சில பாடல்களையும் வாசித்து,

---

1. இதன் பொருள் : பன்னக வைரி என்று சொல்லப்பட்ட கருடனுகிய ஆப்பச்சகாயன் திருப்பாற்கடலிலிருந்து கிருபையுடனே அநேகமாயிர காலம் கழிந்தாலும் ஒரிறகேனும் உதிராது அழியாதிருக்கின்ற தனது நெடிய சிறகைத் திகந்த மட்டும் விரித்து அசைத்துக்கொண்டு அதிவேகமாய்ப் பறந்து வர, அந்தச் சிறகடிக் காற்றினது யுத்த பூமியில் பிரவேசிக்க, அதனல் அங்குள்ள வர்களுடைய சரீரத்தை இறுக்கி ஒடுக்கி நிலைபெயரவொட்டாமல் கட்டியிருந்த நாகபாசங்கள் பட்டுப்பட்டென்று அற்றுப் போயின ; அற்றவுடனே, சகல இந்திரியங்களையும் அடக்கி மூவாசைகளையும் பற்றறவிட்டு ஆத்ம உஜ்ஜீவனம் இதுவேயென்று விவேகத்தோடு நிச்சயித்து, எதியாச்சிரம தர்மத்தையே மேன் மேலும் வளர்க்கின்ற திடசித்தமுடைய ஒரு தத்துவஞானி விஷயத்தில், மூடாத்துமாக்கள் அகங்காரத்தில் விளக்கும் பழிபாவங்கள் அவனை அணுகாது மாயும் தன்மை போல, அந்நாகபாசத்தில் கட்டுப்பட்ட இளையபெருமாள் முதலானவர்களுடைய திருமேனி வடுக்களும் தோன்றுமல் மாறிப் போயின என்பதாம்.

2. இதன் பொருள் : மகாபாதகனுகிய அந்தஇந்திரஜித்துப் பிரயோகித்த நாகபாசம் தொலைந்தவகை எப்படியெனில், சிலர் தாமரைத் தாளிலிருந்தெடுக்கும் மெல்லிய நூல் போல எளிதில் அற்றது என்பார்கள் ; அது ஒரு ஆச்சரியமல்ல ; மேகம் மழை சொரிகின்றதென்று ஆசங்கிக்கும்படி அமிதமாகக் கொடுக்கின்ற பெருங்கொடை வள்ளலாகிய சடையப்ப முதலியாருடைய தம்பி ***கண்ணப்ப முதலியாருக்குப்*** பின்பிறந்த ***சராம முதலியாரானவர்,*** சதாகாலமும் பிரபல மாகச் செய்யும் அன்னதானத்தில் பற்பல தேசங்களிலுமிருந்து திருவெண் ணெய் நல்லூரை நாடிவரும் வைதிகப் பிராமணர்களும் வித்வசனர்களும் அவர் களைச் சேர்ந்த பந்து வர்க்கத்தாரும் உசிதமான பஞ்ச பக்ஷிய பரமான்னம் திருப்தி யாகப் புசித்து, அவர்களுடைய பசி தொலைவது போலவே தொலைந்து போயிற்று என்பதாம்.

" ஆழியான் பள்ளி யணையே ! அவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே !—ஊழியான்
பூணே ! புரமெரித்த பொற்சிலையில் பூட்டுகின்ற
நாணே ! அகல நட."

எனவும்,

" மங்கை யொருபாகன் ! மணிமார்பி லாரமே !
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே !—திங்களையும்
சிறியதன் மேலூரும் தெய்வத் திருநாணே !
ஏறிய பாம்பே ! இறங்கு."

எனவும்,

" பாரைச் சுமந்த படவரவே ! பங்கயக்கண்
வீரன் இடந்துறங்கு மெல்லணையே !—ஈரமதிச்
செஞ்சடையான் பூணும் திருவா பரணமே !
நஞ்சுடையாய் ! தூர நட."

எனவும் நூதனமாக மூன்று வெண்பாக்கள் பாடி, **அனந்தன், வாசுகி, சங்கரன், குளிகன், பதுமன், மகாபதுமன், தக்ஷகன், கார்க்கோடகன்** என்னும் அஷ்ட மகா நாகம் முதலான சகல சர்ப் பங்களுக்கும் அதிபதியாகிய ஆதிசேஷணைப் பிரார்த்தித்தவுடனே, அங்கொரு புற்றிலிருந்து ஒரு சர்ப்பம் வெளிப்பட்டு வந்து, யாவரும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, அக்குழந்தையைக் கிட்டி முன்பு கடித்த வாயில் மறுபடி கடித்து, தலைக்கேறின விஷத்தை மீட்டுக்கொண்டு திரும்பச் சிறிது தூரம் போய் இறந்தது. பின்பு பிரக்ஞை தப்பிக் கிடந்த குழந்தைக்கு உயிர் வந்தது; அது நித்திரை செய்து எழுந்தது போலக் கால் கைகளை அசைத்து, உசுவாச நிசுவாசத்துடனே கண் விழித்தெழுந்தது. இதைக் கண்டவர்களெல்லாம் கம்பரை விஷகண்டனுகிய சாக்ஷாது பரம சிவனே இப்படி மானிட உரு எடுத்து வந்தானென்று அதிசயித்து ஸ்துதி செய்தார்கள். எக்காலத்திலும் எப்படிப்பட்டவர்களையும் லக்ஷியம் பண்ணுத தில்லை மூவாயிரவர்கள், கம்பரை உள்ளபடியே மகாத்மா என்று மதித்துப் பயந்து, 'நாங்கள் இவர் மகிமை தெரியாமல் கால தாமதம் பண்ணி, இவர் விஷயத்தில் அபசாரப் பட்டோம்!' என்று அனுதபித்து, அவரை மிகவும் உபசரித்தார்கள்.

பிறகு, இறந்த பிள்ளைக்காக மசானத்தில் அடுக்கிய காஷ்டத் தின்மேல் அப்பாம்பைக் கொண்டு போய் வைத்துத் தகன சஞ்சயனம் முடித்துவிட்டு, முன்பு 'நமது காலின்மேல் வண்டி யோடியது என்ன?' என்று அசட்டையாய் இருந்தவர்கள், தலையில் நெருப்பு விழுந்தவர்கள் போலப் பரபரப்பாக வந்து கம்பரிடத்திலிருந்த இராமாயண புஸ்தகத்தை வாங்கித் தாங்களே அவிழ்த்துத் தனித் தனியே அனைவரும் பார்வையிட்டு, சொல் நடை, பொருள் நடை, கற்பனை, கருத்து, சுவை, ஓசை முதலானவைகளையும் விசதமாக

ஆராய்ந்தறிந்து, ' தமிழில் இந்தக் காவியத்திற்கு ஒப்பாக வேறொரு காவியமும் இருக்கிறதா !' என்று நினைத்து, மிகவும் வியந்து, தங்களுக்குள்ளே பிரமானந்தமடைந்தும், குணத்தை மாற்றக் குருவில்லை,' என்பதற்கு ஏற்க, அவர்கள் சுபாவம் போகாமல், கம்பரை நோக்கிச் சில கேள்விகள் கேட்கத் தலைப்பட்டார்கள்.

" நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே."

என்னும் பாட்டில், ' நாடிய பொருள் கைகூடும்,' என்ற முதல் வாக்கியத்திலேயே பின்னே சொல்வனவெல்லாம் அடங்கி இருக்க, ' ஞானமும் புகழுமுண்டாம்,' என்று மிகைபடக் கூறியதென்ன ? என, கம்பர், 'பொருளென்பது, ஒரு பொருள், இரு பொருள், மும் பொருள், நாற்பொருள், ஐம்பொருள் முதலியவாகப் பலவகைப் படும். அவைகளுக்குள், ஒரு பொருள்—மோக்ஷம் ; இரு பொருள்—கல்வி, செல்வம் ; மும்பொருள்—சித்து, அசித்து, ஈசுவரன் ; நாற்பொருள்—அறம், பொருள், இன்பம், வீடு ; ஐம்பொருள்—பரம், வியூகம் ; விபவம், அந்தரியாமை, அர்ச்சை என்னும் அர்த்த பஞ்சகமாம். உலகத்தார் யாவரும் பிரதானமாக நாடும் பொருள் கல்விப் பொருள், செல்வப் பொருள் இரண்டுமே ; ஆதலால், இவ்விடத்தில் அவ்விரு பொருளையுமே சுட்டி, ' நாடிய பொருள் கைகூடும்,' என்றும், அவற்றுள் கல்வியால் ஞானமும், செல்வத்வால் புகழும் உண்டாவதுபற்றிச் சாதன சாத்திய முறையாக அவற்றின் பின், " ஞானமும் புகழும் உண்டாம்,' என்றும், ஞானத்தால் மோக்ஷமும், புகழினால் புருஷ காரியாகிய இலக்குமி கடாக்ஷமும் உண்டாவதுபற்றி அவைகளின் பின், ' வீடியல் வழிய தாக்கும் வேரியங்கமலை நோக்கும்,' என்றும், இப்பயனனைத்தும் எவர்க்குச் சித்திப்பதெனில், வாழையடி வாழையாக அநேகம் தலை முறை அழிவின்றி அபிவிர்த்தியாய் வரும் இராக்கத சேனைகள் நீறுகி நாசமடையும்படி வென்று வெற்றி மாலை சூடிய உக்கிர கோதண்டத்தைத் தாங்கிய ஸ்ரீ ராகவனுடைய புயபராக்கிரமத்தைச் சொல்கின்றவர்களுக்கே என்பது தோன்ற, ' நீடிய அரக்கர் சேனை நீறு பட்டழிய வாகை, சூடிய சிலையிராமன் றோள்வலி கூறு வோர்க்கே,' என்றும் சொல்லியது,' என்றார்.

பின்னும் அவர்கள், ' சகல கிரந்த கர்த்தர்களுடைய சங்கேதமும், கடவுள் திருவடியைக் குறித்தே வாழ்த்துதல் செய்வதாயிருக்க, நீர் அத்திருவடியை வாழ்த்தாது, ' தோள்வலி கூறு வோர்க்கே,' என்று மாறுகொளக் கூறலாய்த் தோளைப் பற்றிச் சொல்லியதென்ன ?' என்ன, 'கம்பர், ' தாடகையைச் சங்கரித்து, சுவாகுவைக் கொன்று, கௌசிக முனி வேள்வியைக் காத்து,

மிதிலையில் சிவனது வில்லை ஒடித்து, சீதையைத் திருமண முடித்து, அயோத்திக்கு மீண்டு வரும் வழியில் பரசுராமனை வென்று, வனத்தில் விராதன் தோளைச் சரித்து, கரதூஷணதியரை அதமாக்கி, மாய மானைக் கொன்று, கவந்தனை மாய்த்து, மராமரத்தைத் தொளைத்து, வாலியை வதைத்து, சுக்கிரீவனுக்கு அரசளித்து, மகராக்ஷனை மடித்து, கும்பகர்ணனைச் சேதித்து, மூலபலத்தை முடித்து, ராவணுதி ராட்சதர்களையெல்லாம் கருவறுத்து, விபீஷணனுக்கு முடி சூட்டியது இராகவனது புயபலமேயாதலால், ஆதி தொடங்கி அந்தம் மட்டும் அவன் தோளாண்மையைச் சொல்வதே இராமாயணமென ஆராய்வோர்க்கு நன்கு விளங்குதல் பொருட்டு, ''இராமன் தோள்வலி,' என்றும், இராமாயண காலக்ஷேபம் செய்வோரைக் ' கூறுவோர்,' என்றும் குறிப்பித்ததாம்,' என்றூர்.

அதற்கு மேலும், அவர்கள் ஆங்காங்கு வினவிய வினுக்களுக் கெல்லாம் கம்பர் தக்கவாறு மறுமொழி சொல்லக் கேட்டு, அவருடைய வித்வ சாமர்த்தியத்தைக் குறித்து மெச்சிச் சந்தோஷப்பட்டு, ' மேற்படி ' நாடிய பொருள் கைகூடும்,' என்ற பாடலில், ' அரக்கர் சேனை நீறுபட் டழிய,' என்றதற்கு, நீர் வேறெதைச் சொன்னலும் சொல்லிக்கொள்ளும் ; அந்த ராட்சதசேனை எங்கள் சுவாமியின் நீறுபட்டுத்தான் அழிந்தது,' என்று சாதுரியமாகச் சொல்லிச் ' சரி சரி,' என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் கொடுத்தார்கள். அதைக் கம்பர் பெற்றுக்கொண்டு வந்து ஸ்ரீரங்கத்தாருக்குக் காண்பிக்க, அவர்கள் அதிசயப்பட்டுப் பின்னும், ' திருநறுங்கொண்டை என்னும் ஸ்தலத்திலுள்ள ஜைனர்களுக்குள் அநேகர் தமிழில் பெயர் பெற்ற வித்துவான்களும் சமய துவேஷிகளுமாகையால், இதைப் பற்றி ஏதாவது குற்றம் சொல்ல வகை தேடுவார்கள் ; அவர்கள் வாயை அடக்க அவர்களிடத்திலும் கையொப்பம் வாங்கி வந்தால் யுக்தமாயிருக்கும்,' என்றூர்கள்.

இவர், ' நல்லது,' என்று அவ்விடத்திற்குப் போன பொழுது, அவர்கள் இராமாயணம் பாடித் திவ்லை மூவாயிரவர் சமூகத்தில் பாம்பு தீண்டி இறந்த பிள்ளையை உயிர்ப்பித்து அரங்கேற்றிய கம்பர் வந்தார் என்கிற செய்தி கேள்விப்பட்டவுடனே, என்றும் காணுத பொருளைக் கண்டவர்கள் போலப் பரம சந்துஷ்டி அடைந்து எதிர்கொண்டழைத்துப் போய் உபசரித்து, ' எங்கே வந்தீர்கள் ?' என்ன, கம்பர், ' நாம் பாடின இராமாயணத்திற்கு உங்கள் கையொப்பம் வாங்க வந்தோம்,' என்ன, அவர்கள், ' திவ்லை மூவாயிரவர்களுடைய கையொப்பம் வாங்கிய உமக்கு எங்கள் கையொப்பம் அத்தனை சிலாக்கியமானதோ ? எங்களுக்குக் கௌரவமேயன்றி வேறல்ல,' என்று சொல்லி, இராமாயண காவியத்தை அவ்வவ்விடங்களில் ஒருவாறு பார்வையிட்டுத் தாங்களும் சில கேள்வி கேட்க வேண்டுமென்று நினைத்துக் கம்பரை நோக்கி,

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர், அன்னவர்க் கேசர ணங்களே."

என்ற பாடலில், 'எப்பொருட்கும் இறைவன் செயலே விளையாட்டென்று என்ன நிமித்தத்தால் சொன்னது? ஒப்பாரும் மிக்காரும் இல்லாத கடவுள் விளையாடுவாராஞல் அவரைச் சிறு பிள்ளை யென்று அல்லவோ நினைக்க வேண்டி இருக்கின்றது?' என்றும், 'எல்லாம் வல்ல கடவுளின் கிர்த்தியம், சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என ஐந்து வகைப்படுமென்று ஆகமங்களில் சொல்லி இருக்க, முத்தொழில் என்றது என்ன?' என்றும் 'மூன்று செய்யுளால் கடவுள் வணக்கம் சொல்ல வேண்டிய, தென்ன? ஒன்றே போதாதோ?' என்றும், இம்மூன்று கேள்வி கேட்டார்கள். இம் மூன் றில் முதற்கேள்விக்குக் கம்பர்— 'சகலாண்ட சராசரங்களையும் ஆக்கலும் காத்தலும் அழித்தலும் சர்வ சக்தியுடைய அவர்க்குப் பாரமானவையல்ல; அலட்சிய மாகிய விளையாட்டுச் செய்கை போல இச்சா மாத்திரத்தால் சாதாரணமாய் நிகழ்வனவாதலால் விளையாட்டு என்றும், அன்றியும் விளையாட்டாகச் செய்யும் செய்கையே இவ்வளவு வியக்கத்தக்கதாய் இருக்குமாயின் அவர் வேண்டுமென்று கண்ணூன்றிச் செய்யும் செய்கை எப்படிப்பட்டதாயிராது? அவாங் மனகோசரமாய் இருக்குமல்லவோ?' என்றும், இரண்டாவதற்கு: 'பஞ்சகிர்த்தியங்களில் திரோபவம் சங்காரத்திலும் அனுக்கிரகம் ஸ்திதியிலும் அடங்குதலாலும், வேதத்தில் சொல்லப்படுவன முத்தொழிலே ஆதலாலும் அவ்விரு தொழிலிலும் வேறு பிரித்து உரைக்க வேண்டா,' என்றும், மூன்றுவதற்கு: 'வஸ்து நிச்சயம் பண்ணுமிடத்து நாம் ரூப கிரியைகளை ஆவசிகமாகச் சொல்ல வேண்டுமாதலால், அவற்றுள் கடவுளின் கிரியை, 'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்,' என்ற பாடலிஞலும்; குணம், 'சிற்குணத்தர் தெரிவரு நன்னிலை' என்ற பாடலிஞலும்; நாமம், 'ஆதியந்தமரியென யாவையும்,' என்ற பாடலிஞலும் சொல்லப் பட்டன,' என்றும் சமாதானமாக உத்தரம் சொல்லக் கேட்டு, அவர்கள், 'சரஸ்வதி அமிசமாகிய உமது வல்லமையை நாங்கள் என்னென்று சொல்லுவோம்!' என்று அதிசயித்துப் பின்பு, 'பார காவியம் ஆதலால், இதில் எங்களுக்கு ஆதாரம் ஏதாவது உண்டோ?' என்ன, இவர், 'உண்டு,' என்று, யுத்த காண்டத்தில் இந்திரஜித்து வதைப்படலத்தில், இளையபெருமாள் ஏவிய பாணத் தால் இந்திரஜித்துத் தலையறுபட்டு விழுந்த போது, அவனுல் முன்பு உபத்திரவப்பட்ட தேவர்கள் நிர்ப்பயமாய் ஆகாச வீதியில் கூடி நின்று, வில்லெடுத்துப் போர் செய்யும் வீரர்களுக்கெல்லாம் மேலான வீரனுகிய இந்திரஜித்து இறந்தபடியினலே இலங்கா பதிக்கு நெடுங்காலம் அவிச்சின்னமாய்ச் சென்று வந்த அரசாட்சி

யானது இனி ஒருபொழுதும் செல்லமாட்டாதென்று பெருங்களிப் புற்று, அரையில் உடுத்த உடையையும் தோள்மேலிட்ட உத்தரீயம் முதலானவைகளையும் ஒக்க உரிந்து பந்து போலச் சுருட்டி மேலே வீசி எறிந்து கொல்லாவிரதிகள் என்னும் சமணர்களுடைய உபாசனு தேவர்களாகிய அருகர் கூட்டம் போல நிர்வாணி களாய் ஆனந்தக் கூத்தாடினுர்கள் என்னும் சுருத்தை உள்ளிட்ட,

> " வில்லாள ராளர்க் கெல்லா மேலவன் விளித லோடும்
> செல்லாதவ் வலங்கை வேந்தற் கரசெனக் களித்த தேவர்
> எல்லாரும் தூசு நீக்கி எழுந்தவ ரார்த்த போது
> கொல்லாத விரதத் தார்தங் கடவுளர் கூட்ட மொத்தார்."

என்ற பாடலைச் சொன்னர். அதை அவர்கள் கேட்டு வியந்து, கையொப்பம் கொடுத்தார்கள்.

அக்கையொப்பத்தைக் கொண்டு வந்து காட்டியும் ஸ்ரீரங்கத்து வைஷ்ணவர்கள், ' மாவண்டூரில் பண்டித சிரேஷ்டனுகிய ஒரு கருமானிருக்கிருன் ; அவனுடைய கையொப்பமும் வாங்கி வாரும்,' என்ருர்கள். கம்பர் மாவண்டூருக்குப் போய் அந்தக் கருமானுக்குத் தமது வரவை அறிவிக்க, அவன், ' இதற்காகத் தாங்கள் இவ்வளவு தூரம் பிரயாசைப்பட்டு வரவேண்டுமா ? அப்படிப்பட்ட மூவாயிர வர்களும், திருநறுங்கொண்டையிலுள்ள சமணர்களும் அங்கீகரித்த நூலுக்குச்சங்கை என்ன இருக்கிறது? மேலும் சாரதாவிக்கிரகமாய் இருக்கிற தங்களுக்குச் சிற்றறிவுள்ள நான் எம்மாத்திரம் ?' என்று சொல்லிப் புஸ்தகத்தை அவிழ்த்துச் சிற்சில சந்தர்ப்பங்களில் சோதித்து இரண்டொரு கேள்வி கேட்டுப் பிறகு, ' இந்த மகா காவி வியத்தில் எங்களுக்கு ஆஸ்பதம் ஒன்றுமில்லையா ?' என்று கேட்க, கம்பர், ' உங்களுக்கு இல்லாமல் போவானேன் ?' என்று, இராம ராவண யுத்தத்தில் பிரதாப லங்கேசுவரன் இராமர் மேல் மாயாஸ் திரப் பிரயோகம் செய்த பொழுது அவர் விபீஷணுழ்வானே நோக்கி, ' இதென்ன ?' என, விபீஷணன், ' கேளுமையா, கருக்கொண்டு நிறைந்த கார்மேகம் போன்ற கரிய திருமேனியுடைய ஸ்ரீராமா, திக்கஜங்களின் கொம்புகளை ஒடித்த இராவணன், இழை நுழையும் ஊசியொன்றை உண்டாக்கி, அதைக் கருமாரிடத்தில் கொண்டு போய்க் காட்டி, இவ்வூசி நல்ல வேலைப்பாடாகச் செய்யப்பட்டது ; இதைத் தக்க விலை கொடுத்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று கொல்லத் தெருவில் ஊசி விற்கிறவர்களைப் போல, மூலப் பிரகிருதி மாயை, யோக மாயை, அதிரேக மாயை, மகாமாயை முதலான மாயைகளுக்கும் உற்பத்தி ஸ்தானமாய் இருக்கின்ற மாயனுகிய உன் மேலேதானே மாயாஸ்திரத்தைப் பிரயோகித்தான்,' என்று சொன்ன இக்கருத்தை உள்ளிட்ட,

> " இழிப்புக் கம்மியர்க் கிழைநுழை யூசியொன்று இயற்றி
> விருப்பிற் கோடிரால் விலைக்கெனும் பதகரின் விட்டான்

கருப்புக் கார்மழை வண்ணவக் கடுந்திசைக் களிற்றின்
மருப்புக் கல்லிய தோளவன் மீளரு மாயை.''

என்ற பாடலைச் சொன்னர். அதற்கவன் சந்தோஷப்பட்டுக் கையொப்பம் கொடுத்தான்.

அதைக் கொண்டு வந்து காண்பித்த பொழுது, ஸ்ரீரங்கத்தார், 'தஞ்சாவூரில் அஞ்சுனுக்ஷி என்ற ஒரு தாசி பிரபல வித்துவாமிசையாய் இருக்கிறாள்; அவள் அதிக கர்வமுடையவள். ஆகையால், ஏதாவது பிதற்றுவாள்; அவள் கையொப்பமும் வாங்கி வந்தால் சர்வோத்தமமாய் இருக்கும்,'' என்று சொல்ல, கம்பர், 'ஆராயினும் என்ன?

'' கடைநிலத்தோ ராயினும் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.''

என்பதனால் தோஷமில்லை,' என்று அவளிடத்திற்குப் போன பொழுது, அவள் உளறடுங்கி, 'தேவரீர் இவ்வளவு தூரம் வந்தது ஆர் செய்த பாக்கியமோ! ஆயினும் என்ன காரியம்?' என, இவர் தமது கருத்தை வெளியிட, 'இதற்குத்தானு இத்தனை பிரயத்தனம்? தாங்கள் இருக்குமிடத்திலிருந்தே அடியாளை வரும்படி நியமித்தால், தலையாலே நடந்து வாரேனு? இதென்ன அபசாரம்?' என்று வருத்தமுற்று, மற்றும், 'தமது கல்விக்கு முன்னே எளியேன் கல்வி எம்மாத்திரம்? சூரியனுக்கு முன்னே மின்மினியும், கடலுக்கு முன்னே கால்வாயும் போல்வதுதானே?' என்று நைச்சியமாகச் சொல்லிப் பின்பு, 'இந்தப் பெருங்காப்பியத்தில் எங்களுக்கு எவ்வளவாவது பற்றுண்டோ?' என்ன, கம்பர், 'அநேக இடங்களில் இருக்கிறது, அவற்றுள் ஒன்று சொல்லுகிறேம், கேள்,' என்று, 'பால காண்டம் மிதிலைக் காட்சியில், மிதிலை நகரத்தின் ராஜவீதியிலுள்ள விசித்திரங்களை எல்லாம் பார்த்துக்கொண்டே விசுவாமித்திர முனிக்குப் பின்னே போகிய இராம லக்ஷ்மணர்கள் அங்கங்கே அனந்தம் ஸ்திரீகள், ஆணி முத்திழைத்த பந்துகளை எறிந்து விளையாடுகையில், அப்பந்துகள் சரீர சம்பந்தத்தால் உண்டாகும் போக சுகத்தைத் தங்களைத் தழுவும் புருஷர்களுடனே சமானமாய்த் தாமும் அனுபவிப்பதல்லாமல், அதற்காக அவர்களிடத்தில் விலையும் பெற்றுக்கொள்ளும் சாமர்த்தியவதிகளாகிய வேசையருடைய துவிதப்பட்ட மனம் போலவும், அடுத்த பொருள் மயமாய்க் காண்கின்ற பளிங்கு போலவும், மைதீட்டிய கண்ணெழில் பாய்ந்த பொழுது கறுத்த நீலப் பந்தாகவும், செங்காந்தள் மலர் போன்ற கையில் வந்து சேர்ந்த பொழுது சிவந்து பவளப் பந்தாகவும் காட்டும் அதிசயத்தைக் கண்டார்கள்,' என்னும் கருத்தை உள்ளமைத்துப் பாடிய,

'' மெய்வரு போக மொக்க வுடனுண்டு விலையும் கொள்ளும்
பையர வல்கு லார்தம் உள்ளமும் பளிங்கும் போல

மையரி நெடுங்க ணேக்கம் படுதலும் கருகி வந்து
கையுகில் சிவந்து காட்டும் கந்துகம் பலவும் கண்டார்.''

என்ற பாடலைச் சொன்னார்; அது கேட்டு அவள் மகிழ்ச்சி கூர்ந்து, 'தங்களுக்கு நான் கையொப்பம் கொடுப்பது மரியாதை அல்லவே,' என்று ஸ்தோத்திரமாக,

'' அம்பரா வணிசடை யரன யன்முதல்
உம்பரால் முனிவரால் யோக ராலயர்
இம்பரால் பிணிக்கரு மிராம வேழஞ்சேர்
கம்பராம் புலவரைக் கருத்தி ருத்துவாம் ''

என ஒரு பாடல் பாடிக் கொடுக்க, அதைக் கொண்டுவந்து நம் பெருமாள் கோயிலின் முதலிகளாகிப வைஷ்ணவர்களுக்குக் காட்டினார்.

அந்தக் கவியைப் பார்த்தும் ஸ்ரீரங்கத்தார்கள் வாய் கூசாமல் பின்னும் சிற்சிலரைக் குறித்துக் கையொப்பம் வாங்கிவரச் சொல்ல, கம்பர் அப்படியே வாங்கிவர, அவர்கள், 'எல்லாம் சரிதான்; இன்னம் அம்பிகாபதி என்பவருடைய கையொப்பம் ஒன்று மாத்திரம் குறைவாயிருக்கிறது; அவர் சிறந்த வித்துவானுகையால் அவருடைய கையொப்பம் இருந்தால் உம்முடைய காவியத்திற்குச் சிறப்பென்று நினைக்கிறோம்; அது உமக்குத் தெரியாததல்ல. அப்புறம் உமதிஷ்டம்!' என்றார்கள். கம்பர், 'அம்பிகாபதி என் பிள்ளை தானே! அவனுடைய கையொப்பம் எனக்கு அத்தனை சிலாக்கிய மானதா?' என்று நினையாமல், 'முன்னே பிறந்த காதைப் பார்க்கிலும் பின்னே முளைத்த கொம்பு வலியுடையது அல்லவா?' என்று எண்ணி, தம்முடைய கற்றுச் சொல்லிகளில் இருவரை அனுப்பி, அம்பிகாபதியை அழைத்து வரச் சொல்லி, அவன் வந்தவுடனே, 'அப்பா, இராமாயணத்திற்கு எல்லாரும் போல நீயும் கையொப்பம் கொடுக்க வேண்டாவா?' என்ன, அவன், 'ஐயா, அதில் எனக் கென்ன ஆஸ்பதமிருக்கிறது?' என, கம்பர் தமக்கு அவன் பிள்ளை யாகையால் அவனுடனே விளையாட்டாகவும் வித்துவசாதுரியமா கவும், 'உனக்கும் நான்கு அதிசயம் வைத்திருக்கிறேன், அந்நான்கும் யாவையெனில், 'சளசள, களகள, கொள கொள, கிளுகிளு,' என்பனவாம்.

'அவைகளுள், 1-வது: சளசளப்பு, பால காண்டத்தில் திரு வவதாரப் படலத்தில், ரோமபத மகாராஜனுடைய நாட்டிற்குக் கலிக்கோட்டு மாமுனி வந்த பொழுது, அதற்கு முன் பன்னிரண்டு வருஷ காலமாய் மழை பெய்யாமையால் அந்நாட்டிலுள்ள ஏரிகள் நதிகளுக்கு உண்டாகிய குறைவு தீரவும், மேற்படி ராச்சியத் தாரைப் பீடித்த துவாதசவருஷ க்ஷாமம் நீங்கவும், மேகமானது ஆகாயத்தில் தோன்றிச் சிவனது கண்டத்தில் இருக்கும் விஷம் போலக் கறுத்துச் சந்தத் தாரையாக மழை பெய்தது என்பதைச் சொல்லிய,

" வளநகர் முனிவரன் வருமுன் வானவன்
களனமர் கடுவெனக் கருகி வான்மிசை
சளசள வெனமழை தாரை கான்றன
குளஞெடு நதிகடங் குறைக டீரவே."

என்னும் பாடலிலும்,

' 2-வது : **களகளப்பு**, மேற்கூறிய காண்டத்தில் உண்டாட்டுப் படலத்தில், ' சீதா கலியாணத்திற்குப் பிரயாணப்பட்டுப் போகிய தசரத மகாராஜாவின் சேஞையில் இரண்டு பெண்டுடைய புருஷ ஞெருவன் இஞையாஞை வீட்டில் விட்டு மூத்தாஞைக் கூட அழைத்துக் கொண்டு போய் மார்க்கமத்தியில் ஒரு சோலையில் இறங்கிப் புன லாடி மதுவுண்டு களித்திருக்கையில், அம் மதுமயக்கத்தால் மறந்து தன்னருகில் இருக்கின்ற மூத்தாஞை அவ்விஞையாள் பெயரைச் சொல்லி அழைத்ததனுல், அவளுக்குத் தன் கணவன் தன்ஞை இஞை யாளுக்குச் சமானமாகப் பாவித்தான் என்பது பற்றிப் பிறந்த சந்தோஷத்தால் நகைப்பு வந்தது; அக்கணத்திலேயே தன் சக்களத் தியை அவன் வீட்டில்விட்டு வந்த இடத்திலும், அவள்மேல் தனக் குள்ள மோகத்தால் அவள் பெயரை மறக்கவில்லையே என்று ஜனித்த துக்கத்தால் கண்ணீர் வந்தது,' என்பதைச் சொல்லிய,

" வஞையமர் முன்கையோர் மயில ஞடனக்
கிஞையவள் பெயரினைக் கொழுக னீதலும்
முஞையெயி றிலங்கிட முறுவல் வந்தது
களகள வுதிர்ந்தது கயற்க ணுலியே."

என்னும் பாடலிலும்,

' 3-வது : **கொளகொளப்பு**, யுத்த காண்டத்தில் கடல் சுட்ட படலத்தில், ஸ்ரீராமர் வருணன் வரவில்லை என்று கோபம் கொண்டு சமுத்திரத்தின் மேல் அக்கினியாஸ்திரப் பிரயோகம் செய்த பொழுது, பிரமாண்டத்திற்கு அப்புறத்திலுள்ள பெரும்புறக் கடலும் கொதித்தது என்றல், அதற்கு உட்புறத்திலுள்ள சப்த சமுத்திரமும் பட்டபாட்டைச் சொல்ல வேண்டியதென்ன ? அன் றியும், சிவனது ஜடாமகுடத்தில் அநேக காலமாய் இருக்கின்ற கங்கையும் கொதித்தாள் ; அதுவும் அதிசயமல்ல, பிரமனது கமண் டலத்திலுள்ள கங்கா ஜலமும் அதிகமாகக் கொதித்ததென்று சொல்லிய,

" அண்டமூ லத்துக் கப்பா லாழியும் கொதித்த தேழு
தெண்டிரைக் கடலின் செய்கை செப்புவ தெவனே! சென்னிப்
பண்டைநா ளிருந்த கங்கை நங்கையும் கொதித்தாள் ; பார்ப்பான்
குண்டிகை யிருந்த நீரும் **கொளகொள** கொதித்த தன்றே."

என்னும் பாடலிலும்,

4-வது : கிளுகிளுப்பு, அக்காண்டத்தில் கும்பகருணன் வதைப் படலத்தில், இராவணன் அசோகவனத்தில் இருக்கையில் கும்ப கருணன் மடிந்தான் என்ற செய்தியைச் சுகசாரணர் ஓடி வந்து சொல்லக் கேட்டுத் தன் குரலோசை வானத்தளவும் எட்டும்படி அவனது பெயரைச் சொல்லிக் கூவி அழைத்து, முன்பு கைலாச கிரியை எடுத்த காலத்தில் அதை உமாபதியானவர் கண்டு திருவடி யினல் அழுத்த அம்மலையின் கீழ் அகப்பட்டு மூட்டுப்பூச்சி போல நசுங்கித் தான் அழுத காரணத்தால் தனக்குண்டான இராவண னென்னும் பெயர்ப் பொருளை வெளியிட்டான். (அழுதான் என்ற படி ; ராவணம் - அழுமோசை.) அது கண்டு சீதையானவள் ஆதொண்டைக் கனி போன்ற வாயிதழ் துடிக்க, சரீரம் மயிர்க்கூச் செறியத் தனக்குள்ளே மிகவும் சந்தோஷித்தாள்,' என்பதைச் சொல்லிய,

" அண்டத் தளவு மணையப் பகர்ந்தழைத்தான்
பண்டைத்தன் னுமத்தின் காரணத்தைப் பாவித்தான் ;
தொண்டைக் கனிவாய் துடிப்ப மயிர்பொடிப்பக்
கெண்டைத் தடங்கண் ணுள்ளே கிளுகிளுத்தாள்."

என்ற பாடலிலும் குறிக்கப்பட்டுள்ளன," என்றார்.

அவைகளை அம்பிகாபதி கேட்டுச் சந்தோஷித்து, 'நான் கை யொப்பம் அல்லது சாற்றுகவி கொடுப்பது விசேஷமல்ல,' என்று ஸ்தோத்திரமாக,

" கம்ப நாட னுமைசெவி சாற்றுபூங்
கொம்ப னுடன் கொழுநனி ராமப்பெர்
பம்ப நாடனைக் குங்கதை பாச்செய்த
கம்ப நாடன் கழறலை யில்கொள்வாம்."

என ஒரு கவி பாடிக் கொடுக்க, அதைக் கம்பர் ஸ்ரீரங்கத்தாருக்கு அறிவிக்கப் போன இடத்தில், வைஷ்ணவ சமயாசாரியர்களுக் குள்ளே பரமாசாரியராகிய ஸ்ரீமந் நாதமுனிகள் எழுந்தருளியது கண்டு, அவருடைய திருவடிகளிலே சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்துத் தமது கருத்தை விண்ணப்பம் செய்ய, அவர் கம்பர் பாடின இராமாயணத்தைக் கடாக்ஷித்தருளி, அது சொற்சுவை பொருட்சுவை செறிந்ததாயும் பகவத் விஷயமானதாயும் அற்புத மாயும் இருப்பது நோக்கி, " இவருடைய புலமை கேவலம் மானு ஷிகமாய் இருக்கவில்லை," என்று அதிசயித்து, "இந்தக் காவியத்தை அவசியம் பிரசித்தம் பண்ணுவிப்பது நமது கடமை," என்று திருவுளம் கொண்டு, கம்பரை மண்டப கைங்கரியம் ஒன்று செய்யச் சொல்லி நியமித்து, அதை அவர் செய்து முடித்தவுடனே சுபதினம் பார்த்து அரங்கேற்ற எத்தனமாய் இருக்கையில், நம் பெருமா ளாகிய ஸ்ரீரங்கநாதர் அர்ச்சகன் முகத்தால் ஆவிர்ப்பவித்துக் 'கம்பா, நீ நம் சடகோபனைப் பாடினையோ ? பாடினுல்தான் நாம்

உனது இராமாயணத்தைத் திருவுளம் பற்றுவோம், இல்லாவிடில் அது நமக்கு அங்கீகாரமாகாது பிள்ளாய்,' என்றார். அதைக் குறித்துப் பின்னடியார் பாடிய பாடல்,

"நஞ்சட கோபனைப் பாடினை யோவென நம்பெருமாள்
விஞ்சிய வாதரத் தாற்கேட்பக் கம்பர் விரைந்துரைத்த
செஞ்சொலந் தாதிக் கலித்துறை நூறும் தெரியும்வண்ணம்
நெஞ்சடி யேற்கருள் வேதம் தமிழ்செய்த நின்மலனே!"

என்பது.

ஸ்ரீரங்கநாதர் அருளிச் செய்தது கொண்டு கம்பர் ஆழ்வார் விஷயத்தில் நூறு கட்டளைக் கலித்துறையில், 'வேதத்தின் முன் செல்க' என்று தொடங்கி, **ஆழ்வாரந்தாதி** அல்லது **சடகோபரந்தாதி** என ஓரந்தாதி பாடினர்.

"வேதத்தின் முன்செல்க மெய்யுணர்ந் தோர்விரிஞ் சன்முதலோர்
கோதற்ற ஞானக் கொழுந்தின்முன் செல்க குணங்கடந்த
போதக் கடலெங்க டென்குரு கூர்ப்புனி தன்கவியோர்
பாதத்தின் முன்செல்லு மோதொல்லை மூலப் பரஞ்சுடரே?"

என்பது அவ்வந்தாதியின் முதற்பாடல்.

இம்முதல் பாடலுக்குப் பொருள் வருமாறு: 'புராதனமாயும், சர்வத்திற்கும் மூலகாரணமாயும், மேலானதாயும், ஜோதிஸ்வரூபமாயும் விளங்காநின்ற ஸ்ரீமந் நாராயணன் வேதசாஸ்திரங்களுக்கெல்லாம் அதீதனுகையால், அவன் அவைகளைக் கடந்து சென்றாலும் செல்லட்டும்; அன்றியும் உண்மை நிலை கண்ட பிரமன் முதலானவர்களுடைய குற்றமற்ற ஞானத்தின் முடிவைக் கடந்து சென்றாலும் செல்லட்டும்; ஏய குணமில்லாத ஞான சமுத்திரமாய்த் தென் திசைக்கண் தாமிரவருணி நதிதீரத்திலுள்ள திருக்குருகூரில் அவதரித்த பரிசுத்தனுகிய எங்கள் சடகோபன் அருளிச் செய்த கவியின் ஒரு பாதத்தைக் கடந்து செல்வானே? செல்லமாட்டான்,' என்பதாம்.

'குணம் கடந்த போதக் கடலெங்கள் தென்குருகூர்ப் புனிதன் கவியோர் பாதத்தின்முன் செல்லுமோ?' (அதாவது, ஸ்ரீமந் நாராயணன் சடகோபனுடைய கவியின் ஒரு பாதத்தைக் கடக்க மாட்டான்) என்பது என்னெனில்: பாண்டி நாட்டிலுள்ள திருக்குருகூரென்னும் திவ்யதேசத்தில் ஆழ்வாருக்குக் கோயிலிலும் வீதிபுறப்பாட்டிலும் வெகு காலமாக 'வேதந்தமிழ் செய்த மாறன் சடகோபன்' என்பது முதலாகப் பற்பல விருதுகூறித் திருச்சின்னம் ஊதி வருவதையும் பிரமோச்சவம் கண்டருளப் பண்ணுவதையும் பற்றி ஒரு காலத்தில் மதுரைச் சங்கத்தார் கர்வத்தால் அசூயை கொண்டு, 'இந்த ஆழ்வார் பக்தரேயல்லாமல் பகவானல்லவே? இவருக்கு விருது கூறித் திருச்சின்னம் ஊதுவதும் உச்சவம் நடத்து

வதும் வியர்த்தமே! இது, அணில் பிள்ளையின் தலைமேலே அம்மிக் கல்லை வைக்கிறது போல இருக்கிறது. இவர் பாடின திருவாய் மொழி என்ன சங்கமேறிய செய்யுளா? அதை வேதத் தமிழ் என்று அவ்வளவாகச் சிலாகிப்பது தகுதியல்லவே?' என்று வாய்மதம் பேசி அபசாரப்பட்டார்கள். அத்தருணத்தில் ஆழ்வாதிருநகரியிலிருந்த வைஷ்ணவர்களுக்கு மனம் சகியாமல் பதைத்தமையால், குருகைப் பிரான் சந்நிதியில் போய் அவர்கள் சாஷ்டாங்கமாய் விழுந்து சேவித்து, 'ஆழ்வாரே, உம்மையும் உமது திருவாய் மொழியையும் அவமதித்த சங்கத்தாருக்குக் கர்வபங்கமாம்படி தேவரீர் ஏதாவது பிராயச்சித்தம் செய்வித்தாலொழிய அடியோங்கள் எழுந்திருக்கக் கடவோமல்லோம்,' என்று தீர்க்கவைராக்கிய சித்தர்களாய் மூன்று நாள் வரையில் ஸ்நானம், அனுஷ்டானம், ஜபம், ஹோமம், வேத பாராயணம், பகவதாராதனம் முதலானவைகளும் இல்லாமல் கிடந்த கிடையாய் எழுந்திராதிருந்தார்கள்.

அதுபற்றி ஆழ்வார் ஒரு விருத்த பிராமணஞகி வந்து, 'ஆர் காணும் மூன்று நாளாக இந்தக் கோயிலின் வாசலில் கிடக்கிற வர்கள்? என்ன நிமித்தத்தால் இப்படிச் செய்வது?' என்று கேட்க, அவர்கள், 'நம்மாழ்வாரையும் அவரது திருவாய் மொழியாகிய திராவிட வேதத்தையும் சங்கத்தார் இகழ்ந்தபடியினலே அவர் களுக்கு ஆழ்வார் யாதேனும் பிராயச்சித்தம் செய்விக்க வேண்டும் என்பது எங்கள் அபிமதம்,' என்ன, பிராமணன், 'இந்தக் கலிகாலத் திலும் அப்படி நடக்குமா? இதென்ன பைத்தியம்?' என, வைஷ்ண வர்கள், 'நடந்தால் எழுந்திருக்கிறோம்; நடவாவிட்டால் இங் ஙனமே அன்னபானுதிகள் இல்லாமலிருந்து பிராணனை விட்டு விடுகிறோம்,' என, ஆழ்வார் அவர்கள் மனோநிச்சயத்தை அறிந்து குறுநகை கொண்டு, 'நீங்கள் சடகோபர் அருளிச் செய்த திருவாய் மொழியில் இன்ன பாடலின் இத்தனையாம் பாதத்தை ஒரு சிறு நறுக்கில் எழுதிக் கொண்டு போய்ச் சங்கப்பலகையின்மேல் வையுங்கள்; உங்கள் அபீஷ்டப்படி நடக்கும்,' என்று சொல்லி அந்தர்த்தானமாய்விட்டார். வைஷ்ணவர்கள் திருக்குருகைப்பிரா னரே இத்தன்மையாக எழுந்தருளினர் என்று தெரிந்து அவரருளிச் செய்தபடி செய்தார்கள்.

அவர்கள் அந்தத் திருவாய்மொழிச் செய்யுளடியை எழுதிய ஒரு சிறு முறியைக் கொண்டுபோய் வைத்த மாத்திரத்தில் சங்கப் புலவர்கள் ஏறியிருந்த பலகையானது பொற்றமரைத் தடத்தில் ஆச்சரியமாய் மூழ்கிவிட்டது. அதிலிருந்த புலவர்களெல்லாம் நீரில் திடீரென்று விழுந்து அமிழ்ந்து, தத்தித் தடுமாறி எழுந்து மெல்ல நீந்திக் கரை சேர்ந்து பார்க்கும் பொழுது, அமிழ்ந்த பலகை உடனே குபீரென்று கிளம்பித் தன்னிடத்தில் வைக்கப்பட்ட சிறு முறியை மாத்திரம் ஏந்திக்கொண்டு மிதந்தது. அவர்கள் அதை எடுத்து அதில் எழுதியிருக்கின்ற ஆழ்வார் அருளிச் செய்த ஆயிரப் பிரபந்தத்தின் தொண்ணூற்றைந்தாம் திருவாய் மொழியில்,

"கண்ணன் கழலிணைகள்
நண்ணு மனமுடையீர் !
எண்ணும் திருநாமம்
திண்ணநா ரணமே."

என்னும் முதல் கவியின் முதல் பாதத்தை வாசித்தறிந்து, 'உல கெலாம் உள்ளடக்கிய கண்ணன் கழலிணைகளைத் தன்னிடத்தில் அடக்கிய இச்சிறு முறிக்கு இடம் கொடுத்த சங்கப் பலகை இத னோடு சமானஸ்கந்தமாக நமக்கும் இடம் கொடுக்குமா? கொடா தாதலால், நம்மை அகற்றிவிட்டது' என்றும், 'சகலவேத சாஸ்திரங் களையும் பிறரால் கற்பிக்கப்படாமல் தாமே உணர்ந்த சாக்ஷாத் பகவதமிசமாகிய ஆழ்வாருடைய தெய்விகமான பாண்டித்தியத் திற்கு நமது பாண்டித்தியம் சதாமிசத்தில் ஏகாமிசமும் காணுதே!' என்றும் நிந்தித்துத் துக்கித்து, மற்றும் திருவள்ளுவர் குறள் செய்த காலத்தில் அவரும் ஔவையும் இடைக்காடரும் சந்தித்த சமயத்தில் வள்ளுவரை நோக்கி மற்றையிருவரும், 'நீர் செய்த நூல் எத்தன்மையாகியது?' என்று வினவ, அவர், 'அகஸ்தியரால் பிரசித்தம் பண்ணப்பட்ட இயல் இசை நாடகம் என முத்திறத்த தாகிய தமிழும், என்னல் செய்யப்பட்ட குறளும் உடைய நங்கை யின் திருக்குமாரராகிய சடகோபர் அருளிச் செய்த திருவாய் மொழியின் புத்திரஸ்தானமாகிய வழிநூலாம்' என்னும் கருத்தை உள்ளமைத்து,

"குறுமுனிவன் முத்தமிழு மென்குறளு நங்கை
சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்."

என்று சொன்னதையும்,

அது கேட்டு ஔவை, 'அர்த்த பஞ்சகத்தையும் சதுர்வித புருஷார்த்தத்தையும் அறப்பால் முதலிய முப்பாலுள் அடக்கி அமைக்கப்பட்ட உண்மைப் பொருளாகிய எவ்வகைப்பட்ட வேதங் களுக்கும் சம்மதமான மேலான பொருளைக் குளிர்ச்சி தங்கிய தாமிரவருணி தீரத்திலிருக்கும் திருக்குருகூரில் காரி முதலியார் புதல்வராய் அவதரித்த நம்மாழ்வாரது திருவாய் மொழியாகிய திராவிட வேதமென்று சிலர் சொல்லுவார்கள்; நான் அவர்கள் சொல்லை மறுத்து அக்குறளை இந்த உலகத்திற்குத் தாயாகிய ஸ்ரீமந்நாராயணனுல் பிரமனுக்கு உபதேசிக்கப்பட்டு வந்த கீர் வாண வேதமென்றே சொல்லுவேன்,' என்னும் கருத்தை உள்ளிட்டு,

"ஐம்பொருளும் நாற்பொருளும் முப்பொருளில் பெய்தமைத்த
செம்பொருளை யேமறைக்கும் சேட்பொருளைத்—தண்குருகூர்ச்
சேய்மொழிய தென்பர் சிலரியா னிவ்வுலகின்
தாய்மொழிய தென்பேன் றகைந்து."

என்று சொன்னதையும்,

இடைக்காடர், 'திராவிட வேதமாகிய சேய் மொழியையும் கீர்வாண வேதமாகிய தாய்மொழியையும் ஆராய்ந்து சொல்லுமிடத்தில் இரண்டும் ஒன்றேயாம்; திருவாய்மொழியை யாவரும் சங்கையின்றி வேதம் என்றே சொல்லுவார்கள்; திருவாய்மொழியைப் போலச் சிறந்த நூல்கள் அநேகம் உண்டென்று சிலர் குதர்க்கம் செய்தாலும், நான் அவர்களை மறுத்து, அவைகளும் இந்தக் குறளும் அத்திருவாய்மொழியினது சாயையாய் இருப்பவைகள் என்றே சொல்லுவேன்,' என்னும் கருத்தை அடக்கி,

"சேய்மொழியோ தாய்மொழியோ செப்பி லிரண்டுமொன்றவ்
வாய்மொழியை யாரு மறையென்ப—வாய்மொழிபோல்
ஆய்மொழிகள் சால வுளவெனினும் அம்மொழியின்
சாய்மொழியென் பேன்யான் றகைந்து."

என்று சொன்னதையும் நினையாமல் போனேமே! அவைகளை நினையாவிடினும், ஒரு காலத்தில் தாமிரபருணி நதியின் வடகரையில் வசித்திருந்த யோகி ஒருவர் வளர்த்த நாயொன்று தென் கரையிலுள்ள ஆழ்வார் திருநகரிக்குப் பிரதினமும் மத்தியான வேளையில் போய், வீதியிலிருக்கும் வைஷ்ணவர்களுடைய உச்சிஷ்டத்தைத் தின்று வயிற்றை நிரப்பிக்கொண்டு வருகிற வழக்கப்படி ஒருநாள் போய்த் திரும்பிவர நேரப்பட்டதனால், யோகியானவர், 'நாய் இன்னும் வரவில்லையே!' என்று ஆற்றோரத்தில் வந்து பார்க்கும் பொழுது, அந்நாய் நட்டாற்றில் வருகையில், அகஸ்மாத்தாய் வெள்ளம் வந்தமையால் நீந்திக் காலோய்ந்து போய் நீரில் அமிழ்ந்து கிளம்பிற்று. அத்தருணத்தில் அதன் கபாலம் வெடித்து, அந்தரந்திரத்தின் வழியாய் நாயின் ஆத்மாவாகிய ஜோதியானது எழுந்து அமாவாசை இருளில் அநேகம் மத்தாப்புக் கொளுத்தினது போலப் பிரகாசித்ததைப் பிரத்தியக்ஷமாகப் பார்த்து, 'அசேதனமாகிய நாயும் பெறுதற்கரிய பேறு பெற்றதே! இதென்ன சாதனத்தை உடைத்தாய் இருந்தது! ஒன்றும் இல்லாதிருந்தும் ஆழ்வார் திருநகரியின் உச்சிஷ்டத்தை உண்டதனாலல்லவோ இப்படிச் சம்பவித்தது! இது தபசிகள், யோகிகள், ஞானிகள் முதலானவர்களுக்கும் சித்திக்க மாட்டாதே!' என்று நினைத்து, மனமுருகிக் கண்ணீர் விட்டு அழுது, அவர்,

"வாய்க்கும் குருகைத் திருவீதி எச்சிலை வாரியுண்ட
நாய்க்கும் பரம பதமளித் தாயந்த நாயொடிந்தப்
பேய்க்கு மிடமளித் தாற்பழு தோபெரு மாள்மகுடம்
சாய்க்கும் படிக்குக் கவிசொல்லு ஞானத் தமிழ்க்கடலே!"

என்பது முதலாகச் சில பாடல்களால் ஆழ்வாரை ஸ்தோத்திரித்ததையாவது, அல்லது, வல்லபதேவன் என்னும் பாண்டியன் சபையில் பெரியாழ்வார் கிழியறுத்துப் பரத்துவ நிர்ணயம் செய்த

பொழுது நாம் கர்வபங்கப் பட்டதையாவது, நினைக்க வேண்டுமே! அப்படியும் செய்யாமல் செருக்கினால் ஆழ்வார் விஷயத்தில் அபசாரப்பட்டோமே! அவர் திருவாய் மொழியையும் அவமதித் தோமே!' என்று எண்ணியெண்ணி அனுதாபப்பட்டுப் பின்பு அவர்களெல்லாம் நிகர்விகளாய் அவ்வுபசாரத்தை ஆழ்வார் க்ஷமிக்கும்பொருட்டு அவருடைய மகிமை தங்கிய பிரபாவத்தைக் குறித்து,

" சேமங் குருகையோ, செய்யதிருப் பாற்கடலோ ?
நாமம் பராங்குசமோ, நாரணமோ?—தாமம்
துளவோ, வகுளமோ? தோளிரண்டோ, நான்கும்
உளவோ பெருமா னுனக்கு ?"

என்று பாடி ஸ்துதி செய்தார்கள்.

சங்கப் புலவர்கள் அத்தனை பெயரும் ஆழ்வார் விஷயத்தில் பாடிய பாடல்களெல்லாம் ஒன்றுக்கொன்று ஒரு சொல்லாவது ஒரெழுத்தாவது எழுத்தின் உறுப்பாவது அசை சீர் தளை முதலியவைகளில் ஏதாவது சிறிதும் பேதமில்லாமல் இவ்வொரு பாடலின்படியே இருக்கக் கண்டு, 'இஃதென்ன அற்புதம்!' என்று அதிசயப்பட்டு, பின்பு அவரது திருவாய் மொழியின் ஏற்றத்தைப் பற்றி,

" ஈயா டுவதோ கருடற் கெதிரே ?
இரவிக் கெதிர்மின் மினியா டுவதோ ?
நாயா டுவதோ வுறுவெம் புலிமுன் ?
நரியா டுவதோ நரகே சரிமுன் ?
பேயா டுவதோ வழகூர் வசிமுன் ?
பெருமான் வகுளா பரணன் னருள்கூர்ந்(து)
ஓவா துரையா யிரமா மறையின்
ஒருசொற் பொருமோ உலகிற் கவியே ?"

என்பதும்,

" நீயே யறிவை நினதகத் தேநிற்கு நேமியங்கை
யாயே யறியுமற் றுரறி வாரடி யோங்களுக்குத்
தாயே ! பொருனைத் திருக்குரு கூர்த்தமிழ்க் காரிபெற்ற
சேயே ! நினது திருவாய் மொழியின் செழும் பொருளே "

என்பதும் முதலாகச் சிற்சில கவிகள் பாடி ஸ்தோத்திரம் செய்து, அவ்வாழ்வாருக்கு அன்று முதல் விருது கூறல் முதலிய சகல விபவங்களும் முன்னிலும் விசேஷ நிராடங்கமாய் நடப்பிக்கும்படி செய்தார்கள் என்பதாம்.

இது நிற்க. சடகோபரந்தாதி பாடி முடிந்தவுடனே ஸ்ரீ ரங்க நாதன் சந்நிதியிற் கடல் போல விசாலமும் மலை போல உன்னதமு

மாகிய பெரிய ஆயிரக்கால் மண்டபத்தில் சதுர் சாஸ்திர பண்டிதர்களாகிய சம்ஸ்கிருத வித்துவான்களிலும், பூரண பாண்டித்தியமுள்ள தமிழ்க் கவிஞர்களிலும், உபய கவிகளிலும் வைதிக சம்பிரதாயத்தையுடைய ஸ்மார்த்தர் மாத்துவர் வைஷ்ணவர்கள் என்னும் திரிமதஸ்தர்களிலும், ராஜாக்கள் பிரபுக்கள் முதலானவர்களிலும் வெகு பெயர்கள் திரண்டு நிறைந்திருக்க, பிரபத்தி நிஷ்டாபரராகிய ஸ்ரீமந் நாதமுனிகள் திருவோலக்கத்திற் கம்பர் தெய்வ வணக்கம் செய்து அவையடக்கமும் கூறிக் கிரமமாக இராமாயணத்தை அரங்கேற்றினர்.

அரங்கேற்றும் பொழுது ஆரணியத்தில் சூர்ப்பநகி மூக்கறுபட்டு இராவணனை நினைத்துக்கொண்டு புலம்பினதைச் சொல்லிய பாடல்களில் ஒன்றுகிய,

> " உருப்படிவ மன்மதனை ஒத்துளரே யாயினுமுன்
> செருப்படியிற் பொடியொவ்வா மானிடரைச் சீறுதியோ ?
> நெருப்படியிற் பொறிசிதற நின்றமதத் திசையானை
> மருப்பொடியப் பொருப்பிடியத் தோணியிர்த்த வலியோனே !"

என்பதை வாசிக்கக் கேட்டு, அதில், 'உன் செருப்படியிற் பொடி யொவ்வா மானிடரைச் சீறுதியோ?' என்பதைக் குறித்து அவ்விடத்திலிருந்த வைஷ்ணவர்களில் ஒருவர் கம்பரை, 'ஏன் காணும், சாக்ஷாத் பரப்பிரமமாகிய சக்கரவர்த்தி திருமகனையும் இளையாழ்வானையும் ராட்சதப் பட்டி மகனுகிய ராவணனுடைய செருப்புக் காலில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற பொடிக்கும் ஒவ்வாத மானிடரென்று சொல்லி அபசாரப்படுகிறீர்?' என்ன, கம்பர் பக்கத்திலிருத்த அம்பிகாபதி அவருக்குத் தண்டன் சமர்ப்பித்து, 'சுவாமி! ஒரு விண்ணப்பம், யுத்தத்தில் கும்பகருணன் இறந்த செய்தி அறிந்து இராவணன் அழுததைக் குறித்துச் சொல்லு மிடத்தில், அவன் சுத்தவீரனுகையால், அழுதான் என்று சொல்வது கௌரவத் தாழ்வென்று நினைத்து, பூர்வம் தனக்கு உண் டாகிய ராவணன் என்னும் பெயரின் காரணத்தை அவன் வெளியிட்டானென்று உபசார வழக்காகச் சொன்னவர், ஒப்பற்ற பகவான் விஷயத்தில் அபசாரப்படுவாரா?' என்ன, ஸ்ரீமந் நாத முனிகள் நகைத்தருளி அவ்வைஷ்ணவரை நோக்கி, 'உன் செருப் படியிற் பொடியொவ்வா மானிடர்' என்றது, கம்பர் தாம் சொல்வதாகச் சொல்லாமல், துஷ்ட ராட்சதியாகிய சூர்ப்பநகி கூறும் கூற்றுகச் சொல்வதாதலால் ராமலக்ஷ்மணர்கள் அவள் அபீஷ்டப்படி நடவாததனுலும், அவள் மூக்கை அறுத்ததனுலும் அவர்களை விரோதித்து அவ்வரக்கி தூஷிக்கையில் இப்படியே சொல்லுவாளாகையால், இவ்வாக்கியத்திற்கு இது ஒரு கருத்தும்; செருப்படி என்பதை, செரு, படி எனப் பிரித்து, உனது யுத்த பூமியில் ஒரு தூசுக்கும் ஒப்பாகாத மனிதரென வேறு ஒரு கருத்தும்

கொள்ளும்படி சிலேடையால் இரட்டுற மொழிதலாகச் சொன்னமையால், இது வித்வசாமர்த்தியமேயல்லது அபசாரமன்று,' என, அதைப் பற்றிச் சகலமானவர்களும் பரம சந்துஷ்டி அடைந்தார்கள்.

அப்பால் யுத்த காண்டத்தில் கடல்காண் படலத்தில் சீதையைப் பிரிந்த பின்பு, தனது திருக்கண்களுக்கு இனமாக அவைகளைப் போன்றிருக்கின்ற தாமரை மலர்களும் இதழாகிய இமை மூடி உறங்குகின்ற இராக் காலத்திலும் நெடுநாளாகக் கண்ணுறக்கம் கொள்ளாத ஸ்ரீராகவன் இராவணன்மேல் படையெடுத்துப் போய்த் தென்சமுத்திரத்தின் வடகரையில் பாளயமிறங்கித் தனக்குத் துணை செய்யும்பொருட்டுப் பொங்கி எழுந்து, எங்கும் பரந்து வந்து பெரிய வானரசேனை தன் புறத்திலும் அகத்திலும் புடை சூழும்படி அச்சமுத்திரத்தைக் கண்டான் என்பதை உள்ளமைத்த,

> " பொங்கிப் பரந்த பெருஞ்சேனை புறத்தும் அகத்தும் புடை சூற்றச்
> சங்கிற் பொலிந்த கையாளைப் பிரிந்த பின்பு தமக்கினமாம்
> கொங்கிற பொலிந்த தாமரையின் குழுவும் துயிலுற் றிதழ்குவிக்கும்
> கங்குற் பொழுதும் துயிலாத கண்ணன் கடலைக் கண்ணுற்றான்."

என்னும் பாடலை வாசிக்கும் பொழுது, 'பெருஞ்சேனை புறத்துப் புடைசூழ என்றது சகஜமே; அகத்துப் புடைசூழ என்றது விளங்கவில்லையே! அது என்ன?' எனச் சிலர் ஆசங்கிக்க, ஸ்ரீமந் நாதமுனிகள், 'சுவாமியானவர் வானர சேனைவீரர்கள் தத்தம் தாய் தந்தை, அண்ணன் தம்பி, மாமன் மைத்துனன் முதலாகிய இனத்தாரையெல்லாம் விட்டுப் பிரிந்து நம்பொருட்டாகப் படைத்துணை வந்திருப்பது பற்றி, அவர்களுக்கு ராட்சதர்களால் ஏதாவது அபாயம் நேரிடுமானால், அவர்களினத்தார், 'இந்த ராமன் பகைவரைச் சண்டை செய்து வெல்வதற்கு நம்முடைய குடும்பத்தாரை அழைத்துப் போனானே! போனவிடத்தில் தன்னுயிரை மாத்திரம் தித்திப்பாக நினைத்து உபாயமாய் ரக்ஷித்துக் கொண்டு, அவர்களைச் செவ்வையாய்ப் பராமரிக்காமல் ராட்சதப் பேய்களுக்கு அநியாயமாய்ப் பலி கொடுத்துவிட்டானே பாவி!' என்பதாக நம்மைப் பல விதத்திலும் நொந்துரைப்பார்களாதலாலும், ஒரு சிக்குச் சிலுகில்லாமல் அவர்களைப் பாதுகாத்து மறுபடி நிலையிலே கொண்டு போய்ச் சேர்ப்பது நமது கடமையாதலாலும், எல்லாரும் வந்து சேர்ந்தார்களா? அவர்கள் க்ஷேமமாயிருக்கிறார்களா?' என்று அவர் ஒரு நொண்டிக் குரங்கையும் தப்பவிடாமல் மதிப்பிட்டுத் தமது திருவுளத்தில் வைத்தாரென்பது கொண்டு, அகத்தும் புடைசூற்ற என்று சொல்லப்பட்டது,' எனக் கம்பரது கருத்தை வெளியிட்டருள, அவர்கள், 'அப்படியா!' என்று அதிசயித்தார்கள்.

அதன் பிறகு, இரணிய வதைப்படலம் வாசிக்கையில், அங்குள்ள வர்களில் வேறு சிலர், 'இராமாயணத்தில் எங்கும் இரணிய வதை சொல்லக் காணேமே! இஃதேது நவீனமாயிருக்கிறது?' என்று கேட்க, கம்பர், 'இது புராணந்தரம்' என்ன, அவர்கள், 'புராணந் தரமாயினும் சம்ஸ்கிருத பாஷையில் இராமாயணம் செய்த வான்மீகி முதலானவர்களால் சொல்லப்படாததை நீர் சொன்ன மையால் எவ்விதத்தில் ஒப்புக்கொள்வது? இதற்கு ஏதேனும் ஒரு திட்டம் காண்பிக்க வேண்டும்; அஃதாவது, இது சிங்கப்பெருமாள் சரித்திரமாதலால், இதை இந்தத் திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கும் மோட்டழகிய சிங்கரானவர் சிரக்கம்ப கரக் கம்பஞ் செய்து திருவுளம் உவந்தருள்வதுதான்; அப்படி அவர் அங்கீகரிப்பாராஞல் ஒப்புக்கொள்ளுகிறதற்கு எவ்வளவும் சந்தேக மில்லை,' என்றார்கள். அதைப் பற்றி ஸ்ரீமந் நாதமுனிகள் ஒன்றும் வார்த்தை சொல்லாதிருக்க, கம்பர், ''ஆகாத பஞ்சாங்கத்திற்கு அறுபது நாழிகையும் தியாச்சியம்' என்பது போல, இக்காவியத்தை ஆரம்பித்த நாள் முதல் இடையூறு சம்பவித்தபடி இருக்கிறதே! இஃதென்ன தவக்குறை! நல்லது, தெய்வ சங்கற்பம் உள்ளபடி யாகிறது,' என்றெண்ணி, அவ்விரணிய வதைப் படலத்தில், பிரகலாதாழ்வானை நோக்கி, 'நீ சொல்லிய அரியென்பவன் எவ் விடத்திலிருப்பான்?' என்று இரணியன் கேட்டதற்குப் பிரகலாதன், 'அந்தப் பரமாத்மன் அகண்டிதனுகையால் அவனே இன்ன இடத் தில் இருப்பான், இரான் என்று கண்டிதப்படுத்திச் சொல்லவும் அவனுடைய அணுத்துவ விபுத்துவ அதிசயங்களை இன்னபடியென் றறியவும் முடியாது; ஆயினும், ஒருவாறு சொல்லுகிறேன்: அவன் ஒரு சாணளவாகிய சிறிய துரும்பிலும் இருப்பான்; ஓரணுவைச் சதகூறு செய்து பார்த்தால் அக்கூறுகள் ஒவ்வொன்றிலும் தனித் தனி இருப்பான்; அன்றியும், பெரிய மேரு மலையிலும் இருப்பான்; இங்கே நிற்கின்ற தூணிலும் இருப்பான்; நீ சொன்ன சொல்லிலும் இருப்பான்; அவனில்லாத இடம் எதுவுமில்லை; இவ்வுண்மையை அறிய வேண்டுமாகில், தாமதியாமல் சோதித்துப் பார்,' என்றான். அது கேட்டு இரணியன் சொல்லத் தொடங்கினன் என்ற கருத்தைத் தன்னிடத்திற் கொண்ட,

> "சாணினும் உளனோர் தண்மை யணுவினைச் சதகூ றிட்ட
> கோணினும் உளன்மா மேருக் குன்றினு முளனிங் கின்ற
> தூணினு முளனீ சொன்ன சொல்லினு முளனித் தன்மை
> காணுதி வினாவி னென்ரு னன்றெனக் கனகன் சொன்னான்."

என்னும் பாடலையும்;

'தேவர்களுக்கும் உனக்கும் ஒரு தன்மையாய் இல்வுலக மெங்கும் நிறைந்திருக்கின்ற அரியென்பவன், மற்றவிடங்களில் எல்லாம் இருப்பானென்பது அப்படியிருக்கட்டும்; இத்தூணி னிடத்திலும் இருக்கிறனென்று நீ சொன்னமையால், இதனிடத்தில்

நான் காணும்படி அவனைப் பிரத்தியக்ஷமாகக் காட்ட வேண்டும்; காட்டாமற் போவாயானால் மஸ்தகத்தையுடைய யானையைச் சிங்க மானது அறைந்து கொன்றுற்போல உன்னைக் கொன்று என் பசி தீர உன்னுடலைத் தின்று, உதிரத்தைக் குடித்து, தாகத்தைத் தணித்துக்கொள்ளுகிறேன்,' எனப் பிரதிக்கினை பண்ணினான் என்ற கருத்தை உள்ளிட்ட,

> " உம்பர்க்கு முனக்கு மொத்திவ் வுலகெங்கும் பரந்து ளானைக்
> கம்பத்தின் வழியே காணக் காட்டுதி; காட்டா யாயிற்
> கும்பத்தின் கரியைக் கொண்மாக் கொன்றென நின்னைக் கொன்றுன்
> செம்பொத்த குருதி தேக்கி உடலியுந் தின்பே னென்றுன்."

என்னும் பாடலையும்;

அப்பிரதிக்கினையைக் கேள்வியுற்ற பிரம ஞானியாகிய பிரகலாதாழ்வான், 'ஐயா, இப்பொழுது என்னுயிரைக் கொல்லு கிறதாகப் பிரதிக்கினை பண்ணினையே! இது வீண்தான்; முன்பு எண்ணெய்க் கொப்பரையில் தள்ளினாய், கற்பாறையோடு கட்டிக் கடலில் விடுத்தாய்; வாள் வேல் முதலான ஆயுதங்களைக்கொண்டு வெட்டிக் குத்தி எய்து எறிந்தும் பார்த்தாய்; நான் இறக்கும்படி மரண யாகமும் செய்வித்தாய்; என்மேல் அஷ்டதிக்கஜங்களையும் ஏவினாய்; அஷ்ட மாநாகங்களையும் விட்டுக் கடிப்பித்தாய்; பைக் குள்ளே போட்டு இறுக்கிக் கட்டிச் சம்மட்டி கொண்டும் அடிப் பித்தாய்; மற்றும் எத்தனையோ வாதைகளும் செய்வித்தாய்; அவைகளினுலெல்லாம் நான் இறந்தேனு? என்னுடைய உயிர் உன்னுலே கொல்லப்படுவதற்கு அத்தனை எளிதானதன்று; உன் பிரதிக்கினை ஒன்றும் கைகூடி வாராது; இதோ என் பிரதிக்கினையைக் கேள்: உனக்கு நான் முன்பு சொன்ன சர்வவியாபகன், நீ தொட்ட தொட்ட இடந்தோறும் அவசியம் தோன்ற வேண்டும்; தோன்றுமற் போவானுனல், என்னுயிரை நானே மாய்த்துக் கொள்ளுவேன்; அப்படிச் செய்யாமல் பின்னும் உயிரோடு வாழ்ந் திருக்க விரும்புவேனுகில், நான் அந்த லோகாராட்டியனுக்குத் தாசனுதன் அல்லேன்,' என்றுன் என்னும் கருத்தை உட்கொண்ட,

> " என்னுயிர் நின்னுற் கோறற்(கு) எளியதன் றன்றி யான்முன்
> சொன்னவன் தொட்ட தொட்ட விடந்தொறும் தோன்று ஞயின்
> என்னுயிர் யானே மாய்ப்பன்; பின்னும்வாழ் வுகப்ப னென்னின்
> அன்னவற் கடிய னல்லே னென்றனன் அறிவின் மிக்கான."

என்னும் பாடலையும்;

'இப்படிப் பிரகலாதன் செய்த பிரதிக்கினையை இரணியன் கேட்டவுடனே, தன் பகுவாயைத் திறந்து, 'நல்லது நல்லது!' என்று அதட்டி, தந்தங்களெல்லாம் குப்பென்று பிரகாசிக்கும்படி நகைத்து, உக்கிரத்துடனே தனக்கெதிரே இருந்த நெடிய வச்சிரத் தூணில்

பெரிய பர்வதத்தின்மேல் பிரளய கால இடி இடித்து விழுந்தது போல, வெற்றி பெற்ற புகழ் விளங்கிய தன் கையினால் ஓங்கி விசை கொண்டு ஓரறை அறைந்தான்; அறைந்த மாத்திரத்தில் சர்வாந்தரியாமி என்னும் தைத்தியாரியானவன் சிங்க வடிவு கொண்டு ஆவிர்ப்பவித்து அந்தத் தூணைப் பிளந்து அதினின்று அஷ்ட திக்கு கூளியும் திறந்து, அண்டத்தையும் கீறி, அப்புறத்திலும் ஓங்கி அகில புவன சராசரங்களும் திடுக்கிடும்படி கலகலவென்று சிரித்தான்' என்பதைக் கூறும்,

"நசைதிறந் திலங்கப் பொங்கி நன்றுநன் றென்ன நக்கு
விசைதிறந் துருமு வீழ்ந்த தென்னவோர் தூணின் வென்றி
இசைதிறந் தமர்ந்த கையால் எற்றினன் எற்ற லோடும்
திசைதிறந் தண்டம் கீறிச் சிரித்தது செங்கட் சீயம்."

என்கிற பாடலையும்;

'ஜகத்ரக்ஷகன் சிங்க வடிவெடுத்துத் தூணைப் பிளந்து அதன் நடுவில் அவதரித்து, பிரசன்னமாய்ச் சிரித்தது கண்டு, பிரகலாதன் ஆனந்தத்தால் ஆடிப்பாடி அழுது தொழுதான்,' என்பதைப் குறிப்பிக்கும்,

"நாடினன் தருவ னென்ற நல்லறி வாள னுளும்
தேடிநன் முகனும் காணச் சேயவன் சிரித்த லோடும்
ஆடினன் அழுதான் பாடி அரற்றினன் சிரத்திற் செங்கை
சூடினன் தொழுதா னெடி யுலகெலாம் துகைத்தான் றுள்ளி."

என்கிற பாடலையும் வாசித்தார்.

வாசித்த மாத்திரத்தில் மோட்டழகிய சிங்கர் தமது திருக் கரங்களை நீட்டி, திருமுடியைத் துளக்கிப் பவளம் போலும் சிவந்த வாயைத் திறந்து, கடகடவென்று அந்த மண்டபமும் அதிர, அங்குள்ள சகல மகாஜனங்களும் நடுங்கச் 'சிரித்து ஆர்ப்பரித்தார். அப்பொழுது எல்லாரும் அதிசயித்து, சிதம்பரத்தில் பாம்பு கடித்து இறந்த தில்லை மூவாயிரவர் பிள்ளை நாகபாச படலத்தை வாசிக்கப் பிழைத்தது; இங்கே இரணிய வதைப்படலம் வாசிக்கச் சுதை வடிவாய் எழுந்தருளியிருக்கின்ற மோட்டழகிய சிங்கர் திருவுளமுவந்து, அவ்வுவப்பு யாவர்க்கும் தெரியும்படி சிரக்கம்ப கரக்கம்ப முடனே அட்டகாசம் செய்தார்; ஆதலால், இந்தக் காவியம் அதிக மகத்துவமுடையது,' என்றும், 'இம்மகத்துவம் சகலருக்கும் பகிரங்கமாக வேண்டுமென்றல்லவோ இந்நூலில் அந்தந்தச் சந்தர்ப்பங் கண்டு அதற்குத் தக்கவாறு விசேஷார்த்தம் சொல்லிச் சமர்த்தித்து வந்த ஸ்ரீமந் நாதமுனிகளும் இது விஷயத்தில் மாத்திரம் வார்த்தை சொல்லாமல் மௌனமாய் இருந்தார்?' என்றும் எண்ணி, கம்பரைக் குறித்து மிகவும் மெச்சிக் கொண்டாடினார்கள்.

அதற்கு மேலும் அச்சபையிலுள்ள அறிஞர்கள் ஆங்காங்குக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் ஏற்றபடி சமாதானம் சொல்லி

இராமாயணம் முழுவதும் வாசித்து முடித்த பின்பு, ஸ்ரீமந் நாத முனிகள், 'இந்தக் காவியம் இவ்வளவு சிறப்புடையதாக இயற்றப் பட்டும், பாலில் விஷங்கலந்தாற்போல இடையிடையே நரஸ்துதி பண்ணப்பட்டதனாலல்லவோ, இங்கிருக்கும் வைஷ்ணவர்கள் அசூயை கொண்டு, தில்லை மூவாயிரவர் முதலியோருடைய கையொப்பம் வாங்கி வரும்படி இவரைப் பலவிடங்களிலும் ஓடியுழலச் செய்தார்கள்?' என்று உய்த்துணர்ந்து, கம்பரை நோக்கி, 'இதிகாசமாயும் பகவத்சரிதமாயும் இருக்கின்ற இதில் என்ன நிமித்தத்தால் நரஸ்துதி செய்ய வந்தது?' என்று வினவ, கம்பர் திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப முதலியார் சிறு வயதுமுதல் தமக்கு நெடுநாளாக அன்னவஸ்திராதிகள் கொடுத்து ஆதரித் ததையும், அவரது பிரயத்தனத்தால் அத்திருவெண்ணெய் நல்லூரிலே இந்நூல் செய்யப்பட்டதையும், அம்பிகாபதி விவாகத்தில் பாதபூஜை நடக்கும் சமயத்தில் சகல மகாஜனங்களும் வந்து நிறைந்திருக்கும் கலியாண வாசலில் மேற்படி முதலியார் வர, 'ஆயிரம் பணையப்பனுக்குப் பல்லுக்குத்த ஈர்க்குக் கிடையாது,' என்பது போல, கிராமாதிபதியாகிய அவருக்கு இருக்க இட மில்லாததனால் அங்கிருந்தவர்களெல்லாம் எழுந்து, அவரை, 'இங்கே வரலாம், இங்கே யிருக்கலாம்,' என்று உபசரித்தபொழுது, 'அவர், 'நீங்கள் ஆரும் எழுந்திருக்க வேண்டா ; சும்மா இருங்கள்; எனக்கு : இதோ இடமிருக்கிறது,' என்று சொல்லி, அவர்களை அங்கிருக்கச் செய்து, ஒருவரும் இருப்பதற்கு யோக்கியமின்றி ஒழிந்திருந்த சாக்கடை வரம்பின்மேல் நின்றுகொண்டிருக்க தாம், அவரைப் பார்த்து, 'அத்தான், அவ்விடத்திலேயா இருக்கின்றீர்கள்? நல்லது இருங்கள்,' என, அது கேட்டுத் தமது மனையாள் சகியாமற் பரிதபித்து, 'இத்தனை ஜனங்களுக்கும் இங்கே இடமிருக்க, எங்கள் அண்ணை அவர்களுக்கு மாத்திரம் அந்தச் சாக்கடையா கிடைத்தது?' என்ன, 'அடி பைத்தியக்காரி, உங்கள் தமையனரை இந்த இடத்திலேயா வைக்கிறது? நான் வைக்குமிடத்தில் வைக்கிறேன்,' என்று தாம் சொன்னதையும் விவரணமாக விண்ணப்பஞ்செய்து, 'இக்காரணங்கள் அனைத்தையும் கருதித்தான் அந்தப் பிரபுவை இதில் சொல்லி வைத்தேன்,' என்றார்.

ஸ்ரீமந் நாதமுனிகள், 'இது உபகாரஸ்மிருதி' என்று திருவுளங் கொண்டு, கம்பரை நோக்கி, 'நீர் சொல்வதெல்லாம் சரிதான் ; உம்மாலே பாடப்பட்ட பதினாயிரம் பாடலுக்குள் நூற்றுக் கொன்று விழுக்காடு நூறு பாடலில் அவர் பெயரைச் சொல்லி யிருக்கிறீரே ! இப்படி மகா காவியத்தில் அடிக்கடி சொல்லுவது யுக்தமன்று; அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாம்; ஆதலால், ஆயிரத்துக்கொன்றுகப் பத்துப் பாடலில் மாத்திரம் இருந்தாற் போதும்,' என்ன, கம்பர் அது கேட்டு, 'அருமைப்பட்டுப் பாடிய தொண்ணூறு பாடல் வீணாய்ப் போய்விடுகிறது,' என்று மனவருத் தப்படாமல், 'சுவாமி! மகாபாக்கியம்! கற்பகமும் காமதேனுவும்

நாணத்தக்க ஒளதாரியமுடைய அந்தப் பிரபுவின் குணுதிசயம் அடியேனுடைய சிற்றறிவுக்கு எட்டாமையால், விலையுயர்ந்த மாணிக்கத்தைக் குருவிந்தக்கல்லுக்கு ஒப்பாக மதிப்பவரைப் போல, அவரை நூற்றுக்கொன்றாக மதித்தேன்; தேவரீர் ஆயிரத்துக்கொன்றாக மதித்தது விசேஷமே!' என்று சாதுரியமாகச் சொல்ல, ஸ்ரீமந் நாதமுனிகள் திருவுளம் மகிழ்ந்து கிருபை கூர்ந்து, கம்பருக்குக் **கவிச்சக்கிரவர்த்தி** எனப்பட்டப் பெயர் கொடுத்து, அவர் பாடின ராமாயணத்திற்கு அச்சபையிலிருந்த வித்வசனர்களில் சிலர் சாற்றுக்கவி கொடுக்கவும், அவற்றில் இரண்டு கவியை எடுத்துத் திவ்வியப் பிரபந்தத்தோடு சேர்க்கவும், அந்தத் திவ்விய தேசத்தில் நடக்கும் உற்சவாதிகளில் அழகிய மணவாளன் திருவீதிப் புறப்பாடாகித் திரும்பிக் கோயிலுக்குட் செல்லும் போதெல்லாம் அப்பெருமானைக் கம்பர் கட்டுவித்த மண்டபத்தில் எழுந்தருளப்பண்ணித் திருவந்திக்காப்பு நடப்பிக்கவும், சடகோபரந்தாதியில் இரண்டு பாடலைத் திருக்குருகூரில் ஆழ்வார் சந்நிதியில் நித்தியப்படியாகச் சேவிக்கவும் வேண்டும் என்று கட்டளையிட்டு, தமது கோஷ்டியிலுள்ள வைஷ்ணவர்களை, 'கம்பர் கவிச்சக்கிரவர்த்திக்குப் பெருமாள் சேவை பண்ணுவித்து, ஸ்ரீசடகோபம் முதலானவைகளும் பிரசாதியுங்கள்,' என்பதாக நியமித்தார்.

அந்நியமனப்படி அவர்கள் கம்பரை அழைத்துப் போய்ச் சுவாமிக்குத் திருமஞ்சனம் முதலானவைகளும் சமர்ப்பித்து, பிரணவாகார விமானத்தில் சேஷசாயியாய் எழுந்தருளிய அப் பிரணவப் பொருளான ஸ்ரீரங்கநாதனையும், ஸ்ரீரங்கநாயகியாரையும் அவர் சேவிக்கும்படி செய்து, அவருடைய இராமாயண புஸ்தகத்தைச் சுவாமி திருவடியிற் சமர்ப்பித்து, அவருக்குத் திருமாலை, தீர்த்தம், பிரசாதம் ஸ்ரீசடகோபம் முதலானவைகளும் சாதிப்பித்து விசேஷ மரியாதை நடப்பித்தார்கள். அவைகளைக் கம்பர் பெற்றுக்கொண்டு, 'அன்று நான் பிறந்திலேன்,' என்று திருமழிசைப்பிரான் அருளிச்செய்தபடி, 'கீழ்ப்போன ஜன்மங்களனைத்தும் அறிவின்றி அவலமாய்க் கழிந்ததனால், அப்பொழுதெல்லாம் அடியேன் பிறந்தேனல்லேன்; இப்பொழுது ஜன்ம சாபல்யமாகிக் கிருதார்த்தனும்படி சதாசாரிய கடாக்ஷம் வாய்க்கப் பெற்றமையால் இந்த ஜன்மமே உத்கிருஷ்டமான ஜன்மம்! என் பாக்கியமே மகாபாக்கியம்!' என்று நெஞ்சு குழையச் சரீரம் புளகிக்கக் கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகப் பரவசமானர்.

> "எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேற் சடையன் வாழ்வு
> நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
> பண்ணிய விராம காதை பங்குனி யத்த நாளில்
> கண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே."

இந்த இராமாயணம் பாடின இடத்தையும், அரங்கேற்றிய

ஸ்தலத்தையும், காலத்தையும் குறித்து ஸ்ரீரங்கத்தாரில் ஒருவர் பாடியது.

" அம்பிலே சிலையை நாட்டி யமரர்க்கன் றமுத மீந்த
தம்பிரா னென்னத் தானும் தமிழிலே தாலை நாட்டிக்
கம்பநா டுடைய கோமான் **கவிச்சக்ர வர்த்தி** பார்மேல்
நம்புபா மாலை யாலே நரர்க்குபின் றமுதம் ஈந்தான்."

இஃது கவிச்சக்ரவர்த்தி என்னும் பட்டப்பெயரைக் குறித்து ஒருவர் பாடிய சாற்றுக் கவி.

" இம்பர் நாட்டிற் செல்வமெல்லா மெய்தி அரசோ டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா வோங்கு நீழ லிருந்தாலும்
செம்பொன் மேரு வணையபுயத் திறல்சோ ராமன் றிருக்கதையில்
கம்ப நாடன் கவிதையிற்போற் கற்றோர்க் கிதயம் களியாதே."

என்பது முதலாக மற்றும் சிலர் பாடிய சாற்றுக் கவிகளை மேற்படி இராமாயண புஸ்தகத்தில் காண்க.

இப்படிச் சாற்றுக்கவி கொடுக்கப்பட்ட பின்பு, கம்பர் ஸ்ரீமந் நாதமுனிகளையும் மற்றுமுள்ள பிரபன்னர் முதலானவர்களையும் சேவித்து, அவர்களிடத்தில் நியமனம் பெற்றுக்கொண்டு, நம் பெருமாள் கோயிலிலிருந்து திருவெண்ணெய்நல்லூருக்கு வந்து, சடையப்ப முதலியாரைக் கண்டு பேசி, அவருக்குத் தாம் அரங் கேற்றிய செய்திகளையெல்லாம் விவரித்து, அவர் உபசரிக்கப் பெற்று, அங்கிருந்து உறையூருக்குப் போய்க் குலோத்துங்க சோழனைக் கண்டார். அவன் கம்பரை நோக்கி, 'அரங்கேற்றப் போய் வெகு நாளாகிறதே! இவ்வளவு காலம் சென்றது என்ன விதத்தால்?' என, அவனுக்கு அங்கே நடந்தவைகளையெல்லாம் ஆதியோடந்தமாகச் சொல்ல, அரசன், 'அப்படியா!' என்று ஆச்சரி யப்பட்டு, 'இது விஷயத்தில் வெகு பிரயாசப்பட்டீர்! பட்டாலும் உமக்கும் காவியத்திற்கும் மிகுந்த சிறப்புண்டாயிருக்கிறது!' என்று சொல்லிச் சந்தோஷப்பட்டு, 'நல்லது; இவ்விடத்தில் நானும் நம்முடைய முதலியாரும் மற்றுமுள்ளவர்களும் ஒரு முறை உமது வாக்கினாலே இராமாயணம் முழுவதும் கிரமமாகப் பிரசங் கிக்கக் கேட்க வேண்டாவா?' என்ன, கம்பர், 'தடையென்ன? அப்படியே செய்யலாம்,' என, அரசன், பாண்டியன் சேரன் முதலானவர்களுக்குப் பத்திரிகை மூலமாக இந்தச் சமாசாரம் தெரிவித்துச் சகலமானவர்களையும் தன் தேசத்தில் வரவழைத்துச் சபை கூட்டுவிக்க, அச்சபை நடுவில் கம்பர் வந்திருந்து, தமது சற்றுச்சொல்லி கையேடு பிடித்து வாசிக்கப் பிரசங்கிக்கத் தலைப்பட்டார்:

" பாத்த யானையிற் பதங்களிற் படுமத நாறக்
காத்த வங்குச நிமிர்ந்திடக் கால்பிடித் தோடிப்

பூத்த வேழிலம் பாலையைப் பொடிப்பொடி யாகக்
காத்தி ரங்களால் தலத்தொடுந் தேய்த்ததோர் களிறு.''

என்னும் வரைக்காட்சிப் படலத்துப் பாடலைச் சொல்லி, 'மிதிலைக் குப் போன தசரத மகாராஜன் சேனையிலுள்ள மிருக மதங்கம், ராஜ மதங்கம், பத்திர மதங்கம் என மூவகையாகப் பகுக்கப்பட்ட யானைகளுக்குள்ளே ஒரு யானையானது, தான் செல்லும் வழிகளிலே ஏழிலைம்பாலைமரம் புஷ்பித்து யானை மதம் நாறக் காற்றின் வழியே மோப்பம் பிடித்து' அங்குசம் நிமிர்ந்து போம்படி பாகன் மஸ்த கத்தில் குத்திக் குத்தித் திருப்பியும், திரும்பாமல் காட்டுக்குள் ஓடி, அவ்வேழிலம்பாலையைப் பிடுங்கித் தரையுடனே மோதிப் பொடிப் பொடியாக முன்னங்கால்களால் தேய்த்தது,' என்று பிரசங்கிக்கக் கேட்டு, அங்கிருந்த குடகு தேசாதிபதி கம்பரை நோக்கி, 'ஐயா, அனேகந் தலைமுறையாக யானைகளைப் பிடிப்பதும் போஷிப்பதும் விக்கிரயிப்பதும் எங்கள் குலத் தொழிலாய் இருப்பதனால், யானை களின் சாதி, குணம், செய்கை, உற்பத்தி ஸ்தானம் முதலானவை களையும் பலகாலும் ஆராய்ந்து அறிந்துவரும் பெருவழக்கமுடைய எங்களுக்கு இந்நாள்வரையில் ஏழிலைம்பாலை யானை மதநாற்றம் நாறுகிறதென்றும், அது யானைக்கு விரோதமாய் இருப்பதென்றும் தெரியாது; இப்படிப்பட்ட அபூர்வமான விஷயத்தையும் தாங்கள் அறிந்து சொன்னதைக் குறித்து நான் என்ன சொல்லமாட்டுவேன்! ஆந்திர பாஷையில், 'ரவியெருகனி தாவு கவி யெருகுனு' என்பது வாஸ்தவந்தான்,' என்று சொல்லிக் கம்பரை மெச்சி, அவருக்கு அதற்காக ஒரு கடகம் * யானை வெகுமதி செய்தான். அப்பால்,

''தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே;
உருண்ட வாய்தொறும் பொன்னுரு ளுரைத்துரைத் தோடி
இருண்ட கல்லியும் தங்கிற மாக்கின இரதம்.''

என்னும் பாடலைக் கூறி, 'பல நூல்களையும் கற்றுத் தெளிந்த பெரியோர்கள் கல்லாத மூழ மூடர்களைச் சேர்ந்தாலும் அவர் களுடைய மயக்கமாகிய பேதமைப் புத்தியையும் மாற்றித் தங்களைப் போல அறிவுடையவர்களாகச் செய்வார்களென்னும் இஃது ஆன்றோர் வழக்கமாதலால், சந்திர சைலத்தின் சாரலிலே, பொன்னுல் செய்யப்பட்ட தேர்ச் சக்கரங்கள் உருண்ட இடங்கள் தோறும் அப்பொன்னுருளைகள் தேய்த்துத் தேய்த்து ஓடுதலால் அந்தத் தேர்கள் அங்குள்ள இருண்ட கருங்கற்பாறைகளையும் தந்நிறமாக்கிவிட்டன,' என்று பிரசங்கித்த பொழுது, சோழன், 'இந்தத் தர்மம் உம்மிடத்திலேதான் விளங்கக் கண்டேன்,' என்ன, கருணாகரப் பாண்டியன், 'அதென்ன?' என்று கேட்க, சடையப்ப முதலியார் சொல்லத் தொடங்கினர்:

* கடகம் – பன்னிரண்டு யானை.

'பூர்வம் சோழ ராஜாவின்மேற் கவி பாடிப் பரிசு பெறும் புலவர்களை ஒரு விறகுத் தலையன் பெண்சாதி பார்த்து, 'இவர் களெல்லாம் ஒரு வேலையும் செய்து கஷ்டப்படாமல் பாட்டுப்பாடி எளிதிற் பணம் சம்பாதித்துச் சுகமாக ஜீவனம் செய்துவர, நம்மு டைய புருஷன் மாத்திரம் காட்டுக்குப் போய்க் காவில் கடுமுள் தைக்க, கட்டை வெட்டிக் கை காய்க்க, நாள்தோறும் மாடு போல உழைத்து விறகு விற்று, அரை வயிற்றுக் கஞ்சிக்குமில்லாமல் அவ திப்பட வேண்டியதென்ன? இது வரையில் இந்த உபாயம் தெரியாமல் போயிற்றே!' என்று தனக்குள்ளே சிந்தித்து, காரிகை கற்றுக் கவிபாடுவதிலும், பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று என்பதை அவள் சிறிதும் உணராமையால், அது சூளுவென்று நினைத்து, தன் புருஷனை, 'நீ சீக்கிரமாய்ச் சோழராஜனிடத்தில் பாட்டுப் பாடிக் கொண்டு போ; நமக்கு நல்ல காலம் வந்தது,' என்றாள். அவன், 'எனக்கோ பாட்டுத் தெரியாது; ஆயினும், பெரி தன்று; இதோ கற்றுக்கொண்டு வருகிறேன்,' என்று தெருவிலே புறப்பட்டு வருகிறபொழுது, சில சிறுபிள்ளைகள் மரப்பாவைகளை வைத்து விநோதமாக விளையாடுமிடத்தில், அவர்கள், 'மண்ணுண்ணி மாப்பிள்ளையே' என்று சொல்லக் கேட்டு, அதை ஞாபகப்படுத்திக் கொண்டு அப்புறம் செல்லுகையில், ஒரு காக்கை 'கா' என்று கத்தக் கேட்டு, 'காவிறையே' என்றும், ஒரு சோலையில் குயில் கூவக் கேட்டுக் 'கூவிறையே' என்றும், ஒரு பிள்ளையார் கோவில் பெருச்சாளி ஓடக்கண்டு, அதைக் கல்லெடுத்து அடிக்கப் போய், 'உங்களப்பன் கோவிற் பெரிச்சாளி' என்றும் பாடம் பண்ணிக் கொண்டு திரும்பும்பொழுது தன் சிநேகன் ஒருவன் எதிர்ப்பட்டு, 'எங்கே போய் வருகிறாய்?' என, இவன், 'பாட்டுக் கற்றுக்கொண்டு வரப் போனேன்; நீயும் கொஞ்சம் கற்பிக்க வேண்டும்' என, அவன், 'அடா, கற்பிக்கிறதென்ன! 'கன்ன பின்ன மன்ன தென்ன' என்று பாடுகிறதுதானே!' என, இவன் அதையும் பாட்டென்றே நினைத்து, முன்பு தான் விளையாட்டுப் பிள்ளைகளையும் காக்கையையும் குயிலையும் பெருச்சாளியையும் பார்த்துக் கற்றுக்கொண்டதனோடு சேர்த்துக் கொண்டு, 'இந்த மட்டில் போதும்,' என்று வீட்டுக்குப் போய், அதைத் தன் பெண்சாதியுடனே சொல்ல, அவள் கொஞ்சம் புத்தி சாலியாகையால், 'இதில் சோழன் பெயரில்லை; அது அவசியமிருக்க வேண்டும்,' என்று இவனுக்குச் சொல்லிக் கொடுத்த 'சோழரங்கப் பெருமானே,' என்பதையும் அந்தப் பாட்டுக்கு அங்கிதமாகக் கடைசியில் வைத்துக்கொண்டு, அச்சமில்லாமல் ராஜ சபைக்கு வந்து கம்பரைக் கண்டு கும்பிட, அவர் இவனை, 'நீ யார்?' என்ன, 'நான் ராஜாவின்மேல் பாட்டுப் பாடி வந்தேன்,' என்ன, அவர், 'இவன் விறகுதலையன்' என்றும், 'நம்மைக் குறித்து ஆரோ சொல்லக் கேட்டு வந்து அடித்தான்' என்றும், 'அடித்தவனைக் கைவிடலாமா? ஆசிரத சம்ரக்ஷணை செய்ய வேண்டுமல்லவோ?' என்றும் எண்ணி அபிமானித்து, அவனுக்கு ராஜாவைக் காட்டி, 'கும்பிடு,' என்று

குறிப்பித்து, அரசன் முதலானவர்களைப் பார்த்து, 'பெரியோர்கள் இப்படித்தான் நீறு பூத்த நெருப்பைப் போல இருப்பார்கள்; அவர் களை ஆரறியத் தக்கவர்கள்?' என்று சொல்லி, சிவுக்கென்று எழுந்து, தாமிருந்த ஆசனத்தில் அவனை, 'இரும்! இரும்!' என்று உபசரித்து, பிறகு, 'நீர் பாடின பாடலைச் சொல்லும்,' என்றார்.

அவன் எவ்வளவும் அச்சமில்லாமல், தைரியத்துடனே, 'மண் ணுண்ணி மாப்பிளையே, காவிறையே, கூவிறையே, உங்களப்பன் கோவிற்பெருச்சாளி, கன்னு பின்னு மன்னு தென்னு, சோழங்கப் பெருமானே,' என்று தான் கற்று வந்த பாட்டை அசுவதாட்டி யாய்ச் சொல்லக் கேட்டுச் சபையிலுள்ளவர் யாவரும், 'இது நல்ல பாட்டு!' என்று சிரித்தார்கள். கம்பரானவர் ஒட்டக்கூத்தர் முதலான வித்வசனர்களை நோக்கி, 'இது வெண்பா முதலிய பாக்களிலாவது, பாவினங்களிலாவது எதனோடு சம்பந்தப்பட்டது? இதன் பொருள் யாதென்று அறிந்து சொல்வதல்லவோ வித்வ சாமர்த்தியம்? அதை விட்டு நகைப்பதென்ன? பாடினவரைச் சொல்லச் சொன்னால் பிரயாசமில்லாமல் சாதுரியமாக நொடிக் குள்ளே சொல்லுவார்; ஆயினும், நூல் செய்தவனே உரை செய் கிறது சம்பிரதாயம் அல்லவே? அது பற்றி இவரைச் சொல்லச் சொல்லுகிறது நியாயமன்று; அன்றியும், நாம் வித்துவான்களாய் இருந்து பிறரைப் பொருள் சொல்லுமென்று கேட்டால் நமக் கென்ன பெருமை இருக்கிறது? நம்மிலே ஆராவது ஒருவர் சொல் வதே யுக்தம்,' என்றார். அவர்கள், 'இவனெவனே பைத்தியக் காரன், தன் வாயிலே வந்தபடி தாறுமாறாக எதையோ குழறினால், அதைப் பாடலென்றும், அதற்குப் பொருள் சொல்ல வேண்டு மென்றும் சொல்லுகிறாரே! இவர் அவனிலும் பெரிய பைத்தியக் காரராய் இருக்கிறாரேயல்லாமல் வேறல்லர். பொருள் சொல்லுங்கள் என்று பரீக்ஷிக்கிறது போல நம்மைக் கேட்கிறதென்ன? சொல்லத் தக்கதாய் இருக்குமானால் இவரே சொல்லலாகாதோ?' என்று கம்பரை நோக்கி, 'தாங்களே சொல்லலாம்,' என்றார்கள். அவர், 'உங்களுக்குள் நானும் ஒருவனாகையால், நான் சொல்வது நீங்கள் சொல்வதுதான்; உங்கள் அபீஷ்டம் அப்படி இருக்கிறபடியினாலே நானே சொல்லுகிறேன்,' என்று தொடங்கினார்:

'இப்பாடல் இடையிடையே சில சீர் குறைந்தியல்வதனால், இணைக்குறள் ஆசிரியப்பாவாகும். இதன் பொருள்: 'மண்- பூமியை, உண்ணி - உண்டவனே; மா - இலக்குமியின், பிள்ளையே - புதல்வனே, கா - கற்பகத்திற்கு, இறையே - தலைவனே, கூ- பூமிக்கு, இறையே - அரசனே, உங்களப்பன் - உங்கள் தந்தை, கோ - இராஜன், வில் - விற்போரில், பெரிசு - பெரிதாகிய, ஆளி - சிங்கம் போல்வாய், கன்னு - கன்னனே, பின்னு - தருமனே, மன்னு- நிலைபெற்றவனே, தென்னு - பாண்டியனை ஒத்தவனே, சோழங்கம் - சோழ தேசமாகிய அங்கத்தையுடைய, பெருமானே - பெருமையுடை

யானே, என்பதாம் ; இது பதவுரை. 'மகாவிஷ்ணு பிருதிவி பதி என்றபடி, உலகாள்பவனுதலால், நீ விஷ்ணு அமிசம் பெற்றாய்' என்பார், 'மண்ணுண்ணி' என்றும், 'குறைவற்ற செல்வமுடையாய்' என்பார், 'மிக்கசெல்வமுடையோனே லக்ஷ்மி புத்திரனென்னும்உலக வழக்குப் பற்றி, ' மாப்பிள்ளையே,' என்றும், 'போகத்தால் சுரேந்திரனே ஒப்பாய் என்பார், ' காவிறையே,' என்றும், மக்களாய்ப் பிறந்தவர்களில் மிகச் சிறந்தோனுதலால் நரேந்திரனே என்பார், 'கூவிறையே,' என்றும், 'நீயேயன்றி உன் தந்தை முதலினோரும் அரசாளப் பெற்றவர்தாம்,' என்பார், 'உங்களப்பன் கோ,' என்றும், 'விற்போரில் சிங்கம் போலப் புறங்கொடாது பகைவரை வெல்வாய், என்பார், 'விற்பெருச்சாளி,' என்றும், 'பெருங்கொடை வள்ளலே, என்பார், 'கன்னு,' என்றும், 'பொறுமையில் கன்னனுக்குப் பின்னோனுகிய தருமனே' என்பார், 'பின்னு,' என்றும், 'நெடுங்காலம் அழிவின்றி வாழ்வாய்' என்பார், 'மன்னு,' என்றும், 'தமிழ்ப் புலமையில் பாண்டிய ராஜனைப் போல்வாய்'என்பார், 'தென்னு,' என்றும், 'மலை கடல் நாடு முதலிய தசாங்கத்தில் ஒன்றுகிய நாட்டில் பெரியோய்' என்பார், 'சோழங்கப் பெருமானே,' என்றும் கூறினர் ; இது பதசாரம். உங்களப்பன் - எழுவாய், கோ - பயனிலை. அன்றியும், நீ-தோன்று எழுவாயும், விற்பெருச்சாளி - பயனிலையுமாம் என்றும், இச்செய்யுளில் இடை இடையே உவமை உருவகம் முதலிய சில அலங்காரங்களும் அமைக்கப்பட்டன என்றும், அவைகளையெல்லாம் எடுத்துக் காட்டி, வீரம் முதலிய எண்சுவைகளும் தோன்றி அனைவர்க்கும் கர்ணனந்தத்தை விளக்கும்படி அற்புதமாகப் பிரசங்கித்து சமர்த்தித்தார்' என்றனர்.

குலோத்துங்க சோழராஜன் முதலானவர்கள் அதைக் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு, ' இந்தப் பாட்டுப் பாடினவன் மூடனும், பாடல் அரைக்காசு பெறுததுமாயிருந்தும், அவனை வித்துவான் என்றும், அதைப் பாடல் என்றும் ஸ்தாபித்து, அதற்கு இலக்கணத்தோடு பொருந்தப் பதப் பொருள் சொல்லிப் பதசாரம் கூறி மேற் கோளும் காட்டி மெய்ப்பித்தாரே ; இவருடைய வித்யா சாமர்த்தியமே சாமர்த்தியம் ! இவரைச் சாரதாபீடமென்றே சொல்ல வேண்டும் !' என்று வியந்தார்கள். சோழ ராஜாவானவர், 'வழியே போகிற விறகுதலையனுக்காகப் பாத்தியப்பட்டு அவன் குழறி வந்ததையும் பாடலாகக் கொண்டு, அதற்கு இவ்வளவாக நுட்பித்துப் பொருள் சொல்லிச் சமர்த்தித்த இவரைப் பற்றியாவது அவனைப் பெருமைப்படுத்த வேண்டும்,' என்று அவனுக்குச் சகல வெகுமதியும் செய்து அனுப்பினர். அது கண்டு கம்பர், 'நாம் முழு மூடனை ராஜசபையில் மகா வித்துவானென்று சொல்லி, அவன் குழறலையும் பாடலென்று வற்புறுத்திப் பிரசங்கித்தது பற்றிச் சன்மானத்துடனே அவனுக்கு வெகுமானம் செய்தனுப்பின அரசன், இனி ஒரு காலத்தில், 'அன்று கவி பாடி வந்த வித்துவான் வெகு நாளாகியும் மறுபடி வரவில்லையே! அவரை அழைப்பியுங்கள் ; அவரது வாக்கைக்

கேட்க வேண்டும்,' என்றுல், அப்பொழுது அவன் பண்டோலம் வெளிப்பட்டுப்போம்; அதனுல், நம்முடைய கௌரவத்திற்கும் குறை வரும்,' என்று அந்த நாள் முதல் தமது கற்றுச் சொல்லிகளே விட்டு அவனுக்கு இலக்கண இலக்கியத்துடனே கல்வி பயிற்றி அதி சீக்கிரத்தில் மகா சமர்த்தனுகும்படி செய்து, அப்புறம் ஒரு நாள் அவனேச் சோழ மகாராஜாவின் சபைக்கு வரவழைத்து, வேந்தனேக் கொண்டு சமிசை கொடுப்பித்துக் கவி பாடச் சொல்லி, அதை அவன் வாக்கினுலேயே பூரித்துப் பிரசங்கிக்கும்படி செய்தார். அதைப் பற்றித்தான் சோழமகாராஜா, 'இந்தத் தர்மத்தைத் தங்க விடத்திலேயே கண்டோம்,' என்பதாகக் கம்பரைக் குறித்துச் சொன்னர் என்று சடையப்ப முதலியார் சொல்லக் கேட்டு, பாண்டியன் அதிக சந்தோஷப்பட்டு, 'இப்படிப்பட்ட வித்துவ சிரோமணியானவர் நாள்தோறும் கால்நடையாய்ப் போக்குவரவு பண்ணப் பார்ப்பது நமக்கழகல்லவே! இவரை இன்று தொட்டாவது வாகன பிரதிஷ்டையோடு இருக்கச் செய்யவேண்டும்,' என்று அபிமானித்து, அவருக்கு யானேத் தந்தத்தால் விசாலமான தொட்டி சமைத்து, கணேக்குப் போற்றகடு சித்திரித்து வேய்ந்து அடியிலே நீலத்தால் கால்கடைந்து பொருத்தி, மரகத ரத்தினத்தால் குமிழ் நிரைத்து, மேலுக்கு விசித்திரமாகிய சரிகை முகமற்பன்னுக்கு விரித்து, நெருங்க முத்துக் குச்சுத் தூக்கி, கணேயின் இருபுறமும் தங்கத்தால் சிங்க உருவமைத்து, அதற்கு அதியுசிதமாகக் கொத்து வேலே செய்து, கண்ணுக்கு நீலமும், பல்லுக்கு வச்சிரமும், வாய்க்குப் பத்ம ராகமும் அழுத்திய சிங்க லலாடம் அமைத்த வீலியுயர்ந்த பல்லக்கொன்று வெகுமதியாகக் கொடுத்தான். பின்பு,

"தியவரொ டொன்றிய திறத்தரு நலத்தோர்
ஆயவரை அங்கீலை அறிந்தனர் துறந்தாங்(கு)
ஏயவரு நுண்பொடி படிந்துட னெழுந்தே
பாய்பரிவி ரைந்துதறி நின்றன பரந்தே!"

என்ற பாடலேக் குறித்து, 'துர்ச்சனருடைய குணதோஷங்களே ஆராயாமல் அவருடனே நட்புச் செய்த சற்சனர்கள் அந்தத் தோஷங்களேப் பழகி அறிந்த பொழுது, அவைகள் தங்களுக்குச் சகிக்க முடியாமையால் அவரது நட்பைச் சீக்கிரத்தில் கைவிட்டது போல, சந்திரசைலத்தின் அடிவாரத்தில் தசரத மகாராஜாவின் சேனே போயிறங்கின போது, அங்கே வரிசையாகக் கட்டப்பட்ட சிந்துஜம், வனுயுஜம், காம்போஜம், ஆரட்டஜம், பாரசீகம், பாகி லீகம் முதலான குதிரைகள் நிலத்தில் படுத்துப் புழுதியிற்படிந்து புரண்டு உடனே எழுந்து தத்தம் உடலே அசைத்து அதில் ஒட்டிய அப்புழுதிகளேப் பற்றற உதறிவிட்டு நின்றன,' என்று பிரசங்கிக்கக் கேட்டு, அருகிலிருந்த சிந்து தேசாதிபதி, 'இந்த உபமானம் ரசமாயிருக்கின்றது!' என மனமகிழ்ந்து, 'இவருக்கு உசிதமாக நாம் என்ன கொடுக்கப் போகிறேம்!' என்று, எடுத்த முகமும் நெரிந்த செவியும்

நீண்ட வாலும் நெற்றி முதலிய ஸ்தானங்களில் நற்சுழிகளும் உடைய நூறு உத்தம ஜாதிக் குதிரைகள் வெகுமதி செய்தான்.

இந்தக் காவியத்தில் ஒவ்வொரு நயம் கண்டு, குடகு தேசத்திற்கும் பாண்டிய தேசத்திற்கும் சிந்து தேசத்திற்கும் அதிபதிகளானவர்கள் மெச்சி, அவரவர் தனித்தனியே யானை, குதிரை, பல்லக்குகள் வெகுமதி செய்ததைப் பார்த்திருந்த மாறுவாடி தேசத்தரசன், அதற்கு முன் கம்பர்,

> " தள்ள ரும்பரந் தாங்கிய வொட்டகம்
> தெள்ளு நீங்கரும் பியாவையும் தின்கில
> உள்ள மென்னத்தம் வாயும் உலர்ந்தன
> கள்ளுண் மாந்தரில் கைப்பன தேடியே."

என்ற எழுச்சிப்படலப் பாடலைக் குறித்து, 'தசரதன் சேனையில், அநேகர் கூடித் தள்ளினாலும் தள்ளக்கூடாத அதிக பாரமாகிய சுமைகளை ஏந்திச் செல்லும் ஒட்டகங்கள், தாம் செல்கின்ற மார்க்கத்தில் கண்ட கண்ட இடங்கள்தோறும் தொடையளவு பருமனுக்குச் சமமாக நெடுக வளர்ந்து மிக முதிர்ந்து கணுக்களின் இடையே வெடித்துத் தேனெழுகுகின்ற தீங்கரும்புகள் அபரிமித மாய் இருக்கக் கண்டும் அவைகளைத் தின்னுமல், கள்ளுண்பவர்கள் தங்களுக்குச் சுவை தங்கிய நல்ல பால் தயிர் முதலானவைகள் விசேஷமாகக் கிடைத்தாலும் அருந்தாமல் வயிற்றில் பசி துள்ள, தாகத்தால் நெஞ்சு வரளக் கள்ளு எங்ஙனம் விற்கின்றதென்று அதை நாடிச் செல்வது போல, கசப்பாகிய வேப்பிலை எங்கிருக்கிறது எனத் தேடிப் போய்த் தம்முள்ளம்போல வாயும் அடிக்கடி அசை போடுவதனால் உலர்ந்து போயின,' என்று பிரசங்கித்தது கேட்டிருந்தும், அப்பொழுது அதைப் பற்றித்தான் அவருக்கு ஒன்றும் செய்யாமல் போனதைக் குறித்து லஜ்ஜையடைந்து, 'இவர்களைப் போல நாமும் ஏதாவது செய்வதல்லவோ நமக்குக் கௌரவம் ?' என்றெண்ணி, பிறகு தன் தேசத்திலுண்டாகிய ஒட்டகங்களில் இருபது ஒட்டகங்கள் கொடுத்தான்.

> " அமிழ்மைத் துணைகள் கண்ணுக் கணியென வமைக்கு மாபோல்
> உமிழ்சுடர்க் கலன்க ணங்கை உருவின மறைப்ப தோரார்
> அமிழ்தினைச் சுவைசெய் தென்ன அழகினுக் கழகு செய்தார்
> இமிழ்திரைப் பரவை ஞாலம் ஏழைமை யுடைத்து மாதோ."

என்ற கோலங்காண் படலப் பாடலைக் குறித்து, 'பிரமனுவன் ஸ்திரீ புருஷர்களுடைய கண்களுக்கு மேலிமை கீழிமை இரண்டும் அழகென்று நினைத்து, அவை பார்வையை மறைக்கும் என்பதை நினையாமல் படைத்தது போல, வண்ண மாதர்கள் குற்றமற்று ஒளி வீசுகின்ற மாணிக்கம் மரகதம் முதலிய முழுமணிகள் இழைத்துச் சமைத்த நாநாவித நிவ்

வியாபரணங்களைக் கொண்டு அவை சீதையின் திருவுரு வத்தை மறைக்குமென்பதை யோசியாமல், சுவையுடைப் பொருள்கள் எல்லாவற்றினும் மிக்க சுவையுடைய தேவாமிர் தத்திற்கு இயல்பாயுள்ள அச்சுவை போதாதென்று பால், பழம், சீனி, தேன் என்னும் இவைகளினுல் சுவை கற்பித்தது போல, ஜானகியின் இயற்கை அழகுக்கு ஏற்றத்தை உண் டாக்க வேண்டுமென்று செயற்கை அழகு செய்தார்கள் ; இங்ஙனம் கடல் சூழ்ந்த உலகமானது அறியாமையை உடையதாய் இருக்கின்றது,' என்று பிரசங்கித்த பொழுது, காஷ்மீர தேசாதிபதி கம்பரை நோக்கி, ' உலகம் அறியாமை உடையது என்பதற்குச் சாதாரண வழக்கத்தில் திருஷ்டாந்தம் சொல்ல வேண்டும்,' என, கம்பர், ' அநேகம் இருக்கின்றன ; அவற்றுள் ஒன்று கேளுங்கள் ; ஆடி மாதத்தில் மாமி வீட்டில் வாழ்கின்ற பெண்ணைத் தாய் வீட்டுக்கு அழைத்து வந்து விடுகிறதும், தாய் வீட்டில் இருக்கிற பெண்ணை மாமி வீட்டுக்கு அனுப்பாமல் இருக்கிறதும் : இது நெடு நாளைய வழக்கமாய் இருக்கின்றது. இதன் காரணம் என்னவெனில் ஆடி மாதத்தில் கர்ப்பம் தரிக்குமென்றும், பத்தாம் மாதம் பிள்ளை பிறக்குமென்றும், அப்பத்தாம் மாதம் சித்திரை மாதம் என்றும், ' சித்திரை மாதத்தில் செல்வன் பிறந்தால், ஆன குடிக்கு அனர்த்த மாம் ' என்றும் நினைக்கின்ற பிராந்தியே ! இவர்கள் ஸ்ரீ ராமர் அவதரித்தது சித்திரை மாதமென்று அறியார் போலும் ! அந்த ஆடி மாதத்திலேயே கர்ப்பம் தரிக்குமென்ற நிச்சயந்தான் என்ன ? ருஷி பிண்டம் ராத்தங்காது என்பதோ ? அப்படியன்றி, ஆவணி புரட்டாசிகளில் கர்ப்பம் தரிக்கிறதில்லையா ? நல்லது, கர்ப்பந் தரித்த பத்தாமாதத்திற்றானே பிள்ளை பிறக்கிறது ? பத்துக்குமேல் பதினேராம் மாதம் பன்னிரண்டாம் மாதம் பிறக்கிறதில்லையா ? அல்லாமலும், ஒன்பதாம் மாதம் எட்டாம் மாதங்களிலும் பிறக் கின்றதே! கோசலைப் பிராட்டியானவள் கர்ப்பம் தரித்த பன்னிரண் டாம் மாதத்தில் அல்லவோ பிரசவித்தாள்? இத்தனை கொள்ளையும் பிரவிடையான பெண்ணுக்குத்தானே ? பிரவிடையாகாத பெண் ணுக்கு வந்த விதியென்ன ? அவளையும் தாய் வீட்டுக்கு அழைத்து வந்துவிடுகிறார்களே ! இதுவும் விவேகமா ? பூ மலர்ந்த பின்பு அல்லவோ மணம் வீசும் ? மலராத பூவுக்கு மணமேது ? இதென்ன பேதைமை ?' என்று சொல்லக் கேட்டு, ' இவருக்கு உலக வழக்கங் களும் விசேஷமாய்த் தெரிந்திருக்கின்றன,' என்று அதிசயித்து, அவ்வரசன் தன் தேசத்தில் நெசவு செய்யப்பட்டு, ஒவ்வொன்று ஆயிரம் இரண்டாயிரம் வீலையேறப் பெற்ற சால்வைகளில் மிகவும் உயர்ந்த பத்துச் சால்வைகள் வெகுமானம் பண்ணி, அவற்றுள் ஒன்றை எடுத்து விரித்துத் தன் கையால் கம்பருக்குப் போர்த்து விட்டான். பின்னும் அப்படலத்தில்,

" கோனணி சங்கம் வந்து குடியிருந் தனைய கண்ட த்(து)
ஈனமில் கலன்க டம்மி லியைவன வணிதல் செய்தார்

மானணி நோக்கி னர்த மங்கலக் கழுத்திற் கெல்லாம்
தானணி யாய போது தனக்கணி யாது மாதோ ?''

என்ற பாடலைக் குறித்து, 'சீதைக்கு மணக்கோலம் செய்வோர், மான் போன்ற அழகிய பார்வையுடைய பெண்களின் மங்கலமாகிய கழுத்துக்கெல்லாம் சீதை பிரதான பூஷணமாயிருக்கும் பொழுது, அவளுக்குப் பூஷணம் ஏதுக்கென்று நிணையாமல், பூஷணத்திற்குப் பூஷணமிடுவது போல, ஸ்ரீமந் நாராயணன் கரத்தில் ஏந்துவதும் ஆயிரம் சலஞ்சலச் சங்கம் புடை சூழ அவைகளின் நடுவே அரசு வீற்றிருப்பதுமாகிய மாட்சிமை தங்கிய பாஞ்ச சன்னியம் வந்து குடி புகுந்தது போன்ற அவளது திருக்கழுத்தில், ஆடகம், கிளிச் சிறை, சாதரூபம், சாம்பூநதம் என்னும் நால்வகைப் பொன்னில் களங்கரகிதமாய் மாற்றுயர்ந்த ஓர்வகைப் பொன்னுல் செய்து மாசற்ற மணி பதித்த பூஷணங்களுக்குள் கழுத்துக்கிசைந்து சிறந்தவைகளாகிய பல பூஷணங்களையும் அணிந்தார்கள்,' என்று பிரசங்கிக்கக் கேட்டு, கூர்ச்சர தேசத்து ரத்தின வர்த்தகன் ஒருவன், 'பெண்கள் கழுத்திற்குச் சீதை ஆபரணமாயிருக்கிறுள் என்பது என்ன ?' என, கம்பர், 'மாதர்கள் கழுத்திற்கு மங்கலக் குறியாய் இருப்பது தாலி ; அது திருவாகிய லக்ஷ்மி விலாசம் பெற்றமையால் அதற்குப் பெயர் 'திரு' என்றும், இச்சீதையே இத்திருவாதலால் இவளே அப்பெண்கள் கழுத்திற்கு ஆபரணமாய் இருப்பவளென்றும் இங்ஙனம் கூறியது,' என்றார். அதற்காக அவ்வர்த்தகன் சந்தோஷ முற்று, கம்பருக்குப் பச்சை கெம்பு வச்சிரம் நீலம் முதலான நவரத்தினம் இழைத்த பற்பல ஆபரணங்கள் வெகுமதி செய்தான்.

ஆரணிய காண்டத்தில் சரபங்க படலத்தில், சரபங்கர் ஆசிரமத்துக்குச் சென்று அவரிடத்தில் தான் குறித்துப் போன செய்தியைப் பற்றிப் பேசிப் பயன்படாமையால் திரும்பி வரும் இந்திரன் தனக்கெதிரே ஸ்ரீராகவர் வரக் கண்ட மாத்திரத்தில் ஆனந்த பரவசமாய் அவரை ஸ்துதி செய்கையில்,

''நாழி நவைதீ ருலகெலா மாக
நளினத்து நீதந்த நான்முகனுர் தாமே
ஊழி பலபலவு நின்றளந்தா லொன்று
முலவாப் பெருங்குணத்த வுத்தமனே மேனுள்
தாழி தரையாகத் தண்டயிர்நீ ராகத்
தடவரையே மத்தாகத் தாமரைக்கை நோவ
ஆழி கடைந்தமுத மெங்களுக்கே யீந்தா
யவுணர்கடா முனக்கடிமை யல்லாமை யுண்டோ.''

என்ற பாடலைக் குறித்து, 'குற்றமற்ற அண்டங்களெல்லாம் அளவு கருவிகளாக, திருநாபிக்கமலத்தின் வழியாக நீ ஈன்றருளிய சதுமுகப்பிரமன் அளவுகாரனுக, அவன் தன் வாழ்நாளாகிய ஒரு கற்பகாலமேயன்றி அநேக கற்பகாலம் உன் கடாக்ஷத்தால்

முடிவின்றியிருந்து உனது கல்யாண குணங்களைத் தானியராசி களாகக் கொண்டு அளந்தால் அவற்றுள் ஒரு ராசியாயினும் மாளாது ; அப்படி மாளாதிருக்கின்ற அனந்தமாகிய பெருங் குணத்தையுடைய புருஷோத்தமனே ! பூர்வம் பூமியே தயிர்த் தாழியாக, தண்ணீரே தயிராக, பெரிய மந்தரகிரியே மத்தாக, தாமரை மலர் போன்ற உன் திருக்கைகள் நோவக் கடலைக் கடைந்து அமுதத்தை எடுத்து, 'பள்ளமிறைத்தவனுக்குப் பங்கு' என்ற பழமொழிப்படி, எங்களுடனே கூடப் பாடு பட்ட அசுரர் களுக்குப் பகிர்ந்து கொடுக்க நியாயமுண்டாயிருந்தும், அவர் களுக்குக் கொடாமல் எங்களுக்கு மாத்திரம் கொடுத்தருளினாய் ; அப்படிச் செய்தது உனக்கு நாங்கள் அடிமையாய் இருப்பது பற்றியோ ? வேதாகமங்கள் ஆத்மாக்களெல்லாம் அனுதியே ஈசுவரனுக்கு அடிமை என்று பிரதிபாதிக்கின்றதை நோக்கு மிடத்தில், அவ்வசுரர்கள்தாம் உனக்கடிமையாகாது ஒழிந்திருப்ப துண்டோ ?' என்பதாகப் பிரசங்கிக்கக் கேட்டு, சடையப்ப முதலியார், 'பரமாத்மனுடைய சுகுணங்களைத் தானியராசி யாகவும், பல்லாயிரங்கோடி அண்டங்களையும் படி மரக்கால் களாகவும், பிரமனை அளவுகாரனுகவும் உருவகப்படுத்தினது மிகவும் அழகாயிருக்கின்றது !' என்று பரமசந்துஷ்டி அடைந்து கம்பருக்கு அன்று முதல் அவருடைய ஆயுள்வரையில் பிரதி வருஷமும் ஊசி போன்ற நல்ல சன்னச் சம்பா நெல் பப்பத்துக் காரிசைக்குக் குறையாமல் கொடுத்து வந்தார்.

கிட்கிந்தா காண்டத்தில் வாலி வதைப் படலத்தில் இராம பாணம் வந்து மார்பில் தைத்த சமயத்தில்,

> " அரக்கரோ ரழிவு செய்து கழிவரே லதற்கு மாரேர்
> குரக்கர சதனைக் கொல்ல மனுநெறி கூறிற் றுண்டோ ?
> இரக்கமெங் குகுத்தாய் ? என்பா லெப்பிழை கண்டா யப்பா !
> பரக்கழி வினுஞ் பூண்டால் புகழையார் பரிக்கற் பாலார் ?"

என்ற பாடலைக் குறித்து, வாலி ராகவனைப் பார்த்து, 'அப்பா ரகுநாயகா ! இராக்கதர்கள் வந்து உன் மனைவியை அபகரித்துக் கொண்டு உனக்குக் குற்றம் செய்து போனால், உன் விஷயத்தில் அப்படி அபாரதிகள் ஆனவர்களைச் சிட்சியாமல், அடுப்பெரியாத கோபத்தை அம்மையார்மேல் காட்டுவது போல, காட்டிலே நிரபராதியாய் இருக்கின்ற குரங்குகளுக்கு இராஜாவாகிய என்னைக் கொல்லும்படி நீ வாசித்தறிந்த மநுநீதி ஏதாவது சொல்லியிருக் கின்றதுண்டோ ? உங்கள் வமிசத்திற்கு இயற்கையாய் இருக்கின்ற ஜீவகாருண்யத்தை எங்கே சிதறிவிட்டாய் ? என்னிடத்தில் என்ன தோஷங்கண்டாய் ? கௌரவத் தாழ்வாகிய பழிக்கு நீ உடன் பட்டையேயானால், இனிப் புகழென்பதைப் பரிக்கத்தக்கவர்கள் ஆர் இருக்கிறார்கள் ?' என்று சொல்லக் கேட்டு, ஸ்ரீராமன் அவனை முன்னிட்டு, ' அடா வாலி ! அரக்கர் செய்த குற்றத்தைக் குறித்து

நானுன்னைக் கொன்றதாக நீ தவருகச் சொல்லுகிறாய் ; உன்னைக் கொன்றது அதைப் பற்றி அன்று ; மேலும் நான் இரக்கத்தைக் கைவிட்டதாய்ப் பேசினாய் ? நல்லது ! துர்ச்சனர்களுக்கு இரக்கம் காட்டலாமா? 'என்னிடத்திலே நீ என்ன பிழை கண்டாய்?' என்று கேட்டாய் ; சுக்கிரீவன் மனைவியை அபகரித்ததை மறந்து போயினையோ ? பழியை நான் தேடிக்கொண்டதாய்ச் சொல்ல வந்தாய் ; துஷ்டநிக்கிரகஞ் செய்வது பயிர்க்குக் களையெடுக்கிறது போலல்லாமல் ஒரு பொழுதும் பழிபாவமாகாதென்று அறியாயா?' எனச் சொன்னதாகப் பிரசங்கித்தார்.

சபையிலிருந்தவர்கள் கம்பரை நோக்கி, 'சுவாமி! பின் புறத்தில் பதுங்கியிருந்து வாலியின்மேல் பாணப் பிரயோகம் செய்தது, வீரதர்மமா ?' என, கம்பர், 'இந்தக் கேள்வி வாலியே கேட்டிருக்கிறான்,' என, அவர்கள், 'அவையெவை ?' என, வாலி சுவாமியை எதிரிட்டு, 'இராமா, நான் சுக்கிரீவன் மனைவியை அபகரித்தாகச் சொன்னையே, தம்பி பெண்சாதியை அண்ணன் சுதந்தரிப்பதற்குப் பாத்தியமில்லாமல் போயிற்று ? அதற்காக நீ என்னைக் கொல்ல ஏற்பட்டது அநியாந்தானே ?' என, சுவாமி, 'இதென்ன முறைக்கேடான பாத்தியம் ? நீ என்ன சொன்னாலும் அக்கிரமம் செய்தவர்களை அரசர்கள் தண்டியாமல் விடமாட்டார்கள்,' என, வாலி, 'மிருகங்களுக்கு முறை என்பதும், முறை கேடென்பதும் உண்டோ? இல்லையே! ஆதலால், இது அக்கிரமம் அன்று,' என, சுவாமி, 'மிருகம் இப்படிக்கெல்லாம் நியாயம் கேட்குமா ? கேளாதாகையால், நீ சொல்வது சரியன்று,' என, வாலி, 'அதிருக்கட்டும். நாங்கள் இருவரும் தொந்த யுத்தம் செய்கையில் நீ என்னைக் கொல்வது தர்மமா ?' என, சுவாமி, 'தன் கன்றைப் புலி அடிக்க வரும் பொழுது பசு அப்புலியைப் பாயாமல் அதனிடத்தில் கன்றைக் காட்டிக் கொடுத்திருக்குமோ ?' என, வாலி, 'தமையன் தம்பிகளாயிருக்கும் எங்கள் இருவருக்குள், நீ ஒருவன் பக்ஷத்தில் நட்பும், மற்றவன் பக்ஷத்தில் பகையும் பாராட்டலாமோ ?' என, சுவாமி, 'சுக்கிரீவன் வந்து என்னை அபய மென்று அடுத்தபடியினாலே, உதவி செய்து அவனை ரக்ஷித்தேன் ; நீ அவனுக்குத் தீங்கு செய்ததனால் உன்னைச் சிக்ஷித்தேன்,' என, வாலி, 'செங்கோல் முடி முதலான ராஜ சின்னங்களையும் அதிகாரத்தையும் பரதனுக்குக் கொடுத்துவிட்ட நீ என்னைத் தண்டித்தது எவ்விதத்தால் ?' என, சுவாமி, 'என் அதிகாரம் முதலானவை களையும் பரதனுக்கு நான் கொடுத்துவிட்டாலும், அவன் சித்திர கூட பர்வதத்திற்கு வந்து என்னைக் கண்ட பொழுது, 'வனத்தில் ராக்ஷதர் முதலிய துஷ்டாத்துமாக்களைக் கண்டால் சிக்ஷியாமல் விட வேண்டா,' என்று எனக்கு ஆக்கியாபித்திருக்கிறான்,' என, வாலி, 'அப்படியானால், எனக்கெதிரே வந்து போர் செய்யலாமே ! பின்னிருந்து அம்பு எய்தது என்ன ?' என, சுவாமி, 'திருடனைப் பதுங்கிப் பிடித்தாலல்லவோ அவன் அகப்படுவான் ?'

ன்ன, மற்றும் இவ்வாறு அநேகம் கேள்விகள் வாலி கேட்க, அவை களுக்கெல்லாம் சுவாமி தக்கபடி உத்தரம் சொல்லியிருக்கிறார்,' என்று சொல்ல, யாவரும் சந்தோஷித்தார்கள்.

"ஆழ நீர்க்கங்கை யம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பியுன் றம்பிநீ
தோழ னங்கை கொழுந்தி யெனச்சொன்ன
ஆழி நண்பினீ உன்னி யழுங்குவாள்."

என்கிற சுந்தர காண்டம் காட்சிப் படலப் பாடலைக் குறித்து, 'ஆஞ்சநேயர் அசோகவனத்தில் எழுந்தருளி இருக்கும் பிராட்டியை, ஒரு மரத்தின்மேலேறி, 'இவர் எப்படிப்பட்ட ஸ்திதியிலிருக்கிறாரோ, அறிவோம்,' என்று பார்த்துக்கொண்டிருக் கையில், அவள் வேறோர் எண்ணமுமின்றிச் சர்வதா சுவாமியின் இடத்தில் சிந்தை வைத்தவளாய், அவரைச் சொப்பனத்திலும் மறவாமல், உலகத்தில் யாவராயினும் ஒருவரையொருவர் நேசிக்குங் கால் குலம், கல்வி, செல்வம், ஈகை, வீரம், புகழ், ஞானம், ஒழுக்கம் முதலியவைகளில் மிக்குயர்ந்தவர்களேயே நேசிக்க வேண்டு மென்பது முக்கிய தர்மமாயிருக்க, உத்கிருஷ்டமாகிய க்ஷத்திரிய குலமும், சரஸ்வதியும் நாணத்தக்க பூரணமான கல்வியும், குபேர சம்பத்திலும் அதிகமாய் அளவிடப்படாத சம்பத்தும், கற்பகம் போன்ற மாறுத ஈகையும், எவர்களாலும் வெல்லப்படாத வீரமும், அண்டமுற்றும் அளாவிய புகழும், திவ்விய ஞானமும், இடையறுத நல்லொழுக்கமும் உடையவராகிய சக்கரவர்த்தி திருமகனுர், ஆழமாகிய நீரையுடைய கங்காநதியில் படவு ஓட்டுகின்றவனும், மேற்சொல்லிய கல்வி முதலானவைகளில் ஏழையும் ஆகிய குகனென்னும் வேடனைக் கங்கைக் கரையில் கண்டு, தமது மேன்மையையும் அவனது கீழ்மையையும் பொருள் செய்யாமல் நேசித்த காலத்தில், அவனுக்கும் தமக்கும் வேறுபாடில்லாமல் 'என் தம்பி உன் தம்பி' என்றும், 'நீ என் தோழன்' என்றும், 'என் பெண்சாதி உன் மைத்துனி' என்றும் சொல்லி அன்பு பாராட்டிய அந்தக் கடல் போலும் பெரிய நட்பை நினைத்து வருந்தத் தலைப் பட்டாள்,' என்று பிரசங்கித்தார்.

அது கேட்டு, அங்கிருந்தவர்களில் சிலர், 'சுவாமியானவர் சகல விபவத்தையும் கைவிட்டு வனத்தில் பிரவேசித்த சமயத்தில் மிகவும் தாழ்ந்த ஸ்திதியில் இருந்தபடியினுலே, 'காலத்திற்கேற்ற கோலம்' என்பதாக, அங்கே வந்த கிராதனைத் தாரதம்மியம் பாராமல் சமானஸ்கந்தமாக நேசித்தார்; அப்படியின்றி மண்டலாதிபத்தியம் பெற்று அகண்ட சாம் பிராச்சியத்தை அனுபவிக்கும் காலத்தில் அவன் வருவானுனல் இவ்வண்ணமே நடப்பாரா?' என்ன, கம்பர் அவர்களை நோக்கி, 'அந்த அதிசயத்தைச் சற்றுக் கேளுங்கள்: ஸ்ரீராகவர் பிதுர் வாக்கிய பரிபாலனம் பண்ணும்பொருட்டுப் பதினன்கு

ஆண்டுங் கழித்துத் திருவயோத்திக்கு மீண்டும் போய் மகுடாபிஷேகம் பெற்று, மகுடவர்த்தனர் பட்டவர்த்தனர் முதலாகிய பல அரசர்களும், பிரமசாரியர் கிருகஸ்தர் வானப்பிரஸ்தர் சந்நியாசிகளாகிய பற்பல முனிவர்களும், சுக்கிரீவன் அங்கதன் அனுமான் முதலானவர்களும், வானர சேனைகளும், மற்றுமுள்ள சகல மகா ஜனங்களும் புடைசூழ, பிரமபுத்திரராகிய வசிஷ்டர் என்னும் குலகுருவும் சுமந்திரன் முதலாகிய அனேக மந்திரிமார்களும் சேர்ந்திருக்க, உன்னதாசனத்தில் சீதா சமேதராயெழுந்தருளியிருக்கும் பிரபலமான அந்த மகா வைபவத்தைப் பார்த்துப் பிராட்டியானவள் பிரமித்து, 'இப்படிப்பட்ட தருணத்தில் கங்கைக் கரையில் கண்டு சிநேகித்த வனசரனாகிய குகன் வந்தால் சுவாமியானவர் பழையபடியே அவனிடத்தில் அந்நியோந்நியமாக நட்புப் பாராட்டுவாரோ, அல்லது, சத்தியம் தப்பிப் போவாரோ? இவர் நிலைமை எங்ஙனமாமோ?' என்று திருவுளத்தில் ஐயமுற்றிருக்கையில், தெய்வயத்தனமாய், 'குபேரன் பட்டணத்திலும் விறகுக் கட்டுக்காரன் உண்டு' என்ற பழமொழிப்படி, அயோத்தியில் நித்திய தரித்திரனாய்ப் பிச்சையெடுத்துச் சீவிப்பவனொருவன் ரகுநாயகரைக் குழந்தைப் பருவத்தில் வீதியில் காணுந்தோறும் ஆசையுடனே எடுத்து அணைத்து முத்தமிட்டுக் கொஞ்சுவான். அவ்வறியவன் இராமர் காட்டுக்குப் போன நாள்முதல் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் இருந்து, அவர் வந்த செய்தி அறிந்த மாத்திரத்தில் அதிசீக்கிரமாக ஓடி வந்து, சபா ரத்தினமாய்ச் சிங்காதனத்தின்மேல் இருக்கும் ராமச்சந்திரரைக் கண்டு, வாயில் காவலாளிகள், 'ஆரங்கே போகிறவன்?' என்று கேட்கும் கேள்விக்கும் உத்தரம் சொல்லாமல் உட்சென்று, அச்சபை நடுவே புகுந்து, தன் அசுத்தமாகிய காலினுல் அணைவரையும் மிதித்துத் துவைத்துக்கொண்டு, சுவாமிக்கு அருகில் கிட்டிச் சேர்ந்து, 'அடா ராமா, நீ எப்பொழுது வந்தாயடா?' என்று கட்டிக்கொண்டு அழுதான். சுவாமியும் அவனைக் கட்டிக் கொண்டு அழுது துக்கித்தார்.

'இவ்வாறு அவனழத் தாமழக் கண்ட அரசர் முதலானவர்களும், 'இஃதென்ன காரணம்? ஆரோ பைத்தியம் பிடித்த பிச்சைக்காரன் திடுதிடென்று ஓடி வந்து கட்டிக்கொண்டழுதால் சுவாமியும் அவனைக் கட்டிக்கொண்டழுகிறாரே! அவனைத் தொடர்ந்த பைத்தியம் இவரையும் தொடர்ந்ததோ!' என்று பிரமிக்கும் சமயத்தில், அவன், 'அப்பா, ஏன் சும்மா அழுகிறாய்? இனி அழ வேண்டா; முகம் வீங்கிப் போகிறது!' என்று சொல்லித் தன் அழுக்குப் பற்றிய பீற்றத் துணியினுல் சுவாமி கண்ணைத் துடைக்க, பிறகு அவர் துக்கம் மாறி, எல்லாரையும் பார்த்து, 'பதினான்கு வருஷத்திற்கு முன்பு இறந்த எங்கள் பிதாவாகிய தசரத மஹாராஜாவை இன்று கண்டேன்!' என்றார். அது கேட்டு யாவரும், 'இஃதென்ன ஆச்சரியம்! பிச்சைக்காரனைத் தமது பிதாவென்கிறாரே! இவருக்குப் பைத்தியம் பிடித்தது மெய்,' என்றே நிச்சயித்தார்கள். சுவாமி,

அவர்களை நோக்கி, 'கேளுங்கள்: என்னை முனிவர்கள் பிரம ஸ்வரூபம் என்றும், தேவர்கள் நாதன் என்றும், பந்து வர்க்கத்தார் ரகுநாதன் என்றும், உலகாள்வோர் தாசரதி என்றும், எங்கள் மாமியார் வீட்டார் என் பெயரைச் சொல்லக் கூடாதாகையால் சீதாபதி என்றும், சிநேகர்கள் ராமபத்திரன் என்றும், மற்றும் சிலர் ராமசந்திரன் என்றும் சொல்வார்கள்; எங்கள் பிதா மாத்திரம் 'அடா ராமா' என்று அழைப்பதுண்டு; அந்தப்படியே இந்த மகா ராஜனும் அழைத்தபடியினாலே எங்கள் பிதாவை இன்று நான் கண்டேன் என்பதாகச் சொன்னேன்,' என்றார். அப்பொழுது யாவரும், 'இவருக்குள்ள சௌலப்பிய குணம் மற்றாருக்குண்டு?' என்று பலகாலும் சொல்லி ஆனந்தித்தார்கள். 'பிராட்டியார் திருவுள்ளத்தில் உதித்த சந்தேகமும் நிவர்த்தியாயிற்று,' என்று சொல்லிப் பின்னும் கம்பர், 'சுவாமி, தமது திருநாமங்களைக் குறித்து அருளிச் செய்தபடியே முன்னோர்களால்,

"ராமாய ராம பத்ராய ராமசந்த்ராய வேதஸே
ரகுநாதாய நாதாய சீதாய பதமேநம."

எனச் சுலோக பூர்வகமாய் அவர் ஸ்தோத்திரம் பண்ணப்பட்டு மிருக்கிறார்,' என்றார். அதற்காகச் சேர சோழ பாண்டியர் முதலானவர்களும் அதிக சந்தோஷப்பட்டார்கள்.

யுத்த காண்டத்தில் கடல் காண் படலத்தில்,

"நென்னற் கண்ட திருமேனி இன்று பிறிதாய் நிலைதளர்வான்
தன்னைக் கண்டும் இரங்காதே தானே கதறும் தடங்கடல்வாய்
பின்னற் றிரைமேல் தவழ்கின்ற பிள்ளைத் தென்றல் கள்ளுயிர்க்கும்
புன்னைக் குறும்பூ நறுஞ்சுண்ணம் பூசா(து) ஒருகாற் போகாதே.'

என்ற பாடலைக் குறித்து, 'ஸ்ரீ ராமர் வானர சைனியங்களுடனே ராவணன்மேல் படையெடுத்துப் போய்த் தென்சமுத்திரத்தின் வடகரையில் இறங்கி இருக்கும்பொழுது, பிராட்டியின் பிரிவாற் றுமையால் தமக்கு இரா முழுவதும் நித்திரை வாராதது கண்டு, திருப்பள்ளி ஸ்தானத்தை விட்டு எழுந்து, கடற்கரையோரத்தில் உலாவிக்கொண்டிருக்கையில், சீதையைப் பிரிந்தது முதல் ஒவ்வொரு நாளும் நேற்றுக் கண்ட தம் திருமேனி இன்று வேறு பட்டுக் காணுதலால் உருத் தெரியாமல், அறிந்து பழகினவர்களும் மயங்கும்படி உயிர்நிலை தளர்கின்ற அவரைக் கண்டும் இரங்காமல், தானே கூச்சலிட்டுக்கொண்டிருக்கிற விசாலமாகிய கடலினிடத்தில் பின்னி விழுகின்ற நீர்த் திரைகளின்மேல் தவழ்கின்ற இளந்தென்றலானது, தேனைச் சொரிகின்ற மணம் பொருந்திய புன்னைப் புஷ்பத்தின் மகரந்தப் பொடிகளை வாரிக்கொண்டு வந்து அவ்விராகவர் மேல் பலகாலும் பூசத்தலைப்பட்டது,' என்று கம்பர் பிரசங்கித்தார்.

ஒட்டக்கூத்தர், 'ஒலிக்கிறது கடலுக்கு என்றும் சுபாவ மாகையால், நீர், அது கதறுகின்றதென்றது மெய்தான்; ஆயினும், இராமரைக் கண்டும் இரங்காமல் தானே கதறுகின்றது என்றீரே! கடலுக்கும் இராமருக்கும் என்ன சம்பந்தம்?' என, கம்பர், 'சீதையானவள் அச்சமுத்திரத்தில் பிறந்தமையால் அதற்கு அவள் மகளும், அவளுக்கு அது தாயும், அவளது கணவராகிய ராமருக்கு மாமியாரும், அவர் அதற்கு மருமகனுமாதலால், அம் முறை பற்றி மருமகன் மாமியார் லீட்டுக்கு அழைக்கப்படாமல் வருவது தருமமன்றுயினும், அதை இராமர் நினையாமல் வலிய வந்ததைக் குறித்து இந்த மாமியார் எவ்வளவோ சந்தோஷத் தோடு ஆசார உபசாரம் செய்ய வேண்டுமே! அதுவும் செய்யாமல், இவர் தம் மனைவியை இழந்து, ஏக்கம் பிடித்து, உடல் மெலிந்து, சோகம் கூர்ந்து வந்ததைப் பற்றியாவது, 'என் செல்வ மருமகனே! வந்தையா! வா,' என்று அழைத்து, 'உடலும் உயிரும் போல உன்னுடன் மருவிப் பிரியாமலிருந்த உன்னைசைக் கண்ணுட்டி எங்கே போனாள்? உனக்குப் பெண்டு பாக்கியமில்லாமல் போய் விட்டதா?' என்று வினவித் துக்கத்தோடு ஓடி வந்து மேல் விழுந்து அலறி அழ வேண்டுமே! அப்படியும் செய்யாமல், தன்னருமைத் திருமகளை ராக்ஷதன் வஞ்சித்துக்கொண்டு போனதனால் அவளைப் பெற்ற வயிறு பற்றியெரிய, அக்கடலானது நீராயுருகிக் கரைந்து பிரக்ஞை இல்லாமல் தன்னுடன்கூட அழுவாரா ஒருவருமின்றி ஒற்றைக் குரலாய்த் தானே அழுதுகொண்டிருப்பதுபற்றி, 'நிலை தளர்வான், தன்னைக் கண்டு மிரங்காதே தானே கதறுந் தடங்கடல்' என்றேரும்,' என்று சொல்லி, பின்னும் 'அந்தச் சமுத்திரம் அவ்வாறு கத்திக்கொண்டிருக்கையில், அலைகளாகிய கைகளின் மேல் தவழ்ந்து விளையாடும் இளந்தென்றலாகிய அதன் பிள்ளையானது, 'இஃதென்ன அவமரியாதை! தற்காலத்தில் நமது தாய் தன் சொந்த மருமகன் வந்தவிடத்தில் விசாரியாமல் இருக்கிறாள்! நமது அக்கா ளுக்கும் அத்தானுக்கும் விவாகமான தருணத்தில் நாம் அருகி லிருந்து அவ்விவாகச் சிறப்பைக் கண்டு அக்காலத்தில் நடத்த வேண்டிய மரியாதையை நடத்தப் பாக்கியம் பண்ணுமல் போனோம்; அப்பொழுது நடத்தாமல் போனால் போகட்டும்; இப் பொழுதாவது அதை நடத்தி அத்தானைச் சுந்தோஷப்படுத்த வேண்டுமே! இத்தருணத்திலும் அப்படிச் செய்யாதிருந்தால் இதை ஆராவது கேட்பவர், 'அக்காளோடே போயிற்று மைத்சான் உறவு,' என்றல்லவோ சொல்லுவார்கள்? ஆதலால், சும்மா இருக்க லாகாது,' என்று, 'இளம்பிள்ளை பயமறியாது' என்பதற்கேற்பச் சமயாசமயம் தெரியாமல், புன்னைப் புஷ்பராகப் பொடியாகிய கந்தப் பொடியை அடிக்கடி வாரிக்கொண்டு வந்து தலைகால் தெரி யாமல் அத்தான்மேல் வீசிப் பூசிக் கந்தபொடி வசந்தமாடி மைத் துனம் கொண்டாடத் தலைப்பட்டது,' என்றும் விரித்துரைத்தார். கேட்டவர்களெல்லாம், 'இது நல்ல வேடிக்கை!' என்று ஆச்சரியப் பட்டார்கள்.

யுத்த காண்டத்தில் இரணியவதைப் படலத்தில், பிரகலாதன் குறித்த தூணில் அகண்ட பரிபூரணனுகிய பக்தவத்சலன் ஆவிர்ப் பவித்து இரணியனே வதைத்த பொழுது, இந்திராதி பிரமாதி தேவர்களும் முனிவர்களும் வந்து ஸ்துதி செய்யும் சமயத்தில்,

"தன்னைப் படைப்பதுவும் தானே யெனுந்தகைமை
பின்னைப் படைத்ததுவே காட்டும் பெரும்பெருமை
உன்னைப் படைத்தாய்நீ யென்றுல் உயிர்படைப்பான்
என்னைப் படைத்தா யெனுமிதுவு மேதாமே."

என்ற பாடலைக் குறித்து, 'கலைமகள் கணவனுகிய பிரமன் சுவாமியை நோக்கித் தன் மனமானது வெயிலிடு வெண்ணெய் போலுருகி நெகிழ, 'சர்வலோக சரணியனுகிய எம்பெருமானே, புகைக்குக் காரணம் அனலென்பது போல, பிரபஞ்சத் தோற்றத் திற்குக் காரணம் ஈசுவரன் என்பதேயல்லாமல், அவ்வீசுவரனுக்குக் காரணம் சொல்லக் கூடாமையால் அவனைத் தோற்றுவித்தவர் வேறில்லை என்றும், அனுதியில் பரமாத்மன் தன்னைத்தானே படைத் துக்கொண்டான் என்றும் வேதம் சொல்வதை இப்போது நீ இந்த ஸ்தம்பத்தினிடத்தில் அழகிய சிங்கனுகி உன்னைப் படைத்துக் கொண்டதே பிரத்தியக்ஷமாகக் காட்டாநின்றது; இவ்வாறு மகத் தாகிய பெருமை தங்கிய உன்னையே நீ படைக்கத்தக்க அற்புதமாகிய பரமசக்தியை உடையவனுய் இருக்கின்றுயென்றுல், இந்தச் சரா சரங்களாகிய உயிர்களைப் படைக்கின்ற சக்திதான் உனக்கில்லாமல் போயிற்றே? இவைகளைப் படைப்பதற்காக என்னை நீ படைத்தாய் என்று சொல்லப்படும் இஃது எத்தன்மைத்தாம்?' என்று ஸ்தோத் திரம் செய்தான்,' என்பதாகக் கம்பர் பிரசங்கிக்கக் கேட்டவர்கள், 'இக்கருத்துக் கடவுளில்லை என்று வாதிக்கும் நாஸ்திகர் நாவை அடக்குவதற்குத் தக்க கருவியாய் இருக்கிறது,' என்று மிகவும் வியந்து பேசினர்கள்.

மேற்சொல்லிய படலத்தில், 'அழகிய சிங்கனுகி வந்து அவதரித்த சர்வேசுவரன், பிராட்டி புருஷகாரத்தால் உக்கிரம் தணிந்து கிருபை கூர்ந்து பிரகலாதனை நோக்கி, 'அப்பா! குழந்தாய்! என்னைப் பற்றி ஜன்ம சத்துருக்களாகிய இரணியன் முதலானவர் களால் படாத பாடும் பட்ட உனக்கு நான் என்ன செய்யப் போகிறேன்! வேண்டிய வரத்தைக் கேள்' என்ற சமயத்தில்,

"முன்பு பெறப்பெற்ற பேரே முடிவில்லை!
பின்பு பெறும்பேறு முண்டோ? பெறுவெனேல்
என்பு பெருத இழிபிறவி எய்திடினும்
அன்பு பெறுகை அரும்பே றெனக்கென்றன்."

என்ற பாடலைக் குறித்துக் கம்பரானவர், 'பிரகலாதன் சுவாமிக்கு முன்பு அஞ்சலியஸ்தனுய் நின்று, 'ஓ பக்தரட்சகா! பரம தயாளா! அடியேனுக்கு வேண்டிய பேறெல்லாம் இப்பொழுது நீ அருளிச்

செய்வதாகக் கேட்கச் சொன்னமையால், என்ன பேறு பெற வேண்டு மென்று கேட்பேன்? அஞ்தியில் நான் மூலப் பிரகிருதியில் அழுந்தி ஜீவாத்ம பரமாத்ம ஸ்வரூபமும், அவ்விரண்டுக்கும் உள்ள சம்பந் மும், அச்சம்பந்தத்தைத் தடுக்கும் விரோதமும், அவ்விரோதத்தை நிவர்த்திக்கும் உபாயமும், அவ்வுபாயத்தைச் செய்தவிடத்து அடை யும் பரமார்த்தமும் இன்னவென்று விளங்காமல் நாசத்தை அடைந்திருக்கையில், நிரேதுக கிருபையினாலே கரசரணாதி அவயவங்களைத் தந்து, வேதாகமங்களைக் கொண்டு மேற் சொல்லிய ஸ்வரூபம் முதலானவைகளையும் தெரிய விளக்கி, உன் திருவடியில் சரணாகதி பண்ணுவதற்கேற்ற சேஷத்துவம் தலையெடுத்துப் பாரதந்திரணாகி, உன் கைங்கரியத்தை, இப்பிறப்பில் இடைவிடாது செய்து உச்சீவிக்கும்படி நீ அனுக்கிரகிக்க, அவ்வாறு அடியேன் முன்னமே பெற்ற பேறு களுக்கோ முடிவொன்றுமில்லை; அவையன்றி, இனிப் பெறும் பேறு களும் வேறே உண்டோ? அப்படியே பெற விரும்புவேனாகில், விசித் திரமாகிய பூர்வ கர்ம சேஷத்தால் இன்னும் காலசக்கரத்தில் அகப்பட்டு இவ்விருள் தரு மாஞாலத்தில் எண்ணிறந்த ஜன்மம் எடுத்து உழல வரினும் அஞ்சுவேனல்லேன்; எல்லாப் பிறப் பினும் மிகவும் தாழ்வாகிய சாக்கடைச் சேற்றில் கிடந்து நெளியும் புழுவாம் பிறப்பைப் பெற்றாலும் உன் திருவடிக்கண் மாறுத அன்பு செலுத்தப் பெற்றால் அப்பேறு சற்பத்தியை உண்டாக்கும்; சற்பத்தி சற்கர்மத்தை உண்டாக்கும். சற்கர்மம் சற்போதத்தை உண்டாக்கும்; சற்போதம் வீடடைவிக்கும். அது பற்றி இயமநிய மாதிகளாகிய அஷ்டாங்க யோகமும், அணிமா மகிமா முதலாகிய அஷ்டமா சித்தியும் மற்றுமுள்ள பல வகைப் பேறுகளும் வேண்டு வனவல்ல; அவ்வன்பொன்றும் பெறுவதே நாயேனுக்கு அரிய பெரிய பேறும்; அதையே அருளிச்செய்ய வேண்டும்' எனப் பிரார்த்தித்தான்,' எனப் பிரசங்கித்தார்.

> " வாணு ளளித்தி முடியாம னீபின் வருநா ளிறத்தி மறையாய்
> பேணு யுனக்கொர் பொருள்வேண்டு மென்று பெறுவா னருத்தி பிடியாய்
> ஊணு யுயிர்க்கு முயிராகி நிற்றி உணர்வாதி பெண்ணி னுருவாய்
> ஆணதி மற்றை அலியாதி யாரிவ் வதிரேக மாயை யறிவார்?"

என்ற நாகபாசப் படலப் பாடலைக் குறித்துக் கம்பரானவர், 'இந்திரஜித்து பிரயோகித்த நாகபாசத்தால் கட்டுண்ட இளைய பெருமாள் முதலானவர்களை நோக்கிப் பிரலாபிக் கின்ற ஸ்ரீ ராக வரைக் கருடன் கண்டு, 'வேதஸ்வரூபியாகிய ஜானகி மனோகரா, எவ்வகைப் பற்றுகளையும் கைவிட்டு உன் திருவடியே தஞ்ச மென்று பற்றிய சேதனர்கள் உன்னைப் போல நித்தியராகும்படி அவர்களுக்கு அப்பிராகிருதமாகிய திவ்விய சரீரத்தையே அன்றி உனது வாழ்நாளையும் அளிக்கின்றாய்; நீ அங்ஙனம் அளித்துப் பின்பு உன் திருவுருவுக்கு அழிவும் வாழ்நாட்கு அவதியுமின்றிக் காலவரையறை கடந்து நிற்கின்றாய்; உன் தேகபோஷணைக்காகத்

தானியம், தனம், வஸ்திரம், பூஷணம், காணி, பூமி முதலிய பல வகைப் பொருள்களுள்ளும் ஒன்றையாயினும் முன்னுக்காவது பின்னுக்காவது வேண்டுமே என்று தேடி வைத்துப் பாதுகாக்கின்றுயில்லே; அல்லது, யாதேனும் ஒன்றைப் பெறும்பொருட்டு அதனிடத்தில் இச்சையும் வைக்கின்றுயில்லே; இப்படிப் பசையற்றிருந்தும், பல்லாயிரங் கோடி அண்டங்களிலுமுள்ள அகில சராசரங்களுக்கும் நீயே தாரகபோஷகமாகி, அவ்வாத்மாக்களுக்குள் அந்தரியாமியுமாய் இருக்கின்றுய்; மெய்யினுல் பரிசத்தை உணர்தலும், நாவினுல் சுவையை உணர்தலும், கண்ணினுல் உருவத்தை உணர்தலும், மூக்கினுல் கந்தத்தை உணர்தலும், செவியினுல் ஒலியை உணர்தலுமாகிய ஐம்புல உணர்வும், அவற்றிற்கு ஆதியாகிய மன வுணர்வும், அதற்கு அதிஷ்டானமாகிய உயிருணர்வும், அவ்வுயிர் இத்தன்மைத்தாயதெனவும், இவை அஃனத்திற்கும் காரணமாய் அதீதப்பட்டிருக்கின்ற பிரமசாட்க்ஷாத்காரமானது அகண்டபரிபூரண சச்சிதானந்த ஸ்வரூபமாய் இருக்கின்றதெனவும், தத்துவ நியதி பண்ணிச் சுருதி குரு சுவானுபவங்களால் ஐயந்திரிபற உணரும் மெய்யுணர்வுமாகி விளங்குகின்றுய்; சர்வலோகங்களேயும் சகல உயிர்களேயும் திருவுதரத்துள் அடக்கி வெளியிடுகின்றமையால் பெண்ணுருவாகியும், புருஷோத்தமனெனப் பெயர் பூண்டமையால் ஆணுருவாகியும், அவை இரண்டுமல்லாத அலியுருவாகியும், அதிசயிக்கத்தக்க அதிரேக மாயைகொண்டு இங்ஙனம் நடிக்கின்றுய்; உலகத்திலே இந்த அகடிதகடனு சாமர்த்தியத்தை அறிந்து ஆனந்திக்குமவர்கள், 'கர்த்தா போக்தா ஜனுர்த்தனு' என்று சாஸ்திரம் சொல்லுகிறபடி, உன்னேயன்றி வேறில்லாமையால், சித்திரக்காரன் பலவகைச் சித்திரங்களேயும் தானே எழுதித் தானே பார்த்துத் தானே களிப்பது போல, நீயே இயற்றி, நீயே பார்த்து, நீயே சந்தோஷிக்க வேண்டியிருக்கின்றது' என்று ஸ்துதி செய்தான்,' எனப் பிரசங்கிக்கக் கேட்டுச் சேரமகாராஜன் முதலானவர்கள் பிரமானந்தம் அடைந்தார்கள்.

ஜானகி களங்காண் படலத்தில், சீதையைப் புஷ்ப விமானத்தின்மேல் ஏற்றி யுத்தகளத்திற்குக் கொண்டு வந்து அவளுக்குப் பிரமாஸ்திரத்தால் இறந்த இளேயபெருமாள் முதலானவர்களேயும், அவர்கள் இறந்தது கண்டு துக்கித்து மெய்ம்மறந்து மூர்ச்சை போயிருக்கின்ற பெரிய பெருமாளேயும் பார் என்று ராக்ஷதிகள் காண்பித்த பொழுது,

> "மங்கை யழலும் வானுட்டு மயில்க ளழுதார்; மழவிடையோன்
> பங்கி லுறையும் குயிலழுதாள்; பதும மலர்மேல் மாதழுதாள்;
> கங்கை யழுதாள்; நாமகளும் அழுதாள்; கமலத் தடங்கண்ணன்
> தங்கை யழுதாள்; இரங்காத வரக்கி மாரும் தளர்ந்தழுதார்."

என்பதைக் குறித்து, 'பிராட்டியானவள் பிரமாஸ்திரத்தால் மற்றவர்களேப் போலச் சுவாமியும் பிராணவியோகமானுர்

என்றெண்ணித் தன் கனி வாயைத் திறந்து அழுத மாத்திரத்தில், சுவர்க்கத்திலுள்ள இந்திராணி முதலான மயில் போன்ற மாதர்களும் அழுதார்கள்; இடபவாகனத்தையுடைய சிவபிரானது வாமபாகத்தில் வசிக்கும் குயிலையொத்த உமாதேவியும் அழுதாள்; தாமரைப் புஷ்பாசனத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ மகாலட்சுமியும் அழுதாள்; சத்தியலோகத்தில் உள்ள கங்கையும் அழுதாள்; பிரமன் நாவிலிருக்கும் வாணியும் அழுதாள்; கமல தளம் போலும் விசாலமாகிய விழிகளையுடைய நாராயணன் தங்கையாகிய துர்க்கையும் அழுதாள்; இரக்கமில்லாத இராக்ஷதிகளும் தளர்ச்சி கூர்ந்து அழுதார்கள்,' என்று கூறி, பின்னும், 'சீதையானவள் தன்னமிசமாகையால் அவள் படும் பாடு தான் படுவதாகத் தோன்றக் கண்டு இலக்குமி துக்கித்ததும், சுபாவத்திலேயே நீராம் தன்மையளாதலால் கங்கை துக்கித்ததும் சகஜமே; இந்திராணி முதலானவர்கள் துக்கமென்பதன் பெயரையும் அறியாமல் போகத்திலேயே சுகித்திருப்பவர்களாகையாலும், உமாதேவி மலை பெற்ற மகளாகையாலும், அன்றியும் சேதன கோடிகளை ரக்ஷிக்கும்பொருட்டு ஸ்ரீ மகாவிஷ்ணுவின் கருணையே சீதையாகத் திருவுருக்கொண்டு இங்ஙனம் நடிக்கின்றதென்னும் உண்மையை அவளறிந்தமையாலும், சரஸ்வதி சீதைக்கு மருமகளும், சீதை அவளுக்கு மாமியுமாகிய முறைமை பற்றி, 'மாமியார் செத்த ஆரும் மாதம் மருமகளுக்குக் கண்ணிலே தண்ணீர் வந்தது' என்று சொல்லுகிறபடி, வாணிக்குச் சீதை விஷயத்தில் விரோதம் சம்பவிக்கலாமாகையாலும், துர்க்கை சயமகளும் நீலியுமாயிருப்பவளாகையாலும், அவ்விந்திராணி முதலானவர்களுடைய மனத்தில் இரக்கமென்பது மருந்துக்கும் கிடைக்கமாட்டாதென்று நிச்சயிக்கப்படுவதால், இவர்களுக்குத் துக்கம் ஜனித்தது அதிசயமோ? ஆராயுமிடத்து அதுவுமோர் அதிசயமல்ல; இராட்சதிகள் தர்மாதர்மம் பாராதவர்களும்' மிகவும் கடின சித்தமுடையவர்களும், நரமாம்ச பக்ஷணிகளும், இராவணனுகிய இராட்சதனால் ஏவப்பட்டுச் சீதையைச் சித்திரவதை செய்கிறோமென்று நெஞ்சு துணிந்து எந்நேரமும் அவளை மொய்த்துச் சுற்றி உபத்திரவப்படுத்திக்கொண்டிருப்பவர்களுமாகையால், அவர்கள் அழுததே உள்ளபடி அதிசயம்,' என்றும் கம்பர் பிரசங்கித்தார்.

பாண்டியராஜன், 'சர்வோத்தமியாகிய ஜானகியுடனே ஜகத்காரணனுகிய சுவாமியும் இத்தனை ஈடுபாடுகள் படவந்தவெல்லாம், மேற்படி தேவஸ்திரீகளுக்கும் அவர்கள் நாயகன்மார்களுக்கும் இராவணுதியரால் நேரிட்ட உபத்திரவத்தை நிவர்த்திக்கும் பொருட்டேயாதலால், அவர்கள் அக்காரணத்தை நினைப்பார்களாயின் அவர்களைத் துக்கிக்க வேண்டாவென்று தடுத்தாலும் கேட்கமாட்டார்கள்; இந்த அரக்கிமார்களுக்கோ, அப்படிப்பட்ட ஆபத்துச் சம்பவிக்கவுமில்லை; அதனிமித்தம் இராமராவது சீதையாவது சகாயம் செய்யவுமில்லை. இப்படி ஓர் ஏதுவும் இல்லா

திருந்தும் இவர்கள் துக்கித்தது வைதேகி துக்கம் சகிக்க முடியாமை யினலேயோதலால் அதிலும் இது உசிதமாமென்றது மெய்தான்,' என, அது கேட்டு அச்சபையிலிருந்தவர்கள் அசேஷமும், 'எம்பெரு மாட்டியாகிய ஜானகியைக் கொல்லத் துணிந்த யமராக்ஷதிகளே அவளது துக்கம் கண்டு சகிக்காமல் உள்ளுருகி அழுதார்களாலல் அவளருமைத் திருமேனி எப்படிப் பதைத்திருக்க வேண்டும்! அவள் எவ்வளவு கண் கலக்கம் கொண்டிருக்க வேண்டும்! ஏதேது நினைத் திருக்க வேண்டும்! என்னென்று புலம்பியிருக்க வேண்டும்!' என்று பலவாறுக எண்ணி, அப்பிராட்டி விஷயத்தில் விசேஷ பக்தி சிரத்தையுடையவர்களாதலால், தங்கள் மனம் குழைய, முகம் வாட, மெய் சோரக் கண்ணீர் ஆறுப்ப் பெருக, தென்றல் மூற்றிப் பெருங்காற்றுனது போல, அவர்களுக்குத் துக்கம் வரவர அதிகரிக்க அலறி அழுதார்கள் அஃதறிந்து சடையப்ப முதலியார், 'இதேது! மதுபிந்து கலகமாய் முடிந்தது,' என்றார். கம்பர் விரைவாகக் கற்றுச்சொல்லியை மருத்துப் படலத்தை எடுத்து வாசிக்கச் சொல்லி, 'அனுமன் சஞ்சீவி கொண்டு வந்தான்,' என்றும், 'அந்த வாடைபட்டு இறந்தவர்களெல்லாம் உயிர் பெற்றெழுந்தார்கள்,' என்றும் பிரசங்கித்தார். பிறகு, அழுதவர்கள் அவ்விசனம் மாறிச் சந்தோஷித்தார்கள்.

சோழராஜன், 'இவ்வதிசயம் குலசேகராழ்வார் இராமாயண காலக்ஷேபம் செய்தவாறுயிற்று,' என்று சொல்லி நகைத்தான். கஜபதி என்னும் அரசன், 'அஃதெவ்வாறு?' என்று வினவ, கம்பர், 'பகவத் பக்தர்களாகிய பன்னிரண்டாழ்வார்களுக்குள் சேரர் பிரானுகிய குலசேகராழ்வார் என்பவர் ஸ்ரீமத் வால்மீக ராமாயண காலக்ஷேபம் செய்து வருகையில், ஆரணிய காண்டத்தில் இராவணன் தங்கையாகிய சூர்ப்பநகி மூக்கறுப்புண்டு, ஜனஸ் தானத்திலிருந்த கரதூஷணுதியரிடத்தில் போய் முறையிட்டது கண்டு, அவர்கள் மகா உக்கிரத்துடனே எண்ணிறந்த சேனைகளைக் கூட்டிக்கொண்டு படையெடுத்து வந்த சமயத்தில், சுவாமி யானவர் தமக்கொருவரும் துணைபின்றித் தனியே யமகிங்கரர் களுக்கு ஒப்பாகியஅத்தனை அரக்கர்கள் மேலும் போர்க்குச்சென்றார் என்று சொல்லக் கேட்டு, ஆழ்வார் இராம சரித்திரத்தில் அதிக பிரேமையுள்ளவராகையால், வெகு காலத்திற்கு முன்பு நடந்த அந்தச் சரித்திரம் அன்றுதான் நடக்கிறதாக நினைத்துத் தமது திருமேனி பதைபதைக்க, 'இஃதென்ன கொள்ளை! இளையபெரு மாளாயினும் கூடப் போகவில்லையா? அவர் இராகவனைவிட்டுஎங்கே போனார்?' என, பெளராணிகர், 'கோதாவரி நீரத்தில் பர்ண சாலையிலெழுந்தருளியிருக்கும் பிராட்டியாருக்குக் காவலாக இருக் கும்படி பெரிய பெருமாள் நியமிக்க, அந்நியமனப்படி அவரவ் விடத்தில் இருந்துவிட்டார்,' என ஆழ்வார், 'ஆபத்காலத்தில் சக்கர வர்த்தி திருமகனுக்கு லக்ஷ்மணரும் உதவி செய்கிறதற்கு இல்லை, அன்றியும் வேறேர் உபபலமும் இல்லை. இரதம் முதலிய வாகனங்

களும் இல்லாமற் பாதசாரியாய்ப் போயிருக்கிறார்; அவ்விராக்கதர்களோ கொடிய துஷ்டர்கள்; இப்படிப் பலவிதத்திலும் சங்கடமாயிருப்பதனால், கிளியை வளர்த்துப் பூனை வாயில் கொடுப்பது போல, அந்தப் பாதகர்களிடத்தில் ரகுநாயகனை எப்படிக் காட்டிக் கொடுத்துவிட்டிருக்கிறது; இந்நேரம் அவர்கள் அங்கே அடித்தது ஆட்டம் பிடித்தது பெண்டாயிருக்குமே! இத்தருணத்தில் நம்மாலே ஆன உதவியொன்றும் செய்யாமல் சும்மா பார்த்துக்கொண்டிருக்கலாமா? 'அண்டை வீட்டுச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி,' என்பதாக, நாம் உபேக்ஷை செய்வது தர்மம் அல்லவே!' என்று அனுதபித்து, உக்கிராகாரமாய் உடனே தமது சேனைகளை அவர்கள்மேல் படையெடுத்துப் போகும்படி ஆக்கியாபித்து, ரத கஜ துரக பதாதிகளாகிய சதுரங்க பலமும் ஜனஸ்தானத்தை நோக்கி முன்னே போக, தாம் போர்க் கோலம் கொண்டு பின்னே போக யத்தனித்தார். அத்தருணத்தில், 'சுவாமியானவர் நிர்ப்பயமாகப் பிரபல யுத்தம் செய்து சத்துருக்கள் அத்தனை பெயரையும் ஜயித்து, ஜயசங்கம் முழங்க, தேவர்கள் புஷ்பமாரி பொழியப் பர்ணசாலைக்கு மீண்டு வந்தார்,' என்ற சந்தர்ப்பத்தை எடுத்துப் பிரசங்கிக்கக் கேட்டு, 'ஆழ்வார் கோபாவேசம் தணிந்து, தெற்கு நோக்கிப் போன ஸ்தோமங்களைத் திரும்பி வரும்படி நியமித்தார்,' என்று கூற, கஜபதி, 'சேரர்பிரானுக்கு அப்பொழுது பகவத் சங்கமத்திற்குப் பிரிவு சம்பவிக்குமேயென்னும் பயம் விளக்கத்தக்க பரமபக்தி தலையெடுத்திருக்க வேண்டும்; அது அவருக்கும், 'அன்பு பெறுகை அரும்பே றெனக்கென்றூன்,' என்று முன்பு சொல்லப்பட்ட பிரகலாதனுக்குமன்றி மற்றோருக்கும் உண்டு,' என்று மனம் நெகிழப் புளகாங்கமுற்றூன்.

> "தாதைக்கும் சடாயு வான தந்தைக்கும் தமிய ளான
> சீதைக்கும் கூற்றங் காட்டித் தீர்ந்தில தொருவன் றீமை
> பேதைப்பெண் பிறந்து பெற்ற தாயர்க்கும் பிழைப்பி லாத
> காதற்றம் பியர்க்கு மூர்க்கு நாட்டிற்கும் காட்டிற் றன்றே"

என்ற மாயாசீதைப் படலப் பாடலைக் குறித்து, 'இந்திரஜித்து மாயாசீதையைத் துணித்தெறிந்துவிட்டு, 'இதோ நான் அயோத்திக்குப் போய் அங்குள்ளவர்களையும் அதம் பண்ணுகிறேன்!' என்று சொல்லிப் போக்குக் காட்டி, நிகும்பலைக்குப் போய்விட்ட தருணத்தில், ஸ்ரீராமர் அவன் மெய்யாகவே அயோத்திக்குப் போனதாகக் கேள்விப்பட்டு, 'ஐயோ! நான் வனத்தில் பிரவேசித்த பொழுது, ஒப்பற்ற மாபாவியாகிய என்னைப் பிடித்த சனியானது பிரதமத்திலே என்னை நாட்டிலிருந்து காட்டில் ஓட்டிவிட்டது; ஆயினும், அது பெரிதன்று என்று நினைத்திருந்தேன்; உடனே அடியை மிதித்தாற்போல என்னைப் பெற்ற சாக்ஷாத் பிதாவாகிய தசரத மகாராஜாவுக்கு முடிவை உண்டாக்கிற்று; பின்பு, தெய்வாதீனமாய் அந்த நிர்மானுஷிகமான காட்டில் எங்களுக்குத் துணை வந்திருந்த

மெய்யன்புடைய பெரிய பிதாவாகிய ஜடாயுவுக்கு மரணத்தை விளைத்தது; அதன் பின்பு, தான் பிறந்ததும் புகுந்ததுமாகிய பெரிய கடல் போன்ற குடும்பத்தை என்பொருட்டுக் கைவிட்டு, யாரைத் துறந்தாலும் புருஷனைத் துறக்கலாகாது என்று எண்ணி, நீயே கதியென்று நம்பி, என்னுடனே கூட வந்து என் சரீரசாயை போலப் பிரியாதிருந்த என் பிராணநாயகியாகிய சீதைக்கு மிருத்துவைக் கொண்டுவந்துவிட்டது; அந்தப் பாழும் சனியானது அம்மட்டிலேயாவது தொலைந்து போமென்று பார்த்தால், அப்படியும் தொலையாமல், ஒருவன் செய்த தீவினை அவன் காலைச் சுற்றி வேரை அறுக்குமென்ற பழமொழிப்படி, பேதைமைக் குணத்தையுடைய பெண்ணைப்பிறந்து அருமையாகிய தவம் செய்து எம்மைப் பெற்ற தாய்மார்களுக்கும், எனக்குப் பின் பிறந்த குற்ற மற்ற வாத்சல்யமுடைய பரத சத்துருக்கனர்களாகிய என் தம்பி மார்களுக்கும், தாய் போல என்னிடத்தில் அன்பு பாராட்டிய அயோத்தி மகாஜனங்களுக்கும், அவ்வயோத்தியைச் சூழ்ந்திருக்கும் கோசல தேசத்திலுள்ள பிரஜைகளுக்கும் நாசத்தை வருவித்ததே' என்றும், 'என்னைப் பெற்ற பிதாவாகிய தசரத மகாராஜா எளிதில் இறக்கிறவரா? கல்லால் அடித்தாலும் அவருக்குச் சாவு வராதே! அப்படி இருந்தும், அவரை என் பிரிவாற்றுமையல்லவோ மாய்த்தது? ஜடாயுவானவர் சீதைக்காகப் பரிந்து போய் எதிர்த்தது பற்றிக் கோபம் மூண்டமையால் அவரை இராவணன் கொன்றான்; ஆதலால், இவ்விரண்டும் ஒருவாறுகவாவது ஒப்புக்கொள்ளத் தக்க வையாய் இருக்கின்றன; இந்திரஜித்துச் சீதையைக் கொன்றது ஏது நிமித்தத்தால்? பெண் பிள்ளையாகிய அவள், ஆண் பிள்ளையாகிய அவனுக்கு என்ன தீங்கு செய்தாள்? அது ஒன்றுமில்லை; அப்படி இல்லாதிருந்தாலும், அவளை இராவணன் அபகரித்ததை முன்னிட்டு நாங்கள் அவன்மேல் படையெடுத்துப் போராடி ராக்ஷதர்களில் அநேகரை மாய்த்ததாவது அதற்கு ஒரு நிமித்தமாக வைத்துக் கொள்ளப்படும்; நிரபராதிகளாயும் இது விஷயத்தில் எவ்வளவும் சம்பந்தப்படாதவர்களாயும் கண்காணாத சீமையிலிருக்கின்ற பரத சத்துருக்கனர்கள் என்ன பொல்லாங்கு செய்தார்கள்? அவர்களையும் கபடமில்லாத தாய்மாரையும், யாதொன்றும் அறியாத ஊராரையும், நாட்டாரையும் சண்டாளன் கருவறுக்கப் போயிருக்கிறானே! இதற்கு ஏதுவென்ன? நானொருவன் பிள்ளையாய்ப் பிறந்து செய்த தீமையே சகலமானவர்களும் அவதிப்படும்படி இந்தப் பிரமாதத்தை விளைத்தது!' என்றும் எண்ணுதவெல்லாம் எண்ணிப் பிரலாபித்தார்,' எனக் கம்பர் பிரசங்கிக்கக் கேட்டு, காந்தார தேசாதிபதி, 'இயற்கையிலேயே விருப்பு வெறுப்பு, சுகம் துக்கம், பெருமை சிறுமை முதலாகிய பற்றொன்றுமில்லாத நிர்மல ஸ்வரூபமாகிய பரப்பிரமமே இவ்வாறு துக்கித்தால் துக்க சமுத்திரத்திலேயே மூழ்கி இருக்கின்ற பிரபஞ்சத்தாரைப் பற்றி என்ன சொல்லுகிறது?' என்று ஆறுதல் அடைந்தான்.

இந்திரஜித்து வதைப் படலத்தில், நிகும்பலையிலிருந்த வஞ்சக னுகிய இந்திரஜித்து இலக்குவனுல் மாண்ட பொழுது, அவன் தலையை அங்கதன் தூக்கி வந்து சுவாமி திருவடியின் கீழிட, அநுமன் முதலானவர்களுடனே இளையபெருமாள் வந்து அவரைச் சேவித்து நிற்கையில்,

> " கம்ப மதமாக் களியானைக் காவற் சனகன் பெற்றெடுத்த
> கொம்பு மின்றென் பால்வந்து குறுகி னுளென் னுளங்குளிர்ந்தேன்
> வம்பு செறிந்த மலர்க்கோயில் மறையோன் படைத்த மாநிலத்தில்
> தம்பி யுள்ளான் படைக்கஞ்சா என்னு மாற்றம் தந்தனையால் "

என்ற பாடலைக் குறித்து, ' சுவாமியானவர் யமகாதகனுகிய அவ் விந்திரஜித்தைச் சுமித்திரை புத்திரன் கொன்றதைப் பற்றி அதிக சந்தோஷமடைந்து, அவனை நோக்கி, ' தம்பி லக்ஷ்மணு, கொடு விஷம்போலும் பொல்லாதவனுகிய இந்திரஜித்து உயிரோடிருக்கிற வரையில் இராவணுதி ராக்ஷதர்களை நான் ஜயிக்கிறதும், சீதையைச் சிறை மீட்கிறதும் சொப்பனத்திலும் இல்லை, அசாத்தியமென்றே நினைத்து ஏங்கியிருந்தேன்; அந்தப் பரமதுஷ்டனை மாய்த்து நீ செய்த சகாயத்தால் இனி இராவணுதியர்கள் எனக்கொரு விஷயமே யல்ல ; இந்நொடியிலேயே அவர்கள் குலமுழுதும் பற்றற்றுப் போகும்படி நிர்மூலப்படுத்திவிடுவேன்! கம்பத்தில் கட்டப்பட்ட மதம் பொருந்திய செருக்கினையுடைய பெரிய பட்டவர்த்தன யானையை ஏறி நடாத்தும் புவன சம்ரக்ஷகனுகிய ஜனகமகாராஜன் தவம் செய்து பெற்றெடுத்த பூங்கொம்பு போன்ற அழகிய மேனியை உடைய சீதையும் சிறை நீங்கி இன்றைத் தினமே என் பக்கலில் வந்து சேர்ந்தாளென்பதாக மனம் குளிர்ந்தேன் ; இப்படிப் பட்ட பேருதவி உன்னையன்றி மற்றூர் செய்வார்கள்? பரிமளம் பொருந்திய பதுமாலயத்தில் வாசம் செய்கின்ற பிரமன் படைத்த இவ்வுலகத்தில், ' தம்பி உள்ளான் படைக்கஞ்சான் ' என்று நெடு நாளாக வழங்கிவரும் பழமொழியைக் கைகண்ட பலனுக எனக்கு அனுபவப்படும்படி செய்தாயே!' என்று சொன்னர்,' எனப் பிரசங்கித்தார்.

அது கேட்டுக் கண்ணப்ப முதலியார், 'தமயனுக்குத் தம்பி உதவி செய்வது அதிசயமா! சகஜந்தானே ? அப்படியிருக்க, சுவாமி இளையபெருமானைக் குறித்து அவ்வளவாக வியந்துரைத்தது என்ன?' என்று கேட்க, கம்பர்,

> " நேசரைக்கா ணுவிடத்து நெஞ்சார வேதுதித்தல்
> ஆசானை யெவ்விடத்து மப்படியே—வாச
> மனையாளைப் பஞ்சணையில் மைந்தர்தமை நெஞ்சில்
> வினையாளை வேலைமுடி வில்."

இச்செய்யுளில், 'வேறுபாடின்றிக் கலந்து சிநேகித்தவரை முகத்துக் கெதிரே புகழ்ந்து பேசினுல், அவர்க்கு அது தமது நண்பன் தம்மைத்

தன்னினின்றும் வேறு பிரித்ததாகத் தோன்றுமாதலால், அவரைக் காணுதவிடத்தே மனமாரப் புகழவேண்டும்; ஆசாரியன் தனக்குத் தெய்வமாதலால் சீஷன் முன்பின் என்னும் விவஸ்தையில்லாமல் எவ்விடத்திலும் தான் கொண்ட குருபக்தி வெளிப்படும்படி நெஞ்சுருகத் துதி செய்ய வேண்டும்; தன்னுடன் வசிக்கின்ற மனையாளிடத்தில் கணவன் சமயாசமயம் பாராமல் இஷ்டம் பாராட்டினால் அவள் தனக்கமைந்து நடவாள்; ஆதலால், தருண மறிந்து சயன ஸ்தானத்தில் அவளைச் சந்தோஷிப்பிக்க வேண்டும்; புத்திரர்களிடத்தில் பிதா, அவர்களறியும்படி வெளிப்படையாக அன்பு செலுத்தினால் செருக்குற்று ஒழுக்கம் தவறுவராதலால் அவர்களது கல்வி அறிவு முதலியவற்றைக் குறித்து அவன் தனக் குள்ளே தானே மகிழ்ச்சி கூர வேண்டும். போர்த் தொழில் புரியும் வீரனை, அல்லது, மற்றத் தொழில் செய்யும் வேலைக்காரனை எஜமானன் எந்நேரமும் சிலாகித்துப் பேசினால், அவ்வாறு சிலா கித்துப் பேசப்பட்டவன் தன்னைத் தலைவன் சமர்த்தன் என்று கொண்டாடுவதாக எண்ணிக் கர்விப்பானதலால், அவனுக்கிட்ட வேலையை முற்ற முடித்த பின்பு, 'நீ நன்றாய்ச் செய்தாய்!' என்று அவனை வியந்து சன்மானிக்க வேண்டும்; இங்ஙனம் புரிவதனால் மேற் கூறிய சிநேகனுக்கு வரவர நட்பும், ஆசாரியனுக்கு அருளும், மனைவிக்கு அமைந்து நடக்கையும், புத்திரர்களுக்கு ஒழுக்கமும், வீரனுக்கு அல்லது ஏவல் செய்வோனுக்கு ஊக்கமும் அதிகரிக்கு மென்று சொல்லும் வண்ணம், போர் செய்யுமிடத்துப் படை வீரர்களுக்கு உற்சாகமுண்டாகும்படி அவர்களைப் புகழ்ந்து உரைப்பது தலைவனது கடமையாதலால், அக்கடமையைச் செலுத்துதற்பொருட்டும், கிஷ்கிந்தா காண்டத்தில், சுக்கிரீவன் வாலியைத் தமயன் என்று மதியாமல் வலிதில் போர்க்கழைத்தது கண்டு, இளையபெருமாள் சகியாமல், 'பெரியார் சிறியார் என்னும் தாரதம்மியம் பாராமல் சுக்கிரீவன் அதிக்கிரமிக்கிறானே! இதென்ன அநியாயம்!' என்று சுவாமியினிடத்தில் முறையிட்ட போது,

> "அத்தாவிது கேளென வாரியன் கூறு வானிப்
> பித்தாய விலங்கி னெழுக்கினைப் பேச லாமோ ?
> எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தார்க ளெல்லாம்
> ஒத்தால் பரதன்பெரி துத்தம னுவ துண்டோ ?"

என்ற செய்யுளில், சுவாமியானவர் லக்ஷ்மணரை நோக்கி, 'அப்பா, இந்தப் பித்துப் பிடித்த மிருகங்களின் நடக்கையைக் குறித்து ஒரு பொருளாக மதித்துப் பேசலாமா? இது நிற்க. முற்காலத்தில் நடந்த ஒரு செய்தி கேள்: சுந்தோபசுந்தர்கள் என்ற அசுரேந்திரர் ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்களாய் இருந்தும், அவர்களுக்குள் அந்நியோந்நியமென்பது எள்ளளவும் இன்றிப் பகைத்து, சரீரத் துடன் பிறந்து கொல்லுகின்ற வியாதி போல, ஒருவரையொருவர் வியர்த்தமாக மடித்து மாண்டு போனார்கள்; உலகத்தில் எந்தத்

தாய் வயிற்றிலும் பின் பிறந்தவர்களெல்லாம் வரன்முறை பிசகாமல் முன் பிறந்தவர்களுடைய மனத்துக்கு ஒத்து நடந்தால், நம்முடைய பரதன் தமயன் சொல் கடவாமல் நடக்கின்ற உத்தம னெனப் பெயர் பெறுவானு?' என்று அருளிச் செய்தபடி, இவ் விடத்திலும் தமையன் நியமனப் பிரகாரம் நடப்பவர்கள் பெறும் ஏற்றத்தை வெளிப்படையாலும், நடவாதவர்கள் அடையும் தாழ்வை அருத்தாபத்தியாலும் வெளியிடுதற்பொருட்டுமே அவ்வாறு கூறியது,' என்றார். அப்பொழுது அச்சபையிலிருந்தவர்கள், 'இவ்வரன்முறை கடவாமைக்குத் திருஷ்டாந்தம் மேற்படி கண்ணப்ப முதலியாரிடத்திலும், அவர் தமையனாராகிய சடையப்ப முதலியாரிடத்திலும், தம்பியாகிய சரராம முதலியாரிடத்திலும் கண்டோம்,' என்று அவர்களுக்குள்ள சகோதர வாத்சல்யத்தைக் குறித்து அதிசயித்துச் சந்தோஷித்தார்கள்.

களங்காண் படலத்தில், இலங்கையின் மேலைக்கோட்டை வாச லில் இராவணன் வந்து இளையபெருமாளுடனே போராடி அப ஜயப்பட்ட காலத்தில், 'இத்தனை சங்கடமும் இவனுலல்லவா நேரிட்டது!' என்று மனமெரிந்து விபீஷணர்மேல் ஒரு சக்தியைப் பிரயோகிக்க, சுக்கிரீவ மகாராஜா அதைத் தம் மார்பில் ஏற்றுக் கொள்ளும்படி அதற்கெதிரே போய் நிற்க, அது கண்டு அங்கதன், 'பிதாவுக்கு அபாயம் வரப் பார்ப்பது புத்திரனுக்கு அழகோ! சத்தியத்திற்கில்லாத பிள்ளை துக்கப்பட்டழ இருக்கிறதா?' என்று அதைத் தன் மார்பில் ஏற்கப் போக, அவனை விலக்கி ஆஞ்சனேயர், 'அரசரைக் காட்டிக் கொடுப்பது அமைச்சனுக்குத் தர்ம மல்லவே!' என்று, தமது மார்பில் ஏற்கப்போக, இந்தப்படிப் படைத் தலைவர்களும் ஒருவர் பின் ஒருவராக இதை ஏற்கப் போவதைக் அறிந்து, நீங்கள் ஆரும் இறக்க வேண்டுவதேயில்லை, அதை நான் கண்டிக்கிறேன். விலகி இருங்கள்,' என்று உபாயமாகச் சொல்லி, அனுவரையும் தடுத்துக் கடைசியில் அதை இலக்குவன் தன் மார்பில் ஏற்றுக்கொண்டு இறந்து, அநுமன் உதவியால் உயிர் பெற்றெழுந்து, அனுவருடனும் சுவாமியிடத்தில் வந்து அவரைச் சேவித்து நிற்கையில், விபீஷணழ்வான் சுவாமிக்கு அஞ்சலி செய்து 'வைதேகி மணுளரே, இராவணன் அடியேன்மேல் ஒரு சக்தியை விட்டெறிந் தான்; அது தப்பாமல் உயிரை மாய்க்குமென்பதை அறிந்து, அத்தருணத்தில் இளையபெருமாள் அதைத் தம் மார்பில் ஏற்றுக் கொண்டு பிராணனைக் கொடுத்தார்,' என்று விண்ணப்பம் செய்தார். அப்பொழுது,

> " புறவொன்றின் பொருட்டால் யாக்கை புண்ணுற வரிந்த புத்தேள்
> அறவனு நின்னை யைய நிகர்க்கிலன் அப்பா னின்ற
> பிறவினி யுரைப்ப தென்னை பேரரு ளாள னென்பார்
> கறவையும் கன்றும் போல்வார் தமர்க்கிடர் காண்பா ராயின்."

என்ற பாடலைக் குறித்து, 'சுவாமியானவர் இளையபெருமாள்மேல்

சந்தோஷப்பட்டு, 'அப்பா, சுமித்திரை புத்திரா, துஷ்டாத்மனுகிய இராவணனுல் நம்மைச் சாந்தவர்களுக்கு இப்படிப்பட்ட ஆபத்தும் சம்பவித்ததா? அத்தருணத்தில் நீ செய்தது நல்ல சகாயந்தான். அற்பஜந்துவாகிய ஒரு புருவினிமித்தம் தமது சரீரத்தைப் புண் படும்படி சித்திரவதையாகச் சின்னபின்னமாய் அரிந்த தெய்வத் தன்மை பொருந்திய தர்மாத்மாவாகிய நமது பாட்டனுர் சிபிச் சக்கரவர்த்தியும் உனக்கு நிகராகமாட்டார் என்றுல், இனி அப்பா லிருக்கின்ற மற்றவைகளைக் குறித்துச் சொல்ல வேண்டியதென்ன? ஆயினும், பரமகிருபாநிதிகளாயிருக்கின்றவர்கள் தம் சுற்றத் தார்க்கு யாதேனும் ஆபத்துச் சம்பவிக்கக் காண்பாராயின். நமக் கென்னவென்று உபேக்ஷையாயிருப்பார்களா? ஒரு துஷ்ட மிருகத் தால் தன் கன்றுக்குத் துன்பம் நேரிடக் கண்டவிடத்து அதனை ஈன்ற தாய்ப் பசுவானது தன்னுயிர்க்கு அபாயம் வரும் என்பதையும் பாரா மல் அக்கணமே அம்மிருகத்தின்மேல் விழுந்து பாய்ந்து தன் கன் றைப் பாதுகாக்காமல் இருக்குமா? அப்படிப்பட்ட பசுவும் கன்றும் போல, அவர்கள் தாங்கள் பிராணசேதப்படுவதையும் நினையாமல் அவ்வாப்தர்களுடைய உபத்திரவத்தை எவ்விதத்திலும் நிவர்த்திப் பார்களல்லவோ? அதை யோசிக்குமிடத்தில் நீ செய்தது சகஜந் தான். மேலும், இது, நமது வமிசத்தார்க்குச் சுபாவ தர்மமே யல்லது அதிசயமன்று,' என்று அருளிச்செய்ததாகக் கம்பர் பிரசங் கித்தார்.

அதைக் கேட்ட அசுவபதி என்னும் அரசன், 'சிபிச் சக்கரவர்த்தி புருவின் நிமித்தம் சரீரத்தை அரிந்த சரித்திரம் சொல்ல வேண்டும்,' என, கம்பர், 'பூர்வம் காட்டிலிருந்த புருவொன்று சிபிச் சக்கரவர்த் தியைச் சரணமடைந்தது; அவற்கு அவர், அஞ்சேல் என்று அபாயப் பிரதானம் பண்ணினர். உடனே அதை எய்த வேடன் தொடர்ந்து வந்து, 'ஐயா, உம்மிடத்தில் அடைந்து பதுங்கிய புருவைத் துரத்தி விடும்' என்ன, அவர், 'இது என்னைச் சரணமடைந்ததுபற்றி இதை நான் உன் கையில் காட்டிக் கொடுக்கக் கூடாது,' என்ன, அவன், 'நீர் உலகாள்பவராகையால், யாவரையும் பொதுவாகவல்லவோ நோக்க வேண்டும்? அதை விட்டு ஒருவரை இடுக்கிக்கொண்டு, ஒரு வரை நடத்திக்கொண்டு போவது போல, புருவை ஆதரணை பண் ணிப் பசியால் வருந்தும் என்னைமாத்திரம் அனுதரணை பண்ணுவது நீதியோ?' என்ன, வேந்தர், 'நானுன்னை அனுதரணை பண்ணினதாக எண்ண வேண்டா; பசிக்குச் சாக மூலாதிகளில் எதையாவது புசித்தாலும் அது தணிந்து போகிறது; பறவை மாமிசம் வேண்டு மென்பது என்ன?' என வேடன், 'நாங்கள் சாக மூல பலாதிகளைத் தின்றுல் எங்கள் சரீரத்திற்குப் பலம் செய்யமாட்டா; மாமிசமே எங்களுக்கு முக்கிய ஆகாரமாய் இருக்கிறதாகையால், எங்கள் ஜாதி சுபாவப்படி நான் உணவுக்காக எய்த புருவை என் கையிலே கொடுத்துவிட வேண்டும்,' என்ன, சக்கரவர்த்தி, 'அப்படியானுல் என்னுல் அபயப்பிரதானம் பண்ணப்பட்டு என் அடைக்கலத்தில்

இருக்கினற இதை நீ விட்டு வேறெதையாகிலும் எய்து பிடித்துக்கொண்டு போ,' என்ன, வேடன், 'வில்லும் அம்பும் என் கையில் காணும் பொழுதே வனத்திலிருக்கிற பசு பக்ஷி மிருகங்களெல்லாம் பயந்து காததூரத்தில் தலை காட்டாமல் ஓடியொளிக்குமேயல்லாமல், எளிதில் அகப்படுவனவல்லவே,' என்ருன் ; அரசர், 'அப்படியானுல் இதற்கு ஈடாக ஆடு கோழிகள் வேண்டுமென்ருலும், திரவியமாவது ராஜ்யமாவது வேண்டுமென் ருலும் தருகிறேன்,' என்று சொல்ல, வேடன், 'மண்டலாதிபதியா யிருக்கிற இவர் தமது ராஜாதிகாரத்தைக்கொண்டு நம்மை அச் சுறுத்தி ஓட்டிவிடாமல் இவ்வளவு சாந்தத்தோடே நமக்குப் பிரிய வசனம் சொல்லுகிருரே! இவர் சொற்படியே நாம் கேட்போம்,' என்று அவருக்கு இணங்கி உத்தரம் சொல்லாமல், 'காட்டிலே உழல்கிற வேடஜாதிக்கு இராச்சியமேன்? திரவியமேன்? நான் எய்து காயம்பட்டிருக்கிற பறவையை எனக்குக் கொடுக்கிறதற்கு வழக்கென்ன? இதுதானு உமது ராஜதர்மம்?' என்ருன். அரசர், 'அடைக்கலமாக வந்தவர்களை ஆதரியாமல் கைவிடுவது தோஷ மாகையால், இது ஒன்று தவிர வேறெதைக் கேட்டாலும் கொடுக்கத் தடையில்லை,' என்ன, வனசரன், 'வெந்த கறியைத் தின்று, விதி வந்தால் சாகிற எங்களுக்கு வேறென்ன வேண்டுவது?' என்ன, கோமான், 'ஆடு, கோழி முதலானவைகளும் வேண்டாவென் கிறையே! பின்னை என்னதான் உனக்கு வேண்டியது?' என்று கேட்க, கிராதன், 'நீர் அற்ப ஜந்துவாகிய ஒரு புருவின்மேல் இவ்வளவு ஜீவ காருணியமுடையவராயிருப்பதனுல், உமது சரீரத்தில் இந்தக் கபோதத்தின் எடையளவுக்குச் சரியாக மாமிசம் அரிந்து கொடுத் தால் சம்மதிப்பேன்,' என்ன, வேந்தர், 'அப்படியே அரிந்தெடுத்துக் கொள்,' என்றுடைவாளை உருவி அவன் கையில் கொடுக்க, வேடன், 'நீரே அரிந்து கொடும்,' என்ருன். அப்பொழுது சக்கரவர்த்தி, எவனுகிலும் தன் சரீரத்தைத் தானே அறுக்கப் பொறுக்குமா என்றும், அருமையாகப் போற்றிப் புணைந்த உடம்பைக் கூசாமல் அறுப்பது எப்படி என்றும் யோசியாமல், வலத் தொடையின் தசையை அரிந்தெடுத்துத் துலை நாட்டி, ஒரு தட்டில் புருவையும் மறு தட்டில் அத்தசையையும் வைத்துத் தூக்கிப் பார்க்கக் குறைந் ததனுல், மறுதொடைத் தசையையும் அரிந்து வைக்க, அப்படியும் ஒவ்வாததனுல், பின்பு, இரு தோளின் தசையையும் கொய்துவைக்க அதுவும் சரிப்படாமையால், அப்புறம் கண்டம் முதலாக உடல் முழுதும் புண்ணுகி உதிரம் பெருகியோடக் கூறுகூருகச் சேதித்து வைத்தும் புருவின் தட்டு எழும்பாதது கண்டு, பிறகு தானே அத் துலைமீது ஏறினர். அவர் ஏறவே புருவின் எடை குறையத் தசை எடை அதிகப்பட்டது. வேடன், 'வீணுசைப்படுவானேன்? அதிகம் எனக்கு வேண்டா,' என்று மறுக்க, ராஜா துலையை விட்டு இறங்கி மறுபடி தசையை மாத்திரம் தூக்கிப் பார்க்க அதுவும் அதிகப்பட்டிருக்க, வைத்த தசைகளையெல்லாம் எடுத்தெடுத்துச்

சும்மா வைத்துவிட்டுக் கடைசியில் அரைச் சேருக்கும் குறைவான தசையைப் புருவின் எடைக்குச் சரிவர நிறுத்துக் கொடுத்தும், மீந்த ஒரு பெரிய கூடை கொண்ட தசையைப் பார்த்து, 'இவ்வளவு தசையும் உபயோகப்படாமல் போகிறதே,' என்றும், 'அருமைத் திருமேனி அநியாயமாக அறுப்பட்டுப் போயிற்றே,' என்றும் இறையளவும் நினையாமல், இத்தனையும் தெய்வச் செயலே என்று நினைத்தார். அத்தருணத்தில் இந்திரனும் அக்கினியும் அவருக்குப் பிரசன்னமாகி, 'ஜீவகாருணியமுடைய உனது ஈகையை யாவருக்கும் வெளியிடுதற்பொருட்டு இந்திராக்கினிகளாகிய நாங்கள் இருவரும் வேடனும் புருவுமாகி வந்து உன்னைச் சோதித்தோம்; உன்னிடத்தில் அதுமாத்திரமன்று; சாந்தம், நீதி, தர்ம சிந்தை முதலானவைகளும் நிலைபெற்றிருக்கின்றமை பற்றி எங்களுக்கு அதிக சந்தோஷமாயிற்று,' என்று வியந்து, அநேக வரங்களை அருளிச் செய்து போனார்கள்,' என்றார். அசுபவதி முதலானவர்கள் அதிக சந்தோடப்பட்டார்கள்.

இராவணன் வதைப்படலத்தில், ஸ்ரீ ராகவரைக் கொல்லும்படி தசக்கிரீவன் விட்டெறிந்த அதியுக்கிரமாகிய சூலத்தைக் கண்டு தேவர்கள் முனிவர்களெல்லாம், 'இது தசரதாத்மஜனை எவ்விதத்திலும் நாசம் செய்யும்! இனிச் சீதாபதியைக் கண்ணிலே காணப் போகிறதேயில்லை!' என்று அலறி அழாநிற்க, அதைத் தடுக்கும்படி இராமபத்திரர் பிரயோகித்த எவ்வகை அஸ்திரசஸ்திரங்களையும் பேதித்துக்கொண்டு அது சமீபித்த மாத்திரத்தில் அதை அவர் அதட்டி உங்காரத்தால் பொடிப்பொடியாய்ப் போகும்படி செய்த பொழுது,

> "சிவனே வல்லன் நான்முக னல்லன் திருமாலே
> அவனே வல்லன் மெய்வர மெல்லா மடுகின்ருன்
> தவனே வென்னில் செய்து முடிக்கும் தரமல்லன்
> இவனே தானவ் வேத முதற்கா ரணமாவான்!"

என்ற பாடலைக் குறித்து, 'இராவணன், 'இஃதென்ன ஆச்சரியம்! இந்த இராமன், நாம் நமது பத்துத் தலைகளையும் இருபது கைகளையும் கொய்து அக்கினியில் விறகாக இட்டு உதிரத்தை நெய்யாகச் சொரிந்து அகோரமான அரிய தவம் செய்து பிரமருத்திராதியர்களால் பெற்ற மெய்ம்மையாகிய அழியாத வரங்களையெல்லாம் பொருள் செய்யாமல் எளிதில் அழிக்கின்ருன்; எப்படிப்பட்ட ஆயுதங்களையும் நொடிக்குள்ளே தும்சம் செய்கிருன்; இவ்விதத்தால் இவனைச் சங்கார கர்த்தாவாகிய சாக்ஷாது பரம சிவனென்று நினைப்போமென்ருல், அவனுமல்லன்; சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமனென்று நிச்சயிப்போமென்ருல், அவனுமல்லன்; இரட்சக கர்த்தாவாகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவென்று மதிப்போமென்ருல், அவனுமல்லன்; வனத்தில் தவம் செய்பவனென்று எண்ணுவோமென்ருல், தவசியானவன் இப்படிப்பட்ட செயற்கரிய

செயல்களையெல்லாம் செய்து முடிக்கத்தக்க தரமுடையவனு யிரான் ; ஆதலால், அவனும் அல்லன் ; ஆராய்ந்து பார்க்குமிடத் தில் நமது அக்கிரமம் சகிக்காமல் சர்வத்திற்கும் முதல் காரணம் என்று வேத புருஷனுல் நிருணயித்துச் சொல்லப்பட்ட அந்தப் பரம புருஷன்தான் இந்த உருவெடுத்து வந்தான் என்று நிச்சயித்தான்,' எனக் கம்பர் பிரசங்கித்தார்.

குலோத்துங்க சோழனுடைய மந்திரியானவர், 'இராகவனைத் திரிமூர்த்திகளில் ஒருவருமல்லன் என்று இராவணன் என்ன காரணத்தால் பூர்வபக்ஷம் பண்ணிக் கழித்தான் ?' என்று கேட்க, கம்பர், 'சிவனுயிருந்தால் மான்மழு சதுர்புஜம் காளகண்டம் திரிநேத்திரம் இருக்க வேண்டுமே ; அவை இல்லாமையாலும், அன்றியும் ஈசன் தான் கொடுத்த வரத்தைத் தானே அழிக்கமாட்டானுகையாலும்; பிரமனுல் நான்கு முகமும் எட்டுக் கண்களும் தண்ட கமண்டலங் களும் இருக்க வேண்டுமாகையாலும், மேலும், அவன் தனக்குப் பாட்டனும் புரோகிதனுமாய் இருப்பதனுல் விரோதம் செய்யா னுகையாலும் ; விஷ்ணுவெனில் சங்க சக்கிர கட்கதோதண்ட கதாயு தங்களைக் கையில் ஏந்தி வர வேண்டுமல்லவோ ? அவை இல்லை ஆகையாலும், அவர்களெல்லாம் அல்ல என்று நிருணயித்தான்,' என்றூர்.

மேற்படி படலத்தில் தசக்கிரீவன் மடிந்தது கண்டு விபீஷணர் துக்கிக்கின்ற சமயத்தில்,

> "போர்மகளைக் கலைமகளைப் புகழ்மகளைத் தழுவியவர் பொருமை கூரச்
> சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்கும் தம்மோயைத் தெய்வக் கற்பின்
> பேர்மகளைத் தழுவுவா னுயிர்கொடுத்துப் பழிகொண்ட பித்தா பின்னைப்
> பார்மகளைத் தழுவினையோ நிசையானைக் கோடி முத்த பரிதி மார்பால்."

என்ற பாடலைக் குறித்து, 'பகைவரோடு எதிர்த்துப் போர் செய்து வென்று முற்காலத்தில் பெற்ற வெற்றியாகிய பெண்ணையும், எண் ணிறந்த சாஸ்திரங்களைக் கற்றுப் பெற்ற கல்வியாகிய பெண்ணை யும், வீரம் செல்வம் முதலானவைகள் காரணமாகப் பெற்ற கீர்த்தி யாகிய பெண்ணையும், நெடுங்காலமாகப் புணர்ந்து சுகமனுபவித்து, அவர்கள் நமது நாயகன் இப்பொழுது காமாதுரனுகி நெறிதவறிப் பரஸ்திரீகமனம் பண்ணத் தலைப்பட்டான் என்று மனத்தில் அசூயை கொண்டு பிணங்கும்படி, பின்பு சிறப்புக்கெல்லாம் உற்பத்தி ஸ்தானமாயிருப்பவளை, ஸ்ரீ மகாலக்ஷ்மியின் அம்சமானவளை, பிர மாதி தேவர்களுக்கும் பெற்ற தாயாய் விளங்குகின்றவளை, தெய்வீக மாகிய கற்பானது உருக்கொண்டு வந்த மகா பதிவிரதையென்னும் சீதையைத் தழுவும்பொருட்டுத் துராசை கொண்டு பெறுதற்கு அருமையான உயிரைக் கொடுத்துப் பிரதி பலனுக எக்காலத்தும் நீங்காத பெரும்பழியைத் தேடிக்கொண்ட மதி மயக்கமுடைய வனுகிய இராவணு, நீ ராமபாணத்திற்கு இலக்காகித் தலை வேறு உடல் வேறுபட்டு விழுந்து, திங்களுங்களின் கொம்புகள் ஒடிந்து

பதிந்து, சூரியனைப் போலப் பிரகாசிக்கின்ற உன் மார்பினுல் பூமி யாகிய பெண்ணைத் தழுவிக்கொண்டு கிடக்கின்றையோ!' என்று பிர லாபித்தார்,' என்பதாகப் பிரசங்கித்தார்.

அது கேட்டுச் சடையப்ப முதலியாருடைய தம்பியார் சரராம முதலியார் கம்பரை நோக்கி, ' இராவணன் மார்பில் யானைக் கொம்புகள் பதிந்திருப்பது வாஸ்தவமே ; அம்மார்பு சூரியனைப் போலப் பிரகாசிக்கின்றதென்றது என்ன விதத்தால்?' என, கம்பர், 'இராவணன் அஷ்டதிக்கஜங்களுடனே யுத்தம் செய்த காலத்தில் ஐராவதம் முதலாகிய அவ்வெட்டு யானைகளும் அவனை முட்டிக் கொம்புகளால் மார்பிலே குத்த, அவைகள் ஊடுருவி முறிந்து மேடும் பள்ளமுமாய் இருந்தது கண்டு, அதை அவன் மயனென்னும் தெய்வத் தச்சனுக்குக் காட்டி, 'இதைப் பிடுங்கி எறிந்து விடுகிறையா ?' என, மயன், 'பிடுங்க வேண்டுவதில்லை ; வாள் கொண்டு அறுத்து, அரத்தினுல் அராவி, ஒப்பமாக இழைத்து, மேலே விலையுயர்ந்த மாணிக்கக் கற்களை அழகாகப் பதித்தால், அது ஒரு விசித்திரமான மதாணிப் பதக்கம் தரித்தது போலிருக்கும்,' என்று சொல்லி, அப்படியே செய்தான். அது சூரியனைப் போல ஜொலிப்பது பற்றி அங்ஙனம் சொல்லப்பட்டது,' என்றார்.

மீட்சிப் படலத்தில்,

> '' அஞ்சின னஞ்சின னணைய வஞ்சினேன்
> பஞ்சினின் மெல்லடிப் மதுமத் தாடன்மேல்
> விஞ்சிய கோபத்தால் வீளையு மீதெலாம்
> தஞ்சமோ மறைமுதல் தலைவ னேயென்றான்.''

என்றும்,

> '' பெய்யுமே மழைபுவி பிளப்ப தன்றியே
> செய்யுமே பொறையுற நெறியில் செல்லுமே
> உய்யுமே உலகிவ ளுணர்வு சிறந்தால்
> வையுமே மலர்மிசை அயனு மாளுமே.''

என்றும் சொல்லப்பட்ட பாடல்களைக் குறித்து, ' பிராட்டியானவள் அக்கினிப் பிரவேசம் பண்ணின பொழுது அவளுடைய கற்பென்னும் நெருப்புத் தன்னைச் சுடத் தான் வெந்து நொந்தமையால், அவ் வக்கினி வந்து ஸ்ரீராகவரை நோக்கி, 'வேதத்தின் முதல் தலைவனுகிய இராமசந்திரா, நான் பயந்தேன் ! செம்பஞ்சுக் குழம்பூட்டிய மிருதுவான பாத தாமரையையுடைய இந்தச் சீதையைத் தொடுவதற்காக மிகவும் பயந்தேன் ! கற்புக்கரசியாகிய இவள்மேல் உனக்கு உண்டாகிய கடுங்கோபத்தினுல் விளைந்த இவ்விளைவு களெல்லாம் எளிமையானவைகளோ? இவள் மனம் நொந்து சீற்றம் செய்வாளானுல் உலகமெல்லாம் நிர்மூலமாய்விடுமே அல்லாமல் மழை பெய்யுமா? பூமி பிளந்து போமே அல்லாமல் தன்னிடத்திலுள்ள அகில சராசரங்களையும் தாங்கி நிற்குமா?

பாவம் தலையெடுத்து நிற்குமேயல்லாமல் தர்மமானது நெறி தவறுமல் செல்லுமா? பெரியோர்கள் தத்தம் உயிர்நிலை தேய்ந்து போவார்களே அல்லாமல் பிழைத்திருப்பார்களா? மூலதாமரையில் வசிக்கின்ற பிரமனும் தன் படைப்புத் தொழிலுடனே மாண்டு போவானே அல்லாமல் உயிர் பெற்றிருப்பானு? சகலமும் அடியோடே நாசமாய்ப் போய்விடாதா? இஃதென்ன விபரீதம்?' என்றும், மற்றும் பலவாறுகவும் முறையிடுகையில்,

" தோற்ற மென்பதொன் றுனக்கிலை நின்கணே தோற்றும்
ஆற்றல் சான்முதற் பகுதிமற் றதனுளா மப்பால்
காற்றை முன்னுடைப் பூதங்க ளவைசென்று கடைக்கால்
வீற்று வீற்றற்று வியுறும் நீபென்றும் விளியாய் "

என்ற பாடலைக் குறித்து, 'பிரமனுனவன் சுவாமிக்கு முன்னே வெளிப்பட்டு வந்து, 'விஜயகோதண்டபாணியாகிய ராகவா, கேவலம் சஞ்சித ஆகாமிய பிராரப்த கர்மவசத்தனுய்ப் பலகாலும் பிறந்து பிறந்து உழலுகின்ற பந்தசமுசாரியைப் போல உன்னை நீ மதித்துப் பிரமிக்கின்றையோ? உனக்கு எக்காலத்திலும் உற்பத்தி என்பதே இல்லையே! சகலமும் தன்னிடத்திலே தோன்ற, தானென்றிலும் தோன்றுத மகா மகிமை பெற்ற மூலப்பிரகிருதியானது, செம்பில் களிம்பு போல, அனுதியே உன்னிடத்தில் தோன்றி நிற்கின்றது; பின்பு, அம்மூலப் பிரகிருதியிலிருந்து மகதத்துவம் தோன்றுகின்றது; மகதத்துவத்திலிருந்து அகங்காரதத்துவம் தோன்றுகின்றது; அதிலிருந்து சூக்ஷமபூதமாகிய பஞ்சதன் மாத்திரை தோன்றுகின்றது; அதிலிருந்து ஸ்தூல பஞ்சபூதங்கள் தோன்றிப் பஞ்சீகரணப்பட்டுப் பிரபஞ்சத் தோற்றம் உண்டாகின்றது; காலமுடிவில் அனைத்தும் தோன்றிய வண்ணமே ஒடுங்கி மாய்ந்து போகின்றன; இவை இவ்வாறு சங்கோச விகாசப்பட்டு மாய்ந்து போயும், நீ மாத்திரம் எக்காலமும் மாயாதிருக்கின்றுய்,' என்றும்,

" எனக்கு மெண்வகை யொருவற்கு மிமையவர்க் கிறைவன்
தனக்கும் பல்பெரு முனிவர்க்கு முயிருடன் றநீஇய
அனைத்தி னுக்குநீ யேபர மென்பதை யறிந்தார்
விளைத்தொ டக்குடை வீட்டருந் தலைநின்று மீட்டார்."

என்பதைக் குறித்து, 'கர்ம பந்தத்தைக் கழித்துத் தாரபுத்திராதி ஈஷணத்திரயமாகிய தலையினை அறுத்து நீக்கிய சான்றோர், எனக்கும், பார், நீர், தீ, வளி, வான், சூரியன், இந்து, இயமானன் என்னும் அஷ்டமூர்த்தமாய் விளங்கிய சிவனுக்கும், தேவர்களுக்கு இறைவனுகிய மகபதிக்கும், ராஜரிஷிகள் தேவ ரிஷிகள் பிரம ரிஷிகளாகிய பெருமை பொருந்திய பல வகை ரிஷிகளுக்கும், உயிரோடு கூடிய மற்ற எல்லாவற்றிற்கும் நீயே பரத்துவம் என்ப

தாகச் சுருதி ஸ்மிருதி இதிகாச புராணம் முதலானவைகளும் சொல்வதை அனுபவமாக அறிந்திருக்கிறீர்களே! அப்படியிருக்க, இப்படி நீ மயங்க வேண்டியது என்ன?' என்றும், மற்றும் அநேக விதமாகவும் சொல்லி ஸ்துதி செய்கையில்,

> " துறக்குந் தன்மைய ளல்லளால் தொல்லேயெவ் வுலகும்
> பிறக்கும் பொன்வயிற் றன்னையிப் பெய்வளே பிழைக்கில
> இறக்கும் பல்லுயிர் இராமனீ யிவடிறத் திகழ்ச்சி
> மறக்குந் தன்மைய வென்றனன் வாதற்கு வரதன்."

என்ற பாடலைக் குறித்து, 'மேலானவர்களுக்கெல்லாம் மேலானவனுகிய பார்வதி பாகன் வந்து சுவாமியை நோக்கி, 'ஐயா ரகுநாயகா, உன்னை யாரென்று நினைத்திருக்கின்றாய்! நீ ஆதிமூர்த்தியாகிய ஸ்ரீமந் நாராயணனே; இந்தச் சனகராஜ குமாரியான வளோ, உன் மணிமார்பில் வீற்றிருக்கின்ற பெரிய பிராட்டியாகிய ஸ்ரீ மகாலக்ஷ்மியேயாதலால், புராதனமாகிய எவ்வகைப்பட்ட உலகங்களும் கருவுற்று உற்பவிக்கின்ற அழகிய திருவயிற்றையுடைய தாயாகிய இச்சீதையானவள் உன்னைப் பிரிந்திருக்கும் தன்மையுடையாள் அல்லள்; புருஷகாரியாகிய இவள் உன்னை விட்டு நீங்குவாளானுல் பலவகை ஜீவகோடிகளும் மாண்டுபோமே! உனக்கு ஸ்ரீநிவாசனென்னும் பெயரும் மாறிப்போம்; மறுவற்ற மகோத்தமியாகிய இவள் விஷயத்தில் ஓரணுவளவேனும் குற்றமென்பதைப் பாராட்டாமல் மறந்துவிட வேண்டும்,' என்று சொல்லிப்போயினர்,' எனக் கம்பர் பிரசங்கித்த போது, பாண்டியன்,'சர்வஜ்ஞனவனுக்குப்பிராட்டியின்குணதிசயம் தெரியாதா? ஆஞ்சனேயர் தூது போய் வந்து சொல்லக் கேட்டதுதான் ஞாபகமில்லையா? இப்படிச் சந்தேகிக்க வேண்டியது என்ன?' என்று கேட்க, கம்பர், 'ஸ்ரீராகவன் வனப்பிரவேசம் பண்ணின பொழுது, தசரதன், 'கைகேசியல்லவோ இதற்குக் காரணமாயிருந்தாள்; ஆதலால், அவள் என் மனைவியுமல்லள்; அவள் வயிற்றில் பிறந்த பரதன் என் புத்திரனுமல்லன்,' என்று வெறுத்துரைத்தது பற்றி, அவர் வரவேண்டுமென்றும், அவர் வாக்கினுல் அவர்கள் மனைவியும் மைந்தனுமேயென்று சொல்லும்படி வரம் பெற வேண்டுமென்றும் கருதி, அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பது போல, இவ்வாறு நடித்ததன்றி வேறன்று,' என்றார். பாண்டியன் முதலானவர்கள், 'எம்பெருமான் கபட நாடக சூத்திரதாரியென்பது சத்தியமே,' என்று ஆனந்தித்தார்கள்.

சுவாமி பிராட்டியாருடனே இலங்கையிலிருந்து புஷ்பகமேறித் திருவயோத்தியை நோக்கிப் பிரயாணப்பட்டுப் பரத்துவாசருடைய ஆச்சிரமத்தில் வந்திருந்து, பரதனுக்குச் செய்தி தெரிவிக்கும்படி அனுப்பிய ஆஞ்சனேயர், அக்கினி குண்டத்தில் விழ யத்தனித்த பரதாழ்வானைக் கண்டு, 'ஸ்ரீ ராமர் வந்தார்,' என்று சொல்லிக் கீர்த்தியை கொடுத்தான். அப்பொழுது,

" வேதியர் தமைத்தொழும் ; வேந்த ரைத்தொழும் ;
தாதியர் தமைத்தொழும் ; தன்னை யேதொழும் ;
ஏதுமொன் றறிகிலா னிருக்கு நிற்குமால் ;
காதலென் றீதுமோர் கள்ளின் றேற்றமே."

என்ற பாடலைக் குறித்து, ' தமயன் வந்த சந்தோஷப் பெருக்கினால் பரதன் அங்கிருந்த பிராமணர்களைத் தமர்களைப் பார்த்து, 'சுவாமிகளே, உங்கள் ஆசீர்வாத பலத்தினால் எங்கள் தமயன் க்ஷேமமாய் வந்தான்,' என்று சொல்லி, அவர்களுக்குத் தண்டன் சமர்ப்பிப்பான்; தன்னை வணங்குதற்குரிய அரசர்களை நோக்கி, 'வேந்தர்களே, நீங்கள் நீதி தவறுது நடப்பதனால் எங்கள் அண்ணன் சத்துருஜயம் பண்ணி வந்தான் ' என்று சொல்லி, அவர்களையும் வணங்குவான் ; தங்கள் வீட்டில் வேலை செய்யும் பெண்களைக் கண்டு, ' அடி தாதிகளே, நீங்கள் புண்ணியம் செய்ததனால் என் தமயன் மீண்டு வந்தான்' என்று அவர்களையும் கும்பிடுவான் ; கடைசியில் தன்னைக் குறித்து, ' அடா பரதா, நீ நல்ல அதிருஷ்டசாலியாகையால் உங்கள் அண்ணன் வந்துவிட்டான்,' என்று சொல்லித் தன்னைத்தானே தொழுதுகொள்வான். தமயனும் அவனைச் சார்ந்தவர் வந்ததைப் பற்றியாவது கிருக கிர்த்தியத்தைக் குறித்தாவது இராச்சியத்தின் பொருட்டாவது இன்னது செய்ய வேண்டுமென்பது ஒன்றும் தெரியாதவனாக இருப்பான். அப்புறம் இப்புறம் அடி பெயராமல் எங்கே நின்றானை அங்கேதானே திகைத்து நிற்பான். இப்படியெல்லாம் அவன் பரவசப்படும்படி சம்பவித்ததனால், இந்தச் சகோதர வாத்சல்யத்தாலுண்டாகிய களிப்பும் கள்ளுண்ட பாவனையாகவே இருக்கின்றது,' என்று கம்பர் பிரசங்கிக்க, கொங்கு தேசாதிபதி, ' பரதன் பிராமணர்களைத் தொழுதது விசேஷமே; தோஷமன்று ; தன்னைப் பணியும் அரசர்களைத் தான் பணிந்ததோ தகாத செய்கை. அதுவும் பெரிதன்று, ஒரு பரியாயமாம் ; தாதியைத் தொழுதான் என்றதுதான் வரம்பு கடந்ததாக இருக்கின்றது,' என, கம்பர், ' அவன் சந்தோஷமாகிய சமுத்திரத்தில் மூழ்கிக் கரை காணுதிருந்தமையால், தான் மெய்ம்மறந்து எதிரே கண்டவர்களையெல்லாம், இன்னார் இனையரென்று தாரதம்மியம் பாராமற்றொழுதான். தாரதம்மியம் பாராவிடினும் தாதிமார் தனக்கு வேறுயிருப்பவர்களாகையால் அவர்களைத் தொழுததும் ஆச்சரியமன்று ; வேறல்லாததன்னையும் வேறுகக் கருதித் தொழுது கொண்டதே அதிக ஆச்சரியம்,' என்று சொல்லக் கேட்டு, யாவரும் மிகவும் அதிசயித்தார்கள்.

ஸ்ரீராமர் திருவயோத்திக்கு எழுந்தருளிய பொழுது பரதனும், முதன்மந்திரியாகிய சுமந்திரனும் வசிஷ்டரால் மகுடாபிஷேகத்திற்குச் சுபதினம் குறிப்பித்து, வேண்டிய உபகரணங்கள் சகலமும் சேகரித்துச் சப்பன்ன தேசங்களுக்கும் செய்தி தெரிவித்து, அந்தந்த அரசர்களும் முனிவர்களும் வந்து நிறைந்திருக்க, விபீஷணன், சுக்கிரீவன், ஜாம்பவந்தன் முதலானவர்களும் புடைசூழ, வானரப்

படைத் தலைவர்களும் வானர வீரர்களும் நெருங்கி நிற்க, சமுத்திர தீர்த்தத்தோடு புண்ணிய நதித் தீர்த்தங்களைக் கொண்டு மங்கள ஸ்நானம் செய்வித்து, திவ்வியமாகிய பீதாம்பரம் உடுத்து, நவரத்தின பூஷணம் தரித்து, பரிமள திரவியங்களும் புஷ்ப மாலை களும் சாத்தி, உன்னத சிங்காசனத்தில் சுவாமியை ஜானகி சமேத ராக எழுந்தருளி இருக்கச் செய்த சமயத்தில்,

> " அரியணை அனுமன் ருங்க வங்கத னுடைவாள் பற்றப்
> பரதன்வெண் குடை பிடிக்க விருவர்கள் கவரி வீச
> விரைசெறி கமலத் தாள்சேர் வெண்ணெய்மன் சடையன் தங்கள்
> மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி."

என்ற பாடலைக் குறித்து, 'ஆஞ்சநேயர் சிங்காசனத்தைத் தாங்க, அங்கதன் சுவாமியின் உடைவாளை ஏந்தி நிற்க, பரத மகாராஜன் வெண்கொற்றக் குடை பிடிக்க, லக்ஷ்மணரும் சத்துருக்கனரும் சாமரை வீச, இக்ஷ்வாகு முதலான சூரிய குலத்து அரசர்களெல்லாம் பரம்பரையாய்ச் சிரசில் தாங்கி அரசாண்டு வந்த மாணிக்க மய மான மகுடத்தை அபிஷேகித்துப் பூஜித்து, வேதப் பிராமணர்கள் தொட்டு ஆசீர்வதிக்க, மங்கலச்சங்கம் முதலாகிய வாத்தியங்கள் கோஷிக்க, வாசனை தங்கிய கமலாசனத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ மகா லக்ஷ்மி வாசம் செய்கின்ற திருவெண்ணெய்நல்லூர்க் கிராமாதிபதி யாகிய சடையப்ப முதலியாருடைய மரபில் அக்காலத்தில் தோன்றிபிருந்த உத்தமர்களாகிய வேளாளர்கள் எடுத்துக் கொடுக்க, பிரம ரிஷி சிரேஷ்டராகிய வசிஷ்டர் தமது கைகளால் வாங்கி, மந்திர வாக்கியங்களைச் சொல்லி, ஸ்ரீ ராகவருடைய திரு முடியில் தரித்து மந்திராக்ஷதைகளை இறைத்தார்; அத்தருணத்தில் தேவர்கள் புஷ்பவருஷம் வருஷித்துத் தேவதுந்துபி முழக்கி னார்கள்; யாகாக்கினி வலஞ் சுழித்து எழுந்தது; தர்மம் தழைத் தோங்கியது; மாதம் மும்மாரி பொழிய, முப்போகம் விளைய, புலியும் பசுவும் வைரமில்லாமல் ஒரு துறையில் தண்ணீர் குடிக்க, வருஞ்சிரம தருமம் வழுவாமல், தெய்வ பக்தி குன்றுமல், மனுநீதி கோடாமல் முறையே செங்கோல் செலுத்தி, வைதேகி மனோகரர் அரசாண்டிருந்தார்,' என்று கம்பர் பிரசங்கிக்கக் கேட்டு, அந்தச் சபையில் இருந்தவர்கள் யாவரும் பிரமானந்தம் அடைந்தார்கள்.

பிறகு சோழராஜன் சித்திரத் தொழிலில் மிகவும் நிபுணனாகிய ஒரு சிற்பனைக் கொண்டு ஸ்ரீ ராமர் பட்டாபிஷேக மகோற்சவத்தை விசித்திரமாக தத்ஜாதீயமாய்ப் படத்தில் எழுதுவித்துத் தன் அரண்மனைக்குச் சமீபத்தில் பட்டாபிஷேக மண்டபம் என்று ஓர் உன்னதமான மண்டபம் கட்டுவித்து, அதைச் சுவர்க்கம் போலச் சிங்காரித்து, அதன் நடுவில் ஒரு பத்மராகபீடம் ஸ்தாபித்து, அதன்மேல் அந்தப் படத்தை நாட்டி, மலர் மாலை சூட்டி, விதிவத்தாக ஆராதித்து, கம்ப ராமாயணப் புஸ்தகத்தைப் படத்தின் அருகே வைத்து, கந்த புஷ்பங்கள் சாத்தி,

மந்திராக்ஷதையால் அருச்சித்து, தூபதீபங்காட்டி, பின்பு, அதற்குச் சரிகை முகமற்கௌசீன இட்டு, பொன் மயமாகிய சித்திரப் பல்லக்கில் வைத்து, சோடச உபசாரத்துடனே அதை முன்னே கொண்டு செல்ல, பின்னே கம்பர் கவிச்சக்கரவர்த்திக்கு விலை உயர்ந்த பட்டாடைகளைத் தரித்து, சங்குசக்கரக் கடுக்கனும், நவ ரத்தின கண்டியும், வச்சிரப் பதக்கமும், முத்து மாலையும், தங்கக் காப்பும் கொலுசுமிட்டு, சந்தன புஷ்ப தாம்பூலமும் கொடுத்து, சப்த லட்சணமுடைய பட்டத்து யானைமேல் பொன்னம்பாரி வைத்து, அதன்மீது அவரை ஏற்றி, மேளதாளம் முழங்கத் தன் மந்திரி பிரதானிகள் சாமரம் போடச் சிறப்பாகக் கிராம பிரதக்ஷி ணம் பண்ணுவித்து, அவருக்குச் சத்திரம் சாமரம் திருச்சின்னம் முதலிய அநேக விருதுகளும் கொடுத்து ஸ்துதி செய்து, பிராமண ர் களுக்குக் கோதான பூதானங்களும், மற்றக் கவீசுவரர்களுக்குப் பல வித வெகுமானங்களும் செய்து, அரசர்கள் பிரபுக்கள் முத லானவர்க்குத் தக்கவாறு மரியாதைபண்ணி, அவரவர் இருப்பிடம் போய்ச் சேரும்படி விடை கொடுத்து அனுப்புவித்தான். அவர் களுக்குள் சிற்சிலர் போகும் பொழுது கம்பராமாயணத்தைப் பார்த்து ஒவ்வொரு பிரதி எழுதுவித்துக்கொண்டு போனார்கள். இராமாயண பிரசங்கம் செய்த பொழுதுதான் கம்பரைப் பாண்டிய ராஜன் அதிக அந்நியோந்நியமாகச் சிநேகித்தான் ; அதற்குமுன் அவ்வளவு நேசமில்லை ; அன்று தொட்டு அவனிடத்திற்குக் கம்பர் அடிக்கடி போகவும் வரவும், அவன் சமஸ்தானத்திலேயே சிலகாலம் மருவி இருக்கவும், அவனுல் வேண்டிய சகாயம் பெறவும் அவருக்கு இடம் உண்டாயிற்று.

கம்பர் சீவனந்தராயிருந்த காலத்தில் எப்பொழுதாவது எவ் விடத்திற்காயினும் போக வரச் சம்பவித்தால், முன் போலத் தனியே கால் நடையாகப் போகாமல், அன்று கருணாகரப் பாண்டி யன் அபிமானித்துக் கொடுத்த தந்தப் பல்லக்கின்மேல் ஏறி, குலோதுங்கச் சோழன் வியந்து கொடுத்த சுவேதக்ஷத்திரம் கவிக்க, சாமரம் வீச, திருச்சின்னம் ஊத, மற்றும் பற்பல விருதுகள் பிடிக்க, குடகு தேசாதிபதி கொடுத்த யானைகளும், மாறுவாடி தேசத்தரசன் கொடுத்த ஒட்டகங்களும், சிந்து தேசத்திறைவன் கொடுத்த குதிரைகளும், ஆந்திர தேசாதிபதி கொடுத்த கண்டவாள எருது களும் பெருங்கூட்டமாக ஒரு ராஜாவின் தண்டு வருவது போலத் தம்மைச் சூழ்ந்து வரும்படி பிரயாணம் பண்ணுவதுண்டு. இந்தக் கூட்டம் போகிற வருகிற மார்க்கங்களில் இவைகளுக்கு வேண்டிய ஆகாரங்களை ஆங்காங்குள்ள சோலைகள், தோப்புகள், கொல்லைகள், கழனிகளில் வேண்டிய மட்டும் பெற்றுக்கொள்வதற்குத் தடை யில்லை ; அந்த நஷ்டத்தை வருஷவாரியில் துரைத்தனத்தார் தங்களுக்கு வரும் மேல் வாரத்தில், ‘ கம்பர் போன வழி கண்டு கழித்தது இவ்வளவு,’ என்று கழித்துக் குடிகளுக்குக் கொடுப்பது பெரு வழக்கமாய் இருந்தது.

அந்நாளில் கம்பரையும் அவருடைய மாணக்கரையும் அடுத்துப் பல பெயர்கள் மேற்படி இராமாயணத்திற்குச் சம்பிரதாயமாகவும் சாதுரியமாகவும் உரை கேட்டார்கள். அப்புறம் அப்பல பெயரையும் அடுத்துப் பற்பலர் பாடம் கேட்டார்கள். இந்தப்படி அதன் பின்பும் காலக்கிரமத்தில் அநேகர் கர்ண பரம்பரையாக இராமாயணத்திற்கு உரை கேட்டு வந்தார்கள். கொஞ்ச காலத்திற்கு முன்பு அவ்வாறு கர்ண பரம்பரையாகப் பாடம் கேட்டுக் கிரமமாய்ப் போதிக்கத்தக்க வல்லமை பெற்றிருந்தவர்கள் ஆராரென்னில், தென்தேசத்தில் வசித்திருந்த பெத்தபெருமாள் பிள்ளை என்பவரும், சீகாழி அருணைசலக் கவிராயரும், மயிலை சீநிவாசப்பிள்ளையும், சேதுபதியின் வக்கீலாகிய சோமசுந்தரப் பிள்ளையும், தஞ்சாவூர் சமஸ்தான வித்துவான் இராமசுவாமிக் கவிராயரும், தொல்காப்பிய வரதப்ப முதலியாரும், காலேஜ் திருவேங்கடாசல முதலியாரும், திருத்தணிகைச் சரவணப்பெருமாள் கவிராயரும், புதுவைக் குறள் வேங்கடாசல உபாத்தியாயரும், காஞ்சீபுரம் அருணைசல தேசிகரின் பிதாவாகிய சண்முகக் கவிராயரும், திருநீர்மலை காளிங்கராயப் பிள்ளையும் மற்றும் சிற்சிலருமே. தற்காலத்திலும் அப்படிப்பட்ட சாமர்த்தியமுடைய சிலர் சென்னை ராஜதானி முதலான ஸ்தானங்களில் இருக்கின்றார்கள்.

சீகாழி அருணைசலக் கவிராயர், மணலி சின்னையா முதலியார் வீட்டில் கம்பராமாயணம் பிரசங்கம் செய்துகொண்டிருந்த பொழுது, ஒரு நாள் அம்முதலியார் கவிராயரை நோக்கி, 'இன்றைக்குத் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பூரண பாண்டித்தியமுள்ள பூம்பாவைக் குழந்தை முதலியார் இவ்விடத்திற்கு வருகிற படியினாலே பிரசங்கத்தை நிறுத்தி வைத்தால் யுக்தமாயிருக்கும்,' என்ன, கவிராயர், 'அப்படிப்பட்ட மகாவித்துவானுக்கு முன்பாகத் தான் ஆவசிகமாய்ப் பிரசங்கிக்க வேண்டும்,' என்று, அன்றைத் தினம் சுந்தர காண்டத்தில் பொழிலிறுத்த படலத்தில் அசோக விருக்ஷம் இவ்விதமாக உற்பத்தியாயிற்று என்றும், அது நெருங்கிய பசுமையாகிய இலைகளையுடைத்தாய் இருப்பதென்றும், அதனால் மிகவும் குளிர்ச்சியைக் கொடுக்கின்றதென்றும், காலை மாலை முதலிய எந்த வேளையிலும் தன்னிழல் தன்னைக் காத்து நிற்கின்றதென்றும், அந்நிழலின்கண் வந்தவர்களுடைய சோகத்தைத் தீர்ப்பதென்றும், அக்காரணத்தால் அசோகமென்று பெயர் பெற்றதென்றும், ஸ்திரீகள் பாததாடனம் செய்யப் புஷ்பிப்பதென்றும், அம்மலர் மன்மத பாணத்தில் ஒன்றென்றும், அது மன்மதனால் காமங் கொண்டவர்களுடைய கண்ணில் பிரயோகிக்கப்படுவதென்றும், அது போய் அவர்களுக்கு வெப்பத்தை விளைப்பதென்றும், அதன் நிறம் அக்கினி போல்வதென்றும், அதன் தளிர் காய் கனிகளின் குணம் இன்னதின்னதென்றும், அவ்விருக்ஷம் இக்காலத்தில் இல்லையென்றும், காணக் கிடையாத இவ்வசோகமென்று வேறொரு

மரத்தை வழங்குகிறார்களென்றும், அசோக மரத்தின் கன்றுகளை இராவணன் ஒரு தீவிலிருந்து எடுப்பித்து வந்து நாட்டி வனமாக வளர்ப்பித்தானென்றும், அவ்வனத்தில்தான் சீதை சிறையிருந்தாள் என்றும், பல விதத்திலும் நன்றாய்ப் பூரித்துப் பிரசங்கித்தார். குழந்தை முதலியார் அப்பிரசங்கத்தைக் கேட்டு, 'நான் இதுவரையில் இப்படிப் பிரசங்கித்தவர்களைக் கண்டதும் கேட்டதும் இல்லை,' என்று வியந்துரைத்ததாகச் சொல்வார்கள்.





[ஒட்டக்கூத்தரின் பெயர்க் காரணத்தை விளக்கும் ஒரு பயங்கரக் கட்டுரை இது. எனினும், பயனுள்ள சிறந்த கட்டுரை என்பதைப் படிப்பவர்கள் நன்கு உணரலாகும். கவிஞர் தம் இனத்தவரின் தியாகத் திறனை உலகத்தாருக்கு எடுத்துக் காட்டும் நிகழ்ச்சிச் சித்திரமாய் இது விளங்குகிறது. ஈட்டி எழுபது பாடுவதற்கு ஒட்டக்கூத்தர் கேட்டவை எழுபது தலைகள்! அவையும் ஒரு தாய்க்கு ஒரு மகனாய் இருக்கும் எழுபது பேரின் தலைகள். ஆனால், மக்கள் மகா கவியின் பாடலைப் பெறுவதற்காக அரிந்து கொடுத்த தலைகள் எழுபதுக்கும் மேற்பட்ட எத்தனையோ தலைகள்! அரிந்து கொடுக்கப்பட்ட தலைகள் மீண்டும்உடல்களுடன் ஒட்டிக் கொண்டு வீரர் உயிர் பெற்று எழும் செய்திகள் நம்மை மெய்ம்மறக்கச் செய்கின்றன! இடையே வரும் கிளைக் கதைகள் தலைவருக்காகத் தலைகளை ஈந்த தியாக ரத்தினங்களின் வரலாற்றைக் குறிப்பிடுகின்றன.

— பதிப்பாசிரியர்]

9

ஒட்டக்கூத்தர் 'ஈட்டியெழுபது' பாடியது

தந்துவாயர் என்னும் செங்குந்தர்கள் (கைகோளர்கள்) தங்கள் மரபில் பிரபல வித்துவானுயிருந்த ஒட்டக்கூத்தரிடத்தில் ஒருநாள் வந்து, 'ஐயா, கம்பர் வேளாளரைக் குறித்து ஏரெழுபதும், வண்ணியரைக் குறித்துச் சிலையெழுபதும் பாடினார்; பூர்வமே வைசியரைக் குறித்துச் சங்கத் தமிழாகிய சிந்தாமணி முதலிய பஞ்ச இலக்கியங்களுக்குள் ஒன்றான சிலப்பதிகாரம் செய்யப்பட்டு இருக்கின்றது:

அன்றியும், ஔவையானவள் பந்தன் என்னும் வணிகன்மேல் ஓர் அந்தாதியும், ஐவேல் அசதி என்னும் யாதவன்மேல் ஒரு கோவையும் பாடினள். கம்பர் திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப முதலியாரை ராமாயணமென்னும் மகாகாவியத்தில் ஆங்காங்கு எடுத்து உரைத்தார்; இப்படியெல்லாம் வைசியர், வேளாளர், வன்னியர், யாதவர் முதலானவர்கள் தத்தம் குலவளத்தைப் புலவர்கள் புகழ்ந்துரைக்கப் பாடல் பெற்றுச் சிறப்புற்றிருக்க, நமது ஜாதியார், பூஷணிகள் அணிவதற்குப் புண்ணியம் செய்யாத வறியவர் போல, அச்சிறப்பின்றி இருப்பது அழகோ? நமது மரபைக் குறித்துத் தாமாவது ஏதேனும் ஒரு பிரபந்தம் செய்யலாகாதா?' என்ன, அவர் அது கேட்டு, 'நீங்கள் விரும்பிய விஷயம் நல்லதுதான்; பாமாலை சூட்டப் பெற்றவர்களைச் சாமானியராக நினைக்க வொண்ணாது; மனிதர்களுக்குள் சிலர் செத்தும் சாவாதவர்களும், அநேகர் இருந்தும் செத்தவர்களுமாயிருக்கிறார்கள்; அவர்களில் செத்தும் சாவாதவர்கள் உதாரகுணம் உடையவர்களும், அதி சூரரும், வித்வசனர்களும், வித்துவான்கள் வாக்கினால் பாடல் பெற்றவர்களும், பிறரிடத்தில் இரவாதாரும் முதலானவர்களே; இவர்கள் தமது பூதவுடம்பு அழிந்தும் புகழுடம்பு அழியாது வளர்தலால் செத்தும் சாவாதவர்களாவார்கள்; இருந்தும் செத்தவர்கள், வறியரும், தீர்க்க ரோகஸ்தரும், கொண்ட மனைவிக்கு அஞ்சி விருந்தோம்பாதவரும், கல்லாத மூடரும், இரப்பவர்க்கு ஈயாதவரும், சுமை எடுத்துச் சீவிப்பவரும் முதலானவர்களே; இவர்கள் பூத உடம்பழியப் புகழுடம்பு வளராமையால், இருந்தும் செத்தவர்கள் ஆவார்கள். புலவர்கள் வாக்கினால் பாடல் பெற்றுச் செத்தும் சாவாதிருப்பவர்களும், பாடல் பெறுத மற்றவர்களும் உலகத்தில் மூவர்களாலும் மற்ற ஆழ்வார்களாலும் பாடல் பெற்ற திவ்விய ஸ்தலங்களும், அது பெறுத சாதாரண ஸ்தலங்களும் போலாவார்கள்; மேலும் புருஷ ஜன்மமெடுத்தவன் தத்துவஞானியாகவாவது, வித்துவானாகவாவது, மண்டலாதிபதியாகவாவது, தனவானாகவாவது, குணவானாகவாவது, கீர்த்திமானாகவாவது, தர்மவானாகவாவது, உதாரமுடையோனாகவாவது, சுத்த வீரனாகவாவது, அல்லது, கவீசுவரர்களால் பாடல பெற்றவனாகவாவது மகிமையுற்றிராளியின் கௌரவமும் பகுத்தறிவும் இல்லாத மிருகத்துக்கு ஒப்பாவான். ஆகையால், பாடல் பெற வேண்டியது ஆவசியகமே; ஆயினும், நம்மைக் குறித்துப் பிறர் பாடுவதன்றே தகுதி? நம்மை நாமே பாடிக்கொள்வது தகுதியா? அவ்வாறு செய்தால், தன்னைத் தான் புகழ்ந்ததாகவல்லவோ முடியும்? பார்ப்பவர்களும் கேட்பவர்களும், 'இஃதென்ன புதுமை? வேளாளர் முதலானவர்கள் கம்பர் முதலியோரால் பாடல் பெற்றதைக் கண்டு, இவர்கள் தங்களைத் தாங்களே பாடிக்கொண்டார்களே! இது, புலியைப் பார்த்துப் பூனை சூடிக்கொண்டது போலும் அல்லவா?' என்று பரிகாசம் பண்ண மாட்டார்களா?' என்றார்.

அதைக் கேட்ட செங்குந்தர்கள்,

"கற்ற வர்க்கும் நலநி றைந்த கன்னி யர்க்கும் வண்மைகை
உற்ற வர்க்கும் வீர ரென்று யர்ந்த வர்க்கும் உலகையாள்
கொற்ற வர்க்கும் உண்மையான கோதில் ஞான சரிதராம்
நற்ற வர்க்கு மொன்று சாதி ; நான்மை தீமை இல்லையே."

என்றபடி, 'கற்றுணர்ந்த பூரண பண்டிதர்களுக்கும், பருவம் நிறைந்த கன்னிகைகளுக்கும், கொடையாளர்களுக்கும், புறம் கொடாத வீரர்களுக்கும், உலகாளும் அரசர்களுக்கும், மெய்ஞ் ஞானிகளுக்கும் ஜாதிபேதம் இல்லை' என்பதனாலும், 'தன்னைப் புகழ் தலும் தகும் புலவோற்கே' என்பதனாலும், 'சந்நியாசிக்கும் சாதி அபிமானம் போகாது' என்பதனாலும், நீர் நம்மைக் குறித்துப் பாடுவது யுக்தமே அல்லது அயுக்தமன்று,' என்றார்கள். ஒட்டக் கூத்தர், 'உங்கள் இஷ்டப்படிக்குப் பாடினால் நமக்கு என்ன பரிசு கொடுப்பீர்கள்?' என்று கேட்க, அவர்கள், 'உமக்கு வேண்டிய திரவியம் கொடுப்போம்,' என்ன, இவர், 'நமக்குத் திரவியத்திற்கு என்ன குறைவு? சோழராஜன் கொடுத்தது அளவிறந்த பாக்கியம் இருக்கிறது; ஆதலால், நீங்கள் திரவியம் கொடுக்க வேண்டிய தில்லை,' என, அவர்கள், 'பின் என்ன உமக்கு வேண்டியதோ அதைச் சொன்னால் தடையின்றி நடத்துவோம்,' என்ன, இவர் 'ஒவ்வொரு பாடலுக்கு ஒவ்வொன்று விழுக்காடு எழுபது தலைச்சன் பிள்ளைத் தலைகளைப் பரிசாகக் கொடுத்தால், நமது ஆயுதமாகிய ஈட்டியைச் சுட்டி எழுபது பாட்டில், 'ஈட்டியெழுபது' என ஒரு பிரபந்தம் செய்கிறோம்,' என்று சொல்ல, அவர்கள் எக்காலத்தும் தங்கள் செவியில் கேளாத பயங்கரமான அந்தச் சொல்லைக் கேட்ட பொழுது திடுக்குற்று, 'இஃதென்ன கோரம்! கூத்துப் பார்க்கப் போனவிடத்தில் பேய் பிடித்தது போலவும், பிள்ளை வரத்துக்குப் போனவள் புருஷனைப் பறிகொடுத்தது போலவும் இருக்கிறதே! இவர் நம்மவராய் இருக்கிறார் என்ற பாத்தியதையைப் பற்றிப் பாட்டுப்பாட வேண்டுமென்று சகஜமாகக் கேட்டால், கொஞ்சமாவது இரக்கமில்லாமலும் தாக்ஷண்யமில்லாமலும் பாடலொன்றுக்கு ஒரு தலை வீதமாக எழுபது தலை கொடுக்க வேண்டுமென்றும், அவைகளும் தாய்க்குத் தலைப் பிள்ளையின் தலைகளாக இருக்க வேண்டும் என்றும் துணிந்து சொல்லுகிறரே! இது என்ன விபரீதம்? எங்கே யாவது தலையும் கொடுப்பார்களா? இவருக்குப் பாட வேண்டு மென்று மனம் இருந்தால் இப்படிச் சொல்வாரா? பாடக்கூடா தென்ற எண்ணத்தைக் கொண்டல்லவோ, 'ஏடாகோடக்காரனுக்கு வழியெங்கே?' எனில், 'போகிறவன் தலைமேலே' என்பார் போல, அகட விகடம் பேசுகிறார்; இதற்கு என்ன உத்தரம் சொல்லுவது?' என்று ஒன்றும் தோன்றுமல் மரம் போல அசைவற்று மௌனமாய் இருந்தார்கள்.

ஒட்டக்கூத்தர், 'நாம் கேட்ட கேள்விக்கு நீங்கள் ஒன்றும் சொல்லாமல் இருக்கிறதென்ன?' என, இவர்கள், 'ஐயா,

'செல்வம் சொல்லுக்கஞ்சாது,' என்பதற்குச் சரியாய்க் கேட்க உமக்கு நாக் கூசவில்லை; மறு மொழி சொல்ல எங்களுக்கு நாவெழவில்லை; என் செய்வோம்! நம்முடைய மரபின் மகிமை விளங்கும்படி பாடல் பாட வேண்டுமென்று நாங்கள் உம்மைப் பிரார்த்தித்தவிடத்தில் தலை கொடுக்க வேண்டுமென்கிறீர். பாட்டுக்காகத் தலை கொடுத்தவர்கள் யார்? கேவலம் அசாத்தியத்தில் கொண்டு வந்து விட்டுவிட்டீரே!' என்றார்கள். அதற்கு இவர் புன் சிரிப்புச் சிரித்து, 'என்ன காணும், 'யானைமேலேறுவேன், வீரமணி கட்டுவேன், அகப்பட்ட பெயர்களைத் தலையை உடைப்பேன்!' என்கின்ற விளையாட்டுப் பிள்ளைகளுக்குள்ள தைரியமும்,' யாராவது என்னைத் தூக்கிமாத்திரம் பிடிப்பார்களானால் நான் பிணக்காடாக வெட்டுவேன்!' என்ற முடவனுக்குள்ள வீரமுங்கூட உங்களுக்கில்லையே! யார் தலை கொடுப்பார்களென்கிறீர்களே! குமணமராஜன் காட்டில் போயிருக்கும் பொழுது, அவன் தம்பியாகிய அமணராஜன் மாச்சரியத்தால், 'என் தமயன் தலையைக் கொண்டு வருகிறவர்களுக்குக் கோடி பொன் கொடுக்கிறேன்,' என்று சொன்ன சமயத்தில், ஒரு வித்துவான் குமணன்மேல் கவி பாடிக் கொண்டு போய்ப் பரிசு கேட்க, அவன், 'நான் செல்வமுடையவனையிருந்த அக்காலத்தில் வரவில்லை, வறியவனையிருக்கின்ற இக்காலத்தில் நீர் வறுமையினால் மெலிவுற்று வந்தடைந்தீர்; ஆயினும், என்ன! என் தலையைக் கொய்துகொண்டு போய் அமணனிடத்தில் கொடுத்து, அவன் அதற்காகக் குறித்த திரவியத்தை வாங்கி உமது வறுமையை நிவர்த்தி செய்து கொள்ளும்,' என்னும் கருத்தை உள்ளடக்கி,

> " அந்தநாள் வந்திலை அருங்கவிப் புலவோய்!
> இந்தநாள் வந்தெனை நொந்துநீ அடைந்தாய்
> தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்து
> விலைதனை மீட்டுன் வெறுமைநோய் களையே."

என்று ஓரகவல் பாடி. தன் உடைவாளையும் அப்புலவன் கையில் எடுத்துக் கொடுக்கவில்லையா? ஒரு வணிகனுக்காகப் பழையனூரில் வேளாளர் எழுபது பேர் தங்கள் உயிரைக் கொடுத்துச் சத்தியத்தை நிலை நிறுத்தவில்லையா? இந்தப் பிரதேசத்திலேயே கொஞ்ச காலத்திற்குமுன் ஓர் ஊரில் நிறையேரியில் அலையடிக்க, அதன் கரையின் ஒரு பக்கத்தில் கொஞ்சம் மண் கரைந்தோடினதை அருகிலிருந்த ஓர் உழவன் கண்டு, இனி இரண்டொரு நிமிஷம் சும்மாவிருந்தால் கரையுடைந்து போகுமென்றும், அந்த இடத்தை மண் வெட்டிப் போட்டு அடைத்துப் பலப்படுத்துவோமென்றால், அவ்வளவு சாவ காசத்திற்கு இடமில்லை ஆதலால், முதலுக்கே மோசம் வருமென்றும் நினைத்துப் பரிதவித்துத் தன்னுடன் உழவுத் தொழில் செய்துகொண்டிருந்தவனைப் பார்த்து, 'நீ இந்தத் தர்ம சங்கடமான தருணத்தில் முன்பின் யோசனை பண்ணுமல் என்னை வெட்டி

யெடுத்து அந்த உடைவாயில் போட்டு அடை,' என்று சொல்ல, அவன் அப்படியே மண்வெட்டியினால் அவனை இருதுண்டாக வெட்டிப் போட்டு அடைக்கவில்லையா? உதார புருஷனுக்குப் பொருளும், சுத்தவீரனுக்குப் பிராணனும் திரணமாத்திரந்தானே? இது ஒரு அதிசயமா? தலை கொடுக்கிறது என்பது நம்முடைய குலத்தாருக்கு விஷயமேயன்று ; நம் முன்னோர்கள் உயிரை விடுவதற்கு அஞ்சாத அதிசூரர்களாய் இருந்தார்கள் என்பதையும் நீங்கள் கேள்விப்படவில்லையா? புலியானது பூனையாய்விட்டது போல இப்படி அதைரியப்பட்டுப் பின் வாங்குவீர்களாகில் உங்களுக்குப் பாடல் வேண்டுமென்னும் இச்சை ஏன் உண்டாயிருக்கின்றது? அந்த எண்ணத்தை விட்டுவிடுங்கள்,' என, அவர்கள், ' நம்முடைய முன்னோர்கள் அதிசூரர்களாயிருந்தவர்கள் என்றீரே, எப்படி?' என, ஒட்டக்கூத்தர் சொல்லுகிறார் :

' கேளுங்கள் சுற்றத்தார்களே, பூர்வம் மிக்க கல்வியும், தக்க செல்வமும், ஜீவகாருண்யமும், அழகும், ஆண்மையும், சற்சன சகவாசமும், நீதி கோடாமையும், பொறுமையும் உடையவனும் அரசாண்டிருந்த நீதிநெறிச் சோழன் காலத்தில், ஒரு விதத்திலும் குறையாத வல்லமையுடையான் என்னும் காரணத்தால் வல்லான் என்று பெயர் பெற்ற ஓர் வீரன் இருந்தான். அவனே, மற்றவர்களைப் போல நாடுகளில் ஊர்களில் வசிக்கின்றவன் அல்லன். கம்பம் என்னும் கிராமத்தின் ஏரியைப்பார்க்கிலும் மிகவும் பெரிதாய் எக்காலத்திலும் வற்றுத சமுத்திரம் போல அதிக ஆழமாகிய ஓரேரி நடுவில், அடி முதல் நுனி வரையில் ஒரே அளவாகத் திரண்டு ஜலத்துக்குமேல் நூறடியும் நீண்டு, ஆளேறக்கூடாமல் வழு வழுப்பாயிருக்கின்ற பிரமாண்டமான இரும்பு ஸ்தம்பங்களை நாட்டி, அந்த ஸ்தம்பங்களின்மேல் இரும்புத் தூலங்கிடத்தி, அதன்மேல் இரும்புக் கைகள் நிரைத்து, அகைளின்மேல் இரும்புத் தகடு பரப்பி, அத்தகடுகளை இருப்பாணிகளால் தைத்து, அவ்விடத்தில் மகாமேருவும் இணையல்ல என்னும்படி கற்பாந்தகாலம் அறியாத உன்னதமாகிய மூன்றடுக்கு உப்பரிகை சமைத்து, உப்பரிகையைச் சுற்றிப் பல வகையான காய்கனிகள் தேமலர்களைத் தருகின்ற செடி, கொடி, மரங்கள் நெருங்கியதாய் மயில்கள், குயில்கள், கிளிகள், பூவைகள் முதலிய பலவகைப் பறவைகளும் ஆடிப் பாடிக் கூவிக் கொஞ்சி விளையாடுவதாய், கோடை காலத்திலும் தண்ணென்று நிழலார்ந்த ஓர் இளஞ்சோலையை உண்டாக்கி, அச்சோலைக்குச் சூத்திரத்தின் வழியாக அவ்வேரிநீர் பாய்ச்சி, அதை அபிவிருத்தியாகும்படி செய்து, தேவர்களுடைய சொர்க்கம் போல விளங்குகின்ற உசிதமான அந்த ஸ்தானத்தில், அவன் தனக்கு வேண்டிய ஆடுகள், மாடுகள், பசுக்கள், கன்றுகளும் வஸ்திராபணங்களும் வீட்டுத் தட்டு முட்டுகளும், சகலவித தானிய தவசங்களும் மற்றும் அளவிறந்த திரவியங்களும், குபேரனைப் போலக் குறைவில்லாமற் சேகரித்து வைத்துக்கொண்டு

எவ்வளவும் சத்துரு பயமின்றி ஒருவரும் தனக்குச் சமானுதிகம் இல்லை என்னும்படி நெடுநாள் வாழ்ந்திருந்தான்.

அவனிடத்தில் *சரகேசரி சக்கரகேசரி என்ற இரண்டு புரவிகளும், ஒரு வஜ்ர வாளும், வஜ்ர தண்டமும், வஜ்ர கவசமும் இருந்தன. அவன் நாள்தோறும் இராக் காலத்தில் நல்ல நடு நேரத்தில் அந்தக் கவசத்தை உடலில் தரித்து, வஜ்ர வாளையும் கதையையும் கையிலேந்திச்சரகேசரி சக்கரகேசரிகளில் ஒன்றின்மேல் ஏறி அதிக வேகமாக அதை ஆகாச மார்க்கத்திலேயே நடத்திக் கொண்டு போய், அரசர்களுடைய கோட்டை கொத்தளங்களையெல்லாம் அனாயாசமாகத் தாண்டிச் சென்று, வாசல்களில் இட்டிருக்கும் கற்கதவு இருப்புக் கதவுகளை அக்கதையினால் அடித்து உடைத்துத் தூள் தூளாக்கி உட்புகுந்து, எதிர்த்தவர்களை வஜ்ர வாளுக்கு இரை கொடுத்து, அவர்கள் பொருள்களை எல்லாம் கொள்ளையிட்டுச் சூறையாடி, ஸ்திரீகளையும் சிறை பிடித்துக் கொண்டு போவான். அவனுடைய உபத்திரவம் எப்படிப்பட்டவர்களுக்கும் எங்கும் தலை வைத்துப் படுக்கக்கூடாது. இவ்வாறு வெகு நாளாய் நடந்து வருகையில் மேற்சொல்லிய சோழராஜன், 'இந்த யமராக்ஷசனைப் பிடித்துச் சிறை செய்யலாம் என்று பார்த்தால் அகப்படுகிறவனுய் இருக்கவில்லையே! இவனுடன் யார் போராட வல்லவர்கள்! அம்புகள் குண்டுகள் முதலானவைகளைப் பிரயோகித்தாலும் பயன்படவில்லையே! இவனையும் ஜயிக்கக்கூடுமா! இந்தப் பாதகன் ஏழரையாண்டுச் சனி போலத் தோன்றினனே! இவனை அடக்கத்தக்க உபாயந்தான் என்ன? உங்களில் எவராயினும் வல்லானை வெல்ல வல்லவர்களிலிருந்தால் புறப்படுங்கள், பார்ப்போம்,' என்று, தன் சபையிலுள்ள சேனைவீரர்களை நோக்கி அதிக துக்கத்துடன் சொன்னன்.

'அப்பொழுது அங்கிருந்த அதிரதர் முதலாகிய இரதவீரர், யானைவீரர், குதிரைவீரர், வில்வீரர், வாள்வீரர், வேல்வீரர்களும் குடல் குழம்பிச் சிங்க சொப்பனம் கண்ட யானை போலக் கை கால் விதிர்விதிர்க்க, 'அடா அப்பா! வல்லானை வெல்ல வல்லவர்களும் உண்டா? கடல் முழுதும் கவிழ்ந்து குடிக்கலாமா? வடவாக்கினியை வாய்நீரால் அவிக்கலாமா? மலையை மயிர் முனையால் தொளைக்கலாமா? அவன் பெயரைச் சொன்னலும் அழுத பிள்ளையும் வாய் மூடுமே! அவன் வானத்தையும் வில்லாக வளைப்பான்; மணலையும் கயிறுகத் திரிப்பான். ஆதலால், அவனை வெல்வது

*சரகேசரியென்பது கேசரிமார்க்கத்தில் அம்புவிட்டாற் போல வேகமாய்ச் செல்வது. சக்கரகேசரி அம்மார்க்கத்தில் சக்கரம் போலச் சுழன்று செல்வது. வஜ்ரவாள் இரும்பு முதலிய லோகங்களையெல்லாம் துணித்தெறிவது. வஜ்ர கதை, அதாவது தண்டம், கோட்டைகளின் கற்கதவு முதலானவைகளையும் உடைத்தெறிவது. வஜ்ரகவசம் அம்பு குண்டு முதலியவைகள் பட்டுருவாமல் அவைகள் பொடிப் பொடியாய்ப் போக உடலைக் காப்பது.

அசாத்தியம்! அசாத்தியம்! எங்களாலே முடியாது!’ என்று சொல்லி ‘ஆற்காட்டிலே சண்டையானால் சந்தமாமா, அடுப்பங்கரையில் ஒளித்திருப்போம் சந்தமாமா; வேலூரிலே சண்டையானால் சந்த மாமா, வேலிப் புறத்தில் ஒளித்திருப்போம் சந்தமாமா,’ என்று அஞ்சி ஓடுகின்ற நபுஞ்சகர்களைப் போலப் பின்னிட் டார்கள். அத்தருணத்தில் நம்மவர்களாகிய செங்குந்தர் களில் சூரன் முதலிய பதினெட்டுப் பேர்கள் தங்கள் தலைவ னுகிய அதிசூரன் என்பவனுடனே உக்கிரமாய் எழுந்து, ‘காயமென்ன கற்கண்டா? உயிரென்ன தித்திப்பா? ஆறிலும் சாவு, நூறிலும் சாவு!’ என்று அட்டகாசம் செய்து, அந்த ராஜசபை கிடுகிடென்று அதிரச் சிங்கம் போலக் கர்ச்சித்து நின்று அரசனை நோக்கி, ‘மகாபிரபு, நீர் எவ்வளவும் அஞ்ச வேண்டா; உம்முடைய தயையைத் தலைமேல் தாங்கிக்கொண்டு நாங்கள் போய் ஒரு வாரத்திற்குள்ளே அவசியம் அந்தப் பொல்லானுகிய வல்லான் தலையைக் கொண்டு வருகிறோம். கொண்டு வாராமற்போனால், தாய் தந்தையர் களைக் கொலை செய்தவர்களும், சிநேகத் துரோகம் செய்தவர்களும், குருமொழி கடந்தவர்களும், நம்பியடுத்தவர்களைக் கைவிட்டவர் களும், உண்ணும் சோற்றில் நஞ்சு கலந்தவர்களும், பெரியோரைத் தூஷித்தவர்களும், மனைவியைப் பிறர்பால் விடுத்துச் சீவனம் செய் பவர்களும் போகுங் கதியில் போகக்கடவோம்,’ என்று பிரதிக்ஞை செய்தார்கள். நீதி நெறிச் சோழன் சந்தோஷப்பட்டு, ‘அப்படியே அவனை வென்று வரக்கடவீர்கள்,’ என்று அவர்களுக்கு மரியாதை செய்து உத்தரவு கொடுத்தனுப்ப, அப்பதினெட்டுப் பெயர்களும் புறப்பட்டுப் போய், இராத்திரியில், வல்லானுக்கு வாசஸ்தலமாகிய ஏரியருகில் சேர்ந்து, ‘அம்மம்ம! இதைப் பார்க்கவும் பயமாயிருக் கிறதே! அந்தச் சண்டாளன் மற்றவர்களைப் போல நாடுகள் ஊர் களில் வாசம் செய்யலாகாதா? அவ்விடங்களில் இருந்தால் தனக்கு அபாயம் வருமென்று நினைத்தாலும், காடுகள் மலைகள் கெபிகளி லாவது மறைவாய் வசிக்கலாமே! அங்கும் சேராமல் பாதா ளத்தை ஊடுருவியிருக்கின்ற இந்த ஏரியைத் தேடி வந்து இதன் மத்தியில் அழிவில்லாத வீடு கட்டிக்கொண்டிருக்கிறானே! இவ் வேரியோ இலேசானதல்லவே! கொஞ்சங்குறைய நூறு புருஷ பாகம் ஆழ்ந்திருக்கின்றதே! இதில் எப்படி இறங்குவது?’ என்றும், ‘நீந்திச் செல்வோமென்றாலும் கண்ணுக்கு எட்டாத வெகுதூர விசாலமுடையதாகையால், காலோய்ந்து போமே!’ என்றும் நினைத்து, ‘இவ்விடத்தில் படவாவது தெப்பமாவது கிடைக்குமா?’ என்று தேடியும் கிடையாமையாலும், தெப்பம் கட்டுகிறதற்குச் சமீபத்தில் கம்பு கழிகளைக் காணுமையாலும், ‘வேறென்ன செய்வது!’ என்று திகைத்தார்கள்.

‘பிறகு, ‘ஆனதாகட்டும், எப்படியும் முன் வைத்த காலைப் பின் வைக்கலாகாது,’ என்று, தங்களில் எட்டுப் பேர்களை வெட்டித்

தெப்பமாகச் சேர்த்து, அவர்கள் தோள்களேத் துணித்துத் தெப்ப மரத்தின் குறுக்குக் கழிகளாக இணேத்து, குடல்களேப் பிடுங்கிக் கயிறுகத் திரித்து இறுக்கித் தெப்பம் கட்டி நீரில் போட்டு மிதக்கப் பண்ணி, அப்பிணத் தெப்பத்தின் மேல் பத்துப் பேரேறி நடத்திக் கொண்டு போய் இருப்புக் கம்பத்தைக் கிட்டி அதன் மேல் தொத்தி யேற, அது ஏறக்கூடாமல் ஓழுவழுக்கின்றது கண்டு, அந்த வழு வழுப்பை மாற்றுவதற்கு ஏழு பெயர்களே வெட்டி அவர்கள் இரத்தத்தைவாரிக் கம்பத்தின் மேல் இறைத்தார்கள். இரத்தம் களிப்புடையதாகையால் அது சொத்துப் போலக் கம்பத்தில் ஒட்டிக்கொண்டு அவ்வழுவழுப்பைச் சிறிது மாற்றினவளவில், மூன்று பெயர்கள் சரக்கு மரம் ஏறுகிறவர்களேப் போலத் தத்தம் உத்தரியத்தைக் கம்பத்தில் அடிக்கடி சுற்றி, ஏணிப் பழுவின்மேல் கால் வைத்து ஏறுகிறது போல, அதன்மேல் அடி வைத்து இலகுவாய் ஏறிப் போய்ச் சூரன் அதிசூரன் என்கிற இரண்டு பெயர், வல்லான் படுக்கையறையில் புகுந்தார்கள். ஒருவன் குதிரை லாயத்தில் போனன். அவனேக் குதிரைகளில் ஒன்று கண்டு மருண்டு, முன்னங் கால் பின்னங்கால்களில் கட்டப்பட்ட அகாடி பிச்சாடிக் கயிறு தொடுத்திருந்த முளைகளேப் பிடுங்கிக்கொண்டு இடி இடித்தது போல உரக்கக் கனைத்து, அங்குமிங்கும் ஓடத் தலேப்பட்டது. அந்த அரவத்தால் அங்கே உடம்பு தெரியாமல் பிணம் போலக் கிடந்து தூங்கின குதிரைக்காரன் மருண்டு விழித்தெழுந்து பரபரப்பாக ஓடிப் போய்க் குதிரையைப் பிடித்துச் சமாளிக்கப் பண்ணித் திருப்பிக்கொண்டு வருவதறிந்து, இலாயத்திலிருந்த நம்மவன் தன்னேக் குதிரைக்காரன் கண்டால் சந்தேகப்படுவானென்று அக் குதிரைக்குப் படுக்கை போட்டிருந்த புல்லுக் குப்பையின் கீழே போய்ப் பதுங்கியிருந்தான். அவன் இருப்பதை அறியாமல் குதிரைக்காரன் குதிரையைக் கொண்டு வந்து அவ்விடத்தில் நிறுத்தி, தூக்க மயக்கத்தில் முளையை அவன் முதுகின் மேல் வைத்து ஆழ அடித்துவிட்டுப் போய்ப் படுத்துக்கொண்டான். முளை அவன் முதுகில் தைத்து மார்பில் உருவினதனுல் அவன் இறந்துபோனன்.

'முன்பு படுக்கையறையில் போன இருவரும் அங்கே அநேக சூரியர் உதயமானுற்போலச் சுடர் விட்டெரிகிற கிளை விளக்கு, தேர் விளக்கு, கால விளக்குகளேயும் வரிசை வரிசையாகச் சுவர் முழுதும் நிரைத்திருக்கின்ற நிலேக்கண்ணுடிகளேயும், விதம் வித மான சித்திரப் படங்களேயும், வீணை, தம்புரு, மிருதங்கம் முதலாகிய பற்பல வாத்தியக் கருவிகளேயும், இந்திர விமானம் போல நவரத் தினமயமாய் இலங்குகின்ற உன்னதமாகிய சப்பிரகோள மஞ்சத்தை யும், அதன் மேற்பக்கத்தில் விசாலமாயிருக்கின்ற அழகான சரிகை விதானத்தையும், அதைச் சுற்றிக் கட்டிய பல வர்ணஜாலர்களேயும் முத்துக் குஞ்சுகளேயும், நாற்புறத்திலும் அடிவரையில் தொங்கவிடப் பட்டு உட்புறத்திலுள்ள விசித்திரங்களேயெல்லாம் விசதமாகத்

தெளிந்த கண்ணுடி போலக் காட்டுகின்ற மெல்லிதான ரவை சல்லாத் திரையையும், கட்டிலின்மேல் மயிர், அன்னத்தூவி, பஞ்சு முதலியவற்றுல் தைத்து இட்டிருக்கும் ஐந்தடுக்கு மெத்தைகளையும் அவைகளின் மேல் அகல விரித்திருக்கும் சலவைத் துப்பட்டியையும், அதன்மேல் போட்டிருக்கும் விலையுயர்ந்த முகமல் திண்டு தலையணைகளையும், கட்டிலைச் சுற்றி அணியணியாக நிறுத்தியிருக்கும் நாநாவித சூத்திரப் பிரதிமைகளையும், அவைகளில் சில சாமரை போடுவதையும், சில ஆலவட்டம் அசைப்பதையும், சில மணியடிப்பதையும், சில எக்காளம் ஊதுவதையும், சில பேரிகை முழக்குவதையும், சில படைவீரர் போல நிரை நிரையாக வருவதையும், சில அவைகளுக்கெல்லாம் தளகர்த்தர் போலக் குதிரையேறி வருவதையும், சில துப்பாக்கி முதலிய ஆயுதங்களைக் கொண்டு யுத்தபாவனை காண்பிப்பதையும், சில மத்தளம் கொட்டுவதையும், சில தாளம் போடுவதையும், சில வீணை வாசிப்பதையும், சில நடனம் செய்வதையும், அருகில் தங்கத் தாம்பாளங்களில் அடுக்கடுக்காய் வைத்திருக்கும் போளி, சுகியம், லட்டு முதலாகிய பல காரங்களையும், பொற்செம்புகளில் பசுவின் பாலைக் கறந்து கற்கண்டு போட்டுக் காய்ச்சி நிரப்பி வைத்திருப்பதையும், மரகதத் தட்டுகளில் சீவிய வாசனைப் பாக்குடனே விதவிதமாக மடித்து வைத்த வெற்றிலைச் சுருள்களையும், பவள வள்ளத்தில் வைத்திருக்கும் கர்ப்பூரம், சாதிக்காய், ஏலம் கிராம்புகளையும், வஜ்ரக் கரண்டகங்களில் நிறையத் திணித்து வைத்திருக்கும் முத்துச் சுண்ணம்பையும், மாணிக்கக் கிண்ணத்தில் அத்தர், புனுகு, ஜவ்வாது கலந்து குழைத்து வார்த்து வைத்திருக்கும் கலவைச் சந்தனக் குழம்பையும், நவரத்தின மயமாகிய கழுத்து நீண்ட செப்பில் நிரப்பியிருக்கும் விலையுயர்ந்த பன்னீரையும், வாயகன்ற தங்கத் தட்டுகளில் சித்திர விசித்திரமாகத் தொடுத்து வைத்திருக்கும் பரிமளப் பூச்செண்டுகளையும், தலைமாட்டுப் பக்கத்தில் அந்தக் கட்டிலின் கிட்ட வைத்திருக்கும் கோமேதகத் தம்பலப் படிகத்தையும், அந்த மஞ்சத்தின்மேல் காஷ்மீரப் பொற்சரிகைப் பூஞ்சால்வையை நெடுக விரித்துச் சொகுசாகப் போர்த்துக்கொண்டு போக தேவேந்திரனைப் போல வல்லான் படுத்திருக்கிறதையும், அவன் பக்கத்தில் இந்திராணி தேவி போல அதிரூப சௌந்தரிய முடைய ஒரு பெண் திவ்வியமான வஸ்திராபரணங்களால் தன்னை அலங்கரித்துச் சுகந்த சந்தனுதி பரிமள நிரவியங்களைத் தரித்து, வெகுதூரம் குமுகுமுவென்று மணக்கின்ற மலர்மாலை சூடி, ஓயிலாகச் சயனித்திருப்பதையும் பார்த்து அவர்கள் ஆச்சரியப் பட்டார்கள்.

'மற்றும், அங்குள்ள அதிசயங்களையெல்லாம் நோக்கிக் கண்களித்து, 'இந்தப் படுக்கையறை சமைத்திருக்கிற விசித்திரமும், இதைச் சோடித்திருக்கிற சோடிப்பும், எங்கே உண்டு!' என்று தங்களுக்குள்ளே நினைத்து, வல்லானுக்குச் சமீபத்தில் போய், அவனை,

'அடா முண்டை மகனே! உனக்கு இவ்வளவு பாக்கியமும் எங்கிருந்து கிடைத்தது? நீ எத்தனையோ பெயர்களை நாள்தோறும் கண்கலக்கம் கொள்ளும்படி அடித்துப் பறித்து ஆரவாரம் கண்டவனல்லவா? இப்பொழுது ஒன்றும் அறியாதவன் போல அமைவாகக் கும்பகர்ணனைப்பார்க்கிலும் பெருந்தூக்கம் தூங்குகிறையே! உனக்கு வெட்கம் இல்லையா? நீ கெட்ட கேட்டுக்கு இத்தனை போகமா?' என்று வைது, 'இனித் தாமதிக்கலாகாது. தாமதித்தால் பொழுது விடிந்து போம். அப்புறம் இவனை ஆராலும் வெல்ல முடியாது,' என்று, அதிசூரன் வல்லான் மார்பின்மேல் பிரம ராக்ஷசன் போலக் கொப்பெனக் குதித்தேறி உட்கார்ந்து, இடக் கையினால் அவன் கழுத்தை இறுகப் பிடித்து, வலக் கையில் இருந்த வீரவாளைக் கழுத்தில் பூட்டி அறுக்கப் போனான்.

'அச்சமயத்தில் ஒருவன் தன் கழுத்தை அறுக்கிறதாக வல்லான் கனவு கண்டு பயந்து, திடுக்கென விழித்துக்கொண்டு, தன் மார்பின்மேல் எமனைப் போல ஏறி மண்டி போட்டிருந்து கழுத்தை அறுக்க எத்தனித்தவனைக் கண்டு, 'நாம் இப்பொழுது கண்ட சொப்பனமும் இதற்கு முன் எட்டு நாளாய்க் கண்டு வந்த துர்நிமித்தங்களும் தப்பாமல் பலித்தன; பாதாள பரியந்தம் ஆழ்ந்த கடல் நடுவில் திரிலோக பயங்கரனாகிய இராவணேசுவரன் ஆச்சந்திரகாலம் அழிவில்லாத கோட்டை கட்டிக்கொண்டு நிர்ப்பயமாக வாழ்ந்தது போல, இந்த அகாதமான ஏரி நடுவில் அபேத்தியமான வீடு கட்டிக்கொண்டு, சத்துருக்களால் பிராண பயம் இல்லாமலிருந்த நம்மிடத்தில் வருவதற்குக் கொஞ்ச மாவது அச்சமில்லாமல் ஒரு அடியெடுத்து வைக்கத்தான் யாராலே கூடும்? இவ்வளவு தைரியத்துடனே எல்லாத் தடைகளையும் பேதித்துக்கொண்டு வந்தபடியினாலே இவன் அசகாயசூரனாய் இருக்க வேண்டும்; ஆதலால், இனி, நாம் நமது உயிரின்மேல் ஆசை வைக்க வேண்டியதே இல்லை; ஏதோ நமக்கு இதுவரையில் ஜயகால மிருந்ததனால் வெகுகாலம் அபாயமின்றி வாழ்ந்தோம்: அஃது இன்றையோடே தொலைந்து போய்விட்டதாக வேண்டும்; ஓடுகிற ஆறு எப்பொழுதும் ஒடிக்கொண்டே இருக்குமா? அதேது,' என்று தனக்குள்ளே நிச்சயித்து, கழுத்தறுக்கத் துணிந்த அதிசூரனைத் தன் கண்களை மலர விழித்து நோக்கி, 'அப்பா, என் கழுத்தை அறுக்காதே; சற்றே பொறு பொறு; ஒரு வார்த்தை கேள்; என்னை ஏன் வீணாக வதை செய்கிறாய்? நான் இதுவரையில் ஒருவரும் எனக்கெதிரில்லையென்று கர்வித்திருந்தேன்; அந்தக் கர்வம் உன்னாலே ஒழிந்து போய்விட்டது; இவ்வளவு தூரம் வந்த மட்டும் இனி ஆலோசிக்க வேண்டியதென்ன? கட்டிலின் மேலேறியும் முறை பார்க்கிறதுண்டோ? இன்று முதல் நான் உனக்குக் கீழமைந்து உன் சொற்படி கேட்கிறேன்; என் சொத்துக்கள் எல்லாம் உன்னுடையவைகளே; சந்தோஷமாகக் கைப் பற்றிக்கொள்; உன்னைத் தடுப்பவர் யாவரும் இல்லை; என்னை

மாத்திரம் கொல்லாமல் விட்டுவிடு ; நான் இந்தத் தீவில் நில்லாமலும், ஒருவருக்கும் தீங்கு செய்யாமலும், கண் காணுத தேசத்தில் போய் உன் பெயரைச் சொல்லிப் பிழைத்துப் போகிறேன் !' என்றான்.

'இவன், ' நீ சொல்வது சரிதான் ; ஆயினும், சோழனிடத்தில் நான் உன் தலையைக் கொண்டு வருகிறேனென்று சபதம் செய்து வந்தேனே! அதற்கென்ன செய்வது ?' என்ன, வல்லான், ' அப்படியானால் என் நற்றலைக்கு மாறுகப் பொய்த் தலையையும், என் வஜ்ர வாளையும், வஜ்ர கதையையும், வஜ்ர கவசத்தையும், சரகேசரி சக்கரகேசரி என்னும் இரண்டு புரவிகளையும் கொடுக்கிறேன் ? எனக்கு உண்டாயிருக்கிற உப பலமெல்லாம் பெரும்பாலும் இவைகளே ; நீ இவைகளைக் கொண்டு போய்க் காண்பிக்கலாம் ; இனி, நான் யாரையும் அதிக்கிரமிக்கிறதேயில்லை,' என்று சொல்லித் தன் வாளைத் தொட்டுப் பிரமாணிக்கம் செய்து கொடுத்து, உடன் படிக்கை பண்ணினான். அது கேட்டு, அவனைக் கொல்லத் துணிந்த 'அதிசூரன் மனமிரங்கி, ' நல்லது! உன்னைக் கொன்று நானடையும் சாம்பிராச்சியம் ஒன்றுமில்லை,' என்று சொல்லி, அவன் கொடுத்த வஜ்ரவாள் முதலானவைகளைத் தன் வசம் பண்ணிக்கொண்டு, ' இவனைச் சும்மா எதேச்சையாய் இருக்க விட்டால் ஒரு வேளை, ' பழைய குருடி கதவைத் திறடி ' என்பதாக வந்து சம்பவிக்கவும் கூடும் ; எப்படி நம்புகிறது ?' என்று சந்தேகித்து, அவன் கைக்கும் காலுக்கும் விலங்கு பூட்டிக் காவலில் வைத்து, அவனால் சிறை செய்யப்பட்டவர்களையெல்லாம் சிறை நீக்கி, அவரவர்களுடைய சுதேசம் போய்ச் சேர உத்தரவும் வழிச் செலவும் கொடுத்து அனுப்பிவிட்டு, அதிசூரன் சூரனை நோக்கி, ' நாம் இப்பொழுது வல்லான் பொருட்டாகவல்லவோ இவ்விடத்திற்கு வரும்படி இருந்தது ? வந்தவிடத்தில் பிரதானமாகக் குறித்த காரியத்தைத் தெய்வகடாட்சத்தால் முடித்துக்கொண்டோம் ; இனி, வர வேண்டிய ஆவசிகம் நமக்கு ஒன்றுமில்லை. ஆதலால், இங்குள்ள அற்புதங்களையெல்லாம் எந்தக் காலத்தில் வந்து பார்க்கிறது ? எப்படியும் ஒரு முறை வந்த நாம் முழுவதும் செவ்வையாய்ச் சுற்றிப் பார்த்துவிட்டுப் போகலாமே!' என்ன, சூரன், ' என் கருத்தும் அப்படியே,' என்றான்.

'அப்பொழுது வல்லானுக்குக் குற்றேவல் செய்யும் பரிசாரகரில் இருவரை அழைத்து, ' பந்தம் கொளுத்தி வாருங்கள்,' என்று, அவர்கள் பந்தத்தைக் கொளுத்திப் பிடித்து முன்னே வழிகாட்டிக் கொண்டு போக, அவர்கள் பின்னே இவர்கள் இருவரும் தொடர்ந்து போய் அந்த மெத்தையின் மூன்றடுக்குகளிலும் ஏறிப் பார்த்து, அதன் பக்கத்தில் இருக்கின்ற குதிரை லாயம், மாட்டுத் தோழம், மடைப்பள்ளி முதலானவைகளையும் புகுந்து நோக்கி, பின்பு மெத்தையைச் சுற்றியிருக்கின்ற சோலைக்குள் பிரவேசித்து,

வல்லான் உலாவுகிறதற்கு ஒழுங்காகவும் விசாலமாகவும் சமைக்கப் பட்ட சாலைகளையும், அச்சாலைகளின் இரு பக்கங்களிலும் வரிசை வரிசையாய் நாட்டியிருக்கின்ற தெங்கு, கமுகு, வாழைகளையும், பலசாதிப் பூஞ்செடிகளையும், அவைகளைச் சுற்றிப் பொன் வெள்ளி ரத்தினங்களால் கட்டப்பட்ட சிறு பாத்திகளையும், அப்பாத்தி களுக்கு நீலரத்தினக் கால்வாய்களின் வழியே வந்து பெருகும்படி ஏரிநீர் பாய்ச்சும் சூத்திரத்தையும், அங்கங்கேவட்டமாகவும் சதுர மாகவும் சமைக்கப்பட்டிருக்கின்ற சொர்ண மேடைகளையும், தெய்வ ரம்பைக்குச் சமானமாகிய ஸ்திரீகளுடனே வல்லான் ஜலக் கிரீடை செய்வதற்கு அதிக விசாலமாக அடியில் பளிங்குக் கல் பதித்து, சுற்றிலும் மரகதக் கரையோட்டி, வஜ்ரப் படி கட்டி, முத்துப் போலத் தெளிவும் பால் போல மதுரமுமாகிய குளிர்ந்த நீர் நிறைந்திருக்கின்ற தாமரைப் பொய்கையும், சோலையின் கீழ்ப் புறத்தில் தங்கச் சுவர் எழுப்பி, வெள்ளித் தூண் நிறுத்தி, நீலப் பாவுக்கள் ஏற்றி, பவளக் கொடுங்கை அமைத்து, சுவரின் ஒரு பக்கத்தில் பாரத யுத்தமும், மற்றொரு பக்கத்தில் இராம இராவண யுத்தமும், பின்னொரு பக்கத்தில் சிவனது அறுபத்துநான்கு திருவிளை யாடலும், வேறொரு பக்கத்தில் கிருஷ்ண லீலையும் சிறப்பாகத் தீட்டியிருக்கின்ற அற்புதமான மண்டபத்தையும், அதன் மத்தியில் வல்லான் விநோதமாய் வீற்றிருக்கும்படி நவரத்தின மயமாக உண்டாக்கப்பட்ட சிங்காதனத்தையும், அதன் அருகில் இருக்கும் பதுமராக பீடத்தையும், தந்த நாற்காலிகளையும், மற்றுமுள்ள பற்பல அதிசயங்களையும் தனித்தனி நோக்கி, 'ஆ! ஆ! வல்லா னுகிய பட்டிமகன் தான் வெகுகாலம் வாழ்கிறவனுக நினைத்துக் கொண்டு எத்தனையோ புதுமைகளையெல்லாம் செய்வித்தானே! இது ஆச்சரியம்! ஆச்சரியம்!' என்று வியந்து, அப்பால் நடந்து போனர்கள்.

'போகும் பொழுது நிரை நிரையாக மரக்கிளைகளில் பனங்காய் போலத் தூக்கப்பட்டிருக்கிற தலைகளைப் பார்த்துப் பிரமித்து, 'இஃதென்ன அகோரம்?' என்று பந்தம் பிடிப்பவர்களைக் கேட்க, அவர்கள், 'இந்தக் கொடுமையை என்னவென்று வாய் விட்டுச் சொல்லுகிறது! இவைகள் மகா பாதகனுகிய வல்லானுலே கொல்லப்பட்ட அரசர்களுடைய தலைகள். அவர்களை வெட் டொன்றும் துண்டிரண்டுமாகத் துணித்து முண்டங்களை இருந்த இடங்களிலேயே கிடந்தழியவிட்டு, தலைகளைமாத்திரம் கொண்டு வந்து நாள்தோறும் இந்தப்படி தூக்கி வைக்கிறது அவனுடைய வழக்கம். பூர்வம் இராவணனுல் தேவர்கள் முனிவர்களுக்கு உண்டான உபத்திரவம் ஸ்ரீ ராமரால் நிவாரணமானது போல, இக்காலத்தில் இவனுல் ராஜாக்களுக்குண்டான சங்கடம் புண்ணிய வான்களாகிய உங்களால் நிவாரணம் ஆயிற்று. இது வரையில் இந்த நீசனிடத்தில் நித்திய கண்டம் பூரணுயுசாகவே சாக்கல் பண்ணிக்கொண்டு வந்த எங்களுக்கும் நல்ல காலம் வந்தது,'

என்றூர்கள். அச்சொற்களையெல்லாம் அதிசூரனும் சூரனும் கேட்டுத் தலையசைத்து, மூக்கின்மேல் விரல் வைத்து, ‘கொடுமை! கொடுமை!’ என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்து திரும்பி இலாயத்திற்கு வந்து, அதிசூரன் சக்கரகேசரிமேல் சூரனை ஏறச் சொல்லித் தான் சரகேசரிமேல் ஏறப் போனவிடத்தில் முளையுருவி இறந்தவனைக் கண்டு, ‘நாம் முன்னமே இன்னுனைக் காணுமென்று தேடினுமே! ஹரி! ஹரி! இவன் கதி இப்படியா ஆயிற்று!’ என்றெண்ணி, உடனே அப்புரவிமேலேறி இருவரும் அங்கிருந்து பிரயாணப்பட்டுப் பொழுது விடியும் பொழுது சோழனுடைய ஆசாரவாசலின் புறத்தில் வந்து குதிரையை விட்டு இறங்கி, வல்லானை வென்ற அதிசூரன் வஜ்ர கவசத்தை மார்பிலே தரித்து, வஜ்ரவாளை வலக் கையிலேந்தி, வல்லான் பொய்த் தலையை இடக் கையிலே தாங்கி, சூரனென்பவன் வஜ்ரகதையைக் கையில் பிடித்த வண்ணமாய்த் தன் அருகே வர, அதியுக்கிரமாகிய வீராவேசத் துடனே ஆர்ப்பரித்து எட்டுத் திசையும் செவிடுபட ஜயசங்கம் முழக்கிக்கொண்டு ராஜசபையில் வந்து பிரவேசித்தான்.

‘அவனுடைய ஒரு கையிலிருக்கிற வீரவாள் ஜோதி மின்னல் மின்னுவதுபோலக் கண் கூசும்படி தகதகென்று ஒளி வீச, மற்றொரு கையிலிருக்கிற வல்லான் பொய்த் தலையானது சாகஷாது அவன் நற்றலை போலவே கண்கள் சுழல, கண்ணீர் பெருக, புருவம் நெரிய, மீசையும் உதடும் துடிக்க, முடிந்த சிகையானது இருசெவிப் புறத்திலும் இருக்கின்ற அழகான காகபக்ஷத்துடனே அவிழ்ந்து குலைந்து அலைய, நெற்றியிலணிந்த திருநீரும் திலகமும் வீரபட்டமும் பிரகாசிக்க, கழுத்து அறுத்த பாவனையாகவே அதில் நின்று சரசர வென்று பச்சை ரத்தம் ஒழுக, கோரமாகக் காணும்படி அவன் திடுதிடென்று வருவது கண்டு, அச்சபையிலுள்ள அனைவரும் கிடுகி டென்று நடுங்கிப் பிரமைகொண்டு, சித்திரப் பிரதிமை போல நிலைபெயராமல் இருந்த விடத்திலேயே சோர்ந்தார்கள். சோழ ராஜனும் அஞ்சி நெஞ்சு தளர்ந்து அதிசயித்து அவனைப் பார்த்து, ‘போனவிடத்தில், நடந்த வர்த்தமானமென்ன?’ என்று கிரம மாகக் கேளாமல் அவசரப்பட்டு, ‘மகா பிரபல வீரனுகிய இந்த வல்லான் தலையை நீ எப்படி வெட்டினை?’ என்று கேட்டான். அவன் அதற்குப் பின்னையொன்றும் மறுமொழி சொல்லாமல், ‘இதோ பார், இப்படித்தான்,’ என்று கையிலிருந்த கூரிய வாளைக் கொண்டு தன் தலையைத் தானே கறுக்கென்று வெட்டினன்; ஒரு வெட்டிலேயே தலையொருபக்கமும்உடலொருபக்கமுமாகவிழுந்தன. அதைக் கண்டவர்கள் பதைபதைத்துச் சிலர், ‘அம்மம்மா! இதென்ன கோரம்!’ என்றும், சிலர், ‘இதென்ன கோரம்!’ என்றும், சிலர், ‘இது யார் செய்த பாவம்?’ என்றும், சிலர், ‘இவனுடைய வீரமே வீரம்!’ என்றும், சிலர், ‘படைக்கு ஒருவன் என்பதை இவனிடத்தில்தான் கண்டோம்!’ என்றும், சிலர், ‘இந்தப் புண்ணிய புருஷன் வல்லான் கொட்டத்தை அடக்கியது

எவ்வளவு உபகாரம்!' என்றும், சிலர், 'இவன் இன்னம் உயிரோடிருந்தால் வெகுநாளைக்குச் சத்துரு பயமில்லாமல் இருக்கலாமே!' என்றும், சிலர், 'வல்லான்மேல் போருக்குப் போனவர்கள் இவனுடன் பதினெட்டுப் பெயரல்லவோ, இரண்டு பெயர் மாத்திரந்தானே மீண்டு வந்தார்கள்? மற்றைப் பதினாறு பேர் எங்கே இருக்கிறார்களோ!' என்றும், சிலர், 'இருக்கிறதே! அவர்கள் மாண்டு போனதாகத்தான் காணப்படுகிறது,' என்றும், சிலர், 'இதோ கையிலே கதை பிடித்திருக்கிறானே இவனும் இறந்து போவானேன் பிழைப்பானேன்!' என்றும், 'இவர்கள் வெற்றி பெற்று வந்த சந்தோஷத்தை ஜீவனோடிருந்து அனுபவிக்கிறதற்கில்லாமல் போய்விட்டதே!' என்றும், பல விதமாகச் சொல்லிச் சொல்லிப் பிரலாபித்தார்கள்.

'அப்பொழுது கதாயுதபாணியாயிருக்கின்ற சூரன் என்பவன் 'மற்றப் பதினாறு பேரும் இறந்தது வரவு செலவல்ல; வல்லானை வென்ற அதிசூரன் என்னும் சிங்கமும் மடிந்து போய்விட்டதே! நானிருந்து யாரை ரக்ஷிக்கப் போகிறேன்? என் தலையைக் கதையால் மோதி உடைத்துக்கொண்டு நானும் மாண்டு போகிறதே நலம்,' என்று நிச்சயித்துக்கொண்டு, அந்தக் கதையைத் தன் தலைக்கு நேராக உயர ஓங்கினான். பார்த்தவர்கள் யாவரும், 'இஃதென்ன கொடுமை! ஐயையோ! இவனும் வீணாக மாண்டு போய்விடப் போகிறானே! இவனை வேண்டாவென்பதாகத் தடை செய்வார் ஒருவருமில்லையா?' என்று அழுதார்கள். அத்தருணத்தில் தரையிலே விழுந்து கிடக்கிற அதிசூரன் தலையானது சூரனை அதட்டி, 'அடா சூரா! பதருதே! பதருதே! பொறு! பொறு! பதருத காரியம் சிதருது; நான் சொல்லுகிறதைக் கேள்,' என்று, யாவரும் கேட்கச் சொல்லுகின்றது: 'நீ விருதாவாக இறப்பானேன்? என் சொற்படி செய்தால் நானும் பிழைப்பேன்; ஏரியினிடத்தில் வெட்டுண்டிறந்த பதினாறு பேரும் பிழைப்பார்கள்; உனக்கும் பிராண நஷ்டமில்லை; எப்படியெனில், அருவம் நான்கு, உருவம் நான்கு, அருவுருவம் ஒன்றுகிய நவேந்திரபேதமாய் விளங்குகின்ற பரமசிவத்தின வாமபாகத்தில் எழுந்தருளியிருக்கும் உமாதேவியினது திருவடிச் சிலம்பினின்றும் சிதறிய ஒன்பது மணிகளில் பிரதிபலித்த அவளது சாயையாகிய ஒன்பது பெண்களின் புத்திரர்களான வீரதீரன், வீரசூரன், வீரகேசரி, வீராந்தகன், வீரமகேந்திரன், வீரமார்த்தாண்டன், வீரவாகு முதலிய நவ வீரர்களுடைய வம்சஸ்தரான நமக்குத் தமயனும் நமது குல தெய்வமுமாகிய முருகக் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டியது; பிரார்த்தித்தால் அவர் அனுக்கிரகிப்பார்; நம்மில் மரித்த பதினெழுவரும் பிழைப்பார்கள்,' என்ன, அவனப்படியே குமார யந்திரத்தை ஸ்தாபித்து, அதில் குமாரசுவாமியின் மூலமந்திரமாகிய ஷடாக்ஷரத்தைப் பிரணவபீஜத்துடனே வரைந்து உருச் செபிக்க, அவரது கடாக்ஷத்தால் அனைவரும் உயிர் பெற்றெழுந்தார்கள்.

'அது கண்டு நீதி நெறிச் சோழன் தனக்குள் பரம சந்துஷ்டி அடைந்து, முன்பு தன் சபையிலிருந்து அவர்கள் வல்லானிடத் திற்குப் போனது முதல் திரும்பி வந்தது வரையில் நிகழ்ந்தவைகளே யெல்லாம் ஒளியாமல் சொல்லச் சொல்லிக் கேட்டு, நம்மவர்களே மிகவும் மெச்சி, அவர்களுக்குப் பற்பல விருதுகளும் கொடுத்துச் சகல வரிசைகளும் செய்து உபசரிக்க, அவர்கள் உலகமெங்கும் புகழத்தக்க கீர்த்தி பெற்று வாழ்ந்தார்கள். 'அத்தன்மையருடைய மரபிலே தோன்றிய நீங்கள் தலை கொடுப்பதற்காக மயங்கலாமா?' என்று ஒட்டக்கூத்தர் சொல்ல, அவர்களுக்கு அதிக உற்சாகம் பிறந்தது. அவர்கள் எல்லாம் ஒரு மனமாய்ச் சம்மதித்து, 'இனிக் காலதாமதமில்லாமல் பிரபந்தத்தை ஆரம்பிக்கலாம் உமது கட்டளைப்படி நாங்கள் நடந்துகொள்வோம்,' என்றார்கள். இவர், 'பிரபந்தத்தை ஆரம்பிக்கச் சொல்லுகிறீர்களே,அஃதெப்படி? தகுதி யான ஸ்தானத்திலிருந்தல்லவோ ஆரம்பிக்க வேண்டும்?' என்றார். அவர்கள், 'ஸ்ரீரங்கத்தில் ஆயிரக்கால் மண்டபம் இருக்கிறதே, அது வெகு ஜனங்கள் வசிக்கத்தக்க விசாலமுடையதாதலால் தகுதி யான ஸ்தானம் அதைவிட வேறில்லை; அந்த இடத்தில் அழகான பொற்பீடம் கொண்டு வந்து போடுகிறோம்; அதன்மேலிருந்து ஆரம்பிக்கலாம்,' என்றார்கள். ஒட்டக்கூத்தர், 'நாம் குறித்த ஸ்தானம் அதுவன்று; பின்பு உங்களுக்கே தெரிய வரும்?' என்றார். செங்குந்தர், 'அப்படியானால் உமது சித்தத்தின்படியே செய்வோம். நாங்கள் தலை கொடுப்பதற்கு எவ்வளவும் தடையில்லை,' என்று சொல்லிச் சோழநாட்டில் சோழகுலத்தரசருக்குப் பட்டந்தரிக்கும் உறையூர் முதலிய பிரதான நகரங்கள் ஐந்திலும் அவைகளின் சுற்றுப்புறங்களில் உள்ள மற்றெந்த ஊர்களிலும் இருக்கின்ற தங்கள் ஜாதியார்களுக்கெல்லாம் இந்தச் சமாசாரத்தையும், தம் முன்னோர் சரித்திரத்தையும் விவரணமாக எழுதி, 'பந்து ஜனங் களே! உங்களை நாங்கள் பலாத்காரம் பண்ணவில்லை; நம் முன்னோர் களின் பெயரையும் அவர்கள் வீரப்பிரதாபத்தையும் ஒளித்துப் போகாமல் பிரகாசிக்கப் பண்ண வேண்டுமென்னும் எண்ணமும் பக்ஷமுமுடையவர்கள் எவர்களோ, அவர்கள் மாத்திரம் இதற் குடன்படலாம்,' என்று குறித்தனுப்பினார்கள்.

அந்தச் செய்தி அங்கங்கிருக்கும் தறிகளுக்கெல்லாம் போய் எட்டின பொழுது, நூல் நூற்கிறவர்களும், பாவோடுகிறவர்களும், பாத்தோய்கிறவர்களும், பாப்புணைகிறவர்களும், தறி நெய்கிறவர் களுமாகிய செங்குந்தர்களெல்லாம் வைராக்கிய சித்தர்களாய், 'எந்தக் கிராமத்திலாவது பிரமாலய தேவாலயங்களில் நடக்கும் சுவாமி கைங்கரியத்திற்கு யாரேனும் விக்கினம் தேடுவார்களானால் வீரமுஷ்டிகளாகிய சவான்களுமல்லவோ அந்த க்ஷணம் கோபுரத் தின் மேலேறி விழுந்தாவது, கத்தியால் கழுத்தை வெட்டிக்கொண் டாவது, வயிற்றிலே குத்திக்கொண்டாவது இறந்து போகிறார்கள்? அதற்கேற்றபடி, 'உண்பான் தின்பான் சிவப் பிராமணன், குத்துக்கு

நிற்பான் வீரமுஷ்டி,' என்பதாக ஒரு பழமொழியும் இருக்கிறதே!' என்றும், 'உலகத்தில் தங்கள் குலத்திற்குக் கீர்த்தியை வருவிக்கிற வர்களல்லவோ உத்தமர்கள்?' என்றும் நினைத்து, வேறொன்றும் பேசாமல், உற்சாகத்துடனே தாம்தாமிருந்த இடங்களிலேயே தங்கள் தங்கள் தலைகளை இளநீர்க்காய் உதிர்க்கிறது போல மிகவும் அலக்ஷியமாகக் கறுக்குக் கறுக்கென்று வெட்டி எறிந்தார்கள். அவர்கள் தத்தம் தொழில்களைச் செய்துகொண்டிருக்கும் பொழுதே சடிதியில் இந்தச் செய்தி கேட்டுத் தலைகளைத் துணித்தெறிந்தபடி யினலே, அந்தப்படியே சற்றுநேரம் மட்டும் அவர்கள் முண்டங்களில் சில பாவோடிக்கொண்டும், சில பாப்புணைத்துக்கொண்டும், சில தறி நெய்துகொண்டுமிருந்து பிறகு தொட்டுத் தொட்டென்று அங்கங்கே விழுந்துவிட்டன.

ஒட்டக்கூத்தர் கேட்டது எழுபது தலை மாத்திரமே. அறுபட் டதோ, எழுபதல்ல ; அனேகம் தலைகள். வெட்டுண்டவர்கள் தவிர மற்றவர் அத்தலைகளையெல்லாம் தக்ஷணம் பெரிய பெரிய கூடை களில் வாரியெடுத்து வண்டிமேல் ஏற்றி அடுக்கிக்கொண்டு வந்து ஒட்டக்கூத்தருடைய தலைவாசலிலே குவித்தார்கள். அவர், 'இவை களை இங்கே போட வேண்டா ; சோழராஜாவின் ஆசார வாச லண்டையில் கொண்டு போய்ச் சேருங்கள் ; நாம் அவ்விடத்திற்கு வருகிறோம்,' என்றார். அப்படியே கொண்டு போய் உறையூரில் சோழனுடைய அரசாட்சி மண்டபத்திற்கு எதிரே மலை போலக் குவித்தார்கள். அவைகள் கோவைப் பழம் போலச் சிவந்த கண்களை உருட்டி மருள மருள விழிக்கிறதும், உதட்டைப் பிதுக்குகிறதும், வாயை ஆவென்று திறக்கிறதும், நரி போலப் பல்லை இளிக்கிறதும், பற்களை நெறுநெறுவென்று கடிக்கிறதும், கலகலவென்று சிரிக்கிற தும், பெருமூச்செறிகிறதும், கோடையிடி இடித்தது போலக் கொக்க ரிக்கிறதும், அதட்டி ஆர்ப்பரிக்கிறதுமாய், ரத்தஜலம் பிரவாகிக்கக் கிடக்கிற கோரத்தைக் குலோத்துங்க சோழராஜன் வந்து பார்த்து, 'அடடா! இதென்ன கொள்ளை! இதென்ன அநியாயம்!' என்று கேட்க, செங்குந்தர்கள் தாங்கள் ஒட்டக்கூத்தரைப் பிரபந்தம் பாட வேண்டுமென்று பிரார்த்தித்ததும், அவர் பரிசு கேட்டதும், அதற்காகத் தலை கொடுத்ததும், விவரணமாகச் சொல்லிக்கொண் டிருக்கையில், ஒட்டக்கூத்தரும் அவ்விடத்தில் வந்து சேர்ந்தார்.

அரசன் அவரை நோக்கி, 'ஐயா கூத்தரே! இஃதென்ன கூத்து?' என்றான். அவர், 'இந்தச் செங்குந்தர்கள் பாமாலை பெற வேண்டு மென்று நம்மைப் பிரார்த்தித்தார்கள் ; நாம் பாடினால் நமக்கு என்ன பரிசு கொடுப்பீர்கள் என்றோம் ; இவர்கள் உமதிஷ்டப்படி செய்வோமென்றார்கள் ; நீங்கள் நமதிஷ்டப்படி செய்கிறது மெய் யானால் பாட்டொன்றுக்கு ஒரு தலை விழுக்காடு பரிசு கொடுத்தால், எழுபது பாட்டில் ஒரு பிரபந்தம் செய்கிறோம் என்றோம் ; அதற்கு இவர்கள் சம்மதித்து அப்படியே செய்தார்கள் ; நாமே இவர்களைப் பலாத்காரம் பண்ணவில்லை,' என்றார்.

குலோத்துங்க சோழன், 'ஐயா! தலை கொடுக்கச் சொல்லிக் கேட்டீரே, அதனால் உமக்கு வரும் பயன் என்ன?' என, ஒட்டக் கூத்தர், 'நமக்கு மற்றொன்றும் ஆக வேண்டியதில்லை; ஒன்று மாத் திரம் ஆவசிகமாய் இருக்கின்றது; அஃது இன்னும் சற்று நேரத்திற் குள்ளே பிரத்தியக்ஷமாகத் தெரிய வரலாம்,' என்றார். சோழ ராஜன், 'நல்லது, இவர்கள் அபீஷ்டப்படி பிரபந்தம் நிறைவேறி யதா?' என்று கேட்க, 'இனிமேல்தான் பாட வேண்டும்,' என்று சொல்லி, அந்தத் தலைகளைச் சரிந்து விழாமல் செவ்வையாய் அடுக் கும்படி செய்து, அவைகளே தமக்கு ஓராசனமாக அச்சிரச் சிங்கா சனத்தின்மேல் ஒட்டக்கூத்தர் ஏறிப் பத்மாசனமிட்டு வீற்றிருந்து, இரு கைகளையும் தலையின்மேல் கூப்பிச் சரஸ்வதி தேவியை வணங்கி, அவள் ஒரு கையில் கமண்டலம், ஒரு கையிற்புத்தகம், ஒரு கையில் படிகமாலை ஏந்தி, ஒரு கையில் சின்முத்திரை தரித்து, வெண்டா மரைப் புஷ்பாசனத்தில் எழுந்தருளி இருக்கிற பாவனையாக, அவ ளுடைய திவ்விய ஸ்வரூபத்தை மனத்திலே தியானித்து, அவள் திரு நாமங்களைப் பல முறையும் நாவினால் துதி செய்து, அவளனுக்கிர கத்தினால் அற்புதமாகவும், அதிசாதுரியமாகவும், நவரசாலங்காரத் துடனே கேட்டவர்களெல்லாம் சிரக்கம்பம் கரக்கம்பம் செய்து வியக்கத்தக்கதாகவும், செங்குந்தரையும் அவர்களாயுதத்தையும் சுட்டி வர்ணித்து, ஈட்டியெழுபதென்னும் பிரபந்தத்தைப் பாடி முடித்தார்.

அந்தப் பிரபந்தத்தின் அந்தத்தில், 'கலைவாணி! உனது கலை களில் ஒன்றுகிய அறுபத்துநாலு கலைகளும் எங்கும் பிரசித்தமாய் விளங்கும்படி அவைகளுக்கெல்லாம் முதல்வியும் கண்கண்ட தெய்வ மூமாகிய நீ சதுர்த்தச புவனங்களிலும் பிரமாதி பிபீலிகை பரி யந்தம் எள்ளுக்குள் எண்ணெய் போல நிறைந்திருப்பதும், சமஸ் கிருதம் திராவிடம் முதலாகிய அஷ்டாதச பாஷைகளிலும் உள்ள பற்பல கல்விகளையும் கற்றுணர்ந்து கற்பனையுடனே ஆசு மதுரம் சித்திரம் விஸ்தாரமாகிய நால்வகைக் கவிகளும் பாடவல்லர்களான வித்வசனர்களை உறுதியாகப் பரிபாலிப்பதும், சகலலோக சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமதேவருடைய நாவிலிருப்பது போல அக் கவிஜனர்களுடைய நாவினிடத்தில் நீங்காமல் சதாகாலமும் நீ வீற் றிருந்து வாழ்வதும் சத்தியமாமல்லவோ? அதற்குத் திருஷ்டாந்த மாகத் துவாபரயுகாந்தத்தில் பாண்டுரனனவன் தன்மேல் படை யெடுத்து வந்த துவாரகாவாசனகிய ஸ்ரீ கிருஷ்ணசுவாமியுடனே வில்லெடுத்துப் போருக்குப் போன சமயத்தில் அவர் சக்கிராயுதத் தைப் பிரயோகித்துக் கண்டதுண்டமாகச் சேதிக்க, அவனுடைய ஆயிரம் தோள்களும் அறுபட்டுக் குப்பல் குப்பலாக விழுந்து போயும் நீ அவனது நாவினிடத்தில் எழுந்தருளியிருந்த மகத்துவ பலத்தினா லல்லவோ அவ்வசுரன் உயிர் தப்பிப் பிழைத்தான்? இப்படி யெல்லாம் நீ மகிமை விளங்கிய கருணாநிதியாக இருப்பதனால் இப் பொழுது தலையையும் உயிரையும் தடையின்றிக் கொடுத்த உதார

குணமுடைய உத்தம வீரர்களாகிய இந்தச் செங்குந்தர்கள் எனக்குப் பழியும் பாவமும் நேரிடாதபடி பெறுதற்கரிய உயிர் பெற் றெழுந்து, தங்களைக் குறித்து நான் பாடிய ஈட்டியெழுபது என்னும் பிரபந்தத்தைக் கேட்டுச் செவி களிக்கும்படி கிருபை செய்ய வேண்டும்,' என்னும் கருத்துத் தோன்ற,

> "கலிவாணி நீயுலகில் இருப்பதுவும் கல்வியுணர் கவிவல் லோரை
> நிலையாகப் புரப்பதுவு மவர்நாவில் வாழ்வதுவு நிசமே யன்றே?
> சிலைவாண னுவிருந்தா யிரம்புயங்கள் துணிந்துமுயர் சிவ னுற்றருள்
> தலையாவி கொடுத்திடும்செங் குந்தருயிர் பெற்றிடநீ தயைசெய்வாயே."

என்ற பாடலைச் சொன்னார்.

சொன்ன மாத்திரத்தில் வெட்டுண்டு விழுந்து கிடந்த தலை களும் உடல்களும் காந்தமும் இரும்பும் போல ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டன. காந்தத்திற்கு இரும்பை இழுக்கும் ஆகர்ஷண சக்தியும், இரும்பிற்குக் காந்தத்தில் போயொட்டும் சந்தான சக்தி யும் இயல்பாக உண்டானமையால் அவையிரண்டும் ஒட்டுகிறது ஆச்சரியமன்று; அப்படிப்பட்ட சக்தியோ இவைகளுக்கில்லை. இல்லா திருந்தும், கண்ட கண்ட இடங்களிலே தாறுமாறாய் அறுபட்டுக் கிடந்த உடல்களெல்லாம் அதனதன் தலைகளைத் தேடிவர, சோழ ராஜனுடைய ஆஸ்தான மண்டபத்திற்கு முன்பாகக் குவித்துக் கிடக்கப்பட்ட தலைகளெல்லாம் தன்தன் உடல்களை நாடிச் சென்று வாணிகிருபையினால் ஒட்டிக்கொண்டமையால், மாண்டவர்களெற் லாம் உடனே அநாயாசமாக உயிர் பெற்றெழுந்து திடியிடித்தால் போல உரக்கக் கணைத்துத் தோள் கொட்டித் தொடை தட்டி மீசை முறுக்கி நகைத்து, 'ஜயம் ஜயம்!' என்று ஆர்ப்பரித்தார்கள்.

அதன் பின்பு அவர்கள் செய்து வரும் உபகாரத்தையும் உதார குணத்தையும் வெளியிட வேண்டுமென்று புலவர் பெருமான், 'வல் லானுடைய உபத்திரவத்தால் அச்சுக் கெட்டுத் தச்சு மாறி நிலை குலைந்த காலத்தில் இந்தத் *தந்துவாயரென்னும் செங்குந்தர்கள் அவனை உபாயத்தால் வென்று உலகத்தை நிலைபெறச் செய்தார்கள்,' என்றும், 'பூர்வ காலத்திலே லோகரக்ஷகராகிய ஸ்ரீ மகா விஷ்ணுவானவர் துரோபதையென்னும் ஒரு பெண்ணுக்கு மாத் திரம் ஆடையளித்து மானம் காத்தார்; அந்த ஜகத்காரணராகிய பரமாத்துமாவினுடைய அடிதகடனை சாமர்த்திய சக்திக்கு அது ஒரு விஷயமாகாது; இவர்கள் சகல தேசங்களிலும் பாலர் முதல் விருத்தர் வரையிலுள்ள ஸ்திரீ புருஷர்களாகிய நானாஜாதியாரும் கேவலம் மிருகங்களைப் போல நிர்வாணமாயிருந்து பங்கப்படாமல் அவரவர்களுக்கேற்ற இழையார்ந்த வஸ்திரத்தை உற்பத்தி பண் ணிக் கொடுத்து அபிமானம் காத்தார்கள்,' என்றும், அவ்வஸ்தி

* தந்துவாயர் - நூலைக்கொண்டு வஸ்திரம் செய்கிறவர்; செங்குந்தர் - பகை வரது உதிரத்தால் சிவந்த ஈட்டியையுடையவர்.

ரத்தை வணிகருடைய கையில் கொடுத்து, 'இவைகளை நீங்கள் விக்கிரயித்துப் பிழையுங்கள்,' என்று அவர்களுக்குச் சீவனோபாயம் கற்பித்தார்கள்,' என்றும், 'எத்திசையிலுமுள்ள புலவர்கள் பலரும் பாடிய தமிழ்ப் பாமாலைகளுக்குப் பரிசாக அளவிறந்த திரவியம் கொடுத்தார்கள்,' என்றும், 'அவைகளெல்லாம் அதிசயமல்ல வென்று நான் பாடிய ஈட்டியெழுபது என்னும் பிரபந்தத்திற்குப் பெருவிலையாகத் தங்கள் தலையையும் கொடுத்தார்கள்,' என்றும், 'கடைசியில் சாமானியனுகிய பொற்கொல்லனெருவன் தன் கையில் ஆனமட்டும் பரும்படியாகச் செய்த பொன்னுபரணத்தைச் சமர்த்தனுகிய மற்றெருவன் தன் கைத்திறம் காட்டும்படி திருத்திச் செய்து, மணிபதித்துக் குந்தனமிழைத்துக் கொடுத்தது போல, நெடு நாளாகச் சிறப்பின்றி வழங்கி வந்த கூத்தன் என்னும் எனது இயற் பெயரை அற்ற தலையும் உடலும் ஒட்டப் பாடிய காரணம் புலப்பட ஒட்டக்கூத்தன் என்னும் விசேஷணத்தால் சிறப்பித்துக் கொடுத் தார்கள்,' என்றும் சொல்லுகின்ற இவ்வாறு கருத்தும் விளங்க,

> "நிலைதந்தார் புவியினுக்கே யாவருக்கும் அபிமானம் நிலைக்கத் தந்தார்
> கலைதந்தார் வணிகருக்குச் சீவனஞ்செய் திடவென்றே கையில் தந்தார்
> விலைதந்தார் தமிழினுக்குச் செங்குந்த ரென்கவிக்கு விலையா கத்தான்
> தலைதந்தார் எனக்கொட்டக் கூத்தனெனும் பெயரினையும் தாந்தந் தாரே."

என்ற பாடலைப் பாடினர்.

இவையனைத்தும் பிரத்தியக்ஷமாகக் கண்டு கேட்டுச் சோழனு டைய சபையாரும் அந்த நகரத்திலும் சுற்றுக் கிராமங்களிலு முள்ள சகல வருணத்தாரும், 'இது மகா மகிமையாயிருக்கிறது,' என்று அதிசயித்துச் சந்தோஷப்பட்டார்கள். அப்பொழுது சோழ ராஜன் தன் மந்திரி பிரதானிமார்களை நோக்கி, 'இஃதென்ன புதுமை?' என்று கேட்க, அவர்கள், 'ஐயா ராஜேந்திரா! செங்குந் தர்கள், வேளாளர் முதலியோரைப்போலத் தாங்களும் பாமாலை பெற வேண்டுமென்று கூத்தரைப் பிரார்த்தித்தது சகஜமே; கூத்தர் மனந்துணிந்து அதற்காகத் தலைப் பரிசு கொடுக்க வேண்டுமென்றது தமக்குச் சிறப்புப் பெயரும் தங்கள் குலத்தாருக்கெல்லாம் சிறந்த பட்டமும் கிடைக்க வேண்டுமென்னும் அபிப்பிராயமே. அவர்கள் அஞ்சிப் பின்வாங்காமல் தலை கொடுத்தது சுத்த வீரத் தன்மையே. புலவர் பெருமான் பிரபந்தம் பாடி அவர்களை உயிர்ப்பித்ததை மாத் திரம் கேவலம் தெரியாதவர்கள் ஏதோ ஜால வித்தையாய் இருக் கின்றதென்பார்கள். சிலர் மந்திரபலத்தினுல் இப்படி முடிந்தது என்பார்கள். புத்திமான்களுக்குள் சிலர், 'தலையும் உடலும் அறுபட்ட அறுவாயும், ஒட்டின ஒட்டு வாயும் எவ்வளவும் தெரி யாமல் தழும்பும் தோன்றுமலிருப்பதனல், விசல்லியகரணி, சந்தான கரணி, சமானகரணி, சஞ்சீவகரணி என்னும் பரமௌஷதங்கள் நான்கும் இவரிடத்திலிருக்க வேண்டும்; அவைகளில் சந்தான கரணியைக்கொண்டு அற்ற உறுப்புக்களை இணக்கி, விசல்லிய

கரணியைக் கொண்டு காயத்தை ஆற்றி, சமான கரணியைக் கொண்டு தழும்பு நீக்கி, சஞ்சீவ கரணியைக்கொண்டு உயிர் கொடுத்தார்' என்பார்கள். அவையெல்லாம் சரியல்ல. வாணி கடாக்ஷத்தினாலும் வித்துவ சிரேக்ஷடராகிய கூத்தருடைய வாக்கு விசேஷத்தினாலும், செங்குந்தருடைய வீர தர்மத்தினாலும், சத்தியத் தினாலுமே இங்ஙனம் நிகழ்ந்தன. ஆதலால், இது அற்புதம்,' என்று மந்திரிகள் நாமகளை வாழ்த்தி ஒட்டக்கூத்தரைத் துதித்து, செங்குந்தரைப் புகழ்ந்து கொண்டாடினர்கள். அது கேட்டுச் சோழ ராஜன், 'நீர் தலை கொடுக்கச் சொன்னீரே, அதனால் உமக்குப் பிரயோசனம் என்ன?' என்று கூத்தரை முன்பு நாம் கேட் டதற்கு இன்னும் சற்று நேரத்திற்குள் தெரியுமென்று அவர் சொன்னது, மந்திரிமார்கள் சொன்னபடி, 'தமக்கு ஒட்டக்கூத்த ரென்ற பெயரும், தமது குலத்தாருக்கெல்லாம் சிரச் சிங்காசனாதி பதிகளென்கின்ற பட்டமும் கிடைக்க வேண்டுமென்னும் எண்ணத் தைக் கொண்டுதான்,' என்று நிச்சயித்து, அவ்வாறே அவருக்குக் கூத்தரென்ற பெயரை ஒட்டக்கூத்தரென்று விசேஷணத்துடனே ஸ்தாபித்து, அவரை உள்ளிட்ட செங்குந்தர் யாவருக்கும் சிரச்சிங்கா சனாதிபதிகளென்னும் பட்டமும் கொடுத்து, பல வகை விருதுகளும் வரிசைகளும் வழங்கி, அதிக மரியாதையும் செய்தான்.



[வித்துவக் காய்ச்சல் மிகவும் பொல்லாதது. அதனால் ஏற்படும் விளைவுகள் இப்பகுதியில் சித்திரிக்கப்பட்டுள்ளன. 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்,' என்னும் நாடறிந்த பழமொழிக்கு இக்கட்டுரையில் விளக்கம் காணலாம். பெரும்புலவர் இருவர் போட்டியில் விளைந்த அருந்தமிழ்க் கவிதைக் கனிகளை இக்கட்டுரையைப் படிப்போர் சுவைத்து இன்புறலாம்.

— பதிப்பாசிரியர்]

10

ஒட்டக்கூத்தர் சோழனுக்குப் பெண் பேசியது

பல வளங்களும் நிறைந்த சொர்க்கம் போன்ற உறையூரிலே நீதி தவறாமல் செங்கோல் செலுத்தி வாழ்ந்திருந்த குலோத்துங்க சோழ ராஜனுடைய பிதா நிர்யாண தசையில் புத்திரனுக்குப் பட்டாபிஷேகம் செய்விக்க யத்தனித்து, புண்ணிய நதி தீர்த்தங்களைக்கொண்டு மங்கள ஸ்நானம் செய்வித்து, விலையுயர்ந்த பீதாம்பரம் உடுத்து, மகர குண்டல முதலாகிய சர்வாபரணங்களும் பரிமள புஷ்ப மாலைகளும் தரித்து, சிங்காதனத்தில் ஏற்றுவித்து, சந்திர வட்டக் குடை கவிக்க, கவரி வீச, மங்கல சங்கம் முதலிய பற்பல வாத்தியம் முழங்க, வேதப் பிராமணர் ஆசி கூற, மகா சம்பிரமத்துடனே நவரத்தின மகுடம் சூட்டி, ராஜமுத்திரா மோதிரத்தை அவன் விரலில் அணிந்து, செங்கோலைக் கையில் கொடுத்து, அரசர் அமைச்சர் முதலானவர்களுக்கு, 'இவனிட்ட கட்டளைப்படி அனைவரும் நடக்க வேண்டும்,' என்று ஆக்கியாபித்தான். அவர்களெல்லாம் பட்டத்தரசனான குலோத்துங்க சோழனுக்குப் பாதகாணிக்கை வைத்து உபசரித்தார்கள். வித்துவசனர்கள் பாமாலை சூட்டினார்கள். அவர்கள் யாவருக்கும் முன்னே ஒட்டக்கூத்தர் அவனுக்கு க்ஷேமமுண்டாக ஒரு கவி பாட வேண்டும் என்று,

"ஆடும் கடைமணி நாவசையாமல் அகிலமெங்கும்
நீடுங் குடையைத் தரித்தபிரான்—"

எனக் கொஞ்சம் குறைய இரண்டடி வரையில் பாடினது அறிந்து, அவ்வரசன், 'தனக்கு அவர் கல்வி கற்பித்த ஆசிரிய ராகையால் தன்னைத் துதி செய்வது தகாது,' என்று நினைத்து அதற்குமேல்,

" .....இந்த நீணிலத்தில்
பாடும் புலவர் புகழொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேஎன்னைச் சொல்லுவரே."

என மற்றிரண்டடியும் தானே பாடி அப்பாடலைப் பூர்த்திபடுத்தி விட்டு, பிராமணர்களுக்கு அன்னதானம் முதலிய சோடச மகா தானமும், மன்னர் மந்திரிமார் முதலானவர்களுக்கு நாடு நகரம், யானை குதிரை முதலிய வரிசைகளும், கவி பாடிய புலவர்களுக்குச் சொர்ணம், வஸ்திரம், பூஷணம் முதலிய பரிசும் தன் கையால் கொடுத்து அவர்களை உபசரித்தான்.

பிறகு அவன் தந்தை அவனை அந்தப்புரத்திற்கு அழைத்துப் போய் அரசு நடத்த வேண்டிய முறைமையைக் குறித்துச் சொல்ல வேண்டிய பாரதூரமான புத்திமதிகளைச் சாஸ்திரீயமாகவும் சொல்லி, அனந்தரம் தன் சமஸ்தான வித்துவானுகிய ஒட்டக்கூத் தரையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு புதல்வனைப் பார்த்து, 'அப்பா குலோத்துங்கா! இப்பொழுது உனக்கு மகுடாபிஷேகம் செய்வித்தது போல விவாகமும் செய்வித்து, அவ்விவாக மகோற் சவத்தைக் கண் களிக்கப் பார்க்கிறதற்கு நான் தவம் செய்யாமல் போனேன்; ஆயினும், உனக்கொன்று சொல்லுகிறேன் கேள்: எனக்குப் பிற்காலம் நீ வேறெந்தவழியிலும் பிரவேசிக்கவேண்டா; நமது சூரிய குலத்திற்கும் சந்திர குலத்திற்குமே தொன்று தொட்டுச் சம்பந்தம் நடந்து வருகிறது. அந்த முறைமையைக் கைவிடாதே; பழங்கால் தூர்த்துப் புதுக்கால் வெட்ட வேண்டா; பாண்டியன் மகளையே மணம் செய்துகொள்,' என்று வற்புறுத்தி ஒட்டக்கூத்தரை நோக்கி, 'என் மனோரதத்தை நிறைவேற்றுவது உமது தலைமேல் வீழ்ந்த பாரம்,' என்று சொல்லித் தன் மகனை அவர் கையில் ஒப்பித்துப் பிறகு, 'அதவா புத்திர சந்நிதௌ!' என்றபடி, தன் புத்திரன் தொடைமேல் தலையை வைத்துச் சயனித்த வண்ணமாய்ப் பிராணவியோகமானான்.

ஒட்டக்கூத்தர் அவ்வரசனுக்குச் செய்ய வேண்டிய தகன சஞ்சயனாதி உரிமைக் கருமம் அனைத்தும் குலோத்துங்க சோழனைக் கொண்டு லோபமில்லாமல் கிரமமாக நடத்திச் சில நாள் கழிந்த பின்பு அவனுக்குப் பெண் பார்க்கப் போக யத்தனித்து, 'நாள் செய்வது நல்லோர் செய்யார்,' என்பதனால், தாம் நோக்கிப் போகும் திசைக்குச் சூலம், யோகினி முதலிய தோஷமில்லாததாக ஒரு நன்னாள் குறித்து, அந்நாளில் நினைத்துப் போகும் காரியம் அனுகூலிப்பதற்கு முற்குறியாக நல்ல சகுனமாகும்படி அனுக்கிரகம்

செய்ய வேண்டுமென்று தமது இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தித்து, சோழ நாட்டிலிருந்து பாண்டிய தேசத்திற்குப் பிரயாணமாக முதல்முதல் அடியெடுத்து வைத்தார். வைத்தவுடனே **வாயசம்** வலமாயிற்று. அவர், 'வாயசம் வலமானுல் ஆயுசு விர்த்தியாகும்,' என்று எண்ணி, அப்புறம் நடக்கையில் **வலியன்** இடமாயிற்று. அதைப் பார்த்து,

> " வால்நீண்ட காரிக்குருவி வலமிருந்தே இடஞ்சென்றுல்
> கால்நடையாய்ப் போனவர்கள் கனகதண்டி யேறுவரே."

என்பதை நினைத்து, 'உத்தமந்தான்' என்று அதற்கப்பால் சில தூரம் சென்றார். அங்கே காடை கட்டிற்று. அதைக் குறித்து, 'காடை கட்டினுல் பாடை கட்டும்,' என்பதை யோசித்துப் பிரமை கொண்டிருக்கையில், உடனே **கட்டுக்காடை** இடமாயிற்று, அது நோக்கி, 'கட்டுக்காடை இடமானுல் குட்டிச்சுவரும் பொன்னுகுமல்லவா ?' என்று மகிழ்ச்சிகூர்ந்து பத்தடி நகர்ந்தார். அப்பொழுது **செம்போத்து** வலமாயிற்று. அவர் 'செம்போத்து வலமானுல் சம்பத்துண்டாகும் !' என்று மனம் பூரித்து அதைத் தாண்டிப் போகையில், கருடன் கட்டியது கண்டு, 'இதென்ன ?' என்று சற்று நேரம் அவ்விடத்திலேயே திகைப்பூண்டு மிதித்தது போலத் திகைத்து நின்று, 'கட்டோடே போனுல் கனத்தோடே வரலாம்,' என்பது ஞாபகத்திற்கு வந்தமையால் மனத்தைத் தைரியப் படுத்திக்கொண்டு கொஞ்சந்தூரம் போகையில், முன்பு கட்டின கருடன் இடமாயிற்று. அவர், 'கட்டி இடமானுல் வெட்டி அரசாளலாம்,' என்றும், 'வெண்டலேக் கருடன் சென்றிடமானுல் எவர் கையிற் பொருளும் தன் கையில் சேரும்,' என்றும், பெரியோர்கள் சொல்லுகிறார்களே! அதனுல் குறைவு வாராதென்று கருதி விரைந்து செல்லுகையில் **விச்சுளி** வலமாயிற்று. அதைப் பற்றி, 'விச்சுளி வலமானுல் நிச்சயம் வாழ்வுண்டாம்,' என்று நினைத்துப் 'பிரதமத்தில் நாம் பிரார்த்தித்த வண்ணம் வலியன், விச்சுளி, செம்போத்து மூன்றும் சௌவியம் (வலம்) ஆகவும், கருடன். கட்டுக்காடை இரண்டும் அபசௌவியம் (இடம்) ஆகவும் செல்லக் காணும்படி நமக்கு இந்தப் பஞ்ச சகுனமும் ஆனமையால், நினைத்த காரியம் இனித்தடையின்றி முடியும் என்பதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை,' என்று, இடைவழியிலுள்ள காடு, மலை, நாடு, நகர், ஆறு, குளம், ஏரி, மடுவெல்லாம் கடந்து, குடை, கொடி, யானை, சேனைகளுடனே நான்மாடக் கூடலென்னும் மதுரைக்குச் சமீபமாய்ப் போகும் பொழுது பாண்டியன், 'யாரோ பகையரசன் மதுரைமேல் படையெடுத்து வருகிறுன்,' என்று தக்ஷணம் போர்க்கோலம் கொண்டு போய் எதிர்த்து நிர் மூலமாக்கும்படி தனது சதுரங்க பலமும் பிரயாண சன்னத்தமாகப் பேரிகை அறைவித்தான். அந்த அடியிலே வில், கட்கம், சூலம், பாசம், முசலம், சக்கரம், தோமரம் முதலிய ஆயுதபாணிகளாய், முடிக

ளோடு முடிகள் கழல்களோடு கழல்கள் நெருங்க, தேர்கள் யானைகள் குதிரைகள் மேலும் பாதசாரிகளாயும் நால்வகைப் படைவீரரும் பெருவெள்ளம் போல எங்கெங்கும் வந்து நிறைந்து. எக்காளை, பேய்க்காளை, கொம்பு, பம்பை, தவுண்டை, துந்துபி முதலிய வாத்தியம் முழங்க யுத்தத்திற்கு ஆரம்பித்தார்கள். அதற்குள்ளே வேவுகாரர் போய் விசாரித்துப் போர்க்குரிய சின்னங்கள் இல்லாமை கண்டு, 'ஓட்டக்கூத்தர் வருகிறார்,' என்று தெரிந்து வந்து செய்தி அறிவிக்க, ராஜா சந்தோஷப்பட்டு மந்திரியை அனுப்பி அழைத்து வந்து அவருக்கு விடுதி விட்டுப் போஜன தாம்பூலாதிகளும் கிருதகிர்த்தியமாய் நடப்பிக்கச் சொன்னன்.

அப்படியே அவர் அவனிடத்தில் சேர்ந்து இரண்டொரு நாள் சுகித்திருந்து சமயம் அறிந்து பாண்டியன் சமுகத்தை அணுகி மரியாதையோடு ராஜ தரிசனம் செய்தார். அரசன் வித்வ சிரேஷ்டராகிய ஓட்டக்கூத்தருக்கு ஆசனம் கொடுக்கச் சொல்லி உபசரித்து, 'வந்த காரியம் என்ன?' என, இவர் கன்னித்துறைவன் கேட்கும் கேள்விக்கு, 'கம்புக்குக் கீழே வெட்டினதும் தம்பிக்குப் பெண் கொண்டதுமாக' 'ராஜ சேகரா! எங்கள் ராஜாதிராஜ னுகிய குலோத்துங்க சோழ மகாராஜாவின் பிதாவானவர் தமது தேகாவசானத்தில் நம்முடனே சுபச் செய்தி ஒன்று சொல்லி யிருந்தார்; அதைத் தங்களுக்கு அறிவிக்கவும், தங்களைத் தரிசிக்கவும் வந்தோம்,' என்று சொல்லிப் பின்பு அக்கருத்தை வெளியிட்டார்.

பாண்டியன் அதிசயித்துக் குறுநகை செய்து, 'ஓ புலவர் பெருமானே! உங்கள் அரசனுகிய சோழன் பாண்டிய குலத்துப் பெண்ணைக் கொள்ளத்தக்க பாத்திரனு? எங்களிலும் அவனுக்குள்ள ஏற்றம் என்ன? சொல்லும்,' என, ஓட்டக்கூத்தர், 'சோழராஜாக்கள் ஏறும் மல்லகதி முதலிய ஐங்கதிகளையுடைய கோரமென்று பெயர் பெற்ற பஞ்ச கல்யாணியாகிய பட்டவர்த்தனப் புரவிக்குப் பாண்டியர் ஏறும் கனவட்டமென்ற அஸ்வம் சமானமாகுமா? மாரிக் காலத்தின்றிக் கோடை காலத்திலும் கடல் போல எங்கும் பரவிப் பெருகிப் பாய்ந்து பொன் கொழித்து அலை எறிகின்ற அகண்ட காவிரி ஆற்றுக்கு வையையாற்றையோ நிகராகச் சொல்லுவது? சிவனது திருவுளத்துக்கு உவப்பாகச் சோழர்கள் அணியும் ஆத்திமாலைக்கு வேப்பமாலை நிகராகுமோ? உலகத்தைச் சூழ்ந்து கவிந்து சகலாத்துமாக்களுடைய கட்புலனையும் மறைக் கின்ற அந்தகாரத்தைப் போக்கும் சூரியனுக்கு அச்சூரியன் முன் ஒளி மழுங்கிப் போகின்ற சந்திரன் ஒப்பாகுமா? அது போல மகா பிரசித்தமான சூரிய குலத்திற்குச் சந்திரகுலம் ஒப்பாகுமா? நிகரற்ற வீரமுடையவர்களுக்குள் அதிவீரனனவன் சோழனே, பாண்டியனே? வெற்றி பெற்ற சோழனது புலிக்கொடிக்குப் பாண்டியனது மீனக்கொடியோ இணையாவது? பொன்மாரி பெய்த மகிமை தங்கிய உறையூருக்குக் கொற்கைப் பதியோ உவமை யாவது? பதின்மர் பாடப்பெற்ற திருவரங்க முதலாகிய பற்பல

விஷ்ணு ஸ்தலங்களையும், ஜம்புகேசுவர முதலிய அநேக சிவஸ்தலங் களையும் தன்னகத்தில் கொண்டு எக்காலத்தும் க்ஷாமமென்பது அணுக இடம் கொடாமல் ஜீவாதாரமாகிய நெல் முதலிய விளைவு குன்றுத வளப்பம் மிகுந்த சோழ நாட்டுக்குப் பாண்டி நாடு சரியாமோ ?' என்னும் பொருளை உள்ளமைத்து அவ்வழியால் சோழனுடைய பெருமை தோன்றும்படி,

" கோரத்துக் கொப்போ கனவட்ட மம்மானே ?
கூறுவதும் காவிரிக்கு வையையோ வம்மானே ?
ஆருக்கு வேம்புங்க ராகுமோ வம்மானே ?
ஆதித்த னுக்குங்க ரம்புலியோ வம்மானே ?
வீரர்க்குள் வீரனெரு மீனவனெ வம்மானே ?
வெற்றிப்பு லிகொடிக்கு மீனமோ வம்மானே ?
ஊருக் குறந்தைங்கர் கொற்கையோ வம்மானே ?
ஒக்குமோ சோணட்டைப் பாண்டிநா டம்மானே ?"

என்றொரு பாடலைச் சொன்னர்.

அது கேட்டு அங்கிருந்த பாண்டியன் சமஸ்தான வித்துவானுகிய புகழேந்தி என்பவர் ஒட்டக்கூத்தரை நோக்கி, ' முனிசிரேஷ்ட ராகிய அகத்தியர் திராவிட பாஷையைப் பிரவசனம் செய்தது தென்னாட்டிலுள்ள பொதிய மலையிலிருந்தோ, சோழநாட்டிலுள்ள நேரி மலையிலிருந்தோ ? சோமசுந்தரக் கடவுள் ஒப்புச் சொல்லுதற் கரிய அறுபத்து நாலு திருவிளையாடல்களைச் செய்தது மதுரையி லேயோ, உறையூரிலேயோ ? ஸ்ரீ மகாலக்ஷ்மி சமேதனுகிய நெடுமால் மீனக அவதரித்தது அன்றிப் புலியாக அவதரிக்க வில்லையே ? ஆதலால், மீனக் கொடிதானே சிறந்தது ? புலிக் கொடிக்கு என்ன சிறப்பிருக்கின்றது ? தேவர்கள், முனிவர்கள் சென்னிமேல் ஏறும் பொன்னடியையுடைய சிவபெருமானது ஜடா மகுடத்தின்மேல் ஏறியிருக்கப்பெற்றது சூரியனே ? சந்திரன் தானே ? அதனால், மேம்பட்டது சந்திர குலமோ, சூரிய குலமோ ? சமணரை வெல்லும்பொருட்டுத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் பதிகமெழுதியிட்ட ஏடானது எதிரேறிக் கரை சேர்ந்தது காவிரியிலேயோ ? வையையிற்றானே ? அது பற்றி வையையாறு அல்லவோ மட்சிமைப்பட்டது ? பேயனுகாமல் அதற்குப் பெரும் பகையாகத் தோன்றி அதை விலக்குவது சோழனது ஆத்தி மாலையோ? பாண்டியன் அணியும் வேப்ப மாலைதானே ? மதுரையை அழிக்கப் பொங்கி வந்த சமுத்திரம் அஞ்சி வந்து பணிந்தது சோழன் காலையோ ? பாண்டியன் காலைத்தானே ?' என்னும் கருத்தை அடக்கி,

" ஒருமுனிவ னேரியிலோ வுரைதெளித்த தம்மானே ?
ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ வம்மானே ?
திருநெடுமா லவதாரஞ் சிறுபுலியோ வம்மானே ?
சிவன்முடியில் ஏறுவதுஞ் செங்கதிரோ வம்மானே ?

கரையெதிரல் காவிரியோ வையையோ வம்மானே ?
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ வம்மானே ?
பரவைபணிந் ததும்சோழன் பதந்தனையோ வம்மானே ?
பாண்டியனார் பராக்கிரம பகர்வினதே யம்மானே ?''

என்ற பாடலைச் சொல்லி அவர் சொன்னதைக் கண்டிக்க, ஒட்டக் கூத்தர், ' இவனுர் கொன்றைமாலை போலக்குறுக்கே வந்து விழுந்து நாம் பேசினதற்கு எல்லாம் பிரதிகூலமாய்ப் பேசத் தலைப்பட்டான்? இப்படி விளையுமென்பதற்குத்தானே வருகிற வழியிலே கருடனும் காடையும் கட்டின ?' என்று சிந்தித்துச் சித்தங்கலங்கியிருந்தார்.

அவர் அப்படியிருக்க, பாண்டியராஜன் தன் தந்தை வழி தாய் வழியிலுள்ள பந்து வர்க்கத்தில் பெரியோர் சிறியோர் அனைவரையும் வரவழைத்து, ஒட்டக்கூத்தர் சோழராஜனுக்குப் பெண் பேச வந்த செய்தியை அவர்களுக்குத் தெரிவித்து, ' இந்த விஷயம் சுற்றத்தாருக்கு அசம்மதமாகச் செய்யத்தக்கதல்லவே ! ஆகையால், அவனுக்குக் கொடுக்கலாமா, கொடுக்கலாகாதா ? உங்கள் அபிப்பிராயமென்ன ? இது ஆயிரம் காலத்துப் பயிராகையாலும் பெண்ணைப் பெற்றுப் பத்து வயதுக்குமேல் வைத்திருப்பது பாவம் என்பதனாலும் செவ்வையாகத் தீர்க்காலோசனை பண்ணித் தனித்தனி அவரவர் அபிஷ்டத்தை ஒளியாமல் வெளியிடவேண்டும்' என்று உசாவினன். அவ்வண்ணமே தங்களுக்குள் கலந்து பேசி அவர்களில் சிலர், 'அரசர்க்குரிய கல்வி கல்வம் முதலியவைகளுள் சோழனைக் குறித்து என்ன குறை சொல்லுகிறது ? யோசிக்குமிடத்தில் அவன் கல்வியில் சாமானியனு ? செல்வத்திலேதான் குபேந்திரனுக்குக் குறைத்தவனு ?' என்றார்கள். சிலர், 'ஐம்பத்தாறு தேசத்தரசர்களுடைய படங்களுக்குள் சோழனுடைய படத்தை எடுத்து அதில் எழுதப்பட்டிருக்கின்ற அவனது உருவத்தை ஒருவர்க் கொருவர் காட்டி, 'சோழன் அழகிலேதானென்ன மன்மதனுக்குத் தாழ்ந்தவனே ? பாருங்கள் ; அவன் வட்டமாய் ஒளி பெற்றுப் பூரண சந்திரன் போலப் பரந்த முகமும், தாமரைத் தளம் போலும் அழகாகக் கருணை சுரந்த கண்களும், மதன கோதண்டம் போல வளைந்து கறுத்த புருவமும், பவளம் போலச் சிவந்த வாயும், விஜய லக்ஷ்மியின் அரங்கமணி மண்டபம் போல விசாலமாய் எடுத்த மார்பும், நெடிய மேருமலை போலப் பருத்துயர்ந்த தோள்களும், ஆண் சிங்கம் போலப் பெருமிதமான நடையும் உடையவன் அல்லனே ?' என்றார்கள். அதைக் கேட்ட சிலர், ' 'கைந்நிறந்த பொன்னில்லாவிட்டாலும் கண்ணிறைந்த கணவனிருக்க வேண்டும்,' என்பதனால், நீங்கள் அழகைச் சொல்ல வந்தது சரிதான் ; ஆயினும் இரண்டு, கண்ணுமில்லாத பிறவிக் குருடனுகிய திருதராஷ்டிர மகாராஜனுக்குப் பெண் கொடுத்தானே காந்தார தேசாதிபதி, அவன்அழகைப் பொருள் செய்யாமல் போனதென்ன?' என்றார்கள். சிலர், ' அழகிருந்து என்ன பண்ணும் ? அதிர்ஷ்டமிருந்துண்ணும்,' என்பதனால் அவன்அதிர்ஷ்டத்தையேமுக்கியமாய்

நிஜீனத்தவனுக வேண்டும்,' என்ருர்கள். சிலர், 'அதுவும் பெரிதன்று, ராஜ புருஷர்களுக்கு ஆண்மையே பிரதானம்,' என்ருர்கள்; சிலர், 'அப்படியென்ருல், பாஞ்சாலன் மகளுகிய ஆணும் பெண்ணு மல்லாத சிகண்டிக்கும் ஒருவன் பெண் கொடுத்தானே, அவன் அச் சிகண்டியினிடத்தில் என்ன சூரத்வத்தைக் கண்டான்?' என்ருர்கள். சிலர், 'எதைப் பாராவிட்டாலும், 'பாத்திரமறிந்து பிச்சையிடு ; கோத்திரமறிந்து பெண்ணேக்கொடு,' என்பதனுல், குலம் கோத்திர மாத்திரம் தக்கதா தகாததாவென்று அவசியம் பார்க்கவேண்டும்,' என்ருர்கள். சிலர், 'இது நியாயந்தான் ; ஆயினும், சோழ னுடைய குலம் கோத்திரத்தைக் குறித்து விசாரிக்கிறது, கரும்பு கசக்கிறதோ தித்திக்கிறதோ என்று கேட்கிறது போலிருக்கிறது ; அது நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெரிந்ததுதானே?' என்ருர்கள். சிலர், 'அப்படியென்ருல், 'பழம் நழுவிப் பாலிலே விழுந்தது,' போலத்தான் ; அதற்கு ஆக்ஷேபமென்ன ? சம்பிரம மாய்க் கொடுக்கலாமே!' என்ருர்கள். இப்படிக்கெல்லாம் சொன்ன மையால், அவரவர் அபிமதத்தை அறிந்துகொண்டு, 'வசிஷ்டர் வாக்கினுல் பிரமரிஷியாவது,' போலப் பந்து ஜனங்களின் இஷ்டப் படியே பாண்டியன் தவம் செய்து பெற்ற தன் அருமைத் திரு மகளேச் சோழனுக்குக் கொடுக்கச் சம்மதித்துப் புரோகிதர் முன் னிலையில் பொருத்த நிமித்தம் பார்த்து நிச்சயதார்த்தம் பண்ணி, விவாகத்திற்கு நாள் வைத்து முகூர்த்தப் பத்திரிகை எழுதிக் கொடுத்து, 'இந்தப் பத்திரிகையில் நிருணயித்த தினத்தில் உங்கள் ராஜா இவ்விடத்திற்கு வந்து சுகமாய்க் கலியாணம் பண்ணிக் கொண்டு போகலாம்,' என்று சொன்னுன்.

அப்பொழுது அந்தச் சபையில் இருந்தவர்களெல்லாம், 'பூர்வம் திருப்பாற்கடலில் அவதரித்த ஸ்ரீ மகாலக்ஷ்மியைத் தேவர் கூட்டமெல்லாம் எனக்கெனக்கு என்று இச்சித்தது போல, நமது வேந்தன் மகளே எத்தனையோ ராஜாக்கள் தனித்தனி இச்சித்துத் திருமணம் முடிப்பதற்கு நாளிதுவரையில் பகீரதப் பிரயத்தனம் பண்ணி வந்தார்களே! பண்ணியும் என்ன பிரயோஜனமாயிற்று ? சோழனுக்கென்று கங்கணப் பிராப்தம் இருந்தபடியினுலே காற்றும் மழையுமாய் அதிகுலபத்தில் விவாகம் கூடிவிட்டது. எப்பொழுதும், 'ஒருவனுக்குத் தாரம் ; மற்றவனுக்குத் தாய்,' என்பது சத்திய மல்லவா ?' என்று சொல்லிச் சந்தோஷப்பட்டார்கள்.

ஒட்டக்கூத்தர் பாண்டியன் எழுதிக் கொடுத்த முகூர்த்தப் பத்திரிகையை வாங்கி வந்து சோழன் கையில் கொடுத்துப் பாண்டியன் சபையில் நடந்த சமாசாரங்களேயெல்லாம் சொன்னுர். அவன் அந்த முகூர்த்தப் பத்திரிகையைப் பார்வையிட்டு மனம் களித்துத் தான் விவாகத்திற்குப் போய் மீண்டு வருமளவும் தனக்குப் பிரதிநிதியாக ராஜாதிகாரம் பார்க்கும்படி ஒட்டக் கூத்தரைப் பட்டணத்தில் வைத்துவிட்டு, மந்திரி பிரதானிமார் களுடனும் தன் சுற்றத்தாருடனும் நால்வகைச் சேனைகளுடனும்

மதுரைக்குப் போன பொழுது, பாண்டியன் எதிர்கொண்டு உபசரித்து, வாழை கமுகுகள் நாட்டி, முத்துமாலை புஷ்பமாலை தூக்கி, படங்கள், கண்ணுடிகள் நிரைத்து, இந்திர விமானம் போலச் ஜோடிக்கப்பட்ட அழகிய மணப் பந்தலிலே உன்னதமாகிய மாணிக்க மேடையில் நவரத்தினக் கோலமிட்டு, பூரணகலசங்கள் வைத்து, தீபங்கள் ஏற்றி, முளைப்பாலிகை அமைத்து, நடுவே மரகத பீடமிட்டு, திவ்விய நீர்த்தங்களால் ஸ்நானம் பண்ணுவித்து, விலையுயர்ந்த ஆடையாபரணங்களையும் கந்த சுகந்த புஷ்பாதிகளையும் கொண்டு அலங்கரித்து, மணக்கோலம் செய்வித்து அழைத்து வந்து, மாப்பிள்ளையையும் அவன் வலப் புறத்தில் பெண்ணையும் மேற்படி பீடத்தின்மேல் இருக்க வைத்து, மங்கள வாத்தியம் முழங்க ஹோமம் வளர்த்து, வேதப் பிராமணர்கள் மந்திர வாக்கியங்களைச் சொல்லி ஆசீர்வதிக்க, சாஸ்திரோக்தமாகப் பாண்டியன் தன் மகள் கையை எடுத்துச் சோழன் கைமேல் வைத்துத் தாரைவார்த்துத் தத்தம் பண்ணிக் கன்னிகாதானமாய்க் கொடுக்க, சோழன் அக்கினி சாட்சி அருந்ததி சாட்சியாக அவளைப் பாணிக்கிரகணம் பண்ணினான். மற்றக் கிரியைகளெல்லாம் விதிப் பிரகாரம் சம்பூரணமாக நடக்க, ஆறு மாத பரியந்தம் தானம், தருமம், விருந்து, ஆடல், பாடல் முதலான சகல விபவத்துடன் அதிக சம்பிரமமாய்க் கலியாணம் நடந்தது.

பிறகு பாண்டியன் பெண்ணுக்கு உசிதமான வஸ்திர பூஷணங்களையும், பொற்பெட்டி, பொற்றட்டு, பொற்கட்டில், பொற்றொட்டில், பொற்குடம் முதலானவைகளையும், யானை, குதிரை, கரடி, பல்லக்குகள், சீமை, பூமிகள் மற்றும் அனேகம் பொருள்களுடனே தோழிமார் தாதிமார்களையும் சீதனம் கொடுத்து, அந்தப்படியே தன் சமஸ்தான வித்துவானுகிய புகழேந்தியாரையும் சீதனமாகக் கொடுத்தான். சோழன் ஓட்டக் கூத்தர் பெயருக்கு ஜாபிதா எழுதி அச்சாபிதாவில் மேற் படிச் சீதனத் தட்டுமுட்டு முதலானவைகளை விவரணமாகச் செப்பிச் சகலத்தையும் வரப் பார்த்துக்கொள்ளும்படி அனுப் பினான்.

ஜாபிதாவைக் கொண்டு வந்து கொடுத்த மாத்திரத்தில் எல்லாச் சாமான்களும் ஜாபிதாவின்படி தம்மிடத்தில் வந்து சேரப் பார்த்து ஒப்புவித்துக்கொண்டு, அததை வைக்க வேண்டிய ஸ்தானங்களில் வைப்பித்துப் பின்பு ஒரு வித்துவானும் சீதனப் பொருளாக வந்திருக்கிறார் என்று சொல்லக் கேட்டு அவரை வரவழைத்துப் பார்க்குமிடத்தில் 'தாம் பெண் பேசப் போன பொழுது தம் கட்சிக்கு எதிர்க்கட்சியாய்ப் பேசின புகழேந்திப் புலவராய் இருக்கக் கண்டு, 'நல்லதாகட்டும், 'துள்ளின மாடு பொதி சுமக்கும்,' என்றபடி இறுமாப்புடைய இவன் நமது வலையில் தெய்வ கதியாக எளிதில் வந்து சிக்கினான் ; இவனுடைய கொட்டத்தை அடக்க வேண்டுமே அல்லாமல், இவன் எவ்வளவாகத் துக்கித்தாலும் இனி விடலாகாது;

எலியழுது புலம்பினலும் பூனை பிடித்தது விடுமா ?' என்று நினைத்து அவரை வித்துவ சிரேஷ்டரென்று மதியாமலும், சிறிதாவது அவரிடத்தில் இரக்கமில்லாமலும் சிறைச்சாலையில் வைப்பித்து, நாளொன்றுக்கு ஆழாக்கு அரிசியும், உழக்கு உப்பும் கொடுக்கும்படி உத்தரவு செய்தான். புகழேந்திக்கு இங்ஙனம் சங்கடம் நேரிட்டதனல் அவர், ' இது கர்மானுசாரம்,' என்றெண்ணி, அச்சிறைச் சாலையின் பக்கத்து மார்க்கத்தில் தண்ணீர்க்குப் போகிற ஸ்திரீகளைச் சாளரத்தின் வழியாய்ப் பார்த்து அவர்கள் காதுக்கு இனிமையாகவும், சுலபத்தில் தெரியும்படியாகவும் பாரத சரித்திரத்தைச் சுருக்கி இக்காலத்தில் தெருக்களில் சில எளிய ஜனங்கள் உடுக்கை தட்டிப் பாடிச் சீவனம் செய்துகொண்டிருக்கின்ற அல்லியரசாணி மாலையீடு, பவளக்கொடி மாலையீடு, புரந்தரன் களவுமாலை என்னும் செம்பாகமான பாடல்களாகப் பாட, அவைகளை அவர்கள் கேட்டுச் சந்தோஷப்பட்டுத் தங்கள் தங்கள் வீட்டிலிருந்து அரிசி, காய்கறி, மிளகாய் முதலானவைகளும் கொண்டு வந்து கொடுப்பார்கள். அவைகளில் புகழேந்தியார் தாம் சமைத்துண்டு மீந்தவைகளைச் சிறைச்சாலைக் காவல் சேவகருக்குக் கொடுப்பார். அதனல் அச் சேவகர்கள் அவர்மேல் அதிக பட்சம் வைத்து அவரை மரியாதையாய் நடத்தி வந்தார்கள்.

இப்படி இருக்கையில், சோழன் கலியாணம் நிறைவேறின மாத்திரத்தில் தன் மனைவியை அழைத்துக்கொண்டு உறையூரில் வந்து சேர்ந்து சுகமாய் வாழுநாளில், அடுத்த தைப் பொங்கலுக்கு மறுநாள் சாயங்காலம் அவன் மிக்க ஆடம்பரத்துடனே வீதியில் யானைமேல் பவனி வந்தான். சிறைச்சாலைத் தளத்தின்மேல் நின்று புகழேந்தியார் அவ்வேடிக்கை பார்த்த பொழுது, சோழன் அவரைத் தன்னருகிலிருக்கும் ஒட்டக்கூத்தருக்குக் காட்டி, ' இதோ மேன்மாடத்தில் நிற்கின்றரே புகழேந்தி என்பவர், இவர் தமிழில் மகா சமர்த்தரல்லரா ?' என்றன். அதற்கு ஒட்டக்கூத்தர், ' வேங்கைப் புலிக்கு முன் மான் நிற்குமா ? எரிகின்ற கடுநெருப்புக்கு முன் சார மற்று உலர்ந்த வெட்டுக்காடு நிற்குமா ? கடற்சுறுவுக்கு முன் மற்ற சிறுமீன்கள் நிற்குமா ? சூரியோதயத்தில் பனி நிற்குமா? அந்தப்படி கல்வியில் எனக்கு முன் இவன் நிற்க மாட்டுவானு ?' என்னும் கருத்துத் தோன்ற அவரை இகழ்ந்து,

> " மானிற்கு மோவந்த வாளரி வேங்கைமுன்? வற்றிச்செத்த
> கானிற்கு மோவவ் வெரியுந் தழன்முன் ? கனைகடலின்
> மீனிற்கு மோவந்த வெங்கட் சுறவமுன் ? வீசுபனி
> தானிற்கு மோவக் கதிரோ னுதயத்திற் றுர்மன்னனே?"

என்று ஒரு பாடலைச் சொல்ல, அது கேட்டுப் புகழேந்தியார், 'இவன் அவ்வளவு சமர்த்தனு ?' என்று சிரித்து ராஜாவைப் பார்த்து, ' இந்தப் பாடலை வெட்டிப் பாடவோ, அல்லது ஒட்டிப் பாடவோ?' என்று கேட்க, அவன், ' வெட்டிப் பாட வேண்டா ; ஒட்டியே

பாடும்,' என்ன, அவர், ' அந்த மான் முதலானவைகள் அவனே; புலி முதலானவைகள் நானே,' எனப் பொருள்படும்படி,

" மானவன் நானந்த வாளரி வேங்கையும் வற்றிச்செத்த
கானவன் நானவ் வெரியுந் தழலுங் கனைகடலின்
மீனவன் நானந்த வெங்கட் சுறவமும் வீசுபனி
தானவன் நானக் கதிரோன் உதயமுந் தார்மன்னனே!"

என்று அப்பாடலேயே ஒட்டிப் பாடினார். பாடியும், அரசன் ஒட்டக் கூத்தரிடத்தில் வைத்த தாட்சணியத்தால் புகழேந்தியாரைச் சிறை மீட்க வேண்டும் என்பதை நினையாமல் போனான்.

அதற்குச் சில காலத்திற்கு முன் ஒரு வித்துவான் சோழன் மேல் பாட்டுப் பாடி வர, அரசன் அப்பாடலே வியந்து அவனுக்கு உசிதமான வெகுமதி செய்து கொடி, குடை, எக்காள முதலிய விருதுகளும் கொடுக்கக் கண்டு, ஒட்டக்கூத்தர் பொறுமை கொண்டு சோழனைப் பார்த்து, 'கிழக்குத் தெற்கு மேற்கு வடக்கென்னும் நான்கும், இவற்றிற்கு இடையிலுள்ள கோணம் நான்கும், மேல்கீழ் இரண்டுமாகிய தசதிசைகளும் பதறிப் பயந்து நடுங்கிப் போக நட் சத்திரங்களெல்லாம் பலபலவென்று உதிர்ந்து சிதறப் பகிரண்டத் தின் முகடுவரைக்கும் நீண்ட மந்தரகிரியாகிய மத்தைக்கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்து, தேவர்களுக்கு அமிர்தம் கொடுத்த ஸ்ரீ மகாவிஷ்ணுவின் அமிசமாய் அவதரித்துப் பூமண்டல முழுதும் அரசாளப் பெற்ற மானுபரணனுகிய ராஜசேகரா! பரமசிவன் பரிவு கூர்ந்து கொடுத்தருளிய முத்துப் பந்தலில் வசிக்கின்ற திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாடிய பாடலுக்கும், சூரபதுமன் முதலான அசுரர்களைக் கடிந்த சத்திவேலைத் தாங்கிய முருகக் கடவுள் பாடிய பாடலுக்கும், பொதிய மலையில் எழுந்தருளி யிருக்கும் முனிசிரேஷ்டராகிய அகஸ்தியர் பாடிய பாடலுக்கும், கொத்துக் கொத்தாய் இருக்கின்ற சடையினையுடைய சிவபெருமான் பாடிய பாடலுக்கும், பதுமபீடத்தில் வீற்றிருக்கும் பிரமதேவன் பாடிய பாடலுக்குமே குடை, கொடி, காளம் முதலிய பல விருது களும் கொடுக்கலாமேயல்லது, இந்த அற்பமாகிய தமிழ்ப் பாடலுக் கெல்லாம் ஏன் கொடுக்க வேண்டும்?' என்னும் பொருள் தோன்ற,

" பத்துக்கொண் டனதிக்கும் பதறிப்போ யுலையப்
பைம்பொற்ரு ரகைசிந்தப் பகிரண்டத் திடைநீள்
மத்துக்கொண் டுமதிக்குந் திரையாழி நெடுமால்
வடிவாகிப் புவிகைக்கொண் டருண்மானு பரணு!
முத்துப்பந் தரினிற்குங் குருநாக்குஞ் சினவேன்
முருகற்கும் பொதியக்கோ முனிவர்க்குஞ் சடிலக்
கொத்தற்கும் பதுமக்கொத் தயனுக்கு மலதிக்
கூழைத்தண் டமிழுக்கேன் கொடியுங்கா ளமுமே?"

என்று ஒரு பாடலைச் சொல்லித் தடுத்து, அன்று முதலாகக் கவி பாடி வருபவர்களையெல்லாம் பிடித்துச் சிறைச்சாலையில் அடைப்பித்து, தேவி கொலுவிருக்கின்ற நவராத்திரி காலத்தில் சிறைக்கூடத்திலிருந்து வெளிப்படுத்தி, அவர்களை இருவர் இருவராகக் குடுமியோடு குடுமி முடி போட்டு, இறங்கி நிற்கத் தேவிக்கு முன்பாக நிறுத்தி, பிடாரிக்குச் சோடு கடா வெட்டுவது போலச் சற்றும் இரக்கமில்லாமல் அவர்கள் தலைகளைப் பதைக்கப் பதைக்க வெட்டி வழக்கமாய்ப் பலி செலுத்தி வருவதுண்டு. அது பற்றி அந்த ஒட்டக்கூத்தரையும், ஒருவன் பாடும் பாட்டில் ஏதாவது குற்றம் கண்டவுடன் அவன் தலையில் நறுக்கென்று குட்டுவது பற்றிப் பிள்ளைப் பாண்டியனையும், வாது செய்யும் பொழுது எதிரி தோற்றால் அவன் காதில் மாட்டிய துறட்டைப் பிடித்திழுத்துக் காதை ஓட்ட அறுப்பது பற்றி வில்லிப்புத்தூராழ்வாரையும் குறித்து,

"குட்டுதற்குப் பிள்ளைப்பாண் டியனே வில்லை ;
குரும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லை யில்லை ;
இரண்டொன்று முடிந்துதலை இறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கலியொட்டக் கூத்த னில்லை ;
வீளையாட்டாய்க் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு ;
தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே."

என்று பிற்காலத்தார் பாடியுமிருக்கின்றனர். அது நிற்க. மேற் சொல்லிய வழக்கப்படி அவர் தற்காலத்திலும் செய்ய எத்தனித்துப் புலவர்களில் அநேகரைப் பிடித்துச் சிறைச்சாலையில் அடைத்து வைத்தார். அச்செய்தி சிறைச்சாலையில் இருக்கும் புகழேந்திப் புலவர் அறிந்து, 'ஐயையோ, சண்டாளன்! பாவமென்பதும் பழியென்பதும் பாராமல் தன்னைப் போன்ற புலவர்களை வெட்ட மனம் துணிந்தானே! இதை என்னவென்று சொல்லுகிறது!' என்று வியசனப்பட்டு, பிறகு அவர்களையெல்லாம் கொலைக்குத் தப்புவிக்க வேண்டுமென்று, நல்ல புத்திமான்களாகக் குயவனொருவன், அம்பட்டனொருவன், கருமானொருவன், வேளாளனொருவன், வண்ணனொருவன் ஆக ஐந்து பேரைத் தெரிந்தெடுத்து, அவர்களுக்குச் சிறையிருப்பிலேதானே சம்பிரதாயத்துடனே இலக்கிய இலக்கணங்கள் பயிற்றுவித்து அதிக சமர்த்தர்களாம்படி செய்தார்.

அவர்களெவரும் அவரிடத்தில் முறையாகக் கல்வி கற்று மிக்க திறமுடையவர்களாய் இருக்கையில் நவராத்திரி சமீபித்தது. சோழராஜன் ஆகாயத்தை முட்டப் பச்சைப் பந்தல் போட்டுக் கமுகு, வாழை முதலியவைகளைக்கொண்டு அலங்கரித்துத் திருவிளக்கேற்றித் தேவியைக் கலசத்தில் ஆவாகனம் பண்ணி ஒன்பது நாள் கொலு நிறுத்திப் பூஜித்து வந்து, பத்தாம் நாளாகிய விஜயதசமியினன்று உத்வாசனம் பண்ணுவதற்குப் பலி

கொடுக்க யத்தனித்தார். அத்தருணத்தில் அந்தத் தேவி சந்நிதிக்கு முன்னே இருபக்கத்திலும் இரண்டு நாற்காலி கொண்டு வந்து போடப்பட்டன. அவற்றுள் ஒன்றின்மேல் அரசனும், மற்றதன் மேல் ஒட்டக்கூத்தரும் கத்தியை உருவிக் கையில் பிடித்தவண்ணமாய் எதிரெதிராக உட்கார்ந்தார்கள். ஒட்டக்கூத்தர் சிறைச் சாலைக் காவலதிகாரியை நோக்கி, 'அங்குள்ள படித்த கடாக்களைப் பிடித்துக்கொண்டு வா,' என்று சொல்ல, அவன் விசனப்பட்டுக் கொண்டே சிறைச்சாலைக்குப் போய்க் கதவைத் திறந்து அதற்குள் அடைக்கப்பட்டவர்களை, 'வெளியே வாருங்கள்,' என்றான். கொஞ்சங்குறைய நூறு பேர் வரையில், 'இன்றைக்கு நமக்கு முடிவு சம்பவித்தது! இதற்கென்ன உபாயம் செய்கிறது?' என்று கர்ப்பம் கலங்கிக் கண்ணீர் விட்டுக்கொண்டே வெளிப்பட்டார்கள். புகழேந்தியார், 'இவர்களில் பெரும்பான்மையோர் சொற்பக் கல்வியுடையவர்களாய் இருப்பதனால் அந்தக் காலாந்தகன் கேட்கும் கடினமான கேள்விக்கு உத்தரம் சொல்லத் தெரியாமல் விழிப்பார்களே! அது கண்டு அவன் அநியாயமாய்ப் பதைக்கத் துடிக்க வெட்டியெறிவானே!' என்று நினைத்து, அப்படிப்பட்டவர்களைப் பின்னே நிறுத்தித் தம்மிடத்தில் சந்தேக விபரீதமறக் கல்வி பயின்ற ஐவர்களையும் ஒருவர்பின் ஒருவராய் ஒட்டக்கூத்தருக்கு முன்னே போகும்படி திட்டப்படுத்தி அனுப்பினார்.

அவரால் அனுப்பப்பட்டவர்களில் குயவன் பிரதமத்தில் போய் நின்றான். அப்பொழுது ஒட்டக்கூத்தர் தம்மைப் பெரிய மதயானையாகவும் அவனை ஒரு சிறிய முயல் குட்டியாகவும் பாவித்துக்கொண்டு அவன் முகத்தைப் பார்த்து, 'மோனை, எதுகை முதலிய தொடையும் தொடை விகற்பமுமுடைய வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற பாவும்; தாழிசை, துறை, விருத்தம் என்ற இனமுமாகிய யாப்பினை உள்ளிட்ட இயல், இசை, நாடகமென மூவகைப்பட்ட தமிழாகிய மும்மதங்களைப் பொழிகின்ற இந்தக் கவியானைக்கு முன் அச்சமில்லாமல் வந்து எதிர்த்து நிற்கின்ற நீ யாரடா?' என்பதற்கு,

"மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் தெதிர்த்தவ னரடா?"

என்றார். அதற்குக் குயவன், 'நான் கூனையையும் குடத்தையும் குண்டு சட்டியையும் பானையையும் பண்ணுகின்ற குசப்பையல்,' எனவும், சிலேஷையால், 'தறபுகழ்ச்சியாக யானையென்று சொல்லுகின்ற உன்னுடைய மதத்தை அடக்குகின்ற அங்குசப்பையல்,' எனவும் சொல்லுவதற்கு,

"கூனை யும்குட முங்குண்டு சட்டியும்
பானை யும்பணி மங்குசப் பையல்யான்."

என்றான். அது கேட்டு ஒட்டக்கூத்தர், 'ஏது! இவன் நமக்கு வைரியாயேற்பட்டான்,' என்று எண்ணி, நீதியில்லாமல் தலையை

வெட்டலாகாதே, அதனால் அவனை ஒரு பக்கத்தில் சும்மா நிறுத்தி வைத்து, 'மற்றொருவனை அழை,' என்று சிறைக்கூடக் காவல் அதிகாரிக்குச் சொல்ல, புகழேந்திப் புலவர் அம்பட்டனை, 'போ,' என்ன, அவன், 'இந்தக் கொலைப்பாதகன் நம்மை என்ன இமிசை செய்வானோ!' என்று நடுங்கிக்கொண்டே வந்து நின்றான்.

அவனுக்கு ஒரு கண் பொட்டையாயிருக்கக் கண்டு ஒட்டக் கூத்தர் அவனை அலட்சியமாக, 'அடா! பொட்டைக் கண்ணா? என்னைக் கண்டவுடனே வல்லூறென்னும் பறவையைக் கண்ட கொக்குப் போலக் கைகால் உதறலெடுக்க மனவிசாரத்துடனே இங்கே வந்து நின்றாயே, நீ யார்?' என்பதற்கு,

"விண்பட்ட கொக்குவல் லூறுகண் டென்ன விலவிலக்கப்
புண்பட்ட நெஞ்சொடும் இங்குநின் றுய்பொட்டை யாய்புகல்வாய்."

என்று பாதிப் பாடலைச் சொல்லி, 'இதற்கு உத்தரமாக மற்றப் பாதிப் பாட்டையும் சொல்லு. நீ கவி பாடும் திறத்தைப் பார்ப் போம்,' என்றார். அதற்கு அம்பட்டன், 'இவன் நம்மை என்ன செய்தாலும் செய்யட்டும்! தலைக்கு மிஞ்சின ஆக்கினையும் கோவணத்துக்கு மிஞ்சின தரித்திரமுமில்லை!' என்று தைரியம் கொண்டு, 'எனக்குக் கண்ணும் பொட்டை. நான் ஜாதியிலும் அம்பட்டன். ஆனாலும் பாவாணர்களுக்கு முன்னே சிறிதும் சங்கையின்றிச் செம்பாகமான பற்பல சந்தங்களையுடைய தமிழ்ப் பாடல்களை யாவரும் திடுக்கிடச் செய்கின்ற நீயும் திடுக்கிடும்படி பாடுவேன்,' என்பதற்கு,

"கண்பொட்டை யாயினும் அம்பட்ட னுங்கவி வாணர் முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயும் திடுக்கிடப் பாடுவனே."

என்றார். அது கேட்டு ஒட்டக்கூத்தர், 'இவன் அம்பட்டக் கிருதைக் காண்பிக்கிறான்,' என்று நினைத்து அவனை மறுபக்கத்தில் நிறுத்தி, வேறொருவனை அழைக்கச் சொன்னார். சிறைக் கூடத்திலுள்ள புகழேந்தியார் சொற்படி சேவகர்கள் கருமானைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

ஒட்டக்கூத்தர் அவனை, முன்பு குயவனையும் அம்பட்டனையும் கேட்டது போலக் கவி சொல்லிக் கேள்வி கேளாமல், வாய் மொழி யாகத்தானே, 'நீ யார் மகன்? உன் பெயர் என்ன? நீ பெற்ற மகிமை எப்படிப்பட்டது? உன் குலமெது? சொல்,' என்றும், 'தப்புப் பாட்டுப் பாடலாமா?' என்றும் கேட்டார். அதற்கு அவன், 'நான் செல்லப்பாசாரி குமாரன். என் பெயர் திருவேங் கடாசாரி. நான் செகத் குருவாயிருக்கிறவன். என் குலம் மனுமய சிற்பி துவஷ்ட விஸ்வ என்னும் ஐந்தில் கருமார குலம்; நான் குற்றமறப் பாடுகிற பாட்டைக் குறித்து, 'வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ' என்பதாக வாய்க்கெளிதாக நீ குற்றம் கூற வந்தாய். இப்படி என் கவியைச் சுட்டி வீண் குற்றம் கூறு

கிறவர்களே நான் சும்மா விடமாட்டேன்! குறட்டைக் கொண்டு பதினெறு பல்லையும் பிடுங்கிப் பருந்தாட்டமாட்டிப் பகையாளிகள் பார்த்துச் சிரிக்கும்படி அவர்கள் கண்ணுக்கெதிரே இரவும் பகலும் ஓய்வில்லாமல் கவியாகிய இருப்பாணிகளைக் கொண்டு வாயில் கடாவுவேன்!' என்ற கருத்துத் தோன்ற,

" செல்வன் புதல்வன் திருவேங் கடவன் செகத் குருவாம்
கொல்லன் கவியைக் குறைசொன்ன பேரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டிப் பகைவர் முன்னே
அல்லும் பகலு மடிப்பேன் கவியிருப் பாணிகொண்டே."

என்ற பாடலைச் சொன்னான். அது கேட்டு ஓட்டக்கூத்தர், ''தன்னைப் புகழாத கம்மாளனில்லை,' என்பார்கள், அத்திற்கேற்றபடி, இவன் தன்னைப் புகழ்ந்து பேசுகிறான்' என்றெண்ணி அவனை,'அப்படி நில்.' என்று நிறுத்தி, 'பின்னெருவனைக் கொண்டு வா,' என்றார். என்ற மாத்திரத்தில் வேளாளன் வந்து நின்றான்.

அவனை நோக்கி ஓட்டக்கூத்தர், 'பிரபல கவிஞர்களாகிய எங்களுக்கு முன்னே புன் கவிஞர்களாகிய நீங்களும் வித்துவான் களென்று வெளிப்பட்டு, 'ஞானியாராடும் திருக்கூத்தோடே நானுமாடுகிறேன்,' என்பதாகக் கவி பாடுகிறீர்களே! இஃதென்ன வெட்கக்கேடு?' என்றார். அதற்கு வேளாளன், 'இந்தப் பஞ்சாசத் கோடி பூமண்டலத்தையும் ஒரு குடை நீழலில் அடக்கி ஏகாதி பத்தியமாய் அரசாளுகின்ற சக்கரேஸ்வரனைக் கண்டு மற்ற ஐம்பத் தாறு தேசத்தரசர்கள், 'நாமெவ்வளவு பூமிக்குடையவர்கள்? இவனுக்கு எதிர்த்தட்டாக, 'கடா இடுக்கில் புல் தின்னுகிறது போல,' ஆளுகை செய்வது தகுதியல்லவே!' என்று தத்தம் தேசங் களைக் கைவிட்டுக் கடலிலே போய் விழுந்து மாண்டு போனார்களா? ஒரு தடாகத்திலுள்ள புஷ்பங்களுக்குள் மிகச் சிறந்ததாயும், ஸ்ரீ மகாலட்சுமிக்கு வாசஸ்தானமாயுமிருக்கின்ற தாமரை புஷ்பிக்கக் கண்டு அதனருகிலிருக்கும் அற்பமாகிய கொட்டியும் புஷ்பிக் காமலிருக்கின்றதா? அந்தப்படி எழு வகைத் தீவுகளையும் பரிபால னம் பண்ணுகின்ற சோழ மகாராஜாவே! கவிசிரேஷ்டராகிய ஓட்டக்கூத்தரே! நீங்கள் சொற்றிட்பமும் பொருணுட்பமும் உடையதாகப் பாடுகின்ற பாடலைக் கண்டு என் போலும் சொற்ப மாகிய கவிகளைப் பாடுகின்ற புலவர்களெல்லாம் பயந்து பாடாமல் ஓடியொளித்துப் போவார்களா? சொல்லுங்கள்,' என்னும் கருத்தை அமைத்து,

" கோக்கண்டு மன்னர் குரைகடல் புக்கிலர் ; கோகனகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில ; பூதலமேழ்
காக்கின்ற மன்ன ! கவியொட்டக் கூத்த ! நுங் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்க ளோதமிழ் பாடிய பாவலரே ?"

என்ற பாடலைச் சொல்லிப் பின்னும் தனக்குள், 'சோழனுக்கு இவன் வித்தியா குருவாயிருப்பது பற்றி இவனை மிகவும் பெருமைப்படுத்தி, அவன் தன் சிங்காதனத்திற்கு மேலாக உயர்ந்த ஆசனத்தில் வைத்து இவனுடைய பாதத்தைத் தலை மேலே தாங்கிக்கொண்டிருக்கிற காரணத்தால், 'குப்பையில் மூளைத்த கொடி கூரைமேலேறினது போல,' இவன் தன்னை அதிக சிலாக்கியப்பட்டவனாக நினைத்துக்கொண்டு கர்வித்து, 'அதிகாரி வீட்டுக் கோழி முட்டை குடியானவன் வீட்டு அம்மி யையும் உடைக்கும்!' என்பதாக நம்மையெல்லாம் பொருள் செய்யாமல் கிரமத் தாழ்வாக நடத்துகிறான்,' என்றெண்ணி, ஒட்டக்கூத்தரை நோக்கி, 'உலகத்தில் எப்படிப்பட்டவர்களுக்கும் தம் குற்றம் தெரிவதேயில்லை; அதைக் குறித்து அரசனானவன் முன்பு தன்னிடத்திலுள்ள குற்றத்தைக் கண்டு அதனைப் பற்றறக் களைந்து, பின்பு பிறர் இடத்திலுள்ள குற்றத்தைக் கண்டு களைய வேண்டும். அப்படிச் செய்தால், அவனைச் சிறிதேனும் குற்ற மென்பது அணுகாது. அவன் எப்பொழுதும் நீதிமானுயிருப்பா னென்று சாஸ்திரமும் சொல்லுகின்றதே! அதை நீங்கள் ஆராய்ந் தறியவில்லையோ?' என்றான். அப்பொழுது, அவர் கடுங்கோபங் கொண்டு பின் வினவுவதை உணராமல், 'அடா! எங்களுக்குச் சட்டக் கல்வி ஒத வந்தையோ? நீ சொல்லுவதை யோசிக்கு மிடத்தில், 'முண்டையைப் பிடித்த கண்டமாலை முருங்கையையும் கூடப் பிடித்தது,' என்பது போல, நாங்களும் தப்புப் பாட்டுப் பாடியிருக்கிறதாக அல்லவோ காணப்படுகின்றது? நல்லது! எங்கள் பாட்டில் நீ கண்ட வழுவென்ன? சொல்,' என்று உறுக்கிக் கேட்டார். வேளாளன், ''அடங்காத பாம்புக்கு ராஜா மூங்கில் தடி,' என்பதனால், இவன் குற்றத்தை இவனுக்கு எடுத்துக் காட்டினால்தான் இவனுடைய கொட்டம் அடங்கும்! இல்லா விட்டால் அடங்கமாட்டாது!' என்று நினைத்து, 'ஐயா, நீர் முன்பு சோழ மகாராஜாவின்மேல் பாடிய அண்டத்துப் பரணியென்னும் பிரபந்தத்தில் இந்தப் பிரமாண்டத்தையே நகரமாகவும், பூமியைச் சுற்றியிருக்கின்ற சக்கரவாள கிரியையே மதிலாகவும், அதற்கு உட்புறத்திலிருக்கின்ற சப்த சமுத்திரங்களையே அகழாகவும், பூமி மத்தியிலுள்ள மக மேருவையே கோட்டைக் கொடிக்கம்பமாகவும் ரூபகப்படுத்தி வருணித்திருக்கிறீரே! அகழானது புறத்தில் இருந்தா லல்லவோ கோட்டைக்கு உறுதி? அகத்திலிருக்கிறதாகச் சொல்லப் பட்டிருக்கிறதே! அதனால் என்ன பயன்? இது சரிதானா? சொல்ல வேண்டுமானால் அண்டத்தில் அப்புறத்திலுள்ள பெரும்புறக் கடலைச் சொல்லலாமே? கம்பர் இராமாயணத்தில் நகர வருணனையில்,

"நேமிமால் வரைமதி லாக நீள்புறப்
பாமமா கடல்கிடங் காகப் பன்மணி
வாமமா ளிகைமலை யாக மன்னற்குப்
பூமியு மயோத்திமா நகரம் போலுமே."

என்ற செய்யுளில் பெரும்புறக்கடலை அகழாகச் சொன்னதையாவது பார்க்கவில்லையா ? அல்லது கேட்கவும் இல்லையா ?' என்றான்.

அந்த மட்டில் அக்கினி தேவனுக்கு அபிஷேகம் பண்ணினது போல ஒட்டக்கூத்தர் முகங்கருகி, அவரைப் பிடித்திருந்த அகங்காரமாகிய துஷ்டப் பேய் விட்டுத் தொலைந்தது. அப்புறம் அவர், ' மற்றவர்களை அழைத்துக் கேட்டால் அவர்கள் ஏதேது சொல்வார்களோ !' என்ற அச்சத்தினால் நாவெழாமல் வாய் பூட்டிடப்பட்டது போல, ஒன்றும் பேசாமல் சிறிது நேரம் சும்மாவிருந்து, பிறகு, ' இவர்களை நாம் சிறைப்படுத்தினது சனியனை விலைக்கு வாங்கினது போலிருக்கிறது !' என்றும், ' நமது பெயரைக் கேட்டவர்களெல்லாம், இடியோசை கேட்ட சர்ப்பம் போல நடுங்குவார்களே! அப்படியிருக்க, இவர்களுக்கு இந்தத் தைரியமும் இவ்வளவு வல்லமையும் யாராலே உண்டாயின ? அந்தப் புகழேந்தி என்பவனாலேதான் ! அவன் இப்படிப்பட்ட அற்ப மனிதர்களைக் கொண்டு நம்மை அவமானப்படுத்தினானல்லவா ? ஆகையால், அவனை அவன் உயிர்விடுமளவும் சிறைவிடச் செய்யவொண்ணாது ; இவர்களை எல்லாம் வீணாகச் சிறைப்படுத்தி வைப்பதனால் நமக்குப் பிரயோசனம் ஒன்றுமில்லை,' என்று தனக்குள்ளே நிச்சயித்து, அவர்களைப் பார்த்து, ' நீங்கள் இனித் தடையில்லாமல் சுகமாய் உங்கள் தேசத்துக்குப் போகலாம்,' என்று புகழேந்தியார் ஒருவர் தவிர இதரமானவர்களையெல்லாம் அனுப்பிவிட்டான். அவர்கள் அனைவரும், ' இது வரையில் நம்மைப் பிடித்திருந்த பாழும் சனியானது புண்ணியாத்துமாவாகிய புகழேந்திப் புலவராலே இன்றேடே நிவாரணம் ஆயிற்று ! நமக்காகச் சகாயப்பட்ட அவருக்கு வந்த விபத்து, பகவானுடைய அனுக்கிரகத்தால் சூரியனைக் கண்ட பனி போலச் சீக்கிரம் நிவர்த்தியாக வேண்டும்!' என்று கடவுளைத் துதி பண்ணிக்கொண்டு போனார்கள்.

புகழேந்திப்புலவர் யதாபிரகாரம் கிரகசாரம் போதாமையால் சிறையிருப்பிலேயே இருந்தார். வெகுநாள் சென்றும் அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று அரசனுக்குப் புத்தி பிறக்கவில்லை. இப்படியிருக்கையில், அதை அரசனுடைய தேவி அறிந்து, ' நம்முடைய பிதாவின் சமஸ்தான வித்துவானை ஒட்டக்கூத்தன் சிறைப்படுத்தியிருக்கின்றான் ; அவனுடைய அபிமதப்படி நமது மகாராஜாவும் நெடுநாளாகியும் அவரைச் சிறையிருப்பிலிருந்து விடுதலை செய்யாமலிருக்கின்றார் ; இதென்ன கோரம் ? கேள்வி முறையில்லையா ?' என்று மன வருத்தப்பட்டுக்கொண்டிருந்து, ஒரு நாள் சயனக் கிருகத்திற்கு ராஜா வரும் குறிப்பறிந்து, ' கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்,' என்று, அந்த வீட்டு வாயில் கதவைச் சாத்தித் தாழ் பூட்டி அரசனை உள்ளே பிரவேசிக்கவொட்டாமல் தடை செய்தாள். அது கண்டு குலோத்துங்கன்,

" களப வண்டலிடு கனக கொங்கைமிசை
நிலவெ முத்துகனல் சொரியுமென்று
அளக பந்திமிசை யளிகள் பந்தரிடும் அரிவை மீர்! கடைகள் திறமினே "

என்றும்,

" சூதன வளவெனு மிளமுலை துடியள வளவெனு நுண்ணிடை
காதள வளவெனு மதர்விழிக் கடலமு தனையவர்! திறமினே."

என்றும் கலிங்கத்துப் பரணியில் சொல்லிய வண்ணம், 'கடை திறக்க வேண்டும்,' என்று பற்பல விதத்திலும் இதம் சொல்லியும் திறவாததனால், தொன்றுதொட்டு அரசர்களுக்குள் ராஜ மகிஷிக்கு ஊடல் நிகழும் பொழுதெல்லாம் அவர்கள் புலவர்களைக் கொண்டு தணிப்பிக்கின்ற சம்பிரதாயப்படி ஒட்டக்கூத்தரை அழைத்துத் தன் பத்தினியின் ஊடலைத் தணித்துக் கதவைத் திறப்பிக்கும்படி அனுப்பினன்.

அவர் போய்,

" மாதர்க் கிதம் ; கவி வாணர்க்குச் சால வணக்கம் ; குரு
நாதர்க்கு நீதியோ டாசாரம் ; கல்வி நயந்தவர்க்குக்
கோதற்ற வாசகம் ; பொய்க்குப்பொய் ; கோளுக்குக் கோள் ; அறிவில்
ஆதற்கி ரட்டிப் பறிவுடை யோர்செய்யு மாண்மைகளே."

என்பதனால், இதமாய்ப் பேச வேண்டுமென்று நினையாமல், 'தாமரை மலரில் வசிக்கின்ற தேனைப் போல இனிக்கும் நயவசனத்தையுடைய இலக்குமி போல்வாய்! நீ கதவைத் திறந்து விடு ; திறவாதிருந்தாலோ, கோடையிடி இடித்தது போலப் பகைவர் நெஞ்சம் துணுக்குறும்படி புறங்கொடாமல் போர் செய்து வெல்கின்ற சுத்த வீரனும், உனது பிராணநாதனு மாகிய சோழராஜனென்னும் சூரியகுலத்தரசன் வாசல் தேடி வந்தால், அப்பொழுது சூரியனைக் காணுமல் முகுளித்த தாமரை அச்சூரியன் உதயமாகக் கண்ட மாத்திரத்தில் தன்னியல்பாய் விகசிக்கிறது போல, உனக்கொருவரும் இதம் சொல்லாமலே தனக்குத்தானே விரல்களாகிய இதழ்களையுடைய உன் கையாகிய தாமரையானது திறந்துவிடப் போகின்றது! அதைக் குறித்து நான் இனி உன்னைப் பிரார்த்திக்க வேண்டிய நிமித்தமென்ன ?' என்கிற கருத்தைக்கொண்டு,

" நானே இனியுன்னை வேண்டுவ தில்லை ; நளினமலர்த்
தேனே ! கபாடம் திறந்திடு வாய் ; திற வாவிடிலோ
வானே றனைய இரவிகு லாதிபன் வாசல்வந்தால்
தானே திறக்குகின் கையித ழாகிய தாமரையே."

என்று மிகவும் கடுமையான ஒரு பாடலைச் சொன்னமாத்திரத்தில், அது, 'அசுணப் பறவையின் செவியிலே பறையறைந்தது,' போலக் கர்ணகடூரமாய் இருந்தது கண்டு, அவள் அதிக கோபங்கொண்டு, 'ஊதுகிற சங்கு ஊதினால் விடிகிற பொழுது விடிசிறது,' என்பதாக

எண்ணி, 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்!' என்று மற்றொரு தாழ்ப்பாள் போட்டாள்.

அதையறிந்து ஒட்டக்கூத்தர், 'இராணிக்குப் புகழேந்தியி னிமித்தம் நம்மிடத்தில் வெறுப்புண்டாகி இப்படிச் செய்தமையால், 'அன்பற்ற மாமியாருக்குக் கும்பிட்டாலும் குற்றந்தான்,' என்பதாக, இனி நாம் என்ன சொன்னாலும் இதம் பிறக்க மாட்டாது,' என்று அவ்விடத்தை விட்டு, சுவரினிடத்தில் விசையாய் வந்து தாக்கின பந்தானது அங்கிருந்து அதைத்துத் திரும்பினது போலப் பேசாமல் திரும்பிச் சோழனிடத்திற்கு வந்து, 'எழுதுகிற எழுத்தாணி குதறுகிறது கண்டு கூர் மழுங்கத் தீட்டுமளவில் அது இரட்டைக்கூர் பட்டாற்போல, நான் பாடின பாட்டைக் கேட்டு, 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்!' என்பதாகப் பின்னுமொரு தாழ்ப்பாள் போடச் சம்பவித்தது!' என்று சொல்ல, குலோத் துங்கன், 'நம்முடைய மனைவிக்கு ஊடல் நிகழ்ந்ததற்குக் காரணம் யாதொன்றும் தெரியவில்லையே! அவளுக்கு நாமென்ன குறை செய்தோம்? அவள் இஷ்டப்படிக்கெல்லாம் நடத்தித்தானே வருகிறோம்! நமக்காகாதவர்கள் யாரேனும் அவளுக்குத் தூர்ப் போதனை செய்தார்களென்று நினைப்போமானால் அப்படிப்பட்டவர் இங்கொருவரும் இல்லையே! அல்லது ஜன்மாந்திரம் கர்மானுபவத் தால்தான் அவள் குணம் பேதித்ததோ! இதென்ன தவக் குறை! அபூர்வமாக ஒரு வேளை நம்மிடத்தில் அவளுக்கு ஊடல் நிகழ்வது சகஜமே; அது ஆச்சரியமன்று; ஒட்டக்கூத்தனுர் அவளுக்கு என்ன கொடுமை செய்தார்? அவர்மேல் சீற்றம் உதிப்பதற்கு ஏது என்ன?' என்று தனக்குள்ளே பல விதத்திலும் தீர்க்காலோசனை பண்ணிப் பார்க்கும் பொழுது, 'புகழேந்திப் புலவரை ஒட்டக்கூத்தர் சிறைப் படுத்தினமையால் அவர்மேல் அசூயையும், நாம் அவர் கருத்துக்கு இணங்கி நின்று சிறை மீட்காமையால் நம்மேல் வெறுப்பும் விளைந்தன,' என்று தெளிந்து, அந்தக் கணமே புகழேந்திப்புலவரைச் சிறை நீக்கி, 'இராக்கினி கோபத்தை ஆற்றி, அவளைச் சமாதானப்படுத்தும்,' என்று ஏவினன்.

அவர் அந்தப்புரத்துக்குப் போய்த் தமது வரவை அரசிக்கு அறிவிக்க, அவள் அவருக்குத் தன் உயிர்த் தோழியைக் கொண்டு ஆசனம் கொடுக்கச் சொல்லி மரியாதை செய்வித்தாள். அவர் அப்பொழுது ராஜமகிஷிக்குச் சீற்றம் மாறி மன வருத்தம் தணியும் பொருட்டு மிகக் குளிர்ச்சியும் மிருதுவும் மதுரமும் நயமுமாய்த் தோன்றும்படி, 'இரு பிளவாகப் பகிர்ந்த மெல்லிய நூலின் ஒரு பிளவு போன்று நுண்ணியதாகிய சிற்றிடையையும், பொற் குழைகளை ஏந்திய செவியைத் தொடுகின்ற இணை விழிகளையு முடைய தெய்வப் பெண் போல்வாய்! 'வானத்தினின்று பெய்யும் மழையினது வண்மை ஒரு கூறும்; இவனது கைவண்மையோ அதற்கு இரு கூறும்!' என்று யாவரும் அதிசயிக்கத்தக்க மிக்க

வள்ளற்றன்மையையும், அபிமானமாகிய ஆபரணத்தையுமுடைய சோழ மகாராஜா உன்னுடைய வாசலைத் தேடி வந்தால், அவர் மேல் என்ன குற்றம் இருந்தாலும், அதையெல்லாம் பாராட்டுவது பெருமையா? அவரை வாயிலுக்குள் பிரவேசிக்கவொட்டாமல் தடுப்பதும் தர்மமா? உன்னைப் போலும் உயர்குடியில் பிறந்த கற்புக்கணிகலமாகிய உத்தம ஸ்திரீகள் தம்முயிர் போலச் சிறந்த கணவர்கள் செய்த ஒரு பிழை இரு பிழைகளை க்ஷமிக்காமல் வன்மம் சாதிப்பார்களோ? *தண்ணீருமல்லவோ மூன்று பிழை பொறுக்கின்றது? நீ இவ்வொரு பிழை பொறுக்கலாகாதா? 'குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை,' என்று சொல்லப்படுகின்றதே! ஆதலால் இதைக் குறித்துச் சீற்றம் செய்யலாமா? 'தீராக் கோபம் போராய் முடியாதா?' இதென்ன உனக்குத் தெரியாதோ? கடல் கொதித்தால் விளாவ நீரெங்கே? உன் சித்தமிரங்கி நீ கொண்ட கோபத்தை நீயே தணித்துக்கொள்ள வேண்டும்,' என்னும் கருத்தை உள்ளமைத்து,

> "இழையொன் றிரண்டு வகிர்செய்த நுண்ணிடை யேந்தியபொன்
> குழையொன் றிரண்டு விழியணங் கே !கொண்ட கோபம்தணி !
> மழையொன் றிரண்டுகைம் மானு பரணனின் வாசல் வந்தால்
> பிழையொன் றிரண்டு பொருரோ குடியிற் பிறந்தவரே ?"

என்றொரு பாடலைச் சொன்ன மாத்திரத்தில், படம் விரித்தாடு கின்ற பாம்பின் மேல் மாந்திரிகன் திருநீற்றை மந்திரித்துப் போட்டவுடனே அது படமொடுங்கி உக்கிரமாறினது போல, ராஜமகிஷியின் கோபமானது தணிந்து சாந்தமாயிற்று. சோழ மகாராஜன் அதுவறிந்து, ''படை முகத்திலும் அறிமுகம் வேண்டும்,' என்பதற்கிசையப் புகழேந்திப் புலவர் தன் தந்தை சமஸ்தானத்து வித்துவானென்கின்ற தாக்ஷணியத்தால் அல்லவோ இராக்கினிக்கு நீங்காத ஊடல் நீங்கியது!' என்று அப்புலவர் மேல் மிகவும் சந்தோஷப்பட்டு, அன்று முதல் ஒரு குறையும் இல்லாமல் அவரைப் பரிபாலித்து வந்தான்.



* தணீர் மூன்று பிழை பொறுத்தலாவது : குளத்திலாவது கிணற்றிலாவது விழுந்து அமிழ்ந்தவரை அந்நீர் மூன்று முறை மேலே எழச் செய்தலேயாம்.



[ஒட்டக்கூத்தர் புகழேந்திப்புலவர் மீது பொறுமை உடையவர் போல நடந்துகொண்டாலும், உள்ளத்தே அவரது இனிய கவிதைகளைச் சுவைக்கும் ஆர்வம் கொண்டவர் என்பதை இதில் வரும் நிகழ்ச்சிகள் விளக்கும். குலோத்துங்கன் விருப்பப்படி புலவர் இருவரும் அரிய பெரிய பாடல்கள் பாடி அவன் அவைக்களத்தை அலங்கரித்த வரலாற்றினை இப்பகுதி கூறுகிறது.

— பதிப்பாசிரியர்]

11

புகழேந்திப்புலவர் நளவெண்பாப் பாடியது

புகழேந்திப் புலவரைச் சிறை நீக்கிப் பரிபாலித்து வருமளவில் குலோத்துங்க சோழராஜனும் மற்றும் சில பிரபுக்களும் அவர் மகாசாதுரியமுள்ள வித்வசிரோமணியாய் இருப்பதனால் அவரைக் கொண்டு சமஸ்கிருத பாஷையிலுள்ள நளசரித்திரத்தைத் தமிழில் சுருக்கிச் செய்விக்க வேண்டுமென்று எண்ணி ஒரு நாள் அவருக்கு அச்செய்தியை அறிவிக்க, அவர், 'நல்லது, அப்படியே செய்கிறேம்,' என்று ஒப்புக்கொண்டு சொற்பொலிவு பொருட்பொலிவு தோன்றி நவரசாலங்காரம் உடையதாக, யாவரும், 'கற்பனைக் களஞ்சியம்!' என்று சொல்லும்படி அச்சரித்திரத்தை நானூறு வெண்பாக்களால் பாடி முடித்துச் சோழராஜன் சபையில் அரங்கேற்றும் பொழுது, அதில் அந்திக்காலத்தை வருணிக்கத் தொடங்கி, 'வெண்மையான குடமல்லிகை அரும்பில் வண்டு மொய்த்துச் சங்நாதம் செய்ய, நெடிய கருப்பு வில்லை ஏந்திய மன்மதனானவன் தன்னுருத் தெரியாமல் மறைந்திருந்து ஸ்திரீ புருஷர்கள்மேல் புஷ்ப பாணத்தைப் பிரயோகித்து அவர்களுக்குக் காமத்தை விளைக்க, மலரும் பருவத்தையுடைய முல்லைமாலையைத் தோளில் அணிந்து சிறிது நேரம் நிகழ்வதாகிய மாலைப் பொழுதை முன் நடத்திக்கொண்டு அந்திப் பொழுதானது மெல்லென நடந்து வந்தது,' என்னும் பொருளை அடக்கிய,

" மல்லிகையே வெண்சங்கா வண்டுத வான்கருப்பு
வல்லி கணிதெரிந்து மெய்காப்ப—முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது ."

என்னும் பாடலைச் சொல்ல, ஒட்டக்கூத்தர்: புகழேந்தியாரைக் குறித்துத் தமக்குள் அடிநாளே தோன்றி நாளுக்கு நாள் வளர்ந்து முதிர்ந்த பகையினால், அச்செய்யுளின் கற்பனைக்குச் சந்தோஷப் படாமல், காக்கையானது சோலைகளிலிருக்கின்ற மதுரமாகிய கனிகளை விரும்பிப் புசியாமல் கடுங்கசப்பாகிய வேப்பம் பழத்தை விரும்புவது போலக் குற்றம் கூற வேண்டுமென்னும் விருப்பத்தையே பெரிதாகக்கொண்டு, அவர், 'இந்தப் பாட்டில் மல்லிகையரும்பைச் சங்காகவும், வண்டைச் சங்கநாதம் செய்வோனாகவும் கற்பித்தது உசிதமே; ஆயினும், சங்கவாத்தியம் செய்வோர் அதன் பின்புறத்தை அல்லவோ வாயில் வைத்து ஊதுவார்கள்? அதிற்கிசைய, 'சங்குச் சூத்தும் ஆண்டி வாயும்' எனப் பழமொழியும் இருக்கின்றதே! அந்தப்படிப் புஷ்பத்தின் அடிப் புறத்தில் வண்டு மொய்த்து ஊதுவதாயிருந்தால், தோஷம் சொல்லக்கூடாது; அவ்வழக்கம் வண்டுகளுக்கு இல்லையே! அதை நினையாமற் கற்பித்ததனால் இந்தக் கற்பனை குற்றத்திற்கு இடமாய் இருக்கிறது,' என்றார். அத்தருணத்தில் அந்தச் சபையிலிருந்த கம்பர், 'கட்டின வீட்டுக்குக் கருத்துச் சொல்லுகிறவர்களுக் கென்ன! வாய்க்குச் சுளுவுதானே? அப்படிச் சொல்லுகிறவர்கள் தாங்கள் கட்டிப் பார்த்தாலல்லவோ அந்த வருத்தம் அப்பொழுது தெரிய வரும்? அதை நினையாமல் இந்த ஒட்டக்கூத்தன் புகழேந்திப் புலவர் விஷயத்தில் தனக்குள்ள விரோதத்தை முன்னிட்டு, 'அவலை நினைத்து உரலை இடிப்பது,' போல நிர்த்தோஷமாய் இருக்கிற கற்பனையின்மேல் தோஷாரோபணம் பண்ண வேண்டு மென்று கங்கணம் கட்டிக்கொண்டு துராக்ஷேபம் பண்ணுகிறான்!' என்றெண்ணி, 'இப்படிப்பட்டவன் வாயைப் பொட்டென்று மூடும்படி நீர் விநயமாக உத்தரம் சொல்ல வேண்டும்,' என்று புகழேந்திப்புலவர்க்குக் கண் சைகை காட்ட, அஃதறிந்து அவர் ஒட்டக்கூத்தரைப் பார்த்து, 'சங்குச் சூத்தும் ஆண்டி வாயும் என்று சொல்ல வந்தீரே, அது சகஜந்தான்; ஆனாலும், கள்ளுக் குடியனுக்கு வாயென்றும் சூத்தென்றும் தெரியுமா? நீர்தான் சொல்லும்!' என்று சமாதானம் சொல்பவர் போல அவரைப் பரிகாசம் செய்ய, அது கேட்டு அங்குள்ளவர்களெல்லாம் நகைத்து, 'சரி சரி!' என்று மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.

தமயந்தி விரகதாபப்படுகையில் சந்திரன் காய்வது அவளுக்குச் சகிக்கக் கூடாமையால் அவள் தன் தோழிமாரை நோக்கி, 'பொற்செப்புப் போன்ற இளமையாகிய ஸ்தனபாரத்தை யுடைய பெண்களே! ஒரு செய்தி கேளுங்கள்: சந்திர னுடைய அதியுஷ்ணமாகிய சுவாலை பட்டல்லவோ ஆகாயத்தில்

உடல்முழுதும் கொப்புளித்திருக்கின்றது? இவ்விதத்தால் கொப்புளித்த ஆகாயத்தை நீங்கள் கண்ணினுல் கண்டறிந்தும், உங்களுடைய தேன் போன்ற இனிய சொற்கள் நிறைந்த வாயினுல் நக்ஷத்திரங்கள் அடர்ந்திருக்கின்ற வானமென்று கூசாமல் பிரத்தியக்ஷ விரோதம் சொல்லுகின்றீர்களே! இது என்ன காரணமோ?' என்னும் கருத்தையுள்ளமைத்துப் பாடிய,

> "செப்பிளங் கொங்கைமீர்! திங்கட் சுடர்பட்டுக்
> கொப்புளங் கொண்ட குளிர்வானை—எப்பொழுதும்
> மீன்பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலோ
> தேன்பொதிந்த வாயாற் றெரிந்து?"

என்ற பாடலைச் சொல்லக் கேட்டு, ஒட்டக்கூத்தர், 'நீர் நக்ஷத்திரங்கள் அடர்ந்திருக்கின்ற ஆகாயத்தைத் திங்கட்சுடர் பட்டுக் கொப்புளம் கொண்ட குளிர்வான் என்றது அதிசயிக்கத் தக்கது தான்; கொப்புளித்தால் அக்கொப்புளித்த இடத்திலிருந்து சீயாவது சிலை நீராவது வடியாதோ!' என்று குஜோத்தியமாய்க் கேட்க, புகழேந்தியார் ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டாக, 'சீ வடியவில்லை, சிலைநீர் வடிகின்றது; அது இரவில் வானத்தினின்று பெய்யும் பனிதான்,' என்றார். பின்னும் அவர் சிற்சில சந்தர்ப்பங்களில் வீண் குற்றம் சொல்லி ஆக்ஷேபித்து வர, இவர் அப்போதப்போது அதற்குப் போந்த சமாதானம் சொல்லி அவர் நாவை அடக்கி வருகையில், இவர்க்கே, 'இவனென்ன நமக்குப் பொல்லாத சனியனுய் ஏற்பட்டு நம்மை எப்பொழுதும் கை வழித்த மண் போல எளிதாயெண்ணி நம்முடைய பாடலையும் அலக்ஷியம் பண்ணுகிறான்!' என்று அவர் மேல் அதிக வெறுப்புப் பிறந்ததனுல், 'இவன் செத்தாலும் சள்ளையற்றிருக்கலாம்!' என்றும், 'பாபீ சதாயுஸ்' என்பதனுல், 'இந்த மாபாவிக்கும் மரணம் வருமா? வாராதே!' என்றும், 'தன்னைக் கொல்ல வந்த பசுவையும் தான் கொல்வது தர்மம் என்பதனுல், இவனை நாமே முடித்துவிட்டாலும் தோஷமில்லை!' என்றும் தமக்குள்ளே யோசித்துக் கிருபைக் கடலாகிய தாம் ஜீவகாருணியத்தையும் கைவிட்டுக் கொலை செய்வதற்குத் துணிந்து காலம் பார்த்திருந்து, ஒரு நாள் இராத்திரி ஒட்டக்கூத்தருடைய படுக்கை வீட்டில் ஒருவருக்கும் தெரியாமல் வந்து ஒளித்திருந்தார். அப்பொழுது ஒட்டக்கூத்தர், 'நாம் ஆயுசு வரையில் தலை கீழாகத் தவம் செய்தாலும் நமக்குப் புகழேந்தியைப் போலப் பாடும் சக்தி வரமாட்டாது; நம்முடைய வல்லமை இவ்வளவிலிருந்தும், சும்மா அவரை வாய் மிரட்டு மிரட்டி வருகிறோம்; இதனுல் நமக்கென்ன மகிமை உண்டாகப் போகிறது?' என்று சலிப்புற்று, அந்த விசனத்தினுல் ஊக்கமிழந்து உறக்கம் பிடித்துப் போஜனம் பண்ணுமல் கட்டிலின்மேல் படுத்துக்கொண்டிருந்தார். அத்தருணத்தில் அவர் மனைவி அவரைச் சாப்பிட எழுந்திருக்கச் சொல்லி எழுப்பினுள். அவர், 'எனக்கு

இப்பொழுது சாப்பாடு வேண்டா,' என்றார். அவள், 'சாதம் சாப்பிடாமற்போனால் போகிறது! கொஞ்சம் பாலும் சர்க்கரையு மாவது கொண்டு வருகிறேன், சாப்பிடுங்கள்,' என்றாள். அதற்கவர், 'போடி பைத்தியக்காரி! நீ பாலல்ல, பழமல்ல, தேனல்ல, சீனி யல்ல, அந்தப் புகழேந்தி பாடிய நளவெண்பாவின்,

" கொங்கையிள நீரால் குளிர்ந்தவிளஞ் சொற்கரும்பால்
பொங்கு சுழியாம் புனற்றடத்தில்—மங்கைதன்
கொய்தாம வாசக் குழனிழற்கீ ழாறேனே
வெய்தாமக் காம விடாய்."

எனவும்,

" 'இற்றது நெஞ்சம் ; எழுந்த திருங்காதல் ;
அற்றது மானம்; அழிந்ததுநாண்;—மற்றினியுன்
வாயுடைய தென்னுடைய வாழ்வென்றான் வெங்காமத்
தீயுடைய நெஞ்சுடையான் தேர்ந்து."

எனவும்,

" காதலியைக் காரிருளில் கானகத்திற் கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றே,—நாதம்
அளிக்கின்ற ஆழிவா யாங்கலவ ! ஓடி
ஒளிக்கின்ற தென்னே ? உரை."

எனவும், மற்றும் பல வகையாகவும் சொல்லப்படும் கவிகளில் நாலைந்தைப் பிழிந்துதான் வார்த்தாலும் நான் சாப்பிட மாட்டேன்,' என்றார்.

அந்தச் சொல்லைப் புகழேந்தியார் கேட்டு, 'இஃதென்ன புதுமை! இவன் சுபாவமோ உண்ண வாவென்றால் குத்த வருகிறது. இவனுக்கும் நமக்கும் எப்பொழுதும் ஏழு பொருத் தம்! நம்முடைய பாடலோ, இவன் செவிக்கு நாராசம் போல இருக்கிறது! கன்னனுக்கும் குயவனுக்கும் சென்மப்பகை என்பது போல, நாளிது வரையில் நமக்கிவன் சென்மப் பகையாளியாய் ஏற்பட்டு நாம் பாடிய நளவெண்பாவின்மேல் நிர்த்தாட்சணிய மாய்ப் பல பெயரும் அறியப் பகிரங்கமாகக் குற்றம் கூறி வந்து, இப்பொழுது அந்தரங்கத்தில் அதை வியந்து சிறப்பிக்கின்றானே! இது யதார்த்தமாய் இருக்குமா ? நாம் இவ்விடத்தில் வந்து ஒளித்திருக்கிற அரவம் தெரிந்து நம்மைப் பரிகாசந்தான் பண்ணு கிறானே ?' என்று சந்தேகித்துக்கொண்டிருக்குமளவில், ஒட்டக்கூத்தர் பெண்சாதி மறுபடி வந்து அவரை, 'இராப்பட்டினி இருப்பானேன் ? உடம்பு சூடு கொண்டு போகாதா ? நாளைக்கும் விரததினமாய் இருக்கிறதே! அதிகமாக வேண்டியதில்லை ; ஏதாவது உங்களுக்கு இஷ்டமாயிருக்கிற சிற்றுண்டியில் ஒரு கொட்டைப்பாக் களவானாலும் பட்சிக்கலாகாதா ? எழுந்திருங்கள்,' என்றாள். அதற்குமவர் முன் சொன்னபடியே சொல்லி, 'யுகமுடியுமளவும்

உடல்முழுதும் கொப்புளித்திருக்கின்றது? இவ்விதத்தால் கொப்புளித்த ஆகாயத்தை நீங்கள் கண்ணிஞல் கண்டறிந்தும், உங்களுடைய தேன் போன்ற இனிய சொற்கள் நிறைந்த வாயிஞல் நக்ஷத்திரங்கள் அடர்ந்திருக்கின்ற வானமென்று கூசாமல் பிரத்தியக்ஷ விரோதம் சொல்லுகின்றீர்களே! இது என்ன காரணமோ?' என்னும் கருத்தையுள்ளமைத்துப் பாடிய,

> "செப்பிளங் கொங்கைமீர்! திங்கட் சுடர்பட்டுக்
> கொப்புளங் கொண்ட குளிர்வானே—எப்பொழுதும்
> மீன்பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலோ
> தேன்பொதிந்த வாயாற் றெரிந்து?"

என்ற பாடலைச் சொல்லக் கேட்டு, ஒட்டக்கூத்தர், 'நீர் நக்ஷத்திரங்கள் அடர்ந்திருக்கின்ற ஆகாயத்தைத் திங்கட்சுடர் பட்டுக் கொப்புளம் கொண்ட குளிர்வான் என்றது அதிசயிக்கத் தக்கது தான்; கொப்புளித்தால் அக்கொப்புளித்த இடத்திலிருந்து சீயாவது சீலை நீராவது வடியாதோ!' என்று குஜோத்தியமாய்க் கேட்க, புகழேந்தியார் ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டாக, 'சீ வடியவில்லை, சீலைநீர் வடிகின்றது; அது இரவில் வானத்தினின்று பெய்யும் பனிதான்,' என்ருர். பின்னும் அவர் சிற்சில சந்தர்ப்பங்களில் வீண் குற்றம் சொல்லி ஆக்ஷேபித்து வர, இவர் அப்போதப்போது அதற்குப் போந்த சமாதானம் சொல்லி அவர் நாவை அடக்கி வருகையில், இவர்க்கே, 'இவனென்ன நமக்குப் பொல்லாத சனியனுய் ஏற்பட்டு நம்மை எப்பொழுதும் கை வழித்த மண் போல எளிதாயெண்ணி நம்முடைய பாடலையும் அலக்ஷியம் பண்ணுகிறுன்!' என்று அவர் மேல் அதிக வெறுப்புப் பிறந்ததஞல், 'இவன் செத்தாலும் சள்ளையற்றிருக்கலாம்!' என்றும், 'பாபீ சதாயுஸ்' என்பதஞல், 'இந்த மாபாவிக்கும் மரணம் வருமா? வாராதே!' என்றும், 'தன்னைக் கொல்ல வந்த பசுவையும் தான் கொல்வது தர்மம் என்பதஞல், இவனை நாமே முடித்துவிட்டாலும் தோஷமில்லை!' என்றும் தமக்குள்ளே யோசித்துக் கிருபைக் கடலாகிய தாம் ஜீவகாருணியத்தையும் கைவிட்டுக் கொலை செய்வதற்குத் துணிந்து காலம் பார்த்திருந்து, ஒரு நாள் இராத்திரி ஒட்டக்கூத்தருடைய படுக்கை வீட்டில் ஒருவருக்கும் தெரியாமல் வந்து ஒளித்திருந்தார். அப்பொழுது ஒட்டக்கூத்தர், 'நாம் ஆயுசு வரையில் தலை கீழாகத் தவம் செய்தாலும் நமக்குப் புகழேந்தியைப் போலப் பாடும் சக்தி வரமாட்டாது; நம்முடைய வல்லமை இவ்வளவிலிருந்தும், சும்மா அவரை வாய் மிரட்டு மிரட்டி வருகிறோம்; இதஞல் நமக்கென்ன மகிமை உண்டாகப் போகிறது?' என்று சலிப்புற்று, அந்த விசனத்தினுல் ஊக்கமிழந்து உறக்கம் பிடித்துப் போஜனம் பண்ணுமல் கட்டிலின்மேல் படுத்துக்கொண்டிருந்தார். அத்தருணத்தில் அவர் மனைவி அவரைச் சாப்பிட எழுந்திருக்கச் சொல்லி எழுப்பினுள். அவர், 'எனக்கு

இப்பொழுது சாப்பாடு வேண்டா,' என்றூர். அவள், 'சாதம் சாப்பிடாமற்போனுல் போகிறது! கொஞ்சம் பாலும் சர்க்கரையு மாவது கொண்டு வருகிறேன், சாப்பிடுங்கள்,' என்றுள். அதற்கவர், 'போடி பைத்தியக்காரி! நீ பாலல்ல, பழமல்ல, தேனல்ல, சீனி யல்ல, அந்தப் புகழேந்தி பாடிய நளவெண்பாவின்,

" கொங்கையிள நீரால் குளிர்ந்தவிளஞ் சொற்கரும்பால்
பொங்கு சுழியாம் புனற்றடத்தில்—மங்கைதன்
கொய்தாம வாசக் குழனிழற்கீ ழாறேனே
வெய்தாமக் காம விடாய்."

எனவும்,

" 'இற்றது நெஞ்சம் ; எழுந்த திருங்காதல் ;
அற்றது மானம்; அழிந்ததுநாண்;—மற்றினியுன்
வாயுடைய தென்னுடைய வாழ்வென்னுன் வெங்காமத்
தியுடைய நெஞ்சுடையான் தேர்ந்து."

எனவும்,

" காதலியைக் காரிருளில் கானகத்திற் கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்ரே,—நாதம்
அளிக்கின்ற ஆழிவா யாங்கலவ ! ஓடி
ஒளிக்கின்ற தென்னே ? உரை."

எனவும், மற்றும் பல வகையாகவும் சொல்லப்படும் கவிகளில் நாலைந்தைப் பிழிந்துதான் வார்த்தாலும் நான் சாப்பிட மாட்டேன்,' என்றூர்.

அந்தச் சொல்லைப் புகழேந்தியார் கேட்டு, 'ஐயோ! தென்ன புதுமை! இவன் சுபாவமோ உண்ண வாவென்றுல் குத்த வருகிறது. இவனுக்கும் நமக்கும் எப்பொழுதும் ஏழு பொருத் தம்! நம்முடைய பாடலோ, இவன் செவிக்கு நாராசம் போல இருக்கிறது! கன்னனுக்கும் குயவனுக்கும் சென்மப்பகை என்பது போல, நாளிது வரையில் நமக்கிவன் சென்மப் பகையாளியாய் ஏற்பட்டு நாம் பாடிய நளவெண்பாவின்மேல் நிர்த்தாட்சணிய மாய்ப் பல பெயரும் அறியப் பகிரங்கமாகக் குற்றம் கூறி வந்து, இப்பொழுது அந்தரங்கத்தில் அதை வியந்து சிறப்பிக்கின்றனே! இது யதார்த்தமாய் இருக்குமா ? நாம் இவ்விடத்தில் வந்து ஒளித்திருக்கிற அரவம் தெரிந்து நம்மைப் பரிகாசந்தான் பண்ணு கிறனே ?' என்று சந்தேகித்துக்கொண்டிருக்குமளவில், ஓட்டக்கூத்தர் பெண்சாதி மறுபடி வந்து அவரை, 'இராப்பட்டினி இருப்பானேன் ? உடம்பு சூடு கொண்டு போகாதா ? நானேக்கும் விரதனமாய் இருக்கிறதே! அதிகமாக வேண்டியதில்லை ; ஏதாவது உங்களுக்கு இஷ்டமாயிருக்கிற சிற்றுண்டியில் ஒரு கொட்டைப்பாக் களவாவது பட்சிக்கலாகாதா ? எழுந்திருங்கள்,' என்றுள். அதற்குமவர் முன் சொன்னபடியே சொல்லி, 'யுகமுடியுமளவும்

மழைபெய்தாலும் ஓட்டாங்கிளிஞ்சில் கரையுமா? அடி, நீ என்ன சொன்னலும் எனக்குச் சமாதனமாய் இருக்கவில்லே. ஏன் என்னேத் தொந்தரவு செய்கிறுய் ?' என்ருர். அதைப் புகழேந்திப்புலவர் செவிகுளிரக் கேட்டு, 'இவன் சொல்வது அபத்தமன்று, மெய்தான் ; நம்முடைய பாடலே வாயினலே மாத்திரம் அவமதிப்பாய்ப் பேசினதேயொழிய, மனத்திலே அப்படி நினேக்கவில்லே; சிறப்பாகவே மதித்துக்கொண்டிருக்கிருன் ! இது தெரியாமல் நாம் அநியாயமாய் இவன் தலேமேலே கல்லேப் போட்டுக் கொல்ல நினேத்துப் பழிக்கும் பாவத்திற்கும் ஆளாக எத்தனித்தோமே ! அப்படியே சம்பவித்தால், அரிகரி ! இந்தத் தீவினேயை எந்தக் காலத்தில் தொலேக்கப் போகிறேம் ! அந்தமட்டில் இவனுடைய மனேவி சர்வோத்தமியாகையால், இவனும் மரணத்திற்குத் தப்பினுன்; அவளும் வைதவியத்திற்குத் தப்பினுள். அந்த மகராசி இவனேப் போஜனம் பண்ணச் சொல்லி எழுப்பினதால் நாமும் கொலேப் பாதகத்தோடு ராஜதண்டனேக்கும் தப்பினேம் ! பகை சாதிக்க வேண்டுமென்னும் எண்ணம் இவனுக்குள் இருந்தாலும் பெரிதன்று ; சம்பிரதாய வழுவின்றிச் செவ்வையாய்க் கற்றுணர்ந்தவனுகையால், புறத்திலே வியக்காவிடினும் அகத்திலே உள்ளூர நமது கல்வியின் அருமை பெருமைகளேத் தெரிந்து வியந்துகொண்டிருக்கிருன்; 'மனத்துக்கண் மாசிலனுதல்; அனேத்தறன்; ஆகுல நீர பிற,' என்றபடி, இவன் மனத்தில் தர்மம் நிலேத்திருக்கிறது,' என்று மகிழ்ச்சி கூர்ந்து ஓடி வந்து ஓட்டக்கூத்தரை மார்பிறுகக் கட்டியணேத்துப் புளகாங்கமானுர்.

அவர் புகழேந்திப்புலவரைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, 'இந்நேரத்தில் இவ்விடத்திற்கு நீர் வந்த காரியம் என்ன ?' என, இவர், 'உமது தலேமேல் கல்லேப்போட்டு உம்மைக் கொல்ல வந்தேன்' என்று சொல்லி, அந்தக் கல்லேயும் எடுத்து வந்து அவருக்கு முன்பாக வைத்தார். அது கண்டு அவர், 'ஏதுக்கு என்னேக் கொல்ல வேண்டியது?' என்ன,இவர், 'நீர் எப்போதும் என் கவியைக் குறித்துக் குற்றம் சொல்லிக்கொண்டிருப்பது பற்றி எனக்குக் கோபம் ஜனித்தமையால், உம்மைக் கொல்லத் துணிந்தேன்,' என்ன, ஓட்டக்கூத்தர், 'அப்படியானுல் கொல்லாமல் ஓடி வந்து தழுவிக்கொண்டு சிரித்துச் சந்தோஷிப்பது என்ன நிமித்தத்தால் ?' என, புகழேந்தியார், 'முன்பு என்னிடத்துச் சற்றும் தயை தாட்சணியமில்லாமல் என்னே அருஞ்சிறையில் வைத்ததையும் நான் யோசிக்கவில்லே; நீர் சொல்லும்சொற்கள் என் மனத்தைக்கொள்ளி கொண்டு சுடுவது போலச் சுட்டதனுல், எனக்குச் சகிக்கக்கூடாமல் அதிக வெறுப்புத் தோன்றி அநியாயமாய்க் கொலேசெய்ய எத்தனித்தேன் ! இப்பொழுது உமது கருத்தை நோக்குமிடத்தில் அது அப்படிப்பட்டது அல்லவென்று அடியில் கண்ட பொருள் போல நன்றும் விளங்கினதனுல், உம்மைக் கொல்லக் கையெழவில்லே; மனமும் துணியவில்லே,' என்ருர். அவர் தாம் தம் மனேவியுடனே சொன்னதை மறந்து, இவரை, 'என் கருத்து உமக்கு எப்படித்

தெரிய வந்தது?' என, இவர் அவர் மனைவி அவரைப் போஜனத்திற்கு எழுப்பினதையும், அவர் அதற்குச் சொன்ன உத்தரத்தையும், அது கேட்டுத் தமக்கு இரக்கம் பிறந்ததையும் தாம் கொல்லாது விட்டதையும் ஆதியந்தமாகச் சொல்லிவிட்டுச் செலவு பெற்றுக் கொண்டு தமதிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

மறு நாள் இந்தச் செய்தியைக் குலோத்துங்க சோழராஜன் அறிந்து ஒட்டக்கூத்தரையும் புகழேந்தியாரையும் அழைத்து, 'நீங்கள் சாமானியர்களல்லீரே! தமிழில் அகத்தியர், தொல்காப்பியர், அவிநயர் முதலானவர்களாலும் சங்கப் புலவர்களாலும் உண்டாக்கப்பட்டுத் தொன்று தொட்டு வழங்கி வரும் அரிய பெரிய நூல்களாகிய இலக்கணங்களையும், பார காவியமாகிய பாரதம் இராமாயணமுதலிய இலக்கியங்களையும் வழுவறக் கற்றும் கேட்டும் ஆராய்ந்தும் இருக்கின்ற வித்துவ சிரேஷ்டர்களாகையால் நீங்கள் அறியாததொன்றுண்டோ? அதனால், உங்களுக்கு நான் சொல்லத்தக்கது என்ன இருக்கின்றது? ஆயினும், குற்றமற்ற புராதனமாகிய நூற்கேள்வியையும் கூரிய அறிவினையுமுடைய புலவர் சிரோமணிகள் பலர் கூடி ஒருவரோடொருவர் விரோதமின்றித் தாம் தாம் பயின்ற சாஸ்திரங்களில் நுட்பமாகிய விஷயங்களை எடுத்து உத்தேச லட்சண பரிட்சைகளால் வாதித்து அவற்றின் சாரத்தைக் கண்டுணர்ந்து சந்தோஷிக்கின்ற இன்பத்தைப்பார்க்கிலும், வானத்தின்கண் தேவர்கள் வாசம் செய்யும் சுவர்க்கத்தில் சென்று அங்கு அனுபவிக்கும் இன்பமானது என்ன விசேஷம்? அப்படி விசேஷப்பட்டதாயிருக்குமானால், அதை நாம் சுருதி யுக்தி அனுபவங்களால் காண்போமென்னும் கருத்தை அமைத்து, நாலடி நானூற்றில் முனிவர்கள் அருளிச் செய்த,

> "தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
> இகலிலர் எஃகுடையார் தம்முள் குழீஇ
> நகலின் இனிதாயின் காண்பாம் அகல்வானத்
> தும்பர் உறைவார் பதி"

என்ற செய்யுளின் தாத்பரியமென்ன, நீங்கள் அறியாததோ? அவ்வண்ணம் ஒருவரையொருவர் நேசித்து வித்தியா விஷயத்தைக் குறித்துச் சம்பாஷித்து ஆனந்திப்பதை விட்டு, வியர்த்தமாய்ப் பகைக்கலாமா?

> "பகையென் னும்பண் பிலதீனை யொருவன்
> நகையேயும் வேண்டற்பாற் றன்று."

என்றும் சொல்லப்படுகின்றதே! மேலும், உங்களைப் போன்றவர்கள் கோபத்தைப் பாராட்டலாமா? கோபம் சண்டாளமல்லவா? கோபம் வந்து கிணற்றிலே விழுந்தால், சந்தோஷம் வந்து எழுந்திருக்கலாமா? கூடாதே! ஆதலால், இது வரையில்

நடந்ததெல்லாம் போகட்டும் ; இன்று முதல் என்மேல் தயை செய்து நீங்கள் ஒருவரோடொருவர் விரோதமில்லாமல், ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரரைப் போல அந்நியோந்நியமாய் நேசித்து மனமொத்திருப்பதே அழகாம்,' என்று சொல்லி இருவரையும் சமாதானப்படுத்திப் பின்பு அவர்களை நோக்கி, 'நீங்கள் இந்நாட்டிலுள்ள திருவையாற்றை அடுத்த திருநெய்த்தானம் என்னும் ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் நெய்யாடி ஈசரைக் குறித்து, 'நெய்த்தானத்தானைச் சேவித்தே,' என்பது மகுடமாய் வரும்படி சந்தவிருத்தமாக ஆளுக்கு ஒவ்வொரு பாட்டுப் பாடுங்கள்,' என்றான்.

ஓட்டக்கூத்தர், 'நல்லது,' என்று, 'விக்கல் கண்டு அஞ்சி நடுங்கி உடலை விட்டு உயிரானது அப்புறப்பட்டுப் போய்விட்டால், அதற்குப் பின்பு நகமும் சதையும் போலப் பிரிவில்லாமல் பரிவுற்றிருந்த தாய் தந்தை பெண்டு பிள்ளை முதலிய சுற்றத்தாரெல்லாம் அருமையாகச் சீராட்டிப் பாராட்டிப் போற்றி வளர்த்த உடம்பைச் சுடலைக்குக் கொண்டு போய்க் காஷ்டத்திலேற்றிச் சாம்பலாக்கி விட்டு அங்கொருவரும் தங்காமல் அந்தக் கணமே திரும்பித் தாமிருந்த ஊருக்குள் வந்து சேர்ந்து, 'செத்தவன் வாயிலே மண் ; இருந்தவன் வாயிலே சோறு!' என்பதற்குச் சரியாய் உண்டு உடுத்துச் சுகித்திருக்கின்றார்கள் ; இப்படிப்பட்ட ஈனஸ்திதியில் இருக்கின்ற இக்காயத்தின்கண் இச்சை வைத்து இதைப் போஷிக்கும் நிமித்தம் பொருளைத் தேடி வந்து அறம் செய்யாமல் வீட்டில் புதைத்து வைக்கின்றவர்களே! சைவசித்தாந்தப்படி ஆத்துமாக்களின் இளைப்பொழித்தற்பொருட்டுச் சங்கார கிருத்தியஞ் செய்து சகல சராசரங்களும் மாய்ந்தொடுங்கிய மசானத்தின்கண் அஸ்தி மாலை அசைந்தாடவும், பேய்கள் கூடியாடவும், ஜடாமகுடத்திலிருக்கும் கங்கை அலையெறிந்து ஆடவும், வலக்கையிலேந்திய மழுவானது சுவாலித்தாடவும், காதிலணிந்த சர்ப்பக் குழைகள் நெகிழ்ந்தாடவும், ஆடுகின்ற திருநெய்த்தானத்தூப் பரமசிவனைத் தரிசித்து வணங்கி, நெறி வழாது நிற்கக் கடவீர்கள்,' என்ற கருத்தை அமைத்து,

"விக்கா வுக் *கா வித்தா விப்போய் விட்டா னட்டார் சுட்டுர் புக்கார்
இக்கா யத்தா சைப் பா டுற்றே யிற்றே டிப்போய் வைப்பீர் நிற்பீர் !
அக்கா டப்பேய் தொக்கா டச்சூ ழப்பா டத்தீ வெப்பா டப்பூண்
நெக்கா டக்கா னத்தா டப்போய் நெய்த்தா னத்தா னைச்சே வித்தே.."

என்பதாக ஒரு பாடல் பாடினார்.

புகழேந்திப்புலவர், 'அகங்கார மமகாரங்களை மேற்கொண்டு பாசத்திரயமாகிய போராட்டத்தில் அகப்பட்டு, ஒரு விதத்திலும் மரணத்தைக் கடக்கும் உபாயத்தைக் காணுமல், யமனுக்கிரை

* ஆவித்தாவி எனறது சந்தத்தின்பொருட்டு வல்லொற்று விரிக்கப்பட்டது.

யாகும்படி இருப்பவர்களே! பிறகு ஆகட்டுமென்று நினைத்து உங்கள் வாழ்நாளில் ஒரு கணப் பொழுதாயினும் வீணுகக் கழியும் படி வறிதேயிராமல் முந்தி விரைந்து, மந்திர தந்திர வழுவாராமல் பூசை புரிந்து பிரதட்சிணம் பண்ணி, கடல் போலும் வற்றுத நெடிய நீரோடைகளிலுள்ள பாரை மீன்கள் விசைகொண் டெழும்பி வரம்பில் மேக மண்டலத்தை அளாவியிருக்கின்ற கமுக மரத்தில் தாவி ஏறிப் போய்ப் பாக்குக் குலைகளை உதிர்த்து, அங்கிருந்து திரும்பி வயலில் வீழ்ந்த நெல்லின் அடியில் விழுந்து துள்ளித் துடித்து அந்த நெல் கதிர்களைச் சிதறி, அவ்விடத்தை விட்டெழுந்து அதனருகில் ஆலையாடிக் காய்ச்சப்படும் கரும்பின் இரசப் பாகில் போய் உழவர்கள் வாய்க்கினிய உணவாகும்படி விழுகின்ற வளப்பம் மிகுந்த திருநெய்த்தானத்தின் நெய்யாடிப் பிராணை நெஞ்சுற நினைந்து தலையுற வணங்கிப் பக்தி சோராமல் நிற்கக்கடவீர்கள்!' என்னும் பொருளை அடக்கி,

> "தற்கோ லிப்பூ சற்ப சத்தே தப்பா மல்சா கைக்கே நிற்பீர்
> முற்கோ லிக்கோ லிப்பூ சித்தே முட்டா மல்சே வித்தே நிற்பீர்
> வற்ரு நெட்டோ டைப்பா ரைச்சேன் மைப்பூ கத்தே றித்தா விப்போய்
> நெற்ரு ளுற்ரு ளூப்பா கிற்சேர் நெய்த்தா னத்தா னைத்தியா னித்தே."

என்றொரு பாட்டுப் பாடினார். அவ்விரண்டும் சொல், பொருள், கற்பனை, கருத்து ஒன்றற்கொன்று உயர்வு தாழ்வில்லாமல் நிறந் திருக்கக் கண்டு சோழராஜன் மகிழ்ச்சி கூர்ந்து அவ்விருவர்க்கும் சம்மானம் பண்ணினான்.

பிறகு ஒரு நாள் சோழமகாராஜன், 'முன்னர் நாம் சிவபரமாக இரண்டு பாடல் பாடுவித்தோமே இப்பொழுது விஷ்ணுபரமாகவும் பாடுவிக்க வேண்டும்,' என்று நினைத்து, ஒட்டக்கூத்தரையும் புகழேந்தியாரையும் நோக்கி, 'திருக்குறுங்குடியில் நம்பியென்று நாமம் சார்த்திக்கொண்டு எழுந்தருளியிருக்கும் பெருமாள்பேரில் இன்னார்க்கிடம் இன்னதென வல்லோசையில் தலைக்கு ஒவ்வொரு பாட்டுப் பாடுங்கள்,' என்றான். என்றவுடனே ஒட்டக்கூத்தர், 'ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீபம் என்னும் பெயரினை யுடைய அஷ்டதிக்கஜங்களும் திடுக்குற்றுத் துக்கித்து அலறி நிலைபெயர்ந்தோடக் கறுத்த கடலில் தைத்துருவும்படி பாணப் பிரயோகம் செய்த இராமபிரானுக அவதரித்த திருமாலுக்கு வாசஸ்தானமாவது, பருத்த மதுரமாகிய கரும்பு முதிர்ந்து கணு வெடித்து அதிலிருந்து முத்துத் தெறித்துத் திறந்தவண்ணமாய் இருக்கின்ற கொக்கின் வாயில் வந்து விழ, அம்முத்தை அது விழுங்கி அடிக்கடி விக்கிக் கக்காமல் நின்ற சோலை சூழ்ந்த திருக் குறுங்குடியென்ற திவ்விய தேசம்!' என்னும் பொருளை அமைத்து,

" திக்குளெட் டுக்கயம் துக்கமுற் றுத்திடுக் கிட்டலற
மைக்கடற் குட்சரம் தைக்கவிட் டோர்க்கிட மாமதுர
இக்குமுற் றிக்கணுச் சற்றுவிட் டுத்தெறித் திட்டமுத்தைக்
கொக்குமொக் கிக்கக்கி விக்குமச் சோலைக்கு றுங்குடி யே!"

என்ற செய்யுளையும், புகழேந்திப்புலவர், 'மற்ற மந்திரங்கள் போலன்றிப் பிரணவ சகிதமாய் ஏகாட்சரி, திரியாட்சரி, பஞ்சாட்சரி முதலியவைகளுமாய் இருக்கின்ற அஷ்டாட்சரியென்னும் மகிமை தங்கிய மூலமந்திரத்தை ஆசாரியன் அநுக்கிரகிக்கப் பெற்று, அதைத் தத்தம் கருத்தில் பதித்து அனவரதமும் நியமந் தவருமல், அனுசந்தித்துத் தொழுது ஸ்தோத்திரம் செய்கின்ற பெரியோர்களுக்கு ஈடுமெடுப்பும் இல்லாத பெருஞ்சிறப்புண்டாகத் தன் அழகிய திருவடியைப் பிரசாதிக்கின்ற வட்டமாகிய நெடிய சேஷசயனத்தில் யோக நித்திரை செய்யும் நம்பியெம்பெரு மானுக்கு உறைவிடமாவது. சூற்கொண்ட சங்கினங்கள் வயலி லுள்ள தாமரைப் பொகுட்டில் தத்தித் தவழ்ந்தேறி முத்துக்களைப் பெறுகின்ற வளப்பமுடைய திருக்குறுங்குடியாகிய திவ்விய தேச மாம்!' என்னும் கருத்தையடக்கி,

" எட்டெழுத் தைக்கருத் திற்குறித் திட்டுநித் தம்பரவும்
சிட்டர்கட் குத்திருப் பொற்பதத் தைச்சிறக் கத்தருமவ்
வட்டநெட் டைப்பணி மெத்தையத் தர்க்கிடம் வாரிசப்பொ
குட்டில்நத் துக்குலம் தத்திமுத் தீனுங் குறுங்குடி யே."

என்ற பாடலையும் பாடக் கேட்டு அரசன் இருவரும் பாண்டித்தியத் தில் உயர்வு தாழ்வின்றிச் சமானஸ்தர்களாயிருக்கின்றீர்கள் என்று சந்தோஷப்பட்டான்.





[இனிக்கும் தனிப் பாடல்கள் இயற்றிய புலவர் மணிகளுள் தலை மணியாய் வைத்துப் போற்றத் தக்கவர் காளமேகப்புலவர்; தேவியின் அருள் பெற்றுக் கவி மழை பொழியும் ஆற்றலைப் பெற்றவர். சிலேடைப் பாக்கள் பாடுவது ஒரு தனியாற்றல். இந்த ஆற்றல் காளமேகப்புலவரிடம் இயல்பாகவே அமைந்திருந்தது. ஆங்காங்கே புலவரின் பாடல்களும் கருத்துரையும் இப்பகுதியில் நிறைந்துள்ளன.

— பதிப்பாசிரியர்]

12

காளமேகப்புலவர் சரித்திரம்

திருக்குடந்தையில் பிறந்து வளர்ந்த வடமலைகிய பிராமணன் ஒருவன் ஸ்ரீரங்கத்தில் பெருமாள் கோயில் சுயம்பாகியாகிப் பரிசாரகம் செய்துகொண்டிருக்கையில், திருவானைக்காவிலுள்ள சம்புகேசுவரர் கோயில் தாசி ஒருத்தி, மோகனாங்கி என்னும் பெயருடையவள், அதிக அகுழம் ஆடல் பாடல்களில் திறமையுமுடையவளாயிருந்ததனால், அவன் அவளுடைய மோகவலையில் சிக்கித் தனக்கவள் இணங்கும்பொருட்டுப் பெருமாள் பிரசாதம் முதலானவைகளும் அவளுக்குக் கொண்டு போய்க் கொடுத்து அவளோடு சம்பந்தப்பட்டிருந்தான். அப்படி இருக்குமளவில் மார்கழி மாதத்தில் சம்புகேசுவரர் சந்நிதியில், மேற்படி தாசிக்குத் திருவெம்பாவை பாடும் முறை வந்த பொழுது, 'உங்கையில் பிள்ளை' என்னும் பாடலைப் பாடுகையில் அதில், 'எங்கொங்கை நின்னன்ப ரல்லார் தோள் சேரற்க' என்ற தொடரை அவள் வாயினால் சொல்லித் தலை குனிந்துகொண்டதைப் பார்த்து, அவளுடனே கூடவிருந்த மற்றத் தாசிகளெல்லாம் புன்சிரிப்புச் சிரித்துத் தங்களுக்குள்ளே, 'இவள் சிவன் கோயில் தாசியாயிருந்தும், பெருமாள் கோயில் சுயம்பாகியுடனே சம்பந்தப்படுகிறாளே! இஃதென்ன? 'படிக்கிறது திருவாசகம் இடிக்கிறது சிவன் கோயில்,' என்பதாக, வாயினால் பேசுகின்றதொன்று நடக்கிறதொன்றாய் இருக்கிறதே!' என்று அவளைப் பரிகாசம் பண்ணினார்கள். அது அவளுக்கு மார்பில் தைத்து முதுகில் உருவினது போல வருத்தத்தை விளைவித்ததனால்,

அன்றிரவு அவ்வைஷ்ணவன் வரும் தருணத்தில் தெருக் கதவைச் சாத்தி, 'உள்ளே வரவேண்டா,' என்று தடுக்க, அவன் வாயிலுக்கு வெளியே நின்றபடி, 'என்ன நிமித்தத்தால் இன்றைக்கு என்னைத் தடை செய்கிறாய்?' என, மோகனங்கி, 'நீ விஷ்ணு அடியான்; நான் சிவனடியாள். ஆகையால், உன் சம்பந்தம் எனக்குத் தகாது!' என, அவன், 'அந்தாமரையன்னமே! நின்னையானகன்றுற்றுவனே,' என்றபடி, 'உன்னை நான் ஒரு பொழுதாயினும் விட்டுப் பிரிந்து சகிப்பேனு! சகிக்க மாட்டேன். ஆதலால், உன் தலைவாயிலிலேயே நின்றுகொண்டு என் பிராணனை விட்டுவிடுகிறேன்!' என்றான். இவள், 'இதேது! பழி வந்து சம்பவிக்கிறதாய் இருக்கிறதே!' என்று நினைத்து, 'நல்லது, நான் வேண்டுமென்பது உனக்கு ஆவசிகமாய் இருந்தால் நீ சிவதீக்ஷை பண்ணிக்கொண்டு சைவனுனுல் உன் இஷ்டப்படி நடக்கிறேன்,' என்று சொல்ல, அவன் காமப் பேய் கொண்டவனுகையால், 'பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப் பரோ சிறியோர் பெற்றுல்?' என்ற விதமாய் அவளுறவைக் கைவிட மாட்டாமல், 'நீ சொன்ன வண்ணம் சைவசமயத்தை அனுசரிக் கிறேன்,' என்று ஸ்ரீரங்கத்தை விட்டுச் சம்புகேசுவரத்திற்கு வந்து சிவதீக்ஷை பண்ணிக்கொண்டு அகிலாண்டவல்லி கோயில் பரி சாரகனுகி, தனக்கு அவ்விடத்தில் கிடைக்கும் வரும்படிகளில் அவளுக்குச் சிறிது கொடுத்து மிகுந்ததைத் தன் ஜீவனத்திற்கு வைத்து அனுபவித்துக்கொண்டு வந்தான்.

அந்நாளில் சம்புகேசுவரத்தில் ஒரு சிவ பிராமணன் தனக்கு, வித்தையில் பூரண பாண்டித்தியம் உண்டாக வேண்டும் என்று நியமத்துடனே திரிபுரைசக்கரம் ஸ்தாபித்து அதில் அத்தேவதைக் குரிய மந்திர பீஜாட்சரத்தைப் பிரணவ நமக சகிதமாய் வரைந்து உருச்செபித்து நெடுநாளாக உபாசித்துக்கொண்டிருந்தான்; ஓரிராத்திரி நடுச்சாமத்தில் அகிலாண்டநாயகி அழகான ஒரு சிறு பெண் போல வடிவெடுத்து, வெள்ளை வஸ்திரம் உடுத்து, வாய் நிறையத் தாம்பூலம் தரித்துக்கொண்டு, உபாசகன் கண்ணுக் கெதிரே சென்று, 'உன் வாயைத் திற!' என்று அந்தத் தாம்பூலத்தை அவன் வாயிலே உமிழப்போமளவில், அவன் நிர்ப்பாக்கியனுகை யால், அவளை மகாதேவி என்றறியாமல், 'ஆரடி! எச்சில் தம் பலத்தை என் வாயிலே துப்ப வருகிறாய்? உனக்குப் பைத்தியம் பிடித்ததோ? அப்புறம் எட்டி நில்லடி,' என்று கடிந்துரைத்தான். அம்மட்டில் அவளை விட்டுத் திரும்பி வருகையில், மோகனங்கி அன்றிராத்திரி கோயில் குடவரிசைக்கு வந்திருந்தது அறிந்த பரிசாரகன் அவளுடனே, 'நீ வீட்டுக்குப் போகும் பொழுது என்னை வந்து அழை, நாமிருவரும் கூடிப் போவோம்,' என்று அங்கொரு மண்டபத்தில் படுத்திருக்க, மோகனங்கி குடவரிசையான பின்பு பரிசாரகனைத் தேடிக் காணுமல் தான் மாத்திரம் வீட்டுக்குப் போய்விட்டாள். ஸ்தானிகர் முதலானவர் களும் கோயில் குச்சுப் போட்டுக்கொண்டு தங்கள் தங்கள்

இருப்பிடத்திற்குப் போனார்கள். பரிசாரகன் விழித்துக்கொண்டு மோகனுங்கியைக் காணுமையாலும், கோயில் கதவு பூட்டப்பட்டிருந்ததனால் தான் வெளிப்படக் கூடாமையாலும் இருந்த ஸ்தானத்தில்தானே நித்திரை பிடியாமல் எண்ணமிட்டுக்கொண்டிருந்தான். அவனே மேற்சொல்லிய தேவி பார்த்து வாயைத் திறக்கச் சொல்லித் தன் வாயிலிருந்த பாக்குத் தம்பலத்தை உமிழ்ந்து, 'இதைத் தின்றுவிடு,' என்ன, அவன் மோகனுங்கி என்று நினைத்து, அவளிஷ்டப்படி நடவாமல் போனால் அவளுக்குக் கோபமூளும், பிறகு தன் முகத்தைப் பார்க்கமாட்டாள் என்பதனாலும், தான் பூர்வ ஜன்மத்தில் செய்த புண்ணியத்தாலும் தடுக்காமல் உட்கொண்டான். அம்மை அவனுக்கு அன்று முதல் காளமேகமானது அமோகமாய் மழை பொழிவது போலத் தமிழில் ஆசுமுதலாகச் சொல்லப்படும் நால்வகைக் கவிகளும் அசுவதாட்டியாய்ப் பாடும் சக்தி உண்டாகவும், அந்நாற்கவிகளிலும் யாராயினும் ஒருவர் எந்தச் சொல்லாவது பொருளாவது அடியாவது தொடையாவது எடுத்துக் கொடுத்து இன்ன அலங்காரத்தில் இப்படித் தொடங்கி இப்படி முடிக்க வேண்டும் என்ற மாத்திரத்தில், மயங்கி இடர்ப்படாமல் அப்படியே விரைந்து பாடுகின்ற ஆசுகவித்திறம் விசேஷமாகச் சித்திக்கவும், அக்காரணத்தால் காளமேகக்கவியென்னும் பெயர் லோகபிரசித்தமாக வாய்க்கவும் அனுக்கிரகித்து மறைந்து போனாள்.

அவள் போன அடியிலேதானே அவனுக்குக் கடல் மடை திறந்தாற் போலக் கவி பாடத்தக்க பிரபலமான வாக்கு உண்டாயிற்று. அதனால், அவன், 'இப்பொழுது நமக்குப் பிரசன்னமானவள் அகிலாண்டவல்லிதான்!' என்று உணர்ந்து அந்த மகாதேவியை ஸ்தெளத்தியம் பண்ணி முதல் முதல், 'திருவானைக்கா உலா' என ஒரு பிரபந்தம் பாடிப் பின்பு, சோழநாடு, பாண்டிநாடு, சேரநாடு முதலான பல நாடுகளுக்கும் போய், அங்கங்குள்ள பிரதானமாகிய தெய்வ ஸ்தலங்களைத் தரிசித்து, அந்தந்த மூர்த்திகள்மேல் துதியாகவும் நிந்தா ஸ்துதியாகவும், மற்றும் அநேகவிதமாகவும் பற்பல பாடல்கள் பாடி வரும் பொழுது, சுதை, கல், மரம், உலோகம் முதலானவைகள் சிற்பனால் உருப்படுத்தப்பட்டபின் அவ்வவற்றிற்குரிய இயற்பெயர் மாறி வெவ்வேறு சிறப்புப் பெயர் உண்டானாற் போல அகிலாண்டேஸ்வரி வரப்பிரசாதத்தால் முன்புள்ள பரிசாரகனென்னும் பெயர் மாறி, யாவரும் காளமேகப்புலவர் காளமேகப் புலவர் என்று சொல்லும்படி மேன்மையாகிய பெயர் எத்திசையிலும் வழங்கத் தலைப்பட்டது. அக்காலத்தில் அவர் தரிசித்த ஸ்தலங்களில் பாடிய பாடல்களில் சில வருமாறு.

திருச்செங்காட்டில் உத்தராபதீசரைத் தரிசித்து, 'எப்பொழுதும் ஒழுக்கத்துடனே நாட்டின் நடுவில் வாழ்ந்திருக்கும் நாதனரே! நீர் இப்போழுது இந்தச் செங்காட்டில் வந்து ஒளித்துக்கொண்டிருந்தால், முன்பு யமனையும் மன்மதனையும் சிறுத்தொண்டர்

பிள்ளையையும் கொலை செய்த பழியானது உம்மை விட்டு நீங்கிப் போய்விடுமா?' என்னும் கருத்தை அமைத்து நிந்தா ஸ்துதியாகப் பாடிய,

" காலனையும் காமனையும் காட்டுசிறுத் தொண்டர்தரும்
பாலனையும் கொன்ற பழிபோமோ,—சிலமுடன்
நாட்டிலே வாழ்ந்திருக்கு நாதரே! நீர்திருச்செங்
காட்டிலே வந்திருந்தக் கால் ?"

என்பதும், வைகாசி மாதத்தில் காஞ்சீபுரத்தில் வரதராஜர் கருடோற்சவம் கண்டு சேவிக்குமளவில் சுவர்ணகசிதமாகிய கருடனுடைய தேஜஸையும், அந்த வாகனத்தின்மேல் எழுந்தருளும் பெருமாளது திவ்யமங்கள விக்கிரக விலக்ஷணத்தையும், அவ்வுற்சவ வைபவத்தையும் வியந்து நிந்தா ஸ்துதியாகப் பாடிய,

" பெருமாளும் நல்ல பெருமாள் ; அவர்தம்
திருநாளும் நல்ல திருநாள் ;—பெருமாள்
இருந்திடத்தில் சும்மா விராமையினு லேயோ
பருந்தெடுத்துப் போகிறதே பார்!"

என்பதும், மற்றும், அப்பெருமாள் குதிரைமேல் எழுந்தருளும் பரிவேட்டை உற்சவம் சேவிக்கும்பொழுது, பரமாத்மா ஜீவாத்மாக்களுக்குள்ள நவவித சம்பந்தங்களில் ஒன்றுகிய பர்த்துரு பாரியா சம்பந்தத்தை உலகத்தாருக்கு வெளியிட வேண்டுமென்று கருதிப் புலவர் பெருமானுனவர் தம்மையொரு பெண்ணுகப் பாவித்து, அப்பெண் சான்றோர் வணங்குகின்ற தேவர்களுக்கெல்லாம் முதன்மையாகிய தேவனும் அத்திகிரி என்னும் ஊரினை உடையவனுமாகிய வரதப்பெருமான் புரவி மேலேறித் திருவீதியிலெழுந்தருளி வரக் கண்டு மால்கொண்டு, தனக்கு அரையில் உடுத்த கலை சோர்ந்து காலின்கண் விழுந்ததென்று இரங்குவதாகப் பொருள் அமைத்துப் பாடிய,

" எட்டொருமா வெண்காணி மீதே இருந்தகலை
பட்டொருமா நான்மாவில் பாய்ந்ததே—சிட்டர்தொழும்
தேவாதி தேவன் திருவத்தி பூருடையான்
மாவேறி வீதிவரக் கண்டு."

என்பதும், ஏகாம்பரநாதரைத் தரிசிக்கையில் அங்குள்ள சிவப்பிராமணர்கள் அவரை அலட்சியமாக எண்ணி, 'இவன் கவி பாடும் திறத்தை அறிவோம்,' என்று, 'இந்த ஸ்தலத்தில் ஆறு அற்புதமிருக்கின்றன ; அவைகளை ஒரு வெண்பாவில் பொருத்தி முடித்துத் தர வேண்டும்,' என, அவர், 'அவையெவை?' என, அவர்கள்,' குமரக் கோட்டக்கீரை, செவ்விலிமேட்டுப் பாகற்காய், பருத்திக்குளநீர், செப்புவாசல் காற்று, கம்பத்தடியிற்றவம், கருமாறிப் பாய்ச்சல் என்னும் இவைகளே,' என்று சொல்ல, அவர், 'முன்னே 'அப்பா' என்பதும், பின்னே 'யார்க்குமினிது' என்பதும் சேர்த்து, நீங்கள்

இப்பொழுது சொன்னபடி சொல்லுங்கள் வெண்பாவாய் முடிந் திருக்கிறது,' என, அவர்கள் அப்படியே சொல்லிப் பார்த்து அதிசயித்த,

" அப்பா குமரக்கோட் டக்கீரை செவ்விலிமேட்
டுப்பாகற் காய்பருத் திக்குளநீர்—செப்புவா
சற்காற்றுக் கம்பத் தடியில் தவங்கருமா
றிப்பாய்ச்சல் யார்க்கு மினிது."

என்பதும், பின்னும் அவர்கள், 'முக்கால், அரை, கால், அரைக்கால், இருமா, மாகாணி, ஒருமா, கீழரை' என்னும் இவ்வெட்டு இலக் கமும் வரும்படி இந்த ஏகாம்பரநாதர்மேல் ஒரு வெண்பாப் பாட வேண்டும்,' என்ன, அப்படியே அத்தொகைகள் வரத்தக்கதாக, அவர், 'என் வாக்கே! தடி ஊன்றிப் பிருங்கிரிஷி போல மூன்று காலால் நடவாததற்கு முன், மயிர் நரையாததற்கு முன், யமனைக் கண்டு உயிர் நடுங்காததற்குமுன், விக்கலெழ இரும்பாததற்கு முன் பெரிய மயானபூமிக்குப் போகாததற்கு முன் கச்சிப்பதியில் ஒரு மாமரத்தின் கீழ் எழுந்தருளி இருக்கின்றவரை இளமைப் பருவ முள்ள இப்பொழுதே துதி செய்,' என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

" முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண்டு அஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் ரேது."

என்பதும், திவ்லியில் பரமசிவனுடைய பிக்ஷாடன உற்சவம் தரிசிக் கையில், அவ்வுற்சவத்தில் முழக்கும் காளம் முதலிய வாத்திய ஓசையைக் கேட்டு, சுவாமிக்கு முன்னே அலங்கரித்துச் செலுத்தி வரும் யானை முதலியவைகளையும், சுவாமி முடிமேல் கவிக்கின்ற குடையும், பிடிக்கின்ற கொடியும், அசைக்கின்ற சாமரமுமாகிய ராஜாங்கத்திற்குரிய மற்ற சின்னங்களையும் பார்த்து, 'விஷ சர்ப் பத்தை ஆபரணமாகப் பூண்ட தில்லை நாயகரே! தேவரீர் பிச்சை யெடுத்து உண்ணப் புறப்பட்டும், உமக்கு இந்த ஆடம்பரமெல் லாம் ஏன்? 'பிச்சைக்காரனுக்கேது கொட்டு முழக்கு?' என்ற பழ மொழியும்கேட்டதில்லையோ?' என்னும்கருத்தையமைத்துப் பாடிய,

" நச்சரவம் பூண்டதில்லை நாதரே தேவரீர்
பிச்சையெடுத் துண்ணப் புறப்பட்டும்—உச்சிதமாம்
காளமேன் குஞ்சரமேன் கார்க்கடல்போ லேமுழங்கும்
மேளமேன் ? ராசாங்க மேன் ?"

என்பதும், மற்றும், 'தென்புலியூரில் வசிக்கின்ற ஐயனே! நீ இப்படி ஏழையாயிருந்தால், 'ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்,' என்ற பழமொழிப்படி, உன் இளக்காரத்தைக் கண்டு கொண்ட பெண்டாட்டியானவள் வலாற்காரமாய்த் தாண்டித் தலைமேலே

ருளா? ஒருவன் செருப்பால் புடைக்காஞ? ஒருவன் வாயிலே வந்த படி ஏசாஞ? ஒருவன் வில் முறிய மண்டைமேல் மாட்டாஞ?' என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

" தாண்டி யொருத்தி * தலேயின்மே லேருளோ ?
பூண்டசெருப் பா†லொருவன் போடாஞே—மீண்டொருவன்
‡ வையாஞே§ வின்முறிய மாட்டாஞே தென்புலியூர்
ஐயாநீ ஏழையா ஞல் ?"

என்பதும், பின்னும், ' மேகமண்டலத்தை அளவளாவிய சோலே சூழ்ந்த திருப்புலியூரில் எழுந்தருளி இருக்கின்ற அம்பலவாணரே! கல்லால் எறிந்த சாக்கியநாயனரும், வில்லால் மண்டை பிளக்கச் சாடிய விஜயனும், செருப்பால் கனக்கப் புடைத்த கண்ணப்ப நாயனரும், முதுகில் தழும்பெழப் பிரம்பால் அடித்த பாண்டியனு மாகிய இவர்களெல்லாரும் நல்லவர்கள் என்று திருவுளமிரங்கி இவர்களுக்குக் கிருபை பாலித்ததும், உம்மை நிந்தையொன்றும் சொல்லாமல் புஷ்பங்களேக் கொண்டு அர்ச்சித்த மன்மதனேக் கொலே செய்ததும் என்ன நிமித்தத்தால்? சொல்ல வேண்டும்,' என்னும் கருத்தை அடக்கிப் பாடிய,

" செல்லாரும் பொழில்சூழும் புலியூரம் பலவாண தேவ ஞரே!
கல்லாலும் வில்லாலும் செருப்பாலும் பிரம்பாலும் கடிந்து சாடும்
எல்லாரு நலலவரென் றிரங்கியரு ளீந்ததென்ன ? இகழ்ச்சி யொன்றும்
சொல்லாமன் மலரைக்கொண் டெறிந்தவனேக் கொன்றதென்ன ?
சொல்லு வீரே."

என்பதும், நடேசரைத் தரிசிக்கையில், ' திருவோடு கையில் ஏந்து கின்ற அம்பலவாணரானவர் தில்லேக் கோவிந்தனென்னும் ஆயர் தலேவனிருக்க, மற்றும் பல ஆயர்கள் இரவும் பகலும் மாறுமல் காத்திருக்கத் தில்லேவனத்தில் புகுந்து ஆட்டைக் களவெடுத்தது என்ன உபாயம்?' எனவும், 'தில்லேக் கோவிந்தராஜ பெருமாள் சயனத் திருக்கோலம் கொண்டிருக்கவும், மற்றும் பல தேவர்கள் இரவும் பகலும் அகலாது நடன தரிசனத்திற்குக் காத்திருக்கவும், திருச்சிற்றம்பலவாணரானவர் தில்லேயம் பலத்தில் பிரவேசித்து நடனம் செய்வதற்குத் திருவடியைத் தூக்கியது என்ன உபாயம்?' எனவும் சிலேடையாகப் பொருள மைத்துப் பாடிய,

" கொங்குலவும் தென்றில்லேக் கோவிந்தக் கோனிருக்கக்
கங்குல்பக லண்டர்பலர் காத்திருக்கச்—செங்கையிலே
ஓடெடுத்த வம்பலவ ரோங்குதில்லே யுட்புகுந்தே
ஆடெடுத்த தென்னவுபா யம் ?"

---

* தலேமேல் ஏறினவள் - கங்கை. † செருப்பால் புடைத்தவர் - கண்ணப்ப நாயனர். ‡ வைதவர் - சுந்தரமூர்த்தி நாயனர். § வில்முறிய மாட்டினவன் - அருச்சுனன்.

என்பதும், அன்றியும், 'தில்லைப்பதியில் வாழும் சிவபிரானே! ஊர்களிலுள்ள ஆட்டுக்குச் சாதாரணமாக நாலு காலிருக்கின்றன; உன்னுடைய ஆட்டுக்கு மாத்திரம் இரண்டே கால் இருக்கின்றன; இரண்டு காலிருந்தாலும், இவ்வாட்டின்மேல் வெகு காலமாகக் கண் வைத்திருக்கின்ற அந்தப் புலியானது இந்த ஆட்டைவிட்டுப் போகுமோ? சொல்,' என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

"நாட்டுக்கு ளாட்டுக்கு நாலுகால் ஐயாநின்
* ஆட்டுக் கிரண்டுகா லானலும்—நாட்டமுள்ள
சீர்மேவு தில்லைச் சிவனேயிவ் வாட்டைவிட்டுப்
போமோசொல் லாயப் †புலி?"

என்பதும், தில்லை மூவாயிரவரில் சிலர், 'நடேசர் கையிலேந்திய மானுனது அவர் திருமுகத்திற்கு நேராகத் தன் முகத்தையும் முன்னம் கால்களையும் மேலே தூக்கி நிற்பதற்குக் காரணம் கற்பித்து ஒரு வெண்பாப் பாட வேண்டும்,' என்ன, அவர், 'அன்னப் பறவைகள் வயல்களில் சஞ்சரித்துத் தாமரை மலர்களில் தங்குகின்ற தில்லைப்பதியில் எழுந்தருளிய நடேசனது கைக்கமலத்திலிருக்கும் மான் கன்றுனது, அவ்விறைவனது பொன் போலும் சிறந்த நிறத்தையுடைய அழகிய ஜடாமகுடத்தில் அணிந்த அறுகம்புல்லை மேய்ந்து, அங்குள்ள கங்கா ஜலத்தைக் குடிக்கும்படி தன் மனத்தில் இச்சையானது அதிகரிக்க அங்கனம் தாவிப் பாய்கிறது,' என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

"பொன்னஞ் சடையறுகம் புல்லுக்கும் பூம்புனற்கும்
தன்னெஞ் சுவகையுறத் தாவுமே—அன்னங்கள்
செய்க்கமலத் துற்றுலவுலந் தில்லை நடராஜன்
கைக்கமலத் துற்றமான் கன்று."

என்பதும், மற்றும் அவர்கள், 'அத்தலத்திலுள்ள ஞானசபை, கனகசபை, நர்த்தசபை, ஆனந்தக்கூபம், திருமூலட்டானம், பேரம்பலம், பஞ்சாவரணம், நாற்கோபுரம், பொற்கம்பம், மண்டபம், சிவகங்கை இவைகளே ஒரு வெண்பாவாக அமைக்க வேண்டும்,' என்ன, புலவர் சிரோமணியானவர், 'நான் வேறே அமைக்கவும் வேண்டுமோ? இப்பொழுது சொன்னவைகளைச் சொன்ன முறைப்படி நீங்களே சீர் தளை வகுத்து இசைத்துப் பார்த்தால் வெண்பாவாய் முடிந்திருக்கலாம்,' என்ன, அவர்கள் அவர் சொற்படி செய்து அவ்வாறே அமைந்திருக்கக் கண்ட,

"ஞான சபை,க னகசபை, நர்த்தசபை,
ஆனந்தக் கூபம் திருமூலட்—டானம்பேர்
அம்பலம் பஞ்சா வரணநாற் கோபுரம்பொன்
கம்பமண்ட பஞ்சிவகங் கை."

---

* ஆட்டு—நடனம்.

† புலி—வியாக்கிரபாதர்.

என்பதும், சிவகாமவல்லியைத் தரிசித்த பொழுது, 'மாட்டுக்கோன் தங்கையானவள் வடமதுரையை விட்டுத் தில்லைவனத்திற்கு வந்து ஆட்டுக்கோன் ஒருவனுக்குப் பெண்டாகி வாழ்க்கைப்பட்டு, வெளிப்பட்டோடுகின்ற குட்டிகளைப் பட்டிக்குள் மறித்துக் கொண்டு வந்துவிடுவதற்கு ஒரு பிள்ளையையும் பெற்றுச் சிற்றிடைச்சியாய்விட்டாள். என் செவியே! நீ இந்தச் செய்தியைக் கேள்விப்படவில்லையோ? என் கண்ணே! நீயாயினும் இதைப் பார்ப்பாயாக!' என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

* " மாட்டுக்கோன் றங்கை மதுரைவிட்டுத் தில்லைவனத்(து)
† ஆட்டுக்கோ னுக்குப்பெண் டாயினள் — கேட்டிலையோ?
‡ குட்டி மறிக்க‖வொரு கோட்டாணை யும்பெற்றுள்
§ கட்டுமணிச் சிற்றிடைச்சி காண் "

என்பதும், திருக்கழுக்குன்றத்தில் வேதகிரீசரைத் தரிசிக்குமளவில், 'பெருமை தங்கிய திருக்கழுக்குன்றத்தில் வசிக்கும் சிவனரே! நீர் ஆதி தொடங்கி வெகுகாலமாக அவலமான அல்லல் பிழைப்பே பிழைத்துவிட்டீர்; பகைவராகிய முப்புரத்தாரை நேரிலே கண்ட விடத்தில் வில்லைக் கையில் பிடித்து அம்பினால் எய்து வீழ்த்த மாட்டாமல், உம்முடைய வீரம் கூத்தாடிச் சிலம்பம் போல வியர்த்தமாம்படி பல்லை இளித்துக்கொண்டீரே! இவ்வளவுதானா உமது படைத் திறம்?' என்னும் பொருளை அமைத்துப் பாடிய,

" சொல்லில் பெரிய கழுக்குன்ற ரே!தொல்லை நாண்முதலா
அல்லல் பிழைப்பே பிழைத்துவிட் டீர்முப் புரத்தவரை
வில்லைப் பிடித்தெய்ய மாட்டாமல் நீரந்த வேளையிலே
பல்லைத் திறந்துவிட் டீரிதுகாணும் படைத்திறமே!"

என்பதும், ஸ்ரீ முஷ்டமென்னும் திவ்விய தேசத்தில் பூவராக சுவாமியைச் சேவிக்கும் பொழுது, 'வயல்வாழைகள் எழும்பி வரப்பில் வளர்க்கின்ற கமுக மரங்களில் மோதி, அவைகளிலுள்ள பூம்பாளைகள் தெருமுழுதும் சிதறும்படி தாவிப்பாய்கின்ற வளப்ப முடைய திருமுட்டமென்ற ஊரில் பன்றிக்கு மார்பில் கொம்பு முளைத்திருப்பதாக ஓரதிசயத்தை நான் கண்டேன்,' என்னும் கருத்தை அமைத்துப் பாடிய,

---

* மாட்டுக்கோன் - கண்ணபிரான்.

† ஆட்டுக்கோன் - நடேசன்.

‡ குட்டிமறித்தல் - விநாயகனே வணங்கும் அடியார்கள் தத்தம் தலையில் முன்பு நேராகக் குட்டிப் பின்பு கையை மறித்துக் குட்டிக்கொள்வது.

‖ ஒரு கோட்டாணை - ஒற்றைக் கொம்புள்ள யானைமுகக் கடவுள்.

§ கட்டுமணிச் சிற்றிடைச்சி - மணிமேகலை கட்டிய சிறிய மருங்குலுடையாள்.

" தெருமுட்டப் பாலை சிதறவளர் பூகத்
தருமுட்டச் செய்வாலை தாவும் — திருமுட்டத்
தூரிலே கண்டே னெருபுதுமை *பன்றிக்கு
மாரிலே கொம்பான வாறு."

என்பதும், மற்றும், 'திருமுட்டமென்ற திருப்பதியில் எழுந்தருளிய பூவராக மூர்த்தியே! இடக் கரத்தில் பாஞ்ச சன்னியத்தை ஏந்திய பெருமானே! உனது தாமரை போன்ற திருவடியை நாங்கள் மார்க்கட நியாயமாக ஆசிரியிக்கத் திறமையின்றி அஞ்ஞிதொட்டு இதுபரியந்தம் அஞ்ஞானத்தில் அமிழ்ந்து கிடந்தோம். ஆதலால், எமக்கு வரக்கடவதாகிய கிலேசமெல்லாம் உனது நிரேதுக கிருபையினால் மார்ச்சால நியாயமாக ஒளித்தாளும்படிக்கு நீ எம்மெதிரே வருவாயாக,' என்னும் பொருளையடக்கிப் பாடிய,

' முட்டத்துப் பன்றி முளரித் திருப்பதத்தைக்
கிட்டத்துப் பின்றிக் கிடந்தோமே — தொட்ட
மருங்கிலே சங்கெடுத்த மாலே யெமக்கு
வருங்கிலே சங்கெடுக்க வா."

என்பதும், திருவாலங்குடியில் தக்ஷிணமூர்த்தியைத் தரிசிக்கையில், 'வடவிருக்ஷத்தின் அடியில் வசிப்பவனை அமிர்த மர்த்தனம் செய்த காலத்தில் சுராசுரர்கள் அஞ்சியோடும்படி பாற்கடலில் தோன்றிய ஆலாலமென்னும் விஷத்தை அவர்கள் உச்சீவிக்கும்பொருட்டு அமுது செய்தருளினவனை ஆர்தாம் விஷ பானம் பண்ண மாட்டானென்று வாய் கூசாமல் சொல்லுவார்? அந்தக் கொடு விஷத்தை அவன் பானம் பண்ணமல் நமக்கென்ன வென்று உபேக்ஷித்திருப்பானுகில் உலகத்தாரெல்லாம் ஒருமிக்க மண்ணின்மேல் மாண்டு போகமாட்டார்களா?' என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

" ஆலங் குடியானை யாலால முண்டானை
ஆலங் குடியானென் றார்சொன்னர் ?—ஆலம்
குடியானே யாயிற் குவலயத்தோ ரெல்லாம்
மடியாரோ மண்மீதி லே ?"

என்பதும், மாயூரத்தில் சுவாமி தரிசனம் செய்கையில், 'தமது அன்பர்கள் விரும்பினவைகளையெல்லாம் வரையாது கொடுக்கும் உதார குணமுடையவரென்று சொல்லப்படும் மாயூரநாதருக்கு எத்தனை காலம் கைகொண்ட மட்டும் வாரி வாரி இறைத்தாலும் மாளாத இருப்பாக மலையளவான வெள்ளியும், மலையளவான பொன்னுமிருக்கவும், மேலும் தெளிந்த அறிவினையுடைய உமா தேவியானவள் எப்பொழுதும்பக்கத்தில் வந்து, 'உமக்கொரு குறைவு

* பன்றிக்கு மார்பிலே கொம்பு முளைத்திருப்பதென்பது ஸ்ரீ மகாவிஷ்ணு வானவர் பூவராகமூர்த்தியாகிப் பூங்கொம்பு போன்ற பூமிப்பிராட்டியை எடுத்து மார்போடணைத்து வைத்துக்கொண்டிருப்பது.

மில்லை ; பயப்பட வேண்டா ; பயப்பட வேண்டா,' என்று கைய மைத்து அபயதானம் பண்ணிக்கொண்டிருக்கவும், அவர் ஏன் விஷத்தையுண்டார்? நமக்கு எவ்வளவு பொருளிருந்தாலும், 'நின்று தின்றுல் குன்றும் மாளும்,' என்பது பற்றியோ, அல்லது 'நமது சொத்தெல்லாம் நம்மட்டிலன்றி வல்லார் கொள்ளையாய்ப் போய்விடுகிறதே!' என்பது பற்றியோ என்று நீணப்போமென்றுல் அப்படியெல்லாமல்ல ; தம்மை நோக்கி முறையிட்ட தேவர்களை ரக்ஷிக்கும்பொருட்டே விஷபானம் பண்ணினர்,' என்னும் கருத்தை அமைத்துப் பாடிய,

" வள்ள லெனும்பெரிய மாபூர நாதருக்கு
வெள்ளிமலை பொன்மலையு மேயிருக்கத்—தெள்ளுமையாள்
அஞ்சலஞ்ச லென்றுதினம் அண்டையிலே தானிருக்க
நஞ்சுதனே யேனருந்தி னர் ?"

என்பதும், வைத்தீச்சுரன் கோயிலில் சுவாமிதரிசனம் செய்கையில், 'இந்தப் புள்ளிருக்கு வேளூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெரு மானே! முன்னுளில் மன்மதனை எரித்த அக்கினி உன் கண்ணில் இருக்கின்றது ; தாருகாவனத்து ரிஷிகள் உன்னைக் கொல்ல விடுத்த அக்கினி உன் கையிலிருக்கின்றது ; திரிபுரத்தைத் தகித்த அக்கினி உன் புன்னகையில் இருக்கின்றது ; உனக்கு அழலாடியென வழங்கும் காரணப் பெயருக்கேற்றபடி உன் திருமேனி முழுதும் அக்கினி சூழ்ந்திருக்கின்றது ; இவ்வாறு அக்கினிமயமாய் இருக்கின்ற உன்னை இந்தத் தையற்கலியுடுத்த பெண்ணைனவள் அச்சமின்றிச் சேர்ந்து எப்படித் தன் கலியுடன் தானும் வேகாமலிருக்கின்றுள்? இவளுக்கு அக்கினிஸ்தம்பன வித்தை ஏதாவது தெரிந்திருக்கிறதோ? அதனுல் அவ்வக்கினியை உஷ்ணிக்கவொட்டாமல் அடக்கிவைத்திருக்கின்றுளோ? எனக்குத் தெரியச் சொல்வாயாக!' என்னும் கருத்தை அமைத்துப் பாடிய,

" நீத்தானுன் கண்ணிலே நீத்தானுன் கையிலே
நீத்தானு முன்புன் சிரிப்பிலை—நீத்தானுன்
மெய்யெலாம் புள்ளிருக்கு வேளூரா ! உன்னையிந்தத்
* தையலா ளெப்படிச்சேர்ந் தாள் ?"

என்பதும், திருவாரூரில் ஒரு விசேஷ காலத்தில் கோயிலுக்குப் போன பொழுது, அத்தருணத்தில் குருக்கள்மார் தியாகருக்கு வச்சிரபதக்கம் சமர்ப்பித்துச் சாத்துபடி பண்ணிக்கொண்டிருந்த தனுல் சுவாமியைத் தரிசிப்பதற்குச் சற்றுச் சாவகாசப்பட்டது கண்டு, அவர், 'அன்னப் பறவைகள் வசிக்கும் வயல்கள் சூழ்ந்த திருவாரூரில் வாழும் தியாகேசருக்கு, முற்காலத்தில் ஒப்பற்ற சிறுத்தொண்டர் புத்திரனைக் கொன்றும், மனுநீதி கண்ட சோழனுடைய பிள்ளையைக் கொன்றும், பராக்கிரமமுடைய மன்மதனைக் கொன்றும்

* தையலாள் - தையல்நாயகி.

வைரமானது விட்டுப் போகாமல் இன்னமிருக்குமோ?' என்ற மாத்திரத்தில் அந்த வச்சிரமாலை படீரென்று அறுந்து விழுந்தது. அஃதறிந்து அவர்கள், 'இவர் மகாத்மா!' என்று உள் நடுங்கி வந்து உபசரிக்க, இரண்டு துண்டாய் அறுந்து விழுந்த அவ்வச்சிரமாலை மறுபடி ஒன்றுபோல் பொருந்திப் பிறந்தது போலாகும்படி, முன்பு 'இன்னம் வயிரமிருக்குமோ?' என்று பாடினதைப் பின்பு, 'இன்னம் வயிரமிருக்குமே' என்று திருப்பியமைத்துப் பாடிய,

"அன்ன வயல்சூழும் ஆரூர்த் தியாகனுர்க்(கு)
இன்னம் வயிர மிருக்குமோ (மிருக்குமே)—முன்னமொரு
தொண்டர்மக னேக்கொன்றும் சோழர்மக னேக்கொன்றும்
சண்டமத னேக்கொன்றுந் தான்."

என்பதும், மற்றும் திருவாரூரில் பிரமோற்சவ தரிசனம் செய்கையில், 'செம்மையாகிய கமலப்பதியில் வாழ்கின்ற தியாகனுரே! உனது மைத்துனரர்னவர் தமக்கு ஒரு மாடாயினு மில்லாதிருந்தும், காரடமல்ல, கண்கட்டு வித்தையுமல்ல, யதார்த்தமாகவே பூமி முழுவதும் உழுது பயிர் செய்து உண்டு சுகித்திருக்கின்றார்; உமக்கு ஒரு வெள்ளை மாடிருந்தும் உழுது உண்ணத் திறமையில்லாமல் விஷத்தை உண்டீர்; அன்றியும் நீர் பெற்ற பிள்ளை இரண்டுக்கும், அப்பிள்ளைகளின் தாய்க்கும் ஜீவனுர்த்தத்திற்கு இரண்டு படி நெல்லுக்கு வழியில்லாமல் பிச்சையெடுத்தீர்; உமது பண்டோலமிவ்வளவிலிருக்க, இப் பொழுது உமக்கு உத்சவக் கொண்டாட்டமும் உண்டாயிற்றே?' என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

"ஒருமாடு மில்லாமன் * மைத்துனனுர் ‖ புவிமுழுது முழுதே‡ உண்டார்
நரைமாடொன் றுமக்கிருந்து முழுதுண்ண மாட்டாமல் நஞ்சை உண்டீர்
இருநாழி நெல்லுக்கா இரண்டுபிள்ளைக் குந்தாய்க்கு மிரந்தி ரின்று
திருநாளு மாயிற்றே செங்§கமலப் பதிவாழுந் தியாக னுரே!"

என்பதும், பின்னும், வீதியில் தியாகராஜர் எழுந்தருளி நடனம் செய்யக் கண்டு தரிசிக்கையில், 'திருமேனி முழுதும் புஷ்ப மணமும் புனுகு மணமும் வீசுகிற தியாகேசருக்குக் கையிலே பணமிருந்தால் அது அவரைச் சும்மா இருக்கவொட்டுமா?' 'பணமென்ன செய்யும்? பத்துவகை செய்யும்,' என்றபடி அந்தப் பணக் கொழுப்பு மூலையிலிருந்தவரை முற்றத்திலிழுத்துவிட்டு ஆட்டிப் புடைத்தால் அவரென்ன செய்வார்? நாணமின்றித் திருவாரூர் வீதியிலே

---

* மைத்துனர்-திருமால்.

‖ புவிமுழுதும் உழுதது-அத்திருமால் வராகமூர்த்தியாகிப் பூமியை அடி வரையில் தோண்டியது.

‡ உண்டது — மகாப்பிரளய காலத்தில் உலகமெல்லாம் எடுத்து விழுங் கியது.

§ கமலப்பதி—திருவாரூர்.

பகிரங்கமாக வந்து நின்று தம்முடைய இஷ்டர்களெல்லாம் பார்த்து நகைக்கத் தலேவிரி கோலமாகக் குதித்துக் கூத்தாட மாட்டாரா ?' என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

" ஆடாரோ பின்னேயவ ரன்பரெலாம் பார்த்திருக்க
நீடாரூர் வீதியிலே நின்றுதாம்—தோடாரும்
மெய்க்கே பரிமளங்கள் வீசுக் தியாகேசர்
கைக்கே * பணமிருந்தக் கால் "

என்பதும், மேலும், ' சுவாமி ! உமக்கு உண்ணுகிற சோறு வெல்ல மாய்விட்டதனுல், ஊரும் உலகும் அறியப் பிச்சைச் சோற்றுக்காக எங்கெங்கும் ஓடி உழன்று திரிந்தீர் ; உம்மைப் பற்றி விசாரித்துப் பார்க்குமிடத்தில், நீர் நிலேயாயிருப்பதற்குச் சுவாதீனப்பட்டதாக ஒரூராயினும் இல்லே ; இப்பொழுதிருக்கின்ற ஊரும் ஒற்றியாய் இருக்கின்றது ; அன்றியும் உமது இயற்கையான ஊரும் பேரும் உருவமும் இப்படிப்பட்டவைகளென்று யாவராலும் அறியப்படாத வைகளாய் இருக்கின்றன ; அங்ஙனமாயினும், ' தரித்திரப் பட்டி மகன் தனபாலசெட்டி,' என்று பெயர் பெற்றது போல, தியாக ராஜர் என்று பெரிய பெயர் ஒன்று மாத்திரம் பெற்றுவிட்டீர் ; இனி நீர் ஆரூரிலிருப்பீர் ? அங்குமிங்கும் சும்மா அலேயாமல் பொதுஸ்தானத்தில் போய்விடும்,' என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

" பாரு ரறியப் பலிக்குழன் நீர்பற்றிப் பார்க்கிலுமக்
கோரூரு மில்லே யிருக்கவென் ருலுள்ள வூரு‡மொற்றி
பேரு ரறியா தியாகரென் றேபெரும் பேரும்பெற்றீர்
§ ஆரூரி லேயிருப் பீரினிப் போய்விடு மம்பலத்தே "

என்பதும், திருவண்ணுமலேயில்அருணுசலேசுவரரைத்தரிசிக்கையில், ' கறி சமைத்த சட்டியில் பாதி உறுப்பிருக்க, அச்சட்டியிலிட்டு அள்ளி அகப்பையில் பாதி உறுப்பிருக்க, எதிரே போட்ட இலேயிற் பரிமாறினபடி பாதி உறுப்பிருக்கப் பிராமண வேடங்கொண்டு வந்து நடித்த சோணேசரானவர் அந்நாளில், ' சீராளா ' வென் றழைத்த பொழுது, அப்பிள்ளே கலகலவென்று சிரித்த வண்ணமாக எழுந்து எதிரே ஓடி வந்தது என்ன அற்புதம் ? என் மனமே ! நீ சொல்,' என்னும் கருத்தை அமைத்துப் பாடிய,

" சட்டியிலே பாதியந்தச் சட்டுவத்தி லேபாதி
இட்டவிலே யிற்பாதி யிட்டிருக்கத்—திட்டமுடன்
ஆடிவந்த சோணேசர் அன்றழைத்த போதுபிள்ளே
ஓடிவந்த தென்னே ? உரை."

---

* பணம்-சர்ப்ப கங்கணம்.
‡ ஒற்றி - திருவொற்றியூர்.
§ ஆரூர் - திருவாரூர்.

என்பதும், மற்றும், உண்ணுமுலை நாயகி கோயில் ஸ்தானிகனுகிய சம்பந்தாண்டான் என்பவன் மயிர்வினைஞனிடத்தில் தன் தலை மழுங்க முண்டிதமாகச் சௌளம் பண்ணிக்கொள்ளும் சமயத்தில் காளமேகப்புலவரைக் கண்டு மரியாதையில்லாமல் வித்தியா கர்வத்தினுல், ' இந்த ஸ்தலத்தின் பெயரும், என் பெயரும், நான் செய்வித்துக்கொள்ளும் சௌளகர்மமும் ஒரு வெண்பாவில் வரும்படி, ' மண் ' என்றெடுத்து, ' மலுக்கு ' என்று முடிக்க வேண்டும்,' என்று சொன்னுன். சொன்ன மாத்திரத்தில், அவர், 'இவன் தன்னை ஒரு பொருளாக மதித்துப் பாடச் சொன்ன மையால் இவனைப் பரிகசிப்பதே தகுதி!' என்று நினைத்து அவன் சௌளம் பண்ணிக்கொள்வதற்கு நிமித்தமும் கற்பித்துப் பாடிய,

" மன்னு மருணகிரி வாழ்சம்பந் தாண்டாற்குப்
பன்னு தலைச்சௌளம் பண்ணுவதேன்?—மின்னின்
இளைத்தவிடை மாத ரிவன்குடுமி பற்றி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு."

என்பதும், ஒரு காலத்தில் ஸ்ரீரங்கத்தார்க்கும் சம்புகேசுரத் தார்க்கும் சமய துவேஷம் உண்டாகி இரு திறத்தாரும் கலகப் பட்டுக்கொண்டிருக்கையில், அவர்களைச் சமாதானப்படுத்தும் பொருட்டுக் காளமேகப்புலவர், ' ஸ்ரீரங்கத்தாரும் திருவானைக் காவாரும், எங்கள் மதம் உயர்ந்தது, உங்கள் மதம் தாழ்ந்தது எங்கள் தெய்வம் பெரியது, உங்கள் தெய்வம் சிறியது என்று ஓயாமல் யானை சேனைகளைக்கொண்டு ஆயுதச் சண்டை செய்வார் போல, வியர்த்தமாய் வாக்குச் சண்டை செய்வானேன் ? சைவம் வைஷ்ணமாகிய இவ்விரு சமயக் கொள்கையும், ' ஏகமேவா பரப்பிரமம்,' என்னும் அத்வைதம் போலன்றி, ஆத்மா பரமாத்மா இரண்டு உண்டென்றும், அவ்விரண்டும் ஒன்றற்கொன்று சமத்துவ முடையன அல்லவென்றும், அவ்விரண்டினுள் பரமாத்மா ஆண்டா னென்றும், ஜீவாத்மா அதற்கு அடிமையென்றும் சொல்லப்படும் விசிஷ்டாத்வைதமாய் கரதலாமலகம் போல விளங்கி நிற்கையால், இதென்ன ஆச்சரியம் ? இந்த விவரம் தெரியாதா ? இது பற்றி இனி ஒருவர்க்கொருவர் ஓரவாரங்கள் பேச வேண்டா,' என்னுங் கருத்தையமைத்துப் பாடிய,

" சிரங்கத் தாரும் திருவானைக் காவாரும்
போரங்க மாகப் பொருவதேன் ?—ஓரங்கள்
வேண்டா;இ தென்ன விவரந் தெரியாதா
* ஆண்டானுந் தாதனுமா னுல் ?"

என்பதும், மதுரையில் சுவாமி தரிசனம் செய்கையில், அங்குள்ள சிவபிராமணர்கள் அவரைப் பார்த்துச் சோமசுந்தரக் கடவுள்

* ஆண்டானுந் தாதனுமானுலென்பதை ஆண்டியுந் தாதனுமானுலெனச் சிலர் சொல்வர். அது சரியன்று.

சந்நிதிக்கெதிரே கட்டிய கூட்டிலிருந்து கின்னரி வாசிக்கிறது போலக் கூவுகின்ற கிளியைச் சுட்டிக் காட்டி, 'கின்னரி வாசிக்கும் கிளி என்பது ஈற்றடியாக வர, அதற்கேற்க ஈற்றயலடியைத் திரித்து இந்தச் சொக்கநாதர் விஷயத்தில் ஒரு வெண்பாப் பாடவேண்டும்,' என, புலவர், 'அக்காலத்தில் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தர மூர்த்தியென்னும் இம்மூவரும் பாடிய தேவாரப் பாடல்களைத் திருவுளமுவந்தருளினரென்று சொல்லும் பான்மையையுடைய பரமசிவன், நான்மாடக்கூடலில் அறுபத்து நான்கு திருவிளையாடலைச் செய்தான் என்றும், தனது பரமசாமர்த்தியத்தை விளக்கிக் காட்டிய நரியாகிய பரிக்கு மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, இடபகதியாகிய ஐவகை நடையினைக் கற்பித்தான் என்றும், கிளியானது கின்னரி வாசியா நின்றது,' என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

> "ஆடல்புரிந் தானென்று மந்நாளி லேமூவர்
> பாடலுவந் தானென்ற பான்மையான்—கூடலிலே
> நன்னரிவா சிக்கு நடையபயிற்றி னானென்றும்
> கின்னரிவா சிக்கும் கிளி."

என்பதும், மற்றும், 'பெண்களே! நீங்கள் இவ்வதிசயத்தைப் பார்த்தீர்களா? இம்மதுரையிலெழுந்தருளிய கடம்பவன நாதரானவர் எப்போதும் பெண்ணைத் தலைமேலே சுமந்து திரிகின்ற பைத்தியம் பிடித்தவர்; அன்றியும் எட்டுத் திக்குக்கும் சிலாக்கியமாயிருக்கின்ற தம் கைமேலே நெருப்பை வாரியிட்டார்; அக்காளை நிறுத்தி அவள்மேலேறினர்; ஆதலால் பித்தர்க்குத் தங்குணம் நூலினும் செம்மை என்பது மெய்ப்பட்டிருக்கின்றது,' என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

> "கண்டீரோ பெண்காள்! கடம்பவனத் நீசனார்
> * பெண்டிர் தமைச்சுமந்த பித்தனார்—எண்டிசைக்கும்
> மிக்கான † தங்கைக்கு மேலே நெருப்பையிட்டார்
> ‡ அக்காளே யேறினா ராம்."

என்பதும், அங்கயற்கண்ணம்மையைத் தரிசிக்கும் பொழுது, 'இந்த உலகத்தில் நான் நல்ல புதுமையொன்று கண்டேன்; அதைச் சொல்லவா? சொல்லவா? சொல்லவா? சொன்னால் பெண்பாவ மாகிறதே! 'ஆணுக் கவகேடு செய்தாலும், பெண்ணுக்குப் பிழை சொல்லலாகாதே!' ஆதலால் அடக்க வேண்டுமல்லவோ? எப்படிச் சொல்லுகிறதென்றால், 'மலிந்தால் கடைக்கு வரும்' என்பதனாலும், 'அள்ளாது குறையாது இல்லாது பிறவாது' என்பதனாலும், அடக்குவதனால் பயனில்லை, சொல்லத்தான் வேண்டும்; அதென்ன

---

* பெண்டிர்தமைச் சுமந்து – கங்கையைத் தாங்கினது.

† தங்கைமேல் நெருப்பிட்டது – தமது கையில் மழுவேந்தினது.

‡ அக்காளேயேறியது – அந்த இடபத்தின்மேலேறினது.

வெனில் செல்வம் நிறைந்த மதுரைப்பதியிலுள்ள மீனாக்ஷியானவள், 'அரைக் காசுக்குப் போன மானம் ஆயிரம் கொடுத்தாலும் வாராது!' என்பதையும் எண்ணாமல், பேதைமைக் குணத்தால் பாண்டியனிடத்தில் குதிரை விற்க வந்தவனைச் சேர்ந்து விக்கினேச் சுரனென்ற யானைக் கன்றைப் பெற்றாள்,' என்பதுதான் என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

"நல்ல தொருபுதுமை நானிலத்தி னுன்கண்டேன்;
சொல்லவா சொல்லவா சொல்லவா—செல்வ
மதுரைவிக்கி னேச்சுரனை மாதுமையாள் பெற்றாள்
* குதிரைவிற்க வந்தவனைக் கூடி."

என்பதும், ஒரு காலத்தில் தமக்கு வியாதி கண்டு அது மணிமந்திர ஔஷதங்களால் நிவர்த்தியாகாமையால் வைத்தீசுரன் கோயில் மண்ணை எடுத்து 'இது வினைதீர்த்தான் மருந்தென்று உட்கொண்டவுடனே பரிகாரமாகும்' என்பதையுணர்ந்து, அத்தலத்திற்கு வந்து, அவ்வாறு செய்து சொஸ்தமடைந்தபொழுது, காளமேகப் புலவர், 'தொண்டர்களுக்குப் பகுத்திட்டு அவர்களுடன் தாமும் ஒருவராயிருந்து விருந்துண்டருளிய புள்ளிருக்குவேளூரில் வசிக்கும் எமது நாதரானவர் உலகத்தில் பிரபல வைத்தியராயேற்பட்டிருந்து, எவர்களுக்கும் கண்ட வியாதிகளையெல்லாம் நாள் தோறும் தப்பாமல் தீர்த்து வருகின்றார்; பார்த்தீர்களா! அதற்காக அவர் கொடுக்கும் மருந்தை ஆராய்ந்து பார்த்தால் அஃதென்ன கட்டுச் சரக்கா? காட்டுச் சரக்கா? கடைச் சரக்கா? அஃது ஒன்றுமன்று; சுத்த மண்தான்; ஆனாலும், அவருக்குக் கை வாசி உண்டு போலக் காண்கிறது,' என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

"மண்டலத்தி னுளும் வயித்தியராய்த் தாமிருந்து
கண்டவினை தீர்க்கின்றார் கண்டீரோ?—§தொண்டர்
விருந்தைப்பார்த் துண்டருளும் வேளூரெந் நாதர்
மருந்தைப்பார்த் தாற்சுத்த மண்."

என்பதும், திருநாகை என்னும் ஸ்தலத்தில் சிவதரிசனம் செய்யப் போனவிடத்தில், திறமான சங்கீதப் பயிற்சியும் சாரீர வளமுமில்லாத ஒரு தேவடியாள் தம்புரு மீட்டிக் குரல் எடுத்துப் பாடக் கேட்ட பொழுது, அதி கர்ணகடூரமாய்ச் சகிக்கக்கூடாமலிருந்ததனிமித்தம் தமக்கு வெறுப்புண்டாகி, 'யாவரும் வாழ்த்தாதின்ற

* குதிரை விற்க வந்தவன் – சொக்கநாதன்.

§ தொண்டர் விருந்தைப்பார்த் துண்டலாவது, 'ஐயா றதனிற் சைவனுமியும்' என்றபடி, திருவையாற்றில் மகோற்சவத்தின் ஐந்தாம் நாள் சுவாமி தமது சந்நிதியில் நிவேதிக்கப்படும் திருப்பாவாடையமுதை மற்ற சைவர்களுடன் தாமுமொரு சைவனுமிருந்து பகுத்துண்பது.

நாகைப்பதியிலிருக்கும் அழகுள்ள தேவடியாளானவள் தன் பாழும் குரலெடுத்துப் பாடினுள்; பாடக் கேட்டவுடன் நேற்றுக் கழுதையைக் காணுமல் ஊரெங்கும் தேடி அலைந்துகொண்டிருந்த வண்ணுனவன், 'என் கழுதையைக் கண்டேன் கண்டேன்!' என்று சந்தோஷத்தோடே கட்டியிழுத்துப் போம்படி வைக்கோற் பழுதையைக் கையிலெடுத்துக்கொண்டு சிக்கிரமாக ஓடி வந்தான் பார்!' என்னும் கருத்தை அமைத்துப் பாடிய,

"வாழ்த்து திரு* நாகை வாகான தேவடியாள்
பாழ்த்த குரலெடுத்துப் பாடினுள்;—நேற்றுக்
கழுதைகெட்ட வண்ணன்கண் டேன்கண்டே னென்று
பழுதையெடுத் தோடிவந்தான் பார்!"

என்பதும், திருவிடைமருதூர் என்ற ஸ்தலத்தில் சிவ தரிசனம் செய்யுமளவில், 'குளிர்ச்சி தங்கிய தேன் பொருந்திய சோலை சூழ்ந்த மருதூரிலெழுந்தருளியிருப்பவரே! அந்த நாளில் கண்ணப்பநாயனுர் தமது வாயில் வைத்துத் தின்று சுவை பார்த்தூட்டிய மானிறைச்சி முதலிய கறியும், சிறுத்தொண்டநாயனுர் அன்பினுல் பாகமாகச் சமைத்திட்ட பிள்ளைக் கறியும் உமக்குப் போதாதோ? உமது வயிறென்ன சாணே, சமுத்திரமோ? நீர் பன்றிக் குட்டியையும் ஏதுக்கு நெருப்பிலிட்டுத் தீர்த்தீர்? சொல்லுவீராக?' என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

"கண்ண னிடுங்கறியும் காட்டுசிறுத் தொண்டரன்பிற்
பண்ணுசிறு வன்கறியும் பற்றுவோ?—தண்ணிய
மட்டியையுஞ் சோலை மருதீச ரே‖பன்றிக்
குட்டியையேன் றீர்த்தீர் குறித்து?"

என்பதும், திருத்துருத்தி என்னும் ஸ்தலத்தில் சுவாமியைத் தரிசிக்கையில் அவ்விடத்திலுள்ள குருக்கள்மார், 'எங்கள் பரம சிவனுடைய ஆபரணத்தை விசேஷித்து ஒரு வெண்பாப் பாட வேண்டும்' என்ன, இவர், 'மலர்க்காவினிடங்களிலும் வயலிடங்களிலும் முத்துகளார்ந்த திருத்துருத்தி என்கிற பெரிய நகரத்தில் வசிக்கும் பொய்ம்மையில்லாத சத்திய ஸ்வரூபராகிய சிவபிராஞனவர், தமது திருமேனியில் அணியும் பூஷணமோ பிரசண்ட மாருதத்தையும் பக்ஷணம் பண்ணும்; பாற்கடலைக் கடையக் கயிறுமாகும், திருமாலுண்ட பூமியையும் தன் தலையிலேந்தி வாழா நிற்கும்,' என்னும் கருத்தையமைத்துப் பாடிய,

"காலையிலும் வேலை கடையக் கயிறுகும்
மாலையிலும் பூமுடித்து வாழுமே—சோலைசெறி
செய்யிலா ரம்பயிலுஞ் செந்துருத்தி மாநகர்வாழ்
பொய்யிலா மெய்யரிடும் பூண்."

---

* நாகை-நாகபட்டணம்.

‖ பன்றிக்குட்டியைத் தித்தது-வராகவுருவெடுத்த திருமாலின் மகனுகிய மன்மதனை நெற்றிக் கண்ணுல் எரித்தது.

என்பதும், மற்றும், 'புங்கங்கொம் பங்கிங்கொன்பது-புளியங்கொம் பங்கிங்கொன்பது - வெட்டி நறுக்கிய வெள்வேலங்கொம் பங்கிங் கொன்பது - என்னும் இவைகளை ஒரு வெண்பாவில் அடக்கிப் பாடவேண்டும்,' என, இவர், 'எங்கள் மடத்துக்கு எரிகரும்பு கொள்வது என்பதை முதலில் எழுவாயாகச் சேர்த்து நீங்கள் சொன்னவாறே சொல்லிப் பாருங்கள், வெண்பாவாய் முடிந்திருக் கிறது,' என்ன, அவர்கள் அந்தப்படி சொல்லிக் கண்ட,

"எங்கண் மடத்துக் கெரிகரும்பு கொள்வதுபுங்
கங்கொம்பங் கிங்கொன் பதுபுளி—யங்கொம்பங்
கிங்கொன் பதுவெட் டிநறுக் கியவெள்வே
லங்கொம்பங் கிங்கொன் பது."

என்பதும், சதுர்த்தி புண்ணிய காலத்தில் விக்கினேச்சுரர் மூஷிக வாகனரூடராய் வீதியிலெழுந்தருளி வரக் கண்டு தரிசிக்கையில், 'கர்ண மதமுதலிய மும்மதங்களையுடைய வலிமை மிகுந்த பெரிய மலை போலும் யானையை அற்ப ஜந்துவாகிய ஓர் எலியானது இழுத்துக்கொண்டு போகின்றதே! ஐயோ! இதைக் குறித்துக் கேள்வி முறை இல்லையோ? சிவனுடைய மழுவும், விஷ்ணுவினது சக்கரமும், பிரமனது தண்டமும் எங்கே போயின? அவைகளை ஆர் பறித்துக்கொண்டு போனார்கள்?' என்னும் கருத்தை அமைத்துப் பாடிய,

"மூப்பான் மழுவும் முராரிதிருச் சக்கரமும்
பார்ப்பான் கதையும் பறிபோச்சோ—வாய்ப்பார்
வலிமி குத்த மும்மதத்து வாரணத்தை ஐயோ
எலியிழுத்துப் போகின்ற தே!"

என்பதும், சஷ்டியில் சுப்பிரமணியரானவர் தமது வலப்பக்கத்தில் சிவபெருமானும், அவர் பக்கத்தில் உமாதேவியும், இடப்பக்கத்தில் திருமாலும், அவர் பக்கத்தில் விநாயகமூர்த்தியும், வரிசையாய் வரும்படி, மகா சம்பிரமத்துடனே வீதியில் எழுந்தருளக் கண்டு தரிசித்த பொழுது 'தகப்பன் இரந்துண்டு ஜீவிப்பவன்; தன்னைப் பெற்ற தாய் மலைநீலி; தாயுடன் பிறந்த மாமன் உறியெட்டி வெண்ணெய் திருடி; சப்பைக் காலையுடைய அண்ணன் பெருவயிறன். இச்செய்தி பறை சாத்தியது போல லோகப் பிரசித்தமாயிருக்க, இந்த ஆறுமுகக் கடவுளுக்கு இவ்விடத்தில் இதென்ன பெருமை!' என்னும் பொருளை அமைத்துப் பாடிய,

"அப்பன் இரந்துண்ணி; ஆத்தாள் மலைநீலி;
ஒப்பரிய மாமன் உறிதிருடி;—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன்; ஆறுமுகத் தானுக்கிங்(கு)
என்ன பெருமையிது!"

என்பதும், ஒரு சிவஸ்தலத்தில் சுவாமி வீதிப்புறப்பாடாகி வரக் கண்டு தரிசிக்கும் பொழுது, அவ்விடத்தில் சிலர், 'இந்தப்

புறப்பாட்டைக் குறித்து ஒன்பது ஜாதிப் பெயர் வருவதாக ஒரு கலித்துறை பாட வேண்டும்,' என, இவர், 'சரஸ்வதி நாயகன் வாழ்த்துதல் செய்ய, இடபம் சுமக்க, வைரவமூர்த்தியும் சுப்பிரமணியக் கடவுளும் இந்திராணி கணவனும் போற்றுதல் செய்ய, பாற்கடலில் பள்ளி கொள்ளும் திருமால் யாவர்க்கும் முன்னே செல்ல, தித்திப்பாகிய வளைந்த கருப்பு வில்லையுடைய காம தேவன் தாழ்ந்து வணங்க, பெருமை தங்கிய மான் தோலை உடுத்து, ஜடாமகுடதாரியாகிய எங்கும் தட்டாத சிவபெருமான் வீதிப் புறப்பாடாய் எழுந்தருளியது அதிக விநோதமாயிருக்கிறது!' என்னும் கருத்தை அமைத்து மேற்படியார் சொன்ன வண்ணம் அவ்வொன்பது ஜாதிப் பெயரும் வரும்படி சிலேடையாகப் பாடிய,

"வாணியன் வாழ்த்திட, வண்ணன் சுமக்க, வடுகன்செட்டி
சேணியன் போற்றத் திரைப்பள்ளி முன்செல்லத் தீங்கரும்பின்
* கோணியன் தாழக் கருமான் துகிலீக்கொண்டுடுத்து
வேணியனுகிய தட்டான் புறப்பட்ட வேடிக்கையே!"

என்பதும், ஒரூரில் சர்க்கார் உத்தியோகஸ்தனுகிய விகட ராமைய னென்னும் மாத்துவ பிராமணனொருவன் அப்பொழுதே விழுந்து சாகிறதாய், மிகவும் மெலிந்து திடுக்குத் திடுக்கென்று தென்னலி ராமலிங்கன் வளர்த்த குதிரை போல இருக்கின்ற ஒரு நாட்டுத் தட்டைப் பிடித்து அதன் முதுகில் சமுக்காளச் சேணம் வைத்து, 'வழியிலே கண்ட குதிரைக்கு வைக்கோற்புரி கடிவாளம்,' என்ற பழமொழிப்படி கயிற்றுக் கடிவாளம் போட்டு, அக்கடிவாளத்தை இடக் கையில் பிடித்து, வலக் கையில் புளியமலார் கொண்டு அடித்து, இரண்டு கால்களினலும் வயிற்றில் இடித்து நடத்த நடவாதது கண்டு, தன் அதிகாரத்தின் கீழிருக்கின்றவர்களைப் பார்த்து, 'இதை நடத்திக்கொண்டு போங்கள்,' என்று உத்தரவு செய்ய, அவர்களில் சிலர் முன்புறத்தில் வந்து கடிவாளத்தைத் தொட்டிழுக்க, சிலர் பின்புறத்திலிருந்து நெட்டித் தள்ள, அப்படியும் அது விசையாய் நடவாமல் மெள்ள மெள்ள அடிமேலடி வைத்து நடப்பதைக் காளமேகப்புலவர் பார்த்து, 'எப்போதும் வாயோ யாமல் வேதாத்தியயனம் பண்ணுகின்ற விகடராமையன் என்பவன் ஏறிச் செலுத்தும் குதிரையானது, கடிவாளத்தைத் தொட்டு முன் பக்கத்தில் மூன்று பெயர் வலித்துக்கொண்டு போக, பின்பக்கத்தி லிருந்து இரண்டு பெயர் கையினல் நெட்டித் தள்ள அந்தமட்டில் ஒரு மாதத்திற்குக் காதவழிக்குக் குறையாமல் விரைந்து போகின்றது,' எனப் பரிகாசமாகப் பொருளமைத்துப் பாடிய,

"முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி."

* கோணியன்—சணற்பையன்.

என்பதும், சித்திரை மாதத்தில் ஓர் ஊருக்குப் பிரயாணம் பண்ணிப் போகையில் வழிநடுவில் உள்ள திருச்செங்காட்டுச் சத்திரத்தில் ஒரு நாள் இராத்தங்கி இருக்கும் பொழுது, காற்று வீசாமல் தமக்கு அதிக வெப்பமாயிருந்தது கண்டு காளமேகப் புலவர், 'பக்த சிரோமணியாகிய சிறுத்தொண்டரே, நீர் நமக்காக அரிந்து கறிசமைத்த பிள்ளையை நம்முடனேகூட உண்ணுவதற்கு அழைத்து வாரும் என்று சொல்லி, அப்பிள்ளையின் வரவை எதிர்பார்த்திருந்த சிவபெருமானுடைய திருச்செங்காடென்ற இந்த ஸ்தலத்தில் இஃதென்ன ஆச்சரியம்! காசிக் கங்கையைக் கமண்டலத்தில் முகந்து கையிலேந்திய அகத்திய முனிவனுடைய பொதியமலையி லிருந்து உண்டாகும் தென்றற்காற்றை, ஒற்றைக் கொம்பினை ஏந்திய விநாயகமூர்த்தியின் பிதாவாகிய பரமசிவன் பூஷணமாகப் பூண்ட சர்ப்பந்தான் இப்பொழுது உணவாக உட்கொண்டு விட்டதோ! எப்பொழுதும் இயங்குகின்ற காரணத்தால் சதாகதி என்று பெயர் பெற்ற காற்று இயங்காதது என்ன மாயம்?' என்னும் கருத்தை அமைத்துப் பாடிய,

> '' அம்பேந்து கையா னவன்பதியில் *ஐம்மாவைக்
> கொம்பேந்தி தந்தைபணி கொண்டதோ—'அன்பா !
> அரிந்த மகவை அழை'என்று சொல்லி
> இருந்தவன்றன் செங்காட்டி லே ?''

என்பதுமாக இந்தப்படி காளமேகப்புலவர் நவநவமாகக் கருத் தமைத்துக் கவி பாடி ஸ்தலதரிசனம் செய்துவருகையில், திருமலை ராயன் பட்டணத்தில் கல்வியில் மிகச் சிறந்தவர்கள் என்று அவ் வரசன் வியந்து கொடுத்த தண்டிகைப் பரிசு பெற்ற புலவர்கள் அறுபத்து நால்வரும், அவர்களுக்குத் தலைவனுகிய அதிமதுரகவி என்பவனும் தமிழில் தங்களுக்குச் சமானம் ஒருவருமில்லையென்று அகங்கரித்து, உலகத்திலுள்ள மற்றப் புலவர்களையெல்லாம் மதியா மல் பலவாறுக நிந்தித்து அவமானப்படுத்தி வருகிறார்களென்றும், அதற்குத் திருமலைராயனும் உடன்பட்டிருக்கிறான் என்றும் செய்தி கேட்டு, 'வித்துவான்களாய் இருப்பவர்கள் ஆராயினுமென்ன, அப்படிப்பட்டவர்களை அவமதிக்கலாமா? அவர்களை இகழ்ந்தது நம்மை இகழ்ந்ததல்லவா? பூர்வம் ஒட்டக்கூத்தரென்பவர், 'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு' என்றெண்ணுமல், தாமே வித்தகயில் மிக வல்லவர் என்று மமதைகொண்டு நெஞ் சிரக்கமின்றிப் புலவர்களைச் சிரச்சேதம் பண்ணி வந்தது கண்டு அக்காலத்தில் புகழேந்திப்புலவரானவர் அவருக்குத் தக்கபடி கர்வப் பிராயச்சித்தம் செய்வித்து அநேகரை கொலைக்குத் தப்பு வித்து ரக்ஷித்துப் புண்ணியம் தேடிக்கொண்டார்; அந்தப்படி இந்தக் காலத்தில் திருமலைராயன் சம்ஸ்தானத்தில் இருக்கும் வித்து வான்கள் நான் நானென்று இறுமாப்புற்று, 'நக்குகிற நாய் செக்

* ஐம்மா – கால் இது இவ்விடத்தில் காற்றினை உணர்த்தி நின்றது.

கென்றும் சிவலிங்கமென்றும் அறியாதது,'போல நல்லார் பொல்லா ரென்று அறியாமலும், 'அடுக்குகிற அருமை உடைக்கிற நாய்க்குத் தெரியாதது,' போல, பாடிய அருமை தெரியாமலும் பிரசண்ட கவிகளேயெல்லாம் பழித்துக்கொண்டிருக்கிறீர்களே! இவர் களுடைய அகந்தையை நாம் போய் அவசியம் அழிக்க வேண்டும்,' என்ற பிரதிக்ஞையுடனே ஒரு நாள் அவ்விடத்திற்குப் போக யத்தனப்படுகிற சமயத்தில், அவரை மோகனங்கி என்னும் தாசி கண்டு, 'திருமலைராயன் பட்டணத்துத் துறைமுகத்தில் விசேஷமாய் முத்துக் குளிக்கிறதாகவும், அம்முத்து மற்றத் துறைகளில் குளிக்கப் படுகிற முத்துக்களிலும் மிகச் சிறந்ததாகவும், திருமலைராயனே அந்த வியாபாரம் செய்வதாகவும் சொல்லுகிறார்கள்; ஆகையால், அங்கே போய்த் திரும்பி வரும் பொழுது மறவாமல் எனக்கு மார்பி லணியும் கச்சுக்கு முத்தும் வாங்கிவர வேண்டும்,' என்றாள். அது கேட்டு, 'நல்லது அப்படியே ஆகட்டும்,' என்று சொல்லி, அவ ளிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு புறப்பட்டு அப்பட்டணத்துக் கடை வீதியில் வந்தார்.

இவருக்கெதிரே மேற்சொல்லிய அதிமதுரகவி என்பவன் தனக்குப் பின்னும் முன்னும் இரு பக்கங்களிலும் அறுபத்து நாலு தண்டிகைப் புலவர்களும் வரிசை வரிசையாக நெருங்கிச் சூழ்ந்து வர, அவர்கள் நடுவில் நீலமலை ஒன்று உரல் போலப் பருத்த கால் களும்,பனை போல நீண்ட துதிக்கையும்,ஆலவட்டம் போலப் பரந்த செவிகளும், பிறைபோல வளைந்த கொம்புகளும், மலைச்சிகரம் போல உன்னதமாகிய மஸ்தகமும், சாமரை போல அசைகின்ற வாலும் மூளைத்து எழுந்து நடப்பது போல நடக்கின்ற மதயானைமேல்நவ ரத்தினமயமாகிய தவிசிட்டு ஏறி, துஜம், சத்திரம், சாமரம் முதலிய விருதுகள் பிடிக்க, கட்டியங்கூற, அதிக ஆடம்பரத்துடனே ராஜ சமூகத்தை நாடி வருவது கண்டு,தாம் அப்பால் விலகிப் போகாமல் அப்புலவர்கள் ஏறிவரும் தண்டிகைக் கணைகளின் மத்தியில் வந்து நிற்க, அது கண்டு கட்டியக்காரன் தண்டிகைக் கணைக்குட்பட்ட வர்கள் எப்படிப்பட்டவர்களாயினும் அவர்கள் தங்கள் வாயினால் அதிமதுரகவி என்பவனுக்குரிய விருதைச் சொல்வது நெடுநாளைய வழக்கமாயிருப்பதால், அவ்வழக்கப்படி, இவர் மார்பிலே தன் கையிலிருந்த மான் தோல் பட்டையால் தட்டி, 'அதிமதுரகவிராய சிங்கம் பராக் என்று சொல்,' என்றான். இவர், 'இழவுக்கு வந்தவர் களேயெல்லாம் தாலி அறுக்கச் சொன்னால் அறுப்பார்களா? அது போலத் தெருவிலே போகிறவர் வருகிறவர்களை எல்லாம் இவன் பெருமையைச் சொல்லச் சொன்னால் சொல்வார்களா? ஆயினும், இவன் பெற்ற பெருமைதானென்ன? 'துடைப்பக்கட்டுக் குப் பட்டுக்குச்சுக் கட்டியது!' போல 'அதிமதுரகவிராய சிங்கம்' என்று பெயர் வைத்துக்கொண்டு விருது கூறி வருகிறானே! இவன் பாடும் பாட்டென்ன, அத்தனை மதுரமானதா? தன்னைச் சிங்க மென்று சொல்வதைப் பற்றிக் கொஞ்சமாவது இவனுக்கு மனம் கூச

வில்லையே! இவன் எத்தனை வித்துவான்களை ஜயித்தான்? இவை எல்லாம் வீண் புகழ்ச்சிதானே! இப்படிப்பட்டவன் வெட்கித் தலை யிறக்கம் கொள்ளும்படி இவனைப் பரிகசிப்பதே யுக்தம்!' என்று நினைத்துக் கட்டியம் கூறுவோனை நேர்க்கி, 'அதிமதுரமென்று உலக மெல்லாம் அறியும்படி பறைசாற்றினது போலப் பலமுறையும் எடுத்துச் சொல்லி இவனை மதுரம் தோன்ற ஸ்துதி செய்கின்றையே! இவனிடத்தில் உள்ள புதுமை என்ன? இப்படிச் சொல்வதைப் பார்க்கிலும், காட்டிலுண்டாகிய சரக்கு, காரமில்லாத சரக்கு, தனியே பிரயோகிக்காமல் வேறு சரக்குகளுடனே கூட்டிப் பிர யோகிக்கப்படும் சரக்காகிய மலைக்குன்றிமணி வரை உலகத்தார் தொன்றுதொட்டு அதிமதுரமென்று வழங்குவது சகஜமாதலால், நீ அதைக் குறித்துச் சொல்,' என்னும் கருத்தை அமைத்து,

" அதிமதுர மென்றே அகில மறியத்
துதிமதுர மாயெடுத்துச் சொல்லும்—புதுமையென்ன ?
காட்டுச் சரக்குலகில் காரமில் லாச்சரக்குக்
கூட்டுச் சரக்கதனைக் கூறு."

என்றொரு பாடலைச் சொல்லி ஏளனம் பண்ணினர்.

அஃது அதிமதுரகவி என்பவனைத் தூக்கிப் போட்டாற் போலிருந்ததனால், அவன் ஆச்சரியப்பட்டு, 'சிறிதாவது பயமில் லாமல் இவ்வளவு தைரியத்துடனே பகிரங்கமாக நம்மைப் பரிகசிக் கின்றனே! இவனார்?' என்று அறியும்படி தான் ராஜ சமுகத்திற் குப் போய்ச் சேர்ந்த மாத்திரத்தில் சேர்வைக்காரன் ஒருவனை அழைத்து, 'இன்னவிடத்தில் ஒரு பிராமணன் இருக்கின்றனன், அவனுடைய பெயரென்ன, அவன் எங்கிருப்பவன், என்று விசாரித்து வா,' எனச் சொன்னன். சேர்வைக்காரன் நேரிலே வந்து விசாரித்த பொழுது, காளமேகப்புலவர், 'என் பேர் ஊர் முதலான வைகளை வாய்ச் சொல்லாகச் சொன்னால் நான் சொன்னபடி நீ போய்ச் சொல்வது பிரயாசம்; விவரமாய் ஏட்டில் என் கைப்பட எழுதிக் கொடுக்கிறேன்,' என்பதாகச் சொல்லி,

" தூதைந்து நாழிகையில் ஆறுநா ழிகைதனில்
சொற்சந்த மாலைசொல்லத்
துகளிலா அந்தாதி யேழுநா ழிகைதனில்
தொகைபட விரித்துரைக்கப்
பாதம்செய் மடல்கோவை பத்துநா ழிகைதனில்
பரணியொரு நாள்முழுதுமே
பாரகா வியமெலாம் ஓரிரு தினத்திலே
பகரக் கொடிக்கட்டினேன்;
சீதம்செ யுந்திங்கள் மரபினுன் நீடுபுகழ்
செய்யதிரு மலி ராயன்முன்

சிறுமா ருகவே தாறுமா றுகள்சொல்
திருட்டுக கவிப்புலவரைக்·
காதங் கறுத்துச் சவுக்கிட் டடித்துக்
கதுப்பில் புடைத்துவெற்றிக்
கல்லணியி னொடுகொடிய கடிவாளம் இட்டேறு
கவிகாள மேக நானே.''

எனத் தாம் ஆசுகவி பாடும் திறத்தைச் சிறப்பித்தும், தமது பெயரை வெளிப்படையாகச் செப்பியும், திருமலைராயன் சமஸ்தானத்து வித்துவான்கள் செய்யும் அக்கிரமத்தைக் குறிப்பித்து அவர் கனை இகழ்ந்தும் ஒரு சீட்டுக் கவி எழுதி அதைச் சுருட்டிச் செந்திரிகம் போட்டு, 'இதைக் கொண்டு போய்க் கொடு,' என்று கொடுத்தனுப்பினர்.

அதிமதுரகவிராயன் முதலானவர்கள் அதை வாங்கி வாசித்து, 'இதை எழுதினவன் காளமேகம் என்பவனு? பாம்புக்குப் பல்லிலும், தேளுக்கு வாலிலும் ஏகதேசமாக விஷம் இருக்குமென்பார்கள்? இவனுக்கு உடல் முழுதும் விஷயமாய் இருக்கிறது; ஆதலால் இவன் பொல்லாத துஷ்டனென்றும், அகங்காரமே கால் கை முதலிய உறுப்புக்களாய் உருவெடுத்து வந்தவனென்றும், கண்டவர்கள் மேலெல்லாம் வம்பும் தும்புமாக வசை பாடுகிறவனென்றும், இவனுடைய சமாசாரம் முன்னமே நமக்குக் கேள்விதானே! அப்படியிருக்க இப்பொழுது நம்மையும் அவர்களைப் போல இலேசாக நினைத்துக்கொண்டு கொஞ்சமாவது மதிப்பில்லாமல் வாய்க்கு வந்தபடி எல்லாம் தூஷித்துச் சீட்டுக்கவி எழுதினன் பார்த்தாயா! இப்படிப்பட்டவனைச் சும்மாவிடப் போமோ? 'கொட்டினல் தேள், கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி,' அல்லவா? ஆதலால், இவனைச் சிலிர்க்கச் சிலிர்க்க வலித்து மானபங்கப்படுத்தித் தக்க சிட்சை செய்வித்தாலொழிய இவன் அடங்கமாட்டான்,' என்று தங்கள் அரசனுடனும் ஆலோசித்து, நாலு பெயர் சேவகர்களை விடுத்து, 'அந்தக் காளமேகம் என்பவன் எங்கேயாவது ஓடி யொளித்துப் போகப் போகிறான்? இந்த நொடிக்குள்ளே கைப்பிடியாகப் பிடித்து வந்து ஒப்பிக்க வேண்டும்!' என்ன, அந்நால்வரும் போய்ப் பெரும்புலிகள் போல அவரைச் சுற்றிக்கொண்டு, 'நீ சும்மா வருகிறையா, உன்னைப் பிடித்துக் கட்டிக்கொண்டு போக வேண்டுமா?' என்றார்கள். புலவர், 'நீங்கள் யார்? என்னை எங்கே அழைக்கிறீர்கள்?' என்ன, அவர்கள், 'நாங்கள் திருமலைராயன் சேவகர்கள்; அவரிடத்திற்குத்தான் உன்னை அழைக்கிறோம்,' என்ன, இவர், 'அங்கு ஏதுக்காக வரச் சொல்லுகிறீர்கள்?' என்ன, சேவகர், 'நீ எங்கள் ராஜ சம்ஸ்தானத்து வித்துவான்களைத் தூஷித்தையே! அதற்காகத்தான்,' என்ன, இவர், 'பின்னையொன்றும் செய்யவில்லையே! இதற்குத்தானு பிடிக்கிறதும், கட்டுகிறதும்? என்னைத் தொட வேண்டா, தூர நில்லுங்கள்; நானே வருகிறேன்,' என்று,

கடையில் எலுமிச்சம்பழம் ஒன்று வாங்கிக் கையில் வைத்துக் கொண்டு ராஜசமுகத்தை நோக்கி வருகிறார்.

இதற்குள் அவ்விடத்தில் அதிமதுரகவியென்பவன் அறுபத்து நாலு தண்டிகைக்காரரையும் பார்த்து, 'காளமேகம் என்பவன் இவ்விடத்திற்கு வந்தால் அவன் அரசரைருகில் கிட்டிச் செல்லாதபடி நீங்களெல்லோரும் நெருங்கி உட்கார்ந்து உங்களாசனத்தை விட்டெழுந்திராமல் இருங்கள்,' என்று திட்டம் செய்து, பின்பு ராஜாவை நோக்கி, 'அந்த வம்பனைத் தாங்கள் வாவென்றழையாமலும், அவனுக்கு ஆசனம் கொடாமலும், சன்மானம் செய்யாமலும் இருக்கவேண்டும்,' என்று சொல்லி எச்சரிக்கையாயிருந்தான். அப்படி இருக்கையில் புலவர் பெருமான் வந்து பார்த்து, 'நாம் உட்பிரவேசிக்கக் கூடாமல் இங்கே ஏதோ மித்திரபேதம் நடந்திருக்கிறது!' என்று கிரகித்துக்கொண்டு, தாம் உட்செல்லாமல் ஆஸ்தானவாசலண்டையில் இருந்தபடியே, 'இதற்கேற்ற உபாயமொன்று செய்ய வேண்டும்,' என்று, ஒரு சுலோகம் சொல்லி அரசனை ஆசீர்வதித்து அந்த எலுமிச்சம்பழத்தை அவனுக்கெதிரே நீட்டினார். பிராமணர்கள் ஆசீர்வாதம் பண்ணி, அட்சதையாவது புஷ்பமாவது மற்றேதாவது கொடுக்க வந்தால் வாங்காமல் இருப்பது விதியல்லவே! அது பற்றி அவன் தன் கையை நீட்டினான். நீட்டிய கையில் இந்த எலுமிச்சம்பழம் போய்ச் சேர வேண்டுமே! அதனால் யாவரும் விலகி வழிவிட்டார்கள்; காளமேகப்புலவர் தாராளமாக அச்சபை நடுவே சென்று அதை வேந்தன் கையில் கொடுக்க, அவன் வேண்டா என்று சொல்லாமல் வாங்கிக் கொண்டதன்றி, அவருக்கு ஆசனம் கொடுக்கவும், 'உட்காரும்,' என்று சொல்லவுமில்லை. அது தெரிந்து ஐம்புகேச்சுரத்தின் திசையை நோக்கி மானசிகமாக ஸ்ரீ அகிலாண்டவல்லி விமானத்தைத் தரிசித்து, சாரதையைத் தியானித்து,

"வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைப் பணிபூண்டு.
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனத்துவைத்த தாய்."

என்பதை முதற்கொண்ட முப்பது வெண்பாவில், 'சரஸ்வதிமாலை' என ஒரு பிரபந்தம் பாடினார். பாடின மாத்திரத்தில் வாணி கடாட்சத்தால் திருமலைராயனிருந்த ஆசனம் ஒரு புறத்தில் வளர்ந்து இடம் கொடுக்க, அதில் அவர் அவனுடன் சமானஸ்கந்தமாக வீற்றிருந்தார்.

இவ்விதமாக ராஜசிங்காசனம் வளர்ந்து இடம் கொடுக்க, இவர் அதன்மேலேறி உட்கார்ந்த தருணத்தில் அவர்களெல்லாம், 'இஃதென்ன! மந்திரமோ! மாயமோ! அல்லது கண்கட்டு வித்தையோ!' என்று பிரமிப்புடனே பார்க்கையில், புலவர்

பெருமான் அந்தப் புலவர்களை, 'என்னை வைத்த கண் வாங்காமல் ஊடுருவிப் பார்க்கிறீர்களே! நீங்கள் யார்? தெரியச் சொல்ல வேண்டும்?' என்று கேட்க, அவர்கள், 'நாங்கள் இந்தச் சம்ஸ்தானத்தில் இருக்கும் கவிராஜர்கள்,' என்று உத்தரம் சொல்ல, இவர் கவிராஜர் என்பதற்குக் குரக்கரசரென இடக்கராகப் பொருள் கொண்டு, குலுக்கென்று நகைத்து, அவர்களை உல்லங்கனம் பண்ணும்படி, 'ஓ! ஓ! புவியரசர்களால் புகழப்படும் புலவர்களே! நீங்களாரென்று உங்களைக் கேட்டால் கவிராஜர்களென்றீர்களே! கவிராஜர்களாய் இருந்தால் உங்கள் ஜாதி சுபாவப்படி வாலிருக்க வேண்டுமே! அஃதெங்கே? வாலில்லாமையால் நீங்கள் வாலில்லாத குரங்குகள் என்றல்லவோ சொல்லப்படுவீர்கள்? அப்படித்தானென்று ஒப்புக்கொண்டாலும், நீண்டு வளர்ந்து வலி பெற்ற நகமிருக்க வேண்டுமே! அதெங்கே? அல்லாமலும் நாலு காலிருக்க வேண்டுமே! அவை எங்கே? காலாகக் கையைப் பாவித்துக்கொள்ளலாமென்றாலும், பீனை சார்ந்த கண்ணிருக்க வேண்டுமே! அஃதெங்கே? சொல்லுங்கள்,' என்னும் கருத்தினை உள்ளமைத்து,

> "வாலெங்கே நீண்டெழுந்த வல்லுகிரெங் கோலு
> காலெங்கே ஊன்வடிந்த கண்ணெங்கே—சாலப்
> புவிராயர் போற்றும் புலவீர்காள்! நீங்கள்
> கவிராயர் என்றிருந்தக் கால்?"

என்றொரு வெண்பாப் பாடினர். இதில் குரங்குகளென்று இழித்துரைத்தாலும், அவர்களைப் போலத் தாமும் புலவராகையால் அந்தச் சுஜாதி அபிமானம் போகாமல், 'புவிராயர் போற்றும் புலவீர்காள்!' என்று சிறப்பித்தார்.

அதை அவர்கள் அவ்விதமாக நினையாமல், 'இவன் எட்டிக் குடுமியைப் பிடித்து இறங்கிக் காலைப் பிடிக்கிறவன் போல, இந்தப் பாட்டிலே நம்மையெல்லாம் குரங்குகளென்று பிரத்தியட்சத்திலேயே நிந்தித்து, அதனோடுகூடக் கொஞ்சம் முகஸ்துதியாக, 'புவிராயர் போற்றும் புலவீர்காள்,' என்றான். முன்பு சீட்டுக் கவியிலும் தூஷித்திருக்கிறான். இவனுடைய நெஞ்சத் துணிவுதான் என்ன!' என்று சிந்தித்துப் பிறகு இவரை நோக்கி, 'இந்தச் சம்ஸ்தானத்தில் வெகுகாலமாய்ப் பெயர் பெற்று இருக்கின்ற எங்களை இன்று வந்து முனைத்த நீ ஆரென்று கேட்கிறையே! நீ யார்? சொல்,' என்று கேட்டார்கள். இவர், 'நாம் காளமேகம் என அறியீர்களா?' என்ன, அவர்கள், 'நீ காளமேகமா? நல்லது, காளமேகமென்பது கறுத்த மேகமாதலால் பொழிய வேண்டுமே?' என்ன, இவர், 'பொழியத்தான் வந்தது,' என்ன, அவர்கள், 'எப்படிப் பொழிய, வந்தது?' என்ன, புலவர் சிரோமணி, 'கழியினிடத்தில் செல்லும் கடல் நீரானது உப்புமயமாய் இருப்பதென்று அதை ஒழித்து, சாஸ்

திரமாகிய கடலில் அதன் சாரமாகிய நீரை முகந்து, அருவியாறு வழிந்தோடுகின்ற தமிழ் பிறந்த பொதியமலையில் காலூன்றி, கடுமையாகிய கவிகளைப் பாடுகின்ற புலவர்கள் மனத்தின்கண்ணே பயம் செனிக்க இடித்து, அவர்கள் காதுகள் செவிடுபடக் குமிறி, கண்கூச மின்னி, கவியாகிய மழை பொழியும்படி காளமேகமானது புறப்பட்டது,' என்னும் கருத்தை அமைத்து,

> " கழியுந் தியகடல் உப்பென்று நன்னூற் கடலின்மொண்டு
> வழியும் பொதிய வரையினில் கால்வைத்து வான்கவிதை
> மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கிமின்னிப்
> பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே."

என்றொரு பாடல் பாடக் கேட்டு, அதிமதுரகவி என்பவன் அதிக ஆச்சரியம்கொண்டு இவரை முன்னிட்டு, 'வெள்ளைக் கவி பாடித் திரிகின்ற காளமேகமே! மூச்சு விடுவதற்கு முன்னே முந்நூறு அல்லது நானூறு பாடல் பாடப் போகாதா? மூச்சு விட்டாச்சு தென்றால் ஐந்நூறு பாடல்வரையிலும் ஆகாதா? இதற்கு இத்தனை பேச்சென்ன? சும்மா ஆடம்பரமாக உன்னுடைய கள்ளக் கவிக் கடையைப் பரப்ப வேண்டா; அந்த மட்டிலே அதைக் கட்டு,' என்னும் கருத்துத் தோன்ற,

> " மூச்சுவிடு முன்னமே முந்நூறு நானூறும்
> * ஆச்சென்றால் ஐந்நூறு மாகாவோ ?—பேச்சென்ன
> ‖ வெள்ளைக் கவிகாள மேகமே உன்னுடைய
> கள்ளக் கவிச்கடையைக் கட்டு "

என்றொரு பாடலைச் சொல்லி அவன் தன் பெருமையை வெளியிட்டுக் கவிசிரேஷ்டராகிய இவரை இழிவு செய்த பொழுது, இவர், 'நீ மூச்சுவிடுகிறதற்கு முன்னே முந்நூறு நானூறு பாடல்வரையிலும், ஆச்சென்றால் ஐந்நூறு பாடல் வரையிலும் பாடுகிறதாகச் சொன்னையே, இதோராச்சிரியமா? நான் சொல்வதைக் கேள்: வாயைத் திறவாததற்கு முன் எழுநூறு எண்ணூறு பாட்டளவிலும், ஒரு முறை வாயைத் திறந்து மூடினால் ஆயிரம் பாட்டளவிலும் ஆகாவா? பாடுகிறதற்கு ஒரு நிமித்தமும் இல்லாத காலத்தில் சும்மாவிருந்தால் இருப்பேன்; ஆவசிகமுண்டாய்ப் பாட ஏற்பட்டேனானால், யானைத் துதிக்கை போலப் பெரிய தாரைகளாக வருஷிக்கும் மேகம் நான் என்று நீனை பிள்ளாய்!' என்னும் கருத்தை அமைத்து,

---

* ஆயிற்றென்பது எதுகை நோக்கி ஆச்சென மருவாக அமைக்கப் பட்டது.

‖ வெள்ளைக் கவி - வெண்பா.

* " இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும்
‡ அம்மென்ரு லாயிரம்பாட் டாகாவா ?—சும்மா
இருந்தால் இருப்பே னெழுந்தேனே யாயிற்
பெருங்காள மேகம் பிளாய்!"

என்பதாக ஒரு கவி பாடித் தமது வல்லமையைக் குறிப்பித்தார்.

அதை அதிமதுரகவி கேட்டு, 'தூக்கி நிறுத்தடா, பிணக்காடாய் வெட்டுகிறேன் என்பவனைப் போல, வெகு சாமர்த்தியமாப் பேசு கிறனே! இவன் சொல்லுவது மெய்யாயிருக்குமா? அஃதேது? 'ஆராத்தாள் செத்தாலும் பொழுது விடிந்தால் தெரியும்,' என்பது போல, இன்னும் சற்று நேரத்திற்குள்ளே பொய் மெய் எல்லாம் பட்டப் பகலாய்த் தெரிய வருகிறது!' என்று நினைத்துக் காளமேகப் புலவரை நோக்கி, 'கூரம்பாயினும் வீரியம் பேசேல்,' என்பதை அறியாமல், 'நீ இவ்வளவு வீரம் பேசுகிறையே! அரிகண்டம் பாடு, பார்ப்போம்!' என்றான். இவர், 'அரிகண்டமாவது என்ன?' என, அவன், 'கழுத்தில் கத்தி கட்டிக்கொண்டு, எதிரி கொடுக்கும் சமிசைக்கு இணங்கப் பாடுவதுதான்; அப்படிப் பாடுமிடத்தில் ஏதாவது தவறினுல் அந்தக் கத்தியினுலேயே வெட்டுண்ண வேண்டி வரும்,' என்ன, அதற்கு இவர் கைகொட்டிச் சிரித்து, 'இது தானு அரி கண்டம் என்பது! இத்தனை சுலபமானதை ஒரு விஷய மாகத் தேடிச் சொல்ல வந்தையே! இதிலென்ன அருமை இருக்கிறது? இது நிற்க. யமகண்டம் பாடுகிறதல்லவோ மகா பிரயாசம்! அதைக் குறித்துப் பேசுவதுதான் கௌரவம்,' என்று சொல்ல, அவன், 'யமகண்டமென்றும் ஒன்றிருக்கிறதா? அஃது எப்படிப்பட்டது?' என்ன, இவர், 'பூமியில் பதினுறடி நீளம், பதினுறடி அகலம், பதினுறடி ஆழமாக, சதுரத்திற்குச் சதுரமாக ஒரு பெரிய குழி வெட்டி, அதன் நான்கு மூலைகளிலும் பதினுறடி இருப்புக் கம்பங்கள் நாட்டி, கம்பத்தின் மேல் நாலு பக்கத்திலும் இரும்பினுல் நாலு சட்டமும், நடுவே ஒரு சட்டமும் போட்டு, நடுச்சட்டத்தில் உறிகட்டி, குழிக்குள் பருத்த புளியங்கட்டைகளை நெருங்க அடுக்கி, கட்டைக்குள் நெருப்பு மூட்டி, அது கனன்று எழுந்து சுவாலித்து எரிந்துகொண்டிருக்க, அந்நெருப்பில் ஓர் ஆளுயரமான இருப்புக் கொப்பரை வைத்து, கொப்பரை நிறைய எண்ணெய் விட்டு, அதில் அரக்கு, மெழுகு, குங்கிலியம், கந்தகம், சாம்பிராணிகளை நிரப்பி, அவை நன்முய்க் காய்ந்து உருகிக் கொதித்துக்கொண்டிருக்க, நான்கு யானைகளைப் பாகர்கள் மதமேற்றிக் கொண்டு வந்து கம்பத்திற்கு ஒவ்வொன்முக மலைகளைப் போல நிறுத்தி வைத்திருக்க, பின்புறத்தில் வளையம் வைத்து, வளையத்தில் சங்கிலி கோத்து, நயத்த எழுகினுல் கூர்மை

* இம்மெனல்—வாய் திறவாமையையும்

‡ அம்மெனல்—வாய் திறந்து மூடுகையையும் உணர்த்திய குறிப்புச் சொற்கள்.

யாகச் சமைத்துப் பளபளவென்று மின்னும்படி சாணை பிடித்த எட்டுக் கத்திகளைக் கழுத்தில் நாலும், அரையில் நாலுமாகக் கட்டிக்கொண்டு, கத்திகளின் புறத்திலுள்ள சங்கிலிகளை மேற்படி யானைகளின் துதிக்கையில் கொடுத்து வைத்து, தான் கொப்பரைக்கு நேராகத் தொங்குகின்ற உறி நடுவில் ஏறியிருந்து, எவரெவர் என்ன சமிசை கொடுத்தாலும் அவைகளை அந்நொடியிலேதானே தடை இன்றிக் குறித்த கருத்தின்படி இசைத்துப் பாட வேண்டும். அவ்வாறு பாடும் பொழுது எவ்வளவாவது வழுவுமானால் சமிசை கொடுத்தவர்கள் யானை மேலிருக்கும் பாகர்களுக்குக் கண் சைகை காட்ட, அவர்கள் யானைகளை மஸ்தகத்தில் அங்குசத்தால் குத்தி அதட்ட, அவைகள் தமது தும்பிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கும் சங்கிலிகளை விசையாயிழுக்க, இழுத்த வுடனே புலவர் கழுத்தும் அரையும் கத்திகளால் கண்டிக்கப்பட்டு, தலையொரு துண்டமும், அரைமுதல் காலளவும் ஒரு துண்டமுமாகி, அவ்வெண்ணெய்க் கொப்பரையில் விழுந்து மாண்டு போகிறது ; இப்படிப்பட்டதுதான் யமகண்டம்,' என்றார்.

காளமேகப்புலவர் இவ்வண்ணம் சொல்லக் கேட்ட மாத்திரத்தில், அதிமதுரகவி மனம் திடுக்குற்று, 'அடா அப்பா! யமகண்டம் என்பது இப்படிப்பட்ட கோரமானதா? இஃது உள்ளபடி யமகண்டத்திற்கு ஒப்பாயிருப்பதனாலேதான் இதற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டதாகக் காண்கிறது! இவ்வாறு செய்ய ஆராலேயாகும்? அசாத்தியம்! அசாத்தியம்!' என்று தனக்குள்ளே எண்ணி அதிசயித்து, பின்பு புலவர் பெருமானைப் பார்த்து, 'நீ சொன்ன யமகண்டம் தகுதியானதுதான் ; ஆயினும், சும்மா வாயினாலே டம்பமாகச் சொல்வதனால் என்னபிரயோஜனம்? 'மாடு திருப்பினவனல்லவோ அர்ச்சுனன்?' அது போல, சொன்னபடி செய்வதல்லவோ கௌரவம்? ஆகையால், செய் பார்ப்போம்!' என்றார். இவர், 'சபாசு! 'ஆடவிட்டு நாடகம் பார்க்கிறது,' போல என்னைச் செய்யச் சொல்லிப் பார்க்கிறதென்ன? நீ முதல் முதல் இந்த விஷயத்தை எடுத்துப் பேசினதனாலும் வெகு நாளாக யாவருமறிய நடுத் தெருவிலே, 'அதிமதுரகவிராய சிங்கம் பராக்!' என்று விருது கூறிக்கொண்டு வருகிறபடியினாலும், செய்ய வேண்டிய கடமை உன்னுடையதே; அப்படி இருக்க, 'குரங்கு குட்டிக் கையைத் தோய்க்கிறது போல,' என் மேலே சார்த்தி என்னைத் தூண்டிவிட்டு நீ தப்பித்துக்கொள்ளப் பார்ப்பது சரியோ? இது, விருது கூறி வந்து செடியில் நுழைகிறது போலாகுமல்லவோ?' என்றார்.

அத்தருணத்தில் அதிமதுரகவியும் அறுபத்து நாலு தண்டிகைப் புலவரும் திருமலைராயன் முன்னிலையில் ஒரு சேரக் கூடி, 'இவன் எதிரிகளை மதியாத துன்மார்க்கனை இருக்கிறபடியாலே, தந்திரமாக இவனையே அந்த யமகண்டத்தில் மாட்டி இவனுடைய கொழுப்பை அடக்க வேண்டும்,' என்று தங்களுக்குள் ஆலோசித்துக்

கொண்டு, ‘அப்படிச் செய்ய வேண்டுமென்று எங்களுக்கு ஆவசிக மில்லை, நீயே உன்னை அதிக சமர்த்தனென்று பெருமைப் படுத்தியும், எங்களை இழித்தும் சீட்டுக்கவி பாடி அனுப்பினதனாலும், நாங்கள் சுளுவாக அரிகண்டம் பாடச் சொன்னால், ‘கிணற்றுக்குத் தப்பித் தீயிலே பாய்ந்தது,’ போல அதை விலக்கி உன் வாயினாலேயே யமகண்டம் பாடுகிறதைக் குறித்துப் பேசினதனாலும், நீ தான் அந்தப்படிச் செய்ய வேண்டும்,’ என்றார்கள்.

அவர்கள் அப்படிச் சொல்லக் கேட்டுப் புலவர் சிகாமணியானவர், ‘கல்வித்திறமும் கவிசாதுரியமும் இல்லாத இவர்களை யமகண்டம் பாடச் சொல்லுகிறது, வீரமில்லாத பேடியைப் போருக்கழைக்கிறது போல அல்லாமல் வேறன்று. அதனால் அதை நாமே செய்து காட்டி இவர்கள் இறுமாப்பை அடக்க வேண்டும்,’ என்று நிச்சயித்துக்கொண்டு, ‘நீங்கள் வருத்தப்பட வேண்டா; தலைகீழாகக் கரணம் போட்டாலும் இது உங்களால் ஆகத்தக்க தன்று; நானே செய்கிறேன்; பாருங்கள்,’ என்று உடன்பட்டார். அவர் உடன்பட்டமாத்திரத்தில் அவர்கள், ‘இனித் தாமதிக்க லாகாது,’ என்று யமகண்டத்தைக் குறித்து அவர் சொன்னபடி ஏவலாளர்களைக் கொண்டு ராஜாவின் சபாமண்டபத்திற்கு நேரிலே குழி வெட்டித் தழல் மூட்டி எண்ணெய்க் கொப்பரை வைத்துக் குழிக்கு நாற்றிசையிலும் இருப்புக் கம்பம் நாட்டிக் கம்பத்தின் மேல் சட்டம் போட்டு நடுச் சட்டத்தில் கொப்பரைக்கு மேலே உறி கட்டிப் பாகர்களால் யானைகளை மதமேற்றிக் கொண்டு வந்து கம்பத்திற்கு ஒவ்வொன்றுக நிறுத்தும்படி செய்தார்கள். புலவர் பெருமான் கழுத்திற்கும் அரைக்கும் கத்தி கட்டிக் கொண்டு, கத்திகளின் பின்னுள்ள வளையங்களில் கோத்திருக்கும் சங்கிலிகளை யானைகளின் கையில் கொடுத்துவிட்டுத் தாம் உறியின் மேலேறி முகமலர்ச்சியுடனே மண்டலித்திருந்து, திருமலை ராயனுடைய அனுமதி பெற்றுக்கொண்டு அதிமதுரகவி முதலான வர்களை நோக்கி, ‘இனி நீங்கள் காலதாமதம் செய்யாமல் உங்களிஷ்டப்படிக்குக் கொடுக்க வேண்டிய சமிசைகளைத் தடையின்றித் தாராளமாகக் கொடுக்கலாம்,’ என்ன, அவர்கள் இவருடைய தைரியத்தையும் முக விலாசத்தையும் உறியேறிப் பயமின்றிக் கம்பீரமாக வீற்றிருப்பதையும் கண்டு, ‘அம்மம்ம! இவனுடைய தைரியந்தான் எப்படிப்பட்டது!’ என்று ஆச்சரியப் பட்டு, ‘நாமிதை முற்ற முடியப் பார்க்க வேண்டும்!’ என்று யாவரும் சமீபத்தில் வந்திருந்து, அவரவர் வெவ்வேறே மிகவும் அருமையாக ஆராய்ந்து தேடி எடுத்துத் தங்களிஷ்டப்படிக் கெல்லாம் நாநா விதமான சமிசைகள் கொடுக்க, அவைகள் எல்லாவற்றையும் அகிலாண்டநாயகி அனுக்கிரகத்தால் பொருள் செய்யாமலும், எவ்வளவேனும் இடர்ப்படாமலும் அநாயாசமாக அவர்கள் கொண்ட கருத்துக்கிணங்கும்படி சித்திர விசித்திரமாய் நல்ல நயம் தோன்ற அதற்குத் தக்க அலங்காரங்களும் அமைத்து விரைவாகப் பாடினார்.

அதிமதுரகவியும், அறுபத்துநாலு தண்டிகைப்புலவர்களும் தனித்தனி கொடுத்த சமிசைகளும்

காளமேகப்புலவர் பாடிய பாடல்களும்

பிரதமத்தில் அதிமதுரகவி, 'திருமாலவதாரம் பத்தும் ஒரு வெண்பாவில் அடக்கிப் பாட வேண்டும்,' என்ன, புலவர் பெருமான், 'இதற்கு ஒரு வெண்பாவும் வேண்டுமோ! நான் பாதி வெண்பாவில் பாடுவேன்,' என்று பாடிய செய்யுள் :

"மெச்சுதிரு வேங்கடவா ! வெண்பாவிற் பாதியிலென்
இச்சையினுன் சன்ம மியம்பவா ?—மச்சாகூர்
மாகோலா சிங்காவா மாராமா ராமாரா
மாகோபா லாமாவா வா."

[இதன் பொருள்.] — 'தேவரும் முனிவரும் யாவரும் மெச்சுகின்ற திருவேங்கடத்தில் வீற்றிராநின்ற பெருமாளே! அடியேன் அபீஷ்டப்படி பாதி வெண்பாவில் உனது திருவவதாரம் பத்தும் இசைத்துக் கூறும்பொருட்டு நீ என்முன் எழுந்தருளக் கடவாய்,' என்று முற்பாதியில் திருவேங்கடமுடையானைப் பிரார்த்தித்து, தாம் பிரார்த்தித்த வண்ணம் பெருமாள் கடாக்ஷ விசேஷத்தால் அப்பத்தவதார மூர்த்திகளும் தமக்குப் பிரசன்னமாகக் கண்டு, பிற்பாதியில் 'மச்சா, கூர்மா, வராகா, நரசிங்கா, வாமனு, பரசுராமா, ரகுராமா, பலராமா, கிருஷ்ணு, கல்கி' என்று அவ்வவர் திருநாமங்களைத் தனித்தனியே குறித்து அழைத்தாரென்பதாம். 'இச்செய்யுளுக்கு, மெச்சுகின்ற திருவேங்கடத்தானே! பாதி வெண்பாவில் என்னிஷ்டப்படி, மச்சா, கூர்மா, வராகா, நரசிங்கா, வாமனு, பரசுராமா, தசரதராமா, பலராமா, கிருஷ்ணு, கல்கி என்று உன் திருவவதாரத்தைச் சொல்லும்படி வா,' என்று பொருள் கூறுவாரும் உண்டு.

அறுபத்து நாலு புலவர்களில் ஒருவர், 'இராசிகளின் பெயரும் முறையும் தொகையும் அடைமொழி இல்லாமல் ஒரு வெண்பாவில் அமைத்துப் பாட வேண்டும்,' என்ன, முதலில், 'பகருங்கால்' எனவும், இறுதியில், 'வசையறு மிராசிவளம்' எனவும், சேர்த்துக்கொண்டு அவ்வாறே பாடிய செய்யுள் :

"பகருங்கான் மேடம் * இட பம்மிதுனம் கர்க்க
டகம்சிங்கம் கன்னி துலாம்விர்ச்—சிகந்த
னுசுமகரம் கும்பமீ னம்பன்னி ரண்டும்
வசையறுமி ராசி வளம்."

என்பதாம்.

---

* 'இடபம் மிதுனம்' என்பதில் மகரவொற்று விரித்தல் விகாரம்.

ஒருவர், 'மும்மூர்த்திகள் பெயர், அவர்கள் தின்னும் கறி, உண்ணும் உணவு, ஏந்தும் ஆயுதம், பூணும் பூஷணம், ஏறும் வாகனம், வசிக்கும் இடங்களே ஒரு வெண்பாவில் அடக்கிப் பாட வேண்டும்,' என்ன, அப்படியே பாடிய செய்யுள் :

"சிறுவன் அளபயறு செந்நெற் கடுகு
மறிதிகிரி தண்டு மணிநூல்—பொறியரவம்
வெற்றேறு புள்ளன்னம் வேதனரன் மாலுக்குக்
கற்றுழும் பூவே கறி."

[இ-ள்.] பிரமன், சிவன், விஷ்ணு என்னும் மூவர்க்கும், பயறு, பிள்ளை, வெண்ணெய்—கறி ; செந்நெல், விஷம், பூமி—உணவு ; மான், சக்கரம், தண்டம்—ஆயுதம் ; கௌஸ்துவம், உபவீதம், சர்ப்பம்—பூஷணம் ; ரிஷபம், கருடன், அன்னம்—வாகனம் ; கைலை, பாற்கடல், தாமரை—வசிக்குமிடம் ; என்பதாம்.

ஒருவர், 'ஈயேறி மலை குலுங்கினதாக ஒரு வெண்பாப் பாட வேண்டும்,' என்ன, 'மலைமாத்திரமா? உலகமுழுதும் குலுங்கியதாகப் பாடுகிறேன்,' என்று பாடிய செய்யுள் :

"வாரணங்கள் எட்டு மகமேரு வும்கடலும்
தாரணியு நின்று சலித்தனவால்—நாரணனைப்
பண்வா யிடைச்சி பருமத்தி னுலடித்த
புண்வாயில் ஈமொய்த்த போது !"

[இ-ள்.] ஸ்ரீமந் நாராயணன் கண்ணபிரானாக அவதரித் திருக்கையில், திருவாய்ப்பாடியில் வெண்ணெய் திருடினனென்று அவனை நல்லிசை போன்ற சொல்லினையுடைய அசோதைப் பிராட்டி பருத்த மத்துக்கொண்டு அடித்த புண்ணில் ஈயானது மொய்த்த பொழுது, அருவருப்புண்டாகி அவன் அருமைத் திருமேனி அசைய, சதாகாலமும் திருவுதரத்திற்குள் அசையாது வைத்து அவனால் பாதுகாக்கப்படும் உலகமும், அதிலுள்ள அஷ்டதிக்கு யானைகளும், மகாமேருவும், சப்தசாகரங்களும் அசைந்தன என்பதாம்.

ஒருவர், 'குடத்திலே கங்கை அடங்கும் என்பதாகப் பாட வேண்டும்,' என்ன, அவ்வாறே பாடிய செய்யுள் :

"விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்—பெண்ணே
இடத்திலே வைத்த இறைவர் சடாம *
குடத்திலே கங்கையடங் கும்."

* மகுடத்திலே கங்கை அடங்குமென்பதின் முதலெழுத்தாகிய மகரத்தைப் பிரித்து மூன்றும் அடியின் இறுதியில் சேர்த்து, குடத்திலே கங்கை அடங்கு மென்பதைச் சமிசைக்கேற்க நான்காமடியில் பொருத்தி முடித்தார்.

[இ-ள்.] கங்கா நதியானது அகன்ற வானத்திற்குள்ளும் அடங்காமல், மகாமேரு முதலாகிய மலைகளுக்குள்ளும் அடங்காமல், பூமிக்குள்ளும் அடங்காமல், எங்கும் சம்பூர்ணமாகப் பொங்கிப் பெருகி வந்தாலும், உமாதேவியை இடப்பாகத்தில் வைத்தருளிய பரமசிவனுடைய ஜடா மகுடத்தில் அடங்கி நிற்கும் என்பதாம்.

ஒருவர், 'ஒன்று முதல் பதினெட்டெண்களை முறையே அடை சொல் இல்லாமல் ஒரு வெண்பாவில் அடக்கிப் பாடவேண்டும்,' என்ன, அப்படியே அடக்கிப் பாடிய செய்யுள் :

"ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறு வேழெட்டு
ஒன்பது பத்துப் பதினென்று—பன்னி
ரண்டுபதின் மூன்றுபதி னான்குபதி னைந்துபதி
னாறுபதி னேழுபதி னெட்டு."

ஒருவர், 'முதற்சங்கத்தின் தொகையும், இடைச்சங்கத்தின் தொகையும், கடைச்சங்கத்தின் தொகையும் ஒரு வெண்பாவில் அடக்கி, அம்மூன்று சங்கத்தார்க்கும், அறுபத்துநாலு திருவிளையாடலுக்கும் கர்த்தன் மதுரையில் சொக்கன் என்பது பயனிலையாய் ஈற்றடியில் வரும்படி முடிக்க வேண்டும்,' என்ன, அவ்வண்ணமே முடித்த செய்யுள் :

"நூலாநா லாயிரநா னூற்றுநாற் பத்தொன்பான்
பாலாநா னூற்றுநாற் பத்தொன்பான்—மேலாநாற்
பத்தொன்பான் சங்கமறு பத்துநா லாடலுக்கும்
கர்த்தன் மதுரையில்சொக் கன்."

ஒருவர், 'கடல் நடுவில் செந்தூள் எழும்பினதாகப் பாட வேண்டும்,' என்ன, அப்படியே கருத்துக் கற்பித்துப் பாடிய செய்யுள் :

"சுத்தபாற் கடலி னடுவினிற் றூளி
தோன்றிய வதிசய மதுகேள் :
மத்தகக் கரியை யுரித்தவன் மீது
மதன்பொரு தழித்திடு மாற்றம்
வித்தகக் கமலை செவியுறக் கேட்டாள்
விழுந்துநொந் தயர்ந்தழு தேங்கிக்
கைத்தல மலரான் மார்புறப் புடைத்தாள் :
எழுந்தது கலவையின் செந்தூள்."

[இ-ள்.] 'மலினமில்லாத திருப்பாற்கடலின் நடுவில் செந்தூளெழும்பிய அதிசயத்தைச் சொல்லுகிறேன், கேள் : தாருகாவனத்து முனிவர்கள் விடுத்த மஸ்தகத்தையுடைய யானையின் தோலையுரித்து ஏகாசமாகப் போர்த்த சிவசூரன்மேல் படையெடுத்துப் போர் செய்து மன்மதனுகிய பிள்ளை இறந்த செய்தியை, அவனுடைய தாயாகிய சாதுரியமுடைய ஸ்ரீ மகாலட்சுமி செவியில்

வந்து புகும்படி கேட்டு, அவள் கீழே விழுந்து மனம் நொந்து அழுது மலர் போன்ற தன் இரு கைகளையும் உயர எடுத்து மார்பில் தாக்கும்படி அடித்துக்கொண்டாள்; அதனால் அம்மார்பில் அப்பி யிருந்த குங்குமக் கலவைச் செந்தூளானது எழுந்து பரந்தது' என்பதாம். (சுத்தப் பாற்கடலென்பது சுத்தபாற்கடலெனச் செய்யுள் விகாரமாயிற்று.

பிறவாநெறி காட்டியார் என்னும் பெயருடையவர், 'பெருங் காற்று மழைகாட்டும் பெருநட்புப் பகைகாட்டும்' என்று ஒரு வெண்பாப் பாட வேண்டும்,' என, அங்ஙனமே அவரைக் கடிந்து பாடிய செய்யுள்,

" நீரே பிறவா நெறிகாட்டி யாரைமக்கு
நீரே சமிசை நிலையிட்டீர்—நீரேயிவ்
விங்களமேன் செய்தீர் விடுங்கடுங்காற் றும்மழைகாட்
டுங்கடுநட் புப்பகைகாட் டும்."

[இ-ள்.] 'பிறவாநெறி காட்டியார் என்று யாவராலும் சிறப் பித்துச் சொல்லப்படும் பிரபலமான பெயர் பெற்றவர் நீர்தாமோ? எமக்கு இப்படிப்பட்ட சமிசை கொடுக்கத் தலைப்பட்டவர் நீர் தாமோ? ஏதுக்காக நீரிந்த விங்களம் செய்ய ஏற்பட்டீர்? அந்த மட்டில் போதும் விட்டுவிடும், 'கடுங்காற்று மழைகாட்டும், கடு நட்புப் பகைகாட்டும்' என்பதாம்.

ஒருவர், 'ஆமணக்குக்கும் யானைக்கும் உவமை தோன்ற ஒரு பாடல் பாட வேண்டும்,' என்ன, அங்ஙனமே சிலேஷித்துப் பாடிய செய்யுள் :

" முத்திருக்கும் கொம்பசைக்கும் மூரித்தண் டேந்திவரும்
கொத்திருக்கும் நேரே குலைசாய்க்கும்—எத்திசைக்கும்
தேமணக்கும் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆமணக்கு மால்யானை யாம்."

[இ-ள்.] 'எந்தத் திசைகளிலும் இனிமையாகப் பரிமளிக்கின்ற மலர்ச் சோலை சூழ்ந்த திருமலைராயனுடைய வெற்பகத்தில் ஆமணக்கு முத்துடைத்தாயிருக்கும்; கொம்பசையா நிற்கும்; நெரிகின்ற தண்டேந்தி வளரும்; காய்கள் கொத்துக் கொத்தாய் இருக்கும் நேர்மையாகிய குலைகள் சாய்த்திருக்கும். ஆதலாலும், யானை தன்னகத்தில் முத்திருக்கும் கொம்பினை அசைக்கும்; வலி பெற்ற இருப்புலக்கைபைத் துதிக்கையில் ஏந்திவரும்; மஸ்தகத்தில் பாகன் அங்குசத்தால் குத்தும் குத்துடைத்தாயிருக்கும்; பகைவர் கூட்டத்தைப் பிரித்தோட்டும் ஆதலாலும், இவ்விரண்டும் ஒன்றனை யொன்று ஒக்கும்,' என்பதாம்.

ஒருவர், 'வைக்கோலுக்கும் யானைக்கும் ஒப்புமை தோன்றப் பாட வேண்டும்,' என்ன, அவ்வாறே சிலேஷித்துப் பாடிய செய்யுள் :

"வாரிக் களத்தடிக்கும் ; வந்துபின்பு கோட்டைபுகும் ;
போரில் சிறந்து பொலிவாகும் ;—சீருற்ற
*செக்கோல மேனித் திருமலீரா யன்வரையில்
வைக்கோலு மால்யானை யாம்."

[இ-ள்.] *'சிறப்புப் பொருந்திய அழகிய சிவந்த மேனியையுடைய திருமலீராயனது வெற்பகத்தில் வைக்கோல் உழவர்களால் கற்றை கற்றையாக வாரியெடுத்துக் களத்தில் அடிக்கப்படும்; பிறகு அங்கிருந்து கொண்டு வந்து கோட்டையாகக் கட்டிச் சேர்க்கப்படும்; அன்றியும், போர் போடப்பட்டுச் சிறந்து பொலிந்திருக்கும்; ஆதலாலும், யானை பகைவர்களை வாரி யுத்த களத்தில் அடிக்கும்; யுத்தத்தில் வெற்றி சிறந்து பொலிவு பெற்றிருக்கும்; பின்பு திரும்பி வந்து கோட்டைக்குள் பிரவேசிக்கும்; ஆதலாலும், இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று ஒப்பாகும்'* என்பதாம்.

ஒருவர், *'பாம்புக்கும் எள்ளுக்கும் ஒப்பிட்டுப் பாட வேண்டும்,'* என்ன சிலேஷித்துப் பாடிய செய்யுள்:

"ஆடிக் குடத்தடையும் ; ஆடும்போ தேயிரையும் ;
மூடித் திறக்கின் முகம்காட்டும் ;—ஓடுமண்டை
பற்றிப் பரபரெனும் ; பாரிற்பிண் ணுக்குமுண்டாம் ;
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது."

[இ-ள்.] *'பாம்பு படமெடுத்தாடிக் குடத்திற்குள் அடைந்திருக்கும்; ஆடும் பொழுதே சீத்கார பூத்காரம் பண்ணும்; பெட்டிக்குள் அல்லது மேற்படி குடத்துக்குள் போட்டு மூடித் திறந்தால் தலையை நீட்டிக் காட்டும்; கடித்தவுடனே அதன் விஷமானது மண்டையில் ஓடிப் பற்றிப் பரபரவென்று நமையுண்டாகும்; அதற்குப் பிளவாகிய நாக்கும் இருக்கும்; ஆதலாலும், செக்காடி அதன் சாரமாகிய தைலம் குடத்தில் சேர்க்கப்படும்; செக்காடும் பொழுதோ இரைச்சலிடும்; குடத்தில் பெய்து மூடி வைத்து நுரை அடங்கின பின்பு திறந்து பார்த்தால் அத்தைலம் பார்த்தவர்களுடைய முகச்சாயையைத் தனக்குள்ளே காட்டும்; அது உச்சியில் வார்க்கப்படுமானால் பரவியோடி மண்டையில் பற்றிப் பரபரென ஊரலெடுக்கும்; பிண்ணுக்கும் உண்டாயிருக்கும்; ஆதலாலும், இவ்விரண்டும் ஒன்றினையொன்று ஒக்குமென்று சொல்லுக'* என்பதாம். *(இதில் திலமும் அதன் தைலமும் ஒற்றுமை பற்றி அபேதமாகச் சொல்லப்பட்டன.)*

ஒருவர், *'பாம்புக்கும் எலுமிச்சம்பழத்துக்கும் உவமை கற்பித்துப் பாட வேண்டும்,'* என்ன, சிலேஷித்துப் பாடிய செய்யுள் :

*செங்கோலம் என்பது செக்கோலமென வலித்தலாயிற்று.

“ பெரியவிட மேசேரும் ; பித்தர்முடி யேறும் ;
அரியுண் ணும்; உப்புமே லாடும்;—எரிகுணமாம் ;
தேம்பொழியும் சோலைத் திருமலீரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம்.”

[இ - ள்.] ‘தேனைச் சொரிகின்ற சோலை சூழ்ந்த திருமலீராயனுடைய வெற்பகத்தில், பாம்பு மிக்க விஷம் பொருந்தியிருக்கும் ; பரமசிவனுடைய திருமுடிமேல் ஏறிக் குடை கவித்தாற் போலப் படம் விரித்திருக்கும் ; காற்றை உட்கொள்ளும் ; அதனால் உடலுப்பும் ; மேலெழுந்து ஆடாநிற்கும், கோபித்துச் சீறும் குணமுடையதாம் ; ஆதலாலும், எலுமிச்சம்பழம் ராஜ சமுகம் முதலாகிய பெரிய இடங்களில் உபசாரார்த்தமாய்ப் போய்ச் சேரும்; பித்தம் கொண்டவர்களுக்கு அப்பித்தம் இறங்க அவர்கள் தலையில் சாறு பிழிந்து ஏற்றப்படும் ; ஊறுகாய்க்காகக் கருவியால் அரியப்படும் ; மேலே உப்பிட்டுக் குலுக்கப்படும் ; இரணத்தில் அதன் சாரம் பட்டால் எரிகின்ற குணமுடையதாம் ; ஆதலாலும், இவ் விரண்டும் தமக்குள் ஒன்றேடொன்று ஒப்பாகும்’ என்பதாம்.

ஒருவர், ‘மலீக்கும் சந்திரனுக்கும் உவமானமாகச் சிலேஷித்துப் பாட வேண்டும்,’ என்னப் பாடிய செய்யுள் :

“ நிலவாய் விளங்குதலால் நீள்வான் படிந்து
ஏலபோ துலாவுதலாற் சென்று—தலீமேல்
உதித்து வரலா லுயர்மா மலீயை
மதிக்குநிக ராக வழுத்து.”

[இ - ள்.] ‘மலீ பூமியின்கண் விளங்குதலாலும், மேகங்கள் சில காலம் தன்னிடத்தில் வந்து படிந்து உலாவப்படுதலாலும், சிகரங்கள் மேலே தோன்றி வருதலாலும், சந்திரன் நிலவினையுடைத் தாய்ப் பிரகாசிப்பதனாலும், நீண்ட வானத்தின்கட் படிந்து சில பொழுது உலாவுதலாலும், அஸ்தமித்து மறுபடி தலீமேல் உதித்து வருதலாலும் ஒன்றையொன்று ஒத்ததாகச் சொல்லலாம்’ என்பதாம்.

ஒருவர், ‘தேங்காய்க்கும் நாய்க்கும் சமத்துவம் கற்பித்துச் சிலேஷித்துப் பாட வேண்டும்,’ எனப் பாடிய செய்யுள் :

“ ஓடு மிருக்குமத னுள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங் குலீதனக்கு நாணுது—சேடியே !
தீங்காய தில்லாத் திருமலீரா யன்வரையில்
தேங்காயு நாயுந் தெரி.”

[இ-ள்.] ‘தீமையென்பது நாடுதலில்லாத திருமலீராயனுடைய வெற்பகத்தில், தேங்காயானது நாரேயன்றி ஓடும் உடைத்தாயிருக்கும் ; உடைத்துப் பார்த்தால், அதனுட்புறம் வெளுத்திருக்கும் ; ஒரு குலீக்குப் பத்துப் பதினேந்துக்கு மேற்பட்டிருக்குமன்றி அது தாங்குமோ தாங்காதோவென்று அஞ்சிக் குறைந்

திராது; ஆதலாலும், நாய் சிலநேரம் இங்கும் அங்கும் ஓடித்திரியும்; சிலநேரம் இருந்தவிடத்திலேயே இருக்கும்; அதன் உள் வாயோ வெளுத்திருக்கும்; ஆரேனும் புதியவர் வரக் கண்டால் அவரை உற்றுப் பார்க்கும்; பார்த்துப் பின்பு குரைக்க ஆரம்பிக்கும்; அப்படிக் குரைப்பதில் வெட்கப்படமாட்டாது. ஆதலாலும், இவ் விரண்டும் ஒக்கும் என்று அறிவாயாக என்பதாம். (சேடி-மகடூஉ முன்னிலை.)

ஒருவர், 'மீனுக்கும் பேனுக்கும் உவமையாகச் சிலேஷித்துப் பாட வேண்டும்,' என்னப் பாடிய செய்யுள்:

"மன்னீரி லேபிறக்கும் மற்றலியி லேமேயும்
பின்னீச்சிற் குத்தும் பெருமையால்—சொன்னேன்கேள்
தேனுந்து சோலைத் திருமலிரா யன்வரையில்
மீனும்பே னுஞ்சரியா மே."

[இ-ள்.] 'மீன் பெருமை தங்கிய நீரினிடத்தில் உற்பத்தியாகும்; உற்பத்தியான பின்பு அந்நீர்த் திரையிலேயே மேய்ந்துகொண் டிருக்கும்; அப்படி மேயுமிடத்தில் ஏதாவது அரவம் கண்டால் கண்டவுடன் பின்புறத்தில் குத்துவது போல நீந்திக்கொண்டே போகும் பெருமை உடைத்தாம்; ஆதலாலும், பேன் ஈரிலிருந்து மிகுதியாகப் பிறக்கும், உரம் பெற்ற தலையினிடத்தில் மேயும்; பின்பு பல்லைக் கடித்துக்கொண்டு பெண்டுகளால் ஈச்சென்று குத்தப்படும். ஆதலாலும், இவ்விரண்டும் சரியொத்தன' என்பதாம். (ஈச்சு என்பது ஒலிக் குறிப்பு.)

ஒருவர், 'ஆட்டக் குதிரைக்கும் காவிரி ஆற்றுக்கும் ஒப்புமை கற்பித்துச் சிலேஷையாகப் பாடவேண்டும்,' எனப்பாடிய செய்யுள்:

"ஓடுஞ் சுழிசுத்த முண்டாகும் துன்னலரைச்
சாடும் பரிவாய்த் தலைசாய்க்கும்—நாடறியத்
தேடுபுக ழாளன் திருமலிரா யன்வரையில்
ஆடுபரி காவிரியா ரும்."

[இ-ள்.] 'தேசமெல்லாம் அறியத் தேடிய புகழினையுடைய திரு மலிராயனது வெற்பகத்தில் ஆட்டக்குதிரை விசை கொண்டு ஓடா நிற்கும்; சுத்தமான சுழியுள்ளதாயிருக்கும்; விரோதிகளை முறிய வடிக்கும். காண்பவருக்கு விருப்பமுண்டாகத் தலை வளைத்து நடக்கும். ஆதலாலும், காவிரியாறு நீர் பெருகியோடும்; ஓடும் பொழுது அந்நீர் சுழித்தலை உடைத்தாயிருக்கும்; தன்னிலே தோய்ந்தவர்களைப் பாவனமாக்கும் பரிசுத்தமுள்ளதாம்; நெருங் கிய மலர்களை அலைத்துச் சாடும்; குதிரை வடிவு வாய்ந்த அலைகளை மடக்கி எறியும். ஆதலாலும், இவ்விரண்டும் தம்மில் ஒப்பாம்' என்பதாம்.

ஒருவர், 'கீரைப் பாத்திக்கும் ஏறு குதிரைக்கும் ஒப்பமைத்துச் சிலேஷையாகப் பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள்:

" கட்டி யடிக்கையால் கான்மாறிப் பாய்கையால்
வெட்டி மறிக்கின்ற மேன்மையால்—முட்டப்போய்
மாறத் திருப்புகையால் வண்கீரைப் பாத்தியுடன்
ஏறப் பரியாகு மே."

[இ-ள்.] 'கீரைப் பாத்தி நிலங்கொத்திக்கட்டிகளை மண்வெட்டியால் அடித்து உடைத்தலாலும், ஒரு வாய்க்காலிலிருந்து மறுவாய்க் காலினுல் நீர்மாறிப் பாய்தலாலும், சதுரஞ்சதுரமாக வெட்டித் தடுத்தலாலும் நேரே போய்க் கடைமடையில் முட்ட அது கண்டு அங்கிருந்து பக்கமடையில் திருப்பிமாறத் திரும்புதலாலும், ஏறு குதிரை கட்டிக் * கொட்படிக்கப்படுதலாலும், கால் மாறிமாறி எழும்பிப் பாய்தலாலும், தன் மேலேறிய வீரன் சத்துருக்களை வெட்டி மறிக்கத்தக்க மேன்மையுடைத்தாம் ஆதலாலும், போக வேண்டிய இடம் முழுதும் போய் மீளத் திரும்புதலாலும் இவ் விரண்டும் ஒன்றனையொன்று ஒப்பாம்' என்பதாம்.

ஒருவர், 'ஆட்டுக்கும் குதிரைக்கும் சிலேஷையாகப் பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள்:

" கொம்பிலையே தீனிதின்னும் கொண்டதன்மேல் வெட்டுதலால்
அம்புவியி னன்னடைய தாதலால்—உம்பர்களும்
தேடுநற் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆடும் குதிரையுகே ராம்."

[இ-ள்.] 'தேவர்களும் தேடி வருகின்ற ரம்மியமான சோலை சூழ்ந்த திருமலைராயன் வெற்பகத்தில் ஆடு கொம்புகளிலிருக்கின்ற தழைகளை இரையாகத் தின்னுதலாலும், பணத்துக்குக்கொண்டு அதன் பின்பு வெட்டப்படுதலாலும், பூமியில் ஆயர்களுக்கு நல்ல செல்வமாயிருத்தலாலும், குதிரை கொம்பில்லாது இருப்பதனுலும், தீனி தின்னுதலாலும், போர் செய்யும் வீரன் அதன்மேலேறி யிருந்து பகைஞரை வெட்டுதலாலும், சரகதி மயூரகதியாகிய நல்ல நடையினை உடையதாதலாலும், இவ்விரண்டும் ஒன்றனையொன்று ஒக்கும்' என்பதாம்.

ஒருவர், 'துப்பாக்கிக்கும் ஓலைச் சுருளுக்கும் சமத்துவம் கற்பித்துப் பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள்:

" ஆணி வரையுறலால் ஆனகுறிப் பேதரலால்
தோணக் கருமருந்து தோய்த்திடலால்—வீணிலத்தில்
செப்பார்க் குதவாத் திருமலைரா யன்வரையில்
துப்பாக்கி யோலைச் சுருள்."

[இ-ள்.] 'நெடிய பூமியில் தன் பேரைச் சொல்லி ஸ்துதி செய்யாத பகைவருக்கு உதவி செய்யாத திருமலைராயனுடைய வெற்

* கொட்படித்தல் - குதிரையைத் திருப்பும் பொழுது அது உடனே திரும்பப் பழகுதற்குக் கழுத்தில் கயிறு கட்டிச் சாட்டை கொண்டு சுற்றிச்சுற்றி அடித்தல்.

பகத்தில், துப்பாக்கி தன்னிடத்தில் சலாகையைக் கொண்டிருப் பதனலும், சுடுவோன் குறித்த குறி தவருததனலும், குறையாமல் கறுத்த மருந்திடப்படுதலாலும்; ஓலைச் சுருள் எழுத்தாணி கொண்டு எழுதப்படுதலாலும், தன்கண்ணெழுதிய விஷயக் குறிப் பைப் பிறருக்குத் தெரிவித்தலாலும், மை பூசப்படுதலாலும் இவ் விரண்டும் சமானமாகும்' என்பதாம். (தோன்ற வென்பது தோண வென மருவியது.)

ஒருவர், 'வானவில்லுக்கும், விஷ்ணுவுக்கும், வெற்றிலைக்கும் முப்பொருள் சிலேடையாக ஒரு வெண்பாப் பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள்:

"நீரி லுளதா னிறம்பச்சை யாற்றிருவால்
பாரில் பகைதீர்க்கும் பான்மையால்—சாருமனுப்
பல்வினையை மாற்றுதலால் பாரீர்! பெருவான
வில்விண்டு நேர்வெற் றிலை."

[இ-ள்.] 'வானவில் நீர் கொண்ட மேகத்தில் தோன்றி யிருப்பதனலும், பச்சை நிறம் உண்டாதலாலும், அழகுடைத் தாதலாலும், மழைக் குறிகளில் ஒன்றுய்ப் பூமியில் கோடை என்னும் பகையைத் தீர்ப்பதனலும், மனிதர்களுடைய பல வகைப்பட்ட தொழில்களையும் மாற்றுதலினலும், விஷ்ணு, மகாப் பிரளயத்தின் மத்தியில் தங்குவதனலும், சாமளவர்ணமாய் இருப் பதனலும், இலக்குமியை உடையதனலும், உலகத்தில் தேவர்கள் முனிவர்களுடைய பகையை ஒழிக்கும் பான்மையினலும், தன்னை ஆசிரயித்த மநுக்களின் சஞ்சித ஆகாமிய பிராரப்த கருமங்களை நிர்வகிப்பதனலும்; வெற்றிலை நீர்க்கால்களில் இருப்பதனலும், பச்சென்ற நிறமுடையதனலும், மங்களகரமாதலாலும், ஒருவரை யொருவர் பகைத்திருந்தால் அப்பகையை நிவர்த்திக்கின்ற தன்மை யினலும், மக்களது தந்தரோகத்தைத் தீர்ப்பதனலும் இம்மூன்றும் ஒப்புமையுடையன' என்பதாம்.

ஒருவர், 'பூசனிக்காய்க்கும் ஈசனுக்கும் ஒப்பமைத்துப் பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள்:

"அடிநந்தி சேர்தலா லாகம் வெளுத்துக்
கொடியு மொருபக்கம் கொண்டு—வடிவுடைய
மாசுணத்தைப் பூண்டு வளைத்தமும்பு பெற்றதனல்
பூசனிக்காய் ஈசனெனப் போற்று."

[இ-ள்.] 'பூசனிக்காய், அடியில் காம்பு சேர்ந்திருப்பதனலும், உடல் வெளுத்து ஒரு பக்கத்தில் கொடியையும் கொண்டு, அழகினையுடைய வெண்சுண்ணத்தை மேற்புறத்தில் பூண்டு, வளைவாகிய தழும்பு பெற்றிருப்பதனலும்; ஈசன் அடியில் ரிஷபம் சேர்ந்திருப்பதனலும், விபூதி தூளனத்தால் திருமேனி விளர்த்து, பார்வதியையும் ஒரு பக்கத்தில் வைத்துக்கொண்டு

அழகுடைய சர்ப்பாபரணத்தைப் பூண்டு, உமையவளுடைய வலீத்தழும்பு பெற்றிருப்பதனாலும் ஒப்பென்று சொல்லுக' என்பதாம்.

ஒருவர், 'ஐந்து டுகரம் வரக் கும்பேசர் விஷயமாகப் பாட வேண்டும்,' என, நிரனிறை அணியாகப் பாடிய செய்யுள் :

"ஓகாமா வீதோ டுடுடுடுடு நேரொக்க
நாகார் குடந்தை நகர்க்கிறைவர்—வாகாய்
எடுப்பர் நடம்புரிவர் ஏறுவரன் பர்க்குக்
கொடுப்பர் அணிவர் குழைக்கு."

[இ-ள்.] 'இளமரங்கள் அடர்ந்த சோலை சூழ்ந்த திருக்குடந்தைக்கு இறைவராகிய கும்பேசர் ஓ, கா, மா, வீ, தோ என்னும் இவ்வைந்தெழுத்துடனே, டு, டு, டு, டு, டு என்னும் இவ்வைந் தெழுத்தும் தனித்தனி பொருந்த அவை ஓடு, காடு, மாடு, வீடு, தோடு என்றுதலால், அவற்றுள் முறையே ஒன்றை அழகாகக் கையில் எடுப்பர்; ஒன்றில் நடனம் செய்வர்; ஒன்றின்மேல் ஏறுவர்; ஒன்றைத் தம் அன்பர்க்குக் கொடுப்பர்; ஒன்றைச் செவியில் அணிவர் என்பதாம். (தோடு-காதாபரணம்.)

ஒருவர், 'பச்சை வடம், பாகு, சேலை, சோமன் என்னும் இந்நான்கு வஸ்திரபேதமும் வரும்படி ஒரு வெண்பாப் பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள் :

"மாயன் துயின்றதுவும் மாமலராள் சொல்லதுவும்
ஏய குருந்திற்கொண் டேறியதும்—தூயை
இடப்பாகன் சென்னியின்மே லேறியதும் பச்சை
வடம்பாகு சேலைசோ மன்."

[இ-ள்.] 'நெடுமால் மகாப்பிரளயத்தில் திருக்கண் வளர்ந்து அருளியதும் (பச்சை வடம்), தாமரை ஆசனத்தையுடைய இலக்குமியின் சொல்லும் (பாகு), கண்ணபிரான் கோபிகளை நாணச் செய்யும்பொருட்டுக் கவர்ந்துகொண்டு போய்க் குருந்த மரத்திலேறி ஒளித்து வைத்திருந்ததும் (சேலை), மலை மகளை இடப்பாகத்திலுடைய சிவபெருமானது திருமுடியில் ஏறியிருப்பதும் (சோமன்), முறையே பச்சை வடம், பாகு, சேலை, சோமன்' என்பதாம். (பச்சை வடம் - ஆலிலை, சோமன்-சந்திரன்.)

ஒருவர், 'பொன்னுவரையிலை, காய், பூ, என்று பாடவேண்டும்,' எனப் பாடிய செய்யுள் :

"உடுத்ததுவும் மேய்த்ததுவும் உம்பர்கோன் றன்னை
எடுத்ததுவும் பள்ளிக் கியையப்—படுத்ததுவும்
அந்நாள் எறிந்ததுவு மன்பி னிரந்ததுவும்
பொன்னு வரையிலைகாய் பூ."

[இ-ள்.] 'ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் ஆடையாக உடுத்ததும் *(பொன்)*, கிருஷ்ணவதாரத்தில் மேய்த்ததும் *(ஆ)*, இந்திரன் கல் மழை பொழிவித்ததன் நிமித்தம் குடையாக எடுத்ததும் *(வரை)*, சயனத்திற்கு இசையப்படுத்ததும் *(இலை)*, அக்காலத்தில் கன்று கொண்டு எறிந்ததும் *(காய்)*, அன்பினால் பலிச் சக்கரவர்த்தியினிடத்தில் இரந்ததும் *(பூ)*, முறையே பொன்னுவரை, இலை, காய், பூ' என்பதாம். *(பொன்-பீதாம்பரம், ஆ-பசு, காய்-விளங்காய், வரை-மலை, இலை-ஆலிலை, பூ-பூமி.)*

கச்சிக்காவலன் என்னும் ஒருவன், 'செங்கழுநீர் கிழங்கு என்று பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள் :

"வாதமண ரேறியதும் மாயன் துயின்றதுவும்
ஆதிதடுத் தாட்கொண்ட வவ்வுருவும்—சீதரனார்
தாள்கொண் டளந்ததுவும் தண்கச்சிக் காவலா!
கேள்:செங் கழுநீர்க் கிழங்கு."

[இ-ள்.] 'சாந்த குணத்தையுடைய கச்சிக்காவலனே, கேட்கக் கடவாய் : சம்பந்த மூர்த்திகளுடனே வாது செய்த சமணர்கள் ஏறியதும் *(செங்கழு)*, நாராயணன் பள்ளிகொண்டதும் *(நீர்)*, பரமசிவன் சுந்தரமூர்த்திகளைத் தடுத்தாட்கொள்ளும்பொருட்டு எடுத்த உருவும் *(கிழம்)*, விஷ்ணுவானவர் திருவடியால் அளந்ததுவும் *(கு)*, முறையே செங்கழு நீர் கிழங்கு' என்பதாம். *(கு-பூமி.)*

ஒருவர், 'நா, நீ, நூ, நே என்று பாட வேண்டும்,' என்னப் பாடிய செய்யுள் :

"அரையின் முடியில் அணிமார்பி னெஞ்சில்
தெரிவை யிடத்தமர்ந்தான் சேவை—புரையறவே
மானுர் விழியீர் ! மலரணவொற் றீருகும்
ஆனலாம் நாநீநூ நே."

[இ-ள்.] 'ம், ல், ர், ண், என்னும் இந்நான்கு ஒற்றும், நா நீ, நூ, நே என்னும் இந்நான்கிற்கும் தலைதடுமாற்றமாய் இறுதியாக, நாண், நீர், நூல், நேம் என வருமாயின், உமாதேவி இடப்பாகத்தில் எழுந்தருளிய சிவபிரானது அரையிலும், முடியிலும், மார்பிலும், கழுத்திலும் சேர்க்கப்படுவனவாகும்' என்பதாம். *(நேம்-விஷம், 'மானுர் விழியீர்' என்பது மகடூஉ முன்னிலை.)*

ஒருவர், 'கணபதிக்கும், முருகனுக்கும், சிவனுக்கும் சிலேடையாக ஒரு வெண்பாப் பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள் :

"சென்னிமுக மாறுளதால் சேர்தருமுன் னுலுகையால்
இந்நிலத்திற் கோடொன் றிருக்கையால்—மன்னுகுளக்
கண்ணுறுத லானும் கணபதியும் செவ்வேளும்
எண்ணரனு நேராவ ரே."

[இ-ள்.] 'விநாயகன், முகம் மாறுபட்டிருப்பதனாலும், முன்னே தொங்குகின்ற துதிக்கையினாலும், ஒரு கொம்பினை உடையனாயிருப்பதனாலும், வெல்லத்தின்கண் ஆவிர்ப்பவித்தலினாலும்; முருகன் ஆறுமுகத்துடனிருப்பதனாலும், நெருங்கிய பன்னிரண்டு கைகளினாலும், இந்தப் பூமியில் ஒப்பற்ற திருச்செங்கோட்டிலிருப்பதனாலும், நிலை பெற்ற சரவணப் பொய்கையில் அவதரித்தலினாலும்; சிவன் திருமுடியில் கங்கையிருப்பதனாலும், முன்னே சேர்ந்திருக்கின்ற நான்கு கைகளினாலும், இவ்வுலகத்தில் கயிலை மலையில் இருப்பதனாலும், நெற்றிக் கண்ணைப் பொருந்துதலாலும் இம்மூவரும் தம்முள் ஒருவரை ஒருவர் ஒப்பாவர்' என்பதாம். *(சென்னிமுகம் என்பது இரு பெயரொட்டு.)*

ஒருவர், '*தை மாசி பங்குனி மாதம்* என்று பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள்:

> "பாணற்குச் சொல்லுவதும், பைம்புனலை மூடுவதும்,
> தாணு வரித்ததுவும் சக்கரத்தோன்—ஊணதுவும்
> எம்மானே யெய்துவதும் ஈசவிடத் துஞ்சிரத்தும்
> தைம்மாசி பங்குநிமா தம்."

[இ-ள்.] 'தையற்காரனுக்குச் செய்யென்று சொல்வதும் (*தை*), ஜலத்தை மறைத்துக்கொண்டிருப்பதும் (*மாசு*), சிவன் அடர்த்து உரித்ததும் (*இபம்*), விஷ்ணுவுக்கு உணவாயிருப்பதும் (*கு*), எங்கள் பெண்ணைச் சேர்வதும் (*நீ*), பரமசிவன் இடப்பாகத்தில் வைத்ததும் (*மாது*), முடியில் தரித்ததும் (*அம்*) முறையே தை மாசி பங்குனி மாதம்' என்பதாம். *(இபம்-யானை; நீ-நீத்தல், துறவு; அம்-கங்கை, நீ என்பது-நி எனக் குறுக்கலாயிற்று.)*

ஒருவன், 'ஒரு பாடல் செருப்பென்றெடுத்து விளக்குமாறென்று முடிக்க வேண்டும்,' எனப் பாடிய செய்யுள்:

> "செருப்புக்கு வீரர்களைச் சென்றுழக்கும் வேலன்
> பொருப்புக்கு நாயகனைப் புல்ல— மருப்புக்குத்
> தண்டேன் பொழிந்தருந் தாமரைமேல் வீற்றிருக்கும்
> வண்டே விளக்குமா றே."

[இ-ள்.] 'யுத்தகளத்தில் போய்ப் புகுந்து வீரர் கூட்டத்தைக் கலக்கிச் சிதறவடிக்கின்ற வேலாயுதத்தை ஏந்திய குறிஞ்சித் தலைவனுகிய முருகக்கடவுளை யான் ஆலிங்கனம் செய்ய, வாசனை பொருந்திக் குளிர்ச்சி தங்கிய தேனைச் சொரிகின்ற அழகிய தாமரை மலரின்மேல் வீற்றிருக்கின்ற வண்டுதான் வழிகாட்டாநிற்கும்' என்பதாம். இக்கருத்து, 'ஒரு பெண் முருகவேளைத் தழுவக் கருதி வண்டைத் தூதுவிடக் குறித்ததாக அமைக்கப்பட்டது' என்பதாம்.

ஒருவர், 'பாம்புக்கும் வாழைப் பழத்துக்கும் சமானம் தோன்றப் பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள்:

" நஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டால் மீளாதே—விஞ்சுமலர்த்
தேம்பாயும் சோலைத் திருமலரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்."

[இ - ள்.] 'மிகுதியாகப் பூந்தேன் பாய்கின்ற சோலை சூழ்ந்த திருமலராயனுடைய வெற்பகத்தில், பாம்பு, விஷமுடைத்தாயிருக்கும்; காயசித்தி பெற்றோர் சட்டை கழற்றுவது போலப் பருவ மறிந்து தோலுரிக்கும்; கடவுள் முடியின்மேல் இருக்கும்; கொடிய கோபத்தினாலே அதன் பல்பட்டால் இறந்த உயிர் திரும்ப மாட்டாது. ஆதலாலும், வாழைப்பழம், நைந்திருக்கும்; தோலுரிக்கப்படும்; கடவுள் திருமுடிமேல் பஞ்சாமிர்தத்தோடு கூட்டி அபிஷேகிக்கப்படும்; கறியாகவாவது மற்றெவ்வகையாகவாவது புசிப்பவர்களுடைய பல்லினிடத்தில் பட்டால் பின்பு திரும்பமாட்டாது; ஆதலாலும், இவ்விரண்டும் ஒப்பாம்' என்பதாம்.

ஒருவர், 'கண்ணுடிக்கும் அரசனுக்கும் ஒப்பமைத்துப் பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள்:

" யாவருக்கும் ரஞ்சனைசெய் தியாவருக்கு மவ்வவராய்ப்
பாவனையாய்த் நீதகலப் பார்த்தலால்—ஏவும்
எதிரியைத்தன் னுள்ளாக்கி யேற்ற ரசத்தால்
சதிருறலால் ஆடியர சாம்."

[இ - ள்.] 'கண்ணுடி எல்லார்க்கும் விருப்பத்தை உண்டாக்கி' எல்லார்க்கும் அவரவரைப் போலப் பாவனையாய் முகத்தழுக்கு நீங்கத் திருத்தமாகப் பார்க்கப்படுதலாலும், எதிர்ப்பட்டவனது சாயை தனக்குள்ளே கொள்ளத் தக்கதாக ரசம் பூசப்பட்டுச் சதிர் பெற்றிருப்பதனாலும், அரசன் தன் கோலின் கீழ் வாழ்வார் யாவருக்கும் சந்தோஷமாகிய செய்கையைச் செய்து, யாவருக்கும் அவரவர் நிலைமைக்கேற்பத் தன்னைப் பாவித்துத் தீமையகலப் பார்ப்பதனாலும், தன்மேல் போருக்கு வருகின்ற பகைவனைச் சாமோபாயத்தால் தன் வசப்படுத்திச் சிங்காரம் முதலிய நவரசத்தைக் கொண்டு மகிமை பெற்றிருப்பதனாலும் ஒப்பாம்' என்பதாம்.

ஒருவர், 'சிவனைக்குறித்து, 'நீருவாய், நெருப்பாவாய், கூருவாய், கொளுந்துவாய், நட்டமாவாய், நஞ்சாவாய்' என்று ஒரு வெண்பாப் பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள்:

" நீருவாய் நெற்றி நெருப்பாவா யங்கமிரு
கூருவாய் மேனி கொளுந்துவாய்—மாருத
நட்டமா வாய்சோறு நஞ்சாவாய் நாயேனை
இட்டமாய்க் காப்பாய் இனி "

[இ - ள்.] 'நெற்றியின்கண் திருநீறுடையவனைய் இருப்பாய்; அங்கம் அக்கினிமயமாய் இருப்பாய்; திருமேனி இரண்டுகூறாய் இருப்பாய்; அன்றியும் எரிந்துகொண்டிருப்பாய்; எக்காலமுமொழியாத

திருநடமுடையனுய் இருப்பாய்: நஞ்சை உணவாகக் கொள்ளு வாய்; உனது குணுதிசயம் பகிர்முகத்தில் இப்படியிருப்பினும், அந்தர்முகத்திலுள்ள கிருபையினுல் நாய் போன்ற அடியேனை இஷ்ட மாக ரக்ஷித்தல் வேண்டும்' என்பதாம்.

ஒருவர், 'அடிப்பது மத்தாலே அழ என்பதை ஈற்றடியாகக் கொண்டு அயலடியும் அது போலத் திரித்து ஒரு வெண்பாப் பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள்:

" வண்ணங் கரியனென்றும் வாய்வேத நாநியென்றும்
கண்ணனிவ னென்றும் கருதாமல்—மண்ணை
அடிப்பதுமத் தாலே யளந்தானே யாய்ச்சி
அடிப்பதுமத் தாலே யழ?"

[இ - ள்.] 'உலகமுழுவதும் திருவடித் தாமரையினுல் அளந்த பரம விராட்டுவை, இவன் கார் போலும் கரிய நிறத்தை உடையவ னென்றும், சகல வேதங்களும் பரிமளிக்கின்ற திருவாயினையுடையவ னென்றும், யாவர் கண்ணிடத்திலும் இருப்பவனென்றும் நினையா மல், அசோதைப் பிராட்டியானவள் மத்தினுலேயா அழும்படி அடிக் கிறது? அவன் முகவல்லாசமாம்படி பூவும் புனலும் பெய்து பூசிக்க வேண்டும் அல்லவோ?' என்பதாம்.

ஒருவர், 'திருமலைராயனுடைய வாஸை குறித்துப் பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள்:

" செற்றலரை வென்ற திருமலைரா யன்கரத்தில்
வெற்றிபுரி யும்வாளே வீரவாள்;—மற்றையவாள்
போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள்
ஆவா ளிவாளவா ளாம்."

இது பொருள் விளங்கிக் கிடக்கின்றது.

ஒருவர், 'சிவனுக்கும், சுப்பிரமணியனுக்கும், விநாயகனுக்கும், விஷ்ணுவுக்கும், சிவனடியாருக்கும் தனித்தனி ஆறு தலை உண் டென்று ஒரு வெண்பாப் பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள்:

" சங்கரற்கு மாறுதலை சண்முகற்கு மாறுதலை
ஐங்கரற்கு மாறுதலை யானவே;—சங்கைப்
பிடித்தோற்கு மாறுதலை பித்தனுர் பாதம்
படித்தோர்க்கு மாறுதலை பார்."

[இ - ள்.] 'பரமசிவனுக்குத் திருமுடியில் கங்கையும், சுப்பிரமணி யனுக்கு ஆறு சிரசும், விநாயகனுக்கு மாறு சிரசும், விஷ்ணுவுக்குப் பிரளயமாகிய உறைவிடமும், சிவனுடைய திருவடியைத் துதி செய்பவர்களுக்கு மனவருத்தம் தணிதலும் உண்டென்று நீ காண் பாயாக' என்பதாம்.

ஒருவர், 'சிவனை முக்கண்ணன் என்பதற்கு வேறு காரணம் தோன்ற ஒரு வெண்பாப் பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள்:

" முக்கண்ணன் என்றரனே முன்னோர் மொழிந்திடுவார்
அக்கண்ணற் குள்ள தரைக்கண்ணே ;—தொக்க
உமையாள்கண் ணொன்றரைமற் றான்வேடன் கண்ணொன்(று)
அமையுமித னலென் றறி."

[இ-ள்.] *'சான்றோர் சிவபிரானைச் சோமசூரியாக்கினி என்னும் மூன்று கண்ணை உடையோனென்று பிரசித்தமாகச் சொல்வார்கள்; அப்படிச் சொல்வது எதனலெனில், அச்சிவனுக்கு இயற்கையாயுள்ளது அரைக்கண் மாத்திரமே; அதனோடு வாமபாகத்தில் அர்த்தநாரியாய் எழுந்தருளிய உமாதேவியின் கண் ஒன்றையும், அக்காலத்தில் ஊன் படைத்த கண்ணப்ப நாயனரென்னும் வேடன் தன் முகத்தில் நின்றும் களைந்து சாத்திய கண் ஒன்றும் சேர்ந்து மூன்றாய் இருக்கின்ற இவ்விதக் காரணத்தினலேதான் என்று அறிக'* என்பதாம்.

ஒருவர், *'கஞ்சிகுடியென்று சிலேஷையாக ஏகாம்பரநாதர் மேல் ஒரு வெண்பாப் பாட வேண்டும்'* என, *'அதற்கு மேலும் விசேஷமாகப் பாடுவோம்,'* என்று பாடிய செய்யுள்:

" நேற்றிரா வந்தொருவ னித்திரையில் கைபிடித்தான்
வேற்றாரா னென்று விடாயென்றேன் ;—ஆற்றியே
கஞ்சிகுடி யென்றான் ; களித்தின்று போவென்றேன் ;
வஞ்சியரே ! சென்றான் மறைந்து."

[இ-ள்.] *'கொடி போலும் இடையினையுடைய சேடிகளே! நேற்றிராத்திரி நித்திரை செய்யும் சமயத்தில் ஒருவன் வந்து என் கையைப் பிடித்தான்; நான் அவன் ஆரோ அயலூரான் என்று ஐயமுற்றுப் பிடித்த கையை விடென்பதற்கு விடாயென்றேன்; அவன் என்னைத் தணியச்செய்து அதற்கு உத்தரமாக நீ விடாய் கொண்டு இருப்பதனல் அது தணியக் கஞ்சிகுடி என்பது போலக் கஞ்சிகுடி என்றான்; என்றவுடன் காஞ்சிபதியில் வசிக்கும் ஏகாம்பரநாதனென்று நான் தெளிந்து, 'இப்பொழுது என்னைச் சேர்ந்து சுகித்துப்போ' என்பது குறிப்பாகத் தோன்றும்படி களித் தின்றுபோ என்றேன்; அது கேட்டு அவன்தான் கஞ்சிகுடி என்றதற்குப் பரிகாசமாகத் தன்னை நான் களித்தின்று போவென்று சொன்னேன் என்றோ, அல்லது மற்றியாது காரணத்தினலோ உடனே மாயமாய் மறைந்து போய்விட்டான்; இதென்ன ஆச்சரியம்!'* என்பதாம்.

மேலும், ஒருவர், *'கத்திக்கும் பாலுக்கும் சிலேஷித்துப் பாட வேண்டும்,'* என்ன, *'இந்தக் கேள்விக்கும் ஒரு பாடல் பாட வேண்டுமா?'* என்று வாய்மொழியாகச் சொன்ன உத்தரம்:

" காய்த்துத் தோய்த்துக் கடை."

[இ-ள்.] *'கத்தியை உலையில் காய்ச்சித் துவையல் செய்து கடைச்சற்பிடி; பாலை அடுப்பில் காய்ச்சிப் பிரை குத்தித்தோய்த்து மத்தினல் கடை'* என்பதாம்.

ஒருவர், 'என்னை இடுக்கடி, பாயைச் சுருட்டடி, ஏகடி அம்பலத்தே,' என்பதைக் கட்டளைக் கலித்துறையாகப் பாட வேண்டும்,' எனப் பாடிய செய்யுள் :

" தடக்கட லிற்பள்ளி கொள்வோம் ! அதனைநற் சங்கரனார்
அடற்புலிக் குட்டிக் களித்தன ராம்! அது கேட்டுநெஞ்சில்
நடுக்கம்வந் துற்றது; கைகா லெழா; நளி னத்தி என்னை
இடுக்கடி! பாயைச் சுருட்டடி! ஏகடி அம்பலத்தே."

சங்கரனார் வியாக்கிரபாதரின் மகனை உபமன்யுவிற்குப் பாற் கடலை அருந்தத் திருவருள் புரிந்தார் என்பதுவரலாறு. இதுதிருமால் இலக்குமிக்குக் கட்டளை இட்டதாகப் பாடப்பட்ட செய்யுள்.

ஒருவர், ' கரி என்று எடுத்து உமி என்று முடிக்க வேண்டும்,' எனப் பாடிய செய்யுள் :

* " கரிக்காய் பொரித்தாள்;கன் னிக்காயைத் தீய்த்தாள்;
பரிக்காயைப் பச்சடியாய்ப் பண்ணுள்;—உருக்கமுள்ள
அப்பைக்காய் நெய்துவட்ட லாக்கினுள் அத்தைமகள்
உப்புக்காண் சிச்சி! உமி."

ஒருவர், ' கொட்டைப்பாக்கு என்றெடுத்து களிப்பாக்கு என்று முடிக்க வேண்டும்,' எனப் பாடிய செய்யுள் :

" கொட்டைப் †பாக் கும்மொருகண் கூடையைப்பாக் கும்மடியில்
பிட்டைப்பாக் கும்பாகம் பெண்பாக்கும்;—முட்டநெஞ்சே!
ஆரணனும் நாரணனும் ஆதிமறை யும்தேடும்
காரணனைக் கண்டுகளிப் பாக்கு."

ஒருவர், 'சிட்டுக் குருவிக்கும் சிவனுக்கும் சிலேஷித்துப் பாட வேண்டும்,' என்ன, ' இதற்கும் ஒரு பாடலா?' என்று வாய் மொழியாகச் சொன்ன உத்தரம் :

" பிறப்பிறப்பிலே."

[இ-ள்.] 'சிட்டுக் குருவிக்குப் பிறப்பு இறப்பிலே' என்றும், 'சிவனுக்குப் பிறப்பு இறப்பு இல்லை' என்றுமாம்.

இவ்வாறு அவர்கள் கொடுத்த சமிசைகளுக்கெல்லாம் காளமேகப்புலவர் யமகண்டத்தின் உறிமேல் இருந்தபடி அகி லாண்டநாயகி அநுக்கிரகத்தால் பெரும்பாலும் பாடல்களாகவும் சிறுபான்மை வாய்மொழியாகவும் உத்தரம் சொன்னதே அன்றிச் சிறிதாவது தவறியதென்று நினைக்கவும், அது பற்றி அவர்கள் உபத்திரவப்படுத்த எத்தனிக்கவும் இடம் கொடாமல் சாதித்துப்

* கரிக்காய்-அத்திக்காய், கன்னிக்காய்-வாழைக்காய், பரிக்காய்-மாங்காய், பைக்காய்-கத்தரிக்காய்.

† பார்க்கும் என்பது பார்க்கும் என மருவியது.

பின்பு உறியை விட்டிறங்கினர். அவ்வதிசயத்தைப் பிரத்தியட்சமாகக் கண்டும், திருமலைராயனுவது அதிமதுரகவியாவது அறுபத்து நாலு தண்டிகைப் புலவர்களாவது, 'இவர் சாரதா விக்கிரமாக அவதரித்த மகாத்துமா' என்று நினையாமலும், சன்மானம் பண்ணுமலும், பொருமையை மேற்கொண்டு அவரை உபேட்சித்தனர். அதனல், புலவர் சிரோமணியாகிய காளமேகக் கவிக்கு மனம் எரிந்து சகிக்கக்கூடாமல் மண்மாரி பொழிந்து திருமலைராயன் பட்டணம் அழியும்படி வசை பாடிய செய்யுள் :

" கோளர் இருக்குமூர் கோள்கரவு கற்றவூர்
காளைகளாய் நின்று கதறுமூர்—நாளையே
விண்மாரி யற்று வெளுத்து மிகக்கறுத்து
மண்மாரி பெய்கவிந்த வான்."

" செய்யாத செய்த திருமலைரா யன்வரையில்
அய்யா அரனே ! அரைநொடியில்—வெய்யதழற்
கண்மாரி யான்மதனைக் கட்டழித்தாற் போற்றியோர்
மண்மாரி யாலழிய வாட்டு."

பின்பு, புலவர்பெருமானுனவர் 'மதியாதார் வாசலை மிதியாதிருப்பது கோடி,' என்பதை நினைத்து, 'இனித் திருமலைராயன் பட்டணத்தைத் திரும்பியும் பார்க்கலாகாது!' என்ற வைராக்கியத்தினல், முத்து வாங்கி வரும்படி மோகனுங்கி சொன்ன சொல்லையும் பொருள் செய்யாமல், அந்தக் கணமே அவ்விடத்தினின்று நீங்கி முன் போலவே ஸ்தலயாத்திரை பண்ணிக்கொண்டு போகையில், கும்பகோணத்தில் சமாராதனையில் சாப்பிடும் போது, தனக்கெதிரில் இருந்துண்ணும் சோழியப் பிராமணன் ஒருவன் குடுமி அவிழ்ந்து இலையில் விழுந்தது ; அவன் அதை எடுத்து உதறினன் ; அப்போது எச்சிற்சாதம் காளமேகப்புலவர் இலையில் விழ, அது கண்டு வெகுண்டு பாடிய செய்யுள் :

" சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா ! சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா ! புலையா !—திருக்குடந்தைக்
கோட்டானே ! நாயே ! குரங்கே ! உனையொருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய் !"

நாகைப்பட்டினம் காத்தான் வருணகுலாதித்தன் சத்திரத்தில் காளமேகப்புலவர் போஜனம் செய்து போம்படி பசியுடன் வெகு நாழிகை பரியந்தம் காத்திருந்து சாப்பிட்ட போது பாடிய நிந்தையும், காத்தான் வேண்டுகோளுக்கிரங்கி அதையே துதியாகப் பாடியதும் :

" கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்றன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும் ;—குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை யன்னம்
இலையிலிட வெள்ளி எழும்."

நிந்தையாக

[இ-ள்.] 'சத்திக்கின்ற கடல் சூழ்ந்த நாகைப்பட்டினத்திலிருக்கும் காத்தான் வருணகுலாதித்தன் சத்திரத்தில் உண்ண வருகிறவர்களுக்குச் சூரியாஸ்தமன காலத்தில் (பொழுது போனபோது) சமைக்க அரிசி வந்து சேரும்; அதைக் குற்றிச் சுத்தி செய்து சமையல் செய்யுமுன் சனங்கள் சத்தம் அடங்கி உறங்கும் (நடுராத்திரியாகும்); அப்படிச் சமைத்த சோற்றில் ஓர் அகப்பைச் சாதம் கொண்டு வந்து உண்போர் இலையில் பரிமாறுவதற்கு முன்னம் சுக்கிரோதயமாம் (பொழுது விடியும்)' என்றபடி.

துதியாக

'க்ஷாமகாலத்தில் அரிசி வந்துகொண்டே இருக்கும்; அதனைச் சுத்தி செய்து சமைக்கச் சமைக்க ஊரிலுள்ளார் உண்டு திருத்தி அடைவார்கள்; சமைத்து இலையிலிடப்படும் ஓர் அகப்பை அன்னத்தைக் கண்டமாத்திரத்தில் சுக்கிரனும் இதன் வெண்மைக்கு முன் தனது பிரகாசம் எவ்வளவென்று வெட்கி ஓடிப் போவான்.'

ஒரு நாள் ஒருத்தியின் பிள்ளை காளமேகப்புலவரைக் கண்டு பயந்து அழுதுகொண்டு தாய்க்குச் சொல்ல, அவள் 'அட கொடுப்பான்' என்று வைததற்குப் பொருது அவர் பாடிய வசையால் அப்பிள்ளை இறந்து போக, அவள் புருஷன் வேண்டு கோளுக்கிரங்கி மறுபடி அந்தப்பிள்ளை பிழைக்கும்படி பாடிய செய்யுள்:

" என்னைக் கொடுத்தால் இரக்கமுனக் குண்டாமோ
வன்னக் கமலமுக வல்லியே!— துன்னுமதக்
காட்டானைக் கோட்டுமுலைக் காரிகையே! நீபயந்த
கோட்டானைத் தானே கொடு."

ஒரு கால் ஸ்ரீரங்கத்து வைணவர், 'பெருமாள் உலகத்தை உண்டபோது சிவன் எங்கே இருந்தார்?' என்றதற்குச் சொல்லிய செய்யுள்:

" அருந்தினு னண்டமெலா மன்றுமா லீசன்
இருந்தபடி யேதென் றியம்பப்—பொருந்திப்
பருங்கவளம் யானைகொளப் பாகனதன் மீதே
இருந்தபடி ஈசனிருந் தான்."

மேற்படி வைணவர் விநாயகருக்கு நாமமிட்டு, 'பரம் விஷ்ணுவே என்று இப்பிள்ளையார் நாமம் போட்டுக்கொண்டார்,' என்ற போது பாடிய செய்யுள்:

" தந்தை பிறந்திறவாத் தன்மையினுல் தன்மாமன்
வந்து பிறந்திறக்கும் வண்மையினுல்—முந்தொருநாள்
வீணிக்கு வேளை எரித்தான் மகன்மாமன்
காணிக்கு வந்திருந்தான் காண்."

ஓரூரிலே திருக்கலியாண மஹோத்ஸவம் கண்டருளி வதூவரர்களுக்கு மங்களம் உண்டாகும்படி சேஷையிட்ட போது, 'சிவபெருமானும் விஷ்ணுபகவானும் காக்க,' என்று ஆசீர்வதித்த சிலேடை வெண்பா :

" சாரங்க பாணியரும் சக்கரத்தர் கஞ்சனைமுன்
ஓரங்கங் கொய்த உகிர்வாளர்—பாரெங்கும்
ஏத்திடுமை யாக ரினிதா யிவரும்மைக்
காத்திடுவ ரெப்போதும் காண்."

சிவபரமாய்

[இ-ள்.] மானேந்திய கரத்தை உடையவரும் பஞ்சாக்ஷர சொரூபியும், முன்னெரு காலத்தில் பிரமன் சிரசு ஒன்றைக் கிள்ளி எறிந்த போது தமது நகங்களையே வாளாகக் கொண்டவரும், உலகமெல்லாம் போற்றும் உமாதேவியை ஆகத்தில் உடையவரும் ஆகிய சிவபெருமானும்;

விஷ்ணுபரமாய்

சாரங்கம் என்னும் வில்லைக் கையில் பிடித்திருப்பவரும், அழகிய சக்கராயுதம் தரித்தவரும், கம்ஸனுடைய அங்கத்தை வெட்டிய கூரிய வாளை உடையவரும், உலகெலாம் போற்றும் நீல மேனியரும் ஆகிய விட்டுணுமூர்த்தியும் உங்களை எப்போதும், அருள் மிகுந்து காத்திடுவர்.

பின்பு, திருவாரூரில் வந்து சேர்ந்து சிலநாள் வசித்திருக்கையில், ஒரு நாள் தியாகரைத் தரிசிக்கும்படி கோயிலுக்குப் போன வேளையிலே வித்துவான் சுவாமிமேல் சிலேஷையாக ஒரு பாடல் பாட வேண்டும் என்று நினைத்து,

* " நாணென்ருல் நஞ்சிருக்கும் நற்சாபங் †கற்சாபம்."

என முதலடி மாத்திரம் தொடங்கி, அப்புறம் அமைக்க அவருக்குக் கருத்துத் தோன்றுமையால், அதை அந்தக் கோயில் மதிற்புறத்தில் எழுதிப் போய் மறுநாள் வந்து பார்க்குமளவில், அதன்கீழ்,

‡" பாணந்தான் மண்தின்ற பாணமே ;—தானுவே !
சீராரூர் மேவும் சிவனே நீயெப்படியோ
நேரார் புரமெரித்த நேர் !"

என்று மற்ற மூன்றடியும் முடித்தெழுதி இருக்கக் கண்டு விசாரித்து,

* நாண் நஞ்சிருக்கும் என்றது-விஷம் பொருந்திய பாம்பு என்றும்,

†கற்சாபம்-மேரு வில்லென்றும்,

‡மண் தின்ற பாணம்-பூமியையுண்ட விஷ்ணுவென்றுமாம்.

காளமேகப் புலவரால் அது முற்றுப்பெற்றதென்று கேள்விப்பட்டு, அவர் கவி பாடும் திறத்தைக் குறித்து அவ்வித்துவான் அதிசயித்து அதிக சந்தோஷப்பட்டார்.

இப்பாடலின் பொருள் : "அக்கினி ஸ்தம்பமாய் விளங்கி யிருப்பவனே! சிறப்புப் பொருந்திய திருவாரூரில் எழுந்தருளி இருக்கின்ற சிவபெருமானே! திரிபுரதகனம் செய்த காலத்தில் உன் கையிலேந்திய வில் நாரியோ, நைந்திருந்தது; அவ்வில்லோ, வளைக்கப்படாத கல்லாயிருந்தது; அம்போ, மண் தின்னப் பட்டிருந்தது; இப்படி உனக்குக் கிடைத்த யுத்தாயுதம் எல்லாம் ஒன்றுக்கும் உதவாமல் கேவலம் அவலமானவை களாயிருக்க, சத்துருக்களுடைய நகரத்தை நீ எரித்தாய் என்பது எப்படியோ? யோசிக்குமிடத்தில் சிரிப்பாய் இருக்கின்றது!" என்பதாம்.

அதன் பின்பு வெகுநாள் கழித்துக் காளமேகப்புலவர் பிராண வியோகமாய் அவர் சரீரம் மயானத்தில் காஷ்டத்தின்மேல் வைக்கப்பட்டு எரிந்துகொண்டிருக்கையில், மேற்படி வித்துவான் அச் செய்தி கேட்டு அம்மயானத்தில் சென்று பிரேதாக்கினி கொழுந்து விட்டெழுந்து ஆகாயமளாவி எரிவது கண்டு மனம் கலங்கி,

"ஆசுகவி மாரி யகில உலகமெலாம்
வீசு கவிகாள மேகமே!—பூசுரா!
விண்கொண்ட செந்தழலாய் வேகின்ற தேயையோ
மண்தின்ற பாணமென்ற வாய்!"

என ஒரு வெண்பாப் பாடி வியசனப்பட்டார். இந்தப் பாடலும், 'நாணென்னுல் நஞ்சிருக்கு நற்சாபம் கற்சாபம்' என்கிறதும் இரட்டைப் புலவர்களால் பாடப்பட்டன என்று சிலர் சொல்வார்கள். அப்படிச் சொல்வது யுத்திக்கும் அனுபவத்திற்கும் விரோதமாய் இருக்கின்றது.

இன்னும் காளமேகப்புலவர் பாடிய பாடல்கள் பல உண்டு. அவைகளுள் சில இடக்கர்களாயும் கொடிய வசை முதலியவை களாயும் இருப்பது பற்றி இங்கு விடப்பட்டன. அவைகளைத் தனிப்பாடல் திரட்டில் விரிவாகக் காணலாம்.





[தன்னை வளர்த்த பண்ணைக் காரன், தனக்கு ஆசிரியர், தன்னைப் பெற்ற தந்தை ஆகிய மூவரிடத்தும் நன்றி மறவாத தன்மையில் தன் பெயரை அமைத்துக் கொண்ட வேளாளர் குலமணியின் வரலாறு இங்கு உருக்கமாக எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. தலைவன் திரண்ட செல்வம் பெறும்பொருட்டுத் தலையை அரிந்து கொடுத்த ஏகன் சாம்பான் தியாகத்திறன் கல் மனத்தையும் கரையச் செய்யும். தமிழ்ப் புலமை மிக்க ஏகம்பவாணன் முடி மன்னர் மூவேந்தரையும் தன் அடி பணியச் செய்த விந்தையும், அவன் மனைவி அம்மன்னர்களைத் தலை குனியுமாறு செய்த நிகழ்ச்சியும், அவ் விருவரின் அறிவையும் ஆற்றலையும் புலப்படுத்துவனவாகும்.

— பதிப்பாசிரியர்]

13

ஏகம்பவாணன் சரித்திரம்

நிலவளம் நீர்வளம் பொருந்திய தென்தேசத்தில் வசித்திருந்த வேளாள குலதிலகனுகிய வாணன் என்பவன் ஆயிரம் ஏர் வைத்து விவசாயம் செய்து வெகு திரவியம் சம்பாதித்துச் சீமானுய் வாழ்ந்திருக்கும் நாளில் அந்தப் பிரபுவுக்கு ஓர் ஆண் பிள்ளை பிறந்தது. அக்குழந்தைக்கு, சாதகம் கணிக்க வேண்டுமென்று ஜோதிஷர்களுக்குச் சொல்ல, அவர்கள் தற்கால கிருகநிலையைப் பார்க்குமளவில், ஐந்தில் சூரியனிருக்க அவனைச் சனி பார்ப்பதனுல் பிதிருகண்டமும், நாலில் சந்திரனிருக்க அவனைச் சுக்கிரன் பார்ப்பதனுல் மாதிரு கண்டமுமாய் இருப்பதை அறிந்து, அவர்கள், 'இதை எப்படி முதலியாருக்கு அறிவிப்பது?' என்று வியசனமுற்றிருந்து, பிறகு சாஸ்திரத்துக்குத் தோஷம் சம்பவியாமலிருக்கும்பொருட்டு அதனை ஒருவாறு குறிப்பித்தார்கள். விவேக கோசரமுடைய அந்த முதலியார், 'உள்ளதை நீங்கள் மறைப்பா

னேன் ? எதுவும் ஊழின்படி நடக்கிறது, மாதிரு பிதிருகளின் நிரியாண காலத்தை மாத்திரம் திட்டமாய் அறிவிக்க வேண்டும்,' என்ன, அவர்கள் உள்ள வண்ணம் தெரிவித்த சமயத்தில், அவர், 'உலகத்தில் ஜாதகம் விதித்தபடியே நடக்கின்றதா ? இதை நம்புவது எப்படி ?' என்ன, சோதிஷர்கள், 'வாத துர்ப்பலமே ஒழியச் சமய துர்ப்பலமில்லை என்பார்களே, அது போலச் சோதிஷர்கள் செவ்வையாய் ஆராயாமையால் ஒரு வேளை தவறிப் போனலும் போகலாம் ; சாஸ்திரம் தவறமாட்டாது. இதற்குத் திருஷ்டாந்தம் ஒன்றுண்டு,' என்ன, அவர், 'அஃதெப்படி ?' என, சோதிஷர்கள் சொல்லத் தொடங்கினர்கள் :

'பூர்வம் ஒரு வேந்தனுடைய சமஸ்தானத்தில் சோதிஷத்தில் பிரபல பாண்டித்தியமுடையவர் ஒருவரிருந்தார். அவருக்குச் சமானமாகப் பிரகஸ்பதியைத்தான் சொல்ல வேண்டும். சிருஷ்டி காலம் தொடங்கிக் கிழக்கு மேற்காக உதயமாகி அஸ்தமிக்கும் சந்திரசூரியர் தெற்கு வடக்காக மாறி உதிக்கத் தொடங்கினலும் அவரெழுதும் ஜாதகம் ஒரு பொழுதும் மாறுபடுகிறதேயில்லை. அப்படிப்பட்டவருக்கு அருமையாக ஒரு பெண் குழந்தை பிறந்தது; அதற்கு அவர் சாதகம் கணித்துப் பலாபலத்தைப் பார்க்கும் பொழுது, விவாகமாகி ருதுசாந்தி செய்யப்பட்ட தக்ஷணமே அந்தப் பெண் வைதவியத்தை அடையுமென்றிருந்ததனல், அச் சோதிஷர், 'நமது குழந்தைக்கு இந்தக் கதியானல் நாமெப்படிச் சகித்திருப்பது!' என்று துக்கசாகரத்தில் மூழ்கி, பிறகு அப்பெண்ணை நாளொரு மேனியும் பொழுதொரு வடிவுமாக வளர்த்துக்கொண்டிருக்கையில், மேற்படி செய்தியெங்கும் பிரசித்தமானதால் அவள் பிரவிடையாகுமளவும் அவளை விவாகம் செய்வார் இல்லாதது கண்டு சோதிஷர், 'ஐயோ ! பிராமண சாதியில் பெண்களுக்குச் சிறு வயதிலேதானே விவாகம் நடக்கிறது சம்பிரதாயமாயிருக்க, நம்முடைய பெண் பருவமுடையவளாகியும் பாணிக்கிரகணமாகாமலிருப்பது நாம் ஜன்மாந்தரத்தில் செய்த தவக் குறையோ ? செல வெல்லாம் நாமே இறுத்துக் கன்னிகாதானமாகக் கொடுத்தாலும் கொள்ளமாட்டோம் என்கிறார்களே ! பெண்ணைப் பெற்றுக் கலியாணம் செய்விக்காமல் சும்மா வைத்திருப்பது தர்மமல்லவே ! என்ன செய்யலாம் ?' என்று அல்லும் பகலும் இதுவே சிந்தையாய் இருந்தார். ஒரு தினம் உத்தர தேசத்துப் பிராமணன் ஒருவன் இவர் கிருகத்திற்குப் 'பகவதி பிக்ஷாந் தேகி,' என்று உபதானத்திற்கு வர, இவர் அவனைப் பார்த்து, 'இங்கே ஒரு பெண்ணிருக்கிறுள் ; அவளைப் பதினுயிரம் வராகன் ஸ்திதி வைத்து, பதினுயிரம் வராகன் விலைமதிக்கத்தக்க பூஷணமிட்டு, ஒரு பெரிய வீடும் கட்டிக் கொடுத்து உனக்கு விவாகம் செய்விக்கிறேன், சம்மதிதானு ?' என்ன, அவனுக்குச் செய்தி தெரியாததனலும், எளியவனுதலாலும், 'பணமென்றுல் பிணமும் வாயைத் திறக்கும்,' என்ற பழமொழிப் படி, அவன் பணத்திற்கு ஆசைப்பட்டு உடன்பட்டான். தம்

பெண்ணை அவனுக்குத் தத்தம் பண்ணிச் சம்பிரமமாக ஏழு நாள் வரைக்கும் கலியாணச்சடங்கு செய்வித்து எட்டாம் நாள் ருது சாந்தி நடப்பித்தார்.

அந்தப் பிராமணன் சயனகிருகத்தில் அன்றிரவு அப் பெண்ணுடன் கூடிச் சுகம் அனுபவித்தான். பின்பு உடனே அவனுக்கு வயிற்றைக் கலக்கினமையால். அவன், 'மலோ பாதைக்குப் போய் வருகிறேன்,' என்று தன் மனைவியிடம் சொல்ல, அவள் மேற்படி சங்கதி தெரிந்தவளாகையால் தூரத்தில் போகவிடலாகாதென்று தங்கள் கொல்லையில்தானே சீக்கிரமாய்ப் போய்வரச் சொன்னாள். அவன் அப்படியே போய் மலவிசர்ச்சனம் பண்ணி அக்கொல்லைக்கு அப்புறத்திலுள்ள மடுவில் போய்ச் சௌசம் முடித்துக்கொண்டு திரும்புகையில், அதிலிருந்த ஒரு முதலை அவன் காலைக் கவ்விப் பிடித்தது. அப்பொழுது பிராமணன், 'நீ என்னை விட்டுவிடு,' என்ன, முதலை, 'எனக்குப் பசியாயிருப்பதனால் விடமாட்டேன்,' என்ன, அவன், 'அப்படியானால் நல்லதுதான், ஆயினும் புதிதாக மணம் செய்யப்பட்ட என் பெண்சாதிக்கு ஒரு சொல் சொல்ல வேண்டி இருக்கிறது, அதைக் குறித்து நான் போய் ஐந்து நிமிஷத்திற்குள்ளே வருகிறேன்,' என்றான். அது, 'நீ போனால் மறுபடி வரமாட்டாய்,' என, வேதியன், 'நீ என்ன பிரமாணிக்கம் பண்ணச் சொன்னாலும் பண்ணுகிறேன்,' என, முதலையானது, 'நீ சொன்ன சொல் தவறினால், 'தீபம் அணைந்து போன சமயத்தில் போஜனம் செய்தவன் போகின்ற கதியில் போகிறேன்,' என்று பிரமாணிக்கம் பண்ணினால் விடுவேன்,' என, இவன் அந்தப்படிச் சத்தியம் செய்து கொடுத்துத் தன் மனைவியிடத்திற்கு வந்து அச் செய்தியைச் சொல்ல, அவள் பலவிதத்திலும் தடுத்தும் கேட்காமல் திரும்பிவந்து முதலையை அழைத்து, 'என்னை விழுங்கி உன் பசியைத் தீர்த்துக்கொள்,' என்றான். அது அதிக ஆசையுடனே அவனை விழுங்குகிற தருணத்தில் அவன் பெண்சாதி விளக்கை ஏற்றி ஒரு பாத்திரத்தில் மறைத்துப் புருஷன் பின்னே தெரியாமல் கொண்டு போய், முதலைக்கு வெளிச்சம் தெரியும்படி காட்டி அந்தக் கணமே பொட்டென்றழைத்துவிட்டாள். அது கண்டு முதலை, 'ஹரிஹரி! இதென்ன பாவம்!' என்று பிராமணன் காலை விட்டுவிட்டது. இவன், 'நீ என்னை ஏன் விழுங்காமல் விட்டுவிட்டாய்?' என, அது, 'சத்திய மென்பது உனக்கு மாத்திரந்தானா? எனக்கில்லையா? நான் இனி உன்னைத் தீண்ட மாட்டேன். சுகமாய்ப் போ,' என்றது. மறுபடி இவன் என்ன சொல்லியும் கேளாமல் அதுவும் இவனும் வாதாடிக் கொண்டு இருக்கையில், பிராமணத்தி கணவன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வீட்டுக்குப் போய்விட்டாள்.

பொழுது விடிவதற்கு முன்னே பந்துக்கள், 'சோதிஷர் மாப் பிள்ளை இறந்து போய் இருப்பான்; பிரேதத்தை மயானத்திற்குக் கொண்டு போய்ச் சேர்ப்பிக்க வேண்டும்,' என்று அவருடைய வீட்டுத் தெருவாசலில் வந்து கூட்டங்கூடி இருந்தார்கள்.

சோதிஷரோ பெண்ணையும் பிள்ளையையும் ராத்திரி சயன கிருகத்தில் விடுத்த மாத்திரத்தில் சுடுகாட்டில் காஷ்டம் அடுக்குவித்து, பிணத்திற்கு உடுக்கக் கோடிவஸ்திரம் பாடை முதலானவைகளும் சாக்கிரதை செய்வித்திருந்து, காலையில் எழுந்து கதவைத் தட்டி மகளைக் கூவி, 'அம்மா! உன் நாயகனுடைய க்ஷேமம் என்ன?' என, அவள் கதவைத் திறந்தாள். மருமகன் சிறிதும் வாட்டமின்றி உயிரோடிருக்கப் பார்த்து, நடந்த செய்தியை விசாரித்தறிந்து ஆச்சரியப்பட்டு, 'ஓ! ஓ! சாஸ்திரம் பொய்த்துப் போய்விட்டது; ஆகையால், இனி சோதிஷ சாஸ்திரத்தை நம்புதற்கோ இடமில்லை; என் மாப்பிள்ளைக்கு அடுக்கிய காஷ்டத்தில் இப்புஸ்தகங்களை எல்லாம் வைத்து நெருப்பிட்டுக் கொளுத்திப் போடுகிறேன்!' என்று நிச்சயித்து, அவைகளை எல்லாம் மேற்படி பாடைமேல் சுடலைக்கு எடுப்பித்துக்கொண்டு போய்க் கட்டைமேல் வைத்துக் கொளுத்தப் போகிற சமயத்தில் பிரகஸ்பதி பகவான் ஒரு பிராமணப் பிள்ளையாக வடிவு கொண்டு எதிரே வந்து, 'கட்டைமேல் வைக்கப்பட்டிருக்கிறதே இஃதென்ன?' என்று கேட்க, சாஸ்திரி, 'சோதிஷ புஸ்தகம்' என்று சொல்ல, 'இதைக் கொளுத்தவேண்டிய நிமித்தம் என்ன?' என, 'என் புத்திரியின் சாதகம் பொய்த்துப் போனதால் இதில் பயனில்லை என்று கொளுத்த யத்தனித்தேன்,' என, பிரகஸ்பதி, 'சாஸ்திரம் எக்காலத்தும் பொய்யாது, அஃது இருக்கட்டும், இப்பொழுது பிரகஸ்பதி எங்கிருக்கிறார்? சொல்லும் பார்ப்போம்,' என, சோதிஷர் தற்கால லக்கினத்தைச் சோதித்துப் பார்க்குமிடத்தில் மற்றெங்குமில்லை என்றும், தம்முடனே பேசுகிறவரே அப்பிரகஸ்பதி என்றும் அறிந்து ஐயமுற்றிருக்க, பிராமண வடிவாகி வந்த பிரகஸ்பதி பின்னும் அவரை நோக்கி,' உமது புத்திரி உற்பத்தியான காலத்தில் பிரகஸ்பதி இருந்த சமயமென்ன?' என அவர், 'கண்ணை மூடிக் கொண்டிருந்தார்' என, தேவகுருவானவர், 'கண்ணை மூடினது மெய்யே ஆயினும், சிசு உற்பத்தி அப்பொழுதன்று, மூடித் திறந்த மாத்திரத்தில் ஆகையால், உமது குமாரத்திக்கு வைதவியம் வருவதற்குக் காரணமில்லை,' என்று தெளிய உரைத்துத் தமது நிஜ ஸ்வரூபத்தையும் காட்டிப் பின்பு அந்தர்த்தானமாய் விட்டார்,' என்று சொன்னார்கள். அது கேட்டு வாண முதலியார், 'அப்படியா! அன்று எழுதினவன் இனி அழித்து எழுதப் போகிறதில்லையே! வருகிறது வரட்டும்,' என்று நினைத்திருந்தார்.

சில நாளில் அவர்கள் தெரிவித்தபடியே சாதகனுடைய தாய் காலஞ்சென்று போனாள். அதை அறிந்தவுடனே வாண முதலியார் தமக்கு மரணம் சமீபத்திருப்பதையும், பிற்காலம் குழந்தைக்கு ஆதரவில்லாததையும் நிச்சயித்துணர்ந்து, தம்மிடத்தில் நெடு நாளாய்ப் பண்ணையாளாகவிருந்து, அகமும் புறமும் ஒத்து நடந்த உண்மையுள்ள உத்தமனுகிய ஏகன் சம்பானிடத்தில் அந்தக் குழந்தையையும் சொத்துக்களையும் ஒப்புவித்து, அவன் முகத்தைப் பார்த்து, 'கொல்லையில் பூமிக்குள் அளவிறந்த திரவியம் புதைத்து

வைத்திருக்கிறேன், அதையும் நீயே கைக்கொண்டு இப்பிள்ளை யையும் உன் பிள்ளையாக வளர்த்துக்கொள்,' என்று சொல்லி விட்டுத் தேகவியோகமானார்.

அப்பண்ணைக்காரன் தனது ஆண்டை சொற்படியே அவருக்குச் செய்ய வேண்டிய உற்றுரிமை முதலிய கிரியைகளை எல்லாம் அக் குழந்தையைக்கொண்டு குறைவில்லாமல் நடப்பித்து, வேளாளர் குலத்தில் நல்ல சம்பிரதாயஸ்தராகிய ஒருவரைக்கொண்டு அப்பிள்ளைக்கு வேண்டிய உணவு முதலியவைகளை ஊட்டி வளர்ப் பித்து, ஐந்து வயதில் பிரபல வித்துவானுகிய கம்பரிடத்தில் விடுத்துக் கல்வி பயிற்றுவித்து, அவன் பூரண பாண்டித்தியமுடைய வனுன காலத்தில், அப்பிள்ளையின் மரபில் தகுதியான பெண்ணைத் தேடி விவாகமும் செய்வித்து, தன் எசமானனுடைய சொத்துக் களில் அரைக்காசளவும் தான் இச்சியாமல் முழுமையும் எசமானன் பிள்ளைக்கு ஒப்புவித்துப் புதையலிருக்கும் இடத்தையும் காண் பித்து, 'இதையும் நீயே அனுபவித்துக் கொள்; எனக்கு ஒன்றும் வேண்டுவதில்லை,' என்முன்.

அப்பிள்ளை பண்ணையாள் காட்டிய இடத்திலுள்ள நிக்ஷேப தனத்தை வெட்டி எடுக்கப் போன சமயத்தில் அதைப் பூதம் காத் திருந்ததனுல், வெட்டினவன் மூக்கிலும் வாயிலும் உதிரம் பெருக, அவன் கீழே விழுந்து மூர்ச்சை அடைந்தான். மேலும் கருங்குளவி செங்குளவிகள் புறப்பட்டு அருகிலே ஒருவரையும் அணுக வொட்டாமல் துரத்தத் தலைப்பட்டன. அதனுல், 'இதற்கு என்ன செய்வது?' என்று மனம் உருகி இருக்கையில், அன்று இராத்திரி பிள்ளையின் சொப்பனத்தில் அப்பூதம் வந்து, 'நான் அனேக கால மாகக் கண்ணே இமை காப்பது போல இடைவிடாது பாதுகாத் திருந்த ஏழு கோடி திரவியத்தை எளிதாக நீ கைப்பற்றிக்கொள்வ தெப்படி? எனக்குத் திருப்தி உண்டாகத் தயை, உண்மை, பக்தி முதலிய நற்குணங்களையுடைய ஒரு புருஷனைப் பலி கொடுத்தால் இந்தத் திரவியத்தைக் கொடுப்பதுமன்றி, நானும் உனக்குக் கை வசமாகி உன் தொண்டு போல எப்பொழுதும் நீ காலிலிட்ட வேலையைக் கையால் செய்து வருவேன்,' என்றது. அவன் விழித்துக் கொண்டு ஏகன் சாம்பானை அழைத்துத் தான் கண்ட கனவை அவனுக்கு அறிவிக்க, சாம்பான், 'அந்தப் பூதத்திற்கு ஒரு நரபலி கொடுத்தால் ஏழு கோடி திரவியம் அகப்படுமென்பதற்குச் சந்தேக மில்லை; அதைக் குறித்து அவசியம் முயற்சி செய்யத்தான் வேண்டும்,' என, அது கேட்டுப் பிள்ளையாண்டான், 'யாரைப் பலி கொடுக்கின்றது?' என்று யோசிக்குமிடத்தில் பண்ணையாள், 'யோசனை என்ன? தடையில்லாமல் என்னைப் பலி கொடுக்கிறது தானே!' என்முன். அப்பிள்ளை, 'கிருஷ்ண! கிருஷ்ண! பெற்ற தகப்பனைப்பார்க்கிலும் என்னிடத்தில் அதிக பிரீதியுள்ளவனுகி என்னை வளர்த்து, எனக்குச் சகல யோக்கியதையும் உண்டாகும்படி மிகவும் பாடு பட்ட உன்னையா பலி கொடுக்கிறது? இது நன்முய்

இருக்கிறது! எனக்கு இப்பொழுது உள்ள திரவியமே போதும்; நானந்தச் சோலிக்கே போகிறதில்லை,' என்றான். ஏகன், 'இதென்ன! எத்தனை நாளிருந்தாலும் ஒரு நாள் இறக்கத்தானே வேண்டும்? எப்படிப்பட்டவர்களும் சாகாதிருக்க மாட்டார்களே? மண்ணிலே மூளைத்த பூண்டு மண்ணுக்கு இரையாமல்லவா? நானிருந்து யாரை ரக்ஷிக்கப் போகிறேன்? இறந்தேனுனுல் யசமானனுக்கு ஏழு கோடி நிதி கிடைக்கிறதே!' என்று நினைத்து, அன்று இராத்திரி ஒருவருக்கும் தெரியாமல் புதையலிருக்கிற இடத்திற்குப் போய்க் கழுத்தை அறுத்துக்கொண்டு பூதத்திற்குப் பலியானான்.

அந்தக் கணமே பூதம் வாண முதலியார் பிள்ளையின் சொப்பனத்தில் போய், ''உங்கள் பண்ணைக்காரன் எனக்கு இப்பொழுது பலியாய்விட்டான்; இனி நீ வந்து உங்கள் பிதா புதைத்து வைத்த ஏழு கோடி திரவியத்தையும் கைப்பற்றிக்கொள். நானும் உனக்குச் சொன்ன சொல் தவறுமல் இன்றுமுதல் தொண்டு செய்கிறேன்,' என்றது. அவன் விழித்தெழுந்திருந்து அவ்விரவில் திரவியம் புதைக்கப்பட்ட இடத்தில் போய், ஏகன் சாம்பான் கழுத்தறுபட்டுக் கிடக்கிற அலங்கோலத்தைக் கண்ணினுல் பார்த்து மனம் பதைக்க, அவனுக்காகக் கண்ணீர் விட்டு அழுது மெய் சோர்ந்து, பின்பு அவனைச் சிறப்பாக எடுத்துத் தகனம் பண்ணிச் சஞ்சயனம் அந்தியகர்மம் முதலானவைகளும் தன் கையினுலேயே செய்து முடித்து, அவன் செய்த நன்றியை மறவாது இருப்பதற்காக அவன் பெயரை முதலிலும், **கம்பர்** தனக்காசிரியர் ஆகையால் அவர் பெயரை இடையிலும், **வாணன்** தன்னைப் பெற்றவன் ஆதலால் அவன் பெயரைக் கடையிலும் சேர்த்து அம் மூன்றும் ஒருமிக்கத் தனக்கொரு பெயராக வழங்க வேண்டுமென்று 'ஏக **கம்ப** வாணன்,' எனத் தான் பெயரிட்டுக்கொண்டு, அந்தப் புதையலை வெட்டி எடுத்துத் தன் வீட்டில் சேர்ப்பித்துத் தன் தந்தையிலும் அதிக தனிகனையும், சகல ராஜாக்களும் மதிக்கத் தக்க மகாப்பிரபுவாயும் கீர்த்தி பெற்றிருக்கும் காலத்தில், சேர சோழ பாண்டியர் மூவரும் ஒரு தினம் ஏகம்பவாண முதலியாரைக் காண வேண்டுமென்று அவர் வீட்டுக்கு வந்து, 'முதலியார் எங்கே?' என்று உள்ளே ஆளனுப்பி விசாரிக்க, அவர் மனைவி, 'கழனிக்குப் போயிருக்கிறார்,' என்று உத்தரம் சொல்ல, இவர்கள் அது கேட்டு, 'முதலியார் முடி நடப் போயிருக்கிறாரோ?' என்று அவர் குலத் தொழிலைக் குறிப்பித்து ஏளனம் பண்ணினது கண்டு, அவர் மனைவிக்கு அது சகியாமையால், அவள், 'நமது முதலியார் முடி நடுவது மெய்தான்; ஆயினும், அவர் இந்தச் சொற்பமாகிய நாற்று முடியா நடுவார்? சேர சோழ பாண்டியர்களாகிய மூவேந்தருடைய முடிகளைப் பறித்தெடுத்து, அவர்கள் சேனைகளைக் கண்டதுண்டமாக்கி, யுத்தகளமாகிய கழனியில் அவற்றைத் தழை

* பின்பு அப்பெயர் ஏகம்பவாணன் என மருவிற்று.

எருவாக இட்டு, அது நிறையச் சிவந்த இரத்தமாகிய நீரைத் தேக்கி, தாம் ஏறும் பட்டவர்த்தன யானையாகிய பகட்டைவிடுத்து அதன் காலால் மிதிப்பித்துக் குழைசேறுக்கி, அச்சேற்றில் வரிசை யாக நட்டு, வெற்றியாகிய வேளாண்மை செய்து வருகிறார்,' என்ற கருத்துக்கேற்க,

" சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
ஆனை மிதித்த அடிச்சேற்றில்—மானபிரான்
மாவேந்தன் ஏகம்ப வாணன் பறித்துநட்டான்
மூவேந்தர் தங்கள் முடி."

என்றொரு பாடலை எழுதிப் போக்கினள். அப்பாடலை அவர்கள் படித்துப் பார்த்து, 'அடா! இவன் இப்படிப்பட்ட இரணசூர னென்று நாமறியாமல் போனோமே! நல்லதாகட்டும்!' என்று இறுமாப்புடனே போய்விட்டார்கள்.

அவர்கள் போன மாத்திரத்தில் முதலியார் வீட்டுக்கு வந்து மேற்படி செய்தியைக் கேள்விப்பட்டு, இவர்கள் கர்வத்தை அடக்க வேண்டுமென்று தம்மிடத்திலுள்ள பூதத்தை அனுப்பி, 'முன்னே சேரனைத் தூக்கி வா,' என்றார். அது சேரன் படுத்து நித்திரை பண்ணும் பொழுது கட்டிலோடே தூக்கி வந்து எதிரே விட்டது; அவனைச் சில நாள் வரையில் சிறைக்கூடத்தில் அடைத்து வைக்க, அவன், 'நம்முடைய வாய்க்கொழுப்பால் அல்லவா இப்படி வந்து விடிந்தது!' என்று மனஸ்தாபப்பட்டு, முதலியாருக்கு வருஷந் தோறும் இவ்வளவு திரவியம் பகுதி கட்டுகிறேனென்று ஒரு தொகை குறித்து உடன்படிக்கை செய்து, இதமாக அவரிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு தன் தேசத்தில் போய்ச் சேர்ந்தான். அவன் போன பிறகு சோழனிடத்திற்குப் பூதத்தை ஏவிப் பிடித்து வரச் செய்து, அவனையும் அவ்வாறு உடன்படிக்கை பண்ணச் சொல்லிச் சிறை நிவர்த்தியாக்கி அனுப்பிவிட்டு, கடைசியில் 'பாண்டியனைக் கொண்டு வா,' என்று பூதத்திற்கு உத்தரவு பண்ணினார். பாண்டியன் பேய்க்கு விரோதமாகிய வேப்பமாலை தரித்திருப்பவனுதலால், அவனிடத்தில் அது போகப் பயந்து பின்னிடுவதைக் கண்டு, கம்பர் வீட்டுக்குப் போய் இச்செய்தியை அவரிடத்தில் சொல்லி, 'இதெற்கென்ன உபாயம் செய்யலாம்?' என்ன, கம்பர், 'பிடி யானையைக்கொண்டு களிற்று யானையை வசப்படுத்துவது போல, ஸ்திரீகளைக்கொண்டு அவனை மயக்கி, அந்த வேப்பமாலையைக் கிரகித்து வரும்படி செய்தால், அப் பால் உமது எண்ணம் சித்திக்கும்,' என்ன, தமது வீட்டில் வேலை செய்கின்ற வெள்ளாட்டிகளில் நாலு பெயரை அழைத்து, 'நீங்கள் முதலியார் சொன்ன வண்ணம் செய்யுங்கள்,' என்று ஏவினார். ஏகம்பவாண முதலியார் அந்நால்வர்க்கும் விலையுயர்ந்த வஸ்திரம், ஆபரணம், புஷ்பம், பரிமளதிரவியம் முதலியவைகளைக் கொண்டு நன்றாக அலங்காரம் பண்ணுவித்து, 'நீங்கள் பாண்டிய

னிடத்தில் சென்று அவனுக்கு உங்கள் சாமர்த்தியத்தைக் காட்டி, நான் கொண்ட கருத்து முற்றும்படி எவ்விதத்திலாவது என் மூக்கை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும்,' என்று அனுப்பினர். அவர்கள் நாலு பெயரும் ரம்பை, மேனகை, ஊர்வசி, திலோத்தமை என்னும் நால்வரைப் போலப் பாண்டியன் சமுகத்திற்குப் போய், மயிலாடுவது போல நடமாடியும், குயில் கூவுவது போல இசை பாடியும் அவனைப் பிரமிக்கப் பண்ணினர்கள்.

மீனத் துவசனுகிய பாண்டியன், ஆனந்த பரவசமாய், அவர் களுக்கு முத்துமாலை மோகனமாலை முதலாகிய அநேக பூஷணங்கள் வெகுமானம் செய்தான் ; அவர்கள் அரசனை நோக்கி, ' ஓ மகாப் பிரபு ! நீர் எங்களுக்குப் பரிசு கொடுக்கும் பொழுது எங்களைக் கேட்டு எங்கள் அபீஷ்டப்படியல்லவோ செய்ய வேண்டும் ? அப்படிச் செய்யவில்லையே !' என்றார்கள். பாண்டியன் அவர்கள் கருத்தை அறியாமையால், 'நீங்கள் சொல்வது சரிதான், உங்களிஷ்டப்படியே செய்கிறேன், சொல்லுங்கள்,' என்றன். இவர் களில் ஒருத்தி, ' மகாராஜரே ! என் பெண் நீர் கொடுத்த முத்து மாலை மோகன மாலைமேல் ஆசை கொண்டவளல்லள் ; உமது தோளில் அணிகின்ற வேப்பமாலை மேலேதான் ஆசை கொண் டிருக்கிறாள் ; ஆகையால், அதை அவளுக்குக் கொடுக்க வேண்டும்,' என்று குறிப்பித்து,

" மாப்பைந்தார்க் கல்லமுத்து வன்னத்தார்க் கல்லஎன்பெண்
வேப்பந்தார்க் காசைகொண்டு விட்டாளே !—பூப்பைந்தார்
சேர்ந்திருக்கு நெல்வேலிச் சீவிலிமா ரு!தமிழை
ஆய்ந்திருக்கும் வீரமா ரு !"

என ஒரு கவி பாடினாள். அவன் அது கேட்டு, ' வேப்பமாலையை எப்படிக் கொடுத்துவிடுகிறது !' என்று நினைத்து ஒன்றும் அவட்கு உத்தரம் சொல்லாமலிருந்தான். மற்றொருத்தி அந்தக் கருத்தைக் கொண்டே,

" தென்னவா ! மீனவா ! சிவிலிமா ரு!மதுரை
மன்னவா ! பாண்டி வளநாடா !—முன்னம்
சுரும்புக்குத் தாரளித்த துய்யதமிழ் நாடா !
கரும்புக்கு வேம்பிலே கண்."

என்று ஒரு பாடலைப் பாடினாள். அதற்கும் மறுமொழி சொல்ல வில்லை. பின்னொருத்தி அந்த நோக்கத்தினாலேயே,

" வேம்பா இலுமினிய சொல்லுக்கு நீமிலைந்த
வேம்பா இலுமுதவ வேண்டாவோ ?—மீன்பாயும்
வேலையிலே வேலைவைத்த மீனவா ! நின்புயத்து
மாலையிலே மாலைவைத்தாள் மான்."

என்றொரு பாட்டைச் சொன்னாள். அதற்கும் வாய் திறவாமல் மௌனமாய் இருந்தான். அதன் பிறகு ஒருத்தி அப்பெண்கள்

மூவரையும் பார்த்து, 'கேளுங்கள் சகோதரிகளே! பாண்டிய மகாராஜா இந்தச் சொற்பமாகிய வேப்பமாலையைக் கொடுக்க மாட்டார் என்று நினைக்க வேண்டா ; இவராலே வஞ்சனை இல்லை ; ஆற்றூரில் அரசு செலுத்துகின்ற ஏகம்பவாண முதலியார் இடத்திலுள்ள பூதம் வந்து தம்மைப் பீடிக்குமென்னும் அச்சத்தினாலே தான் கொடாமல் இருக்கின்றார். இதை அறியாமல் நீங்கள் ஏன் வீணே இவரை அலட்டுகிறீர்கள் ? இவர்மேல் தோஷம் சொல்வது சரியன்று,' என்று அவன் மனத்திற்குத் தக்கதாக,

" இலகு புகழாறை ஏகம்ப வாணன்
அலகை வரும்வருமென் றஞ்சி—உலகறிய
வானவர்கோன் சென்னிமேல் வண்கை வளைஎறிந்த
மீனவர்கோ னல்கிடான் வேம்பு."

என்ற பாடலைச் சொன்னாள்.

அது கேட்டு, அவன், 'நம்மை இவள் கேலி செய்கிறாள்,' என்று வெட்கப்பட்டு, 'இனி எப்படிச் சம்பவித்தாலும் சம்பவிக்கட்டும்! மானம் போன பிறகு பிராணனிருந்து பிரயோஜனம் என்ன ? உலோபியென்று மாத்திரம் பெயரெடுக்கலாகாது ; கர்ணராஜன் அவன் தேடிய புண்ணியத்தையும் அல்லவோ தானம் பண்ணினான்?' என்று நினைத்து, அந்த நொடியில் தான் தரித்திருந்த வேப்பமாலையைக் கழற்றிக் கொடுத்துவிட்டான். அவர்கள் அவன் உயிரைக் கொண்டு போவது போல வாங்கிப் போய் முதலியாரிடத்தில் கொடுத்தார்கள். அவர் அதைப் பெட்டியில் பதனப்படுத்தி வைத்துக் கொண்டு அந்தப் பெண்களுக்கு உசிதமான வெகுமதி செய்தனுப்பிவிட்டு, பூதத்தை அழைத்து, 'வேப்பமாலையைத் தொட்டல்லவா பாண்டியனைத் தீண்டக் கூடாதென்றிருந்தாய் ? இப்பொழுது அவன் சிகை என் கையில் சிக்கிக்கொண்டது ; இனி நீ பயமில்லாமல் போய் அவனைப் பிடித்த பிடியில் கொண்டுவா,' என்றார். இவர் சொன்னது சொல்லாததற்கு முன்னே அது சங்கை இன்றிச் சென்று தூக்கி வந்துவிட்டது. ஏகம்பவாண முதலியார் காலுக்கும் கைக்கும் விலங்கிட்டுப் பாண்டியராஜனை அருஞ்சிறையில் வைத்தார். அவன் முதலியாருக்கு ஏதோ பிரிய வசனங்களைச் சொல்லியும் பிரமாணிக்கங்கள் பண்ணியும் அவர் தன்னை விடாமையால், அவன் தன் மனையாளுக்குச் செய்தி அனுப்பி, 'இந்தச் சிறை விடுவிக்கும்படி ஏகம்பவாண முதலியாரை நீயாவது இரந்து கேட்க வேண்டும்,' என்ன, அவள் ஏகம்பவாணனுடைய ஔதாரியத்தைச் சிறப்பிக்கத் தொடங்கி அதன் வழியாய் அவன் பராக்கிரமத்தைக் குறிப்பித்து,

" என்கவிகை யென்சிவிகை யென்கவச மென்றுவசம்
என்கரியீ தென்பரியீ தென்பரே—மன்கவன
மாவேந்த னேகம்ப வாணன் பரிசுபெறும்
பாவேந்த ரைவேந்தர் பார்த்து."

என்றொரு பாட்டுப் பாடி அனுப்பினுள். அதை அவர் படித்துப் பார்த்து, அதில், 'மிக்க வேகத்தையுடைய பரிமாவை நடாத்துகின்ற நகுலராஜனையொத்த ஏகம்பவாண முதலியாரைப் பாடி அவரிடத்தில் யானை, குதிரை, குடை, கொடி முதலாகிய பல வகைப்பட்ட பரிசு பெற்று வருகின்ற கவிஜனர்களை அதற்கு முன்பு அம்முதலியாருடனே எதிர்த்துத் தோற்றுத் தத்தம் விருது முதலானவைகளை இழந்த அரசர்கள் பார்த்து, 'இந்தப் புலவர் பிடித்துக்கொண்டு போகின்ற குடை, நான் பிடித்திருந்தது; இவரேறிய தண்டிகை, நானேறியது; இவர் தரித்த கவசம், நான் தரித்தது; இவரேந்திய துவஜம், நான் கைக்கொண்டிருந்தது; இவர் ஊர்ந்து வரும் யானை, என்னுடைய யானை; இவர் ஆரோகணித்த புரவி, என்னுடைய புரவி' என்று சொல்லி அனுதபிப் பார்கள்,' என்னும் பொருள் தோன்றக் கண்டு அதிசயித்துச் சீற்றம் மாறிச் சந்தோஷத்துடனே பாண்டியனை உடன்படிக்கை செய்யச் சொல்லிச் சிறை விடுவிக்க, அன்றுதொட்டு அவ்வுடன் படிக்கையின்படி அவனும் மற்றை அரசர்களும் தமக்குப் பிரதி வருஷமும் தவறுமல் பகுதி கட்டி வந்தனர்.

ஒரு புலவன் கவி பாடிப் பரிசு பெற்று வருகையில் அவனை இசைப்புலவன் ஒருவன் கண்டு அரசன் என்று ஐயுற்று, 'தேர் யானை புரவி முதலிய சதுரங்கக் கூட்டங்களைத் திறைப் பொருளாகப் பெற்று வருகின்ற வேந்தர் சிகாமணியே! உனது தேசம் யாது? உனது நாமம் யாது? தெரியச் சொல்ல வேண்டும்,' என்று வினவ, அப்புலவர் இவனை நோக்கி, 'வீணையைக் கையில் கொண்டு வாசிக்கின்ற பாணரே! வாரும்! வாரும்! இந்தச் செய்தியைக் கேளும்: நான் அரசனல்லேன்! நீரும் நானும் கல்வியால் ஒத்த குலத்தினரே; மகத நாட்டிற்குத் தலைவனும், தென்னற்றாரைப் பரிபாலிப்பவனுமாகிய ஏகாம்பவாணபூபதி மனமகிழ்ச்சி கூர்ந்து கொடுத்த அநேக வரிசைகள் பெற்று வருகின்ற புலவன் யான்; நீரும் இப்படிப்பட்ட பரிசு பெற்று வரலாம். அவரிடத்தில் சீக்கிரமாகப் போம்; அப்பிரபு வசிக்கும் சந்திர காந்தக் கற்பதித்த முற்றங்களிலும் முத்துப் பதித்த சிகரங்களையுடைய மாடமாளிகை கூடகோபுரங்களினிடத்திலும் ஆத்திமரம் இருக்கின்றது; உயர்ந்த வேப்பமரம் இருக்கின்றது; வளர்ந்த பனைமரம் இருக்கின்றது; அதனருகில் அரசமரம் இருக்கின்றது; அரசமரத்தைச் சுமந்த கில அத்திமரம் இருக்கின்றன; இவை தாம் அந்த ஸ்தானத்தை அறியத்தக்க அடையாளங்கள்,' என ஓர் ஆற்றுப்படையாகப் பொருளமைத்து,

> '' தேரு ளீப்புரவி வார ணத்தொகுதி திறைகொ ணர்ந்துவரு மன்னர்நின்
> தேச மேதுனது நாம மேதுபுகல்: செங்கை யாழ்தடவு பாணரே!
> வாரு மொத்தகுடி நீரு நானுமக தேச னுறைநகர் காவலன்
> வாண பூபதி மகிழ்ந்த ளித்தவெகு வரிசை பெற்றுவரு புலவன்யான்;

நீரு மிப்பரிசு பெற்று மீண்டுவர லாகு மேகுமவன் முன்றில்வாய்
நித்தி லச்சிகர மாட மாளிகைநெ ருங்கு கோபுர மருங்கெலாம்
* ஆரு நிற்குமுயர் † வேம்பு நிற்கும்வளர் ‡பனையு நிற்குமத னருகிலே
§ அரசு நிற்கு‖மர சைச்சு மந்தசில வத்தி நிற்குமடை யாளமே.''

என்பது முதலாகப் பற்பல புலவர்கள் உசிதமான பாடல்கள் பாடிப் பாமாலை சூட்டவும் அவர் அதிக பிரபலமாய் வாழ்ந்திருந்தார்.



* ஆர் - ஆத்திமாலை புனைந்த சோழன்.

† வேம்பு - வேப்பமாலை அணிந்த பாண்டியன்.

‡ பனை - பனைமாலை பூண்ட சேரன்.

§ அரசு - மற்ற ராஜாக்கள்.

‖ அரசைச் சுமந்த அத்தி - ராஜாக்களைத் தாங்கிய யானைகள்.



[ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நீதி நூல் கூறும் பாடியும், தேனும் பாலும் போலத் தித்திக்கும் தனிப் பாடல்கள் பல இயற்றியும் தம் ஆயுள் முழுவதும் அழுதத் தமிழ்வளர்ச்சிக்காகத் தியாகம் செய்த ஔவையாரின் வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புதங்கள் பலவற்றை இங்கே காணலாம். ஔவையார் சேர, சோழ, பாண்டிய வேந்தராலும் நன்கு மதிக்கப்பட்டுத் தம் காலத்தில் ஈடும் எடுப்புமற்ற உயர்ந்த கவிஞராய் விளங்கினர். அவர் தம் பாடல்களின் எளிமையும், இனிமையும், பொருளாழ முடமையும் காண்போர், அவரைக் கலைமகளின் திருவவதாரமே என்று கூறுவது மிகவும் பொருத்தமே யாகும்.

—பதிப்பாசிரியர்]

14

ஔவையார் சரித்திரம்

தென்னுட்டிலே பாண்டியர்கள் செங்கோல் நடாத்திய மதுரைமா நகரிலே கடைச்சங்கமிருந்த காலத்திலே **ஔவையார்** என்னும் மாது சிரோமணி, சோழ தேசத்திலே உறையூர் என்னும் பட்டணத்தின் ஒரு சாவடியிலே ஆதி என்பவளுக்கும் **பகவன்** என்னும் ஓர் அந்தணனுக்கும் சிரேஷ்ட புத்திரியாகப் பிறந்தனர். அப்போது ஆதி பகவன் என்னும் தாய் தந்தையருக்குள் ஏற்பட்டிருந்த உறுதி மொழிப்படி பிறந்த குழந்தையை விட்டு நீங்க மனமெழாது தாய் வருந்திய போது அக்குழந்தை சொல்லிய

வெண்பா

“ இட்டமுட னென்றலேயில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவ னும்செத்து விட்டானே ?— முட்டமுட்டப்
பஞ்சமே யானலும் பாரமவ னுக்கன்னம் !
நெஞ்சமே அஞ்சாதே நீ.”

இது கேட்டுத் தாய் வருத்தம் நீங்கிக் குழந்தையை விட்டு ஏகினள். பின்பு அடுத்த சேரியிலிருந்த பாணர்கள் அக்குழந்தையை எடுத்து வளர்க்க வளர்ந்து இயல்பாகவே சகல கலைகளையும் அறிந்து தமிழ் நாட்டிலே கல்வியில் சிறந்த பெண்களுள் முதன்மை பெற்றிருந்தனர்.

ஔவையார் ஜீவந்தராயிருந்த காலத்தில் கம்பர், ஒட்டக் கூத்தர், புகழேந்திப்புலவர் ஆகிய வித்துவசிரோமணிகள் இருந்தனர். அக்காலத்தில் கம்பர், ஒரு பாட்டிற்கு ஆயிரம் பொன் பெற்றுலன்றி ஒருவர்மீதும் பாடுவதில்லை. ஔவையாரோ பசிக்கு ஒரு கைக் கூழ் பெற்றுல் ஒரு பாடல் பாடுவார். இதனுல் ஔவையாருக்குக் 'கூழுக்குப் பாடி' என ஒரு பெயர் வழங்கும்.

ஒருகால் சோழ நாட்டிலே சிலம்பி என்னுமொரு தாசி, கம்பருடைய வாக்கினுலே பாடல் பெற்றவர்கள் அதிக சம்பத்தடைகின்றனர் எனக் கேள்வியுற்று, கம்பரை நாடி, 'என் மேல் ஒரு பாட்டுப் பாட வேண்டும்,' என்று வேண்டினள். அதற்குக் கம்பர், 'ஆயிரம் பொன் தந்தாலொழிய நாம் கவி பாடுவதில்லை,' என்று மறுத்துச் சொல்லினர். அதைக் கேட்டுத் தாசி தான் வருந்தித் தேடி வைத்திருந்த ஆபரணம் முதலிய சகல ஆஸ்திகளையும் விற்றுப் பொன்னுக்கி, அது ஐந்நூறு பொன்னுகக் கண்டு, அதனைக் கொண்டு போய்க் கம்பர் கையில் கொடுத்து அவரை நோக்கி, 'ஐயா! புலவர் பெருமானே! இந்த ஐந்நூறு பொன்னையும் பெற்றுக்கொண்டு ஏழைமீது அன்பு கூர்ந்து ஒரு பாட்டுப் பாடித் தரும்படி வேண்டுகின்றேன்,' என்றனள். கம்பர், 'நாம் பாடுவது ஆயிரம் பொன்னுக்கு ஒரு பாட்டாகையால், நீ தந்த ஐந்நூறு பொன்னுக்கு அரைப்பாட்டுத்தான் பாடுவோம்,' என்று சொல்லி,

> "தண்ணீரும் காவிரியே; தார்வேந்தன் சோழனே;
> மண்ணுவ தும்சோழ மண்டலமே."

என இந்த இரண்டு அடியைப் பாடி, அவள் வீட்டுத் தெருவாயிலின் மேற்சுவரில் எழுதிவிட்டுப் போயினர். அது கண்டு தாசி, 'ஐயோ! தெய்வமே! புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தை அடித்துக் கொண்டு போனது போலவும், வயிற்றுப் பிள்ளையை நம்பிக் கைப்பிள்ளையை ஆற்றில் நழுவவிட்டது போலவும், நான் கையிலிருந்த காசையெல்லாம் போக்கி வறுமையை வாங்கிக் கொண்டேனே!' என்று பரிதபித்து, கட்டக் கந்தைக்கும் உண்ணச் சோற்றுக்கும் இல்லாமல் துயருழந்திருந்தனள். அப்போது ஒரு நாள் ஔவையார் அதிக பசியால் வருந்தி அத்தாசியின் வீட்டுத் தெருவே வரும் போது தாசியின் ஊழ் கூட்டுவித்தலால் அவள் வீட்டுத் தெருத் திண்ணையின்மேல் உட்கார்ந்து அங்கிருந்த தாசியை நோக்கி, 'மெத்தப் பசியாய் இருக்கிறேன். கொஞ்சம் கூழேனும் கொடுப்பாயா?' என்றனர்.

அது கேட்டுத் தாசி சரேலென்று உள்ளே நுழைந்து, தான் குடிப் பதற்காகக் கரைத்து வைத்திருந்த கூழைக் கொண்டு வந்து வார்த்து, ஔவையாருக்கு இளைப்புத் தீரும்படி உபசரித்தாள். ஔவையார் கஞ்சி குடித்துக் கூழ் தீர்ந்து உட்கார்ந்திருக்கையில் சுவரிலே எழுதியிருந்த இரண்டடியை வாசித்துப் பார்த்து, அருகே இருந்த அத்தாசியை நோக்கி, 'அம்மே! ஈதென்னே?' என, தாசி அதன் விருத்தாந்தத்தைச் சொல்லக் கேட்டு ஔவையார் உடனே,

".....—பெண்ணுவாள்
அம்பற் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு."

என அதனைத் தொடர்ந்தே மற்ற இரண்டடியையும் எழுதி அவ்வெண்பாவை முடித்தருளினர்,

இச்செய்யுள் எழுதி முடித்தவுடனே தாசி, காலில் செம் பொற் சிலம்பணியும்படியான செல்வவதி ஆயினள்.

தான் ஐந்நூறு பொன் பெற்றுப் பாடி ஏழையாகச் செய்த தாசியை, ஔவையார் மாவமுது பெற்றுப் பாடித் திரண்ட ஐஸ்வரியமுடையவளாகச் செய்தார் எனக் கேள்வியுற்ற கம்பர், ஔவையார் மேல் அசூயை கொண்டு சிற்சில சந்தர்ப்பங்களில் வாதங்கள் செய்தனர்.

ஒரு காலத்தில் ஔவையாரைக் கம்பர், 'அடீ' என்று சொல்ல விரும்பி, ஆரைக்கீரைக்கும் ஔவையாருக்கும் சிலேஷையாக,

"ஒரு காலடீ! காலிலைப் பந்தலடீ!"

என்று சொல்லிப் பொருள் கேட்ட போது, ஔவையார் உத்தர மாக,

"எட்டேகா லட்சணமே! ஏமனே றும்பரியே!
மட்டில் பெரியம்மை வாகனமே!—முட்டமேற்
கூரையில்லா வீடே! குலராமன் றூதுவனே!
ஆரையடா சொன்ன யது?"

என்று பாடிக் கம்பர் வெட்கமுறும்படி செய்தனர். ஒருகால் சோழ மகாராஜன் தன் சபையில் இராமாயணத்தில் சில பாடல்களைக் கம்பர் பிரசங்கிக்கக் கேட்டு, சந்தோஷமடைந்த வனாய், 'பாரகாவியம் பாடுவதில் கம்பருக்கு நிகராவார் ஒருவருமில்லை,' என்றும், 'அவரை யார் வெல்ல வல்லவர்?' என்றும் சொல்லி, அவர் பாடலை வியந்து பேசினன். அப்போது அச்சபையில் வந்திருந்த ஔவையார் இதனைப் பொறாராகி, கம்பருக்கு இயல்பாகவே அக்கருத்துண்டு என்று அறிந்தவ ராதலால், அவரை எவ்விதத்திலாவது கொஞ்சம் இறக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடு அடியில் வரும் பாடல்களைப் பாடினர்.

கம்பரைப் போலப் பாரகாவியம் பாடுகிறவர் இல்லை என்ற தற்கு,

"வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்—'யாம்பெரிதும்
வல்லோமே!' என்று வலிமைசொல வேண்டாங்காண்!
எல்லார்க்கு மொவ்வொன் றெளிது."

"சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்;
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்;—நித்தம்
நடையும் நடைப்பழக்கம்; நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்."

'கம்பரை யார் வெல்வார்?' என்றதற்கு

"காணுமல் வேணவெல்லாங் கத்தலாம்; கற்றோர்முன்
கோணுமல் வாய்திறக்கக் கூடாதே;—நாணுமற்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி."

'கம்பர் பாட்டை வியந்ததற்கு,

"விரக ரிருவர் புகழ்ந்திடவே வேண்டும்;
விரனிறைய மோதிரங்கள் வேண்டும்;—அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும்; அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனு நன்று."

என இப்பாடலைக் கேட்டுச் சோழன் அதிசயித்து ஔவையாரை இன்னர் என்று அறியாதவனாய், 'அம்மே! நீ எந்த ஊர்?' என்ன, ஔவையார்,

"காணுந்தே னுந்தேன்; கடுகி வழிநடந்தேன்;
யான்வந்த தூர மெளிதன்று!—கூனன்
கருந்தேனுக் கண்ணுந்த காவிரிசூழ் நாடா!
இருந்தேனுக் கெங்கே யிடம்?"

என்று ஒரு பாட்டுப் பாடினர். அப்போது ஔவையார் கையிலிருந்த ஒரு சிறு மூட்டையைப் பார்த்து, 'அம்மூட்டை என்னை?' என, ஔவையார்,

"கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்
மூழைக் குழக்குத் தினைதந்தாள்;—சோழா!கேள்:
உப்புக்கும் பாடிப் புளிக்கு மொருகவிதை
ஒப்பிக்கு மென்ற வுளம்."

என்று சொல்லி,

"நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினும் நூற்சிலை
நாற்றிங்க ணுளுக்கு ணேந்துவிடும் ;—மாற்றலரைப்
பொன்றப் பொருதடக்கைப் போர்வேல் அகளங்கா !
என்றுங் கிழியாதென் பாட்டு."

என்று தம் பாடலைச் சிறப்பித்துப் பாடினர். அது கேட்டுச் சோழன், 'மனிதர்களுக்குள் அழகாவது என்ன ?' என்றும், 'பொருளை எவ்வாறு செலவிட வேண்டும் ?' என்றும் கேட்ட கேள்விகளுக்கு விடைகளாக,

"சுரதந் தனிலிளைத்த தோகை சுகிர்த
விரதந் தனிலிளைத்த மேனி—நிரதம்
கொடுத்திளைத்த தாதா கொடுஞ்சமரில் பட்ட
வடுத்தொளைத்த கல்லபிரா மம்."

என்றும்,

"நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
* பம்புக்காம்; பேய்க்காம் ; பரத்தையர்க்காம்—வம்புக்காம் ;
கொள்ளைக்காம் ; கள்ளுக்காம் ; கோவுக்காம் ; சாவுக்காம் ;
கள்ளர்க்காம் தீக்காகும் காண்."

என்றும் பாடியருளினர். இவைகளைக் கேட்டுச் சோழன் மகிழ்ந்தனன்.

உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டியன் மதுரையில் அரசு செய்துகொண்டிருக்கும் காலத்தில் திருவள்ளுவர், இடைக்காடர், †ஔவையார் முதலாயினருடன் மதுரைக்குச் சென்று, தங்களை ஒப்பாருயர்ந்தார் ஒருவருமில்லையென்று இறுமாப்புக் கொண்டிருந்த சங்கப்புலவரைக் கர்வபங்கம் செய்து, தாம் பாடிய திருக்குறளுக்குச் சிறப்புப்பாயிரம் பெறும்படி போன போது, ஔவையார் அச்சங்கப்புலவர்களை நோக்கித் தம்முடைய ஐந்து விரல்களையும் குவித்தும், மூடியும், கொஞ்சம் திறந்தும், சுட்டுவிரலொன்றை மாத்திரம் நீட்டியும், ஐந்து விரல்களையும் அகலத் திறந்தும் இவ்வாறான சில குறிகளைக் காட்டி, 'இவற்றிற்குப் பொருள் என்ன?' என்று வினவினர். அவர்கள் அவர் கருத்தறியாதவர்களாய்ச் சிற்றின்ப விஷயமாக,

"இவ்வளவு கண்ணுடையாள் இவ்வளவு சிற்றிடையாள
இவ்வளவு போன்ற விளமுலையாள்—இவ்வளவா
நைந்த வுடலா ணலமேவு மன்மதன்றன்
ஐந்துகணை யால்வாடி ளுள்."

எனவோர் வெண்பாப் பாடினர். இது கேட்டு ஔவையார்,

* பம்பு - சூனியம்.

† இந்த ஔவையார் முதல் ஔவையார் என்ப.

'நீங்கள் சொல்வது சரியன்று,' என்று அவர்கள் மனம் புழுங்கி வெட்கம் உறும்படி,

" ஐயம் இடுமின் அறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வளவே னும்அன்னம் இட்டுண்மின்—தெய்வம்
ஒருவனே யென்று முணரவல் லீரேல்
அருவினைக ளோந்து மறும்."

என்னும் வெண்பாவால் தாம் காட்டிய குறிகளின் ஞானர்த்தத்தை வெளியிட்டனர்.

ஔவையார் தம் சகோதரரான திருவள்ளுவநாயனரினும் புத்தி நுட்பமுள்ளவர். புருஷார்த்தங்கள் நான்கனுள் தர்மார்த்த காமமென்னும் மூன்றையும் திருவள்ளுவநாயனர் 1330 குறள் வெண்பாக்களினுல் சொல்லியதைக் கேட்டருளி மோக்ஷத்தையும் சேர்த்துப் புருஷார்த்தங்கள் நான்கையும்,

" ஈதலறம் ; தீவினைவிட் டீட்டல்பொருள் ; எஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் ; பரனிகினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."

என்னும் வெண்பாவினுல் விளக்கியருளினர்.

சங்கப்புலவர்கள் அத்திருக்குறளைச் சிறப்பித்துப் பாடிய போது அவருள் ஒருவராகிய இடைக்காடர்,

" கடுகைத் தொளைத்தேழ் கடலைப் புகட்டிக
குறுகத் தறித்த குறள்."

என்று பாடக் கேட்டு ஔவையார், ' அப்படியன்று,

" அணுவைத் தொளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்."

என்று இருப்பதே நேர்,' என்று அக்குறளைப் புகழ்ந்தனர்.

ஒரு நாள் ஔவையார் வேற்றூருக்குப் போய்த் திரும்பும் மார்க்கத்தில் போது போனதால் இன்றைக்கு இங்கே இரவை நீத்துப் போவோமென்று நினைத்து அவ்வூரில் இருந்தவர்களைப் பார்த்து, 'ஐயா! படுத்துக்கொள்ள இங்கு இடம் கிடைக்குமோ?' என்ன, அவர்களுள் சிலர், 'அம்மே! இந்தப் பட்டணத்துக்கு மேலண்டை ஒரு திருவாசற்சாவடி இருக்கிறது ; அதிற் படுக்கவேண்டியமட்டும் இடமிருக்கின்றது. ஆனல், ஒரு பைசாசம் அதிலிருந்துகொண்டு படுக்க வருகின்றவர்களை எல்லாம் அறைந்து போடுகிறது. ஆகையால் எவரும் அதிலே சேரப் பயப்படுகிறூர்கள்,' என்றனர். அதைக் கேட்டு ஔவையார், 'பேயைப் பேயடிக்கப் போகிறதோ?' என்று சொல்லி, ஆங்கெய்திப் படுத்து நித்திரை போயினர். அந்நேரம் வெளியே போயிருந்த பெண்ணுவேசம் வந்து ஔவையார் படுத்துக்

கொண்டிருக்கிறதைக் கண்டு மிகவும் ஆங்காரத்துடனே ஜாமந் தோறும் 'எற்றெற்று' என்று வந்து அறைந்து போகிற வழக்கப்படி முதல் ஜாமத்தில் தம்மை அறைய வருகிறதைக் கண்டு ஔவையார் உறக்கம் நீங்கி விழித்துப் பார்த்து,

" வெண்பா விருகாலிற் கல்லானே வெள்ளோலே
கண்பார்க்கக் கையால் எழுதானேப்—பெண்பாவி
பெற்றளே பெற்றுள் பிறர்நகைக்கப் பெற்றுளென்
றெற்றேமற் றெற்றேமற் றெற்று."

என்று ஒரு வெண்பாப் பாடினர். அதனைக் கேட்டு அப்பேய் கல்வியறிவு உடையதாதலால், 'எழுத்து வாசனை இல்லாத மூடனை இச்சித்த நம்முடைய பூர்வோத்திரத்தை அறிந்து சொன்ன இவள் தேவியே. இவளை ஒன்றும் செய்யப் போகாது,' என்று பயந்து, அவ் விடம் விட்டு ஏகி இரண்டாம் சாமத்தில் மீண்டும், 'எற்றெற்று' என்று வந்தது. அப்போது ஔவையார்,

" கருங்குளவி சூரைத்தூ றீச்சங் கவிபோல்
விருந்தினர்க்கொன் றீயாதான் வாழ்க்கை—அரும்பகலே
இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வரென்
றெற்றேமற் றெற்றேமற் றெற்று."

என்று மற்றொரு வெண்பாப் பாடினர். அது கேட்டவுடனே பேய் ஓடிப் போய் மூன்றும் சாமத்தில் திரும்பவும், 'எற்றெற்று' என்று வந்தது. அப்போது ஔவையார்,

" வான முளதால் மழையுளதால் மண்ணுலகில்
தான முளதால் தயையுளதால்—ஆனபொழு
தெய்த்தோ மினைத்தோமென் றேமாந் திருப்போரை
எற்றேமற் றெற்றேமற் றெற்று."

என்று மீண்டும் ஒரு வெண்பாப் பாடினர். இப்பாடலைக் கேட்டு, அலகை ஓடிப் போயிற்று. பின்பு நான்காம் சாமத்தில் முந்திய படியே இரைந்துகொண்டு வர ஔவையார்,

" எண்ணு யிரத்தாண்டு நீரிற் கிடந்தாலும்
உண்ணீரம் பற்றுக் கிடையேபோல்—பெண்ணுவார்
பொற்றொடி மாதர் புணர்முலைமேற் சாராரை
எற்றேமற் றெற்றேமற் றெற்று."

என்று பாடிய வெண்பாவைக் கேட்டு அந்தப் பெண்ணுவேசம் ஒடுக்கம் எய்தி ஔவையாரை வந்து வணங்க, ஔவையார் அதன் மேல் இரக்கமெய்தி அப்பேயுரு அடைந்திருந்த இராஜபுத்திரியை நோக்கி, 'உன் வரலாறென்னை?' என, அப்பேய் தான் அவ்வூராள் வோன் புத்திரியாயிருந்தும் ஒரு நாள் உப்பரிகையின் மேற்றட்டில் பந்தாடிக்கொண்டிருக்கையில், மாளிகையின் அடிவாரத்தில் வழிப்போக்கனுய் வந்து தங்கிய அழகனை இராஜகுமாரனைக்

கண்டு, மோகமெய்தி, 'நீர் ஊர்ச்சாவடியில் இன்றிரவில் இன்ன விடத்தில் வந்திருந்தால் நான் அங்கு வந்து உம்மைச் சேருவேன்,' என்று தன் காதோலையில் நகத்தால் எழுதி அவன் முன் போட்ட தும், அவன் கல்வியறிவில்லாதவனுதலால் அச்சாவடியிலிருந்த ஒரு குஷ்டரோகிக்குக் காட்ட, அந்தத் துஷ்டன் அவ்விளவலைப் பயமுறுத்தி ஊரை விட்டு ஓடிப் போகச் செய்து அவன் குறித்த இடத்தில் இருந்ததும், அதனை அறியாது தான் அவனைத் தழுவ அசங்கியப்பட்டு உயிர் மாய்த்துக்கொண்டதும் விவரமாகச் சொல்லக் கேட்டு, 'உனக்கு வேண்டிய வரம் என்ன?' என, அலகை, 'நான் மீண்டும் மானுட ஜன்மம் பெற்று இச்சித்த புருஷனை அணைந்து பின்பு எம்பெருமான் திருவடி சேரும்படி அனுக்கிரகம் செய்ய வேண்டும்,' என்று வேண்ட, அப்போது இப் பெண்ணுவேசத்தைப் போலவே அச்சாவடியில் இராஜபுத்திரி தனக்காக உயிரிழந்தாளென்று கேள்வியுற்றுத் தானும் வந்து உயிர் நீத்த அவளால் காதலித்த இராஜபுத்திரனும் ஆவேசமாய்க் கிடந்து நிகழ்ந்தவைகளைக் கேட்டு வந்து வணங்க, ஔவையார், அன்பு கூர்ந்து பெண்ணுவேசத்தை நோக்கி, 'நீ உறையூரில் சென்று இராஜன் ஆலாத்திப் பெண்களுள் தலைமை பெற்றிருக்கும் மரகதவடிவுக்குப் பெண்ணைப் பிறந்து, கற்பழியாமல் மேன்மை பெற்றிருந்து விரும்பிய புருடனை அணைந்து சுகமடைவாயாக,' என்று சொல்லிப் போக்கி, ஆணுவேசத்தை நோக்கி, 'நீ அவ்வூரிலே விறகுதலையனுகப் பிறந்திருந்து அவ்விராஜ குமாரத் தியை அடையக்கடவை,' என்று அருள் புரிந்து போயினர்.

திருக்கோவலூரிலே பெண்ணை நதிக்குத் தென்கரையில் குடிசை போட்டுக்கொண்டிருந்த பாரி என்னும் இடையன் வீட்டிற்கு ஔவையார் மழையில் நனைந்து நடுங்கிக்கொண்டு வர, அவ்வீட்டிலிருந்த கன்னிகைகளான அங்கவை, சங்கவை என்னும் பெண்கள் கண்டு ஔவையாருக்குத் தங்கள் கறுப்புச் சிற்றுடையைக் கொடுத்து நெருப்பிட்டுக் குளிர் காயச் செய்து முருங்கைக் கீரையை நெய் விட்டுச் சமைத்துக் கேழ்வரகுக் களியுடன் சாப்பிடச் செய்தனர்.

ஔவையார் உண்டு மகிழ்வெய்தி,

"வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்
நெய்தா னளாவி நிறம்பசந்த—பொய்யா
அடகென்று சொல்லீ யமுதத்தை யிட்டார்
கடகஞ் செறிந்தகை யால்."

என்று பாடி அவ்விடைப் பெண்கள் கொடுத்த நீலச் சிற்றுடையைச் சிறப்பித்து,

"பாரி பறித்த பறியும் பழயனூர்க்
காரி கொடுத்த களாக்கொட்டும்—சேரமான்

வாரா யெனவழைத்த வாய்மையும் இம்மூன்றும்
நீலச்சிற் றுடைக்கு நேர்.''

என்றும் ஒரு பாடல் பாடினர். இப்பாடலைப் பாடினவுடன் பாரி என்னும் இடையனுக்கு இராஜ செல்வத்தினும் மேம்பட்ட செல்வம் பெருகியது.

பின்பு ஔவையார் அக்கன்னிகைகளைத் தக்க வரனுக்கு மணம் புரிவிக்க வேண்டிக் கலியாணத்திற்கு வேண்டியன வெல்லாம் சித்தம் செய்வித்து, விநாயகக் கடவுளை,

'' ஒருகொம் பிருசெவி மும்மதத்து நால்வாய்க்
கரியுரிவைக் கங்காளன் காளாய் !—பரிவுடனே
கண்ணுல வோலை கடிதெழுத வாராயேல்
தண்ணுண்மை தீர்ப்பன் சபித்து.''

என்கிற வெண்பாப் பாடி வருவித்து அவர் கைப்படத் தாம் சொல்லியபடி அடியில் வருமாறு ஓலை எழுதுவித்துச் சேரன், சோழன், பாண்டியன் முதலான சகல அரசர்களுக்கும் அனுப்பினர்.

சேரனுக்குச் சீட்டு

'' சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவல்
ஊரளவுந் தான்வருக வுட்காதே—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள வரசர் மனமிசைந்தார்
சங்கவையை யுங்கூடத் தான்.''

சோழனுக்குச் சீட்டு

'' புகார்மன்னன் பொன்னிப் புனலுடன் சோழன்
தகாதென்று தானங் கிருந்து—நகாதே
கடிதின் வருக கடிக்கோவ லூர்க்கு
விடியப் பதினெட்டா நாள்.''

பாண்டியனுக்குச் சீட்டு

'' வையைத் துறைவன் மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடியவி ரொன்பானுள்
ஈண்டு வருக விரைந்து.''

அரசர்கள் இம்மணவோலை கண்டு கவீஸ்வரியான ஔவை யாரது வேண்டுகோளைத் தடுக்க ஒண்ணுதெனக் கருதி, அதிக வினயத்துடனே சதுரங்க சேனைகளும் சூழக் கலியாணத்திற்கு வந்தார்கள். விவாக முகூர்த்தமானவுடனே ஔவையார் அவர் களுக்கு அதிக பிரியவசனங்களைச் சொல்லிச் சந்தன புஷ்ப தாம்பூலாதிகளால் தக்கபடி உபசரித்து, 'அப்பன்மார்களே ! நீவி

நெல்லீரும் எப்படி இக்கிழவியை அருமை பெருமைப்படுத்தினீர் களோ அப்படியே இவ்வேழை இடும் அற்ப உணவை உண்டு களிக்கும்படி வேண்டுகின்றேன்,' என்று மிக்க பரிவுடன் கேட்டுக் கொண்டனர்.

அதற்கு அவர்கள் பரிகாசமாய், 'நீர் உணவு செய்விப்பது உண்மையே ஆயின் இப்போது நுங்கு தருவித்தால் புசிப்போம்,' என்றனர். அது நுங்கு உண்டாவதற்கு அகாலமானபடியால் ஔவையார் அவர்கள் மநோபீஷ்டத்தை நிறைவேற்ற வேண்டி வெட்டி விறகாய் உலர்ந்து கிடந்த சில பனந்துண்டுகளை நோக்கி,

" திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின் ரூர்மணப் பந்தலிலே ;
சங்கொக்க வெண்குருத் தின்றுபச் சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே."

என்று ஒரு கலித்துறை பாடினர்.

உடனே கீழே விழுந்திருந்த அப்பனந் துண்டங்கள் குருத்து விட்டு வளர்ந்து பச்சோலை சலசலவென்று அசைய நுங்குக் குலைகளைத் தாங்கிக்கொண்டு நின்றன.

அதைக் கண்டு அரசர்கள் வெட்கமும் சந்தோஷமும் அடைய, அங்கு வந்திருந்த எல்லோரும் அளவிடற்கரிய ஆச்சரியத்தை அடைந்தார்கள்.

பின்பு பெண்ணை நதியைப் பால் நெய்யாகப் பெருகி வரும்படி

" முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்திய நெய்பால் தலைப்பெய்து—குத்திச்
செருமலைத் தெய்வீகன் றிருக்கோவ லூர்க்கு
வருமளவுங் கொண்டோடி வா."

என்றும், வருணனைப் பொன்மாரி பெய்யும்படி,

" கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே ! மாமலையன் கோவல்—திருமணத்தில்
முன்மாரி பெய்யு முதுவா ரியைமாற்றிப்
பொன்மாரி யாகப் பொழி."

என்றும், பின்பு திருக்கோவலூரைச் சிறப்பித்து,

" பொன்மாரி பெய்யுமூர் பூம்பருத்தி யாடையாம்
அந்நாள் வயலரிசி யாகுமூர்—எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனில்
ஓங்கும் திருக்கோவ லூர்."

என்றும் செய்யுட்களைப் பாடினர்.

கலியாணத்தில் மேலே சொன்ன அங்கவை சங்கவை என்னும் பெண்களுக்கு இடையர் மரபின் வழக்கப்படி ஆடு சீதனம் சேரனைக் கொடுக்கும்படி கேட்ட போது அவ்வரசன் பொன் ஆடு கொடுக்க, அதை ஔவையார் வியந்து,

"சிரப்பான் மணிமவுலிச் சேரமான் தன்னைச்
சுரப்பாடி யான்கேட்கப் பொன்னொன்(று)ஈந்தான் ;
இரப்பவ ரென்பெறினும் கொள்வர் ; கொடுப்பவர்
தாமறிவர் தங்கொடையின் சீர்."

என்று ஒரு வெண்பாப் பாடிப் பின்பு சோழனையும் பாண்டியனையும் நோக்கி, 'நீவிர் இச்சிறுமியர்களுடன் சுகமாய் வாழக்கடவீர்கள்,' என்று ஆசீர்வதித்து,

"ஆயின் பதியி லரன்பதிவந் துற்றளகம்
மாயனு துங்கருவி யாலும்—தூயமணிக்
குன்றுபோல் வீறு குவிமுலையார் தம்முடனீர்
இன்றுபோ லென்றும் இரும்."

என்று பாடி அருளினர்.

ஒருகால் உறையூரிலே குலோத்துங்க சோழன் தன் சமஸ்தான வித்துவானான ஒட்டக்கூத்தரும், பட்டமகிஷியுடன் பாண்டி நாட்டிலிருந்து ஸ்ரீதனமாக வந்த புகழேந்திப்புலவரும் தொடர்ந்து வர, பாதசாரியாய் உலாவி வரும்போது வீதிகளில் ஒன்றில் ஒரு வீட்டுத் தெருத் திண்ணையில் இரண்டு கால்களையும் நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த ஔவையார் சோழனைக் கண்டவுடன் ஒரு காலை மடக்கிக்கொண்டனர் ; அருகில் புகழேந்திப் புலவர் இருக்கிறதைப் பார்த்தவுடனே மற்றக் காலையும் மடக்கிக் கொண்டனர் ; அவர்களை அடுத்தாற்போல வந்த ஒட்டக் கூத்தரைக் கண்டவுடனே இரண்டு கால்களையும் நீட்டினர். இதனைக் கண்ணுற்ற ஒட்டக்கூத்தர் அவமானமும் சீற்றமும் மூண்டவராய் ஔவையாரை நோக்கி, 'ஓ கிழவீ ! இவ்வாறு என்னை அவமதித்தது என்னை ?' என, ஔவையார், 'அரசன் கிரீடாதிபதி ஆதலால், அவனுக்கு ஒரு காலையும், புகழேந்திப் புலவர் ஒரு மகாவித்துவான் ஆகையால், அவருக்காக இரண்டு காலையும் மடக்கினேன். நீரோ, கல்வி நிறைவில்லா வீண்புலமை பாராட்டும் ஒரு மூடர். ஆகையால் இரண்டு காலையும் நீட்டினேன்,' என்று சொல்லி, 'உண்மையாகவே நீரும் புகழேந்தியைப் போல ஒரு சிறந்த வித்துவானுயின் சோழனையும் அவன் நாட்டையும் சிறப்பித்துச் சந்திரனுக்குப் பெயராகும் ஒரு பதத்தை ஒரு பாவின் ஈற்றடியில் மூன்றிடங்களில் பிரயோகப்படுத்திப் பாடும் பார்ப்போம்,' என்று சொன்னர். ஒட்டக்கூத்தர் அவ்வாறே தம் அரசனுகிய சோழனையே பாட்டுடைத் தலைவனுகக் கருதி நற்றூய் இரங்கற்றுறையில்,

“ வெள்ளத் தடங்காச் சினவாளே வேலிக் கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்துமழைத் துளியோ டிறங்குஞ் சோணாடா !
கள்ளைக் குறும்பர் குலமறுத்த கண்டா வண்டர் கோபாலா !
பிள்ளை மதிகண் டென்பேதை பெரிய மதியு மிழந்தாளே.”

என்று ஒரு பாட்டுப் பாடினர்.

இதைக் கேட்டு ஔவையார் ஓட்டக்கூத்தரை நோக்கி, ‘உம் பாவில் ஒரு சந்திரன் குறைந்ததே !’ என்று சிலேடையாக,

“ஓட்டா ஒருமதி கெட்டாய்!”

என்று கூறிப் பின்பு புகழேந்தியாரை நோக்கி, ‘நீரும் அவ் வண்ணமாகப் பாடக் கடவீர்,’ என்றார். அவரும் நற்றாய் இரங் கற்றுறையிலேயே,

“ பங்கப் பழனத் துழுமுழவர்
பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர்
தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா !
கொங்கர்க் கமரா பதியளித்த
கோவே ! ராச குலதிலகா !
வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே !”

என்று ஒரு பாவில் மூன்று பிறை வரும்படியாகப் பாடினர்.

இதனைக் கேட்டு ஓட்டக்கூத்தர் வெட்கி, அன்று முதல் கர்வமடங்கி இருந்தனர்.

தென்னாட்டிலே ஒரு நாள் ஔவையார் அதிக பசியால் வருந்தி ஒரு சமுசாரி வீட்டுத் தெருத் திண்ணையில் மிகுந்த இளைப்போடு வந்திருந்தனர். அப்போது வெளியே வந்த வீட்டுக்காரனை ஔவையார் கண்டு, ‘அப்பா, எனக்கு மெத்தப் பசியாயிருப்பதால் உங்கள் வீட்டிலிருந்து கொஞ்சம் கூழாயி னும் வார்த்தால், உண்டு பசியாறிப் போவேன்,’ என்றார். மிகவும் சாதுவான அவ்வில்லோன் அவருடைய பரிதாப வார்த் தைக்கு இணங்கி, ‘பெண்ணின் குணமறிவேன், சம்பந்தி வாயறி வேன்,’ என்பதற்கேற்க, தன் பெண்சாதி குணத்தைத் தான் அறிந்தவனுகையால், ஔவையாரை வீட்டிற்குள் அழைத்துப் போகாமல் தெருத் திண்ணையிலேயே இருக்க வைத்துத் தான் மாத்திரம் உள்ளே நுழைந்து, பிடாரியைப் பெண்டாகக் கொண்ட மனையாளிடத்தில் சென்று, அவளுடைய உத்தரவின் பேரில் அருகேயிருந்து, அவளுக்குத் தன் பேரில் விசுவாசமுண் டாகும்படி இச்சக வார்த்தைகளைச் சொல்லி, மெல்ல முகம் துடைத்துத் தான் ஒரு பெண் போல அவளுக்குத் தலை சீவி, சிக்

கறுத்து, பேன் பார்த்து, ஈருருவி, அதிக பயபத்தியுடனே எங்கே கோபித்துக் கொள்ளுகிறாளோ என அஞ்சி, சமயம் பார்த்து, மெய் நடுங்கி நாக்குழற, மெல்ல உதட்டோடு உதடு அசைய, 'ஒரு பழுத்த கிழவி கொஞ்சம் கூழுக்கு வந்திருக்கிறாள்,' என்ற சங்கதியை அவள் காதில் போட, உடனே அவள், 'ஏனவாயனைக் கண்டாளாம் ஏணிப் பந்தம் பிடித்தாளாம்' என்கிறபடி, தன் புருஷன் மேதகு குணத்தைப் பார்த்துத் தீயில் விழுந்த நாகம் போலச் சீறிப் பூதம் போல ஆர்ப்பரித்து, 'உன் பவிஷுக்கு விருந்து ஒரு கேடா? உனக்குத் தொலைக்கிறதும் இல்லாமல் ஊருக்குந் தொலைக்கவா?' என்று பேய்ப் பாட்டுகளைப் பாடி, ஆசையெல்லாம் தீர வட்டித்து, கழுநீர்ப்பானையை ஏந்தி வந்து அவன் தலையிலே அபிஷேகம் செய்து, திருவலகு (துடைப்பக்கட்டு) கொண்டு வெண் சாமரை வீசி, சுளகு (பழமுறம்) எடுத்து ஆலவட்டம் பரிமாறி, பரி வேட்டை விடுவது போல அவனை வீட்டிற்கும் தெருவுக்குமாகத் துரத்தித் துரத்தி அடித்தாள்.

அப்போது வீட்டுத் தலைவன், பெண்டாட்டிகொண்டு திண் டாட்டப்படுவதைக் கண்டு ஔவையார் அதிக இரக்கமுற்று,

" இருந்து முகம்திருத்தி ஈரொடுபேன் வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப—வருந்திமிக
ஆடினாள், பாடினாள், ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத் தான் !"

என்கிற செய்யுளைப் பாடினார். பிறகு கணவன் மிகவும் வேண்டிக் கொள்ள, அவள் சற்று மனமிரங்கி அன்னம் இட்ட போது,

" காணக்கண் கூசுதே! கையெடுக்க நாணுதே !
மாணைக்க வாய்திறக்க மாட்டாதே !—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
அன்பில்லா ளிட்ட வமுது !"

என்று பாடினர்.

பிறகு வந்து வணங்கிய அவள் கணவனை நோக்கி, அவன் இல் வாழ்க்கையை இகழ்ந்து பேசி, அவன் துறவு பூண்டு ஒழுகும்படி வற்புறுத்துமாறு அடியில் வரும் செய்யுட்களைப் பாடியருளினர்.

" சண்டாளி சூர்ப்பநகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே !—தொண்டா !
செருப்படிதான் ! செல்லாவுன் செல்வமென்ன செல்வம் !
நெருப்பிலே வீழ்ந்திடுத னேர்."

" பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம் ;—சற்றேனும்
ஏறுமா றுக விருப்பளே யாமாயிற்
கூறுமல் சன்னியாசங் கொள்,"

" ஏசி யிடலி னிடாமையே நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேய்நன்று ;—நேசமிலா
வங்கணத்தி னன்று வலியபகை ; வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாதலே நன்று."

ஒரு நாள் சோழராஜன் தன் சமஸ்தான வித்துவான்களை அழைப்பித்து, 'நீங்கள் நாளைய உதயத்துக்கு நாலு கோடிக்குப் பாடல் பாடி வர வேண்டும்'என்று ஆக்கியாபித்தான். அதைக் கேட்ட அவ்வித்துவான்கள் 'நாலு கோடிக்கு எங்ஙனம் பாடுவது?' என ஒன்றும் தோன்றுது அதிக வியாகூலத்துடனே அவரவர்கள் வீடு போய்ச் சேர்ந்தார்கள். ஔவையார் அல்வழியாக வரும் போது அவர்கள் விசனமுற்றிருப்பதைக் கண்டு,' ஏன் முகம் வாடி ஏக்கமுற் றிருக்கின்றீர்கள் ?' என்று கேட்க, அவர்கள், ' அம்மணீ, எங்களைச் சோழர் நாளைய உதயத்திற்குள்ளே நாலு கோடிக்குப் பாடல் பாடி வரும்படி ஆக்கியாபித்திருக்கிறார் ; இன்னும் ஒரு பாட்டுக்கும் வழியில்லை. ஆதலின், இன்றிராத்திரிக்குள் நாலு கோடி எவ் வண்ணம் பாடப் போகிறோமென்று திகைத்திருக்கிறோம்,' என்றனர். அதைக் கேட்டு ஔவையார், 'ஓ புலவீர்காள், நீவிர் வருந்துதல் ஒழிமின். இதோ ஒரு நொடியில் பாடித் தருகிறேன்,' என்று பின் வரும் பாடல்களைப் பாடிக் கொடுத்தனர்.

" மதியாதார் முற்றம் மதித்தொருகால் சென்று
மிதியாமை கோடி பெறும்."

" உண்ணீருண் ணீரென் றுபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்."

" கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்."

" கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்."

என்கிற பாடல்களைக் கேட்டவுடனே வித்துவான்கள் யாவரும் சூரியனைக் கண்ட தாமரை மலர் போல முகமலர்ந்து அப்பாடலைப் பெற்றுக்கொண்டு போய் அரசன்முன் வைக்க அரசன் மகிழ்வடைந் தனன்.

ஒரு நாள் ஔவையார் காடுகளும் மலைகளும் அடர்ந்த மார்க்க மாகப் போய்க்கொண்டு இருக்கும் போது **சுப்பிரமணியக் கடவுள்** ஔவையாரை ஏமாற்றிப் பரிகாசம் செய்ய எண்ணி ஓர் எருமை மேய்க்கும் சிறுவனைப் போல உருவெய்தி ஒரு நாவன்மரத்தின் மீதேறிப் பழங்களைப் பறித்துத் தின்றுகொண்டு இருப்பவர் போலக் காட்டியருளினர். ஔவையார் அந்த மரத்தடியில் வந்து ஆயாசத் தால் உட்கார்ந்து, மரத்தின்மேல் இருக்கும் மாட்டுக்காரப் பையனைப் பார்த்து, ' அடா தம்பீ, எனக்கு மிகவும் ஆயாசமாக

இருக்கிறபடியால், கொஞ்சம் நாவற்பழம் பறித்துப் போடு,' என்று வேண்டினர். அதற்கு அந்தப் பையனுகிய சுவாமி, 'ஓ கிழவியே, உனக்குச் சுடுகிற பழங்கள் வேண்டுமா, சுடாத பழங்கள் வேண்டுமா? சொல்,' என்றார். ஔவையார் ஆச்சரியப்பட்டு நாவற்பழத்தில் சுடுகிற பழமும் இருக்குமா என்று ஆலோசித்து ஒன்றும் தோன்றுமையால், 'அப்பா, சுடுகிற பழம் எனக்கு வேண்டுவதில்லை; சுடாத பழமே வேண்டும்,' என்றார். உடனே, பையன் மரக்கிளைகளைக் கையால் பிடித்துக் குலுக்கிவிட்டான். அதிலிருந்து கனிந்த பழங்களும் கனியாத பழங்களும் கீழே உதிர்ந்தன. அப்போது ஔவையார் கனிந்த பழங்களில் சிலவற்றைப் பொறுக்கிப் பார்த்து அவைகளில் தரையிலிருந்த மணல் ஒட்டிக்கொண்டு இருந்தமையால், அதை வாயினுல் ஊதினார். அதைப் பார்த்த மாட்டுக்காரப் பையன், 'ஓ கிழவீ, சுடாத பழம் கேட்ட நீ இப்போது சுடுகிற பழத்தைத் தின்னப் போகிறையே! வாய் வெந்துவிடப் போகிறது! நன்றுக ஊதி ஆறின பின்னர்ச் சாப்பிடு!' என்றான். ஔவையார் அப்போது சுடாத பழம் காய் என்று தெரிந்துகொண்டு, 'இக் கருத்து முன்னமே நமக்குத் தெரியாமல் போயிற்றே!' என்று வெட்கமுற்று,

"கருங்காலிக் கட்டைக்கு நாணுக்கோ டாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்;—பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்றேற்ற
தீரிரவு துஞ்சாதென் கண்."

என்று ஒரு வெண்பாப் பாடினர். இவ்வெண்பாவைக் கேட்டவுடனே மாட்டுக்காரப் பையனுயிருந்த சுப்பிரமணியக் கடவுளுக்கு ஔவையார்பால் அருள் மிகுந்து மரத்தை விட்டிறங்கித் தம் முடைய நிஜரூபம் எய்தி அவர் கரங்களைப்பற்றிக்கொண்டு, 'நான் உம்முடன் விளையாட வந்ததே அன்றி இகழ்வதற்கன்று; உலகத்தில் உமக்குச் சமானமானவர்கள் யார் இருக்கிறார்கள்? ஆகையால், சந்தோஷமாய் இரும்,' என்று சொல்லி, 'உம்முடைய வாக்கால் உலோபகாரமாக முக்கிய நீதிகளைச் சுருக்கமாக வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்; ஆனதனுல் அவைகளைச் சொல்லக் கடவீர்,' என, ஔவையார், 'அஃதென்ன?' என்று வினவ, சுப்பிரமணியக் கடவுள், 'உலகத்தில் கொடியது, இனியது, பெரியது, அரியது இன்னின்னதென்று உரைக்க வேண்டும்,' என்றனர். ஔவையார் அது கேட்டு,

கொடியது:

"கொடியது கேட்கி னெடியவெவ் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது!
அதனினுங் கொடிது இளமையில் வறுமை!
அதனினுங் கொடிது ஆற்றெணுக் கொடுநோய்!

அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
இன்புற வவர்கையி லுண்பது தானே !''

இனியது :

'' இனியது கேட்கிற் றனிநெடு வேலோய் !
இனிய தினியது ஏகாந்த மினியது !
அதனினு மினிய ஆதியைத் தொழுதல் !
அதனினு மினியது அறிவினர்ச் சேர்தல் !
அதனினு மினியது அறிவுள் ளோரைக்
கனவிலு நனவிலுங் காண்பது தானே !''

பெரியது :

'' பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய் !
பெரியது பெரியது புவனம் பெரியது !
புவனமோ, நான்முகன் படைப்பு ;
நான்முகன் கரியமா லுந்தியில் வந்தோன் ;
கரிய மாலோ, அலைகடற் றுயின்றோன் ;
அலைகடல் குறுமுனி யங்கையி லடக்கம் ;
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன் ;
கலசமோ, புவியிற் சிறுமண் ;
புவியோ, அரவினுக் கொருதலைப் பாரம் ;
அரவோ, உமையவள் சிறுவிரன் மோதிரம் ;
உமையோ, இறைவர் பாகத் தொடுக்கம் ;
இறைவரோ, தொண்ட ருள்ளத் தொடுக்கம் ;
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே !''

அரியது :

'' அரியது கேட்கின் வரிவடி வேலோய் !
அரிதரிது மானுட ராத லரிது !
மானுட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது !
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்த லரிது !
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமுந் தவமுந் தாஞ்செய லரிது !
தானமுந் தவமுந் தாஞ்செய்வா ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே !''

என்று நான்கு அகவல்களைப் பாடி முடித்தனர்.

சுப்பிரமணியர் மிகவும் சந்தோஷம் அடைந்தவராய் ஔவை யாரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு மறைந்து போயினர்.

ஒரு நாள் ஔவையார் விநாயகக் கடவுளின் பூஜை விரைவாகச் செய்ய, அக்கடவுள், 'வழக்கப்படியன்றி விரைந்து பூசை செய்வது என்ன?' என்று வினவ, 'சுவாமீ, சுந்தரமூர்த்தி நாயனரும் சேர மான் பெருமாணாயனரும் ஆதிஉலாவும் பொன்வண்ணத்தந்தாதி யும் பாடி, அவைகளை அரங்கேற்றும்படி கயிலாயத்திற்குச் செல் கின்றார்கள்; என்னையும் அழைத்தார்கள்,' என, விநாயகர், 'அவர்கள் சேர்வதற்கு முன் உன்னைக் கயிலாயத்தில் விடுவேன், கிரமப்படி பூஜை செய்,' என்று திருவாய் மலர்ந்தருளினர். அவ்வாறே சாவ தானமாகப் பூசை செய்து 'சீதக்களப' என்று தொடங்கும் அகவல் பாடித் துதித்துப் பூஜையை முடித்தார். உடனே, விநாயகக் கடவுள் விஸ்வரூபம் கொண்டு தமது துதிக்கையால் எடுத்துவிட, ஔவையார் கயிலாயத்தையடைந்தனர். பின்பு வந்து சேர்ந்த அவ்விருவரும் ஔவையாரைக் கண்டு அதிசயப்பட்டு வினவிய போது,

"மதுர மொழிநல் லுமையாள் புதல்வன் மலர்ப்பதத்தை
முதிர நினையவல் லார்க்கரி தோமுகில் போன்முழங்கி
அதிர வருகின்ற யானையுந் தேரு மதன்பின்சென்ற
குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னனே!"

என்று பாடி விடை தந்தனர்.

ஓரூரில் ஒரு குறவனுக்கு இரண்டு மனைவியர்கள் இருந் தார்கள். அவர்களுள் இளையாள்பேரில் குறவன் மோக முடையவனாய் இருந்தான். ஒரு நாள் குறவன் வேற்றூருக்குப் போய் வரவேண்டி மனைவியர்களை நோக்கி, 'நான் அன்பாக வளர்க்கும் இப்பலாவை நீங்கள் இருவரும் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்,' என்று சொல்லிப் போயினன். அவன் போன பிறகு இளையாள் அம்மரத்தை வெட்டிவிட்டுக் குறவன் வந்த போது மூத்தாள்மேல் பழி சுமத்தினள். நிரபராதியாகிய மூத்தாள் கணவன் என்ன செய்வானோ என்று துக்கித்துக்கொண்டு இருந்தாள். ஔவையார் அப்போது அங்குத் தற்செயலாய் வந்து அவள் குறை கேட்டு, 'பயப்படாதே!' என்று சொல்லிப் பலாத் தழைக்கும்படி,

"கூரிய வாளாற் குறைத்திட்ட கூன்பலா
ஓரிதழாய்க் கன்று யுயர்மரமாய்ச்—சீரியதோர்
வண்டுபோற் கொட்டையாய் வண்காயாய்த் தின்பழமாய்ப்
பண்டுபோ னிற்க படி."

என்று பாடின மாத்திரத்திலே, வெட்டுண்ட மரம் தளிர்த்துத் தழைத்தது.

மற்றொரு காலத்தில் பாண்டியன் அக்காலத்திலுள்ள சங்கப் புலவர் முதலிய சகல வித்துவான்களுடைய கல்வித் திறத்தையும் பரீக்ஷிக்க எண்ணமுடையவனாய், மாற்றுயர்ந்த செம்பொன்னால் செய்த நான்கு பருத்த கொலுசுகளில் தொங்குகின்ற ஓர் ஊஞ்சல் பலகையை அமைத்து அதன்மீது திரளாகப் பொற்குவையிட்டு, 'இந்நான்கு கொலுசுகளும் அற்று விழும்படி இன்ன தினத்தில் யாராயினும் பாடுவார்களாயின், அவருக்குத் தகுந்த மரியாதை யுடன் இப்பொற்குவியலையும் பரிசாகக் கொடுப்போம்,' எனச் சகல தேசங்களிலும் பறையறைவித்தான்.

இச்சங்கதி கேள்வியுற்ற வித்துவசிரோமணிகள் யாவரும் முன்னிற்க அஞ்சி வருந்தினர். அத்தருணத்தில் அவ்வழியாக வந்த ஔவையார் கேட்டு உள்ளே நுழைந்து, பின் வரும் செய்யுட்களில் ஒவ்வொன்றைச் சொல்ல, ஒவ்வொரு சங்கிலியாக நான்கும் அறுந்து விழுந்தன.

"ஆர்த்தசபை நூற்றிருபத் தாயிரத்தொன் றும்புலவர்
வார்த்தை பதினா யிரத்தொருவர்—பூத்தமலர்த்
தண்டா மரைத்திரு வே! தாதாகோ டிக்கொருவர்
உண்டாயி னுண்டென் றறு."

"தண்டாம லீவது தாளாண்மை ; தண்டி
அடுத்தக்கா லீவது வண்மை ;—அடுத்தடுத்துப்
பின்சென்று ஈவது காற்கூலி ; பின்சென்றும்
ஈயானைச் சம்போ லறு."

"உள்ள வழக்கிருக்க வூரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி—எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்கும் காலறுவான் றன்கிளையும்
எச்சமறு மென்று லறு."

"வழக்குடையா னிற்ப வலியானைக் கூடி
வழக்கை யழிவழக்குச் செய்தோன்—வழக்கிழந்தோன்
சுற்றமுந் தானுந் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சமறு மென்று லறு."

பின்பு ஒரு நாள் ஸ்திரீகளின் நடவடிக்கைகளைச் சிலர் இகழ்ந்து பேசிக்கொண்டிருப்பதைச் செவியுற்ற ஔவையார் அதனைப் பொறாராகி,

"நல்லார்க ளெல்லாரும் நல்லாரே தன்மையால்
வல்லாராற் கேடு படாராயின் ;—நல்லறி
வாண்மக்கட் பற்பலர்க்கே யுண்டாகும் பெண்டிரும்
மாண்பு கெடுக்கா விடின்."

என்றொரு பாடலைப் பாடி அவர்கள் வாயடங்கச் செய்தார்.

பின்னும் ஔவையார் பற்பல சமயங்களில் பாடிய தனிப்பாடல்கள்

வேளூர்ப்பூதன் விருந்திட்டதைப் புகழ்ந்து பாடியது :

" வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும்—திரமுடனே
புல்வேளூர்ப் பூதன் புகழ்ந்துபரிந் திட்டசோ
றெல்லா வுலகும் பெறும்."

கோரைக்காலில் இருக்கும் ஆழ்வான் கொடையை நிந்தித்துப் பாடியது :

" கரியாய்ப் பரியாய்க் காரெருமை தானுய்
எருதாய் முழப்புடைவை யாகித்—திரிதிரியாய்த்
தேரைக்கால் பெற்றுமிகத் தேய்ந்துகா லோய்ந்ததே
கோரைக்கா லாழ்வான் கொடை."

ஈகையில்லானைக் குறித்துப் பாடியவை :

" பாடல் பெருனே பலர்மெச்ச வாழானே
நாடறிய நன்மணங்க ணுடானே—சேடன்
இவன்வாழும் வாழ்க்கை யிருங்கடல்சூழ் பாரில
கவிழ்ந்தென் மலர்ந்தென்ன காண்."

" சுற்றும் கருங்குளவி சூரத்தூ ராரியப்பேய்
எற்றுஞ் சுடுகா டிடிகரையின்—புற்றில்
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததே னெக்கும்
தளர்ந்தோர்க்கொன் றீயான் தனம்."

முல்லான் என்பவனைப் புகழ்ந்து பாடியது :

" காலையிலொன் றுவர் கடும்பகலி லொன்றுவர்
மாலையிலொன் றுவர் மனிதரெலாம் ;—சாலவே
முல்லானைப் போல முகமாக மும்மலர்ந்த
நல்லானைக் கண்டறியோம் நாம்."

பிரமனை நிந்தித்துப் பாடியது :

" அற்றதலை போக அறுததலை நான்கினையும்
பற்றித் திரிகிப் பறியேனே—வற்றும்
மரமனையா னுக்கிந்த மானை வகுத்த
பிரமனையான் காணப் பெறின்?"

அரசன், ' மந்திரியாக யாரை நியமிக்க வேண்டும் ?' என்ற போது சொல்லியது :

" நூலெனிலோ கோல்சாயும் ; நுந்தமரேல் வெஞ்சமராம் ;
கோலெனிலோ வாங்கே குடிசாயும் ;—வேளாளன்
மந்திரியு மாவான் ; வழிக்குத் துணையாவான் ;
அந்த அரசே யரசு."

சோமன் என்னும் பிரபுவின்மேல் பாடியது :

" நிழலருமை வெயிலிலே நின்றறிமின் ; ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின் ;—பழுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டிற் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய்."

பாண்டியன் கலியாணத்தில் விருந்துண்ட போது பாடியது :

" வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்
துண்ட பெருக்க முரைக்கக்கேள் :—அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசிபி னுலே
சுருக்குண்டேன் சோறுண்டி லேன் !"

ஒரு புலவன் மண்ணைக் கையில் வைத்துக்கொண்டு ' இஃதென்ன ?' என்ற போது பாடியது :

" கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிருள் ;—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டா ; புலவீர் !
எறும்புந்தன் கையாலெண் சாண்."

வாதநாடி அடங்கில் ஒரு நாளிலும், சிலேத்துமநாடி அடங்கில் ஒரு நாழிகையிலும், பித்தநாடி அடங்கில் ஒரு நிமிஷத்திலும் உயிர் நீங்கும் என்று பாடியது :

" வாதக்கோ ணுளையென்றுன் வையைக்கோன் பின்னையென்றுன்
ஏதக்கோன் யாதேனு மில்லையென்றுன்—ஓதக்கேள் :
வாதக்கோன் சொல்லதினும் வையைக்கோன் சொல்லதினும்
ஏதக்கோன் சொல்லே யினிது."

உலகத்தவரை நோக்கிப் பாடிய செய்யுட்கள் :

" சொல்லாம லேபெரியர் சொல்லிச்செய் வார்சிறியர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே ;—நல்ல
குலமாலை வேற்கண்ணுய் ! கூறுவமை நாடிற்
பலமாவைப் பாதிரியைப் பார்."

" இலக்கணக் கவிஞர்சொ லின்பந் தேடுவர் ;
மலக்குசொற் றேடுவர் வன்க ணாளர்கள்
நிலத்துறுங் கமலத்தை நீவும் வண்டது
தலைக்குறை கமலத்தைச் சாருந் தன்மைபோல்."

" கல்வி யுடையீர் ! கருங்கா னகத்திடையே
நெல்லி யிலையுதிர்ந்து நிற்பதெவன் ?—வல்லாய் !கேள் :
வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம்போல் மாண்டு."

" மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிபந்
ணுடில்லான் செங்கோ னடாத்துவது—கூடுங்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டு
விருந்தில்லான் வீடு விழல்."

" நிட்டுர மாக நிதிதேடு மன்னவனும்
இட்டதனை மெச்சா விரப்போனும்—முட்டவே
கூசினிலை நில்லாக் குலக்கொடியுங் கூசிய
வேசியுங் கெட்டு விடும்."

" நேசனைக்கா ணுவிடத்து நெஞ்சார வேதுதித்தல் ;
ஆசானை யெவ்விடத்து மப்படியே ;—வாச
மனையாளைப் பஞ்சணையில் ; மைந்தர்தமை நெஞ்சில் ;
வினையாளை வேலைமுடி வில்."

" ஆலைப் பலாவாக்க லாமோ ? அருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ ?—நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ ? கருணையிலா
மூர்க்கனைச்சி ராக்கலா மோ ?"

" காசினியிற் பிள்ளைக் கவிக்கம் புலிபுலியாம் ;
பேசு முலாவிற் பெதும்பைபுலி ;—ஆசு
வலவற்கு வண்ணம் புலியாம் ;மற் றெல்லாப்
புலவர்க்கும் வெண்பாப் புலி."

" தாயோ டறுசுவைபோம் ; தந்தையோடு கல்விபோம் ;
சேயோடு தான்பெற்ற செல்வம்போம் ; —ஆயவாழ்
வுற்ரு ருடன்போம் ; உடன்பிறப்பாற் ரேள்வலிபோம் ;
பொற்ருலி யோடெவையும் போம்."

" போந்த வுதாரனுக்குப் பொன்றுரும்பு ; சூரனுக்குச்
சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பாம் :—ஆர்ந்த
அறிவோர்க்கு நாரி யருந்துரும்பாம் ; இல்லத்
துறவோர்க்கு வேந்தன் றுரும்பு.

" செம்மான் கரத்தனருள் சேயா ! நெடியோனே
அம்மா னெனப்பெற் றருள்வேலா !—இம்மான்
கரும்பிறைக்கும் வெண்பிறைக்குங் கண்ணம் பிறைக்கும்
அரும்பிறைக்குங் கூந்த லணே."

சிவதோத்திரம் :

" மேற்பார்க்க மைந்தரும் மூவா வெருதும் வீளங்குகங்கை
நீர்பாய்ச் சலுநன் நிலமுமுண் டாகியு நின்விடத்திற்
பாற்பாக் கியவதி நீங்கா திருந்தும் பலிக்குழன்றுப்
ஏற்பார்க் கிடாமலன் றேபெரும் கோயி லிறைவனே !"

ஔவையார் பந்தன் என்னும் ஒரு வைசியன்மேல் ஓரந்தாதி பாடி அப்பிரபு நாகலோகம் சென்று அருமையாகப் பெற்று வந்த பொற்படாம் கொடுக்கப் பெற்று, அதை உடம்பில் தரித்து, முதுமை நீங்கி இளமை பெற்றும், *அருநெல்லிக் கனியில் பாதிப் பழம் பெற்று அதனை உண்டு வெகுகாலம் ஜீவித்தும் இருந்தனர் என்று சொல்லுகின்றனர்; இவ்வாறே அசதி என்னும் கோகுல வரசன்மேல் ஒரு கோவை பாடிப் பல பரிசும் பெற்றனர். அக் கோவை சொல்நயம் பொருள் நயங்களால் மிகச் சிறந்தது எனச் சிற்சிலர் சொல்லும் தனிக் கவிகளால் தெரிய வருகிறதே தவிர, அப்பிரபந்தம் முற்றும் பார்த்தவர் இக்காலத்துக் கிடைப்பது அரிது அரிது !

ஔவையார் கிருகதாச்சிரமம் சிறந்ததென்று மற்றவர் களுக்குப் போதித்து வந்ததேயன்றித் தாம் ஆயுள் பரியந்தம் விவாகமில்லாமலே இருந்தனர். இவர், 240 வருஷங்களுக்கு அதிகமாகவே ஜீவித்திருந்ததாகச் சொல்லப்படுகின்றனர். அதனால் இவருடைய இயற்பெயர் மறைந்து முதியவள் என்கிற பொருளைத் தரும் ஔவைஎன்னும் சிறப்புப் பெயர் வழங்கி வந்ததாக நினைக்கப் படுகின்றது.

ஔவையார்,

ஆத்தி சூடி	அருந்தமிழ் மாலை
கொன்றை வேந்தன்	தரிசனப்பத்து
மூதுரை	ஞானக்குறள்
நல்வழி	பந்தனந்தாதி
கல்வியொழுக்கம்	அசதிக்கோவை
விநாயகரகவல்	வைத்தியநிகண்டு

முதலிய நூல்கள் செய்தருளினர்.

மேற்கூறிய நூல்களுள் அகரவருக்கமாதியாகச் செய்யப் பட்டுள்ள ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் என்னும் நீதி நூல்கள்

* நெல்லிக்கனி கொடுத்தவன் கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய அதிகமான்.

சொல் நடையும், பொருள் விளக்கமும், வாக்கியச் சுருக்கமும் அமைந்து இருத்தலால் பிற தேயத்தார்களாலும் தத்தம் பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டுச் சிறப்படைகின்றன.

இக்கவிசாகரமாகிய ஔவையார் திருவாக்கினின்று தோன்றிய பல நூல்களும் தனிப்பாடல்களும் நீதி நிறைந்த அருள் வாக்கியங்கள் என்று யாவராலும் சிரமேல் கொள்ளப்படுகின்றன. 'கல்வியில் பெரியர் கம்பர்,' என்னப்பட்ட கம்பர் முதலாகிய புலவர்களின் பாடல்கள் ஔவையார் பாக்களோடு ஒப்பு உயர்வு கூறப்படா ; ஆதலால் ஔவையார் சாரதாசொரூபமே பூலோக சரஸ்வதியாக வந்து தோன்றினர் என்று சொல்லுகின்றனர்.

கர்ஞ்சீபுரத்தை வியந்து பாடிய, 'வையகமெல்லாம் கழனி,' என்கிற பாடலும் ஔவையார் பாடிய பாடல்களில் ஒன்று எனச் சிலர் சொல்லுகின்றனர்.

"வையக மெல்லாங் கழனியா வையகத்துட்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள்—செய்யகத்துள்
வான்கரும்பே தொண்டை வளநாடு வான் கரும்பின்
சாறேயந் நாட்டின் றலையூர்கள்—சாறட்ட
கட்டியே கச்சிப் புரமெல்லாங் கட்டியுள்
தானேற்ற மான சருக்கரை மாமணியே
யானேற்றுன் கச்சி யகம்."

இச்சரித்திரம் கர்ணபரம்பரையில் கேட்டு அறிந்தவாறு இங்குச் சுருக்கி எழுதப்பட்டது.





[இந்தக் கதை முழுக்க முழுக்கச் சிரிப்பூட்டுங் கதை. இது முதன் முதலில் வீரமாமுனிவரால் எழுதப் பட்டது. அறியாமையே உருவமாகிய அவிவேகபூரண குருவும், அவர்தம் சீடர்களும் புரிந்த மூடச் செயல்கள் படித்தவர்கள் நினைத்து நினைத்துச் சிரிக்க வைக்கும். மூடச் சீடர்கள் சாம்பற்பூசனிக்காயைக் குதிரை முட்டை என்று நினைத்து ஐந்து பொன்னிற்கு வாங்கியது, குதிரை பிடிக்கத் தூண்டில் போட்டது, குரு வைச் சேமித்தது, உலக்கைப் பூஜை முதலியவை இந்தக் கதையில் எல்லோரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும்.

—பதிப்பாசிரியர்]

15

பரமார்த்தன் என்னும் அவிவேகபூரண குரு கதை

முதலாவது

ஆற்றைக் கடந்தது

அவிவேகபூரண குரு என்று ஓர் ஆசாரியரிருந்தார் ; அவர் ஏவிய ஊழியம் செய்யும்படி மட்டி, மடயன், பேதை, மிலேச்சன், மூடன் என்று பெயர் பெற்ற சீஷர்கள் ஐந்து பேர் அவர் மடத்தில் இருந்தார்கள். இந்தச் சீஷரும் குருவும் ஆகிய ஆறு பேரும் ஒரு நாள் மற்றச் சீஷர்களை விசாரிக்கும்படி, காலையில் எழுந்து சுற்றுக் கிராமங்களுக்குக் கால் நடையாய் நடந்து போனார்கள். போய்த் திரும்புமளவில், வழி நடுவிலிருக்கிற ஓராற்றங்கரையில் மூன்றும் சாமத்துக்கு வந்து சேர்ந்து, நதியைப் பார்த்து, அதில் இறங்கப் பயந்து, ' இது மிகவும் பொல்லாத மோசமுடையது ! ஆகையால்,

இது விழித்திருக்கும் வேளையில் இதைக் கடந்து போகக் கூடாது,' என்று குருவானவர், ' ஆறு நித்திரை செய்கிறதோ, விழித்திருக் கிறதோ? சோதித்துப் பார்,' என்று மிலேச்சனே ஏவினர். அவன் குரு வார்த்தையைச் சிரசின்மேல் கொண்டு, அப்போது புகைச் சுருட்டுப் பற்றவைக்கும்படி தன் கையில் எடுத்த கொள்ளிக் கட்டையைக் கொண்டு போய், தான் ஆற்றில் இறங்காமல் தூர நின்று எட்டித் தண்ணீரிலே தோய்த்தவுடனே தண்ணீர் சுறீரென்று புகைந்தது கண்டு, மிலேச்சன் பதறித் தவறிக் கீழே விழுந்து பதைத்து உதைத்துக்கொண்டு, மெல்லென எழுந்து நடுங்கிப் பயந்து அலறிக் குளறி அழுதுகொண்டு ஓடி வந்து, ' ஐயா ! ஐயா ! நதியைக் கடக்கிறதற்கு இது தருணமன்று ; அது விழித்திருக்கிறது ; நான் தொட்டவுடனே நஞ்சுள்ள நாகம் போலச் சீறிக் கொதித்துக் கோபித்து இரைந்து புகைந்து எழுந்து பாய்ந்து என்னைக் கொல்ல வந்தது ; அதன் உக்கிரத்துக்கு இலக்காகாமல் தங்கள் பரம கிருபையினாலும் என்னைப் பெற்றவள் செய்த தவத்தினாலும் தப்பி நான் உயிர் பிழைத்து மீண்டு வந்தது மிகவும் அதிசயம் !' என்றான். அதைக் கேட்டுக் குருவானவர் திடுக்குற்று மூர்ச்சித்துப் பின்பு தெளிந்து, ' அப்பா ! தெய்வச் சங்கற்பத்தை ஆராயக்கூடும் ! அது கண்ணுறங்குகிற வரைக்கும் சற்று நேரம் காத்திருப்போம்,' என்று அவரும் சீடரும் நதியின் பக்கத்தில் உருத் தெரியாமல் இருள் சூழ்ந்த ஒரு பூஞ்சோலையில் தங்கி இருந்தார்கள். அங்கே பொழுது போக்கும்படி அந்த ஆற்றின் விசேஷங்கள் பலவற்றையும் குறித்துத் தனித்தனியே அவனவன் சொல்லி வருமளவில், மட்டியென்னும் சிஷ்ன் சொன்னதாவது :

' சுவாமீ ! இந்த நதியின் தந்திரத்தையும், மோசத்தையும், குரூரத்தையும் குறித்து என் பாட்டனார் பல முறையும் சொல்ல நான் நன்றாய்க் கேட்டிருக்கிறேன் ; என் பாட்டனார் பெரிய வியா பாரியாய் இருந்தவர் ; அவர் ஒரு நாள் உப்புப் பொதி ஏற்றின இரண்டு கழுதைகளைத் தாமும், தமது கூட்டாளியுமாக ஓட்டிக் கொண்டு நடு ஆற்றில் இறங்கி வருகையில், கோடை காலமாய் இருந்ததனால், வெப்பம் தணிய அரையளவாய் ஓடுகிற குளிர்ந்த தண்ணீரிலே, தாங்களும் குளித்துக் கழுதைகளையும் நிறுத்திக் குளிப்பாட்டினார்கள். பிறகு அக்கரைக்குப் போய்ப் பார்த்த பொழுது, ஊசியினால் உறுதியாய்ச் சந்தில்லாமல் தைத்திருந்த கோணிப்பையின் வாய் சற்றும் திறவாமலிருக்க, அதற்குள்ளிருந்த உப்பை எல்லாம் ஆறுனது, ' தோலிருக்கச் சுளை விழுங்கினது,' போல உபாயமாய்த் திருடித் தின்றுவிட்டதைக் கண்டார்கள் ; கண்டு, ' ஆ ! ஆ ! இந்த ஆறு உப்பைக் கொள்ளையடித்துத் தின்ற மதத்தினால் அல்லவா எங்களை விழுங்காமல் விட்டுவிட்டது! உப்புப் போனால் போகிறது, அந்த மட்டில் நல்ல சகாயம் செய்ததே ! இதுவே பெரிய நன்மை,' என்று நினைத்து அவர்கள் சந்தோஷப் பட்டார்கள்,' என்பதே.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், அங்கே ஒருவன் குதிரை யேறி வருவதைக் கண்டார்கள். ஆற்றில் ஒரு ஜாணளவு உயரம் தண்ணீர் ஓடி வருவதைக் குறித்துச் சற்றும் அஞ்சாமலும் அவன் குதிரைமேலிருந்தபடி கூசாமலும் சரசரவென்று கடுகி வந்தான். அதைக் கண்டு இவர்கள், 'அடடா! எங்கள் குருக்களுக்கும் குதிரை இருந்தால் அவரும் அவரைச் சார்ந்த நாங்களும், அச்சமில்லாமல் ஆற்றில் இறங்கலாமே! அஃது இல்லாததனால் அல்லவா இப்படித் தயங்கி இருக்க வேண்டி வந்தது? இனி எப்படியாகிலும் ஒரு குதிரை வாங்க வேண்டும்,' என்று தங்களுக்குள் நிச்சயித்துக்கொண்டு குருவினிடத்தில் அதைக் குறித்து விண்ணப்பம் செய்தார்கள். அவர், 'இந்தச் செய்தியைப் பற்றிப் பின்பு பேசுவோம்,' என்று சொல்லி, 'இப்பொழுது பொழுது சாய்ந்து அஸ்தமனகாலம் சமீபித்ததனால் மடத்திற்குப் போக வேண்டுமே! ஆதலால் ஆற்றின் நித்திரையைச் சோதியுங்கள்,' என்று சீஷர்களுக்குச் சொன்னர்.

அப்படியே கொள்ளிக்கட்டையை மடயன் கொண்டு போய்த் தண்ணீருக்குள்ளே தோய்த்துச் சோதிக்குமிடத்தில், அந்தக் கொள்ளியில் பற்றிய நெருப்பு முன்னமே அவிந்து போன தனால் ஆற்றில் சிறிதும் புகை கிளம்பாதது கண்டு, அவன் மிகவும் களி கூர்ந்து ஓடி வந்து, 'இதுதான் நல்ல சமயம்! நல்ல சமயம்! இப்படிப்பட்ட சமயம் இனிக் கிட்டாது. வாயைத் திறவாமல் சத்தியாமல் தாமதியாமல் சுறுக்காய் எழுந்து வாருங்கள்! வாருங்கள்!! ஆற்றுக்கு நல்ல நித்திரை வேளையாயிருக்கிறது; இப்பொழுது எவ்வளவும் பயப்படவும் பின்னிடவும் வேண்டுவ தில்லை,' என்றான். இந்த நற்செய்தியை மடயன் சொல்லிக் கூப்பிட, எல்லாரும் திடீரென்று எழுந்து, கிமாவென்னுமல் பத்திர மாக ஒருவரையொருவர் சேர்த்துக் கட்டிக்கொண்டு ஆற்றில் இறங்கி, அலைகள் முதலாய்ச் சத்தியாதபடி மெதுவாய்க் காலைத் தூக்கி ஒவ்வோர் அடியாகத் தண்ணீர்க்குள் வைத்து ஊன்றிப் பின்பு பெயர்த்திட்டு நெஞ்சு துணுக்கென்று பதைபதைக்க இலகு வாகத் தாண்டித்தாண்டி நதியைக் கடந்து போய்க் கரை ஏறினார்கள்.

அவர்கள் கரை ஏறினவுடனே முன்பு பட்ட சங்கடத்துக்குத் தக்கதாக அதிக மகிழ்ச்சி கொண்டு தலை கால் தெரியாமல் துள்ளியாடிக்கொண்டிருக்கும் பொழுது, மூடனானவன், 'நாமெல்லோரும் அபாயமில்லாமல் வந்து சேர்ந்தோமா? எண்ணிப் பார்ப்போம்,' என்று தன்னை மாத்திரம் கூட்டாமல் மற்றவர்களை எண்ணினான். எண்ணினவிடத்தில் ஐவரிருக்கக் கண்டு, 'அப்பப்பா! ஐயையோ! இஃதென்ன பேரிழவு! ஒருவன் ஆற்றேடே போய்விட்டான்! ஐந்து பேர் மாத்திரந்தான் இருக்கிறோம்!' என்று குருவைப் பார்த்துத் தேம்பித் தேம்பி அழுதான். அவனை, 'அழவேண்டா,' என்று கை அமர்த்தி, எல்லாரையும் வரிசையாய் நிறுத்தி, ஒருகால் இருகால் முக்காலும்

அவரவரைத் தனித்தனியே தமது விரலை நீட்டிச் சுட்டிச்சுட்டித் தாமே எண்ணிக் கணக்குப் பார்த்தார். அப்படி எண்ணும் பொழுதெல்லாம் அவர் தம்மை நீக்கிக் கணக்கேற்றி, 'ஆமப்பா! நீ சொன்னபடி மெய்யாகவே ஐந்து பேர் மாத்திரந்தான் இருக் கிறோம்!' என்று சொல்லிக் குருமூர்த்தியும் விசனப்பட்டார். அவ்வாறே அவனவன் தன்னை விட்டு ஒழிந்தவர்களை மாத்திரம் எண்ணி எண்ணி ஆறும் பெயரைக் காணுமையால் ஆறு பேரில் ஒரு வனைச் சந்தேகமில்லாமல் ஆறு விழுங்கிவிட்டதென்று அவர்களுக் குள்ளே நிச்சயமாயிற்று. பிறகு குருவும் அவர்களும் அலறியழுது, கூகூ என்று கூச்சலிட்டு, நதியைப் பார்த்துக் கண்ணீர் சோரும்படி, 'ஓ பாவியாறே! துரோகியாறே! பரம சண்டாள நதியே! கொடும்புலி போலும் கடுங்கொலையாளா! மண்ணிலும் விண்ணி லும் வாழும் சராசரங்களெல்லாம் வாழ்த்தி வணங்கும்படி, தவ மனைத்தும் திரண்டு ஒரு வடிவம் தாங்கி வந்து பவமொழித்தருளும் பரமார்த்த குருநாதருடைய உத்தம சீஷனை ஒரு நொடிப் பொழு தில் குத்திர குணத்தால் கொள்ளை கொண்டாயே! எள்ளளவாயி னும் இரக்கமில்லாமல் கிழங்கு போல விழுங்கிவிட்டாயே! அஞ்சுத லென்பது கொஞ்சமுமின்றி வாழைப்பழம் போல விழுங்கி விட்டாயே! உன் மனம் உருகாத இரும்போ? கல்லோ? நீ பெண் ணுடன் ஆணுடன் பிறக்கவுமில்லையோ? நன்றிகெட்ட நாசகாலா! நீயும் உலகத்தில் நிலைத்திருப்பாயா? அண்டத்தளவும் அலை எறி வாயா? கடல் போல முழங்கிக் கரை புரள்வாயா? குளிர் வெண் முத்தம் கொழித்திடுவாயா? இனி நீ உண்ணீர் வற்றி, ஊற்றுக்கண் அடைபட்டு, பள்ளந்தூர்ந்து, வெள்ளமாறி, உள்ளம் வெதும்பி, உருவு தோன்றுமல் பாழாய்ப் போவாய்!' என்று ஆற்றைச் சபித்துப் பின்னும் பித்துப் பிடித்தாற் போலத் தாறுமாறுக வைது கொண்டிருந்தார்கள். அந்நேரமட்டும் ஆறு கொண்டு போன வனைத் தங்களுக்குள் இன்னனென்று தங்கள் மவுட்டியத்தினல் ஒரு வனும் அறியவில்லை; அவன் எவனென்று விசாரிக்கவும் இல்லை. அத்தறுவாயில் புத்திமானுகிய வழிப்போக்கன் ஒருவன் அவ்விடத் தில் வந்து இவர்கள் பரிதபிக்கிறதைப் பார்த்து, 'ஏனையா துக்கப் படுகிறீர்கள்? உங்களுக்கு என்ன குறை சம்பவித்தது? சொல்லுங் கள்,' என்று கேட்க, அவர்கள் நடந்த சமாசாரத்தைச் சவிஸ்தார மாகச் சொல்ல, அவன் இவர்கள் மூடத்தனத்தை அறிந்துகொண்டு, 'அடா அப்பா! இது மகா பிரயாசமான காரியம்; என்னலன்றி மற்றெருவராலே முடியாது; நான் மந்திர வித்தையிலே வெகு சமர்த்தன்! அதர்வணவேதம் நான் பார்த்துப் பிச்சை இட்டவர் களுக்குண்டு; எனக்கு யட்சணி, மோகினி, குட்டிச்சாத்தான் முத லானவைகளும் வசியப்பட்டு இருக்கின்றன. அவைகள் நான் சொன்னபடி ஆடுகின்றன. எனக்கு நீங்கள் நல்ல வெகுமதி செய் தால், ஆற்றேடே போனவனை அரைக்கணத்தில் அழைப்பிக் கிறேன்; அப்பொழுது என் திராணியைப் பாருங்கள்!' என்ருன்.

அதற்குக் குருவானவர் அதிக சந்தோஷப்பட்டு, 'அப்பா! நாங்கள் திக்குக் கெட்டுத் தடுமாறும் வேளையிலே மகாராஜன் எங்கள் குல தெய்வம் போல எங்கிருந்து வந்தாயோ தெரியாது! ஆனாலும், நீ இப்பொழுது செய்ய ஏற்பட்ட பெரிய உதவிக்கு எளியவர்களாகிய நாங்கள் ஈடாக உனக்கு என்ன செய்யப் போகிறோம்! உன் குருவுக் குப் புண்ணியமாய்ப் போகிறது! எப்படியாவது மனம் பெரிது பண்ணிக் காணமல் போனவனை அழைப்பித்துக் கொடுத்தால், செய்யாமல் செய்த உதவியாயிருக்கும்; எங்களுக்கு வழிச் செல வுக்கு நாற்பத்தஞ்சு பணம் முன்னாலையில் முடிந்து வைத்துக் கொண்டிருக்கிறோம்; அதை உன் கையில் வேண்டுமானால் கொடுத்துவிடுகிறோம்; தயவு செய்ய வேண்டும்!' என்றார்.

அவன், 'அப்படியே ஆகட்டும்,' என்று தன் கையில் ஏந்திய வச்சிர உலக்கை போலப் பருத்து நீண்ட இருப்புப்பூண் கட்டப் பட்ட தடியை அவர்களுக்குக் காட்டி, 'நான் சொன்ன மந்திர லித்தை இதிலேதான் இருக்கிறது; நீங்கள் வரிசையாக நின்று முகத் தைச் சுளிக்காமல் சந்தோஷமாக ஒரு பிரார்த்தனை செலுத்துதல் போலக் கும்பிட்டுக் குனிந்து இந்தத் தடியால் முதுகில் ஆளுக்கு ஓர் அடி பட்டுக்கொண்டு உடனே அவனவன் தன்தன் பேரைச் சொல்லி எண்ணிக்கொண்டு வந்தால், ஆறு பேரும் இவ்விடத்தில் இப்பொழுதே பிரத்தியக்ஷமாக வந்திருக்கச் செய்வேன்!' என்றான். அவர்கள், 'நல்லது,' என்று சம்மதித்தார்கள்.

மந்திர வித்தைக்காரன் அவர்களை வரிசையாக நிறுத்தி அந்தத் தடியால் ஓங்கித் தன் கை கூசாமல் முதல் முதல் குருவின் நடு முதுகைப் பார்த்து மிகவும் உரமாக ஓர் அடி போட்டான்; அவர், 'அப்பாடா! போதும் போதும்! நான்தான் பரமார்த்த குரு!' என்றார். இவன், 'ஒன்று' என்றான். இந்தப்படியே எல்லாரையும் ஒவ்வோர் அடி அடிக்க, அவர்களில் ஒருவன், 'நான் மடயன்,' என்றும், ஒருவன், 'நான் மட்டி,' என்றும், ஒருவன் 'நான் மூடன்,' என்றும், ஒருவன், 'நான் மிலேச்சன்,' என்றும், ஒருவன், 'நான் மூர்க்கன்,' என்றும் வெவ்வேறுகத் தங்கள் பெயர்களைச் சொல்லவும், இவன் கணக்கேற்றவும், அப்பொழுது ஆறு பெயரில் ஒருவனும் குறையாமல் இருக்கக்கண்டு, 'சரி சரி' என்று ஒத்துக்கொண்டார் கள். பின்பு, அவ்வறுவரும் ஆச்சரியப்பட்டு மாய வித்தைக்கார னாகிய வழிப்போக்கனை மெச்சித் துதித்துச் சொன்னபடி அவனுக்குப் பணத்தை அவிழ்த்துக் கொடுத்துவிட்டுப் போனார்கள்.

இரண்டாவது

குதிரை முட்டை வாங்கியது

பரமார்த்த குருவும் ஐந்து சீஷர்களும், மடத்துக்குச் சென்ற பின்பு ஆற்றிலே தாங்கள் பட்ட அவதியைப் பலகாலும் சொல்லிச் சொல்லி விசனப்பட்டார்கள். அப்பொழுது மடத்தைப்

பெருக்கிக்கொண்டிருந்த ஒரு கண் குருட்டுக் கிழவி நடந்தவைகளை எல்லாம் விவரமாய்க் கேட்டுக் கைகொட்டி நகைத்து, 'நீங்கள் ஆற்றைத் தாண்டி வந்தவுடனே உங்களை எண்ணிக் கணக்கேற்றின வகையிலே மோசம் வந்தது; தன்னையாகிலும் வேறொருவனையாகிலும் தப்பவிட்டெண்ணினால் கணக்குத் தப்புந்தான்; ஆனாலும், போனது போகட்டும்; இனி வேறெந்தச் சமயத்திலாவது இப்படிப்பட்ட மோசச் சங்கடம் வாராதபடிக்கு உங்களுக்குச் சகாயமாகச் சுளுவாய் நானொர் உபாயம் சொல்லுகிறேன்: காட்டிலே முட்டை முட்டையாய்க் கிடக்கிற காலி மாட்டுச் சாணத்தைப் பொறுக்கி எடுத்து வந்து நன்றாய்ப் பிசைந்து கூட்டி நிலத்திலே அடை போலத் தட்டி எல்லாரும் சக்கரம் போல அதைச் சுற்றியிருந்து நுனி மூக்குச் சாணத்தில் படக் குனிந்து அழுத்தி நிமிர்ந்து பிறகு சாணியில் பதிந்திருக்கிற குழிகளை எண்ணினால் கணக்குத் தப்பாமல் இத்தனை பேரென்று வெகு சுளுவாய் அறியலாமே! கேளுங்கள்: அறுபது எழுபது வருஷத்துக்கு முன்னே பத்துப் பெண்டுகள் கூடின இடத்தில் நாங்கள் கணக்கேற்றின வகை இதுவே. இதறியாமல் ஏன் வீணாய்ப் பிரயாசைப்பட்டீர்கள்?' என்றாள்.

அவர்கள், 'இது நல்ல உபாயந்தான்; பணத்துக்கும் செலவில்லை; நமக்குள் ஒருவனுக்கும் தோன்றாமல் போயிற்று,' என்று பின்பு குருவுடனே, 'எல்லாக் காரியத்துக்கும் ஒரு குதிரை வாங்கினால் உத்தமம்; ஐயா! எப்படியாகிலும் உமக்குக் குதிரை சம்பாதித்துக் கொடுக்க வேண்டுமென்று எங்களுக்கு இஷ்டமாய் இருக்கிறது,' என்பதாகச் சகலரும் சொல்ல, குரு, 'ஒரு குதிரை விலை எவ்வளவாயிருக்கும்?' என, அவர்கள், 'நூறு பொன் அல்லது ஐம்பது பொன்னிற்குக் குறையாது,' என்று சொல்லக் கேட்ட பொழுது, 'அம்மாத்திரத்துக்கு அவகாசமில்லை,' என்று குருவானவர் சொன்னார். இந்தப்படி இவர்கள் பல நாளும் ஆலோசனை செய்துகொண்டிருக்கையில் மேயவிட்ட கறவைப் பசு ஒரு நாள் பொழுது சாயும் சமயத்தில் வீட்டுக்கு வாராததைக் கண்டு ஊரிலெங்கும் போய்த் தேடினார்கள்; தேடின இடத்திலும் அகப்படாததனால், மறு நாள் மட்டி என்பவன் கிராமாந்திரங்களிலே சென்று தேடினான்.

மூன்றாம் நாள் மட்டும் தேடி எங்கும் காணாமல் மடத்துக்கு வந்து குருவை நோக்கி, 'ஐயா! பசுவைக் காணேன், ஆகிலும் அது பெரிதன்று. சொற்ப விலையில் நமக்குக் குதிரை அகப்பட்டது!' என்று சந்தோஷமாகச் சொன்னான். 'அஃதெப்படி?' என்று குருவும் ஆசையோடே கேட்க, 'காணாமற்போன கறவைப் பசுவைத் தேட ஊருக்கூர் வனத்துக்கு வனம் கொல்லைக்குக் கொல்லை போய் எல்லாம் சோதித்து வருகையில், தேவரீருடைய கடாக்ஷ விசேஷத்தால் ஒரு பெரிய ஏரிகரைச் சார்பிலே நாலைந்து

கோளிகைக் குதிரை (பெட்டைக் கழுதைகள்) மேயவும் கிடக்கவும் கண்டேன் ; அருகே போகப் போக நான் எந்த நாளும் காணுதவை களும் இரு கையாலும் தழுவப்படாதவைகளுமாகிய குதிரை முட்டைகளைக் கண்டு, 'இவைகளென்ன, குதிரைமுட்டைகளோ அல்லவோ!' என்று சந்தேகப்பட்டு அங்கே வந்த ஒருவனைக் கேட்க, 'அவன் குதிரை முட்டைகளே,' என்றும், 'ஒவ்வொன்றின் விலை அதிகமில்லை. நாலைந்து பொன் மாத்திரந்தான்,' என்றும் எனக்குச் சொன்னான் ; ஐயா ! இது நல்ல சமயம் ; சுலபத்திலே ஜாதிக் குதிரைகள் கிடைக்கின்றன. அவைகள் நாமெப்படி வளர்க் கின்றோமோ எப்படிப் பழக்குகின்றோமோ அப்படிக்கெல்லாம் எளிதாய் இணங்கத் தக்கவைகளாகும்,' என்று மட்டி சொல்ல, எல்லாரும் அதுவே சம்மதியாகி, அவனுடனே மடையன் என்பவனைக் கூட்டிக் கையில் ஐந்து பொன் கொடுத்துத் தாமதி யாமல் உடனே பிரயாணப்படுத்தி அனுப்பினார்கள்.

சொன்னபடி மட்டியும் மடையனும் குதிரை முட்டை வாங்கப் புறப்பட்டுப் போன பிறகு, இங்கே மூடன் என்பவன் தன் மனத்தில் ஒரு சந்தேகத்தை நினைத்துக்கொண்டு வந்து மூர்க்கனையும் மிலேச் சனையும் பார்த்து, 'கேட்டீர்களா ! ஒரு சமாசாரம் : மட்டி மடையன் இருவரும் போயிருக்கிறதனால் அவசியம் தடை யில்லாமல் நல்ல ஜாதிக் குதிரை முட்டை வருமென்று வைத்துக் கொள்வோம் ; வந்தால், அடைகாத்த பிறகல்லவோ முட்டை பரிபவிக்கும் ? பரிபவித்த பின்பல்லவோ குதிரைக் குட்டியைக் காணக்கூடும் ? ஆனாலும், ஆர் அடைகாக்கிறது ? அப்பா ! எனக்கு ஒன்றும் தோன்றவில்லை ; அஃது இரு கையாலும் தழுவக் கூடாத அத்தனை பெரிதாய் இருக்கிறதென்றானே ! பத்துப் பதினைந்து கோழிகளை வைத்தாலும் போதாது ; அவைகள் நிற்கவு மாட்டா ; அப்புறம் இதற்குப் போகும் வழியென்ன ? சொல் லுங்கள்,' என்றான். என்ற சொல்லைக் கேட்டு, எல்லோரும் மிகவும் விழிப்பாட்டமாய் ஒருவனொருவனைப் பார்த்து வகை தெரியாமல் வாய் விட்டுப் பேசாமல் இருந்தார்கள். வெகுநேரம் சென்ற பின்பு குருவானவர், 'நமக்குள்ளே ஆராகிலும் ஒருவன் அடைகாத்தாலொழிய வேறே வழி காணுமே !' என்று எதிரே இருந்த மூவரையும் தனித்தனியே கேட்க, அவரவர் ஒவ்வொரு போக்குச் சொல்லத் தலைப்பட்டார்கள். முதலாவது, மூடன், 'தினந்தினம் ஆற்றுக்குப் போய் வேண்டிய தீர்த்தமெல்லாம் கொண்டு வரவும், காட்டுக்குப் போய் வேண்டிய எரிகரும்பு சம்பாதித்துக் கொடுக்கவும் எனக்கு உத்தியோகமாயிருக்க, நான் அடைகாக்கக் கூடுமோ ?' என்றான். இரண்டாவது, மூர்க்கன், 'நான் இரவும் பகலுமாகப் பின் வாங்காமல் மடைப்பள்ளியில் பத்துப் பேருக்குச் சோறுக்கவும், நானாவிதக் கறிகளைச் சமைக்கவும், அதிசயமான பலகாரங்கள் பண்ணவும், வெந்நீர் வைக்கவும், அடுப்பண்டையிலே கிடந்து உழைத்துக்கொண்டு சாகிறேன்

அல்லவோ? ஆதலால், அடைகாக்கிறதற்கு என்னலாகுமோ?' என்றான். மூன்றாவது, மிலேச்சன், 'விடியுமுன் எழுந்திருந்து ஆற்றுக்குப் போய்த் தந்தாவனம் பண்ணி, வாய் கொப்பளித்து, முகம் கழுவிச் சுத்தி செய்து சிரமத்தோடே சந்தியா அனுஷ்டானம் முடித்துக்கொண்ட பிறகு, நந்தவனங்களில் புகுந்து நாளரும்புகள் எடுத்து விந்தை விந்தையாய்த் தொடுத்து விக்கிரகங்களுக்குச் சாத்தித் தூபதீபம் காட்டித் தேவாராதனை புரிதற்கு வேண்டிய உதவி செய்வது என் காரியமாய் இருக்கிறதனால், நான் அடை காக்கிறது எப்படி?' என்றான்.

அதற்குக் குருவானவர், "இதெல்லாம் உள்ளதுதானே? போன மற்றிரண்டு பேர்களாலேயும் ஆகாது; அவர்களில் மடயனுக்கு இங்கே வருகிறவர்கள் போகிறவர்களை விசாரிக்கவும், அவர் பல பேரும் கொண்டுவரும் வழக்குகளைக் கேட்டுத் தீர்க்கவும், எந்நேரமும் முடியாத வேலையாயிருக்கிறது; கடைசியிலே மட்டி என்பவன் எதற்காவது ஏவின சமயத்தில் கடைக்குச் சந்தைக்குப் பேட்டைக்குப் போகிறவன் அல்லவா? ஆகையால், உங்களுக்குள் ஒருவருக்கும் ஒழிவில்லை; நான் மாத்திரந்தான் இங்கே சும்மா இருக்கிறேன். அதனால், நான் அந்த முட்டையை மடியிலே வைத்துக்கொண்டு கையாலே தழுவிப் போர்வையாலே மூடி மார்போடணைத்து அன்போடு பேணிக் கண்ணும் கருத்தும் இடைவிடாது அதனிடத்தில் ஊன்றி நிற்கப் பத்திரமாய் அடை காக்கிறதைவிட எனக்கு வேறே வேலை என்ன? முட்டை பரிபவப் பட்டுக் குதிரையைக் கண்டடைந்தால் அதுவே போதும்; படத்தக்க பிரயாசமெல்லாம் பார்க்கக் கூடாது,' என்றார்.

இந்த ஆலோசனை எல்லாம் மடத்திலே நடக்கும் போது இராத்திரி மூன்றும் ஜாமத்தில் சந்திரோதயத்தோடு புறப்பட்ட மட்டியும் மடயனும் இரண்டரைக் காதவழிக்கு அப்பால் முன் கண்டு குறித்த அடையாளமான இடத்துக்குப் போய், சாம்பல் பூசனிக்காய் திரளாய்க் காய்த்துக் கிடந்த ஏரிகரையைக் கிட்டினார்கள். கிட்டிக் கண்டு மிகவும் களிகூர்ந்து, அங்கிருந்த குடியானவன் அருகில் சென்று, 'அப்பா! இந்தக் குதிரை முட்டைகளில் எங்களுக்கு ஒரு முட்டை அவசியம் கிரயத்துக்குத் தர வேண்டும்,' என்று கெஞ்சிக் கேட்டார்கள். அவன் இவர்கள் மூடத்தனத்தைக் கண்டுகொண்டு, 'ஓ! ஓ! இந்த உத்தம ஜாதிக் குதிரை முட்டையை நீங்கள் விலை கொடுத்து வாங்கத் தக்கவர்களா? இது வெகு விலை பெற்றதாகும்,' என்று சொல்ல, 'போமையா போம்! இதற்கு ஐந்து பொன்தானே உள்ள விலை? நாங்கள் என்ன அறியோமா? எங்களுக்குத் தெரியாதது போல நீர் ஏன் சும்மா உயர்த்தி உயர்த்திப் பாடுகிறீர்? கைம்மேலே இதோ இந்த ஐந்து பொன்னையும் வாங்கிக்கொண்டு நல்ல முட்டையாய் ஒன்று தாருமையா,' என்றார்கள். அதற்கு அந்தப் பயிரிடும்

குடியானவன், 'நீங்கள் நல்ல கிரகஸ்தரென்று தெரிய வருகிறது; உங்கள் சற்குணத்தைப் பற்றி இந்த விலைக்குக் கொடுக்கச் சம்மதிக்கிறேன்; நல்லது; உங்களுக்குச் சரிப்போன ஒரு முட்டையைத் தெரிந்தெடுத்துக்கொண்டு போங்கள்; இவ்வளவு மலிவாய் வாங்கின விலையை மாத்திரம் ஒருவரிடத்திலும் வெளியிடாதிருங்கள்,' என்றான். 'அதைப் பற்றி எங்களுக்கு ஆக வேண்டுவது என்ன? அப்படியே வெளிப்படுத்தவில்லை,' என்று அவர்கள் இருவரும் தங்கள் மனத்துக்கேற்றபடி எல்லாவற்றிலும் பெரியதாக ஒரு காயைத் தேடித் தெரிந்தெடுத்துக்கொண்டு, மறுநாள் அதிகாலமே புலபுலவென்று பொழுது விடியும் முன் சிற்றிருட்டிலே தானே எழுந்து மட்டி தலைமேல் முட்டையை எடுத்துப் பதனமாய் வைத்து வழி காட்டிக்கொண்டு முன்னே போகையில், மட்டி காணுது கண்டதாக அதிசயித்துச் சொல்லத் தொடங்கினான்:

'ஆ! ஆ! பெரியோர்கள் 'எல்லாம் தபோபலத்தால் கைகூடும்' என்பார்கள்; அதற்கத்தாட்சி இப்பொழுது பிரத்தியக்ஷமாகக் கண்டோம்; நம்முடைய குருநாதர் செய்து வருகிற தபோபலம் இதுதான்; நூறு பொன், நூற்றைம்பது பொன் பெறத்தக்க ஜாதிக் குதிரையை மாயப்பொடி தூவிப் பறித்துக்கொண்டு போகிறது போல, நாம் எத்தனை சுலபமாக ஐந்து பொன்னுக்கு வாங்கிக்கொண்டு வருகிறோம் பார்!' என்றான். அதற்கு மடயன், 'இதிலே ஆலோசனை ஏன்?' 'பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்,' என்று சொல்வதை நீ கேட்கவில்லையோ? நமது குரு வானவர் உள்ளபடியே புண்ணியாத்துமா என்பது அவருக்கு இப்பொழுது கிடைத்த இந்தக் குதிரையின் அளவிலேயே உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெரிகிறது; இன்னமொரு திருஷ்டாந்தம்: என் தகப்பன் தான் பரமயோகியன் என்பதும், யோகசாலி என்பதும், தனக்கு நான் கிருஷ்ண விக்கிரகம் போலப் பிள்ளையாய்ப் பிறந்ததனால் அல்லவோ தெளிவாகக் கண்டு பெரு மகிழ்ச்சி கூர்ந்தான்?' என்று சொல்ல, மட்டி, 'அதைக் குறித்தும் சந்தேகமா? விரையொன்று போடச் சுரையொன்று காய்க்குமா? ஆமணக்கு விதைத்தால் ஆச்சா முளைக்குமா? நல்வினை நன்மையைத்தான் தரும்; தீவினை தீமையைத்தான் தரும்,' என்றான்.

இப்படி ஆனந்தத்துடன் பேசிக்கொண்டே வெகு தூரம் நடந்து பின்பு இடுக்கு வழியில் போகும் போது அவ்வழியோரத்தில் சாய்ந்திருந்த ஒரு மரத்தின் கொம்பு குறுக்கே பட்டு மட்டி தலையிலிருந்த சாம்பல் பூசனிக்காய் தவறிக் கீழே நெருங்கிய புதரின்மேல் விழுந்து, அதன் நடுவில் கிடந்த கல்லின்மேல் விசையாய்த் தாக்கித் தகர்ந்து உடைந்தது. அப்போதந்தப் புதரிலே பதுங்கியிருந்த முயல் அதிர்ந்தெழுந்தோடியது. அது கண்டு, 'இதோ முட்டைக்குள்ளிருந்த குட்டிப்பரி ஓடுகிறது!' என்று அபயமிட்டுக் கொண்டு இருவரும் அதைப் பற்றிப் பிடிக்கப் பின் தொடர்ந்

தார்கள். இவர்கள் காடும் செடியும், மேடும் பள்ளமும், கல்லும் கரடும், முள்ளும் முருடும் பாராமல் ஓடவே, உடுத்த வஸ்திரம் செடிகளிலே மாட்டிக் கிழிந்து கயிறு கயிறுய்த் தொங்க, முட்கள் முதுகைத் கிழிக்க, கற்கள் காலிலுறுத்த, உடம்பெல்லாம் காயம் பட, உதிரம் பீரிட்டுப் பாய, ஊற்றிலிருந்து பெருகுவது போல வேர்வை வடிய, நெஞ்சு பதைக்க, காதடைக்க, நாக்கு வறள, தாகம் அதிகரிக்க, குடல் குழம்ப, இரைப்பெடுக்க, பெருமூச்சு வாங்க ஓடியும் முயல் அகப்படாமல் தவித்துத் தடுக்கி விழுந்தார்கள். இதற்குள்ளாக முயல் கண்ணினுல் காணக்கூடாமல் மறைந்து வெகு தூரத்தில் ஓடிப் போய்விட்டது. இவர்களும் இனைப்பைப் பாராமல் எழுந்து கல்லும் முள்ளும் தைத்த காலால் நொண்டி நொண்டி வெயிலிலே நடந்து அங்கங்கே தேடிச் சலித்துப் போய் அன்றைக்கெல்லாம் பசியுடன் பட்டினி கிடந்து அஸ்தமித்த பின்பு மடத்துக்குச் சென்ருர்கள்.

மடத்து வாயிலில் நுழையும் போது, 'அட அப்பா! அட அப்பா!' என்று கூவி, வாயிலிலே மோதி அடித்துக்கொண்டு கீழே விழுந்தார்கள். உள்ளே இருந்தவர்கள் துணுக்குற்று ஓடி வந்து கை தூக்கி எடுத்து, 'என்ன அபாயம் வந்தது?' என்று கேட்க, நடந்த வர்த்தமானமெல்லாம் விவரமாய்ச் சொன்ன பிறகு, மட்டி என்பவன் தனக்குள்ளே அதிசயித்து மற்றவர்களுடனே, 'ஐயா! நான் பிறந்த நாள் முதல் இன்றைய வரையில் ஒருக்காலும் இத்தனை வேகக் குதிரையைக் கண்டதேயில்லை. இது கறுப்புப் பாய்ந்த சாம்பல் நிறமாய் உயரத்திலும் பருமனிலும் முயலை ஒத்ததாய், ஒரு முழ நீளமாய், இன்னும் முட்டைக்குள் கிடக்கும் குட்டியாய் இருந்தாலும், இரு செவியும் விரித்துக்கொண்டு இரண்டு விரற்கடை நீளமுடைய குறுவாலைத் தூக்கி, நிலத்திலே மார்புபட நாலு காலையும் விரித்து நீட்டி ஓடின சுறுக்கும் வேகமும் சொல்லவும் நினைக்கவும் கூடாது,' என்ருன். அதைக் கேட்டு இவர்களெல்லாம் அங்கலாய்த்துக்கொண்டிருக்க, குருவானவர் இவர்களை அமர்த்தி, 'கூண்டோடே போச்சுது குளிரும் காய்ச்சலும்,' என்றது போல, ஐந்து பொன் போனதன்றி, அதனேடு குதிரைக் குட்டியும் போய்விட்டதே! அது தாவனதான். சிறு குட்டியாய் இருக்கும் பொழுதே இப்படிக் கடுமையாய் ஓட்டம் பிடித்தது, இனிமேல் வளர்ந்து பெரியதாகிற போது எப்படிப் பறக்க மாட்டாது? அச்சமில்லாமல் அத்தனைத் திட சித்தமாய் அதன் மேல் யார் ஏறியிருக்கப் போகிறார்கள்? அப்பா! நான் கிழவனுக்கும். அப்படிப்பட்ட வாயு வேகக் குதிரை பணச் செலவில்லாமல் சும்மா இலவசத்தில் வந்தாலும் தீர எனக்கு வேண்டா,' என்ருர்.

மூன்றாவது

வாடகை மாடேறிப் போனது

பல நாள் சென்ற பின்பு தூர பயணம் போகும்படி அவசரம் உண்டாயிற்று. சீஷர்கள், 'அவ்வளவு தூரம் நம்முடைய குரு வானவர் கால்நடையாகப் போக முடியாது; அதிக பிரயாசமாம்,' என்று ஒரு மோழை மாடு வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வந்தார்கள். அதற்கு வாடகை நாளொன்றுக்கு மூன்று பணம் கொடுக்கத் தீர்த்துப் பல அலுவலினூலே விடிந்ததன்மேல் ஒரு ஜாமம் கடந்த பின் குருவும் சீஷர்களும் பயணம் புறப்பட்டுப் போனார்கள். கடுவேனிலென்னும் கோடை காலம் ஆகையால், அவர்கள் நடக்க நடக்கக் கொள்ளி கொண்டு சுடுகிறது போலச் சுள்ளு சுள்ளென வெயிலெறிக்க, மரம் மட்டு, குளம் குட்டை இல்லாமையால் உண்ண நீரும் ஒதுங்க நிழலும் கிடையாத வெட்ட வெளியாகிய பாலை நிலத்தில் அகப்பட்டுக்கொண்டார்கள். அப்படியே போகப் போக அகோரமும் கடூரமுமான வெயிலின் வெப்பம் பொறுமல் பசிய இளங்கீரைத்தண்டு போலக் கிழக் குருக்கள் துவண்டு கீழே விழத் தலைப்பட்டார். அதைக் கண்டு சீஷர்கள் மாட்டை நிறுத்தி அவரை இறக்கி, அவர் வெப்பத்தை ஆற்றுவதற்கு நிழல் எங்கும் இல்லாமையால் நிறுத்தப்பட்ட மாட்டின் நிழலிலே தரையில் துணியை விரித்துப் போட்டுக் கிடத்தி, விசிறி இல்லாததனூல் வஸ்திரத்தினூலே விசிறிக்கொண் டிருந்தார்கள். அவருக்கு அதிலே கொஞ்சம் ஆறுதலான பிறகு குளிர்ந்த காற்று வீச, மறுபடியும் மாட்டின் மேலேற்றி மெள்ள மெள்ள நடத்திக்கொண்டு போய்ப் பொழுது போகுமுன்னே ஒரு சிற்றூரில் சென்று இறங்கினார்கள். அங்கே ஒரு சிறிய வீட்டின் நடையில் போயிருக்கும்படி வாசலுக்குள் நுழைந்தவுடனே மாட்டுக்காரனுக்கு மூன்று பணத்தை எடுத்துக் கொடுத்தார்கள். அவன், 'இது போதாது,' என்றான், 'இஃதென்ன? முன் உன்னேடே பேசிச் சம்மதித்த நாட்கூலி மூன்று பணந்தானல் லவோ?' என்று அவர்கள் சொல்ல, அவன் மறுத்து, 'மாடு வாகன மாய் ஏறிப் போவதற்காக உதவினதற்கு இந்தக் கூலி பொருந்தி னது சரிதான்; பிறகு நடு வழியில் வெயிலுக்குக் குடையாக உதவினதற்குக் கூலி கொடுக்க வேண்டாவா?' என்று கூச்சல் போட, 'இஃது அநியாயம்! அநியாயம்!' என்று அவர்கள் கோபித்துக் கடூரமாய்ப் பேச, அப்புறம் மாட்டுக்காரனுக்கும் அவர் களுக்கும் சண்டையாய்ப் பெரிய ஆரவாரம் உண்டானதனூல், ஊரார் அறிந்து ஆண் பெண் பெரியோர் சிறியோரெல்லாரும் ஒரு கூட்டமாகக் கூடி மொய்த்து வந்தார்கள். அவர்களில் நியாயக் காரன் ஒருவன் சந்தடியை விலக்கி வந்து கூச்சலை அடக்கி, இரு திறத்தார் வழக்கையும் விசாரித்து, 'நல்லது, நான் சொல்லுகிற

தீர்ப்புக்குள்ளாவீர்களோ? உங்கள் சம்மதியென்ன? சொல்லுங்கள்,' என்று கேட்டுப் பின்பு சொல்லத் தொடங்கினன் :

'நான் சில நாளுக்கு முன் தூரதேசத்துக்குப் பிரயாண மாய்ப் போகையில் நடுவழியிலே ஒரு ராத்திரி ஓரூரில் ஒரு பெரிய விடுதியில் தங்கினேன் ; அங்கே வந்தவர்களுக்கெல்லாம் வசிக்கும் இடம் குடிக்கூலிக்கு விடுவதன்றிச் சாப்பிடுகிறதற்கு வேண்டிய சோறு கறி முதலானவைகளும் கிரயத்துக்குக் கொடுப்பார்கள் ; ஆகையால், 'உனக்கு ஏதாவது வேண்டுமா ?' என்று அவர்கள் என்னைக் கேட்ட பொழுது, எனக்குச் செலவுக்குப் பணமில்லாமையால், 'நான் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு வந்திருக்கிறேன் ; வேறொன்றும் தேவையில்லை,' என்றேன் ; அத்தருணத்தில் அங்கு வந்த மற்றவர்களுக்கு ஒரு பெரிய ஆட்டுத் தொடையை இருப்புச் சலாகையில் கோத்து நெய் தடவித் தணலின்மேல் காட்டிப் பக்குவமாய்ச் சுழற்றிச் சுட்டார்கள் ; அது சிவக்க வேகவேக அதில் பூசிய நெய் உருகி நெருப்பில் துளித்துப் புகையத் தலைப்பட்டது ; அப்போது அதன் வாசனை அதிக ரம்மியமான பரிமளமாயிருந்தது ; நான் கொண்டு வந்த கட்டுச்சாதத்தை அந்த மணத்தோடே சாப்பிடுகிறது நல்ல தென்று நினைத்து அதை அப்படியே சற்று நேரம் சுழற்றிக் கொண்டிருக்கும்படி உத்தரவு கேட்டேன் ; அவ்வாறே சுழற்றிக் கொண்டிருக்க, நான் சாதத்தை அவிழ்த்தெடுத்துச் சீலையோடே ஒரு கையால் அந்தப் புகையின்மேல் பிடித்து, மற்றொரு கையால் சீக்கிரமாய் அள்ளியள்ளி அவ்வாசனையிலேயே இன்ப மாய்ச் சாப்பிட்டேன் ; பிறகு போக வேண்டுமென்று இருக்கையில் விடுதிக்காரன் வாசனை முகந்ததற்காகக் கூலி கேட்டான். நான் 'அதற்கேது கூலி ?' என்றேன் ; அவன், 'கொடுக்க வேண்டும்,' என்றான் ; நான், 'கொடுக்கிறதில்லை,' என்று எழுந்து நடந் தேன் ; 'அவன், 'நீ கொடாமல் போகக்கூடாது !' என்று ஆணை யிட்டுத் தடுத்தான் ; இந்தப்படி இருவரும் வழக்கிட்டு அந்த ஊர் அதிகாரியண்டைக்குப் பிராதுக்குப் போனோம் ; அவனோ, பூரணபண்டிதன் ; சகல சாஸ்திர நிபுணன் ; அதிக புத்திமான் ; மகா சமர்த்தன் ; மிகவும் நியாய சூக்ஷ்மம் தெரிந்தவன் ; அந்த மகானுபாவன் பண்ணின நியாயத் தீர்ப்புக் கேளுங்கள் : 'கறி தின்றதற்கு வீலை பணமும், கறிமணம் முகந்ததற்கு வீலை பணத் தின் மணமுமாகும். இதுதான் தீர்ப்பு,' என்று, விடுதிக்காரனை அருகே அழைத்துப் பணம் நிறைந்த பையை எடுத்து அவன் மூக்கிலே அழுந்த உரைத்துத் தெய்த்தான் ; அவனும், 'மூக்குப் போயிற்று ! ஐயோ ! மூக்குப் போயிற்று ! இந்த மட்டில் வந்த கூலி போதும் ! போதும் !!' என்றான். பார்த்தீர்களா ! இதுவே நல்ல நியாயமும் உத்தம நீதியுமாம் அல்லவா ? இந்தத் தீர்ப்புத் தான் உங்களுக்கும் ; எப்படியென்றால், 'மாடேறி வந்ததற்குக் கூலி பணமும், மாட்டின் நிழலிலிருந்ததற்குக் கூலி பணத்தின்

நிழலும் போதுமானவை ; ஆகிலும் மாட்டுநிழல் கூலிக்கு இப்போது அஸ்தமித்ததனுல் பணநிழல் அகப்படாது, அதற்குப் பதிலாகப் பணச் சத்தத்தை ஒத்துக்கொள்,' என்று சொல்லி, அவனைச் சிக்கெனப் பிடித்துப் பணப்பையைத் தூக்கி அவன் காதிலே உரமாகத் தாக்கும்படி அதனுல் மோதியடித்துப் 'பணச்சத்தம் கேட்டையா ?' என்றுன் ; அவனும், 'ஆமையா ! ஆமையா ! கேட்டேன்! கேட்டேன்! காது நோகிறது! போதும் கூலி! போதும், அப்பா ! உனக்குப் புண்ணியமாய்ப் போகிறது, என்னை விட்டு விடு,' என்றுன். அந்தச் சமயத்தில் அவனைப் பார்த்துக் குருவும், 'உன் மாடு எனக்குப் போதும் ; இந்தச் சஞ்சலம் இனி ஆகாது ; நீ மாட்டை ஓட்டிக்கொண்டு போ. இன்னும் கொஞ்சம் தூரந் தான் பயணம் போக வேண்டும் ; காலமே மெள்ள நடந்து போகிறேன்,' என்று அவனைப் போகச் சொல்லிப் பின்பு நியாயக் காரனைப் பார்த்து, 'ஐயா ! நீர் எங்கள் வழக்கைப் பாரபட்ச மில்லாமல் எள்ளுக்காய் பிளந்தாற்போலச் சரியாய்த் தீர்த்தீர் !' என்று அவனைப் புகழ்ந்து ஆசீர்வதித்தனுப்பினர்.

நான்காவது

குதிரை பிடிக்கத் தூண்டில் போட்டது

மறுநாள் குருவும் சீடரும் வெயிலுக்குப் பயந்து கோழி கூவின உடனே எழுந்து ஆயத்தம் செய்து புறப்பட்டார்கள். தளர்ந்த நடையாய் நடந்து போகிறதனுலே காத வழிகூட இன்னும் கடக்காததற்குள்ளே வெயிலேறினதைக் கண்டு, ஒரு குளிர்ச்சியான சோலையில் இறங்கினர்கள். அங்கே இளைப்பாறிக் கொண்டிருக்கையில் மிலேச்சன் என்பவன் மலோபாதைக்குப் போய்ச் சமீபமாயிருந்த ஏரியில் கால் சுழுவப் போனன்

கரையின்மேல் ஐயனுர் கோயில் இருந்தது. அதிலே ஆரோ ஐயனுரப்பனைக் குறித்துப் பிரார்த்தனை செய்து, மண்ணினுல் புதிதாய்ப் பண்ணிச் சுட்டு வர்ணம் தீர்ந்த ஒரு பெரிய குதிரை யைக் கொண்டு வந்து செலுத்தி இருந்தார்கள். அந்த மண் குதிரையின் நிழல் ஏரி நிறையத் தெளிந்திருந்த தண்ணீரில் காணப்பட்டது. அதை ஏரியில் காலலம்பப் போன மிலேச்சன் கண்டு தண்ணீருக்குள்ளே குதிரை நிற்கிறதென்று நினைத்து அதிசயப்பட்டு, பின்பு கரையிலே நிற்கும் மண் குதிரைக்குச் சரியொத்த நிறமும் உயரமும் பருமனும் சாயலுமாய் இருக்கக் கண்டதனுல் தண்ணீரிலே தோன்றினது அதன் நிழலாயிருக்க வேண்டுமென்று சமுசயப்பட்டான்.

சமுசயப்பட்டாலும், அப்போது அடித்த காற்றினுல் தண்ணீரசைய அதிலே காணப்பட்ட குதிரை நிழலும் அசையத்

தலைப்பட்டது. அதைப் பார்த்துக் கரைமேலிருக்கும் குதிரையைப் பார்க்கும் பொழுது அஃது அசைவொன்றும் இல்லாது இருந்த தனால், நீருக்குள் நிற்கும் குதிரை வேறென்றும், உயிருள்ள தென்றும் நிச்சயம் பண்ணினான். பின்னும் அதை ஓட்டுகிறதற்கு எத்தனப்பட்டு, வாயினால் கூச்சல் போட்டுக் கல்லெடுத்துக்கொண்டு எறிந்தான். எறிந்த மாத்திரத்தில் தண்ணீர் அதிகமாயாடி அலைந் தெழும்பக் குதிரையும் தலை எடுத்துக் காலுதறி உடல் துடித்துத் துள்ளினதாக இவன் கண்ணுக்குத் தோன்றினதனால் பயந்து, காலும் அலம்பாமல் மற்றவர்களிடத்தில் ஓடி வந்து தான் கண்டதை எல்லாம் சொன்னான்.

அந்தப் புதுமையைக் கேட்டு எல்லோரும் திடீரென்று எழுந்து ஓடிப் போய் ஏரிக்குள் சுற்றிப் பார்க்குமிடத்தில் மிலேச்சன் சொன்னது மெய்யென்று நம்பிக்கொண்டு, 'தண் ணீரில் இறங்கினால் தவளை கடிக்கும்,' என்பவர் போல, அவர்கள் ஏரி நீரிலிறங்கப் பயந்து, இறங்காமல் அதற்குள்ளிருக்கிற குதிரை யைப் பிடிக்கும்படிக்கு ஆலோசனை பண்ணத் தொடங்கினார்கள். அவர்களில் ஒருவன், 'கொள்ளைச் கண்டால் வாயைத் திறக்கிறது குதிரைக்குச் சுபாவமாகையால், கொள்ளை வேவித்து வைத்தால் அந்த வாசனையைக்கண்டு அதைக் குதிரை தின்னுகிறதற்கு மேலே வரும். அப்பொழுது பிடித்துக்கொள்ளலாம்,' என்றான்; மற்றொருவன், 'பசுமையாயிருக்கிற ஒரு பிடி அறுகம்புல்லைப் பிடுங்கிக்கொண்டு போய்த் தண்ணீருக்கு மேலே காட்டினால் குதிரை அதைத் தாவி எழும்பும், அந்நேரத்தில் பற்றிக்கொள்ள லாம்,' என்றான்; பின்னொருவன், 'பெட்டைக் குதிரை கனைக் கிறது போலக் கரைமேல் இருந்தபடி கனைத்தால் குதிரை காமவெறி கொண்டு மேலே கிளம்பும், அந்தச் சமயத்தில் தப்பாமல் கைவசப்படுத்திக்கொள்ளலாம்,' என்றான்; இன்னு மொருவன், 'எருமை போய் ஏரியில் விழுந்தால் தவளை தானே குதித்தோடும்,' என்பதனால், 'எருமைக்கடாவை ஓட்டிக்கொண்டு போய்த் தண்ணீரில் விட்டால் அது நாலுபக்கமும் ஓடியாடிக் குதிக்கும்? அந்த உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் குதிரை கரையேறி வரும்; அத்தருணத்தில் வருத்தமில்லாமல் பிடித் துக்கொள்ளலாம்,' என்றான்; இப்படி நாலு பேரும் சொன்ன உபாயங்களெல்லாம் தனக்குச் சம்மதியாததனால், மிலேச்சன், 'சரி அன்று' என்று மறுத்து, 'நானொரு உபாயம் சொல்லு கிறேன், கேளுங்கள்: தூண்டில் போட்டு மீன் பிடிக்கிறது போல இதையும் பிடித்துக் கரைமேல் இழுக்க வேண்டும்,' என்றான். அதற்கு அவர்களெல்லாம், 'ஆம், ஆம், இது நல்ல உபாயந் தான்!' என்று உடன்பட்டார்கள்.

தங்களுக்குள் ஒருவன் வைத்திருந்த கருக்கரிவாளைத் தூண்டில் முள்ளாகவும், வழியில் உண்ணுகிறதற்குத் தாங்கள் கொண்டுவந்த கட்டுச்சாதத்தைத் தூண்டிலின் இரையாகவும்,

குருவானவர் கட்டியிருந்த தலைப்பாகையைத் தூண்டில் கயிறுகவும், அவர் கையிலே பிடிக்கிற ரிஷபவுருச் செய்து வைத்த பித்தளைப்பூண் கட்டிய தடியைத் தூண்டில் கோலாகவும் ஆயத்தப்படுத்தி, எப்படியாவது, நினைத்த காரியத்தை முடிக்க வேண்டுமென்று தீர்மானித்து, அப்படியே கட்டுச்சோற்று மூட்டையைக் கருக்கிவாளின் முனையிலே கோத்து, அடியிலே தலைப்பாகையைக் கட்டி, அதைத் தடியிலே சுற்றி முடிந்து, தண்ணீர்க்குள் குதிரை காண்கிற இடத்தில் எறிந்தார்கள். அது தொப்பென்று விழுந்து விசையோடு மிகவும் தண்ணீர் ததும்பினதனால், அங்கே தோன்றின குதிரையும் துள்ளி எழுந்து நெளித்துக் குதித்துக் கிளம்பினது போலக் கண்டதனால் எல்லோரும் பயந்தோடினார்கள்.

முண்டாசியைத் தொடுத்த தடியைப் பிடித்திருந்த ஒருவன் மாத்திரம் அதைக் கைவிட்டோடாமல் நின்றான். ஏரியின் அலை அமர்ந்த பின்பு அதிலுள்ள பெரிய மீன்கள் மெள்ள மெள்ள அணுகிக் கட்டுச்சாத மூட்டையைக் கடித்திழுத்த ஜாடையைக் கண்டு, கைச்சைகை செய்து மற்றவர்களை அழைத்துக் 'குதிரை இதோ இப்பொழுதுதான் இரையைக் கடிக்கிறது,' என்றான். சற்று நேரம் போன பிறகு தலைப்பாகையை இழுக்கச் சீலையும் சாதமும் போனதனால் பாகையுடனே கட்டின கருக்கரி வாளானது அங்கே மூளைத்திருந்த ஏரிக்கோரையில் மாட்டிக் கொண்டது. அவன் அது குதிரை வாயில் மாட்டிக்கொண்டதாக நினைத்துக் 'குதிரை வாயில் தூண்டில் மாட்டின போதே குதிரை நம்முடையதாய்விட்டது!' என்று சந்தோஷமாய்க் கூப்பிட, அனைவரும் கூடி வந்து தலைப்பாகையைப் பிடித்திழுக்கப் பாகை பழையதாகையால் அற்றுப் போயிற்று. எல்லோரும் ஒருமிக்க மல்லாக்காய்க் கீழே விழுந்தார்கள்.

இப்படியவர்கள் விழுந்த தறுவாயில் ஒரு கிருகஸ்தன் வந்து, 'இஃதென்ன?' என்று கேட்க, எல்லாவற்றையும் ஒழுங்குபடச் சொன்னார்கள். அது கேட்டு அவன் இவர்கள் மவட்டியத்தைக்கண்டு கரைமேலே இருந்த குதிரையை வஸ்திரத்தினாலே மறைக்க நீருள் குதிரை மறைந்தது. அதை அவர்களுக்குக் காட்டி அந்த மயக்கத்தை நீக்கினான்.

அப்போது அவர்கள் தங்கள் குருவை அவனுக்குக் காட்டி, 'ஐயா! எங்கள் குருசுவாமியார் தளர்ந்த வயதாகையால் ஏறிப் போவதற்குக் குதிரை ஆவசியகமாயிருக்கிறது; அது கொள்ளு தற்குப் போதுமான பணமில்லாததனாலே சுளுவிலே அதன் முட்டை வாங்கினேம்; அது சேதமாய்விட்டது; பின்பு வாடகை மாடு வைத்து, அதனிமித்தம் வெகுவாகச் சஞ்சலப்பட்டோம்; இப்பொழுது இப்படியாயிற்று,' என்று எல்லாம் விவரமாய் அவனுக்குச் சொன்னார்கள். அவன் இவர்கள் கபடமறியாத

நல்ல மனிதர்களென்று கண்டு, மனம் இரங்கி, ‘ என்னிடத்தில் ஒரு நொண்டிக் கிழக்குதிரை உண்டு, அது உங்கள் வழிப் பயணத்துக்கு உதவும். அதற்காக நீங்கள் பணங்காசு கொடுக்க வேண்டுவதில்லை. நான் இலவசமாகத் தருகிறேன், என் ஊருக்கு வாருங்கள்,’ என்று அழைத்துக்கொண்டு போனான்.

ஐந்தாவது

குதிரையேறிப் போனது

அந்த மனிதன் திரவியஸ்தனல்லாத ஏழையானாலும் தர்மிஷ்டனாகையால், அவர்களைச் சொன்னபடியே சமீபத்திலிருந்த தன்னூருக்கு அழைத்துக்கொண்டு போய், அன்றிராத்திரி அவர்களுக்கு நெய் பால் தயிர் முதலானவைகளில் குறைவில்லாமல் போஜனம் விசாரித்துச் சாப்பிட்ட பிறகு, வெற்றிலை பாக்குப் புகையிலை முதலானவைகளும் சம்பிரமமாய்க் கொடுத்தான்.

மறு நாள் காலமே அவன் கொல்லை வெளியில் மேய்ந்து கொண்டிருந்த நாட்டுத் தட்டாகிய ஒரு குதிரையைப் பிடித்துக் கொண்டு வந்து குருவுக்கு முன்பாக விட்டு, அதை அவருக்குக் காணிக்கையாகக் கொடுத்தான். கொடுத்த குதிரையோ, வயது சென்ற கிழமும், ஒரு கண் பொட்டையும், ஒரு காது மூளியும், முன்காலில் ஒருகால் நொண்டியும், பின் கால் முட்டிக் காலுமான குரூபமாய் அந்தக் கிழக் குருவுக்குத்தக்க வாகனகாய் இருந்தது. எப்படி இருந்தாலும் குதிரை பணச் செலவில்லாமல் இலவசத்தில் அகப்பட்டதேயென்று எல்லாரும் அதிக மகிழ்ச்சி கூர்ந்தார்கள். மட்டி குதிரையைச் சுற்றி வந்து தடவியும், மடயன் அதன் நொண்டிக்காலைப் பிடித்திழுத்து முறுக்கியும், மூடன் மொட்டை வாலைப் பற்றி உருவியும், மூர்க்கன் நொள்ளைக் கண்ணைத் துடைத்தும், மிலேச்சன் பசும்புல்லைக் கொண்டு வந்து வாயிலே கொடுத்தும் இவ்விதமாக அதை மிகவும் பாராட்டிக்கொண்டிருந்தார்கள். அதற்குமேல் குதிரை முஸ்திப்புத் தேடத் தலைப்பட்டார்கள். குதிரை கொடுத்தவன் பீற்றலாயிருந்த ஒரு பழஞ்சேணத்தைக் கொடுத்தான். அதில் குதிரை வாலின் கீழ் மாட்டப்படும் பின் தட்டுவாரில்லாததனால் பாலைக்கொடியைத் திரித்துக் கட்டினார்கள். அப்படியே கடிவாளத்துக்கு வாரில்லாமையால், ‘ வழியிலே கண்ட குதிரைக்கு வைக்கோற்புரி கடிவாளம்,’ என்ற பழமொழிப்படி பழுதையை முடிந்து வைத்தார்கள். தங்கப்பட்டையும் இறுக்குவாரும் சம்பாதிக்க வெகு பிரயாசப்பட்டும் கிடையாதனால் மடத்துக்குச் சமீபத்திலிருந்த பேட்டைக்குப் போய் அவ்விரண்டும் முன்கால் பின்கால்களில் கட்டுகிற அசாடிபிசாடிக் கயிறுகளும் வாங்கிக்கொண்டு வந்தார்கள். இப்படி முஸ்திப்பெல்லாம்

அமைத்த பின்பு, குதிரைச் சவாரி பண்ணுகிறதற்கு ஜோதிட முறைப்படி வாரசூலையைத் தள்ளி அமிர்தயோகமான சுப முகூர்த்தம் ஒன்று நிருணயம் பண்ணினார்கள். அந்நேரத்தில், 'ஊர்கூடிச் செக்குத் தள்ளுகிறது,' போல ஊராரெல்லாம் வந்து கூடிப் பேரிரைச்சலிட்டு வாழ்த்திப் பரமார்த்த குருவை முதல் குதிரைமேல் ஏற்றி வைத்தார்கள். அப்பொழுது,

"முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி."

என்கிறபடியே ஐந்து சீஷர்களில் ஒருவன் முன்புறத்தில் இருந்து கடிவாளத்தைப் பிடித்திழுக்க, ஒருவன் பின்புறத்திலிருந்து வாலைப் பிடித்து முறுக்கி அதட்டி ஓட்ட, இருவர் பக்கங்களிருந்து குருவின் கால்களைக் கைலாகு கொடுத்துத் தாங்க, ஒருவன் முன்னே, 'பரமார்த்தகுரு வருகிறார் பராக்கு (எச்சரிக்கை)!' என்று கட்டியம் கூறிப் பராபரி பண்ணக் கிழக் குருவானவர் மகா சம்பிரமத்துடனே குதிரை சவாரி பண்ணினார்.

இந்தப் பஞ்சதாளக் குதிரையின்மேல் உல்லாசமாக உடல் பூரிக்க வெகுதூரம்போன பிறகு நடுவழியில் வழிச்சாரி ஆயக்காரன் ஒருவன் கண்டு ஓடி வந்து மறித்தான். இவர்கள் 'ஏன் மறிக்கிறாய்?' என்றார்கள். அவன், 'குதிரைக்கு ஐந்து பணம் ஆயம் கொடுக்க வேண்டும். அது கொடாமல் போகக் கூடாது,' என்றான்.

அதற்கு இவர்கள், 'இஃதென்ன புதுமை! குருவேறின குதிரைக்கும் ஆயமுண்டா? வியாபார சம்பந்தமா? உத்தியோக சம்பந்தமா? அவையெல்லாம் அல்லவே! எங்கள் குரு முதிர்ந்த வயதாய்ச் சரீரம் தளர்ந்திருக்கின்றதனால் கால்நடையாய் நடக்க மாட்டாததைக் கண்டு ஒரு புண்ணியவான் தர்மத்துக்குக் கொடுத்த குதிரையாக்குமிது; இதற்கு ஆயம் வாங்கினதை நாங்கள் எங்கும் கண்டதில்லை; ஆனாலும் அநியாயம்!' என்று அவர்கள் கூச்சல் போட, அவன், 'அநியாயமோ நியாயமோ! எனக் கொன்றும் தெரியாது! பணத்தைக் கொடுத்துவிட்டுத்தான் போகவேண்டும்,' என்று மத்தியானமட்டும்மறியலில் வைத்து, 'விடமாட்டேன்' என்றதனால், தப்பிப் போக வேறே வழி காணுமல், 'நாம் கொடாக்கண்டராய் இருந்தாலும், இவன் விடாக்கண்டனாய் இருக்கிறானே! ஐயோ! வீண் தண்டமிது!' என்று ஐந்து பணம் கொடுத்தார்கள். அவன் விட்டுவிட்டான்.

குரு, 'குதிரையில்லாவிட்டால் இந்தச் சஞ்சலம் வரமாட்டாது அல்லவா!' என்று மிகவும் தம்மைத் தாமே வெறுத்துக்கொண்டு பின்பு இளைப்பாறும்படி சீஷர்களுடனே கிட்டவிருந்த சாவடிக்குப் போனார். அங்கே எதிர்பட்ட ஒரு கிருகஸ்தனைடே குருவானவர்

தாமே வலுவில் முறையிட்டுக்கொள்ளத் தொடங்கினர் ; 'அப்பா! நான் பிறந்தநாள் தொட்டு இது வரையில் ஒருக்காலும் குதிரை ஏறினதில்லை ; ' ஒருநாளும் சிரியாதவன் திருநாளில் சிரித்தான்,' என்பது போல, இன்றைக்குத்தான் முதல்முதல் குதிரையேறி வந்தேன் ; வந்தவிடத்தில் இந்த அநியாயம் நடந்தது ; இப்படி நீதியில்லாமல் வழி பறிக்கிற கள்ளனைப் போல நிஷ்டூரமாய்ச் சம்பாதிக்கிற பணம் ஆருக்காவது நன்மையாய் இருக்குமா ? என் வயிறெரிய வாங்கின பணம் அவனுக்குச் செரிக்குமா ? நெருப்பாய் மூளாதா ?' என்றார். அது கேட்டு அவன், ' ஐயா பெரியவரே ! இது காலத்தின் சுபாவம் ; இந்நாளில் பணமே குரு ; பணமே தெய்வம் ; ' பணமென்றால் பிணமும் வாயைத் திறக்கும்,' என்பது முன்பு கேட்டோம்; இப்போது, 'பணம் பந்தியிலே குலம் குப்பையிலே ' என்பதற்குச் சரியாய்ப் பணத்தைவிட வேறே உறவும் சினேகமும் இல்லையாக்கும்,' என்றான். இதற்கேற்கக் குருவும், ' அப்பா ! இந்தக் காலத்திலே கஷ்டத்தில் அரைக்காசு கிடக்கக்கண்டாலும் அதை நாக்காலே நக்கி எடுக்கக் கூசார்கள்,' என்று சொன்னார். அவனும், 'சந்தேகமா? அப்படி நக்கி எடுக்கும் பொழுது அஃது அவர்களுக்கு நாறுதையா! இதற்கு ஓர் அத்தாக்ஷி கேளும்,' என்று சொல்லுகிறான் :

'ஓர் இராஜா பணத்தாசையினாலே தன் சீமையில் ஒரு பொழுதும் இல்லாத வரியெல்லாம் ஏற்படுத்தி வைத்து, அதன் பின்பு மூத்திர வரியும் வைத்தான். அஃது அவன் மகனுக்குச் சம்மதியாமல், ' குடிகளிடத்தில் இந்த நாறுகிற வரி கேட்டு வாங்குகிறது லச்சைக் கேடாய் இருக்கிறது,' என்று தகப்பனுக்குச் சொல்ல, இராஜா மகனுக்கு அப்பொழுது மறுமொழி சொல்லாமல் இருந்து பலநாள் போக வைத்து வரிப்பணம் பொக்கிஷம் நிறையச் சேர்ந்த பின், மகனை இராஜா அழைப்பித்து, அந்தப் பணத்தை முகரச் சொல்லி, ' நாறுகிறதோ ?' என்று கேட்டான். மகன் வேறென்றும் நினையாமல், ' நாறவில்லை, மணக்கிறது,' என்றான். இராஜா, 'இது மூத்திர வரிப் பணமாக்கும்,' என்றான். கேட்டீரோ ? பணம் வந்தால் போதும் ; அஃது எப்படி வந்தாலும் பாரமன்று ஐயா !' என்றான்.

இவ்வாறு பல பேச்சுக்கள் பேசிக்கொண்டிருந்து பொழுது போக்கினபின் சாயங்காலத்தில் மீளவும் குதிரை ஏறிப் போய் ஒரு பட்டிக்காட்டிலே தங்கினார்கள். அன்றிராத்திரி குதிரையைக் கட்டாமல் மேயவிட்டுக் காலமே பயணத்துக்குத் தேடினவிடத்தில் அகப்படாமையால், மூர்க்கன் வீட்டுக்கு வீடு நுழைந்து பார்க்கையில், அதை ஒருவன் தன் வளவில் கட்டி வைத்திருந்தான். இவன் அதை விடச் சொன்னவிடத்தில், அவன், ' இராத்திரி முப்பது நாழிகையும் என் பயிரில் மேய்ந்தது ; எனக்கு வெகு சேதமாயிற்று; அதனால், பயிர்ச் சேதம் விடமாட்டேன்,' என்றான். அதைக் குறித்து அடுத்த ஊர் நாட்டானே போய் நயபயமாய்ச் சொல்லி அமர்த்தி

யும், அவன், 'பயிர்ச்சேதம் கொடுத்தால்தான் நான் குதிரையை விடச் சம்மதிப்பேன்,' என்ருன். நாலு பேரும் கூடிக் குதிரை மேய்ந்த கொல்லையைப் பார்த்து மிதித்தது மேய்ந்ததெல்லாம் மதித்துப் பத்துப் பணத்துச் சேதம் எட்டுப் பணத்துச் சேதம் உண் டென்று சொல்லக் கடைசியிலே தீர்ந்தபடிக்கு நாலு பணத்தை வாங்கிக்கொண்டு குதிரையை விட்டுவிட்டான்.

குருவோ என்ருல், வெகுவாய்ச் சலித்துக்கொண்டு, 'நமக்கு இந்தக் குதிரை என்னத்துக்கு? இது வத்ததனுலே பணச் செலவுகள் எத்தனை? சஞ்சலங்கள் எத்தனை? சங்கைக் கேடுகள் எத்தனை? இவைகளெல்லாம் நமது மகிமைக்குத் தகாவப்பா,' என்று கால் நடையாய்ப் போகத் துணிந்தார். அதற்குச் சீஷர்கள், 'ஆ! ஆ! அது சரியன்று,' என்றும், 'கால்நடை நடக்க உம்மால் ஆகாது!' என்றும், சொல்லிக்கொண்டிருக்க, அவ்விடத்தில் ஒரு வள்ளுவப் பண்டாரம் இவையெல்லாம் கேட்டுக் கிட்ட வந்து, 'கவலைப்பட வேண்டா ஐயா,' என்ருன். மேலும் அவன், 'இந்தக் கஷ்ட நஷ்டங்களெல்லாம் குதிரையைப் பிடித்த தோஷத்தினுல் வந்தன வாக்கும்; செலவோடே செலவாக எனக்கு ஐந்து பணம் கொடுத் தால், நான் கிரகசாந்தி செய்து அந்தத் தோஷத்தை நிவர்த்தியாக்கி விடுகிறேன்,' என்ருன். இவர்கள் செலவுக்காக அஞ்சிப் பார்ப்பது காரியமன்றென்று நினைத்துப் பணம் கொடுக்கச் சம்மதித்துத் தோஷத்தைக் கழிக்கச் சொன்னர்கள்.

அப்பொழுது அந்த வள்ளுவன், 'இவர்கள் நமது வலையில் சிக்கினர்கள்; ஆகையால், இவர்களைச் சந்தேகமில்லாமல் நாம் ஏய்க்கலாம்,' என்று நிச்சயித்துப் பணத்தை முன்னே கொடுக்கச் சொல்லிக் கற்றிக்கொண்டு, அவர்கள் கண்ணுக்கு முன்பாகப் பல விதத் தாட்டோட்டமான சடங்குகளைச் செய்து, நாலுவிதப் பச்சிலை களையும் பறித்து அபிமந்திரித்து எறிகிறது போலக் குதிரைமேல் எறிந்து, உரக்கப் பேசாமல் மெதுவாய் மிணமிணவென்ற சத்த மாக, 'ஆ ஊ ஐயும் கிலியும் சௌவும் ஓம் சுவாகா!' என்று அனேக முறை உச்சரித்து, மும்முறை குதிரையைப் பிரதக்ஷிணம் வந்து, வால் முதல் தலை பரியந்தம் அதைத் தடவி, அதன் ஒற்றைக் காதைக் கையினுல் பிடித்துக்கொண்டு, 'இந்தக் காதிலேயாக்கும் தோஷமெல்லாம் தங்கி நிற்கிறது; இப்படிப்பட்ட தோஷத்தைக் கழிக்கத்தான் அந்நாளில் அந்தக் காதை அறுத்தார்கள். இப் பொழுது இந்தக் காதையும் அறுத்துப் போட்டால் இந்நாளில் வந்த தோஷமும் அற்றுப் போம்,' என்ருன். உடனே வெட்டரி வாளைத் தீட்டிக்கொண்டு அந்த ஒரு காதையும் திடீரென்று அறுத்துத் தோஷம் தொடராதபடி தூரக் கொண்டு போய் ஆழக் குழி தோண்டிப் புதைத்து மேலே மண் போட்டுக் குறி செய்து விட்டு வந்தார்கள். இதிலே அன்றெல்லாம் சென்றதனுல் மறு நாள் காலமே வெகு தொந்தரவுபட்டு மடத்துக்குச் சென்ருர்கள்.

ஆறுவது

பிராமணன் ஜோசியம் சொன்னது

மடத்துக்குப் போன பிறகு குருவானவர் வெகுவாய் விசனப்பட்டார். 'நமக்குக் கிடைத்த குதிரை குரூபமான குதிரையாய் இருந்தும் பணச் செலவில்லாமல் வந்ததென்பதனால் கொஞ்சம் சந்தோஷமாயிற்று என்றாலும், இக்குதிரையினால் வழியில் அனுபவித்த சங்கடங்களை எல்லாம் நினைக்க நினைக்கத் தீராத மனக்கிலேசம் உண்டாகிறது. தெய்வச் செயல் இப்படியும் இருக்கிறதல்லவா?' என்று சிந்தித்துக் குருவானவர் சீஷர்களைத் தமது சந்நிதானத்தில் கூட்டி வைத்துக்கொண்டு ஞான விஷயத்தைப்பற்றிப் பேசத் தொடங்கினார்:

'தம்பிமாரே! வரவர இந்தப் பிரபஞ்ச வாழ்வைப் பார்க்கு மிடத்தில் முயற்கொம்பு போலவும், கானல் ஜலம் போலவும் சூனியமாய் இருக்கின்றதென்று காண்கிறேன்; தீமை கலவாத நன்மையும், கசப்புக் கலவாத இனிப்பும், துக்கம் கலவாத சந்தோஷமும் இங்கே கிடைக்கமாட்டா; ஐயோ! விலை கொடுத்து வாங்காமல் உபகாரமாய்க் குதிரை வந்ததென்று நாம் மிகவும் மகிழ்ந்தோம் அல்லவோ? அன்றுதானே இந்தப் பாக்கியத்துடனே தொடர்ந்துவந்த கிலேசங்களையும் கண்டீர்களே! ஒரு துளித் தேனை நக்குகிறதற்காக அத்தனை கசப்பும் விழுங்க வேண்டுமோ? நெல்லுக்கும் உமியிருக்கிறது. எவ்வகைக் கனிகளுக்கும் தோலும் கொட்டையுமுண்டு, இவையெல்லாம் இயல்புதான்; ஆகிலும், நான் ஒரு தினத்தில் அனுபவித்த பொல்லாப்போ மிகவும் அதிகம்; குதிரை ஏறுகிறதற்கு எனக்கு அதிர்ஷ்டம் இல்லையாக்கும்; விதிக்கெதிராய் நடக்க என்னால் கூடுமா? கூடாதே! ஆதலால், இனி அந்தக் குதிரையை அது வந்த இடத்திற்குத் திருப்பி அனுப்பிவிடுகிறதே காரியம். ஆகாது ஆகாது,' என்றார். அதற்குச் சீஷர்களெல்லாரும், 'ஆகா! அப்படிச் சொல்ல வேண்டா ஐயா; அஃதென்ன நீர் கொண்ட குதிரையோ, நாங்கள் தேடின குதிரையோ? இரண்டில் ஒன்றுமன்றே; தெய்வாதீனமாய்த் தானாக வந்த குதிரையன்றே? நாமதைத் திரும்ப அனுப்பினால் திருவுளத்துக்கு மறுவுளமாக நடக்கிறதாகுமே! ஆதலால், இஃது அதிக தோஷமாய் முடியாதா? குதிரையைப் பிடித்திருந்த தோஷத்தை அந்த வள்ளுவன் கழித்த பிறகு அஞ்சத்தக்கது என்ன இருக்கிறது? ஒன்றுமில்லையே!' என்றார்கள்.

இவைகளுடனே இன்னமும் பல நியாயங்களை அவர்கள் விரிவாகச் சொல்ல, குருவும் மனம் தேறி, 'நீங்கள் சொன்னபடி ஆகட்டும்,' என்றார். 'ஆனாலும் அன்று வந்த மோசம் போல இனி வாராதபடிக்கு, இராமாறு குதிரையை மேயவிட ஒண்ணாது;

வீட்டிலேதானே கட்டுவிக்க வேண்டும், அதற்கான இடமும் காணுமே!' என்றார். அப்போது மூர்க்கனென்பவன், 'இதற்காக ஆலோசனை என்ன? இந்தக் கணத்திலே நான் போய் ஆலங் கொம்புகளை வெட்டிக் கொண்டு வந்து, நம்முடைய மடத்துக்கு ஒரு மூலையிலே நேர்த்தியான லாயமொன்று பண்ணிப் பதித்தது போலக் கட்டுகிறேன்,' என்றான்.

என்றவுடனே புறப்பட்டுப் போய் வழியோரத்தில் இருந்த பிரமாண்டமான கொடியாலின்மேலேறி நின்று செழிப்பாய் உயர்ந்து வளர்ந்து ஒழுங்காயிருந்த கிளையைக் கோடரியினால் வெட்டத் தொடங்கினான். ஆனாலும் இவன் நுனிப் பக்கத்திலிருந்து அடிப் பக்கத்தில் வெட்டுகிறதைக் கண்டு வழிப்போக்கனாய் வந்த ஒரு பிராமணன், 'தம்பீ! அப்படி நிற்க வேண்டா. கிளையோடே நீயும் விழப்போகிறாய்,' என்றான். அதற்கவன், 'இந்தத் துர்ச் சகுனமான வார்த்தையை எனக்கு நீ சொல்ல வந்தாயோ!' என்று அரையில் செருகி வைத்திருந்த வெட்டரிவாளைப் பிராமணன் மேல் எறிந்தான். அவனும், 'இந்த முரடன் பட்டறியட்டும்,' என்று விலகித் தப்பிப் போய்விட்டான். மூர்க்கனெனவென்றால், முன்னின்றபடி பின்னும் நின்று வெட்டினதனால் அரைவாசிக் கதிகமாக மரம் அறுப்புண்டு மளமளவென்று முறிந்துவிழத் தானும் அதனோடே விழுந்தான். 'அம்மம்ம! இங்கு வந்த அந்தப் பிராமணன் பிரபலமான சாஸ்திரி; மகா புரோகிதன். அவன் சொன்னபடிக்கு ஆயிற்று,' என்று, கடுகவெழுந்து பிராமணனைப் பின்பற்றிக் கூவிக்கொண்டு ஓடினான். சடுதியில் இவன் கிட்ட ஓடி வருதைப் பிராமணன் கண்டு, 'இந்தப் புத்தியில்லாத மிருகம் என்ன செய்யுமோ!' என்று அஞ்சி நின்றான். மூர்க்கன் வந்து ஒரு கும்பிடு போட்டு, 'ஐயா! நீர் பிரபல சாஸ்திரி; இன்ன மோர் ஆருடம் எனக்குச் சொல்ல வேண்டும்; நான் பரமார்த்த குருவின் சீஷனுக்கும்; அவர்மேல் எனக்கு அதிக பட்சமுண்டாய் இருக்கின்றது; அவருக்குத் தளர்ந்த வயதாய் இருக்கிறபடியினாலே அவர் கொஞ்சநாளுக்குள் சாவாரென்று நான் பயந்திருக்கிறேன்; இப்பொழுது நீரெனக்கு ஆறுதலாக—அவருக்கு முடிவு காலம் எப்பொழுது வரும்? அதற்குமுன் காணப்படும் அடையாளம் என்ன?—சற்றே தயவுசெய்து சொல்ல வேண்டும்,' என்றான். பிராமணன் தப்புவித்துக்கொள்ளப் பலவிதப் போக்குச் சொல்லியும் அவன் கேளாததனாலும் விடாததனாலும் கடைசியிலே, 'ஆசன சீதம் ஜீவன் நாசம்,' என்றான். இவன், 'அஃதென்ன ஐயா! அதற்கு அர்த்தம் சொல்ல வேண்டும்,' என்று அலட்டிக் கேட்க, 'உன் குருவுக்கு இருப்பிடம் என்றைக்குக் குளிர்ந்து காண்கிறதோ அஃது அன்றைக்குச் சாவு கிட்டினதென்பதற்கு அடையாளம் என்று அறிந்துகொள்,' என்பதாகப் பிராமணன் சொன்னான்.

மூர்க்கனும் நமஸ்காரம் செய்துவிட்டுப் போய் வெட்டின கிளையை மடத்துக்கு இழுத்துக்கொண்டு வந்து நடந்த செய்தி

எல்லாம் விவரமாய்ச் சொன்னன். குருக்கள் இதைக் கேட்டு மிகவும் விசாரப்பட்டு, 'ஜோசியம் சொன்ன பிராமணன் மகா சாஸ்திரி அல்லவென்று சொல்லக்கூடாது; உனக்கவன் சொன்னபடி எல்லாம் உடனே பிரத்தியட்சமாயிற்றே! ஆதலால், எனக்கு அவன் சொல்லியனுப்பின ஜோசியமும் தப்பமாட்டாது; 'ஆசனசீதம் ஜீவன் நாசம்' என்பது நல்ல யுக்தியும் அனுபவமுமான வசனந் தான்; இனி எச்சரிக்கையாய் இருக்க வேண்டுமாக்கும்; ஒருகாலும் கால் சுத்தி செய்யக் கூடாது, அதன்மேல் ஆண்டவன் விட்டபடி ஆகிறது,' என்றார்.

ஏழாவது

குரு குதிரைமேலிருந்து விழுந்தது

சொன்ன எச்சரிக்கையோடு நெடுநாளிருந்து பின்பு சீமா மூலங்களுக்குப் போய் வந்தால் சீஷர்கள் கையில் பணம் பறியுமே ஒழிய மடத்திலிருந்தால் அது வர அறியாதென்று அதைப் பற்றி ஊருக்கூர் சுற்றித் திரியக் குருவும் சீஷர்களும் புறப்டார்கள்.

எங்கும் போய்ச் சுற்றிக்கொண்டு ஒரு நாள் அவர்கள் மடத்துக்குத் திரும்பி வருகையில், குருக்கள் அசைந்தசைந்து குதிரை மேல் ஊசலாடிக்கொண்டு வரும் பொழுது கீழே தொங்கின ஒரு மரக்கொம்பு பட, அவர் தலைப்பாகை பின் பக்கத்தில் விழுந்தது. அதைச் சீஷர்கள் எடுத்தார்களென்று எண்ணிக்கொண்டு ஒன்றும் பேசாமல் சும்மா வெகுதூரம் சென்ற பின்பு, அவர், 'தலைப்பாகை எங்கே? தாருங்கள்,' என்று கேட்டார்; 'ஆமீது அங்கே விழுந்த இடத்திலே கிடக்கும்,' என்று அவர்கள் சொல்ல, அவர் கோபித்துக்கொண்டு, 'விழுந்தது எல்லாம் எடுக்கத் தேவையில்லையோ? நான் சொல்ல வேண்டுமோ?' என்றார். அந்தமட்டில் மடையன் அப்படியே அங்கே அங்கே ஓடிப் போய் விழுந்த பாகையை எடுத்துக் கொண்டு வருகையில், அதற்கு முன் பெய்த மழையில் செழிப்பாய் வளர்ந்திருந்த புல்லை மேய்ந்து அன்று இராத்திரி குதிரை கழிந்த இளகலாகிய லத்தியை அந்தத் தலைப்பாகையில் ஏந்திக்கொண்டு வந்து பக்தியுடனே குருவின் கையில் ஒப்புவித்தான்.

அப்பொழுது அவர், 'சீ! சீ!' என்று வெகுவாய்க் கோபித்தார். அதற்கு எல்லோரும் கூடி, 'இஃதேதையா! விழுகிறவை சகலத்தையும் எடுக்கச் சொல்லி முன் கற்பித்தீரல்லவோ? குரு வார்த்தை கடக்கலாகாது என்று கற்பித்தபடி செய்தால் இப் பொழுது நீர் ஆயாசப்படுவானேன்?' என்றார்கள். குருவோ, 'அப்படியன்றே. எடுக்கத் தகுவதும் எடுக்கத் தகாததும் உண்டு;

எதையும் பகுத்தறிந்து நடக்க வேண்டும்,' என்றார். ' நாங்கள் அம்மாத்திரத்திற்குத் தக்க மனுஷரல்லேம் ; எடுக்க வேண்டியதை மாத்திரம் இன்னதென்பதாக வேறே எழுதித் தர வேண்டும்,'என்று சொன்னார்கள். அவரும் எழுதிக் கொடுத்தார்.

அப்புறம் போகையில் ஈரமாய் இருந்த வழுக்கு நிலத்தில் தளர்ந்த நடையாய்ப் போகிற நொண்டிக்கால் குதிரை சறுக்கி விழுந்தது. அத்தருணத்தில் அதன் மேலிருத்த குருவும் தவறி, அருகே இருந்த குழியில் தலை கீழும் கால் மேலுமாக விழுந்து, ஒரு கால் அங்கபடியில் மாட்டிக்கொண்டு எழுந்திருக்கக்கூடாமல் கோவென்றலறி, 'அன்பான சீஷர்களே! என்னை எடுக்க வாருங்கள்,' என்று கூப்பிட்டார். சீஷரும் ஓடிச் சரேலென்று வந்து குருமுன்னே எழுதித் தந்த ஜாபிதாவை எடுத்து ஒருவனை வாசிக்கச் சொன்னார்கள். அதிலே, 'விழுந்த தலைப்பாகை எடுக்கவும், விழுந்த வேஷ்டி உத்தரீயம் எடுக்கவும், விழுந்த சட்டை குட்டை உள்ளாடைகளை எடுக்கவும் வேண்டும்,' என்று அவன் வாசித்தபடியே ஒவ்வொன்றாய் எல்லாவற்றையும் குருவினிடத்திலிருந்து கழற்றி எடுத்து அப்புறம் வைக்க, குருக்கள் மாத்திரம் நிருவாணமாய் அங்கே கிடந்தார்.

அவரிப்படிக் குழியில் கிடந்து தம்மையும் எடுக்கச் சொல்லி எவ்வளவு கெஞ்சினாலும், எவ்வளவு சலித்துக்கொண்டாலும், எவ்வளவு கடுஞ்சொல் சொன்னாலும், சீஷர்கள், 'இதுவும் முன்னமே தானே ஜாபிதாவில் எழுதாததனாலே நாங்கள் எடுக்கமாட்டோம்' என்று ஒரே பிடிவாதமாய்ச் சாதித்தார்கள். மேலும், அவர்கள், 'ஐயா, குரு சிகாமணியே! எடுக்கவில்லை என்று வீணாய் எங்கள் மேல் கோபிக்கிறீரே ; நல்லது உம்மையும் எடுக்கும்படி எழுதினது எங்கே காட்டும் பார்ப்போம்! எழுதினபடி செய்வோமே ஒழிய, எழுதாததை அப்படித் 'தடிக்கு மிஞ்சின மிடா'வைப் போல வரம்பு கடந்து ஒரு போதும் செய்யச் சம்மதியோம்,' என்றார்கள். அவரும் இவர்கள் சாதனையைக் கண்டு தப்பும் வழி வேறொன்றும் காணுமையால் ஓலையும் எழுத்தாணியும் வாங்கிக் கிடந்தவிடத்திலே தானே, ' நான் விழுந்தாலும் எடுக்கக்கடவீர்கள்,' என்று கைகால் நடுக்கிக்கொண்டே எழுதிக் கொடுத்தார்.

எழுதினதைக் கண்டு சீஷர்களும் ஒருமிக்கப் போய் அவரை எடுத்தார்கள். அவர் விழுந்த குழியில் சேறிருந்தபடியால் குருவுடம்பெல்லாம் சேறுபட்டு அழுக்கானதென்று சமீபத்திலிருந்த தண்ணீரிலே குளிப்பாட்டினார்கள். பின்பு பழையபடியே உடுப்பெல்லாம் உடுத்திக் குதிரைமேலேற்றி மடத்துக்குக் கொண்டுபோய் விட்டார்கள்.

எட்டாவது

குருவைச் சேமித்தது

குருவானவர் குழியில் விழுந்து எழுந்திருக்கக் கூடாமல் கிடந்த சமயத்தில் சீஷர்கள் மிகவும் அஞ்சிப் பதறினதனால் அந்தப் பிராமணன் முன்பு சொல்லியிருந்த ஜோசியத்தின் மேல் ஒரு வருக்கும் ஞாபகமில்லாமல் போயிற்று. திருப்பக் குதிரை ஏறின பிறகு இருப்பிடம் குளிர்ந்ததென்று கண்டு குருநாதரே விசாரப் பட்டார். ஆகிலும் மடத்துக்குப் போய்ச் சேருமளவும் ஒன்றும் சொல்லாதே போனார்.

தளர்ந்த வயதாகிய காலத்தில் விழுந்த அதிர்ச்சியினால் அன்றிரவில் நித்திரை கொள்ளாமல் மருண்டு புரண்டுகொண் டிருந்து, அவர் பிராமணன் சொன்ன ஜோசியம் அடிக்கடி நினைவிலே தோன்ற வெகுவாய்ச் சஞ்சலப்பட்டார். குதிரையி லிருந்து குழியில் விழுந்ததனால் உடம்பதிர்ந்து இப்படி அரட்டப் படுகிறதென்று நினையாமல், ஆசனம் குளிர்ந்து சாகுங்காலம் கிட்டினதினாலாக்கும் இவையெல்லாம் சம்பவித்ததென்று நிச்சயம் பண்ணிக்கொண்டார். இந்த நினைவோடு அன்றிராத்திரி முழுதும் தமக்குள்ளே பயந்து பதறி ஒரு நிமிஷமும் கண் மூடாமல் பெரு மூச்சு விட்டு மனம் தத்தளித்ததனால் விடியற்காலத்தில் சீடர்களை அழைப்பித்தார்.

அவர்களும் வந்து பார்க்க அவருடைய கண் குழி விழுந்து பஞ்சடைந்ததாகவும், முகமெல்லாம் வற்றிச் சுருங்கி வெளுத்துச் சாயல் மாறினதாகவும், வாயுதடு உலர்ந்து நாவில் ஈரமில்லாமல் வார்த்தை குழறவும், பிரமை கொண்டது போல உற்று உற்றுப் பார்க்கவும், மேல்சுவாசம் வாங்கவும் கண்டு மிகவும் பயந்தார்கள்.

அப்பொழுது அவர் பெருமூச்செறிந்து, 'தம்பிமாரே! எனக்கு மரணவஸ்தையானது நெருங்கிவிட்டது; இனி ஆத்துமா பிரிந்து கடமெழும்பிப் போகும் போலக் காண்கிறது; நீங்கள் எனக்குச் சமாதிக் குழி ஒன்று வகுத்து அதில் என்னை வைத்துச் சவத் தைச் சேமிக்கிறது போலச் சேமம் செய்துவிடுங்கள்,' என்றார். 'அஃதேதையா!' என்று அவர்கள் சரீரம் பதறிக் கேட்க, 'ஓ ஓ! 'இஃதென்ன? 'ஆசனசீதம் ஜீவன்நாசம்' என்றதை மறந்து போனீர்களோ?' என்று சொல்லிப் பின்னும் குருவானவர் சொல்வார்: 'நேற்று நான் விழுந்த குழியிலே நீரும் சேறும் மிகுதியாய் இருந்தபடியினாலே எனக்கு இருப்பிடத்தில் ஈரந் தாங்கியது; ஆனாலும், அப்போது உண்டான ஆபத்தினாலே அஃது எனக்குத் தோன்றுதே போயிற்று; பிறகு அதிகமாய் இருப்பிடம் குளிர்ந்ததும் கண்டேன்; பிராமணன் சொன்ன

சாஸ்திரத்தையும் நிந்தித்தேன்; இராத்திரி முழுதும் உடம்பு வலியும் ஆராட்டமும் கண்டு சற்றும் நித்திரையில்லாததனால் சாவு கிட்டினதென்று நன்றாய் அறிந்துகொண்டேன்; இனி வேறுலோகமே வேண்டுவதில்லை; சீக்கிரமாய் சமாதிச் சேமத்துக்கு ஆயத்தம் பண்ணுங்கள்,' என்றார்.

அதைக் கேட்டு அவர்களும் அந்தத் துர்க்குறியை நினைத்து அஞ்சினார்கள். அஞ்சினாலும் அச்சத்தை வெளி இடாது உள்ளே அடக்கிக்கொண்டு நானாவிதமாகக் குருவின் மனம் தேறும்படி ஆறுதலும் தேறுதலுமான பலபல வார்த்தை களைச் சொன்னார்கள். என்ன சொல்லியும் அவருக்கு மனக்கிலேசம் மாறவில்லை என்று தெரிந்துகொண்டு, முன்பு அந்த ஊர்ச் சகுன சாஸ்திரகாரனாய் இருந்த அசேதனமூர்த்தி மகன் அசங்கதன் என்பவனைத் தங்கள் குருவைப் பிடித்த சனியை நீக்கி அவர் மனத்தைத் தேறச் செய்ய வேண்டும் என்று அவனைப் போய் அழைத்தார்கள்.

அசங்கதன் நடந்த வரலாறுகளை எல்லாம் விவரமாய்க் கேட்ட பிறகு வந்து குருவைப் பார்த்து, 'உமக்குச் சம்பவித்த குறை யென்ன? வந்த நோவென்ன? மனவிசாரமென்ன? மாறுத கிலேசமென்ன? என் குருவே! என்னையனே! என் பிதாவே! சொல்லும்,' என்று கண்ணீர் சோர வாயிதழ் துடிக்க, முகம் வியர்க்கக் கேட்டான். அதற்கெல்லாம், 'ஆசனசீதம் ஜீவன் நாசம்,' என்கிற வசனமே ஒழிய வேறொரு மறு உத்தரமும் குருவானவர் சொன்னவரல்லர். அப்போதவன், 'நல்லது, ஆசன சீதம் உமக்கு ஜீவன் நாசமென்று பிராமணன் சொன்னானே, நானும் அவன் ஆசனேஷ்ணம் அவனுக்கு நாசமாகப் பண்ணு கிறேன். அந்தப் பிராமணனை எனக்குக் காட்டுங்கள்; அவனுக்கு உலக்கைப் பூஜை பண்ணி அவனால் வந்த தோஷமெல்லாம் அடி யோடே தீர்த்துப் போடுவேன்; அவனைக் காட்டும்; சீக்கிரமாய்க் காட்டும்,' என்றான்.

'உலக்கைப் பூஜை என்று ஒரு பூஜை உண்டோ? ஒரு நாளும் அப்படிப்பட்ட பூஜையைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லையே! அஃதாவது எப்படிப்பட்டது? சொல்,' என்று குருவானவர் கேட்டார். அதற்கு அசங்கதன் மறுமொழி சொல்லத் தொடங்கி னான். 'இவ்வகைப் பூஜை உட்சமயம் புறச்சமயங்களிலும் காணக் கிடையாத பூஜையாக்கும். ஞாபகமாய்க் கேட்கக்கடவீர்.

'ஓரூரில் ஒரு செட்டி இருந்தான்; அவன் அதிக சிவபக்திக் காரன்; அநுதினமும் பண்டாரங்களுக்கு அசனம் இட வேண்டு மென்னும் ஆசையினால், அவர்களை எங்கே கண்டாலும் 'சுவாமி! சுவாமி!! அடியேனுடைய சிறு குடிசையில் பிக்ஷை பண்ணும்படி எழுந்தருள வேண்டும்.' என்று அழைப்பான். அவனுக்கு மக்க ளில்லை; கொண்ட மனைவியோ என்றால், நித்தமும் பண்டாரங் களுக்குச் சோறுக்குவதிலும் கறி ஆக்குவதிலும் பரிமாறுவதிலும்

வெகு வருத்தப்படுவதனுல் புருஷன் செய்கிறது அவளுக்குப் பொருந்தவில்லே. ஆயினும் இதைக் குறித்துப் புருஷனுக்கு ஏதாவது வெறுப்பாகச் சொன்னுல் அவன் மனம் பொறுக்க மாட்டாது என்று அவள் அறிந்து ஓர் உபாயமெடுத்தாள்.

'ஒருநாள் அந்தச் செட்டி தான் கடையிலிருந்து அவ்விடத்தில் வரக் கண்ட பண்டாரத்தை அழைத்து, 'என் வீட்டில் இன்றைக்கு பிக்ஷை பண்ணவேண்டுமையா,' என்ருன்; அவனும் சம்மதித்த தனுல், 'இப்போது கடையிலே வேலையாயிருக்கிறேன்; நீர் என் வீட்டுக்குப் போய் என் மனைவியைக் கண்டு இந்தச் செய்தி சொல்லி நான் வருமளவும் எங்கும் போகாமல் அங்கேதானே தங்கியிரும்,' என்ருன். பண்டாரம் சந்தோஷமாய்ப் போய்ச் செட்டி சொன்னதை அவன் மனையாட்டியோடே சொன்னுன். அதற்கவள், 'இவனுருகாலும் இங்கே வாராதவனுக்கும்,' என்று கண்டுகொண்டு, 'ஐயா! மெத்த நல்லது, நீரிங்கேதானே இரும்,' என்று வீட்டுத் திண்ணேமேலே பாயைக்கொண்டு வந்து விரித்தாள்.

'பிறகு உடனே வீட்டு முற்றத்தை நன்ருய்ப் பெருக்கி எங்கும் சாணத்தைக் கரைத்துத் தெளித்துத் தீற்றி மெழுகித் தன் கால் கைகளேயும் சுத்தி செய்து ஆசாரத்தோடே நெல் குற்றுகிற உலக்கையைக் கையிலெடுத்துக்கொண்டாள். பிறகு அதில் நிறையச் சாம்பலேத் தடவித் தானும் அதைப் பூசிக்கொண்டு, நடு வாசலில் உலக்கையைக் கிடத்தி அதற்கு எதிரே மூன்று முறை சாஷ்டாங்கமாக விழுந்து வாயைத் திறந்து உரக்கப் பேசாமல் மந்திரம் ஜெபிப்பது போல மிணமிண என்ருள். என்றதன் பின்பு உலக்கையைச் சாம்பல் போகும்படி துடைத்து முன்னே அஃது இருந்த இடத்திலேதானே வைத்தாள். இவையெல்லாம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த பண்டாரம் வெகுவாக ஆச்சரியப்பட்டு, 'இந்நாள் மட்டும் நான் எங்கும் காணுத அதிசயத்தை இப்போது இங்கே கண்டேன்; இஃது என்ன பூஜையம்மா?' என்று கேட்டான். அதற்கு அவள், 'ஐயா! இஃது எங்கள் குல தெய்வத்தின் விசேஷ பூஜையாக்கும்; இனிமேல் நீரும் நன்ருயறியப் போகிறீர்,' என்று வீட்டுக்குள் நுழைந்து போகையில், 'இஃது உன் தலேமேலே தான் வந்து விடியும்,' என்று அமர்ந்த சத்தமாய்த் தன்னிலேதான் சொல்லிக்கொள்வது போலச் சொல்லிக்கொண்டு போனுள். அப்படி மெத்தெனச் சொன்னுலும் அஃது அவனுக்குக் கேள்வியாக வேண்டும் என்று அவள் விரும்பினபடியே அந்தச் சொல் பண்டாரத்தின் காதிலே விழுந்தது; அப்போது அவன், 'நான் தெய்வாதீனமாய்த் தப்பிப் பிழைத்தேன்,' என்று எண்ணிக்கொண்டு, செட்டிச்சி வீட்டில் நுழைந்தவுடனே சத்தப்படாமல் எழுந்து லகுவாய்த் தப்பிப் போய்விட்டான்.

'அவன் போன அடியிலே செட்டி வந்து, 'நானனுப்பின பண்டாரம் எங்கேயடி?' என்று கேட்க, அவளும், 'நல்ல

பண்டாரத்தை அல்லவோ இந்த விசை அனுப்பினீர்! அவர் வந்தவுடனே உலக்கையைத் தரச் சொல்லிக் கேட்டார்; அதற்கு நான், 'இப்போது செட்டியார் வருவார். அவருத்தரவில்லாமல் கொடுக்கப்படாது. சற்றே இரும்,' என்று இதோ பாயையும் விரித்துப் போட்டேன் பாரும்; அவர் கேட்கமாட்டாமல் உடனே கோபித்துக்கொண்டு போய்விட்டார்,' என்ருள். அது கேட்டுச் செட்டி, 'அடி! அப்படியன்றே! பண்டாரங்கள் என்ன கேட்டாலும் கொடுக்கிறது எனக்குச் சம்மதிதானே? நீ அறியாயா?' என்று சொல்லி, உலக்கையைக் கையிலெடுத்துக்கொண்டு பண்டாரத்தைத் தேடி அதைக் கொடுக்கும்படி தெருவிலே போனுன்.

'பண்டாரமும் நடக்கும் காரியத்தை முற்றமுடியக் காணும் பொருட்டு ஒரு தெரு முடுக்கில் ஒதுங்கியிருந்து, உலக்கையோடே செட்டி வருவதைக் கண்ட போது, 'இஃதேது! இவன் என் தலை மேலே பூஜை முடிக்க வருகிருனே!' என்று பயந்து ஓட்டமெடுத்தான். செட்டியும் அதுகண்டு, 'பண்டாரமே! பண்டாரமே!!' என்று அவனைப் பின்தொடர்ந்து ஓட, அவன் அதிக விசையாய் ஓடஓடக் கடைசியில் செட்டிக்கு முதிர்ந்த வயதும் பெருத்த தொந்தியுமானதனுல், இரைப்பெடுத்து ஓடமாட்டாமல் கால் சலித்து அம்மட்டிலே நின்று வீட்டுக்குத் திரும்பிவிட்டான். இது தான் உலக்கைபூஜை; இந்தப் பூஜையை நான் உமக்கு ஜோசியம் சொன்ன அந்தப் பிராமணன் முதுகின்மேலே முடித்தால் ஆசனேஷ்ணமாகி அவனுக்கே அல்லாமல் உமக்கு நாசம் வாராதையா,' என்ருன்.

அதற்குப் பரமார்த்த குருவும் சிரித்து, 'உன்னை அசங்கதன் என்று சொல்வது நியாயமே; நீ எப்போதும் சரச பரிகாசங்களே செய்து வருகிறும்,' என்ருர். அவனும் குருக்கள் சிரித்ததாகக் கண்டு பரிகாசத்தை விட்டு மீண்டும் சொல்லத் தொடங்கினன்: 'ஐயா! பிராமணன் சொன்ன வசனம் உண்மைதான்; அதற்கு அர்த்தத்தை நன்ருயாராய்ந்து அறிய வேண்டும்; இருப்பிடத்தில் குளிர்மை கண்டால் சாவுக்கடையாளமென்றது சரியே; ஆயினும், வேறு காரணமில்லாமல் ஆசனம் குளிர்ந்து போனுல்தான் அவன் சொன்னபடியாகும்; நீர் தண்ணீரிலேயும் சேற்றிலேயும் விழுந்தீர்; அதனுலே இருப்பிடம் குளிர்ந்தது மெத்த அதிசயமோ? அப்போது குளிராதே இருந்தால்தான் அதிசயமாகும்: இப்போது இந்த வீண் கவலையை விட்டுவிடும்; இனிமேல் சேற்றில் உட்காராமலும், தண்ணீரிலே விழாமலும், மற்றெருரு காரணமில்லாமலும் ஆசன சீதம் கண்டால் அத்தருணத்தில் ஜீவன் நாசம் கிட்டினதென்று நினைக்கலாம்; இஃது ஒழிய மற்றதெல்லாம் அபத்தமையா,' என்ருன். அசங்கதன் சொன்னது குருவின் மனத்திலே தைத்து நியாயம் போலத் தோன்றிற்று; ஆதலால், சற்றுத் தேறி எழுந்து சாப்பிடவும் அங்கங்கே திரியவும் தலைப்பட்டார்.

இப்படிச் சில நாள் போன பிறகு ஒரு நாள் இராத்திரி நடு ஜாமத்திற்கு மேல் கனமழை ஒரு பாட்டமாய்ப் பெய்தது. அப் பொழுது குருவின் படுக்கைமேலே அவரிருப்பிடத்திற்கு நேரே அடுத்தாற் போல மேட்டு நீரொழுக்கு விழுந்தது. அஃது அதிக தூக்கத்தினுல் அவருக்குத் தெரியாதே போயிற்று. மழையும் மழை யொழுக்கும் ஒழிந்த பின்பு குருக்கள் மெய்ம்மறந்த நித்திரை யோடே புரண்டு தமது இருப்பிடத்தில் ஈரம் உறைக்கத் தூங்கிக் கிடந்தார். அப்படித் தாக்கின குளிர்மையினுலே திடீரென விழுந்து மிகவும் இருப்பிடம் குளிர்ந்ததாகக் கண்டு, குளிர்மை பிறக்க இப்போது வேறொரு காரணமும் இல்லையே! ஆகையால் தமக்கினிச் சாகுங்காலம் வந்ததென்று நிச்சயித்தார்.

வந்த குளிர்ச்சிக்குச் சீஷர்களும் வேறு முகாந்தரம் காணுமை யால் படுக்கையின் குளிர்மை முதலாய்க் குருவினிருப்பிடச் சீதத்தினுல் வந்தது என்று நினைத்து, 'முன் பிராமணன் சொன்ன ஜோசியத்தின் கருத்து நிறைவேறும் காலம் இதுதான்,' என்று நிச்சயித்தார்கள். குருவைக் காண வந்த சுஜாதி மனுஷரும் இவர்களோடு ஒத்த புத்திமான்களாகையால் அவர்களும் அவ்வாறே பேச, சொன்னதை எல்லாம் குரு ஒப்புக்கொண்டு தம்மைக் குறித்துக் கேட்டவர்கள் யாவருக்கும், 'ஆசனசீதம் ஜீவன் நாசம்,' என்பதே ஒழிய வேறே மறுமொழி உச்சரியாதிருந்தார்.

நாளுக்கு நாள் இவர் இவ்விதமாக அடைந்த மிகுந்த மனக் கவலையும் சரீர பலவீனமும் தாங்கமாட்டாமல் ஒரு நாள் அதிக சோகமாய்க் கிடந்தார். அப்பொழுது எல்லாரும் காசு மூசு என்று கூச்சலிட்டுத் தலைமேல் கையை வைத்துக்கொண்டு, 'ஐயையோ! எங்கள் ஆண்டவர் மாண்டாரே! மடிந்து போனரே!' என்று அலறி அழுது சவச்சேமச் சடங்கு ஆரம்பம் செய்து குளிப்பாட்டத் தொடங்கினர்கள்.

மடத்திலிருந்த பெரிய தொட்டி நிறையத் தண்ணீர் விட்டுக் குருவை உள்ளபடி பிரேதமென்று எண்ணி எடுத்து அதிலே போட்டு அமுக்கிச் சுற்றிப் பத்துப் பேர் கூடியிருந்து ஒருமிக்கத் தேய்த்துக் கழுவினர்கள். கழுவும் போது அவருக்கு மயக்கம் தெளிந்தாலும் தண்ணீருக்குள்ளே மூச்சு விடமாட்டாமலும் கையையும் காலையும் அவர்கள் பிடித்து அமுக்குகிறதனுல் சைகையையும் காண்பிக்கக் கூடாமலும் மூடத்தனத்தினுல் அந்த மடயர்கள் கையில் அகப் பட்டுப் பரமார்த்த குரு அநியாயமாய்ச் செத்தார்.

அதன் பின்பு அவரும் பெருங்கூட்டம் கூடி அவரை அலங் கரித்துப் பூந்தேர் கட்டி அதற்குள் அவரை முறித்து வைத்து, சம்பிரம மாகச் சங்கு தாரை முழங்க எடுத்துக்கொண்டு முன்னும் பின்னும் இருபக்கமும் சீஷர்கள் நெருங்கி வந்து 'ஆசனசீதம் ஜீவன் நாசம்' என்று ஆடிக்கொண்டுபோய்ச் சமாதிக்குழி தோண்டி அதில்வைத்து அடக்கம் செய்தார்கள்.



[இந்தக் கதையும் ஒரு சிரிப்புக் கதையே. தையற்காரன் வீட்டில் சாப்பிட்ட போது தொண்டையில் அடைத்துக்கொண்ட மாமிசத் துண்டினால் மயக்கமடைந்திருந்த சிறு கூனனைச் செத்து விட்டதாக நினைத்துத் தையற்காரன், யூத வைத்தியன், வெண்ணெய் வியாபாரி, மிலேச்ச வர்த்தகன் ஆகியோர் தங்களைத் தாங்களே குற்றவாளிகள் என்று கூறுவதும், அவர்கள் பேச்சைக் கேட்ட நியாயாதிபதி, 'இஃது என்ன! தருமசங்கடமாய் இருக்கிறதே!' என்று திகைப்பதும், முடிவில் இரண வைத்தியன் ஒருவன் அந்தக் கூனன் தொண்டையில் அடைத்துக் கொண்டிருந்த எலும்போடு கூடிய மாமிசத் துண்டை எடுத்துக் காட்டுவதும் தூங்கியெழுந்தவனைப் போலச் சிறுகூனன் எழுந்து ஆடிப் பாடுவதும் வேடிக்கையாயிருக்கின்றன.

— பதிப்பாசிரியர்]

16

சிறு கூனன் கதை

பூர்வத்திலே தார்த்தார நாட்டின் எல்லைக் கடைக்கோடியிலே காஸ்கார் என்றொரு பட்டணம் இருந்தது. அப்பட்டணத்திலே சுந்தரராவ் என்னும் ஒரு தையற்காரன் சந்திராபாய் என்னும் கட்டழகியான காதல் மனைவியுடன் கூடி மிகவும் அந்நியோந்நியமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். ஒரு நாள் மாலை வேளையில் அச்சுந்தரன் தன் கடையிலுட்கார்ந்து தைத்துக்கொண்டிருக்கும் போது குறுகிய அவயவங்களோடு கூடிய ஒரு சிறு கூனன் முச்சட்டையாய் உடுத்திய உடையோடு கரத்திலே சல்லரி என்னும் சிறுபறையொன்று தாங்கி, வெகு விநோதமாக ஆடிக்கொண்டும் மிக இனிமையாகப் பாடிக்கொண்டும் உல்லாசமாக வந்து பற்பல அகசியங்களும் ஜாலங்களும் வேடிக்கைகளும் காட்டினன். அவை

அவனுக்கு மிக்க சந்தோஷத்தை உண்டாக்கின. ஆதலால், அவன், 'நாம் இக்கூனனை இல்லங்கூட்டிச் செல்வோமானால் நாமும் மனைவியும் இராத்திரியை இவனோடு வெகு உல்லாசமாகப் போக்கலாம்,' என்று சிந்தித்து, கூனனைத் தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய், இல்லாளை நோக்கி, 'அடி பெண்ணே, இதோ பார், இக் கூனன் நம்மை எப்படி உற்சாகப்படுத்தப் போகிறான்! இவன் ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும் இன்றிரவை வெகு ஆனந்தமாகக் கழிக்கலாம்! இவனுக்கு நல்ல விருந்தளிப்பாய்,' என்றனன். அது கேட்ட மனைவி முகமலர்ந்து புருஷன் சொல் கடவாது பல சிற்றுண்டிகளுடன் புலால் சமைத்து, உண்கலம் பரப்பி, அன்னம் முதலியன பரிமாறி, தானும் புருஷனுமாகக் கூனனுடன் இருந்து, அவன் இடை இடையே குசோத்திய மாய்ப் பேசுவதைக் கேட்டும் நவநவமாய் அகசியம் செய்வதையும் ஜாலம் காட்டுவதையும் கண்டும் ஆனந்தம் பெருக உண்டு களிப்படைகையிலே கூனன் தன் முன்னேயிட்ட உணவுகளை இன்னதினியதென்றேராது மிக்க ஆவலோடு கைக்கொண்ட மட்டும் வாரிவாரி உண்டான். அப்படி உண்ணும் அவசரத்திலே ஊணுண்ணுயிருந்த ஒரு வலிய மாமிசத் துண்டம் அவன் தொண்டையில் அடைத்துக்கொண்டது. அதனால், அக்கூனன் மாரடைத்து, மூச்சடங்கி, அறிவிழந்து, பிணம் போலத் தரையில் சாய்ந்தான். இதைக் கண்ணுற்ற தம்பதிகளிருவரும் மதி மயங்கித் திடுக்கிட்டு, 'ஐயோ! தெய்வமே! இதென்ன விபரீதம்! நமது வீட்டில் இவனுக்கிப்படி நேர்ந்ததே! இவன் செத்துக் கிடப்பதை யாரேனும் கண்ணுறின், நாமேதோ இக்கூனனைச் சதி செய்து கொலை புரிந்ததாக எண்ணுவார்களல்லவோ? அதிகாரிகள் கண்டால் நம்மை வதைப்பார்களே! என்ன செய்வோம்!' என்று அதிக திகிலடைந்து, தங்களால் செய்யக்கூடிய பரிகாரங் களெல்லாம் செய்து யாதும் பயன்படாமை கண்டு, பிரேதத்தை எவ்வாறுவது வீட்டை விட்டு அப்புறப்படுத்துவதே கருமமெனத் தேர்ந்து, தையற்காரனும் பெண்டாட்டியும் தலைப்பக்கமொருவரும் காற்பக்கம் ஒருவருமாக அச்சவத்தை அடுத்த நாலிந்து வீட்டிற்கு அப்புறமிருந்த ஒரு வைத்தியன் வீட்டிற்கு எடுத்துச் சென்று, அவன் வீட்டின் தெருக் கதவைத் தட்டினார்கள். அது கேட்டு ஒரு வேலைக்காரி வந்து கதவைத் திறந்து, 'சேதி என்ன?' என, சுந்தரன் அவள் கையில் ஒரு வெள்ளியைக் கொடுத்து, 'அம்மே, இதைப் பண்டிதர் கையில் கொடுத்து, ஒரு நோயாளியை அழைத்து வந்திருக்கின்றோம் என்று சொல்,' என்றனன். அப்பணிப் பெண் வைத்தியன் முன் சேதி சொல்லும்படிக்குப் போகும் போது அவள் பின்னரே மெல்லெனத் தம்பதிகளிருவரும் சவத்தை எடுத்துச் சென்று மேல்மாடிப் படிச்சுவரில் சார்த்திவிட்டு மீண்டு விரைந்து இல்லம் போய்ச் சேர்ந்தனர். பணிப் பெண்ணை, பரிகாரியிடம் சென்று, 'இருவர், நோயாளி ஒருவனைக் கூட்டிக்கொண்டு வந்திருக்

கிறார்கள்,' என்று சொல்லி, அவர்கள் கொடுத்த வெள்ளியை அவன் கையில் தந்தனள். பண்டிதன் வேலைக்காரியைத் 'தீபம் கொண்டு வா' என்று கட்டளையிட்டு, வியாதிஸ்தனைக் காணவேண்டி விரைந்து தானிருந்த அறையை விட்டு வரும் போது, அவன் கால் தடுக்கி மேற்படிக்கடுத்தாற்போல வைக்கப்பட்டிருந்த பிணம் மளமள வென்று புரண்டு கீழே போய் விழுந்தது. வைத்தியன், 'இது என்ன?' என்று தீபம் கொண்டு பார்க்கக் கூனன் விழுந்து செத்துக் கிடக்கக் கண்டான். 'ஓ ஓ! நாம் என்ன காரியம் செய்தோம்! ஐயோ! இவனைக் கூட்டிக்கொண்டு வந்தவர்கள் எங்குற்றனர்? நமது அவசரத்தால் இவன் இக்கதியானான் போலக் காண்கிறதே! யாது செய்வோம்!' என்று திகிலடைந்து, சற்றுத் தெளிந்து, தானும் தன் மனைவியுமாய் ஒரு வித ஆலோசனை செய்துகொண்டு, நல்ல நிசி வேளையில் அண்டையிலிருந்த ஒரு வர்த்தகன் வீட்டின் இறப்பின் மேலேறி இருந்துகொண்டு, அவ்வீட்டின் புகைக் கூண்டு வழி யாய் அக்கூனன் சவத்தைக் கைகளில் கயிறு தொடுத்து மெல்லக் கீழே இறக்கிவிட்டுக் கயிற்றை மேலாகவே வாங்கிக்கொண்டார்கள். சதிர்க் கச்சேரிக்குப் போயிருந்து அப்போதுதான் வீட்டுக்கு வந்த வர்த்தகன் புகை போக்கியின் வழியாய் ஒரு சிறு குள்ளன் இறங்கி நிற்பதாகக் கையிலிருந்த தீபத்தால் கண்டு, 'ஓகோ! திருடன் இதோ அகப்பட்டான்! அகப்பட்டான்!' என்று கூச்சலிட்டு, 'ஆ! எலியும் மூஞ்சூறும் அல்லவோ என் வெண்ணெயையெல்லாம் தின்று போகின்றன என்று நினைத்தேன்! நீதானு இதுவரையிலும் என் சொத்தைக் கொள்ளை கொண்டாய்? நல்லது! ஓடிப் போகப் போகிறாய்! நில்லு நில்லு!' என்று அதட்டிக்கொண்டே ஒரு நீண்ட தடியோடு வந்து சவத்தைப் புடைத்தான். அடியுண்ட பிணம் கீழே விழ, அதன்மேல் தான் வீழ்ந்து நன்றாய்ப் புடைத்தான். அப்போது கள்ளன் அசைவின்றிச் சத்தமிடாதிருக்கக் கண்டு, வர்த்தகன் தீபம் கொண்டு சோதித்து, அடி பொறுக்கமாட்டாமல் அவன் செத்து வீழ்ந்து பிணமாயினான் என்று நினைத்து, அவன்மேல் கொண்ட கோபம் போயொழிக்க, 'ஐயையோ! நமது மூர்க்கத் தனத்தால் திருடன் மாண்டானே! கொலைப்பாதகன் ஆனேனே! தண்டனைக்கு உள்ளாக வேண்டி வருமே! ஐயோ! தெய்வம் இப்படியும் என்னைப் பழிக்காளாக்குமா?' என்று பலவாறு எண்ணி முகம் வாடி, இடி விழுந்த மரம் போல நின்று, பிரமித்து, சித்தம் கலங்கி, ஒன்றும் தோன்றாமல் ஏங்கி, 'அடா பாவி! அடா சண்டாளா! என் பொருளைக் கொள்ளை கொண்டதுமல்லாமல், என் குலத்தையும் அழிக்க வந்தாயே! காலா!' என்று பலவாய்ப் பிணத்தை வைது, பின்பு அந்தக் கோணல் சவத்தைத் தோளின் மேலெடுத்துச் சென்று, தன் வீட்டுத் தெருக்கோடியிலுள்ள ஒரு கடை வீட்டின் சுவரோடு சுவராய் நிற்கும்படி நிறுத்திவிட்டுத் திரும்பிப் பாரமலே, ஒருவரும் அறியாதபடி மிக்க பரபரப்பாய் வீடு வந்து சேர்ந்தான்.

பின்பு சுக்கிரன் உதித்துக் கீழ்த்திசை வெளுத்துப் பொழுது புலரும் தருணத்தில் மிக்க செல்வந்தனும், பெருமை பெற வாழ்பவனும், இராச மாளிகைக்கு வேண்டிய சாமான்கள் கொடுத்து வருபவனுமான மிலேச்ச வர்த்தகனொருவன், அன்று இரவைச் சிற்றின்ப நுகர்ச்சியிலேயும் வெறியாடலிலேயும் போக்கி, நேரப்பட விழித்தெழுந்து, நித்திரை மயக்கம் தெளிந்தும் தெளியாதவனுய்ப் படுக்கையைவிட்டு வெளிப்பட்டு, காலைக்கடன் கழித்து நீராடி மீள விரும்பி, இராத்திரி உண்ட மது மயக்கத்தால் தள்ளாடிக் கொண்டே செல்லுகையில் நிலந்தெளிந்தால் சனங்கள் தன் நிலையைக் கண்டு நகைப்பார்களே என்கிற அச்சத்தால் சற்று விசையாய் நடந்து சென்றனன். அப்படிச் செல்லும் காலடி அதிர்ச்சியால் சந்தின் மூலையோடு மூலையாய் நிறுத்தப்பட்டிருந்த சவம் அவன் சந்து திரும்புகையில் அவன் முதுகின்மேல் திடீரெனச் சாய்ந்தது. சாயவே, அதைப் பிணமென்று ஓராது, பதுங்கியிருந்து ஆளைப் போகவிட்டு மேல் வீழ்ந்து குரவளையைப் பிடித்து வழி பறிக்கும் கள்வனென்று நினைந்து, திரும்பி விரைவில் சவத்தைப் பற்றி முகத்தில் ஓங்கி ஒரு குத்து வைத்தான். அக்குத்தினுல் சவம் கீழே விழ, அதன்மேல் தான் வீழ்ந்து, 'திருடன்! திருடன்!' என்று கூக்குரலிட்டுக்கொண்டே நன்றாய்ப் புடைத்தான். அவன் கூச்சல் வழிப்போக்கர்களை அங்குக் கூட்டியது; சரத்துச் சேவகர்களும் வந்து சேர்ந்தனர். காவற்காரர் சங்கதி விசாரித்து வர்த்தகனை, 'ஐயா! அடித்தது போதும்; நிறுத்து நிறுத்து!' என்று விலக்கி, கள்வன் எழுந்திருக்கும்படி கையாகு கொடுத்துத்தூக்க முயன்றனர். கள்வன் எழுந்திராமல் அசைவின்றிப் பிணமாயிருக்கக் கண்டு வர்த்தகனைப் பிடித்துக் கட்டிப் போய் நியாயாதிபதியினுடைய காவற்கூடம் சேர்த்தனர். மிலேச்ச வர்த்தகன் அப்போது மது மயக்கம் நீங்கித் தெளிந்து, தான் முன் பின் யோசியாது செய்த செய்கையைக் குறித்துச் செய்வதின்னது தவிர்வதின்னது என ஒன்றும் தோன்றுதவனுய்த் தியங்கித் துன்புற்றிருந்து, நியாயாதிபதி கச்சேரிக்கு வந்தவுடன் அவர்முன் கொண்டு போய் நிறுத்தப் பட்டான். நீதிமான் காவலர் சொன்ன பிரியாதைக் கவனமாய்க் கேட்டு, கைதியுடன் எடுப்பித்து வந்த சவத்தை நன்றாய்ப் பார்வையிட்டு, வர்த்தகனை நோக்கி, 'நீ செய்ததாய் ருசுவாகிற இக்கொடிய செய்கைக்கு என்ன சொல்லுகின்றாய்?' என்றார். வர்த்தகன், 'ஐயா, இவன் எனது கைகளால் கொலையுண்டான் என்பதில் ஐயமில்லை. ஆதலினுல், நான் குற்றவாளியல்லன் என்று சொல்வதற்கு வழியொன்றும் இல்லை,' என்றனன்.

நியாயாதிபதி அந்தக் குறிய கூன் சவத்தைக் கண்ட போதே ஊராள்வோனுக்குச் சந்தோஷம் விளைவிக்கும் அகசியக்காரருள் அக்கூனனும் ஒருவனென்று அறிந்தவனுதலாலும், வர்த்தகனும் அரண்மனையைச் சார்ந்தவனுதலாலும், அரசன் அனுமதி பெற வேண்டி, இவ்வர்த்தகன் சூழாது புரிந்த கொலையைக் குறித்தும்,

அவன் அதைத் தடையின்றி ஏற்றுக்கொண்டதைக் குறித்தும் தேசாதிபதிக்கு விண்ணப்பம் செய்து, அவன் கட்டளை பெற்று மிலேச்ச வர்த்தகனைக் கழுவில் ஏற்றும்படி திர்மானித்து, வர்த்த கனைக் கொலைக்களத்திற்குக் கொண்டு போம்படி கட்டளையிட் டார். கொலை புரிவோர் கழுமரத்தடியில் அவனை நிறுத்தித் தூக்க எத்தனிக்கும் தருணத்தில், வேடிக்கை பார்க்க வந்து அங்குக் குழுமிய கூட்டத்தினின்று, 'ஐயா, அவரைக் கழு வேற்றுதே! ஏற்றுதே! கூனனைக் கொன்றவன் நானே!' என்று உரத்துக் கூவிக்கொண்டு ஒரு சுதேசவர்த்தகன் சரேலென்று எதிரே வந்து, நியாயாதிபதியை நோக்கி, தன் வீட்டின் புகைக் கூண்டின் வழியாய் அக்கள்வன் இறங்கினதும், அவனைத் தான் அடித்ததும், அதனால் அவன் இறந்து போனதும், தெருவிலே அவன் சவத்தைக் கொண்டு போய் நிறுத்தினதும் முதலான தன் கதையைச் சொன்னான்.

நியாயாதிபதி கேட்டு, 'இவ்வர்த்தகன் சுயேச்சையாய் ஓடி வந்து, 'நானே கொலை புரிந்தேன்,' என்று குற்றத்தை ஏற்றுக் கொள்கிறானே! இது என்ன ஆச்சரியம்!' என்று சற்று யோசித்து நின்று, பின்பு, 'நன்று, அம்மிலேச்ச வியாபாரியைவிட்டு இவ்வர்த்தகனைக் கழுவேற்றுக!' என்றார். கொலையாளிகள் அந்த வர்த்தகனைப் பிடித்துக் கட்டும்போது, யூதவைத்தியன் ஒருவன் கும்பலினின்று வெளிப்பட்டு, 'ஐயா, நியாயாதிபதியே, பொறும்! பொறும்! இக்கொலைக்குக் காரணம் இவ்வர்த்தகன் அல்லன்; நான் சொல்வதற்குச் சற்றுச் செவிசாய்க்கக்கடவீர்!' என்று சொல்லி, சென்ற இராத்திரி நல்ல தூக்கவேளையில் இருவர் இக்கூனனைக் கொண்டு வந்து தன் வீட்டுத் தெருக் கதவைத் தட்டினதும், வேலைக்காரி தீபமில்லாமல் கதவைத் திறந்ததும், அவள் கையில் ஒரு வெள்ளியைக் கொடுத்து அதைத் தன்னிடம் கொடுத்து அவர்கள் கூட்டி வந்த வியாதிஸ்தனை உடனே வந்து பார்க்கும் படிக்கு வேண்டினதும், அவர்கள் வேண்டுகோளைத் தன்னிடம் அவள் வந்து சொல்லுகையில் இக்கூனனை வீட்டின் மேல்மாடிப் படியண்டை அவர்கள் விட்டுப் போனதும், தீபமில்லாமல் நோயாளியைப் பார்க்கவேண்டித் தான் அவசரமாய் வருகையில் கால் பட்டுக் கூனன் படியில் புரண்டு கீழே வீழ்ந்து செத்துக் கிடந்ததும், தானும் தன் பெண்சாதியுமாய்ச் சவத்தை எடுத்துப் போய் அடுத்தவர்த்தகன் வீட்டு இறப்பின் புகைக்கூண்டு வழியாய் வீட்டினுள் இறக்கிவிட்டதும் விவரமாய்ச் சொல்லி, 'இக்குறியனை உண்மையாகக் கொன்றவன் நானே ஆதலால், கழுவேற்றப்பட வேண்டியவன் நானுகவே இருக்கின்றேன்; அவ்வர்த்தகன் குற்றவாளியல்லன் அல்லன்,' என்றான்.

அதைக் கேட்டு நியாயாதிபதி, 'ஈஃதென்ன புதுமை! முற்றும் சோதித்து அறிவோம்,' என்று, 'நல்லது, இவர்த்தகனை விட்டு வைத்தியனைப் பிடித்துத் தண்டிக்கக் கடவீர்,' என்று கட்டளை

இட்டார். அப்போது சுந்தரன் என்னும் தையற்காரன் கூட்டத்தினின்றும், 'நான்தான் குள்ளனைக் கொன்றேன்! கொன்றேன்! வைத்தியனைக் கொல்லாதேயுங்கள்! கொல்லாதேயுங்கள்!' என்று கூவிக்கொண்டு நியாயாதிபதிமுன் சரேலென ஓடி வந்து, அக்கூனனைத்தான் கடையில் கண்டு வீட்டிற் கழைத்துப்போய் விருந்தளித்த போது அவன் மாமிசமடைத்துக்கொண்டு செத்து வீழ்ந்ததனால் அவனைத் தானும் மனைவியுமாய்த் தூக்கிக்கொண்டு சென்று வைத்தியன் வீட்டின் மேல்மாடிப் படியிலே விட்டு வந்தது முதல் எல்லாச் செய்தியையும் விளங்கச் சொல்லி, 'கூனன் செத்தது நான் இட்ட சோறு உண்டதனலாகையால், நானே கழுவேற வேண்டியவனுகின்றேன்,' என்று பிடிவாதம் செய்தான்.

நியாயாதிபதி இம்மூவர் செய்தியையும் கேட்டு மேலே நடத்த வேண்டியதைப் பற்றி ஆலோசியாமல் நிற்கையில் வேடிக்கை பார்க்க வந்திருந்தவர்களுள் ஆங்கு நிகழ்ந்தனவெல்லாம் மிக்க ஆவலோடு கேட்டுக்கொண்டு நின்றிருந்த குழிந்தாழ்ந்த சிறு கண்களோடு கூடியவனும், வெள்ளிக்கம்பி காய்த்துத் தொங்குவது போல தேகமெங்கும் நீண்ட நரை பொருந்திய உரோமங்கள் குறைவறப் பெற்றுள்ளவனும், உச்சிமுதல் பாதம் வரையிலும் தளர்ந்து மடிப்படைந்து கறுத்து நீண்ட தேகத்தோடு கூடியவனுமாகிய ஒரு கிழ அம்பட்ட இரணவைத்தியன் சடுதியில் நியாயாதிபதி முன் வந்து நின்று, 'ஐயா, இந்தக் கூனன் இன்னும் செத்தானில்லை; உத்தரவாஞல் சில நிமிஷத்திற்குள் இவனை உயிர்ப்பிக்கமாட்டுவேன்,' என்று சொல்லிக்கொண்டே பிணத்தண்டை சென்று, அவன் தலையைப் பிடித்துப் பலமாய் அசைத்துப் பார்த்துத் தன்னிடமிருந்த ஓராயுதத்தினுல் அக்கூனன் தொண்டையில் அடைத்துக்கொண்டிருந்த எலும்போடு கூடிய ஒரு பெரிய மாமிசத்துண்டத்தை யாவரும் காண எடுத்துக் காட்டி, கூனன் சகஜமாய் நித்திரையினின்று எழுந்திருப்பவன் போல ஆயாசமின்றி எழுந்து ஆடிப் பாடும்படி செய்து, ஆங்கு எய்திய எல்லோரையும் சந்தோஷ சாகரத்தில் முழுகச் செய்தனன்.





[கற்புடையாள் ஒருத்தியின் இச் சரித்திரம் கடமை உணர்ச்சியால் அடையும் மேன்மையையும், செய்வன திருந்தச் செய்வதால் உண்டாகும் சிறப்பையும் விளக்குகின்றது. கடமையிலே கருத்து வைத்த கசாப் புக்காரனும், வேதாந்த ரகஸியங்கள் அடங்கிய 'வியாஸ கீதை' என்னும் நூலை இயற்றியது பாராட்டத்தக்கது. இக்கதை ஓர் உயர்ந்த கருத்தை உணர்த்துகிறது.

— பதிப்பாசிரியர்]

17

ஒரு பதிவிரதை சரித்திரம்

'செய்வன திருந்தச் செய்' என்பது போல, நாம் மேன்மை பெறுவதற்கு ஒரே வழியுண்டு; அவ்வழியாவது, நம்முடைய வேலையை நாம் லோபம் இன்றித் திருந்தச் செய்வதாம். ஒரு வேலையினுடைய தாழ்மையை எண்ணி, அவ்வேலை செய்பவரை நாம் ஒரு போதும் தாழ்வாகக் கொள்ளலாகாது. தாழ்ந்த வேலை செய்பவரைவிட உயர்ந்த வேலை செய்பவர் சிறந்தவரென மதிப்பதும் தவறு. செய்யும் வேலையைக்கொண்டு ஒருவனை நாம் மதிக்காமல், அவன் அவ்வேலையை எவ்வாறு செய்கிறான் என்பதையே ஆராய வேண்டும். ஒரு வேலையைச்செய்யும் விதமும் திறமும் ஆகிய இவ்விரண்டுமே செய்வோனை அறியும் கருவியாம். தன் குல விதிப்படி சொற்ப காலத்தில் அழுத்தமும் அழகும் கூடிய செருப்பைத் தைக்கும் சக்கிலி, சாரமற்ற விஷயங்களைப் பேசித் திரியும் உயர்குலத்தோனைக்காட்டிலும் மேலானவனுவான். எங்ஙனமெனில், முன்னொருகால், யௌவன சந்நியாசி ஒருவர் ஒரு காட்டில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து அரிய தவம் செய்து கொண்டிருக்கையில் ஒரு நாள் அவர் தலை மேல் சில சருகுகள் விழுந்தன. அவர் கண்களை விழித்து அண்ணாந்து பார்த்த போது, அம்மரத்து உச்சியில் ஒரு காக்கையும் கொக்கும் சண்டையிட்டுக் கொண்டிருந்தன; உடனே அவருக்கு அதிக கோபம் பிறந்தது. 'இச்சருகுகளை என் தலையில் எறிந்தீர்கள் அல்லவா? ஆ! உங்களுடைய ஆண்மையை அறிகிறேன்!' என்று சொல்லி, அவர் தம் பற்களைக் கடித்துப் புருவத்தை நெரித்துக் கோபாவேசத்தோடு

அவைகளை உற்று நோக்கவே, யோகபலத்தால் அவர் சிரசினின்று அக்கினி ஜ்வாலை எழுந்து அப்பக்ஷிகளைச் சாம்பராக்கிற்று.

பின்னர், அவருக்குக் குக்ஷிபாதை உண்டாகவே காட்டைவிட்டு நாட்டில் புகுந்து ஒரு வீட்டின் தெருக் கதவருகில் நின்றுகொண்டு, 'அம்மணீ, கொஞ்சம் அன்னந்தா,' என்றார். 'குழந்தாய், கொஞ்சம் பொறு,' என்று அவ்வீட்டுக்குள்ளிருந்து ஓர் ஒலி கேட்டது. உடனே அவர், 'பெண் பேதாய், என் வல்லமை இன்ன தென்பதை நீ அறியாய்! நீ எப்படி என்னைக் காக்க வைக்கலாம்?' என்று தம்முள் எண்ணினார். அவர் இவ்வாறு மனத்தில் எண்ணுகையில், உள்ளே அவ்வரவம் திரும்பவும் கிளம்பி, 'பிள்ளாய், உன்னை நீ அதிகமாக மதித்துக்கொள்ளாதே; இங்குக் காக்கையேனும், கொக்கேனும் இல்லை,' என்றது. அது கேட்டு, தவசிக்கு ஆச்சரியம் உண்டாகிப் பின்னும் சற்று நேரம் நிற்கலானார்; கடைசியில் ஒரு மாது வெளியில் வரக் கண்டு, 'அம்மா, அதை நீ எவ்விதம் அறிவாய்?' என்று கேட்டார். 'மதலாய், நீ செய்த யோகமும் அறியேன்; யாகமும் அறியேன். நான் ஓர் எளிய பெண் பேதை. உடம்பு குணமில்லாமல் இருக்கும் என் கணவரை உபசரித்துக்கொண்டிருந்ததால் நான் உன்னைக் காக்கும்படி செய்தேன். என் காலமெல்லாம் எனது வேலையைச் செய்வதிலேயே கழித்து வந்தேன். கலியாணமின்றிக் கன்னியாக இருந்தகாலையில் கன்னியர்க்கு உரிய என் கடமையைச் செய்தேன்; எனக்குக் கலியாணமான பிறகு மனைவியருடைய கடமையைச் செய்கிறேன். நான் பண்ணும் யோகம் இவ்வளவேயாம். இவ்வித யோகத்திலேயே நான் ஞானம் அடைந்தேன். இப்போது உனது மனத்திலுள்ளதையும், நீ காட்டில் செய்ததையும் நான் நன்கறிந்து சொல்லக்கூடும். இதைவிட நீ அதிகம் அறிய விரும்பினால், அடுத்த பட்டணத்திலுள்ள கடை வீதிக்குப் போய், அங்குள்ள கசாப்புக் காரனைப் பார். நீ தெரிந்துகொள்ள வேண்டிய சில முக்கிய சங்கதிகளை அவன் உனக்கு உணர்த்துவான்,' என்று சொன்னாள்.

தான் என்னும் அகந்தை கொண்ட அச்சந்நியாசி அதைக் கேட்டதும் வெட்கமடைந்து, ஆடு மாடு அறுக்கும் கசாப்புக் காரனை கடைசியில் நமக்குக் குருவானான்!' என்று சற்றுத் தலை குனிந்து யோசித்தார். எனினும், கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவர் செய்த நல்வினை அவ்வெண்ணத்தை மாற்றிக் கசாப்புக் காரனைக் காண வேண்டுமென்னும் ஆசையைத் தந்தது. அவ்வாசையால் அவர் அவ்வூரை அடைந்து, கடை வீதியே போய்க்கொண்டிருந்த போது, கொஞ்ச தூரத்தில் தடித்த தேகமும், உயர்ந்த உருவமுமுள்ள ஒரு கசாப்புக்காரன் வலக் கையில் ஒரு பெரிய கத்தியைப் பற்றி அநேக பிராணிகளைக் கொன்று மாமிசத்தை வருபவரிடத்தில் விற்பனை செய்வதைக் கண்ணுற்றார். அப்போது சந்நியாசி, 'ஓ தெய்வமே, நான் ஞானத்தை உணர்வது இக் கொலைப்பாதகனிடத்திலேயோ! நன்றாயிருக்கிறது! இவனைப்

பார்த்தால் பூதமே மனித ரூபம் எடுத்து வந்தது போல இருக்கிறதே!' என்று எண்ணினார். கசாப்புக்காரன் தலையை நிமிர்த்தி, 'சுவாமி, அந்த அம்மாளா உம்மை அனுப்பியது? நான் என் வேலையை முடிக்குந்தனையும் இங்கே உட்கார்ந்துகொண்டிரும்,' என்றான். பின்னர் மாமிசம் அனைத்தும் விற்றானதும், கசாப்புக் காரன், விற்ற பணத்தை எடுத்துக்கொண்டு, 'வாரும் ஐயா, வீட்டிற்குப் போகலாம்,' என்று சொல்லிச் சந்நியாசியை அழைத்துச் சென்றான். அங்கே கசாப்புக்காரன் சந்நியாசிக்கு ஓர் ஆசனம் தந்து, 'கொஞ்சநேரம் பொறும்,' என்று வெளியில் உட்காரச் சொல்லி, வீட்டில் நுழைந்து உள்ளிருந்த தன் தாய் தந்தையரைத் தூக்கி வந்து உட்கார வைத்துக் குளிப்பாட்டி அன்னம் படைத்து மற்றும் வேண்டிய பணிவிடைகளைச் செய்து, திரும்பி வந்து சாமியார் எதிரில் உட்கார்ந்து, 'ஐயா, நீங்கள் என்னைப் பார்க்க வந்தீர்கள் போலும்! உங்களுக்கு என்னால் ஆக வேண்டிய உதவி யாது?' என்று கேட்டான். சந்நியாசி, ஆத்துமத்தைப் பற்றியும், கடவுளைப் பற்றியும் சில கேள்விகள் கேட்டார். அவற்றிற்குக் கசாப்புக்காரன் கூறிய விடைகள், பெரிய புத்தகமாகி 'வியாஸகீதை' என்று பெயர் பெற்று யாவராலும் மதிக்கப்பட்டு வருகின்றன. வேதாந்தத்தின் இரகசியங்கள் எல்லாம் அதில் விளக்கப்பட்டிருக்கின்றன.

கசாப்புக்காரன் தன் பிரசங்கத்தை முடித்ததும் சந்நியாசிக்கு உண்டாகிய ஆனந்தத்தின் அளவை நம்மால் சொல்ல முடியாது. அவர், 'இவ்வளவு ஞானத்தோடு கசாப்புக்காரன் எனப் பெயர் பூண்டு ஈனமான வேலை புரிய வேண்டுவதென்ன?' என்று கேட்க, அவன், 'ஐயா, நாம் செய்யும் எந்த வேலையும் அவலக்ஷணமும், அசுத்தமும் ஆனதன்று. நான் குலத்தில் கசாப்புக்காரனாய்ப் பிறந்தேன்; நான் இளம்பருவத்தில் கசாப்புத் தொழிலில் பழகினேன். உலகத்தவரைப் போல நான் ஆசை வையாமல் என் அலுவலைச் செவ்வனே செய்ய முயலுகிறேன். கிருஷ்ணனுக்கு விதித்துள்ளபடி நான் என் கடமையை நடத்தி, என் பெற்றோர்களைச் சந்தோஷிப்பிக்க என்னால் இயன்ற மட்டும் பிரயாசைப் படுகிறேன். யான் உம்முடைய யோக வித்தையைக் கற்றிலேன்; ஒரு நாளும் சந்நியாசி வேஷம் தரித்திலேன்; நாட்டை நீங்கிக் காட்டிலும் புகுந்திலேன். ஆயினும், நான் அறிந்தது, ஆசையை அறவே வெறுத்து என் தொழிலைப் பழுதுறுமல் செய்து வருவதனால் உண்டாகியதாம்,' என்றான்.

உலகீர், இக்கதையால், ஞானமே எல்லாவற்றிலும் மிக அரியதும் எல்லாராலும் விரும்பத்தக்கதும் ஆமென்றும், அந்த ஞானத்தை அடைய ஒவ்வொருவரும் முயல வேண்டுமென்றும் விளங்குகின்றமையால், ஒவ்வொருவரும் வாளாவீணுள் ஆக்காமல் ஞானம் கைவல்லியமாகும் முயற்சியில் நிற்போமாக!



[காளிதாஸர் ஒரு தெய்வப் புலவர்; வடமொழிப் பெருங்கடலே உண்டு இரகுவமிசம், மேகசந்தேசம், குமார சம்பவம் என்னும் நூல்களாகிய காவிய மழை பொழிந்தவர்; போஜராஜன் அவைக்களத்தைத் தம் இனிய கவிதைகளால் அலங்கரித்தவர். இப்பகுதியில் ஆங்காங்கே காளிதாஸரின் வடமொழிச் சுலோகங்களுக்குப் பொருத்தமான தமிழ்ப் பாடல்களும் தரப்பட்டுள்ளன. போஜராஜனுக்கும், காளிதாஸருக்கும் உள்ள நட்பின் திறமும் இங்கு உருக்கமாகக் கூறப்படுகிறது. காளிதாஸரின் கவிதை விருந்தைப் பருக விரும்பும் தமிழன்பர்கள் இச்சரித்திரத்தை மீண்டும் மீண்டும் படித்து இன்புறுவார்களாக.

— பதிப்பாசிரியர்]

18

காளிதாஸப்புலவர் சரித்திரம்

திருமகளும் நாமகளும் பண்டுதொட்டு மகிழ்ந்து தமதுறைவிடமாகக் கொள்ளப் பெற்றுள்ள இப்பரத கண்டத்தில் மகிஷ என்னும் நாட்டிலே மகிஷபுரியில் மகேந்திரன் என்னும் அரசன் ஒருவன் செங்கோலோச்சி வருவானினன். அவனும் அவன் தேவி அன்னபூரணி என்பவளும் இயற்றிய அருந்தவப்பயனாக அழகெலாம் திரண்டு ஒரு வடிவெடுத்தாலொப்ப ஒரு புத்திரி உற்பவமாயினள். அப்புத்திரியை அவன் கண்மணி போலப் பரிபாலித்து ஏற்ற காலத்திலே கல்வி கேள்விகளிலும், படைக்கலப் பயிற்சியிலும் அவளுக்கு இணை உலகத்தில் மற்றொருவருமில்லை என்று யாவரும் பாராட்டும் வண்ணம் வல்லவளாக்கி, வித்தியாகுரோசம் என நாமகரணம் செய்து, அவளை அவளுடன் கல்வி கேள்வி முதலியவற்றில் வாதாடி வெல்லுவோர்க்கே மணமுடித்துக் கொடுப்பேன் என்று நாடெங்கும்

முரசறைவித்தான். முரசொலி கேட்ட கவிவாணரும் அரசரும் காமுகரும் என்னும் இவ்வரிசையோர், தத்தம் இஷ்ட தேவதைகளை வழிபட்டு, நாட்பார்த்து, நன்னிமித்தம் ஓர்ந்து, தத்தம் பதிகளை விடுத்துப் புறப்பட்டு, மகிஷபுரியை அடைந்து தனித்தனியே அவளுடைய சமூகம் சென்று வாதாடி வெட்கி ஒருவர்பின் ஒருவ ராய் அகல்வாரும், அவளுடைய கட்டழகை நீணந்துருகி அவள் முக தரிசனமே பெரும்போகம் என வீணவாவுற்று அந்நகரிற்ருனே குடிகோலுவாருமாயினர். இப்படி நாள் பல கழிந்த பின்னர், அரசனும் கவலை மிக்கவனுகி, 'இனி நம் புத்திரியை மணம் புகுத்தாது வைத்திருப்பது நன்றன்று; அவளுமோ பன்னீராட்டைப் பருவத் தாள் ஆயினுள்; எண்ணிலாத அரசரும் கவிவாணரும் வந்து வாதாடி அவளுக்குத் தோற்று வெட்கி அகன்ருர்கள். இனி அவளை வதுவை செய்யத்தக்க வல்லவர் உலகத்தில் யாவர் இருக்கிருர்! இதற்கு யாது கூறுகிருய், மந்திரி!' என்று தன் முதல் மந்திரி யாகிய ஆத்மரக்ஷகன் என்னும் மந்திரியுடன் சூழ்ச்சி செய்வானு யினன். இதற்கிடையில் முன்னர் அவளுடன் வாதம் செய்தாற்ருது ஓடிப் போன கவிவாணர் சிலர் ஒருங்குகூடி 'நம்மையும் இன்னும் எண்ணிலாத அரசர் கவிவாணர் முதலியோரையும் அவமானம் செய்து புறத்தே தள்ளிவிட்ட இராசகுமாரியை வஞ்சகச் சூதினுல் அவமானம் செய்யோமாகில் நாம் ஆண் மக்களாய்ப் பிறந்தும் பயனில்லாதவராவோம்; ஆதலால், அங்ஙனம் செய்ய ஓர் உபாயம் எடுப்போமாக,' என்று ஒரு நவீன சூழ்ச்சி செய்து, அதற்குக் கருவியாக ஒருவனைத் தேடப் புறப்பட்டுப் போகையில், அரிகரபுரத் திலே உள்ள அங்ஙகாராயண ஐயன் என்பானுக்குப் புத்திரன், தருமத்துக்கேற்ற வேதாத்தியயனத்துக்கு யோக்கியனல்ல என்றும் அவன் மௌனட்டிகம் காரணமாக நீக்கப்பட்டவனுமாகிய அரிகர ஐயன் என்பவன் தனது மந்தைக்கு உணவின்பொருட்டு ஒரு மரக் கொம்பின் மேலேறி நுனியிலிருந்து அதன் அடியை வெட்டிக் கொண்டிருக்கக் கண்டு மகிழ்ந்து, இம்மூடனிலனே நமது கருத்தை நிறைவேற்றற்குத் தகுந்த கருவியானவன் என்று மதித்து, அவனை அணுகி, அழைத்துக்கொண்டு தம்முள் ஒருவருடைய கிருகத்தைச் சேர்ந்து, அங்கே அவனை உயர்ந்த பரிமளத் தைலமிட்டு நீராட்டி, நல்ல போசனமருத்திக் களபகஸ்தூரிகளை அணிவித்து, ஆடையாப ரணலங்கிருதனுக்கி, யார் என்ன கேட்கினும் என்ன செய்யினும் சமிக்கைகளாலன்றி வாயைத் திறந்து யாதும் சொல்லாதிருக்கும்படி உடன்படுத்தி, ஒரு சிவிகையில் ஏற்றித் தாமே சுமந்துகொண்டு போய் இராசசமூகம் சேர்ந்தார்கள். இதைக் கண்ட வாயிலாளர் அரசனிடன் சென்று வித்துவான்களது வரவைத் தெரிவித்ததும், அரசன் மிக்க மகிழ்ச்சி உடையனுகிச் சபாமண்டபம் புக்கு, வித்து வான்கள் எல்லோரையும் உபசரித்து ஆசனத்தில் இருத்தி, தனது குமாரத்திக்குச் சேதி போக்கினன். அவளும் காலம் தாழ்க்காது எழுந்து ஆடையாபரணலங்கிருதையாகிச் சபாமண்டபம் புகுந்து,

தந்தையையும் ஏனைய பெரியோரையும் வணங்கி நின்றுள். வணங்கி நின்ற புத்திரியை அரசன் பார்த்து, 'எனது அன்பில் சிறந்த புத்திரி, இங்கே இவ்வித்துவக் குழாத்தின் மத்தியிலே வீற்றிருக்கும் இப் புருஷோத்தமர் கலாசமுத்திரமெனத் தக்கவரும், இவ்வித்துவ கணத்திற்கு எல்லாம் குருவுமாயுள்ளவராம்; அவர் இன்றைக்கு உன்னுடன் வாதாடி உன்னை வென்று மணமுடிக்கக் கருதி வந்திருக் கின்றனர்; இஃதுணர்த்துமாறே ஈண்டுன்னை வருவித்தேன்,' என்று உரைத்தான். அது கேட்ட வித்தியாகுரோசம் என்னும் அந்நங்கை குறுமுறுவல் செய்து, அவர் மௌனி என்பதை முன்னரே உணர்ந்துகொண்டவள் ஆகையால், அவருடன் சமிக்கைகளால் வாதாட நிச்சயித்து, பிரபஞ்சகாரணம் ஒன்றே என்னும் குறிப்புத் தோன்ற ஒரு விரலைக் காட்டினுள். அது கண்ட ஐயன் யாது கருதியோ இரு விரலைக் காட்டினுன். இதன் பொருளைப் பக்கத்தி லிருந்த வித்துவான்கள் எல்லோரும் விரித்துரைத்து, மேற்கோள் காட்டி உலக காரணம் இரண்டென்று சுவபக்ஷ ஸ்தாபனமும் பரபக்ஷகண்டனமும் செய்தார்கள். அதற்கு அந்நங்கையும் சம்ம தித்தவளாகிச் சங்கேதப்படி அவனுக்கு மாலையிட உடன்பட்டாள். தன்னது புத்திரி மணத்துக்கு இயைந்தமையைக் கண்ட அரசன் ஆனந்தோததியில் மூழ்கினவனாய், கலியாணோற்சவத்திற்கு வேண்டு வன எல்லாம் செய்வித்து, அதிசம்பிரமமாக இருவருக்கும் மணம் முற்றுவித்தான்.

அன்றிரவு இந்திர சயனமண்டபமெனத்தகும் அலங்காரப் பள்ளியறைக்கு மணமகன் எழுந்து போய் அங்கேயுள்ள விநோதங் களை எல்லாம் சண்டு மருள்கொண்டு பிரமித்துச் சிறிது நேரம் யாது செயற்பாலது என்று ஆலோசித்து நின்றுன். அது கண்ட தோழிகள் மணமகனுக்கென்று நவீனமாக அமைக்கப்பட்டுள்ள அமிசதூளிகா மஞ்சத்தைக் சுட்டிக் காட்டி அதில் போய்ச் சயனிக்கு மாறு சொற்றனர். அவ்வாறே மணமகனும் அம்மஞ்சத்திலேறிப் படுத்து, அவ்வகைச் சுகமான படுக்கையை எந்நாளிலும் கண்டு கேட்டறியாதவனுதலால், சடுதியில் பிரஞ்ஞையற்றுன் போன்று ஆழ்ந்து நித்திரை போயினன். இதற்கிடையில் அங்கே அந்தப் புரத்திலிருந்த மணமகள் ஆடையாபரணலங்கிருதையாகிச் சந்தன புஷ்பாதிகள் அணிந்து இரத்தினங்கள் இழைத்த தங்கத் தட்டுகளில் அதிமாதுரியமான சிற்றுண்டிகளைத் தாதிகளேந்தி நான்மருங்கும் தன்னைச் சூழ்ந்து செல்லப் பள்ளியறை போயினள்; அங்கே கணவன் துயில் செய்வதைக் கண்டு வீணையை எடுத்து மெள்ள மீட்டினள். அதற்கு அவன் விழிக்காதது கண்டு மீண்டும் சிறிது நேரம் சுரத்தோடு பொறித்தாள். அதற்கும் அவன் எழுந்திராமை யைக் கண்டு வீணையோடு பொருந்த இனிய கீதங்களைப் பாடினுள். அதனலும் அவன் நித்திரை தெளிந்திலன். அப்பால் பாடலை ஒழித்துவிட்டு, தாம்பூலம் தரித்துத் தம்பலத்தை அவனுடைய வாயில் உமிழ்ந்தாள். அதனல் நித்திரை சற்றே தெளிந்தவனுகித்

தான் மணமகனுய் இருப்பதை மறந்து, தான் ஆட்டுக் கூட்டத் தருகில் படுத்திருக்கும் வழக்கத்தை எண்ணி, ஆடுகளன்றே தனது வாயில் மலங்கழிக்கின்றன என நினைத்து, 'தூ, தூ, மூதேவி ஆடே' எனப் பிதற்றி விழித்தான்.

இம்மொழிகள் புண்ணில் வேல் நுழைந்தாலொப்ப இராச குமாரியினது செவியில் புகுதலும், இராசகுமாரி மிகுந்த சினம் கொண்டு துணுக்கென ஒரு வாளாயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அவனை அதட்டி எழுப்பி, 'நீ யாவன்? உன் வரலாறு என்ன? உள்ளபடி சொல். அன்றேல், இக்கட்கத்தால் உன்னைத் துண்டிப்பேன்!' என்ன, ஏழையாகிய அவ்வையன் நடுநடுங்கித் தையங்குன்றி உடல்பொன்றி நாக்குழறிச் சாட்டாங்கமாக அவள் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து, அஞ்சலியஸ்தனுய் நின்று, 'தாயே, நான் அரிகரபுரத்திலே உள்ள அநந்த நாராயண ஐயனுக்குப் புத்திரன். என் பெயர் அரிகரன். தந்தை முதலியோர் எனது மௌட்டிகம் காரணமாக என்னை ஆடு மேய்க்கும் தொழிற்கே யோக்கியன் என்று அத்தொழிலுக்கு உரியவனுக்கினர். அதுவே என் தொழில். இன்று காலையில் நான் ஆடு மேய்த்துக் கொண்டு இருக்கையில் என்னை வித்துவான்கள் சிலர் வந்து பிடித் துக்கொண்டு போய் அலங்கரித்து, யார் என்ன கேட்கினும் வாயி னல் யாதும் பேசாதிருக்குமாறு உடன்படுத்தி, ஒரு சிவிகையிலேற்றி இங்கே கொண்டு வந்தார்கள். அதன் பின்னர் நிகழ்ந்தவைகளை நீயே அறிவையன்றே? இதுவே என் வரலாறு; என்னைக் கொல்வது தருமமன்று; நான் யாதும் அறியேன்,' என்று கூறினன்.

இவைகளைக் கேட்ட அரசகுமாரி புன்சிரிப்புக் கொண்டு வாளைத் தூரத்தே வீசிவிட்டு, அவனை, 'அஞ்சாதிரு,' என்று தேற்றி, அவன் தெளிந்த பின்னர் அவனைப் பார்த்து, 'ஓ பிராமணு, இவ்வூருக்கு மேற்றிசையிலே புவனேசுவரி ஆலய மொன்று இருக்கின்றது; அங்கே நீ இப்போதுதானே சென்று கோயிலினுள் நுழைந்து கபாடபந்தனம் பண்ணிக்கொள்; சிறிது நேரத்தின்மேல் புவனேசுவரி வந்து கதவைத் தட்டுவாள்; நீ திறப்பதில்லை என்று கூறு; காரணம் யாது என்பாள்; 'பீசாக்ஷரத்தை நின் கைச்சூலத்தால் இந்தக் கதவின் புரைவழியாக என் நாவில் பொறித்து என்னை என்றும் காக்கவும் உடன் படுவையேல், திறப்பேன்,' என்று கூறு; அதற்கவள் உடன்பட்டு அவ்வாறு முடிப்பாள்; அதன்மேல் கதவைத் திற,' என்று கூறினுள். அவனும் அது கேட்டு மகிழ்ந்து குறிக்கப்பட்ட வழியே சென்று கோயிலிலே நுழைந்து புவனேசுவரியினது அருள் பெற்றுக் கொண்டு உடனே திரும்பி அந்தப்புரம் வந்துபள்ளியறைக்கதவைத் தட்டி இராஜகுமாரியை அழைத்தான். அரசகுமாரி விழித்து, 'நூதனக் குரலொலி கேட்கப்படுகின்றதே! இஃதேது?' என்னும் கருத்துள்ள,

'வாங் விசேஷம் கிம் படதி?'

என்னும் வாக்கியத்தைச் சொல்லிக்கொண்டு கதவைத் திறந்தாள். மேககுலமெழுந்து கருப்பஞ்சாற்றுக் கடலினிடமாகச் சென்று படிந்து கருப்பஞ்சாற்றை ஆரமுகந்து மீண்டு வந்து முழங்கி நின்றாற்போன்று நின்ற ஐயன் செவியில் அச்சொற்கள் படுதலும், ஐயன் புளகங்கொண்டு கருப்பஞ்சாற்று மழை விடாது பொழிந்தாலொப்பப் பொழிந்த அதியற்புதக் கவிமழையால் இரகுவமிசம், மேகசந்தேசம், குமாரசம்பவம் என்னும் நூல்களாகிய ஜலாதாரங்கள் மூன்று விடியுமுன் நிறைந்து தேங்கின. இவைகளைக் கண்ட இராசகுமாரி, சொல்லற்கரிய மகிழ்ச்சி கூர்ந்தவளாகியும், அவன் தன்னைத் தாயே என்று கூவி, காலில் வீழ்ந்து பணிந்த காரணத்தால் தான் அவனை நாயகனாகக்கொண்டு சுகிக்கக்கூடாமையை நினைந்து, வியசனமுற்று, அவனைப் பார்த்து, 'உன்னை நான் நாயகனாக வரித்தேன்; அப்பால் நின் வாயினின்றும் எழுந்த துஷ்டவாசகம் காரணமாக உன்னைக் கொல்லுவதற்கு முயன்றேன்; நீ உண்மையைக் கூறித் தாயென முறைகொண்டு விளித்து என் பாதத்தில் வீழ்ந்தனை; அதனால் உன்னைச் சேருவது தகுதியன்று; ஆகையால், இன்று முதலாக நீ காளிதாஸன் எனப் பெயர் புனைந்து எங்கும் விளங்கி இராச பூச்சியத்தை உடையவனாய் வாழ்க!' என்று ஆசி கூறி அவனை அனுப்பினள். அவன் போன பின்னர், அரசகுமாரி புவனேஸ்வரியினது ஆலயத்தை அடைந்து அத்தேவியை வணங்கி அவளருளால் தாசி வடிவம் பெற்றுப் போசராசனுடைய நகரம் சென்று காளிதாஸனைச் சேர்ந்து சுகிக்கும் கருத்துடையவளாகி அங்கே வாசம் பண்ணுவாளாயினள்.

இவளிங்ஙனமாக அங்கே இவளிடத்தில் அனுமதி பெற்றுப் போன காளிதாஸன் சில காலமாகத் தேசசஞ்சாரம் செய்து அங்கெல்லாம் தன்னைக் கவிச்சிங்கமென நாட்டிப் பெயர் படைத்து ஈற்றில் ஆங்காங்குப் பரிசாகப் பெற்ற யானை, குதிரை, சிவிகை, குடை, கொடி, ஆலவட்டம், சாமரம், பரிசனங்கள் முதலியன சூழ ஒரு யானைமேலேறி வாத்தியங்களொலி செய்யத் தாராநகரம் சேர்ந்து போசனுடைய அவைக்களம் புகுந்தான்.

அவ்வேளையில் போசராசன் பூசாமண்டபத்திலே பூசை புரிவானையினன். சபா மண்டபத்திலே வித்துவான்கள் மாத்திரம் இருந்தார்கள். காளிதாஸன் தான் புகுந்திருப்பது அரசனுடைய சபாமண்டபமாயிற்றே என்பதைச் சிறிதும் சிந்தியாமல் உத்தண்ட நடையுடையனாய்ச் சபை நடுவே சென்றான். அது கண்ட வித்துவான்கள் சிங்கத்தைக் கண்ட யானைக்குழாம் போலத் திகைத் தெழுந்து நின்றார்கள். காளிதாஸன் அவர்களை உட்காரும்படி செய்து, தானும் ஓர் ஆசனத்திலே வீற்றிருந்து, அவர்களுக்கெல்லாம் தானே தாம்பூலம் கொடுத்துத் தானும் தாம்பூலம் தரித்துக்கொண்டு அவர்களுடன்அளவளாவுவானினன். அப்போது வித்துவான்கள் எல்லோரும் அன்று காலையில் அரசன் சங்கரகவி **பென்பானொருவனுக்குப் பாத்திராபாத்திரம் நோக்காது**

பன்னிரண்டு லக்ஷம் பொன் கொடுத்தைப் பற்றிக் குறை கூறி முறையிட்டார்கள். காளிதாஸன் அதனைக் கேட்டு நகைத்து, 'நீங்கள் அதன் பொருட்டு விசனப்படுவதுஅறியாமை; எங்ஙனமென்பீராயின் அரசன் சங்கரகவிக்குப் பரிசாகக் கொடுத்தது ஒரு லக்ஷமே; அப்பால் அரசன் செய்வது ஸ்ரீசங்கரன் பூசையாதலின் அப்பெயர் தரித்து அப்பூசாகாலத்திலே வந்தமையால் நாம விசேஷம் பற்றியும் பூசாகாலத்திலே உருத்திரருக்குத் தானம் செய்வது கடனுதலாலும் பன்னெரு ருத்திரர்க்கும் தனித்தனி ஒரு லக்ஷமாகச் சங்கற்பித்துப் பதினெரு லக்ஷமுமாகப் பன்னிரண்டு லக்ஷம் பொன் அக்கவிக்குக் கொடுத்தவாறு காண்க,' என்ருன். இதைக் கேட்ட வித்துவக்குழாம் காளிதாஸனுடைய சாதுரியத்தையும் அரசனுடைய விவேகத்தையும் தங்கள் அறியாமையையும் கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் வெட்கமும் அடைந்தவராய், மேல் கூறத்தக்கது யாதெனத் தெளியாது மயங்கி இருந்தார்கள். இதற் கிடையில் போசராசனும் பூசையை முடித்துக்கொண்டு அந்தப் புரம் சென்று மீண்டு வரும் போது காளிதாஸன் சொன்ன சமாதானம் செவியிற்பட்டது. பட்ட மாத்திரத்தில் அரசன் ஆச்சரியவந்தனுய், 'நமது அந்தக் கருத்தை உள்ளபடி அறிந்து கொண்டு சொன்ன இவன் அரசன்ருனே, அன்றி ஈசனே!' என்று ஐயமுற்றுச் சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்று ஈற்றில் அவனைப் பார்க்க வேண்டுமென்று அவாவுற்று விரைந்து சபையில் புகுந்தான். அரசனைக் கண்ட காளிதாஸனும் மகிழ்ந்து மங்கள ஆசி கூறினன்.

அரசன் காளிதாஸனைக் கண்டமாத்திரத்தில் சொல்லுதற்கரிய பெருமகிழ்ச்சியில் முழுகிப் பரவசப்பட்டு நின்றமையால், பிரதி வந்தனம் செய்ய மறந்து நெடுநாள் பிரிந்திருந்த காதலி தனது நாயகனை வரவேரடும் கையைப் பிணித்து இழுத்துச் செல்வது போலத் தனது கரங்களால் அவன் கரத்தைப் பிடித்து அழைத்துக் கொண்டு அந்தப்புரம் சேர்ந்து அங்கே காளிதாஸனை ஓர் ஆசனத்தி லிருத்தித் தானும் ஓர் ஆசனத்திலே வீற்றிருந்து அவன் முகத்தைப் பார்த்து, 'பிராமணோத்தமரே, உமது திருநாமத்தால் பெருமை யுற்றுள்ள எழுத்துக்கள் எவை? உமது பிரிவையாற்ருது வருந்துவது எத்தேசம்? உம்மை நினைந்து கவலையுற்றிருக்கும் ஜனங்கள் யாவர்? (பெயர் குலம் விஞ்வியபடி)' என்ருன். அதற்குக் காளிதாஸன், 'எனது பெயர் காளிதாஸனே' என்று* அரசனுடைய கையிலெழுதினன். அரசன் அதனைப் படித்து அன்பு கூரப்பெற்றவனுய்க் காளிதாஸனுடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தான். அப்பால் இருவரும் மிக்க சினேகம் பூண்டு நானுவிஷயங்களில்

* மூன்று வினுக்களுக்கும் விடை கொடாது ஒன்றுக்கு மாத்திரம் விடை கொடுத்தது, காளிதாஸன் வரலாற்றை அரசன் நெடுங்காலமாகப் பிறர் வாய்க் கேள்வியால் உணர்ந்திருந்தானுகையால் மற்றைய வினுக்களுக்கு விடை அனுவசியமென்பது கருதி என்க.

சல்லாபம் செய்துகொண்டு இருக்கையில் மாலைக் காலம் சமீபித்தது. அது கண்டு அரசன் சூரியன் கடலில் ஆழ்ந்தான் என்னும் கருத்துள்ள,

"பரி பத பயோநிதௌ."

என்பதை ஒரு சுலோகத்து முதலடியாகச் சொன்னான். இச்சமயத்தில் அங்கிருந்த வித்துவசிரேஷ்டையாகிய சீதை என்பவள், 'வண்டுகள் தாமரை மலரில் அடங்கின,' என்னும் கருத்துள்ள,

"ஸரஸிருஹாமுதரேஷுமத்தப்ருங்க."

என்பதை இரண்டாமடியாகச் சொன்னாள். இவைகளைக் கேட்டிருந்த வித்துவ சிரேஷ்டனாகிய பாணகவி என்பவன் ஒருவன், 'உத்தியானவனத்திலிராநின்ற பறவைகள் மரப் பொந்துகளில் அடங்கின,' என்னும் கருத்துள்ள,

"உபவநதரு கோடரே விஹங்க:."

என மூன்றும் அடியைச் சொன்னான். அது கேட்ட அரசன் காளிதாஸனை நோக்கி, 'உத்தம கவியே, நீர் நான்காம் அடியைச் சொல்லும்,' என்றான். காளிதாஸன் அதற்கிசைந்து, 'யுவதிகளிடத்தில் மன்மதன் மெல்லமெல்ல வரத் தலைப்பட்டான்,' என்னும் கருத்துள்ள,

†"யுவதி ஜநேஷு சநை சநைரநங்க:"

என நான்காமடியைச் சொன்னான்.

"வெய்யவன் சென்று மேவினன் பாற்கடல்;
செய்ய தாமரைச் சேக்கைய வண்டினம்;
துய்ய கோடரந் துன்னின புட்குலம்;
பைய வோதியர்ப் பற்றினன் காமனே."

இதனைக் கேட்ட அரசன் முன்னைய மூன்றடிகளைப் பார்க்கினும் நான்காமடியே சொல்லிரசம் பொருளிரசம் சந்தரசம் முதலியனவற்றால் விசிட்டமுற்றிருப்பது கண்டு மிக்க சந்தோஷமுடையவனாகிக் காளிதாஸனைப் பார்த்து, 'நீர் சரஸ்வதியின் அமிசாவதாரமாவதன்றி வேறன்று. உமது திருவாக்கில் மாலைக் காலத்தை முற்றுக வருணித்தரும்,' என்றான். அதற்குக் காளிதாஸனும் நன்றென்றிசைந்து, 'வியசனமிக்குள்ளவனுடைய கல்வியறிவு எவ்வாறு மழுங்குமோ அவ்வாறு தாமரைப் பூலின் காந்தியும், அந்நிய தேசத்தை அடைந்த மானி எவ்வாறு கீழ்மையடைகின்றானோ அவ்வாறு வண்டுகளும், கொடுங்கோல் மன்னன் எவ்வாறு உலகத்தை வருத்துகிறானோ அவ்வாறு இருளும், உலோபிகளிடத்திலுள்ள செல்வம் எவ்வாறு

† யுவதி 16 வயதுப் பெண்.

சன்மார்க்கத்தில் பிரயோஜனப்படாதோ அவ்வாறு கண்களும் இருக்கின்றன என்னும் கருத்துள்ள,

" வ்யஸநித யிவவித்யாக்ஷிய்யதே பங்கஜ ஸ்ரீர்க்குணிக யிவ்விதேஸே
தைன்யமாயாம்தி ப்ருங்கா : குந்ருபதி ரிவலோகம் பீடயத்யந்தகா
ரோதந மிவக்ருபணஸ்ய வியர்த்த தாமேதிசக்ஷு :."

" துன்பி னுற்றுடக் குண்டவர் கல்விபோல்
சோ மாய்ந்தது தாமரை மாமலர் ;
வன்பு லாம்பிற நாட்டிடை மானிபோல்
மாண்பு பொன்றின வண்டின மாவன ;
அன்பி லாமற மன்னவ ராணைபோல்
ஆதி யந்தம் பரந்தது வல்லிருள் ;
இன்பி லாதபுன் லோபிகள் செல்வம்போல்
ஈன முற்றன கண்களி ரண்டுமே."

என்னுமிந்தச் சுலோகத்தைச் சொல்லி முடித்தான். இதனைக் காளிதாஸன் சொல்லுந்தோறும் அரசனுக்குண்டான பெரு மகிழ்ச்சி இத்துணையதென்று சொல்லுதலெளிதன்று. 'இதற்குக் கைம்மாறுக உமக்கு யான் செய்யத் தக்கது யாதும் என்னிடத்தில் இல்லையே!' என்று காளிதாஸனைக் கட்டித் தழுவுவான்! 'உம்மோடு சமமாக யான் வீற்றிருக்கத் தக்கவனே;' என்று கூறிக் கீழே அவனுடைய பாதங்களினருகே உட்காருவான்; அவனுக்கு உபசாரங்கள் பல செய்வான் ; ' நீர் சிறியேனைத் தேடிவர என்ன தவம் செய்தேன்!' என்பான் ; ' யான் பெற்ற பேறு போல் உலகத்தில் யாவன் பெற்றுன்?' என்பான். இவ்வாறே அரசன் அவனைப் பலவாறு புகழ்ந்து கொண்டாடி உபசரித்தான்.

" கற்ருர்முன் கல்வி யுரைத்தல் மிகவினிதே ;
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்னினிதே ;
எட்டுணை யானும் இரவாது தானீதல்
எத்துணையும் ஆற்ற இனிது."

என்றபடி கல்வியறிவினது அருமை பெருமைகளை ஆராய்ந்தும் கேட்டும் சீர்தூக்கியும் அறியவல்ல பிரபுக்களே வித்துவான்களைக் கனம் பண்ணுவார்கள். மாணிக்கத்தினது பெருமையை அறியாதாரிடத்தில் மாணிக்கத்தை விற்கப் போகும் ரத்தின வணிகர் போன்று, இந்நாளில் வித்துவான்கள் தமது கல்வித் திறமையைக் கல்வியென்னும் சொல்லையேனும் செவ்வனே அறியாத போலிப் பிரபுவினிடம் காட்டப் போய் மதிப்பிழந்து மீள்வர். கல்வித் திறமை காட்டி நன்கு மதிப்பும் பரிசுத்தியும் பெற விரும்புவோர் சந்திரனையும் கங்கையையும் தரித்த கடவுளைப் பாடுக. இந்நாளிலே போஜன் அவனன்றி மற்றியாவனுளன்? அது நிற்க. அப்பால் காளிதாஸன் தன்னை அரசன் மிகவும் உபசாரம் செய்து

கனப்படுத்துவதைச் சகிக்க முடியாதவனாய் அரசனைப் பார்த்து ஸ்துதியாக ஒரு கவி சொல்லத் தொடங்கினான். அது வருமாறு :

'ஒருவரை ஒருவர் உபசரிக்க வேண்டுவது சினேகம் உண்டாகும் வரையுமே (சினேகம் உண்டாய பின்னரும் அன்று). உண்மையான சினேகருக்குச் செய்யும் உபசாரம் பரிகாசம் போலும். என்னும் கருத்துள்ள சுலோகம் இது :

" உபசார : கர்த்தவ்யோ யாவத நுத்பம் நஸௌஹ்ருதா : புருஷா :
உத்பந்நஸௌ ஹ்ருதாநா முபசார : கைதவம் பவதி."

" வந்திக்க நட்பு வருங்காறும் ; வந்தபின்
வந்திப்பு நிந்திப்பா மற்று."

இதனைக் கேட்ட போஜன் மகிழ்ச்சிகூர்ந்து அச்சுலோகத்திற் காகப் பொன் விலை நிலங்கள் சிலவற்றைக் காளிதாஸனுக்குத் தத்தம் செய்தான்.

அப்பால் காளிதாஸன் தனக்கு அரசனால் தத்தம் செய்யப்பட்ட ஸ்வர்ண நிலங்களின் அருமையையும் அதனால் வரும் அளப்பரிய ஊதியத்தையும், அரசனுடைய இணையில்லாத ஔதார்ய குணத் தையும் கண்டு பேரானந்தமும் பெருவியப்புமுடையவனாகி அரசனுடைய குணாதிசயங்களை வியந்து கூறத் தொடங்கினான்.

' மனத்துக்கு இன்பந்தரும் உத்தமப் பாடல்களைச் செய்யும் புலவருடைய சிரமத்தையும், அப்பாடல்களிலேயுள்ள பல வகை இன்பங்களையும் கற்ற விவேகிகளேயன்றி மற்றோர் அறியார். எங்ஙனமெனில், பிள்ளைப்பேற்றால் வரும் சுக துக்கங்களை மலடி அறியாதது போலென்க,' என்னும் கருத்துள்ள சுலோகம் வருமாறு :

" ஸுகவே: ஸப்த ஸௌபாக்யம் ஸத்கவிர்வேத்திநாபா :
நஹிவந்த்யா விஜாநாதி பராம்தௌஹ்ருத ஸம்பதம்."

" குழவி பெறுமருமை கூன்மலடி தேராள் ;
வழுவில் கவிபாடும் வன்மை—செழுமைபெறும்
சொல்லி ரசத்தின் சுவையென் பனவெல்லாம்
வல்லவரல் லாரறியார் மற்று."

இச்சுலோகத்தை அரசன் கேட்டு, ' இக்கவி மேகம் இல்லை யாயின் நாம் செழிப்பதில்லை,' என மனத்துள் மதித்து, அன்று முதலாகக் காளிதாஸனை முன்னையிலும் சதமடங்கு அதிகமான அன்புகொண்டு சினேகித்து வருவானாயினன். இப்படி வருநாளில் முன்னே காளிதாஸனைச் சேர்ந்து சுகித்தல் வேண்டுமென்னும் விரதத்தோடு விலாசவதி என்னும் பெயர் பூண்டு தாசியுருக் கொண்டு வந்து இப்போஜராசனுடைய தாராநகரத்திலே வசிப்பவளான இராசகுமாரியின் கண் வலைப்பட்ட காளிதாஸன் அவள் வீட்டுக்குப் போக்குவரவு உடையவனாயிருப்பதை வித்து

வான்கள் அறிந்து அவன்மேல் குற்சிதமுற்று அவனைத் தீண்டுவ தற்கும் அருவருத்திருந்தார்கள்.

இதனை அரசன் கண்டு வித்துவான்களைப் பார்த்து, 'நீங்கள் பிராமணோத்தமராகிய காளிதாஸ கவியைத் தீண்டுவதற்கு அருவருத்துத் திரிவது யாது காரணம் பற்றி?' என்று வின வினன். வித்துவான்கள் அவனுடைய ஒழுக்கம் தீயதென்று காரணம் காட்டினர்கள். அது கேட்ட அரசன், 'ஆச்சரியவசத்த னாகி, கலாசமுத்திரமாகிய காளிதாஸக்கவி வேசிகமனம் செய்ய உடன்பட்டதென்னை? காளிதாஸகவிக்கு நற்புத்தி போதிக்க யாவருளர்?' எனச் சிந்தித்திருந்தான். இங்ஙனம் சிந்தித்திருக்கும் அச்சமயத்தில் காளிதாஸன் தற்செயலாய் அரசன் சமுகம் வருவா னாயினன். வந்தபோது அரசனுடைய முகக் குறியால் அவனுடைய உள்ளக் கருத்தை அறிந்து அவனைப் பார்த்து, 'திருபுரதகனராகிய ஸ்ரீ ருத்திரமூர்த்தி மேலும் கூசாது அம்பு தொடுக்கத் தலைப்பட்ட மன்மதன் சிற்றறிவும் சிறு தொழிலுமே இயல்பாகிய குணங்க ளாகவுடைய எளிய நரர்மேல் பாணம் தொடுக்கும் துணிவையும் விரைவையும் சொல்ல வேண்டுமோ?' என்னும் கருத்துள்ள,

"சேதோபுவச்சபல காப்ரஸங்கே காவ கதாமானுஷலோக பாஜாம்,
யத்தாஹ ஸீலஸ்ய புராம் விஜேதுஸ்தாவிதம் பௌருஷமர் தமாஹீத்."

"முப்புரங்கள் செந்தழலில் மூழ்குவித்த முக்கண்ணன்மேல்
செப்புமதன் பாணம் செலவிடுத்தான்;—அப்பதகன்
சிற்றறிவும் புன்றொழிலும் சேருநரர் மேல்வாளி
எற்றிடுகை நூதனமன் றீங்கு."

என்னும் இச்சுலோகத்தைப் பாடினன். இதைக் கேட்ட மாத் திரத்தில் அரசன் தன் மனத்தில் குடிகொண்டிருந்த சிந்தாகுலம் எல்லாம் தினகரனைக் கண்ட இருள் போல இல்லாதொழிய, மிக்க மகிழ்ச்சி உடையனாகித் திரவிய சாலாதிபதியைக் கூவியழைத்து அச்சுலோகத்தை எழுதி அவன் கையில் கொடுத்து, இச்சுலோகத்தி லுள்ள அக்ஷரங்கள் எத்தனையோ அத்தனை லக்ஷம் பொன் எடுத்து இக்கவி சிரேஷ்டருக்குக் கொடுப்பாயாக,' என்று ஆக்ஞாபித்தான். அதனைக் கேட்டுக் காளிதாஸன் பேரானந்தமுற்று, மீண்டும் ராஜாவைத் துதிக்கத் தொடங்கி, 'அஷ்டலக்ஷ்மி விலாசனே! ராஜாதிராஜனுகிய போஜமகாராஜனே! அண்டகோடிகளெல்லாம் உனது எல்லை இல்லாத கீர்த்தியினுல் ஒரேமயமாய் வெளுத்திருப்பது பற்றித் திருநாராயணர் தமது திருக்கடலைக் காணுதவராகித் தேடி அலைகின்றார்; சிவபெருமான் தமது கைலாசகிரி எவ்விடத் துளதென வினவித் திரிகின்றார்; அவ்வாறே இந்திரன் தனது ஐராவதத்தையும், பிரமன் அன்னத்தையும், இராகு சந்திரனை யும் தேடி உழலுகின்றனர். திருமால் மோரையெடுத்துக் கொண்டும், சிவன் நெற்றிக்கண்ணைத் திறந்துகொண்டும், பிரமன்

நீருடன் பாலைக் கலந்துகொண்டும், ஏனையோர் உபாயம் கண்டறியாமலும் திரிவது இம்மயக்கத்தாலன்றே?' என்னும் கருத்துள்ள,

" மஹாராஜா ஸ்ரீமான் ஜகதி யஸஸா தேதவளிதே ய: பாராவாரம் பரமபுருஷோயம் ருகயதே, கபர்தீ கைலாஸம் கரிவர மபௌமம் குசிசருத் களாநாதம் ராஹு: கமலாபவ நீநா ஹம் ஸமதுநா, நீரக்ஷீரே க்ருஹீத்வா நிகிலகத நீர்யாதிநாளீகஜன்மா தக்ரம் த்ருத்வாது ஸர்வா நடதி ஜலநிதீந்லை சக்ரபாணி ஸந் ஸர்வாநுத் துங்கலா ம்ப்ரமாக தஹதிபஸுபதி ; பாலநேத்ரேணபஸ்யன் வ்யாதேத்வத் கீர்த்திகாந்தா த்ரிஜகதீந்ருயதே போஜராஜக்ஷிநீந்தயார :"

என்னும் இந்தச் சுலோகங்களையும், 'ஓ பண்டித ராஜரத்தினமே! இங்ஙனம் சிறந்து நிறைந்துள்ள உனது கீர்த்தியைப் பிரம தேவன் நிதானம் கண்டறிய விருப்புற்று ஒரு நிறைகோலெடுத்து அதில் உனது கீர்த்தியை ஒரு தட்டிலிட்டு மற்றத் தட்டில் கைலாயகிரியைத் தூக்கி வைத்தான். அக்கிரி உனது கீர்த்திக்குச் சமமாகாதது கண்டு அத்துடன் இடப தேவரைத் தூக்கி வைத்தான். அங்ஙனமும் சமமாகாமை கண்டு உமா தேவியாருடன் சிவபிரானையும் தூக்கி வைத்தான். அங்ஙனமும் அத்தட்டுத் தாழ்ந்திலது. அது கண்டு கங்கையை ஏற்றினன். அதனால் சமப்படவில்லை. அப்பால் மதியையும் ஏற்றி வைத்தான். அதுவும் சமமாக்கிற்றில்லை. ஈற்றில் ஆதிசேடனையும் தூக்கி வைத்தான். அவ்வகையிலும் உனது கீர்த்தி சம நிறை ஆகாததாயிற்று,' என்னும் கருத்துள்ள,

" வித்வத்ராஜ ஸிகாமணே துலயிதும் தாதாத்வதீயம் யஸகா : கைலா ஸஞ்ச நிரீஷ்ய தத்ரலகுதாம் நிஷிப்தவான் பூரத்யே, உக்ஷாணம் தது பர்யமாஸஹசரம் தந்மூர்த்நி கங்காஜலம் தஸ்யாக்ரே பணிபுங்கவம் .தது ப்ரிஸ்பாரம் ஸுதா நிதிம்.',

இச்சுலோகத்தையும், 'நாரதர் கோபாலனை ஒரு சமயத்தில் கண்டு, 'கோபாலா, நீ சுவர்க்கத்தை விட்டு எங்கே போகின்றாய்?' என்ன, அதற்குக் கோபாலன் நாரதரைப் பார்த்து, 'ஐயா! போஜனுடைய கீர்த்தியைக் கேட்ட காமதேனு ஏங்கி மெலிந்து போயினமையால் பால் சுரவாது ஒழிந்தது; ஆதலால், அதன் கன்றுக்குப் புல் அறுக்குமாறு பூமிக்குப் போகின்றேன்,' என்றான். அது கேட்ட நாரதர் கோபாலனைப் பார்த்து, 'கோபாலா! பூலோகத்துச் செய்தி நெடு நாளாக அறியாய் போலும்! பூலோகத்திலுள்ள புல் எல்லாம் போஜராஜனுடைய சத்துருக்களால் கவ்வப்பட்டன அன்றே! இதனை நீ அறியாதிருந்தது ஆச்சரியம்!' என்று கூறினரென்னும் கருத்துள்ள,

" ஸ்வர்காத்கோபாலகுத்ர வ்ரஜஸிஸுரமுநே பூதநே காமதேநோ: வத்ஸஸ்யா நேது காமஸ்த்ருண சயமதுநா முக்ததுக்தம்ந தஸ்ய ஸ்ருத்வா ஸ்ரீ போஜராஜ ப்ரசுர விதரணம வ்ரீட ஸுஷ்கள்தநீஸாவ்யர்த்தஸ ஹித்ப்ரயாஸ்தத த்பித தரிபிதஸ்சர்விதம் ஸர்வ முர்வ்யாம்.''

இச்சுலோகத்தையும் பாடிப் புகழ்ந்தான். இவைகளைக் கேட்ட போஜராசன் சொல்லுதற்கரிய மகிழ்ச்சி கூர்ந்து முன் போல வேண்டும் அக்ஷரலக்ஷமாகவே பொன்னை வாரி வழங்கினான். இவ்வாறு சில தினங்கள் கழிந்து வருகையில் ஒரு நாள் சதுர் வேதங்களையும் ஐயந்திரிபறக் கற்று வல்லவராகிய பிராமணர் சிலர் போசனது குணதிசயங்களைக் கேள்வியுற்று அவனுடைய நகரம் சேர்ந்தார்கள். அங்கே வந்த மாத்திரத்தில் அரசனைக் காணப் போகும் போது அவனுக்குப் பிரீதியாகிய ஒரு பொருளுடன் போய்க் காணுவது அன்றோ அழகென்னும் எண்ணம் தோன்றிற்று. தோன்றவே, அரசனுக்குப் பிரீதியாகிய பொருள் யாதென்று விஞ்சிய போது கவியே அவனுக்குப் பிரீதியான பொருளென அறிந்து, அவ்வாறே கவியொன்று செய்யத் தொடங்கித் தனியிடம் தேடி எல்லாரும் கூடிப் பலவாறு யோசித்து ஈற்றில் ஒருவாறு முதலிரண்டடிக்கும் பொருள் தேடி அப்பொருளுக்கேற்ற பதங்களை ஆராய்ந்து அமைத்தனர்.

பிறகு, யாதும் புலப்படவில்லை; பலவாறு யோசித்து ஒன்றும் தோன்றுமையால் கவலை மிகப்பெற்று, 'இன்றைக்கு இது முடியாது; நாளை பார்ப்போம்,' என்று கூறி வெளியே போயினர். அங்ஙனம் போகையில் காளிதாஸன் நாள் தோறும் புவனேஸ்வரி ஆலயத்துக்குப் போய் வரும் வழக்கப்படி அங்குப் போய்த் தரிசனை முற்றி மீண்டு வந்தான். அச்சமயத்திலே 'காளிதாஸகவி இவன்தான்' என ஒருவன் அவ்வேதியர்க்குக் காளிதாஸனைச் சுட்டிக் காட்டினான். காட்டலும், வேதியர் விரைந்து காளிதாஸனை அணுகி, ஆசி கூறினார்கள். அதற்குப் பிரதியாகக் காளிதாஸனும் வந்தித்தான். அதன் பின்னர் அவ்வேதியர்கள் அவனைப் பார்த்து, 'உத்தம கவியே! யாம் உத்தர தேசத்தோம். வேதங்களிலே யாம் அறியாதது யாதுமில்லை. அச்செல்வம் எமக்கிருந்தும், யாம் முன்னை நாள் செய்த தவக் குறைவால் இச்சென்மத்தில் போஜனத்துக்கு அலைபவர் ஆயினோம். எமக்கோ, கவி செய்யும் வல்லபமில்லை. அன்றியும், உன் போலும் உத்தம கவிகளுக்கே அரசன் மழை போலத் திரவியங்களை வழங்குகின்றனன். எம் போலும் வேத விற்பனரைக் காணின் யாது செய்வானோ, அறியேம்! ஆயினும், அவனைக் காணப் புகும் போது அவனுக்குப் பிரீதியாகிய ஒரு பொருளைக் கொடுத்துக் காண்பதே மரபாதலின், அவனுக்கு உவப்பாகிய கவியொன்று செய்துகொண்டு போகக் கருத்துற்றோம். கருத்துற்றும், எங்கள் கருத்துப்படி கவி முடியவில்லை. பாதிக் கவி மாத்திரம் ஒருவாறு அமைந்தது அப்பால் அடுத்த பாதியையும் முடித்து முழுக் கவியாக்க எமக்கு யாதும் தோன்றவில்லை. ஆதலால், அதன் குறையை நீரே முடித்துத் தருவீராக. அதற்கு உமது சம்மதம் எப்படி?' என்றார்கள். அது கேட்ட காளிதாஸன், அவர்கள்மேல் கிருபை கூர்ந்து, 'அந்தணர்காள்! நீங்கள் அமைத்த கவியைச் சொல்

லுங்கள் பார்ப்போம்,' என்றான். அவர்களும் உடனே அக்குறைக் கவியைச் சொன்னார்கள். அது 'போஜராஜராகிய இந்திரரே, எமக்கும் போசனம் கொடும் ; அதுவும் நெய் பருப்புட னிருத்தல் வேண்டும்,' என்னும் கருத்துள்ள,

" போஜனம் தேஹி ராஜேந்த்ரா க்ருதஸூப ஸமந்விதம்."

என்பது. அது கேட்ட காளிதாஸன் புன்சிரிப்புற்று, 'நன்றாய் இருக்கிறது! உங்கள் வேண்டுகோளின்படி மற்றைய அடி களையும் முடித்துத் தருகிறேன் ; எழுதிக் கொள்ளுங்கள்,' என ஆஞ்ஞாபித்து, 'கார்காலத்துச் சந்திர காந்தி போலும் வெள்ளிய எருமைத் தயிரும் சேர்த்துக் கொடுப்பீராக, என்னும்,' கருத்துள்ள,

" மாஹிஷஞ்ச சரத்சந்த்ர சந்த்ரிகா தவளம் ததி."

என்னும் கடையடியைச் சொன்னான். பின்னர் வேதியர்கள் அக் கவியை மனனம் பண்ணிக்கொண்டு அரசனுடைய சமுகம் சேர்ந்தார்கள். அரசனும் அவர்களை உபசரித்து, 'நீங்கள் வந்த காரியம் யாது ?' என்று வினவ, வேதியர் அரசனைப் பார்த்து, 'மண்டலேஸ்வரரோ ! ஒரு கவி செய்துகொண்டு வந்தோம் ; அத னைச் சிரவணம் செய்தருளுவீராக,' என்று வேண்டினார்கள். கவிப் பிரியனுகிய அரசன் களிகூர்ந்து வேதியரைப் பார்த்து, 'சொல்வீர் களாக,' என்றான். அவர்கள், 'இன்று நமது மிடி நீங்கிற்று !' என்று உள்ளத்தில் எண்ணிக்கொண்டு அக்கவியை எடுத்துப் பாடினார்கள். அரசன் அதனைக் கேட்டுப் புன்னகை கொண்டு, 'நீர் செய்து வந்த கவியில் முன்னைய அடிக்கு யாதும்கொடுக்கத் தக்கதன்று ; பின்னைய அடிக்கே பொருள் கொடுக்கத் தக்கது ; அவ்வாறே அவ்வடிக்காக அக்ஷரத்துக்கு இலக்ஷம் பொன் மேரையாகப் பெற்றுக்கொண்டு செல்லுமின்,' என்று கூறினான். வேதியர்கள், 'குருடனுக்கு வேண்டியது கண் என்றற்போல, எவ்வடிக்காயினுமாகுக. எமக்கு வேண்டுவது திரவியமே,' என மனத்துள் மதித்துப் பொன்னை வாங்கிப் பொதியாக்கிக்கொண்டு தம்மில்லத்துக்கு ஏகினார்கள். அப்பால் காளிதாஸன் அரசன் சமுகம் புகுதலும் அரசன் அவனைப் பார்த்து, 'இக்கவியின் கடையடியை இயற்றிக் கொடுத்தவர் நீரன்றே ?' என்று எடுத்துக் கூறி வினவ, காளிதாஸன் அரசனைப் பார்த்து, 'அதர வினிமையையும் ஸ்தன காடின்யத்தையும் நேத்திரத்தினது கூர்மையையும் கவிரசத்தையும் அனுபவித்தவரே அறிவர்,' என்னும் கருத்துள்ள,

" அதரஸ்ய மதுரிமாணம் குசகாடின்யம் த்ருசோச்சதைக்ஷ்ண்
யம், கவிதாயா : பரிபாகம்ஹ்யநுபவரஸி கோவிஜாநாதி "

என்னும் இச்சுலோகத்தை எடுத்துக் கூறினான். அது கேட்ட அரசன் 'உண்மை ! உண்மை !' என்று அவனையும் அவனுரையையும் மெச்சி மேற்கொண்டான். இப்படி அரசன் தினந்தோறும்

காளிதாஸன்மேல் அதிகரித்த அன்பு கொண்டு அவனைச் சன்மானித்து வந்த வழக்கத்திற்கு மாறுக, எழுந்து மரியாதை செய்யாமலும் இனிய சொல் சொல்லாமலும் இருந்தான். அது கண்ட காளிதாஸன் முகமும் மனமும் கறுத்து, 'இதுகாறுமில்லாத இவ்வவமதிப்புக்குக் காரணமென்னை ?' என்று சிந்தித்து நின்றான். அப்போது, 'வித்துவான்கள் செய்து வருகின்ற மித்துரு பேதமே இங்ஙனம் அரசன் செய்தமைக்குக் காரணமாமன்றி வேறு யாம் யாதேனும் அரசனுடைய அதிருப்திக்கேதுவாகச் செய்ததொன்றில்லையே ! அதனை அரசன் தானே உணர்ந்து கவலட்டும்!' என மனத்துள் சமாதானம் செய்துகொண்டு சபையை விட்டு நீங்கு மளவில் அங்கே ஒரு தராசு இருக்கக் கண்டு அதனைப் பார்த்துச் சொல்லுவான் போன்று சிலேடையாக ஒரு சுலோகம் சொன்னான். அது வருமாறு : 'ஓ அரசே ! உனது செயல் மிகவும் வியக்கற் பாலது ! பெரிய வஸ்துவைக் கீழாகவும் சிறிய வஸ்துவை மேலாகவும் செய்கின்றனையே ! இதென்னை ?' என ஒருவாறும், 'ஏ நியாயதிபதி ! பெரியோரைக் கீழாகவும் சிறியோரை மேலாகவும் மதிக்கின்றனையே ! நியாயாதிபதித்துவம் இருந்தபடி என்னை ?' என மற்றொருவாறும் பொருள் கொள்ளத்தக்க,

" ப்ராப்ய ப்ரமாணபதவீம் கோநாமாஸளதுலே பலேபஸ்தே,
நயஸிகரிஷ்டமதஸ்தாத் தஷிதரமுச்சைஸ் தராம்குருஷே ?''

" சமநீலிநின் ரூர்க்குந் தகநிறையைக் காட்டுஞ்
சமரசனே யானுற் றராசே !—அமையவரும்
அற்பமதை மேலாக்கி ஆருங் கனமதனை
எம்படிக்கீ ழாக்கினீ யீண்டு ?''

இச்சுலோகத்தால் அரசனைக் கண்டித்த வழியும் காளிதாஸன் தனது மனத்துயருக்கு எல்லை காணுதவனாகி மீண்டும் அரசனைப் பார்த்து, ' யாரும் தமது தேசம் என்னும் ஆசை பற்றிப் பரதேசம் போகுங்கால் வியசனப்படுதல் ஆச்சரியம். தமது கிணரூயிற்றே என்னும் உரிமையால் தாகம் தணிப்பாரோ ?' என்னும் கருத்தமைந்த,

" யஸ்யாஸ்தி சர்வத்ரிரகதிஸ் ஸகஸ்மாத் ஸ்வதேச ரகேணஹியாதி கேதம்,
தாதஸ்யகூபோயமிதிப்ருவாணா : க்ஷாரம்ஜலம் காபுருஷா : பிபந்தி.''

'' ஆருவர்நீர்க் கூபமே யாயிடி னு மெந்தையிது
பாரறியத் தொட்டதொரு பண்பினுல்—நீரதனை
உண்பே னெனவொருவ னுண்ணுமோ பாணகரை
என்பேரூர் என்ப தெவன் ?''

என்னும் சுலோகத்தைச் சொல்லிவிட்டுத் துக்கத்தோடும் அரசனுடைய சபையை விட்டகன்று தாசி வீடு நோக்கிச் செல்லுகையில் 'உடைந்து பிளவுபட்ட முத்தானது செம்பஞ்சுக் குழம்பினுல் பொருத்தப்படுமாறு போல, அஞ்ஞானத்தினுல் பிரிக்கப்பட்ட நம்

மிருவரையும் சந்தி செய்ய வல்லவன் எம்மகான் ?' என்னும் கருத்தையடக்கி,

" அவஞ்ஞாஸ்புடி தம்ஸமீகர்த்தும் : ஈஸ்வரக ஸம்திமநயாதிஸ் புடிதம்
லாக்ஷாலேபேல மௌக்திகம் "

என்னும் இச்சுலோகத்தை இயற்றிப் பாடிக்கொண்டு சென்ருன்.

அப்பால் அரசனும் ஊடல் கொண்ட மங்கையினது மனத்தைப் போலும் மனமுடையவனுகி அவைக்களம் விட்டகன்று அந்தப்புரம் சென்று கும்பிய முகத்துடன் மஞ்சத்தில் படுத்திருந்தான். அப்போது அவனுடைய தேவி லீலாவதி வந்து அவன் முகத்தை நோக்குமளவில், அது வழக்கத்துக்கு மாருகப் புலந்திருப்பக் கண்டு, ' பிராணநாதரே, அடியாள் முகமும் தமது திருவதனமும் உதயாதித்தனும் அதன் பிரதி பிரம்பமும் போன்று இருத்தற்கு மாருகச் சூரியன் முன்னர் நின்ற சந்திரனே ஒத்து இன்று தமது முகம் புலர்ந்திருத்தற்குக் காரணம் யாது ?' என்ருள். அது கேட்டு அரசன், ' பிரியை, காளிதாஸர் இன்று எமது அவைக்களம் புக்க போது அவரை எப்போதும் போல உபசரிக்காது அவமதித்திருந்தோம். அதனுல் அவர் கோபித்து உடனே சபையை விட்டு மீண்டனர்,' என, ஆதியோடந்தமாக நிகழ்ந்த யாவும் கூறினன். அப்பால் அரசி அரசனைப் பார்த்து, ' நாயகரே, அறிவில் சிறந்த தாம் இப்படி அவரை அவமதித்தல் தகுமா ? ' கூடிப்பிரியேல் ' என்பது மூதுரை. பூண்ட சினேகம் பங்கப்பட விடுவதினும் சினேகம் பூணுதிருத்தல் நன்று ; எங்ஙனமெனில், ஒருவனுக்குப் பிறவிக் கண்ணுண்டாய்ப் பின்னர் இடையிலே கெடுமாயின், அவனுக்கு உண்டாகும் துக்கம் மிகப் பெரிதாம் ; பிறவிக் குருடனுக்கோ, துக்கம் மிகச் சிறிதாம் ; அது போல, ஒரு முறை நட்ட அன்பு பின்னர்ப் பங்கப்படுமாயின், அதனுல் வரும் துன்பம் ஆற்றற்கரிதாம் என்க. அங்ஙனமாகவும் காளிதாஸரோ சரஸ்வதியினது அமிசாவதாரியாய் உள்ளவர். ஆதலின், அவர் விசேஷ பூஜ்யதைக்கு உரியவர். ஆதலின், தாம் அவரை அவமதித்ததும் வெறுத்ததும் தக்கதன்று,' என்ருள். இவற்றைக் கேட்ட அரசன் மிக்க மகிழ்ச்சியுடையவனுகி, ' என் அமிர்தமே, என் போலும் பாக்கியசாலி யாவன் உளன் ! யான் பெற்ற பேறு யாவர் பெற்ருர் ! உன்னைப் போல மந்திரி எனக்கு வேறு யாவன் ! நன்று சொற்றனை ! உன்னை மணமுடித்த பயன் இன்றுதான் பெற்றேன் ; நீ கூறியவை யாவும் உண்மையே ; எனது இஷ்டப்படி நாளைய உதயத்திலே காளிதாஸக்கவியை வரவழைத்துச் சமாதானம் பண்ணுகிறேன்,' என்று கூறி, அவளை அவளுடைய விவேகத்திற்காக மெச்சி, எப்போது சூரியோதயம் ஆகுமென்னும் ஆவலுடன் உண்டு சுகித்து நித்திரை போயினன்.

அடுத்த நாள் காலையில் அரசன் நித்தியக் கடன்களை முடித்து, வழக்கம் போலச் சபாமண்டபம் புகுந்தான். அப்போது அங்குள்ள

வித்துவக் குழாம் சூரியன் இல்லாத தாமரைக் குளம் போல, காளிதாஸன் இல்லாமையால் பொலிவு குன்றி இருப்ப, அரசன் அது முதல் மனம் வாடிப் பக்கத்திலிருந்த சேவகரை விளித்து, 'காளிதாஸ கவியைக் கடிது சென்று அழைத்து வம்மின்,' என்று ஆஞ்ஞாபித்தான். அவ்வாறே அச்சேவகரும் காளிதாஸகவி யிடம் சென்று அஞ்சலி செய்து, 'அரசர் உம்மை அழைத்து வருமாறு எம்மைப் பணித்தார். எழுந்தருளுக,' என்றார். அது கேட்ட காளிதாஸன் அலங்கிருதனாகி அரண்மனையை நோக்கிச் செல்லுகையில், 'நேற்று அரசனால் அவமதிக்கப்பட்ட நாம் இன்று அங்குப் போதல் தகுமா? யாது பற்றி அரசன் நம்மை அழைத்தான்? அரசன் தான் இதுகாறும் அன்பினால் உபசரித்துச் சன்மானித்து வந்த வித்துவான்களே எல்லாம் துரத்துவதற்குக் கருத்துக் கொண்டானே!' என்னும் கருத்துள்ள,

" யம்யமங்ருபோ நுராகேண ஸம்மாநயதிஸம்ஸதி
தஸ்யதஸ்யோத்ஸாரணாய யதம்தே ராஜவல்லபா :"

என்னும் இச்சுலோகத்தைச் சொல்லி, 'நாடோறும் நாம் இன்னும் அரசனால் சன்மானிக்கப்பட்டு வந்தும், மாபாவியாகிய மனஸ்தாபத்தினால் துவேஷிக்கப்பட்டோம் குணவான்களாகிய மந்திரிகளிடத்தில் யோசனை செய்யாது அரசியற்றும் அரசன் எங்கேயிருக்கிறானே, அங்கெல்லாம் துட்டரிருப்பரன்றிச் சத்துருக் களும் இருப்பார்களோ? இரார்,' என்னும் கருத்துள்ள,

" அவிவேகமதிங்ருபதிர் மந்த்ரிஷ்வகுணவத்ஸ்வவக்ரிதக் ரீவ :
யத்ராகலாஸ்ச ப்ரபலாஸ் தத்ராகதம் ஸஜ்ஜநாவர."

என்னும் சுலோகத்தையும் சொல்லிச் சென்று, அரண்மனை வாயிலை அடைந்தான். அப்போது அரசன் காளிதாஸன் சொல்லும் அரவம் கேட்டு ஆசனத்தை விட்டெழுந்து, ஐந்து ஆறடித் தூரம் எதிர்சென்று, உபசரித்துத் தனது கரத்தால் அவன் கரத்தைப் பற்றி அழைத்துப் போய்ப் பக்கத்திலிருத்தித் தானும் இருந்தான். அப்போது அங்கிருந்த கவிவாணருடைய முகமெல்லாம் கிரந்தன. அதற்கு ஏதுவாக அரசனும் காளிதாஸனை நோக்கி, 'உத்தம கவி சிரேஷ்டரே! நீர் இன்றைக்கு இத்தனை நேரம் தாழ்ந்து வந்ததென்னே? அன்பரே, நீர் இல்லாத சபையும் ஒரு சபையாகுமா?' என்று பலவாறு புகழ, இருவரும், பிரிந்து கூடிய தலைவியும் தலைவனும் போன்று அன்பு பெருக்கம் உடையவ ராகி, வழக்கம் போல அற்றைப் பகலைக் கழித்து மீண்டனர். அன்று தொட்டுச் சிறிது காலம் நட்போடு கழித்து வருகையில், காளிதாஸனுடைய சத்துருக்களாகிய கவிவாணர் தம்முள் விளைந்த பொறுமை காரணமாக ஒரு நாள் யாவரும் ஒருங்கு கூடிச் சூழ்ச்சி செய்து, அரசனுடைய பாங்கியருள் ஒருத்தியை அழைத்து, 'நங்காய், நெடுங்காலமாக அரசருடைய சம்ஸ்தானத்தில் **வித்துவான்களாகவும்,** அவருக்கு உற்ற நண்பர்களாகவும் இருந்த

எங்களுக்குக் காளிதாஸன் சநீசுவரன் போற்றேன்றிவிட்டான். அவனுல் எங்கள் கீர்த்திக்கும் வருவாய்க்கும் பங்கம் வந்தது. இது உனக்குத் தெரிந்த விஷயமே. அவனைக் கல்வியில் வெல்லத் தக்க அத்தனை வல்லவர்கள் உலகத்திலில்லை. ஆதலால், நீ ஒரு சூழ்ச்சி செய்து அவனைப் பரதேசம் போகுமாறு செய்வையேல் உனக்குப் பரிசு கொடுப்போம்,' என்றூர்கள். அவள் அது கேட்டு மகிழ்ந்து, 'புத்தியுண்டாயின், சாதித்தற்கு அரியது யாது? எனக்குப் பொன்னுலாய ஆரம் ஒன்று தருவீர்களாயின் உங்களிஷ்டப்படி முடிக்கிறேன்,' என்றுள். அவ்வாறே அவர்களும் ஓர் ஆரத்தை அவளுக்குக் கொடுத்து அவனைத் தூண்டிவிட்டுச் சென்றூர்கள். அவள் அதனைப் பெற்றுக்கொண்டு சமயம் பார்த்திருக்கும் நாளில், ஒரு நாள் அரசன் அவனைத் தன் கால்களை வருடுமாறு பணித்து நித்திரை செய்தான். அப்போது அவள் தன் கருத்தை நிறைவேற்றுதற்கு அதுவே தகுந்த சமயமென ஊகித்து, அரசனுடைய கால்களை நித்திரைச் சோர்வினுல் இடையிடையே விடுத்து விடுத்துப் பிடிப்பாள் போன்று நடித்துப் பிடித்து, நித்திரை மீதூர்ந்து கனவில் புலம்புவாள் போல, 'காளிதாஸன் காமவிகாரம் கொண்டு பாங்கியுருத் தரித்து அந்தப் புரத்திலே லீலாதேவியுடன் இரமிக்கின்றூன்,' என்று நடித்துக் கூறினுள். அது கேட்ட அரசன் துணுக்குற்று, நித்திரையை விட்டெழுந்து, 'தரங்கவதி!' என்று அவளை விளித்து, 'நீயும் துயிலுகின்றனையோ?' என்றூன். அதற்கு அவள் அப்போதுதான் துயில் விட்டு விழிப்பவள் போல விழித்து நடிப்பாக யாதும் அறியாதவள் போலத் திகைத்து நின்றுள். அப்பால் அரசன் அப்பஞ்சணையிற்றூனே இருந்து, 'இவள் கண்டதோ கனவு! கனவிலே முன்னர்க் காணுததொன்றும் தோன்றுதன்றே! இவள் கண்ட கனவு தேவானுஞ்ஞையால் வந்த கனவும் அன்று; எனது தேவி லீலாவதி கற்பில் சிறந்தவள் ஆகையால், அங்ஙனம் செய்யாளே! காளிதாஸனே, காமவிகார முடையவன் என்பதில் சந்தேகமில்லை என்பதும் ஆன்றோர் வாக்காயிற்றே! அவன் தாதி உருத்தரித்தற்கும் ஒருப்படுவான்; எப்படியிருப்பினும் இதனைப் பரீக்ஷித்து நிச்சயித்தல் வேண்டும்,' என மனத்துள் முடிவு செய்துகொண்டு, அடுத்த நாள் காலையில் அரசன் தனக்கு நோயுண்டாயிற்றென நடித்துப் படுத்திருந்தான். அப்போது அரசனுடைய தேவி லீலாவதியும் பயற்றம்பருப்பும் அரிசியும் கலந்து பாகம்செய்த பத்திய உணவை, பாங்கி தரங்கவதியால் எடுப்பித்துக்கொண்டு அங்கு வந்தாள், அரசன் அதனிடத்திலுள்ள பயற்றம்பருப்பைப் பார்த்துச் சொல்லுவான் போன்று அர்த்தம் பயக்குமாறு, 'இப்பருப்பு வெட்கமற்று ஆடையின்றி இங்கு வந்திருக்கின்றதே!' என்னும் கருத்தமைந்த,

"முத்கதாளீகதவரிளாகவிம்த விதுஷாம்கதம்."

என்னும் இவ்வடியை இயற்றிச் சொல்ல, காளிதாஸன் அதனைக்

கேட்டு, 'பிறவிக் குருடன் முன்னர் ஒரு பெண் ஆடையின்றி வந்தால் தோஷமாமோ ?' என்னும் கருத்தமைந்த,

"தேவ்யாம் சமீப வர்த்திந்யே."

என்னும் இக்கடையடியை உத்தரபாதமாகச் சொல்லி அச் லோகத்தைப் பூரணம் செய்தான். இதைக் கேட்ட மாத்திரத் தில் எல்லாம் அறிந்த லீலாவதி மந்தஹாஸம் செய்தாள். (மந்தஹாஸம் - புன்னகை) அதனைக் குறிக்கொண்ட அரசன், 'நாம் நினைத்ததற்கும், இவள் புன்னகை செய்ததற்கும் பொருத்த மாயிற்று. ஆயினும், பெண்களுடைய மன நிலையை யாவர் உணர வல்லர் !' என்று மனத்துள் மதித்துக்கொண்டு, கோபாதிக்களுகிக் குற்றமற்ற காளிதாஸனை நோக்கி, 'ஏ காளிதாஸா, நீ எனக்கு மிக்க நண்பனுய் இருப்பினும், அதனை நான் பொருட்படுத்து கின்றிலேன் ; நீ பிராமணனுயினை ; அதனுல் உன்னைச் சிரச்சேதம் பண்ணுது விடுகின்றேன் ; இனி நீ எனது தேசத்தில் ஒரு சிறிது நேரமும் இருத்தல் ஆகாது ; என் தேசத்தை இக்கணத்திற்றுனே விட்டு அகலக் கடவை ; மறு மாற்றம் இன்றித் தூர நட,' என்று கடிந்து சொன்னன். அவ்வாறே பாவிகளாகிய அக்கவிவாண ருடைய ஏவலின் வழிச் செய்த மகா துஷ்டையாகிய பாங்கியினது வஞ்ச உரையினுல் அரசன் வெகுண்டு, நிரபராதியாகிய காளி தாஸன் மேலும், லீலாவதி மேலும் அபவாதம் ஏற்றி, லீலாவதியை யாதும் செய்யாது, காளிதாஸனைத் தனது சமுகம் விட்டு ஓட்டினன். காளிதாஸனும் அது தெய்வ சம்மதமென நினைத்து விலாசவதி வீடு போய்ச் சேர்ந்தான்.

இவ்வாறு வீடு போய்ச் சேர்ந்த காளிதாஸனை விலாசவதி எதிர்சென்று உபசரித்து அழைத்துப் போய்ப் பஞ்சணைமீது இருக்குமாறு செய்து, தானும் அருகிலுட்கார்ந்து, அவனை நோக்கி, 'எனது பிராணநாதரே, எந்நாளும் இவ்வளவு சீக்கிரமாக அரண் மனையைவிட்டு வீட்டுக்கு வாராத நீர் இன்று வந்த காரணம் யாது ? உமது முகம் புலந்திருப்பது யாது பற்றி ?' எனக் கேட்டனள். அது கேட்ட காளிதாஸன், அவள் முகத்தைப் பார்த்து, 'பிரியாய், உன்னைப் பிரிதற்குக் காலம் வந்ததே ! உன்னை எவ்வாறு பிரிந்தாற்று வேன் என்பதே என் மனத்தை அரர்வுவது,' என்முன். அதுகேட்ட விலாசவதி, இடியேறு கேட்ட நாகம் போல நடுநடுங்கி, 'ஐயோ ! என் பிராணநாதரே, இவ்வுரைகளை என்னிடத்தில் மனம் கூசாது எவ்வாறு கூறத் துணிந்தீர் ! நீர் பிரிந்தால் என் உயிர் தரிக்குமோ! அன்பரே, இன்று அரசன் சமுகத்தில் நடந்தது யாது ? அடியாளுக்கு ஆதியோடந்தமாகக் கூறும்,' என, காளிதாஸன் அவளை நோக்கி, 'நங்காய், எனது சத்துருக்களாகிய வித்துவான்கள் செய்த வஞ்சகச் சூதினுல் அரசன் மயங்கி, என்னைத் தனது தேசத்தினின்றும் ஓடிப் போகுமாறும், போகாது தரிக்கின் சிரபங்கதண்டம் அடையுமாறும்

கடிந்து ஆஞ்ஞாபித்துவிட்டான். ஒன்றை நாம் நினைத்திருக்க மற்றொன்று வந்து கூடுவதும், அங்ஙனமன்றி அதுவே வருவதும், நினையாமலிருக்க நன்மைகள் வந்து சேருவதும் ஈசன் விதிப்படி யன்றி நமது எண்ணப்படி அன்று ; ஆதலால், யான் அரசனுடைய ஆஞ்ஞைப்படி அந்நிய தேசம் போகப் பிரியா விடை கொடுப்பா யாக,' என்னும் கருத்துள்ள,

" அகடித கடிதா நிகடயதிகடித கடிதாநி துர்க்கடகுருதே
விதிரேவதாநி கடயதியாநி புமாந்ஸவசிந்தயதி."

என்னும் இச்சுலோகத்தையும், ' நொய்தாகிய புல்லானது கற்றை யாகத் திரண்டு முறுக்கப்பட்ட போது மதம் கொண்ட யானை களையும் கட்டற்கு வாய்ப்பது போல, புன்கவிகளாகிய சத்துருக் களுடைய திரண்ட பொருமையால் யான் இவ்வாறு துன்பத்திற்கு ஆளாயினேன்,' என்னும் கருத்துள்ள,

" பஹுநாமல் பசாராணும் சமவாயோதுரத்யய :
த்ரணைர்விதியதே ரஜ்ஜுர்ப்பத்தியந்தேதே நத்தந்தி :"

என்னும் இச்சுலோகத்தைச் சொன்னன். அது கேட்ட விலாசவதி, குறுமுறுவல் கொண்டு, ' இதற்குத்தானு அஞ்சினீர் ! அஞ்சாதீர் ; நீர் என் வீட்டிலேதானே சகலவித சுகங்களோடும் மறைந்து வாசம் செய்யலாகும் ; ஆதலால், நீர் பரதேசம் செல்ல வேண்டுவதில்லை,' என்றுள். நன்றென்று கூறிக் காளிதாஸனும் அதற்கிசைந்து அங்கேதானே இருப்பானுயினன்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் அரசனுடைய தேவி லீலாவதி நிலாமணி முற்றத்திலே நின்று குறுநடை கொண்டாள். அப்போது மாலைக்காலம் ஆதலின், காளிதாஸன் மாறுவேஷம் பூண்டு புவனே சுவரி ஆலயத்திற்குப் பூஜை காணுமாறு வீதி வழியே சென்றுன். அவனுடைய நடையினுல் அவனைக் காளிதாஸனென உணர்ந்த லீலாவதி, அரசனிடம் போய், ' என் பிராணநாயகரே, தாம் என்னுடன் வந்து சல்லாபித்திருத்தற்கும் நேரங்காணுதவராகிச் சிறிது காலம் காளிதாஸனுடன் நட்ட நண்பு இப்போது யாதா யிற்று ?' என்று கேட்டாள். அரசன் அவளை நோக்கி, ' பிரியாய், காளிதாஸன் தினந்தோறும் பாங்கியுருத் தரித்து அந்தப்புரத்துக்கு வந்து உன்னுடன் ரமித்துப் போகின்றுன் எனக் கேள்வியுற்ற நான், அதனை நிச்சயிக்கும்பொருட்டுச் சில காலத் திற்கு முன்னர் ஒரு நாள் சுரம்கொண்டேன் போல நடித்துப் படுத்திருக்கையில் காளிதாஸனும் நீயும் நேர்முகமாய் என் முன்னர் வர நேர்ந்ததை நீயும் அறிவையன்றே ? அப்போது நான் சொன்ன முற்பாதிச் சுலோகத்துக்குப் பிற்பாதியாகக் காளி தாஸன் கூறியதைக் கேட்டு நீ மந்தஹாசம் செய்தமையால் நான் சந்தேகித்து அவனை ஊரை விட்டு ஓடுமாறு கட்டளையிட்டேன் ; உன்னைத் தாக்ஷண்யத்தால் கொலை செய்யாது விடுத்தேன் ;

இதுவே காளிதாஸனே நான் பிரிந்ததற்குக் காரணம்,' என்றுள். அது கேட்ட தேவி, ' நாயகரே, நன்று சொற்றீர்! உம்மாலே தழுவப்படும் என் தேகம் பிறர் தேகத்தைத் தீண்டுதற்கும் ஒருப் படுமா? மாதர்களெல்லோரும் உம்மைச் சேருதற்குத் தவம் செய்ய, ஊழ்வலியால் எனக்குக் கிடைத்த கிட்டுதற்கரிய உமது சேர்க் கையை நான் தள்ளிவிட்டுப் பிறனெருவனைத் தேடப் புகின் என் புத்தி என்ன புத்தியாமோ? இனி யான் இருந்தென்ன? ஆ! ஜகதீசா! என் பதிவிரதா தர்மத்தை இக்கணத்தில் நாட்டே னுகில் உயிர் விடுவதில் ஐயமில்லை,' என்றுள். நன்று என அரசனும் மற்றைநாள் உதயத்திலே பழுக்கக் காய்ச்சிய இருப்பு உலக்கைகளை ஏவலாளரால் பரப்புவித்து, தேவியை நோக்கி, ' இதன் மேல் நடந்து வரக் கடவை; இன்றேல் கொல்லுவேன்,' எனச் சராசனத்தை நாண் பூட்டி அம்பு தொடுத்து ஆயத்தனுனன். அவ்வாறே அவளும் ஸ்நானம் செய்து சூரிய தரிசனம் பண்ணி நமஸ்கரித்து எழுந்து வந்து புட்பசயனத்தின்மீது நடந்து உலாவு வாள் போன்று மும்முறை அவ்விருப்புப் பாளத்தின்மீது நடந்து மயிலென ஒதுங்கினுள். சுற்பு நெறி தவறுத உத்தமிகளுக்கு அக்கினியும் அஞ்சும் என்றுல், பொறுமையால் வசிட்ட முனிவரது தேவியாங் கோதை போலும் சுற்பினுல் சிறந்த உத்தம பத்தினிகளை வாயால் தூற்றும் பாவிகளுக்கு நாப் புழுத்து அழுகுதல் முதலிய கொடிய நோய்கள் இம்மையிலும் மறுமையிலும் இரௌரவாதி நரகங்களுமே கதியாமென்பதைத் துணிதல் வேண்டும். அது நிற்க. இங்ஙனம் அவள் நடந்து சென்ற மாத்திரத்தில் அரசன் அச்சமும், வெட்சுமும் மேலிடப் பெற்றவனுகி நடுநடுங்கிக் கண்களினின்றும் கண்ணீர் வார, நாத் தழுதழுத்து அவளை அணுகி, ' தேவி, யான் ஆயாமல் செய்த பிழையைப் பொறுக்கக் கடவை,' என்று இரந்து, அப்பால், 'பாவியேன் யாது செய்தேன்! ' கவே காளிதாஸ கவிகோடி மகுடமணே,' என்னும் சொற்களை அன்றி வேறு யாதும் கூறி அறியாதவனுகிச் சோஷித்துப் பேய்க் கோட்பட்டான் போன்று கணந்தோறும், ' கவேகவே ' எனப் பிதற்றிக் கீழே விழுந்து புரளத் தலைப்பட்டான். அது கண்ட தேவி தனது கையினுலே சிறிது ஜலத்தை எடுத்து அரசனுடைய முகத்திலே தெளித்து அவனுக்குப் பிரஞ்ஞை உண்டாக்க, அரசன் விழித் தெழுந்து காளிதாஸனுக்குத் தான் செய்தது அநீதியே என்று அவளுக்குச் சொல்லி மிகப் பரிதபித்து, ' அவனை எப்போது காண் பேன்? என் குற்றத்தை எவ்வாறு நீக்குவேன்? என்னைப் போலும் மூர்க்கன் உலகிலுளனே?' எனப் பலவாறு கூறித் தன்னைத்தானே நிந்தித்திருந்தான். அரசனுக்குக் காளிதாஸனைப் பிரிந்த துக்கம் இம்மட்டில் நீங்கிற்று அன்று. அரசன் அவனை ஒவ்வொரு சமயத்தில் நினைத்தும் அன்று முழுதும் அதுவே கவற்சியாய் ஊண் உறக்கம் ஒழித்து வாளாவிருப்பான்; தனது சமுகத்து வித்து வான்களை நிந்திப்பான்; ஏவலாளரைக் கடிவான். இப்படிச் சில

காலம் கழித்து வருகையில் ஒரு நாள் அஸ்தமன காலத்திலே அரசனும் தேவியும் நிலாமணி முற்றத்திலே சல்லாப விநோதராய் இருந்தனர். அப்போது இருட்படாம் நீக்கி உதயமாகும் சந்திரனையும் தன் முன்னர் இருக்கும் லீலாவதியினுடைய முகத்தையும் அரசன் பார்த்து, 'கற்பில் சிறந்த லீலாவதியினுடைய முகத்துக்குச் சிவபெருமான் சடையிடமாகத் தரித்த சந்திரனே உவமிக்கப்படத் தக்கது,' என்னும் கருத்துள்ள,

"துளண அணு அணு லர் இக்ளைஸோமுஹசதம்ஸகு ஏதாயே."

என்னும் இப்பாதிச் சுலோகத்தைச் சொன்னான். இதனைக் கேட்டுச் சமீபத்திலிருந்த வித்துவான்கள் எல்லாரும் இதனை முடித்ததற்கு ஏதும் அறியாதவர்களாகி அரசனிடம் விடை பெறுது சாதுரியமாக அங்குநின்றும் நீங்கி இல்லந்தேடிப் போயினர். அங்கு நிகழ்ந்த வைகளை எல்லாம் ஒற்றரால் அறிந்த காளிதாஸன் நூதன கவிவாணன் போல வேஷம் பூண்டு அவ்வித்துவான்களை இடைவழியில் நிறுத்தி அவர்களுடன் அளவளாவினான். அப்போது வித்துவான்கள் அரசன் சொன்ன சுலோகவடியைச் சொல்லி, 'இதனை முடியும் பார்ப்போம்!' என அவனிடம் கடாவினர். அதற்குக் காளிதாஸன், 'பிரதமை தினத்துச் சந்திரன் எவ்வாறு சமமாம்?' என்னும் கருத்தமைத்து,

"அணு இதிபம்ணயதிகஹ அணுஇதம் ஸம்பதிபதி சதம்ஸ."

என்னும் உத்தர பாகத்தைச் சொன்னான். 'அரசன் யாதொரு தக்க காரணமின்றிப் பூர்வபாகத்தைச் சொல்லானே என நாம் கொண்ட மயக்கமன்றே எம்மைக் கெடுத்தது? எப்படியிருக்கினும் இருக்க' என்று கூறி, அவ்வுத்தரத்தை வித்துவான்கள் மனனம் பண்ணிக்கொண்டு, அந்நூதன கவிவாணனைப் பார்த்து, 'நீங்கள் நாளைய உதயத்தில் அரண்மனை வாயிலில் வந்திருங்கள்,' என்று கூறி விட்டுச் சந்தோஷத்துடன் தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள். அடுத்த நாள் காலையில் வித்துவான்கள் அரசனுடைய அவைக் களம் புகுந்து தாங்கள் மனனம் பண்ணி வந்த சுலோகத்தைக் கூறிப் பிரசங்கிக்க, அரசன் மகிழ்ந்து, அது காளிதாஸன் வாக்கே என நிச்சயித்துப் பதினைந்து லக்ஷம் பொன் பரிசளிக்குமாறு ஆஞ்ஞாபித்துவிட்டு, சேவகரை அழைத்து, 'அரண்மனை வாயிலில் வித்துவான்களுக்கிடையே யாதேனும் பிணக்கு நிகழுமாயின் அவர்கள் எல்லோரையும் ஒருங்கே கொணர்மின்,' என இரகசியமாகக் கட்டளை இட்டான். அப்பால் வித்துவான்கள் அப்பதினைந்து லக்ஷம் பொன்னையும் பெற்றுக்கொண்டு அரண்மனை வாயிலை அடைந்தார்கள். அங்கே காளிதாஸனுகிய நூதன கவிவாணன் தனக்கு உரிய சிரேஷ்டபாகத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டு அப்பால் செல்லுமாறு கேட்டான். அது கேட்ட வித்துவான்கள் சிரேஷ்ட பாகம் உனக்கு எவ்வாறு வருமென்று வாதிக்க, கலகம் எழுந்தது. அது கண்டு சேவகர் அவர்கள் யாவரையும் ஒருங்கு பற்றி

அரசன் முன்னர்க் கொண்டுபோய் விடுத்தனர். அங்கே கபட மெல்லாம் வெளியாயின. வெளியாகவே, அரசன் காளிதாஸனை உணர்ந்து அவன் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, 'யான் ஆயாது புரிந்த பிழைகளைப் பொறுப்பீராக,' என்று வேண்டினன். வேண்டவே, காளிதாஸன் தனது மெய் வடிவைக் காட்டி அரசனைத் தழுவ, அன்பு பெருகி இருவரும் அந்தப்புரம் சென்று லீலாவதி முன்னிலையில், ஊடிப் பிரிந்தார் கூடிப் பிரிந்தாற் போலக் கொண்டாடி மகிழ்ந்திருந்தனர்.

இவ்வாறு சில காலம் கழிந்து வருகையில் ஒரு நாள், பவபூதி என்னும் ஒரு மகாபண்டிதன் அரசன் சபைக்கு வந்து அங்கே தனக்குச் சமமான வித்துவான் எங்குமில்லை என்று தருக்கிக் கூற, அங்கிருந்த பாணகவி எழுந்து நகைத்து. 'பவபூதி, பகைவரை அகற்ற வல்ல பாணம் இங்கிருப்பதைக் கண்டிலைகொல்லோ?' என்றான். அது கேட்ட பவபூதி, 'பாணி, இங்கிருக்கும் காளிதாஸனும் எனக்கு நிகராகான் என்றால் நீயா எனக்கு நிகராவாய்?' என்றான். அது கேட்ட காளிதாஸன், 'ஏ பவபூதி, எண்ணிப் பேசக் கடவை, வித்துவான்களால் நிறைந்திருக்கும் இச்சபைக்கு நாயகமாகச் சிவ பிரான் போல வீற்றிருக்கும் இராஜேந்திரனே நம்மிருவரையும் சீர்தூக்கித் தாரதம்மியங்களை அறிய வல்லவன்,' என்றான். அது கேட்ட அரசன் அவர்களை நோக்கி, 'சரத்காலத்தை வருணிப்பீர்களாக!' என்றான். அவ்வாறே இருவரும் உடன்பட முதலிலே பவபூதி வருணிக்கத் தொடங்கினன். அது வருமாறு: 'சந்திர விம்பம் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்டது; ஆகாசத்தில் நக்ஷத்திரங்கள் பரவின; மதனவில் அசையாது நிற்ப மந்த மாருதம் ஓய்ந்தது; சண்பகக் கொடி அசைதல் ஒழிந்தது; பின்னர் எவ்வாறுயினதோ, அறியேம்,' என்னும் கருத்துள்ள,

"முக்தாபூஷணமித்து பிம்பமஜனிபவ்கீர்ண தாரம்நப: ஸமாரம் சாபமபேத சாபலம்பூதிந்தீவரே முத்ரிதே, வ்யாலீனம் மலகண்ட மந்தரணிதம் மந்தாகிலீர் மந்திதம் நிஷ்பம்தஸ்தபகாச சம்பகலதா சாபூந் நஜாநேதத:"

என்னும் இச்சுலோகத்தைச் சொல்ல, காளிதாஸன் எழுந்து, 'அரசரே, என் கவியைச் சற்றே கேட்க,' என்று விண்ணப்பித்து, 'சந்திரமண்டலம் வியர்த்தது. பூமாலையால் கட்டுண்ட இருட் குலம் குலைந்தது. முன்னரே தாழம்பூ மந்தஹாஸம் செய்யத் தலைப்பட்டுவிட்டது. குண்டல நிர்த்தனம் ஒய்ந்தது. நீலோற்பல மிரண்டும் குறுக்காகக் குவிந்தன. பவளவோசை உள்ளடங்கினது. பின்னர் யாது நிகழ்ந்ததோ, அறியேம். சந்திரனுல் விழுங்குண்ட இருள் இவ்வகைத்து,' என்னும் கருத்துள்ள,

"ஸ்விந்நம் மண்டல மைந்தவம் விலுலிதம் ஸ்ரக்பாரநத்தம்தம:
ப்ராகேவ ப்ரதமானகைதசிகா லீலாயிதம் ஸுஸ்மிதம்
சாந்தம் குண்டல தாண்டவ குவலயத்வந்த்வந் திரேமீலிதம்
வீதம்வித்ரும ஸீத்க்ருதம் நஹிததோ ஜுநேகிமாஸீதி."

இச்சுலோகத்தைச் சொல்லினுன். அவ்விருவர் சுலோகத்தையும் கேட்ட அரசன் அவ்விரண்டினையும் சீர் தூக்கிப் பார்த்து, ' பவபூதி கவிவாணரே அன்றிக் காளிதாஸ கவிக்கு இணையாகார்,' என்ருன். அது கேட்ட வித்துவான்கள், 'காளிதாஸரைப் பின் யாவ ரென்பீர் ?' என, ' அவர் சரஸ்வதியின் அமிசாவதாரி,' என, அங்கிருந்த பவபூதி கோபாவேசனுய் அரசனைப் பார்த்து, ' நன்று கூறினை ! பக்ஷபாதம் பண்ணுகின்றனையே !' என்ருன். அப்போது காளிதாஸன் அரசனை நோக்கி, ' மண்டலேசரே, இவ்வபகீர்த்தி உமக்கு வேண்டா. புவனேசுவரீ ஆலயத்திற்குப் போய் அவள் சந்நிதியில் ஒரு தராசில் இருவர் சுலோகத்தையும் இட்டு நிறுக்க எது தாழ்கின்றதோ அதுவே சிறப்புடையது என ஒரு பக்ஷம் துணிவோம்,' என்ன, அரசனும் நன்றெனக் கண்டு புவனேசுவரி ஆலயத்திற்கு யாவருடனும் எழுந்து சென்று, அங்கே ஒரு தராசை எடுத்து நாட்டி, அதில் இருவர் சுலோகத்தையும் நிறுத்தான். அப் போது காளிதாஸனுடைய கவி வைக்கப்பெற்ற தட்டுத் தாழ்தலும் புவனேசுவரி தானணிந்திருந்த மாலையினின்றும் உதிர்ந்து திரு மேனியில் படிந்து கிடந்த மகரந்தத்தை நகத்தினுல் எடுத்துப் பவபூதியினுடைய சுலோகத்திலிருந்த தட்டிலிட்டு இரண்டையும் சமமாக்கினுள். அது கண்ட காளிதாஸன் புவனேசுவரியைப் பார்த்து, ' ஏ கருணுகடாக்ஷி ! சிறியேன் பாக்கியமே பாக்கியம்! அடியேனும் பவபூதியும் மலைவுற்று என் சுலோகத்தையும், பவபூதியின் சுலோகத்தையும் தராசிலிட்டு நிறுக்கும் போது, அவனுடைய தட்டு மேலெழும்பியது கண்டு, அவன் உன்னிடத்து வைத்த பக்தியினுல் அவன்மேல் நீ கொண்டிருக்கும் அன்பு இத் துணையதென்று காட்டுமாறு உனது மேனியில் படிந்து கிடந்த மகரந்தத்தை எடுத்து இட்டுத் தட்டைச் சமமாக்கினையே ! நீ பக்தவத்சலை என்பதை இன்று கண்டேன் !' என்று துதித்தான். அத்துதி சுலோகம் :

" அஹோமே ஸௌபாக்யம் மமசபவபீதேஸ்ச பணிதிம் தடாயா மாரோப் யப்ரதிபலதிதல்யாம லபிமங்கிராம், தேவீஸத்யஸ்ருதி கலிதகல்ஹார கலிகாம தூளீ மாதுர்யம் க்ஷிபதி பரிபூர்த்யை பகவதி."

என்பது. இது கேட்ட பவபூதி அடியற்ற மரம் போலக் காளிதாஸ னுடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரிக்க, காளிதாஸன், ' நீ சரத் காலத்தைக் குறித்து வருணித்த சுலோகத்தில் அக்காலத்து உரிமை களிலொன்றுகிய தாழம்பூவின் செய்தியைக்கூற மறந்தனை ஆதலின் உன் கவி என் கவிக்குச் சமமாகாது போயிற்று,' என, அவனும் மெய்யென்று ஒப்பினுன். அப்பால் அரசன் இருவரையும் தகுதிக் கேற்பச் சன்மானித்து வந்தான்.

இப்படி வருகையில் ஒருநாள் அரசன் காளிதாஸனை நோக்கி, ' உமது வாயால் உதயகாலத்தை வருணிப்பீராக,' என, காளி

தாஸன் நன்றென எழுந்து, 'ஓர் இரசவாதி தான் செய்யும் வாதத்தினுல் உண்டாகும் பஸ்மத்தை உண்டு நிறம் பெற்றுலொப்பக் கீழ்த்திசை பொன் ரேகையைப் பொருந்தியது. மூடர் கூட்டத்தில் அகப்பட்ட கலிவல்லான் போன்று சந்திரன் விளங்கினுன். முயற்சி அற்றவர்களுடைய மனம் போலத் தீபங்கள் பிரகாசித்தன,' என்னும் கருத்துள்ள,

" அபூத்விம்காப்ராசி ரஸபதிரிவப்ராஸ்ய கநகம்க தச்சாயஸ் சம்தோபுத ஜன இவஸ்ராமியஸ்தளி க்ஷுத்க்ஷீணஸ் தாராந்ருதய இவாநுத்யமபராநமி வா ராஜம் தேவிநய ரஹிதாநாமிவகணு,''

இச்சுலோகத்தைச் சொன்னுன். இதனைக் கேட்ட அரசன் மனமகிழ்ந்து அக்ஷரத்துக்கு ஓர் இலக்ஷம்பொன்னுகப் பரிசளித்தான்.

மற்றெரு நாள் அரசன் காளிதாஸனைப் பார்த்து, 'உமக்குச் சரஸ்வதியினது அருள் மிகுதியும் உண்டென்பது உண்மையாயின், நான் இங்கிருந்தபடியே சாகுமாறு பாடும்,' என்ருன். அது கேட்ட காளிதாஸன் பதைபதைத்து, 'பூலோகரக்ஷகா, யாது கூறினுய்? உயிரைப் பிரிந்து உடல் நிற்குமாயினன்றே நான் உன்னைச்சாகுமாறு பாடுவேன்? அஃதொழிய வேறு யாது கூறினும் செய்வேன். அதனை மறந்தருள்,' என்ருன். என்றலும், அரசன் சினந்து, 'என் சமூகம் விட்டகலக்கடவை,' என்ருன். 'உன்னை இறக்கப்பாடுவதிலும் அகன்றிருப்பது எனக்குப் பெரும்பாக்கியம்,' என்று காளிதாஸன் கூறிக்கொண்டு, அந்நாட்டை விட்டு அகன்று, அதற்கணித்தாகிய ஒரு சிற்றூரை அடைந்து, அங்கே வாசம் செய்வானுயினன். சில காலம் ஆயின பின்னர், அரசன் காளிதாஸனது ஞாபகம் வரப்பெற்று அவனைத் தேடுமாறு வேற்றுருத் தாங்கி ஊர்கள் தோறும் சென்று, ஆங்காங்குச் சிறிது சிறிது காலம் தங்கி, ஈற்றிலே காளிதாஸன் வாசம் செய்திருக்கும் சிற்றூரை அடைந்தான். அங்கே காளிதாஸன் கடைவீதி வழியே செல்லும் போது வேற்றுருத் தாங்கிய அரசன் எதிர்ப்படக் கண்டு, தன்னுல் முன் ஒரு போதும் இவ்வூரிலே காணப்படாதவனுகத் தோற்றலின், 'நீ எவ்வூரினை?' என்ருன். அரசனும் அவனை உணராது, 'யான் தாராபுரி வாசி,' என்ருன். அது கேட்டு, 'அரசன் க்ஷேமாதிகளைப்படி?' என்று காளிதாஸன் வினவினுன். அது கேட்ட அரசன், காளிதாஸனைக் கண்டு உணரும்படி தான் உபாயமாக எதிர்ப்பட்டார் யாவர் இடத்தும் வழக்கமாகக் கூறுகின்றபடி, 'போஜ ராஜன் இறந்து வெகு நாளாயினவே!' என்ருன். அவ்வாசகம் காளிதாஸன் செவிக்குக் காய்ச்சிய லோக நீராகப் பதைபதைத்து, 'தாரா நகரம் நிராதாரமாய்த் தத்தளிக்கவும், சரஸ்வதி கொள்கொம்பற்ற கொடி போல வருந்தவும், பண்டிதர்கள் ஒருங்கே நல்கூரவும் போஜன் இறந்தானே!' என்னும் கருத்துள்ள,

அத்யதாரா நிராதாரா நிராலம்பா சரஸ்வதி பண்டிதா: கண்டிதா: சர்வே போஜராஜே திவங்கதே.''

என்று ஒரு சுலோகத்தைச் சொன்னான். சொற்றலும், பொய்யா வாக்காதலின், அரசன் இறந்து கீழே விழுந்தான். அதனைக் காண்டலும் காளிதாஸன் முன்னையிலும் பதின்மடங்கு நடுநடுங்கி அவனை, அரசனென உணர்ந்து, 'என் பொருட்டா ஈதடைந்தனை! என் போலும் பாவி யாவன்!' எனக் கவன்று, அவனைத் தூக்கி மார்போடணைத்துக்கொண்டு, முன் பாடிய சுலோகத்துக்கு மறுதலையாக,

"சதா அத்யதாரா சதாதாரா சதாலம்பா சரஸ்வதி பண்டிதா: கமண்டிதா: சர்வேசதா போஜராஜா புவங்கதே."

என்னும் இச்சுலோகத்தைச் சொல்ல, அரசன் உயிர் பெற்றுத் தானும் எதிர் தழுவினான். இருவரும் அவ்வூரை விட்டுத் தாரா நகரம் சேர்ந்தனர்.

அப்பால் ஒரு நாள் அரசன் வீதி வலம்வரும் போது ஓர் உத்தமி நெற்குற்றிக்கொண்டிருந்தாள். அது கண்ட அரசன் உலக்கையைப் பார்த்து, 'ஏ முசலமே, ஏன் தளிர்க்காதிருக்கின்றனை?' என்னும் கருத்துள்ள,

'முசலகிசலயம் தேதத்க்ஷணத்யங்நஜாதம்."

என்ற அடியை மனத்தில் எண்ணிக்கொண்டு சபைக்கு வந்து காளிதாஸனுக்கு அவ்வடியைச் சொல்ல, இதற்குக் காளிதாஸன் உத்தரமாக, 'அழகும், கற்பும் ஒன்று கூடி உருவெடுத்துள்ள உத்தமியினுடைய பூங்கரத்தால் தழுவப்பெற்றும் அம்முசலம் தளிர்த்ததில்லை. அது காட்டில் பிறந்ததன்றே? காட்டில் பிறந்தவர்கள் சுகமறிவார்களோ? அறியார்கள். ஆதலினாலன்றே கிட்டற்கரிய உத்தமி கையால் தழுவப்பட்ட களிப்பினால் ஆயினும் அது தளிர்த்ததில்லை,' என்னும் கருத்துள்ள,

'ஜகதிவிதிதமே தத்காஷ்டமே வாஸிநா நம்ததபிகிலஸத்யம் காநநே வர்த்திதோஸி குவலயதளநேத்ரீ பாணிசம்கோத்ஸவேஸ்த் முஸலகிஸலயம்தே தத்க்ஷணத்யங்நஜாதம்."

என்னும் சுலோகத்தைச் சொன்னான். அப்பால் ஒரு நாள் ஒரு தீர்த்த யாத்திரிகன் அரசன் சமுகத்தில் வந்து, 'உம்மிடத்திலுள்ள வித்துவான்களை என்னோடு கங்கா ஸ்நானத்திற்கு அனுப்புதல் வேண்டும்,' என, அரசன் அதற்கு இயைந்து, 'விருப்பமுள்ளோர் எல்லோரும் போக,' என்று பொருளும் கொடுத்து ஆஞ்ஞை செய்தான். அவ்வாறே எல்லோரும் போகக் காளிதாஸன் மாத்திரம் போகாது அங்கேதானே இருப்பானையினான்.

அடுத்த நாள் காலையில் வழக்கம் போலக் காளிதாஸ கவி சபா மண்டபம் புகக் கண்ட அரசன், 'வித்துவான்கள் எல்லாரும் கங்கா ஸ்நானத்தின்பொருட்டுக் காசிக்குப் போய்விட்டார்களே! நீர் மாத்திரம் போகாது தங்கிய காரணம் என்னை?' என்று காளிதாஸ

கவியைக் கேட்க, அதற்குக் காளிதாஸ கவி அரசனைப் பார்த்து, 'சகல சாஸ்திரங்களையும் அளவறக் கற்றுத் தெளிந்த நீர் இங்ஙனம் என்னைப் பார்த்துக் கேட்டது எனக்குப் பேராச்சரியத்தை விளைக்கின்றது!' என்று சொல்லி, 'எவனுடைய இருதய கமலத்தில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கிறாரோ, அவனிடத்திலே சகல தீர்த்தங்களும் யிருக்கின்றன, எவனிடத்திலே சிவபெருமான் கோயில் கொள்ளவில்லையோ, அவனே தீர்த்த யாத்திரை முதலியன செய்வதற்கு உரியவன்,' என்னும் கருத்துள்ள,

"தேயாம்ஹி தீர்த்தேஷு பிரதாயேசம் போர்த்தார ஸர்த்திநம்
யஸ்ய கௌரீஸ்வரஸ் சித்தேதீர்த்தம் போஜபரம்ஹி ஸா."

என்னும் இச்சுலோகத்தைச் சொல்ல, அரசன் கேட்டு மகிழ்ந்து மௌனம் சாதித்தான்.

இப்படியே அரசன் நாள்தோறும் காளிதாஸனுடைய வாயினின்றும் வெளிப்படும் அரும்பொருட்கவிகளாகிய நறுந்தேனைச் செவிவாயாலே பருகிக் களித்து வருகையில், அரசன் சமுகத்துப் புன்கவிஞர் செய்த வஞ்சகச் சூதினால் காளிதாஸன்மீது அரசன் மீண்டும் அதிருப்தி காட்ட நேர்ந்தது. அதனைக் காளிதாஸன் அறிந்து அரசனுடைய நகரம் விட்டு வெளிப்பட்டு அல்லாள தேசம் சென்று, அத்தேசத்தரசன் சபையில் புகுந்து அங்குத் தன் வரலாற்றைச் சொல்ல, அரசன் மகிழ்ந்து, 'நீர் போஜராஜனிடத்திலிருந்து பெற்ற சம்மானத்தினும் மும்மடங்கு அதிகமான சம்மானத்தோடும் இங்கேதான் இருக்கக் கடவீர். உமது கீர்த்தி எனது காதுக்கு எட்டிய நாள் முதலாக உம்மைக் காண வேண்டுமென்று நான் கொண்ட பேரவாவுக்கு உமது வரவால் இன்று எல்லை கண்டேன்,' என்று பலவாறு முகமன் கூறி உபசரித்துத் தன் பக்கத்தில் இருத்தி, 'கவிஞரேறே, அகவிக்கலி தீர ஒரு கவி சொல்லி அருளும்,' என்றான். அவ்வாறே காளிதாஸனும் எழுந்து, சபையை வந்தனம் கூறி அடக்கி, அரசனைப் பார்த்து, 'நரேந்திரரே, உமது பகை அரசனுடைய பட்டணத்திலே சஞ்சரிக்கின்ற ஒரு வேட்டுவ மாது, வீதிகளிலே சிந்திக் கிடக்கின்ற இரத்தினங்களைக் கருங்காலிக் கட்டையிலிலுண்டாய தழலென எண்ணிச் சாம்பிராணியை அத் தழலில் இட்டுக் கண்ணை மூடி ஊத, அவள் வாயினின்றும் வரும் சுவாசம் நறிய வாசனையாய்க் கமழ, அஃதுணர்ந்த வண்டுகள் அச் சாம்பிராணியின்மேல் வந்து மொய்க்க, அவற்றைப் புகை என்றெண்ணுகின்றாள்,' என்னும் கருத்துள்ள,

"அல்லாள க்ஷோணிபால் த்வத்தவபிஹித நகரே சம்சரம்
திகிராதிராதிகீர்ணை தாயரத்நாந்யுருத்ரகதிராம்காரசம்கா குலாமகி
க்ஷீப்த்வா ஸ்ரீகமடம் தநுபரிமுது குளீபூத நேத்ராதமம் தீஸ்வா
ஸாமோதா நுயாதைர்மதுகர நிகரைர்த்தூமஸமகாசபிபர்த்தி."

என்னும் இச்சுலோகத்தைச் சொல்ல, அரசன் மகிழ்ந்து அக்ஷரத்

துக்குச் சரி லக்ஷ்மாகப் பொன்னை வாரி வழங்கினுன். அப்பால் காளிதாஸன் அவ்வல்லாள தேசத்தரசனிடத்தில் தானே மிக்க சம்பிரமமாக இருந்து விளங்கி வரும் நாளில் தன்னைக் காளிதாஸன் பிரிந்தவன்றே அவன் பின்னே செல்லப்பெற்ற கருத்தினனுய்த் தாரா நகரத்தில் அரசு புரிந்திருந்த போஜ மகாராஜன் காளிதாஸனுடைய பிரிவைச் சகிக்க முடியாதவனுகித் தன்பிரதானி ஒருவனை அல்லாள தேசத்துக்குப் போக்கிக் காளிதாஸனை அழைத்து வருமாறு ஆஞ்ஞாபித்தான். அவ்வாறே அப்பிரதானி காளிதாஸன் இடத்திற்குச் சென்று கருத்தை வெளியிட, காளிதாஸன் தான் கொண்டிருந்த கோபம் தணிந்து போஜனிடம் செல்ல ஒருப் பட்டவனுகி, அல்லாள நாட்டு வேந்தனிடம் சென்று பிரியா விடை பெற்றுக்கொண்டு போஜனுடைய நகரம் சார்ந்து உத்தியான வனத்தில் போய் இருந்தான். அதை அறிந்த போஜன் அங்கே போய்க் காளிதாஸனை வணங்கி உபசரித்தான். அவ்வளவில் இருவரும் முன் போல நேசராகி அந்தப்புரம் சென்ருர்கள். அங்கே காளிதாஸன் விருந்து அருந்தி ஆசி கூறி விடை பெற்றுத் தனது பிரியை வீட்டுக்கேகிச் சுகித்து முன் போலக் காலக் கழிவு செய்து வருகையில், ஒரு நாள் அரசன் பரத்தை கவரி வீசக் காளிதாஸனைப் பக்கத்திருத்தி மஞ்சத்தின்மீது படுத்திருப்பானுயினன். அப்போது காளிதாஸன் அவ்வேளையைப் பார்த்து வருணிக்கத் தொடங்கி, 'கூந்தலைப் பார்த்து ஸ்தனங்கள் அஞ்சுகின்றன. ஸ்தனபாரத்தைக் கண்டு கூந்தல் அஞ்சுகின்றது ‡ கசமும், குசமுமாகிய அவ்விரண்டையும் கண்டு அல்குல் அஞ்சுகின்றது. மதி முகத்தாளே இவற்றையெல்லாம் சந்தி செய்து பரித்து நிற்கும் உனது வல்லமை வியக்கற்பாலதே!' என்னும் கருத்துள்ள,

"கசபாராத் குசபார : குசபாரரத் பீதிமேகசபார : கசகுசபா ராஜ்ஜகம் கோயம் சநேந்த்ராநமத்கார"

*கூந்தலைப் பார்த்து ஸ்தனங்கள் அஞ்சின்றன என்பது எங்ஙனமோ வெனில், கூந்தல் மேகத்துக்கும் ஸ்தனங்கள் மணற்குன்றுகளுக்கும் உவமிக்கப்படுவனவாக, மழை பெய்யின் மணற்குன்று அழிதல் இயல்பென்பது பற்றி என்க.

†கூந்தல் ஸ்தனங்களைக் கண்டு அஞ்சுகின்றது என்பது எங்ஙனமோ வெனில், கூந்தல் கரும்பாம்பு, ஸ்தனம் யானை; யானைக்குப் பாம்பு அஞ்சுவது பற்றி என்க.

‡கசகுசங்களாகிய அவ்விரண்டையும் கண்டு அல்குல் அஞ்சுவது எங்ஙனமெனில், கசம்-கூந்தல். கூந்தலுக்குக் கொன்றைக்காய் உவமை. குசம்-ஸ்தனம். ஸ்தனத்துக்குக் குடமுவமை. அல்குலுக்குப பாம்பு உவமை. ஆகவே, பாம்பு கொன்றைக்காயைக்கண்டு சத்துரு என்று திரித்து உணர்ந்து அஞ்சுதலும், குடத்தில் அடங்குதலும் மிக இயற்கையாதலின் என்க.

என்னும் இச்சுலோகத்தைச் சொல்லக் கேட்ட அரசன், ‘நானும் சொல்லுகிறேன் கேட்பீராக,’ என்று கூறி, §‘முகத்தைக் கண்டு பாதங்கள் பீதியடைகின்றன. †வார்த்தையினுல் அதரமும், தந்த பந்திகளும் அச்சம் எய்துகின்றன. ‡கசமும் குசமும் நயனமும் இடையைக் கண்டு பயமடைகின்றன’ என்னும் கருத்துள்ள,

“ வதநாத்பதயுகளீயம் வசநாததரஸ்சதந்ததந்திதஸ்சகசத : குசபந்யுகளீயம் லோசனயுகளம் சமத்யதஸ்த்ரஸதி ”

என்னும் இச்சுலோகத்தைச் சொல்லி, ‘என்னுடையதே சிறப் புடையது,’ என்று அரசன் கூற, காளிதாஸன் தன்னுடையதே சிறப் பால் மிக்கது என, இருவரும் போலிமேலவற்றுக் களித்தனர் அப் பால் ஒரு நாளிரவில் அரசன் நகர்ச்சோதனையின்பொருட்டு வீதிகள் தோறும் சென்று உலாவி வருகையில் ஒரு வீட்டிலே ஒரு பிராமணன் தனது மனைவியினது மடிமீது தலையை வைத்துச் சயனிப்பதையும் அப்பார்ப்பனிக்கு அருகிலே ஒரு மகவு சந்தனக் குழம்பு நிறைந்த தங்கப் பாத்திரத்தில் விழுந்து விளையாடுவதையும் கண்டு மனத்தில் குறித்துக்கொண்டு அதனை மறைத்து அக்கினிமய மாகிய அனல் சட்டி எனச் சுட்டித் தனது வித்துவான்களுடைய விவேகத்தைப் பரீக்ஷிக்கும் கருத்துடையனுகி மற்றை நாட் காலையில் சபைக்கு வந்த போது வித்துவான்களை வினித்து, ‘சென்ற இரவில் நாம் நகர்வலம் வந்த போது ஒரு வீட்டிலே ஓரந்தணன் தனது மனைவியினது மடியிலே தலையை வைத்து நித்திரை போக அவன் மகவு பக்கத்திலிருந்த ஒரு கனற் சட்டியில் விழுந்து விளை யாடக் கண்டோம்,’ என்று கூற, அது கேட்ட காளிதாஸன், ‘நீர் கூறியது நெருப்பேயாகுக, அதனுல், நீரடைந்தது ஆச்சரியமன்று ; பதிவிரதையானவள் தனது மடியில் நாயகன் நித்திரை செய்ய அவளுடைய சமீபத்திலிருக்கும் அனற் சட்டியில் மகவு விழுந்து விளையாடினும் அஞ்சுவளோ ? அஞ்சாளே ! எங்ஙனமெனில், அக்கினி பகவான் தான் அம்மகவைத் தகிக்கின் தன்னைப் பதிவிரதாக்கினி தகித்துவிடுமே என அஞ்சுவனன்றே ?’ என்னும் கருத்துள்ள,

§ முகத்தைக்கண்டு பாதங்கள் அஞ்சுதல் யாங்ஙனமோவெனில், சந்திரனைக் கண்டு தாமரை கூம்புதலியற்கையாதலால என்க.

† வார்த்தையினுல் அதரமும் தந்தபந்திகளும் அஞ்சுதல் எங்ஙனமோ எனில், இளி மொழியைக் கேட்ட கொவ்வைக் கனியும் மாதுளம் வித்தும் அஞ்சு மென்பது இளிக்கு அவை உணவாதல் பற்றி எனும் வருணனையாலென்க. கொவ்வைக்கனி அதரத்துக்கும் மாதுளம்வித்துப் பல் வரிசைக்கும் உவமைகள்.

‡ கூந்தலுக்கு இருளுவமை. இடைக்கு மின்னுவமை. மின்னினுல் இருள் கெடுதலால் கூந்தல் இடைக்கஞ்சும் என்றதென்க இனி, குசத்துக்கு யானையும் இடைக்குச் சிங்கமுமுவமையாதலின், சிங்கத்துக்கு யானை அஞ்சுமென்க. கண் மானுக்குவமையாதலின் மான் சிங்கத் தைக் கண்டஞ்சுதல் இயற்கை.

" ஸுதம்பதம் தமரஸமீக்ஷ்யபாவகேந, போதயாமாஸபதிம் பதிவ்ரதா
ததாபவத் தத்பதிபக்திகௌரவாத் ஹ்ருதாசநஸ் சந்தந யங்க சீதல."

என்னும் இச்சுலோகத்தைக் கூறிச் சந்தனம் என அரசனுடைய குறிப்பையும் சுட்டாது காட்டினுன். இதனைக் கேட்ட அரசன் கழிபெரு மகிழ்ச்சியில் பரவசனுகிக் காளிதாஸனைப் பற்றுக் கோடாகத் தழுவி நின்று ஈற்றில் தெளிந்தான்.

இவ்வாறிருந்து வருகையில் போஜனுடைய நாட்டிலே காட்டு மிருகங்கள் வந்து பயிர் முதலியவைகளை அழிக்கத் தலைப்பட்டன. அது கண்டு பிரஜைகள் அரசனிடம் போய் முறையிட்டார்கள். குடிகளுக்கு வந்த துன்பத்தைத் தனக்கு வந்ததாக நோக்கும் இயல்பினனுகிய போஜன் குடிகள் சொன்ன குறையைக் கேட்டு, சிறிது நேரமும் சகிக்கலாற்றுது, உடனே வேட்டைக்காயத்தனுகி நகரத்தைவிட்டு வெளிப்பட்டுக் காடுகள்தோறும் சென்று மிருகங்களைத் தேடி வதை செய்துகொண்டும், வேடரால் பல மிருகங்களை வலைப்படுத்திக்கொண்டும், பாணத்துக்கும் வலைக்கும் தப்பிக் காடு போய் அடைந்த மிருகங்களைத் தொடர்ந்து காட்டில் புகுந்தான். அங்கே நெடுநேரமாக வேட்டம் செய்தமையால், தாகமீதூரப் பெற்றுத் தடாகம் தேடி நீரருந்தி, அதன் சார்பிலுள்ள சோலையிலிருந்து கனி நீங்கினுன். அப்பொழுது ஒரு குரங்கு ஒரு நாவல் மரத்திலேறிக் கொம்புகளை அசைத்துத் தனது இயற்கைக் குணத்தைக் காட்ட, அக்கொம்புகளில் பழுத்திருந்த பழங்கள் அத்தடாகத்து நீரிலே 'குளுகுக் குளுகுக் குளு' என விழுந்தன. பக்கத்திலிருந்த அரசன் அவ்வொலிக்குறிப்பை மனனம் பண்ணிக்கொண்டு காட்டினின்றும் மீண்டு நகரம் சேர்ந்தான். அடுத்த நாள் காலையில் அரசன் சபைக்கு வந்து தான் காட்டிலிருந்து அவதானித்து வந்த ஒலியைக் 'குளுகுக் குளுகுக் குளு' என்று ஒரு சுலோகபாதக் கூறு போலச் செய்து, 'இதனைப் பூரணம் செய்வீர்களாக,' என்று வித்துவான்களிடம் கூறிக் கேட்டான். அது கேட்ட வித்துவான்களெல்லோரும், 'இஃதென்னை!' என்று பரிகசித்து மயங்கித் திகைக்க, காளிதாஸனெழுந்து, 'ஐயா, நீர் குறித்தது பழுத்த கனிகளால் நிறைந்திருந்த நாவல் மரத்திலே குரங்கேறிக் கொம்புகளைக் கம்பிதம் செய்ய அதன் பழங்கள் நீரிலே விழுந்த ஒலிக்குறிப் பேயாம்,' என்னும் கருத்துப்பட,

" ஜம்பூ பலானி பத்க்வானி பதம்தி விமலே ஜலே
கபிகம்பித சாகாப்யோ குளுகுக் குளுகுக் குளு."

என்னும் இச்சுலோகத்தைச் சொன்னுன். இதைக் கேட்ட மாத்திரத்தில் அரசன் அன்பாலும் அச்சத்தாலும் மெய் நடுநடுங்கி நாத்தழுதழுத்து ஆனந்தக்கண்ணீர் பொழியக் காளிதாஸனுடைய பாதங்களில் விழுந்து, 'குரு நாதரே, இன்றே உமது மெய்வடிவை உணர்ந்தேன்! பிறர் மனத்திலுள்ளதை ஓர்ந்து சொல்லும் வல்லமையுடைய உம்மைச் சாமானியனுகிய என்னுடன் சமமாக்கி

வைத்திருந்த என் அறியாமை இருந்தவாறு என்னே!' எனப் பலவாறு துதித்துக் கொண்டாடினான்.

அப்பால் முன்பனிக் காலத்து ஓரிரவில் குளிர்வாடையால் நலிவுற்ற அரசன் கனற்சட்டியை அணுகிக் குளிர் காய்ந்திருக்கும் போது அக்கனற்சட்டியை எவ்வாறு வருணிக்கலாம் என்று சிந்தித்துப் பார்த்தும் தக்கவாறு புலப்படாமையால், 'நாளை உதயத்தில் இதனைக் காளிதாஸனிடம் கேட்போம்,' என்று முடிவு செய்து, குளிர் நீங்கியபின் படுத்துறங்கி விடியற்காலத்திலெழுந்து நித்தியக் கடன்களை முடித்துக்கொண்டு சபையில் பிரவேசித்து, காளிதாஸனைப் பார்த்து, 'கவிசிரேஷ்டரே, உமது திருவாக்கால் கனற்சட்டியை வருணிக்குமாறு பிரார்த்திக்கின்றேன்,' என்றான். நன்றெனக் காளிதாஸனும் எழுந்து அரசனைப் பார்த்து, 'மண்டலாதிபதி, கனற்சட்டியானது இரும்பினால் அமைக்கப்பட்டதாயினும் அதனிடத்துள்ள விசேஷ குணங்களினால் அதனை வித்துவான்களின் மனத்துக்கு உவமிக்கலாம். எவ்வாறெனில், வெகுலோகையா யிருத்தலால் என்க. (பகுலோஹா என்பது பகுலோகா எனவும் பகுல ஊஹா எனவும் இருவகையாகப் பிரிக்க முறையே மிக வலிய லோகத்தால் அமைந்ததெனவும் நுண்ணிய விவேகம் உடையவ ரெனவும் பொருள்படும்). உஷத் காலத்துச் சூரியனுடைய தேர்க்கால் போலவும் கூட்டப்பட்ட சாதகப் புள்ளைப் போலவும் இருக்கின்றது. (ஸுகடித சக்ரா என்பது பூட்டப்பட்ட தேர்ச் சக்கரம் எனவும், கூட்டப்பட்ட சாதகப்புள் எனவும் பொருள் படும்). இன்னும் கனற்சட்டியானது நீறு பூத்த தழல் போலும் திருமேனியையுடைய சிவனுக்கும் சமமாகத்தக்கது,' என்று,

"கவியதிரிவ பஹுலோஹா ஸுகடித சக்ராப்ரபாதவேளேவ :
ஹரமூர்த்திரிவஹஸந்தீபாதி விதூமா நிலோபேதா."

என்னும் இச்சுலோகத்தால் வருணித்தான். அதற்காக அரசன் காளிதாஸனுக்கு அக்ஷரம் ஒன்றுக்கு இலக்ஷம் பொன் மேரையாகக் கணக்கிட்டுப் பரிசளித்தான்.

அப்பால் ஒரு நாள் அரசன் தனது பாரியைகளில் ஒருத்தியாகிய கமலை என்பவளுடன் சூதாடப் புகுந்து, தோற்கின் அன்றிரவு அவளுடைய அந்தப்புரத்தில் சயனிப்பன் என்று சபதமொட்டிச் சூதாடிய போது தோற்றான். அதனால் அன்றிரவு சந்திரமுகியினுடைய அந்தப்புரத்துக்குப்போகும் முறைக்குமாறுகக் கமலையினுடைய அந்தப்புரம் போக வேண்டியவன் ஆனான். அச் சமயத்தில் பட்டத்துத் தேவியாகிய லீலாவதியும் தன்னுடைய அந்தப்புரத்துக்கு வருமாறு வேண்டி அரசன்பால் தூதுபோக்கினாள். இவ்வாற்றால் அரசன் அம்மூவரையும் எவ்வாறு திருப்தி அடைவிக்கலாகும் என்னும் சிந்தனையுடையவனாகி ஒருதலைத்துணிபு மின்றி இருந்தான். அடுத்த நாட்காலையில் வழக்கம் போல அரசன் சபைக்குப் போய் அங்கிருந்த வித்துவான்களைப் பார்த்து, 'சென்ற

இரா முழுதும் நித்திரை அற்றேன்,' என்னும் இவ்வளவே கூற, காளிதாஸன் நிகழ்ந்தவைகளை எல்லாம் சுலோகமாக்கி எடுத்துக் கூறினன். அது கேட்ட அரசன் வெட்கித் தலை குனிந்தான்.

சில நாள் கழிந்த பின்னர், புதிதாக அரசன் தான் அமைப்பித்த ஒருமாளிகையில் குடிபுகுதல் வேண்டிப் பிரயத்தனங்கள் செய்தான். அப்பொழுது அம்மாளிகையில் ஒரு பேயிருத்தலையுணர்ந்த அரசன் அதனை அங்கு நின்றும் ஓட்ட வேண்டி மாந்திரிகர்களை வருவித்து, 'ஓட்டுமின்,' என, அவர்கள் எல்லோரும் தத்தம் மந்திரவலியைக் காட்டியும் அதனை அகற்ற முடியாதவர்களாகி அப்பேய்க்கே இரையாகி மாண்டார்கள். அதனால், அரசன் மிக்க கவலை உடையவனாகி, காளிதாஸனோடு அதனைக் குறித்துச் சூழ்ச்சி செய்ய, காளிதாஸன், 'ஐய, இதன்பொருட்டு நீர் கவலை அடைய வேண்டா. நானே அதை ஓட்ட வல்லேன்,' என்று அரசனுக்குத் திடமொழி கூறி அம்மாளிகைக்கேகி, அங்குப் புவனேசுவரியை நோக்கி ஜெபம் செய்துகொண்டிருந்தான்; அப்போது பேய் சினந்தெழுந்து திருந்து வந்து காளிதாஸன் முன்னர் நின்று, 'உலகம் துவிதம்,' என்னும் கருத்துள்ள,

'சர்வஸ்யத்வே.'

என்னும் வாக்கியத்தைச் சொல்லிற்று. இங்ஙனம் கூறிய பைசாசத்தைக் காளிதாஸன் பார்த்து, 'செல்வம் வறுமை என்பவற்றிற்கு நற்புத்தி துர்ப்புத்தியே ஏதுவாகும்,' என்னும் கருத்துள்ள,

'ஸுமதிகுமதி ஸம்பதா பத்திஹேதூ.'

என்னும் சுலோகத்தைச் சொன்னன். அவ்வளவில் அப்பேய் மீண்டு போய் இரண்டாம் சாமத்தில் திரும்பி வந்து, விருத்தனும் ஆடவனும் என்னும் கருத்துள்ள ஒரு வாக்யத்தைச் சொல்லிற்று. அது கேட்ட காளிதாஸன், 'இளம்பெண்கள் ஆடவருடைய சேர்க்கையால் விருத்தரை நீக்குகின்றார்கள்,' என்னும் கருத்துள்ள,

'வ்ருத்தோபூஜ ஸஹஸையரிசயாத் யஜ்யதேத்ய காம்ரூப்யா.'

என்னும் வாக்கியத்தைச் சொன்னன். உடனே அது போய் மறைந்து மூன்றும் சாமம் தோன்றி ஏககோத்திரம் (ஏகோகோத்ரே) என்றது. அதற்குக் காளிதாஸன், 'ஒரு குலத்தில் பிறந்தவன் என்பான் அக்குலமனைத்தையும் காப்பவனே,' என்னும் கருத்தமைந்த,

"ஏகோ கோத்ரே ப்ரபவதி புமான்ய: குடும்பம் பிபர்த்தி."

என்னும் வாக்கியத்தைக் கூறப் பைசாசம் மறைந்தது. அப்பால் நான்காம் சாமத்தில் அப்பைசாசம் திரும்பி வந்து,

'ஸ்திரீ புவச்ச.'

என்று கூற, அதற்கும் காளிதாஸன், 'ஒரு ஸ்திரீ புருஷனைப் போலச்

சகல அதிகாரத்தையும் வகிப்பவளாயின் வீடு நசிக்கும்,' என்னும் கருத்தடங்கிய,

' ப்ரபவதியதா தத்திகேஹம் விநஷ்டம்.'

என்னும் வாக்கியத்தைச் சொன்னுன். அவ்வளவிலே பைசாசம், ' இவனே வெல்லுவது அரிது !' எனச் சிந்தித்துச் சந்தோஷித்து, ' பக்தா !' எனக் காளிதாஸனே அழைத்து, 'உனக்கு வேண்டுவதைக் கேள்; தருதும்,' என்றது ; அதற்குக் காளிதாஸன், 'அன்னையே, நீ இவ்விடம் விட்டகல்வதே எமக்கு வரம்,' என, அது நன்றெனக் கேட்டு அங்கு நின்றும் அகன்று போயது ! இதனைக் கண்ட அரசன் ஆச்சரியவசத்தினனுனன்.

இதன் பின்னர் ஒரு நாள் அரசன் ஸ்தானத்தின்பொருட்டுத் தனக்குரிய பூந்தடாகத்துக்குப் போய்ப் படித்துறையில் நின்றுன். அப்போது அரசனுடைய பூசைக்காகவே தீர்த்தம் கொண்டு போக வந்த அந்தப்புரத்துச் சேடி ஒருத்தி அரசனைக் கண்ணுற்று மையலா கிரியால் தன் வசந்தப்பி இடையில் தாங்கிய தங்கக் குடத்தைச் சோர விடுத்தாள். அது அப்படித்துறையில் விழுந்துருண்டு ஓடும் போது 'டம்டம் டடண்டம் டடண்டம்' என்னும் ஒலியுடன் ஓடிற்று. அவ்வொலிக் குறிப்பை அரசன் மனனம் பண்ணிக் கொண்டு ஸ்நானுதிகளை முடித்துச் சபைக்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே காளிதாஸன் வந்திருக்கக் கண்டு அவனைப் பார்த்து, அவ்வொலிக் குறிப்பை மாத்திரம் சொன்னுன். அதனைக் கேட்ட காளிதாஸன் நிகழ்ந்தவற்றை எல்லாம் உடன் நின்று கண்டான் போன்று,

' ராஜாபி ஷேக மதவிஹ்வ லாயா
ஹஸ்தாச்யு தோஹே மகடோயு வத்யா
ஸோபாந மார்க்கே ஷுகரோதி சப்தம்
டண்டம் டடண்டம் டடண்ட டண்டம்.''

என்னும் இச்சுலோகத்தைச் சொன்னுன். இச்சுலோகத்துக்கும் அரசன் அக்ஷரத்துக்கு இலக்ஷம் மேரையாகவே பொன்னை வாரிப் பரிசாக வழங்கினுன். மற்றெரு நாள் அரசன் வீதி வழியாகச் சிற்றுலாப் போகையில் ஒரு பரத்தை மாது பந்தாடிக் களித்து நிற்ப அதனைக் கண்ணுற்ற அரசன் தன் பக்கத்தில் நிற்கின்ற காளிதாஸ கவியைப் பார்த்துப் 'பந்தாட்டத்தை வருணித்தருளும்' என, நன்றெனக் காளிதாஸனும் வருணித்தான். அஃதியாதெனில், ' பந்தாடும் இச்சுந்தரி தனது பந்தைப் பார்த்து. ' ஏ பந்தே, நீ எனது ஸ்தனங்களுக்கு இணையாவையோ ? இணையாகாய். ஏன் வீணிலே என்னை உன் ஸ்தனத்திற்குச் சமமாகச் சேர்த்துக்கொள் ளென இரந்து பாய்கின்றுய்? தூரப் போ,' எனக் கூறியடிப்பது போலப் பந்தை அடிக்கின்றுள். அது கண்ட கருநீலங்கள் யாசிக்கும் தரித்திரரைப் போல மேலிருந்து அவள் பாதங்களில் வீழ்ந்தன' என்னும் கருத்துள்ள,

" பயோதராகார தரோஹி கந்துக :
கரேணரோஷா பித ஹந்யதேமுஹு :
இதிவகேத்ராக்ர திபீதமுத்பலம்
ஸ்திரியா ப்ரஸதாயப்பாதபாதயோ :"

என்னும் இச்சுலோகமென்க.

இவ்வாறே காளிதாஸன் நாள்தோறும் திண்மை நுண்மை வனப்பாதிகளால் சிறந்த சிங்காரக் கவிகள் சொல்லி அரசனை மகிழ்வித்து அவனிடம் குவை குவையாகப் பொன்னைப் பரிசாகப் பெற்று வந்ததும் அன்றி, இடையிடையே அனேக நூல்களையும் இயற்றி வந்தான். நாடகாலங்காரத்திலும் காளிதாஸன் வல்லவன் என்பது அவனுல் இயற்றப்பட்ட சகுந்தலை நாடகம், விக்கிரமோர்வசி நாடகம், மாளவிகாக்கினி மித்திர நாடகம் முதலியவற்றுல் உணரப்படும். மற்றை எப்பாஷையிலும் அவ்வகைச் சிறந்த நாடக நூல் கிடையாவென ஆய்ந்தோர் கூறுவர்.

பௌராணிக ரூபமாகச் செய்யப்பட்ட நூல்கள் இந்நூல் தொடக்கத்திலே கூறப்பட்டன காண்க. தோத்திர ரூபமாக இயற்றப்பட்ட நூல்கள் சியாமளா தண்டகம் கவுரிசதகம் முதலியன. கருவி நூல்களாக இவராலியற்றப்பட்ட நூல்கள் சுருதபோதம், நாகார்த்த சப்தரத்தினம், சந்திராலோகம முதலியன. இவையே அன்றி, சமய நூல்கள் சுத்த சந்திரிகா வியாக்கியானம் முதலியன.

போஜராஜனுடைய பிரிய கவிகள் காளிதாஸன், பவபூதி, தண்டி என்னும் மூவரே. இவருள் காளிதாஸனே சிரேஷ்ட நண்பன். அவன் இற்றைக்கு ஆயிரத்து நானூறு வருஷங்களுக்கு முன்னர் இருந்தவன் என்பது அனேகர் துணிபு.

இக்கவிசிரேட்டன் கல்வியால் ஆன்ற பெரியோனுயினும், பரத்தையர் கமனத்தை நீக்காதவன் என்பதைக் கேட்ட அனேகர் குற்சிதம் எய்துவர். அரசன் இவன்மேல் இடையிடையே வெறுப்புற்றிருந்தமைக்கும் அதுவே காரணம். அரசன் அங்ஙனம் வெறுப்புக் காட்டியும் காளிதாஸன் அப்பரத்தையர் கமனத்தைக் கைவிட்டிலன். பரத்தை என இங்கு யாம் பேசுவது பரத்தை உருக்கொண்டு போந்து அவனுடன் நிறை தவறுது சுகித்திருந்த அரச குமாரியை அன்று; அவனுக்கு மரண காரணமாய் இருந்ததும் பரத்தையர் கமனமே. அவன் ஈற்றில் அரசனைப் பிரிந்து தனக்குரிய அரசகுமாரி வீட்டுக்கும் போகாது நவீனமாக ஒரு பரத்தை வீடு போய்ச் சேர்ந்திருந்தான். அப்போது அரசன் அவனுடைய வரவை நெடுநாளாகப் பார்த்திருந்தும் வெளியாகாமை கண்டு, நவீனமாக ஒரு சுலோகப்பாதியைச் செய்து, ' இதனைப் பூரணம் செய்ய வல்லாருக்கு என்னரசில் பாதி கொடுப்பேன்,' என்று முரசறைவித்தான்.

அச்சுலோக பாதம் வருமாறு :

'தாமரை மலரின் இடமாக்குவனோ உற்பத்தியாகிக் கலந்திருப்பது காணப்படுகின்றது,' என்னுங் கருத்துள்ள,

"குஸுமே குஸுமோத்பத்தி:
சுருயதே நதுருச்யதே."

என்பது. இதனை அப்பரத்தை மாது காளிதாஸனுடைய பள்ளி யறையிலே கால்மாட்டுச் சுவரிலே மையினால் வரைந்துவிட்டாள். அவன் நித்திரைவிட்டெழுந்த போது எதிரில் அச்சுலோக பாதம் புலப்பட்டது. உடனே அதன் உத்தர பாதத்தை எழுதிப் பூரணம் செய்வானுயினன்.

அது வருமாறு: 'ஏ பெண்ணே, போஜனது முகமாகிய தாமரை மலரிலே நயனமாகிய இருகுவளை மலர்கள் காணப்படு கின்றனவே!' என்னும் கருத்துள்ள,

"மனுஹரி தவமுகாம் போஜே
நேத்ரம் இந்தீவர த்வயம்."

என்பது. அது கண்டு பரத்தை மாது பொருளாவின் வாய்ப்பட்டுச் சிந்தித்திருப்பாளாயினள். 'இவனை நாம் கொல்லோமாயின் நமக்கு இராச்சியம் சித்திக்காது. எப்படியும் இவனை செய்தானென்பது அரசனுக்குப் புலப்படும். புலப்படவே, அரசனும் பரிசு கொடுக்க உடன்படுவான். ஆதலால், இன்றிரவில் இவனைக் கொலை செய்து முற்றத்தில் புதைத்துவிட்டு, நாளை உதயத்திலே சுலோகத்தோடு அரசன் சமுகத்திலே புகுவோம்,' என இவ்வாறு சிந்தித்து முடிவு செய்துகொண்டு காளிதாஸன் சயனித்தவுடன் வாளால் அவனைக் கூறிட்டு முற்றத்தில் புதைத்துவிட்டு, அடுத்த நாள் காலையில் சுலோகத்தோடு அரசன் சமுகம் சேர்ந்தாள். அதனை அரசன் கண்ட மாத்திரத்தில், 'இஃது யாவர் செய்தது?' என்று வினவ, அப்பாதகி, 'நானே செய்தேன்,' என்றாள். அது கேட்ட அரசன் அவளைச் சிறைப்படுத்திவிட்டு, அவள் வீட்டுக்குச் சென்று பரிசோதிக்கையில் அவனுடைய உடலத் துண்டுகள் அகப்பட்டன. அரசன் தான் பெற்றிருந்த ஒரு தெய்விக வரத்தினால் காளிதாஸ னுடைய தலையை எடுத்துக் கையில் ஏந்திக்கொண்டு நடந்ததைச் சொல்லென்ன, அதுவும் நிகழ்ந்தவாறு கூறியது. அப்பால் அரசன் துக்க சாகரத்தில் முழுகித் தேறி, அபரக் கிரியைகளை முடிப்பித் தான். அவளையும் கொல்வித்தான். ஈற்றில் அரசன் தானும் கொலை செய்துகொண்டு இறந்தான். இவற்றைக் கேள்வியுற்ற வித்யா குரோசம் என்னும் அரச குமாரியும் வேசியுருக்கொண்டு காளிதாஸனை இணை பிரியாது சுகித்திருந்தவளுமாகிய கற்பின் மிக்காள் அரசன் இறந்தவிடத்துக்கு ஓடி அவனையும் காளி தாஸனையும் எழுப்பிச் சிறிதுகாலம் ஜீவித்து வாழ்ந்திருக்கச் செய் தாள் எனக் கர்ன பரம்பரையாகப் பலர் கூறுகின்றனர். இஃது அப்பிரமாணியம். வேறு சிலர் இன்னும் பலவாறு கூறுப.



[இசை, உலகத்து மக்களின் பொதுமொழி. இசை மொழி பிலிருந்தாலும் சரி; கருவியால் இசைக்கப் பட்டாலும் சரி; மக்களுக்கு இன்பம் தருவதாகவே விளங்குகிறது. 'இசைக் குருகார் எதற்கும் உருகார்' அன்றே? நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அனுபவித்த ஆங்கில வாத்திய இசை விருந்தைக் குறித்த விமரிசனம் இந்தக் கட்டுரை. இசை வெள்ளத்தில் மூழ்கிய ஆசிரியர் ஆங்கிலக் கலைஞர்களின் இசையாற்றலைக் குறித்துப் பல வாறு பாராட்டுகின்றார். இசை பாடுவோரின் இலக்கணமும் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளது.

— பதிப்பாசிரியர்]

19

கீதவாத்திய விநோதம்

இது இங்கிலீஷ் வாத்தியமாகையால் இதன் சாரம் எனக்குச் செவ்வையாய்ப் புலப்படாதாயினும், நான் கேட்ட பொழுது என் கருத்திற்குத் தோற்றியபடி ஒருவாறு எழுதத் துணிந்தேன்.

சென்னைக் கெடிஸ்தலத்திற்கு ஆளுகைத் தலைவராகிய மாட்சிமை தங்கிய நமது கவர்னர் துரையவர்கள் வீட்டில் 1856-ஆம் வருஷம், ஜூலை மீ, 28வ இரவில் எட்டரை மணி நேரத்தில் ஐரோப் பாவிலிருந்து வந்த இங்கிலீஷ் சங்கீத வித்தியா சாமர்த்தியராகிய கனம் பொருந்திய மார்ட்டின சீமன்சன் துரையும், அவரைச் சார்ந்த மற்றும் சில துரைகள் துரைசானிகளும் விதம் விதமாக வாசித்த கீத வாத்திய விநோதத்தைக் கேட்கும்படி, அனேக துரைமார் துரை சானிமார்களும், இந்து பிரபுக்கள் முதலானவர்களும் அவ்விடத் திற்குப் போனார்கள். அந்தச் சமயத்தில் நானும் என்னைச் சேர்ந்த சில கனவான்களுடனே அவ்விடத்தில் போயிருந்தேன்.

அப்பொழுது முதல் முதல் துரைத்தனத்தைச் சார்ந்த இராணுவ வாத்தியக்காரர் வந்து வாத்தியங்களைக் கிரமமாக வாசித்தார்கள். அந்த வாத்திய முழக்கம் மேக முழக்கம் போலவும், அங்குப் பிரகாசித்த நாநாவிதத் தீபங்கள் மேகத்திலிருந்து நிரை

நிரையாக மின்னல் மின்னுகிறது போலவும், அந்தத் தீபக் கருவிகளின் சுற்றுப் புறத்தில் அணியணியாகத் தொங்குகின்ற படிக மாலைகள் இடைவிடாது மழைத்துளி துளிக்கிறது போலவும் இருந்தன.

பின்பு மார்ட்டின் சீமன்சன் துரையவர்கள் வந்து கடவுள் வணக்கஞ் செய்து, தமது கையில் ஓர் வீணையை மெல்லென எடுத்தார் அந்த வீணையோ, அத்தனை விசேஷமானதாகக் காணப்பட வில்லை. எங்குமுள்ள மற்ற வீணைகளைப் போலக் கேவலம் சாதாரணமானதாகவேயிருந்தும், அது அவர் கைக்கு 'வல்லவனுக்குப் புல்லுமாயுதமாம்,' என்பதாயிருந்தது. அவர் அதன் முறுக்காணியைப் பற்றித் திருத்து, நரம்பைத் தெறித்துப் பிரமாணமாகச் சுதி கூட்டி, யாவரும்,' சபாஷ்!' என்று சிரக்கம்பம் செய்ய அற்புதமாக வாசித்தார். அதிலிருந்து தோன்றிய நாதமோ, அப்படிச் சாதாரணமாயிருக்கவில்லை. 'வல்லவனுடைய பம்பரம், போல'ச் சாதுரியமும் மாதுரியமும் செவிக்குக் குளிர்ச்சியுமாயிருந்தது. அந்த நாதம் அவ்வீணைக்கே இயல்பாயுள்ளதோ, அல்லது அதை வாசித்த மார்ட்டின் சீமன்சன் துரையின் கைவாசியோ, நமது கவர்னரவர் சூளுடைய சபா மண்டபக் கட்டுக்கோப்பின் வளமோ, என்னவோ தெரியாது! அந்த வீணை பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ் என்னும் நால்வகை யாழில் ஒன்றுதானே! அல்லது சரஸ்வதி, சித்திரசேனன், தும்புரு, நாரதர் ஆகிய நால்வருடைய களாவதி, கச்சளா, மகதி, பிருகதி ஆகிய வீணையிலொன்றுதானே! வேறொன்றுதானே! அவ்வீணையின் இசை யாழுக்குரிய ஏழ்வகை நரம்பிசையோ! அந்நரம்பிசைக்கு உவமையாகச் சொல்லப்பட்ட குயிலிசை முதலியனவோ! அவ்விசையின் சுவை கரும்பின் சுவையோ! கதலி, பலா, மா முதலிய கனிகளின் சுவையோ! பால், தேன், பாகு ஆகிய இவைகளின் சுவையோ! யாதென்று நிரூபிக்கிறது? அவர் அந்த வீணையைத் துருவம், மட்டியம், ரூபகம், ஜம்பை, திரிபுடை முதலிய சப்த தாள நவதாளங்களும், காலம், மார்க்கம், கிரியை முதலிய தச தாளப் பிரமாணங்களும், சுரங்களும் பேதியாமல், அந்தந்த ஸ்தானங்கள் தோறும் ஊசலாடுவது போல அவரது கைவிரல்கள் விசையாய்ச் சென்று உலாவ, அதிற் பல வித கானங்களும் நவநவமாய்த் தோன்றும்படி உசிதமாக வாசிக்குமளவில், யோசிக்குமிடத்தில், அந்தக் கானம் இந்துக்களுக்குள் வழங்கும் குறிஞ்சி முதலிய ஐந்திணைக்குரிய ஐவகைப் பண்களிலும், பகற்பண் ஒன்பது, இராப்பண் ஒன்பது, பொதுப் பண் மூன்று ஆகிய இருபத்தொரு பண்களிலும், பயிரவி முதலாகிய முப்பத்திரண்டு ராகங்களிலும் சம்பந்தப்பட்டதாகச் சொல்வது சரியன்று; சொன்னலும் ரசமாயிராது. பின்னே என்ன வெனில், தேவகானமே இதுவென்று மதிக்கத்தக்கதாய் இருந்தது.

அவர் வாசித்த பிறகு மிஸ்டர் கோல் துரை என்பவர் வந்து, சிற்சில பண்கள் இராகங்களை அக்கினிப் பிரளயத்தில் உய்ந்திருந்த

மனிதனுடைய சீர் நிர்வாகங்களைக் குறித்துப் புதுமையான பாட லுடனே சம்பந்தப்படுத்தி,

"வயிறது குழிய வாங்கல் அழுமுகம் காட்டல் வாங்கும்
செயிரது புருவம் ஏறல் சிரநடுக் குறல்கண் ணுடல்
பயிறரு மிடறு வீங்கல் பையென வாயங் காத்தல்
எயிறது காட்டல் இன்ன வுடல்தொழில் குற்ற மென்ப."

என்கிறபடி வயிறு குழிதல், முகம் அழுகின்ற பாவனையாகத் தோன்றல், புருவம் நெளித்தல், தலை நடுக்கல், விழி புரளல், தொண்டை வீங்கல், பை விரித்தாற் போல வாயை ஆவென்று திறத்தல், அடிக்கடி பல்லைக் காட்டல் என்னும் அங்க விகாரங்கள் இல்லாமலும்,

"வெள்ளாகா குளிகே ழோசை வெடிகுர னுசி யின்ன
எள்ளிய எழாலின் குற்றம் தெரிந்துநின் றிரட்டல் எல்லை
தள்ளிய கழிபோக் கோசை இழைத்தல்நெட் டுயிர்ப்புத் தள்ளித்
துள்ளல்என் றின்ன பாடல் தொழில்குற்றம் பிறவுந் நீர்ந்தே."

என்கிறபடி வெடிப்பாகக் காணுதல், மூக்கிலுல் ஒலித்தல், இரட்டை ஒலியாய்த் தோன்றல், அளவு கடந்து ஒலித்தல், ஓசை இழைத்தல், பெருமூச்சு எறிதல் முதலாகிய குற்றங்கள் சாரமலும், எடுத்த விஷயத்துக்கேற்ற சில பாவங்களை மாத்திரம் காட்டி நயமாகப் பாடினர். அதனை அந்தச் சபையிலிருந்து கேட்டவர்கள் அனேகர், ஒருமிக்கப் பலமுறையில் கைகொட்டிப் புகழ்ந்தார்கள். நான் அது பற்றி அவர்களில் சிலர் பஞ்சவர்ணக்கிளி கொஞ்சுகிறது என்றும், சிலர் இளங்குயில் கூவுகின்றது என்றும், சிலர் கின்னர மிதுனம் பாடுகின்றது என்றும், பல வகையாக நினைத்து ஆனந்தமாகிய ஆவேசத்தால் தங்கள் சரீரத்தைத் தாங்கள் மறந்து அப்படி ஆரவாரித்தார்கள் என்று எண்ணி, அத் தருணத்தில் நான், 'சத்தியப்பலந்து சங்கீதம்' என்னும் பழ மொழியை நினைந்து வியந்து சந்தோஷித்தேன்.

பின்னர் ஹோர்-ஏ சீமான் துரை ஆனவர் நாதசுரம் போன்ற ஒரு தொனைக் கருவியை எடுத்து வாயில் வைத்து, அதன் துவாரங் களைத் தமது விரல்களால் அடைத்தும், திறந்தும் லயை முதலானவை பிறழாமல் குரலை நெருக்கிப் பெருக்கி, லகு, குரு, துரிதம், அனு துரிதம் ஆகிய மாத்திரைபிசகாமல், ஆரோகணஅவரோகணமாகத் தம்பால் தேம்பாகு முக்கனி சர்க்கரை கற்கண்டுகளும் ஒக்கக் கலந்து ஊட்டுவது போல இன்பமாக வாசித்தார்.

அப்பொழுது நமது கவர்னர் அவர்களுடைய துணைவராகிய காப்டன் இராபர்ட துரை அவர்கள் கரடி பிடிக்கும் புதுமையான சிரிக் கத்தக்க ஒரு பாடலைப் பாடி, நர்த்தனஞ் செய்வது போலச் சிறிது நேரம் அழகுடனே அபிநயித்தார். அந்த அபிநயத்தில் அவரதுபூரண

சந்திரன் போன்ற முகநயமும், செங்காந்தள் மலர் போன்ற கர நயமும், தாமரை போன்ற விழி நயமும், மற்ற அவயவ நயமும் மிகு நன்னயமாய் இருந்தமையால், அங்குள்ளவர்கள் அனைவரும் தத்தம் கண்ணும் கருத்தும் இதர விஷயத்தில் செல்லாமல், பிரமித்தாற்போலப் பலகாலும் நோக்கிக் கைபுடைத்து அதிசயித் தார்கள். அவர் பாடும் பொழுது, ' அவரது குரல் ஓசையானது மணியோசையோ ! மகுடிக் குழலோசையோ ! சிலம்போசையோ ! சங்கோசையோ !' என்று கருதும்படி இருந்தது.

அதன் பிறகு மிஸ்ஸர்ஸ் மேயர் துரைசாணி ஆனவர் 'பியானே' என்னும் வாத்தியம் வாசித்தார். அந்தத் துரைசானியின் கை விரைவையும், வாசிக்கும் சாதுரியத்தையும் கண்டு என் கண் களித்தது. அவ்வாத்திய ஓசையைக் கேட்டுச் செவி குளிர்ந்தது. அவ்விரு திறத்தையும் ஓர்ந்து மனம் களித்தது. எனது அங்கம் புளகாங்கம் ஆயிற்று. ஆதலால், அதை யாது என்று நிர்ணயிக் கிறது!

மறுபடியும் மார்ட்டின் சீமன்சன் துரை வந்து வீணை வாசித்தார். அது கேட்டு, ' இது என்ன ! புல்லாங்குழல் இசை போலவும், திருச் சின்னம் போலவும், குடமுழாப் போலவும், எக்காளம் போலவும், மற்றும் பற்பல விதமாகவும் இருக்கின்றதே !' என்று நினைத்து, நான் ஆனந்தப் பிரவாகத்தில் மூழ்கினேன். மற்றவர்களும் அப்படியே சந்தோஷ சாகரத்தில் குளித்தார்கள் என்று நிச்சயிக் கின்றேன். இப்படி இருக்கையில் அவர் ஓரறைக்குள் சடுதியில் போய் மறைந்திருந்தார். அவர் திரும்பி வரும்படி சபையார் நெடுநேரம் ஓயாது கைகொட்டிச் சைகை செய்தார்கள். அவர்கள் இஷ்டப்படி அவர் திரும்பி வந்து வீணை வாசித்தார். ' அவ் வீணையின் சாரசத்திற்கு ஒவ்வாமையால்தானே சர்க்கரைப்பாகு இளகித் தோன்றுவது, பால் வெளுத்துக் காண்பது, கரும்பு கரணை யாகக் கண்டிக்கப்படுவது, கனி கிளிகளின் மூக்கினுல் கோதப் படுவது, வீணையில் வல்லவர்களாகிய கந்தருவர்கள் அந்தரத்தில் பறப்பது !' என்று நினைத்து மனம் உருகி நான் பரவசமாயினேன். அதைக் குறித்துச் சொல்வது என் தரமன்று. அம்மட்டில் முதற் பகுதி முடிந்தது.

பிறகு இரண்டாம் பகுதியின் ஆரம்பத்தில், இராணுவ வாத் தியக்காரர் முன் போலவே வாத்தியம் வாசித்தார்கள். பின்பு மிஸ்டர் ஜி. கரட்துரை ஆர்கன் என்னும் சுரமண்டலம் வாசித்தார். அவ்வாத்தியத்திலிருந்து தாளம், மிருதங்கம், வீணை, வேணு, தம்புரு, கின்னரி, சல்லரி, மல்லரி முதலாகிய பற்பல வாத்திய ஓசையும் அற்புதமாகத் தோன்றினமையால், அவ்வாத்தியத்தை, ' இது வாத்தியக்களஞ்சியமோ !' என்று நினைத்தேன். ஆயினும், நான் என்னவென்று சொல்லுகிறது! அந்த வாத்தியமோ, சாத்திய மானதன்று. அதுவே தேவதுந்துபி என்றும், தேவதுந்துபியை

நானறியாதிருந்தும் அஃது இப்படித்தான் இருக்கலாமென்றும் எனக்கு மனமுருகியது.

அதன் பின்பு கோல்துரை ஆனவர் வாழ்த்துதலாகிய மங்கலப் பாட்டுப் பாடினர். அந்தப் பாட்டோ, அதி உசிதமாயும் மிக நயமாயும், சிங்காரம் முதலிய நவரசாலங்காரமும் உடையதாயும் இருந்ததனால், அனவர்க்கும் கர்ணனந்தமாயிற்று. அதைக் குறித்துச் சொல்ல யாராலாகும்!

பிறகு மேயர் துரையும் சீமான் துரையும் குழல் வாசித்தார்கள். அவ்விருவரும் நேர் நேராக வாசித்த வளத்தைக் காணும் அளவில் பாவும் குழலும் இணங்கி நடப்பது போலவும், ஊசியும் சரடும் ஒருவழிச் செல்வது போலவும், ஒரே இனமாகிய மணிகளை வரிசையாகக் கோத்தது போலவும் ஒன்றுக்கொன்று பேதப்படாமல் ஒற்றுமைப்பட்டிருந்தது கண்டு, 'இப்படியும் இருக்கிறதல்லவா கல்வித் திறம்!' என்று நான் சிந்தித்து, அத்தருணத்தில் எனக் குண்டாகிய ஆச்சரியத்திற்கு என் உள்ளத்தையும் உணர்வையும் திறை கொடுத்துவிட்டேன்.

அப்பால் மிஸ்டர் லவீல் துரை ஆனவர் தனியே புல்லாங்குழல் எடுத்து நமது மகிமைப் பிரதாபமுள்ள காருணியபரையாகிய ராக்கினி அவர்களின் வாழ்த்துப் பாடலுக்கிசைய ஊதினர். அதற்கு நான் எங்கிருந்துதான் உபமானம் தேடிச் சொல்வேன்! ஒருவேளை கார்த்திகைப் பிறை காண்பது போலவும், அத்தி பூத்தாற் போலவும், அபூர்வமாகச் சில உவமைகளைப் பிரயாசப்பட்டுத் தேடி எடுத்தாலும் அவைகளை,

> "காணும லேபலவும் கத்தலாம் ; கற்றோர்முன்
> கோணுமல் வாய்திறக்கக் கூடாதே."

என்பதனால், கற்றுணர்ந்த பெரியோர் முன் எப்படி வாய் கூசாமல் சொல்லுகிறது? இந்தக் குழலோசைக்கு நாணித்தானே குயில் மாமரத்தில் ஒடி ஒளிப்பது, கிளி மழலைச் சொல்லாக வாய் வழுக்கிப் பேசுவது! இது நிற்க.

பின்பு நமது கவர்னரவர்களின் துணைவராகிய காப்டன் இராபர்ட் துரை அவர்கள் வந்து, சேதப்பட்ட கப்பலில் தப்பிய 'ராபின்சன் குரூசோ' என்பவனைப் பற்றிப் பண்டிதர் பாமரர் அனைவரும் நகைத்து மகிழத்தக்க ஒரு பாடலைப் பாடி அபிநயித்தார். அவர் பாடிய பாடலும், அதற்கிசைய அபிநயித்த அபிநயமும், அதி விற்பன உற்பன வினோத சாதுரியமாய் இருந்தன. அந்தச் சபையில், கண்டவர்கள், கேட்டவர்கள் எல்லாம் அப்பாடலுக்காகச் செவிப்புலனையும், அபிநயித்ததற்காக விழிப்புலனையும் ஒப்பு வித்தார்கள்.

அதன் பிறகு, மார்ட்டின் சீமன்சன் துரை அவர்கள் வந்து கரடி, புரவி, பறவை, விருஷபம் முதலியவைகளின் தொனிகளைக் காட்டி

வீணை வாத்தியம் செய்தார். செய்யுமளவில், பருந்து பறக்குங்கால் அதன் உடலும் அவ்வுடற் சாயையும் ஒன்றை ஒன்று தொடர்ந்து செல்வது போல, யாழிசை குரலிசை இரண்டும் தொடர்ந்து ஒன்று பட்டு நடக்கும் பெற்றிமை கண்டு, இசைநூல் முழுதும் சம்பிரதாயமாகத் தேர்ந்து கானரசமாகிய கடலில் சதாகாலமும் மூழ்கி விளையாடும் சாதுரியர்களும், வீணை நரம்போசை இதுவென்றும், அவர் குரலோசை இதுவென்றும் வேறுபாடு அறிதற்கு அரிதாய் இருந்தது.

நல்லது! 'இப்படிக்கு எல்லாம் மார்ட்டின் சீமன்சன் துரையைக் குறித்துச் சங்கீத சாகித்தியத்தில் சமான ரசிதராகச் சிலாகியப்படுத்திப் பேசுவது அவர் கையில் ஏந்திய வாத்திய வளத்தினுல் அல்லாமல், அவரது சுயசக்தியினுல் அல்ல என்று சிலர் நினைப்பார்கள். ஆனல், அதைப் பற்றி ஆரம்பத்திலேயே சொல்லப் பட்டிருக்கிறது. ஆயினும், சந்தேகமற இப்பொழுது வேண்டு மானலும் அதனை நிதரிசனமாய் ஆராய்ந்தறியலாம். திருவள்ளுவர்,

> "வாளோடென் வன்கண்ணர் அல்லார்க்கு ? நூலோடென்
> நுண்ணவை யஞ்சு பவர்க்கு ?"

என்கிறபடி ஓர் வீச்சில் அநேக யானைகள், குதிரைகள், வீரர்களை வெள்ளரிக்காய் போலக் கரணகரணியாகத் துணித்து எறிகின்ற கூரிய வாளானலும், நல்ல சுத்த வீரன் கையிலன்றிப் பேடி கையில் அகப்பட்டால் என்ன செய்யும் ? அதனேடு அவனுக்கென்ன சம்பந்தமுண்டு ? அது போல, அவ்வீணை முதலிய கருவிகள் பலவித உறுப்புகளாலும் மிகச் சிறந்தவையாயினும், இசை நூலின் விதிப்படி வாசிக்கத் தெரியாத பேதை கையில் அகப்பட்டால் எப்படிப் பயன்படும் ?

உள்ளபடியே மார்ட்டின் சீமன்சன் துரை அவர்கள் வித்தியா விஷயத்தில் அதிக சாமர்த்தியபரர் என்பதற்கு எள்ளளவாயினும் சந்தேகமேது ? அவருக்குச் சபா கம்பமோ சிறிதுமில்லை. உலகத்தில் சிலர் பூரண பண்டிதர்களாய் இருந்தும் நல்ல சமயத்தில் சபைக் கோழைகளாய்விடுகிறார்கள். அதனுல் அவர்கள் கற்ற கலை, பெண்டுகள் அரையில் சுற்றிய கலையே. அவர்கள் போடும் தாளம், ஏகத்தாளமே. அவர்கள் பாடும் ராகம், அராகமே. அவர்கள் கொள்ளும் மாத்திரை, நேர்வாள மாத்திரையே. அவர்கள் வாசிக்கும் குழல், அடுப்பூதும் குழலே. அவர்கள் ஊதும் காளம், ஒக்காளமே. அவர்கள் அடிக்கும் மத்தளம், தத்தளமே என்று சொல்லும்படி இருக்கின்றன. அது நிற்க,

இப்பொழுது நான் ஒன்றைச் சொல்ல நினைக்கிறேன். அது சிலர்க்குச் சம்மதியாயிராது. ஆயினும், எனக்குச் சந்தோஷம் மேலிட்டதனுல், நான் சொல்லாமல் விடேன். அது என்னவெனில்,

நமது கவர்னர் துரை அவர்களுடைய நந்தவனத்தைப் பார்த்த விடத்தில், அது எனது காட்சிக்கு ஆகமப் பிரமாணமாகச் சொல்லப் பட்ட இந்திரனுடைய சிங்காரவனமாகிய கற்பகச்சோலை போல இருந்தது. அவ்விடத்தில் உள்ள பசுக்கள், தெய்வப் பசுவாகிய காமதேனுக்கள் போல இருந்தன. அவரது வெள்ளைப் புரவிகள் உச்சைசிரவம் என்னும் தெய்வப் புரவி போல இருந்தன. அங்குள்ள தடாகமோ, இந்திர சரசு போலிருந்தது. கவர்னரவர்களுடைய அதியுன்னத அலங்கார சோபிதமான வீடோ, இந்திரனுடைய வசந்தம என்னும் மாளிகை போல இருந்தது. அச்சபா மண்டபமோ, இந்திரனுக்குரிய சுதர்மை என்னும் மண்டபம் போலிருந்தது. அன்று கூடிய சபையோ, இந்திரசபைபோல இருந்தது. நமது மகிமைப் பிரதாபராகிய கவர்னரவர்களோ, போக தேவேந்திரன் என்றே பாவிக்கும்படி இருந்தார். அந்தச் சபையில் இருந்த துரைசானி மார்களோ, கந்தர்வ ஸ்திரீகள் போல இருந்தார்கள். 'கந்தர்வ ஸ்திரீகளுக்குச் சிறகுண்டே! இவர்களுக்கு அது இல்லையே! ஆதலால் அவர்களுக்கு இவர்களை எப்படி ஒப்பிடுகிறது!' என்று சந்தேகப்பட வேண்டுவதில்லை. இந்தத் துரைசானிமார்கள் தங்கள் தங்கள் கையில் மெல்லிய இறகு விசிறி பிடித்துச் சொகுசாக அசைத்துக்கொண்டிருந்தார்கள். அவைகள் இவர்கள் சிறகசைப்பது போல இருந்தன.

மார்ட்டின் சீமன்ஸன் துரையானவர் வீணை வாசிப்பது கந்தர்வ ராஜனுகிய சதுதிரசேனன் இந்திர சந்நிதானத்தில் வந்து வீணை வாசிப்பது போல இருந்தது.

மேயர் துரையும், சீமான்துரையும் எதிர் எதிராக வாத்தியம் வாசிக்கும் பொழுது, 'சங்கீதப் புலவர்களாகிய ஆகா, ஊகூ என்னும் கந்தருவர்கள்தாம் வந்து வாசிக்கின்றார்களோ! அல்லது தும்புரு நாரதர்களே இப்படி உருவெடுத்து வந்தார்களோ!' என்று சந்தேகிக்கும்படி இருந்தது.

மேயர் துரைசானியோ வித்தியா சாமர்த்தியத்தினால் மாத்திர மன்றி, தவள நிறத்தினாலும் வெள்ளை வஸ்திரம் உடுத்திருந்த தனாலும் சாக்ஷாத்து சரஸ்வதிக்கொப்பாய் இருந்தாள். அந்தச் சபாமண்டபத்தின் வாசலிலிருந்து அதற்கு வெளிப் புறத்தைப் பார்த்த பொழுது கவர்னரவர்கள் தோட்டத்திற்கு உட்பட்ட பூமியோ, ஆகாசம் போலவும், பற்பல துரைகள் துரைசானி மார்கள் அங்கேறி வந்து விட்டிருந்த விதம் விதமாகிய வண்டிக ளெல்லாம் ஆகாசத்தில் தோன்றும் தெய்வ விமானங்கள் போலவும், அவ்வண்டிகளில் ஏற்றிய பல நிறமாகிய விளக்குகள் எல்லாம் சூரிய சந்திராதி நவக்கிரகங்கள் போலவும், அச்சுவினியாதி நக்ஷத் திரங்கள் போலவும் விளங்கின. நமது கவர்னர் முதலாக அந்தச் சபையில் வந்திருந்தவர்களெல்லாம் மார்ட்டின் சீமன்சன் துரை யானவர் வாசித்த சங்கீதசாரத்தைக் கேட்டறிதற்கு முன்னமே

அவர் இசைநூலில் பெரும்பாலும் பயின்றவர் என்று கேள்வியுற்று அபிமானித்து, அவருக்குப் போதுமான பரிசு தந்தார்கள்.


ஒரு நாள், ஒரு பிரபுவிடத்தில் இசைப்புலவர்கள் வந்து இசை பாடினர்கள். அவர்கள் முதல் ஒரு பதம் பாடின மாத்திரத்தில் அப்பிரபு, 'சபாஷ்!' என்று மெச்சி, அருகிலிருந்த காரியஸ்தர்களை நோக்கி, 'இந்த வித்துவான்களுக்குச் சோடு சால்வை வெகுமதி கொடுங்கள்,' என்றான். அது கேட்டு இசை பாடுவோர் சால்வை கிடைத்தது என்ற சந்தோஷத்தினால் பின்பு உசிதமான ஒரு சிந்து பாடினர்கள், அப்பொழுது பிரபு சிரக்கம்பம் செய்து, 'இந்தச் சங்கீதப் புலிகள் கைக்குப் பொற்காப்பும், கொலுசும் கொண்டு வந்து போடுங்கள்!' என்றான். மறுபடியும் அவர்கள் அதிக மகிழ்ச்சியாய் ஒரு விசித்திரமான வண்ணம் பாடினர்கள். அத்தருணத்தில் பிரபு, 'பளா பளா' என்று கொண்டாடி, 'இந்தப் புலவர் சிரோமணிகளுக்குக் கனகாபிஷேகம் பண்ணி விலையுயர்ந்த ரத்தினகண்டி வெகுமானம் செய்யுங்கள்!' என்றான். அவர்கள் ஆனந்தப் பிரவாகத்தில் அமிழ்ந்தவர்களாய் நயமான ஒரு கீர்த்தனை பாடினர்கள். பிரபு, தங்கச்சிவிகை பரிசு கொடுக்கச் சொன்னான். இந்தப்படி அவன் அடிக்கடி, யானை, குதிரை, சீமை, பூமி முதலாகிய பல வெகுமதிகளும் ஓயாமல் கர்ணமிசமாய்க் 'கொடுங்கள்! கொடுங்கள்!' என்று சொல்லச் சொல்ல, இவர்களுக்கு அளவில்லாத பிரமானந்தம் மேலிட்டு, ஒப்பனையும் கற்பனையுமாகச் சலிப்பில்லாமல் நெடுநேரம் பாடிப் பாடிக் குரலும் கம்மி, வாய் திறந்து வசனிக்கவும் கூடாமல், இனியில்லாத இளைப்பும் களைப்பும் உண்டான பின்பு பாடுவதை நிறுத்தி, 'கொடுக்கச் சொன்ன வெகுமதிகள் எல்லாம் நம்முடைய தரித்திரம் அதமாம்படி வரும் வரும்,' என்று காத்திருந்தார்கள். சும்மா வாயினால் சொன்னதே ஒழியக் கையினால் ஒன்றும் கொடுக்கவில்லை. பின்பு பிரபு அவர்களை நோக்கி, 'ஏன் வீணுக்குக் காத்துக்கொண்டிருக்கிறீர்கள்? செலவு வாங்கிக்கொள்கிறதுதானே?' என்றான். வித்துவான்கள், 'தாங்கள் அமிதமாகத் தயை செய்த பரிசு ஒன்றும் எங்களுக்குச் சேரவில்லையே!' என்றார்கள். அந்தப் பரமலோபி, 'ஏதுக்குக் காணும் உங்களுக்குப் பரிசு கொடுப்பது?' என்றான். அவர்கள், 'நாங்கள் பாடினதற்காக!' என்றார்கள். அந்தக் கொடாக்கண்டன், 'நீங்கள் எனக்குச் சந்தோஷம் உண்டாகப் பாடினதற்கு நான் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகச் சொன்னதே ஒழிய மற்றப்படியன்று. நீங்கள் கொடுத்ததும், நான் கொடுத்ததும் ஓசை மாத்திரத்தால் ஒக்குமாகையால், போய் வாருங்கள்,' என்று கையை விரித்தான்.

அவன் தான் கொடாவிட்டாலும் கொடுக்கத் தக்கவர்களாகிய தன்னைச் சார்ந்தவர்களைக் கொண்டாவது அவர்களால் இயன்ற மாத்திரம் சிறிது சிறிது உதவும்படியாயினும் செய்யலாகாதா? அப்படிச் செய்தால் அதில் எவ்வளவு பிரயோசனமாம்

என்று எளிதாக நினைக்க வேண்டுவதில்லை. 'குளத்திற்கு மழை குந்தாணி குந்தாணியாகப் பெய்கிறதா?' பலதுளி கூடித்தானே ஓராருப்ப் பெருகுகின்றது? பல திரணங்கள் கூடியல்லவோ பெரிய பழுதை ஆகின்றன. அப்படியில்லாவிட்டாலும், திரித்த மட்டும் பழுதை என்பதாகத் தன்னுல் கிடைத்த மட்டுமாவது வஞ்சனை யில்லாமல் செய்யலாமே! அந்த எண்ணமும் அவனிடத்தில் இல்லை. 'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்' என்பதையும் அவன் தெளியவில்லை. அப்படிப்பட்ட உலுத்த சிரோமணிகளெல் லாம் நாணித் தலை சாய்க்கும்படி இந்தச் சபையில் வந்திருந்த செல்வர்கள் யாவரும் அபிமானத்துடன் வெகுமானம் சம்மானம் செய்தமையாலும், நமது கவர்னரவர்களுடைய தயையினுலும், மேற்படி மார்ட்டின் சீமன்சன் துரைக்கும அவரைச் சார்ந்தவர் களுக்கும் உற்சாகமும் தைரியமும் அதிகரிக்கத் தமது வித்தியா சாமர்த்தியத்தைக் குறைவறப் பூரணமாக விளக்கிக் காட்டும்படி இருந்தது.

அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சாமல்லவோ? அப்படி இது வெறுப்பாய்க் காணவில்லை. 'இன்னும் இவர்கள் வாத்தியம் வாசியார்களா! பாடார்களா! அபிநயிக்கார்களா!' என்று அபே க்ஷித்து அவர்கள் ஆடல் பாடல்களை நிறுத்திய பின்னும் பிரஜை களுக்கு அவ்விடத்தை விட்டுப் போகக் காலெழாமையால், வெகு நேரம் தியங்கியிருந்து, பிறகு சென்றனர். அப்பொழுது நமது கவர்னரவர்களும் அந்த ஸ்தானத்திலிருந்து புறம் பெயரக் கூடாமல், அச்சபா மண்டபத்தில் ஜன நெருக்கத்தில் மெல்லென ஒதுங்கி நடந்தார். நான் அந்தச் சமயத்தில் அவரைத் தரிசித்து அவரது மிருது நடையைக் குறித்தும் சாந்த குணத்தைப் பூஷண மாகக் கொண்ட அவரது அடக்கத்தைக் குறித்தும் மிகவும் அதிசயித்து, மன மகிழ்ச்சி கூர்ந்து, 'எளியவனுகிய எனக்கு இனி என்றைக்கும் ஜகதீஸ்வரராகிய இவர் தரிசனம் கிடைக்குமோ!' என்றும், 'இந்தக் கீதவாத்திய விநோதம் மறுபடி எப்பொழுது கேட்க வாய்க்குமோ!' என்றும், எண்ணி எண்ணிக் கடவுளை மனத்தில் தியானம் பண்ணிக்கொண்டே அங்கிருந்து என்னுடன் கூட வந்த தோழர்களாகிய கனவான்களுடனே மீள்வதற்கு அரிதாக மீண்டு போய் என்னிருப்பிடம் சேர்ந்தேன்.





[விபட்சன் பழமை பாராட்டுபவன். சுபட்சன் புதுமையிலும் நன்மை காண்பவன். இருவருக்கும் அமைந்துள்ள இவ்வுரையாடலில் கல்வி, கைத்தொழில், பயிர் செய்கை, வர்த்தகம், மொழி, உணவு, உடை, ஆபரணம், ஊர்திகள், செல்வம், தானதருமம், வேலைக்காரரும் எஜமானரும், அரசியல் போன்ற பல துறைகளின் முற்கால இக்கால நிலைகள் தடை விடைகளால் பேசப்படுகின்றன. ஆங்கில அரசியலாரால் நமக்கு உண்டான நன்மைகளை ஆசிரியர் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

— பதிப்பாசிரியர்]

20

காலபேதவியல்பு

[இது, 'சுபட்சன் விபட்சன்' சம்வாதமாகச் செய்யப்பட்டது]

சுபட்சன் : ஓய் விபட்சரே, வாரும் ; உம்மைக் கண்டு வெகு நாளாயிற்று; சுகமாயிருக்கிறீரா ?

விபட்சன் : சுபட்சரே, இந்தப் பொல்லாத படுபாவி மகன் காலத்தில் சுகம் எப்படி உண்டாகும் ?

சுபட்சன் : ஓ, ஓ ! 'பிள்ளையாரைப் பிடித்த சனி அரச மரத்தையும் கூடப் பிடித்தது,' என்பது போல, உமது முயற்சியின்மையைக் காலத்தின்மேல் ஏற்றி, அதற்கும் தோஷம் கற்பிக்கின்றீரோ ? இது, 'கணக்கன் கணக்கறிவான் ; தன் கணக்கைத் தானறியான்,' என்பதாய் இருக்கின்றதே! காலம் என்ன செய்யும் ?

விபட்சன் : கல்லும் தேங்காயும் சந்தித்தது போலப் பேசுகிறீரோ ? சகலத்திற்கும் காலமே மூலம். அது முன் போல இல்லை. வரவரப் பேதிக்கின்றது. இதை நீர், 'கத்தரிக்காய் சொத்தை என்றால் அரிவாள்மணைக் குற்றம்,' என்பார் போல, முயற்சியின்மை என்கிறீர்.

சுபட்சன் : புத்திமானுயிருந்தும், யோசியாமல், காலமானது பேதிக்கிறது என்கிறீரே ; இது, 'மலடி மகப்பெற்றாள்,' என்பது

போலவும், எக்காலத்திலும் அசையாது இருக்கின்ற காரணத்தால் அசலம் என்று பெயர்பெற்ற மலை அசைகின்றதென்பது போலவும் இருக்கின்றதே ! என்ன நியாயத்தைக்கொண்டு அப்படிச் சொல்லுகிறது ?

விபட்சன் : 'கைப்புண்ணுக்குக் கண்ணுடி வேண்டுமா ?' அது கணம், விநாடி, நாழிகை, முகூர்த்தம், ஜாமம், பகல், இரவு, நாள், வாரம், பட்சம், மாதம், இருது, அயனம், வருஷம், வியாழ வட்டம், யுகம், கற்பம் முதலானவைகளாய்ப் பேதித்து நிகழ்வதைப் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கின்றது.

சுபட்சன் : கணம் முதலாகிய பகுப்பாய் நிகழ்வது சகஜமே ; அப்பகுப்பும் தொன்றுதொட்டு அவ்வாறு ஒரு தன்மையாய் நிகழ்வதன்றிச் சில முறை குறைந்தும், சில முறை அதிகரித்தும், ஒன்று மற்றொன்றுக மாறியும் நிகழ்வதன்றே ? அங்ஙனமாக, அது பேதிக்கிறதென்பது, 'மூக்கு மயிர் பிடுங்கி ஆள்பாரம் குறைந்தது,' என்பது போலிருக்கின்றதே !

விபடசன் : ஒரு வித்து முளைத்துக் கிளைத்துத் தழைத்துப் பூத்துக் காய்த்து நசிப்பது ஏககாலத்திலேயா ? அதற்குரிய பருவம் வாய்த்தால் அல்லது அப்படியாகாதே ! மேலும் அரும்பு, பூ, பிஞ்சு, காய், பழம் முதலானவைகளில் ஒன்றின் குணம் மற்றொன்றுக்கு இல்லையே ! இவ்விகற்பம் எல்லாம் காலத்தினுலேதானே அவைகளுக்கு உண்டாகின்றன ? இவ்வாறு சகலமும், 'சர்வசிய காரணங்கால,' என்கிற காலப் பிரம வாதப்படி, வெவ்வேறுகிய காலமே காரணமாகப் படிப்படியாய் உற்பத்தி விர்த்தி நிவர்த்தியாகின்றதனுல், காலம் பேதிக்கின்றதென்பதற்கு ஆடங்கம் என்ன ?

சுபட்சன் : 'பல உமி தின்றுல் ஓரவிழ் தட்டாதா ?' என்று நினைத்துக்கொண்டு இவ்விதத்தால் காலம் பேதிக்கிறதென்பது, 'ஆகாயம் விழுந்துவிட்டது,' என்றது போலிருக்கிறது. பொதுவாய் ஆராயுமிடத்தில் சகலபுவன சராசரங்களும் தோன்றி வளர்ந்து அழிவது, அவற்றின் சுபாவ தர்மமே அன்றி வேறல்ல என்றுலும், பனம்பழம் முதிர்ந்து தன்னியல்பாய் உதிர்ந்து விழும் சமயத்தில் காக்கை தன் சுபாவப்படி அதன்மேலேற, உடனே அப்பழம் விழுந்தது கண்டோர், காக்கைதான் அதனைத் தள்ளியதென்று சொல்கின்ற 'காகதாலிய' நியாயமாக, அவையெல்லாம் காலத்தோடு ஒத்து நிகழ்வதனுல் காலக்கிரமத்தினுலேயே அப்படியாகின்றன என்று உலகத்தாரால் விவரிக்கப்படுகின்றன.

விபட்சன் : நீர் காகதாலிய நியாயம் என்றல்லவோ சொல்லுகிறீர் ? வையாகரணிகள் பெரும்பாலும் காலப் பெயர் அதனேடு சம்பந்தப்பட்டு நிகழும் பொருள் முதலியவற்றிற்கு ஆகு பெயராகி வழங்குகின்றது என்பதனுல், அவ்வாறே அப்பொருள் முதலிய பேதிப்பதைக் காலம் பேதிக்கின்றதென்றுல், விரோதமென்ன ?

சுபட்சன் : ‘சங்கிலே வார்த்தால் தீர்த்தமும், செம்பிலே வார்த்தால் தண்ணீருமா?’ ஒருவிதத்தில் இரண்டும் ஒன்றுதானே? இது, ‘நரகடு காசிகி போயி நீள்ளு நாலுகு பாலு சேசிநாடு கதா?’ என்பதாயிருக்கின்றது. இருந்தாலும் இருக்கட்டும் பொருள் முதலிய பேதிப்பது உண்மையே. அவற்றைக் காலத்தின்மேலேற்றி அது பேதிக்கின்றதென்று சொல்வதிலும், காலத்திற்குக் காலம் அப்பொருள் முதலியவை பேதிக்கின்றன என்பதற்கு விரோத மொன்றும் இல்லை. அதை வேண்டுமானால் ஊரெங்கும் அறியப் பறையறைந்துகொண்டு பேசும். அப்பொழுதும், ‘உற்றது சொன்னால்தான் அற்றது பொருந்தும்.’

விபட்சன் : இது சரிதான். இப்படியே செய்வோம். முற் காலத்தில் வற்றுச் சமுத்திரம் போலக் குறைவற்றிருந்த கல்வி, செல்வம், கைத்தொழில் முதலானவைகள் கிருஷ்ண பக்ஷத்துச் சந்திரன் போல வரவரக் குறைந்து வருவதனால், அவை இன்னும் கொஞ்ச காலத்திற்குள்ளே தேரைவால் போலச் சுத்த சூனியமாய் விடும் என்றல்லவோ நினைக்க வேண்டி இருக்கின்றது ?

சுபட்சன் : என்ன சொன்னீர்! முற்காலத்தில் குறைவற் றிருந்த கல்வி, செல்வம் முதலானவைகள் வரவரக் குறைகின்றன என்றல்லவா? இது, ‘ஓடிப் போன முயல் பெரிய முயல்,’ என்பதாய் இருக்கின்றதே! இப்படிக் கலவைக் கீரை பறிப்பது போலக் கல்வி, செல்வம் முதலிய எல்லாவற்றையும் கலந்தெடுத்துப் பேசுவது கழற்சிக்காய் மயக்கத்திற்கு இடமாகும். பட்டுக் கத்தரித்தது போல ஒழுங்குபட ஒவ்வொன்றுக வகுத்து, தூல நிறை போல நிதானமாகச் சீர்தூக்கி, ‘பேசப் போகிறையோ, சாகப் போகிறையோ,’ என்பதையும் யோசித்து, மிகப் பயன்படும்படி பேச வேண்டாவா ?

விபட்சன் : வெண்காயத்தை உரிக்க உரிக்க, ‘ஈரவெண் காயத்திற்கு இருபத்தெட்டுப்புரை,’ என்றபடியே, அது புரை புரை யாய் உரிவதேயல்லாமல் உள்ளே ஒன்றுமில்லாதது போல, சிலர் சொல்வதைப் பகுக்கப் பகுக்க ஒரு பயனுமில்லாததாய் முடியும். அது தெரிந்தும் அப்படிப் பேசப் பைத்தியமா ? நாமென்ன வேலை யற்ற வீணர்களா ? களங்கமற்ற கண்ணுடி போலத் தெளிவுடைய தாகவும், மணல் ஊற்றுப் போலப் பயன் விளைவதாகவும் முதல் முதல் கல்வியைக் குறித்து நான் பேசுகிறேன், பாரும் :

கல்வி

வேதாகம புராணங்களும், தர்க்க வியாகரணுதி சாஸ்திரங் களுமாகிய இலக்கிய இலக்கணக் கல்வி ‘குன்றின்மேலிட்ட விளக்குப்போல’ப் பிரகாசமாக முற்காலத்தில் எங்கும் பிரதிபலித் திருந்ததே ; அது இக்காலத்தில் குடத்திலேற்றிய விளக்கைப்போல அல்லவோ இருக்கின்றது ?

சுபட்சன் : நீர், 'அதிக்கிரமமான ஊரிலே கொதிக்கிற மீன் சிரிக்கிறது!' என்பதாகப் பேசுகிறீர். கல்வி முற்காலத்தில் பெரும்பாலும் சம்ஸ்கிருத பாஷையிலும், அதற்கு ஒருவாறு ஒப்பாகத் தமிழிலும், தெலுங்கிலும், சிறுபான்மை இதரபாஷைகள் சிலவற்றிலும் தேனூறு பாய்ச்சலாய் இருந்ததே அல்லாமல், இக்காலத்தில் கங்கை பிரவகித்தாற்போலவும், கடல் மடை திறந்தாற்போலவும் அனேக பாஷைகளில் சாதாரணமாய்ப் பெருகியிருக்கின்றதே! முன் இப்படி இருந்ததா?

விபட்சன் : அது மெய்யானால், 'அகத்திலழகு முகத்தில் தெரியும்,' என்பதாக, அதைக் கற்றுக் கேட்டுணர்ந்த வித்துவ ஜனர்கள் அக்காலத்தில் இருந்தது போல இக்காலத்திலும் அதிகரித்திருக்க வேண்டும்.

சுபட்சன் : ஏனில்லை என்கிறீர்? 'உலக்கை தேய்ந்து உளிப்பிடியாய்விட்டதோ?' அக்காலத்தில் வித்துவஜனர்கள் சம்ஸ்கிருத பாஷையில் பாணினி, வரருசி, பதஞ்சலி, காளிதாசன், தண்டி, பவபூதி முதலானவர்களும்; தமிழில் அகத்தியர், தொல்காப்பியர், மதுரைச்சங்கத்தார், வேம்பத்தூர்ச் சங்கத்தார், ஔவை, திருவள்ளுவர், கம்பர், காளமேகம், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் முதலானவர்களும்; ஆந்திரபாஷையில் பீமகவி, பொம்மன், போத்து ராஜு, நன்னயபட்டு, திக்கன்ன சோமயாஜி, ஸ்ரீநாதன் முதலானவர்களும்; இதர பாஷைகளில் சிற்சிலருமே இருந்தார்கள். இக்காலத்தில் வைதிகக் கல்வியில் அவ்வளவு பூரண பாண்டித்திய முடையவர்கள் இல்லை. ஒருவாறுனவர்கள் சிலரிருக்கிறார்கள். லௌகிகக் கல்விப் பயிற்சியுள்ளவர்களோ, வெகு பெயர் இருக்கிறார்கள். இவர்களைக் குறித்து நீர் அறியாதது போல வினவுதல், 'நிஜாமலி தண்டில் நிஜாருகாரனைக் கண்டாயா?' என்பதுபோல இருக்கிறதே! தற்காலத்தில் பல ஜாதிப் பெண்களும் கல்வி கற்கின்றார்கள். பூர்வம் அத்தி பூத்தது போலச் சில ராஜஸ்திரீகள் மாத்திரம் கல்வி பயின்றார்கள். அதுவும், 'நிர்வாண பட்டணத்தில் நீர்ச்சீலை கட்டினவன் பைத்தியக்காரன்,' என்னப்படுவது போல, அவர்களுக்குக் கௌரவத் தாழ்வாய் இருந்தது.

விபட்சன் : அந்நாளில் எத்தனையோ புஸ்தகங்கள் எழுதப்பட்டிருந்தன; இந்நாளில், 'உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன்,' என்பதாக, அவைகளை எவர்களும் எடுத்துப் படியாது கைவிட்டதனால் எல்லாம் இறந்து போயின.

சுபட்சன் : முன்னளில் ஒரு புத்தகமாவது அச்சிடப்படாமல் அருமருந்து போலச் சிலமாத்திரம் பனையேடு முதலானவைகளில் எழுதப்பட்டிருந்தன. தற்காலத்தில் எழுதப்பட்டவைகளே அன்றி அச்சிடப்பட்டவைகளும், 'கனமழை பெய்து காடு தளிர்த்தது,' போல, நாளுக்குநாள் அதிகரித்து உலகமெல்லாம் புத்தகமயமாய் நிறைந்திருக்கின்றன.

விபட்சன் : முற்காலத்தைப் போல இக்காலத்தில் புஸ்தகங்களைப் படித்துக் கொடுக்கக் கேட்டால், 'அருக்காணி முருக்கம் பூப்போலச் சரக்குப் பிரியம்,' பண்ணுகிறதேயொழியச் சுலபத்தில் கொடுக்கிறதில்லை. ஒருவருக்குக் கற்பிக்கிறதும் அதிகப் பிரயாசத்திலிருக்கிறது.

சுபட்சன் : 'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சருக்கரை,' என்பது போல, அக்காலத்திலேதான் புத்தகங்களை எளிதாய்க் காட்டுகிறதும் கற்பிக்கிறதும் இல்லை. கற்பிக்கத் தொடங்கினாலோ, கோப்பியமாயிருக்கிற வேதாகமங்களையன்றிச் சாமானிய இலக்கணங்களையும், 'காணது கண்ட கம்பங் கூழைச் சிந்தாது குடியடி சில்லி மூக்கி,' என்பதாக அபூர்வமாயும், வீட்டுக் கதவைச் சார்த்தி உள்ளே இருந்து தீக்ஷை கொடுப்பது போல அதிரகசியமாயும், ஆராவது இரண்டொருத்தருக்கு மாத்திரமே கற்பிக்கிறது. இக்காலத்திலோ, தாய் தன் சிசுவைத் தேடிப் பாலூட்டுவது போல இன்னுர் இனியாரென்னும் பேதமில்லாமல் அனைவருக்கும் நிராடங்கமாகச் சகல புத்தகங்களும் கொடுக்கப்படுவதன்றிப் பகிரங்கமாகக் கற்பிக்கவும்படுகின்றன.

விபட்சன் : பூர்வத்தில் வித்துவான்களுக்கிருந்த மிக்க செல்வமும், சிறப்பும், பிரபுக்களுடைய அபிமானம் முதலியவைகளும் இப்பொழுதில்லையே !

சுபட்சன் : அந்த வெட்கக்கேட்டை வெளியிலே சொல்ல வேண்டுமோ ! அக்காலத்தில் சில வித்துவான்கள் மாத்திரம் செல்வம் முதலானவைகளைப் பெற்றுச் சுகித்திருந்தார்கள். சில வித்துவான்கள், 'எட்டாத பழத்தைப் பார்த்துக் கொட்டாவி கொள்வது' போல, பெருஞ்செல்வமுடையவர்களைப் பார்த்துப் பெருமூச்செறிந்து, 'குழிப் பிள்ளை நரி சுற்றுவது போல' அவர்களை விடாது அடுத்திருந்தும், அவர்கள் கொடாத லோபிகளாகையால், 'கண்ணுடி நிழலில் கண்ட பணம் கடனுக்கு உதவாதது' போல, அவர்கள் பொருள் இவர்கள் ஆபத்துக்கு உதவாமல் வருந்தினர்கள். பின்னும் சிலர் மெத்தப் படித்தவர்களுக்கு, 'உண்கிற சோறு வெல்லம்,' என்பதற்குச் சரியாய், ஊணுக்கும் உடைக்குமே மிகவும் தரித்திரப்பட்டார்கள். இவைகளுக்கு,

" நாராய் ! நாராய் ! செங்கால் நாராய் !
பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய் !
நீயும்நின் பெடையும்
தென்றிசைக் குமரி யாடி
வடதிசைக் கேகுவி ராயின்
எம்மூர்ச் சத்திமுற்ற வாவியுட் டங்கி

எம்மில்லம்,
நீனசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லிப்
பாடுபார்த் திருக்குமெம் மனை யியைச் கண்டே
‘ ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலே தழீஇப்
பேழையு ள ங்கும் பாம்பென வுயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம்,’ எனுமே.”

என்பதனுள், சத்திமுற்றப்புலவர் வறுமையினால், இருக்க நல்லிடமும் உடுக்க ஆடையும் இன்றி அலைந்தார் என்பதும்,

“ ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பில்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றமூஉந்தன் மகத்துமுக நோக்கி,
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கணெல்
மனையோள் எவ்வம் நோக்கி நினை
நிற்படர்த் திசினே நற் போர்க் குமண !”

என்பதனுள், ஒரு வித்துவானுனவர், ‘ என் வீட்டில் அடுப்பு மூட்டவில்லை : என் வயிற்றில் பசி துடிக்கிறது ; பிரசவித்த என் மனைவிக்குத் தாரகம் பண்ண வழியில்லை ; பிறந்த குழந்தைக்குப் பாலும் இல்லை,’ என்று குமணராஜனிடத்தில் விசனப்பட்டார் என்பதும்,

“ வணக்கம்வரும் சிலநேரம் ; குமர கண்ட
வலிப்புவரும் சிலநேரம் ; வலியச் செய்யக்
கணக்குவரும் சிலநேரம் ; வேட்டை நாய்போல்
கடிக்கவரும் சிலநேரம் ; கயவர்க் கெல்லாம்
இணக்கம்வரும் படிதமிழைப் பாடிப் பாடி
எத்தனைநாள் திரிந்துதிரிந் தலைவேன் ஐயா !
குணக்கடலே ! அருட்கடலே ! அசுரரான
குரைகடலை வென்றபரங் குன்று ளானே !”

என்பதனுள், பொருளுடைய பிரபுக்களும் கல்வியை விரும்ப வில்லை ; வித்துவானைச் சன்மானிக்கவும் ஆதரிக்கவும் இல்லை என்பதும், திருஷ்டாந்தமாகத் தோன்றுகின்றன. இந்நாளில் கற்றவர்களில் அனந்தம் பெயர் புஷ்களமான செல்வமும் சிறப்பும் பெற்றுப் பிரபுக்கள் முதலியோரால் அபிமானித்து ஆதரிக்கவும்பட்டு வருகிறது பிரத்தியக்ஷத்திலேயே தெரிய வருகிறதே !

விபட்சன் : அப்படியா ? ‘ வீட்டிளக்காரம் வண்ணுன் அறிவான்,’ என்பதாகச் சத்திமுற்றப் புலவர் வறுமைப்பட்டதை

அறிந்த நீர், பின்பு அவர் பாண்டியனால் சன்மானிக்கப்பட்டு அதிக சம்பத்தைப் பெற்று வாழ்ந்திருக்கும் நாளில், ஒரு நாள் அவன் அவரைத் தன் சமூகத்தில் வரவழைத்துக் குசலம் விசாரிக்கு மளவில், அப்புலவர்,

> "வெறும்புற் கையுமரி தற்கிள்ளை சோரும் ; என் வீட்டில்வரும்
> எறும்பிற்கு மார்பத மில்லை; முன் னுளென் னிருங்கலியாம்
> குறும்பைத் தவிர்த்தெம் குடிதாங்கி யைச்சென்று கூடியதால்,
> தெறும்புல்கொல் யானை கவளம்கொள் ளாமல் தெவிட்டியதே !"

என்று பாடித் தமது க்ஷேமத்தை அறிவித்த செய்தி அறியாமல் போனதென்ன ?

சுபட்சன் : ஆயினும், அஃதென்னை ? ஏகதேசந்தானே ? 'ஏகசாக்ஷியம் நகர்த்தவியம்,' அல்லவோ ?

விபட்சன் : 'நல்ல கதை ! நீளமில்லை,' என்பதாக, நீர் ஏகதேசம் என்பது அதிசயமாயிருக்கிறது ! அஃது, 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்க்கிறது,' என்னும் ஸ்தாலிபுலாக நியாயமாகக் கொள்ளப்படாதோ ? அன்றியும், குமணனைப் பாடிய புலவனும், அவனுல் கோடி பொன் பெற்று வாழ்ந்ததும் உமக்குக் கேள்வியில்லையோ ?

சுபட்சன் : முற்காலத்தில் படிக்காசன் என்னும் வித்துவானை மதுரைத் திருமலைநாயகர் கிளிக்கூட்டில் அடைத்த செய்தி உமக்குத் தெரியாதோ ?

விபட்சன் : அப்பிரபு சமூகத்தில் அந்த வித்துவான் சமயமறி யாமல் போய்க் குசோத்தியமாய் வசனித்ததைப் பற்றி அவருக்குக் கோபமூண்டதனுல் கிளிக்கூட்டில் பிடித்தடைத்தார். இது, 'வாய்க்கொழுப்புச் சீலையால் வடிந்தது' அல்லவா ? பிறகு மூன்றும் நாள் பிரபு வித்துவானைப் பார்ப்போம் என்று எதிரேவர, அவரைக் கண்டு புலவன் உபாயமாய்த் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று கூட்டிலிருந்தபடியே,

> "நாட்டிற் சிறந்த திருமலை நாதுங்க நாகரிகா !
> காட்டில் வனத்திற் றிரிந்துழ லாமல் கலைத்தமிழ்தேர்
> பாட்டிற் சிறந்த படிக்காசன் என்னுமோர் பைங்கிளியைக்
> கூட்டி லடைத்துவைத் தாய்;இரை தாவென்று கூப்பிடுதே !"

என்பதாக, அவரைப் பாடி ஸ்துதி செய்தவளவில் பிரபுவுக்குத் தயை உண்டாகி, கூட்டைவிட்டு நீக்கிப் பரிசு கொடுத்து உபசரித் தனுப்பினர். இதிலே தாழ்ச்சி என்ன ? இது நிற்க. முற்காலத்தில் கல்வி பயிலிடம் அனேகமிருந்தன ; அவைகளில் எத்தனையோ பெயர் வித்தியாப்பியாசம் செய்து வந்தார்கள். இக்காலத்தில் அப்படி இல்லையே !

சுபட்சன் : 'பொரிமாவை மெச்சினுளாம் பொக்கை வாய்ச்சி,' என்பதாக, அதை நீர்தாம் மெச்ச வேண்டும்! முன்னுளில் வடக்கே சரசுவதி பீடமும், தெற்கே தமிழ்ச் சங்கமும், மற்றவிடங்களில் இரண்டொரு பாஷை வழங்கும் சில பள்ளிக் கூடங்களுமே இருந்தன. சங்கப்புலவர் முதலிய சிலர் தவிர, அப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்களெல்லாம், 'சப்பாணிக்கு நொண்டி சடுகுடுப்பை,' என்பதாக, மற்றவர்களோ நோக்குமிடத்தில் இவர்களும் வாசித்தவர்கள்தாம் என்னும்படி கல்வியில் உபாய மானவர்களாய் இருந்தார்களே அல்லாமல் நல்ல நிர்வாகிகளல்லர். இந்நாளில் ஒரு கண்டத்திலேயா? ஒரு ராச்சியத்திலேயா? எங்கே பார்த்தாலும் இங்கிலீஷ் இலத்தீன், கிரீக்கு, பாரிஷ், இந்துஸ்தானி முதலிய எத்தனையோ பாஷைகளில் எத்தனையோ பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. விசேஷமாக இந்தியாவில் எங்கும் ஜில்லாப் பாடசாலை, தாலுக்காப் பாடசாலை, கிராமப் பாடசாலைகள் ஏற்படுத்தி, சம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துரைத்தன பாஷை முதலாகப் பற்பல பாஷைகளும் கற்பிக்கப்படுகின்றன. ஆங்காங்குள்ள உபாத்தியாயர்களும் கணிதம், பூகோளம், கோளம், இரசாயன சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், நியாய சாஸ்திரம், நீதி சாஸ்திரம், இலக்கண சாஸ்திரம், பல தேச சரித்திரம் முதலானவைகளிலும், பாரத இராமாயணுதி காவியங்களிலும் சாரதாமிசம் என்னும்படி அதிக நிபுணர்களாய் இருக்கிறார்களே! சர்க்கரையும் மாவும் சரியாமா? முன்னுளில் யாரையாவது பூகோளத்தில் ஒரு தேசத்தை, அல்லது ஜலசந்தி பூசந்திகளை, நதி சங்கமம் முதலானவைகளைக் குறித்து எங்கிருக்கின்றன என்றால், பசபசவென்று விழிப்பாரே அல்லாமல் வேறென்ன செய்வார்? பிறவிக் குருடனுக்குப் பண நோட்டம் தெரியுமா? இக்காலத்தில் 'இன்ன கண்டத்தில் இன்ன திசையில் இன்ன தேசத்திற்குச் சமீபத்தில் இத்தனை காதத்தில் இன்ன ருடைய ஆளுகையில் அந்தத் தேசமிருக்கிறது. அதில் வசிப்பவர் களுடைய வருணம், மதம், பாஷை. கைத்தொழில், வர்த்தகம் முதலானவைகள் இவையிவை' என்றும், 'குறித்த ஜலசந்தி, பூசந்தி, நதிசங்கமம் முதலியன இன்னவின்ன இடங்களில் இருக்கின்றன' என்றும், 'அத்தேசம் முதலானவைகளுக்குக் கரை வழியாய்ப் போனால் இத்தனை மாதத்தில், கப்பல்மேல் போனால் இத்தனை நாளில் போய்ச் சேரலாம்' என்றும், கண்ணிலே கண்டது போல எந்தச் சிறு பிள்ளையும் சொல்லுவான்; அவைகளைப் பூமிப் படத்திலும் பரிஷ்காரமாய்த் தெரியக் காட்டுவான்.

ஜில்லாப் பாடசாலை, தாலுக்காப் பாடசாலை, கிராமப் பாட சாலைகளில் வாசிக்கின்ற மாணுக்கர்களில் எவர்களையாகிலும் இலக்கண விஷயத்தைக் குறித்து வினவினுலோ, அவர்கள் இங்கிலீஷ் முதலிய பாஷாந்தரங்களில் மாத்திரமன்றி, தமிழிலும் அது எழுத் திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்

கணம், அணியிலக்கணம் என ஐந்து வகைப்படும் என்றும், அவை களில் பொது விதி, சிறப்பு விதி, வழாநிலை, வழு, வழுவமைதிகள் இவையிவை என்றும் அதிநுட்பமாக ஐயந்திரிபற உய்த்துணர்ந்து, பாலையும் நீரையும் பிரிக்கின்ற அன்னத்தைப் போல, நன்றுய்ப் பகுத்துரைப்பார்கள். இவர்களே இவ்வளவு சாமர்த்தியர்களாய் இருப்பதனால், இனிச் சிறந்த சென்னை இராஜவித்தியா சங்கத்தில் வாசிப்பவர்களுடைய திறத்தையும், அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் திறத்தையும் எடுத்துச் சொல்ல வேண்டியதென்ன? 'ஸ்ரீரங்கத்திலே பிறந்த பிள்ளைக்குத் திருவாய்மொழி கற்பிக்க வேண்டுமோ?'

பலவிடங்களிலும் உள்ள பாலிகா பாடசாலைகளில் படிக்கின்ற சிறு பெண்களை நோக்கிக் கணிதத்தைப் பற்றிக் கேட்டால், அது சங்கலனம் விபகலனம் என்று இருவகையாமெனவும், அவற்றுடு குணனமும் பாஹாரமும் சேர்ந்து நால்வகையாமெனவும், அந்நான் கனுடு வர்க்கம், வர்க்கமூலம், கனம், கனமூலம் நான்கும் சேர்ந்து எண்வகையாமெனவும், மற்றும் அனேக வகையாமெனவும், அவற்றுள் கூட்டல் சங்கலனம், கழித்தல் விபகலனம், பெருக்கல் குணனம், பங்கிடல் பாகஹாரம், ஓரெண்ணை அதனால் ஒருமுறை பெருக்கவருவது வர்க்கம், அவ்வர்க்கத்திற்கு மேற்படியெண் வர்க்க மூலம், ஒரெண்ணை அதனால் பெருக்க வருவதை மற்றுமொரு முறை அவ்வெண்ணினால் பெருக்க வரும் பேறு கனம், அக்கனத் திற்கு மேற்படி எண் கனமூலமெனவும், மற்றவைகளும் இன்னவை இன்னவை எனவும், ஒரு மயிர் முனையும் பிசகாமல், 'உள்ளங்கை நெல்லிக்கனி,' போல, விளக்கமாகவும், அவதானம் செய்வது போல முறைமையாகவும் சொல்வார்களே! ஒழிந்த சாஸ்திரம் முதலான வைகளைக் குறித்து விசாரித்தாலும் வெகு பெயர் சம்பிரதாய விரோதமில்லாமல் திட்டமாய்ச் சொல்வார்கள். கல்வியைப் பற்றி இன்னமொரு புதுமை இருக்கிறது. அதையும் சற்றே கேளும்: பூர்வம் சுதேசிகளுக்குள் அனேகர் இங்கிலீஷ் பாஷையை ஏ, பி, முதலிய எழுத்து மூலமாய்க் கற்காமல், அவ்வார்த்தைகளை மாத் திரம் குருட்டுப்பாடமாகத் தெலுங்கு அல்லது தமிழில் எழுதி, 'கம அண்டே ரம்மெனமாட்டா; கோ அண்டே பொம்மனே மாட்டா; ஸிடெளன் அண்டே கூச்சுண்டென மாட்டா; கெடப் அண்டே லெய்யனெ மாட்டா' என்று ஞாபகம் பண்ணிக்கொண்டு ஆங்கிலேய துரைகளிடத்திலும் உத்தியோகம் செய்து வந்தார் கள். இது சொன்னால் வெட்கமும், அழுதால் துக்கமும் அல்லவா?

கைத்தொழிலாளிகள்

விபட்சன்: 'கல்வி கரையில' என்பதனால் இம்மட்டில் அதை நிறுத்தி, இனிக் கைத்தொழில் செய்யும் தொழிலாளிகளைக் குறித்துப் பேசுவோம்:

சுபட்சன் : இது வரையில் கல்வியைக் குறித்துக் கல்வி கல்வி பாகப் பேசினீரே, இப்பொழுது தொழிலாளிகளைப் பற்றிப் பேச எத்தனித்திரோ? 'ஆராத்தாள் செத்ததும் பொழுது விடிந்தால் தெரியும்,' என்பதாக, அந்த வள்ளலும் பேசினால் தெரிய வருகிறது.

விபட்சன் : கருமார், தச்சர், கல் தச்சர், கன்னர், தட்டார், கணக்கர், கொற்றர், குலாலர், கைக்கோளர், பாணர், செம்மார், ஓட்டர், உப்பரவர் முதலிய தொழிலாளிகள் முற்காலத்தில் அனேகர் இருந்தார்கள். இக்காலத்தில், 'முளைத்ததே மூன்று மயிர், அதிலும் இரண்டு மயிர் புழுவெட்டு,' என்பதாகச் சிலரல்லது அதிக மில்லை ; அவர்களும் திறமையுள்ளவர்கள் அல்லர். அப்படிப்பட்ட வேலைக்காரரைத் தேடிப் பிடிக்கிறதும் வெகு கடினமாய் இருக்கிறது.

சுபட்சன் : 'எறும்புக்குக் கொட்டாங்கச்சித் தண்ணீர் சமுத் திரம்' என்பது போல, உம்மைப் போன்றவர்களுக்கு அந்தத் தொழி லாளிகள் அதிகந்தான். மற்றவர்களுக்கு அவர்களெவ்வளவு? 'இட்டதெல்லாம் கொள்ளும் பட்டி மகன் கப்பரை' என்பது போல, வரவு செலவல்லவே! இக்காலத்தில் உள்ள பற்பல தொழிலாளி களையும் எண்ணத் தொலையுமா? ஏடிடம் கொள்ளுமா? இவர்கள் கைத்தொழில்களும் அக்காலத்திலுள்ளவை போலப் பரும்படி யானவைகளா? அதிக யுத்தி நுட்பமும் அழகும் விசித்திரமாய் இருக்கின்றன! அவைகளைத்தாம் அளவிடல் ஆர் தரம்!

விபட்சன் : 'ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டில்லை,' என்பதாகப் பேசுகிறீரோ? இந்து தேசத்தின் தென் திசையிலுள்ள காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம், மதுரை, திருநெல்வேலி, திருப்பெருந்துறை, திருக் குடந்தை முதலான தேவஸ்தானங்களையும், வடதிசையில் இருப் பவைகளையும் பார்த்துப் பேசும். அந்நாளில் உண்டாக்கப்பட்ட அதி உன்னதமாகிய ஆலயங்களும், அவற்றின் கர்ப்பக்கிருகம், அந்த ராளம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், நூற்றுக்கால் ஆயிரங் கால் மண்டபங்களும், ஸ்தூபி சிகர கோபுரங்களும், அவைகளில் அமைந்த வேலைப்பாடுகளும் இந்நாளில் வேறெந்த இடங்களி லாவது உண்டா? எதோ, விரலை நீட்டும்!

சுபட்சன் : 'தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்,' என்பதாகப் பேசுகிறீரே! அந்தமட்டில், 'அடிச் சட்டியில் கரணம் போட்டுக் குண்டு சட்டியில் குதிரைச் சவாரி பண்ணினது' போதும்; நீர் இந்த தேசத்தை மாத்திரமே பற்றிப் பேசுகிறீர். உமது சொற்படியே அந்நாளில் இத்தேசத்தில் கோயில் குளம் கொஞ்சம் விசேஷமாகவும் விசித்திரமாகவும் உண்டாக்கப் பட்டது மெய்யே. இந்நாளிலே ஐரோப்பா, அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆஸ்திரேலியாக் கண்டங்களில் உண்டாய் இருக்கின்ற நானா விதமான கைத்தொழில்களின் சித்திரத்தைக் குறித்துச்

சொல்லக்கூடுமா? இதற்கும் அதற்கும் ஏற்றக்கோலுக்கும் அறிவாள் பிடிக்குமுள்ள தாரதம்மியம் இருக்கின்றதே!

இந்த இந்து தேசத்திலேயே வண்டிகள், குதிரைகள், பல்லக்குகளின் மேல் ஜனங்கள் ஏறிப் போகும் ஏழெட்டு நாள் பிரயாண தூரத்தை, வாயு வேகமாக இரண்டு மூன்று அல்லது நாலு மணி நேரத்திற்குள் கடப்பதற்கு நாற்பது ஐம்பது ஒன்றுகத் தொடுக்கப்பட்ட புகை வண்டித் தொடர்களும், அவைகளை நடத்துவதற்கு அடிப்பாதை கிளைப் பாதைகளாக எல்லை காணப்படாத இருப்புப் பாதைகளும் அசாத்தியமாக உண்டாக்கப்பட்டன. அனேகநாள் பிரயாண ஸ்தானங்களுக்கும் மனோவேகமாக நாலாறு நிமிஷத்திற்குள் செய்திகளை அறிவிப்பதற்கு ஆச்சரியமான மின் தபால் கம்பிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவை என்ன சாமானியமா? மிகவும் சுலபமாகப் பஞ்சைக் கொட்டையிலிருந்து பிரித்தெடுப்பதற்கும், அதிக விரைவாகப் பஞ்சு நூற்பதற்கும், பட்டு நூல் பருத்தி நூல்களால் நாணயமான வஸ்திரம் நெய்வதற்கும், பலவிதக் கடிதங்கள் செய்வதற்கும், அச்சுப் பதிப்பதற்கும், மரம் அறுப்பதற்கும், தண்ணீர் இறைப்பதற்கும், ஐரோப்பா முதலான தேசங்களில் விதம் விதமாகிய யந்திரங்களும், அஷ்டதிக்கிலும் அதிக விசாலமான ஆறுகளைத் தாண்டிச் செல்வதற்குச் சமுத்திரத்தில் வாரதி கட்டினது போல, பெரிய பெரிய பாலங்களும், ஆற்று நீரத்தனையும் அவலமாய்ப் போகாமல் பயிர் முதலானவைகளுக்குப் பாய்ந்து உபயோகமாகும்படி செல்வதற்கு நெடுங்கால்களும், அணைக்கட்டுகளும் மிதமில்லாமல் சமைக்கப்பட்டிருக்கின்றன. குதிரைகள், வண்டிகள், மாடுகள், மனிதர்கள் தடையின்றித் தாராளமாய்ச் செல்வதற்குக் கச்சித் தெருப் போல அகலமான நெடிய சாலைகள் எங்கெங்கும் செப்பனிடப்பட்டன. அச்சாலைகளின் இருபக்கங்களிலும் நிழல் விழும்படி வரிசை வரிசையாகப் பற்பல மரங்கள் நாட்டப்பட்டிருக்கின்றன. மாலுமிகள் இருகாத தூரத்தில் வரும் பொழுதே துறை கண்டு கப்பல்களைச் செலுத்துவதற்கு அடையாளமாகத் தீபஸ்தம்ப விளக்குகள் ஏற்றப்படுகின்றன. இப்பொழுது எண்ணெய்ச் செலவு முதலானவைகள் இல்லாமல் வாயுதீபம் வைப்பதற்கும், இன்னும் பலவித அதிசய கிரியைகளை நடத்துவதற்கும் வரையறைப் படாத முயற்சிகள் செய்யப்படுகின்றன. இங்கிலாந்து, கல்கத்தா, பங்காளம், பம்பாய், சுவேஸ் முதலான பல தேசங்களுக்கும் போக்கு வரவு சீக்கிரமாகச் செய்வதற்கு நீராவி மரக்கலங்களும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் எவ்வளவு திரவியம் விரயமாய் இருக்க வேண்டும்? 'அஞ்சு காசுக்குக் குதிரையும் வேண்டும், ஆறு கடக்கப் பாயவும் வேண்டும்' என்று பணச் செலவில்லாமல் சூளுவிலே நடத்த யத்தனித்தால் முடியுமா? நார் இல்லாமல் மாலை தொடுக்கலாமா?

இனிமேல் காசியிலிருந்து புகை வண்டியில் ஏறினவனை முன் பின்னாக ஒரு பட்சத்துக்குள் இராமேசுரத்தில் இருக்கிறவர்கள்

கண்டு பேசுவார்கள். இங்கிலாந்தில் அன்று நடந்த சமாசாரம் அன்றே மின் கம்பி மார்க்கமாகச் சென்னை இராஜதானியில் விசதமாய்க் கேட்கப்படும். இப்பொழுது அத்தேசத்தில் உண்டாக்கப்பட்ட, 'கிரேட் ஈஸ்டர்ன்' என்னும் ஆறு பாய்மரங் களையுடைய பிரமாண்டமாகிய கப்பலின் புதுமையான கைக்கிரியை வகுத்துரைப்பது எளிதன்று. அஃது ஒன்றே நீராவி மரக்கலமும் பாய் வலித்தோடும் மரக்கலமுமாய் இருக்கின்றது. அக்கப்பல் கடல் நடுவில் இருக்கின்றதனால் அதில் தங்குகிறவர்கள் தங்களை ஒரு தீபத்தில் வசிப்பவர்களாகவும் நினைக்கக்கூடும். ஒரு வீச்சில் இரண்டு பெயர், அல்லது மூன்று பெயர்களைக் கரணை கரணையாக வெட்டி வீழ்த்தத்தக்க கூரிய கத்திகள், கொஞ்சங்குறைய ஒரு நாழிகை வழியிலிருப்பவர்களையும் சுடுவதற்கேற்ற பல வகைத் துப்பாக்கிகள், காததூரத்தில் உள்ள கருங்கல் கோட்டைகளையும் ஊடுருவும்படி குண்டு பிரயோகிக்கும் அனேகவித பீரங்கிகள், விசித்திரமான படங்கள், கண்ணாடிகள், ஒளிச் சித்திரக் கருவிகள், கடிகாரம் முதலானவைகளும் நவநவமாகச் செய்யப்படுகின்றன. அவைகளையும் மற்றக் கருவிகளையும் ஒவ்வொன்றுகச் சொல்லப் புகுந்தால் கடை பரப்புகிறதாக அல்லவோ காணப்படும்?

விபட்சன்: வாயில் ககனகுளிகை போட்டுக்கொண்டு ஆகாய கமனம் செய்யும் சித்தர்களைப் போல, முற்காலத்தில் சிலர் சூத்திர ரதத்தின் மேலேறி ஓரிடத்திலிருந்து வேறொரிடத்திற்கு ஆகாச மார்க்கமாகப் போக்கு வரவு செய்தார்களே! அப்படி இக்காலத்தி லில்லையே!

சுபட்சன்: 'பகுத்தறியாமல் துணியாதே; படபடப்பாகப் பேசாதே,' என்பதனால், பகுத்தறியாது பேச வேண்டா. நீர் குறித்துரைத்த சூத்திர ரதம் பாரதம், சீவக சிந்தாமணி முதலிய புத்தகங்களில் கண்டதேயல்லாமல், கண்ணில் கண்டதல்லவே? இக்காலத்தில் ஆங்கிலேய பிரான்சியர்களில் சிற்சில பெயர் ஆகாயக் கப்பல்கள் உண்டாக்கி, அவைகளில் ஏறிக் ககனத்தில் அதிக உயரத்தில் எழும்பி வேகமாய்ச் செல்லக் காண்கிறோம்; என்றாலும், அவை இதுவரையில் காற்றின் வழியேயன்றி ஒருவன் சுவாதீனமாக நடத்துவதற்கு இசையவில்லை. இதுதான் அவற்றிற்குக் குறை.

விபட்சன்: சபாஷ்! கெட்டி, கெட்டி, சாதுரியமாக வசனிக் கிறீரே! இம்மட்டில் அதை நிறுத்தும். விவசாயத்தைப் பற்றிப் பேசுவோம்.

சுபட்சன்: 'தம்பி கால் நடைப் பேச்சுப் பல்லக்கிலே' என்ப தாக, ஆடம்பரமாய் மாத்திரம் பேசுகிறீர். ஆயினும், 'கிணற்றின் ஆழமும் கயிற்றின் நீளமும் பார்க்க வேண்டாவா?' வெகு நேர மாகத் தொழிலாளிகளையும் தொழில்களையும் குறித்துப் பேசி, 'சுன்னைவிட்டுக் கட்டுத்தறியைப் பிடித்தது,' போல, இப்பொழுது

அதை விட்டுப் பயிர் செய்கையைப் பற்றிப் பேசுவோம் என்கிறீர். பேசத் தலைப்பட்டால் இறக்கை கட்டிக்கொண்டுதான் பறப்பீர்.

பயிர் செய்கை

விபட்சன்: முற்காலத்தில் பயிர் செய்கையானது சகலத்திலும் பிரதானமாயும், அபரிமிதமாயும் நடந்து வந்தது; அதற்கு அக் காலத்தில் அகவிலை மாறுமல் செவ்வையாய் இருந்ததே சாகஷி.

சுபட்சன்: 'செத்தவன் கண் செந்தாமரைக் கண், இருக் கிறவன் கண் நொள்ளைக் கண்,' என்று பேசுகிறீரே! சிரிக்கப் போகிறார்கள்! அது, 'ஆறு கலியாணம் மூன்று பெண்டுகள் மார்போடே மார்பு இடிபடுகிறது' என்பதாய் இருந்தது ஒருவர்க்கும் தெரியாததன்று. எப்போதும் பூமி நீண்டு, அகன்று, விசாலித்திருப்பதுதான். இருந்தும் அக்காலத்தில் கூடிப் பயிர் செய்தவர்கள் கொஞ்சம் பெயர்களே ஆகையால், அதில் எவ்வளவு சாகுபடி செய்யப்படும்? அரசிலை நுனியளவு நிலந்தானே? இந் நாளில் அதற்குப் பதினுயிரம் பங்கு அதிகமாக எந்தத் தேசுத்திலும் சிறிது இடமாவது காடாய்க் கரம்பாய் இருக்கவொட்டாமலும், புறம்போக்காய்ப் போகவிடாமலும், பள்ளத்தாக்கு மேட்டுப் பாங்காகிய சகல நிலங்களையும் திருத்தி, 'உண்பாரைப் பார்க்க லாம், உழுவாரைப் பார்க்கலாமா?' என்று, யாவரும் ஏர் கட்டி உழுது, நன்செய் புன்செய்ப் பலதானியங்களும் விதைத்து நாற்று விட்டு நட்டு, தோட்ட நிலங்களில் அமிதமாகிய காய் கறி வர்க்கங் களும் ஓயா முயற்சியுடனே உண்டு பண்ணுகிறார்களே! எங்கே பார்த்தாலும் கழனிகள், கொல்லைகள், தோப்புகள், சோலைகள், தோட்டங்கள், துரவுகள், ஏரிகள், ஆறுகளாய் இருக்கின்றன. எத்தனையோ ஊர்களில் விளைச்சல் அறுத்துப் போர் போட்டு ஒப்படி செய்து தானியங்களைக் கட்டிக் குதிர்கள் கூடுகளில் கொண்டு போய் நிறைத்து வைப்பதும் அன்றி, பூமியின் கீழும் புதை போட்டு வைக்கிறார்களே! அகவிலைதான் என்ன வித்தியாசமாயிருக்கின்றது? இவைகளுக்காக எவ்வளவோ தீர்வை கொடுத்து வருகிறார்கள். பட்டணம் முதலாகிய பற்பல தேசங்களிலும் நகக் கண்ணில் அழுக்குப் படாமல் சொகுஷாயிருந்து உத்தியோகம் செய்கிறவர்கள் பெற்றுவரும் சம்பளமெல்லாம் இடுப்பொடியக் கை சலிக்க மண் வெட்டி கொண்டு நிலத்தைக் கொத்தி, மேழி பிடித்து உழுது, மாற்பு நோகத் தண்ணீர் இறைத்துப் பயிரிட்டு உழைக்கிறவர் களுடைய கஷ்டார்ச்சிதந்தானே?

விபட்சன்: 'முன்னே பிறந்த காதைப் பார்க்கிலும் பின்னே முளைத்த கொம்பு வலியது' என்பார்களே; அது போலத் தற்காலத்தையே சிலாகித்துச் சொல்ல வருகிறீர். என்ன சொன்னு லும் அகவிலையைக் குறித்து நான் சம்மதிக்கமாட்டேன். அது போகட்டும். அக்காலத்தில் வர்த்தக விஷயம் என்ன இலேசாய்

இருந்ததா ? அது இக்காலத்தில், ' பூ விற்ற கடையில் புல் விற்றது ' போலப் பீடழிந்து இருக்கின்றதே !

வர்த்தகம்

சுபட்சன் : ' மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருவிச் செல்லும் ' என்பதனால் அவசரப்படாமல் பொறுமையாய்ப் பேச வேண்டுமே ; அந்த வழக்கம் உம்மிடத்தில் இல்லை. ' முதலை நரியின் காலை விட்டுப் புங்கமரத்து வேரைப் பிடித்தது ' போல, பயிர் செய்கையை விட்டு வர்த்தகத்தைப் பேசத் தலைப்பட்டீர். அந்நாளில் துறைமுகங்களையுடைய சில ராஜதானிகளில் மாத்திரம், ஒருவிதமான சிறிய பெரிய சில பாய்மரக் கப்பல்களும், சுலுப்புகளும், படகுகளும் சீமா மூலங்களிலிருந்து அபூர்வமாய்ச் சரக்கேற்றி வருவதுண்டு. அவை வெகுதூரத்தில் வரும் பொழுதே அச்செய்தி கேட்ட வர்த்தகர்களுக்கு, ' வந்தது கப்பல் மலர்ந்தது தொப்பை ! ' என்பதாக ஒரு புஜம் இருபுஜமாய்ப் பூரிக்கும். இக்காலத்தில், ' மலை விழுங்கு மாரியாத்தாளுக்கு உரல் சுண்டாங்கி ' என்பதாக, அவையெல்லாம் எவ்வளவு ? காற்றுக்கா மழைக்கா ?

கண்டவிடமெல்லாம் துறைமுகங்கள் ; அத்துறைமுகங்களில் எல்லாம் திரளாக வருவதும் போவதும் நங்கூரம் போட்டுத் தங்குவதுமாகிய, ஒன்று இரண்டு மூன்று நான்கு பாய் மரங்களையுடைய எத்தனையோ கப்பல்கள் ; பல வகையான எத்தனையோ மற்ற உருக்கள் ; அவைகள் எவ்வளவோ ஏற்றுமதி இறக்குமதி செய்யும் சரக்குகள் சாமான்கள் ; அச்சரக்குகள் சாமான்களைக் கொள்ளுகிறவர்கள், விற்கிறவர்கள் எத்தனையோ வர்த்தகர்கள் ; அவர்கள் கொண்டு விற்கும் ஸ்தானங்கள் கடலும் காவேரியும் போல அதிக விசாலமான எத்தனையோ கிடங்குகள், மண்டிகள் ; அவ்வர்த்தகத்திற்கு வைத்த முதற்பணம் ரொக்கமாக எத்தனையோ கோடி ரூபாய்கள் ; எத்தனையோ கம்பெனிப் பத்திரங்கள் ; பாங்கி நோட்டுகள் ; அம்முதற்பணத்திற்கு வட்டி வீதமாக எத்தனையோ பணம் கொடுக்கல் வாங்கல் ; அவ்வர்த்தகத்தில் எத்தனையோ பணம் லாபம் சம்பாதிப்பது நஷ்டம் இருப்பது ; அந்த லாபத்தில் எத்தனையோ பணம் செலவு, எத்தனையோ பணம் இருப்பு. ' சோற்றிலே கிடக்கிற கல்லை எடுக்க மாட்டாதவன் மோகனக் கல்லைத் தாங்குவானா ? ' இத்தனை பிரபலமாகிய வர்த்தக விஷயத்தை வலம் இடம் தெரியாத நாமா அளவிடுகிறது ? நம்முடைய புத்தியைக்கொண்டு இதை ஆராய்வது, ' நரி வாலைக்கொண்டு கடலாழம் பார்க்கிறது போல'த்தான். மேலும், தூர தேசங்களுக்கு வர்த்தகர் முதலான வர்கள் பணம் ரொக்கமாக அனுப்பினால், இடைவழியில் ராஜிக தெய்விகம் எப்படியிருக்குமோ தெரியாதே ! அதைப் பற்றிப் பயமின்றி அங்கங்கேதானே பெற்றுக்கொள்ளும்படி, எவ்வளவு தொகைக்கானாலும் உண்டி முடித்தும் கொடுக்கப்படுகின்றது.

நகரம்

விபட்சன் : ‘நின்ற மரத்தில் நெடுமரம் போனல், நின்ற மரமே நெடுமரம்’ என்பதாக, இக்காலத்தின் வர்த்தகத்தையே பெருக்கிப் பெருக்கிப் பேசுகிறீர். அது இருக்கட்டும். அக்காலத்திலிருந்த நகரங்களைப் போல இக்காலத்தில் அவ்வளவு சிறப்புள்ள நகரங்கள் எங்கிருக்கின்றன ?

சுட்பசன் : ‘தனக்கழகு மொட்டை, பிறர்க்கழகு கொண்டை’ என்பதை யோசிக்கவில்லை. நீர் முற்காலத்து ஸ்திதியையே விடாமல் சிறப்பித்து, ‘தடவிப் பிடிக்க மயிர் இல்லை, அவன் பெயர் சவரிராஜப் பெருமாள்’ என்பதாகப் பேசுகிறீர். இக்காலத்தில் ஐரோப்பா முதலிய கண்டங்களிலிருக்கிற நகர வளங்களை உமக்குச் சொன்னல் நம்பமாட்டீர். இந்த ஆசியாக் கண்டத்திலேயே எத்தனையோ சிறப்பான நகரங்கள் இருக்கின்றன. நாம் பல நாளும் வசிப்பதும் காண்பதுமாகிய இச்சென்னை முதலிய நகரங்களைக் குறித்துச் சிறிது நேரம் நாவாரப் பேசுவோம், வாரும்.

விபட்சன் : நீர் ‘சொன்னபடி கேட்டால் மாப்படைப்பேன் ; கேளாவிட்டால் மண்ணை வெட்டிப் படைப்பேன்’ என்கிறீர். ஆயினும், சொல்லும் கேட்போம்.

சுபட்சன் : ஆ ! ஆ ! சென்னை முதலானவைகளின் கோட்டைகள் கொத்தளங்களைப் பாரும் ! எவ்வளவு சித்திர விசித்திரமாய் இருக்கின்றன ! இவை அதிக அகலமும் நீளமும் இல்லாது இருந்தாலும், அழகும் அரணிப்புமாய் அகழ் சூழப்பட்டு, ஏற்றமதி இறக்குமதிக்குத் தக்க துறைமுகங்களை உடையவைகளாய்க் கடலுக்கருகே இருக்கின்றன. வெள்ளி மலை களைப் போல உன்னதமும் அற்புதமுமாகக் கட்டி வெண்சாந்து பூசப்பட்ட மூன்று நான்கு ஐந்தடுக்கு மெத்தைகளாகிய மாட மாளிகை கூடகோபுரங்களால் நிறைந்திருக்கின்றன. பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வருணத்தார் வாசம் செய்யும் வீதி களோ, விஸ்தாரம். கோயில் குளங்கள், மண்டபம் மதில்கள், சத்திரம் சாவடிகள், சந்தி சதுக்கங்கள் அளவிடப்படா. ஆலயங்கள் தோறும் நித்தியாராதன பஞ்சபர்வ பிரமோற்சவ மகோற்சவங் களும், வீடுகள்தோறும் கல்யாண சோபனங்களும் அதிக விநோத மாக நடக்கின்றன.

யாக சாலை, கல்விச் சாலை, புத்தக சாலை, கைத்தொழில் அபிவிருத்தி சாலை, வர்த்தக சாலை, உத்தியோக சாலை, பொக்கிஷ சாலை, அச்சு இயந்திர சாலை, ஆயுத சாலை, இராணுவ சாலை, காவல் சாலை, நீதி விசாரணைச் சாலை, அரசிறைச் சாலை, தபாற்சாலை, வைத்திய சாலை, நூதன பொருட்காட்சிச் சாலை முதலானவைகளை எங்கெங்கும் காணலாம். மேற்படி தபாற்சாலைகள், ‘சுண்டைக்

காய் காற்பணம் சுமைக்கூலி முக்காற் பணம்' என்ப தாகச் செலவு அதிகப்படாமல், சென்னையிலிருந்து காசிக்குப் போகும் கடிதமும் அதிசுலபமாக *அரையணாவில் அனுப்பப் படுகிறதற்கு உபயோகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. வைத்திய சாலைகளின் வீரம், பூரம், லிங்கம், இரசபாஷாணாதி வைப்புச் சரக்குகளினால் உண்டாக்கிய பஸ்ப சிந்தூரங் களுக்கும், சுக்குத் திப்பிலி, மிளகு கோஷ்டம் முதலிய கடைச்சரக்கு களினால் செய்த தைல சூரண கிருத லேகியங்களுக்கும், வன மூலிகைகளினால் இறக்கப்பட்ட கஷாயம் முதலானவைகளுக்கும், அவைகளை வெவ்வேறாக நிரப்பி இருக்கும் பல நிறப் பாத்திரங் களுக்கும், அப்பாத்திரங்களை நிரைநிரையாகச் சேர்த்து வைத் திருக்கும் விசித்திரமான அறைகளுக்கும், உசிதமான பற்பல வைத்தியக் கருவிகளுக்கும், அங்கிருக்கின்ற சாஸ்திர அனுபவ சாமர்த்தியமுடைய வைத்தியர் இரண வைத்தியர்களுக்கும், அவர் களிடத்தில் வந்து பிணி தீர்த்துக்கொள்பவர்களுக்கும் கணக்கு ஏது? நூதனப் பொருட்காட்சிச் சாலைகளில் ஜகத்தில் எட்டுத் திசைகளிலுமுள்ள நவலோகம் நவமணி முதலிய தாது வர்க்கங் களையும், மரம், செடி, கொடி முதலிய மூல வர்க்கங்களையும், பசு, பட்சி, மிருகம் முதலிய ஜீவ வர்க்கங்களையும் ஒருமிக்க ஏககாலத்தில் காணலாமே!

நெல்லு மண்டி, அரிசி மண்டி, பலசரக்கு மண்டிகளும்; இரும்புக் கிடங்கு, பஞ்சுக்கிடங்கு, மருந்துக் கிடங்குகளும்; பலகைத் தொட்டி, பீனமரத் தொட்டிகளும்; பட்டுக்கடை, புடைவைக்கடை, மளிகைக் கடை, கன்ஞரக்கடை, காசுக்கடை, ஆபரணக்கடை, அத்தர் புனுகு முதலியவை விற்கும் கடை, புஷ்பக்கடை மற்றக்கடைகளும்; 'கரடி துரத்தினாலும் கைக்கோளர் தெருவில் ஓட இடம் கிடையாது' என்பது போலச் சிறிது இடமும் வறிதாயிராமல், எங்கும் அடர்ந்து நெருங்கி வரிசை வரிசையாய் இருக்கின்றன. மற்றக் கடைத்தெருவில், 'உப்பிருந்தால் பருப்பிராது, பருப்பிருந் தால் உப்பிராது!' இக்கடைத் தெருவிலோ, எந்த வேளையிலும் எப்படிப்பட்ட வஸ்துக்களையும் வாங்கலாம்; புலிப்பாலும் அகப் படும்.

விபட்சன்: நகரவாசிகளுடைய பாஷை, ஊண், உடை முதலியவைகள் அக்காலத்தில் இருந்தது போல இல்லை. அவை இக்காலத்தில் ஒழுங்கற்று இருக்கின்றன.

பாஷை

சுபட்சன்: 'பேச்சுக்குப் பேச்சுச் சிங்காரந்தான்.' அக்கா லத்தில் வாசித்தவர்கள் அல்லாத பெயர்களெல்லாம் குழந்தைகள்

*அக்காலத்தில் கார்டு விலை அரையணா.

போலவும், கிளிப்பிள்ளை போலவும், குதலை வார்த்தையாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். கொஞ்சம் வாசித்தவர்களோ, 'ஊமைக்கு உளறுவாயன் உற்பாத பிண்டம்' என்பதாக ஒருவாறு சரியாய்ப் பேசுவார்கள். இக்காலத்தில் கீழ்க் குலத்தாரும் மேற் குலத்தாரைப் போலவே தமிழ், தெலுங்கு முதலிய தத்தமக்குரிய பாஷைகளில் திருந்திய உச்சரிப்புடனே மதுரம் ஒழுக நயமாக வசனிக்கின்றார்களென்றால், மேற்குலத்தார் எவ்வளவு விலட்சண மாக உச்சரிக்க மாட்டார்கள்?

ஊண்

'அச்சையிலும் உண்டு பிச்சைக்காரன்' என்பது போல, இங்கும் சில எளியவர்கள் உண்டெனினும், அவர்கள்தாமென்ன! 'பசித்தோம்; பட்டினி கிடந்தோம்,' என்கிறார்களா? அப்படி இருக்கச் செல்வமுடையவர்கள் காலம் தவறுமல் அறுசுவைக் கறியுடனும், பால் பழத்துடனும் திருத்தியாய்ப் பஞ்சபக்ஷ்ய பரமான்னம் புசித்து வருகிறார்கள் என்பதைச் சொல்ல வேண்டுமோ? முன்னாளில் சிலர் ஏகாதசி உபவாசம் போல ஒரு பட்டினி இரு பட்டினி கிடப்பார்கள். அவர்களுக்கு என்றைக்காவது சோறு அகப்பட்டால், 'காய்ந்த மாடு கம்பிலே விழுந்ததற்கு' ஒப்பாக, 'உண்கிற வயிற்றை ஒளிக்கிறதா!' என்று, அதிக ஆவலாய், 'உப்பைத் தொட்டுக்கொண்டு உரலை விழுங்குவது' போல, 'ஊறுகாயைக் கடித்துக்கொண்டு ஒரு பானைச் சோற்றை என்ன தன்று' என்று, பேய் போலத் தினைக்கத் தின்பார்கள். அவர்களிடத்தில் நாகரிகம் இல்லை.

உடை

'காசுக்கொரு புடைவை விற்றாலும் நாயின் சூத்து அம்மணந் தான்' என்பது போல, முழுதும் நிர்வாணமாயிராவிட்டாலும் அக்காலத்தில் சில கந்தைகளைக் கட்டிக் காலம் கழித்தார்கள். இக் காலத்தில் எவர்களும் நல்ல பட்டுப்புடைவை, சரிகைப் புடைவை, நாணய வேஷ்டி, உத்தரீயம், பாகை, சொக்காய், சால்வை முதலிய வைகளையும் துரைமக்கள் போல நாகரிகமாய் உடுக்கிறார்கள்.

பூஷணம்

அக்காலத்தில் சிலர் தவிர, ஏனையோர்கள் 'வெறுங்காதுக்கு ஓலை மேல்' என்பதாகச் சொற்ப விலை பெற்ற சில பொன் நகை வெள்ளி நகைகளும், பித்தளைப் பணிகளும், குறத்திகள் அணிகின்ற பாலமணி கோரைமணிகளும் பூண்டிருந்தார்கள். அவை, 'காக்கை யின் கண்ணுக்குப் பீர்க்கம்பூப் பொன்னிறம்' என்பதாக, அவர்கள் பார்வைக்கு உசிதமாய்த்தாம் இருந்தன. தற்காலத்தில் அப்படிப்

பட்டவைகளைப் பூணத் தலையிலெழுதியதா? எல்லாரும் நவ ரத்தின பிரதிமை போலவும், பொன் காய்த்த மரம் போலவும், உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரையில் மாற்றிலும் விலையிலும் மிக்குயர்ந்த தங்கத்தால் செய்து, முத்து, பச்சை, வச்சிரம், கெம்பு முதலிய நவமணிகள் இழைத்த அழகாகிய பற்பல ஆபரணங்களும் கண்ணுக்கு ரம்மியமாக இட்டு அனுபவிக் கிறார்கள்.

வாகனுதிகள்

ஆயிரம் பேர்களுக்குள் ஆரோ சிலர் அந்நாளில் வாகனப் பிரதிஷ்டையோடு இருந்தார்களேயொழிய இதரமானவர்கள் எல்லாம் வெயிலில் உலர்ந்து, மழையில் நனைந்து, பனியில் உடல் விறைத்து, ஊளையில் கால் புதைந்து, கட்டாந்தரையில் எலும்பு தேய நடந்துதானே திரிந்தார்கள்? இந்நாளிலே, ஒன்றிரண்டு மூன்று நான்கு குதிரைகள் கட்டப்பட்ட இரண்டு நான்கு சக்கரங் களையுடைய அலங்காரமான பெரிய வண்டிகள் காடிகள் பல் லக்குகள் ஏறி, உல்லாசமாகச் சஞ்சரிக்கிறார்கள். நாநாவித சுகந்த கந்த பரிமள புஷ்பாதிகளும் தரித்துக்கொள்ளுகிறார்கள்.

அக்காலத்தில் சிலர்க்கு நல்ல கட்டில் மெத்தை தலையணை கிடையா. அவர்கள் சுயிற்றுக் கட்டிலில், அல்லது ஓலைப் பாயில், அல்லது பீறற்பாயில், அவை சரீரத்தில் உறுத்தும்படி தூங்கு வார்கள். மற்றும் சிலர்க்கு அவையும் அகப்படாமையால், வெறுந்தரையிலே புழுதிபடியப் பனந்துண்டு போல உருள்வார்கள். இக்காலத்தில் விந்தையான தந்தக்கட்டில், சித்திர ரத்னக் கம்பளம், பலவருணச் சமுக்காளம், பிரப்பம்பாய், பாலிகைப் பாய், மிருது வான இலவம்பஞ்சு மெத்தை, முகமல் திண்டு, தலையணைகளின் மேற்படுத்து ஆனந்தமாக நித்திரை செய்கிறார்கள்; மேசை, நாற் காலி, டீப்பா, ஸோபா முதலானவைகளையும் கையாண்டு வருகிறார்கள். செம்பு பித்தளை, வெண்கலத்தாலாகிய தட்டு முட்டு களேயன்றிப் பொன் வெள்ளிகளினால் செய்யப்பட்ட கலம், செம்பு, தவலை, தாம்பாளம் முதலியவைகளையும் சிலர் சாதாரண மாக வைத்து வழங்குகிறார்கள்.

அந்நாளில் நாகரிகத்தை அறியாத சிலர், 'நெய்கிறவனுக் கேன் குரங்குக் குட்டி?' என்பதாக, நிர்ப்பாக்கியர்களாகிய நமக்கு இந்த வாய்மதம் ஏனென்றெண்ணுமல், நாகரிகமாக உடுக் கிறவர்கள் பூண்கிறவர்களைப் பார்த்து இவர்களெல்லாம், 'வாதம் கெடுத்தது பாதி; வண்ணன் கெடுத்தது பாதி'யாக ஊதிக்கதித்த உடம்பில் வெள்ளையும் சள்ளையுமிட்டுப் பிலுக்குக் காட்டுகிறார் களென்றும், ஜன்மாந்தரத்தில் செய்த பாபத்தினல் காதிலும மழுத்திலும் கண்டதையெல்லாம் வீணே சுமந்து திரிகிறார்களென் றும், தண்டிகை ஏறுகிறவர்களை நோக்கி, 'ஐயையோ! பிரேதம்

போலச் சுமக்கப்படுகிறார்களே!' என்றும் சொல்லிப் பரிகசிப் பார்கள். அவைகள் தங்களுக்கு இல்லாமையினாலேயோ, அல்லது, உள்ளதை உரியதையெல்லாம் ஆழவெட்டித் தாழப் புதைத்து விட்டு, 'தேடத் தெசையிருந்தும் அனுபவிக்க அதிர்ஷ்டமில்லாமை' யால், 'உண்ணுச் சொத்து மண்ணுப்போம்' என்பதையும் நினையா மல், உலோபகுணத்தை வகித்துச் செவ்வையாய் உண்ணுமல் உடுக் காமல் கட்டாமல் கழற்றுமல் பஞ்சை வேஷம் போட்டுக்கொண் டிருப்பதனாலேயோ, அல்லது பிறருடைய செல்வச் சிறப்பைக் கண் குளிரப் பார்க்கப் பொறுமையினாலேயோ, அவர்கள் அப்படிச் சொல்வது. இந்நாளில் பெரும்பான்மையோர் அஃது அவரவர் அமைப்பென்று நினைப்பார்களேயல்லாமல் அவ்வாறு பேசமாட் டார்கள்.

விபட்சன் : முற்காலத்தில் எத்தனையோ பெயர் நிறை செல்வ முடையவர்களாயிருந்தார்கள். அவர்கள் பணத்தைக் குறித்து அவர்களுக்கே வரவு செலவு தெரியா. இக்காலத்தில் ஆரைப் பார்த்தாலும், 'கிடக்கிறது ஒட்டுத்திண்ணை, கனக் காண்கிறது மச்சு மாளிகை' என்பதாக, கையிலே காசுமில்லாமல் போனாலும், டம்பத்தில் குறைவில்லாமல் இருக்கிறார்கள்.

செல்வம்

சுபட்சன் : 'தோற்பது கொண்டு சபை ஏறேல்,' என்பதை உணராமல் பேசுகிறீர். முன்னுல் சிறுபான்மையோர் தவிர ஒழிந்த வர்களெல்லாம், 'வல்லார் கொள்ளை வாழைப்பழம்' என்பதாகப் பிறர் பொருளைத் திருடியும், பிறர் கையில் பரிதானம் வாங்கியும், பிறருக்காகப் பொய்ச்சாக்ஷி சொல்லியும், பிறரைக் கணக்குப் புரட்டி ஏமாற்றியும், மற்றும் அடாதவைகள் பல செய்தும், பெருந் தொகையாகப் பணம் சம்பாதித்து, மகாராஜர்களாளுர்களே அல்லாமல், நியாயமாக அல்லவே? ஆதலால், ஒவ்வொருவன் இருபது லக்ஷம் முப்பது லக்ஷமுடைய சீமானுய் இருந்தும், அச் செல்வம் நிலைத்திராமல், 'வாசலில் கட்டித் தாழ்வாரத்தில் அதுத்தது போல' அதிசீக்கிரத்தில் நிர்மூலமாய் அழிய, அவர்கள் ஒட்டாண்டிகளாய்விட்டார்கள். இந்நாளில் அநியாயத்திற்கு உடன்படாமலும், சத்தியம் தவருமலும் சன்மார்க்கமாய்ப் பொருள் தேடி நீடித்த செல்வமுடையவர்களாய் இருக்கிறார்கள்.

விபட்சன் : முற்காலத்தில் அனந்தம் பெயர் பிரபலமாகத் தான தர்மம் செய்தார்கள். இக்காலத்தில் அச்செய்கை. 'பெருங் காயமிருந்த குடுக்கை வாசனை போகாது' என்பது போல, சிலரிடத் திலாவது சிறுபான்மையாகவாயினும் இருக்க வேண்டும்; அது எவ்வளவுமில்லையே!

சுபட்சன் : அக்காலத்தில் பிரபலமாகத் தான தர்மம் செய்ததாயல்லவோ சொல்லுகிறீர்? அவ்வாறு செய்தது புண்ணி

யத்தின்பொருட்டா? 'தகப்பனுக்குக் கட்டக் கோவணமில்லை, மகன் தஞ்சாவூர் மட்டும் நடைபாவாடை போடச் சொன்னான்' என்பதாக, தாய் தந்தையர் முதலானவர்கள் அன்னவஸ்திராதி களுக்கு ஆடல்பட அவர்களை ஆதரியாமல், ஆபால கோபாலமும் தங்களைப் புகழ வேண்டுமென்னும் பிரதிஷ்டைக்காகத்தானே? அவ்விஷயத்தில் செலவிட்ட பொருளும் ஆர் வீட்டு உடைமை? தாங்கள் கஷ்டப்பட்டுத் தேடியதா? 'தட்டானைத் தலையிலடித்து வண்ணானை வழிப்பறித்து' அன்றி, வேறன்று. இது 'கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தது' போல இருக்கின்றதல்லவா?

விபட்சன்: 'தேடாதழிக்கின் பாடாய் முடியும்' என்பதனால், அது சரியன்று. அவ்வளவு ஆடம்பரமாகச் செய்யச் சொல்லி ஆரடித்தார்கள்? தங்களுக்கு உள்ளமட்டில், 'தெகி'யென்று வந்தவர் களுக்கு 'நாஸ்தி'யென்று சொல்லாமல், ஒரு கவளம் அன்னமாவது ஒரு பிடி அரிசியாவது பிச்சை இடலாமே; பையையாகத் தூக்கிக் கொடுக்கச் சொல்லுகிறார்களா? தச்சனடித்த தலைவாசலெல்லாம் உச்சியிடிக்க உலாவித் திரிந்தாலும், எச்சிற்கையாலும் காக்கை யோட்டுவாரில்லாமல் பிச்சைக்காரரெல்லாம் பொச்சை வற்றி, இலச்சை கெட்டுப் போகிறார்களே! இது என்ன கொடுமை! 'பிச்சையிட்டுக் கெட்டவர்களும் பிள்ளை பெற்றுக் கெட்டவர் களும்' உண்டா?

தான தர்மம்

சுபட்சன்: அக்காலத்தில் பணம் சம்பாதிக்கிற வகை தெரியாது. மேலும், 'கணக்கனுக்கு உடற்பிறப்புப் பட்டினி' என்பது போல, வெகு பெயர்க்குச் சோம்பலும் கூடப் பிறந்ததாய் இருந்தபடியினாலே, 'குண்டாங்கரணம் போட்டாலும் பிண்டாச் சோற்றுக்கு வழியில்லாமல்' உடம்பெடுத்தவர்கள் எல்லாம் ஓடெடுத்துத் திரிந்தார்கள். இக்காலத்தில் பொருள் தேடும் வழியைச் சிறு பிள்ளையும் அறிந்திருக்கிறான். சோம்பியிராமல் பற்பல தொழிலும் செய்து, 'முப்பது நாளும் போகப் பொற் பணமே வா' என்றால், அப்பணம் வீடு தேடி வர யாவரும் சீமான் களாய் இருக்கிறபடியினாலே, அவர்கள் மானங்கெட்டுப் பிச்சைக் குப் போவானேன் என்றாலும், 'குபேரன் பட்டணத்திலும் விறகுக் கட்டுக்காரன் உண்டு' என்பது போல, சில வறியவர்களும் இருக்கிற படியினாலே, அவர்களுள் பாத்திராபாத்திரம் அறிந்து பிச்சையிடு கிறதுமன்றி, விசேஷமாக வெகு பெயர் தானதர்மமும் செய்கி றார்கள்.

வேலைக்காரரும் யஜமானரும்

விபட்சன்: பூர்வகாலத்தில் யஜமானர், வேலைக்காரருடைய கஷ்டமறிந்து பரிபாலித்தார்கள். அவர்களும் எஜமானர் சொற்படி

கேட்டு உண்மையாய் நடந்து வந்தார்கள். இக்காலத்தில் அப்படியில்லையே !

சுபட்சன் : அந்நாளிலேதான், 'உழவுக்கேற்ற கொழு' என்பது போலக் கோபமில்லாத துரைக்குச் சம்பளமில்லாத சேவகராய் இருந்து, சிலர், 'கெட்ட மாடு தேடுகிறதுமில்லை, மேய்த்த கூலி கேட்கிறதுமில்லை.' எஜமானர்களும், 'சருகரிக்க நேரமன்றித் தீக்காய நேரமில்லை' என்பதாக, வேலையாட்கள் காலை தொடங்கி மாலைவரையில் வேலை செய்தாலும், கால்நாழிகைப் பொழுதிருக்கக் கண்டால், 'பால் கறக்கின்ற பசுவின் கன்றுக்குப் புல்லறுத்து வா,' என்பார்கள். இந்நாளில் அப்படிப்பட்டவர்கள் நாணும்படி யஜமானர் பெரும்பாலும் வேலைக்காரரைப் பெற்ற பிள்ளைகள் போல எண்ணி, 'அடித்த ஏருக்கும் குடித்த கூழுக்கும் சரி' என்று சொல்லாமல், வருத்தமறிந்து அபிமானித்துச் சம்பளவிர்த்தி பண்ணிச் சம்ரக்ஷணை செய்து வருகிறார்கள்.

வேலைக்காரரும் அவர்களை அலட்சியம் பண்ணுமல் சாக்ஷாது பிதாவாகப் பாவித்து, 'குதித்துக் குதித்து மாவிடித்தாலும் குந்தாணிக்கொரு கொழுகட்டையும் கிடையாது,' என்பதாக, எத்தனை பிரயாசப்பட்டாலும் சொற்ப வரும்படியும் இல்லையே என்று கழப்பாமல், அவர்கள் காலினல் ஏவிய வேலையைக் கையினல் செய்து முடித்துத் தக்க சம்பளம் பெற்று ஜீவித்து வருகிறார்கள்.

விபட்சன் : முற்காலத்தில் கடன் கொடுக்கல் வாங்கள் கிரமமாய் நடந்து வந்தன. இக்காலத்தில் அவை மிகவும் சீர் கெட்டிருக்கிறது.

கடன் கோடல் முதலியன

சுபட்சன் : முற்காலத்திலேதான் கடன் படுகிறவர்களுக்குக் கடன் வாங்கும் பொழுதுள்ள சந்தோஷம் தீர்க்கும் பொழுதில்லை. 'கொடுத்ததைக் கேட்டால் அடுத்தது பகை,' என்பதாக விரோத முண்டாகிறது. அவர்களுள் சிலர் வட்டியைச் சிலர் முதலைப் புரட்டுகிறது ; சிலர் வட்டியும் முதலுமே புரட்டுகிறது ; சிலர் 'ஆறு மாதத்திற்கு வட்டியில்லை ; அப்புறம் முதலேயில்லை' என்கிறது. கடன் கொடுக்கிறவர்களும் 'தனம் இரட்டிப்புத் தானியம் முத்திப்பு' என்பதற்கு மேற்பட்ட கடுவட்டி, அல்லது வட்டிக்கு வட்டி வாங்குகிறது. சிலர் இது விஷயத்தில் மண்டையில் துணியைக் கட்டிக்கொண்டு சண்டைக்கு மார் தட்டுகிறது ; இவை பெருவழக்கமாயிருக்கின்றன. இவையெல்லாம் இப்பொழுது, 'கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிற்று,' என்பதாக, முக்காலே மூன்று வீசம் ஒழிந்து போயின.

விபட்சன் : முற்காலத்தைப் போலத் துரைத்தனத்திற்குக் குடித்தனம் அமைந்து நடக்கிறதில்லை. கொஞ்ச காலத்திற்கு

முன்பு வட இந்தியாவில் உள்ளவர்கள், 'தடிக்கு மிஞ்சின மிடா' வாக ஏற்பட்டுத் துரைத்தனத்தாரைப் பகைத்தார்களே!

குடித்தன வளமை

சுபட்சன் : வட இந்தியாவிலுள்ளவர்கள் அன்று பட்ட பாடு யாவருக்கும் தெரிந்ததுதானே? யானை மதர்த்துத் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்வது போல, அவர்கள் தங்களைத் தாங்களே கெடுத்துக்கொள்வதை அறியாமல் அகங்கரித்து, 'தூங்குகிற புலியைத் தட்டியெழுப்புவது' போல, சாதுக்களாய் இருந்த துரைத்தனத்தாரைக் கோபமூட்டி, 'வளர்த்த கடா கையிற்பாய்ந்த விதமாக' எதிர்த்தது கண்டு, துரைத்தனத்தார் அவர்கள்மேல் படையெடுத்த பொழுது, 'முயலையெழுப்பிவிட்டு நாய் பதுங்கினது' போல, அந்தத் துஷ்டர்கள் பதுங்க, இவர்கள் விடாது தொடர்ந்து அதம் பண்ணிக் கருவறுத்தார்கள். அப்பொழுது விளக்கில் வீழ்ந்திறக்கும் விட்டில் போல' துரைத்தனத்தார் கையில் சிக்கி அனேகர் மாண்ட செய்தியை யறிந்த சிலர், 'இவர்கள் நம்மையும் கொல்வார்கள்!' என்று அஞ்சி நடுங்கி, 'கொல்லைக் காட்டு நரி போல'ப் பல்லைக் காட்டிக் கெஞ்சிக் காலில் வந்து விழுந்து மன்னிப்புப் பெற்றூர்கள். இக்காலத்தில் அப்படி ஆரும் கர்வப்பட்டு எதிர்ப்பாரில்லை. 'நெருப்பை ஈ மொய்க்குமா? துரைத்தன அதிகாரத்திற்குச் சகலமானவர்களும், பெட்டியில் பாம்பு போல அடங்கி, அபராதிகளாகாமல் சட்டப்படி தங்கள் குறைகளைச் சமயமறிந்து விண்ணப்பமெழுதி அறிவித்து, மருத்துவர் கொடுக்கும் மருந்தினுல் பிணியாளிகள் சொஸ்தமடைவது போல, துரைத்தனத்தார் செய்யும் நீதியால் தீமை மாறி வேண்டிய நன்மைகளைப் பெற்று வருகிறூர்கள்.

விபட்சன் : அக்காலத்திலிருந்த உத்தம அரசர்களைப் போலவும் அவர்களின் ஆளுகையைப் போலவும் இக்காலத்திலுண்டா?

பூர்வத்தரசர் குணபேதம்

சுபட்சன் : அக்காலத்து அரசர்களில் சிலர் நிறை கல்வி கற்காமலும், அரசியற்றுமுறைமை இன்னதென்று குறியாமலும், சற்சன சகவாசம்செய்யாமலும், 'துரியோதனன் குடிக்குச் சகுனியைப் போல'க் கிருத்திரம குணமுள்ளவர்களையும், 'குதிரை பிடிக்கச் சம்மட்டி அடிக்கக் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்னத்' தக்கவர்களையும் சேர்த்துச் சினேகித்து, 'குப்பையில் கீரை மூளைத்தால் கப்பலுக்குக் காலாமா?' என்பதையும் நினையாமல், அவர்கள் துர்ப்போதனையைக் கேட்டு, விசுவாசித்து நடந்து வாய் வயிறென்பது அறியாமல் தின்று கொழுத்து, 'அறுப்புக் காலத்தில் எலிக்கும் நாலு கூத்தியார்' என்பது போல, இவர்கள் பல கூத்திமாரைப் படைத்து, அவர்கள் மோகவலையில் அகப்பட்டு

மதிமயங்கி, எந்நேரமும் கேளிக்கையிலும் சங்கீதத்திலும் சூதுவிளையாட்டிலும் களியாட்டிலும் சிந்தைவைத்து, வீண்காலம் கழிக்கிறது அல்லாமல், இராச்சியத்தில் நினைவு கூர்கிறதில்லை. 'மயிலாப்பூர் ஏரி உடைந்ததென்றால், வருகிற கம்மிட்டிக்கு ஆகட்டும்,' என்கிறதேயொழிய, 'இது தாமசத்தில் செய்யத்தக்கதல்லவே!' என்று தீர்க்காலோசனை செய்கிறதில்லை. ஒரு வேளை அதைக் காட்ட முயன்றாலும், விரைவாக வேலையை நடத்தமாட்டாமையால், இவர்கள் கூட்டுகிறதற்குள்ளே, 'தேவடியாள் சிங்காரிக்கிறதற்குமுன் தேரோடி நிலையில் நின்றது,' என்பதாக, ஏரி நீரெல்லாம் வியர்த்தமாய்ப் புறம்பாய்ந்து போய்விடும்; அப்புறம், 'நாய் வாழ்ந்தாலென்ன பூனை தாலியறுத்ததாலென்ன?' என்பார்களே, அந்தப்படி, 'ஆர் கெட்டாலும், ஆர் சுகப்பட்டாலும் நமக்கென்ன?' என்று இருப்பார்கள். ஒருவரையொருவர் குத்திக் கொலை செய்தாலும் கேள்வி முறையில்லை. இவர்களுடைய குற்றங்களை 'மாமியாருக்கு உடை குலைந்தால் வாயினாலும் சொல்லக் கூடாது; கையினாலும் காட்டக் கூடாது,' என்பதாக யாவரும் இவர்களுக்கு அறிவிக்கக்கூடாது ஒருவர் சொற்புத்தி கேளாமல் சுயபுத்தியும் இல்லாமல் இருக்கையில் சத்துருக்கள் வந்து வளைத்துக்கொள்ள, இராச்சியத்தை அவர்கள் வசம் ஒப்பித்து விடுவார்கள்; அப்பால் அது, 'நந்தன் படவேடும் நாயடுத்த அம்பலமும்' ஆய்விடுகிறது.

தற்காலத்தரசர் குணதிசயம்

இக்காலத்து அரசர்கள் அத்தனை மௌட்டியமுடையவர்களல்லர். பிராஞ்சிய சக்கரவர்த்தி, ருஷிய சக்கரவர்த்தி, சீன சக்கரவர்த்தி முதலானவர்களுடைய குணதிசயங்களும், அரசு செய்யும் முறைமையும், அவர்களால் அந்தந்தத் தேசத்தார்களுக்கு உண்டாகும் சௌக்கியாசௌக்கியங்களும் சமாசாரப் பத்திரிகை மூலமாகத் தெரிய வருகின்றன. அவைகளைக் குறித்து நாம் வாதிக்க வேண்டிய ஆவசியகமில்லை.

நம்மைப் பரிபாலித்து வருகிற பிரித்தானிய துரைத்தனத்தாரைக் குறித்து நமக்குத் தெரிந்த மாத்திரம் பேசுவோம்: மேற்படி துரைத்தனத்தாருடைய சுகுணங்களும், அவர்கள் தங்களுக்கு நெடுநாளாகச் சுவாதீனப்பட்டிருக்கின்ற இங்கிலாந்து முதலான தேசங்களை அரசாளும் முறைமையும் என்னவென்று சொல்லுகிறது!

ஆங்கிலோ தேசத்தில் மகிமை தங்கிய பிருன்ஸ்விக் வமிசத்தில் வலம்புரிச்சங்கில் உற்பவித்த அழகான ஆணி முத்தைப் போலத் தோன்றி, விக்டோரியா என்று சிறந்த பெயர் பெற்ற அருமைத் துரைமகள் பட்டம் தரித்துக் கிரீடதாரியாய்ச் செங்கோல் ஏந்திச் சிங்காதனத்தில் வீற்றிருக்க, அவ்வரசிக்குப் பிரதான மந்திரியாகப்

பால்மர்ஸ்தன் பிரபுவும், இந்திய மந்திராலோசனைச் சபைத் தலைவராக ஸ்ரீகரோல்ஸ் ஊட் என்பவரும், அங்கிங்காசனத்தின் இருபக்கத்திலும் அடுத்திருக்க, பல வகைப் பார்லிமெண்ட் சபை யாரும், ஆங்கிலோ இந்திய மந்திராலோசனைச் சபையாரும் நிறைந்திருக்க, மாட்சிமை பொருந்திய கானிங்பிரபு என்னும் கவர்னர் ஜெனரல் முதலானவர்களும் இசைந்திருக்க, இந்தியாவின் தலைப்பட்டணமாகிய கல்கத்தாவை உள்ளிட்டிருக்கின்ற பங்காளம், சென்னப்பட்டணம், பம்பாய், ஆந்திரா என்னும் நான்கு ராச்சியங் களின் தலைவர்களாகிய கவர்னர்களும், லெப்டினெண்டு கவர்னர் களும், நீதிபதிகளாய் அங்குள்ள ஜட்ஜுகளும், அரசிறை விசாரணைக் கர்த்தர்களாகிய அக்கவுண்டண்டு ஜெனரல்களும் பொக்கிஷத் தலைவர்களாகிய திரஜரர்களும், ஜில்லாக்கள்தோறும் அரசிறை சேகரிக்கும் கலெக்டர்களும், அதிகாரஸ்தர்களாகிய வெவ்வேறு போலீஸ் கமிஷனர்களும், மற்றும் உயர்வும் தாழ்வுமாகிய பற்பல துரைத்தன உத்தியோகம் பார்ப்பவர் களும் கிரமமாக ஏற்பட்டிருக்க, குதிரை ராணுவங்கள், ஒட்டக ராணுவங்கள், பீரங்கி ராணுவங்கள், அவ்வவ்விராணுவங்களில் வெவ்வேறுயுள்ள சேனைத் தலைவர்களாகிய ஜெனரல், கர்னல், மேஜர், காப்டன் முதலானவர்களும், ஒவ்வொரு காவலாயிருப்பது மன்றி, ஆவசிகமான பொழுது யுத்தசன்னத்தராய் ஆயுத முஸ்திப்புடனே போர்க்கோலம் கொண்டு அந்நிய தேசங்களுக்குத் தண்டெடுத்துப் போய், அரசர்க்குரிய சதுர்வித உபாயங்களில் சாம தான பேதங்களால் கைவசமாகாத பகைவர்கள், ‘சடை யைப் பிடித்திழுத்தால் சந்நியாசி கிட்ட வருவான்’ என்பதாக, தண்டோபாயத்தைச் செய்தால் இணங்குவார்கள் என்று அவர் களுடைய கோட்டைகளை முற்றுகை செய்ய, அது நோக்கி அவர்கள் கடற்கரை மணல் போல அளவிறந்த சேனைகளோடு திரண்டு எதிர்த்த சமயத்தில், ‘கிரைத்தண்டு பிடுங்க ஏலப்பாட்டும் பாட வேண்டுமா? ஆயிரங்காக்கைக்கு ஒரு கல்லே போதும்,’ என்ப தாக, சில பிரங்கிகளைக்கொண்டு குண்டுப் பிரயோகம் செய்து நாசமாம்படி ஜயித்து, ஜயபேரிகை முழக்கி, பல தேசங்களில் தங்கள் வெற்றிக்கொடியை நாட்டி, பல தேசத்தார் கையில் கப்பம் வாங்கி வர, யாதொரு தவறும் வாராமல் கட்டுக்காவலுடனே அரசாட்சி நடந்து வருகிறது.

மேலும், இந்தத் துரைத்தனத்தார், அச்சிட்டுப் பிரசித்தம் செய்யப்படும் பற்பல சமாசாரப் பத்திரிகைகள் மூலமாய் அந்தந்த ராஜ்யங்களில் நடக்கும் சகலமான செய்திகளையும் இருந்தவிடத்தில் இருந்தே அன்றன்று அறிந்துகொள்ளுகிறார்கள். இவர்கள் கோலின் கீழ் அமைந்திருக்கும் பிரஜைகளுக்குப் பலப்பல நன்மைகள் விளைவிப்பதற்கு நல்ல நல்ல சட்டங்கள் அப்போதப்போது உண்டாக்கப்படுகின்றன; இதற்காகவே கல்கத்தாவில் லெஜிஸ் லேட்டிவ் கௌன்சில் என்னும் சட்ட நிரூபண சபையும், கவர்ன்

மெண்டுகள்தோறும் மந்திராலோசனை சபைகளும் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் நானா விஷயங்களையும் நன்றாய் ஆராய்ந்து நடத்தும்பொருட்டு அததற்குத் தனித்தனியே எண்ணிறந்த சங்கங்களும் இருக்கின்றன. அந்நாளிலுள்ள துரைத்தனங்கள் பெரும்பாலும் 'அச்சில்லாமல் தேரோட்டுவது போலவும், புருஷனில்லாமல் பிள்ளை பெறுவது போலவும்' ஒரு சமாசார பத்திரிகையாகிலும், இப்படிப்பட்ட திறமான சட்ட சபைகளாகிலும் இல்லாமலே நடத்தப்பட்டன. அஃதென்ன, கண் தெரியாமல் வழி நடக்கிற தாகவல்லவோ இருக்கும்? 'சாட்டையில்லாப் பம்பரத்தை ஆட்ட வல்லாருமுண்டா?'

உத்தியோகம்

எல்லாவிடங்களிலும் சாஸ்திரக் கல்விகளும், பலவிதத் தொழிற் கல்விகளும் கற்றுத் தேறினவர்களைப் பரீக்ஷித்து, பி. ஏ., எம். ஏ., முதலிய பட்டங்களும், தக்க உத்தியோகங்களும் இஷ்டமாய்க் கொடுக்கப்படுகின்றன. 'கொட்டிக் கிழங்கு கிண்டி எடுக்கிறவளுக்குக் கோயிலில் வந்து ஆடத் தெரியுமா?' அதுபோல, அக்காலத்திலிருந்த சில உத்தியோகஸ்தரால் இவ்விதப் பரீக்ஷை கொடுக்க முடியுமா? ஆங்கிலேயர் மட்டுமன்றி, இந்துக்களும் ஈஸ்திந்தியரும் மகமதியருமாகிய அனேகரும் பிராட்டு விவாகனென்னும் சதரமீன், பிரின்சிபல் சதரமீன், நேட்டிவ் ஜட்ஜ், கமிஷனர், உபகலெக்டர், தாலூகா முன்சிப், கோர்ட்டுப் பண்டிதர், கோர்ட்டுத் துபாஷி, சிரெஸ்ததார், ஆபீசு மானேஜர், ராணுவ சுபேதார், ஜமேதார், லிகிதர், திரான்சிலேட்டர் முதலிய உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் ஆக்கப்படுகிறார்கள்.

பிறவிக் குருடனுக்குத் தெய்வம் கண் கொடுத்தது போல, ஏழைகளாகிய தொழிலாளிகளுக்கும் இருப்புப் பாதை முதலிய ஸ்தானங்களில் மாறுமல் வேலை கிடைத்து வருகிறது. அது முகாந்தரமாக அவர்கள் பணம் சம்பாதித்துச் சீராய் ஜீவனம் பண்ணி வருகிறார்கள். அதனால் அரிசி விலை நெல்லு விலையும் விசாரிக்கிறதில்லை. குறைவாய் இருக்கிறதேயென்று அவர்களுக்கு விசனமுண்டாகிறதில்லை. கூலிக்காரர்களுக்குள்ளும் எண்ணிறந்த பெயர் மோரிஸ் முதலிய பரதேசங்களுக்குப் போய்ப் பாடுபட்டுப் பொருள் தேடுகிறார்கள். 'கெட்டவன் பட்டணம் சேர வேண்டும்,' என்ற பழமொழிப்படி, இந்தச் சென்னை முதலிய நகரங்களுக்குள்ளும் அனேகர் பிரவேசித்து வேலை செய்து அதிக பிரயோசனம் பெறுகிறார்கள். இக்காலத்தில எவர்களும் உத்தியோகத்துக்கு 'உமேது' செய்ய வேண்டுவதில்லை. படித்துப் பரீக்ஷை கொடுத்தவர்கள் வலுவில் அழைத்து உத்தியோகம் செய்விக்கப்படுகிறார்கள். 'அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்,' அல்லவா? மேலும், ராஜபக்ஷமுடையவர்களுக்குக் கவர்னர் ஜெனரலானவர், 'கில்லத்துக்' கொடுப்பதன்றி மானியமும் விடுகிறார்.

சகித்தல்

எளியவனுகிய இழிகுலஸ்தனும் சிறப்பாக உடுத்து, வாகனப் பிரதிஷ்டையுடனே எங்கும் உல்லாசமாய்ப் போக்கு வரவு செய்ய லாம். அதைக் குறித்து ஆரும் ஏனென்று கேட்கக்கூடாது. கவர்னர் ஜெனரல் முதலானவர்கள் எதிரே வந்தாலும், 'நம்மைக் கண்டு இவன் விலகவில்லையே!' என்று சீற்றம் கொள்ள மாட்டார்கள். அவர்கள் மனத்தில் அணுவளவாவது மாச்சரியம் உண்டாகாது.

சகியாமை

கருநாடக துரைத்தனத்தில் என்ருலோ, ஒருவன் அப்படி வரக் கண்டால், எந்தச் சாமானியத் துருக்கனும், 'ஹரே பக்ளோ! பக்ளோ! மாறு! மாறு!' என்பானேயொழியச் சகிப்பானு? 'உண்ணுமல் ஊரெங்கும் திரியலாம்; உடுக்காமல் ஒரு வீட்டுக்கும் போகலாது,' என்பதனுல், ஆராவது அவர்கள் பார்வைக்கு முன்பாகச் செவ்வையாய் உடுக்கவும், பெரிய வீடு கட்டவும் கூடுமா? பிச்சைக்காரர் வேஷம் பூண்டல்லவோ திரிய வேண்டும்? அவர்கள் துரைத்தனத்தில் ஏதுக்கும் உதவாத ஒருவனே உயர்ந்த உத்தியோகத்தில் ஏற்படுத்துவார்கள். அதில் அவன் கொஞ்சம் தலையெடுத்தது கண்டால், 'ஏறவிட்டு ஏணியை வாங்குவது,' போலவும், 'சோற்றைப் போட்டுத் தொண்டையை நெரிப்பது,' போலவும், நிர்நிமித்தமாகக் குற்றம் சார்த்தி, உடனே அதைவிட்டு நீக்கிவிடுவார்கள். 'கல்யாண வீட்டிலேயே பந்தற்காலைக் கட்டி அழுகிறவள் கருமாந்தர வீட்டில் அழாமலிருப்பாளா?' அது போலக் குற்றமில்லாதவர்களையே தண்டிக்கிற அவர்கள், குற்றவாளிகளைத் தண்டியாமல் இருப்பார்களா? அன்றியும், 'ஜாதி மானமும் சமயாபிமானமும் சந்நியாசிக்கும் போமா?' என்பதை அவர்கள் நினைக்கிறதே இல்லை. அவரவர், 'குலாசாரத்தைக் குழைகறியாக்கி, மதாசாரத்தின் வாயில் மண்ணடிக்க வேண்டும்,' என்பதே அவர் களுடைய நோக்கம்.

நாகபட்டணம், சதுரங்கபட்டணம், தூற்றுக்குடி, கொழும்பு, யாழ்ப்பாணம் முதலானவைகளைக் கட்டியாண்ட உலாந்த ருடைய ஆளுகையில் இந்து மதஸ்தர், மகமதிய மார்க்கத்தார், உரோமசமயத்தார் தங்கள் தங்கள் மதச் சடங்குகள் செய்யக் கூடாது. செய்தவர்களுக்கு அபராதம் போடுவார்கள். முழங் காலுக்குக் கீழே தொங்கச் சொக்காய் போடக்கூடாது. அந்தப்படி வேஷ்டியும் உடுக்கலாகாது. தங்கள் சபையில் சேராதவர்களை உத்தியோகத்தினின்று விலக்கிவிடுவார்கள்.

பாளயக்காரர் காலத்தில் தேசத்தில் ஆராயினும் பச்சென் றிருக்கக் கண்டால், சிலர், 'பச்சை கண்டால் ஒட்டடி மகளே,'

என்பதாக, தங்கள் கையின் கீழிருக்கிற துஷ்டர்களாகிய பழம் பெருச்சாளிகளை உபாயமாய்ப் போய்க் கன்னமிட்டுத் திருடி வரச் சொல்ல, அவர்கள் ராத்திரியில் முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி குத்திக்கொண்டு, பந்தத்தைக் கொளுத்திப் பிலுபிலென்று சென்று குட்டிச் சுவரேறிக் குதித்து, உள்ளே நுழைந்து வீட்டைக் குளம் பறித்துக் கையில் அகப்பட்ட மட்டும் சுற்றிக்கொண்டு தாண்டி விடுவார்கள். 'ஒரு சந்திப்பானையை நாயறியாது!' அது போல, இந்த மூர்க்கர்கள் நல்லோர் பெரியோர்களை அறியார்கள். அற்பக் குற்றம் செய்தவர்களையும் சித்திரவதையாகக் கடுங்கொலை செய்வார்கள். 'குரங்கின் கையில் கொள்ளி கொடுத்தது' போல, இந்தப் பாவி மக்களுக்கு அதிகாரம் கொடுத்தவர்கள் ஆரோ! தெரியவில்லை.

ஹைதர் அலியின் காலத்தில் நடந்த துன்மார்க்கத்தைச் சொல்லத் தொடங்கினால் பெரிய பாரதமாகவல்லவோ விரியும்! அக்கொடியன் தன் படை வீரர்களுக்குச் சம்பளம் கொடாமல், 'இராச்சியத்தில் கொள்ளையடித்து ஜீவனம் பண்ணுங்கள்,' என்று ஏவுவான்! அவர்கள் ஏறக்குறைய எழுபதினாயிரம் எண்பதினாயிரம் பெயர்கள் தலைக்கொரு நாட்டுத்தட்டுத் தேடிப் பிடித்து ஏறி, பல திசையிலும் போய், ஆண் சிறை பெண் சிறை பிடிப்பார்கள். அனேகரை மரக்கிளையில் தலைகீழாகத் தூக்கி, அடியில் நெருப்பைப் போட்டுக் கொளுத்தி, மூக்கில் மிளகாய்ச்சாறு வார்த்து, கத்தியால் சிலிர்க்கச் சிலிர்க்க வெட்டி, வைப்புச் செப்புக்களைக் காட்டச் சொல்லி, உள்ளதையெல்லாம் செப்பனிட்டுக்கொண்டு, கோயில்களுக்குள்ளும் புகுந்து, விக்கிரகங்களையும் ஆராதனைத் தட்டுமுட்டுக்களையும் வாரியெடுத்துக் கொண்டு, 'தாமதித்திருந்தால் ஆர் வந்து வளைத்துக்கொண்டு உதைக்கிறார்களோ!' என்கிற அச்சத்தினால், அவ்விடத்தில் நில்லாமல் அதி சீக்கிரத்தில் காற்றுப்போல் பறந்து போய்விடுவார்கள். இப்படி நடப்பது கண்டு சில சமயத்தில் ஆங்கிலேயரும் அவர்களைத் துரத்தியடித்தார்கள். இக்காலத்திலோ, அவ்வகையான உபத்திரவம் சொப்பனத்திலும் இல்லை. ஒன்று கேளும்; 'தன் பெண்டாட்டியைத் தான் அடிக்கிறதற்குத் தலையாரி கையில் சீட்டுக் கேட்டு வாங்க வேண்டுமா?' அந்தப்படி இந்தத் துரைத்தனத்தார் தங்கள் ஆளுகையின் கீழிருப்பவர்களை அடக்க வேண்டுமானால், இவர்களுக்குப் பிரயாசமென்ன? சகலமானவர்களும் தத்தம் குலாசார மதாசாரங்களைத் தழுவி நடப்பதைக் குறித்து இவர்கள் சிறிதும் அசுயைப்படாமலே இருக்கிறார்கள்.

விபட்சன்: இந்த ஆங்கிலேய துரைத்தனத்திலும் சாஸ்திர யுக்தமாகிய உடன்கட்டை ஏறுவது, தீக்குளிப்பது, செடிலாடுவது முதலானவைகளும், மற்றும் சில சடங்குகளும் தவிர்க்கப்பட வில்லையோ?

கடுரவதை விலக்கல்

சுபட்சன் : கணவனிறந்த பொழுது மனைவி சக கமனம் (உடன் கட்டையேறல்) அல்லது, அக்கினிப் பிரவேசம் பண்ணுகிறது சாஸ்திரீயமாயிருந்தும், கடூரவதையாய் இருப்பதுபற்றி நிறுத்தப்பட்டது. வடக்கே, பெற்ற பிள்ளைகளை இரக்கமின்றி மனந்துணிந்து தாய்மார் எடுத்துக் கங்கையில் எறிவதும், சில தேசங்களில் பிராணபாயத்திற்கு ஏதுவாகிய செய்கை இதுவென்று நினையாமல் மனிதர்களுடைய உடம்பு பதைபதைக்க முதுகிலே இருப்புத் துறடுகொண்டு உருவக்குத்தி உயரத் தூக்கிச் செடிலாட்டுவது முதலிய வழக்கமும் தவிர்க்கப்பட்டன. எவன் எப்படிப்பட்ட செய்தற்குரிய குற்றம் செய்தாலும், 'தலைக்கு மிஞ்சின ஆக்கினை என்ன இருக்கிறது?' என்று அவனுக்குத் தூக்குக்கு மேற்பட்ட தண்டனை விதிக்கிறதற்குச் சட்டமேயில்லை. இவ் விதத்திலேயே இந்தத் துரைத்தனத்தார் ஜீவகாருணியமுடைய வர்களென்பது விளங்கவில்லையா? வெகு காலமாய் ஒழியாத வலங்கை இடங்கைக் கலகம், துஷ்டராத்துமாக்கள் கும்பு கூடியிருந்து, போகிறவர்கள் வருகிறவர்களைக் கண்டவிடத்தில் அடித்துப் பறிக்கிறது, காதை மூக்கை அறுக்கிறது, தலையை வெட்டிப் புதைக்கிறது, குடலைக் குத்திச் சரிக்கிறது, தீவட்டித் திருடர் உபத்திரவம் இவை முதலான சங்கடங்கள் அனைத்தும் நாளாவட்டத்திலே தொலைந்து போயின; தர்மம் தலை எடுத்தது; நீதி நிலை பெற்றது; சாந்தம் தழைத்து விளங்கியது; உண்மை உயர்ந்தோங்கியது; தேசாபிமானமும் செழிக்கின்றது. இனி, 'திருக்கண்ட கண்ணுக்குத் தீங்கேயில்லை,' என்பதாக, எந்த வேளையிலும் மலைகள் மரங்கள் புதர்கள் அடர்ந்து இருள் சூழ்ந்த ஜன சஞ்சாரமில்லாத காட்டிலும் நிர்ப்பயமாக இருகையிலும் பொன் ஏந்திக்கொண்டு போகலாம். ஆயிர நக்ஷத்திரம் கூடினாலும் ஒரு சந்திரனுகுமா? அது போல மற்றைத் துரைத்தனங்களெல்லாம் இந்தத் துரைத்தனத்திற்கு ஈடாமா? இதுவே தர்ம துரைத்தனம். இதை வருத்து உரைக்க என் ஒரு நாவினாலே முடியாது.

விபட்சன் : இந்த ஆங்கிலேயருக்கு இத்தனை பிரபலமான கல்வியும், அதிசயிக்கத்தக்க யுத்தியும், அசாத்தியமான வல்லமையும், சமயோசிதமான ராஜதந்திரமும், தகுதியான செல்வமும், மிகுதியான நாகரிகமும் பூர்விகமாய் உண்டென்று எனக்குத் தோன்றவில்லை; சில காலமாகத்தான் உள்ளன போலக் காண்கின்றன.

சுபட்சன் : அதற்கு ஐயமென்ன? ஆங்கிலேயருக்குள் நல்ல பாரமார்த்திகரைக் கேட்டால் அவர்களும், 'ஆதியில் எங்களுக்குச் சீர்திருத்தமில்லை; வெகு நாளுக்குப் பின்புதான் அது முளைத்து, வரவரக் கிளைத்து, காலக்கிரமத்திலேயே வளர்ந்து, முந்நூறு

வருஷமாக நன்முயற்சி தழைத்தோங்கி வருகின்றது ; புராதனம் அல்ல' என்றே ஒளியாமல் சொல்லுவார்கள். இந்த ஒரு விஷயத்தி னுலாவது முற்காலமன்றிப் பிற்காலமே நல்லதென்பது தெரிய வந்ததா ? நீர் இது வரையில் முற்காலம் முற்காலமென்றே முறை யிட்டு வந்தீரே ! இப்பொழுது என் வழிக்கே வந்துவிட்டீர் ! 'குடலறுந்த நரி எவ்வளவு தூரம் ஓடும் ?'

விபட்சன் : 'உம்மைப் போல எனக்கு அதிக அனுபவமில்லை. உம்மாலே அபார சந்தேகமெல்லாம் நிவர்த்தியாகி அனேக விஷயம் விளக்கமாய்த் தெரிய வந்தன. இன்னும் சில கேள்வி கேட்க விருப்பமாயிருக்கிறது. சற்றே முகம் கோணுமல் தயை செய்ய வேண்டும்.

சுபட்சன் : எவர்களும் தாயினுடைய கர்ப்பத்தில் இருக்கும் பொழுதே கற்றுக்கொண்டு வருகிறதில்லை. 'பட்டறி ; கெட்டறி : பத்தெட்டு இறுத்தறி,' என்பதற்கிசைய உலகத்தில் பலவிடங் களிலும் உழன்று பயின்றுதானே அறிய வேண்டியிருக்கிறது ? ஆகையால், சுகமாய்க் கேளும் ; தெரிந்தமட்டும் சொல்லுகிறேன்.

விபட்சன் : ஆங்கிலேயர் இப்படிக்கெல்லாம் சர்வோத்தமராய் இருக்க, இவர்களைக் குறித்து, 'குயவனுக்குப் பல நாளைய வேலை ; தடிகாரனுக்கு ஒரு நாழிகை வேலை,' என்பதாகச் சிலர், 'அடா அப்பா ! இவர்கள் பார்த்தால் பசுவும் பாய்ந்தால் புலியுமாய் இருக்கிற குளிர்ந்த கொள்ளிகள். இவர்களை எப்படி நம்பி விசுவா சிக்கிறது ?' என்கிறார்களே ! அஃதென்னை ?

சுபட்சன் : உயர்ந்த மரத்தைக் காற்று மோதுகிறது வழக்கந் தானே ? மேலும், 'அடுக்குகிற அருமை உடைக்கிற பூனைக்குத் தெரியுமா ?' 'லோகோ பின்ன ருசி' என்பதாகப் பல பெயரும் பல விதமாகப் பேசுவார்கள்தாம் ; ஆனலும், இவ்வாறு பேசுகிற வர்கள் பொறுமையுடையவர்களே. இதனுல் ஆங்கிலேயருக்கு இழிவென்ன ? இஃது, 'அக்கினி மலைமேல் கர்ப்பூர பாணம் பிரயோகித்தது போல' அல்லவா ? யாவரேனும் சுபாவத்தில் அடக்கமுடையவர்களாகவே இருக்க வேண்டும். காரியத்தளவில் அப்படி இருக்கக்கூடுமா ? கண்டிப்பாய் இருக்க வேண்டுவது நியாயந்தானே ! இருந்தாலோ, 'யதார்த்தவாதி வெகுஜன விரோதி' என்பதாய்த்தான் முடியும் ; ஆதலால், 'சொல்வள மில்லாத நற்கதை சொன்னலும், அதுவே துர்க்கதை,' என்பதாக அதை விட்டுவிட்டு வேறெதையாவது பேசும்.

விபட்சன் : சுதேச ராஜாக்களுடைய ராஜ்யங்களை எல்லாம் ஆங்கிலேயர் பேராசை கொண்டு அபகரித்துக்கொண்டார்களே ! தர்மமா ? இஃது 'ஊராருடைமைக்குப் பேயாய்ப் பறக்கிற' கதையாய் முடியாதா ?

சுபட்சன் : சுதேச ராஜாக்கள் விஷயத்தைப் பற்றி முன்னமே சொன்னேனே ! இன்னமும் சிறிது சொல்லுகிறேன் : மேற்படி ராஜாக்கள் அரசியற்றும் திறமையில்லாமலே ராச்சியத்தை இழந்து போனார்கள். அந்த மட்டில் அவர்களை ஆங்கிலேயர், 'சட்டி சுட்டது கை விட்டது,' என்பதாக, மற்றைத் துரைத்தனத் தாரைப் போல அனுதரணை பண்ணிக் கைவிடாமல், மனமிரங்கி அவர்களுக்குக் கூடிய மாத்திரம் உதவி செய்துதானே வருகிறார்கள் ?

விபட்சன் : 'தோலிருக்கச் சுளை விழுங்கி' போல, அவர்களுடைய தேசங்கள் எல்லாவற்றையும் ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொண்டு, வியாஜத்துக்காக அவர்களுக்குக் கொஞ்சம் பொருளை மந்திரிக்கிறது போலக் கைகாட்டி வருகிறார்களே ! இதுதானு உதவி செய்கிறது ?

சுபட்சன் : 'சும்மா இருக்கிற அம்மையாருக்கு அரைப் பணத்துத் தாலி போதாதா ?' என்பதாக, முழுமையும் கை விட்டவர்களுக்குப் பிராண ஆதாரமாக அவ்வளவு கிடைத்து வருகிறது எவ்வளவு விசேஷம் ? அதைவிடக் கூடைகூடையாக வாரிக் கொடுப்பார்களோ ?

விபட்சன் : இந்தக் கவர்ன்மெண்டார் இந்தியாவில் சில எளியவர்கள் வெகுகாலமாய் இனமாக அனுபவித்து வந்த மானியங்களை, 'பிச்சைக்காரன் சோற்றில் சனீசுவரன் புகுந்தது போல' அவர்களுக்குச் சிறிதும் சுதந்தரமில்லை என்பதாக நிறுத்திவிட்டார்களே ! இஃதென்ன நியாயம் ?

சுபட்சன் : அப்படியன்று ; ஐம்பது வருஷத்திற்குக் குறையாத அனுபவமும், தக்க காரணங்களோடு இசைந்த சாஸனங்களும் இல்லாதவைகளைத் தள்ளினார்கள். அன்றியும், ஒருவனுக்குரியது வேறொருவனுக்குச் சுவாதீனமாய் மாறுபட்டுச் சந்தேகத்திற்கும் சங்கடத்திற்கும் இடமாய் இருந்ததனால் அவர்கள் தமது புத்தி விசேஷத்தால் அதைப் பூராயமாக ஆராய்ந்தறிந்து, அச்சங்கட முதலானவைகள் நிவாரணமாக, இனம் சாஸனங்களைப் புதுப்பித்து ஸ்திரப்படுத்தினார்கள். இப்பொழுது ஆக்டுகளும் ஒழுங்கு படுத்தப்பட்டு வருகின்றன. அரசு நடத்துவதென்ன, எளிதா ? அதற்கு முக்கிய சாதனமாகப் பூரண வித்தியா சாமர்த்தியமும், சூட்சுமபுத்தியும், தொன்றுதொட்ட அனுபவம் முதலியவைகளும் வேண்டுமே ! இவ்விஷயத்தில் நமது சென்னைக் கவர்னரவர்களைக் குறித்துச் சொல்ல வேண்டுவதேயில்லை.

விபட்சன் : இந்தச் சென்னை ராஜதானிக்குக் கவர்னராய் வந்திருக்கிற ஸ்ரீ கரோலஸ் டிரிவெலியன் என்பவருடைய குணாதிசயம் எப்படிப்பட்டது ?

சுபட்சன் :

"அறம்நி ரம்பிய அருளுடை அந்தணர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்."

என்று சொல்லப்பட்டிருந்தும், மேன்மேலும் தனவானும் கனவானுமாகிய நமது கவர்னரவர்களிடத்தில் எவ்வளவாவது அப்படிப்பட்ட வீணை பெருமித குணம் இருக்கின்றதா? இவர் நிகர்வியாய்,

" காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்."

என்பதை உணர்ந்து, தேசத்தார் சுலபமாகத் தரிசிக்கத் தக்கவ ராயும், ஏழைகளிடத்திலும் கடுமையில்லாமல் தாழ்மையாய் முகமலர்ந்து வசனிப்பவராயும் இருக்கின்றாரே! இஃது ஆச்சரிய மல்லவா?

விபட்சன் : பிரான்சியர், ருஷியர், சீனர், ஆஸ்திரியர், அமெரிக்கர், உலாந்தர், போர்த்துகீசர், ஸ்பானியர், ஜர்மானியர் முதலானவர்கள் ஆளும் தேசங்களிலும் ஆங்கிலேயர் அரசாளும் தேசம் மிகவும் அதிகமல்லவா?

சுபட்சன் : ஆம், ஆம்! ஆங்கிலேயர் அவர்கள் எல்லாரைப் பார்க்கிலும் மகா பராக்கிரமசாலிகளாகையால், 'பலோ ராஜா பிருதிவி' என்பதாக, இவர்கள் சுவாதீனத்தில் எண்ணிறந்த தேசங்கள் உட்பட்டிருக்கின்றன. பற்பல தேசங்களும் நமது ஆங்கிலேய மகாராஜாத்தியின் அழகிய வெண்கொற்றக் குடை நிழற்கீழ் அடங்கியிருக்கின்றன என்பதற்குப் பிரத்தியக்ஷமாக, அந்தப் பற்பல ராச்சியத்தாருடைய விசித்திரமான கொடிகள் யாவும் ஒவ்வொரு விசேஷ தினத்திலும் இங்கிலாந்தில் மாத்திர மன்றி, இந்தியாவிலும் கல்கத்தா முதலிய ராஜதானிகளின் உன்னதமாகிய கோட்டைக் கொடிக் கம்பங்களிலெல்லாம் தோர் சிங்காரித்தது போல அடுக்கடுக்காக ஏற்றி அலங்கரிக்கப்பட்ட அவையீனத்திற்கும் மேலாகத் தருமச் செங்கோல் செலுத்தி வரும் இந்தப் பிரித்தானிய துரைத்தனத்தாரின் மகிமை தங்கிய கொடி ஏற்றப்பட்டுப் பிரகாசிக்கின்றதே! இதைவிட வேறு திருஷ்டாந்தமும் வேண்டுமா? 'சந்தையில் அடித்ததற்குச் சாக்ஷியேன்?'

விபட்சன் : அப்படியா! இத்தன்மையாகிய ஆங்கிலேய அர சாட்சியானது இடையூறின்றி நெடுங்காலம் நிலைபெற்றிருக்கு மானால், இவர்கள் கோலின்கீழ் அமைவுற்றிருக்கும் சர்வ ஜனங் களுக்கும் பரம்பரை பரம்பரையாய் ஆச்சந்திரார்க்கம் விசேஷித்த நன்மை உண்டாகும் என்பதற்குச் சந்தேகமில்லை அல்லவா?

சுபட்சன் : மெய்தான். அது சர்வஜீவதயாபரரும் ஜகத் காரணருமாகிய கடவுளின் சங்கற்பத்தாலல்லவோ அனுகூலிக்க வேண்டுவது ? தெய்வச் செயலில்லாமல் பொழுது விடியுமா ? அஸ்தமிக்குமா ?

விபட்சன் : அப்படியே அனுகூலிக்கக் கடவுள் திருவுளம் பற்றுகிறதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் ? சொல்லும்.

சுபட்சன் : அவர் ஆபத்பாந்தவரும் பக்தபராதீனருமாய் இருப்பவராகையால், அந்தப் பரமாத்துமாவை நோக்கிப் பிரார்த்தித்தால், நமது அபீஷ்டப்படியே திருவுளமிரங்கிக் கிருபை செய்யக் கூடும்.

விபட்சன் : 'அப்படியே நாம் பிரார்த்தனை செய்வோம்!' என, பிறகு இருவரும் ஒரு மனப்பட்டு ஆங்கிலேய அரசாட்சி தழைத்தோங்கி நீடுழியாய் அழியாது நிலைபெற்றிருக்க வேண்டுமென்று சச்சிதானந்த நித்திய பரிபூரணராகிய கர்த்தாவை மன மொழி மெய்களால் தியானித்து வாழ்த்தி வணங்கி உய்ந்திருந்தனர்.

[இந்தக் கதை பாமரரும் பண்டிதரும் விரும்பிப் படிக்கத்தக்க சிறந்த கதையாகும். இதில் கூறப்படும் செய்திகள் வரலாற்று ஆராய்ச்சிக்குப் பொருத்தமாகத் தோன்றுவிடினும், கற்பனைச் சுவையும் கருத்து வளமும் நிறைந்தனவாய் இருக்கின்றன. தமிழறியும் பெருமாள் முற்பிறவியில் ஓர் இளவரசி. அவளை மணந்த விறகுதலையன் ஓர் இளவரசன். முற்பிறவியில் இவர்கள் இருவரும் தம்பதிகளாய் வாழ முடியவில்லை. விறகு தலையனை இளவரசன் தமிழறியும் பெருமாளை மணப்பதற்கு ஏற்படுத்தப் பட்ட நிபந்தனைகள் மிகவும் கடின மானவை. விறகு தலையனே, விடாப் பிடியாய் அவளை மணக்க உறுதி கொண்டான். மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் நக்கீரரின் அமுதத் தமிழ்ப் பாடல்கள் அவன் ஆவலை நிறை வேற்றின. இதுதான் கதை. கதையிலே உள்ள ஓட்டம், பாடல்களிலே உள்ள பொருள் நயம், படிப்பவரைத் திடுக்கிடச் செய்யும் சில சிக்கல்கள் ஆகியவற்றால் இப்பகுதி விறுவிறுப்பாய் விளங்குகிறது.

— பதிப்பாசிரியர்]



21

தமிழறியும் பெருமாள்

அளகாபுரி என்றொரு பட்டணமுண்டு. அதிலே அளகேஸ்வரன் என்றொரு இராசன் இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்தான். அவனுக்கு ஏலங்குழலாள் என்றொரு குமாரத்தி பிறந்தாள். அவள் பன்னிரண்டு வயதிலே சகல கலையும் கற்று வெகு ரூபலாவண்ணிய சவுந்தரியாய் மிகுந்த செல்வவதியாகி

ஏழுநிலை மாடத்தின்மீது இருந்துகொண்டு தன்னுடைய தோழி மாரும் தானுமாக விளையாடிக்கொண்டிருந்தாள். இஃதிவ்வாறுக, பாடலிபுரத்திற்கு அதிபதியாயிருந்த பத்திரகிரி ராசாவுக்குச் சந்தனகுமாரன் என்றொரு பிள்ளை இருந்தான். ராசா பள்ளிக்கு வைத்து மிக்க பிரயாசை எடுத்துக்கொண்டும் சிறிதேனும் கல்வியில் விருத்தியடையாதிருந்த தன் பிள்ளையைப் பார்த்து, 'இப்படிக் கொத்த கல்வியற்ற மூடப்பிள்ளை இருந்தென்ன போயென்ன?' என்று மனம் சலித்துக்கொண்டான். அந்தப் பிள்ளையும், 'நமக்கு எழுத்து வாசனை இல்லாதபடியினால் அல்லவோ நம்முடைய தகப்பனார் கோபித்துக்கொண்டார்!' என்று மனக்கிலேச முடையவனாய் ஊரை விட்டுப் புறப்பட்டுத் தேசாந்தரம் சுற்றித் திரிந்து, தேசங்களுடைய புதுமைகளும் பார்த்து, ஒரு வருஷம் தேச சஞ்சாரம் பண்ணி, அதன் பிறகு அளகாபுரிப் பட்டணத்தில் வந்து, அந்தப் பட்டணத்துப் புதுமைகளும் பார்த்து, இனி அப்பாலே போக வேண்டுமென்று புறப்பட்டு, ராஜ வீதியில் வரும் போது ராஜமாளிகையை அண்ணாந்து பார்த்தான். அந்த மாளிகையின் மேலே பூரணச் சந்திரன் உதயமானது போன்று, முக மலர்ச்சி யுடன் பந்தடித்துக்கொண்டிருந்த ராஜகுமாரத்தியைக் கண் டான். அந்த ராஜகுமாரத்தியும் பாலசூரியப் பிரகாசமான இந்த ராஜகுமாரனைக் கண்டாள். கண்டவுடனே இருவரும் ஒருவர்மீதில் ஒருவர் காதல் கொண்டனர்.

அப்போது ஒருவரோடொருவர் பேசக் கூடாதபடியினாலே தான் இயற்கையறிவும் கல்வியறிவும் உள்ளவளாகையால் தனது காதோலையை வாங்கிக் கைந்நகத்தாலெழுதி அதனை அவன் முன்பு எறிந்தாள். அதில், "இந்தப் பட்டணத்திற்கு மேலண்டையில் மண்ணூட்டம் என்றொரு திருவாசற்சாவடி இருக்கிறது; அதிலே போயிரும்; இராத்திரிக்கு நான் வருகிறேன்," என்றெழுதி யிருந்தது. அவன் அந்த ஓலையை எடுத்துக்கொண்டு தனக்கு எழுத்து வாசனை தெரியாதபடியினாலே, 'ஆர் கையிலேயாகிலும் கொடுத்து வாசிக்கச் சொல்லுவோம்,' என்று புறப்பட்டுத் தன்னிச்சையால் அந்தத் திருவாசற்சாவடியில் வந்தான். அதிலே ஒரு குஷ்டரோகி இருந்தான். அவனிடத்திற்குப் போய், "உமக்கு எழுத்து வாசனை தெரியுமோ?" என்று கேட்க, அவனும், "எனக்கு எழுத்து வாசனை தெரியும்," என்று சொன்னான். அந்த ஓலையை அவன் கையிலே கொடுத்து வாசிக்கச் சொன்னான். அந்த ஓலைக்குள் எழுதியிருந்த விவரத்தைக் குஷ்டரோகி மனத்திலே வைத்துக்கொண்டு அந்த ராஜகுமாரத்தியைத் தான் அனுபவிக்க வேண்டுமென்று நினைத்து, "ஓ ராஜரே! இந்த அனியாயமான பட்டணத்துக்கு ஏன் வந்தீர்? இந்தப் பட்டணத்துக்குள் என்ன பிழை புரிந்தீரோ தெரியாது. இந்தப் பட்டணத்து அரசன் உம்மைக் கண்டவிடத்திலே சிரச்சேதம் பண்ணச் சொல்லிக் காவலாளிகள் கையில் தனது முத்திரை மோதிரத்தைக் கொடுத்திருக்கிறான்.

அவர்கள் உம்மைத் தேடிக்கொண்டு திரிகிறார்களாம். ஆனு படியினாலே, ராஜகுமாரத்தி உம்மை இந்நேரமே புறப்பட்டு ஓடிப் போகச் சொல்லி எழுதியிருக்கிறாள்," என்று சொன்னான். அந்த விசேஷத்தை ராஜகுமாரன் கேட்டு, 'இது அநியாயமாய் இருக்கின்றதே! நாம் என்ன பாவம் செய்தோம்!' என்று அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் பயந்தோடிப் போனான். அதன் பிறகு குஷ்டரோகியும் எழுந்திருந்து ஒரு கிளிஞ்சில் ஓட்டை எடுத்துக்கொண்டு குளக்கரைக்குப் போய் உடம்பு குளித்து, உடம்பிலே இருக்கிற சொறி போகும்படியாகக் கிளிஞ்சில் ஓட்டினாலே நன்றாகச் சுரண்டிப் பிறகு இலுப்பைப் பிண்ணாக்கும், மஞ்சளும் போட்டுத் தேய்த்துக் குளித்து நன்றாகச் சுத்தி பண்ணிக் கொண்டு, தன்னுடைய கீழ்த் துணியைத் தோய்த்துலர்த்திக் கொண்டு, இருட்டின பிறகு அந்தச் சாவடியிலே வந்து ஒரு மூலையிலே படுத்துக்கொண்டிருந்தான். ராஜகுமாரத்தியும் அன்று ராத்திரி ராஜகுமாரனுக்குச் சாப்பாடும் அதற்கேற்ற பதார்த்தங்களும், கந்த கஸ்தூரி பரிமளாதிகளும் ஆடையாபரணங் களும் ஒரு பெட்டியில் வைத்துப் பெட்டியை மூடி முத்திரித்து, அந்தப் பெட்டியை ஒரு தாதியை எடுத்துக்கொண்டு வரச்சொல்லி, உப்பரிகையினின்றும் நூலேணி விட்டிறங்கி, ஒருவரும் அறியாமல் இருவரும் புறப்பட்டு அந்தத் திருவாசற்சாவடியிலே வந்து பார்க்கு மளவில் மூலையிலே படுத்துக்கொண்டிருக்கிறவனைக் கண்டு, பகல் நாம் கண்ட ராஜகுமாரனென்று ஆசையாகிய காமாந்தகாரத்தி னாலே ஓடி வந்து மூலையிலே இருக்கிற குஷ்டரோகியைக் கட்டிக் கொண்டாள். கட்டிக்கொண்டவுடனே அவனுடம்பு இவளு டம்பிலே பட்டமாத்திரத்தில் சீழும் இரத்தமும் துணியெல்லாம் நனைந்து, அத்திப்பால் தோய்ந்தது போலவும், உடம்பிலே இருக்கிற சொறிகள் பலாக்காய் முள் தைக்கிறது போலவும் இருந்தது கண்டு, அவள் சுயினபடியினாலே அவற்றைப் பொறுமல், 'இவன் பகல் நாம் கண்ட ராஜகுமாரனல்லன்; ஏதோ கபடமாச்சுது,' என்று தன்னுயிரை மாய்த்துக்கொண்டனள். அதைக் கூட வந்த தாதி கண்டு பயப்பட்டுக் கையும் காலும் நடுக்கமெடுத்துக்கொண்டு, 'என்ன செய்யப் போகிறோம்! தெய்வமே! இந்தச் சேதி ராஜா அறிந்தால், 'நீங்கள் இந்த நேரத்தில் இங்கே வந்த காரியம் என்ன?' என்று நம்மை ஆக்கினை பண்ணுவார்!' என்று மிகவும் பயந்து, பெட்டியிலே போட்டுக் கொண்டு வந்த பதார்த்தங்களையெல்லாம் குஷ்டரோகி முன்னே கொட்டிப் போட்டு, அந்தப் பெட்டிக்குள்ளே பிணத்தை எடுத்துப் போட்டுக் கட்டிக்கொண்டு, முன்பு வந்த வழியே நூலேணி மேலேறி உப்பரிகைக்குள் போய்க் கட்டிலின் மீது பிணத்தைப் படுக்க வைத்துப் பிறகு அரசனிடம் போய், "சுவாமி! என்னவோ தெரியாது; இருந்தாற்போலிருந்து உங்கள் குமாரத்தி மரித்துப் போனாள்!" என்று சொன்னாள். அந்த விசேஷம் கேட்டு

ராஜாவானவன் ஓடி வந்து பார்க்குமளவில் நிசமாய் மரித் திருப்பதைக் கண்டு, " என்ன காரணமோ! விஷம் தீண்டிற்றோ! அல்லது பேய் பிசாசங்கள் அறைந்து கொன்றவோ!" என்று வெகுவாய்த் துக்கித்துக்கொண்டு பொழுது விடிந்த பிற்பாடு, பெண்ணைத் தகனம் பண்ணச் செய்யும் கடனெல்லாம் செய்து முடித்தான். அதன் பிறகு பின்னையும் சில நாளைக்குப் பிற்பாடு மூன்னூலே பயந்தோடிப் போன ராஜகுமாரன் இந்த ராஜ குமாரி இறந்து போன விசேஷம் கேள்விப்பட்டு, அப்போது அவனுக்கு நினைவு வந்து, " நமக்காக இறந்தவள் போலக் காணப் படுகிறது; குஷ்டரோகி மோசம் பண்ணிப் பயமுறுத்தினதை நானறியாமல் ஓடிப் போனேன்!" என்று மிகவும் விசாரப்பட்டு அந்தப் பட்டணமே வந்து, அன்றிராத்திரி சாவடியில் போய் விஷத்தை வாங்கிக்கொண்டிறந்தான். பொழுது விடிந்த பிற்பாடு அங்கே இருக்கிற பேர் செத்திருப்பவனைக் கண்டு, " யாரோ வழிப் போக்கன் செத்துப் போனான்!" என்று மசானத்தில் கட்டைகள் கொண்டு போய்ப் போட்டு அந்தக் கன்னியைத் தகனம் பண்ணின இடத்திலேயே அவனையும் எடுத்துக்கொண்டு போய்த் தகனம் பண்ணிப் போட்டார்கள்.

பிறகு இரண்டு ஆவேசமும் அந்தச் சாவடியிலே தங்கள் தங்கள் வினைப் பயன்படி ஒன்றோடொன்று சேராமல் ஆனாவேசம் ஒரு மூலையில் இருக்கும்; பெண்ணாவேசமானது அந்தச் சாவடியிலே ஒருத்தரையும் சேரவொட்டாமல் பயமுறுத்தியிருக்கும். ஆனபடியி னாலே ஒருவரும் அந்தச் சாவடியிலே வந்து சேராதார்கள். இப்படி ஒரு வருஷ காலமாக அந்தச் சாவடியில் சஞ்சரித்துக்கொண்டிருக்கிற போது ஒரு நாள் ஔவையார் எங்கேயோ போயிருந்து அந்தப் பட்டணத்துக்கு வந்தார், வந்தபோது அஸ்தமித்தது. 'இன்றைக்கு இங்கு இராத் தங்கிப் போவோம்,' என்று நினைத்து அவ்விடத்தில் இருந்தவர்களைப் பார்த்து, " இங்கே படுக்க இடம் கிடைக்குமோ?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், " இந்தப் பட்டணத்துக்கு மேலண்டையாக ஒரு சாவடி இருக்கிறது; அதிலே வேண்டிய பேர் படுத்துக்கொள்ளலாம். ஆனால், அதிலே ஒரு பிசாசு இருந்து கொண்டு அங்கே வந்தவர்களை எல்லாம் அடித்துப் போடுகிறது; ஆகையினாலே அதில் சேரப் பயப்படுகிறார்கள்" என்று சொன்னார்கள். ஔவையாரானவர், இந்த விசேஷம் கேட்டு, "பேயைப் பேயடிக்கப் போகிறதோ!" என்று சொல்லி அச்சாவடியில் சென்று படுத்துக் கொண்டார். அந்நேரம் ஆவேசம் அங்கே இராமல் வெளியில் போயிருந்தது. ஔவையார் படுத்துக்கொண்டிருக்கிறதைக் கண்டு மிகவும் ஆங்காரத்துடனே, 'எற்றெற்றெ'ன்று அறைய வருவதைக் கண்டு நித்திரை நீங்கி எழுந்து,

" வெண்பா விருகாலில் கல்லானை வெள்ளோலைக்
கண்பார்க்கக் கையா லெழுதானைப்—பெண்பாலி

பெற்றளே பெற்றுள் பிறர்நகைக்கப் பெற்றுளென்(று)
எற்றேமற் றெற்றேமற் றெற்று.''

என்னும் வெண்பாவைச் சொல்லக் கேட்டு அந்த ஆவேசம் கல்வி கற்ற பேயானபடியினாலே இந்தக் கல்வியின் பொருளை அறிந்து கொண்டு நம்முடைய பூர்வோத்திரம் எல்லாம் அறிந்து சொன்னாள். இவள் தேவியே என்று பயந்து புறப்பட்டுப் போய் இரண்டாம் சாமத்திலேயும், 'எற்றெற்று' என்று வந்தது. அப்பொழுதும் ஔவையார் கண் விழித்துக்கொண்டு,

'' எண்ணா யிரத்தாண்டு நீரில் இடந்தாலும்
உண்ணீரம் பற்றுக் கிடையேபோல்—பெண்ணாவாய்!
பொற்றொடி மாதர் புணர்முலைமேல் சாராரை
எற்றேமற் றெற்றேமற் றெற்று.''

என்று சொன்னதைக் கேட்டு ஆவேசம் மீண்டும் போய் மூன்றும் சாமத்திற்கு, 'எற்றெற்று' என்று வந்தது. அப்போது ஔவையார் விழித்துப் பார்த்து,

'' வான முளதால் மழையுளதால் மண்ணுலகில்
தான முளதால் தயையுளதால்—ஆனபொழு
தெய்த்தோ மிளைத்தோமென் றேமாந் திருப்போரை
எற்றேமற் றெற்றேமற் றெற்று.''

என்று சொல்லக் கேட்டு மீண்டும் போய் நான்காம் சாமத்திலும் 'எற்றெற்று' என்று வந்தது. அப்போதும் ஔவையார்,

'' கருங்குளவி சூரைத்தீ நீச்சங் கனிபோல்
வருந்தினர்க்கொன் றீயாதான் வாழ்க்கை—அரும்பகலே
இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வரென்று
எற்றேமற் றெற்றேமற் றெற்று.''

என்று சொன்னவுடனே இந்த நாலு சாமத்துக் கவியும் பார்த்துக் கொண்டு இந்த ஔவையாருடைய அநுக்கிரகத்தினாலே கதி பெற லாமென்று பூர்வ ராஜகுமாரத்தியாக வடிவுகொண்டு ஔவை யார் பாதத்திலே சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டுக் கைகட்டி வாய் பொத்தி நின்ற போது, ஔவையார் அந்த ஆவேசத்தைப் பார்த்து 'இதன் வாய்ப்பிறப்பைக் கேட்க வேண்டும்' என்று மனத்தில் எண்ணிக்கொண்டு, ''நீ யார்?'' என்று கேட்ட போது அந்த ஆவேசமானது தனக்குற்ற கதியை ஆதியோடந்தமாய்ச் சொல்லிற்று.

அதைக் கேட்டு ஔவையார் மிக்க பரிதாபப்பட்டு, ''உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று கேட்க, அப்பெண்ணாவேசம், '' நான் மறுபடியும் ஜனனம் எடுத்து அந்த அரசிளங்குமாரனுக்கு மனைவியாகிச் சுகித்து வாழ வேண்டும்,'' என்றது. ஔவையாரும்

சந்தோஷமுற்று, "நீ தற்கொலை புரிந்து, இறந்ததைக் கேள்வியுற்ற இராசகுமாரனும் உயிர் துறந்து ஆண் ஆவேசமாகி இங்கேயே இருக்கின்றனன்," என்றனர். அப்போது அந்த ஆண் ஆவேசம் தன் பூர்வோத்தரத்தை அறிந்து சொன்னதற்கு வியந்து, ஔவையார் முன், ராசகுமாரன் தான் தன்னுடைய வடிவத்தோடு வந்து ஔவையார் பாதத்திலே விழுந்து சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு நின்றான். அப்போது ஔவையார் பெண்ணாவேசத்தைப் பார்த்து, "இவனுக்குத்தானே நீ ஆசைப்பட்டது?" என்று கேட்க, அது, "ஆமம்மா!" என்று சொல்லிற்று. அதன் பிறகு அந்தப் பெண்ணாவேசத்தைப் பார்த்து ஔவையார், "உனக்குப் பிரமதேவன் விதித்தது ஐம்பது வயதுண்டு; அதிலே பன்னிரண்டு வயது கன்னியாய் இருந்தாய்; ஒரு வருஷம் ஆவேசமாய் இருந்தாய்; ஆகப் பதின்மூன்று வயது சென்றது; இன்னமுனக்கு ஆயுசு முப்பத்தேழு வருஷம் இருக்கின்றது: இதிலே உனக்கு இருபத்தைந்து வயதளவும் கன்னி கழியக் காரணமில்லை; ஆனபடியினாலே தெற்கே **உறையூர்** என்றொரு பட்டணமுண்டு; அதிலே **கரிகாற்சோழன்** இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கிறான்; அவனிடத்திலே ஆலாத்திப் பெண்கள் பன்னீராயிரம் பெண்களுக்கு முதல்வியான **மரகதவடிவு** என்றொரு பெண்ணுண்டு; அந்த மரகதவடிவு வயிற்றிலே நீ போய் வெகு ரூப சவுந்தரியத்துடனே பிறக்கப் போகிறாய்; நீ பிறந்தவுடனே பட்டணமெல்லாம் சண்பகப்பூ வாசனை பரிமளிக்கும் போது **சோழராசன்** மகள் அதிசயப்பட்டு உன்னைச் சண்பகவடிவு என்று பெயரிடுவாள்; அந்தப் பேரைக்கொண்டு வளருகிற நாளையிலே உன்னுடைய ரூபாதிசயத்தைக் கேள்வியுற்றுச் சந்தோஷப்பட்டு, சோழமகாராசனுவன், நீ பிறந்தபோது மற்றப் பெண்கள் வயிற்றிலும் குழந்தைகள் பிறந்ததுண்டோ என்று விசாரிக்கும் போது 'பன்னீராயிரம் பெண்கள் வயிற்றிலும் பன்னீராயிரம் பெண் குழந்தைகள் பிறந்திருக்கின்றன' என்று சொல்லுவார்கள்; அந்தப் பெண்களையும் உன்னையும் எடுத்துக்கொண்டு வரச் சொல்லி லட்சணக்காரரை அழைப்பித்து லட்சணம் பார்க்கச் சொல்லி அவர்கள் லட்சணம் பார்த்து நன்றாயிருக்கிறதென்று சொல்வார்கள்; அப்போது உன்னைப் பெற்ற தாய் மரகதவடிவை அழைப்பித்து உன்னை நன்றாக வளர்க்கச் சொல்லிக் கட்டளையிட்டு உன்னை ஐந்து வயதிலே பள்ளிக்கு வைத்துச் சகலமான கல்வியையும் கற்பித்து ஏழு வயதிலே ஆடல் பாடலும் கற்பித்திருக்கிற நாளையில் பன்னிரண்டு வயதும் பக்குவமாய் வெகு ரூபவதியாய் இருப்பாய்? ஒரு தினத்தில் சோழராஜன் உன்னை அழைப்பித்து நீ கற்றிருக்கிற வித்தை ஆடல் பாடல்களெல்லாம் பார்ப்பான். தமிழ்ப் பாஷையில் நீ மிக்க தேர்ச்சியடைந்திருப்பாய்; அதைக் கண்டு சோழ மகாராஜன் சந்தோஷப்பட்டு, 'இவள் தமிழுக்குரியவள்' என்று, 'இன்று முதற்கொண்டு சண்பகவடிவு என்கிற பெயர் வேண்டா'

என்று மாற்றித் தமிழறியும் பெருமாள் என்று பெயர் கொடுப்பான்; அப்போது சோழமகாராஜனுடனே நீ சொல்லிக்கொள்வாய்: 'ஐயாவே! என்னுடன் கவிப் பிரசங்கம் பண்ணி என்னிலும் சிரேட்டமானவரைச் சேருவேன்; ஆகாத பேர்களோத் தள்ளி விடுவேன்; எப்படிப்பட்ட மன்னர் மண்டலீகர் வந்தாலும் வந்த வர்கள் கையில் முந்தி ஆயிரம் பொன் வாங்கிக்கொண்டு அதன் பிறகு ஒரு கவியைச் சொல்லி அந்தக் கவிக்குப் பொருள் சொல்ல வகையறியாவிட்டால் அவரை அடித்து ஓட்டிவிட்டுக் கன்னி கழியாமல் தடவைக்கு ஓராயிரம் பொன் வாங்கிக்கொண்டு உண்டு சுகித்திருப்பேன்,' என்று சொல்வாய்; அப்போது ராஜாவும் சந்தோஷப்பட்டு, 'அப்படியே நீ கீர்த்தியடைந்திருந்தால் போதும்' என்று சொல்லி அப்போதே உனக்கு வேறே அரண்மனைக்கு ஏழு மதிலும் அறுபத்துநான்கு வாசலில் வாசலுக்கு வாசல் விநோதம் பண்ணியிருக்கிற வாசலும், கற்றுச் சொல்லிய பெண்க ளிருக்கிற வாசலும், சூத்திரப் பதுமையிருக்கிற வாசலும், புலி யிருக்கிற வாசலும், கரடியிருக்கிற வாசலும், யானையிருக்கிற வாசலும், குரங்கிருக்கிற வாசலும், கோட்டை நாயிருக்கிற வாசலும், கிணறிருக்கிற வாசலும், அந்தக் கிணற்றிலே இழிந்தால் சூத்திரப் பலகை மேலே மூடிக்கொள்ளவும் அது கடந்து அப்புறம் போனால் குங்குமச் சேறிருக்கிற வாசலும், அந்தக் குங்குமச் சேற்றைக் கடந்தவன் கால் க்ழுவ ஆழாக்குப் பனிநீர் வெள்ளித் தட்டில் அக்கரையிலே வைத்திருக்கிறதும், சித்திர மண்டபங்களும், பாரதம், இராமாயணம், அரிச்சந்திரன் கதை, நளராஜன் கதை இப்படிக்கொத்த விசித்திரங்கள் எழுதியிருக்கிற மண்டபங்களும், நீராழி மண்டபமும், பளிங்குமா மண்டபமும், தமிழறியும் மண்டப மும், இயலறி மண்டபமும், இசையறி மண்டபமும், கூத்துப் பார்க்கிற மண்டபமும் இவைகளெல்லாம் அமைப்பித்து, இதற் கப்பால் கோழியுடனே சேவலைக் குத்துச் சண்டைக்கு விடுகிற வாசலும், ஆட்டுக் கடாக்களே பாய்ச்சலுக்கு விடுகிற வாசலும், நாடகசாலை வாசலும், அப்பால் நடுமத்தியிலே வெகு அலங்கார மான கச்சேரி மண்டபமும், அதன் மத்தியிலே களிற்றியானைத் தந்தக் கட்டிலும், பிடியானைத் தந்தக் கட்டிலும் தூங்குமஞ்சமாகச் சோடித்து, அந்தக் கட்டிலைக் கால்மாடு தலைமாடு தெரியாத பாவனையாகப் போட்டுத் தலைமாட்டில் நிலைக்கண்ணுடியும் கால் மாட்டிலே சூத்திரப் பதுமைகளும் ஸ்தாபித்திருக்கும்; அந்தக் கட்டிலின்மேல் கால்மாடு தலைமாடறிந்து படுத்துக்கொண்டால் அந்தப் பிரதிமைகளிலொன்று கால் பிடிக்கவும், ஒன்று கை பிடிக் கவும், ஒன்று விசிறி எடுத்து விசிறவும், பிறிது பாக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கவும், பிறிது தம்பலப்படிகம் ஏந்தவும், இப்படி அனேக காலம் பண்ணிக்கொண்டிருக்கும்; ஒரு வேளை வகையறி யாமல் வந்து கால்மாட்டிலே தலை வைத்துப் படுத்துக்கொண்டால் அந்தச் சூத்திரப் பதுமைகளிலொன்று தலையை வளைத்துப்

பிடிக்கும்; ஒன்று தலையை மழிக்கும்; ஒன்று சாணியைக் கொண்டு வந்து தலை மீதில் வைக்கும்; ஒன்று விளேக்கேற்றி வைக்கும்; இப்படி வேண்டிய விகடங்களெல்லாம் உண்டு பண்ணும்; உனக்குப் பச்சைப் பல்லக்கும் கட்டளையிட்டு நீ பிறந்த போது பிறந்த பன்னீராயிரம் பெண்களையும் உனக்குச் சேவிக்கத்தக்கவராகக் கட்டளை பண்ணி. ரத கஜ துரக பதாதிகளையும் நியமித்து இவைகளெல்லாம் உனக்குச் சரிசமானமாக இருக்கப்பட்ட தோழிமார்களில் இயலறியும் பெருமாள் என்றும் இசையறியும் பெருமாள் என்றும் இரண்டு பேருண்டு; அந்தத் தோழிமாரும் நீயுமாகப் பல்லக்கில் ஏறிக்கொண்டு ஆடல் பாடல் மேளதாளங்கள் முதலாகிய வெகு ஆடம்பரத்துடனே காலைப் போதிலும் நல்ல மத்தியான காலத்திலும் சாயங்கால காலத்திலும் இந்த மூன்று நேரமும் சோழ மகாராஜன் கொலுவிற்குப் போய் ஆடல் பாடல் முதலியவைகளைச் செய்து திரும்பும்படியாகக் கட்டளை செய்து பகலுக்கும் இராத்திரிக்கும் பொழுது போகும்படியாகத் தரும கதைகளைக் கேட்கவும், சகல வேதபுராணங்கள் எல்லாம் கேட்கவும், அதிதிகளுக்கு அன்னம் பரிமாறவும், ஆடையாபரணம் தரிக்கவும், கேளிக்கை பார்க்கவும், பளிங்குமா மண்டபத்தில் ஒரு சமயம் நித்திரை பண்ணவும், இப்படிச் சகலவித ஆடம்பரங்களும் பொருந்தியிருக்கத்தக்கதாகச் சோழராஜா உண்டு பண்ணுவான்.

"இந்தப் பிரகாரம் இந்த முப்பத்தெட்டு வயதளவும் நீ கன்னி கழியாமல் வெகு யோகசாலியாயிருப்பாய்; அந்தக் காலத்தில் இந்த ராஜகுமாரனும் அந்தப் பட்டணத்திலே ஒரு விறகு தலையன் மனைவி வயிற்றிலே பிறந்து பெரியவனாய் விறகு விற்று வயிறு வளர்த்துக்கொண்டு திரிவான்; இப்படியிருக்கிற காலத்தில் ஒரு நாள் அதிகாலையில் கடைத்தெருவில் விறகுச் சுமையைச் சார்த்தி வைத்துவிட்டு அங்கே உட்கார்ந்துகொண்டிருப்பான்: அந்தச் சமயத்தில் நீ உன் தோழிமார்களுடனே வெகு ஆடம்பரங்களோடு சோழமகாராஜன் கொலுவுக்குப் போய் அங்கே ஆடல் பாடல் செய்து கொலுவை விட்டுத் திரும்பி நீ அரண்மனைக்குப் போகிற போது கடைத் தெரு வழியாய் வருவாய்; அப்போதிந்த விறகு தலையன் நீ வருகிற வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருப்பான்; நீயும் இவனைப் பார்ப்பாய்; அப்படி ஒருவரையொருவர் பார்த்தவுடனே நீ, உன் பக்கத்திலிருந்த தோழிகளை அழைத்து, 'அந்தக் கடையில் இருக்கிறவனைப் பாருங்கள்; பாசிப் பல்லும் பூதமுகமும் வெந்த வீட்டுக் கழிமரம் போலே காலும் கையும் அரையில் சுற்றிய கொடியும் அதிலே செருகிய அரிவாளும் உடையவனாய் இருக்கிறான்; அப்படியுமொருவன் உலகத்திலிருப்பானே! இவ்வளவு லட்சணத்தோடிருக்கிறவனையும் ஒரு பெண் பிள்ளையும் சேருவாளோ?' என்று கேட்பாய்; அதற்குத் தோழியானவள்,

'அம்மா! அப்படியேன் சொல்லுகிறாய்? ஊசியுமல்லவோ ஒரு சரட்டைக் கோத்துக்கொண்டிருக்கிறது? ஆதலால் இவனுக்கும் உலகத்தில் ஒருத்தியிருப்பாள்,' என்று சொல்லுவாள்; அந்த வசனத்தைக் கேட்டு நீயவனைப் பார்த்துக் காறி உமிழ்வாய்; அதையந்த விறகுதலையன் கண்டு, 'ஸ்திரீ சாதியான இவள் நம்மைப் பார்த்துக் காறி உமிழவேண்டிய காரணமென்ன? ஆண் பிள்ளை எப்படி இருந்தாலென்ன? நல்லது! எப்படியாகிலும் ஆயிரம் பொன் சேகரித்து இவளுக்குக் கொண்டு போய்க் கொடுத்து இவளைச் சேராமல் போவேனேயாகில் நான் ஆண்பிள்ளை யாவேனே!' என்று மனத்தில் பிரதிக்ஞை செய்துகொண்டு தன் வீட்டுக்குப் போய் அதற்குத் தகுந்த பேர்களுடனே தன் குறையைச் சொல்லி ஆயிரம் பொன்னும் சவதரித்துக்கொண்டு உன் அரண்மனைக்கு வருவான்; அப்படி வந்தவன் கையில் ஆயிரம் பொன்னையும் நீ வாங்கிக்கொண்டு பிறகொரு கவியைச் சொல்லுவாய்; அந்தக் கவிக்குப் பொருளறியாமல் விழிப்பான்; அப்போது அடித்து ஓட்டிவிடுவாய்; அந்தப் பட்டணத்திலே அவனுக்கு முன் வந்து கையில் அகப்பட்டுப் போன பேரிருப்பார்களல்லவோ! அப்படிப்பட்டவர்களிடம் போய் முறையிடுவான்; அதற்கவர்கள், 'அடா பைத்தியக்காரா! நீ ஐயாயிரம் பொன்னல்ல, பதினாயிரம் பொன் கொடுத்தாலும் உன் காரியம் ஆகப் போகிறதில்லை; அவளுடன் கவி சொல்லிப் பிரசங்கம் பண்ணத் தக்கவர்கள் இங்கொருவருமில்லை; அவளை வெல்லுதற்கு எவராலும் முடியாது; ஆகையால், கவி சொல்லிக் கல்வி வல்லமையினால் செயித்தால் மாத்திரம் நீ நினைத்த காரியம் முடியும். மற்றப்படிக்குக் காரியமாகப் போகிறதில்லை; நீயும் சமர்த்தனானால் மதுரையிலே பாண்டியராஜாவினுடைய சங்கத்தார் நாற்பத்தொன்பது பெயர் இருக்கிறார்கள்; அவர்களிடத்திற்குப் போய் முறையிட்டுக் கொண்டால், அப்போது ஏதாவதொரு வேளை அவர்கள் வந்து அவளுடன் தர்க்கம் செய்தால் செய்வார்கள்; அல்லாவிட்டால், இங்கே யாரும் அவளுக்கு எதிரில்லை; ஆகையால், அவ்விடம் போ பிள்ளாய்,' என்று சொல்லுவார்கள். அப்போதந்த விறகுதலையனும் மதுரைக்குப் போய்ச் சங்கத்தாருடன் முறையிடுவான்.

"அதுகேட்டு நக்கீரர் வந்து ராத்திரிப்போதெல்லாம்உன்னுடன் பிரதிவாதித்து உன்னைத் தோற்கடித்துத் தமிழறியும் பெருமானென்கிற பெயரை மாற்றிவைத்து அதன் பிறகு விறகுதலையனுக்கு உன்னை விவாகம் செய்து வைத்துப் போவார்: அதற்குப் பின்னும் உனக்குப் பன்னிரண்டு வயதுண்டு; அந்தப் பன்னிரண்டு வருஷமும் நீங்கள் இரண்டு பேரும் கூடி வாழ்ந்திருந்து அப்பால் நீங்கள் கதியடைந்து வாழ்வீர்கள்," என்று ஔவையார் வரம் கொடுத்தார். அது கேட்டு இரண்டாவேசமும் சாஷ்டாங்கமாகத் தண்டன் சமர்ப்பித்து ஔவையார் கையில் அனுக்கிரகம் பெற்றுச்

கொண்டு போன பிறகு, அப்பால் ஔவையாரும் தம்மிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

இப்பால் பெண்ணுவேசம் உறையூரில் உருத்திர கணிகையரில் சிறப்புற்று ஒழுகும் மரகதவடிவு வயிற்றில் பிறந்தனள். ஆணு வேசமும் அந்தப் பட்டணத்தில் விறகுதலையனுக்கு மகனுய்ப் பிறந்தனன். இவளுக்குத் தமிழறிவாளென்று பெயருண்டாகி, ஔவையார் வரம் கொடுத்தபடி முன்னர்க் கூறியபடி சோழ மகாராஜன் முகாந்தரமாய்ச் சகல பிரதிஷ்டைகளும் உண்டாயின. இப்படி இருக்கிற நாளில் ஒரு நாள் பச்சைப் பல்லக்கின் மீதேறிக்கொண்டு பன்னிரண்டாயிரம் பெண்களும் சேவித்து வரப் பகலில் பந்தம் பிடிக்க, வெண்சாமரம் வீச, தோழிமார் இரண்டு பக்கத்திலும் தாவிக்கொண்டு வரக் கட்டியக்காரர் கட்டியம் கூறி எச்சரிக்கை சொல்லப் பதினெட்டு மேளவாத்தியமும் முழங்கத் தும்புரு, வீணை, கின்னரி, சுரமண்டலம், இராவணஸ்திரம், குடமுழா முதலிய பல்லியம் முழங்க வெகு ரூபலாவண்யத்துடன் வாலிப ரெல்லாம் கண்டு மூர்ச்சையாய் விழுந்திடச் சோழமகாராஜன் கொலுவிற்குச் சென்று அவன் திருமுகம் பெற்றுத் திரும்பி வருகிற போது அந்த விறகுதலையனைக் கடைவீதியில் கண்டு, அவனையும் ஒரு பெண்பிள்ளை சேருவாளோ என்று காரி உமிழ்ந்தாள். அதை அந்த விறகுதலையன் கண்டு, ' பளபளா, நன்ருய் இருக்கின்றது ! இவளோ, சோழமகாராஜன் வீட்டு வெள்ளாட்டிப் பெண் ! இவளெப்படி இருந்தாலும் தேவடியாள்தானே ! நாம் ஆண்பிள்ளை அல்லவோ ? நம்மைப் பார்த்து இவள் காறி உமிழ்ந்த காரண மென்ன? இவளுக்கு இத்தனை கருவம் எப்படி வந்தது ? இவளுடைய காரியம் என்ன ?' என்று கோபித்துக்கொண்டு, ' என் பங்கில் தெய்வமிராமல் போகிறதா ! எப்படியும் ஆயிரம் பொன்னைச் சேகரித்துக்கொண்டு இவளிடம் போகாமல் போகிறேனு ?' என்று சபதம் கூறிக்கொண்டு, தன் வீட்டுக்குப் போகாமல் நேராகப் புறப் பட்டுக் காட்டில் போய் விறகு வெட்டிக்கொண்டிருந்தான். அந்தக் காட்டிலே ஒரு மாமரம் வருஷத்திற்கு ஒரு பழம் பழுக்கிறது; அந்தப் பழத்தை ஒரு ரிஷி வந்து அறுத்துச் சாப்பிடுவார் : அப்படிக்கொத்த மாமரத்தின் கீழே இவ்விறகுதலையன் மெத்த வெயிலானபடியால் வந்து நிழலிலே படுத்துக்கொண்டிருந்தான். அப்போது அந்த மரத்தின் பழம் பழுத்திருந்தது. அந்தப் பழத்தைக்கண்டு அறுத்து வீட்டுக்குப் போகிற போது சாப்பிடலாமென்று மடியில் வைத்துக் கொண்டிருந்தான். வெயில் தாழ்ந்தவுடன் எழுந்திருந்து போய்ப் பின்னையும் விறகு வெட்டிக்கொண்டிருந்தான். அன்றைக்கு ரிஷி வந்து மாமரத்தைப் பார்த்துப் பழமில்லாததைக் கண்டு, ' வருஷா வருஷம் தப்பாமலிருக்கிற பழம் இப்போதில்லாமல் போவா னேன் ?' என்று அங்ஙனே சுற்றிலும் பார்க்கிற போது அந்த விறகு தலையன் சமீபத்தில் விறகு வெட்டுகிற சத்தம் கேட்டு, அவனிடத் திற் போய், " அப்பா ! இந்த மாமரம் வருஷத்திற்கு ஒரு பழம்

பழுக்கும் ; நான் வந்து பழத்தை அறுத்துச் சாப்பிடுகிறது; பின்னே ஒருவரும் தீண்டுகிறதில்லே ; இப்போது அந்தப் பழத்தைக் காணேன் ; நீ ஏதாகிலும் கண்டதுண்டோ ?' என்று கேட்க, அந்த விறகுதலேயனும், ' இல்லே என்று சொன்னுல் முனீஸ்வரர் சாபமிடப் போகிறூர் !' என்று பயந்து, ' ஐயா ! வெயிலுக்குப் போய் மரத்தின் கீழே இருந்தேன் ! அப்போது நான் அந்தப் பழத்தைக் கண்டறுத்து, பிற்பாடு சாப்பிடலாமென்று மடியில் வைத்துக்கொண்டிருக்கிறேன் , இதோ பாரும்,' என்று சொல்லிக் கொடுத்தான். அப்போது அந்த முனிவரும் சந்தோஷப்பட்டு, ' பழத்தைச் சாப்பிடாமல் வைத்துக்கொண்டிருந்து நாம் கேட்ட வுடனே இல்லேயென்று சொல்லாமல் கொடுத்தானல்லவா ? இவன் நல்லவன் ; இவனுக்கு ஒரு வரம் கொடுப்போம் !' என்று அவனே அழைத்து அங்கே நிற்கின்ற விருட்சங்களேக் காண்பித்து, '' இந்த மரங்களனேத்தும் உனக்குச் சந்தனமரங்களாகக் கடவன ; இவைகளே வெட்டிக்கொண்டு சென்று விற்றுக்கொள் ; இந்த மரங்களினுலே உனக்கு வேண்டிய ஐசுவரியம் வரும்; மகாராஜனுக இருக்கப் போகிறுய்,'' என்று சொல்லிச் சென்ருர். அதன் பிறகு அந்த விறகுதலேயனும் அந்தச் சந்தனமரத்தை வெட்டிக் கட்டை கட்டையாகத் தறித்துச் சுமை கட்டிக்கொண்டு அந்தப் பட்ட ணத்திலுண்டான குடி படைகள், துரைகள், மந்திரி, பிரதானி, பிராமணர், வர்த்தகர் மற்றும் உள்ளவர்களுக்கெல்லாம் வீட்டுக்கு வீடு தவருமல் ஒரு கட்டு விறகும் ஒரு சந்தனக் கட்டையுமாகப் போட்டு வருவான். முன்னுலே விறகு விற்று அன்றைக் கன்றைக்குக் கூலி வாங்கிக்கொண்டு போய் வயிறு வளர்த்துக் கொண்டு திரிந்தவன் முன்பு செய்ததெல்லாம் போய் இப்போது தமிழறியும்பெருமாள் நிமித்தமாகப் பொன் சேர வேண்டுமென்று கூலி வாங்காமல் பிச்சையெடுத்து வயிறு வளர்த்துக்கொண்டு சும்மாப் போவான். ஆராகிலும் விறகு கேட்டாலும் கேளா விட்டாலும் வலியக் கொண்டு போய் வாசல்தோறும் சந்தனக் கட்டையும் போட்டு வருவான். யாராகிலும் அழைத்து, '' உனது கூலியை வாங்கிக்கொண்டு போ,'' என்ருல், '' எனக்கு வேண்டிய போது வாங்கிக்கொள்வேன்,'' என்று சொல்லிக்கொண்டு திரிந் தான். இப்படி இருக்கும் நாளேயிலே அந்தப் பட்டணத்துக்குப் பெரிய செட்டியார் வீட்டிலிருக்கிற வெள்ளாட்டியானவள் அன்றைக்குச் சந்தனக் கட்டையை விறகென்று நினேத்து அடுப்பிலே வைத்து எரியவிடும் போது அந்தப் பட்டணம் எங்கும் சந்தன வாசனே, ' கமகம ' என்று பரிமளித்தது. செட்டியாரும் அதிசயப்பட்டு மளிகைக் கடையிலிருந்து ஓடி வந்து தம் வீட்டின் மடைப்பள்ளியறைக்குப் போய், '' அடுப்பிலே என்னத்தைப் போட்டு எரிய விட்டீர்கள் ?'' என்றும், '' சந்தன வாசனே வருவானேன் !'' என்றும் கேட்க அதற்கு வெள்ளாட்டி சொன்னது: '' நான் ஆரென்று சொல்லுவேன் ! ஆரோ ஒருவன் வெட்டியான்

இருக்கிறான், அவன் நாள்தோறும் ஒரு சுமை விறகு கொண்டு வந்து போட்டுப் போவான். அவையெல்லாம் ஒரு மூலையில் இருக்கின்றன. அவைகளில் கருங்கட்டையாய் ஒரு கட்டையை எடுத்து விறகு என்று நினைத்து அடுப்பிலே வைத்தேன் ; இதுதான் விவரம்," என்றும், " இதுவுமல்லாமல் அவன் முன்னுலே விறகு கொண்டு வந்து போட்டு அன்றைக்கன்றைக்கு உண்டான கூலியை வாங்கிக்கொண்டு போவது உண்டு. இப்போது என்னவோ தெரியாது ; கூலி வாங்காமல் விறகை மாத்திரம் போட்டுவிட்டுச் சும்மாப் போகிறான். நாங்கள் அவனை அழைத்துக் ' கூலியை வாங்கிக்கொண்டு போ' என்றால், " எனக்குத் தேவையான போது வாங்கிக்கொண்டு போகிறேன். உங்களுக்கு என்ன ?" என்று சொல்லி இப்படிக் கூலி வாங்காமல் ஒரு மாதம் நாற்பது நாளாகச் சும்மாப் போகின்றான். அஃதென்னவோ தெரியாது ஐயா," என்று சொன்னாள். செட்டியார் இந்த விசேஷத்தைக் கேட்டு, " விறகு விற்றுக் கூலி வாங்கிச் சாப்பிடுகிறவன் கூலி வாங்காமல் சும்மாப் போகிற காரணம் என்னவோ தெரியாது. புதுமையாக இருக்கிறது ! இதனை விசாரித்து அறிய வேண்டும். ஆதலால், நானே நம்முடைய வீட்டுக்கு விறகு கட்டிக்கொண்டு வந்தால் அவனை நம்மிடத்திற்கு அழைத்துக் கொண்டு வா," என்று சொல்லி அவன் முன் கொண்டு வந்த சந்தனக் கட்டையின் பாரத்தைப் பார்த்துச் சந்தோஷப்பட்டு, மாளிகையிலேயே போயிருந்தார். மறுநாள் காலையிலே வந்து விறகு போட்டுப் போகும் போது செட்டியார் வீட்டுத் தாதி கண்டு அந்த விறகு தலையனை அழைத்துக்கொண்டு போய்ச் செட்டியார் முன்பு விட்டாள். செட்டியாரும் விறகு தலையனைப் பார்த்து, " நீ யார் பிள்ளாய் ?" என்று கேட்க, " ஐயா ! நான் பரதேசி, விறகு விற்கிறவன்," என்று சொன்னான். " விறகு விற்று வயிறு வளர்க்கின்றவனுக்கு கூலி வாங்காமல் ஏன் சும்மா போகிறாய் ; சொல்லு பிள்ளாய் ?" என்று கேட்டார். விறகு தலையனும், "ஐயா! எனக்கு ஒரு காரியமுண்டு. அந்தக் காரியத்தை நீங்கள் செவ்வைப்படுத்திக் கொடுப்பீர்கள் என்று நம்பிக் கூலி வாங்காமல் சும்மாப் போகிறேன்," என்றான். " அந்தக் காரியம் என்ன ?" என்று கேட்டார். விறகு தலையன் அதைச் செட்டியாரிடமே சொல்ல வெட்கப்பட்டிருந்தான். செட்டியார் நல்லவரானதால், 'இதை நாம் பராமரிசியாமலிருத்தலாகாது' என்று மனத்தில் எண்ணிக்கொண்டு விறகு தலையனைக் கிட்ட அழைத்து, " பயப்படாமல் சொல்லு பிள்ளாய்," என்று கேட்க, அப்போது விறகு தலையன் சொல்லுவான் : " ஐயா ! நான் கடையிலே விறகு சுமை சார்த்தி வைத்துக்கொண்டிருக்கும் போது தமிழறியும் பெருமாள் தோழிமாரும் தானுமாக வெகு உல்லாஸத்துடனே சோழ ராஜாவினிடம் போய் கொலுமுகம் கண்டு திரும்பிக் கடைத் தெரு வழியாகத் தன் அரண்மனைக்குப் போகிற போது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன் ; அப்போது தமிழறியும் பெருமாள்

என்னைப் பார்த்து, "இப்படி வேஷம் குலைந்திருக்கிறவனையும் ஒரு பெண் பிள்ளையானவள் சேருவாளோ ?" என்று தோழியைக் கேட்டாள். அதற்குத் தோழியானவள், "அவனுக்கும் ஒருத்தி உண்டாயிருப்பாள்," என்றாள் ; அந்த விசேஷத்தைக் கேட்டுத் தமிழறியும் பெருமாள் என்னைப் பார்த்துக் காறி உமிழ்ந்தாள் ; அது கண்டு நானும், 'இவள் நம்மைப் பார்த்து எச்சில் உமிழ வேண்டிய காரணம் என்ன ? நாம் ஆண் பிள்ளை; எப்படி இருந்தால் என்ன ? இப்படிக்கொத்தவளையே அனுபவிக்க வேண்டும்,' என்று நினைத்துப் பொன்னுக்கு வழியில்லாதபடியினாலே இந்த வேலை செய்துகொண்டிருக்கிறேன், ஐயா," என்றான். செட்டியார் அந்த விசேஷத்தைக் கேட்டுக் குலுங்கக் குலுங்க நகைத்து, "இவன் இருக்கிற வேஷமென்ன ! அவள் இருக்கிற போகம் என்ன ! தேச தேச ராஜாக்கள் எல்லாரும் வந்தடிபட்டுப் போகிறார்களே ! இப்படி முடுக்காய் இருக்கிறவளிடம் இவன் போகிற விதம் எப்படி ! ஆனாலுமென்ன ! இவனுடைய அதிர்ஷ்டானுகூலம் எப்படியோ ! அது நமக்குத் தெரியாது ; இதை நாம் ஏன் தடை செய்ய வேண்டும் ?" என்று மனத்தில் எண்ணிக்கொண்டு, "நல்லது இங்கே இரு பிள்ளாய் !" என்று விறகு தலையை மாளிகையிலே வைத்துச் செட்டியார் தம் வீட்டுக்குப் போய், முன் போட்டிருந்த சந்தனக் கட்டைகளை எல்லாம் பார்த்து, அவைகளை விலை மதிக்கும் போது பதினாயிரம் பொன்னுக்கு அதிகமாக இருந்தபடியினாலே சந்தோஷப்பட்டு விறகு தலையை அழைப்பித்து, "இன்னும் எங்கே விறகு போட்டிருக்கிறாய் ?" என்று கேட்க, "வீட்டுக்கு வீடு தப்பாமல் போட்டிருக்கிறேன்," என்றான். "நல்லது" என்று சொல்லிச் செட்டியாரும் இவன் கையிலே விறகு போட்டுக்கொண்டவர்களை எல்லாம் அழைப்பித்து அவர்களோடு ஆலோசனை பண்ணிக்கொண்டு இந்த விறகு தலையை ராஜவடிவாக வெகு ஆடம்பரத்துடனே அனுப்புவிக்க வேண்டுமென்று எல்லாரும் ஒன்றுகப் பேசிக்கொண்டு நாவிதனை அழைத்து, விறகு தலையனுக்கு க்ஷவரம் செய்து, சம்பங்கி எண்ணெயிட்டுத் தலைமுழுகச் செய்து கடுக்கன், மோதிரம், சரப்பளி, வெள்ளி அரைஞாண், மற்றுமுண்டான ஆபரணங்களும் பூட்டி, பச்சைவடம், தோவத்தி கட்டி, பாகை, சாலுவை, அங்கிநிசாரு நடுக்கட்டி இவைகளெல்லாம் தரிப்பித்து, திவ்வியமான போஜனம் அமைத்து, களபகஸ்தூரி பரிமளாதிகளும் அணியப்பண்ணி, பாக்கு வெற்றிலையும் கொடுத்து, எக்காளம் மேளபேரிகை பூரிகை முதலான பதினெட்டு வகை மேள வாத்தியங்களும் முழங்கும்படி செய்வித்து, விறகு தலையை மன்மத வடிவாக்கிப் பச்சைப் பல்லக்கிலே வைத்து, ஆயிரம் பொன் முடிப்புக் கட்டித் தண்டி கையில் வைத்து, ரத கஜ துரக பதாதிகள் புடைசூழச் சில பெண்கள் ஆடிக்கொண்டு வர, அடைப்பைக்காரன் வெற்றிலைச் சுருள் மடித்துக் கொடுத்துவர, இப்படி வெகு ஆடம்பராலங்காரமாகித் தட்டணத்துப் பெரிய செட்டியாரும் மற்றும்

உண்டான பேரும் இவனைப் பயணம் பண்ணி, "ஓ ராஜாவே! தமிழறியும் பெருமாளிடத்திற்குப் போய் வாரும்!" என்று அனுப்பு வித்தார்கள். அப்போது விறகு தலையனை ராஜாவும் தமிழறியும் பெருமாளிடத்திற்குப் போகிறபோது மேளவாத்தியத் தொனி பட்டணமெங்கும் அதிர்ந்து போகத்தக்கதாக முழங்கு வித்தான். அது கண்டு, "இதேதோ தெரியாது! எப்போதும் போலிருக்கவில்லை; இன்றைக்கு மேளவாத்தியம் வெகுவாய் அடிபட்டு வருகிறது; இவன் எந்தத் தேசத்து ராஜாவோ தெரியாது!" என்று ஆச்சரியப்பட்டுத் தமிழறியும் பெருமாள் தோழிமாருடன் உப்பரிகையின் மேலேறிச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்து, தாதிகள், மொண்ணச்சிகள், கற்றுச் சொல்லிப் பெண்கள் இவர்களை அழைத்து, "அந்த ராஜா நம்முடைய தலைவாசலிலே வந்திறங்கி விசுவாசம் கொடுத்தால் வாங்கி வாருங்கள்," என்று சொல்லித் தானும் தோழிமாருமாக உப்பரிகை விட்டிறங்கித் தானிருக்கும் இடமே போய்ச் சேர்ந்தாள். அதன் பிறகு விறகு தலையனை ராஜாவும் ஜெயஜெய வென்று வெகு ஆடம்பரத்துடனே தமிழறியும் பெருமாளுடைய அரண்மனை வாசலிலே வந்திறங்கினான். சிறிது நேரம் சென்ற பிறகு தன்னோடுகூட வந்தவர்களையெல்லாம் அனுப்பிவிட்டுத் தானும் அடைப்பைக்காரனுமாய் இருந்தான். அது கண்டு மொண்ணச்சிகள் கற்றுச்சொல்லிகள் வந்து, "இராசாவே! நீர் எந்தத தேசம்?" என்றார்கள். அந்த விறகு தலையனும், "நாம் ராஜா அல்லவே! இவளுடன் நமக்கு நன்றாய்ப் பேச வாராதே! நாம் பேசினால் மோசம் வரப் போகிறது," என்று பேசாமல் மவுனமாயிருந்தான். அது கண்டு, "இதென்னவோ இவன் வாயைத் திறவாமலிருக்கிறான்," என்று பின்னையும் இவனைப் பார்த்து, "பழமொழியோ புதுமொழியோ?" என்றார்கள். அதற்கும் சும்மாவிருந்தான்; பின்னையும், "நீர் என்ன நிறைகுடமோ குறை குடமோ?" என்றார்கள். அதற்கும் சும்மாவிருந்தான். பின்னையும், "ஊமையோ செவிடோ?" என்றார்கள். அதற்கும் சும்மாவிருந்தான். இந்த நான்கு விசேஷத்திற்கும் சும்மாவிருந்தபடியினாலே மொண்ணச்சிகள், "இவன் பேசாமலிருக்கிறதெல்லாம் தலைமையாய் இருக்கிற தமிழறியும் பெருமாளுடனே பேசிக்கொள்வோம்; 'இவர்களுடனே நமக்கென்ன பேச்சிருக்கிறது!' என்று எண்ணிக்கொண்டிருக்கிறான்," என்று நிச்சயித்துக்கொண்டார்கள். இவன் பேச வகையறியாமல் இருக்கிறதை அறியாமல், அவளுடனே பேசிக் கொள்வோமென்று இருக்கிறானென்று நினைத்துச் சும்மாயிருந்தார்கள். பின்னும் சற்று நேரத்திற்குப் பிறகு, "இராசாவே! நீர் எங்களுடனே பேசாவிட்டால் போகிறது; இப்போதிங்கே யாருக்கு விசுவாசம் கொண்டு வந்தீர்?" என்றார்கள். அதற்கு விறகு தலையன் வாயைத் திறந்து, "உங்கள் நாச்சியாருக்குக் கொண்டு வந்தேன்; அவளுக்குப் பரியமென்ன?" என்று கேட்டான். "ஆயிரம்

பொன் பரியம்,'' என்று சொன்னார்கள். '' நல்லது!'' என்று தண்டிகையிலிருந்த ஆயிரம் பொன் முடிப்பை எடுத்துக் கொடுத் தான். அதை வாங்கிக்கொண்டுவந்து தமிழறியும்பெருமாள்முன்னே வைத்துத் தாங்கள் அவனை நான்கு வசனம் கேட்டதும், அவன் அதற்கொன்றும் சொல்லாமல் மவுனமாய் இருந்ததும், பிறகு கேட்ட வசனத்திற்குப் பொன் கொடுத்ததும் சொன்னார்கள். அது கேட்டு, ' இவன் மூடன் ' என்றறிந்து, தாதிகளை அழைப்பித்து, '' பொன்னை எடுத்துக்கொண்டு போய்ப் பண நோட்டம் பார்க்கிற பெண் கையில் கொடுத்துப் பார்வையிடுவித்துப் பொன்னைப் பொக்கிஷப் பெட்டியில் அடக்கம் பண்ணுவித்து, அந்த ராசாவை தெருத் திண்ணையில் இருக்கச் சொல்லி வாருங்கள்,'' என்று சொல்லியனுப்பினாள். அப்படியே தாதிகள் பொன்னைப் பார்வை யிடுவித்துப் பொக்கிஷப் பெட்டியில் சேர்த்து ராசாவைத் தெருத் திண்ணையில் இருக்கச் சொல்லிப் போனார்கள். சிறிது நேரம் சென்ற பிறகு அந்த இராசாவைக் கூத்துப் பார்க்கிற மண்டபத்திற்கு அழைத்து வரச் சொல்லியனுப்பினாள்.

அப்படியே அழைத்து வருகிற போது விறகு தலையனை இராசாவும் இரண்டாம் கட்டைக் கடந்து இப்பால் வர, அங்கே இருக்கிற சித்திரங்களையும் மொண்ணச்சிகளையும் கண்டு மோகித்து, திகைத்துக் கண்ணிமையாமற் பார்த்துக்கொண்டிருந்தான். மறுநாள் பொழுது விடிந்த பின்பு அதை விட்டு அப்பாலே போகப் போகிற போது அந்தத் தாதிகள் ஓடி வந்து, '' அடா மூடா! மோசம் போனையே! பொழுது விடிந்து போயிற்றே! இனி உனக்கப்புறம் போகச் செலவில்லை,'' என்று கடூரமாகப் பேசிப் பிடரியிலே குத்திப் பழமுறத்தால் அடித்துக் குப்புறத் தள்ளி ஓட்டி விட்டார்கள். விறகு தலையன் அந்த அடியைப் பட்டுக்கொண்டு போய், '' என் கையிலே ஆயிரம் பொன்னையும் வாங்கிக்கொண்டு சும்மா அடித்து ஓட்டிவிட்டார்கள்,'' என்று தெருவிலே கூவினான். அது கேட்டு மொண்ணச்சிகள், '' இஃதென்ன புதுமையாக இருக் கிறது; இன்றையவரையிலும் இப்படிக் கூவிப் புலம்பின பேரில்லை ; இவனுரோ நாமறியோம்,'' என்று அவனைத் திரும்பவும் அழைப் பித்து, '' கூவுகிறதென்ன ?'' என்று கேட்டார்கள். அதற்கு விறகு தலையன் சொல்லுவான் : '' என் கையிலே பொன்னை வாங்கிக்கொண்டால் எனக்கு ஒப்புச் சொல்லி உடன்படத் தேவை யில்லையோ ? சும்மா அடித்து ஓட்டிவிட்டால் பொருளிழந்த நான் கூவாமல் என்ன செய்வேன்?'' என்றான். அதற்கு மொண்ணச்சிகள் சொன்னது : '' உன் கையிலே பொன் வாங்கிக்கொண்டால் ஒப்புச் சொல்ல வேண்டியதுதான் ; ஆனாலும் என்ன ? இப்போது நானுனக்கொரு கவி சொல்லுகிறேன் ; அதற்குப் பயன் சொன்னால் அப்படியே ஆகிறது,'' என்று அவர்களில் ஒருத்தி ஒரு கவி சொன்னாள். அந்தக் கவி கேட்டு அதன் தாத்பரியமொன்றும் தெரியாமல் பேய் போல எழுத்துக்கொண்டிருந்தான். அது கண்டு,

"முன்னே அடித்தது பொய்; இப்போது அடிக்கிறது மெய்!" என்று பழமுறத்தாலும் பழந் துடைப்பக்கட்டையாலும் அடித்துக் கழுதையின்மேலேற்றி ஊர்கோலம் காட்டி ஓட்டிவிட்டார்கள். அந்த அடியைப் பட்டுக்கொண்ட விறகு தலையனும் பட்டணத்திலே போய் முன்னுலே தமிழறியும் பெருமாள் கையிலே அடிபட்டுத் தங்கள் தேசத்திற்குப் போக வெட்கப்பட்டுக்கொண்டிருக்கிற அந்த ராஜாக்களுடனே சொல்லி முறையிட்டான். அதை அவர்கள் கேட்டு, "அப்பா! நாங்களும் அவளிடத்தில் இப்படித்தான் அவமானப்பட்டு வந்திருக்கின்றோம்; எங்களுடனே நீயும் சொல்லி முறையிட்டால் ஆக வேண்டியதென்ன இருக்கிறது அவளுக்கு? ஆயிரம் பொன்னல்ல; பதினாயிரம் பொன் கொடுத்தாலும் பலனுன்றுமில்லை; அவளுடனே கவி சொல்லிப் பிரதியுத்தரம் கொடுத்து அவளை ஜயித்தால் காரியமாகும்; இங்கே அம்மாத்திரம் கவிப் பிரசங்கம் பண்ணி அவளை ஜயிக்கத்தக்க ஆண்பிள்ளைகள் இந்தக் கடல் சூழ்ந்த உலகத்தில் ஒருவருமில்லை; ஆனபடியினுல் மதுரையில் பாண்டியராஜாவினிடத்திலே பிரசண்ட வித்துவாமிசராகிய சங்கத்தார் சங்கப்பலகையின்மேலே நாற்பத்தொன்பது பேரிருக்கிறார்கள்; அவர்களே கல்விக்கு உரியவர்கள்; அவர்களுக்கு மிஞ்சினவர்கள் ஒருவருமில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்; இங்கே இவளிப்படிப் பிரபலமாய்ப் பேரிட்டுக்கொண்டிருக்கிறதை அவர்கள் அறிவார்கள்; நீ சமர்த்தனுனுல், அவர்களிடத்திற்குப் போய், உனது மனக்குறையை முறையிட்டுக்கொள்வாயேயாகில், அப்போது அவர்கள் வந்து இவளைக் கர்வபங்கம் செய்தால் செய்யலாமே அல்லது மற்றெருத்தரால் முடியாது; அல்லாவிட்டால் இவளுக்கு இங்கே யாரும் எதிரில்லை; நீ போகிறதானுல் சீக்கிரமாகப் புறப்பட்டு மதுரைக்குப் போபிள்ளாய்." என்றார்கள். விறகு தலையனும் அந்த விசேஷத்தைக் கேட்டு, "நான் பொன் தேடப் பட்ட அருமை எனக்கல்லவோ தெரியும்! அப்படி நான் வருத்தப்பட்டுத் தேடின பொன்னைக் கொடுத்துவிட்டுச் சும்மா போவேனே?" என்று வெகு கோபமாய் உடனே புறப்பட்டு மதுரைக்குப் போனுன். சங்கத்தாருக்குப் பாற்குடங்கள் கொண்டு போயினர் சிலர். அதைக் கண்ட விறகு தலையன் ஒரு சுக்குமாந்தடியை எடுத்துக் கையிலே பிடித்துக்கொண்டு குறுக்கே போய், "நீங்களாரடா? பாற்குடம் ஏதடா? யாருக்குக் கொண்டு போகிறீர்களடா?" என்று மறித்தான். அதற்கு இடையர்கள், "சங்கத்தாருக்குப் பாற்குடம் கொண்டு போகிறோம்," என்றார்கள். அது கேட்டு விறகுதலையனும், "சங்கத்தாராவது, பாற்குடம் கொண்டு போகிறதாவது!" என்று பாற்குடங்களைத் தகைத்துப் போட்டான். அப்போது இடையர் பிரமித்து நின்று, "இவனுரோ தெரியாது; சங்கத்தாருக்கு இது வரையில் பாற்குடம் போதல் தடைப்பட்டதில்லை. பாண்டியவரசர் முதலான பேர்களும் சங்கத்தாருக்கு ஒரு பாதும் எதிர்வார்த்தை

சொல்லக்கூடாதே ; அப்படிக்கொத்த சங்கத்தாரைச் சட்டை பண்ணுமல் அவர்களுக்குப் போகிற பாற்குடத்தைத் தகைத்தான்," என்று பயந்து உடனே ஒருவன் ஓட்டமாக ஓடிப் போய்ச் சங்கத் தாரைக் கண்டு, " சுவாமிகளே ! எனக்கு யாதொன்றும் தெரி யாது ; ஒருவன் வந்து தேவரீருக்குக் கொண்டு வருகிற பாற்குடங் களைத் தடுத்துப் போட்டான்," என்று சொல்ல, சங்கத்தாரும் அந்த விசேஷத்தைக் கேட்டுப் பிரமித்து, " நமது காரியத்துக்குத் தடை உண்டோ ?" என்றும், " அவன் எப்படிக்கொத்தவன் ?" என்றும் சொல்லிச் சங்கத்தார் இரண்டொருவர் எழுந்து வெளியிலே வந்து விறகு தலையைக் கண்டு, " நீ யாரடா ? எங்களுக்கு வருகிற பாற்குடங்களைத் தடுத்ததற்குக் காரணமென்னடா ?" என்றார்கள். அதற்கு விறகு தலையன் சொன்னது : " உங்களுக்குச் சங்கத்தார் என்கிற பேரும் சங்கப்பலகையும் வித்தையாண்மையுங்கூட இருக்கின்றனவோ ! எள்ளளவும் இல்லாத நீங்கள் எனக்கெம்மாத் திரம்என்று தடுத்தேன்," என்றான். அது கேட்டுச் சங்கத்தாரும், "இந்த விசேஷம் எதனாலே சொன்னாய் ? அதனைத் தெரியச் சொல்ல வேண்டும் ?" என்றார்கள். அதற்கு விறகு தலையன் சிரித்து, " பெரியோர்களே ! திரிசிரபுரத்தின் மேற்றிசையில் இராநின்ற உறையூர்ப் பட்டணத்தை ஆளும் சோழராசன் வீட்டு வெள்ளாட் டிப் பெண் தமிழுக்குடையவள் தானே அல்லாமல் தனக்கொருவரும் நிகரில்லை என்று வேறே அரண்மனை கட்டிக்கொண்டு, வெகு ஆடம் பரத்துடனே தன் வாசலிலே ' டால் ' கட்டி வைத்து, தமிழறியும் பெருமாளென்று பேரிட்டுக்கொண்டு, எந்தெந்தத் தேசத்து மண்ட லாதிபர் வந்தாலும் அவர்கள் கையிலே முந்தி ஆயிரம் பொன் வாங்கிக்கொண்டு ஒரு கவியைச் சொல்லி, அதற்குப் பொருள் கேட்டுப் பின்பு அந்தக் கவிக்குப் பொருள் தெரிந்து சொல்லா விட்டால் அவர்களை அவமரியாதை செய்து ஓட்டிவிட்டுக் கன்னி கழியாமல் சுகித்து வாழ்ந்திருக்கிறாள் ; இப்படிப் பேர் பெற்ற ஒரு பெண்பிள்ளை இருக்க உங்களுக்கும் சங்கத்தாரென்கிற பேரும் இருக்கத் தக்கதோ ? சொல்லுங்கள் ஐயா !" என்றான். அது கேட்டுச் சங்கத்தாரும், " இது மிக நன்றாய் இருக்கிறதே ! நாங்கள் தமிழுக்குரியவர்கள் என்றும் எங்களுக்கு இவ்வுலகத்திலொருவரும் எதிரில்லை என்றும் நாங்கள் எண்ணியிருக்க, ஒரு பெண் பிள்ளை இப்படிப் பேரிட்டுக்கொண்டிருக்கிறாள் என்றால், இஃதென்ன ஆச்சரியம் ! அப்பால் எங்களுக்கென்ன பெருமை இருக்கின்றது ? ஆயினும், இன்றையவரைக்கும் ஒருத்தராவது இவ்விதமாக வந்து சொன்னதேயில்லை ; எங்களுடன் சொல்லி முறையிட்டதும் இல்லை ; நாங்கள் கேள்விப்பட்டதும் இல்லை ; இப்போது நீ முறை யிட்ட காரியமென்ன ? உனக்கேதாகிலும் மனத்தில் குறை உண்டோ ? சொல்லு," என்று கேட்டார்கள். அதற்கு விறகு தலையன் தான் கடைத் தெருவிலே இருந்ததும், தமிழறியும் பெருமாள் தன்னைப் பார்த்துக் காறி உமிழ்ந்ததும், அதற்காக

விறகும் சந்தனக்கட்டைகளும் வீடுகள்தோறும் கொண்டு வந்து போட்டதும், பட்டணத்துச் செட்டியார் தன்னை ராஜ வடிவாக்கி ஆயிரம் பொன் கொடுத்து வெகு ஆடம்பரத்துடனே அவளிடம் அனுப்பிவித்ததும், ஆயிரம் பொன்னையும் வாங்கிக்கொண்டு ஒரு கவியைச் சொல்லி அடித்து ஓட்டிவிட்டதும் முதலான விருத்தாந்தங்களைக் கிரமமாகச் சொல்லி, " ஐயா ! சங்கத்தார்களே ! இதன்பொருட்டே நான் உங்களிடத்திற்கு வந்து விண்ணப்பம் பண்ணிக்கொண்டேன்," என்றான். அது கேட்டுச் சங்கத்தாரும், 'இவன் பேச்சை நம்பிப் போகலாகாது,' என்று மனத்தில் நினைத்து, 'மெய்யோ, பொய்யோ, விவரமாய் அறிய வேண்டும்,' என்று அந்த விறகுதலையனைத் தங்களிடத்தில் இருத்தி வைத்துக்கொண்டு பின்னை ஒரு மூடனை அழைத்து, அவன் கையிலே ஆயிரம் பொன் முடிப்புக் கட்டிக்கொடுத்து ஒரு கவியும் எழுதிக் கொடுத்தனுப்பிய விவரம் :

" மின்னே ரிடையாய் ! விலைபேசி வாங்குமது
பொன்னு யிரமுமே போதாதோ ?—எந்நாளும்
சற்றென் றிராதே சதுராக வாங்கியது
பொற்றெடிக்கும் போதும் புகழ்."

இந்தக் கவி சொல்லிக் கொடுத்து இதற்கென்ன சொல்லி அனுப்புகிறாளோ பார்த்துக்கொள்வோமென்று மூடனைப் பிரயாணப்படுத்தி உறையூருக்குப் போய்த் தமிழறியும் பெருமாளைக் கண்டறிந்து வரச் சொல்லி அனுப்பினார்கள். அப்படியே அவன் உறையூருக்குப் போய்த் தமிழறியும் பெருமாள் அரண்மனை வாசலிலே நின்றான். அப்போது மொண்ணச்சிகள் கண்டு, " எங்கே இருந்து வந்தாய் ?" என்று கேட்க, " மதுரையிலிருந்து சங்கத்தாரனுப்பிவிக்க வந்தேன்," என்றான். " என்ன கொண்டு வந்தாய் ?" என்றார்கள். "ஆயிரம் பொன்னும் ஒரு கவியும் கொண்டு வந்தேன்," என்றான். அந்தப் பொன்னையும் கவியையும் வாங்கிக்கொண்டு போய்த் தமிழறியும் பெருமாள் முன்பு வைத்து, " யாரோ ஒருவன் மதுரையிலே சங்கத்தார் கொடுத்தனுப்பினதாகக் கொண்டுவந்து கொடுத்தான்," என்று சொன்னார்கள். அது கேட்டுத் தமிழறியும் பெருமாளும், " நல்லது," என்று அந்தக் கவியைப் பார்த்து வாசித்துக்கொண்டு இந்தக் கவியிலே தன்னைச் சபித்து எழுதி அனுப்பினார்களென்று வெகு கோபத்துடனே அந்தக் கவிக்கு மறு கவி எழுதின விவரம் :

" ஆடை பருத்தி தருமாகி லங்கொருத்தி
கோடி பருத்திகொண் டென்செய்வாள்—மூடர்
கவித்திறமை உண்டாகில் கற்றநூற் கொண்டு
சவிப்பரோ சங்கத் தவர் ?"

என்று இந்தக் கவி எழுதி அந்த மூடனிடத்தில் கொடுத்துப்

பொன்னையும் கொடுத்தனுப்பினாள். அவன் மதுரைக்குப் போய்ச் சங்கத்தாரைக் கண்டு பொன்னையும் கவியையும் அவர்கள் முன்னே வைத்தான். சங்கத்தாரும் அந்தக் கவியைப் பார்த்து " ஆ ! ஆ ! வெள்ளாட்டி தன்னைச் சொல்லிக்கொள்வது விட்டு, நம்மை யெல்லாரையும் மூடரென்று கவி எழுதி அனுப்பினாள். அவளிடம் போய்க் கவிப் பிரசங்கம் பண்ணித் தோற்கச் செய்து அவள் அரண்மனையையும் இடிப்பித்துத் தமிழறியும் பெருமாளென்கிற பெயரையும் மாற்றிப் போட்டு வர வேண்டும் !" என்று வெகு கோபத்துடனே சங்கத்தார் நாற்பத்தொன்பது பேரும் எழுந் திருந்தார்கள். அப்பொழுது நக்கீரர் ஒரு வசனம் சொல்லு கிறார் : " வாருங்கள் சங்கத்தாரே ! நாமெல்லோரும் போய்க் கவிப்பிரசங்கம் பண்ணி வென்று வருவது நன்மையன்று ; பார்த்த பேருக்கு நன்றாயிராது ; ஒரு பெண் பிள்ளை நிமித்தம் நாற்பத் தொன்பது பேரும் வென்று வந்தார்கள் என்றால் நகைப்புக்கிட மாம் ; அஃது எவ்வளவு ஈனத்துவம் ? அதனால் நமக்கு யாதொரு பிரயோசனமுமில்லை ; நீங்களெல்லோரும் இவ்விடத்திற்றானே இருங்கள் ; நானொருவனுமே போய் அவளுடனே வாதித்து அவளைத் தோற்கச்செய்து, தமிழறியும் பெருமாளென்கிற பெய ரையும் மாற்றுவித்து, இந்த விறகு தலையனுக்குத்தானே அவளைக் கலியாணம் பண்ணிவைத்து வருகிறேன்," என்றார். அவர்களிலே சில பேர், " தமிழறிவாளென்கிற பேர் பெற்றிருக்கிறதும், அவள் ஔவையார் வரப்பிரசாதத்தினால் யாராலேயும் செயிக்கக் கூடாமலிருக்கிறவளென்றும், நாம் காற்று விசேஷமாய்க் கேள்விப் பட்டிருக்கிறோம் ; ஆனாலது ஏதோ எவ்விடமோ என்னவோ என்று அசட்டை செய்திருந்தோம் ; அஃது இப்போது மெய்யாக விளைந் திருக்கிறது ; அப்படியவள் ஔவையார் கையிலே வரம் பெற்று யாராலேயும் அழிக்கப்படாமலிருக்கிறவளை நக்கீரரே ! நீர் போய் எப்படிச் செயித்து வருவீர்?" எனக் கேட்டார்கள். அதற்கு நக்கீரர், " நான் போய் அவளைச் செயித்து வராமல் போவேனேயாகில் இன்னபடியாக !" என்று பிரதிக்ஞை செய்துகொண்ட விவரம் :

" சென்றுறையூர் புக்குச் சேயிழையை நான்கண்டு
வென்று தமிழழித்து மீளேனேல்—மண்ணில்
வீருந்திருக்க உண்ட வெறுவலியோ டொப்பேன்
வருந்துவரோ சங்கத் தவர் ?"

என்று சொல்லக் கேட்டுச் சங்கத்தார் அனைவரும் செவிகளைப் புதைத்துக்கொண்டு, " சிவசிவா !" என்று சொல்லிப் பின்பு, " நல்லது, அப்படியே போய் வாரும்," என்று அனுப்பினார்கள். அப்போது நக்கீரரும் விறகு தலையனை அழைத்துக்கொண்டு மதுரையைவிட்டுப் புறப்பட்டு உறையூருக்கு வருகிற போது நடுவே காடடர்ந்து அந்தகாரமாய் இருந்தது. அந்தக் காட்டின் வழியாக வரும் போது ஒரு வடதாரி மரத்தின்மேலே வள்ளிக்கொடி படர்ந்

திருந்தது. அதை ஒரு வேடன் கண்டு மேலேயிருக்கிற சிக்குச்சிற கெல்லாம் அறுத்துப் போட்டுக் கடப்பாரையினுலே வள்ளிக் கிழங்கைப் பெயர்த்துக்கொண்டிருந்தான். அதை நக்கீரர் கண்டு ஒரு கவியாகப் பிணைத்துக்கொண்டு, "அவளுடனே தர்க்கம் பண்ணித் தீராத விதத்திற்கு இதனை அவளுக்குத் தெரியாமல் கண்ட சுத்தி பாடித் தோற்கச் செய்வோம்," என்று மனத்தில் எண்ணிக்கொண்டு அப்பாலே போகிற போது விறகு தலையனை அழைத்து, "வா பிள்ளாய்! அவளிருக்கும் அரண்மனையின் கட்டுக் காவலென்ன? அங்கே என்னென்ன அதிசயங்கள் உண்டா யிருக்கின்றனவோ அவைகளை எல்லாம் விவரமாக எனக்குத் தெரியச் சொல்?" என்று கேட்டார். அதற்கு விறகு தலையன் சொல்லு வான்: "ஐயா! அவளிருக்கிற அரண்மனைக்கு ஏழு மதிலும் அறுபத்து நான்கு வாசலும் வாசலுக்கு வாசல் மொண்ணச்சிகள், கற்றுச் சொல்லிகள், சூத்திரப் பதுமைகள், யானைகள், புலிகள், கரடிகள், குரங்குகள், வேட்டை நாய்கள், கிணறு, குங்குமச்சேறு, சித்திர மண்டபம் உண்டு. கச்சேரி மண்டபத்தில் களிற்றி யானைத் தந்தக் கட்டிலும், பிடியானைத் தந்தக் கட்டிலும் போட்டிருக்கிறதாம்; பின்னையும் என்னென்னவோ இருக்கிறதென்றும் சொல்லுவார்கள்; எனக்குச் சொல்லத் தெரியாது; எனக்குத் தெரிந்தமட்டும் அங்கே இப்படிக்கொத்த விநோதங்கள் எல்லாம் இருக்கின்றன ஐயா," என்ருன். அது கேட்டு நக்கீரர் இன்னமும் விஞ்தைகங்கள் அநேக மிருக்கலாமென்று நினைத்துக்கொண்டு, விறகு தலையனை அழைத்து, "எண்ணெய்ச் சீலை, மூங்கிற்கழி, செம்பருத்திப் பூ, மல்லிகைப் பூ, காந்தக்கல், கட்டெறும்பு, அலவன், வாழைத்தண்டு, கரும்புக்கணை, எலுமிச்சம்பழம் இவைகளை எல்லாம் சேகரித்துக் கொண்டுவா," என்று அனுப்பினர். அப்படியே போய் அவைகள் அனைத்தையும் சேகரித்துக்கொண்டு வந்தான். அதன் பிறகு இருவரும் புறப்பட்டுத் திருச்சிராப்பள்ளிக்கு வந்து மேற்கு முகமாகத் திரும்பிப் பார்த் தார்கள். உறையூர்ப் பட்டணத்திலே தமிழறியும் பெருமானிருக்கிற உப்பரிகையின் மீதிலே செய்து வைத்திருக்கப்பட்ட பொற்குடம் தோன்றிற்று. அதைக் கண்டு நக்கீரர், விறகு தலையனை அழைத்து, "அதோ பொற்குடம் தெரிகிறதே, அது எந்தவூர்? எந்தக் கோபுரம்?" என்று கேட்டார். "அஃது அந்த வெள்ளாட்டி அரண் மனைக்குள்ளே இருக்கிற உப்பரிகையின் மேலமைத்த பொற் குடம் ஐயா," என்ருன். அது கேட்டு நக்கீரர் பிறகு தம்முடைய மனதில்,

"இதுவோ சிராப்பள்ளி இதுவோ உறையூர்
இதுவோ தமிழறிவா ளெல்லை—இதுவோ
இறைவளர்க்கும் சங்கம் இவளழிப்ப தென்னே
குறைவறத்தான் வெல்வேன் குறித்து."

என்று பிரதிக்ஞை பண்ணிக்கொண்டு, அப்பால் உறையூர்ப் பட்ட

ணத்தில் போய்ச் சேர்ந்தார்கள். அப்போது சாயங்கால வேளை ஆயிற்று. அதன் பிறகு நக்கீரதேவர் விறகு தலையனை ஓரிடத்திலே வைத்துத் தமது பச்சைவடம், வஸ்திரம், பாகை, கடுக்கன், மோதிரம் மற்றுமுள்ள ஆபரணங்களை எல்லாம் விறகு தலையன் வசம் செய்து அவனை அவ்விடத்திற்றானே இருக்கச் சொல்லி அவன் கட்டியிருந்த கரித் துணியை வாங்கி அரையில் கட்டிக்கொண்டு இரண்டு கொடியைப் பிடுங்கி இடுப்பிலே சுற்றிக்கொண்டு அதிலே ஒரு அரிவாளையும் செருகிக்கொண்டு இவ்விதமாக விறகு தலையனைப் போல வேஷம் பூண்டு, அந்த மாற்றெல்லாம் மடியிலே அடக்கமாய் வைத்து வாழைத்தண்டைச் சுமையாகக் கட்டித் தலைமேலே வைத்துக்கொண்டு தமிழறியும் பெருமாள் இருக்கிற அரண்மனையை நோக்கி வருகிற போது சூரியன் அஸ்தமிக்கிற சமயமாயிற்று. அந்த வேளையிலே நக்கீரதேவரும் வாழைத்தண்டை விறகாகக் கட்டிக்கொண்டு முதற்கட்டு வாசலிலே கற்றுச்சொல்லிப் பெண்கள் இருக்கிறதைக் கண்டு,

"வெய்யோன் கதிரெறிப்ப வேற்கண்ணுள் பின்றொடரப்
பையவரு தென்றற் பயனறியேன்—துய்ய
மலர்த்தடங்கண் வாய்ந்த மயிலனீயீர் ! கொள்வீர்
விலக்கு விறகோ விறகு."

என்று விலை கூறின சேதியைக் கற்றுச்சொல்லிப் பெண்கள் கேட்டு, "இதுவரையில் நம்முடைய நாச்சியாருக்கு எதிராளி ஒருவன் வந்து கவி சொன்னதும் இல்லையே ! அந்தக் கவியைக் கற்றுக்கொண்டு போய் நாம் அவளுக்குச் சொன்னதுமில்லையே ! எவன் வந்தாலும் அவனுக்கு நம்முடைய நாச்சியார் கவி சொல்லிப் பொருளறியாத போது அடித்து ஓட்டிவிடுகிற வழக்கமல்லவோ! இஃது ஏதோ தெரியாது! ஆச்சரியமாக இருக்கிறது!" என்று நினைத்து, இந்தக் கவியைக் கொண்டு போய்த் தமிழறியும் பெருமாளுடனே, "யாரோ ஒருவன் வாழைத் தண்டைக் கட்டித் தலைமேல் வைத்துக்கொண்டு, விறகென்று விலைகூறிக்கொண்டு இந்தக் கவியைச் சொன்னான்," என்று சொன்னார்கள். அது கேட்டுத் தமிழறியும் பெருமாள்,

"உள்ளீரம் பச்சை புகையு மெரியாது
கொள்ளீர் விறகென்று கூறினீர்—மெள்ள
வீணரே போம்போம் வீணரே நீரும்
தாதரே சங்கத் தவர்."

என்று சொல்ல, இந்தக் கவியைக் கற்றுச்சொல்லிப் பெண்கள் கற்றுக்கொண்டு போய் விறகு தலையனுக்குச் சொன்னார்கள். அதைக் கேட்டு விறகு தலையனை நக்கீரர், இரண்டாங்கட்டுக்குள்ளே போய்ச் சொன்ன வெண்பா :

"சால வுலர்ந்ததுண்டு சாலகத்தி னுல்புகைபோம்
நீலவிழி மாதர்க்கு நின்றெரியும்—கோலக்

கலிக்குவலி யல்குற் கனங்குழலீர் கொள்ளீர்
விலிக்கு விறகோ விறகு.''

இந்தக் கவியைக் கற்றுக்கொண்டு போய்த் தமிழறியும் பெருமாளுடனே சொன்னார்கள். அதைக் கேட்டு அவள் இவனைக் கொண்டாடிக்கொண்டு, ''இவன் நல்ல வித்துவானுமாய் நல்ல இலட்சணமறிந்தவனுமாய் இருக்கிறான்! கவி வெகு நேர்த்தியாய் இருக்கின்றது! இதை நாம் இரட்டிக்கப் போகாது; இன்று வரைக்கும் கன்னி கழியாமல் தேடியுண்டு கீர்த்தியடைந்திருந்தோம்; இப்போது இவன் என்னென்ன காரணமாய் வந்தானே தெரியாது! இவன் நம்மைச் சோதிக்க வந்தவனுகக் காணப்படுகிறது; ஆனல் என்ன? இவனுடைய சமர்த்தெல்லாம் பார்ப்போம்; இந்தக் கட்டுகள் எல்லாம் கடக்கச்சே இவை நடுவிலே மோசம் போகாமல் வந்து நம்முடனே கவிப்பிரசங்கம் பண்ண நம்மிலும் வல்லவனுக இருந்தால் அப்படிக்கொத்தவனைக் கூடினல் தான் என்ன? தோஷம் இல்லை,'' என்றெண்ணிக்கொண்டு மறு மொழி அனுப்பினதாவது :

'' பால்பாய வெட்டிப் பசுமை உலர்ந்ததோ
கால்பட்டு வீழ்ந்துதைந்து கட்டினீரோ—சாலப்
புகையுமோ வுண்மை புகழ்ந்துரையாய் நீயும்
வகையாக வாசலிலே வந்து.''

இந்தக் கவியைக் கொண்டு போய் விறகு தலையனுக்குச் சொல்ல, அவ்விறகு தலையன் மூன்றும் கட்டுக்குள்ளே போய்ச் சொன்னதாவது :

'' ஈர முலர்ந்தே எலும்புபோ லேகாய்ந்து
சால வெரியுமிது தையலே!—மாலை
இரவுவரு முன்னே இகழாமல் இந்த
விறகுதனைக் கொள்க விரைந்து.''

இந்தக் கவியைக் கற்றுக்கொண்டு போய்த் தமிழறியும் பெருமாளுடனே சொல்ல, அப்போதந்தத் தமிழறியும் பெருமாள் சொன்ன வெண்பா :

'' விறகோ விறகென்று மேன்மேலும் கூறும்
விறகுவிற்பான் தன்னருகின் மேவி—விறகு
விலிகேட்டு வாருமென்று மெல்லியலாள் கேட்டாள்
கலிவாய் தமிழறிவாள் காண்.''

இந்தக் கவியைக் கற்றுக்கொண்டு போய் விறகுத் தலையனுக்குச் சொல்ல, அது கேட்டு விறகு தலையனை நக்கீரர் நான்காம் வாசல் கடந்து, ஐந்தாம் வாசலிலே சென்று சொன்னதாவது :

"கட்டு விறகுவிலை கன்னியரே ! கூறக்கேண்மம்
வெட்டு விறகுதனை வீரனுர்—இட்ட
நறைவார் குழன்மடவீர் ! நான்கொண்டு வந்த
விறகா யிரம்பொன் விலை."

என்று சொல்லிக்கொண்டு ஐந்தாம் வாசல் கடந்து, ஆறும் வாசலுக்கு வர, இந்தக் கவியைக் கற்றுச்சொல்லிகள் கற்றுக் கொண்டு போய்த் தமிழறியும் பெருமாளுக்குச் சொல்ல, 'இவன் நல்ல வித்துவனே!' என்று பின்னையும் சொன்ன தாவது :

"பச்சை முழுது மெரியாது ; பாரிடத்தில்
இச்சையிது வன்றே இயம்பக்கேள் :—நிச்சயமாய்
உள்ளவிலை சொல்லுகென வொத்த தெரிந்துவந்து
கிள்ளைகாள் ! சொல்வீர் கிளர்ந்து."

இந்தக் கவியைக் கற்றுச்சொல்லிகள் விறகு தலையனுக்குச் சொல்ல, விறகு தலையனும் ஏழாம் வாசலில் வந்து சொன்ன வெண்பா :

"ஐந்நூற் நிரட்டிப்பொன் னப்புறமும் சோறுகறி
என்னூர் விறகுவிலை இப்படியே ;—முன்னோன்
சொன்னபடி யேயொழியச் சொல்லறியாப் பேதாய்!நீ
சின்னு லிடையாட்குச் செப்பு."

இந்தக் கவியைக் கற்றுச்சொல்லிகள் போய், தமிழறியும் பெருமாளுக்குச் சொல்ல, அது கேட்டுத் தமிழறியும் பெருமாளும் விசாரப்பட்டு, 'வருகிறதெல்லாம் வரட்டும், பார்ப்போம்,' என்று கற்றுச்சொல்லிகள் கையிலே ஆயிரம் பொன்னும், நாழி அரிசியும், மிளகு, மிளகாய், காய், கறி முதலானவைகளைக் கொடுத்து, "இவைகளை அந்த விறகு தலையன் கையிலே கொடுத்து அவன் போடுகிற விறகைப் போடுவித்துக்கொண்டு, அவனை அனுப்பி விடுங்கள்," என்று சொல்ல, அப்படியே கற்றுச்சொல்லிப் பெண்கள் வந்து அந்த ஆயிரம் பொன்னையும் அரிசி முதலானவைகளையும் கொடுத்து, "விறகு போடு ?" என்றார்கள். அவ்வாறே அவைகளை வாங்கிக்கொண்டு அவர்கள் சொன்னபடியே எட்டாம் வாசலிலே போட்டு, அங்கே இருந்துகொண்டு கற்றுச்சொல்லிப் பெண்களை அழைத்து மறுபடியும் அந்தப் பொன்னையும் அரிசி முதலானவை களையும் கொடுத்து, "இந்தப் பொன்னை உங்கள் நாச்சியாருக்கு இராத்திரிக்குப் பரியமாக வைத்துக்கொள்ளச் சொல்லுங்கள் ; இந்த அரிசியைச் சமைத்து நமக்கு ராத்திரிக்குச் சாப்பாடு பண்ணி வைக்கச் சொல்லுங்கள்," என்று, அதற்கொரு கவியும் சொல்லி அனுப்புவித்ததாவது :

"தந்தபொன்னு முங்கள் தமிழறிவாட் கேபணையம்
இந்த வரிசிக் கிடுமசனம்—முந்துமெழு

பாகனைய சொல்லீர்! பகருமிந்தப் பாவையர்க்குப்
போகென்றுரல் கூடாது போம்.''

என்று சொல்ல, கற்றுச்சொல்லிப் பெண்கள் உடனே தமிழறிவாளி டத்தில் பொன்னையும் அரிசி முதலான சாமக்கிரியைகளையும் வைத்து அந்தக் கவியையும் சொன்னார்கள். அது கேட்டு அவள், ''இது வென்ன காரணமோ! புதுமையாயிருக்கிறது!'' என்று விசாரப் பட்டுச் சற்றுத் தெளிந்து, பின்னும் சொல்லுவாள்: ''அடி பெண்களே! நீங்கள் பொன்னைக் கொண்டு போய் நம் அரண்மனைப் பொக்கிஷத்தில் சேர்த்துவிட்டு அந்த அரிசியைத் தொம்ப ரத்தில் போட்டுச் சமையல் செய்யுங்கள்; அந்த விறகு தலையனை நம் அரண்மனைப் புறத் திண்ணையில் இருக்கச் சொல்லுங்கள்; அதற்கு அவன் என்ன சொல்லுகிறானே அதை நீங்களொன்றும் அறியாதவர்கள் போலக் குறுக்கு நெடுக்குமாகத் திரிந்து கேட்டுக் கொண்டு அதி சீக்கிரத்தில் வாருங்கள்,'' என்று சொல்லியனுப் பினாள். அப்படியே அவர்கள் பொன்னைப் பொக்கிஷத்திலே சேர்த்துப்போட்டு அரிசியைத் தொம்பரத்திலிட்டுச் சமைக்கக் வேலைக்காரர்களுக்கு உத்தரவு செய்துவிட்டு, விறகு தலையனிடத்தில் அதி துரிதமாய் வந்து, ''யாரையா, நீ இந்தப் புறத்திண்ணையில் உட்கார்ந்திரு,'' எனச் சொல்லி, என்ன சொல்லுகிறானே அதை அறிவோமென்று யாதொன்றும் அறியாதவர்கள் போலக் குறுக்கும் நெடுக்குமாக உலாவித் திரிந்துகொண்டிருந்தார்கள். அப்போது விறகு தலையனை நக்கீரதேவரும் தாதிகள் உத்தரவின்படிக்குத் திண்ணைமீதிருக்க, அந்தத் திண்ணைக்கெதிராக ஒரு புளிய மரமும் பனை மரமும் ஓரிடத்தில் வளர்ந்து இரண்டும் ஒன்றுய்ப் பிணைத்துக் கொண்டிருந்தன. அது தருணம் சாயங்காலமானபடியினாலே அந்த மரத்தின்மீது ஒரு கொக்கு வந்திறங்கி இருந்தது. அந்தக் கொக்கை நக்கீரர் பார்த்துச் சொன்னதாவது:

''புளியி லரும்பனையில் பொன்றலைக் கொக்கேகேள்:
இளமை யொழியா திருந்தீர்—தளருவதேன்
எம்மைப் பிரிந்தவரோ எம்மிலும் தாரியரோ
உம்மைப் பிரிந்தா ருரை.''

என்று சொல்ல, இந்தக் கவியைக் கற்றுச்சொல்லிகள் போய்த் தமிழறிவாளுக்குச் சொல்ல, அது கேட்டுத் தமிழறிவாளும் விறகு தலையனை நக்கீரரை அந்தக் கட்டைக் கடந்து ஒன்பதாவது கட்டுக்குள் அழைத்துவரச் சொல்ல, அப்படியே இவர்களழைத்து வந்துவிட்டார்கள். அந்த கட்டுக்குள் வந்து விறகு தலையனை நக்கீரர் சொன்னதாவது:

''ஊசி முனையி லொளிர்முத்துக் கோத்ததுபோல்
வீசும் பனிவந்து மெய்குளிர—மூசு
முலைத்தடங்கண் மாதே! முழுவினையேற் கின்று
நிலைக்கடையோ நிச்சயித்தாய் நீ?''

என்று சொல்லக் கேட்ட கற்றுச்சொல்லிப் பெண்கள் சிவுக்கென்று போய்த் தங்கள் எசமானியாகிய தமிழறிவாளுக்குச் சொல்ல, அவள் கேட்டு, "ஓ பெண்களே! அந்த விறகு தலையீன இப்பால் அழைத்து வந்து வைக்கோல் படுக்கை போட்டுக் கொடுங்கள்," என்று சொன்னாள். அவர்கள் அப்படியே பத்தாவது கட்டுக்குள்ளே அழைத்து வந்து வைக்கோல் படுக்கை கொடுக்க, அந்த வைக்கோலின் மேலே ஒரு கந்தையைப் போட்டுப் படுத்துக்கொண்டு விறகு தலையனை நக்கீரர் சொன்ன தாவது :

"வைக்கோல் சயனத்தில் வாரிமுன் னீயின்மேல்
மெய்த்தோல் வருந்திக் கிடவுடம்பே!—மொய்க்கு
மதுவொழுகு பூங்கொன்றை வார்சடையோ னிற்றைக்
கிதுவோ விதித்த தெமக்கு?"

என்று சொன்ன கவியைக் கற்றுச்சொல்லிகள் கொண்டு போய்ப் பெண்கள் சிகாமணியாய் விளங்கும் தமது முத்தமிழறிவாளுக்குச் சொல்ல, அவள் அது கேட்டு, "என் அருமைத் தோழிகளே! நீங்கள் அவனை இப்பாலழைத்து வந்து சீலைப்பாயும் வைக்கோல் தலையணையும் சேகரித்துக் கொடுங்கள்," என்றாள். உடனே கற்றுச் சொல்லிகள் அப்படியே போட்டுக் கொடுத்தார்கள். விறகு தலையனை நக்கீரர் பதினேராவது கட்டுக்குள்ளே வந்து, அந்தப் பாயின் மேல் சயனித்துக்கொண்டு சொன்னதாவது :

"சரசரத்த பாயும் தலையணைவைக் கோலும்
பரபரத்த மைச்சினிமார் பண்பும்—விரகுடனே
ஈங்கிவர்கள் செய்பு மியல்பு மிவர்நலமும்
நீங்காதென் னெஞ்சத்துள் நின்று."

என்று சொன்ன கவியைக் கற்றுச்சொல்லிகள் போய் மின்னல் கொடி போன்ற இடையையும் பொற்கிண்ணம் போன்ற தனபாரங் களையும் விசேஷ கல்வித் திறமையையுமுடைய தங்கள் தலைவியாகிய தமிழறிவாளுக்குச் சொல்ல, அது கேட்டு, "அந்த விறகு தலையனைப் பன்னிரண்டாவது கட்டுக்குள்ளே அழைத்து வந்து ஓர் ஈச்சம் பாயும் தலையணையும் போட்டுக் கொடுங்கள்," என்று சொன்னாள். அச்சொல்லைக் கற்றுச்சொல்லிகள் சிரமேற்கொண்டு, அந்த விறகு தலையனுக்கு அப்படியே கொடுத்தார்கள். அப்பால் அதன் மேலே விறகு தலையனை நக்கீரர் இருந்துகொண்டு சொன்ன தாவது :

"குடவன் கடிக்கக் குளிர்வாடை வீசக்
கிடவென் றிடத்தே கிடந்தேன்—மடநல்லார்
மென்குறங்கைத் தீண்ட விதியில்லை ஆதலினால்
என்குறங்கை யான்தழுவி னேன்."

என்று சொன்ன கவியைக் கற்றுச் சொல்லிகள் போய்த் தமது அரசியாகிய தமிழறிவாளுக்குச் சொல்ல, 'இவன் நல்ல வித்துவானே; அற்பமானவனல்லன்,' என்று எண்ணிக்கொண்டு, "பதின் மூன்றுவது கட்டுக்குள் அழைத்துக்கொண்டு போய் ஒரு நார்க் கட்டிலும் ஈச்சம்பாயும் தலையணையும் போட்டுக் கொடுத்து நம்மிடத்திலே சேவிக்கின்ற பெண்களிலே அதிக அழகுடனே ஆடும் பெருமாளைச் சிங்காரித்து அவனிடத்துக்கு அனுப்புங்கள்," என்றுள். அப்படியே கட்டிலும் பாயும் போட்டுக் கொடுத்து, அதன்மேலே விறகு தலையணை இருக்கச் சொல்லி, அந்த அழகுடனும் பெரு மாளையும் சிங்காரித்து அனுப்புவித்தார்கள். அவள் வந்து எதிரே நின்றுள். அவளைப் பார்த்து விறகு தலையனை நக்கீரர் சொன்ன தாவது :

" தறிபோலும் குண்டத்தாள் தானவளைப் போல
நெறியாக வந்தென்முன் நின்றுப்—சிறுபுலிதான்
தீரப் பசித்தாலும் தின்னுப்புல் தின்னுமோ ?
நேரேமுன் னில்லாதே நீ."

என்று சொன்ன கவியைக் கேட்டு அவள் தலையை இறங்கிக்கொண்டு போய்த் தமிழறிவாளுடனே சொல்லிக்கொண்டாள். அது கேட்டுத் தமிழறிவாளும், " பதினலாவது கட்டுக்குள்ளே அழைத்துக் கொண்டு போய் ஒரு கச்சுக் கட்டிலும் ஈச்சம்பாயும் போட்டுக் கொடுத்து நம்முடைய தாதிகளிலே இரதமோகினியைச் சிங்காரித்து அனுப்புங்கள்," என்று சொன்னுள். அப்படியே கட்டிலும் போட்டுக் கொடுத்து அந்தப் பெண்ணையும் சிங்காரித்து அனுப்பு வித்தார்கள். அவள் வருகிற போது விறகுதலையனிடத்தில் எரிந்து கொண்டிருந்த விளக்கு இருண்டெரிந்தது. அது கண்டு அவள் போயந்த விளக்கைக் கையாலே தூண்டி எண்ணெயைத் தலையிலே தடவிக்கொண்டாள். அதை விறகுதலையனை நக்கீரதேவர் கண்டு, இவள் இந்த வீட்டு வெள்ளாட்டி என்றறிந்து, அவளைப் பார்த்துச் சொன்னதாவது :

" சுள்ளி விறகு சுமைத்தலைய னுனும்
தெள்ளு தமிழறிவாள் சேராமல்—உள்ளம்
செழும்பா லினுமினிய தேன்சொலாய் ! கூடேன் !
தொழும்பாமுன் னுத்தியுடன் சொல்."

என்று சொன்ன கவியைக் கேட்டு அவளும் வெட்கித் தலையை இறங்கிக்கொண்டுபோய்த் தமிழறிவாளுடனே சொல்லிக் கஷ்டப் பட்டாள்; அது கேட்டுப் பதினந்தாவது கட்டுக்குள்ளே அழைத்துக் கொண்டு போய்க் கட்டில் தூங்கு மஞ்சத்தின் மேல் மெத்தை தலையணையும் சீனிப்பாயும் போட்டுக்கொடுத்துத் தன்னுமுடைய தோழிப் பெண்களிலே மதனசேனைக்குத் தன்னுடைய வெண் சாமரையும் பொற்காளஞ்சியம் பொன் மிதியடியும் பொற்

பட்டாடையும் கொடுத்துச் சிங்காரித்து விறகு தலையினிடத்துக்கு அனுப்புவிக்கச் சொன்னாள். அவள் வந்து நின்ற போது அவளைப் பார்த்து விறகு தலையனை நக்கீரர் சொன்னதாவது :

" ஆடை யுடையு மவள்கான் மிதியடியும்
மூடிய வாகவந்தென் முன்னின்றுய்—மாடுபோல்
குண்டனோன் சேர்வேனே கோதையர் செய்திதனைக்
கண்டேன்கண் டேனேமின் காண்."

என்று சொன்ன கவியைக் கேட்டுத் தமிழறிவாளுடனே சொல்லி மிகவும் துக்கித்துக்கொண்டாள். அவள் துக்கத்தை மாற்றி, " இவன் வந்த காரணமேதோ ?" என்று விசாரமிட்டுக் கற்றுச்சொல்லிப் பெண்களால் மொண்ணச்சிகளை அழைத்து, "அந்த விறகு தலையனைப் பதினுருவது கட்டுக்குள் அழைத்துக் கொண்டு போய்த் தொம்பரத்திலே சமைத்திருந்த சாப்பாடு போடுங்கள்," என்று சொல்ல, அப்படியே அழைத்து ஒரு கல்லால் இலையைத் தைத்துப் போட்டு வெந்ததும் வேகாததும் கல்லும் நெல்லுமாய்ச் சாப்பாடு கொண்டு வந்து வைத்தார்கள். அந்தச் சாப்பாட்டைப் பார்த்து இவர்கள் வீட்டிலே சாப்பிடாதவரான படியினுலும் சாப்பாடிருக்கிற திட்டமும் பார்த்துச் சாப்பிடுகிற பாவனையாகச் சாதத்தின்மேல் கையை வைத்துக்கொண்டு விறகு தலையனை நக்கீரர் சொன்னதாவது :

" நெல்லான் மருத மணலுண்மை யானெய்த நீண்டகன்ற
கல்லால் குறிஞ்சி மகரின்வெம் பாலை கலியின்முல்லை
வில்லாம் புருவத்து வேனெடுங் கண்ணிநன் மெல்லியல்லாய் !
சொல்லா நிலமெல்லாம் காட்டுவ னீயிட்ட சோற்றிடத்தே."

என்று சொல்லி இதற்குப் பொருள் சொன்னது,

" கல்லொன்று நெல்லிரண்டு காணுமணல் மூன்றரிசி
கல்லையுட னஞ்சுவகை காட்டிலேன்—வில்நுதலாய் !
வல்லபடி செய்த வகையெல்லாம் உங்களது
முல்லைநகை யாட்கு மொழி."

என்று இரண்டு கவியும் சொல்லிக் காட்டி அன்னத்தையும் தள்ளிப் போட்டு அப்பாலே இருந்தார். அது கேட்டுக் கற்றுச்சொல்லிகள் போய்த் தமிழறிவாளுக்குச் சொன்னார்கள். தமிழறிவாளும், " நல்லது!" என்று, " அந்த விறகு தலையனைக் கச்சேரி மண்டபத்துக்கு வரச் சொல்லி அழையுங்கள்," என்ன, அப்படியே கற்றுச் சொல்லிகள் வந்து விறகு தலையனை, " கச்சேரி மண்டபத்துக்கு வாரும்," என்றழைத்தார்கள். " நல்லது " என்று விறகு தலையனை நக்கீரதேவர் கச்சேரி மண்டபத்துக்கு வருகிற போது பதினேழாம் கட்டுக்குள்ளே சூத்திரப் பதுமைகள் இவரை அவமானம் பண்ணும்பொருட்டு எதிரே வந்தது கண்டு தண்டால் அடித்தார்.

அந்தச் சூத்திரப் பதுமைகளெல்லாம் கலைந்து விழுந்து போயின. அது கடந்து அப்பாலே பதினெட்டாம் வாசலிலே போகிற போது இரண்டு பக்கத்திலும் புலிகள் சீறி வந்தன. அந்தப் புலிகள்முன் செம்பருத்திப் பூவைப் போட்டார். அவைகளே மாமிசமென்று எடுத்துக்கொண்டு அப்பாலே போயின. அது கடந்து அப்பால் பத்தொன்பதாம் வாசலில் போகிற போது இரண்டு பக்கங்களிலும் கரடிகள் சீறி வந்தன. அப்போது காந்தக் கல்லைக் கற்றாணிலே தட்டினார். அதிலே நெருப்புப் பிறந்தது. அது கண்டு பயந்து அப்புறம் ஓடிப்போயின. அது கடந்து அப்பாலே இருபதாம் வாசலில் போகிறபோது இரண்டு பக்கமும் யானைகள் கர்ஜித்துத் தும்பிக்கை நீட்டிக்கொண்டு எதிரே வந்தன. அவைகள் கையிலே கருப்பங் கழியைக் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்டு அப்பாலே போயின. அந்த வாசல் கடந்து அப்பாலே இருபத்தோராம் வாசலிலே போகிற போது குரங்கு சீறி வந்தது. அதன் முன்னே கட்டெறும்பையும் நண்டையும் விட்டார். குரங்கு அது கண்டு பயந்து அப்பாலே ஓடிப் போயிற்று. அந்த வாசல் கடந்து இருபத் திரண்டாம் வாசலிற் போகிற போது வேட்டை நாய் சீறி வந்தது. அதன் முன்பு மல்லிகைப் பூவைப் போட்டார். அது சோறென்று முகந்துகொண்டிருந்தது. அது கடந்து இருபத்து மூன்றும் வாசலில் போகும் போது அந்தக் கிணற்றிலே இறங்கி அப்பாலே போவோம் என்று இறங்கினுல் சூத்திரப் பலகையானது மேலே மூடிக்கொள் ளும் என்றறிந்து அந்தக்கிணற்றிலொரு கல்லைப் போட்டார்.உடனே சூத்திரப்பலகை கிணற்றை மூடிக்கொண்டது. அந்தப் பலகையின் மேலேறி அப்புறம் போனார். அந்த வாசல் கடந்து இருபத்து நான்காம் வாசலில் போகும் போது அந்த வாசலிலே குங்குமச் சேறு இருந்தது. அப்போது எண்ணெய்ச் சீலையை எடுத்துக் காலிலே தடவிக்கொண்டு சேற்றைக் கடந்து போய்க் கரையேறி, கொஞ்சநஞ்சம் அங்கங்கே பட்டிருக்கிற சேறெல்லாம் மூங்கில் பிள வாலே நன்ருய் வழித்துப் போட்டு, அங்கே வெள்ளித் தட்டில் வைத்திருக்கிற ஆழாக்குப் பனிநீரிலே காலைக் கழுவிக்கொண்டு மற்றப் பாதிப் பனிநீரையும் தமது பிறகே சூழ்ந்து வருகிற தாதிகள் கையில் கொடுத்து, "இந்தப் பனிநீரைக் கொண்டு போய் உங்கள் நாச்சியார் தலையிலே ஊற்றுங்கள்," என்று சொல்லி, அந்த வாசல் கடந்து இருப்பத்தைந்தாம் வாசலுக்கு வருகிற போது அங்கே சித்திரகூடமண்டபத்தில் பாரத ராமாயண மற்றும் உண்டான கதாபிரசங்கங்களெல்லாம் எழுதியிருந்தன. அவைகளைப் பார்த்து, "நாமிங்கே வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தால் பொழுது விடிந்து போகும்," என்று நினைத்துச் சீக்கிர மாகப் போகப் பிறகே வருகிற மொண்ணச்சிகள் விறகு தலையனைப் பார்த்து, "இந்தச் சித்திரங்களிருக்கிற வினோதங்களைப் பாரும்! பாரும்!" என்று சொன்னர்கள். அதற்கு விறகு தலையனை நக்கீரர் சொன்னதாவது :

" கலோநாட்டும் தோகைக் கருஞ்சக் கரத்தின்
வலோகாட்டி யாயிரம்பொன் வாங்கிக்—கலோநெகிழாச்
சூத்திர மாகித் தொடுங்குறி போலிருந்த
சித்திரமும் செய்யும் செயல்."

என்று சொன்ன கவியைக் கற்றுச்சொல்லிகள் போய்த் தமிழறி வாளுக்குச் சொல்லத் தமிழறிவாள் சந்தோஷப்பட்டுச் "சீக்கிரமாக அவனே அழைத்து வாருங்கள்," என, அப்படியே அழைத்து வருகிற போது இருபத்தாரும் வாசலிலே நீராழி மண்டபம் இருந்தது. அதற்கு மிதப்புப் போட்டுக்கொண்டு பள்ளமறிந்து கரையேறிப் போனார். அது கடந்து அப்பால் போகிற போது இருபத்தேழாம் வாசலிலே பளிங்குமா மண்டபத்தில் போகையில் அந்த மண்ட பத்தின்மேலே செய்து வைத்திருக்கிற சித்திரங்களைப் பார்த்தால் கீழே கால் சறுக்கி விழுவான். அப்படி விழாமல் உபாயமாய்க் கடந்து போய் அப்பால் இருபத்தெட்டாம் வாசலிலே தமிழறி மண்டபமும் கடந்து, இருபத்தொன்பதாம் வாசலிலே இயலறி மண்டபமும் கடந்து, அப்பால் முப்பதாம் வாசலிலே இசையறி மண்டபமும் கடந்து, அப்பால் முப்பத்தோராம் வாசலிலே கூத்துப் பார்க்கின்ற மண்டபத்தில் கோழிச் சேவல் சண்டையும் ஆட்டுக்கிடாய்ப் பாய்ச்சலும் இப்படியாக அனேக விஞ்தைகள் இருந்தன. அந்த மண்டபத்திலே கூத்தாடுகிறதும் மத்தளதாளம் போட்டுக்கொண்டு நாடகசாலைப் பெண்களும் கூத்தாடிகளும் இவருக்கெதிரே புகழ்ச்சி பண்ணிக்கொண்டு ஆட வந்தார்கள். 'இந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்தால் பொழுது விடிந்து போகும். ஆனபடியால் வந்த காரியம் ஆக வேண்டும்,' என்று அவர்களைப் பார்த்து, "உங்களாட்டமும் பாட்டமும் நானே பார்க்கிறவன்? உங்கள் நாச்சியே பார்ப்பாள்," என்று சொல்லி, அவர்களுக்குத் தியாகம் கொடுத்து, அது கடந்து அப்பால் கச்சேரி மண்டபத்துக்குப் போகிற போது தாதிகள் போய்த் தமிழறி வாளுடனே, "இந்த முப்பத்தொரு வாசலும் கடந்து வந்தான்," என்று சொல்லக் கேட்டுத் தமிழறிவாளும் சந்தோஷப்பட்டு, "இத்தனை கட்டுக் காவலனைத்தும் கடந்து வந்த போதே அவன் தேவனே," என்று அந்த மண்டபம் விட்டுத் தன்னரண்மனைக்குப் போனாள். நக்கீரரும் அந்தக் கச்சேரி மண்டபத்துக்கு வந்தார். அந்த மண்டபம் எப்படி இருக்கிறதென்றால் அறுபத்து நான்கு கால் பொற்றூணிறுத்தி மண்டபம் சோடித்து, அந்த மண்ட பத்துக்கு நவரத்தினக் காலும் பட்டு பட்டாவளி சீனி சீலும்பரத்தி னாலும் அலங்கரித்து அதிலே மயில்கள் ஆடவும், குயில்கள் கூவவும், அன்னங்கள் நடந்து விளையாடவும், வண்டினம் பாடவும், பஞ்ச வர்ணக் கிளிகள் கொஞ்சிக் குலாவிப் பேசவும், தென்றல் வீசவும், மேற்கட்டு, கட்டில், சூத்திரப் பிரதிமைகள் முப்பத்திரண்டு மேள வாத்தியம் பண்ணவும், சாம்பிராணி தூபமும், மல்லிகை முல்லை சாதி புன்னை மருக்கொழுந்து இப்படிக்கொத்த பரிமள திரவியங்

களும் 'கம கம'வென்று பரிமளித்துக்கொண்டிருக்கவும், இப்படி நானாவிதமான அலங்காரமாயிருக்கப்பட்ட கச்சேரி மண்டபத்தில் களிற்றி யானைத் தந்தக் கட்டிலும் பிடியானைத் தந்தக் கட்டிலும் நவரத்தின கசிதமாகச் சோடித்து இரண்டு கட்டிலும் சோடாகப் போட்டிருக்கிற இந்தப் புதுமை எல்லாம் பார்த்து நக்கீரதேவர் அதிசயப்பட்டு, "இத்தனைக்கும் வல்லவளானபடியினாலேதான் இத்தனை ஆடம்பரவட்டணை அலங்காரவல்லமையினாலே தனக்கொருவரும் எதிரில்லை என்று விருது கூறிக்கொண்டிருக்கிறாள். இவளை வெல்லுகிறது அருமை," என்று விசாரப்பட்டு, "ஆனாலென்ன! நம்முடைய குருவாகிய சுப்பிரமணியக்கடவுள் பாதாரவிந்தமே துணை," என்று அந்தக் கட்டிலண்டைக்கு வந்து கட்டிலைப் பார்த்து அதிசயப்பட்டு இந்தக் கட்டிலிரண்டையும் பெண்கட்டில் ஆண்கட்டிலென்று பிரித்த விவரம் தமது கையினாலே ஒரு கட்டிலை நெறுக்கி இருத்திப் பார்க்கத் தளர்ந்திருந்தது. இது பிடியானைத் தந்தக் கட்டில் பெண்கட்டிலாம் என்றறிந்து, அது கால்மாடு, தலைமாடு தெரியாமல் இருந்தபடியினாலே அதனை அறிய வேண்டித் தமது கையிலிருந்த எலுமிச்சம் பழத்தை எடுத்து அந்தக் கட்டிலின் நடுமையத்திலே வைத்தார். அது உருண்டு போய்க் கால்மாட்டில் நின்றது. அது கண்டு கால் மாட்டில் சூத்திரப் பிரதிமைகளும் தலை மாட்டிலே நிலைக்கண்ணாடியும் இருக்கிறது இலட்சணமாமென்று அறிந்துகொண்டு, அந்தக் கட்டிலின் மேலேறி ஒரு கந்தையை விரித்துப் போட்டுப் படுத்துக்கொண்டார். கட்டிலிலே பிரதிமைகள் கட்டியிருந்தபடியினாலே மேற்படி சூத்திரப் பதுமைகளெல்லாம் கால் பிடிக்கவும், உடம்பு பிடிக்கவும், மயில் விசிறியெடுத்து வீசவும், கண்ணாடி எடுத்துக் காட்டவும், வெண்சாமரை எடுத்து வீசவும், இப்படியாகப் பிரதிமைகள் எல்லாம் பணிவிடை செய்யத்தக்கதாக விறகு தலையனை நக்கீரதேவர் படுத்துக்கொண்டிருக்கிறதைக் கண்டு கற்றுச்சொல்லிகள் முதலான பேரும் ஆச்சரியப்பட்டு, தமிழறிவாளுடனே சொன்னார்கள். அவளும் கேட்டு விசாரப்பட்டுப் பின்பு மனம் தெளிந்துகொண்டு, "இவன் உத்தமன் என்கிற தற்குச் சந்தேகமில்லை; இப்படிக்கொத்த வித்துவானைச் சேர்ந்தாலும் தோஷமில்லை; மோக்ஷமுண்டு. ஆனாலும், இவனுடைய திறமையை இன்னமும் பார்ப்போம்," என்று தன்னுடைய தோழியான இயலறியும் பெருமாளை வரவழைத்து, அவளுக்குத் தன்னுடைய ஆபரணங்களையெல்லாம் பூட்டிச் சிங்காரித்து வெகு ஆடம்பரத்துடனே அனுப்பினாள். அவளும் தமிழறிவாள் வடிவாய் வந்து நின்றபோது, அவளைப் பார்த்து, 'இவள் தமிழறிவாள் அல்ல' என்று தம் மனத்தில் எண்ணிக்கொண்டு விறகு தலையனை நக்கீரதேவர் சொன்னதாவது :

"முத்து நகையு முகிழ்முலையு மெய்ஞ்ஞான
சத்திசிவம் போலத் தாதியரா—மெத்தெனவந்

தன்புருகா நெஞ்சத் தவரிருக்க நீவரலென் ?
பொன்சிலம்புச் சிற்றடியாய் ! போ.''

இப்படிச் சொல்லக் கேட்டு இயலறிவாளும், '' நீரென்னைத் தூஷித்தாலும் பெரிதன்று ! வெகுமானமாய்ப் போவென்றீரே ! அதுவே போதும்,'' என்று சொல்லிப் போய்த் தமிழறிவாளுடனே சொன்னள் ; அது கேட்டுத் தமிழறிவாளும், '' இனிமேல் யாரை அனுப்பினலும் ஆகிறதில்லை ; நாமே போக வேண்டும்,'' என்று தாயானமரகதவடிவை அழைப்பித்துச்சொல்லுவாள்: 'விறகுதலைய னிடத்திற்கு நாம் யாரை அனுப்பினலும் அவர்களைத் தூஷணை செய்து ஓட்டிவிடுகிருனே ! இனி நானே அவனிடத்திற்குப் போக வேண்டுமே!'' என்று கேட்க, மரகதவடிவு சொல்லுவாள் : '' விறகு தலையனுவதேது, அவனிடத்திற்கு நீ போகிறதேது ! இஃதென்ன மாயமாயிருக்கிறது ! நீ இது வரைக்கும் தமிழறிவாளென்று பேர் பெற்று உனக்கு யாரும் எதிரில்லாமல் கீர்த்தி படைத்திருந்தாய் ! இப்போது வந்தவனுக்குச் சிறு பெண்களை அழைத்து அவன் முன்னே கேளிக்கையாடச் சொல்லி வேடிக்கை பார்ப்பித்துப் பொழுது விடியப்பண்ணி, '' இளிச்சவாய்ப் பித்தா ! மோசம் போனுயே !'' என்று அடித்தோட்டிவிடுகிறதேயல்லாமல், அந்த விறகு தலையனைக் கூடவும் விதியோ ? மகளே, போக வேண்டா,'' என்ருள். அது கேட்டுத் தமிழறிவாளும் தாயான மரகதவடிவுக்குச் சொல்லுவாள் : '' வந்தவன் எங்கேயாகிலும் மோசம் போனலல்லவோ, அடித்து ஓட்டிவிடலாம் ! நல்ல இலட்சணம் அறிந்தவனுமாய் மகத்தான வித்துவானுமாய்க் கட்டுக்குக் கட்டுக் கவி சொல்லிக்கொண்டு வந்த வித்துவானை நம்முடைய வலிமையினலே அடித்து ஓட்டிவிட்டால் பூமியிலும் அபகீர்த்திக்கிடமாகும் ; இவனும் வசைகவி பாடிப் போடுவான் ; இது காரியமல்ல,'' என்று தாயான மரகதவடிவுக்குத் தமிழறிவாள் சொல்லிக் காண்பித்ததாவது,

'' கல்லா வொருவன்ருள் சேர்தலினும் கற்றவனே
டல்லற் படுவ தழகன்ரே ?—சொல்லாய்
கரும்பிரசங் கைக்குமோ ? கல்வியறி கோதாய் !
விரும்புவரோ வேம்பின கனி ?''

என்று சொல்லிக் காண்பித்தவுடனே தாயான மரகதவடிவு சம்மதித்து, '' நல்லது ! போ,'' என்று சொன்னள். அதன் பிறகு தான் போய் மஞ்சனச்சாலை புகுந்து, பச்சிலை பசுமஞ்சளரைத்து ஸ்நானம் பண்ணி, தான் பூண்டுகொண்டிருந்த ஆபரணங்க ளெல்லாம் கழற்றிப் போட்டுக் கண்ணுக்கு மையிட்டுக்கொண்டு, சந்தனம் பூசிக்கொண்டு, நெற்றிக்குத் திருநீறும் கஸ்தூரிப் பொட்டும் இட்டுக்கொண்டு, ஒரு வெள்ளைப் புடவை உடுத்துக் கொண்டு, தாதிகளாலிடப்பட்ட உடைமைகளிட்டுக்கொண்டு, இன்னும் தனனை அறியாமலிருக்க வேண்டுமென்று முன்னலே போய்

வந்த இசையறியும் பெருமாளைத்தானே முதன்மையாய் அலங்காரம் பண்ணிக்கொண்டு திரும்பவும் வந்தாளே இவள்தான் தமிழறிவா ளென்று அவன் மனத்திலெண்ண வேண்டுமென்று நினைத்து வெகு ஆடம்பரமாக மேளதாளங்களுடனே கட்டியக்காரிகள் எச்சரிக்கை சொல்ல, இசையறியும் பெருமாளை முன்னே நடத்திக்கொண்டு தான் அவளுக்கு அடைப்பைக்காரியைப் போலப் பிறகே நின்று வெற்றிலை மடித்து நீட்டி நீட்டிக் கொடுத்துக்கொண்டு வருகிறவ ளுடைய விலட்சணத்தைப் பார்த்ததும், முகமிருக்கிற ஒளியையும் பார்க்கிற பார்வையையும், அவளுடையரூபாதிசயத்தையும் நடையி னெடிப்பையும், பிடியிலடங்கும் இடையையும், மூன்றும் பிறைச் சந்திரனைப் போல இருக்கிற அவளுடைய முகத்தினழகையும் பார்த்து, " இவளே தமிழறிவாளாக வேண்டும். இவள் தன்னுபர ணங்களை எல்லாம் கழற்றிப் போட்டு மாறுபாடாக வருகிறது கபட மாய் இருக்கிறது," என்று தமிழறிவானைப் பார்த்துத் தூஷணித்துப் பாட நாவெழாமல் விறகு தலையனை நக்கீரர் சொன்னதாவது :

கலித்துறை

" கருக விழித்த விழிக்கணை யால்வெய்ய காமனையன்
றுருக விழித்த விழியது வோவிங் குவமை யில்லாக்
குருகு பதத்தினம் கொங்கைமின் னுளிடம் கூடலின்று
பருக விதித்தில னேவெய்ய காமப் பசிதனக்கே."

என்று சொன்ன கவியைக் கேட்டுத் தமிழறிவாளும், " இவன் நம்மைப் பார்த்து அறிந்துகொண்டு இத்தனை உவமையிட்டுப் பாடினன்!" என்று சந்தோஷப்பட்டு, அதி சீக்கிரமாய்ப் பெட்டை யானைத் தந்தக் கட்டிலென்கிற பெண் கட்டிலின்மேல் முகனையாக வந்து இசையறியும் பெருமாளை உயரவைத்துத் தான் கீழேயிருந்து கொண்டு வெற்றிலை மடித்துக் கொடுத்துக்கொண்டிருந்தாள். அது கண்டு விறகு தலையனை நக்கீர தேவரும், " இப்படிக் கபடமார்க்க மாக வெற்றிலை மடித்துக் கொடுத்துக்கொண்டிருந்தால் எனக்குத் தெரியாதோ ?" என்று மனத்தில் எண்ணிக்கொண்டு, வெற்றிலை மடித்துக்கொண்டிருக்கிறவள் கையிலே வெற்றிலை கொடுக்கப் போனார். அதைத் தமிழறிவாள் கண்டு, " இவன் நம்மை அறிந்தல்லவோ நம்முடைய கையில் வெற்றிலை பாக்குக் கொடுக்க வருகிறான்!" என்றெண்ணிக்கொண்டு, அவர் முகத்தை ஏறப் பார்த்து, தமிழறியும் பெருமாள் சொல்லுவாள் : " நானொரு கவி சொல்லுகிறேன் ; அந்தக் கவிக்குப் பயன் சொன்னீராகில், உம்முடைய கையிலே வெற்றிலை பாக்கு வாங்குவேன் ; அல்லாமற் போனால் வாங்குகிறதில்லை," என்று சொன்னாள். அதற்கு நக்கீர தேவர் சொல்லுவார் : " நீ சொல்லுகிற கவிக்குப் பயன் சொன்னால் சரி, சொல்லாமற் போனால் உனக்கு ஆறு மாதம்

ஊழியம் பண்ணுகிறேன்; ஒரு வேளை நீ தோற்றால் என்ன வாகிறது? சொல் பெண்ணே," என்றார். அதற்குத் தமிழறிவாள் சொல்லுகிறாள்: "ஒரு வேளை நான் தோற்றேனேயாகில் தேவரீர் சொன்னபடிக்குக் கேட்கிறேன்," என்றாள். அது கேட்டு நக்கீரர், "ஆனால், சொல்லுகிற கவியைச் சொல் பெண்ணே," என்றார். அப்போது தமிழறிவாளும் இரண்டு கட்டிலுக்கு நடுவே பூந்திரை இடுவித்துத் தமிழறியும் பெருமானென்கிற வேஷத்துக்குண்டான ஆபரணங்களை எல்லாம் பூட்டிக்கொண்டு, பட்டுப்பட்டாவளி உடுத்து, அளகத்துக்கு முல்லை அணிந்து, கைக்குப் புனுகு சவ்வாதிட்டுக் கொங்கைக்குக் குங்கும கஸ்தூரி அணிந்து, மார்புக்குக் கண்டசரம் முத்துமாலை அணிந்து, காதுக்குக் கொந்தளமணிந்து, கைக்கு அஸ்தகடகமிட்டு, காலுக்குச் சிலம்பணிந்து, அரைக்கு ஒட்டியாணமணிந்து, இசையறியும் பெருமாளை அரண்மனைக்கு அனுப்பிவிட்டுத் தான் கட்டிலின்மீது இருந்துகொண்டு, ஆலவட்டம் வீச, உபய வெண்சாமரை வீச, சர்வபூஷணலங்கிர்தமாக இருந்து கொண்டு, விறகு தலையனை நக்கீர தேவருடனே வாக்குவாதம் பண்ணினதாவது:

"ஐயஞ் சிருபத்தஞ் சேறிறவே நான்பெறினும்
வெய்யமத னேந்துகணை மேல்வரினும்—தையலாள்
கையஞ் சறியாத காளைதோள் சேர்வளோ
மெய்யஞ் சறப்பெற்ற மின்?"

என்று சொன்ன கவிக்கு நக்கீரர் தம்மண்டையிலிருந்த அஞ்சறைப் பெட்டியைத் தட்டிக் காண்பிக்க, அதற்குத் தமிழறிவாள், "இது யூகிபாஷையைப் போலிருக்கிறது; தெரியச் சொல்ல வேண்டும்," என்ன, நக்கீரர் பொருள் விடுத்த விவரம்: ஐயஞ்சிருபத் தஞ்சாவது - காடுபடுவதஞ்சு, கடல்படுவதஞ்சு, நாடுபடுவதஞ்சு, நகர்படுவதஞ்சு, மலைபடுவதஞ்சு. இவைகளுக்குப் பயன்: காடு படுவ தஞ்சாவது. அரக்களி செந்தேன் அணிமயிலின் பீலிதிருகற்ற நம்பியோடைந்து; கடல் படுவ தஞ்சாவது - ஓங்கு வலைசங் கொளிபவளம் வெண்முத்து பாங்கரிய வெள்ளுப் போடைந்து; நாடுபடுவதஞ்சாவது - செந்நெல் சிறுபயறு சீராறும் செவ்விளநீர் கன்னல் கதலியோ டைந்து; நகர்படுவ தஞ்சாவது - கண்ணுடி, பித்தன், கருங்குரங்கு, காட்டாணை, மண்ணுளு வேந்தனே டைந்து; மலைபடுவ தஞ்சாவது - மாணிக்கம், பச்சை, வைடூரியம், நீலம், ஆணிக் கனகமோ டைந்து. கணையஞ்சாவது - முல்லை, அசோகு, முழுநீலம், சூதப்பூ, அல்லி, முளரியோடைந்து. கையஞ்சாவது - எண்ணல், எழுத லிலக்கிள்ளல், பூத்தொடுத்தல், பண்ணமைந்த யாழினே டைந்து. மெய்யஞ்சாவது - கொட்டாவி நெட்டை குறுகுறுப்பை கூன்குருடு தட்டி விழுதலோ டைந்து. இப்படி என்று நக்கீரர் பொருள் விடுத்த பின்பு பின்னும் தமிழறிவாள் சொன்னதாவது:

" பாய்ச்சி மறித்திடுவார் பாதமே நான்குடையார்
வாய்ச்ச கனம்புகுந்து வாழ்ந்திருப்பார்—வீச்சிப்
படைவாணர் தங்களுக்குப் பாரின்மேல் காணு
அடைமாவு மல்ல வது."

என்று சொன்னதற்கு நக்கீரர் பொருள் சொன்னது :—

" கங்கைபல வைச்சடியில் கால்களொரு நான்குளதாம்
பைம்போர்க் களமேறிப் பாய்ச்சுதலா—லெம்பெரிய
மாவல்ல நல்ல மாக்காலே மாநிலமன்
பூவலரும் கோதாய் பொருள்."

என்று பொருள் விடுத்துச் சொன்ன பின்பு தமிழறிவாள் பின்னும் சொன்னது :

" அங்காடி கொள்ளப்போ யாணை கண்டேன் ;
அண்ணகர மன்றினிலே சேனை கண்டேன் ;
கொங்காளு முத்தரசர் தம்மைக் கண்டேன்;
கொடித்தேரும் பரிமாவும் கூடக் கண்டேன் ;
அங்கிருவ ரெதிர்நின்று வெட்டக் கண்டேன் ;
அதுகண்டு யான்தலையைத் தாழ்த்த லுற்றேன் ;
இங்கிதனை இன்னதென் றியம்புவோர்க்கே
எதிரில்லை இப்புவிக்கு ளென்ற வாறே."

இந்தக் கவிக்கு நக்கீரர் பொருள் சொன்னது :

" எதிரரங்க மன்றிதனி லேறக் கண்டேன் ;
எழுதரிய தேர்மாவு மனிதர் கண்டேன் ;
அதிரரங்க மாயிருவ ராடக் கண்டேன் ;
அவ்விருவ ரெதிர்நின்று வெட்டக் கண்டேன் ;
சதுரரங்க மிதுகாணும் வேரொன் றல்ல
தார்குழலே நீதலையைத் தாழ்த்த லேனே
விதிரரங்க முடையதொரு மானே கேளாய்
வீணருக்கும் வேந்தருக்கும் வேலை தானே."

என்று பொருள் விடுத்த பின்பு பின்னும் தமிழறிவாள் சொன்ன கவி :

" அக்கரமு மெழுதவொண்ணு வாய்மை யாளர்
ஆவின்பின் னேதிரிவா ரதுவு மன்றி
சக்கரமும் வலம்புரியும் தரித்தே நிற்பார்
தாமுரலில் கட்டுண்டு தயங்கா நிற்பார்
மிக்கதொரு வடம்புனைவர் வெண்ணெ யாடி
வெற்பெடுத்து மற்பொருது வேலை சூழ்வார்
இக்கெட்டும் புகழ்படைத்த தேவே கேளாய் :
திருமாலு மல்லவிது செப்பு வாயே."

இதற்கு நக்கீரர் பொருள் சொன்னதாவது :

" குன்ருத மொழியுடைய வாய்மை யாளர்
கோவின்பின் திரிவார்கோ பால ரல்லர்
ஒன்ருகக் கடல்கடைந்து வெண்ணெய் ஆடி
உரலோடே கட்டுண்டு வழுலா நிற்பர்
மன்ருடி மலேயெடுத்து மல்லுப் போக்து
மற்பொருதி வெற்பெடுத்துக் கொக்கிப் பூண்பர்
சென்ருடு முறையூரிற் றேனே! கேளாய் :
திருமாலு மல்லவிது செக்குத் தானே."

என்று பொருள் விடுத்த பின்பு பின்னும் தமிழறிவாள் சொன்ன கவி :

" படிமுழுதும் தரித்தங்கே மன்றுள் ளாடிப்
பத்தருமுத் தருமங்கே பரிந்து நாடித்
திடமுடைய நான்முகனு மரியும் தேடித்
தேவரெல்லாம் போற்றரிய திங்கள் சூடி
வரமணியு முலேமார்பு வராங்கம் போலே
வடிவுடைய திருமேனி தமும்பு மட்டும்
படிமுழுது மாளுவிக்கும் வல்லர் தாமே
பரமனுர் தானுமல்ல பகரு வீரே."

இதற்கு நக்கீரர் பொருள் சொன்னதாவது :

" வடிவுடையார் பிறையணிவார் வணிக ரெல்லாம்
வழிபடுவார் நாடோறு மனிதர் காண
அடிபடுவோர் திருமேனி தழும்பும் ஏற்பார்
அம்மைலார் தகவாழ்வ ரதுவு மன்றிக்
குடியினுடன் மன்னர்தங்கண் முன்னே நிற்பார்
கூற்றனென வருபவரை மாற்று விப்பார்
படிமுழுது மாளுவிக்க வல்லர் தாமே
பரமனுர் தானுமல்ல பணத்தி னரே."

என்று சொல்லப் பின்னும் தமிழறிவாள் சொன்னது :

" கட்டிய வன்கரையார் கால்பல வேயுடையார்
இட்டதோர் மடுத்தனிலே எய்திய தாமரையும்
கொட்டியு நெய்தலுமே கூட முளேத்திடுமே
இட்ட தமிழ்க்கரசே ஏரியு மல்லவது."

இதற்கு நக்கீரர் பொருள் சொன்னதாவது :

" கால்வழியே நூலோடிக் கரைகள் சேர்த்துக்
கற்பராப் பல்லிட்டுப் பஞ்சு வைத்துப்
பாவுதல்போல் நூல்தொடுத்து இழைதி ருத்திப்
பசுமையா யுடைதிட்டுப் பிணேயல் செய்து

பூவலரும் செய்துலகில் கொட்டி யிட்டுப்
பொருந்திய தாமரையும் பூத்தே நிற்பர்
வேல்பொருதும் கண்ணளே யோரி யல்ல
மேகலையென் றேயிதனை விளம்பு வாரே.''

என்று சொல்லக் கேட்டுத் தமிழறிவாள் சொன்ன கவி :

'' கானகத் திருந்து போந்து கைகளால் குத்து முண்டு
தானகக் கூடந் தன்னில் தண்பனி நீரு மாடி
மேனிலத் தவளங் கொண்டு விதியில் வருவா ரங்கே
ஆனையு மல்ல கண்டீர் அறிந்திடீர் கவிஞர் கோவே !''

என்று சொல்ல, நக்கீரர் பொருள் சொன்னதாவது :

'' தானம்போற் கூடந் தன்னில் தன்கையில் குத்து முண்டு
தேனுடன் பாலு நெய்யும் தெவிட்டநல் லமுது செய்யு
மாதுவேல் விழியி னுளே மாநிலத் தோர்கட்கெல்லாம்
ஆனையு மல்ல கண்டீர் அருங்கல்லே தானே யென்றார்.''

என்று சொல்லப் பின்னும் தமிழறிவாள் சொன்ன கவி :

'' அக்காடப் போகக்கண் டாறிரண்டில் ஒன்றையுண்
டிக்கா டவிடா யிரும்பாரை—யொக்கிடா
ஒன்னார் புரத்தை முனிந்தாரே அந்நாளில்
முன்னொன்கி லொன்றுடையான் முன்.''

என்று சொல்ல, இதற்குப் பாண்டியன் முன்னே நரியைப் பரி யாக்கினதென்று நக்கீரர் பொருள் விடுத்தார். பின்பு தமிழறி வாள் மறுபடியும் சொன்ன கவி :

'' நீரி லானது தானவை மூன்றுள
நெடிய கானின் விலங்கொரு மூன்றுள
ஊரி லாடவும் பாடவும் கொட்டவும்
மொன்றிலே யொரு பேதைய ராமெனச்
சேர வாங்கு தனுசுடன் கூடவே
தெற்கு மாமுனி தன்னையு மாகவே
பாரின் மீது இலவல் லார்க்கிது
பன்னி ரண்டு வருஷம் பகருமே.''

அதற்கு நக்கீரர் பொருள் சொல்லுவார் : 'நீரில் மூன்றுவது : மகரம், மீனம், கர்க்கடகம்; கானில் மூன்றுவது; மேஷம், ரிஷபம், சிம்பம்; ஊரில் ஆடுவது துலாம்; பாடுவது மிதுனம்; கொட்டுவது தேள்; பேதையாவது கன்னி; தனுசாவது வில்; தெற்கு முனி யாவது கும்பம்' எனச் சொல்லித் தமிழறிவாளைப் பார்த்து நக்கீரர் சொல்லுவார் : '' நீ சொன்ன கவிகளுக்கெல்லா ம் நான் பயன் சொன்னேனே! இனி நானொரு கவி சொல்லுகிறேன். அதற்கு

நீ பொருள் சொல்,'' என்று தமிழறிவாளுக்கு நக்கீரர் சொன்ன தாவது :

'' பஞ்சவர்கள் பேரும் வடிவு மவர்குணமும்
தஞ்சமுட னேஅதனைச் சாற்றவே—நெஞ்செதிரே
பின்ன வகையி னடைவடை வேந்தனையும்
சொன்னார் புலவர் தொகுத்து.''

இதற்குத் தமிழறிவாள் பொருள் சொன்ன விவரம் : 'பஞ்ச வர்கள் பேராவன : பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ; வடிவாவன : மெய், வாய், கண், மூக்கு, செவி ; குணமாவன : சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் ; உணர்வாவன: காண்டல், கேட்டல், உண்ணல், உடுத்தல், உயிர்த்தல்' என்று சொன்னுள். பின்னையும் நக்கீரர் சொன்ன கவி :

'' படிதனை இறுகப் பற்றிப் பருநில மதிரக் குத்தி
உடல்தனை யன்று பாய்ச்சி யங்கையும் புக்கி நின்று
கொடிபல சூழ்த லாலும் குமுறியே வளைத்த லாலும்
வடிவுடை மாதே கேளாய் மதகரி யல்ல கண்டீர்.''

என்று சொல்லத் தமிழறிவாள் பொருள் சொன்னது :

'' காற்றில் விளைவாகும் தாரணியின் மீதினிலே
மாற்றவரை வெல்ல வகையுளதே—சேற்றிடும்
ஆற்றுமை யாலிந்த வம்மடுவிற் றுன்கவிழ்க்கும்
ஊற்றுலே காணீ ரிருந்து.'

என்று சொல்லித் தமிழறிவாள் விறகு தலையனை நக்கீரரைப் பார்த்துச் சொன்னதாவது :

'' மன்னு கலைக்குரிய வல்லீரே யாமாகில்
பன்னும் விறகுதலைப் பாவலரே!—இன்னமுநீ
சொல்லுதியோ வென்றுரைப்ப சொல்லுவேன் சொல்லுமென்றுள்
வல்லமையால் செந்தமிழின் மான்.''

என்று சொல்லினவுடனே நக்கீரர் சொன்னதாவது :

'' ஞாலமிகுத் திருக்குநல்ல கரிய மேனி
நானிலத்தி லறியாத தேச மில்லை
காலுமுண்டு காசினியில் நடக்க மாட்டார்
கருதரிய சிறகுமில்லை பறந்தே போவார்
சீலமுடன் மைந்தரையும் பெறுவார் கண்டீர்
சினேகிதர்வந் தடுப்பார்கள் சேர வொட்டார்
ஆலமுண்ட கண்டத்தார் அருளி னலே
ஆராய்ந்தே இப்பொருளை அறிந்தி டாயே.''

என்று சொல்லத் தமிழறிவாள் பொருள் சொன்ன கவி :

" தேங்குபாலி லுப்பைபுன்னை வடவா லத்தி
செய்யமா தளைகொய்யா தின்றே சாலத்
தாங்கிலரிக் கோபுரங்கள் சாலை சோலை
சாளரங்கு திருக்கோயிற் றறுகு விக்கும்
ஆங்கிலணி பணியாக விளங்க ளோடும்
அணிதோப்புக் காவணங்க ளடுத்து வாழும்
மாங்கனிக்குத் தூக்கித்தலை கீழாய் நிற்கும்
வவ்வாலென் றிதன்பேரை வகுக்க லாமே."

என்று சொல்லிப் பின்னும் நக்கீரர் சொன்ன கவி :

" படைதனில்சென் றவையருளத் தொளைத்து நேரே
பாவலரை அறுக்கவென்று படையே கூடும்
குடமுடைய பெரிதான குதிரை ஏறும்
கோட்டைகொள்ளும் கொக்கரிக்கும் கொள்ளை யாடும்
அடலுருவ வேலெறிந்த பகையைத் தீர்க்கும்
ஆராளி புவியாளும் மாற்ற னல்ல
விடைமிகுத்த சிவனருளால் தெரிந்து நன்றாய்
விமரிசையா யிக்கவியை விளம்பு வாயே."

என்று சொல்லத் தமிழறிவாள் பொருள் சொன்ன கவி :

" செந்திருக்கம் பூச்சூடிக் கனலு மேந்தித்
திருக்கரத்தில் மானுமொரு மழுவு மேந்தி
விந்தைதனை இடப்பாகம் தனிலே வைத்து
விமலரது திருமகளார் விபரத் தோடு
கந்தருக்கு முன்பிறந்த தங்கை மைந்தன்
கரிகரியாம் விகடதடக் கமல பாதன்
தந்திமுக னேறுபெருச் சாளி என்றே
தாரணியி லவர்குலங்கள் சாற்ற லாமே."

என்று தமிழறிவாள் சொன்ன பின்பு நக்கீரர் சொன்ன கவி :

" சிற்றுடை உடுத்திருக்கும் சிறுமி யல்ல·
சிறந்தபூணூ லணிந்திருக்கும் மறையோ னல்ல
ஒத்தேமெய் எண்ணெயிடும் வணிக னல்ல
வொண்கமுத்தில் மணியுடையா ரிடப மல்ல
சித்தாரப் புரமெரித்தார் முன்னே நிற்பார்
சிறந்தமணி விடைக்குதவாத் தீய ரல்லர்
பொற்பாதம் பூண்டிருக்கும் திருமா லல்ல
பூவையே இக்கதையைப் புகலு வாயே."

என்று சொல்லத் தமிழறிவாள் பொருள் சொன்னதாவது :

" மந்தாரம் பிச்சைமுல்லை அறுகு கங்கை
மதியுடனே கொன்றைதும்பை மலருஞ் சூடி

எந்தாயம் பிகையாளே இடத்தி லேந்தும்
ஈசரது திருக்கோயின் முன்னே நிற்கும்
கொந்தாரு மலராடை அணிந்து கொண்டு
குவலயமென் றிருவிழாக் கொள்ளுங் கண்டீர்
ஐந்தான காரியமும் அறிந்த கோவே
அறியகொடிக் கம்பமென்றே அறைய லாமே.''

என்று தமிழறிவாள் சொல்ல விறகு தலையனை நக்கீரர், 'இந்தப் பிரசங்கத்திலே பொழுது விடிந்து போகும்' என்றெண்ணிக்கொண்டு, அத்தத் தமிழறிவாளைப் பார்த்துச் சொன்ன தாவது :—

" ஆய்ந்த சயனத்தி லாயிழையே அன்றியே
போந்த வணிவிடக்கப் போகுமா ?—வாய்ந்த
முன்னுன் முலையு முழுமதியு மன்றியே
என்னுகு மென்செய்வேன் யான்?''

என்று விறகு தலையனை நக்கீரர் சொல்லக் கேட்டுத் தமிழறிவாளுக்கு மன்மத விகாரமுண்டாகித் திரையை வாங்கிப் போட்டு விறகு தலையனைப் பார்த்தாள். பார்த்த போது அந்த விறகு தலையனை நக்கீரர் பின்னும் தமிழறிவாளைப் பார்த்துச் சொல்லியதாவது :

" என்னை விறகு தலையன்என வேஇகழ்ந்தாய்
மின்னிடையும் பெற்றதொரு மெல்லிநல்லாய்!—மன்னவருள்
தேரா வழகுடையான் தோளின்மே லேயணைந்து
சேராத வாறுதனைச் செப்பு.''

என்று நக்கீரர் சொல்லக் கேட்டுத் தமிழறியும் பெருமாள் அதிக சந்தோஷமாய் மன்மதவிகாரம் பொறுக்கப் போகாமல் எழுந்திருந்து வந்து தன்னைக் கூடச் சொல்லி விறகு தலையனை நக்கீர தேவரைக் கட்டிக்கொண்டு சொன்னதாவது :

" கையிருக்கக் காம நெறிஇருக்கக் காதலுன்
மெய்யிருக்கக் கண்டம் விழிபருக—மொய்குழலாள்
பாகும் சுவையும் பசுந்தேனு முப்பழம்போல்
ஆகமுறக் கூடென்ரு ளாங்கு.''

இப்படிச் சொல்லிக் கட்டிக்கொண்டவுடனே நக்கீர தேவரும் விசாரப்பட்டு, ''நாமிவளைக் கூடினுல் சங்கப்பலகையும் பொருது ; நான்கு யுகமாய் இருக்கப்பட்ட நாம் இப்போதிந்தக் காரியம் பண்ணினுமேயாகில் சங்கத்தாரும் நகைப்பார்கள் ; ஆகாச வாணி பூமி தேவியும் நகைப்பார்கள் உலகத்திலே அபகீர்த்தி உண்டாகும் ; இவைகளுமன்றி, விறகு தலையனுக்கல்லவோ கட்டி வைக்கிறேன் என்று பிரதிக்கினை பண்ணிக்கொண்டு

வந்தோம்? அப்படியிருக்க, நாம் இவளைக் கூடுகிறது நீதி யன்று," என்று ஓடின மனத்தைத் திருப்பித் தமிழறிவாள் தம்மைக் கட்டிக்கொண்ட கையைக் கவியினுல் விடுவிக்க வேண்டுமென்று எண்ணிச் சொல்லுவார் :

" ஒருவ ஞெருத்தியா யூரில்லா ஊர்புக்
கிருவர்க் கிருவரையும் பெற்ருன்—இருவரிலே
மூத்தானைக் கொன்ருன் பகைவற்கா தீயிட்டான்
ருதை வருமளவுந் தான்."

என்று சொன்ன மாத்திரத்திலே தமிழறிவாள் கட்டிக்கொண் டிருந்த கையை விட்டுக் கட்டிலே விட்டிறங்கி அப்பாலே போய்ச் சுற்றிலும் பனிநீரிறைத்து, மயில் விசிறியை எடுத்துக்கொண்டு, அந்த விசிறிக்குப் பனிநீரைத் தெளித்து, நக்கீரருக்கெதிரே நின்று விசிறிக்கொண்டு, அவர் சொன்ன கவிக்குப் பொருள் சொன்ன விவரம் : "ஒருவ ஞெருத்தியாவது-சூரியனுக்கு ரதசாரதியாகிய அருணனென்பவன் ஒருநாள் சூரியனைப் பார்த்து, 'நான் தேவ லோகம் பார்த்து வருகிறேன்' என்று சூரியனிடத்திலே விடை பெற்றுக்கொண்டு முப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத்தெண் ணுயிரம் ரிஷிகள் புடை சூழ, மேனகை, ரம்பை, ஊர்வசி என்று சொல்லப்பட்ட தேவ கன்னிகைகள் நடனம் செய்யக் கொலுவாய் இருக்கிற தேவேந்திரன் சபைக்கு ஒரு பெண் வடிவாய் வேஷம் கொண்டு அருணன் போனன். அப்போது இந்தப் பெண்ணைக் கண்டு தேவேந்திரன் மோகித்துக் கூடினன்; அந்நேரமே ஒரு பிள்ளை பிறந்தது; அந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டு திரும் பவும் அருணன் சூரியனிடத்திற்கு வந்தான்; சூரியன் அவனைப் பார்த்து, " இந்தப் பிள்ளை உனக்கேது?" என்ருன். 'நான் ஸ்திரீ வேஷம் கொண்டு தெய்வலோகத்திலே தேவந்திரன் சபைக்குப் போயிருந்தேன்; அங்கே தேவந்திரன் என்னைக் கண்டு மோகித்துக் கூடினன்; அப்போது பிறந்தது இந்தப் பிள்ளை' என்று சொன்னன். அந்த விசேஷம் கேட்டுச் சூரியன் அருணனைப் பார்த்து, 'அந்த ரூபத்தை நான் பார்க்க வேண்டும்!' என்ருன்; 'நல்லது' என்று சொல்லி முன் எடுத்திருந்த ஸ்திரீ ரூபத்தை எடுத்தான்; அது கண்டு சூரியனும் மோகித்துக் கூடினன்; அப்போது ஒரு பிள்ளை பிறந்தது; அந்த இரண்டு பிள்ளைகளிலே மூத்த பிள்ளை வாலி; இளைய பிள்ளை சுக்கிரீவன்: இந்த வாலியைக் கொன்றவர் இராமர்; இராமருக்குப் பகையாளி இராவணன்; இராவணன் நகராகிய இலங்கைப் பட்டணத்தைத் தீயிட்டவன் அனுமான்; அந்த அனு மாருக்குத் தகப்பன் வாயு; அந்த வாயுவாகிறது காற்று; நான் கட்டிக்கொண்டது இருக்கமாயிருக்கிறதென்று அந்தக் காற்று வருந்தினையும் 'நில்' என்று சொன்னீர்," என்று தமிழறிவாள் சொல்லிக்கொண்டிருக்கிற வேளையில் ஒரு கெவுளி சொல்லிற்று. அதை நக்கீரர் ஆண்டு பார்த்து, "நன்ருயிருக்கிறது! நாம் வந்த

காரியம் செயமாகும்,'' என்று எண்ணிக்கொண்டிருக்கிற போது, தமிழறிவாளும் அந்தக் கெவுளியை ஆண்டு பார்க்குமளவில் அது தனக்கு மரணம் சொல்லுகிறதென்று அறிந்துகொண்டு நக்கீரரைப் பார்த்து, ''அந்தக் கெவுளி என்ன சொல்லுகிறது?'' என்று கேட்டாள். அதற்கு நக்கீரர், ''இனி ஒரு க்ஷணநேரத்திலே சாவு சொல்லுகிறது,'' என்று சொன்னர். அது கேட்டுத் தமிழறிவாளும் அப்படிப் பிராப்தியிருந்தால் தப்புகிறதில்லை; உமக்கு அந்தக் கெவுளி என்ன சொன்னல்தானென்ன? நீர் சொல்லுகிற கதையைச் சொல்லும்,'' என்றாள். அது கேட்டு நக்கீரர் சொல்லுவார்; ''நல்லது, நானொரு கவி சொல்லுகிறேன்; அந்தக் கவிக்குப் பொருள் சொல்ல வல்லையோ?'' என்றார். அதற்குத் தமிழறிவாளும், ''நீரத்தனை வல்லவரோ?'' என்றாள். ''ஆனலென்ன? நான் தோற்பேனுகில் என் குடுமியும் பூணூலும் அறுத்துப் போட்டு உன் வீட்டிலே வெள்ளாட்டிப் பயலாய் இருந்துகொண்டு உனக்கேவல் பணிவிடை செய்கிறேன்; நீ தோற்றால், அதற்கென்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்க, ''நான் தோற்றேனேயாகில், என் அரண்மனையும் இடிப்பித்துத் தமிழறிவாளென்கிற பெயரையும் மாற்றிப் போட்டு, என் தலையையும் சிரைப்பித்துக் கழுதையின்மேல் ஏற்றி ஊர்கோலம் காட்டி ஓட்டிவிடும்,'' என்றாள். அதற்கு நக்கீரர் சொன்னது, ''நீ தோற்றதே உண்டானால் எனக்கு இஷ்டமானவனெவனே எந்த நீச்சனுக்காகிலும் உன்னைக் கட்டிவைப்பேன்,'' என்றார். ''நல்லது, அப்படியே; ஆகட்டும்,'' என்றாள். அப்போது நக்கீரதேவர் இலக்கண காவியங்களிலுலே வெல்லக்கூடாதென்று நினைத்துத் தாம் வருகிற போது காட்டு வழியில் கண்டதை ஒரு வெண்பாவாகப் பிணைத்துக்கொண்டு கண்டசுத்தியாகச் சொன்ன தாவது :

> ''நச்சுத்தே ரேறி நடுக்காட்டில் வேடுவச்சி
> பச்சைக் கொடியாட நின்றுளே—இச்சித்தே
> மேல வனங்கவர்ந்து மின்கொண்டு போகின்ற
> மூலபலன் கண்டாய் மொழி.''

என்று சொன்ன மாத்திரத்திலே இந்தக் கவியைக் கேட்டுத் தமிழறிவாளும் தான் கற்ற பஞ்சலட்சணத்திலும் மற்று முண்டான நூல் வழியெல்லாம் ஆராய்ந்து பார்த்து ஒன்றும் தெரியாதபடியினலே விசாரப்பட்டு, ''இத்தனைக் காலம் தமிழறியும் பெருமாளென்று பேர் பெற்று யாருமெதிரில்லாமல் கீர்த்தி அடைந்திருந்தோம்; இந்த வெண்பாவுக்குப் பொருள் தெரியாமல் போச்சுதென்றால் தமிழறியும் பெருமாள் தோற்றுளென்று உலகத்திலே இகழ்ச்சியாகச் சொல்லிக்கொள்ளுவார்களே!'' என்று வெகுகிலேசத்துடனே நக்கீரரைப் பார்த்துத் தனக்கு ஒன்றும் தெரியாதபடியினலே மொத்தார்த்தமாகச் சொன்னதாவது :

" உண்டி கொடுத்தார்க் குயிர்கொடுத்தா ரென்னுது
வண்டார் குழலாள் மகிழ்வன்றி — உண்டி
உண்டாரும் செத்தாரும் உண்டிருந்தா ருண்டீர்
உண்டா னரகம் புகார்."

என்று சொல்லிக் காண்பித்து, நீலக்கண்ணுடியை உடைத்து அந்த ஓட்டினுல் தனது வயிற்றைக் கிழித்துக்கொண்டு ஜீவனை விட்டாள். பொழுது விடிந்து நக்கீரதேவரும் தமிழறிவாளை மூடிவைத்து, அவள் போகிற கள்ளவழியைக் கண்டுபிடித்து, அந்த வழியாகப் புறப்பட்டுப் போய் விறகு தலையனிடத்திற்கு வந்து, தம்முடைய வேஷத்தை நீக்கிப் பச்சைவடம் வேஷ்டி தலைப்பாகை கட்டிக்கொண்டு, கடுக்கன் மோதிரம் இட்டுக்கொண்டு, விறகு தலையனை எப்போதும்போல விறகு· தலையனுக்குண்டான வேஷம் போட்டு அங்கே இருக்கச் சொல்லி, நக்கீரர் பாதக்குறடு போட்டுக் கொண்டு நடந்து போய்ச் சோழ ராசனைக் கண்டு அட்சதை கொடுத்து ஆசீர்வாதம் பண்ணி, அந்தச் சோழராசன் இருக்கச் சொன்ன இடத்திலே இருந்தார். இப்பால் மரகதவடிவு என்பவள், 'இராத்திரி மகள் விறகு தலையன் பக்கலுக்குப் போனவளின்னம் எழுந்திருந்து வரவில்லையே!' என்று தன் தோழிமாரும் தானுமாக அந்தப் படுக்கையறை வீட்டுக்குப் போய்ப் பார்க்கிறபோது தமிழறி வாள் மரித்துக் கிடக்கிறது கண்டு, அடித்து அலறி விழுந்து எழுந்திருந்து, " இப்படிக்கொத்த மகளை எந்தப் பிறப்பிலே காணப் போகிறேன்!" என்று வெகு துக்கத்துடனே தன் மகளைப் பார்த்துச் சொன்னதாவது :

" நக்கீரர் சொற்கவிக்கு நாடவிட மன்றியிலே
பொற்கொடியாட் சூத்திரங்கள் போதாமல் — சிற்றிடையாள்
கண்ணுடி யாலுயிரைப் போக்கினள் காரிகையும்
பண்ணுள் தமிழறிவாள் பார்."

என்று சொல்லி மரகதவடிவும் தோழிமாரும் கற்றுச்சொல்லிப் பெண்கள் மற்றுமுண்டான பேரனைவரும் புறப்பட்டுக் கூச்சலிட்டுக் கொண்டு போய்ச் சோழராசாவின் முன்னே வந்து முறையிட் டார்கள். அப்போது சோழராசனும் வெகுவுரய் வியாகுலப்பட்டு மரகதவடிவை அழைத்து, " வந்தவனுர்? போனவனுர்? நடந்த விவரம் எப்படி?" என்று கேட்க, மரகதவடிவு சொல்லுவாள் : " சுவாமி, யாரோ தெரியாது ; வெட்டியான் போலே இருந்தான் ; அவன் வாழைத்தண்டைத் தனது தலைமேலே வைத்துக்கொண்டு விறகு வீலை கூறிக் கவி சொல்லிக்கொண்டு வந்தான். அவன் இராத்திரியெல்லாம் மகளுடனே பிரதிவாதித்துக்கொண் டிருந்தான். நாங்களும் சிறிது நேரம் விழித்துக்கொண்டிருந்தோம். பிற்பாடு அவரவர் அங்கங்கே படுத்துக்கொண்டு நித்திரை போனேம். பிறகு என்ன நடந்ததோ ஏது நடந்ததோ! அவன்

சொன்ன கவிக்குப் பொருள் தெரியாமற்றான் போச்சுதோ! ஏதொன்றும் காணக்கூடாது. மாண்டு போனாள்," என்று சொன்னாள். அது கேட்டுச் சோழராசன் மிகவும் விசனப்பட்டு, "முன்னே எங்களுடைய வமிசத்திலே ஒரு புருவுக் காகத் தன்னுயிரை ஈந்ததும் ஒரு மாயக் கன்றுக்காகக் குமாரனை வண்டியில் அறைந்ததுமாக இப்படி இருக்கப்பட்ட சோழராசன் வமிசத்திலே இப்படிக்கொத்த பழி வந்தால் நானேது செய்வேன்!" என்று மிகவும் வியாகுலமாய் அந்தச் சபையைப் பார்த்துச் சோழராசன் சொன்னதாவது :

"முற்பழிக்கொன் றருயிரை யன்று முறைவருவர்
கற்பகத்தே ரூர்ந்தபழிக் காகாதே—சொற்பகரு
மைப்பழிக்கும் கூந்தல் வனமுலையாள் தன்னுடைய
விழிப்பழிக்கு மென்செய்வேன் யான்!"

சோழராசன் இவ்வாறு சொல்லிப் பின்னும் விசாரிக்கு மளவில் அந்தச் சபையிலிருக்கிற நக்கீரரைக் கண்டு, அவர் வசனிக்கப்பட்ட வசனத்தை நிதானித்துக் கேட்டு, இராத்திரி வந்து பிரசங்கம் பண்ணினவர் இவரே என்று அறிந்துகொண்டு மரகதவடிவு சோழராசனைப் பார்த்துச் சொன்னதாவது :

"கையால் கொடையான் கதலி விறகுவிற்பான்
பொய்யாது மெய்ந்நூற் பொருள்காண்பான்—மெய்யாக
மையாரும் வேற்கண் மடமானை மன்னவனே
ஐயகோ கொன்று னவன்."

என்று சொல்லக் கேட்டு, நக்கீரதேவர் சோழராசனைப் பார்த்துச் சொன்னதாவது :

"பொய்யாத முத்தமிழின் பொற்கொடிக்குச் சூழ்ந்தகொலை
கொய்யா மதுமாலைக் கொற்றவனே!—மெய்யாக
மையாரும் வேற்கண் மடமானை மன்னவனே!
கையாரக் கெல்லலேன் கான்."

என்று சொல்லக் கேட்டுச் சோழராசனும் நக்கீரரைப் பார்த்து, "நீர் யார்?" என்று கேட்க, அதற்கு நக்கீரரும் சோழராசனைப் பார்த்துச் சொன்னதாவது :

"நாலா யிரத்துத்தொள் ளாயிரமாம் சங்கத்தின்
மேலான நக்கீர ரெம்பெயர்தான்—வேலால்
உளைந்தபுரு வுக்காக உன்சதையை நேராய்
அளைந்தே அறிந்தவனே ஆம்."

இப்படிச் சொன்ன நக்கீரரைப் பார்த்துச் சோழராஜன் சொன்னதாவது :

" உறவற்றூர் போலிவ் வுறையூர்க்குப் புக்கிப்
பொறையறைகா ணும்பூ தலத்தில்—அறையும்
நறைகமழ்நக்கீர ரானக்கா லிந்த
விறகுவிற்ப தேனே ? விளம்பு."

என்று சொன்ன சோழனைப் பார்த்து நக்கீரர் சொன்னதாவது :

" கூறுவார் கூறும் பரிசே குறைவறியான்
விறுமென் னென்று விடவறியாள்—மாறுடனே
ஏச்சுவா ரேச்சும் எளிதாகு மன்றியிலே
ரீச்சுவாசம் வாங்காதென் மின்."

என்று நக்கீரர் சொல்ல, இராசாவினுடைய மந்திரி நக்கீரரைப் பார்த்துச் சொன்னதாவது :

" பூவே சிலபறிப்பார் பூணே சிலபடுவர்
பாவே அடிதலையின் பண்பாகும்—சாவே
மதுரங்கள் வண்டுண்ணும் மாவே வடுவாம் ;
இதுதவிர உண்டோ ? இயம்பு."

அப்படி மந்திரி சொல்லவே, நக்கீரதேவர்க்கு மகா கோபம் வந்து, ' இவனே நம்மைப் பார்த்துச் சொல்லுகிறவன் !' என்று, அப்போது சோழராசனுக்கும் அற்புத வாய்வு உண்டு, அந்த வாயுவை மந்திர உச்சாடனம் பண்ணி அந்த மந்திரிமேலே குதிக்கவிட்டார். அது கண்டு மந்திரியும் வெட்கித் தலையிறங்கிக் கொண்டான். அதைச் சோழராசன் பார்த்துப் பயந்து, எழுந்திருந்து, நக்கீரரை நமஸ்கரித்து, " உம்முடைய மகிமையைப் பார்க்கத்தக்க பேர் யாவர் ?" என்று அவரைத் தழுவிக்கொண்டு நல்ல வார்த்தைகளைச் சொல்லி, " தேவரீர் அனுக்கிரகத்தினாலே தமிழறிவாளை எழுப்பி இரட்சக்க வேண்டும்," என்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டான். அப்பொழுது நக்கீரர் சந்தோஷப்பட்டு, " அவளை எடுத்து வரச் சொல்," என்றார். அப்படியே போய்த் தமிழறிவாளை எடுத்து ஒரு கட்டிலின் மேலே போட்டுக்கொண்டு வந்து நக்கீரர் முன்னே வைத்தார்கள். பட்டணத்தில் உண்டான சகல ஜனங்களும் வந்து புதுமையாகப் பார்த்துக்கொண்டிருக்கிற சமயத்திலே நக்கீரதேவரும் தமது கமண்டலத்தால் ஜலம் கொண்டு வந்து அபிமந்திரித்துத் தமிழறிவாள் மேலே இறைத்துச் சொன்னதாவது :

" வீரு யிவளுக்கு மிக்கோரும் வேந்தனுக்கு
மாருக நாம்வந்த வாரறியக்—கூருப்
விழுந்தநிண முள்ளடக்கி வெள்ளெலும்பு மொன்றுப்
எழுந்திருக்க வேண்டு மினி."

என்று சொன்னவுடனே வயிறு பீறுண்டு சரிந்து விழுந்திருந்த நிணமனைத்தும் உள்ளடங்கி ஒன்றுகப் பொருந்தி நித்திரை கொண்டிருந்து நீங்கினவள் போலத் தமிழறிவாள் விழித்துப் பார்த்து, அந்தக் கவிக்குப் பயன், "பாரை பாரை!" என்று சொல்லிக்கொண்டு எழுந்திருந்தாள். அதற்கு நக்கீரதேவர், "பூரை பூரை" என்றார். அதன் பிறகு அவள் அந்தச் சபையைப் பார்த்து வெட்கித் தலையை இறங்கிக்கொண்டு நின்றாள். நின்றவளைப் பார்த்து நக்கீரர் சொன்னதாவது :

"சிறந்த தமிழின் நிறமறிய மாட்டாமல்
இறந்தனையோ வுன்றனைக்கொன் றுமோ ?—அறிந்து
செந்தமிழின் சோழனுக்குச் சேரவந்து நின்றுதொழும்
சொந்தமுன் னுச்சியுடன் சொல்."

என்று நக்கீரதேவர் சொல்ல, தமிழறிவாள் சோழராசனைப் பார்த்துச் சொன்னதாவது :

"நானே பழியடைந்தேன் நாடாதென் னுவுரையைத்
தேனூர் கமலத் திசைமுகனூர்—தானே
தலையோட்டில் உள்ளபடி தப்புமோ சொல்லீர்!
கலைக்கோட்டு மாமுனியே காண்."

என்று தமிழறிவாள் சொல்லச் சோழராசன் அந்த வசனத்தைக் கேட்டுச் சந்தோஷிக்கத் திரும்பவும் தமிழறிவாள் சொல்லுவாள் : "தமிழுக்கு அகஸ்தியனும் வடமொழிக்குப் புலஸ்தியனும் இவர்களுடைய கல்வியை அறியும் போது என்னையேயொழிய மற்றெருவரும் இல்லையென்றிருக்க வேண்டா ; கல்வி அதிகம் கண்டு பிரமாவானவர் சரஸ்வதியைநாவிலே தரித்துக்கொண்டார்; விஷ்ணுவானவர் மார்பிலே தரித்துக்கொண்டார்; ஈஸ்வரன் சங்கத்தின்கீழே இருக்கிறார்," என்று சொல்ல, சோழராசன் சந்தோஷப்பட்டுத் தமிழறியும்பெருமாளின் கையைப் பிடித்துக் கொண்டு நக்கீரர் கையிலே கொடுத்து, "இவளை நான் பெற்ற பெண்ணை வளர்த்தேன். இந்தப் பெண்ணைத் தேவரீர் கலியாணம் பண்ணிக்கொள்ளும் ; உமக்கு வேண்டிய ராச்சியமும் விட்டுப் போதுமான திரவியமும் கொடுக்கிறேன்!" என்று சொன்னன். அந்த விசேஷம் கேட்டு நக்கீரர் சோழராசனைப் பார்த்துச் சொன்னதாவது :

"ஆரூர் கடமை யடைவுடனே கொண்டுமிக
வீரும் உலகாளும் வேந்தனே !—கூரும்
எனக்கிவளு மேமகள்கா ணென்றன் மருகன்
தனக்குரிய ளாவள்இனித் தான்."

என்று சொல்லக் கேட்டுச் சோழராசன், "ஏனையா மகள் என்கிறீர் ? அப்படிச் சொல்ல வேண்டா ; இவளைக் கலியாணம்

பண்ணிக்கொள்ளும்," என அதற்கு நக்கீரர் சொல்லுவார் : " இப்போது செத்தவளைத் திரும்பவும் எழுப்பிஞேமே ! ஆனபடியினாலே நமக்கு மகளல்லவோ ? இதுவுமல்லாமல், நம்முடைய மருமகன் ஒரு பையனிருக்கிறன். அவனுக்கு இவளைக் கட்டிவைக்க வேண்டும் என்று வெகு பிரயாசைப்பட்டு இராத்திரியெல்லாம் இவளுடனே தர்க்கித்தோம்," என்ருர். அது கேட்டுச் சோழராசன் சந்தோஷப்பட்டு, " தேவரீர் மருமகனுக்குக் கொடுக்க நாங்களெத்தனை புண்ணியம் பண்ணினேம் ! அப்படியே மருமகனை அழைப்பியுமையா," என்ருன், அது கேட்டு நக்கீரதேவர் அங்கே இருந்தபடியேதானே, " அடா விறகுத்தலையா ! இங்கே வாடா," என்று கூவியழைத்தார். அந்த விசேஷம் கேட்டு விறகு தலையன் பாசிப்பல்லும், பூதமுகமும், வெந்த வீட்டுக் கழிமரம் போலக் காலும் கையும், அரையில் சுற்றிய கொடியும், அதிலே செருகிய அரிவாளும், இவ்விதமான கோலத்துடனே வந்து நின்ருன். அப்போது தமிழறிவாளும் பார்த்து, " முன்னலே நாம் இவனைக் கடைத்தெருவில் கண்டு காரியமிழந்தோமே ! அவன் தான் வந்தான் ; என்ன அதிசயம் !" என்று வெட்கித் தலை இறங்கிக்கொண்டு வெகுவாய் மனம் சஞ்சலமாயிருந்தாள். சோழராசன் கண்டு மிகவும் வியாகுலத்துடனே நக்கீரரைப் பார்த்து, " சுவாமி ! இவளிருந்த இருப்பும் இவள் நடக்கையும் வெகு பிரகாசமாய்க் கீர்த்தியடைந்திருந்ததும் இராச்சியமுழுவதும் அறியுமே ! அப்படிக்கொத்தவளை இப்படிக்கொத்தவனுக்குக் கட்டுவிக்கிறேமென்றல் அதற்கு நான் சொல்லப் போகிறதென்னவிருக்கிறது ! தேவரீர் சித்தத்துக்குச் சரியானபடி செய்துகொள்ளுங்கள்," என்ருன். அப்போது தமிழறியும்பெருமாளும் நக்கீரர் பாதத்திலே சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டுக் கைகட்டி நின்று கொண்டு சொன்னதாவது :

" பாதம் பணிந்தேன் பழைய தமிழ்முனியே !
ஏது மறியேன் இனியுரையேன்—பேதையேன்
செய்த பிழைபொறுத் தேயுளத்துக் கேற்கச்
செய்வித்துக் கொள்ளும் இனி."

என்று சொல்லிச் சிந்தை வியாகுலமாய் நொந்துகொண்டிருந்த தமிழறிவாளையும் சோழமகாராசனையும் பார்த்து நக்கீரதேவர் முற்பிறப்பு உணர்த்திய விவரம் : "கேளும் சோழராசாவே !" என முன் சென்மத்திலே இந்தத் தமிழறிவாள் ராசகுமாரத்தி; இந்த விறகு தலையனும் ராசகுமாரன் ; இவர்களிரண்டு பேரும் மனமொன்றியபின் சாவடியிலே இவனை இருக்கச் சொல்லி ஓலை எழுதிப் போட்டதும், அங்கே இவள் இவனை வந்து கூடுவதற்கில்லாமல் இரண்டு பேரும் சீவனைப் போக்கிக்கொண்டு ஆவேசமாய் இருந்ததும், ஔவையார் கையிலே வரம் பெற்றதும், பிற்பாடு இவள் வந்து மரகதவடிவு வயிற்றிலே பிறந்து தமிழறிவாளானதும்,

இராஜகுமாரன் போய் விறகு தலையன் வயிற்றிலே பிறந்ததும், பூர்வம் இவளுக்குப் பிரம சிருஷ்டிப்பு ஐம்பது வயதிலே பன்னிரண்டு வயது கன்னி கழியாதிருந்ததும், ஒரு வருஷம் ஆவேசமாய் இருந்ததும், அப்பால் இப்போது இருபத்தைந்து வயது கன்னி கழியாது இருந்ததும், இந்தப் பிறப்பிலே அந்தப் பன்னிரண்டு வருஷமும் அந்த ராஜகுமாரனுடனே கூடி வாழத் தக்கதாக நக்கீரர் வந்து ஒரு இராத்திரியெல்லாம் இவளுடனே கதாப் பிரசங்கம் பண்ணிச் செயிப்பார் என்று ஔவையார் சொல்லிப் போனதும், இவைகளை எல்லாம் ஆதியோடந்தமாய்த் தெரியத்தக்கதாக முற்பிறப்புணர்த்திச் சொல்லிக் காண்பித்து, "அப்போது ஔவையார் எம் பேரைக் குறித்துச் சொல்லிப் போனபடியினாலே நாம் வந்து பூர்த்தி செய்தோம்," என்றார். அப்போது சோழராசனும் தமிழறிவாளும் மரகதவடிவும் நக்கீரரை "நமஸ்கரித்து, "தேவரீர் சித்தத்திற்குச் சரியானபடி செய்துகொள்ளும்!" என்றார்கள். அப்போது நக்கீரதேவரும் தமிழறிவாளைப் பார்த்துச் சொன்னதாவது :

"ஊரும் உறையூரே ஒன்றியாங் கன்னிகைநின்
பேரும் தமிழறிவாள் பேராமே—நேராய்
உனைவிரும்பு வானுடனே யுன்றெய்வம் தந்த
மனையிடத்துப் போயிருந்து வாழ்."

என்று சொல்லிக் காண்பித்து, அந்நேரமே பச்சைப் பந்தல் போடுவித்து, நல்ல முகூர்த்த வேளையிலே அந்த விறகு தலையனுக்குத் தமிழறிவாளைக் கலியாணம் பண்ணிவைத்துச் சோழ ராசனைக் கொண்டு இவர்கள் இருப்பதற்கு உப்பரிகையும் ஊரும் விடுத்து, பூஷண வகைகளும் கொடுப்பித்து, "நீங்கள் இரண்டுபேரும் சுகமாக வாழ்ந்து, ஔவையார் அநுக்கிரகப்படிக்குச் சிவனுடைய பாதாரவிந்தம் சேரக்கடவீர்! உங்கள் அரண்மனைக்குப் போயிருந்து வாழக்கடவீர்கள்!" என்று ஆசீர்வதித்து அனுப்புவிக்க, இவர்கள் இரண்டு பேரும் நக்கீரர் பாதத்திலே சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் பண்ணிப் பிறகு தங்கள் அரண்மனைக்குப் போனார்கள். நக்கீரருக்குச் சோழராசன் பச்சைப் பல்லக்கு முதலியவைகள் கொடுத்து நமஸ்கரித்து, நக்கீரதேவரை மதுரைக்கு அனுப்புவித்தான். நக்கீரதேவரும் சோழராசன் கையில் விடை பெற்றுக் கொண்டு மதுரைக்கு வருகிற போது, பாண்டியராசாவும், சங்கத்தாரும் எதிர்கொண்டு வந்து சந்தோஷப்பட்டு நக்கீரதேவரை அழைத்துக்கொண்டு போனார்கள். நக்கீரதேவரும் உறையூருக்குப் போய்த் தமிழறிவாளை வென்ற விவரமெல்லாம் சவிஸ்தாரமாகச் சொன்னார். அது கேட்டுப் பாண்டியராசன் மாக சந்தோஷத்தை அடைந்து நக்கீரதேவருக்கு வேண்டிய வெகுமானம் கொடுத்தான். சங்கத்தாரும் சந்தோஷத்தை அடைந்தார்கள். நக்கீரதேவரும் சங்கத்தாருடனே கூடிச் சங்கப் பலகையின்மீது எழுந்தருளி

இருந்தார். இப்பால் தமிழறிவாளும் ஔவையார் அனுக்கிரகப்படி இருபத்தைந்து வயதளவும் கன்னி கழியாமலிருந்து பின்பு நக்கீர தேவர் அருளினுல் பூர்வோத்தரமறிந்து, பன்னிரண்டு வருஷம் வரைக்கும் சகல சம்பத்தையும் சவுக்கியமாய் அதிக சந்தோஷத் துடனே அனுபவித்துக்கொண்டிருந்து பிறகு இருவரும் மோட்சத்தை அடைந்தார்கள்.

முற்றும்



இப்புத்தகத்தில் வரும் பழமொழி

உவமைத் தொடர் அகரவரிசை

1. அகத்தின் அழகு மூகத்தில் தெரியும்.
2. அக்காளோடே போயிற்று மைத்துனன் உறவு.
3. அக்கினித் தேவனுக்கு அபிஷேகம் பண்ணினது போல
4. அங்குசமில்லாத யானையும் கடிவாள மில்லாத குதிரையும் போல
5. அசுணப் பறவையின் செவியிலே பறை அறைந்தது போல
6. அஞ்சு காசுக்குக் குதிரையும் வேண்டும்; ஆறு கடக்கப் பாயவும் வேண்டும்.
7. அஞ்சுமூன்றும் அடுக்காக இருந்தால் அறியாத பெண்ணும் கறியாக்குவாள்.
8. அடங்காத பாம்புக்கு அரசன் மூங்கில் தடி.
9. அடாது செய்பவர் படாது படுவர்.
10. அடித்தது ஆட்டம் பிடித்தது பெண்டு
11. அடி வயிற்றில் இடி விழுந்தாற்போல
12. அடுக்குகிற அருமை உடைக்கிற பூனைக்குத் தெரியுமா ?
13. அடுப்பெரியாத கோபத்தை அம்மையார்மேல் காட்டுவதா ?
14. அணில் ஏறவிட்ட நாய் போல
15. அணில் பிள்ளையின் தலைமேலே அம்மிக்கல்லை வைத்தது போல
16. அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை குடியானவன் வீட்டு அம்மியையும் உடைக்கும்
17. அதிக்கிரமமான ஊரிலே கொதிக்கிற மீன் சிரிக்கிறது.
18. அத்தி பூத்தாற் போல
19. அப்பம் எப்படிச் சுட்டாளோ, அதற்குள் தித்திப்பை எப்படி நுழைத்தாளோ !
20. அம்பலத்தில் பொதி அவிழ்த்தது போல
21. அம்மையார் நூற்ற நூலுக்கும் பையன் அரைஞாண் கயிற்றுக்கும் சரி.
22. அரசன் அன்று சொல்லும்; தெய்வம் நின்று கொல்லும்.

23. அரசன் உடைமைக்கு ஆகாசவாணி சாக்ஷி.
24. அரிசி ஆழாக்காலுலும் அடுப்பங்கட்டி மூன்று வேண்டும்.
25. அரைக்காசுக்குப் போன வெட்கம் ஆயிரம் கொடுத்தாலும் வாராது.
26. அவலே நினைத்து உரலே இடிப்பது போல
27. அவனன்றி ஓரணுவும் அசையாது.
28. அழகிருந்தென்ன பண்ணும்? அதிர்ஷ்டமிருந்துண்ணும்.
29. அள்ளாது குறையாது ; இல்லாது பிறவாது.
30. அறை காத்தான் பெண்டிழந்தான்.
31. அன்பற்ற மாமியாருக்குக் கும்பிட்டாலும் குற்றந்தான்.
32. ஆகாத பஞ்சாயத்துக்கு அறுபது நாழிகையும் தியாச்சியம்.
33. ஆடவிட்டு நாடகம் பார்க்கிறது போல
34. ஆடு நனைகிறதென்று ஓநாய் குந்தி அழுமா ?
35. ஆணுக்கு அவகேடு செய்தாலும் பெண்ணுக்குப் பிழை சொல்லலாகாது
36. ஆண்டியைக் கண்டால் லிங்கன் ; தாதனைக் கண்டால் ரங்கன்.
37. ஆமணக்கு விதைத்தால் ஆச்சா மூளைக்குமா ?
38. ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்
39. ஆயிரம் பனை அப்பனுக்குப் பல்லுக் குத்த ஈர்க்குக்கிடையாது.
40. ஆராத்தாள் செத்ததும் பொழுது விடிந்தால் தெரியும்.
41. ஆலே இல்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை.
42. ஆறிலும் சாவு ; நூறிலும் சாவு.
43. ஆனைக்கும் அடி சறுக்கும்.
44. இடியோசை கேட்ட நாகம் போல
45. இடும்பைக்கு ஈன்ற தாய் போல
46. இருதலைக் கொள்ளி எறும்பு போல
47. இரும்புத் தூணைச் செல்லரிக்குமா ?
48. இலவு காத்த கிளி போல
49. இல்லே என்ற இடத்தில் பல்லியும் சேராது.
50. இழவுக்கு வந்தவர்களேயெல்லாம் தாலி அறுக்கச் சொல்வது போல
51. இளங்கன்று பயமறியாது.
52. இளநீர்க்காய் உதிர்க்கிறது போல
53. இறங்கும் துறையிலேயே நீச்சலாய் இருந்தால் எதிர்க்கரை ஏறுவது எப்படி ?

54. இனிய குரலாகக் கிளி கொஞ்சுவது போல
55. ஈர வெண்காயத்துக்கு இருபத்தெட்டுப் புரை
56. உகிர்ச்சுற்றின்மேல் உலக்கை விழுந்தாற்போல
57. உட்சுவர் இருக்கப் புறச்சுவர் பூசுவார் போல
58. உலக்கை தேய்ந்து உளிப்பிடியாய்விட்டதே !
59. உள்ளங்கை நெல்லிக்கனி போல
60. உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன்.
61. உற்றது சொன்னுல் அற்றது பொருந்தும்.
62. ஊசியும் சரடும் போல
63. ஊதுகிற சங்கு ஊதினுல் விடிகிற பொழுது விடிகிறது.
64. ஊமைக்கு உளறுவாயன் உற்பாத பிண்டம்.
65. எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விடுவது போல
66. எட்டிக் குடுமியைப் பிடித்து இறங்கிக் காலைப் பிடிப்பது போல
67. எட்டி மரமானுலும் பச்சென்று இருக்கும் போது கண்ணுக்கு அழகு.
68. எய்கிறவன் எய்தால் அம்பு என்ன செய்யும் ?
69. எருது நோய் காக்கைக்குத் தெரிகிறதா ?
70. எலி அழுது புலம்பினுலும் பூனை பிடித்தது விடுமா ?
71. எல்லாம் இருக்கிறது சட்டியிலே ; இலேக்கறி கடையைச் சட்டி இல்லே.
72. எவனே செத்தான் ; அவளேன் அழுதாள் ?
73. எழுதுகிற எழுத்தாணி குதறுகிறது போல
74. எள்ளுக்குள் எண்ணெய் போல
75. எறும்புக்குக் கொட்டாங்கச்சித் தண்ணீரும் சமுத்திரம்.
76. ஏடாகூடக் காரனுக்கு வழியெங்கு எனில், போகிறவன் தலேமேலே என்பது போல
77. ஏர் உழுகிறவன் என்ன செய்வான் ? பானை பிடித்தவள் பாக்கியம்.
78. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்.
79. ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்.
80. ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லே.
81. ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்.
82. ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரரைப் போல
83. ஒரு பிள்ளேயும் பிள்ளேயல்ல ; ஒரு மரமும் தோப்பல்ல.

84. ஒருவனுக்குத் தாரம் ; மற்றவனுக்குத் தாய்.
85. ஓடுகிற ஆறு எப்போதும் ஓடிக்கொண்டே இருக்குமா ?
86. ஒட்டை நாழிக்குப் பூண் கட்டுவது போல
87. கடல் கொதித்தால் விளாவ நீர் எங்கே ?
88. கடல் மடை திறந்தாற்போல
89. கடா இடுக்கில் புல் தின்றது போல
90. கட்டி இடமானுல் வெட்டி அரசாளலாம்.
91. கட்டிய கட்டிலிருந்து கின்னரி வாசிக்கிறது போல
92. கட்டுக் காடை இடமானுல் குட்டிச் சுவரும் பொன்னுகும்
93. கட்டோடே போனுல் கனத்தோடே வாழலாம்.
94. கணக்கன் கணக்கறிவான் : தன் கணக்கைத் தானறியான்.
95. கண்ணுடி நிழலில் கண்ட பணம் கடனுக்கு உதவாது.
96. கண்ணே இமை காப்பது போல
97. கத்தி கூர் மழுங்கத் தீட்டுமளவில் அது இரட்டைக்கூர் பட்டது போல
98. கம்புக்குக் கீழ வெட்டினதும் தம்பிக்குப் பெண் கொண்டது மாக
99. கருடனைக் கண்ட பாம்பு போல
100. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்.
101. கல்லானுலும் கணவன் ; புல்லானுலும் புருஷன்
102. கல்லும் தேங்காயும் சந்தித்தது போல
103. கல்வியில் பெரியவர் கம்பர்.
104. கள்ளிக்கு முள் வேலியும் கழுதைக்குக் கடிவாளமும் எதற்கு?
105. கற்றது கைம்மண்ணளவு ; கல்லாதது உலகளவு.
106. கன்றை விட்டுக் கட்டுத் தறியைப் பிடித்தது போல
107. கன்னனுக்கும் குயவனுக்கும் ஜென்மப் பகை போல
108. காக்கையின் கழுத்திலே பனங்காயைக் கட்டினது போல
109. காடை கட்டினுல் பாடை கட்டும்.
110. காணுது கண்ட கம்பங்கூழைச் சிந்தாது குடியடி சில்லி மூக்கி,
111. காந்தமும் இரும்பும் போல
112. காயசித்தி பெற்றோர் சட்டை கழற்றுவது போல
113. காயமென்ன கற்கண்டா ? உயிரென்ன தித்திப்பா ?
114. கார்த்திகைப் பிறை காண்பது போல
115. காலில்லாத முடவனும் கடலைத் தாண்டுவானு ?
116. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல

117. கிணற்றின் ஆழமும் கயிற்றின் நீளமும் பார்க்கவேண்டாவா?
118. கிணற்றுக்குத் தப்பித் தீயிலே பாய்ந்தது போல
119. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் தெரியுமா ?
120. கிருஷ்ண பட்சத்துச் சந்திரனைப் போல
121. கிளியை வளர்த்துப் பூனை வாயில் கொடுப்பது போல
122. குடத்தில் ஏற்றிய விளக்குப் போல
123. குடிக்கிறது கூழ் ; கொப்பளிக்கிறது பன்னீரா ?
124. குடித்தனம் செழித்தால் துரைத்தனம் செழிக்கும்.
125. குதிரை கொள்ளைக் கண்டால் வாயைத் திறப்பது போல
126. குத்தாத காதுக்கு ஊனமில்லை ;
127. குபேரன் பட்டினத்திலும் விறகுக் கட்டுக்காரன் உண்டு.
128. குப்பையில் முளைத்த கொடி கூரைமேலேறினது போல
129. குயில் கூவுதல் போல
130. குரங்கு குட்டிக் கையைத் தோய்க்கிறது போல
131. குருட்டுக் கண் தூங்கியென்ன, விழித்தென்ன ?
132. குருவியின் தலையில் பனங்காயை வைப்பது போல
133. குலத்துக்கு ஈனம் கோடரிக் காம்பு.
134. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்
135. குழிப் பிள்ளையை நரி சுற்றுவது போல
136. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
137. குன்றின்மேலிட்ட விளக்குப் போல
138. கூண்டோடே போச்சுது குளிரும் காய்ச்சலும்.
139. கூத்துப் பார்க்கப் போன இடத்தில் பேய் பிடித்தது போல
140. கூரம்பாயினும் வீரியம் பேசேல்.
141. கூழுக்கு மாங்காய் தோற்குமா ?
142. கை நிறைந்த பொன்னில்லாவிட்டாலும் கண் நிறைந்த கணவன் வேண்டும்.
143. கைப்புண்ணுக்குக் கண்ணுடியா வேண்டும் ?
144. கொட்டினால் தேளும், கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சியுமா ?
145. கொண்டவன் பலமிருந்தால் குப்பையேறிச் சண்டை செய்யலாம்.
146. கொப்பத்தில் விழுந்த யானையும் வலையில் சிக்கிய மானும் போல
147. கொழு கொம்பில்லாத கொடி போல

148. கோபம் வந்து கிணற்றில் விழுந்தால் சந்தோஷம் வந்து எழுந்திருக்கலாமா ?
149. சங்கிலே வார்த்தால் தீர்த்தமும் செம்பிலே வார்த்தால் தண்ணீருமா ?
150. சடையைப் பிடித்திழுத்தால் சந்நியாசி கிட்ட வருவான்.
151. சட்டி சுட்டது கை விட்டது.
152. சந்தைக் கோபாலம் ; தந்தப் பல்லக்கா ?
153. சப்பாணிக்கு நொண்டி சடுகுடுவை.
154. சர்க்கரைப் பந்தலிலே தேன்மாரி பொழிந்தது போல
155. சனியனே விலைக்கு வாங்கினது போல
156. சித்திரை மாதத்தில் செல்வன் பிறந்தால் ஆன குடிக்கு அனர்த்தமாம்.
157. சிலேஷ்டுமத்தில் அகப்பட்ட ஈயைப் போல,
158. சுண்டைக்காய் காற்பணம் ; சுமக்க முக்காற்பணம்.
159. சுமப்பவன் அல்லவோ காவடிப்பாரம் அறிவான் ?
160. சும்மா கிடக்கிற சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி.
161. சூரியனைக் கண்ட பனி போல
162. செத்தவன் கண் செந்தாமரைக் கண்; இருக்கிறவன் கண் நொள்ளைக் கண்.
163. செத்தவன் வாயிலே மண் : இருக்கிறவன் வாயிலே சோறு.
164. செத்தும் கெடுத்தான் சீயபுரத்துக் கிராமணி.
165. செம்போத்து வலமானுல் சம்பத்து உண்டாகும்.
166. சேற்றிலே கிடக்கிற கல்லை எடுக்க மாட்டாதவன் மோகனக் கல்லைத் தாங்குவானு ?
167. சேற்றில் கெங்கழுநீர் பூத்தது போல
168. தடிக்கு மிஞ்சின மிடாவைப் போல
169. தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்.
170. தம்பி தெள்ளுமணி, திருட்டுக்கு நவமணி.
171. தம்பியுள்ளான் படைக்கஞ்சான்.
172. தரித்திரப் பட்டி மகன் தனபால் செட்டி
173. தலைக்கு மிஞ்சின ஆக்கினையும் கோவணத்துக்கு மிஞ்சின தரித்திரமும் இல்லை.
174. தலை நோயும் காய்ச்சலும் தனக்கு வந்தால் அல்லவோ தெரியும் ?
175. தனக்கழகு மொட்டை ; பிறர்க்கழகு கொண்டை.

176. தன்வினை தன்னைச் சுடும்.
177. தன்னைக் கொல்ல வந்த பசுவையும் தான் கொல்லுவது தருமம்.
178. தன்னைப் பெற்ற ஆத்தாள் கிண்ணிப் பிச்சை எடுக்கிறுள்; தம்பி கும்பகோணத்திலே கோதானம் பண்ணுகிறுன்.
179. தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள்.
180. தாய்க்குப் பின் தாரம்
181. திண்ணைக்குத் தேள் கொட்ட, மிடாவுக்கு நெறிகட்டின தாக இருக்கிறது.
182. தீராக் கோபம் போராய் முடியும்.
183. துடைப்பக் கட்டுக்குப் பட்டுக் குஞ்சம் கட்டியது போல
184. துள்ளின மாடு பொதி சுமக்கும்.
185. தெய்வம் சீறின் கைதவ மாளும்.
186. தோலிருக்கச் சுளை விழுங்கினது போல
187. நகமும் சதையும் போல
188. நக்குகிற நாய் செக்கென்றும் சிவலிங்கமென்றும் அறியாதது போல
189. நத்தைக்குள் முத்துப் பிறந்தது போல
190. நரி வாலைக்கொண்டு கடலாழம் பார்ப்பது போல
191. நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்குப் புல்லுச் சுமை சுமைப்பது போகாது.
192. நாய் குரைத்து நத்தம் பாழாகுமா ?
193. நாள் செய்வது நல்லோர் செய்யார்.
194. நின்று தின்ரூல் குன்றும் மாளும்.
195. நெய்க்குடத்தைத் தலையில் வைத்து எண்ணமிட்டவனைப் போல
196. பகுத்தறியாமல் துணியாதே ; படபடப்பாகப் பேசாதே.
197. பங்கன் இருக்கும் இடத்தைத் தேடிக் கங்கை வந்ததுபோல
198. பசுமரத்திலறைந்த ஆணி போல
199. படிக்கிறது திருவாசகம் ; இடிக்கிறது சிவன் கோயிலா?
200. படைமுகத்திலும் அறிமுகம் வேண்டும்.
201. பட்ட காலிலே படும் ; கெட்ட குடியே கெடும்.
202. பட்டறி ; கெட்டறி ; பத்தெட்டு இறுத்தறி.
203. பட்டுக் கத்தரித்தது போல

204. பணம் என்ன செய்யும் ? பணம் பத்து வகை செய்யும்.
205. பணம் பந்தியிலே ; குணம் குப்பையிலே.
206. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.
207. பதருத காரியம் சிதருது.
208. பல உமி தின்ரூல் ஒரவிழ் தட்டாதா ?
209. பழங்கால் தூர்த்துப் புதுக்கால் வெட்டாதே.
210. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல
211. பழைய குருடி கதவைத் திறடி.
212. பள்ள மடையில் திருப்பிப் பாய்ச்சிய நீர் போல
213. பள்ளம் இறைத்தவனுக்குப் பங்கு
214. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா ?
215. பணை ஏறி விழுந்தவணைக் கடா ஏறித் துவைத்தது.
216. பன்னி உரைத்திடிலோ பாரதமாம்.
217. பாத்திரமறிந்து பிச்சை இடு ; கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு.
218. பால ஜோஸியம் ; விருத்த வைத்தியம்.
219. பாவிக்கு நூறு வயது
220. பாழாய்ப் போகிறது பசுவின் வாயிலே
221. பிச்சைக்காரனுக்கேது கொட்டு முழக்கு ?
222. பிச்சைக்காரன் சோற்றில் சனீஸ்வரன் போல
223. பிடி யானையைக் கொண்டு களிற்று யானையை வசப் படுத்துவது போல
224. பிளவுபட்ட முத்தானது செம்பஞ்சுக் குழம்பினுல் பொருத் தப்படுமாறு போல
225. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது போல
226. பிள்ளையாரைப் பிடித்த சனி அரசமரத்தையும் கூடப் பிடித்தது.
227. பிறவிக் குருடனுக்குப் பண நோட்டம் தெரியுமா ?
228. புதுக்குடத்தில் பூரித்து வாசனையூட்டிக் குளிர வைத்த இள நீர் போல
229. புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தை அடித்துக் கொண்டு போனது போல

230. புலியைப் பார்த்துப் பூனை சூடிக்கொண்டது போல
231. பூ விற்ற கடையில் புல் விற்றது போல
232. பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெற்றது போல
233. பூனைக்குக் கொண்டாட்டம் ; எலிக்குத் திண்டாட்டம்.
234. பெட்டைக் குதிரைக்கு இரட்டைக் கொம்பு முளைத்தது போல
235. பெண்ணின் குணமறிவேன் ; சம்பந்தி வாயறிவேன்.
236. பெரிய பருவதத்தின் மேல் பிரளய கால இடி இடித்து விழுந்தது போல
237. பெரிய வீடென்று பிச்சைக்குப் போனால், கரியை வழித்து முகத்தில் தடவினார்கள்.
238. பேர் கங்கா பவானி ; தாகத்திற்குத் தண்ணீர் கிடையாது.
239. பொதிக்கு அளப்பதற்குள் சத்தத்திற்கு அளப்பது போல
240. பொய் சொன்ன வாய்க்குப் போஜனம் கிடையாது.
241. பொரிமாவை மெச்சினாளாம் பொக்கை வாய்ச்சி
242. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவார் போல
243. மண்ணங்கட்டி மாப்பிள்ளைக்கு எருமுட்டைப் பணியாரம்.
244. மண்ணிலே முளைத்த பூண்டு மண்ணுக்கு இரையாமல்லவா?
245. மண் பூனை எலி பிடிக்குமா ?
246. மலையிலே விளைந்ததானாலும் உரலிலே வந்துதானே மசிய வேண்டும் ?
247. மாடு திருப்பினவன் அல்லவோ அருச்சுனன் ?
248. மாதா மனம் எரிய வாழாய் ஒரு நாளும்.
249. மாமியார் மெச்சிய மருமகள் இல்லை.
250. மார்பில் தைத்து முதுகில் உருவினது போல
251. மானைக் காட்டி மானைப் பிடிப்பது போல
252. முடவனுக்குக் கொம்புத்தேன் கிடைத்தது போல
253. முட்டிக்கால் கழுதை பட்டவர்த்தனப் பரியாமா ?
254. முண்டையைப் பிடித்த கண்டமாலை முருங்கையையும் பிடித்தது.
255. முதலை நரியின் காலை விட்டுப் புங்கமரத்தின் வேரைப் பிடித்தது போல

256. முதற்கோணல் முற்றும் கோணல்.

257. முயற்கொம்பும் மலடி மைந்தனும் போல

258. முளைத்ததே மூன்று மயிர் ; அதிலும் இரண்டு புழுவெட்டு.

259. முன்னே பிறந்த காதைவிடப் பின்னே முளைத்த கொம்பு வலியது.

260. மூக்கு மயிர் பிடுங்கி ஆள் பாரம் குறைந்தது என்பது போல

261. மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருவிச் செல்லும்.

262. யதார்த்த வாதி வெகுஜன விரோதி.

263. யமனைக் கண்ட உயிர் போல

264. யுகம் முடியுமளவும் மழை பெய்தாலும் ஓட்டாங்கிளிஞ்சில் கரையுமா ?

265. வசிஷ்டர் வாக்கினுல் பிரமரிஷி ஆவது போல

266. வந்தது கப்பல் ; மலர்ந்தது தொப்பை.

267. வந்ததே சிறுக்கி பந்தடித்தாள் ; வரவரச் சிறுக்கிகழுதை மேய்க்கிருள்.

268. வயிற்றுப் பிள்ளையை நம்பிக் கைப்பிள்ளையை நழுவ விட்டது போல

269. வலியான் எடுத்ததே வாய்க்கால் ; வல்லவன் ஆடியதே பம்பரம்.

270. வல்லடி வழக்கைச் சொல்லடி மாமி.

271. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமாம்.

272. வாயசம் வலமானுல் ஆயுசு விருத்தியாகும்.

273. வாய்த்தவிடும் போய் அடுப்பு நெருப்பும் அவிந்தாற் போல

274. வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ ?

275. விச்சுளி வலமானுல் நிச்சயம் வாழ்வுண்டாம்.

276. வழியிலே கண்ட குதிரைக்கு வைக்கோற்புரி கடிவாளம்.

277. வித்தில்லாத சம்பிரதாயம், மேலும் இல்லை ; கீழும் இல்லை.

278. விரல் உரலானுல், உரல் எப்படியாகமாட்டாது ?

279. விருது கூறி வந்து செடியில் நுழைகிறது போல

280. விலையுயர்ந்த மாணிக்கத்தைக் குருவிந்தக் கல்லுக்கு ஒப்பாக மதிக்கிறவரைப் போல

281. விரையொன்று போட்டால் சுரையொன்று காய்க்குமா ?

282. வீரமில்லாத பேடியைப் போருக்கு அழைக்கிறது போல

283. வெட்ட வெளிச்சம் பட்டப் பகலானது போல

284. வெண்டலைக் கருடன் சென்றிடமானால் எவர் கையில் பொருளும் தன் கையில் சேரும்.

285. வெந்நீரில் வீடு வேகுமா ?

286. வெயிலிலிடு வெண்ணெய் போல

287. வெறுவாய் மெல்லுகிற அம்மையாருக்கு ஒரு வாய் அவல் அகப்பட்டது போல

288. வேங்கைப் புலிக்கு முன் மான் நிற்குமா ?

289. ஸ்ரீரங்கத்திலே பிறந்த பிள்ளைக்குத் திருவாய் மொழி கற்பிக்க வேண்டுமா ?

290. ஜோதி மின்னல் மின்னுவது போல



மேற்கோட்செய்யுள்

முதற்குறிப்பகராதி

(எண்கள் பக்க எண்கள்)

அ

அகரமுதல 9
அக்கரமு 446
அக்காடப் 448
அங்காடி 446
அஞ்சின 163
அடிசிற்கினியாளே 34
அடிநந்த சோர்தலால் 255
அண்டத்தளவு 121
அண்டமூலத்துக் 120
அணுவைத் 283
அத்தா இதுகேள் 157
அதிமதுரமென் 239
அந்த நாள் 174
அப்பன் இரந்துண்ணி 235
அப்பா குமர 223
அமிழிமைத்துணை 140
அம்பராவணி 119
அம்பற்சிலம்பி 280
அம்பிலே சிலையை 134
அம்பேந்துகையா 237
அரக்கரோர் 143
அரிசி விற்றிடு 36
அரியணை அனுமன் 167
அரியது கேட்கின் 293
அருந்திஞன் 264
அரையின முடியி 257
அழுக்காறென 100
அள்ளிக்கொடு 70
அறம்நிரம்பிய 411
அற்றதலை போக 296
அன்றியும் கனலி 64
அன்றையிலு ஞால 89
அன்ன வயல் 229
அன்னை தயை 23

ஆ

ஆசுகவிமாரி 266
ஆடல்புரிந் 232
ஆடாரோ பின்னை 230
ஆடிக்கு டத்தடையு 251
ஆடுங் கடை 191
ஆடுநனி மறந்த 386
ஆடை பருத்தி 430
ஆடையுடையு 439
ஆணிவரை 254
ஆயன்பதியி 288
ஆய்ந்த 451
ஆராரோ! ஆராரோ! 69
ஆருவர் நீர்க்கூபமே 351
ஆர்த்தசபை 295
ஆலங்குடி 227
ஆலைப்பலா 298
ஆவீன மழை 53
ஆழநீர்க்கங்கை 145
ஆழியான் பள்ளி 113
ஆறூர் கடமை 457

இ

இட்ட முட 278
இதுவோசிரா 432
இந்த நீணிலத்திச் 192
இம்பர் நாட்டிற் 134

இம்மென்று முன்னே 244
இருந்தங்கிதம்பே 32
இருந்து முகந் 290
இருப்புக்கம்மியர்க் 117
இல்லாளகத் 27
இலகு புகழாறை 275
இலக்கணக் கவிஞர் 298
இல்வாழ்வா 42
இவ்வளவு கண் 282
இழையொன் 209
இற்றது நெஞ்சம் 213
இனியது கேட்கிற் 293

ஈ

ஈதலறம்; தீவினை 283
ஈயாடுவதோ 126
ஈரமுலர் 434
ஈன்ற பொழுதிற் 71

உ

உங்களிலே யாஞ்ஞரு 30
உடுக்கையிழந்தவன் 41
உடுத்ததுவும் மேய்த் 256
உண்டிகொடுத் 454
உண்ணீருண்ணீ 291
உமையாளும் நீயு 34
உமையாளொக்கும் 92
உம்பர்க்கு 130
உருப்படிவமன் 127
உலகம்யாவையுந் 116
உழுதுண்டு 44
உழைப்பின் வாரா 19
உள்ளவழக் 295
உள்ளீரம் 433
உறவற்றூர் 456

ஊ

ஊசிமுனை 437
ஊரும் உறையூரே 459

எ

எங்கள் மடத்துக் 235
எட்டெழுத் 218
எட்டேகால் 280
எட்டொருமா 222
எண்ணுயி 284
எண்ணிய சகாத்தம் 133
எண்ணுதற்காக்கரி 92
எதிரரங்க 446
எத்தேயத் 78
எந்நன்றி கொன்றூர் 39,184
எறியென்றெதிர் 30
எனக்குமெண் 164
என்கவிகை 275
என்னுயிர் நின் 130
என்னைக் கொடு 264
என்னை விறகு 451

ஏ

ஏசியிடலின் 291
ஏந்தெழில் 25
ஏரினும் நன்றூல் 46
ஏரும் இரண்டு 45

ஐ

ஐந்நூற் 435
ஐம்பொருளு 124
ஐயஞ் சிறு 445
ஐயம் இடுமின் 17,283
ஐயருக்கமுது 31
ஐயறிவறிந்தவை 78

ஒ

ஒட்டா ஒருமதி 296
ஒருகொம் 286
ஒருநன்றி 84
ஒருமாடு 229
ஒருமுனிவன் 195
ஒருவனொரு 452
ஒன்றிரண்டுமூன் 249

ஒ

ஓகாமோவீதோ 256
ஓடுஞ்சுழி 253
ஓடுமிருக்குமத 252

க

கங்கைபல 444
கடுகைத்தொலைத் 286
கடைநிலத்தோ 118
கட்டியடிக் 257
கட்டியவன் 443
கட்டுவிறகு 435
கண்டீரோ பெண் 232
கண்ணன் இடுங்கறி 234
கண்ணன் கழலிணை 124
கண்பொட்டை 203
கத்துகடல் சூழ் 263
கம்பநாட 121
கம்பமதமாக் 156
கரிக்காய் பொரித் 262
கரியாய்ப் பரியாகி 296
கருகவிழிக்க 444
கருங்காலிக் 292
கருங்குளவி 417,284
கருணையாலிந்த 287
கலிநாட்டம் 441
கலிவாணி 188
கல்லாஒரு 445
கல்லெத்தான் 56
கல்லொன்று 439
கல்வியுடையீர் 298
கழியுந்தியகடல் 243
கழுந்தராயுன 190
களபவண்டலிடு 207
கற்க கசடறக் 37
கற்றதுகைம் 297
கற்றவர்க்கும் 173
கற்றூர்முற்கல்வி 345

கா

காசினியிற் பிள்ளைக் 298
காட்சிக்கெளியன் 411
காணக்கண் 290
காணுமலே பலவுங் 376
காணுமல் வேண 281
காதமிருபத்து 89
காதலியைத் 213
காய்த்துத்தோய் 261
காலினையுங்காம் 222
காலியிலும் 234
காலியிலொன்றுவர் 296
காலி யெழுந் 40
கால் வழியே 447
காற்றில் 449
கானகத் 448
காஞைந்தேஞைந்தே 281

கு

குடவன் 437
குட்டுதற்குப் 201
குமுதனிட்ட 106
குலமகட் கழகு 22
குழவி பெறு 346
குழற்காலரவிந்தங் 33
குறுமுனிவன் 124
குன்றுத 447

கூ

கூரிய வாளாற் 294
கூழைப்பலாத்த 281
கூறுவார் 456
கூனையுங்குட 202

கை

கையால்கொடை 445
கையிருக்கக் 451

கொ

கொங்குலவுந் 224
கொங்கையிள 213
கொட்டைப்பாக் 262

கொடியது கேட்கி 292
கொம்பிலேயே 254

கோ

கோக்கண்டு மன்னர் 204
கோடானுகோடி 291
கோடிகொடுத்து 291
கோரத்துக் 195
கோளர் இருக்குமூர் 263
கோனணி சங்கம் 141

ச

சங்கரற்குமாறு 260
சட்டியிலே பாதி 230
சண்டாளி சூர்ப்ப 290
சமநிலே நின்றூர்க்கு 351
சரசரத்த 437

சா

சாணினும் உளனேர் 129
சாரங்கபாணி 265
சால வுலர் 433

சி

கித்திரமுங் 281
சிரப்பான்மணி 288
சிவனே அல்லன் 161
சிறந்த தமிழன் 457
சிறுவன் அலை 248
சிறைகாக்குங் 27
சிற்றுடை 450

சீ

சீரங்கத்தாருந் 231

சு

சுத்தபாற்கடல் 246
சுரதந்தனி 282
சுருக்கவிழ்ந்த 263
சுள்ளிவிறகு 438
சுற்றுங் கருங்குள 296

சூ

சூதளவளவெனு

செ

செட்டிமக்கள்வா 91
செந்திருக்கம் 450
செப்பிளங்கொங் 212
செம்மான் கரத்த 299
செய்யாதசெய்த 263
செருப்புக்கு வீரர் 258
செல்லாரும்பொ 224
செல்வன் புதல்வன் 204
செவிச்சொல்லுஞ் 79
செற்றலரை 260
சென்றுறையூர் 431
சென்னிமுகமாறு 257

சே

சேமங்குருகை 126
சேய்மொழியோ 125
சேரலர்கோன் 286
சேனை தழையாக்கி 273

சொ

சொலல் வல்லன் 12
சொல்லாமலேபெரி 297
சொல்லிற் பெரிய 226

ஞா

ஞாலமிகுத் 449
ஞானசபை 225

த

தடக்கடலிற் 262
தண்டாமலீவது 265

தண்ணீருங் 279
தந்தபொன்னு 435
தந்தை பிறந்திற 264
தந்தையாயினும் 25
தவலருந்தொல் 215
தள்ளரும்பரந் 140
தறிபோலும் 438
தற்கோலிப்பூ 217
தன்னேப்படைப் 149

தா

தாண்டியொருத்தி 224
தாதைக்குஞ்சடாயு 154
தாயோடறுசுவை 298
தானம்போற் 448

தி

திக்குளெட் 218
திங்கட்குடை 287
தினைத்துணை 83

தீ

தித்தானுன் 228
தியவரொடொன்றிய 139

து

துறக்குந்தன்மைய 164
துறந்தார்க்குந் 42
துன்பினுற்றுடக் 345

தூ

தூதைந்துநாழி 239
தூற்றும் பெண்டிர் 31

தெ

தெருண்டமேலவர் 135
தெருமுட்டப்பாளே 227
தென்புலத்தார் 42,55
தென்னவா! மீன 274

தே

தேங்குபாலி 450
தேருளைப்புரவி 276

தோ

தோள்கண்டார் 78
தோற்றமென்ப 164

ந

நக்கீரர் 454
நச்சரவம் பூண்ட 223
நச்சுத்தே 453
நசைதிறந் 131
நஞ்சடகோபனேப் 122
நஞ்சிருக்குந்தோ 259
நம்பன் அடியவர்க்கு 282
நல்லதொரு 233
நல்லார்களெல்லாரு 295
நன்றிமறப்பது 68

நா

நாடிய பொருள் 114
நாடினுன் தருவ 131
நாட்டிற்சிறந்த 387
நாட்டுக்குளாட்டுக்கு 225
நாணென்மூல் 265
நாராய்! நாராய்! 385
நாலாயிரத்து 455
நானேயினி 207
நானே பழியடைந்தேன் 458

நி

நிட்டூரமாக 298
நிலவாய் விளங்கு 252
நிலேதந்தார் புவி 189
நிழலருமை 297

நீ

நீயேயறிவை 126
நீரிலானது 448

நீரிலுளதால் 255
நீரே பிறவா 250
நீரூவாய் நெற்றி

நு

நுண்ணறிவுடை 29

நூ

நூலா நாலாயிர 249
நூலெனிலோகோல் 297
நூற்றுப்பத்தாயிரம் 282

நெ

நெல்லான் 439
நென்னற்கண்ட 147

நே

நேசனேக்காணு 151,298
நேமிமால்வரை 205
நேற்றிரா 261

ப

பகருங்கால் மேட 247
பகையென்னும் 215
பங்கப்பழனத் 289
பச்சை முழுது 435
பஞ்சவர்கள் 449
படிதனே இறுக 449
படித்துச் செங்கோல் 81
படிமுழுதும் 447
படைதனில் 450
பத்துக்கொண்டனன் 200
பர்த்தாவுக்கேற்ற 290
பல்லாயிரத்தின் 112
பல்லார் பகைகொ 82

பா

பாடல் பெருனே 296
பாணந்தான் 265
பாணற்குச் 258
பாதம் பணி 458
பாத்தயானேயிற் 134
பாய்ச்சி 446
பாரி பறித்த 285
பாரூரறிய 230
பாரைச் சுமந்த 113
பாலுக்குச் சர்க்கரை 103
பால்பாய 434

பு

புகார் மன்னன் 286
புறவொன்றின் 158
புளியிலரும் 436

பூ

பூவே சில 456
பூவேந்தர் முன்போற் 33

பெ

பெண்ணிற்பெருந்
பெண்ணுதவுங்காலே 22
பெண்ணெருத்தி 24
பெய்யுமே மழை 162
பெரியது கேட்கின் 293
பெரியவிட 252
பெருமாளும் நல்ல 222
பெற்றுற் பெறிற் 27

பொ

பொங்கிப் பரந்த 128
பொய்யாத 455
பொன்மாரி பெய்யு 287
பொன்னஞ்சடை 225

போ

போந்தவுதார 298
போர்மகளேக் 162
போற்றினும் 88

ம

மங்கையழலும் 151
மங்கையொரு 113
மண்டலத்தில் 253
மதியாதார் முற்றம் 291
மதுரமொழி நல் 294
மந்தாரம் 250
மலையின் மிக்கானவ 80
மல்லிகையேவெண் 211
மற்கொண்ட 90
மன்னனும் நீயோ ? 89
மன்னீரிலே பிறக்கும் 253
மன்னுகலை 449
மன்னும் அருணகிரி 231

மா

மாடில்லான் 298
மாட்டுக்கோன் 226
மாதர்க்கிதங்கவி 207
மாநிலங்காவல 79
மாப்பைந்தார்க் 274
மாயன் துயின்றதுவும் 256
மாரி வறப்பிற்
மானவன் நானந்த 200
மானிற்குமோ 199

மி

மின்னேரிடை 430

மு

முகத்துக்கண் 12
முக்கண்ண 261
முக்கா லுக்கேகா 223
முட்டத்துப்பன்றி 227
முத்திருக்கும் 250
முத்துநகை 442
முத்தெறியும் 287
முப்புரங்கள் 347
முருகுவிரி மலர்க் 82
முற்பழிக் 455
முன்புபெறப் 149
முன்னே கடிவாளம் 236,317
முன்னேநின் னன்னே 69
முன்னே யிட்டதீ 71

மூ

மூச்சுவிடு முன்னமே 243
மூப்பான் மழுவு 235

மெ

மெச்சுதிருவேங்க 299
மெய்வருபோக 118

மே

மேற்பார்க்க மைந்த 299

மோ

மோனே முத்தமிழ் 202

யா

யாவருக்கும் ரஞ்சனே 259

ரா

ராமாயராம 147

வ

வடிவுடையார் 447
வண்டமிழைத் 297
வண்ணங்கரிய 260
வணக்கம்வருஞ் 386
வந்திக்கநட்பு 346
வயிறதுகுழிய 374
வரகரிசிச்சோறும் 296
வழக்குடையானிற்ப 295
வளநகர் முனிவரன் 120

வளையமர் முன்கை 120
வள்ளலெனும் 228

வா

வாசங் கலந்த 112
வாணுள் அளித்தி 150
வாணியன் வாழ்த்திட 236
வாதக்கோளுளே 297
வாதமணரேறியதும் 257
வாய்க்குங்குருகை 25
வாரணங்கள் எட்டும் 248
வாரிக்களத்தடிக்கும் 251
வாலெங்கே நீண்ட 242
வால்நீண்டகரிக் 193
வாழ்த்து திருநாகை 234
வாளோடென் 377
வானமுளதால் 234,417
வான்குருவி 281

வி

விக்காவுக்கா 216
விண்ணுக்கடங்காமல் 248
விண்படட்டகொக்கு 203
வில்லாளராளர்க் 117
விலமகட்கழகு 28
விரகரிருவர் 281
விறகோவிற 434

வீ

வீருயிவளுக்கு 456

வெ

வெண்பா விருகா 284+417
வெய்தாய் நறுவிதாய் 285
வெய்யவன் சென்று 344
வெய்யோன் 433
வெள்ளத்தடங்காச் 289
வெள்ளாகாளி கீ 374
வெள்ளாக்கலையுடுத் 241
வெறும்புற் 387

வே

வேதத்தின்முன் 122
வேதமோதிய 35
வேதியர்தமைத் 166
வேம்பாகிலு 274

வை

வைக்கோல் 437
வையகமெல்லாங் 300
வையைத்துறை 286

O—6MVC, V
N58

112485

ஒவ்வொன்றின் விலை 25 ந. பை.!

17/4/74

லிப்கோ

குறைந்த விலைச்

சிறு பதிப்புக்கள் [64]

திருக்குறள், நாலடியார், பிற்கால நீதி நூல்கள், நல வெண்பா, குமரேச சதகம். திருப்புகழ் (சில்), பாரதியார் பாடல்கள் (சில), அறப்பளீசுர சதகம் ஆகியவற்றின் மூலமும், திருக்குறள், நாலடியார் உரையும், கடையெழு வள்ளல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சிவக சிந்தாமணி, நல வெண்பா, அரிச்சந்திர புராணம், குசேலோபாக்கியானம், பன்னிரு ஆழ்வார்கள், சூடிக்கொடுத்த சுடர்க் கொடி, திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், நால்வர், இராமாயணம், பாரதம், கந்த புராணம், அகோபிலம், குண்டலகேசி, நந்திகுரு, இராமலிங்க அடிகள், தசாவதாரம், பாகவதம் போன்ற பழந்தமிழ் இலக்கியப் பெரு நூல்களின் சுருக்கங்களும், வரலாறுகளும் 64 சிறு பதிப்புக்களாக (கையடக்க அளவில்) வெளியிடப்பட்டுள்ளன.

முழுப் பட்டியலுக்கு எழுதுக.

லிப்கோ புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

ஹிக்கின்பாதம்ஸ் (பிரைவேட்) லிமிடெட்

மௌண்ட் ரோடு, சென்னை-2

எம். தாமோதரம் & கம்பெனி, அப்பர் பில்டிங்ஸ், கோவை-1; எஸ். கிருஷ்ணஸ்வாமி & கம்பெனி, தெப்பக்குளம், திருச்சி-2; எம். நடனசுந்தரம் பிரதர்ஸ், புதுமண்டபம், மதுரை; ஏ. கே. சந்திரையா செட்டியார், கோட்டை, சேலம்-1; எஸ். ஆர் நடராஜன் & ஸன், கோயமுத்தூர்; சவிதா பதிப்பகம், 241, ராஜ வீதி, கோயமுத்தூர்; ஹிக்கின்பாதம்ஸ் ரெயில்வே ஸ்டால்கள்; தி வீட்டில் பளவர் கம்பெனி, சென்னை-17; மற்றும் அநேக புத்தகக் கடைகள்.

லிப்கோ நடமாடும் புத்தக 'வான்'களிலும் கிடைக்கும்.

Wrapper Printed at Sri Bharathi Press, Choolai, Madras-7.